61468

# Tamil Nadu Legislative Assembly Debates

SEVENTH SESSION OF THE FOURTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

*20th to 28th January 1970.*

**Volume XXIV (Nos. 1 to [illegible])**

TABLE OF CONTENTS.

*Tuesday, 20th January 1970.*


| | PAGES |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu ... | i–iv |
| Principal Officers of the Tamil Nadu Legislative Assembly ... ... ... ... ... ... | v |
| List of Members of the Tamil Nadu Legislative Assembly with their constituencies (prepared in English alphabetical order) ... ...... | vi–xii |
| 1. Condolence Resolutions— | |
| (a) Demise of Dr. P. V. Cherian (Governor of Maharashtra State ... ... ... ... | 1–12 |
| (b) Demise of Thiru A. Chidambaranatha Nadar (Member of the Legislative Assembly) ... | |
| 2. Obituary Reference— | |
| Demise of Thiru G. Vijayarangam (Ex-member of the Legislative Council) ... ... | 12–13 |
| 3. Papers laid on the Table ... ... ... | 13–36 |
| *Wednesday, 21st January 1970.* | |
| 1. Questions and Answers ... ... ... ... | 37–64 |
| 2. Announcements— | |
| (a) Panel of Chairmen ... ... ... | 64 |
| (b) Amendments to Motion of Thanks for Governor's Address ... ... ... ... | 78 |

| | PAGES |
|---|---|
| *Wednesday, 21st January 1970—cont.* | |
| 3. Presentation of Report— | |
| Report of the Public Accounts Committee | 64 |
| 4. Point of Order— | |
| Opposition party and Leader of Opposition | 65 |
| 5. Government Resolution— | |
| Ratification of proposed amendments by Constitution (23rd Amendment) Bill, 1969 ... | 65–77 |
| 6. Discussion on Motion of Thanks for Governor's Address—*cont.* | |
| 7. Papers laid on the Table ... ... ... | 134 |
| *Thursday, 22nd January 1970.* | |
| 1. Questions and Answers ... ... ... | 159–185 |
| 2. Adjournment Motions— | |
| (*a*) Fasting over right of usage of foot-path by Harijans of Nangavalli village ... ... | 185 |
| (b) Arrest of Congressmen including Thiru S. V. Lakshmanan, M.L.C. at Coimbatore ... ... ... ... | 185–186 |
| (*c*) Collection of fees from P.U.C. Students in S.I.E.T. College ... ... ... | 186–191 |
| (*d*) Agitation for merger of Talavadi Firka with Mysore State by Mysore M.L.A. and some others ... ... ... | 191–195 |
| 3. Point of Order— | |
| Delay in the statement for correcting a wrong answer ... ... ... ... | 195–196 |
| 4. Statement by Minister— | |
| Correction of an answer to a supplementary question to Question No. 89 put on 26th February 1969 ... ... ... | 196–191 |
| 5. Government Motion— | |
| Change in the order of business of the House | 197 |
| 6. Discussion on Motion of Thanks for Governor's Address—*cont.* ... ... ... ... | 197–246 |
| 7. Papers laid on the Table ... ... ... | 247 |





| | PAGES |
|---|---|
| *Friday, 23rd January 1970.* | |
| 1. Questions and Answers ... ... ... ... | 251–277 |
| 2. Adjournment Motions— | |
| (*a*) Dangerous situation caused due to use of Kajamalai area in Tiruchirappalli district as Army shooting range ... ... | 277–279 |
| (*b*) Firing by the Railway Protection Force in Integral Coach Factory and its consequences ... ... ... ... | 279–282 |
| 3. Government Motion— | |
| Suspension of Rule 41 (3) ... ... ... | 282 |
| 4. Calling Attention— | |
| (*a*) Clash between Telugu students and Police in Hosur ... ... ... ... ... | 282–289 |
| (*b*) Failure of monsoon in Thirumayam constituency and opening of fair price shops in certain areas ... ... ... | 289–290 |
| (c) Accumulation of sugar stock in sugar mill godowns ... ... ... ... | 291 |
| 5. Announcement— | |
| Tamil Nadu General Sales Tax (Amendment) Bill, 1970 ... ... ... ... | 292 |
| 6. Government Bill— | |
| Tamil Nadu General Sales Tax (Amendment) Bill, 1972 ... ... ... ... | 292 |
| 7. Second Supplementary Statement of Expenditure for 1969-70—Presentation ... ... | 292–297 |
| 8. Motion— | |
| Consideration and adoption of Report of Privileges Committee on the case against Editor and Publisher of the Daily "Kaditham" | 297 |
| 9. Discussion on Motion of Thanks for Governor's Address—*cont.* ... ... ... ... | 297–349 |
| 10. Papers laid on the Table ... ... ... | 349 |

PAGES

*Saturday, 24th January 1970.*

1. Questions and Answers ... ... ... ... 359-385
2. Adjournment Motions—
   (a) Clash at Kachirapalayam and Agara palayam and its consequences ... ... 385-389
   (b) Speech about Tamil Nadu Chief Minister by Thiru Vattal Nagaraj, Member of the Mysore Legislative Assembly ... ... 389-391
3. Calling Attention—
   Damage to crops in Vedaranyam and other areas due to exercise rain and relief measures undertaken ... ... ... 392-393
4. Announcement—
   Tamil Nadu Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1970 ... ... ... 393
5. Government Bill—
   Tamil Nadu Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1970 ... ... ... 393
6. Discussion on Motion of Thanks for Governor's Address—*cont.* ... ... ... ... 394-459
7. Papers laid on the Table ... ... ... 460

*Tuesady, 27th January 1970.*

1. Questions and Answers ... ... ... ... 461-483
2. Points of Order—
   Chief Minister's health ... ... ... 484
   Disposal of notice of Adjournment Motion ... 485
3. Government Motions—
   (a) Suspension of Rule 41 (3) ... ... 485
   (b) Change in the order of business of the House ... ... ... ... 489
4. Calling Attention—
   (a) Failure of monsoon in Tirumayam Ponnamaravathi Panchayat Union areas, remission of tax and postponement of recovery of loan ... ... ... ... 486
   (b) Hardship of workers due to closure of Sri Ramalinga Soodambigai Mill, Tirupur 487-489



PAGES

*Tuesday, 27th January 1970—cont.*

5. Statement by Minister—
   Correction to reply of Minister for Agriculture and Harijan Welfare regarding Veterinary Degree Course during discussion on Demand for Grant ... ... ... 489
6. Second Supplementary Statement of Expenditure for 1969-70—General discussion ... ... 490-543
7. Voting on Demands for Grants for further expenditure in 1969-70. ... ... ... ... 544-546
8. Announcement—
   Tamil Nadu Appropriation Bill, 1970.
9. Government Bill—
   10. Papers laid on the Table ... ... ... 546
10. Papers laid on the Table ... ... ... 546

*Wednesday, 28th January 1970.*

1. Questions and Answers ... ... ... ... 553-582
2. Adjournment Motions—
   (a) Labour problem in Coimbatore Co-operative Spinning Mills, Dharapuram and lathi charge ... ... ... ... 583
   (b) Prevention of arrest of paddy smugglers in Avanam village in Pattukottai taluk by violent mob and Police firing ... ... 583
3. Government Motion—
   Suspension of Rule 41 (3) ... ... 583-584
4. Calling Attention—
   (a) Plight of non-teaching staff in Government aided secondary schools due to fixation of retirement age at 55 ... ... ... 584-585
   (b) Failure of monsoon in Natham and North Melur Panchayat Unions, remission of tax and postponement of recovery of loan ... 585-586
   (c) Unauthorised sale by rice millers in Dindi. and consequent loss to Government ... ... 586-587
   (d) Collection of term fees from P.U.C. students in S.I.E.T. College ... ... ... ... 587-590

*Wednesday, 28th January 1970—cont.*


| | PAGES. |
|---|---|
| 5. Presentation of Report— | |
| Report of Committee on Estimates on the problems of destitutes and vagrants ... ... | 590 |
| 6. Government Bills— | |
| (*a*) Tamil Nadu Appropriation Bill, 1970 (L.A. Bill No. 3 of 1970) ... ... | 591–601 |
| (*b*) Tamil Nadu General Sales Tax (Amendment Bill, 1970 (L.A. Bill No. 1 of 1970) | 601–616 |
| (*c*) Tamil Nadu Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 2 of 1970) ... ... ... ... | 616–617 |
| (*d*) The Code of Civil Procedure (Tamil Nadu Amendments to Cotton Transport Rules, 1950 | 618–619 |
| 7. Government Resolutions— | |
| Amendments to Cotton Transport Rules, 1950 ... | 618–619 |
| Approval of draft rule amending certain Schedules to Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 ... ... ... | 619 |
| 8. Discussion on Motion of Thanks for Governor's Address—*cont.* ... ... ... ... | 620–660 |
| 9. Papers laid on the Table ... ... ... | 660–665 |


## தமிழ் நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

### தமிழ் நாடு ஆளுநர்

சர்தார் உஜ்ஜல் சிங்

---

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

**1. மாண்புமிகு திரு. மு. கருணாநிதி (முதல் அமைச்சர்):** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுத் துறை, பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், காவல் துறை, தேர்தல்கள், மதுவிலக்கு, செய்தி-விளம்பரம், திரைப்படச் சட்டம், உணவு உற்பத்தி, பயண அனுமதிச் சீட்டுகள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, சரக்குகளின் விலைகள், வழங்கல் குறித்த சட்டம்.

**2. மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் (கல்வி-சுகாதார அமைச்சர்):** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சி மொழி, பொதுச் சுகாதாரம், மருத்துவம், சட்ட மன்றம்.

**3. மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் (நிதி அமைச்சர்):** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: நிதி, திட்டம், வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள்.

**4. மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து (வேளாண்மை-அரிசன நல அமைச்சர்):** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வேளாண்மை, அரிசன நலம், மகளிர்-சிறுவர் நலம், மீனளம், சுற்றுலா.

**5. மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (பின்னிலை வகுப்பினர் நல அமைச்சர்):** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பிற்பட்டோர் நலன், பத்திரப் பதிவு, எழுதுபொருள்-அச்சுத் துறை, அரசாங்க அச்சகம்.

**6. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (உணவு-வணிக வரி அமைச்சர்):** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: உணவு, வணிக வரிகள், கால்நடை வளர்ப்பு, பால் வழங்கு துறை.

**7. மாண்புமிகு திரு. செ. மாதவன் (தொழில் அமைச்சர்):** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப் பொருள்கள், இரும்பு உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும்-பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ் நாடு சட்டப்பேரவை உறுப்பினர்களின் (ஆங்கில அகரவரிசைப்படி தயாரிக்கப்பட்ட பட்டியல்)

| தொடர் எண். | உறுப்பினர்கள் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | அப்துல் கபூர் சாகிப், எம். .. .. | இராணிப்பேட்டை. |
| 2 | ஆதித்தனார், சி.பா. (அமைச்சர்) .. .. | ஸ்ரீவைகுண்டம். |
| 3 | அக்னிராஜு, எஸ். .. .. .. | திருப்பரங்குன்றம். |
| 4 | அழகமுத்து, து.ப. (அரசாங்கத் தலைமை ஆளுங்கட்சி இணைப்பாளர்). | உப்பிலியாபுரம். |
| 5 | அழகர்சாமி, சோ. .. .. .. | கோயில்பட்டி. |
| 6 | அழகுத்தேவர், எஸ். .. .. | சிவகாசி. |
| 7 | அலங்காரம், மு. .. .. .. | கடலாடி. (செ.வ.) |
| 8 | ஆனந்தன், மு. .. .. .. | ரிஷிவந்தியம் (செ.வ.) |
| 9 | ஆண்டி என்ற குருசாமி, கு. .. .. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ.) |
| 10 | அண்ணாமலை, சி.வி.எம். .. .. | கடம்பத்தூர். |
| 11 | அண்ணாமலை, வி.டி. .. .. .. | பெரணமல்லூர். |
| 12 | அரங்கநாதன், ஆர். என். .. .. | சோளிங்கபுரம். |
| 13 | அரங்கண்ணல், இராம. .. .. | மயிலாப்பூர் (சென்னை மாநகரம்). |
| 14 | அரசு, அ. பொ. .. .. .. | திருவொற்றியூர். |
| 15 | ஆறுமுகம், அ. .. .. .. | எடப்பாடி. |
| 16 | ஆறுமுகம், எஸ். .. .. .. | வீரபாண்டி. |
| 17 | ஆலடி அருணா, வி. .. .. .. | ஆலங்குளம். |
| 18 | ஆசைத்தம்பி, ஏ.வி.பி. .. .. .. | எழும்பூர் (சென்னை மாநகரம்). |
| 19 | ஆதிமூலம், டி. எஸ். .. .. .. | சேரன்மகாதேவி. |
| 20 | பாலன், எம். சி. .. .. .. | நாகர்கோவில். |
| 21 | பாலகிருஷ்ணன், ஏ. கோ. .. .. | வானூர் (செ.வ.) |
| 22 | பலராமன், இல. .. .. .. | கணியம்பாடி. |
| 23 | பாலசுப்பிரமணியன், எ. .. .. | திண்டுக்கல். |
| 24 | பெள்ளி கௌடர், ஜெ. .. .. .. | கூனூர். |
| 25 | பாரதிமோகன், கோ. .. .. .. | குத்தாலம். |
| 26 | பூபதி, எம். .. .. .. .. | கோயம்புத்தூர்-கிழக்கு. |
| 27 | பூவராகன், கோ. .. .. .. | விருத்தாசலம். |
| 28 | போஜன், கே. .. .. .. .. | உதகமண்டலம். |
| 29 | சீமைச்சாமி, கரு. .. .. .. | மானாமதுரை. |
| 30 | சின்னராஜி, சி. கே. .. .. .. | திருப்பத்தூர். |
| 31 | சின்னச்சாமி, மு. .. .. .. | ஈரோடு. |
| 32 | சின்னச்சாமி, வி. .. .. .. | ஏர்க்காடு (ஆ.வா.) |
| 33 | சித்தன், என்.எஸ்.வி. .. .. .. | திருமங்கலம். |
| 34 | தனுஷ்கோடி, பி. எஸ். .. .. | திருவாரூர் (செ.வ.) |
| 35 | தருமலிங்கம், ந. .. .. .. | திருத்துறைப்பூண்டி. |



| தொடர் எண். | உறுப்பினர்கள் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 36 | துரைராஜ், சு.ம. .. .. .. | திருவள்ளூர் (செ.வ.) |
| 37 | துரைபாண்டியன், என். .. .. | நாங்குனேரி. |
| 38 | துரைராஜ், பி. .. .. .. | சங்கரன்கோவில் (செ.வ.) |
| 39 | துரைசாமி, சு. .. .. .. | திருப்பூர். |
| 40 | துரையரசன், ஆ. .. .. .. | அறந்தாங்கி. |
| 41 | எட்மண்ட், ஜி. ஆர். .. .. (பேரவைத் துணைத் தலைவர்) | திருச்செந்தூர். |
| 42 | இளம்வழுதி, இரெ. .. .. | கடலூர். |
| 43 | எல்லப்பன், பி. எஸ். .. .. | அச்சரப்பாக்கம். (செ. வ.). |
| 44 | கணேசன், எல். .. .. .. | ஒரத்தநாடு. |
| 45 | கணேசன், எஸ். .. .. .. | செம்பனார்கோவில். |
| 46 | ஜார்ஜ், வ. .. .. .. .. | பத்மநாபபுரம். |
| 47 | ஞானசம்பந்தன், கொ. இர. .. | நாகப்பட்டினம். |
| 48 | கோமதிசங்கர தீட்சிதர், க. .. | அம்பாசமுத்திரம். |
| 49 | கோபால், எம். .. .. .. | குன்றத்தூர் (செ. வ.) |
| 50 | கோவிந்தன், கே. ஆர். .. .. | தாரமங்கலம். |
| 51 | கோவிந்தன், புலவர் கா. .. (பேரவைத் தலைவர்) | செய்யாறு. |
| 52 | கோவிந்தராசன், ம. சொ. .. .. | மதுரை சென்ட்ரல். |
| 53 | கோவிந்தராசன், சி. .. .. | நெல்லிக்குப்பம். |
| 54 | கோவிந்தராஜன், வி. எஸ். .. | புரசவாக்கம் (சென்னை மாநகரம்). |
| 55 | கோவிந்தராஜு, கே. .. .. | கோயம்புத்தூர்—மேற்கு. |
| 56 | கோவிந்தராசன், ஆ. .. .. | புவனகிரி. |
| 57 | ஹபிபுல்லா பேக், டாக்டர் .. .. | ஹார்பர் (சென்னை மாநகரம்). |
| 58 | ஹாண்டே, டாக்டர் எச். வி. .. | பார்க்டவுன் (சென்னை மாநகரம்). |
| 59 | இளஞ்செழியன், வீ. சா. .. .. | விராலிமலை. |
| 60 | இராசரத்தினம், டி. .. .. | ஸ்ரீபெரும்புதூர். |
| 61 | ஜேம்ஸ், ஜே. .. .. .. | திருவட்டார். |
| 62 | ஜானகியம்மாள், திருமதி கே. பி. | மதுரை—கிழக்கு. |
| 63 | ஜயராஜ், பி. .. .. .. | நன்னிலம் (செ. வ.). |
| 64 | ஜயராமன், கி. .. .. .. | சேலம்-1. |
| 65 | ஜெயராமன், பி. .. .. .. | பேர்ணம்பட்டு (செ. வ.) |
| 66 | கலியமூர்த்தி என்ற மூர்த்தி, ஆ. கு. | ஜெயங்கொண்டம் (செ. வ.). |
| 67 | கனகசபை, ரா. .. .. .. | சிதம்பரம். |
| 68 | கந்தசாமி கவுண்டர், செ. .. .. | அரவக்குறிச்சி. |
| 69 | கந்தசாமி, எம். .. .. .. | குளித்தலை. |
| 70 | கந்தசாமி படையாச்சி, மு. .. | உளுந்தூர்ப்பேட்டை. |
| 71 | கண்ணன், எம். ஆர். .. .. | பேசின்பிரிட்ஜ் (சென்னை மாநகரம்). |
| 72 | கண்ணப்பன், எம். .. .. | இணைத்துக்கடவு. |

10. The Hon. Thiru Si Pa. ADITANAR (Minister for Co-operation) : Minister in-charge of Co-operation, Transport, Nationalised Transport and Motor Vehicles Tax, Agricultural Refinance and Ports.

11. The Hon. Thiru K. V. SUBBIAH (Minister for Religious Endowments) : Minister in-charge of Religious Endowments, Housing, Accomodation Control, Approved Schools and Vigilance Services.

12. The Hon. Thiru O. P. RAMAN (Minister for Electricity) : Minister in-charge of Electricity, Legislation on Money Lending (Rural Indebtedness), Legislation on Chits, Forest and Cinchona.

13. The Hon. Thiru K. VEZHAVENDAN (Minister for Labour) : Minister in-charge of Labour, Legislation on Weights and Measures and Statistics, Beggars and Orphanages.

## தமிழ் நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

---

### பேரவைத் தலைவர்.

மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன்.

### பேரவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. ஜி. ஆர். எட்மண்ட்.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

திரு. ந. தருமலிங்கம்.

திரு. ஆர். என். அரங்கநாதன்.

திரு. என். எஸ். வி. சித்தன்,

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்.

திரு. எம். சுரேந்திரன்.

திரு. வி. டி. அண்ணாமலை.

### சட்டப் பேரவைச் செயலாளர்.

திரு. கா. து. நடராசன், எம்.ஏ,, பி,எல்,

### துணைச் செயலாளர்.

திரு. கு. புஜங்க ராவ், பி.ஏ., எல். எல். பி.

### உதவிச் செயலாளர்கள்.

திரு. த. இராதாகிருஷ்ணன் (எஸ்டேட் அதிகாரி).

திரு. ஜி. இராகவன்.

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

திரு. ஆர். மாணிக்கம், பி.எஸ்ஸி., பி.எல்.

| தொடர் எண். | உறுப்பினர்கள் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 153 | பொன்னுமலை, தி. | பனமரத்துப்பட்டி |
| 154 | இராஜா, ஏ. எம். | பவானி |
| 155 | ராசகோபால், க. மு. | உத்திரமேரூர் |
| 156 | ராஜமன்னார், எஸ். ஏ. | வாணியம்பாடி |
| 157 | இராசாங்கம், மா. | கம்பம் |
| 158 | ராஜாங்கம், என். | குறிஞ்சிப்பாடி (செ. வ.) |
| 159 | ராஜவேலு, டி. ஏ. | திருச்செங்கோடு |
| 160 | ராமச்சந்திர துரை, ரா | கந்தர்வக்கோட்டை |
| 161 | இராமச்சந்திரன், க. ந. | ஆண்டிமடம் |
| 162 | ராமச்சந்திரன், எம். ஜி. | பரங்கிமலை |
| 163 | இராமச்சந்திரன், எஸ். | பண்ருட்டி |
| 164 | ராமலிங்கம், எஸ். | ஸ்ரீரங்கம் (செ. வ.) |
| 165 | இராமமூர்த்தி, க. | திண்டிவனம் |
| 166 | இராமன், மு. | கண்டமங்கலம் (செ. வ.) |
| 167 | ராமன், ஓ. பி. (அமைச்சர்) | மேலூர்-தெற்கு (செ. வ.) |
| 168 | இராமராசன், வ. க. | பவானிசாகர் (செ. வ.) |
| 169 | இராமசாமி, இ. | வால்பாறை (செ. வ.) |
| 170 | ராமசாமி கவுண்டர், கே. எம். | கோபிசெட்டிப்பாளையம் |
| 171 | ராமசாமி, எஸ். ஜே. | அரக்கோணம் |
| 172 | இராசு, ஜே. எஸ். | பெரம்பலூர் (செ. வ.) |
| 173 | இரத்தினசபாபதி, மு. | விளாத்திகுளம் |
| 174 | ரெத்தின தேவர், ரா. | முதுகுளத்தூர் |
| 175 | சாதிக்பாட்சா. எஸ். ஜே. (அமைச்சர்) | உடுமலைப்பேட்டை |
| 176 | சகாதேவக் கண்டர், கே. | தண்டராம்பட்டு |
| 177 | சாமிநாதன், கே. என். | வெள்ளக்கோயில் |
| 178 | சங்கரய்யா, என். | மதுரை-மேற்கு |
| 179 | சந்தானம், பி. எஸ். | செங்கம் (செ. வ.) |
| 180 | சாரதி, மா. பா. | வேலூர் |
| 181 | சத்தியவாணிமுத்து, டாக்டர், (திருமதி) (அமைச்சர்) | பெரம்பூர் (செ. வ.) (சென்னை மாநகரம்) |
| 182 | சீனிவாசக நாயக்கர், ஆர். | சாத்தூர் |
| 183 | சீனிவாசன், பெ. | விருதுநகர் |
| 184 | செல்ல கவுண்டர், அ. | சேந்தமங்கலம் (ஆ. வா.) |
| 185 | சேனாபதி, அ. | காங்கேயம் |
| 186 | சேதுராமன், சி. | சிவகங்கை |
| 187 | சண்முகம், எம். | விழுப்புரம் |
| 188 | சண்முகசுந்தரம், அ. ப. | பொள்ளாச்சி |
| 189 | சிறைமீட்டான் தொ. க. | பரமக்குடி (செ.வ.) |
| 190 | சிவஞானம, ம. பொ. | தியாகராயநகர் (சென்னை மாநகரம்) |
| 191 | சிவபெருமாள், க. ந. | ஆத்தூர் |
| 192 | சிவசாமி, மு. ச. | தூத்துக்குடி |



| தொடர் எண். | உறுப்பினர்கள் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 193 | சிவசுப்பிரமணியன், எஸ். | காட்டுமன்னார் கோயில் (செ. வ.) |
| 194 | சோமசுந்தரம், ந. | வலங்கைமான் (செ. வ.) |
| 195 | சௌந்தரபாண்டியன், நா. | ராதாபுரம் |
| 196 | சௌந்தரபாண்டியன், பெ. | கிருஷ்ணராயபுரம் (செ. வ.) |
| 197 | சௌந்தரராஜ மூப்பனார், இரா. | பாபநாசம் |
| 198 | சீனிவாசன், சு. | போடிநாயக்கனூர் |
| 199 | சுந்தரபாரதி, சௌடி எஸ். | அருப்புக்கோட்டை |
| 200 | சுவாரெஸ், திருமதி ஏ. | நியமன உறுப்பினர் |
| 201 | சுப்பராஜா, ஏ. அ. | இராஜபாளையம் |
| 202 | சுப்பையா, ஆ. கு. | கோட்டூர் (செ. வ.) |
| 203 | சுப்பையா, கே. வி. (அமைச்சர்) | ஆலங்குடி |
| 204 | சுப்பையா முதலியார், ஏ. ஆர். | கடையநல்லூர் |
| 205 | சுப்பிரமணியம், அ. லெ. | திருநெல்வேலி |
| 206 | சுப்பிரமணிய கவுண்டர், எம். | தர்மபுரி |
| 207 | சுப்பிரமணியம், இ. எம். | திருக்கோவிலூர் |
| 208 | சுரேந்திரன், எம். | மேட்டூர் |
| 209 | சுவாமிநாத உடையார். த. சி. | மன்னார்குடி |
| 210 | சுவாமிநாதன், வை. | திருவெறும்பூர் |
| 211 | தம்பி நாயக்கர், பா. | வடமதுரை |
| 212 | தங்கப்பன், டி. | இராமநாதபுரம் |
| 213 | தவமணிதேவர், வி. | சேடப்பட்டி |
| 214 | தீர்த்தகிரி, ந. | ஹரூர் (செ. வ.) |
| 215 | தீர்த்தகிரி கவுண்டர், தி. | ஊத்தங்கரை |
| 216 | திம்மராய கவுண்டர், தி. சி. | நாட்ராம்பள்ளி |
| 217 | திப்பையா, டி. டி. எஸ். | மேட்டுப்பாளையம் |
| 218 | வடிவேலு, எஸ். கே. | தொட்டியம் |
| 219 | வரதராஜன், என். | வேடசந்தூர் |
| 220 | வேதாசலம், மு. | வண்ணாரப்பேட்டை (சென்னை மாநகரம்) |
| 221 | வீரமணி, சி. | சங்கரி (செ. வ.) |
| 222 | வீராசாமி, நா. | ஆர்க்காடு |
| 223 | வேலப்பன், சி. வே. | கபிலமலை |
| 224 | வெள்ளைத்துரை, ஏ. | வாசுதேவநல்லூர் |
| 225 | வேலுசாமி, பி. | சிங்கநல்லூர் |
| 226 | வெங்கடாசல தேவர், பெ. | வேதாரண்யம் |
| 227 | வெங்கடசாமி, பி. | ஹோசூர் |
| 228 | வேழவேந்தன், கா. (அமைச்சர்) | கும்மிடிபூண்டி |
| 229 | விஜயரகுநாத தொண்டமான், ஆர். | புதுக்கோட்டை |
| 230 | விஜயராஜ், தா. | திருவண்ணாமலை |
| 231 | விநயகம், கே. | திருத்தணி |

| தொடர் எண். | உறுப்பினர்கள் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 73 | கரியமாணிக்கம் அம்பலம், கரு. ராம. | திருவாடானை. |
| 74 | கருணாநிதி, மு. (முதல் அமைச்சர்) | சைதாப்பேட்டை (சென்னை மாநகரம்). |
| 75 | கருப்பையா, ஆ. .. .. .. | கங்கைகொண்டான் (செ. வ.). |
| 76 | கருப்பையா, ஆர். .. .. .. | அரியலூர். |
| 77 | கருத்திருமன், பி. ஜி. (எதிர்க் கட்சித் தலைவர்). | சத்தியமங்கலம். |
| 78 | காசிராமன், நா. .. .. .. | கும்பகோணம். |
| 79 | கதிரவன் க. மு. .. .. .. | தென்காசி. |
| 80 | கேசவலு, தே. .. .. .. | கள்ளக்குறிச்சி |
| 81 | கிட்டப்பா, என். .. .. .. | மாயூரம். |
| 82 | கொளத்தூர் கோதண்டம் .. .. | மதுராந்தகம். |
| 83 | கோதண்டராமன், வி. கெ. .. .. | குடியாத்தம். |
| 84 | கோதண்டராமையா, கே. எஸ். .. | உத்தனப்பள்ளி. |
| 85 | கிருஷ்ணமூர்த்தி, கு. .. .. . | பழனி (செ. வ.). |
| 86 | கிருஷ்ணமூர்த்தி, சி. .. .. .. | கொடவாசல். |
| 87 | கிருஷ்ணமூர்த்தி, மு. . .. | பேராவூரணி. |
| 88 | கிருஷ்ணன், அ. .. .. .. | மங்களூர் (செ.வ.). |
| 89 | கிருஷ்ணன், ஈ. ஆர். .. .. | சேலம்-2. |
| 90 | கிருட்டிணன், நா. .. .. .. | காஞ்சீபுரம். |
| 91 | கிருஷ்ணசாமி கவுண்டர், ரா. .. | அவினாசி. |
| 92 | குமாரசாமி, கே. என். .. .. | பல்லடம். |
| 93 | குப்பம்மாள், திருமதி சு. .. .. | போளூர். |
| 94 | மாதவன், செ. (அமைச்சர்) .. | திருப்பத்தூர். |
| 95 | மகாதேவன், ப. .. .. .. | கன்யாகுமரி. |
| 96 | மலைச்சாமி, பெ. .. .. .. | மேலூர். |
| 97 | மலைக்கண்ணன், வீ. .. .. .. | இளையாங்குடி. |
| 98 | மணி, கே. பி. எஸ். .. .. .. | சீர்காழி (செ.வ.). |
| 99 | மணி, எம். எஸ். .. .. .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 100 | மணி, வி. எஸ். எஸ். .. .. | ஆத்தூர். |
| 101 | மாணிக்கவாசகம், இரா. .. .. | தொண்டாமுத்தூர். |
| 102 | மணியன், பி. எஸ். .. .. .. | சோழவந்தான். |
| 103 | மாரிமுத்து, அ. .. .. .. | ஆடுதுறை. |
| 104 | மாரிமுத்து, ஏ. ஆர். .. .. | பட்டுக்கோட்டை. |
| 105 | மாரிமுத்து, மு. .. .. .. | தலைவாசல். (செ. வ.) |
| 106 | மார்டின், டி. .. .. .. | சாத்தான்குளம். |
| 107 | மருதாசலம், என். .. .. .. | பேரூர். (செ.வ.) |
| 108 | மதியழகன், கே. ஏ. (அமைச்சர்) .. | ஆயிரம் விளக்கு (சென்னை மாநகரம்). |
| 109 | மெய்யப்பன், சா. .. .. .. | காரைக்குடி. |
| 110 | மேத்தா, எம். .. .. .. | பெரியகுளம். |
| 111 | மூக்கையா தேவர், பி. கே. .. .. | உசிலம்பபடி. |



| தொடர் எண். | உறுப்பினர்கள் பெயர். | தொகுதி |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 112 | முனுசாமி கௌண்டர், பி. எம். .. | கிருஷ்ணகிரி. |
| 113 | முனுசாமி, ரா. ரா. .. .. .. | மேலமலையனூர். |
| 114 | முனியாண்டி, ஏ. .. .. .. | நிலக்கோட்டை. (செ.வ.). |
| 115 | முனு, ஆதி. .. .. .. | திருப்போரூர். |
| 116 | முருகையன், புலவர் க. .. .. | திருவையாறு. |
| 117 | முருகையன், எஸ். .. .. .. | கலசபாக்கம் |
| 118 | முருகேசன், க. .. .. .. | பாலக்கோடு |
| 119 | செஞ்சி முனுசாமி, வெ. .. .. | செஞ்சி |
| 120 | முத்தையா, கே. கே. .. .. .. | கடலூர் |
| 121 | முத்தையா, மு. .. .. | ஒட்டப்பிடாரம் (செ. வ.) |
| 122 | முத்துலிங்கம், எஸ். .. .. .. | வந்தவாசி (செ. வ.) |
| 123 | முத்துசாமி, பா. க. சி. .. .. | பெண்ணகரம் |
| 124 | முத்துசாமி, மா. (அமைச்சர்) .. | நாமக்கல் |
| 125 | முத்துச்செல்வன், பு. செ. .. .. | முசிறி |
| 126 | நாச்சிமுத்து, நா. .. .. .. | ஒட்டன்சத்திரம் |
| 127 | நாகலிங்கம், பா .. .. .. | பொன்னேரி (செ. வ.) |
| 128 | நாகசுந்தரம், ஆர். .. .. .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 129 | நல்லசிவன், க. ர. .. .. .. | மொடக்குறிச்சி |
| 130 | நல்லசாமி, தோ. மு. .. .. .. | கரூர் |
| 131 | நஞ்சன், சி. .. .. .. | கூடலூர் (செ. வ.) |
| 132 | நரசிம்மன், ஏ. சி. .. .. .. | ஆரணி |
| 133 | நாராயணன், இரா. .. .. .. | வரகூர் |
| 134 | நடராசன், மு. க. து. .. .. .. | லால்குடி |
| 135 | நடராஜன், ஜி. .. .. .. | காட்பாடி |
| 136 | நடராசன், ஈ. எம். .. .. .. | அந்தியூர் |
| 137 | நெடுஞ்செழியன், இரா. (அமைச்சர் பேரவை முன்னவர்) .. | திருவல்லிக்கேணி (சென்னை மாநகரம்) |
| 138 | பச்சையப்பன், எஸ். பி. .. .. | சங்கராபுரம் |
| 139 | பத்மாவதி, திருமதி, ஜி. .. .. | முகையூர் |
| 140 | பழனி, சி .. .. .. | ஓமலூர் (செ. வ.) |
| 141 | பழனியம்மாள், திருமதி வி. ப. .. | தாராபுரம் (செ. வ.) |
| 142 | பழனிவேல் ராஜன் .. .. .. | தேனி |
| 143 | பன்னீர்செல்வம், எம். .. .. | ஆம்பூர் (செ வ.) |
| 144 | பரமசிவம், பி. என். .. .. .. | பொங்களூர் |
| 145 | பரமசிவம், எஸ். .. .. .. | ஆண்டிப்பட்டி |
| 146 | பரிசுத்த நாடார், ஏ. ஒய். எஸ். .. | தஞ்சாவூர் |
| 147 | பட்டாபி நாயுடு, ஏ. .. .. .. | காவேரிப்பட்டணம |
| 148 | பீர் முஹம்மது, ஹாஜி, ம. மு. .. | மேலப்பாளையம |
| 149 | பெரியசாமி, பெ. .. .. .. | ராசிபுரம் |
| 150 | பெருமாள், ஏ. ஆர். .. .. .. | கரியாப்பட்டி |
| 151 | பொன்னம்பலம், புலவர் பொ. .. | திருமயம் |
| 152 | பொன்னப்ப நாடார், ஆர். .. .. | விளவங்கோடு |

| தொடர் எண். (1) | உறுப்பினர்கள் பெயர். (2) | தொகுதி. (3) |
|---|---|---|
| 232 | விசுவநாதன், செ. கோ. .. .. | செங்கற்பட்டு |
| 233 | வில்லியம், எம். .. .. .. | இளையூர் |
| 234 | வெற்றிடம் .. .. .. | பெருந்துறை |
| 235 | வெற்றிடம் .. .. .. | கொளச்சல் |

பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்கள்

| தொடர் எண். (1) | உறுப்பினர் பெயர். (2) | |
|---|---|---|
| 1 | திரு. என். வி. நடராசன் .. | அமைச்சர் |
| 2 | திரு. ப. உ. சண்முகம் .. | அமைச்சர் |
| 3 | திரு. எஸ். கோவிந்த சாமிநாதன் .. | தலைமை வழக்கறிஞர் |

# தமிழ் நாடு சட்டப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1970 ஜனவரி 20

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 10 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. இரங்கல் தீர்மானங்கள்.

டாக்டர் பி. வி. செரியன் அவர்களின் மறைவு குறித்தும்,

திரு ஏ. சிதம்பரநாத நாடார் அவர்களின் மறைவு குறித்தும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இம்மாநிலத்தின் சட்ட மேலவையின் முன்னாள் தலைவராகவும், மராட்டிய மாநிலத்தின் ஆளுநராகவும் பணிபுரிந்த டாக்டர் பி. வி. செரியன் அவர்கள் பம்பாயில் 9—11—1969 அன்று எதிர்பாராதவிதமாக மறைந்து விட்ட துயரமான செய்தியை இப்பேரவைக்கு அறிவிக்கிறேன். அவர் மறைவு குறித்த இரங்கல் தீர்மானத்தை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் முன்மொழிவார்கள்.

கொளச்சல் தொகுதியிலிருந்து இப்பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட இப்பேரவையின் உறுப்பினர் திரு. ஏ. சிதம்பரநாத நாடார் அவர்கள் 17—12—1969 அன்று எதிர்பாராதவிதமாக மறைந்துவிட்ட துயரமான செய்தியையும் இப்பேரவைக்கு நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அவர் மறைவு குறித்த இரங்கல் தீர்மானத்தையும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் முன்மொழிவார்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** பேரவைத் தலைவரவர்களே, "தமிழ்நாட்டுச் சட்ட மேலவையின் முன்னாள் தலைவராகவும், மராட்டிய மாநில ஆளுநராகவும் பணிபுரிந்த டாக்டர் பி. வி. செரியன் அவர்கள் பம்பாயில் 9—11—1969-ம் நாளன்று எதிர்பாராத வகையில் மறைந்தமை குறித்து இப்பேரவை ஆழ்ந்த துக்கத்தைத் தெரிவிக்கிறது. அவர் மேலவையின் தலைவராகப் பன்னிரண்டு ஆண்டுகள் மிக்க சிறப்போடும் தேர்ந்த திறனோடும் செயலாற்றியுள்ளார். மன்ற உறுப்பினர்கள் அனைவரிடமும் அவர் காட்டிய இன்சொல்லுடைமையாலும், கண்ணியத்தாலும் நன்மதிப்பைப் பெற்றார். இப்பேரவை அவரது மறைவால் வருந்தும் குடும்பத்தினருக்கு அதன் இரங்கலையும் ஆழ்ந்த வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிறது" என்ற தீர்மானத்தையும்,

அடுத்து "கொளச்சல் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இப் பேரவையின் உறுப்பினர் திரு. ஏ. சிதம்பரநாத நாடார் அவர்கள் எதிர்பாராத வகையில் 17—12—1969-ம் நாளன்று மறைந்ததை

யொட்டி இப்பேரவை தனது ஆழ்ந்த துயரத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. அன்னார் 1957-ம் ஆண்டிலிருந்து இப்பேரவையின் உறுப்பினராக இருந்திருக்கிறார்கள். அவர்கள் திருவாங்கூர்–கொச்சி சட்டப் பேரவையின் உறுப்பினராகவும், 1952-ல் அம்மாநிலத்தின் அமைச்சராகவும் இருந்திருக்கிறார்கள்.

திருமதி சிதம்பரநாத நாடாருக்கும், அவரது குடும்பத்தைச் சேர்ந்த ஏனையோருக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த பரிவையும் ஆறாத் துயரையும் தெரிவித்துக்கொள்கிறது" என்ற தீர்மானத்தையும் முன்மொழிகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, மராட்டிய மாநிலத்தின் ஆளுநராக இருந்து மறைந்துவிட்ட டாக்டர் செரியன் அவர்கள் தமிழ்நாட்டு மக்களுடைய அன்பையெல்லாம் ஒருசேரப் பெற்றுக் கொண்டவர்கள் ஆவார்கள். அவர்கள் மருத்துவத் துறையிலே தமிழகத்திலே புகழ் பெற்று விளங்கியது போலவே அரசியல் துறையிலும் நல்லதொரு பண்பாளராகவும், நேர்மையாளராகவும், ஆர்வம் உள்ளவராகவும் திகழ்ந்தார்கள். அவர்கள் ஆளுநர் பொறுப்பை ஏற்று மராட்டிய மாநிலத்தில் அந்த மக்களுடைய நன்மதிப்பைப் பெற்றது மாத்திரமல்லாமல், அவர்கள் அங்கு அரும்பணியாற்றியதன் மூலம் தமிழகத்தின் தனிச் சிறப்பையும், தமிழகத்தின் பெருமையையும் உயர்த்தியிருக்கின்றார்கள் என்று கூறினால் அது மிகையாகாது. அவர்கள் அங்கே அந்தப் பதவிப் பொறுப்பை வகித்த நேரத்தில் தமிழகத்தில் இருந்து யார் பம்பாய்க்குச் சென்றாலும் அவர்களை வலிய வரவேற்கும் பண்பு கொண்டவர். இங்கிருந்து பம்பாய்க்குச் செல்லுவதைப் பற்றிக் கேள்விப்படுகின்ற நேரத்திலேயே, அங்கிருந்து அவர்கள், மடல் மூலம், வருகின்ற விவரத்தை அறிந்து அவரோடு தங்கி விருந்து உண்டிட வேண்டுமென்று அழைப்பதிலே ஆர்வம் கொண்டவர். பெரும் பதவிக்குப் போய்விட்டாலும் தமிழ்நாட்டு மக்களை ஆர்வத்துடன் அழைப்பதிலே பரந்த உள்ளத்தைக் காட்டிக் கொண்டு வந்திருக்கிறார். அப்படிப்பட்ட மகத்தான பெரிய மனிதருடைய மறைவு பெரும் இழப்பாகும். இந்த அவையின் சார்பிலும், என் சார்பிலும் அவருடைய குடும்பத்தாருக்கும் திருமதி செரியன் அவர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இந்தப் பேரவையினுடைய உறுப்பினராக 1957-ம் ஆண்டு முதல் திகழ்ந்தவரும், அருங்குணம் படைத்தவரும், கன்னியாகுமரி மாவட்டத்தில் தனித்த செல்வாக்கை ஈட்டிக் கொண்டவரும், 1952-ல் கேரள மாநிலத்தினுடைய அமைச்சரவையில் இருந்து பணியாற்றியவருமான திரு. சிதம்பரநாத நாடார் அவர்களுடைய மறைவுக்கு என்னுடைய அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். திரு. சிதம்பரநாத நாடார் அவர்கள் இந்த அவையின் உறுப்பினர் என்ற முறையிலும், என்னைப் பொறுத்து தனித்த முறையிலும் நல்ல நெருங்கிய நட்பினைக்



கொண்டிருந்திருக்கிறார்கள். அவர்கள் இங்கே எந்தக் கருத்தைக் கடுமையாக எடுத்துச் சொன்னாலும் உள்ளத்திலே தூய நோக்கம் கொண்டவர். எதையும் மனத்திலே வைத்துக் கொள்ளாமல்—நாம் கொச்சையாக வெகுளி என்று சொல்லுவோமே அந்தத் தன்மையில்—வெள்ளை உள்ளத்தோடு கருத்துக்களை எடுத்துச் சொல்லக் கூடிய சிறந்த பண்பாளர். அவர்கள் இந்த அவையிலே இல்லாதது உள்ளபடியே நமக்கெல்லாம் பெரும் நஷ்டமாகும். சிறந்த அரசியல்வாதியாகவும், தியாகங்கள் புரிந்தவராகவும், குமரி மாவட்ட மக்களின் அன்பைப் பெற்றவராகவும் இருந்த அவர்கள் மறைந்தது தாங்கொணாத பேரிழப்பாகும். அவருடைய குடும்பத்தாருக்கும், உற்றார் உறவினருக்கும் இந்தப் பேரவையின் இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு என்னுடைய இரங்கலையும் இணைத்து அளித்து இந்த அளவோடு அமைகிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, இரு பெரியாருடைய இழப்பால் ஏற்பட்டிருக்கிற இரங்கல் தீர்மானத்தை ஆதரித்து ஓரிரு வார்த்தைகள் பேச முற்படுகிறேன். டாக்டர் செரியன் அவர்கள் எவ்வளவு சிறந்த முறையில் பணியாற்றி வந்தார்கள் என்பதைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கு விளக்கமாக எடுத்துக் கூறினார்கள். அவர்கள் மேலவையின் தலைவராக இருந்தபோது நல்ல ஆற்றல் மிக்க தலைவராகவும், நடுநிலைமையான தலைவராகவும் சீரும் சிறப்புமாகச் செயலாற்றி வந்தார்கள். அன்னாருடைய மறைவால் தமிழகத்திற்குப் பெரும் இழப்பு ஏற்பட்டு விட்டது. என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தை அன்னாருடைய குடும்பத்தாருக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, திரு. சிதம்பரநாத நாடார் அவர்கள் மறைவு பற்றி ஓரிரு வார்த்தைகள் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அவரோடு சட்டசபை உறுப்பினர் என்ற முறையிலே ஒத்துழைத்த காரணத்தாலும், மாணவனாக இருந்தபோது அவரோடு நெருங்கிப் பழகியது குறித்தும் சுருக்கமாக ஓரிரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். 1942 போராட்டத்திலே அன்று அவர் மாணவராக இருந்தபோது காந்திஜி ஆணைப்படி அதி தீவிரமாக உழைத்தார்; மாணவர் தலைவராகத் திகழ்ந்தார். கல்லூரியில் படிப்பை முடித்து விட்டு 1948-ல் திருவிதாங்கூரில் மன்னராட்சி இருந்த நேரத்தில் நடந்த தேர்தலில் திருவிதாங்கூர் சட்ட சபைக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டார். 1948-க்குப் பிறகு அவர்கள் மறையும் வரை தொடர்ந்து சட்டசபை உறுப்பினராக இருந்திருக்கின்றார். அவருடைய வெளித்தோற்றம் சற்றுக் கடுமையாக இருந்தாலும் வெள்ளை உள்ளம் படைத்தவர்கள். மக்களிடம் அன்பு காட்டி வந்த நல்ல ஒரு தலைவராகச் செயலாற்றினார்கள். குறிப்பாக, கன்னியாகுமரியில் இருக்கிற தமிழ்ப் பகுதி அத்தனையையும் தாயகத்தோடு சேர்க்க வேண்டுமென்று ஒரு முறை போராட்டம் நடந்த நேரத்தில் அவர்கள் முன்னணியில் நின்று சிறைச்சாலைக்குச் சென்றிருக்கிறார்கள். அவர்கள் 1957 முதல் இங்கு உறுப்பினராக இருந்த

நேரத்தில் ஆளும் கட்சியில் இருந்தாலும் அவருடைய கருத்தை எந்தவிதமான பயமும் இல்லாமல் கூறுவதில் திறமை பெற்றவர். 1967 பொதுத் தேர்தலுக்குப் பிறகு அன்னார் நோய்வாய்ப்பட்டு கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள். பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார்கள். கழிந்த டிசம்பர் மாதத்திலே திடீரென்று அவர்களுக்கு இந்த வியாதி அதிகப்பட்டு 17-ம் தேதி யன்று மறைந்தார்கள். ஒரு நல்ல சட்டசபை உறுப்பினரை அந்தப் பகுதி மக்கள் இழந்து விட்டார்கள். அவருடைய இழப்பு எங்கள் ஜில்லாவுக்கு மட்டுமல்லாமல் தமிழகத்திற்கே ஏற்பட்ட இழப்பாகும். அந்தத் துயரத்தை எங்களால் தாங்க முடியவில்லை. அந்தப் பகுதி மக்கள் அன்பான தலைவரை இழந்து இன்னும் பல கஷ்டங்களை அனுபவிக்க வேண்டிய நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்தத் தலைவருடைய குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தை இப்பேரவையின் மூலமாகத் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் பி. வி. செரியன் அவர்கள் மறைவு குறித்தும், திரு. ஏ. சிதம்பரநாத நாடார் அவர்கள் மறைவு குறித்தும், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்துள்ள இரங்கல் தீர்மானங்களை மார்க்ஸிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நானும் வழிமொழிகின்றேன்.

அந்த இரங்கல் தீர்மானங்களை முன்மொழிந்து முதலமைச்சர் அவர்கள் கூறிய கருத்துக்களுக்கு என் கட்சியின் முழு மனதான—இசைவான—உடன்பாடு உண்டு. அவ்விரு குடும்பத்தினருக்கு நமது அவையின் சார்பாக அனுதாபத்தைத் தெரிவிப்பதை யொட்டி என் கட்சியின் சார்பாகவும் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**திரு. க. ர. நல்லசிவன் :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, நமது தமிழகத்தில் மேலவையின் தலைவராகவும், மராட்டிய மாநிலத்தின் கவர்னராகவும் நீண்ட நாட்களாகப் பணிபுரிந்த டாக்டர் செரியன் அவர்களைப் பல ஆண்டுகளாக நாமெல்லாம் அறிவோம். சமீபத்தில், நாங்கள்—சட்டசபையைச் சேர்ந்த அங்கத்தினர்கள் சில பேர்—பம்பாய் சென்றிருந்தோம். நாங்கள் வருவதாகத் தகவல் கிடைத்தவுடனே—மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல—டாக்டர் செரியன் அவர்கள் எங்களை எப்படி வரவேற்றார்கள் என்பதை அன்று நாங்கள் பார்ப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. முழுமையான அன்போடு வரவேற்பு கூறி, அங்கே அவர்கள் காட்டிய பரிவு இருக்கிறதே அதையெல்லாம் நாங்கள் என்றைக்கும் மறக்க முடியாது. மேலவையிலும் அவர்கள் மிகச் சிறந்த தலைவராக விளங்கி வந்தார்கள். அவருடைய குடும்பத்தாருக்கு எங்கள் கட்சியின் சார்பாகவும் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

இந்தச் சட்டசபையில் அங்கம் வகித்த மதிப்பிற்குரிய திரு. ஏ. சிதம்பரநாத நாடார் அவர்களை என்னால் மறக்க முடியாது.



ஏனென்றால் 1957-ம் ஆண்டிலிருந்து அவருடன் நான் பழகி வந்திருக்கிறேன். அவர் சட்டசபையில் பேசுவது குறைவாக இருக்கும் என்றாலும், அவரைச் சந்திப்பதற்காக அவர் தொகுதி யிலிருந்து வரக்கூடிய மக்கள் ஏராளமாக இருப்பார்கள். அது மாத்திரமல்ல. மதிப்பிற்குரிய சக அங்கத்தினர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கூறியதுபோல, திரு. சிதம்பரநாத நாடார் அவர்கள் வெளிப்பார்வைக்குத்தான் கரடு முரடான சுபாவம் உள்ளவராகத் தோன்றுவாரே தவிர, உண்மையிலேயே குழந்தை உள்ளம் படைத்தவர்கள்.

அவர் நீண்ட நாள் சட்டசபை அனுபவம் உள்ளவர்கள். ஆளும் கட்சி உறுப்பினராக நீண்ட நாள் அவர் இருந்து பணியாற்றி யிருந்தாலும், இன்று அவர் எதிர்க் கட்சியில் இருந்து பணியாற்று வதற்கு சந்தர்ப்பம் இல்லாமல் போய்விட்டதே என்பது வருத்தமாக இருக்கிறது. ஆளும் கட்சி உறுப்பினராக இருப்பவர்கள் தங்கள் திறமையைக் காட்டுவதற்கு சந்தர்ப்பம் ஓரளவுக்குக் குறைவாகத்தான் இருக்கும். ஆனால், எதிர்க்கட்சியில் இருப்பவர்களுக்கு சந்தர்ப்பம் அதிகமாகக் கிடைக்கும். இத் தருணத்தில் அவர் காலஞ்சென்றுவிட்டது உண்மையிலேயே வருந்தத்தக்கது. அவருடைய குடும்பத்தாருக்கும் எங்கள் கட்சியின் சார்பில் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டு, முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்த இரு இரங்கல் தீர்மானங் களையும் நான் ஆதரிக்கின்றேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** தலைவர் அவர்களே, காலஞ்சென்ற பம்பாய் கவர்னர் டாக்டர் பி. வி. செரியன் அவர்கள் பொது வாழ்க்கையில் எவ்வளவுதூரம் ஈடுபட்டு ஒரு சிறந்த பண்பாளராக விளங்கினார்களோ அதேமாதிரி அவருடைய தொழிலிலும் மிகச் சிறந்து விளங்கினார்கள். குறிப்பாகச் சொன்னால், இந்தியாவிலேயே மிகச் சிறந்த வைத்தியர்கள் என்று கூறத்தக்க இரண்டொருவரிலே டாக்டர் செரியன் ஒருவர் என்பதை இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் நான் அறிந்துகொண்டேன். வேலூருக்கு என்னுடைய நண்பரொருவர் வைத்தியத்திற்குச் சென்று, அங்குள்ள டாக்டர்கள் எல்லோரும் கவனித்துப் பார்த்து, ஒன்றும் அதைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்று தெரிந்த பிறகு, இந்தியாவிலேயே இது சம்பந்தமாகக் கண்டுபிடித்து அறிவுரை சொல்லக்கூடிய ஒருவர் டாக்டர் செரியன் அவர்கள்தான், அவர்களிடத்தில் போய்ப் பாருங்கள் என்று கடிதம் கொடுத்து அனுப்பியிருந்தார்கள். அந்த அளவு தலைசிறந்த வைத்திய நிபுணர் மறைந்தது நம் நாட்டுக்கு ஒரு பெரிய இழப்பாகும்.

அவர்கள் சென்னை மாநகரின் மேயராக இருந்து சென்னை மாநகர மக்களுக்கும் சிறந்த பணி புரிந்திருக்கிறார்கள். அன்னாருடைய மறைவு குறித்து எனது கட்சியின் சார்பாக அவருடைய குடும்பத்தாருக்கு ஆழ்ந்த வருத்தத்தைத் தெரி வித்துக் கொள்ளுகின்றேன்.

சிறந்த வழிகாட்டியாக விளங்கினார். அந்தச் சமயத்தில் அவரோடு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. தமிழர் சார்பில் திருவாங்கூர்-கோச்சின் சமஸ்தானத்தின் அமைச்சராக இவர் தேர்ந்தெடுக்கப் பட்டார். கன்னியாகுமரி மாவட்டத்தின் சார்பாக திரு. நேசமணி அவர்களைத்தான் தேர்ந்தெடுத்தோம். ஆனால் அவர் பதவி வேண்டாமென்று மறுத்துவிடவே, நானும் திரு. நேசமணி அவர்களும் ஓர் இரவு முழுவதும் ஆலோசனை செய்து, திரு. சிதம்பர நாத நாடார் அவர்களைத் தேர்ந்தெடுத்தோம். திருவாங்கூர்-கொச்சின் சமஸ்தானத்திற்குச் செல்லக்கூடியவர் தமிழர்களுக்குப் பாடுபடுபவராக, தமிழர்களின் நன்மைக்காக வாதாடுபவராக இருக்க வேண்டும் என்று நாங்கள் நினைத்தோம். திரு. சிதம்பர நாத நாடார் அவர்கள் இயற்கையிலேயே சற்று கோபம் படைத் தவராக இருந்தார். ஆகவே, திரு. சிதம்பரநாத நாடார் அவர் கள்தான் இதற்குப் பொருத்தமானவர் என்று திரு. நேசமணி அவர் களும், நானும் ஆலோசனை செய்து அவரையே அனுப்பினோம். கேரள மக்களுடைய ஆசை வார்த்தைகளுக்கு மயங்காமல், அவர் எந்தக் காரணங்களுக்காக அமைச்சர் பொறுப்பேற்று அங்கு சென்றாரோ, அதை மனத்தில்கொண்டே பணியாற்றினார். அமைச்சர் பதவியை ராஜினாமா செய்ய வேண்டுமென்று தமிழர் கள் சார்பில் பணித்தபோது அவர் திடீரெனத் தன்னுடைய பதவியை ராஜினாமா செய்ய முன்வந்த புருஷராக விளங்கினார். தமிழர் என்ற இன உணர்வும், இந்தியன் என்ற தேசிய உணர்வும் கொண்ட பெருமகனாக விளங்கினார். வீட்டிற்கு வந்த புதல்வர் இடையிலே போய்விட்டார் என்ற நிலையில் அவர் இயற்கையை எய்திவிட்டார். அவர் மறைவிற்கு என் சார்பிலும், தமிழரசுக் கழகத்தின் சார்பிலும் எங்களுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. பி. எஸ். மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த இருவ ருடைய மறைவு குறித்த இரங்கல் தீர்மானங்களை நான் ஆதரித் துப் பேச விரும்புகிறேன். டாக்டர் செரியன் அவர்களுடைய மறைவு உண்மையிலேயே வருந்தத்தக்கது. கடந்த ஆண்டு சட்ட மன்ற எஸ்டிமேட் கமிட்டி உறுப்பினர்கள் பம்பாய்க்குச் சென்றிருந்த நேரத்தில் அவரும், அவருடைய துணைவியாரும் எங்கள் எல்லோரையும் விருந்துக்கு அழைத்து, தங்களுடைய கைகளாலேயே உணவு படைத்து, பெருமனதோடு எங்கள் ஒவ்வொருவரோடும் புகைப்படங்களை எடுத்துக்கொண்டு எங்களை மிகவும் உபசரித்து வழியனுப்பி வைத்தார்கள். அத்துடன், குடும்பநலன்களை விசாரிப்பது போல, 'தமிழக அரசு எப்படி இருக்கிறது, அதனுடைய வளர்ச்சி எப்படி இருக்கிறது' என்று ஆர்வத்துடன் கேட்டுத் தெரிந்து கொண்டார். மேலும், எங்களை வழிகூட்டி அனுப்புவதற்கான தக்க சௌகரியங்களையும் தன்னுடைய உதவியாளர் மூலமாகச் செய்து எங்களுக்கு உபசாரம் செய்தார். அவருடைய பெருந்தன்மையையும், பெருமதிப்பையும்





நினைக்கும்போது ஒன்றுதான் எங்கள் நினைவிற்கு வருகிறது. அதாவது, தமிழர் எங்கிருந்தாலும், அவர் தமிழர் என்ற முறையிலேயே நடந்து காட்டினார். எவ்வளவு பெரிய பதவியில் இருந்தாலும் தாம் ஒரு தமிழர் என்பதை எடுத்துக்காட்டும் உண்மையான தமிழராக விளங்கினார். அத்தகைய தமிழரை இன்று நாம் இழந்துவிட்டோம். அத்துடன் தமிழர் மாவைக் காத்துவந்த அவருடைய துணைவியாரை இன்று தனியாகப் பார்க்கின்ற நிலையில் இருக்கின்றோம். டாக்டர் செரியன் அவர்களை இழந்து நிற்கும் திருமதி செரியன் அவர்களுக்கும், அவருடைய குடும்பத்தாருக்கும் எங்களுடைய கட்சியின் சார்பிலே ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, இந்தச் சபையிலே பணியாற்றிக்கொண்டிருந்த திரு. சிதம்பரநாத நாடார் அவர்களுடைய மறைவு வருந்தத் தக்கது. திரு. சிதம்பரநாத நாடார் அவர்கள் தன்னுடைய கருத்துக்களை அழுத்தந்திருத்தமாக வலியுறுத்துவார். நீண்ட நேரம் கேட்கக்கூடிய அளவில் கருத்துக்களைச் சொல்லுவார். அவருடைய மறைவு இந்தச் சபைக்கு மட்டுமல்ல, தமிழகத்திற்கே நஷ்டமாக அமைந்திருக்கிறது. அவருடைய குடும்பத்தாருக்கு என் கட்சியின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Hon. Speaker, Sir, on behalf of the Swatantra Legislature Party, I rise to associate myself with the condolence resolutions brought forward by the Hon. Chief Minister in connection with the demise of the distinguished persons, Dr. P. V. Cherian and Thiru A. Chidambaranatha Nadar.

Sir, the loss of Dr. P. V. Cherian is a personal loss to me for several reasons. He was a distinguished member of a noble profession, having specialised in the most complex department of Ear, Nose and Throat and his guidance was available to all the doctors in the Madras City for a number of years. Even before he retired as the Surgeon-General of the then Madras State, he used to guide, encourage and help a number of young doctors in a number of ways. Later on, after he entered politics he became Chairman of the Legislative Council having got himself elected from the Graduates' constituency for two periods of six years and the manner in which he conducted the proceedings of the Legislative Council bore testimony to the very fine temperament that he used to display at that time. Sir, if only we have the patience to go through the proceedings of the Legislative Council during those 12 years, we will find the excellent repartee, subtle and nice manner in which he used to cajole the Members and whenever Members were on the wrong foot, gently but firmly he used to pull them up and tell them exactly what to do. In that manner he conducted the proceedings of the Legislative Council. Personally I had also associated myself with Dr. Cherian in another capacity. When I decided to contest for the Graduates'

constituency in 1964, I went to him and I did not know him before. He told me, 'I like youngsters to come forward but what about your profession'. He then took me inside the house and showed the operation theatre and narrated how he could not give much attention to his profession and people used to say that he was not available for consultation. Later on, he himself telephoned me and said, 'Do hard work, etc.' Thus he acted without any party feeling. Then after a distinguished service in Tamil Nadu, he went to Maharashtra and showed the Maharashtrians what a fine person Tamil Nadu had sent to Maharashtra to serve as a distinguished Governor there. His death was a terrible loss and I hope his wife, children and his relations will be given enough encouragement by God to put up with the great loss. I am quite sure that it is a void that cannot be easily filled up

Then coming to Shri Chidambaranatha Nadar who used to derive a sort of pleasure in calling himself 'Chidambaranatha Nadar' instead of 'Chidambaranathan Nadar', he was a fine gentleman. Sometimes we got angry with him for the manner in which he got up and said certain things. But he was a frank and forthright person and I had always admired him. He never bothered what others thought or said about him. Whenever he spoke in the House, he used to speak graphically and telegraphically. I use the expression 'graphically and telegraphically' in the sense that he used to speak in that manner. He used to make the whole House laugh whenever he used to speak. Everybody wanted to listen to what he would say. He was such a fine gentleman. I had personally known him only for the last 2½ years. I hope his family will be able to put up with the great loss. It is a void for the Kanyakumari district which cannot be easily filled up. With these words, I on behalf of the Swatantra Legislature Party associate myself with the sentiments expressed by the Hon. Chief Minister.

**திரு. ஏ. அ. சுப்பராஜா:** தலைவர் அவர்களே, எங்களுக்கும் பேச வாய்ப்பு அளிக்க வேண்டும். நாங்கள் சுயேச்சை உறுப்பினர்கள் இரண்டு மூன்று பேர்கள் இருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இத்தீர்மானங்கள்மீது கட்சித் தலைவர்கள் மட்டிலும் பேசுவது என்பதுதான் முறை. ஆகவே, கட்சித் தலைவர்களை மட்டுமே அழைக்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையின்முன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த இரு அனுதாபத் தீர்மானங்களையும் என்னுடைய கட்சியைச் சார்ந்த திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்கள் ஆதரித்துப் பேசினார்கள். டாக்டர் செரியன் மிகச் சிறந்த, உயர்ந்த வைத்திய நிபுணர். சுமார் 32 வருடங்களுக்கு முன்னால் அவரைப் பார்க்கும்படியான சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. எந்த நிலையில் அவரைச் சந்தித்தேன் என்பதை உங்களுக்கும்





தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். என்னுடைய மனைவிக்குத் தொண்டையிலே ரண சிகிச்சை செய்யவேண்டுமென்று 1938-ம் ஆண்டில் 'ரங்காச்சாரி மருத்துவமனையில்' அவள் அனுமதிக்கப் பட்டிருந்தாள். அந்த ரண சிகிச்சையை டாக்டர் செரியன் அவர்கள்தான் செய்வார் என்று முடிவு செய்யப்பட்டது. ஆனால் அவர்களை நான் பார்த்தது இல்லை. வெளியில் உட்கார்ந்து கொண்டிருந்தேன்; ஒருவர் கையில் சிகரெட்டுடன் வந்தார். வந்ததைப் பார்த்தேன். திரும்பவும் கையில் அதே சிகரெட்டுடன் திரும்பிச் சென்றதைப் பார்த்தேன். உள்ளே போனபோது டாக்டர் செரியன் வந்து ஆப்பரேஷன் செய்துவிட்டுப் போய் விட்டார் என்று சொன்னார்கள். எனக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது. இதற்கு உதாரணம் சொல்லவேண்டுமென்றால் இராமன் சிவதனுசை

'எடுத்தது கண்டார் இற்றது கேட்டார்'

என்பதாகக் கம்பர் சொன்னார்களே அதைப்போலத்தான் அவர் வந்ததைப் பார்த்தேன். திரும்பச் சென்றதைப் பார்த்தேன். சில விநாடிகளுக்குள்ளேயே ஆப்பரேஷன் செய்துவிட்டுப்போய் இருக்கிறார் என்றால் அவருடைய திறமையைப் பாருங்கள். இப்படி அவர் ஆயிரக்கணக்கான ஆப்பரேஷன் செய்திருக்கிறார். மருத்துவத் துறையில் அவர் ஆற்றியிருக்கும்படியான சேவை மதிப்பிட முடியாதது.

அடுத்து மேல்சபைத் தலைவராக அவர்கள் பன்னிரண்டு வருடங்கள் இருந்தார்கள். பின்னர் மகாராஷ்டிர மாநிலக் கவர்னராக இருந்தார்கள். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சொன்ன மாதிரி நான் பம்பாய்க்குச் சென்றிருந்த சமயத்தில் அவர்களே என்னைக் கூப்பிட்டு அழைத்து 'ஏன் தாங்கள் இங்கேயே வந்து தங்கக்கூடாது' என்று சொல்லி உபசரித்தார்கள். அவர்களோடு தங்கியிருக்கும்படியான பாக்கியம் கிடைத்தது.

"தோன்றின் புகழொடு தோன்றுக"

என்று வள்ளுவர் சொன்னார்களே, அப்படிப் புகழோடு தோன்றியவர்கள் அவர்கள். அவர் மகாராஷ்டிர கவர்னராக இருக்கும்படியான நேரத்தில் உலகக் கிறிஸ்துவர்கள் மகாநாடு பம்பாயில் நடைபெற்றது. அதில் சிறப்பான முறையில் கலந்துகொள்ளும்படியான பாக்கியத்தைப் பெற்றார்கள். தமிழ்நாட்டில் இருந்து, தமிழ்நாட்டில் வளர்ந்து பெரும்புகழைப் பெற்றுத் தமிழ்நாட்டுக்குப் பல்வகையாகவும் சிறப்பாகத் தொண்டாற்றியிருக்கிற அவர்களது மறைவு ஈடுசெய்யமுடியாத நஷ்டமாகும். அவர்களது மனைவியார் அவர்களும் சமூக சேவையில் சிறப்பாக முன்னணியில் இருந்து பணியாற்றுபவர்கள். தமது துணைவரை இழந்த அம்மையாருக்கு நாம் எந்தவிதமான ஆறுதலையும் அளிக்க முடியாது. நம்முடைய ஆழ்ந்த அனுதாபத்தை அந்த அம்மையாருக்கும், அவர்களது குழந்தைகளுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1970 ஜனவரி 20

சட்ட மன்றத்தில் எனது கட்சியைச் சார்ந்தவரும், சிறப்பும், உயர்வும் மிகுந்த செல்வாக்கும் உள்ளவரான திரு. சிதம்பரநாத நாடார் அவர்களுடைய மறைவு நமது நாட்டுக்கே பெரிய நஷ்டமாகும். சட்ட சபைக்கும் சரி, அவரது தொகுதிக்கும் சரி, பேரிழப்பு ஆகும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அவர் தமக்கே உரிய கொச்சைத் தமிழ் என்று சொல்வார்களே—நல்ல தமிழில் உணவு மந்திரி என்பதற்கு—சோற்று மந்திரி என்பதாகச் சொல்லி எல்லோரையும் சிரிக்க வைக்கும் வண்ணம் பேசக்கூடியவர்கள். அதேநேரத்தில் உள்நோக்கம் இல்லாமல், தாம் உணர்ந்ததை உணர்ந்தபடி, உள்ளபடி வெளிப்படையாகப் பேசும் வெள்ளைமனம் படைத்தவர்கள். சமீபத்தில் நோய்வாய்ப்பட்டு மதுரை மருத்துவ மனையில் அவர்கள் இருந்தபோது நான் பார்க்கச் சென்றேன். அப்போதுகூடத் தாம் சட்ட சபைக்கு வர முடியாது இருப்பதற்குத் தாங்கள் அனுமதி வாங்கவேண்டும் என்பதாக மிகுந்த பொறுப்புணர்ச்சியோடு சொன்னார்கள். அவர்களுடைய மறைவுக்கும் வருந்தி அன்னாருடைய குடும்பத்தாருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கும் தீர்மானத்தை—மாண்புமிகு முதல் அமைச்சர் கொண்டுவந்திருப்பதை—நான் ஆதரிக்கிறேன். எங்கள் கட்சியின் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மறைந்த இரு பெரியவர்களுக்கும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும் மற்றக் கட்சித் தலைவர்களும் காட்டிய இரங்கல் உணர்வு, மரியாதையை நானும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரு பெரியவர்களுக்கும் மரியாதை தெரிவிக்கும் வகையில் அவையினர் இரண்டு நிமிடம் மவுனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பேரவை உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடம் மவுனமாக எழுந்து நிற்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்ட இரங்கல் தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

## 2. நீத்தார் நினைவுக்குறிப்பு

### திரு. ஜி. விஜயரங்கம் (மேலவை முன்னாள் உறுப்பினர்) அவர்களின் மறைவு குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவைக்கு இன்னொரு அறிவிப்பு. 1960-இல் இருந்து சட்ட மேலவையில் வட ஆற்காடு உள்ளாட்சித் தொகுதியின் சார்பில் உறுப்பினராக இருந்த திரு. ஜி. விஜயரங்கம் அவர்கள் 27—11—1969 அன்று மறைந்ததைக் குறித்து இப்பேரவையின் இரங்கலையும், ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு நான் தெரிவிக்கிறேன்.



1970 ஜனவரி 20] [பேரவைத் தலைவர்]

மறைந்தவருக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

பேரவை உறுப்பினர்கள் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றனர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மறைந்த டாக்டர் பி. வி. செரியன் அவர்களுக்கும், திரு. சிதம்பரநாத நாடார் அவர்களுக்கும் மரியாதை தெரிவிக்கும் வகையில் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகளை இந்த அளவோடு நிறுத்திப் பேரவையை ஒற்றி வைக்கிறேன்.

பேரவை மீண்டும் நாளை காலை 9 மணி அளவில் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

## 3. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

* 1. Notification issued with Memorandum No. 133735/P8 69-6, Rural Development and Local Administration, dated the 10th March 1969, in regard to certain amendments to the Tamil Nadu Khadi and Village Industries Board (Accounts and Audit) Rules, 1958. [Laid on the Table of the House under section 29 (3) of the Tamil Nadu Khadi and Village Industries Board Act, 1959 (Tamil Nadu Act 18 of 1959).]

* 2. Notification issued with G.O. Ms. No. 821, Rural Development and Local Administration, dated the 2nd May 1969, in regard to the issue of the Tamil Nadu Municipal Councils (Election of Chairman and Vice-Chairman) Rules, 1969. [Laid on the Table of the House under Section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

* 3. Notification issued with G.O. Ms. No. 404, Food, dated the 25th April 1969 in regard to inclusion of certain commodities in the Schedule to the Tamil Nadu Warehouses Act, 1951 (Tamil Nadu Act XV of 1951). [Laid on the Table of the House under Section 27 (4) of the Tamil Nadu Warehouses Act, 1951 (Tamil Nadu Act XV of 1951).]

* 4. Notification issued with G.O. P. No. 915, Revenue, dated the 2nd May 1969 in regard to authorisation of officers of Commercial Taxes Department for registration and Assessment under the Tamil Nadu Sales of Motor Spirit Taxation Act, 1939 (Tamil Nadu Act VI of 1939). [Laid on the Table of the House under Section 29 (2) of the Tamil Nadu Sales of Motor Spirit Taxation Act, 1939 (Tamil Nadu Act VI of 1939).]

* 5. Notification issued with G.O. No. 1325, Revenue, dated the 28th June 1969 in regard to grant of exemption from liability to sales-tax on the sales of goods manufactured by the inmates of

the Gagriel Rehabilitation Centre, Manappakkam. [Laid on the Table of the House under Section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

* 6. Notification issued with G.O. P. No. 1719, Revenue, dated the 30th August 1969 in regard to cancellation of Revenue Department Notification III Nos. 394 and 395 of 1967 published at page 960 of Part III of the *Fort St. George Gazette*, dated the 28th June 1967 relating to exemption from liability to sales-tax for manufacture and supply of blended atta and supply to Bihar State. [Laid on the Table of the House under Section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

* 7. Notification issued with G.O. R. No. 996, Revenue, dated the 15th May 1969 in regard to exemption from liability to tax in respect of sales of products of the workshop of the Boy's Town at Nagamalai, Madurai. [Laid on the Table of the House under Section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

* 8. Notification issued with G.O.P. No. 659, Revenue, dated the 21st March 1969, in regard to an amendment to the Tamil Nadu General Sales Tax Rules, 1959 published at pages 232-280 of the Rules Supplement to Part I of the *Fort St. George Gazette*, dated the 1st April 1959. [Laid on the Table of the House under Section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

* 9. Notification issued with G.O. No. 878, Home, dated the 17th April 1969, in regard to exemption from payment of tax leviable in respect of vehicle bearing registration number MDH 5255 belonging to the United Nations International Children's Emergency Fund and assigned to the Leprosy Centre, Polambakkam, Chingleput District. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

* 10. Notification issued with G.O. Ms. No. 678, Home, dated the 24th March 1969 in regard to exemption from payment of tax leviable in respect of vehicles bearing registration number MDA 5324 and MDA 5327 belonging to the United Nations International Childrens' Emergency Fund and assigned to the Family and Child Welfare Training Centre, Gandhigram. [Laid on the Table of the House under Section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

* 11. Notification issued with G.O. Ms. No. 1399, Home, dated the 7th May 1968 in regard to the collection of reduced rate of tax in respect of the lorry MDN 2762, belonging to Lawrence School, Lovedale. [Laid on the Table of the House under Section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]



* 12. Notification issued with G.O. Ms. No. 532, Home, dated the 28th February 1968 in regard to exemption from payment of tax in respect of three wheeler vans bearing registration numbers MDJ 5212 and MDJ 5213, belonging to Vellore Municipality. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

* 13. Notification issued with Memorandum No. 61561-J2/69-2 Revenue, dated the 29th July 1969, in regard to an amendment to the Revenue Department Notification II-1 No. 1431 of 1965, published at pages 588-590 of Part II—Section 1 of the *Fort St. George Gazette*, dated the 31st March 1965. [Laid on the Table of the House under section 73 (5) of the Tamil Nadu Inam Estates (Aoblition and Conversion into Ryotwari) Act, 1963 (Tamil Nadu Act 26 of 1963).]

* 14. Notification issued with Memorandum No. 35500-J2/69-2, Revenue, dated the 26th May 1969 in regard to an amendment to the Revenue Department Notification II-1 No. 1061 of 1965, dated the 12th March 1965 published at pages 1-6 of Part II —Section 1 of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 15th March 1965. [Laid on the Table of the House under section 73 (5) of the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Tamil Nadu Act 26 of 1963).]

* 15. Notification issued with G.O. Ms. No. 1470, Home, dated the 20th May 1968 in regard to exemption from payment of tax leviable in respect of the vehicles belonging to the Madras Atomic Power Project. [Laid on the Table of the House under Section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxtion Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

* 16. Notification issued with Memorandum No. 32088/A II/68-10, Agriculture, dated the 9th December 1968 in regard to cancellation of Agriculture Department Notification No. 2433 of 1966 published at page 917 of Part II—Section 1 of the *Fort St. George Gazette*, dated the 15th June 1966, for declaraing the South Arcot District as a notified area for the purpose of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 in so far as it relates to green chillies. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

* 17. Notification issued with G.O. Ms. No. 1863, Agriculture, dated the 19th June 1969 in regard to an amendment to Rule 124 of the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962 published with Food and Agriculture Department Notification S.R.O. No. A 894 of 1962 at pages 1 to 88 of the Supplement to Part V of the *Fort St. George Gazette*, dated the 17th October 1962. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

* 18. Notification issued with G.O. Ms. No. 2464, Home, dated the 28th August 1968 in regard to an amendment to the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957, published at pages 79 to 104 of the Rules Supplement to Part I of the *Fort St. George Gazette*, dated the 30th January 1957. [Laid on the Table of the House under section 10 (3) of the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955).]

* 19. Notification issued with G.O. Ms. No. 2465, Home, dated the 28th August 1968 in regard to an amendment to the Madras Cinemas (Regulation) Rules, 1957, published at pages 79 to 104 of the Rules Supplement to Part I of the *Fort St. George Gazette*, dated the 30th January 1957. [Laid on the Table of the House under section 10 (3) of the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955).]

* 20. Notification issued with G.O. Ms. No. 1392, Revenue, dated the 15th July 1968 in regard to the settlement of taken over inam estates situated in Ramanathapuram and Thanjavur districts. [Laid on the Table of the House under section 73 (5) of the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Tamil Nadu Act 26 of 1963).]

* 21. Notification issued with G.O. Ms. No. 1675, Education, dated the 26th October 1968 in regard to approval of list of parks and play-fields in the area within the jurisdiction of the Tirupathur Municipal Council. [Laid on the Table of the House under section 14 (3) of the Tamil Nadu Parks Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959 (Tamil Nadu Act 26 of 1959).]

* 22. Notification issued with G.O. Ms. No. 1453, Food, dated the 10th December 1968 in regard to insertion of new rule 16-A to the Tamil Nadu State Warehousing Corporation Rules, 1965. [Laid on the Table of the House under section 31 (11) of the Warehousing Corporation Act, 1962 (Central Act 58 of 1962).]

* 23. Notification issued with G.O. Ms. No. 373, Public (Elections IV), dated the 25th February 1969 in regard to certain amendments to the rules for the use and maintenance of Government cars allotted to Ministers, Speaker, Legislative Assembly and Chairman, Legislative Council. [Laid on the Table of the House under section 14 (3) of the Tamil Nadu Payment of Salaries Act, 1951 (Tamil Nadu Act XX of 1951.)]

* 24. Notification issued with G.O. Ms. No. 38, Agriculture, dated the 4th January 1969 in regard to an amendment to Rule 191 of the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]



* 25. Notification issued with G.O. Ms. No. 2012, Agriculture, dated the 28th June 1969, in regard to an amendment to the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962, published with the late Food and Agriculture Department Notification S.R.O. No. A. 894 of 1962, at pages 1 to 88 of the Supplement to Part V of the *Fort St. George Gazette*, dated the 17th October 1962. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

‡ 26. Notification issued with G.O. Ms. No. 1243, Revenue, dated the 18th June 1969, in regard to exemption from liability to entertainments tax in respect of cinema shows conducted in the City of Madurai by the Ray Film Society. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

‡ 27. Notification issued with G.O. R. No. 966, Revenue, dated the 12th August 1969, in regard to exemption from liability to entertainment tax in respect of the cinema show organized by the South Indian Film Chamber of Commerce at the Pilot Theatre, Royapettah, Madras in aid of the Tamil Nadu Chief Minister's Drought Relief Fund. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

‡ 28. Notification issued with G.O. R. No. 816, Revenue, dated the 10th July 1969, in regard to exemption from liability to entertainments tax in respect of the cinema shows conducted at the All-India Art and Industrial Exhibition, 1969, Tiruchirappalli from 30th May to 13th July 1969. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act; 1939 (Tamil Nadu Act X of 1939).]

‡ 29. Notification issued with G.O. Ms. No. 1662, Home, dated the 8th June 1968, in regard to exemption from payment of tax leviable in respect of the vehicle MSQ 4430 used by the Trade Commissioner, Trade Representation of the Czechoslovak Socialist Republic. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

‡ 30. Notification issued with G.O. Ms. No. 239, Labour, dated the 10th June 1969, in regard to certain amendments to the Tamil Nadu Industrial Disputes Rules, 1958, relating to lapsing of personal deposits with Industrial Tribunals published at pages 1—25 of Part I of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 27th December 1958. [Laid on the Table of the House under section 38 (4) of the Industrial Disputes Act, 1947 (Central Act XIV of 1947).]

‡ 31. Notification issued with G.O. Ms. No. 898, Rural Development and Local Administration, dated the 16th May 1969, in regard to dissolution of Saligramam Town Panchayat for a period

of one year. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

‡ 32. Notification issued with G.O. Ms. No. 549, Agriculture, dated the 25th February 1969, in regard to Regulation of Trade in Gingelly in North Arcot District. [Laid on the Table of the House under Section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act XXIII of 1959).]

‡ 33. Notification issued with G.O. Ms. No. 2192, Home, dated the 30th July 1968, in regard to an amendment to the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957 published at pages 79-104 of the Rules Supplement to Part I of the *Fort St. George Gazette*, dated the 30th January 1957. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955).]

‡ 34. Notification issued with G.O. Ms. No. 2042, Home, dated the 17th July 1968, in regard to certain amendments to the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957, published at pages 79 to 104 of the Rules Supplement to Part I of the *Fort St. George Gazette*, dated the 30th January 1957. [Laid on the Table of the House under section 10 (3) of the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955).]

‡ 35. Notification issued with G.O. No. 505, Revenue, dated the 6th March 1969, in regard to exemption from liability to sales-tax by the Infant Jesus Orphanage, Mulagumoodu for the sale of articles manufactured by the institution. [Laid on the Table of the House under Section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

‡ 36. Notification issued with G.O. Ms. No. 1, Local Administration, dated the 2nd January 1969, in regard to an amendment to the conduct of Election of Members of Village Panchayats Rules, 1964. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

‡ 37. Notification issued with G.O. P. No. 508, Revenue, dated the 7th March 1969, in regard to an amendment to the Revenue Department Notification published in Part III of the Extraordinary issue of the *Fort St. George Gazette*, dated 1st September 1964, relating to exemption from liability to tax for canteens run by Industrial Establishments. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

‡ 38. Notification issued with G.O. Ms. No. 1244, Home, dated 25th April 1968 in regard to exemption from payment of tax leviable in respect of movie van bearing registration number CC 1264 intended for the official use of the Consulate-General of Japan at Madras. [Laid on the Table of the House under Section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]



‡39. Notification issued with G.O. R. No. 850, Home, dated the 12th February 1968 in regard to exemption from payment of tax leviable in respect of vehicles belonging to the Sringeri Mutt. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

‡ 40 Notification issued with G. O. Ms. No. 124, Agriculture, dated the 23rd January 1968 in regard to certain amendments to the rules to regulate hunting, shooting and fishing in reserved lands as defined in the rules issued under section 26 of the Tamil Nadu Forest Act, published at pages 1710-1711 of Part I of the *Fort St. George Gazette*, dated the 5th October 1937 [Laid on the Table of the House under section 64-A of the Tamil Nadu Forest Act, 1882 (Tamil Nadu Act V of 1882).]

‡ 41. Notification issued with G.O. Ms. No. 2354, Home, dated the 14th August 1968 in regard to the reciprocal arrangement based on single-point taxation in respect of the Transport Vehicles plying between Tamil Nadu and Andhra Pradesh States and amendment of the notification published at page 1 of Part II—section 1 of the *Fort St. George Gazette*, Extraordinary, dated the 1st October 1965. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931.)]

@ 42. Notification issued with G.O. No. 1505, Revenue, dated the 28th July 1969 in regard to exemption from the liability to General Sales Tax payable by the Bakery Production Unit of the Guild of Service, Gandhinagar, Madras. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

@ 43. Notification issued with G.O. R. No. 505, Home, dated the 11th February 1969, in regard to exemption from payment of motor vehicles tax to certain vehicles belonging to His Holiness Jagadguru Sankaracharya of Sringeri Sharada Peetham at the time of his visit to Tamil Nadu State during the period from the 3rd February 1969 to the 16th February 1968. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

@ 44. Notification issued with G.O. Ms. No. 2097, Home, dated the 22nd July 1968 in regard to the extension of grace time for the payment of tax for the quarter ending 30th September 1968 in respect of stage carriages and public carries. [Laid on the Table of the House under Section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

@ 45. Notification issued with G.O. Ms. No. 1469, Agriculture, dated the 13th May 1968, in regard to notification of certain areas in Tiruchirappalli district under the Tamil Nadu Land Improvement Schemes Act, 1959. [Laid on the Table of the House under section 44 (3) of the Tamil Nadu Land Improvement Schemes Act, 1959 (Tamil Nadu Act XXXI of 1959).]

@ 46. Notification issued with G.O. Ms. No. 1238, Home, dated the 22nd May 1969, in regard to amendment to the First Schedule of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940, published at pages 1 to 40 of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 30th March 1940, as subsequently amended. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

@ 47. Notification issued with G.O. Ms. No. 1004, Home, dated the 6th April 1968, in regard to exemption from payment of motor vehicles tax to a tractor and certain trailers belonging to Sri Ahobila Mutt, so long as the vehicles are used for philanthropic purposes without letting them for hire or reward. [Laid on the Table of the House under Section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

@ 48. Notification issued with G. O. Ms. No. 974, Home, dated the 23rd April 1969, in regard to exemption from the payment of motor vehicles tax to a vehicle belonging to the United Nations International Children's Emergency Fund and assigned to the Primary Health Centre, Chittoor, Salem district. [Laid on the Table of the House under Section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

@ 49. Notification issued with G.O. Ms. No. 1628, Agriculture, dated the 27th May 1969, in regard to notification under the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959, declaring the areas of the Kinathukaduvu, Thondamuthur and Kunnathur regulated markets in Coimbatore district, in respect of cotton, groundnut, tobacco and turmeric. [Laid on the Table of the House under Section 29 (4) of the Tamil Nadu Agriculture Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

@ 50. Notification issued with G.O. Ms. No. 1187, Agriculture, dated the 11th April 1969, in regard to the preliminary notification for including the taluks of Saidapet and Sriperumbudur in Chingleput District for regulation of trade in respect of groundnut. [Laid on the Table of the House under Section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

@ 51. Notification issued with G.O. Ms. No. 900, Home, dated the 18th April 1969, in regard to exemption from payment of motor vehicles tax to certain vans belonging to Skippo Mobile



Medical Unit, Kodaikanal, subject to the condition that the vehicles are used exclusively for rendering free medical aid. [Laid on the Table of the House under Section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

@ 52. Notification issued with G.O. Ms. No. 3682, Home, dated the 16th December 1968, in regard to exemption from the payment of motor vehicles tax to the vehicles bearing registration number MSQ 5346, belonging to Service and Maintenance Centre, Madras. [Laid on the Table of the House under Section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

@ 53. Notification issued with G.O. Ms. No. 2636, Home, dated the 10th September 1968, in regard to the continuance of the collection of motor vehicles tax at reduced rate to certain vehicles specified in the schedule of the notification as long as the vehicles are used solely for tourist purposes. [Laid on the Table of the House under Section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

@ 54. Notification issued with G.O. Ms. No. 849, Home, dated the 25th March 1968, in regard to the continuance of payment of motor vehicles tax at reduced rate in respect of jeep stage carriages on Village road in rural areas for another year. [Laid on the Table of the House under Section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).

@ 55. Notification issued with G.O. P. No. 608, Revenue, dated the 14th March 1969, in regard to amendment to Form XV of the Tamil Nadu General Sales Tax Rules, 1959, published at pages 232-280 of the Rules Supplement to Part I of the *Fort St. George Gazette*, dated the 1st April 1959, as subsequently amended. [Laid on the Table of the House under Section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

@ 56. Notification issued with G.O. Ms. No. 1107, Home, dated the 9th May 1969, in regard to the extension of provisions of the Tamil Nadu Buildings (Lease and Rent Control) Act, 1960 to Katpadi Township area in North Arcot District. [Laid on the Table of the House under Section 34 (4) of the Tamil Nadu Buildings (Lease and Rent Control) Act, 1960 (Tamil Nadu Act 18 of 1960).]

@ 57. Notification issued with G.O. Ms. No. 2964, Home, dated the 27th October 1967, in regard to exemption from payment of motor vehicles tax to a vehicle bearing registration number MSR 9591, belonging to the Trade Commissioner for the Hungarian People's Republic at Madras. [Laid on the Table of the House under Section 11 (2) of the Tamil Nadu under Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

@ 58. Notification issued with G.O. Ms. No. 133, Home, dated the 21st January 1969, in regard to the continuance of collection of motor vehicles tax at reduced rate in respect of the lorry MDC 7260, belonging to Sacred Heart Convent, Valparai, so long as the lorry is used for transport of materials for the construction of school buildings by the Convent. [Laid on the Table of the House under Section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

@ 59. Notification issued with G.O. Ms. No. 682, Local Administration, dated the 11th April 1969, in regard to an amendment to the Rule 12 (3) of the Tamil Nadu District Municipalities Act, 1920, published at pages 215 to 218 of Part I-A of the *Fort St. George Gazette*, dated the 13th June 1933, relating to the receipts and expenditure of the municipal councils. [Laid on the Table of the House under Section 304 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

@ 60. Notification issued with G.O. Ms. No. 259, Agriculture, dated the 5th February 1969, in regard to deletion of Rule 19 of the Tamil Nadu Land Improvement Schemes Rules, 1961, published at pages 1238-1244 of the Rules Supplement to Part V of the *Fort St. George Gazette*, dated 6th December 1961. [Laid on the Table of the House under Section 44 (3) of the Tamil Nadu Land Improvement Schemes Act, 1959 (Tamil Nadu Act 31 of 1959).]

@ 61. Notification issued with G.O. Ms. No. 3276, Home, dated the 4th November 1968, in regard to exemption from payment of motor vehicles tax to certain vehicles belonging to the Social Welfare Centre, Madras. [Laid on the Table of the House under Section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

@ 62. Notification issued with G.O. Ms. No. 1492, Home, dated the 16th June 1969, in regard to certain amendments to rule 296 of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940, published at pages 1-40 of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 30th March 1940, as subsequently amended. [Laid on the Table of the House under Section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

@ 63. Notification issued with G.O. Ms. No. 1076, Revenue, dated the 16th July 1969, in regard to an amendment to rule published with the Revenue Department Notification S.R.O. No. A-367 of 1964, dated the 24th December 1963, at pages 364-366 of Part V of the *Fort St. George Gazette*, dated the 22nd April 1964. [Laid on the Table of the House under Section 116 (3) of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 (Tamil Nadu Act 22 of 1959).]



@ 64. Notification issued with G.O. P. No. 1225, Revenue, dated the 16th July 1969, in regard to an amendment to rule 26 (10) of the Tamil Nadu General Sales Tax Rules, 1959, published at pages 232-280 of the Rules Supplement to Part I of the *Fort St. George Gazette*, dated the 1st April 1959, as subsequently amended. [Laid on the Table of the House under Section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

@ 65. Notification issued with G.O. R. No. 695, Revenue, dated the 13th June 1969, in regard to appointment of Thiru V. P. Arunagiri, Sub-Judge. Ootacamund, as the Judicial Member of the Additional Bench of the Sales Tax Appellate Tribunal, Coimbatore. [Laid on the Table of the House under Section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

@ 66. Notification issued with G.O. Ms. No. 1722, Agriculture, dated the 4th June 1969, in regard to extension of the term of office of certain members of the Madurai Market Committee, for a further period of one year from 15th November 1968. [Laid on the Table of the House under Section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act XXIII of 1959).]

@ 67. Notification issued with Roc. No. 59039/68-F2, dated the 14th November 1968, in regard to alteration of classification of Nemili Panchayat in North Arcot district as town panchayats [Laid on the Table of the House under Section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

£ 68. Notification issued with G.O. P. No. 1858, Revenue, dated the 6th September 1969, in regard to exemption from liability to sales tax on the sales by any dealer of sheep, goats and other animals for slaughter. [Laid on the Table of the House under Section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

£ 69. Notification issued with G.O. Ms. No. 1857, Revenue dated the 6th September 1969, in regard to exemption from payment of sales tax on the sales of goods by the Swedish Red Cross Rehabilitation Industries, Katpadi. [Laid on the Table of the House under Section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

£ 70. Notification issued with G.O. Ms. No. 3629, Home, dated the 10th December 1968, in regard to certain amendments relating to Rent Controllers and Appellate Authorities, published with Home Department Notification II-1 No. 3921 of 1968, at page 1539 of Part II—Section 1 of the *Fort St. George Gazette*, dated the 18th September 1968. [Laid on the Table of the House under Section 34 (4) of the Tamil Nadu (Lease and Rent Control) Act, 1960 (Tamil Nadu Act 18 of 1960).]

£ 71. Notification issued with G. O. R. No. 697, Revenue, dated the 12th August 1969, as amended in Government Memorandum No. 73296 C.T. III-1/69-2, Revenue, dated the 13th August 1969, in regard to exemption from liability to entertainments tax for the benefit film show in aid of the Christian Medical College Women's Hostel, Vellore, on 16th August 1969 at Apsara Theatre, Vellore. [Laid on the Table of the House under Section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

£ 72. Notification issued with G.O. Ms. No. 1673, Revenue, dated the 16th August 1969, in regard to payment of travelling allowance and daily allowance to the trustee-in-charge of Sri Alangadu Immudi Agora Dharma Sivachariyar Ayira Visiar Math for the journeys performed by him to attend the meetings of the board of the Trustees or for other purposes of administration of the said math. [Laid on the Table of the House under Section 116 (3) of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 (Tamil Nadu Act 22 of 1959).]

£ 73. Notification issued with G. M. Ms. No. 418, Home, dated the 24th February 1969, in regard to collection of tax at reduced rate in respect of the Tourist luxury coach MSV 7555 so long as the said vehicle is used solely for tourist purposes. [Laid on the Table of the House under Section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

£ 74. Notification issued with G.O. Ms. No. 62, Home, dated the 8th January 1969, in regard to collection of tax at reduced rate in respect of the van MSQ 9125, belonging to Thiru Tata Engineering and Locomotive Company, Limited, Madras, for the purpose of demonstration. [Laid on the Table of the House under Section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

£ 75. Notification issued with G.O. Ms. No. 1764, Home, dated the 11th July 1969, in regard to collection of tax at reduced rate in respect of the tourist luxury coaches bearing registration numbers DLP 3467 and DLP 3468, belonging to India Tourism Development Corporation Limited, Madras, for tourist purpose [Laid on the Table of the House under Section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

£ 76. Notification issued with G.O. Ms. No. 1862, Home, dated the 23rd July 1969, in regard to collection of tax at reduced rate in respect of the tourist luxury coach MDJ 3922 for tourist purposes. [Laid on the Table of the House under Section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]



£ 77. Notification issued with G.O. Ms. No. 1400, Home, dated the 7th June 1969 in regard to exemption from payment of tax leviable in respect of certain vehicles belonging to the United Nations International Children's Emergency Fund and temporarily registered in Tamil Nadu. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

£ 78. Notification issued with G.O. R. No. 1939, Revenue, dated the 28th August 1969 in regard to exemption from payment of entertainment tax for the film shows connected with the festival of Rumanian films in India under the Indo-Rumanian Cultural Exchange Programme held at the Blue Diamond Theatre, Madras from 29th August to 4th September 1969. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act V of 1939).]

£ 79. Notification issued with G.O. R. No. 841, Revenue, dated the 19th July 1969 in regard to appointment of Additional Judicial Member of Sales Tax Appellate Tribunal, Madras. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

£ 80. Notification issued with Memo. No. 67185/A. II 69-1, Agriculture, dated the 17th June 1969, in regard to regulation of trade in arecanut in Coimbatore District. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

£ 81. Notification issued with G.O. P. No. 991, Revenue, dated the 14th May 1969 in regard to certain amendments to the Tamil Nadu General Sales Tax Rules, 1959, published with the Revenue Department Notification S. R. O. No. A-1941 at pages 232 to 280 of the Rules Supplement to Part I of the *Fort St. George Gazette*, dated the 1st April 1959. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

£ 82. Notification issued with G. O. Ms. No. 1581, Agriculture, dated the 22nd May 1969 in regard to certain amendments to the Tamil Nadu Sandalwood Transit Rules, 1967, published with the Agriculture Department Notification S.R.O. No A-363 of 1967 at pages 335–345 of Part V of the *Fort St. George Gazette*, dated the 26th April 1967. [Laid on the Table of the House under section 64-A of the Tamil Nadu Forest Act, 1882 (Tamil Nadu Act V of 1882).]

£ 83. Notification issued with Rc. No. (P) D 1-18318/68, dated the 9th August 1969 in regard to no-confidence motion against the President Thiru G. Jayaraman for his removal from Koorambadi

Village Panchayat in Wallajah taluk of North Arcot district. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

£ 84. Notification issued with the G.O. Ms. No. 305, Revenue, dated the 17th February 1969 in regard to certain amendments to the Tamil Nadu Cultivating Tenants (Special Provisions) Rules, 1968, published with the Revenue Department Notification S.R.O. No. A-347 of 1968 at pages 342–345 of Part V of the *Fort St. George Gazette*, dated the 22nd May 1968. [Laid on the Table of the House under section 12 (4) of the Tamil Nadu Cultivating Tenants (Special Provisions) Act, 1968 (Tamil Nadu Act 16 of 1968).]

£ 85. Notification issued with G.O. Ms. No. 31, Rural Development and Local Administration, dated the 7th January 1969 in regard to draft rules governing the classification, methods of recruitment, conditions of service and pay and allowances of class I-A, I-B and II Officers included in the Tamil Nadu Corporation Engineering Service. [Laid on the Table of the House under section 348 (*d*) of the Tamil Nadu City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919).]

£ 86. Notification issued with G.O. Ms. No. 1393, Revenue, dated the 14th July 1969 in regard to certain amendments to the Rule published with Revenue Department Notification, dated the 17th October 1955 at page 435 of the Rules Supplement to Part I of the *Fort St. George Gazette*, dated the 19th October 1955. [Laid on the Table of the House under section 67 (4) of the Tamil Nadu Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Tamil Nadu Act XXVI of 1948).]

£ 87. Notification issued with G.O. Ms. No. 1774, Revenue, dated the 9th October 1967 in regard to certain amendments to the Tamil Nadu Urban Land Tax Rules, 1966, published with the Revenue Department Notification S.R.O. No. A-758 of 1966 at pages 1–24 in Part V of the *Fort St. George Gazette* Extrraordinary, dated the 25th August 1966. [Laid on the Table of the House under section 45 (2) of the Tamil Nadu Urban Land Tax Act, 1966 (Tamil Nadu Act 12 of 1966).]

£ 88. Notification issued with G.O. Ms. No. 1748, Rural Development and Local Administration, dated the 16th September 1969 in regard to exemption of certain categories of buildings of plantations at Coonoor from the provisions of the Tamil Nadu Public Buildings (Licensing )Act, 1965. [Laid on the Table of the House under section 25 (4) of the Tamil Nadu Public Buildings (Licensing) Act, 1965 (Tamil Nadu Act 13 of 1965).]



£ 89. Notification issued with G.O. Ms. No. 235, Food, dated the 5th March 1969 in regard to amendments to Appendices I and II of the Tamil Nadu Warehouses Rules, 1953. [Laid on the Table of the House under section 27 (4) of the Tamil Nadu Warehouses Act, 1951 (Tamil Nadu Act XV of 1951).]

£ 90. Balance Sheet and Profit and Loss Account of the Tamil Nadu Warehousing Corporation for the year 1967–68. [Laid on the Table of the House under section 31 (11) of the Warehousing Corporation Act, 1962 (Central Act 58 of 1962).]

£ 91. Notification issued with G.O. Ms. No. 1707, Revenue, dated the 20th August 1969 in regard to an amendment to the Tamil Nadu Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Rules, 1965, published at pages 1-25 of Part V of the *Fost St. George Gazette* Extraordinary, dated the 15th February 1965. [Laid on the Table of the House under section 48 (5) of the Tamil Nadu Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Tamil Nadu Act 30 of 1963).]

£ 92. Notification issued with G.O. Ms. No. 2010, Home, dated the 12th July 1968 in regard to grace time for the payment of tax in respect of stage carriages and public carriers for the quarter ending 30th September 1968. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

£ 93. Notification issued with G.O. Ms. No. 1399, Home, dated the 7th June 1969 in regard to exemption from payment of tax leviable in respect of vehicles belonging to the Boys' Town, Nagamalai, Madurai. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

£ 94. Notification issued with G.O. Ms. No. 3479, Home, dated the 25th November 1968 in regard to exemption from payment of tax leviable in respect of car bearing registration number MSQ 3980 belonging to Dr. Paul Johnson, United States Agency for International Development Mission to India. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

£ 95. Notification issued with G.O. P. No. 2155, Revenue, dated the 29th September 1969 in regard to exemption from liability to sales tax by any dealer on the sales of Korai grass. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

£ 96. Notification issued with G.O. Ms. No. 1352, Public (Services-A), dated the 19th July 1969 in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954, for inclusion of the post of Junior Research Statistician in

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1970 ஜனவரி 20

காலஞ்சென்ற திரு. ஏ. சிதம்பரநாத நாடார் அவர்களைப்பற்றி நான் அதிகம் சொல்லத் தேவையில்லை. அவர் மிகச் சிறந்த முறையில் இந்த அவையில் பணியாற்றியிருக்கிறார்கள். அன்னாருடைய குடும்பத்தாருக்கும் எங்கள் கட்சியின் சார்பில் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா:** தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள இரங்கல் தீர்மானங்களை ஆதரித்து, மறைந்த டாக்டர் செரியன் அவர்களுடைய குடும்பத்தாருக்கும், மறைந்த திரு. ஏ. சிதம்பரநாத நாடார் அவர்களுடைய குடும்பத்தாருக்கும் என்னுடைய கட்சியின் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது முதலமைச்சர் அவர்கள், மராட்டிய மாநிலத்தின் ஆளுனராகவும் சென்னை மாநகராட்சி மன்றத்தின் தலைவராகவும் தமிழ்நாட்டுச் சட்டமன்றப் பேரவையின் மேலவைத் தலைவராகவும் இருந்து பணிபுரிந்த மேதகு டாக்டர் செரியன் அவர்களுடைய மறைவுக்காகவும், ஆளுங்கட்சியிலும், எதிர்க்கட்சியிலும் உறுப்பினராக இருந்தவரும், கேரள மாநிலத்தில் அமைச்சராக இருந்தவரும், தமிழ்நாட்டு அரசியலிலும், கேரள மாநிலத்து அரசியலிலும் பங்குபெற்று மிகச் சிறப்பாகப் பணிபுரிந்தவருமான உயர்திரு ஏ. சிதம்பரநாத நாடார் அவர்களுடைய மறைவுக்காகவும் கொண்டுவந்திருக்கிற இரங்கல் தீர்மானங்களை நான் ஆதரிக்கின்றேன்.

மேதகு டாக்டர் செரியன் அவர்கள் ஏசு பெருமானின் நேசராகவும் ஏசு பெருமானுடைய நேசர்களின் நேசராகவும் இருந்த ஒரு சிறந்த கிறித்துவ சமயவாதி ஆவார்கள். எவ்வளவு சிறப்பாக சமயத் துறையிலும் அரசியல் துறையிலும் மிக மேலான முறையில் பணியாற்ற முடியும் என்பதற்கு ஒரு சிறந்த இலக்கணமாக டாக்டர் செரியன் அவர்கள் பணிபுரிந்திருக்கிறார்கள். அந்தப் பணியை இந்த நேரத்தில் மிக நன்றியோடு நான் நினைவுகொள்ளுகின்றேன்.

நாஞ்சில் நாடு தமிழகத்தோடு இணையவேண்டும் என்பதற்காக நடந்த போராட்டத்தில் உயர்திரு சிதம்பரநாத நாடார் அவர்கள் மிகத் தீவிரமாகப் பங்கு பெற்றுப் பணிபுரிந்ததை நாம் இந்த நேரத்தில் நினைவுகொள்ளுவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றோம். அவர்கள், அந்த நாஞ்சில் நாட்டு மக்களுடைய நல்லன்பிற்கு உரித்தான தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்து, மிகச் சிறப்பாகப் பணியாற்றினார்கள். அவர்களுடைய பணி பாராட்டத்தக்கது.

இரு பெருமக்களுடைய மறைவுக்காக வந்திருக்கும் இந்த இரங்கல் தீர்மானங்களை இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பில் நான் ஆதரித்து, மறைந்துவிட்ட அவர்களுடைய குடும்பத்



1970 ஜனவரி 20] [ஹாஜி. ம. மு. பீர் முஹம்மது]

தினருக்கு அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுவதோடு, "நாம் இறைவனுக்காகவே இருக்கின்றோம், இறைவனிடத்திலேயே மீளு வோம்" என்று கூறுகின்ற இறை வசனத்தோடு நிறைவுபடுத்திக் கொள்ளுகின்றேன்.

**திரு. ம. பொ. சிவஞானம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவைமுன் மாண்புமிகு முதல்வர் கொண்டுவந்துள்ள டாக்டர் செரியன் அவர்களுடைய மறைவு குறித்த அனுதாபத் தீர்மானத்தை, என் சார்பிலும் தமிழரசுக் கழகத்தின் சார்பிலும் மிகுந்த வருத்தத்தோடு ஆதரிக்கின்றேன்.

டாக்டர் செரியன் அவர்கள் தமிழகச் சட்டமன்ற மேலவைத் தலைவராக இருந்தபோது, இரண்டாண்டுக் காலம் அவருடைய தலைமையின்கீழ் சேர்ந்து பணியாற்றிய நேரத்தில், அவருடன் பழகக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. சென்னை மாநகர மேயராக அவர் இருந்தபோது, நான் ஆல்டர்மென்னாக இருந்து அவருடன் தொண்டு புரியும் பாக்கியத்தையும் பெற்றேன். நான் வடசென்னையில் குடியிருந்த நேரத்தில், அவருடைய மாமியார் குடும்பத்திற்கு—மிகப் பெரிய கௌரவமான குடும்பம் அது—நண்பனாக இருந்ததன்மூலம் அவரிடம் தொடர்பு கொள்ள எனக்கு வாய்ப்பு கிடைத்தது. அவர் மேயராக இருந்த நேரத்தில், சென்னை மாநகரம் யாருடையது என்ற பிரச்சினை மிகக் கடுமை யாகக் கவுன்சிலில் விவாதிக்கப்பட்டபோது, தமிழ்நாட்டில்தான் சென்னை மாநகரம் இருக்கவேண்டும் என்ற முறையில் மிகத் தீவிரமாக இருந்து எனக்குச் சிறந்த ஆதரவு அளித்ததோடு, அவருடைய மனைவியாருடைய வாக்கையும் இந்தப் பக்கத்திற்கே அளிப்பதற்கு அவர் அப்பொழுது உதவி புரிந்ததை நான் இன்று நன்றியறிதலோடு நினைத்துக்கொள்ளுகின்றேன். அவருடைய மறைவு உண்மையிலேயே ஈடு செய்ய முடியாதது. மராட்டிய மாநிலத்தின் ஆளுநராக இருந்தபோதும் அவர் சென்னையின் மீதும், தமிழ்நாட்டின்மீதும், தமிழ் மீதும் மிகுந்த பற்றுடைய வராக விளங்கினார். மராட்டிய மாநில ஆளுநராகப் பதவி ஏற்கப் போகும் தம் கணவரோடு பம்பாய் சென்ற அவருடைய மனைவியார் தம்முடைய கணவரை அங்கே இழந்து, தனியாகத் தமிழகத் திற்குத் திரும்பவேண்டிய நிலை ஏற்பட்டதைப் பத்திரிகையில் படித்தபோது அவருடைய குடும்ப நண்பன் என்ற முறையில் மிக வருத்தத்தோடுதான் அதைப் படிக்க நேர்ந்தது. அத்தகைய பெரியவருடைய மறைவுக்கு அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுவதில் நானும் பங்குகொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, கன்னியாகுமரி மாவட்ட நம்முடைய நண்பர் திரு. சிதம்பரநாத நாடார் அவர்களோடு நான் நீண்டகாலம் நெருங்கிப் பழகியிருக்கிறேன். கன்னியாகுமரி மாவட்ட நண்பர் களில் அவர் எனக்குச் சிறந்த நண்பராக விளங்கினார். தெற்கு எல்லைப் போராட்டத்தின்போது தேர்ந்தெடுத்த மும்மணிகளில் அவர் ஒருவராகத் திகழ்ந்தார். எல்லைப் போராட்டத்தின்போது

the Tamil Nadu Animal Husbandry Subordinate Service within the Commission's purview. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India.]

£ 97. Notification issued with G.O. Ms. No. 1269, Public (Services-A), dated the 8th July 1969 in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954 for deletion of temporary post of investigators in the Tamil Nadu General Subordinate Service, published at pages 759 to 768 of Part I of the *Fort St. George Gazette*, dated the 9th June 1954. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India.]

£ 98. Notification issued with G.O. Ms No 1031, Public, (Services-A), dated the 2nd June 1969 in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954 at pages 759 to 768 of Part I of the *Fort St. George Gazette*, dated the 9th June 1954 relating to the post of Personal Assistant to Governor. [Laid on the Table of the House and Article 320 (5) of the Constitution of India.]

£ 99. Notification issued with G.O. Ms. No. 60, Public (Services-A), dated the 10th January 1969 in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954 for inclusion of Deputy Dairy Chemist in Tamil Nadu Dairy and Milk Project and the Madras General Subordinate Service, within the Commission's purview. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India.]

£ 100. Notification issued with G.O. Ms. No. 442, Public (Services-A), dated the 4th March 1969 in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954 or inclusion within the Commission's purview, the statistical Investigator and Compilor under the Tamil Nadu Public Health Subordinate Service. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India.]

£ 101. Notification issued with G.O.P. No. 63, Revenue, dated the 8th January 1969 in regard to certain amendments to the Tamil Nadu General Sales Tax Rules, 1959 relating to enrolment of Retired Officers of the Madras Commercial Tax Department as Sales Tax Practitioners irrespective of whether a University Degree has been acquired. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

£ 102. Notification issued with G.O. Ms. No. 1594, Revenue, dated the 8th August 1969 in regard to an amendment to the Tamil Nadu Inams (Assessment) Rules, 1957, published at pages 297–300 of the Rules supplement to Part I of the *Fort St. George Gazette*, dated the 29th May 1957. [Laid on the Table of the House under section 10 (3) of the Tamil Nadu Inams (Assessment Act, 1956 (Tamil Nadu Act XL of 1956).]



£ 103. Notification issued with G.O. Ms. No. 2308, Rural Development and Local Administration, dated the 21st November 1969 in regard to appointment of special officers for disposal of tax appeals in certain Municipalities. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

£ 104. Notification issued with G.O. Ms. No. 3038, Home, dated the 11th October 1968 in regard to grace time for payment of tax in respect of stage carriages and public carriers for the quarter ending 31st December 1968. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931.)

£ 105. Notification issued with G.O. R. No. 1129, Revenue, dated the 11th September 1969, in regard to exemption from liability to entertainments tax, the film shows connected with Anna Birth Day Week, held at Childrens Theatre, Tamil Nadu, for one week by screening of the picture 'Sorgavasal' from 15th to 21st September 1969. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tail Nadu Act X of 1939).]

£ 106. Notification issued with G.O. R. No. 860, Revenue, dated the 23rd July 1969, in regard to exemption from liability to entertainments tax to the film shows in connection with the French Film Festival Week at Tamil Nadu from 25th to 31st July 1969 at the Safire Theatre. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu X of 1939).]

£ 107. Notification issued with G.O. Ms. No. 771, Education, dated the 21st May 1968 in regard to approval of list of all parks and play-fields set out in the area within the jurisdiction of the Sivaganga Municipality. [Laid on the Table of the House under section 14 (3) of the Tamil Nadu Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959 (Tamil Nadu Act 26 of 1959).]

£ 108. Notification issued with G.O. Ms. No. 28, Rural Development and Local Administration, dated the 6th January 1969 in regard to draft rules governing the classification, methods of recruitment, conditions of service and pay and allowances of class I-A and class II officers included in the Tamil Nadu Corporation Public Health and Medical Service. [Laid on the Table of the House under section 348 (*d*) of the Tamil Nadu City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919).]

£ 109. Notification issued with G.O. Ms. No. 1713, Rural Development and Local Administration, dated the 9th September 1969 in regard to ammendment to the Rural Development and

Local Administration Department Notification II-2 No. 171 of 1963 published at pages 3-4 of Part II Section 2 of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 6th April 1963. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

£ 110. Notification issued with Memorandum No. 57997-J2/. 69-3, Revenue, dated the 30th August 1969 in regard to an amendment to the Revenue Department Notification II-1 No. 4451 of 1956 published at page 1808 of Part II—Section 1 of the *Fort St. George Gazette*, dated the 26th October 1966. [Laid on the Table of the House under section 73 (5) of the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Tamil Nadu Act 26 of 1963).]

£ 111. Notification issued with G.O. Ms. No. 2038, Revenue, dated the 23rd September 1969 in regard to coming into force of certain provisions of the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Tamil Nadu Act 26 of 1963) in the inam estate of Mr. Sundanendal in Paramakudi taluk of Ramanathapuram district. [Laid on the Table of the House under section 73 (5) of the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Tamil Nadu Act 26 of 1963).]

£ 112. Notification issued with G.O. Ms. No. 1262, Home, dated the 26th May 1969 in regard to certain amendments to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940, published with Home Department Notification No. 357, dated the 29th March 1940 at pages 1-40 of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 30th March 1940. [Laid on the Table of the House under section 131 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

£ 113. Notification issued with G.O. Ms. No. 792 Home, dated the 9th April 1969 in regard to an amendment to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940, relating to contract carriages fees for grant and renewal of common permits to ply in all districts published at pages 1 to 40 of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 30th March 1940. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

£ 114. Notification issued with G.O. Ms. No. 1250, Home, dated the 24th May 1969 in regard to an amendment to the Motor Vehicles Rules, 1940 published at pages 1 to 40 of the *Fort. St. George Gazette* Extraordinary, dated the 30th March 1940. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]



£ 115. Notification issued with G.O. Ms. No. 1263, Home, dated the 26th May 1969 in regard to an amendment to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940 relating to grant of driving licence published at pages 1-40 of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 30th March 1940. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

£ 116. Notification issued with G.O. Ms. No. 1563, Rural Development and Local Administration, dated the 25th August 1969 in regard to postponement of the general revision of assessment books in respect of the Municipalities and Townships till October 1969. [Laid on the Table of the House under section 304 *(d)* of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

= 117. Tamil Nadu Government's Review and 25th Annual Report of the Fertiliser and Chemicals, Travancore Limited for the year 1968-69. [Laid on the Table of the House under section 619 A of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

118. Tamil Nadu Government's Review and the Second Annual Report and Statement of Accounts of the Tamil Nadu Agro- Industries Corporation Limited, for the year ended 31st March 1968. [Laid on the Table of the House under section 619-A of the Companies Act, 1956 (Central Act 1 of 1956).]

119. Notification issued with G. O. Ms. No. 1178, Local Administration, dated the 2nd July 1969, in regard to an amendment to the rules relating to the assessment and collection of taxes by panchayats published at pages 4 to 18 of Supplement to Part V of the *Fort St. George Gazette*. dated the 31st July. 1963. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

120. Notification issued with Rc. No. (P) D2/119176/68, dated the 3rd March 1968 in regard to no confidence motion against Thiru M. S. Sivalingam, President of Mangalam Panchayat in Tiruvannamalai taluk of North Arcot district for his removal from the office of the President of the Panchayat. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

121. Notification issued with G.O. No. 800, Revenue, dated the 16th April 1969 in regard to exemption from payment of sales tax on the sales of common salt by any dealer. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

122. Notification issued with Memorandum No. 78677/AII (1)/ 69-2, Agriculture, dated the 23rd July 1969 in regard to regulation of trade (in respect of cashewnut) in certain taluks of

Ramanathapuram district. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

123. Notification issued with G.O. No. 2520, Revenue, dated the 28th October 1969 in regard to exemption from payment of sales tax on the sales of blood and blood plasma by hospitals. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

124. Notification issued with G.O. Ms. No. 612, Agriculture, dated the 4th March 1969 in regard to an amendment to the Agriculture Department Notification III No. 196 of 1967 relating to regulation of trade in tapioca tubers and their products, palmgur jaggery and tamarind in Kanyakumari district, published at page 458 of Part III of the *Fort St. George Gazette*, dated the 12th April 1967. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

125. Notification issued with G.O. Ms. No. 2252, Home, dated the 8th September 1969 in regard to exemption from payment of tax leviable in respect of vehicle bearing registration number MDL 791 belonging to the United Nations International Childrens Emergency Fund and assigned to the Primary Health Centre, Mac Donald's Choultry, Salem. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

126. Notification issued with G.O. Ms. No 2586, Home, dated the 14th October 1969 in regard to grace time for the payment of tax in respect of stage carriages and public carriers ordinarily kept in this State for the quarter ending 31st December 1969. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

127. Annual Report and Government's review on the working of the Banana and Fruit Development Corporation Limited for the year ended 31st March 1968. [Laid on the Table of the House under section 619-A of the Indian Companies Act, 1956 (Central Act I of 1956).]

128 Notification issued with G.O. Ms. No. 1396, Rural Development and Local Administration, dated the 5th August 1969, in regard to the appointment and term of office of the Secretary of the Tamil Nadu Khadi and Village Industries Board. [Laid on the Table of the House under section 29 (3) of the Tamil Nadu Khadi and Village Industries Board Act, 1959 (Tamil Nadu Act 18 of 1959).]



129. Notification issued with G.O. Ms. No. 1851, Home, dated the 23rd July 1969 in regard to exemption from payment of tax leviable in respect of the Vehicle MSQ 6119 belonging to the United Nations International Children's Emergency Fund and assigned to the District Health Officer, Saidapet. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

130. Notification issued with G.O. Ms. No. 1850, Home, dated the 23rd July 1969 in regard to exemption from payment of tax leviable in respect of the vehicle MSM 2159 belonging to the United Nations International Children's Emergency Fund and assigned to the Director of Health Services and Family Planning, Madras. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

*B. Reports, notifications and other papers.*

† 1. The Code of Civil Procedure (Tamil Nadu Amendment) Bill, 1969 (L.A. Bill No. 25 of 1969) with Annexure.

* 2. Notification issued with G.O. Ms. No. 668, Revenue, dated the 22nd March 1969 in regard to exemption from payment of Stamp duty and Registration fees chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) on the Mortgage deeds and Release deeds executed under Tractor and Power Tillers Hire Purchase Scheme.

* 3. Notification issued with G.O. Ms. No. 1732, Revenue, dated the 2nd September 1968 in regard to exemption from payment of Stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act III of 1899) in respect of the document to be executed by Tirumathi Rajathi Ammal of Panruti, South Arcot district, for creating the trust known as 'Gnanasaraswathi Memorial Trust'.

*4. The Statement of Action taken on the recommendation No. 47 of the Public Accounts Committee for 1964-65 on the accounts for 1962–63.

‡ 5 Notification issued with G.O. Ms. No. 759, Revenue, dated the 8th April 1969, in regard to exemption from payment of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899, in respect of the settlement deed executed by Thiru J. K. K. Natarajan and his brother in favour of J. K. K. Rangammal Girl's High School, Komarapalayam.

‡ 6. Notification issued with G.O. Ms. No. 1230, Revenue, dated the 17th June 1969, in regard to remission of duty chargeable under the Indian Stamp Act, 1899, in respect of the settlement deed to be executed by the Ayya Nadar Janaki Ammal College, Sivakasi.

‡ 7. Notification issued with G.O. P. No. 758, Revenue, dated the 8th April 1969, in regard to certain amendments to the Central Sales Tax Rules, 1957, published with the Revenue Department Notification S.R.O. No. A-1385 of 1957 at pages 1-10 of Part I of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 28th February 1957.

‡ 8. Notification issued with G.O. Ms. No. 938, Revenue, dated the 6th May 1969, in regard to exemption from payment of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899), in respect of the sale deed to be executed in favour of the Electricity Staff Co-operative Building Society, Limited, Tirunelveli, for the purchase of land for construction for its members.

‡ 9 Notification issued with G.O. Ms. No. 951, Revenue, dated the 8th May 1969, in regard to exemption from payment of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899), in respect of indemnity bonds executed by *de-facto* guardians of minor or minors for receiving payment of death-*cum*-retirement benefits.

‡ 10. Notification issued with G.O. Ms. No. 1231, Revenue, dated the 17th June 1969, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899), for execution by a parent after his son attains majority for the loan granted under the Tamil Nadu State Electricity Board Educational Loan Rules, 1963.

‡ 11. Notification issued with G.O. Ms. Ms.12, Revenue, dated the 3rd January 1969, in regard to remission of duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899), in respect of loan bond and promissory note executed by the Special Officer for Wakfs, Madras, for taking loan of Rs. 1 lakh from Government.

‡ 12. Notification issued with G.O. Ms. No. 667, Revenue, dated the 22nd March 1969, in regard to remission of duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899), in respect of the mortgage deed to be executed by the Tamil Nadu Electricity Board for taking a loan from the Life Insurance Corporation of India during the current year 1968-69.

‡ 13. Notification issued with G.O. Ms. No. 1143, Revenue, dated the 5th June 1969, in regard to remission of duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899), in respect of security bond to be executed by the State Government Servants who are deputed for undergoing training courses in India and abroad.

‡ 14. Notification issued with G.O. Ms. No. 1296, Revenue, dated the 26th June 1969, in regard to remission of duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899), for execution of guarantee bond by the Balarama Varma Textiles, Limited.



‡ 15. Notification issued with G.O. Ms. No. 1198, Revenue, dated the 12th June 1969, in regard to remission of duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of a sale deed to be executed in favour of Sree Jain Sikshian Sangh, Royapuram, Madras, for locating school.

‡ 16. Notification issued with G. O. Ms. No. 689, Revenue, dated the 27th March 1969, in regard to remission of duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899), in respect of Mortgage Deed and Security bond to be executed by the Tamil Nadu Electricity Board in favour of the Punjab National Bank and the Bank of India during the financial year 1968-69.

‡ 17. Notification issued with G.O. Ms. No. 679, Revenue, dated the 24th March 1969, in regard to remission of duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899), in respect of the sale deed to be executed by the management of Don Bosco Matriculation School, Egmore, for the purchase of land to start a primary section.

@ 18. Notification issued with G.O. No. 799, Revenue, dated the 10th April 1969, in regard to reduction in rate of Central sales tax in respect of sale of scientific equipments to Banaras Hindu University.

@ 19. Notification issued with G.O. Ms. No. 881, Revenue, dated the 26th April 1969 in regard to extension of remission of stamp duty till 13th March 1970, in respect of transfer of lands acquired on behalf of companies licensed under Industries (Development and Regulation) Act, 1951.

@ 20. Notification issued with Memorandum No. 10390/CT II 2/69-1, Revenue, dated the 24th February 1969, in regard to list of persons convicted under the Tamil Nadu General Sales Tax Act, 1959, for the quarter ending 31st December 1968.

@ 21. The Tamil Nadu General Sales Tax (Fourth Amendment) Ordinance, 1969 (Tamil Nadu Ordinance No. 5 of 1969).

@ 22. Resume of work transacted by the Tamil Nadu Legislative Assembly from the 14th August to 28th August 1969 and from the 11th September to 13th September 1969.

£ 23. Notification issued with G.O. Ms. No. 1360, Revenue, dated the 4th July 1969, in regard to exemption from the payment of Stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899), on the document executed in favour of St. Justin's Teachers' College, Madurai.

£ 24. Resume of work transacted by the Tamil Nadu Legislative Council from 18th to 28th August and on 12th and 13th September 1969.

& 25. Governor's Address to the Members of the Legislature on the 19th January 1970 (English and Tamil.)

26. Second Annual Report of the Tamil Nadu Vigilance Commission for the period from 1st April 1967 to 31st March 1968.

27. Notification issued with G. O. No. 899, Local Administration, dated the 17th May 1969 in regard to draft amendment to the Tamil Nadu Cottage Industries Construction and Establishment (Restrictions, Limitations and Conditions) Rules, 1960.

28. Notification issued with G.O. Ms. No. 2115, Home, dated the 25th August 1969 in regard to an amendment to the rules issued with Home Department Notification S.R.O. No. A-2116 of 1960, dated the 6th February 1960, published at page 138 of the Rules Supplement to Part I of the *Fort St. George Gazette*, dated the 30th March 1960 as subsequently amended.

29. The Constitution (Twenty-third) Amendment Bill, 1969 as passed by the Houses of Parliament.

---

† Despatched ti Members on 22—9—1969.

* Despatched to Members on 10—10—1969.

‡ Despatched to Members on 14—11—1969.

@ Despatched to Members on 5—12—1969.

{ Despatched to Members on 5—1—1970.

& Circulated to Members on 19—1—1970.

= Copies placed in the Legislature Library with reference to the proviso under Rule 21 (5) of the Legislative Assembly Rules.

## தமிழ் நாடு சட்டப் பேரவை

### புதன்கிழமை, 1970 ஜனவரி 21.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### (1) வினாக்கள்—விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

### நெல்லை மாவட்ட உயர்நிலைப் பள்ளி தோட்டக்கலை ஆசிரியர்கள்

*1 வினா—திரு. டி. மார்டின்: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டத்தில் அரசினர் உயர்நிலைப் பள்ளிகளில் பணி புரிந்து வந்த தோட்டக்கலை ஆசிரியர்கள் 1967-68-ல் எத்தனை பேர் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்?

(இ) அவர்களில் எவரேனும் சிற்றெழுத்தர் வேலைக்கு மனுச் செய்துள்ளனரா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) 1967-68-ல் ஒருவரும் வேலை நீக்கம் செய்யப்படவில்லை. 1968-69-ல் மூன்று தோட்டக்கலை ஆசிரியர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள்.

(இ) இவர்களில் இரண்டு பேர் சிற்றெழுத்தர் வேலைக்கு மனுச் செய்தார்கள். இவர்கள் சிற்றெழுத்தராக நியமிக்கப்பட்டார்கள்.

திரு. கே. விநாயகம்: தலைவர் அவர்களே, மற்றவருடைய கதி என்ன ஆனது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மற்றொருவர் வேலை வேண்டும் என்று விண்ணப்பிக்கவில்லை. மேலும், அவர் தாற்காலிகமாக இருந்த ஊழியர் ஆவார்.

திரு. நா. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, இந்தத் தோட்டக்கலை ஆசிரியர்களை வேலையிலிருந்து நீக்கிவிட்டதற்குக் காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, 10, 11 வகுப்புகளில் விருப்பப் பாடங்கள் புகுத்தப்பட்டதற்குப் பிறகு, அந்தந்த ஆசிரியர்கள் எடுத்துக்கொள்ளவேண்டிய பீரியட்களின் அளவு குறைவதன் காரணமாக சிலபல ஆசிரியர்களை வேலை

[1970 ஜனவரி 21

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இப்பொழுது தமிழகத்திலுள்ள தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் கீழ்தான் இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. அவர்கள் மூலம் தான் இது பராமரிக்கப்பட்டு வருகிறது.

## கிராம அதிகாரிகள்

*4 வினா—**திரு. கொளத்தூர் கோதண்டம்:** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

ரூ. 2,000 வருமானமுள்ள அளவுக்கு கிராமங்களை ஒருங்கிணைந்து (வட்ட வாரியாக) பிரித்து கிராம முன்சீப், கிராம கர்ணம் போட வேண்டுமென எடுக்கப்பட்ட முடிவு எந்த நிலையிலுள்ளது?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இதுபோன்ற செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. கொளத்தூர் கோதண்டம்:** தலைவர் அவர்களே, இது குறித்து முடிவு எடுத்து, இதைத் தீவிரமாக அமல்படுத்துவதற்கு எவ்வளவு காலம் ஆகும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** கால வரம்பு சொல்ல முடியாது. கிராம உத்தியோகஸ்தர்களுடைய சர்வீஸ் கண்டிஷன்கள் பற்றிச் சட்ட இலாக்கா கொடுத்திருக்கின்ற பரிந்துரைகளின் அடிப்படையில் புதிய விதிமுறைகள் உருவாக்குவது பரிசீலனையில் உள்ளது.

*5 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

கிராம உத்தியோகஸ்தர்களை முழுநேர அரசாங்க அலுவலர்களாக ஏற்றுக்கொள்ளும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. என். கிட்டப்பா:** கிராம உத்தியோகஸ்தர்களின் நீண்ட நாள் கோரிக்கையாகவுள்ள இந்தக் கோரிக்கையினை இனியாவது ஏற்று அரசு செயல்படுத்த முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கை பத்து வருடங்களுக்கு முன்பாகவே பரிசீலிக்கப்பட்டு, இதை நடைமுறையில் கொண்டுவருவதில் உள்ள சிரமங்கள் காரணமாக இது நிராகரிக்கப்பட்டது.

**திரு. வை. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, கிராம உத்தியோகஸ்தர்களுக்குச் சம்பள உயர்வு அளிக்கும் உத்தேசம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறதா?



1970 ஜனவரி 21]

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** கிராம உத்தியோகஸ்தர்களுடைய நலன்களில் இந்த அரசாங்கம் மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறது. மற்ற உத்தியோகஸ்தர்களுடைய நிலைமைகளுக்கு அவ்வப்போது ஏற்படுகிற மாறுதல்கள் போல, கிராம உத்தியோகஸ்தர்களுக்கும் என்ன என்ன அனுகூலங்கள் செய்ய வேண்டுமோ அந்தந்த அனுகூலங்கள் சாத்தியக்கூறான வகையில் செய்யப்படும்.

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்:** கிராம உத்தியோகஸ்தர்களை முழு நேர ஊழியர்களாக்கும் முறை பரிசீலிக்கப்பட்டு, அது ஒத்துவரவில்லை என்ற காரணத்தால் விடப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், அண்டை மாநிலமான பாண்டிச்சேரியில் கிராம உத்தியோகஸ்தர்களை முழு நேர ஊழியர்களாக்கியிருக்கும் நிலைமை ஏற்பட்டு, அது நடந்துகொண்டிருக்கிறது. பெரிய மாநிலமாக இல்லாத சிறிய மாநிலமாக இருந்தாலும் பாண்டிச்சேரியில் இத் திட்டம் நடந்துகொண்டிருப்பதைப் பார்த்தாவது நாம் அதை நல்ல முறையில் நம் மாநிலத்தில் கொண்டுவருவதற்கு நமது அரசு வழிமுறை செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** கனம் உறுப்பினர் அவர்கள் அரசின் கொள்கையைத் தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறார்கள். வம்சாவழியில் கிராம உத்தியோகஸ்தர்களை நியமிக்கும் ஒரு முறையை நாம் இந்தச் சட்ட மன்றத்திலே நீக்கிவிட்டோம். அதற்குப்பிறகு, அவர்கள் முழுநேர அரசாங்க ஊழியர்களாக நியமிக்கப்படுகிற ஒரு முடிவு எடுக்கப்பட்டு, அதற்கான விதிமுறைகள் இப்பொழுது உருவாக்கப்பட்டு வருகின்றன. அதன்படி, இனிமேல் கிராம உத்தியோகஸ்தர்கள் முழு நேர ஊழியர்களாகத்தான் அமைவார்கள். அரசாங்க ஊழியர்களுக்குள்ள சர்வீஸ் ரூல்ஸ், காண்டக்ட் ரூல்ஸ் இவையெல்லாம் அவர்களுக்கும் அமல்படுத்தப்படும். அரசாங்க உத்தியோகஸ்தர் என்றால், காண்ட்ராக்ட் எடுப்பது, வேறு வேலை செய்வது இவையெல்லாம் இப்பொழுது அவர்கள் செய்யக்கூடாது. ஆனால், அவர்கள் அரசாங்க ஊழியர்களாகக் கருதப்பட்டாலும், அவர்கள் முழு நேரமாக வேலை செய்யாத ஒரு முறையும் இருக்கிற காரணத்தால், வேறு வகையான சில வேலைகளைச் செய்யவும் அவர்கள் தற்போது அனுமதிக்கப்படுவார்கள். இந்த அமைப்பின்கீழ் அந்த விதிமுறைகள் திருத்தப்பட்டு வருகின்றன.

THIRU B. VENKATASWAMY: In the British regime, the Village Officers were considered to be doing honorary work. But nowadays, the work-load of the village munsifs, karnams and talayaris has increased. So, will the Government come forward to increase their salaries and other things?

THE HON. THIRU K. A. MATHIALAGAN: Sir, I have already answered the question.

[1970 ஜனவரி 21

**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** அரசாங்கத்தின் கடைநிலை ஊழியர்களுக்குள்ளமாதிரியாகவாவது இந்தக் காலத்தில் கிராம உத்தியோகஸ்தர்களுடைய ஊதியத்தை உயர்த்துவது குறித்து அரசு பரிசீலனை செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஏற்கனவே சில உயர்வுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மற்றைய பிரச்சினைகளும் தொடர்புடைய பிரச்சினைகளாக வரும்போது சாத்தியக்கூறான வகையில் கவனிக்கப்படுவதுபற்றி அரசாங்கம் எப்போதுமே யோசித்துக்கொண்டு வருகிறது.

**திரு. பெ. மலைச்சாமி :** கிராம அதிகாரிகளுக்குக் குறைந்த அளவு கல்வித் தகுதியாக பள்ளி இறுதி வகுப்பாவது இருக்க வேண்டும் என்பதையும் அரசு ஆலோசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அது எந்த அளவு என்பதை அரசு ஆலோசித்துக்கொண்டு வருகிறது. அதைப் பற்றிய ஒரு இறுதியான முடிவு மிகச்சீக்கிரமாக சட்டமன்றத்திற்கு அறிவிக்கப்படும்.

**திரு. கே. சகாதேவக் கண்டர் :** தலைவர் அவர்களே, கிராம உத்தியோகஸ்தர்களை முழு நேர ஊழியர்களாக்குவது பற்றியும், அவர்களுடைய சம்பளத்தை உயர்த்துவது பற்றியும் அரசாங்கம் நீண்டகாலமாகப் பரிசீலனை செய்துகொண்டுவருவதாகச் சொல்லப்படுகிறது. இந்தப் பரிசீலனை எப்பொழுது முடிவுறும்? அவர்களுக்கு எப்பொழுது சம்பளம் உயரும்? அவர்கள் எப்பொழுது நிரந்தர ஊழியர்களாக நியமிக்கப்படுவார்கள்?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கிராம உத்தியோகஸ்தர்களுடைய சம்பள உயர்வுப் பிரச்சினையை, ஏதோ மற்ற உத்தியோகஸ்தர்களுடைய பிரச்சினை மாதிரியாகக் கருதிக்கொள்ளுகிறார்கள். அதுமாதிரி கருதுவதற்கில்லை. கிராம உத்தியோகஸ்தர்கள் செய்வது, கௌரவமான ஒரு பணியாகக் கருதப்பட்ட தொழிலே தவிர, அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற சம்பளத்திற்கும் அவர்கள் செய்கிற பணிக்கும் நாம் பொருத்தம் பார்க்க முடியாது. இருந்தாலும், அவர்களுடைய சம்பள விகிதங்கள் சமீப காலங்களில் அதிகரிக்கப்பட்டு இருக்கின்றன. அதிகரிக்கப்பட்ட நோக்கிலே, அவர்கள் இதைக் கௌரவமான பணியாகவும், மக்களுக்குச் செய்கிற சேவையாகவும் கருதி வேலை செய்வதாலும், அவர்கள் நம்முடைய அரசாங்கத்தினுடைய அடித்தளமாக அமைந்திருக்கும் காரணத்தாலும், அவர்களுக்கு வேறுமாதிரியாக என்ன என்ன அனுகூலங்கள் செய்யவேண்டும் என்பதெல்லாம் கருத்தில் கொள்ளப்பட்டன. அவர்கள் கௌரவப் பணியினுடைய தன்மையை அதிகரிக்கும் வகையிலேதான் இது கருதப்பட வேண்டுமே தவிர, சாதாரணமாக மற்றப் பணியாளர்களுடைய பட்டியலிலே இவர்களைச் சேர்த்துக் கொண்டு செய்ய வேண்டுமென்று சொல்வது அவ்வளவு சரியான வாதம் இல்லை.



1970 ஜனவரி 21]

**ஹாஜி. ம. மு. பீர் முஹம்மது :** பேரவைத் தலைவர் அவர்களே, கிராம நல உத்தியோகஸ்தர்களுடைய ஊதியம் மிகக் குறைவாக இருக்கிற காரணத்தினாலே அந்தத் துறையிலே ஈடுபட்டிருக்கின்றவர்கள் சில நிலைகளிலே ஊழல் குற்றச்சாட்டுக்கு இலக்காகின்ற நிலைமை இருப்பதாலே அவர்களுக்குரிய ஊதியம் கொடுப்பதின் மூலம் அவர்களுடைய வாழ்க்கைத் தேவையைப் பூர்த்திசெய்து ஊழல் குற்றச்சாட்டுக்கள் வராமல் இருக்கக்கூடிய முறையில் அரசு ஏதாவது முயற்சி செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஊழல் என்பது சமுதாயத்தினுடைய பல மட்டங்களிலே இருக்கின்ற வழிகளில் ஒன்று. கிராம முன்சீப்களிடத்திலேதான் இருக்கிறது என்று சொல்வது அவர்களை அவமானப்படுத்துவதாகும். அவர்கள் நிர்வாகத்தினுடைய அடிப்படையாக அமைந்திருக்கிறார்கள். அவர்களுக்கு சம்பளம் முதலியவற்றைக் கொடுத்தாலும் கூட அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றமுடியுமா என்பது சந்தேகத்திற்கு உரியதுதான். பரந்த ஒரு பொருளாதாரத்தின் அடிப்படையிலே இது அமைந்ததே தவிர வேறு ஒன்றும் இல்லை. இது அவர்களுக்கே கூடத் தெரியும். அவர்களுக்கு வேண்டிய சலுகைகளைச் செய்வதில் மாண்புமிகு உறுப்பினர்களைப் போலவே இந்த அரசும் மிகுந்த அக்கறை கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*Prices of foodstuffs in Vellore ho tels.*

* 6 Q.—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state—

(a) whether the prices of the foodstuffs in the hotels at Vellore, North Arcot district, have been increased suddenly from the first week of April 1969;

(b) if so, the reasons therefor; and

(c) the steps taken by the Government to arrest the above rise in prices?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) இல்லை.

(இ) & (உ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

**திரு. கே. விநாயகம் :** ஒருவேளை வேலூர் நகரத்திலே விலை ஏறாமல் இருக்கலாம். ஆனால் இந்த மாநிலத்திலே உள்ள மற்ற ஓட்டல்களிலே முன்பு மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல் 85 பைசாவுக்குச் சாப்பாடு கிடைக்கவில்லை, 1¼ ரூபாய்க்குத்தான் கிடைக்கின்றது. இதுபற்றி உணவு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? எண்ணெய், மிளகாய், பருப்பு, உப்பு, புளி போன்ற பொருள்களின் விலை அங்கங்கே ஏறியிருக்கிறது என்பதை சர்க்கார் உணருகிறதா? இதைத் தடுப்பதற்கும் அரிசியைத் தவிர மற்ற பொருள்களின் விலைகள் ஏறியிருக்கின்றனவே . . . .

[1970 ஜனவரி 21

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வியைச் சுருக்கமாகக் கேட்கவேண்டும்.

THIRU K. VINAYAKAM : Sir, this question is before the House. I have got to elicit information

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. கே. வினாயகம் :** இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறதே, இதைத் தடுக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** கேள்வி வேலூர் பற்றியது. வெளியூர்களைப்பற்றியது அல்ல. இருந்தாலும் பதில் சொல்கிறேன். இதைப்பற்றி அரசாங்கம் பரிசீலித்துக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். எஸ். மணி :** சர்க்கரை கிடைக்காத நேரத்திலே ஹோட்டல் உரிமையாளர்கள் காபி, இனிப்பு இவற்றின் விலைகளை உயர்த்தினார்கள். சர்க்கரை மலிவாகக் கிடைக்கிற இந்த நேரத்திலே அவற்றின் விலைகளைக் குறைத்துக்கொள்வதற்கு ஏற்பாடு செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இதைப்பற்றி ஹோட்டல் உரிமையாளர்களோடு கலந்துபேசி நடவடிக்கை எடுக்கலாம் என்று அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** வேலூர், வட ஆற்காடு மாவட்டத்தினுடைய தலைநகரம். எப்படியும் வாரத்திலே இரண்டு, மூன்று நாட்களாவது நான் அங்கு போவேன், ஹோட்டலிலேதான் சாப்பிடுவேன். எந்த அளவுக்கு விலை உயர்ந்திருக்கிறது என்று முன்னாலே கேள்வி கேட்கப்பட்ட நேரத்திலே உயரவில்லை என்று பதில் சொன்னார்கள். உண்மையிலேயே விலை உயர்ந்திருக்கிறது, அமைச்சர் அவர்கள் என்னுடன் வந்தால் காட்டுகிறேன். விலைவாசிகள் உயர்ந்துகொண்டே போகின்றன . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வியைப் போடுங்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** விலை உயர்ந்துகொண்டே போகிறது. அதைக் கட்டுப்படுத்துவதற்கு உணவு அமைச்சர் அவர்கள் தீவிர நடவடிக்கை இனிமேலாவது எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இனிமேலாவது நடவடிக்கை எடுப்பார்களா என்று கேட்டார்கள். ஹோட்டல் உரிமையாளர்களிடத்தில் இதுபற்றிக் கலந்துபேசி நடவடிக்கை எடுக்க யோசித்துவருகிறோம் என்று ஏற்கனவே தெரிவித்து இருக்கிறேன்.



1970 ஜனவரி 21]

**திரு. டி. மார்டின் :** மிஸ்டர் ஸ்பீக்கர் சார், அரிசி விலை குறைந்துவிட்டது. ஆனால் அரிசியினால் செய்யப்படுகிற உணவுப் பண்டங்களின் விலைகள் குறையவில்லை என்று தினத்தந்தியில் மக்கள் குரல் பகுதியில் எழுதியிருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தினத்தந்தியை மாண்புமிகு உறுப்பினர் படிக்கிறார் என்பதைத் தெரிந்துகொண்டேன். பாக்கி விவரங்கள் தெரியாது.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம் :** தலைவர் அவர்களே, அரிசியின் விலையைக் கட்டுப்படுத்தியிருக்கிறோம். சீனியின் விலையும் குறைந்திருக்கிறது. ஆகவே உணவுப் பண்டங்களின் விலைகளைக் கட்டுப்படுத்த, நகரங்களை எ, பி, சி, டி என்ற முறையில் கிரேடுகளாகப் பிரித்து எந்த எந்த நகரங்களில் என்ன என்ன விலைக்கு விற்க வேண்டும் என்று ஏற்பாடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** விரைவிலே கூடிப்பேசி முடிவெடுக்க அரசு யோசித்து வருகிறது.

### *Madhavaram Milk Project*

*7 Q—DR. H V. HANDE : Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state—

(*a*) the average quantity of milk produced (Buffalo, cow's and Toned) from Madhavaram Milk Colony daily in 1966–67 and 1967–68;

(*b*) the loss sustained during these two financial years; and

(*c*) the steps taken to minimise the loss?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) 1966-67, 1967-68-ஆம் ஆண்டுகளில் நாள் ஒன்றுக்கு உற்பத்தி செய்யப்பட்ட சராசரி பால் அளவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | 1960-67 (லிட்டரில்.) | 1967-68 (லிட்டரில்.) |
|---|---|---|
| எருமைப் பால் .. .. .. | 15,729 | 20,586 |
| பசும்பால் .. .. .. .. | 5,114 | 6,120 |
| தரம் உயர்த்தப்பட்ட பால் .. .. | 4,638 | 10,787 |

(இ) பால்பண்ணைத் திட்டத்திற்கு 1966-67-ல் ரூ. 21,87,041-26 விரயம் ஏற்பட்டுள்ளது. அத் திட்டம், 1967-68-ல் ரூ 37,986-65 நிகர ஆதாயத்தை ஈட்டியது.

(உ) திரவ வடிவிலுள்ள பால் மற்றும், ஏனையப் பொருள்களின் உற்பத்தியையும் விற்பனையையும் கணிசமான அளவுக்கு அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. திட்டத்தின் வாணிக

[1970 ஜனவரி 21

கூறு குறித்து சரியான நிலையை எடுத்துக் காட்டுவதற்கென கணக்குவைக்கும் முறையும் சீரமைக்கப் பட்டுள்ளது. ஏனென்றால், இதற்கு முன் வழக்கப்படிக்கான கணக்குகளைத் Proforma Accounts தயாரிக்கையில், திட்டம் செயல்படுவதற்கு நேரடித் தொடர்பு கொண்டிராத செலவு கூட சேர்க்கப் பட்டிருந்தது.

DR. H. V. HANDE : Is the profit because of the change in the method of accounting that was introduced recently or because of improvement in the efficiency of administration? What is the exact reason for the profit in the subsequent years? Will the Hon. Minister be pleased to state why this loss was occurring in the previous years, whether any positive reasons for the loss have been discovered by the Government and the details of the reasons for the loss in 1966 and 1967—afabulous loss of Rs. 21 lakhs ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** முந்தைய ஆண்டு பாலின் உற்பத்தி அளவு குறைவாக இருந்ததாலும் கணக்கு முறைகளிலே சம்பந்தமில்லாத கணக்குகள் சேர்க்கப்பட்டிருந்ததாலும் நஷ்டம் ஏற்பட்டது. இப்பொழுது பாலின் உற்பத்தி அதிகமாகி இருப்பதாலும் திட்டத்திற்குச் சம்பந்தமில்லாத செலவினங்களைப் பிரித்து இருக்கிற காரணத்தாலும் செலவு குறைந்து ஆதாயத்தில் நிற்கிறது.

திரு. கே. விநாயகம்: சென்னையைப் பொறுத்தவரையில் தரப்படுகின்ற எருமைப்பால் உண்மையான எருமைப்பால் அல்ல; வேறு ஏதோ கலக்கப்படுகிறது என்று மக்கள் புகார் செய்கிறார்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி நேரத்தில் குற்றச் சாட்டு கூடாது.

**திரு. கே. விநாயகம்:** 'சொல்லுகிறார்களே, உண்மையா?' என்று கேட்டால் 'இல்லை' என்று சொல்லிவிட்டுப் போகட்டுமே. ஆங்கிலத்தில் 'இஸ் இட் எ ஃபாக்ட்?' என்று கேட்பதை தமிழில் கேட்கும்போது இப்படித்தான் கேட்க முடியும். புகார்கள் வருகின்றன. எருமைப்பால் டைல்யூட் ஆகும்படி தண்ணீர் ஊற்றுகிறார்கள். முக்கால் பாட்டில்தான் பால் வருகிறது. கொடுக்கப்படுகின்ற எருமைப்பால் சத்து எடுக்கப்பட்ட பாலாகத்தான் இருக்கிறது என்று மக்கள் கூறுகிறார்கள். கணக்கு எழுதுவதைப் பார்க்கும் போது வெட்டரினரி சர்ஜன்ஸ் ஊதியத்தை எல்லாம் இந்தச் செலவில் எழுவதில்லை. அதை வெட்டரினரி டிப்பார்ட்மெண்டுக்கு மாற்றி விடுவதால்தான் இதிலே லாபம் காட்டப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர்கள் கேள்வியை [illegible]வில் வைத்து விடையளிக்கத் தக்க வகையில் கேள்வி சுருக்கமாக இருக்கவேண்டும்.



1970 ஜனவரி 21]

**திரு. கே. விநாயகம்:** பல முறை எனக்குச் சந்தர்ப்பம் அளிப்பதாக இருந்தால் அப்படிக் கேட்கலாம். இந்த டிப்பார்ட்மெண்டில் வேலை செய்கிறவர்களுக்கு ஆகிற செலவை இந்த டிப்பார்ட்மெண்டில் காட்டாமல் தாய் ஸ்தாபனத்தில் காட்டுவதால்தான் லாபம் காட்டப்படுகிறது என்பது உண்மையா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** நான் விடையைப் படிக்கும் போது முதலிலேயே சொன்னேன். இதற்கு முன் கணக்குகளைத் தயாரிக்கையில் திட்டம் செயல்படுவதற்கு நேரடித் தொடர்பு கொண்டிராத செலவு கூட சேர்க்கப்பட்டிருந்தது, இப்போது அது நீக்கப்பட்டது என்று தெளிவாகச் சொன்னேன். எருமைப் பாலைப் பற்றி அங்கத்தினர் கூறுவது சரியல்ல. பாலில் தண்ணீர் கலந்திருக்கிறது என்று ஆதாரத்தோடு கொண்டு வந்து காட்டினாலும் அல்லது புகார்களை அனுப்பினாலும் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம்.

DR. H. V. HANDE : Sir, for the past 1½ years hon. Members from this side have been trying to elicit one particular information—and the hon. Member, Thiru Vinayakam has also just now elicited that information—on the point namely, what were the items that were transferred from this Department to the Veterinary Department. But the Government have not given an answer to this question. I do not know by what method we can get the answer. May I request the Hon. Minister again to state the particular items which have been transferred from this Department to the Animal Husbandry or Veterinary Department. I hope the Hon. Minister will be able to give an answer on this point.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, நான் விடையளிக்கும்போதே தெளிவாகச் சொன்னேன். பால்பண்ணைத் திட்டத்திற்கு நேரடியாகத் தொடர்புள்ள மத்திய பால்பண்ணைக்கும், அதோடு இணைந்துள்ள தொடர்பான செலவினங்கள் தவிர மற்றைய தொடர்பு இல்லாத செலவுகள் இந்தக் கணக்கில் காட்டப்படக்கூடாது என்று அரசு முடிவு எடுத்திருக்கிறது. அதன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கணக்குப்படி லாபம் வருகிறது என்று சொன்னேன். வணிகத் துறையில் அரசாங்கத்தின் பிரிவில் மற்றைய விவரங்களைச் சேர்த்துக் கணக்கு எழுவது என்பது முறையாகாது.

DR. H V. HANDE : On a point of order, Sir. Will the Hon. Speaker help this House in getting the answer from the Government ? I have asked a supplementary question and this is a direct supplementary arising out of the main question namely, whether the loss has been minimised. I request the Hon. Speaker to help us—there is a precedent for this in the Lok Sabha and other Legislatures—in getting the answer from the Hon. Minister at least before the conclusion of the discussion on the Governor's Address. I want to know what were the items which were transferred from this Department. Just now the Hon. Minister referred to the payment for the veterinary doctors and food inspectors.

If he does not give the information asked for, I think there is no point in our asking questions. So, will the Hon. Minister boldly get up and answer the question ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, நேரடியான பதிலைத்தான் நான் தந்து கொண்டிருக்கிறேன். கால்நடை இலாகா டாக்டர்கள் சம்பளத்தை இந்தப் பிரிவிலே காட்டாமல் ஏன் வேறு பிரிவிலே காட்டப்படுகிறது என்று கேட்கிறார்கள். கனம் உறுப்பினர் விநாயகம் அவர்களும் இதைத்தான் கேட்டார்கள். கால்நடை இலாகாவிலிருந்து மற்ற இடங்களுக்கும் கால்நடை வைத்தியர்களை அனுப்புகிறோம். அதற்காக அவர்கள் கணக்கில் அந்தச் செலவை எழுதுவதில்லை. கால்நடை இலாகாவில் டாக்டர்கள் இருப்பது மாடுகளைப் பராமரிப்பதற்காகத்தான். அவர்களை இந்தப் பிரிவிற்கும் பயன்படுத்தும்போது அந்தக் கணக்கையும் இதிலே தான் எழுதவேண்டுமென்று சொல்வது முறையல்ல என்று அரசாங்கம் முடிவு எடுத்து அதைத் தனியாகப் பிரித்திருக்கிறது என்ற உண்மையைத்தான் சொன்னேன். ரோடுகள் போடுவது எல்லாம் கூட இந்தக் கணக்கிலே வராது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு என்னென்ன இனங்கள் இந்த இலாகாவிலே இருந்து பிரிக்கப்பட்டிருக்கின்றன என்ற கணக்கு விவரம் தேவையானால் தனியாக ஒரு கேள்வி கொடுத்தால் அதைத் தயாரித்துக் கொடுக்கும்படி கூறலாம்.

THIRU B. VENKATASWAMY: Sir, may I know from the Hon. Minister for Food and Commercial Taxes whether the milk produced in our State is sufficient for the requirements of our State and if not, what are the alternative measures taken to recoup the deficiency in the production of milk?.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** நமது மாநிலத்திற்குத் தேவையான அளவுக்குப் பால் உற்பத்தி இல்லை என்பதை இந்த அரசு ஒத்துக்கொள்ளுகிறது. இதைப்பற்றி யுனெஸ்கோவுடன் பேச்சுவார்த்தை நடத்தி மத்திய அரசாங்க காதுக் குழு சென்னை பால் திட்டத்திற்காக 11 கோடி ரூபாய் உதவி செய்வதாக வாக்களித்து இருக்கிறது. அந்தப் பணம் வரக்கூடும். அது வந்தால் திட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு போதுமான அளவுக்குப் பால் உற்பத்தியாகும்.

### *Betting taxes on horses*

*8Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state—

(a) whether the Tamil Nadu Government has enhanced the betting tax on forecast, double, treble, jackpot, quinella pools to twenty per cent;

(b) if so, the reasons therefor; and

(c) why does the betting tax at the tote remain at fifteen per cent?





**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) ஆம்.

(இ) மின் கணிப்புப் பொறியமைவுகள் (Electric totalisators பணைய ஒப்புநர் (Book makers) ஆகியோர் மூலம் நடைபெறும் பந்தயங்களுக்கான வரி வீதம் 12½ சதவீதமாக இருந்த பொழுது, மின் கணிப்புப் பொறியமைவுகள் நீங்கலாக பந்தயக் கணிப்புப் பொறிகள் (Totalisators) மூலம் சென்னையில் நடைபெறும் குதிரைப் பந்தயங்களுக்கான அதாவது, ஆறுக்குட்பட்ட குதிரைகள் ஓடும் பந்தயம் (Forecast) இரு பந்தய முடிவு நிகழ்ச்சி (Double event) மூன்று பந்தய முடிவு நிகழ்ச்சி (Treble event) ஐந்து பந்தய-முடிவு நிகழ்ச்சி (Jackpot) ஆறுக்கு மேற்பட்டு 13-க்கு உட்பட்ட குதிரைகள் ஓடும் பந்தயங்கள் (Quinella) வரி வீதம் 15 சதவீதமாக இருந்தது. மின் கணிப்புப் பொறியமைவுகள் மூலமும், பணைய ஒப்புநர் மூலமாகவும் நடத்தப்படும் பந்தயங்களுக்கான வரி வீதம் முறையே 1—11—1968 முதற்கொண்டும் 2—11—1968 முதற்கொண்டும் 12½ சதவீதத்திலிருந்து 15 சதவீதமாக அதிகரிக்கப்பட்டது. எனவே, மின்கணிப்புப் பொறியமைவுகள் நீங்கலாக பந்தயக் கணிப்புப் பொறியமைவுகள் மூலம் நடத்தப்படும் பந்தயங்களுக்கான வரி வீதத்தை 13—12—1968 முதல் 15 சதவீதத்திலிருந்து 20 சதவீதமாக உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது.

(உ) பந்தயக் கணிப்புப் பொறிகள் மூலம் நடைபெறும் பந்தயங்களுக்கான வரி வீதத்தில் அதிகரிப்பு எதுவுமில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் கருதியுள்ளார். இது சரியல்ல என்பதை மேலே (இ) பகுதியில் குறிப்பிட்டுள்ள விடையிலிருந்து தெரியவரும்.

**திரு. கே. விநாயகம்:** ஏற்கனவே ஒரு குறிப்பின்படி வசூல் செய்யப்பட்டு வந்தது அதிகப்படுத்தப்பட்டதன் காரணமாக அரசாங்கத்திற்கு இப்போது எவ்வளவு அதிகமான வருவாய் வருகிறது? ரேஸிங் கிளப் நடத்துகிறவர்கள் இதை எதிர்த்தார்களா? ஜாக்பாட்டில் ஐந்து லட்சம், பத்து லட்சம் என்று வாங்கிக் கொண்டு போகின்றவர்களிடமிருந்து ஒரு தொகையை அரசாங்கம் வருவாயாகப் பெறும் வகையில் ஏதாவது சட்டம் கொண்டு வரப்படுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இந்த வரி வீதத்தை உயர்த்தியதன் மூலம் 1968-69-ம் ஆண்டு வந்த வருவாய் ரூ. 61,46,000 ஜாக்பாட் பந்தயங்களில் வெற்றி பெற்று பணம் வாங்குகின்றவர்களிடமிருந்து வரியாக வசூலிக்க தற்போது அரசாங்கத்திற்கு யோசனை இல்லை.

**திரு. எஸ். இராமச்சந்திரன்:** இந்த சென்னை ரேஸ் கிளப் குறிப்பிட்ட சில குபேரர்களின் உல்லாசபுரியாக இருக்கின்ற நிலையில் நிர்வாகத்தில் ஊழல்கள் இருக்கின்றன என்பது அரசுக்குத் தெரியுமா? ஆகவே, இதை அரசே ஏற்று நடத்தினால் அரசாங்கத்

[1970 ஜனவரி 21

Dr. H. V. HANDE: Is there any comprehensive programme in the hands of Government to completely improve the irrigation system in and around that area, if necessary with the help of the World Bank also? Is there any programme with the Government and will the Hon. Minister give us details of the programme as to how to improve the irrigation net-work in that area ?

The Hon. Thiru S. J. SADIQ PASHA: A comprehensive programme has been drawn up under the World Bank loan. I do not have the details at present. The main question was specifically about Kadalangudi and I have given the answer.

*Study of transport problem in Madras City.*

*10 Q.—Thiru N. S. V. CHITHAN, Thiru G. GOMATHY-SANKARA DIKSHIDAR: Will the Hon. Minister for Public Works be pleased to state whether the Highways Research Station has undertaken a study of the mass transport problem in Madras City ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** ஆம். ஆராய்ச்சி ஒன்று நெடுஞ்சாலை ஆய்வுக் கூடத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** இந்த ஆய்வுகளின் மூலம் எடுக்கப் பட்ட முடிவுகள் என்ன? அண்மையில் சென்னை நகரில் ஓடுகிற நகர பஸ்களின் சில வழித்தடங்கள் திரும்பப் பெறப்பட்டிருக்கின் றனவே, அவை இந்த ஆய்வுகளின் அடிப்படையில்தான் திரும்பப் பெறப்பட்டனவா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அந்த ஆய்வுகளின் அடிப்படையில் முடிவுகள் எடுக்கப்படவில்லை. சென்னை நகரில் ஓடுகிற பஸ்களின் வழித்தடங்கள் எடுக்கப்படுகிற பொறுப்பு அந்த ஆய்வுக்குழுவிற்கு இல்லை. அது நெடுஞ்சாலைகள்பற்றியது.

Dr. H. V. HANDE: As a result of this highway research, has the Government come to any decision with regard to the by-pass or over-bridge at Gemini junction and if so, will the Hon. Minister be pleased to tell us when they are going to have the over-bridge or fly-over at Gemini junction? Will the Hon. Minister give us some more details about that as to when they are going to start the work and when it is likely to be completed?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** "ஜெமினி ஃப்ளை ஓவர்" க்கு சுமார் 46 லட்சம் செலவில் திட்டம் தயாரிக்கப்பட்டிருக் கிறது.

We have called for tenders. After finalisation of tenders, we will take up the work.

**திரு. டி. மார்டின்:** இந்த ஆய்வறிக்கையின் பேரில்தான் சென்னை சாந்தோம் பகுதி, பட்டினப்பாக்கம், அடுத்தாற்போல் சாஸ்திரி நகர் இந்த இடங்களுக்குப் போகக்கூடிய சர்க்கார் பஸ்



1970 ஜனவரி 21]

வழித்தடங்கள் நிறுத்தப்பட்டனவா? அல்லது இந்த ஆய்வறிக் கையின் அடிப்படையில் இல்லாமல் தானாகவே நிறுத்தப்பட்ட னவா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** உறுப்பினர் அவர் கள் இக்கேள்வியை போக்குவரத்து அமைச்சர் அவர்களிடம் கேட்கவேண்டும்.

*Supply of transistors to Gramasevaks.*

*11 Q.—Thiru K. VINAYAKAM: Will the Hon. the Minister for Local Administration be pleased to state :—

(a) whether Gramasevaks in Tamil Nadu will be provided with transistors to help them in their extension work; and

(b) if so, the number provided?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** (அ) & (இ) இம் மாநிலத் தில் கிராமநலத் தொண்டர்களுக்கு டிரான்ஸிஸ்டர் வழங்கும் செயற் குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை. ஆயினும், மிகு பயன்தரும் தானிய வகைகளையும், பிற மேம்படுத்தப்பட்ட வேளாண்மை முறைகளை விரைவில் கையாளவும் வகுத்துள்ள முன்னோடித்திட் டத்தின் கீழ் இந்திய அரசு தற்போது இலவசமாக 1071 டிரான்ஸிஸ் டர்களை வழங்கியுள்ளது. மும்முர வேளாண்மைப் பிரிவுகளின் கீழ் வரும் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மாவட்டங்களில் உள்ள கிராம நலத் தொண்டர்களுக்கு மட்டுமே இந்த டிரான்ஸிஸ்டர்கள் வழங்கப்பட்டன.

**திரு. கே. விநாயகம்:** டிரான்ஸிஸ்டர் எங்கு வேண்டுமானாலும் கொண்டு போகப்படுகிற பொருள். இந்தத் துறையில் வேலை செய் பவர்கள் அந்த விஷயத்திற்காகத்தான் அதைப் பயன்படுத்து கிறார்களா அல்லது வர்த்தக விளம்பரம், சினிமாப் பாட்டு போன்ற கேளிக்கை நிகழ்ச்சிகளைக்கண்டு களித்து அதிலேயே நேரத்தைப் போக்கி விட மாட்டார்களா? இப்படித் தருவதால் நம அரசாங் கத்திற்கோ அல்லது மக்களுக்கோ என்ன விதமான நன்மை கிடைக்கிறது?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** நம் திருச்சி வானொலி நிலை யத்தார் ஒவ்வொரு நாளும் இரவு 7½ மணியிலிருந்து 8 மணி வரையில் வேளாண்மை முன்னேற்றத்திற்கான திட்டங்களை ஒலி பரப்பிக் கொண்டு வருகிறார்கள். ஒவ்வொரு நாளும் கிராம நலப் பணியாளர்கள் கிராமப் புறங்களுக்குச் சென்று விவசாயிகளுக்கு அதை வைத்துக் காட்டி விளக்கங்களை எடுத்துச் சொல்லவும் அவை பயன்படுத்தப்படுகின்றன. ஓய்வு இருக்கும்போது வேறு பாடல் களை கேட்டுக் கொள்வதை நாம் தடுப்பதில்லை.

**திரு. ஆர். நாகசுந்தரம்:** கிராம நலப் பணியாளர்களின் அலுவல் என்னென்ன? இவர்களின் பதவி தேவை இல்லை என்று கருதப்படுகிறதே, அரசின் நோக்கம் என்ன?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** கிராம நலப் பணியாளர்களின் பதவி தேவை இல்லை என்ற ஒரு விவாதம் இதுவரை எழுந்ததாகத் தெரியவில்லை. கிராமங்களில் மிக முக்கியமான பணிகளை அவர்கள் ஆற்றிக்கொண்டிருக்கிறார்கள். வேளாண்மை வளர்ச்சிக்கான ஆக்கப் பணிகளுக்கு கிராமங்களில் உள்ள விவசாயிகளுக்கு அவர்கள் மிகவும் உறுதுணையாக இருக்கிறார்கள் என்பதுதான் இப்போதைக்கு நாம் தெரிந்து கொண்டிருக்கிற உண்மை. மேலும் அவர்களை இந்தத் துறையில் நிரப்படுத்த வேண்டும் என்பது அரசின் எண்ணமாகும்.

### சமூக நலப்பணியாளர் பதவிகள்

* வினா 12 **திரு. டி. மார்டின்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமூக நலப் பணியாளர்களின் பதவியை நிலைப்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது குறித்த விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

**திரு. டி. மார்டின்:** தேசத்தின் விடுதலைக்காகப் போராடிய அந்தப் போராட்ட வீரர்களின் குழந்தைகளுக்கு இந்தவிதமான உத்தியோகங்கள் கொடுக்கப்பட்டிருக்கிற நிலைமையில் அவர்களில் தகுதி பெற்றவர்களுக்கு, எஸ்.எஸ்.எல்.ஸி. பரீட்சை பாஸ் செய்தவர்களுக்கு மேலும் அவர்கள் ப்ரொமோஷன் பெறக்கூடிய அளவில் வேலை நிபந்தனைகளை திருத்தியமைக்கக் கூடிய செயற்குறிப்பு தற்சமயம் இல்லாவிட்டாலும் திரும்பவாவது அதைப் பரிசீலனை செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. மா: முத்துசாமி:** இந்தத் துறையில் பணியாற்றுகிற சமூக நலப் பணியாளர்களில் 33 பேர்கள் பள்ளி இறுதித் தேர்வு சான்றிதழ் பெற்றவர்கள். 33 பேர்கள் பள்ளி இறுதித் தேர்வு தேறாதவர்களாகவும், மீதி உள்ளவர்கள் மிகக் குறைவான கல்வித் தகுதி கொண்டவர்களாகவும் இருக்கிறார்கள். சில பேர்கள் தமிழ் எழுதப் படிக்க தெரிந்தவர்களாக மட்டும் இருந்து கொண்டிருக்கிறார்கள். 33 பேர்கள் எஸ்.எஸ்.எல்.ஸி. தேர்வு பெற்றவர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கு இந்த வானொலி பேணுதல் நிறுவனத்தில் ஏதாவது பயிற்சிகொடுத்து தக்க முறையில் பயன்படுத்த முடியுமா என்பதை அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

**திரு. ஆர். கருப்பையா:** தலைவரவர்களே, இந்தச் சமூக நலப் பணியாளர்களுக்குச் சம்பளம் கொடுக்கும் முறையில் சில சமயங்களில் அதிகக் காலதாமதம் ஏற்படுவதாக அரசுக்கு ஏதேனும்





புகார் வந்துள்ளதா? அப்படிக் காலதாமதம் ஏற்படாமல் உரிய வகையில் மாதாமாதம் சம்பளம் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** அப்படிப்பட்ட எந்தப் புகாரும் வரவில்லை. மாதாமாதம் சம்பளம் வாங்குகிற வேலை, அவர்கள் வேலைகளில் பிரதான வேலையாக இருந்து வருகிறது.

**திரு. பெ. மலைச்சாமி:** தலைவரவர்களே, சமூக நலப் பணியாளர்கள் ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள். எனவே, குறிப்பிட்ட அரசியல் கட்சிக்காகப் பிரசாரம் செய்கிறார்கள் என்ற கருத்து பொதுவாகத் தமிழ்நாட்டு மக்களிடம் இருக்கிறது. எனவே, சமூகநலப் பணியாளர்களை அரசாங்கம் காலி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்ற கருத்து பரவலாக இருப்பது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இருந்தாலும் அவர்களுக்கு ஒரு மாற்றுத் திட்டம் எடுக்கும் வரையில், நாம் அவர்களை அனுப்புவது உசிதமாக இருக்காது என்று, மறைந்த முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள், அவர்களுக்கு மாற்றும் திட்டம் எடுக்கும் வரையில் தொடர்ந்து இருக்க வேண்டுமென்று அப்பொழுது ஒரு முடிவை அறிவித்தார்கள். அது தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### *Abolition of Profession Tax.*

* 13 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether the Corporation of Madras has requested the Government to abolish Professional Tax on certain sections of the Community?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** ஆம்.

**திரு. க. கோமதிசங்கரதீட்சிதர்:** தலைவரவர்களே, மிகவும் ஏழையாகவுள்ள ஊழியர்களின் தொழில் வரியைக் குறைக்க உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** தலைவரவர்களே, மாநகராட்சியின் நிதி நிலைமையை ஆராய அதிகாரிகளைக் கொண்ட ஒரு உயர் மட்டக்குழு ஒன்றை அரசாங்கம் நியமித்துள்ளது. இந்தக் குழுவின் அறிக்கையை அரசு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. அதன்பிறகு தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** சார், சமூகத்தில் ஒருசில பிரிவினருக்கு மட்டும் தொழில் வரியை நீக்குமாறு அரசை சென்னை மாநகராட்சி கேட்டுள்ளதா என்பதற்கு 'ஆம்' என்று கனம்

அமைச்சரவர்கள் கூறினார்கள். ஒருசில பிரிவினர் என்றால் எந்தெந்தப் பிரிவினர், யார் யார் என்பதை விவரம் கூற முடியுமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** மாநகராட்சியில் பணியாற்றும் ஊழியர்களில் முதல் தரம், இரண்டாம் தரம் என்று 8, 9 தரங்கள் உள்ளவற்றில், அதில் கடைசியிலே இருக்கும் ஒன்றிரண்டு பிரிவுகளுக்கு நீக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். 9-ஆம் வகுப்பு தொழில் வரி செலுத்துவோர், ரூ. 2 அரை ஆண்டு ரூ. 600-1,200 வருமானத் தொகுதியினர், செலுத்த வேண்டிய வரியை நீக்கிவிட அரசை ஒப்புதல் கேட்டு மாநகராட்சி வேண்டிக்கொண்டது. அடுத்து, 8-ஆம் வகுப்பு தொழில் வரி செலுத்துவோர் ரூ. 6 அரை ஆண்டு வருமானத் தொகுதி ரூ. 1,200—1,800, செலுத்த வேண்டிய வரியை நீக்கவும் ஒப்பளிப்பு வழங்குமாறு அரசை வேண்டிக் கொண்டது.

*Issue of State Permits for Taxis.*

* 14 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Co-operation be pleased to state:—

(a) whether the Government have decided to issue State permits for taxis; and

(b) if so, the licence fees for such taxis?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** (அ) ஆம்.

(இ) காலாண்டு வரி ரூ. 75.

THIRU K. VINAYAKAM: May I know the amount of tax realised when the permit was restricted to Madras District only or Chingleput District only? Now that we have made the permit State-wide, what is the amount of tax realised so far and has there been any increase in the revenue for the coffers of our State?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** இதற்கான தகவல் என் கைவசம் இப்போது இல்லை.

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, இப்பொழுது பிரைவேட் டாக்சிகளுக்கு, பி.டி. என்று நாம் அனுமதிச் சீட்டு கொடுத்துக் கொண்டிருக்கிறோம். லாரிகளில் 'இண்டர் ஸ்டேட் பர்மிட்' என்று இருக்கிறது. அதேபோல, பி.டி.க்களுக்கும், 'இண்டர் ஸ்டேட் பர்மிட்' கொடுக்க அனுமதிக்குமா? சென்னையில், டாக்சிகள், 'பியட்', 'அம்பாசிடர்', 'ஸ்டாண்டர்ட்' என்று மூன்று விதமான வண்டிகள் ஓடுகின்றன. அதில், 'ஸ்டாண்டர்ட்' வண்டியில் 3 பேர் பயணம் செய்யலாம். 'பியட்டில்' 4 பேர் பயணம் செய்யலாம். ஆனால் இரண்டுக்கும் ஒரே கட்டணம் இருக்கிறது. இந்தக் கட்டண விகிதத்தை மாற்றி, மூன்று பேர் செல்லும் ஸ்டாண்டர்ட் டாக்சிகளுக்கு கொஞ்சம் குறைத்தும், 4 பேர் செல்லும் பியட், அம்பாசிடர் டாக்சிகளுக்குக் கொஞ்சம் உயர்த்தியும் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவரவர்களே, உறுப்பினர் அவர்களுடைய வினா மாநிலத்திற்கு மாநிலம் போகின்ற வாடகைக்கார்களைப் பற்றியது என்று கருதுகிறேன். அப்படி மாநிலம் விட்டு மாநிலம் போகின்ற வண்டிகளுக்கு, இரண்டு மாநிலங்களிடையே உள்ள ஒப்பந்தப்படிதான் நடவடிக்கை எடுக்க முடியும்.

*Construction of harbour at Poompugar.*

* 15 Q.—THIRU N. KITTAPPA: Will the Hon. the Minister for Co-operation be pleased to state whether there is any proposal under the consideration of the Government to construct a harbour in Poompugar?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** இல்லை.

**திரு. என். கிட்டப்பா:** தலைவரவர்களே, நமது பழந்தமிழர்களின் கலாச்சாரத்தை எடுத்துக்காட்டும் வகையில் இன்றைய நமது அரசு பூம்புகாரில் பல காரியங்களைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. அதன் அடிப்படையில், அதனைப் புதுப்பிக்கும் வகையில் மேற்கொண்ட பல காரியங்களின் அடிப்படையில், அங்கு பண்டைக் காலத்தில் இருந்த துறைமுகப் பட்டணத்தைப் புதுப்பிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் கூறியது, அந்தப் பழைய பூம்புகார்ப் பட்டணத்திலுள்ள பழைய அடையாளங்களை தோண்டி எடுப்பதைப் பற்றியது என்று கருதுகிறேன். ஆனால், துறைமுகம் மீண்டும் உண்டாகாதா என்பது பற்றி மூல வினா இருந்தது. ஆனால், காவிரிப்பூம் பட்டிணம் அல்லது பூம்புகார் என்பது அழிந்துவிட்டது. அதற்குக் காரணம், அது புயல் வீசும் பகுதியில் இருக்கிறது. புயல் வீசுகின்ற போது மணல் மேவுகின்றது. அதனால் அழிந்தது. எனவே மீண்டும் பெரிய துறைமுகம் கட்ட வாய்ப்பில்லை என்று கூறப்படுகிறது. ஆனால் சென்னையில் பெரிய துறைமுகம் இருக்கிறது, தூத்துக்குடியில் கட்டப்படுகிறது. இரண்டுக்கும் இடையே பெரிய துறைமுகம் வேண்டுமென்று அரசு கருதுகிறது. அதைக் கட்டுகின்ற காலத்தில் நண்பர் அவர்கள், அதற்குப் பெயர் பூம்புகார் என்று வைக்க வேண்டுமென்று கூறுவார்கள் என்று கருதுகிறேன்.

**திரு. ம. பொ. சிவஞானம்:** பேரவைத் தலைவரவர்களே, பூம்புகார் நகரம் அழிவுற்றது, பத்தினிப் பெண்ணுக்கு இழைத்த கொடுமையால் என்று சிலப்பதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கிறது என்பதை அரசு அறியுமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** நான் சொல்வதற்கும், திரு. ம. பொ. சி. அவர்கள் சொல்வதற்கும், எந்த முரண்பாடும் இல்லை. பத்தினிப் பெண்ணுக்குச் செய்த கொடுமையின் காரணமாகப் புயல் வீசி, மண் மேவி, புகார் நகரம் அழிந்தது.

[1970 ஜனவரி 21

திரு. பி. ஜி. கருத்திருமன்: சபாநாயகரவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்னது அரசியல் புயல். அரசியல் புயல் அந்தக் காலத்திலே கூட அடித்திருக்கிறது என்பதை அவர்கள் உணர்வார்களா? என்பதை அறிய விரும்புகிறேன். புயல் அடித்துத்தான் போய் இருக்கிறது என்றால், அந்தக் காலத்திலேயும் அரசியல் புயல் அடித்திருக்கிறது. அதன் காரணமாகத்தான் போய் இருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் உணர்வார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இப்பொழுது அரசியல் புயல் வீசிக்கொண்டிருப்பது இந்தப் பக்கத்தில் இல்லை.

திரு. பி. ஜி. கருத்திருமன்: புயல் வீசும்பொழுது எல்லாவற்றையும் தூற்றிவிட்டுப் போகும் என்பது தெரியுமா?

*Sri Singaperumal Koil*

* 16. Q.—Thiru N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state:

(*a*) whether the vacancy of Trustees of the Sri Singaperumal Koil has not been filled so far; and

(*b*) if so, the reasons therefor?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: (அ) இல்லை. 6—2—1969 அன்று காஞ்சிபுரம் உதவி ஆணையாளரால் பிறப்பிக்கப்பட்ட ஆணையின்படி மூன்று பேர் சிங்கப்பெருமாள் கோவிலில் அறங்காவலர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறங்காவலர்களின் பதவிக்கு எப்போது காலி இடங்கள் ஏற்பட்டன? அவைகள் எப்போது நிரப்பப்பட்டன? காலதாமதம் ஆனதற்குக் காரணம் என்ன? நிரப்பப்பட்டவர்கள் எந்தெந்த ஊரைச் சேர்ந்தவர்கள்?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: இந்த ஸ்தானங்கள் 1964-இலிருந்தே காலியாக இருந்திருக்கின்றன. அதற்குப் பிறகு சட்டச் சிக்கல் ஏற்பட்டு, தர்மகர்த்தர் பரம்பரை தர்மகர்த்தரா என்பது பற்றி சட்டச் சிக்கல் ஏற்பட்டதால் 'ஃபிட் பர்சன்' என்று போட்டு, அதற்குப்பிறகு, பரம்பரை தர்மகர்த்தரா இல்லையா என்பதற்குப் பிறகு 69-லே தர்மகர்த்தர்களைப் போட்டிருக்கிறார்கள். மூன்றுபேர்கள், திரு. வி. பி. வெங்கடேசன், திரு. சி. என். சந்திரசேகரன், திரு. டி. ஏ. சடகோபன். அவர்கள் விலாசம் இப்பொழுது என்னிடத்தில் இல்லை.



1970 ஜனவரி 21]

## கோவை நகர விரிவுத் திட்டம்

* 17 வினா—திரு. இரா. மாணிக்கவாசகம்: மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகரத்தினை விரிவு படுத்தும் திட்டத்தின் கீழ் சுண்டக்காமுத்தூர்ப் பகுதியில் நில ஆர்ஜிதத்தின் காரணமாக எடுத்த நிலம் எவ்வளவு?

(இ) அதை அமுல் படுத்தும் பணி எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: (அ) கோவை மாநகரத்தினை விரிவுபடுத்தும் திட்டத்தின் கீழ் சுண்டக்காமுத்தூர்ப் பகுதியில் நிலம் ஏதும் ஆர்ஜிதம் செய்யப்படவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

## மாநில மின்வாரியம்

* வினா 18. திரு. டி. மார்டின்: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நான்கு தலைமைப் பொறியாளர்களுடனும் மாநிலக் கணக்காய்வாளர் (Accountant-General) தரத்திற்கு கணக்குத் துறைக்கென்றே ஓர் உறுப்பினருடனும் மாநில மின்வாரியத்தை மாற்றியமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதுபற்றிய விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ஓ. பி' இராமன்: (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. டி. மார்டின்: மிஸ்டர் ஸ்பீக்கர் சார், மைசூர், கேரளம் போன்ற சிறிய மாநிலங்களிலே மின்சார அபிவிருத்தி வேலை இந்த அளவுக்கு இல்லாமல், நம்முடைய மாநிலத்தில் உள்ளதைவிட மிகவும் குறைவாக இருக்கிற நேரத்தில், அங்கெல்லாம் இரண்டு, மூன்று சீஃப் என்ஜினியர்களை வைத்து அவர்கள் வேலை வாங்குகிறார்கள். அதனால் அங்கு அதிகமாக சூபர்விஷன் இருக்கிறது. அதே போன்று, இங்கு இன்னும் அதிகமாக வேலை நடக்கின்ற இடத்தில், அதுவும் எல்லா கிராமங்களுக்கும் மின் ஒளி கொடுக்க வேண்டும் என்று அரசாங்கம் முற்பட்டிருக்கிற இந்த நேரத்தில், சீப் என்ஜினியர்களை நான்கு பேர்களாக ஆக்கக்கூடிய செயற்குறிப்பு இந்த நடப்பு ஆண்டிலாவது பரிசீலனைக்கு வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: கேட்கப்பட்டிருக்கின்ற கேள்வி இப்பொழுது இருக்கிற மின்சார போர்டை ரீகான்ஸ்ட்யூட் பண்ணவேண்டும் என்பதுதான். நான்கு சீப் என்ஜினியர்கள், ஒரு அகௌண்ட்ஸ் மெம்பர் போட்டு அந்த போர்டை மாற்றி

அமைக்க முடியுமா என்று கேட்டிருக்கிறார்கள். ஆனால், இப்பொழுது அதிலே ஐந்து உறுப்பினர்கள், தலைவரையும் சேர்த்து 6 உறுப்பினர்கள் சட்டத்திற்கு உட்பட்டு அமைக்கப்பட்டிருக்கிறார்கள். அதிக வேலை நடக்கவேண்டும் என்றால், என்ஜினியர்களை அதிகமாகப் போடவேண்டுமென்றால, அதை போர்டு மூலம் செய்வது அல்லது மற்றும் தனியாக சீப் என்ஜினியர், டிஸ்ட்ரிபியூஷன் சீப் என்ஜினியர், சீப் ஆபரேஷன் என்ஜினியர் என்று பல்வேறு பிரிவுகளை ஏற்படுத்தி, வேலை அதிகமாக இயங்கவேண்டும் என்று போட்டுக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் அந்த முறையில் விஸ்தரிக்கப் படவேண்டும் என்றால், அப்படி விஸ்தரிப்பதைப் பற்றி யோசிக்கலாம்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவர் அவர்களே, நமது மாநிலத்தில் கூட அகௌண்டென்ட் ஜெனரல் என்று தனியாக வைத்து, தணிக்கை செய்கிறார்கள். அப்படியிருக்கும்பொழுது, எலக்ட்ரிசிடி போர்டில்மட்டும் ஏன் அம்மாதிரியாக வைக்கவில்லை? அப்படி வைக்க அரசாங்கம் முயற்சிக்குமா? அப்படி வைப்பதில் தவறு ஒன்றுமில்லை. ஆகவே, அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் பரிசிலனை செய்வார்களா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** இப்பொழுது அகௌண்டென்ட் ஜெனரல் கேடரில் தனியாக ஒரு அகௌண்ட்ஸ் மெம்பர் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

## தொழில்களுக்கான மின்சாரக் கட்டணம்

* **வினா 19. திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிலுக்கென்று கொடுக்கப்படும், மின்சாரத்தின் கட்டணத்தை எல்லோருக்கும் ஒரே விதமாக விதிக்கும் உத்தேசம் எந்த நிலையிலுள்ளது?

(இ) அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** (அ) & (இ) உயர் அழுத்த மின்சாரம் பயன்படுத்துகிற தொழில்களைப் பொறுத்த மட்டில், உயர் அழுத்த மின்சாரத்தரக் கட்டண விதங்கள் பொருந்தும். எனினும் சென்னை அனல் மின் நிலையத்திற்குப் பயன்படுத்தும் எரிபொருள் கூடுதல் செலவை ஈடுகட்ட, அனல் மின்நிலையப் பகுதியில் வழங்கும் எல்லா உயர் அழுத்த மின்சாரத்தைப் பொறுத்த மட்டிலும், சென்னை மின்சார அமைப்பில் எரிபொருள் மேல்வரி விதித்து வாங்கப்படுகிறது. மின்சக்தியை அதிகம் பயன்படுத்துகிற ரசாயனப் பொருள்கள், ரசாயன உரங்கள், அலுமினியம் முதலில் தொழில்களுக்காக, சிறப்புக்கட்டணங்கள் உரையாடல்கள் மூலம் ஏற்பாடு செய்யப்படுகின்றன. மேற்சொன்ன வகைகளுக்காக, தற்போது ஒரே சீரான கட்டண விதங்களை உருவாக்கும் செயற்குறிப்பு எதுவுமில்லை.





**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், அலுமினியம், கெமிகல்ஸ், சிமெண்டு போன்ற தொழில்களுக்கு ஒன்று முதல் மூன்று பைசா கட்டணம் விதிக்கப்பட்டிருக்கிறது. மற்ற தொழில்களுக்கு பல தரப்பட்ட முறையில் விதிக்கப்பட்டுள்ளது. அந்த தொழில்களுக்கு சமீபத்தல் அந்தக் கட்டணமும் குறைக்கப்பட்டிருக்கிறது. எந்தெந்த தொழில்களுக்கு எவ்வளவு கட்டணம் இருந்ததை எந்த அளவுக்கு குறைக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்ல முடியுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** எந்த அளவுக்கு குறைக்கப்பட்டிருக்கிறது என்பது பற்றி முழு விவரமும் இப்பொழுது இல்லை. இருந்தாலும், அதற்காக வொர்க்கிங் குரூப் என்று ஏற்கனவே தனியாகவே ஒருகமிட்டி போட்டு, அந்தக் கமிட்டியும் ஒரு அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்கள். அந்த சிபார்சுகளில் சிலவற்றை இப்பொழுது ஏற்றுக்கொண்டிருக்கிறோம். இப்பொழுது சப் கமிட்டி எக்ஸ்பெர்ட் கமிட்டி ஒன்று போடப்பட்டிருக்கிறது. அதன் முடிவு வெளிவந்தபிற்பாடு தெளிவான அறிக்கை கிடைக்கும்.

**திரு. கே. பி. எஸ். மணி :** சர்க்காரால் நடத்தப்படும் எலக்ட்ரிசிடி போர்டினால் கொடுக்கப்படும் பம்பு செட்டுகளுக்கு போடப்படுகின்ற கட்டணத்திற்கும், சேஷசாயி பிரதர்ஸ் போன்ற தனியார் நிறுவனங்களினால் கொடுக்கப்படும் பம்பு செட்டுகளுக்கு போடப்படுகின்ற கட்டணத்திற்கும் வித்தியாசம் இருந்ததே, அந்த வித்தியாசம் இப்பொழுது நீக்கப்பட்டு, கட்டணம் ஒரே மாதிரியாக செய்யப்பட்டுவிட்டதா? மேற்கொண்டும் ஏஜென்ஸிகள்மூலம், தனியார் நிறுவனங்கள்மூலம் கொடுக்கப்படுகிற பம்பு செட்டுகளுக்கு அதிகக் கட்டணமும், எலக்டிரிஸிடி போர்டு மூலம் கொடுக்கப்படுகிற பம்பு செட்டுகளுக்கு குறைவான கட்டணமும் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தனியார் நிறுவனங்களின் கட்டணம் மின்சார போர்டின் கட்டணத்தை விட சற்று அதிகமாக இருக்கிறது. அவர்களைக் கூப்பிட்டுப் பேசி ஒரே சீரான கட்டணத்தை வைக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறோம். அதிலே சட்டப்படி அவர்களைக் கட்டுப்படுத்த நமக்கு ஏது இல்லாத காரணத்தினால், அவர்களை நிர்பந்தப்படுத்த முடியவில்லை. இருந்தாலும் அன்புமுறையாக அவர்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம், இனி மேலாவது உயர்த்தாமல் இருக்கவேண்டும் என்று.

**திரு. நா. வீராசாமி :** தொழில்கள் பெருகவேண்டும் என்ற அடிப்படையில் மின்சாரத்தைக் குறைந்த கட்டணத்திற்கு நாம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், இதனால் மின்சார வாரியத்திற்கு ஆண்டுதோறும் நஷ்டம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. இதைத் தவிர்ப்பதற்கு தொழில்களை மூன்று விதமாகப் பிரித்து,

[1970 ஜனவரி 21

ஹெவி இண்டஸ்டிரீஸ், மீடியம் இண்டஸ்டிரீஸ், ஸ்மால் இண்டஸ்டிரீஸ் என்று பிரித்து, அதற்குத் தக்கபடி இந்தக் கட்டணத்தை டாரிப் ரேட் வைத்து வசூலிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** கனம் உறுப்பினர் அவர்களின் யோசனை நல்ல யோசனைதான். இப்பொழுது போடப்பட்டிருக்கிற கமிட்டியில் இது போன்று பிரிவுகளாகப் பிரித்துத்தான் விவாதிக்கப்படுகிறது. எக்ஸ்பர்ட் கமிட்டி இது போன்ற விவாதம் செய்த பின்னாலே ஒரு முடிவு எடுக்கும் என்று கருதுகிறேன்.

**திரு. ஆர். கருப்பையா :** ஏனைய தொழில்களுக்குப் போடப்பட்டிருக்கும் மின்சாரச் சலுகை கட்டணத்தைவிட விவசாயத் தொழிலுக்குச் சற்றுக் குறைவான கட்டணம் நிர்ணயிக்கவேண்டுமென்று கருதுகிறேன். ஆகவே, விவசாயத் தொழிலுக்கு இப்பொழுது இருப்பதைவிட இன்னும் குறைவாக மின்சாரக் கட்டணம் விதிப்பதுபற்றி அரசாங்கம் ஆலோசனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** எல்லா மாநிலங்களில் போடப்பட்டிருக்கிற கட்டணத்தை ஒப்பிட்டுப் பார்த்தால், நம் மாநிலத்தில் மிகவும் குறைவான கட்டணம்தான் போடப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன்.

DR. H. V. HANDE : Sir, the Hon. Minister in his answer has stated that a Committee has been appointed to go into the question of reduction of tariff for the Industrial Units. Will the Hon. Minister tell us whether this Department has got in touch with the different industrialists and heard their grievances, whether on account of reduction of the tariff, industries are likely to flow into our State and whether any indication has been given to this Government as to what industries are likely to come to this State on account of the reduction of the tariff?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** ஏற்கனவே தொழில் அதிபர்கள் தொழிற்சாலைகளுக்கு அதிகக் கட்டணம் இருப்பதனாலே தொழில் வளம் பெருகவில்லை என்று குறைபட்டுச் சொன்னார்கள். அதையெல்லாம் கவனிப்பதாகச் சொல்லி, அது இந்தக் கமிட்டிமூலம் பரிசீலனை செய்யப்பட்டு, அரசாங்கம்கூட அவர்கள் சொல்லுகிற குறைபாடுகளை நிவர்த்திப்பதற்கு ஓரளவுக்குச் சலுகைகள் அளிக்க ஒப்புக்கொண்டிருக்கிறது. புதியதாகத் தொழில்கள் துவக்கப்பட்டால், முன்னாலே, எடுத்தவுடனே 80 சத விகிதம் கட்டணம், அடுத்த ஆண்டு 90 சத விகிதம் கட்டணம், மூன்றாவது ஆண்டு முழுமையான கட்டணம் என்று இருந்ததைக் குறைத்து முதல் ஆண்டு 60 சத விகிதம், அடுத்த ஆண்டு 70 சத விகிதம், 80 சத விகிதம், 90 சத விகிதம், பிறகு முழுவதும் கட்டணம் செலுத்த வேண்டும் என்று சில ஆண்டுகளுக்கு கன்செஷன் கொடுக்கலாம் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.



1970 ஜனவரி 21]

**திரு. வி. கே. கோதண்டராமன் :** தொழில் வளம் எந்த அளவுக்குப் பெருகவேண்டும் என்று அரசாங்கத்திற்கு ஆர்வம் இருக்கிறதோ, அதே அளவுக்கு விவசாய வளமும் பெருகவேண்டும் என்ற ஆர்வமும் அரசாங்கத்திற்கு இருக்கிறது என்பதை மறுக்க முடியாது. ஆகவே, தொழில் வளம் பெருகவேண்டும் என்பதற்காகவேண்டி ஏற்கனவே பல ஆண்டுகளாக இருந்துவரக்கூடிய கட்டணத்தைக் குறைத்திருக்கும்பொழுது, விவசாய வளம் பெருகவேண்டும் என்பதற்காக வேண்டி, அதைக் குறைப்பதற்குப் பதிலாக, 8½ பைசா என்று இருந்ததை 10 பைசாவாக இந்த மாதம் முதல் தேதி முதல் போடப்பட்டுள்ளது. அப்படியானால் ஒன்று முதல் மூன்று பைசா என்று போட்டிருக்கக்கூடிய அந்தத் தொழில்களுக்கு அதிகப்படியான கட்டணம் போட்டு, அதன்மூலம் வருவாயைச் சேகரிக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொழில் வளம் பெருகவேண்டும் என்று கட்டணத்தைக் குறைத்தாகச் சொல்வது வாஸ்தவமாக இருந்தாலும்கூட ஏனைய மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, நமது மாநிலத்தில் தொழில்களுக்காக விதிக்கப்படுகின்ற மின்சாரக் கட்டணம் அதிகமாக விதித்திருந்தோம். அதைத்தான் சற்றுக் குறைத்திருக்கிறோம். ஆனால் விவசாயத் தொழிலுக்கு விதிக்கப்படுகிற மின்சாரக் கட்டணம் மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப்பார்க்கும்பொழுது, மிகவும் குறைவாக இருக்கிறது. ஆகவே, அதைக் குறைப்பதற்குத் தேவையில்லை. தொழில்களுக்காகப் போடப்பட்டிருக்கும் கட்டணம்தான் சிறிது குறைக்கப்பட்டிருக்கிறது.

### ஈரோடு இயந்திரக் கருவி உற்பத்திப் பிரிவு தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்.

*** 20. வினா—திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு அரசினர் தொழில் பேட்டையில் தமிழ்நாடு சிறிய கைத் தொழில் கார்ப்பரேஷனைச் சேர்ந்த இயந்திரக் கருவி உற்பத்திப் பிரிவில் மே 25 முதல் 100 தொழிலாளர்களும் ஸ்ட்ரைக் செய்துள்ளனரா ?

(இ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** (அ) ஆம்.

(இ) சென்னையில் உள்ள தமிழ்நாடு சிறு தொழில் கழகத்தைச் சேர்ந்ததும், ஈரோட்டில் உள்ளதுமான கருவிப்பட்டறையின் தொழிலாளர்கள் 25—5—1969 முதல் வேலை நிறுத்தம் செய்தனர். தொடர்ந்து வேலைக்கு வராமலிருந்த ஒன்பது தொழிலாளர்களை நிர்வாகத்தினர், வேலையிலிருந்து நீக்கியதை

எதிர்த்து இந்த வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது. கோயம் புத்தூர் தொழிலாளர் நல அதிகாரி II, நல்லிணக்கம் செய்து வைத்த பிறகு 1947-ம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3)-வது பிரிவின்கீழ் உடன்பாடு ஒன்று ஏற்பட்டு அதன்பிறகு வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது. தொழிலாளர்கள் 25-6—1969 அன்று மீண்டும் வேலைக்குத் திரும்பினர்.

THIRU K. VINAYAKAM : May I know the total number of workers who have abstained from work and may I also know how many days' workloads were lost to the country?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** இந்த உடன்பாடு 85 தொழிலாளர்களைப் பொறுத்தது. ஏறத்தாழ ஒரு மாத காலமாக வேலை தடைப்பட்டிருந்தது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப்பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் ஒத்திவைப்புத் தீர்மானங்கள், உரிமைப் பிரச்சினைகள்
மு. ப. 10-00 அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அவற்றை 24-ந்தேதி எடுத்துக் கொள்கிறேன்.

## (2) அறிவிப்புகள்

### (அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப் பேரவையின் நடைமுறை விதி 6 (1) க்கு இணங்க, இக்கூட்டத் தொடரில் மாற்றுத் தலைவர்களாகக் கீழ்க்கண்ட மாண்புமிகு உறுப்பினர்களை நான் நியமித்துள்ளேன்.

(1) திரு. ந. தருமலிங்கம்.

(2) திரு. ஆர். என். அரங்கநாதன்.

(3) திரு. என். எஸ். வி. சித்தன்.

(4) திரு. கரு. இராம. கரியமாணிக்கம் அம்பலம்.

(5) திரு. எம். சுரேந்திரன்.

(6) திரு. வி. டி. அண்ணாமலை.

## (3) அறிக்கை அளித்தல்.

### பொதுக் கணக்கு ஆய்வுக் குழுவின் அறிக்கை

THIRU P. G. KARUTHIRUMAN : Sir, I rise to present the Report of the Committee on Public Accounts on the Audit Report on the accounts of the Tamil Nadu Electricity Board for 1965-66.



## (4) நடைமுறைக் கேள்வி.

எதிர்க்கட்சி, எதிர்க்கட்சித் தலைவர் குறித்து.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், பேரவையின் எதிர்க் கட்சி, எதிர்க் கட்சித் தலைவர் என்கின்ற அந்தஸ்துகளுக்கு, எதிர்க் கட்சியில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் இவ்வளவு பேர்கள் என்கின்ற மரபு இருக்கிறது. இதுவரையில் நம்முடைய சட்ட மன்றத்தில் காங்கிரஸ் கட்சி எதிர்க் கட்சியாகப் பணிபுரிந்து வந்தது. ஆனால். இன்றைக்கு காங்கிரஸ் கட்சி இரண்டாகப் பிளந்திருப்பது எல்லோருக்கும் தெரியும். எது உண்மையான எதிர்க் கட்சி, எது எதிர்க் கட்சியாகத் திகழ்கிறது என்பதை மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். நம்முடைய மாண்புமிகு திரு. கருத்திருமன் அவர்கள் தலைமையில் இருக்கும் காங்கிரஸ் கட்சி உண்மையான எதிர்க் கட்சியா, அவர்கள் எதிர்க்கட்சித் தலைவரா என்பதைப் பேரவைத்தலைவர் விளக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெளியே நடப்பது பேரவையைப் பாதிக்காது. பேரவையில் அப்படிப்பட்ட நிலைமைபற்றி இன்னும் பேரவைத் தலைவருக்கு அறிவிக்கப்படவில்லை. (பலத்த சிரிப்பு) ஆகவே, இதில் எந்த விதமான ஒழுங்குப் பிரச்சினையும் எழாது. அடுத்த நிகழ்ச்சி, கல்வி சுகாதார அமைச்சர், அரசினர் தனித் தீர்மானத்தை முன்மொழிவார்கள்.

## (5) அரசினர் தனித் தீர்மானம்.

**1969-ம் ஆண்டு அரசியல் அமைப்பு (23-வது திருத்த) மசோதாவினால் செய்யக் கருதப்பட்டுள்ள திருத்தங்களை உறுதிப் படுத்தல்.**

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பாராளுமன்ற அவைகள் இரண்டிலும் நிறைவேற்றப்பட்டு, 1969-ம் ஆண்டு அரசியல் அமைப்பு (23-வது திருத்த) மசோதாவினால் செய்யக் கருதப்பட்டுள்ளவையும், இந்திய அரசியல் அமைப்பின் 368-வது பிரிவின் வரம்பு நிபந்தனையின் நோக்கத்தின் கீழ் வருபவையுமான திருத்தங்களை இப்பேரவை இசைவுடன் உறுதிப்படுத்துகிறது,"

என்கின்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவின் முக்கிய நோக்கம், 1950-ம் ஆண்டு அரசியல் நிர்ணயச் சட்டத்தின், சட்ட மன்றங்களிலும், பாராளுமன்றத்திலும், தாழ்த்தப்பட்ட பழங்குடி, ஆங்கிலோ-இந்திய சமுதாயத்தினர்களுக்குக் குறிப்பிட்ட இடங்கள் ஒதுக்க, சலுகைகள் கொடுக்கும் வகையில் செய்யப்பட்ட

ஏற்பாட்டினை, நீட்டிக்க வேண்டும் என்பதுதான். அந்தச் சமுதாயத்தினர்களுக்குச் சலுகைகள் கொடுக்க வேண்டும் என்கின்ற நோக்கத்தில், அரசியல் அமைப்புச் சட்டத்தில் இடம் ஒதுக்கித் தந்தார்கள். ஒரு குறிப்பிட்ட அடிப்படையில் தாழ்த்தப்பட்ட, பழங்குடி, ஆங்கிலோ-இந்திய சமுதாயத்தினர் சட்ட மன்றங்களிலே, பாராளுமன்றத்திலே இடம் பெறலாம் என்று செய்தார்கள். அந்த வகையில் 1950-ல் அரசியல் நிர்ணயச் சட்டத்தில் அமைக்கப்பட்டது. பத்தாண்டுக் காலத்திற்கு அந்தச் சலுகை என்றும் சொல்லப்பட்டது. அப்படி ஒதுக்கிக் கொடுப்பதால், பத்தாண்டு காலத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள், பழங்குடி மக்கள், ஆங்கிலோ-இந்தியர்கள், புறக்கணிக்கப்பட்டிருந்தவர்கள், மதிப்புப் பெறுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. அதன் காரணமாக ஓரளவுக்குத் தாழ்த்தப்பட்ட, பழங்குடி, அதேபோன்று ஆங்கிலோ-இந்திய சமூகத்தினர் நிலைமை உயர்ந்து வந்திருக்கிறது என்றாலும், மற்ற முன்னேற்றம் அடைந்த சமூகத்தினரோடு போட்டி போட்டு, எல்லாச் சமூகத்தினரோடும் சமமாகச் சட்டமன்றங்கள், பாராளுமன்றம் இவற்றில் அந்தஸ்து பெறும் சூழ்நிலை ஏற்படக்கூடிய மனப்பான்மை பொறுத்தவரையில் இன்னமும் ஏற்படவில்லை. பொருளாதார நிலையில் உயர்ந்திருந்தாலும், சமுதாயத்தில், அவர்களுக்கு இருக்கும் இழுக்கு, அதுவும் கிராமப்புறங்களில், இன்னமும் தடுக்கப்படாமல்தான் இருக்கிறது. நகர்ப்புறங்களிலும் சட்ட மன்றங்களிலும் அப்படி வேறுபாடு கருதப்படாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்றாலும், சிற்றூர்களிலும், கிராமங்களிலும், சாதி வேறுபாடுகள் ஒழிக்கப்படாமல் இருக்கும் நிலை இன்னமும் இருக்கிறது. ஆகவே, அவர்களுடைய நிலைமையை உயர்த்த வேண்டுமானால், தனிச் சலுகை இன்னமும் கொடுக்கப்பட வேண்டும் என்கிற அவசியத்தை உணர்ந்தே, நினைத்த எண்ணம் பத்தாண்டுக் காலத்தில் ஈடேறவில்லை என்கிற காரணத்தால், மேலும் அந்தச் சலுகைகள் பத்தாண்டுக் காலத்திற்கு நீட்டிக்கப்பட வேண்டும் என்று 1960 முதல் 1970 வரை கொடுக்கப்பட வேண்டும் என்று முன்பு ஒரு திருத்தம் செய்யப்பட்டது. ஆகவே, இந்த இருபதாண்டுக் காலமாகத் தாழ்த்தப்பட்ட, பழங்குடி, ஆங்கிலோ-இந்திய சமூகத்தினர்கள் தனித் தொகுதிகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறார்கள். இப்பொழுது பாராளுமன்றம், இரண்டு அவைகளும், மேற்கொண்டு 10 ஆண்டுகளுக்கு அந்தச் சலுகை நீட்டிக்கப்பட வேண்டும் என்று அரசியல் நிர்ணய சட்டத்திற்குத் திருத்தம் செய்திருக்கிறது. இரண்டு அவைகளிலும் ஏகமனதாக இந்தத் திருத்தத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். அந்தத் திருத்தத்தை மாநிலச் சட்ட மன்றங்கள் ஒப்புக்கொண்டு இசைவு கொடுக்க வேண்டும். அந்தச் சலுகை இப்பொழுது 26—1—1970-ம் நாளோடு முடிகிறது. அதற்குள்ளாக இந்தத் திருத்த மசோதாவை நாமும் ஏற்று இசைவு தந்தால், பிறகு இதைச் சட்டமாக்க முடியும். ஆகவேதான் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதன்மூலம், சனவரி 26-ம் தேதி





யோடு முடிவுற இருக்கும் சலுகையை மேற்கொண்டு இன்னும் 10 ஆண்டுகளுக்கு, 1980, சனவரி 26-ம் திங்கள் வரை, நீட்டிக்க வேண்டும் என்பதுதான் இந்தத் தீர்மானத்தின் நோக்கம். ஏற்கனவே உள்ள திருத்தத்தின்படி, அந்தச் சமூகத்தினர் 20 ஆண்டுக்காலம் சலுகையை அனுபவித்து வந்திருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து இன்னும் 10 ஆண்டுகளுக்கு அனுபவிக்க வேண்டும், அந்த அளவுக்கு இடம் கொடுக்கப்பட வேண்டும் என்று இந்தியப் பாராளுமன்றம் செய்திருப்பதை நாமும் ஏற்று இசைவு தந்தால், அந்தச் சமுதாயத்தினர் சலுகைகளை அனுபவிக்க இடம் கொடுக்க முடியும். ஏற்கெனவேபோல், இப்பொழுதும், இதை ஏகமனதாக ஏற்று அந்தச் சலுகைகளை அந்தச் சமூகத்தினர் பெற இடம் அளிக்க இந்த மன்றம் முன்வரும் என்று நம்புகிறேன். ஆகவே, இந்தத் தீர்மானத்தை ஏகமனதாக ஏற்று, இன்னும் 10 ஆண்டுகளுக்கு அந்தச் சலுகைகளை அந்தச் சமுதாயத்தினர்களுக்கு நீட்டிக்க வழிவகை செய்து தரவேண்டும் என்று இதன்மூலம் கேட்டுக்கொண்டு, அமர்கிறேன்.

*THIRUMATHI A. SUARES : Mr. Speaker, Sir another decade has passed since the passing of the Constitution Eighth Amendment Bill in 1960 which extended the privileges of Scheduled Castes and Scheduled Tribes and the Anglo-Indians in the Legislatures for a further period of ten years Now another Bill has been passed by the Lok Sabha and Rajya Sabha extending this period for another ten years upto 1980. Special provisions were incorporated in the Constitution on behalf of the Anglo-Indian community. These provisions were accepted by the Advisory Committee on minority rights which gave special consideration to the views and needs of the Anglo-Indian community. Heven the Advisory Committee under the leadership of the late Sardar Patel accepted the special provisions as necessary for this community.

One of the special needs of the community is with regard to its schools. The Anglo-Indian Community is the only racial-*cum*-linguistic community in the country. It is the only minority community that is defined in the Constitution. There is Inter-State Board for Anglo-Indian Education which correlates the work done in 300 to 400 schools. The curriculum is made uniform.

There are about one hundred schools belonging to the Central Government for Central Government servants. Children of non-Hindi parents turn to the Anglo-Indian scools for high school education. The representation given to Anglo-Indians in the legislatures has helped to impart an understanding of the system of education and the valuable contribution it is making to the larger pattern of Indian education.

Another special feature is that we are the only minority that bears the burden of educating thousands of poor children and orphan children. Government provides free and compulsory education in many States. But this is not provided for the poor

Anglo-Indian children. Some. State Governments give indigent grants for poor and orphan children. Tamil Nadu is one of the States that gives indigent grants to poor children and we are very grateful to the Government.

Another problem of the community is unemployment. On an average about-third of the community is unemployed. There was a protection period of ten years which ended in 1960. Then the opportunities for employment in the Posts and Telegraphs, Customs and Railways were cut off. Afterwards it is only those with education who could secure good jobs in these services.

In this context I would like to mention that, in spite of its miscroscopic size, the Anglo-Indian community has done great service to independent India. During the Kashmir campaign the first fighter pilot to volunteer for service in Kashmir was an Anglo-Indian; the filot to land in Kashmir was an Anglo-Indian; and the first pilot to and in Poonch was also an Anglo-Indian. In the Indo-Pakistan conflict, the Anglo-Indians, particularly the Air Force personnel distinguished themselves and seven heroes were awarded uccoration.

The Constitution (Twenty-third Amedment) Bill has been passed by Parliament with an overwhelming majority. It has to be ratified by fifty per cent of the States. I commend this motion for ratification to the House.

The Constitution (Twenty-third Amendment) Bill also affects the Scheduled Castes and the Scheduled Tribes. During the two decades after Independence great progress was made in improving these communites. But they have not yet reached the level of the other communities. As this Bill affects the Scheduled Castes and the Scheduled Tribes, I commend to this House on their behalf this motion for ratification of the Constitution (Twenty-third Amendment) Bill, 1969.

Thank you.

**திரு. ஆ. கு. சுப்பையா:** பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள தீர்மானத்தை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அரிஜனங்கள் ஷெட்யூல்ட் வகுப்பினர், ஆங்கிலோ-இந்தியர் போன்றவர்களுக்கு மேலும் பத்தாண்டுக் காலத்திற்கு தனித் தொகுதி முறை நீடிக்கவேண்டுமென்று இன்றைய தினம் பாராளுமன்றத்திலே நிறைவேற்றப்பட்டு, எல்லா மாநிலங்களையும் இசைவு கேட்டிருக்கிறார்கள். நம்முடைய மாநிலமும் ஏகோபித்த முறையில் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பிவைப்பதுதான் நியாயமாக இருக்க முடியும்.

கடந்த இருபதாண்டுகளாக அரிஜனங்களுக்கும், மற்ற பின்தங்கிய வகுப்பினருக்கும், ஆங்கிலோ-இந்தியர்களுக்கும் தனித் தொகுதி சலுகைகள் வழங்கப்பட்டு வந்தாலும், எந்த



நோக்கத்திற்காகத் தனித் தொகுதி சலுகைகள் வழங்கப்பட்டனவோ, அந்த நோக்கம் இன்னும் பரிபூரணமாக நிறைவேறப்படவில்லையென்பது நமக்கு நன்றாகத் தெரிகிறது. தீண்டாமை இன்றைய தினம் ஒழிக்கப்பட்டுவிட்டதா என்ற கேள்விக்கு இல்லையென்று பதில்தான் சொல்ல முடியும். சமூகக் கொடுமைகள் இன்னும் தாங்க முடியாத அளவிற்கு நாட்டில் இருந்துகொண்டுதான் இருக்கிறது. அரிஜனங்கள் மற்றச் சமூக மக்களுடன் சமமாகப் பழகி, சமத்துவ முறையில் பணியாற்றக் கூடிய வகையில் வழிவகைகளைச் செய்தாக வேண்டும் என்பதில் அதிக அக்கறைக் காட்ட வேண்டிய கால்கட்டத்தில் இருக்கிறோம்.

தனித் தொகுதிச் சலுகை மேலும் பத்தாண்டுக் காலம் நீடிப்பது என்பதுமட்டும் போதாது. அப்படி நீடித்தபிறகும் அவர்கள் பொருளாதாரத் துறையில் மேம்பாடடைந்து, மற்ற ஜாதிக்காரர்களோடு சமமாக இருக்கக்கூடிய அளவிற்கு வசதிகள் செய்யப்படுவதிலே கவனம் செலுத்தப்பட வேண்டும். அவர்களுக்கென்று ஒரு தனி மரியாதை இல்லையென்று சொன்னாலும், மற்றவர்களுக்கு இருக்கும் நிலையோடு அவர்கள் நிலையும் ஒத்ததாக இருக்க வேண்டும்.

இன்றைய தினம் அரிஜனங்கள் கிராமப்புறங்களில்தான் அதிகமாக இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலோர் விவசாயத்தில்தான் ஈடுபட்டிருக்கிறார்கள். அப்படி விவசாயத்தை நம்பியிருக்கின்ற அந்த மக்களுக்குப் போதுமான நிலம் கொடுப்பதற்கு வேண்டிய எந்தவிதமான ஏற்பாடும் இல்லை. உபரியாக இருக்கும் அரசுக்குச் சொந்தமான தரிசு நிலத்தை அந்தப் பெருங்குடி மக்களுக்கு பிரித்துக் கொடுக்கலாம். நிலமில்லாதவர்களுக்குக் கொடுக்கப்படும் முறையில்தான், மற்ற ஜாதிக்காரர்களுக்குக் கொடுப்பதுபோல் இவர்களுக்கும் நிலம் வழங்கப்படுகிறது. விவசாயத் தொழிலையே நம்பியிருக்கும் இவர்களுக்குப் பாரபட்சம் காட்டப்படுகிறது. இவர்கள் விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருப்பதால், இவர்களுடைய பொருளாதாரத் துறை முன்னேற்றம் அடைவதற்கு உதவியாக இருக்கும் பொருட்டு, அரசாங்கம் இவர்களுக்கு அரசாங்க உபரி நிலத்தில் ஐம்பது சதவிகிதத்தையாவது ஒதுக்கிக் கொடுக்க வேண்டும். இப்படிச் செய்தால்தான், இவர்களுடைய பொருளாதாரம் முன்னேற்றம் அடையச் செய்வதற்கு வழி செய்தவர்களாவோம்.

அடுத்தபடியாக, கடந்த இருபதாண்டுகளில் அரிஜனங்களில் எத்தனை பேர் தொழில் துறை, வர்த்தகத் துறை, இன்ன பிற துறைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று கேட்டால், ஏதோ ஒன்றிரண்டு பேர்களைத்தான் கூறமுடியும். தொழில் துறையில் முன்னேறுவதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுப்பதில்லை. தேசியமயமாக்கப்பட்ட பாங்குகளின்மூலம் இவர்களுக்குத் தொழில்களை ஆரம்பிக்கக் கடன் கொடுக்க வேண்டும். மற்றத்

Anglo-Indian children. Some. State Governments give indigent grants for poor and orphan children. Tamil Nadu is one of the States that gives indigent grants to poor children and we are very grateful to the Government.

Another problem of the community is unemployment. On an average about-third of the community is unemployed. There was a protection period of ten years which ended in 1960. Then the opportunities for employment in the Posts and Telegraphs, Customs and Railways were cut off. Afterwards it is only those with education who could secure good jobs in these services.

In this context I would like to mention that, in spite of its miscroscopic size, the Anglo-Indian community has done great service to independent India. During the Kashmir campaign the first fighter pilot to volunteer for service in Kashmir was an Anglo-Indian; the filot to land in Kashmir was an Anglo-Indian; and the first pilot to and in Poonch was also an Anglo-Indian. In the Indo-Pakistan conflict, the Anglo-Indians, particularly the Air Force personnel distinguished themselves and seven heroes were awarded uccoration.

The Constitution (Twenty-third Amedment) Bill has been passed by Parliament with an overwhelming majority. It has to be ratified by fifty per cent of the States. I commend this motion for ratification to the House.

The Constitution (Twenty-third Amendment) Bill also affects the Scheduled Castes and the Scheduled Tribes. During the two decades after Independence great progress was made in improving these communites. But they have not yet reached the level of the other communities. As this Bill affects the Scheduled Castes and the Scheduled Tribes, I commend to this House on their behalf this motion for ratification of the Constitution (Twenty-third Amendment) Bill, 1969.

Thank you.

**திரு. ஆ. கு. சுப்பையா:** பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள தீர்மானத்தை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அரிஜனங்கள் ஷெட்யூல்ட் வகுப்பினர், ஆங்கிலோ-இந்தியர் போன்றவர்களுக்கு மேலும் பத்தாண்டுக் [illegible]லத்திற்கு தனித் தொகுதி முறை நீடிக்கவேண்டுமென்று [illegible] றயதினம் பாராளுமன்றத்திலே நிறைவேற்றப்பட்டு, எல்லா [illegible] ஏகளையும் இசைவு கேட்டிருக்கிறார்கள். நம்முடைய [illegible] ம் ஏகோபித்த முறையில் இந்தத் தீர்மானத்தை நிறை [illegible] அனுப்பிவைப்பதுதான் நியாயமாக இருக்க முடியும்.

[illegible] இருபதாண்டுகளாக அரிஜனங்களுக்கும், மற்ற [illegible] ய வகுப்பினருக்கும், ஆங்கிலோ-இந்தியர்களுக்கும் தனித் [illegible] சலுகைகள் வழங்கப்பட்டு வந்தாலும், எந்த [illegible]





நோக்கத்துடன்தான் தனித் தொகுதி சலுகைகள் வழங்கப்பட்டனவோ, அந்த நோக்கம் இன்னும் பரிபூரணமாக நிறைவேறப்படவில்லையென்பது நமக்கு நன்றாகத் தெரிகிறது. தீண்டாமை இன்றைய தினம் ஒழிக்கப்பட்டுவிட்டதா என்ற கேள்விக்கு இல்லையென்று பதில்தான் சொல்ல முடியும். சமூகக் கொடுமைகள் இன்னும் தாங்க முடியாத அளவிற்கு நாட்டில் இருந்துகொண்டுதான் இருக்கிறது. அரிஜனங்கள் மற்றச் சமூக மக்களுடன் சமமாகப் பழகி, சமத்துவ முறையில் பணியாற்றக் கூடிய வகையில் வழிவகைகளைச் செய்தாக வேண்டும் என்பதில் அதிக அக்கறைக் காட்ட வேண்டிய கால்கட்டத்தில் இருக்கிறோம்.

தனித் தொகுதிச் சலுகை மேலும் பத்தாண்டுக் காலம் நீடிப்பது என்பதுமட்டும் போதாது. அப்படி நீடித்தபிறகும் அவர்கள் பொருளாதாரத் துறையில் மேம்பாடடைந்து, மற்ற ஜாதிக்காரர்களோடு சமமாக இருக்கக்கூடிய அளவிற்கு வசதிகள் செய்யப்படுவதிலே கவனம் செலுத்தப்பட வேண்டும். அவர்களுக்கென்று ஒரு தனி மரியாதை இல்லையென்று சொன்னாலும், மற்றவர்களுக்கு இருக்கும் நிலையோடு அவர்கள் நிலையும் ஒத்ததாக இருக்க வேண்டும்.

இன்றைய தினம் அரிஜனங்கள் கிராமப்புறங்களில்தான் அதிகமாக இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலோர் விவசாயத்தில்தான் ஈடுபட்டிருக்கிறார்கள். அப்படி விவசாயத்தை நம்பியிருக்கின்ற அந்த மக்களுக்குப் போதுமான நிலம் கொடுப்பதற்கு வேண்டிய எந்தவிதமான ஏற்பாடும் இல்லை. உபரியாக இருக்கும் அரசுக்குச் சொந்தமான தரிசு நிலத்தை அந்தப் பெருங்குடி மக்களுக்கு பிரித்துக் கொடுக்கலாம். நிலமில்லாதவர்களுக்குக் கொடுக்கப்படும் முறையில்தான், மற்ற ஜாதிக்காரர்களுக்குக் கொடுப்பதுபோல் இவர்களுக்கும் நிலம் வழங்கப்படுகிறது. விவசாயத் தொழிலையே நம்பியிருக்கும் இவர்களுக்குப் பாரபட்சம் காட்டப்படுகிறது. இவர்கள் விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருப்பதால், இவர்களுடைய பொருளாதாரத் துறை முன்னேற்றம் அடைவதற்கு உதவியாக இருக்கும் பொருட்டு, அரசாங்கம் இவர்களுக்கு அரசாங்க உபரி நிலத்தில் ஐம்பது சதவிகிதத்தையாவது ஒதுக்கிக் கொடுக்க வேண்டும். இப்படிச் செய்தால்தான், இவர்களுடைய பொருளாதாரம் முன்னேற்றம் அடையச் செய்வதற்கு வழி செய்தவர்களாவோம்.

அடுத்தபடியாக, கடந்த இருபதாண்டுகளில் அரிஜனங்களில் எத்தனை பேர் தொழில் துறை, வர்த்தகத் துறை, இன்ன பிற துறைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று கேட்டால், ஏதோ ஒன்றிரண்டு பேர்களைத்தான் கூறமுடியும். தொழில் துறையில் முன்னேறுவதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுப்பதில்லை. தேசியமயமாக்கப்பட்ட பாங்குகளின்மூலம் இவர்களுக்குத் தொழில்களை ஆரம்பிக்கக் கடன் கொடுக்க வேண்டும். மற்றத்

தொழில்களைச் செய்ய வேண்டிய வசதிகளையும், வாய்ப்புகளையும் அமைத்துத் தர வேண்டும். அப்படிச் செய்தால்தான், சமூகக் கொடுமைகளை ஒழிக்க முடியும்.

சுதந்திரம் கிடைத்தபிறகும் இன்றும் தீண்டாமை இருந்து வருகிறது. கோயில்களிலே தீண்டாமை இருந்து வருகிறது. ஹோட்டல்களை எடுத்துக்கொண்டாலும், இவர்களுக்கென்று தனி அறையை ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். இவர்கள் எங்கு சென்றாலும் தனிமையாக ஒதுக்கப்படுகிறார்கள். இந்தக் கேவலமான நிலையை ஒழித்தாக வேண்டும். இந்த நிலைமைகள் எல்லாம் போக்கப்படத் தமிழக அரசு முன்வர வேண்டும். மற்ற மாநிலங்களுக்கெல்லாம் தமிழக அரசு வழிகாட்டியாக இருப்பது போல, இந்த விஷயத்திலும் தமிழக அரசு முன்னோடியாக விளங்க வேண்டும். அரிஜனங்களின் முன்னேற்றத்திற்கான வழிகளில் அதிக, அக்கறை காட்டி, நல்ல திட்டங்களைப் போட்டு, அத் திட்டங்களை வேகமாகச் செயல்படுத்த வேண்டும். தமிழக அரசு அரிஜனங்களுக்கு ஏற்படும் சமூகக் கொடுமைகளை ஒழிக்க எல்லா வகையிலும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஆலோசனை கூறி, இந்தத் தீர்மானத்தை என்னுடைய சார்பிலே வரவேற்று அமர்கிறேன்.

**திரு. க. ர. நல்லசிவன்** : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள தனித் தீர்மானத்தின்மீது இரண்டொரு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கடந்த இருபது வருஷங்களாக அரிஜனங் களுக்கும், மலைவாசிகளுக்கும் தனியாக ஸ்தானம் ஒதுக்குகின்ற சட்டம் இருந்தது. இன்னும் பத்து வருடங்களுக்கு நீடிக்க பார்லிமெண்டில் மசோதா நிறைவேறியிருக்கிறது. அதற்கு நாமும் ஒருமனதான ஒப்புதல் அளிக்க இருக்கிறோம். ஒப்புதல் அளிப்பதில் பெருமை கொள்கிறோம். ஆயினும் இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதனால் மட்டும் இந்த ஜனங்களுடைய பிரச்சினையைத் தீர்க்க முடியுமா என்றால், முடியும் என்ற நம்பிக்கை எனக்கு அடியோடு கிடையாது.

கடந்த இருபது வருடக் காலமாக இந்தச் சமூகத்தினர் இந்தச் சட்டத்தின்மூலம் இரண்டொரு பிரதிநிதிகளைப் பார்லிமெண்டுக்கு அனுப்பியிருக்கக்கூடும். அவர்கள் இரண்டொரு பேர்களுக்கு வேலை வாங்கித் தந்திருக்கக் கூடும். அதைத்தவிர, உருப்படியான பயன் விரிவான முறையில் இந்தச் சமூகத்தினரிடையே ஏற்பட்டிருக்கிறதா என்றால் இல்லை.

நகரத்தில் இருக்கிறவர்களுக்கு இந்தச் சமூகத்தினர் படுகிற தொல்லைகள் அதிகம் தெரியாது. நான் கிராமத்தில் இருக்கிறவன். சோஷலிசம்தான் பேசுகிறேன். என்னுடைய ஊரிலே, என்னுடைய





வீட்டில் மனப்பூர்வமாக நான் இந்தச் சமூகத்தினரைச் சரிசமமாக நடத்த முடிகிறதா என்றால் இல்லை. துணிச்சலாக நான் ஏதாவது செய்ய முற்பட்டால் அவ்வளவுதான், ஊர் மகாஜனங்கள் என்னை எங்கே கொண்டுபோய் போடுவார்கள் என்பது தெரியாது. ஆகவேதான் நான் தெரிவித்துக் கொள்வது என்னவென்றால், தமிழக அரசு தீவிரமான--தனியான—ஒரு திட்டத்தை வகுத்தாக வேண்டும். கிராமங்களில் போய்ப் பார்த்தால், கவுண்டர்கள் தெரு தனியாக இருக்கும். ஐயர்கள் தெரு தனியாக இருக்கும். இந்தத் தாழ்த்தப்பட்டவர்களுடைய தெரு தனியாக இருக்கும் இந்த நிலையில் இருந்து விடுதலை வேண்டும்.

பெரிய பயங்கரமான நிகழ்ச்சி தஞ்சாவூரில் நடந்தது. இன்னும் பலப்பல கிராமங்களில் இரகசியமாக நடந்துகொண்டுதான் இருக்கின்றன. எனக்குத் தெரியும். ஒருவனை அடித்தே கொன்றார்கள். ஆனால் அதை நிரூபிக்கச் சாட்சியங்கள் தேவை. மேல்சாதியினர்கள் யார் வருகிறார்கள்? மேல் சாதி அதிகாரிகளாக இருந்தாலும்சரி, தாழ்த்தப்பட்ட சாதி அதிகாரிகளாக இருந்தாலும்சரி என்ன செய்ய முடிகிறது?

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனை வழங்கும் திட்டத்தை வைத்துக்கொண்டிருக்கிறோம். அது ஒழுங்காக செயல்படுவதே கிடையாது. உத்தியோகத்துறையில் அவர்களுடைய விகிதாசாரத்திற்கு ஏற்றபடி ஸ்தானம் கொடுப்பதே கிடையாது. தமிழக அரசாவது அவர்களுக்குக் குறைந்தபட்சம் 50 சதவிகிதம் ஒதுக்குவதற்கு முன்வந்தாக வேண்டும். ஆரம்பப்பள்ளியில் சரியாகப் படிப்பதே கிடையாது. தீவிரமான நிலச் சீர்திருத்தச் சட்டம் ஒன்றைக் கொண்டுவந்து அரிஜனங்களுக்குத் திட்டவட்டமான காரியங்களைச் செய்தால்தான் மிகுந்த பயன் உடையதாக இருக்கும். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்து 3 வருடங்கள் ஆகிவிட்டன. இன்னும் இரண்டு வருடங்கள்தான் இருக்கின்றன. ஆகவே, இந்த இரண்டு வருடங்களுக்குள்ளாவது திட்டவட்டமான நல்லபல காரியங்களைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

(திரு. எ. பாலசுப்பிரமணியன் எழுந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : ஆளுநர் அவர்களின் உரை மீது விரிவாக விவாதம் நடக்க இருக்கிறது. அப்போது பல விஷயங்களைச் சொல்லலாம். இப்போது இந்தத் தனித் தீர்மானத்தின்மீது சுருக்கமாகப் பேச அழைக்கின்றேன்.

**திரு. எ. பாலசுப்பிரமணியன்** : தலைவர் அவர்களே, நான் ஒன்றே இரண்டு கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். முதலாவதாக இந்தத் தனித் தீர்மானத்தை முழுமனதோடு ஆதரிக்கிறேன். இதனால்மட்டும் காரியம் நடக்காது என்பதை நானும் உணர்கிறேன். எனது கட்சியும் உணர்ந்திருக்

[திரு. எ. பாலசுப்பிரமணியன்] [1970 ஜனவரி 21

கிறது. குறைந்தபட்சம் உடனடியாக நல்லதொரு நிலச்சீர்திருத்தம் வேண்டும். அதுமட்டும் காணாது. சமுதாயத்தில் ஊறிப்போய் இருக்கக்கூடிய பழைய கருத்துக்களை உடைத்தெறியக்கூடிய பிரச்சார இயக்கம் தேவைப்படுகிறது. பொருளாதார முன்னேற்றத்திற்கான காரியங்கள் ஒருபுறம் நடைபெற்றுக் கொண்டிருக்க—ஐடியல் ஸ்டாலின்—என்பார்களே அதுமாதிரிப் பழைய கொள்கைகளைத் தகர்த்தெறியக்கூடிய பிரச்சாரப் போராட்டம் வெற்றிபெற்றாக வேண்டும். பழைய கருத்துக்களை, மகாத்மா காந்தியைப் பின்பற்றுபவர்களாக இருந்தாலும், பெரியார் அவர்களைப் பின்பற்றுகிறவர்களாக இருந்தாலும், மார்க்ஸிஸ்ட் கொள்கை வாதிகளாக இருந்தாலும் அண்ணா அவர்களைப் பின்பற்றுபவர்களாக இருந்தாலும் எதிர்ப்பவர்கள்தான். ஆகவே இந்த ஒன்றிலாவது நாம் அனைவரும் சேர்ந்து உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்கிற கட்டுப்பாட்டைத் தகர்த்தெறியக் கூட்டுப் பிரச்சாரத்தைக் கட்டு அவிழ்த்துவிட வேண்டும். இதுவே வருங்காலத்திலாவது சமுதாயத்தை ஒரு தமிழினமாக வளர்க்க உதவி செய்யும் என்று கருதுகிறேன். தமிழக அரசு இந்தக் கூட்டுப் பிரச்சாரத்திற்குப் பெரிய அளவு உதவி செய்ய வேண்டுமென்று கூறி, அவைமுன்னுள்ள தீர்மானத்தை ஆதரித்து முடிக்கிறேன்.

* திரு. கே. பி. எஸ். மணி: மாண்புமிகு தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்டவர்களுக்கு மேலும் பத்தாண்டுகள் தனி ஸ்தானம் ஒதுக்கும் மசோதா பார்லிமெண்டில் நிறைவேற்றப்பட்டு ஒவ்வொரு மாநில அரசின் ஒப்புதலுக்காகவும் வந்திருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் அதுபற்றி இந்தப்
மு. ப. 10-30 பேரவையில் கொண்டுவந்திருக்கிற தனித் தீர்மானத்தை நான் முழுமனதுடன் வரவேற்கிறேன்.

தமிழக அரசு இதை நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பும் போது, இதில் இருக்கிற குறைபாடுகளை நீக்குவதற்கும் சிபார்சு செய்வதும் மிகையாகாது என்று நினைக்கிறேன். காரணம் இந்த மாதிரியான சலுகை கடந்த 20 ஆண்டுகளாகக் கொடுக்கப்பட்டு வருகிறது. சலுகை கொடுக்கப்பட்ட காலம் முதல் இன்றுவரை பார்த்தால், இந்தியாவிலேயே ஐந்தில் ஒரு பாகமாக ஜன சமுதாயத்தைப் பெற்றிருக்கும் இந்தச் சமூகம் உண்மையிலேயே நல்லமுறையில் முன்னேறவில்லை. அந்தக் காலம் தொட்டே ஏதோ கண்துடைப்பு மாதிரி—யானைக்குச் சோளப்பொரி போடுவது போல—தனி ஸ்தானம் கொடுக்கப்பட்டு வருகிறதே தவிர, வேறு எந்தவிதமான திட்டமும் நிறைவேற்றப்படவில்லை. ஆயினும் இப்படி ஒரு திட்டத்தைச் சலுகையின் பேரால் வளர்த்துக்கொண்டு வந்திருப்பது இந்தச் சமூகத்தை மேலும் மேலும் அடிமைப் படுத்தலே பயன்படுத்தப்பட்டு வருகிறது. அரசியல் அடிமைகளாக இந்தச் சமூகத்தை வளர்க்கவே பயன்படுத்தப்பட்டு வருகிறது.



1970 ஜனவரி 21] [திரு. கே. பி. எஸ். மணி]

ஆகவேதான் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்புவது மட்டும் போதாது, சில தனிச் சிபார்சுகளையும் செய்தாக வேண்டும்.

தாழ்த்தப்பட்ட இந்தச் சமூகத்தினர்களுக்கு நிலம் வழங்குவது சம்பந்தமாகத் திட்டவட்டமான நடவடிக்கை எடுத்துக் கொண்டாக வேண்டும். மதிப்பிற்குரிய உலகசோதியாகிய காந்திஜி அவர்கள் பூனா ஒப்பந்தத்தில் தனித்தொகுதி போதும் என்று சொன்னதை ஒத்துக்கொண்டாலும் அவர்கள் கொடுத்த வாக்குறுதியைக்கூட இந்திய அரசு பின்னால் நிறைவேற்றவில்லை. நிறைவேற்றும் சக்தியற்றவர்களாக இருக்கிறார்கள். வெள்ளைக்காரன் காலத்தில்கூட ஒரு இரக்கம் காட்டப்பட்டு, பஞ்சமத் தரிசு என்று கொடுத்திருந்தார்கள். அந்தப் பஞ்சமத் தரிசைக்கூட இப்போது பிடுங்கிப் பல இடங்களில் வேறுபல வசதியும், வாய்ப்பும் உள்ளவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பட்டுக்கோட்டை, அறந்தாங்கி தாலுகாவில் இப்படி நடந்துகொண்டிருக்கிறது. மேற்கொண்டு சொல்லப்போனால் உச்ச வரம்பா, மிச்ச வரம்பா என்று அண்ணா கேட்ட மிச்சம் இருக்கிற நிலத்தைக்கூட உண்மையில் நிலமில்லாத விவசாயம் செய்கின்ற தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கொடுக்கவில்லை.

ஆகவே, இப்படிப்பட்ட நிலைமையிலேதான் நாங்கள் கேட்டுக் கொள்வது மிகப் பெரிய பிரச்சினையாக சமூகத்திலே இது இருக்கிற காரணத்தினால், இந்த அரசு மத்திய அரசுக்குச் சிபாரிசு செய்யும் போது கிறித்தவ, புத்த மதக் கொள்கைகளைச் சார்ந்தவர்களுக்கும் இப்படிப்பட்ட சலுகைகள் கொடுக்க ஏற்பாடு செய்வதற்கு முன்வரவேண்டும் என்பதுதான். ஒரு தாழ்த்தப்பட்டவன் கிறித்துவ மதத்தைத் தழுவியதாலே வசதியுள்ளவனாக ஆகிவிட முடியாது. பணக்காரனாக ஆகிவிட முடியாது. ஒரு தாழ்த்தப்பட்டவன் புத்த மதத்தைத் தழுவியதாலே அவன் ஒரு வசதிபடைத்தவனாக, பெரிய மனிதனாக ஆகிவிட முடியாது. எனவே கிறித்துவ, புத்த மதத்தைச் சார்ந்த தாழ்த்தப்பட்டவர்களுக்கும் இந்தப் பத்தாண்டுச் சலுகைகளைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த முறையிலே நிறைவேற்றித் தர மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: சபாநாயகர் அவர்களே, இந்த அவையின்முன் இருக்கும்படியான இந்த 23-வது திருத்த மசோதாவை மனப்பூர்வமாகக் காங்கிரஸ் கட்சி ஆதரிக்கிறது. தீண்டாமை எனப்படுவது ஒரு கொடிய நோய். எந்தத் தவறினாலோ அது நம்முடைய தேசத்திலே வந்துவிட்டது.

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1970 ஜனவரி 21

சுதந்திரம் பெறுவதற்கு முன்னாலேயே அதையொழிக்கவேண்டும் என்று நம்முடைய தேசப் பிதா மகாத்மா காந்தி அவர்கள் ஆரம்பித்து வெற்றி கண்டார்கள். எல்லோரும் ஒரே ஜாதி என்ற முறையிலே இருக்கவேண்டுமென்று சொல்லி அதிலே ஓரளவுக்கு நாம் வெற்றி கண்டிருக்கிறோம்.

இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையிலே நான் ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சுகாதாரம், தீண்டாமை இரண்டும் ஒன்றோடு ஒன்று இணைந்ததாகும். சுகாதாரம் இருந்தாலே தீண்டாமை அகலுவதற்கு வழியிருக்கிறது. நாட்டிலே விடிவில்லை என்ற குற்றச்சாட்டுச் சொல்கிறார்கள். சுத்தமாகப் போனால் யார் என்று கேட்பதற்கு வழியே இல்லாமல் போகிறது. எனவே, தீண்டாமை என்பதுவேகூட சுகாதாரத்தின்மூலம் ஒழிக்கப் படலாம்.

அரிசனங்களுக்கு மட்டுமல்ல, இதர சமூகத்திலே உள்ளவர்களுக்கும் அரிசனங்களைவிடப் பாதகம் ஏற்படுகிறது. உயர்ந்த ஜாதியிலே இருக்கிறவர்கள்கூடச் சுத்தம் உள்ளவர்களாக இருக்கிறார்களே தவிர, அவர்கள் வசதியுள்ளவர்களாக இல்லை. எனவே பொருளாதாரத்தையும் நாம் அடிப்படையாக வைத்துப் பார்க்கவேண்டும்.

சீர்காழி உறுப்பினர் அவர்கள் பேசினார்கள். ஆனால் அவர்கள் உயர்ந்த ஜாதியிலே பெண் எடுத்திருக்கிறார்கள். இன்னும் இப்படிப் போகிறவர்களிலே அப்படிச் செய்கிறவர்கள் இருக்கிறார்கள். டாக்டர் அம்பேத்கார் உயர்ந்த ஜாதியிலே பெண் எடுத்திருக் கிறார்கள். ஆகவே அவர்களுடைய மனப் பக்குவம் மாறவேண்டும். இந்த மனப்பக்குவத்தைப் பெரும்பாலும் பொறுத்திருக்கிறதே தவிர வேறொன்றும் இல்லை. திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் சொன்னமாதிரி எல்லாக் கட்சிகளும் சேர்ந்து கட்சி வேறுபாடோ அரசியல் வேறுபாடோ இல்லாமல் சமூகத்திலே எல்லோருக்கும் ஒரே மாதிரியாக எல்லாம் பழகுவதற்கு ஏற்பாடு செய்கின்ற மனப்பக்குவம் வரவேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறுதியாக ஒன்றைச் சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். அவர்கள் தனித் தொகுதி என்று கேட்கிறார்கள். அது விரும்பத்தக்கது அல்ல. இப்பொழுது 34 தொகுதிகள் ரிசர்வ் தொகுதிகளாக ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இனிமேல் 1972-லேதான் அதை மாற்றவேண்டிய நிலைமை ஏற்படும். அப்படி மாற்றப்படும்பொழுது அந்தத் தொகுதிகளை யெல்லாம் பரவலாக வேறு இடங்களுக்கு மாற்றினால் நல்லது. அந்த அந்த மாவட்டங்களிலே வேறு வேறு இடங்களுக்கு மாற்றினால் அவர்களுக்கும் பிரதிநிதித்துவம் கிடைக்கச்



1970 ஜனவரி 21] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

சௌகரியமாக இருக்கும். ஆனால் அதற்காக எல்லாவற்றையும் மாற்றினால் அது பொருத்தமாக இருக்காது, பொறுப்பு இல்லாமல் போகக்கூடிய நிலைமை ஏற்படலாம். எனவே அதிலே ஐம்பது சதவீதத்தை அல்லது மூன்றில் ஒரு பகுதியை மாற்றினால் நல்லது. அப்படிச் செய்தால் எல்லா இடங்களிலும் உள்ள அரிசனங் களுக்கும் பிரதிநிதித்துவம் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு சர்க்கார் இதை ஏற்பார்கள் என்று நம்பி இதை மனப் பூர்வமாக ஆதரிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அரசியலமைப்புச் சட்டத்தின் 23-வது திருத்த மசோதாவிற்கு ஆதரவுதெரிவிக்கும் தீர்மானத்திற்கு இந்த மன்றத்திலுள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நல் ஆதரவு தந்து நிறைவேற்ற பேருதவி தந்திருப்பதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் தீர்மானத்தினுடைய முக்கிய நோக்கத்தை எல்லோரும் வரவேற் கிறார்கள். சட்ட மன்றம், பாராளுமன்றம் இவற்றிலே தாழ்த்தப் பட்டவர்களுக்கும், பிற்பட்டவர்களுக்கும், ஆங்கிலோ-இந்தியர் களுக்கும் இடம் தருகின்ற மசோதாவாகும் இந்த மசோதா. தாழ்த்தப்பட்டவர்களுக்கு இருக்கின்ற குறைபாடுகளை அவர்கள் நல்ல முறையிலே எடுத்துச் சொல்வதற்கும், சமுதாயத்திலே அவர் களுக்கும் மதிப்பு ஏற்படவேண்டுமென்பதற்கும் அவர்களுடைய குரல்கள் சட்ட மன்றங்களிலேயும், பாராளுமன்றத்திலேயும் ஒலிக்க வேண்டுமென்பதற்கும், நேரிடையாக அவர்கள் குறைகளை எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்புத்தருகின்ற முறையிலே இப்படிப் பட்ட சலுகைகள் அளிக்கப்படுகின்றன. இப்படிப்பட்ட சலுகை களைப் பத்து ஆண்டுகள் அளித்துப் பார்த்தோம். நோக்கம் நிறை வேறவில்லை. இருபது ஆண்டுக்காலம் அளித்துப் பார்த்தோம், நோக்கம் நிறைவேறவில்லை. ஆகவே இன்னொரு பத்தாண்டுக் காலம் இந்தச் சலுகைகளை நீட்டித்துக்கொடுக்க வசதியளிக்கின்ற முறையில் இந்த மசோதா இந்தப் பேரவைக்கும் வந்திருக்கிறது.

பல உறுப்பினர்கள் அரிசன மானியத்தின்மீது சொல்ல வேண்டிய கருத்துக்களையும் இதிலே எடுத்துச் சொல்லியிருக் கின்றார்கள். அதைப்பற்றி இன்னும் விரிவாக அவர்கள் சொல்வதற்கு வருகிற வரவுசெலவுத் திட்டத்தின் மீதான விவாதம் இருக்கிறது. அவர்கள் சொல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போன்று மக்களுடைய மனப்பாங்கு மாறினால்தான் சமுதாயத்திலே உள்ள பழக்கவழக்கங்கள் மாறும். அரசியல் சுதந்திரம் ஏட்டின் அளவிலே வந்துவிட்டபோதிலும் மனப் பான்மை மாறாததின் காரணத்தாலே தாழ்த்தப்பட்ட நிலையிலும், புறக்கணிக்கப்பட்ட நிலையிலும் பலர் இருக்கிறார்கள். இந்த

நிலைமை இந்தியாவிற்குக் கேடு பயந்துகொண்டு வருகிறது. அவர்களுடைய நிலை வளர வேண்டுமென்பதற்காகப் பல்வேறு திட்டங்களை நாம் வகுத்துக்கொண்டிருக்கிறோம்.

வேலைத் துறையிலே முழுச் சலுகை நம்முடைய மாநிலத்திலே கொடுத்து இருக்கிறோம். மற்ற மாநிலங்களைவிட தமிழகமும் சலுகைகள் அளிப்பதிலே முன்னணியில் இருந்துவருகிறது என்பதைப் பெருமையோடும் பூரிப்போடும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உயர்கல்வி பெறுகின்ற முறையிலும், விடுதி வசதிகள் பெறுகின்ற முறையிலும் கூடுமான அளவுக்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. குடியிருப்பு மனைகள் வழங்குவதற்கும் உழுது பயிரிட்டு வாழ்க்கை நடத்துவதற்கு நிலம் வழங்குவதற்கும ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருக்கின்றன. போட்டி இருந்தால்—ஜாதி இந்துக்களுக்கும் கொடுக்கின்ற நிலை இருக்குமானால்—தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முதல் சலுகை கொடுக்கப்பட்டு வருகிறது. இந்த விஷயத்தில் ஆங்காங்கு உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களின் உதவியைப் பெற்றுச் சலுகைகளைப் பெறுக்கொள்ளலாம். ஒன்றரை லட்சம் ஏக்கர் நிலங்கள் குடியிருப்புக்காகவும், உழுது பயிரிட்டுக் கொள்வதற்காகவும் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் பல சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும், தனித் தொகுதிகளைப்பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அரிசனங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற தொகுதிகள் மாறவேண்டுமென்று சொன்னார்கள். மாற்றப்படுகின்ற காலம் 1977 ஆகத்தான் இருக்கும். 1967-ல் மாற்றியமைத்திருக்கிறார்கள். மறுபடியும் டீ-லிமிடேஷன் கமிட்டி தொகுதிகளை மாற்றியமைக்கும் காலம் 1977-ல் வரும். தற்போது அந்தத் தொகுதிகளை எந்த அடிப்படையில் பிரித்திருக்கிறார்கள் என்றால், அந்தக் குறிப்பிட்ட தொகுதியில் 30, 22 சதவிகிதம் போலவது அரிசனங்கள் இருக்க வேண்டுமென்ற முறையிலே பிரித்திருக்கிறார்கள். ஆனால் பல இடங்களிலும் அரிசனங்கள் பரவலாக இருக்கிறார்கள், அந்தப் பகுதியில் இருக்கின்ற அரிசனங்களுக்கும் பிரதிநிதித்துவம் பெற ஒரு வாய்ப்பு ஏற்பட வேண்டுமென்ற முறையிலே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த வகையிலே அந்தக் குழு ஒரு கொள்கையை வகுத்துக் கொண்டால் அவ்வாறு பிரிக்கலாம். அப்படி இல்லையென்றாலும் அந்தக் குழு நம்முடைய மாநிலத்திற்கு வருகின்றபோது இதைப்பற்றி அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வரலாம்; எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் அவர்களிடம் இதுபற்றி எடுத்துக் கூறலாம். பொருளாதாரத்திலும் மற்ற வகையிலும் அவர்கள் முன்னேற வேண்டுமென்ற அடிப்படையில் பல சலுகைகளை இந்த அரசும் மத்திய அரசும் செய்து வருகின்றன. இது போதுமான அளவுக்கு



இருக்கிறது என்று சொல்ல முடியாவிட்டாலும் மேலும் மேலும் சலுகைகள் பெருகக் கூடிய அளவுக்கு இந்த அரசும் இந்தியப் பேரரசும் முயற்சிகளை எடுத்து வருகின்றன.

உணவு விடுதிகளில் அரிசனங்களுக்காகத் தனி இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிலைமை இருக்கிறது என்று திரு. ஏ. கே. சுப்பையா அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். அப்படி ஒதுக்கப் பட்டிருந்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து தண்டனை கொடுக்க இப்போதே சட்டம் இருக்கிறது. சில பல இடங்களில் தக்க நடவடிக்கை எடுக்காமல் இருக்குமானால், அதைக் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கை எடுத்துக் கொள்ள முடியும். திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் சொன்னது போல் எல்லாக் கட்சியினரும் அக்கறை கொண்டு மக்கள் மனப்பான்மையை மாற்ற முன்வர வேண்டும். அத்தகைய முயற்சிகளின் மூலமாகத்தான் சமுதாயத்தில் எதிர்காலத்தில் நல்லதொரு சூழ்நிலை வளர வாய்ப்பு ஏற்படும். இந்தச் சட்டமன்றத்திலே அந்த வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரவேண்டுமென்பது ஒரு துணைக் கருவியாக அமைந்திருக்கிறது. சட்டமன்ற, பாராளுமன்றங்களில் அவர்களுக்காகத் தனி இடங்கள் ஒதுக்குவது பற்றியுள்ள திருத்த மசோதாவுக்கு எல்லோரும் ஒருமனதாக ஆதரவு தெரிவித்ததற்காக நன்றி தெரிவித்து இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : "பாராளுமன்ற அவைகள் இரண்டிலும் நிறைவேற்றப்பட்டு 1969-ம் ஆண்டு அரசியல் அமைப்பு (23-வது திருத்த) மசோதாவினால் செய்யக் கருதப்பட்டுள்ளவையும், இந்திய அரசியல் அமைப்பின் 368-வது பிரிவின் வரம்பு நிபந்தனையின் நோக்கத்தின்கீழ் வருபவையுமான திருத்தங்களை இப்பேரவை இசைவுடன் உறுதிப்படுத்துகிறது".

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

## (6) ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்

திரு. ஆர். என். அரங்கநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, '1970-ம் ஆண்டு, சனவரித் திங்கள், 19-ம் நாளன்று இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்ற கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு,* தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்' என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. எஸ். முருகையன் : இந்தத் தீர்மானத்தை நான் வழி மொழிகிறேன்.

---

135–144-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

144–158-ம் பக்கங்களில் ஆளுனர் அவர்களின் பேரவையின் தமிழாக்கம் இரண்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

## (2) அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குத் திருத்தங்கள் கொடுத்தல் குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஓர் அறிவிப்பு. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குத் திருத்தங்கள் கொடுக்க விரும்புகின்றவர்கள் சட்டப் பேரவைச் செயலாளரிடம் 22—1—1970 பிற்பகல் 3 மணிக்குள் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுக்கப்பட்ட திருத்தங்கள் 24—1—1970 காலை பேரவையில் முன் மொழியப்படும்.

## (6) ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி

**திரு. ஆர். என். அரங்கநாதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரை, தமிழக அரசு கடந்த ஆண்டு சாதித்த சாதனைகள், தமிழக அரசின் கொள்கைகள் ஆகியவற்றை விளக்கிக் கூறும் வகையிலும், தெளியாத நெஞ்சங்கள் எல்லாம் தெளிவை ஏற்படுத்திக் கொள்ளும் அளவிலும், தமிழ்நாட்டு மக்கள் வரவேற்கக் கூடிய அளவிலும் அமைந்திருக்கிறது. தமிழ் நாட்டு மக்களுடைய இதயத்திலிருந்து நீங்காத அறிஞர் அண்ணா அவர்கள் மறைவுக்காக அனுதாபம் தெரிவித்து, அஞ்சலி செய்து ஆரம்பித்திருப்பது, எந்த அளவுக்கு அண்ணா அவர்கள் தமிழ் நாட்டின்பால் பற்றுக் கொண்டு பணி புரிந்து வந்தார்கள் என் பதைத் தமிழ்நாட்டு மக்களுக்கு உணர்த்தும் வகையில் அமைந்தி ருக்கிறது. மறைந்து விட்ட, ஜனாதிபதி ஜாகிர் ஹுசேன், இங்கே அமைச்சராகப் பணியாற்றிக் கொண்டிருந்த கோவிந்தசாமி ஆகி யோருக்கு அவர்கள் அனுதாபம் தெரிவித்திருப்பதோடு சேர்ந்து நாமும் அனுதாபம் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஆளுநர் அவர்களுடைய உரையில், தமிழ்நாட்டினுடைய தலைமை மாற்றம் அறிஞர் அண்ணா அவர்கள் மறைவுக்குப் பின்னர் அமைதியான முறையில் ஏற்பட்டிருப்பது குறித்துக் குறிப்பிட்டு அது தமிழ்நாட்டின் நல்ல ஜனநாயக மரபையும், ஜனநாயகப் பண்பாட்டையும் குறிக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். உண்மையிலேயே, பாரதத்தில் நிலவி வருகிற சூழ்நிலையைப் பார்க் கும்போது, மற்ற மாநிலங்களிலே நடக்கும் கொந்தளிப்புகளையும், அரசைக் கவிழ்ப்பதற்காக அரசியல் சூதாட்டங்கள் நடந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில் தமிழ்நாட்டில் எந்தவிதமான பிரிவோ, பிளவோ, பிணக்கோ இல்லாமல் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமை மாற்றப்பட்டிருக்கிறது. தலைமை மாறிய பிறகு அமைதியான ஒரு நிர்வாகம் தமிழ்நாட்டில் நடைபெற்று வருவதைப் பாரதம் பூராவும் பார்த்து பாராட்டை அளித்திருக் கிறது. தலைமை மாற்றத்திற்காக எந்தக் காரியக் கமிட்டியும் போலீஸ் பாதுகாப்போடு நடைபெற வேண்டிய அவசியம் ஏற்பட



வில்லை. எந்தக் கோஷ்டியும் ஒருவரையொருவர் தாக்கிக் கொள்ள வில்லை; ஒருவர் மீது ஒருவர் கணக்குக் காட்டவில்லை என்ற குற்றம் சாட்டவில்லை; 'இங்கேதான் உண்மையான சோஷலிசம்' என்றும் 'எங்கள் சோஷலிசம் சூப்பர் சோஷலிசம்' என்று ஒரு வருக்கொருவர் பேசிக் கொள்ளும் நிலைமை இல்லை. இங்கே நடந்த தலைமை மாற்றம் ஜனநாயகம் இருக்கும் இடத்தில் உள்ளவர்கள் எல்லாம் பாராட்டக் கூடிய அளவுக்கு அமைந்தது என்பதை எல்லோரும் உணரத்தான் வேண்டும்; ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். தலைமை மாற்றப்பட்ட நேரத்திலே, அறிஞர் அண்ணா அவர்கள் மறைவினால் திக்குத் தெரியாமல், திசை தெரியாமல் நாம் இருந்த நேரத்திலே, இயற்கை சதி செய்து விட்ட காரணத்தாலே, தமிழ்நாட்டில் தொடர்ந்து பருவமழை பொய்த்து விட்ட காரணத் தாலே வறட்சி எந்த அளவுக்குத் தமிழ்நாட்டில் இருந்தது என்பதை நாம் எல்லோரும் அறிவோம்.

அப்போது தலைமையேற்ற கலைஞர் கருணாநிதி அவர்கள் முதற் பணியாக வறட்சி நிவாரணப் பணியை ஏற்று நடத்த வேண்டு மென்று திட்டமிட்டு அதற்காக மத்திய அரசோடு போராடி நிவாரணப் பணிகளுக்கு கணிசமான அளவுக்கு நிதி பெற முயற் சித்தார்கள். 18 கோடி ரூபாய் அளவுக்கு வறட்சி நிவாரணப் பணிகளுக்காகச் செலவழித்து விட்டு கிட்டத்தட்ட 14¼ கோடி ரூபாய் அளவுக்கு மத்திய அரசிடமிருந்து பெற்றிருக்கிறார்கள். வறட்சிப் பணியைத் துவங்குவதற்கு முன்னால் நம்முடைய முதல மைச்சர் அவர்கள் ஒன்றைத் தெளிவாகக் குறிப்பிட்டார்கள். நாங்கள் உறவுக்காகக் கை கொடுப்போம், அதே நேரத்தில் உரிமைக் காகக் குரல் கொடுப்போம் என்று வலியுறுத்திக் காட்டினார்கள். தமிழ்நாட்டில் வறட்சி நிலைமையைப் பார்வையிட பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் தமிழ்நாட்டுக்கு வருகை தர வேண்டும். வறட்சி நிலைமைகளைப் பார்வையிட வேண்டும், நிரம்பி வழிகின்ற ஏரிகள் எல்லாம் வறண்டு கிடக்கின்ற பரிதாபக் காட்சியைப் பார்வையிட வேண்டும்; கால்நடைகளுக்குத் தீவனம் இல்லாத நிலைமையை அவர்கள் பார்க்க வேண்டும்; குடிநீர் இல்லாமல் மக்கள் அவதியுறு வதை அவர்கள் பார்க்க வேண்டுமென்ற முறையில் பிரதம மந்திரி யை அழைத்திருந்தார்கள். அவர்களை அழைக்கத்தான் வேண்டும், பிரதம மந்திரிக்கு இதையெல்லாம் காட்டத்தான் வேண்டும் என்றும். அதை அனுசரித்து பிரதம மந்திரி அவர்கள் மத்திய சர்க்காரில் இருந்து கணிசமான உதவித் தொகையை அளிக்கத் தான் வேண்டுமென்றும் அந்த நேரத்தில் எதிர்க்கட்சியாக இங்கே அமர்ந்திருந்த தமிழ் நாட்டு காங்கிரஸ் கட்சி நண்பர்கள் யாரும் ஒரு வார்த்தை சொல்லவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** எதிர்க்கட்சியிலே யாரும் சொல்ல வில்லை என்று கூறுகிறார்கள். எவ்வளவு தேவையானாலும் கொடுக் கத்தான் வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். நாங்கள் சொல்ல வில்லை என்று தற்போது தவறாகத் திரித்துக் கூறுவது சரியல்ல

காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள். பணம் தந்துதான் வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். அது குறிப்பைப் பார்த்தாலே தெரியும். இது எங்களுடைய உரிமையைப் பாதிப்பதாக இருக்கிறது; ஒன்று அவர்கள் இவ்வாறு சொன்னதைத் திருத்திக் கொள்ள வேண்டும்; அல்லது இதை உரிமைப் பிரச்சினையாக எடுத்துக் கொள்ளவேண்டும்.

**திரு. ஆர். என். அரங்கநாதன்:** அவர்கள் சொல்லாதது மட்டுமல்ல, அவர்கள் எந்த அளவிற்கு எதிர்த்தார்கள் என்பதை ஆதார பூர்வமாக . . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** நாங்கள் கொடுக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறோம் என்பதை நிரூபித்தால் அரசியலை விட்டே நான் விலகத் தயாராயிருக்கிறேன். அதை நிரூபிக்கவேண்டும்.

**சில குரல்கள்:** காமராஜ் அவர்கள் . .

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** திரு. காமராஜ் அவர்கள் சொல்லியிருக்கலாம். அதைப்பற்றிக் கவலையில்லை. நாங்கள் அதை, கொடுக்க வேண்டும் என்பதைப் பூர்ணமாக ஆதரித்திருக்கிறோம். இதுபற்றி சபாநாயகர் அவர்கள் தீர்ப்பு எங்களுக்கு உடனடியாக வேண்டும்.

**திரு. ஆர். என். அரங்கநாதன்:** மதிப்பிற்குரிய காமராஜ் அவர்கள் தலைமையில் இருக்கக்கூடிய சிண்டிகேட் காங்கிரசில்தான் இருக்கிறார் கருத்திருமன் அவர்கள் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். இப்போது அவர்கள் காமராஜ் சொல்லியிருக்கலாம், அதைப் பற்றிக் கவலையில்லை என்று சொல்கிறார்கள். காமராஜ் அவர்களையே சந்தேகப்படக் கூடிய விதத்தில் . . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** நாங்கள் அதுகுறித்து சட்டசபையில் சொல்லியிருக்கிறோம். நாங்கள் கொடுக்கக்கூடாது என்று எதிர்த்திருக்கிறோமா? திரு. காமராஜ் அவர்கள் கூட கொடுக்கக்கூடாது என்று சொல்லவில்லை. யோக்கியமாக செலவு செய்யுங்கள் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. ஆர். என். அரங்கநாதன்:** நான் சொல்வதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொஞ்சம் பொறுமையாகக் கேட்டால் அவர்கள் எங்கே, எப்படிச் சொன்னார்கள் என்பதை விளக்கமாகக் கூறுகிறேன். மதிப்பிற்குரிய காமராஜ் அவர்கள் சொல்வதற்கு முன்னாலேயே. . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** இங்குள்ள சட்டசபை காங்கிரஸ் கட்சி ஆதரிக்கவில்லை, எதிர்த்தார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை நிரூபிக்க முடியுமா? அதைப்பற்றி ஒரு





வார்த்தை கூடச் சொல்லவில்லை என்று சொல்கிறார்கள். அதை நிரூபிக்க முடியுமா? சபாநாயகர் அவர்களின் தீர்ப்பு உடனடியாகத் தேவை.

**திரு. ஆர். என். அரங்கநாதன்:** சட்டசபை காங்கிரஸ் கட்சி வேறு, வெளியே இருக்கிற தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி வேறு என்று சொன்னால் தமிழ் நாட்டைப் பொறுத்தமட்டில் மூன்று காங்கிரஸ் கட்சிகள் ஆகின்றன. இதை ஒப்புக்கொள்கிறீர்களா?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** வம்பு செய்கிறார்கள். இவர்களை கண்ணீர் துளிகள் என்று ஒருகாலத்தில் செல்லப்பட்டிருக்கிறது. அரசியலில் எல்லாவிதமான திருவிளையாடல்களும் எங்கும் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. அதை வைத்துக் கொண்டு தப்பித்துக்கொள்ள முடியாது. அப்படியானால் அவர்கள் ஏமாற்றம்தான் அடைவார்கள். தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியை ஏன் இழுக்கிறீர்கள்? அவர்களை ஆதரிக்கும் மதிப்பிற்குரிய இன்னொருவர்தான் இதைக்கொடுக்க வேண்டாம் என்று மனதில் உள்ளதைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. ஆர். என். அரங்கநாதன்:** எதிர்க்கட்சித் தலைவரின் திருவிளையாடல்கள் எந்த அளவிற்கு ஏமாற்றத்தை அளித்திருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** தயவு செய்து குறுக்கிடுவதற்கு மன்னித்துக் கொள்ளுங்கள். எவ்வளவு பணம் வேண்டுமோ அதைக் கொடுக்கவேண்டும் என்று நாங்கள் சொல்லியிருக்கிறோம். நாங்கள் அதற்கு ஆதரவு கொடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறோம். அது உண்டா இல்லையா? இப்போதே அது தெரிந்தாக வேண்டும்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** திரு. அரங்கநாதன் அவர்கள் சொல்வதும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்வதும் ஒன்றுதான். வறட்சி நிதி கொடுக்கவேண்டுமென்றுதான் காங்கிரஸ் கட்சி வாதாடியது. அதில் தவறு இல்லை. அவர்கள் சொன்னது, இந்த வறட்சி நிதியைக் கொடுக்கக் கூடாது என்று காமராஜ் அவர்கள் சொன்னதாகச் சொன்னார்கள். அதுவும் உண்மைதான். காமராஜ் அவர்களிடம் நான் இதுபற்றிப் பேசினேன். இதுமாதிரி நம் தமிழ்நாட்டிற்கு வருவதைக் கூட இப்படி தவறாகச் சொல்லியிருக்கிறீர்களே என்று சொன்னேன். அவர்கள் அந்தக் கருத்துபடத்தான் பேசினார்கள். அது பத்திரிகைகளிலும் வந்தது. அது பொதுமக்களிடம் ஒரு தவறான எண்ணத்தைப் பரப்பியிருக்கிறது. தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிக்கு வறட்சி நிதியில் அக்கறை இல்லை என்ற எண்ணத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அதுபற்றி உங்கள் தலைவரிடம் வாதம் செய்தேன். அவர்கள் சொன்னார்கள். அந்த அர்த்தத்தில் பேசவில்லை, தமிழ்நாட்டிற்கு வருவதுபற்றிச் சொல்லவில்லை. பாரபட்சமாக நடந்துகொண்டார்கள், அனாவசியமான

சாத்தானை ஓட்டினார்கள் என்ற கருத்தில் சொல்லேன் என்று சொன்னார்கள். தமிழ்நாட்டிற்கு மட்டும் ஏன் கொடுக்கிறார்கள், வேறு மாநிலங்களுக்குத்தான் கொடுக்கப்படுகிறது என்றுதான் அர்த்தம்பட அந்தப் பேச்சு வந்திருக்கிறது பத்திரிகைகளில். அதைத்தான் அவர்கள் சொன்னார்கள். இதை ஆதரிக்கவில்லை என்று சொன்னதாகாது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** இங்குள்ள காங்கிரஸ் கட்சி அதை ஆதரிக்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். பத்திரிகைகளில் வருவதை வைத்து இங்கு பேசலாமா? சாப்பிடும்போது சொன்னார்கள், கலியாணத்தின்போது சொன்னார்கள், காது குத்தும் போது சொன்னார்கள் என்று அங்கு பேசுவதைப்பற்றி இந்த சட்ட சபையில் பேசலாமா? அப்படி ஏதோ ஒரு இடத்தில்தான் சந்தித்திருக்கவேண்டும். வேறு இடங்களில் சந்தித்திருக்க முடியாது. கல்யாணத்தின்போது சாப்பிடும்போது, காது குத்தும் போது சொல்லியிருக்கலாம். சட்டசபை காங்கிரஸ் கட்சி எதிர்த்த தாகச் சொல்லியிருக்கிறார்கள். அங்கு காமராஜ் அவர்கள் சொன்னதைப் பற்றி இங்கு கொண்டுவரலாமா? இதுபற்றித் தங்கள் தீர்ப்பு வேண்டும்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** திரு. அரங்கநாதன் அவர்கள் பேசும்போது காங்கிரஸ் கட்சியில் எதிர்ப்பு தெரிவித்தார்கள் என்று சொன்னாரே தவிர, சட்டசபை காங்கிரஸ் கட்சி என்று சொல்லவில்லை. காங்கிரஸ் கட்சி எதிர்ப்பு தெரிவித்தார்கள் என்று பொதுவாகச் சொன்னார்கள். அதுபற்றி பத்திரிகைகளில் வந்திருக்கின்றன. அது பொய் என்று மறுப்பு தெரிவித்து விட்டால், அது உண்மைக்குப் புறம்பானது என்று சொல்லி விட்டால் சரி. இதைப் பெரிதுபடுத்திக் கொண்டு போகவேண்டாம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** இவர்கள்தான் அரசியல் தெரிந்தவர்கள் மாதிரி நடித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் சொல்வது கொக்கின் தலையில் வெண்ணெய் வைத்துப் பிடிப்பதுமாதிரி இருக்கிறது. நாங்களும் பொது மக்களின் பிரதிநிதிகள்தான். நாங்கள் நிதி கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். எவ்வளவு கோடி வேண்டுமானாலும் கொடுக்கட்டும் என்று மனப் பூர்வமாகச் சொல்லியிருக்கிறேன். அதை சட்டசபையில் சொல்லி தீர்மானமும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இப்போது உணவு அமைச்சர் அவர்கள் ஒரு புது விளக்கத்தைக் கொடுக்கிறார்கள். உணவு அமைச்சர் அவர்கள் போடும் உத்தரவுகளுக்கு விளக்கம் கொடுக்கிற மாதிரி, இப்போது பிரச்னை என்னவென்றால், நாங்கள் எதிர்த்தோமா? இந்திரா காந்தி அவர்கள் கொடுக்கக்கூடாது என்று நாங்கள் சொல்லியிருக்கிறோமா? அப்பன் குதிருக்குள் இல்லை என்று சொல்வதுமாதிரி இருக்கிறது. தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதா அல்லது சம்பிரதாயத்திற்காகக் கொண்டுவரப்பட்டதா என்று சொல்லுங்கள். . . .





**திரு. ஆர். என். அரங்கநாதன்:** சமீபத்தில் மதிப்பிற்குரிய காமராஜ் அவர்கள். . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அவையில் இல்லாதவர்களின் பெயர்களைச் சொல்லக்கூடாது.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** ஒன்று அதைத் திரும்பப் பெற வேண்டும். அல்லது மன்னிப்பு கோரவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காமராஜ் அவர்களின் பெயரை ஏன் எடுக்கிறார்கள் என்றால் அவர் ஒரு கட்சித் தலைவர். காமராஜ் அவர்களின் பெயரை எடுக்கும்போது அவர் பெயரை எடுக்கக் கூடாது என்று சொல்கிறார்கள். அவர்கள் என்ன சொல்லப் போகிறார்கள் என்று பார்க்க வேண்டும் (ஆரவாரம்). ஒரு கட்சியின் கொள்கை பற்றிப் பேசக்கூடாது என்பது சட்டசபை முறை அல்ல. ஆகவே அதையொட்டி பேசக்கூடிய நிலைமை இருக்கிறது.

**திரு. ஆர். என். அரங்கநாதன்:** அப்படிப் பேசவில்லை என்று சொல்லி விட்டால் அதை விட்டுவிடுகிறேன். சமீபத்தில், யு.பி.க்கு மட்டும் 2 கோடி ரூபாய் கொடுத்துவிட்டு, தமிழ்நாட்டிற்கு மட்டும் 14 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்களே, இவ்வளவு ஏன் கொடுக்கப்பட்டது? இவ்வளவு ஏன் கொடுத்தார்கள் என்ற கேள்வியைப் பொதுக்கூட்டத்தில் அவர் எழுப்பி வரட்சி நிவாரணத்திற்காகத் தமிழ் நாட்டு மக்களுக்கு இவ்வளவு தொகை கொடுப்பது தவறு என்ற அடிப்படையில் பேசியிருக்கிறார்கள். நான் இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், 18 கோடி ரூபாய் அளவிற்கு நிவாரணப் பணிகள் செய்திருக்கிறோம் என்று சொன்னால் புள்ளிவிவரத்தோடு சொல்ல முடியும். தமிழ் நாட்டிற்கு பூராவும் கிட்டத்தட்ட 7,500 மைல் அளவிற்கு இணைப்புச் சாலைகள் போடப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டில் வறட்சி நிவாரண வேலைகள் நடைபெற்று எப்படி நடந்திருக்கின்றன என்று பார்த்தால் 10,000 குடிதண்ணீர்க் கிணறுகள் தோண்டப்பட்டிருக்கின்றன. எந்தக் காலனியை, எந்தக் கிராமப் பஞ்சாயத்தைப் போய்ப் பார்த்தாலும் ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் இரண்டு மூன்று குடிநீர்க் கிணறுகள் என்ற அளவில் குறுகிய காலத்தில் செய்து முடிக்கப்பட்டிருக்கின்றன. 9,500 மைனர் இரிகேஷன் டாங்க்ஸ் செப்பனிடப்பட்டிருக்கின்றன. பி.டப்யுடி டாங்குகள் கரைகள் உயர்த்தப்பட்டிருக்கின்றன. அவை தூர் வாரப்பட்டிருக்கின்றன. ஏரிகளின் கொள் அளவு அதிகபடுத்தப்பட்டிருக்கின்றன. இந்த அளவிற்கு வறட்சி நிவாரணப் பணிகளைத் தமிழக அரசு சாதித்திருக்கிறது என்றால் அதனால் இரண்டு பயன்கள் விளைந்திருக்கின்றன. வறட்சி காலத்தில் கிராமங்களில் விவசாயக் கூலிகள் மிகவும் பாதிக்கப்பட்டு அன்றாட

வாழ்க்கைப் பிரச்னையை சமாளிக்கக் கூட முடியாதிருந்த நேரத்தில் வறட்சி நிவாரணப் பணியாக அவர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டு அப்பிரச்னை தீர்க்கப்பட்டது. அதேநேரத்தில் நிரந்தர பலன் தரும் விதத்தில் ஏரிகள், குளங்கள், குடிதண்ணீர்க் கிணறுகள் போன்றவை தோண்டப்பட்டிருக்கின்றன.

சென்னை நகரைப் பொறுத்தவரையிலே, குறைந்த காலத்தில், 10,700 குழாய்க் கிணறுகளைப் பொதுப்பணித்துறையினர் போட்டு கொடுத்து இருக்கிறார்கள். இரண்டு, மூன்று நாட்கள் வெளியூர் போய்ச் சென்று வந்த சென்னைவாசிகள், ஊரிலிருந்து திரும்பி வந்தவுடன், தெருவெல்லாம் குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டிருப்பதைப் பார்த்து, இதென்ன மாயமா, மந்திரமா என்று சொல்லும் அளவுக்குப் பிரம்மாண்டமான வேலைகளைச் செய்து கொடுத்திருக்கிறார்கள். அவர்கள், 10,700 குழாய்க் கிணறுகளை அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால், அது எப்படிப்பட்ட நேரம், அந்தக் காலத்தில் பயங்கரமான தண்ணீர்ப் பஞ்சம் நிலவி வந்தது. அந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைத்த பெருமை தமிழக அரசு ஒன்றுக்குத்தான் இருக்க முடியும். இப்பொழுது அந்தக் குழாய்க் கிணறுகள் வீணாகிவிட்டன, அவையெல்லாம் உபயோகமற்றுப் போய்விட்டன என்று யாராவது சொன்னால், அந்தக் குழாய்க் கிணறுகளை அப்புறப்படுத்தி, அவைகளைக் கிராமப்புறங்களுக்கு எடுத்துச் செல்ல தமிழக அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது, திட்டம் தீட்டிக் கொண்டிருக்கிறது.

அதேபோல், இந்த வறட்சி நிவாரணப் பணிகளைப் பற்றி நிறைய ஊழல்கள் நடந்திருக்கின்றன, வறட்சி நிவாரண வேலைகள் எல்லாம் அவரவர்கள் கட்சிக்காரர்களே ஏற்றுக்கொண்டு செய்தார்கள் என்று சொல்லும் குற்றச் சாட்டுக்கள் ஆதாரம் இல்லாமல், கொஞ்சம் கூட மனச்சுத்தி இல்லாமல் எழுப்பப்பட்டன. ஆனால், இந்த வறட்சி நிவாரணப் பணிகள் எப்படி எப்படி, யார் யாருக்கு விடப்பட்டன என்பது பற்றி இந்த மன்றம் கொஞ்சம் ஆலோசித்தால், எந்த இடத்திலும், எந்தத் தவறும் நடைபெறவில்லை என்பதை நாம் இங்கே நிச்சயமாக உறுதிப் படுத்திக் கொள்ள முடியும். பாதித் தொகை ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் செலவிடப் பட்டன. மீதிப் பாதித்தொகை பொதுப்பணித்துறை மூலம் செலவிடப்பட்டன. ஊராட்சி ஒன்றியங்களிலே, 375 ஊராட்சி ஒன்றியங்களிலே 300-க்கும் மேற்பட்ட ஒன்றியத் தலைவர்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள். எந்த ஒரு திருத்தமும் ஆணையாளர் எடுத்தால் அது பெருந்தலைவரின் ஒப்புதலுக்குப் போய்த்தான் தீர வேண்டும். எனவே, அப்படி ஊழல் நடைபெற்றது என்று சொன்னால், ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பெருந்தலைவர்கள், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் தான் அதற்குக் காரணமாக வேண்டும். பொதுப்பணித்துறையைப் பொறுத்த வரையிலே, பொதுப்பணித்துறையில், ஏரிகள் மராமத்து



செய்ய விடப்பட்ட ஏரிகள், அந்தந்த ஏரிகளுக்கு ஆயக்கட்டுதார் யார் யார், யாராவது முன் வந்து இந்த மராமத்து வேலையைச் செய்யத் தயாரா என்று கேட்டு, அந்த அடிப்படையில் வறட்சி நிவாரண வேலைகள் விடப்பட்டன. எனவே, எந்த இடத்திலும், எந்தத் தவறும் நடக்கவில்லை. மிகவும் பாராட்டும் வகையில், தமிழகத்திலுள்ள குக்கிராமங்களிலுள்ளவர்கள் பாராட்டும் வகையில், வறட்சி நிவாரண வேலைகள் நடைபெற்றிருக்கின்றன என்பதை நாம் தெள்ளத் தெளிவாக எடுத்துக் கொள்ளலாம்.

தமிழ்நாடு, உணவு உற்பத்தித் துறையிலே மிக வேகமாக முன்னேறிக்கொண்டு வருகிறது என்பது நம்முடைய ஆளுநர் அவர்களின் உரையில் எடுத்துக் காட்டப்படுகிறது. கிட்டத்தட்ட 10 லட்சம் டன் உணவு உற்பத்தி, கடந்த ஆண்டிலே அதிகமாகி இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டும் நேரத்தில், இப்படி உணவு உற்பத்தியை இந்த அளவுக்கு அதிகப்படுத்த, தமிழ்நாட்டு அரசு என்னென்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்பது நாம் இந்த நேரத்தில் எடுத்து ஆராய வேண்டிய விஷயமாகும். வறட்சி நிவாரண வேலைகளுக்கு அப்பாற்பட்டு, உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்பதற்காக, அதிக விளைச்சல் கொடுக்கக்கூடிய ஐ.ஆர். 8 என்ற நெல் ரகம் இன்று எங்கு பார்த்தாலும் விளம்பரப்படுத்தப்பட்டு ஒரு ஏக்கருக்கு 50 மூட்டை, 60 மூட்டை என்ற அளவுக்கு விளைச்சல் தருகிறது. விவசாயிகள், இதற்காக நிறைய உரம் இட வேண்டியிருக்கிறது, உற்பத்திச் செலவு அதிகமாகச் செய்ய வேண்டியிருக்கிறது என்று அச்சப்பட வேண்டியதில்லை. ஐ.எம்.எஸ். லோன் என்று, ஏக்கர் ஒன்றுக்கு 25 ரூபாய் கொடுக்கவும், கூட்டுறவு சொசைட்டி மூலம் 450 ரூபாய் கடனும் உடனடியாக வழங்கப்படும். அதுவும், கோரும் கடன்கள், உரங்கள் மூலமாகவும், ரொக்கம் மூலமாகவும் வழங்கப்படும் என்று திட்டவட்டமாக அறிவித்து, பெரும்பாலும், லட்சக்கணக்கான ஏக்கர்களில் ஐ.ஆர். 8 நெல் ரகத்தைக் கொண்டு விளையச் செய்த சூழ்நிலையைப் பார்க்கிறோம். ஐ.ஆர். 8 நெல் உற்பத்தியைப் பெருக்க, தனி இலாக்கா ஏற்படுத்தி, அதற்காகப் பிரச்சாரங்கள் செய்வதும், அதற்காகப் போஸ்டர்கள் ஒட்டுவதுமான காரியங்களில் கிராம சேவக்குகளாக இருப்பவர்கள் தீவிரமாக ஈடுபட்டிருப்பதைப் பார்க்கிறோம். அதன் மூலம், உணவு உற்பத்திப் பற்றாக்குறை என்பது நீங்கி, சுயதேவைப் பூர்த்தி என்ற நிலையை அடைந்து, அதற்கு மேலும், நாம் மற்ற மாநிலங்களுக்குக் கொடுக்கும் அளவுக்கு உபரி உற்பத்தியைத் தமிழக அரசு உண்டாக்கும் என்ற எண்ணம் நம் மனத்தில் இன்று ஏற்பட்டிருக்கிறது.

மேலும், உணவு உற்பத்தியைப் பெருக்க, இதுவரையிலேயும், தமிழ்நாட்டிலுள்ள அனாதீன புறம்போக்கு நிலங்கள், மற்ற புறம்போக்கு நிலங்கள், நிலமில்லாத ஏழைகளுக்கு வழங்கப்பட வேண்டுமென்ற அடிப்படையை மறந்துவிட்டிருந்த நிலையை மாற்றி, கடந்த ஒரு ஆண்டிலே நிலமில்லாத ஏழைகளுக்கு 1 லட்சம்

[திரு. ஆர். என். அரங்கநாதன்] [1970 ஜனவரி 21

ஏக்கர் வரை பட்டா வழங்கப்பட்டது. அது மட்டுமல்லாமல், அந்த நிலத்தைப் பண்படுத்தவும், சீர்படுத்தவும், பட்டா வழங்கப்பட்ட புறம்போக்கு நிலங்களில் கிணறுகள் தோண்டவும், எல்லாவிதமான உதவிகளையும் தமிழக சர்க்கார் செய்து கொடுத்திருக்கிறது. முன்பெல்லாம், பட்டா கொடுக்கப்பட்ட நிலங்களுக்கு, சாதாரணமாக நில அடமான பாங்கிலோ அல்லது வேறு எங்குமோ கடன் கேட்கப்பட்டால், அந்த நிலங்களை மதிப்பீடு செய்ய முடியாது, கடன் பத்திரங்களையெல்லாம் வாபஸ் பெறப்பட்ட நிலைமைகள் முன்பிருந்தது. ஆனால், இப்பொழுது திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்பட்ட பிறகு, நிலமில்லாத ஏழைகளுக்கு நிலத்தை மட்டும் வழங்கிவிட்டு, நிலத்தைப் பண்படுத்த வசதி செய்யாமல் விட்டால் அவர்கள் மிகவும் துன்பப்படுவார்கள் என்று அறிந்து, அப்போப்பட்ட நிலங்களை மதிப்பீடு செய்யப்படக்கூடிய நிலையை, நில அடைமான பாங்குகள் கடன் வழங்கவும், ஒரு ஏக்கருக்கு 750 ரூபாய் முதல் 1,000 ரூபாய் வரை கடன் வழங்கவும் நாக்கிதுகள் பிறப்பித்திருக்கிறார்கள்.

மேலும், ஏழை விவசாயிகள், அவர்கள் தனிப்பட்ட சொந்த முறையிலே கிணறுகள் தோண்ட முடியாது என்பதால், 'கம்யூனிட்டி வெல்ஸ்', பொதுக் கிணறுகள் ஊராட்சி ஒன்றியங்களின் சார்பாக இன்று நிறைய இடங்களில் வெட்டப்பட்டிருக்கின்றன. விவசாயிகளுக்கு, குறிப்பாக ஹரிஜன காலனிகளில் இருப்பவர்களுக்கு கம்யூனிட்டி கிணறுகள் பெரிதும் பயன்பட்டிருக்கின்றன.

முன்பெல்லாம், விவசாயிகள், உரம் கிடைக்கவில்லை, கிடைக்கும் உரங்களும் தரமான உரமாகக் கிடைக்கவில்லை என்று சொல்லி வந்தார்கள். ஆனால், இப்பொழுது உரம் தாராளமாகக் கிடைக்கிறது, தரமான உரம் கிடைக்கிறது. எவ்வளவு வேண்டுமானாலும் வாங்கிக்கொள்ளலாம் என்ற நிலைக்கு அரசாங்கம் மாற்றி அமைத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஒரு புள்ளி விவரத்தைப் பார்த்தால், உரம் உபயோகிப்பதை எப்படி தமிழக அரசு எந்த அளவுக்கு ஏற்படுத்தியிருக்கிறது, எந்த அளவுக்கு இந்த அரசு அதில் வெற்றி பெற்றிருக்கிறது என்பதை நீங்கள் அறிந்துகொள்ள முடியும்.

1965-66-இல் நைட்டிரேட் உரம் 3,000 டன்கள் தமிழகத்திலே உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. 1968-69-லே, 19,200 டன் வரையிலே, கடந்த ஆண்டிலே நைட்டிரேட் உரம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. 1965-66-இல் பாஸ்பேட் உரம் 8,000 டன் உபயோகப்படுத்தப்பட்டது. ஆனால் 1968-69-லே 51,400 டன்கள் உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன. 1965-66-லே பொட்டாசியம் என்ற உரம் 400 டன்கள் உபயோகப்படுத்தப்பட்டது. ஆனால் 1968-69-லே 43,000 டன்கள் பொட்டாசியம் உபயோகப்படுத்தியிருக்கிறார்கள். இதன்மூலம் எந்த அளவுக்கு நவீன உரங்களை விவசாயிகள் பயன்படுத்த வேண்டும் என்பதை தமிழ் நாட்டிலுள்ள விவசாயிகளுக்கு அரசினர் உணர்த்தியிருக்கிறார்கள் என்பதை உணர முடியும்.



1970 ஜனவரி 21] [திரு. ஆர். என். அரங்கநாதன்] —

உரம் தரமானதாக இருக்க வேண்டுமென்பதற்காக, ஆராய்ச்சி நிலையங்களை ஏற்படுத்தி, அவர்கள் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டி, அதன் மூலம் தரமான உரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. தரமான உரம் என்று எப்படியெல்லாம் பரிசோதிக்கப்படுகிறது என்பதைப் பார்த்து, மத்திய அரசாங்கம் தமிழக அரசைப் பாராட்டியிருக்கிறது. இப்படிப்பட்ட தரமான உரங்களை மற்ற மாநிலங்களிலும் பின்பற்ற வேண்டுமென்று மத்திய சர்க்கார் ஒப்புக்கொண்டிருக்கிறது. —

மேலும், உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக, கிருஷ்ணகிரி அணைத் திட்டப் பிரதேசத்தில் ஒரேயொரு ஆண்டிலே 5,000 ஏக்கர் நிலம் பயிர் செய்ய வசதி செய்யப்போகிறது. காவிரி ஆற்றின் கழிமுக பகுதியிலே, தமிழக அரசு திட்டத்தைத் தயாரித்தவுடன், உலக பாங்கின் தலைவர் சர் பின்னெல் என்பவர் இங்கே வந்து அந்தத் திட்டத்தைப் பற்றி, பொருளாதார, டெக்னிக்கல் மேட்டர்ஸ் பற்றி மொத்த விவரங்களைக் கண்டறிந்து மிகவும் பாராட்டியிருக்கிறார்கள். ஆகவே, உணவு உற்பத்தி மிக வேகமாக முன்னேறி வருகிறது. நம்முடைய இலக்கு எந்த அளவுக்கு இருக்க வேண்டுமென்பதைவிட, உபரி மாநிலமாக மாற்றக்கூடிய அளவுக்குத் திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் இருக்கிறது.

இதை அனுசரித்துத் தான் மற்ற மாநிலங்களும், மத்திய சர்க்காரும் பெருத்த அதிர்ச்சியுற்று, அவர்களெல்லாம் பார்த்து "இதை எப்படிச் செய்ய முடிந்தது தமிழ் நாடு சர்க்காரால்?" என்று சொல்கிற அளவுக்கு ஒரு நல்ல முடிவை, சூழ்நிலைக்கேற்ற ஒரு முடிவை எடுத்து திருப்திகரமான உணவு நிலைமையைப் பொறுத்து, இந்த அரசாங்கம் உணவுக் கட்டுப்பாட்டை நீக்கியிருக்கிறது. உணவுக் கட்டுப்பாடு நீக்கப்பட்டிருப்பதைக் கண்டவுடனேயே சுதந்திராக் கட்சியினர் பரவசப்பட்டுக் கொண்டிருக்கலாம். கட்டுப்பாடு இருக்கவேண்டும் என்கிற தீவிரமான கொள்கையை கம்யூனிஸ்டு நண்பர்கள் வைத்திருந்தாலும், கட்டுப்பாடு அறவே கூடாது என்று சுதந்திராக் கட்சி நண்பர்கள் சொல்லிக்கொண்டிருந்தாலும், திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரைக்கும், இன்றைய சூழ்நிலையிலே உணவு உற்பத்தி திருப்திகரமான நிலைமையிலே இருக்கிற காரணத்தினால், அரசாங்கத்தின் கையில் போதுமான அளவுக்கு பஃப்பர் ஸ்டாக் வைத்திருப்பதன் காரணத்தினால், இனிமேல் வியாபாரிகள் உணவு தானியத்தைப் பதுக்கக்கூடாது, அப்படி பதுக்கினால் கடுமையான நடவடிக்கை எடுப்போம், பதுக்கப்பட்ட உணவு தானியங்களைக் கொண்டு வருபவர்கள் பேரிலும் கடுமையான நடவடிக்கை எடுப்போம் என்று எச்சரிக்கை விடுத்துவிட்டு, இது சித்தாந்தம் அல்ல, அரசியல் கொள்கை ரீதியாக நாங்கள் இதைச் செய்யவில்லை. அப்படி வியாபாரிகள் அரசாங்கத்தை ஏமாற்றினால், அப்படி வியாபாரிகள் தமிழ் நாட்டு மக்களை துரோகம் செய்வார்களானால்,

அதே போன்று திடீரென்று அரசினர் கலைக்கல்லூரியில் பொருளாதாரப் பட்டப் படிப்பு படித்தவர்களுக்கு வேலைவாய்ப்புக்கு உத்தரவாதம் கொடுக்கப்படவேண்டும். வேலை கிடைக்கும் வரைக்கும் அவர்களுக்கு உபகாரச் சம்பளம் அளிக்கப்படவேண்டும் என்று மாணவர்கள் கோரினார்கள். இந்தக் கோரிக்கையை ஒப்புக் கொண்டால் நாம் எங்கே போய் நிற்போம்? பொருளாதாரப் பட்டப்படிப்பு படித்தவர்களுக்கு மட்டும் வேலைக்கு உத்திரவாதம் கொடுத்தால் மற்ற பட்டப் படிப்பு படித்தவர்கள் எல்லோரும் வெளியில் இருக்கிறார்களா? இந்தியா பூராவும் கிட்டத்தட்ட 75,000 என்ஜினியரிங் பொறியாளர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள் எந்த அளவுக்கு அவர்களுக்கு உடனடியாக வேலை வாய்ப்புகள் கொடுக்க முடியும் என்பதை ஆராய ஒரு இன்வெஸ்டிகேஷன் பிராஜக்ட் ஒன்றை ஆரம்பித்து, பி.டபிள்யூ.டி.யில் 450 என்ஜினியர்களுக்கும், நம்முடைய மின்சார வாரியத்தில் 480 என்ஜினியர்களுக்கும் உடனடியாக வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை பத்திரிகையில் பார்த்திருக்கலாம். அவர்களெல்லாம் பணியில் சேர்ந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அப்படியிருக்கும் பொழுது சில குறிப்பிட்ட பட்டப்படிப்பு படித்தவர்களுக்கு மட்டும் உபகாரச் சம்பளம் கொடுப்பது என்று ஆரம்பித்தால், அது எங்குபோய் நிற்கும்?

இந்தநேரத்தில் இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். விருதுநகரில் தேசிய மாணவர் மகாநாடு என்று ஒரு மகாநாட்டைக் கூட்டி, அதற்கு மதிப்பிற்குரிய காமராஜ் அவர்கள் தலைமை தாங்கி, அந்த மாணவர்கள் மகாநாட்டில் போடப்பட்ட முதல் தீர்மானம் என்னவென்றால், நிஜலிங்கப்பா தலைமையில் இயங்கும் காங்கிரஸை ஆதரிப்போம், எங்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்கவேண்டும் என்பது தான். அந்த நேரத்திலே மதிப்பிற்குரிய காமராஜ் அவர்கள் பேசியிருக்கிற பேச்சு எப்படியிருக்கிறது என்றால், அவர்கள் பெரும் தலைவர் என்ற ஸ்தானத்தில் இருந்துகொண்டு அவர் என்ன சொல்லக்கூடாதோ, அதையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். 'படித்துவிட்டு வீட்டிலே போய் உட்காருங்கள்'' என்று கூறியிருக்கிறார்கள். 'இந்த நிலைமை 2½ ஆண்டுகளாகத் தான் இருக்கிறது' என்று சொல்லியிருக்கிறார்கள். பத்து நாட்களுக்கு முன்பு மதுரையிலே அவரே பேசியிருக்கிறார். 'இந்த நாட்டிலே நிலவுகின்ற வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு நானும் என்னோடு இருந்த காங்கிரஸ் தலைவர்களும் பொறுப்பாளிகள்' என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அப்படி அங்கே அவர்கள் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துவிட்டு, அங்கிருந்து 80 மைல்களுக்கு அப்பால் இருக்கிற விருதுநகரில் வந்து 2½ ஆண்டு காலமாகத்தான் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் அது எப்படி நியாயமாகும்? இது எப்படி நாணயமான அரசியலாகும்? ஆகவேதான் இப்படி அவர் பேசியிருக்கிறார் என்பதை இந்த மன்றத்தின் முன்னால் வைக்க ஆசைப்படுகிறேன்.





மேலும் இந்த வேலையில்லா திண்டாட்டத்தைப்பற்றி மட்டும் ஒரு சில விவரங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். 1966-67-ல் 0.9 சத விகிதம் வேலைவாய்ப்புக்கள் உயர்ந்திருந்தன. 1968-69-ல் 1.9 சத விகிதத்திற்கு வேலை வாய்ப்புக்கள் உயர்த்தப்பட்டிருக்கிறது அதே போலத் தான் தனி நபர்கள் நிறுவனங்களில் 1.3 சத விகிதத்திற்கு வேலைவாய்ப்புகள் இருந்தது. 1968-69-ல் 2.3 சதவிகிதம் வேலை வாய்ப்புகள் உயர்ந்திருக்கிறது. அந்த அளவுக்கு வேலை வாய்ப்புகளை உண்டாக்கித் தர முடிந்திருக்கிறது. அந்த அளவுக்கு வேலை வாய்ப்புகளை தமிழ் நாடு சர்க்கார் உண்டாக்கிக் கொண்டிருக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டத்திற்குக் காரணம், போடப்பட்ட மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் என்பதை நாம் சொல்லாமலேயே, நாம் சொல்வதற்கு முன்னாலேயே இன்றையதினம் சிண்டிகேட் காங்கிரஸ் தலைவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். எந்த அளவுக்கு எங்களை விட அதிகமாக இந்திரா சர்க்கார் வேலையில்லாத் திண்டாட்டத்திற்குக் காரணம், பொருளாதார வீழ்ச்சிக்கு அந்த அளவுக்கு இந்திரா சர்க்கார் காரணம் என்பதை எங்களுடைய வேலையை, அவர்கள் எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நான் அதிகம் பேசவேண்டிய அவசியம் இல்லை. இதையெல்லாம் பயன்படுத்திக் கொண்டு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைக் கவிழ்க்க முடியும் என்று யாராவது நினைத்தால் அது 1967-க்கு முன்னால், திராவிட முன்னேற்றக் கழகம் அரசாட்சி செய்ய முடியுமா என்று நினைத்தவர்களுடைய கனவைபோலவே இதுவும் கனவாக முடியும் என்பதைக் கூறி, கவர்னர் உரையைப் பாராட்டி, அதை வரவேற்று, அமர்கிறேன், வணக்கம்.

* திரு. டி. மார்டின்: பேரவைத் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமானின் உரைமீது, அதற்கு நன்றி தெரிவிக்கும் முகத்தான் எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. அரங்கநாதன் அவர்கள், ஏதோ நாடெல்லாம் செழித்து விட்டது போலவும், எந்த உலகத்தில் இருக்கிறோம் என்று எல்லோரும் சந்தேகிக்கும் அளவில் நிலைமைகள் இருப்பதை எடுத்துக் காட்டுவதாக கவர்னர் உரை அமைந்திருக்கிறது என்று அவர்கள் பாராட்டிப் பேசினார்கள். ஆனால், என்னைப் பொறுத்தவரையில், என்னுடைய கட்சியைப் பொறுத்தவரையில், இந்தக் கவர்னர் உரை ஒரு காகிதப் பூ போன்று தான் காட்சியளிக்கிறது என்பதைத்தான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். காகிதப் பூ மலருவது இல்லை மணம் பொருந்தியதாக இருப்பதில்லை. அப்படிப் பட்ட ஒரு மலரைத் தான் வைத்துக் கொண்டு, ஆகா, என்ன மணம், எப்படி மலருகிறது, மணம் வீசுகின்றது என்று சொல்பவர்கள் சொன்னாலும், மற்றவர்கள் அதையெல்லாம் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பதை உணரவேண்டும். இதை ஆளும் கட்சி உறுப்பினர்களும் அறிந்திருப்பார்கள் என்று உணர்கிறேன். கவர்னர் அவர்களுடைய உரையில் புதிதான திட்டங்கள் எதுவுமோ, திராவிட

மறுபடியும் இந்தக் கட்டுப்பாட்டைக் கொண்டுவருவதற்கு நாங்கள் போலி கௌரவத்தைப் பார்க்கமாட்டோம் என்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பேசியிருப்பதை நாம் அறிவோம்.

கட்டுப்பாடு இருக்கவேண்டுமா, இருக்கவேண்டாமா என்பதை கொள்கை ரீதியிலே அல்லது சித்தாந்த ரீதியிலே இப்பொழுது தமிழ் நாடு சர்க்கார் கடைப்பிடித்திருக்கிறது என்று யாரும் எடுத்துக்கொள்ளத் தேவையில்லை. இன்றைய தினம் அதற்கு வேண்டிய சாதகமான சூழ்நிலை உருவாகி இருக்கின்ற காரணத்தினால்தான் கட்டுப்பாட்டை நீக்கியிருக்கிறார்கள். அதை வியாபாரிகளும் வாங்கி உண்பவர்களும் வரவேற்றிருக்கிறார்கள். செக் போஸ்டுகளைப் பற்றி இதற்கு முன்னால் எங்கு பார்த்தாலும் குற்றம் குறைகளைச் சொல்லிக்கொண்டிருந்தார்கள். இப்பொழுது செக் போஸ்டுகள் நீக்கப்பட்டுவிட்டன. இதற்கு விவசாயிகள் பெரும் வரவேற்பு காட்டியிருக்கிறார்கள். பதுக்கல் வேட்டைக்காரர்களுக்கும் இது ஒரு எச்சரிக்கையாக அமைந்திருக்கிறது. அவர்கள் இந்த முறை எப்படி நடந்துகொள்கிறார்கள் என்பதைப் பார்த்து, அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து, பதுக்கல் வேட்டையை அறவே ஒழித்துவிடலாம் என்ற நிலைமை இருக்கிறது. மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும் கட்டுப்பாட்டை எந்த அளவுக்கு நீக்கவேண்டும். எந்த அளவுக்கு நிரந்தரமாக்கவேண்டும் என்று உணவு தானிய சூழ்நிலையை அனுசரித்து, முடிவு எடுப்பார்கள்.

அதே நேரத்தில் இந்தத் துறையிலே இருக்கிற ஊழியர்கள் பாதிக்கப்படுவார்கள், அவர்கள் வேலையை விட்டு நீக்கப்படுவார்கள் என்ற ஒரு பீதியை சில நண்பர்கள் கிளப்பிவிட்டார்கள். அதற்கு மதிப்பிற்குரிய உணவு அமைச்சர் அவர்கள் உத்தரவாதம் அளித்திருக்கிறார்கள். இந்தத் துறையில் பணியாற்றிக்கொண்டிருக்கிற ஊழியர்கள் நீக்கப்படமாட்டார்கள். வேலை நீக்கம் இருக்காது என்பதை அவர்கள் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்.

அதே போலத் தான் தொழில் அபிவிருத்தி இல்லை, தொழில் அமைதி இல்லை, தொழில் முதலீடு செய்வதற்கு அஞ்சுகிறார்கள், தொழிலாளர்கள் தகராறு நீடித்துக்கொண்டிருக்கிறது என்றெல்லாம் கூக்குரல் கிளப்பிக்கொண்டிருந்தார்கள் சிலர். இந்த ஆண்டு எந்தவிதமான தொழில் தகராறும் இல்லாமல், தமிழ் நாட்டில் தொழில் துறையில் அமைதி நிலவி வந்திருக்கிறது என்றும், அதே போன்று வெளியிலேயிருந்து வந்து இவ்விடம் தொழில்களில் முதலீடு செய்வதற்கு அனுமதி கேட்டிருக்கிறார்கள் என்றும் கவர்னர் உரையிலே எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

மேலும், இந்த லைசென்ஸ் வழங்கும் அதிகாரம் மத்திய சர்க்காரிடமிருந்து மாநில சர்க்காருக்கு மாற்றப்படவேண்டும் என்கின்ற ஒரு நிலைமையை நமது மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள்



வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதில் நாம் வெற்றி பெற வேண்டும், மேலும் தமிழ் நாட்டில் பல தொழில்கள் வளரவேண்டும், அதற்கு வேண்டிய வசதிகள் நமக்கு ஏற்படவேண்டும்.

இந்த நேரத்தில் இன்னொன்றையும் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் புதியதாக மத்திய சர்க்கார் முதலீடு செய்யும் தொழில் எதுவும் தமிழ் நாட்டில் ஏற்படுத்த திட்டம் இல்லை. ஆகவே, அந்தத் துறையில் கூட நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் மத்திய சர்க்கார் முதலீடு செய்யும் ஒரு தொழிலை தமிழ் நாட்டில் துவக்கவேண்டும் என்று வற்புறுத்திச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கடைசியாக, தமிழ்நாட்டில் சில இடங்களில் கல்லூரிகள் மூடப்பட்டிருக்கின்றன. மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள், என்பதை அனுகூலமாக எடுத்துக்கொண்டு, அதன் மூலம் அரசியல் லாபம் அடையலாம் என்று தப்புக் கணக்குப் போட்டுக்கொண்டு சிலர் மகாநாடுகள் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். நான் அவர்களுக்கு ஒன்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். சென்னையில் இருக்கிற சட்டக் கல்லூரியைப் பொறுத்த வரையிலே, பி.ஜி.எல். கோர்ஸ் முதல் ஆண்டு தேர்வு எழுதினால், அதில் தவறிவிட்டாலும் கூட, இரண்டாவது ஆண்டு தொடர்ந்து படித்து, இரண்டாவது ஆண்டில் தேர்வு எழுதுவதற்கு அனுமதிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை மாணவர்கள் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களிடமும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடமும் வைத்தார்கள், 'அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் எங்களுக்கு ஆட்சேபம் இல்லை, பல்கலைக்கழக பாடத்திட்டக் குழுவும், ஆல் இண்டியா பார் கவுன்சிலும் இதுபற்றி தீர்மானித்து முடிவு எடுக்க வேண்டும்' என்பதைத் தெள்ளத் தெளிவாக எடுத்துக்காட்டினார்கள். ஆல் இண்டியா பார் கவுன்சிலும் பாடத்திட்டக் குழுவும் தான் இந்தக் கோரிக்கை நியாயமா இல்லையா என்பது பற்றி முடிவு செய்யவேண்டும், அப்படியிருக்கும்பொழுது சட்டக் கல்லூரி வகுப்புகளுக்கு நாங்கள் வரமாட்டோம் என்று மாணவர்கள் வலியுறுத்துவது நியாயமில்லை என்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்.

அதைப்போல விவசாயக் கல்லூரி டீன் மாற்றப்படவேண்டுமென்று ஒரு போராட்டம். டீன் பி.எஸ்.ஸி. அக்ரிகல்சர் படித்தவராக இருக்கவேண்டும் என்று ஏற்கனவே உள்ள விதிமுறைகளில் விதிக்கப்படாததால் அந்த விதிமுறைப்படி டீன் நியமிக்கப்பட்டுவிட்டார் இனிமேல் நியமிக்கப்படும் டீன்கள் பி.எஸ்.ஸி. அக்ரிகல்சர் படித்தவராக இருப்பார்கள், அதற்கு தகுந்தபடி விதிமுறைகள் மாற்றி அமைக்கப்படும் என்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் உத்திரவாதம் கொடுத்தார்கள். அப்படியிருந்தும் மாணவர்களிடையே அமைதி ஏற்படவில்லை. இதற்கு அரசாங்கம் எப்படி பொறுப்பு?

முன்னேற்றக் கழகத்தின் லட்சியமான விஞ்ஞான சோஷலிச அடிப்படையில் நல்ல பல திட்டங்களை எதுவும் காணப்படவில்லை என்பதை மிகவும் வருத்தத்தோடு நாங்கள் கூற விரும்புகிறேன். மூன்றாவது ஆண்டாக கவர்னர் பெருமான் நிகழ்த்திய உரை, ஆளும் கட்சி எழுதிக் கொடுத்ததை அப்படியே படித்துவிட்டுச் செல்லும் நிலை தான் இருந்திருக்கிறதே அன்றி, தன்னுடைய சொந்தக் கருத்துக்கு மாறுபட்ட நிலை இருப்பதை உணர்ந்தாலும், கொடுத்ததை வாசித்துச் சென்றார்கள் என்பதுதான் வருந்தக் கூடிய நிலையாகும்.

உதாரணமாக, கடந்த டிசம்பர் மாதத்தில், போலீசார் விழாவில் கவர்னர் அவர்கள், குற்றங்கள் நடக்கும் முறையில், நடப்பு ஆண்டில், அதாவது, 1969-ல், 5.8 விழுக்காடுகள் அதிகமாக தமிழகத்தில் நடைபெற்று இருப்பதாகக் குறிப்பிட்டிருந்தார்கள். ஆனால், 19ம் தேதி, ஜனவரி, 1970-ல், ஏதோ இங்கே அமைதியான ஆட்சி இருந்து, சட்டம் ஒழுங்கு எல்லாமே நல்ல முறையில் இருந்து, சுமுகமான நிலையில் மக்கள் எல்லாம் அமைதி நுகர்ந்துக் கொண்டிருக்கிறார்கள் போலவும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அன்று, கொலை, கொள்ளை, வழிப்பறி யாருமே தடுக்க முடியாதபடி வெளில் கொள்ளை, நெல்லை மாவட்டத்தில் ஹைவே ராபரி, கேட்டில் லிஃப்டிங், ஜெஸ்ப்ட், ப்ராதல் நடத்துதல் இதுபோன்ற பல குற்றங்கள் பெருகியிருக்கின்றன என்று கூறிவிட்டு, இந்த 1970-ல் ஒரு சில நாட்களை கழித்து, மிக அமைதியான ஆட்சி நடப்பது போன்று காட்டியிருப்பது. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஆளுநர் ஆற்றிய உரை மீது பேசும்போது, எழுதிக் கொடுத்ததை அவர்கள் படித்து. . . .

**திரு. டி. மார்டின் :** அதை முதலிலேயே சொல்லியாகிவிட்டது. எழுதிக் கொடுத்ததை அவர்கள் வாசித்தார்கள் என்று சொல்லி விட்டேன். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அப்படிச் சொல்வது முறையற்ற கருத்து.

**திரு. டி. மார்டின் :** அவர்கள் எழுதிக் கொடுத்ததைப் படித்து விட்டுச் சென்றார்கள் என்பதுதானே உண்மை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எழுதிக் கொடுத்ததைப் படித்து விட்டுச் சென்றார்கள், சொந்தக் கருத்தைத் தரவேண்டும் என்கிற கருத்து. . . .

**திரு. டி. மார்டின் :** அது சொந்தக் கருத்தா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அப்படிச் சொல்லக் கூடாது. உறுப்பினர் அப்படிச் சொன்னது பொருத்தமல்ல. ஆளுநர் ஆளுங் கட்சி எழுதிக் கொடுத்ததைப் படித்தார்கள் என்று குற்றம் சாட்டுவது சரியல்ல. (குறுக்கீடு) கவர்னர் அவர்கள் தன்னுடைய





மனத்தில் தெரிந்த அளவில் வேறு கருத்து இருந்தாலும், அதற்கு நேர்மாறான ஒன்றை, ஆளும் கட்சிக்காரர்கள் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள், அதைப் படித்திருக்கிறார்கள் என்று தான் திரு. மார்ட்டின் அவர்கள் சொன்னார்கள். அப்படிக் கூறியது முறையல்ல என்பதைத் தான் தெரிவிக்கிறேன்.

**திரு. டி. மார்டின் :** அவைத்தலைவர் அவர்களே, 19-1-1970-ல் அவர்கள் வாசித்த உரைக்கும், கடந்த டிசம்பர் மாதம் போலீஸ் விழாவில் அவர்கள் பேசிய உரைக்கும் மாறுபாடு இருப்பதை மக்கள் அறிகிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டும் நோக்கத்தில் சொன்னேன். உண்மையாகவே நடப்பு ஆண்டில் குற்றங்கள் பெருகியிருக்கின்றன. போலீஸ் துறையில் பெருகியிருக்கும் குற்றங்களைத் தடுக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். அதற்கு அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று கவர்னர் கூறியிருப்பார் களேயானால், பாராட்டியிருக்க முடியும்.

ரேஷன் எடுத்ததைப் பற்றி எனக்கு முன்பு பேசிய சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. அரங்கநாதன், குறிப்பிட்டார்கள். அவர்கள் சொன்னார்கள், நாம் எதிர்பார்த்ததைவிட அமோக விளைச்சல் கிடைக்கும் நிலை இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். காலஞ்சென்ற முதல் அமைச்சர் அவர்கள் தேர்தலுக்குமுன் ரூபாய்க்கு ஒரு படி அரிசி எங்கள் ஆட்சி போடும் என்று அறிவித்து விட்டு, பிறகு ஆட்சிக்கு வந்ததும் சென்னைக்கும், கோவைக்கும் மட்டும் என்று கூறி, அதற்குப் பின்பு சட்ட மன்றத்திலே மற்ற பகுதிகளுக்கு எப்பொழுது விஸ்தரிக்கப்படும் என்று கேள்வி கேட்கப்பட்டபோது, நிலைமைக்குத் தக்கபடி யோசிக்கலாம் என்று இந்த மாமன்றத்தில் கூறினார்கள். ஆனால், அவர்கள் மறைந்ததும் மறையாததுமாக, இப்பொழுது திடீரென்று இந்தப் படி அரிசித் திட்டம் சென்னையிலும், கோவையிலும் அதுவும் ரூ. 200-க்கு குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு மட்டும், என்று அவர்களுடைய கொள்கையைக் குற்றுயிராக்கிச் சாகடித் திருக்கிறார்கள் என்பதை இந்த அவையும், மற்றவர்களும் அறி வார்கள். அந்த மறைந்து போன முதல் அமைச்சர் இன்று உயிரோடு இருந்தால், ஆட்சியாளர்களைப் பார்த்துச் சொல்வார், தன்னுடைய வாக்குறுதியை மறந்து, அதைக் காற்றில் பறக்க விட்டு விட்டார்கள் என்று. உணவு உற்பத்தி அதிகம் என்றால் அவர்களுடைய கோட்பாடுகளான கடமையையும் கண்ணியத்தை யும், கட்டுப்பாட்டையும் உணர்ந்து செயல் பட்டிருக்க வேண்டும். வள்ளுவர்,

> "சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
> சொல்லிற் பயனிலாச் சொல்"

என்று சொன்னார்கள். அந்த வகையில் அவர்களுடைய சொல்லைப் பயனிலாச் சொல்லாகப் புறக்கணித்திருக்கிறார்கள் என்று தமிழ் மக்கள் கருதலாம்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** வள்ளுவர் கூறியதை அவர்களே நன்றாகப் படித்துத் தெளிவுபடுத்திக் கொள்ளட்டும்.

**திரு. டி. மார்டின் :** பேரவைத்தலைவர் அவர்களே, வருவாய்த் துறை அமைச்சர், மாண்புமிகு திரு. மதியழகன் அவர்கள், எதிர்க்கட்சி வரிசையில் இருந்தபோது, தீர்மானம் கொடுத்திருந்தார்கள், உணவு தானிய வாணிபத்தை அரசே ஏற்று நடத்த வேண்டும் என்று. ஆனால், இன்று அந்தக் கொள்கைக்கு நேர்மாருக நடப்பதைப் பார்த்தால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தன் கொள்கையிலிருந்து சற்று சற்று விலகிச் செல்கிறதோ என்று மக்கள் நினைக்கிறார்கள். உணவு தானியக் கட்டுப்பாட்டை எடுத்துவிட்ட நிலையில், ஆங்காங்கே, ரைஸ்மில் அதிபர்கள் மக்களுடைய வரிப்பணம் கொடுக்கப்பட்டு, திருப்பிக்கொடுக்காமல் இருக்கக் கூடிய சூழ்நிலைகள் இருந்து, நீதி மன்றத்திற்கு, மில் அதிபர்களை இழுக்கச் செல்லும் அளவில் நிலைமைகள் இருக்கின்றன. மதுரையில் அப்படி வழக்குகள் வந்து, லட்சக்கணக்கான ரூபாய்கள், மில் அதிபர்களிடம் கொடுக்கப்பட்டு, அதையெல்லாம் எப்படி வசூல் செய்வது என்று தெரியாமல், போலீசாரை வைத்து, வசூல் செய்ய ஏற்பாடு செய்ய அவர்கள் 'ஹேபியஸ் கார்பஸ்' பெட்டிஷன் போடும் நிலை இருக்கிறது. அப்படி அவர்கள் கோர்ட்டுக்கு வருகிறார்கள்.

உணவு தானிய விற்பனை செய்ய லைசென்சுகள், பர்மிட்டுகள், இவையெல்லாம் வழங்கும் முறையில் பெருந்த முதலாளிகளுக்கு உணவுத் துறையினர் சலுகைகள் காட்டி கொடுக்கிறார்கள் என்று மக்கள் கூறுகிறார்கள். உதாரணமாக, அண்ணாபிள்ளை தெரு, அசோகா ட்ரேடர்ஸ் கம்பெனி என்பவர்கள் மீது 1966-ல் எ.ஃப்.ஐ. ஆர். தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. இப்பொழுது மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில், இ.பி.கோ. 120-பி, 420 போன்ற செக்ஷன்களின் கீழ் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. ஆனால் உணவுத் துறையினர் அவர்களுக்கு விசேஷச் சலுகைகள், பர்மிட்டுகள் வழங்கியிருக்கிறார்கள். குற்றவாளிக் கூண்டில். . . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அங்கத்தினர் எந்த ஆதாரத்தை வைத்துக்கொண்டு, விசேஷச் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள்? தயவுசெய்து, இந்த மன்றத்திற்கு வெளிப்படுத்த வேண்டும். போகிற போக்கில் எதையாவது சொல்லுவது சரியானது அல்ல. என்ன விசேஷ சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தயவுசெய்து வெளிப்படையாகச் சொல்ல வேண்டும்.

**திரு. டி. மார்டின் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆந்திராவிலிருந்து அரிசி கொண்டுவருகிற உரிமை அவருக்கு வழங்கப்பட்டிருக்கிறதா, இல்லையா? இதுபற்றி நீதி விசாரணை நடத்துவதற்கு தலைவர் அவர்கள் உத்தரவிட்டால், அந்த விசாரணைக்குக் கட்டுப்பட நான் தயாராக இருக்கிறேன்.





**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, ஆந்திராவிலிருந்து அரிசி கொண்டுவருகிற உரிமை அவர் ஒருவருக்குமட்டும்தான் அளிக்கப்பட்டிருக்கிறதா, மற்றவர்கள் யாருக்காவது அளிக்கப்பட்டிருக்கிறதா என்பதை அங்கத்தினர் அவர்கள் அறிந்துகொள்ளாமலே கூறுகின்றார். மொத்தம் 200 பேர்களுக்கு அப்பேற்பட்ட உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது என்பது கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியுமா என்பதைக் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. டி. மார்டின் :** தலைவர் அவர்களே, முதலில் அமைச்சர் அவர்கள் ஆதாரம் கேட்டார்கள். நான் சொன்னேன். 200 பேருக்கு உரிமங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னால், அதற்கான உத்தரவு போட்டது நான் அல்ல, அமைச்சர் அவர்கள் போட்டிருக்கிறார்கள். செங்கற்பட்டு மாவட்டத்தில் அரசாங்க கோஆப்பரேட்டிவ் கோடவுனில் அந்தப் பெர்மெட்டுகளை மோசடி செய்து, புதிதாக உண்டாக்கி ஃபோர்ஜரி செய்து வந்த பெர்மிட்டுகள்மூலம் வந்த உணவுத் தானியங்களைப்பெற்று அதன் காரணமாக லாபம் அடைந்தவர் என்று குற்றம் சாட்டப்பட்டு, கோர்ட்டிலே குற்றவாளிக் கூண்டிலே இருக்கிற ஒருவருக்கு விசேஷ சலுகை எதுவும் காட்டப்படவில்லையென்பதற்காக மற்றவர்களுக்கும் உரிமங்கள் கொடுத்திருக்கலாம். குற்றவாளிக் கூண்டிலே இருக்கிறவருக்கு ஏன் கொடுக்கப்பட்டது? அவருக்குச் சரியான முறையில் அது கொடுக்கப்பட்டதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள், 'அவர் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப்பட்டிருக்கிறார்' என்று சொல்கிறார். அதுபற்றிய முழுவிவரம் எனக்குத் தெரியாது. இதுபற்றி நாளையதினம் சொல்கிறேன். வெளி மாநிலத்திலிருந்து அரிசி கொண்டு வருகிறேன், நொய் கொண்டு வருகிறேன் என்று உரிமம் கேட்டு, இதுவரை யாருக்குமே மறுத்தது இல்லை. அப்படி உரிமம் கேட்டு, எவ்வளவு மனுக்கள் வந்தனவோ அவ்வளவு பேருக்கும் கொடுத்திருக்கிறோம். இன்னும் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். யாராக இருந்தாலும் கொடுக்கிறோம். வெளி மாநிலங்களிலிருந்து அரிசி, நொய், ஜோவர் போன்றவற்றை எவ்வளவு வேண்டுமானாலும் கொண்டுவாருங்கள் என்று அனுமதி அளித்துக்கொண்டிருக்கிறோம். ஆனால், தமிழ்நாட்டிலிருந்து அரிசியை வெளியே எடுத்துப் போவதைத்தான் தடுத்திருக்கிறோம் என்பதைப் பச்சையாக ஒத்துக்கொள்கிறேன். வெளி மாநிலங்களிலிருந்து அரிசி போன்றவற்றைக் கொண்டுவருவதைத் தடுத்ததில்லை என்பதை கனம் அங்கத்தினர் அவர்களுக்கு எடுத்துக் கூற விரும்புகிறேன்.

THIRU T. MARTIN : C. C. 2033 of 1969 pending before the Fourth Presidency Magistrate Court, George Town.

இந்த வழக்கைப்பற்றி மேலும் விவரம் வேண்டுமானால், அமைச்சர் அவர்கள் தம்முடைய இலாகாவிலே கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, சர்க்காரை நடத்துகிற எங்களுக்கு விளக்கம் அதிகமாகக் கிடைக்கும். நான் அதுபற்றிய விவரத்தை பார்க்கவில்லை, நாளையதினம் விளக்கம் சொல்கிறேன் என்றுதான் சொன்னேன்.

**திரு. டி. மார்டின்:** தலைவர் அவர்களே, அதுமட்டுமல்ல. உணவுத் தானியம் வழங்குகின்ற முறையில் நமக்கென்று ஒரு விதிமுறை இருக்கிறது. (Statutory orders made under the essential commodities Act.) இந்த ரூல்படி, ரேஷனிங் ஆபீசருக்கே லைசென்ஸ் கொடுக்கிற அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறோம். ஆனால் அந்த ஆபீசர் லைசென்ஸ்களைக் கொடுக்காமல், அவருக்கு மேலே இருக்கிற அப்பீல் அதிகாரிக்கு அனுப்புகிறார். அவர் கமிஷனருக்கு அனுப்புகிறார். அவர் அமைச்சருக்கு அனுப்பி, அமைச்சர் அவர்களே உத்தரவு போட்டிருக்கிறார்கள் என்ற வழக்கும் நீதிமன்றத்தில் இருக்கிறது. எதற்காக இதைக் கூறுகிறேன் என்றால், லைசென்ஸ் கொடுப்பதற்கு என்று விதிமுறைகளை நாம் வகுத்த பிறகு, ஆட்சியில் இருப்பவர்களே அந்த விதிமுறைகளைத் தூக்கியெறிந்துவிட்டால், இது ஜனநாயக நாடா, நாம் ஜனநாயகத்தில்தான் வாழ்கிறோமா, நாம் சட்டத்திற்கு மதிப்புக் கொடுத்தவர்களாவோமா? என்ற எண்ணம்தான் தோன்றுகிறது.

மேலும், இன்றையதினம் போலீஸ் துறையில் நடந்துவரும் ஒரு சிறு சம்பவத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கோவையில் மேலவை உறுப்பினரையும் அவரோடு சேர்ந்த சிலரையும் போலீசார் அரஸ்ட் செய்து, பின்பு விடுதலை செய்திருக்கிறார்கள். காரணம் எதுமின்றி இது நடந்திருக்கிறது. அந்த டிஸ்பியூட்டைப் பற்றி விவரமாகப் பேசாவிட்டாலும் போலீஸ் செய்தது அத்துமீறிய செய்கை என்பதை ஆட்சியாளர்கள் மிகவும் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். இந்த அத்துமீறிய செய்கைக்காக ஒரு நீதி விசாரணை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும். இந்தமாதிரியான நிலைமை நீடிக்குமானால், தமிழகம் பூராவிலுமே இதே நிலைமை நீடிக்கக்கூடும். ஆகவே, ஆரம்பத்திலேயே ஆட்சியாளர்கள் பாதுகாப்பு செய்து, அசம்பாவிதமான சம்பவங்கள் ஏற்படாமல் இருக்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றையதினம் படித்தவர்களிடையே காணப்படும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப்பற்றி எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. அரங்கநாதன் அவர்கள் குறிப்பிட்டார்கள். தலைவர் அவர்களே, இன்றையதினம் எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சிலே போய் நாம் பார்ப்போமானால், தினமும் படித்த இளைஞர்கள் ஒரு கான்பிரன்ஸ் நடத்திக்



கொண்டிருக்கிறார்கள். வேலையில்லாத படித்த இளைஞர்களுடைய கூட்டம் பெருகி வருகிறது. அங்கிருந்த ஒருவர் தன் மனக் குறையைத் தெரிவித்தார். அதாவது, வேலைவாய்ப்பைத் தேடி வருகிற எங்களுக்கு உட்கார ஒரு பெஞ்சு கூட போடுவது கிடையாது. நாங்கள் நின்று கொண்டுதான் எங்கள் மகாநாட்டை நடத்திச் செல்கிறோம் என்று சொன்னார். வேலைவாய்ப்புக்கள் அதிகமாக இருக்கின்றன என்று புள்ளிவிவரம் கொடுக்கிறார்கள். ஆனால் எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேன்ஜ் அலுவலகங்களிலே படித்த இளைஞர்களின் கூட்டம் பெருகி, வேலையில்லாமல் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். ஆட்சியில் இருப்பவர்கள், நாங்கள் ஒன்றிரண்டு தொழிற்சாலைகளுக்கு உரிமங்கள் பெற்றிருக்கிறோம் என்று வேண்டுமானால் கூறிக்கொள்ளலாம். இன்று பெருகியிருக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தினையும் ஏறிக்கொண்டிருக்கும் விலைவாசிகளையும் கருத்தில் கொண்டு பார்த்தால், இந்த நிவாரண வேலைகள் எல்லாம் பாலைவனத்தில் வீசியெறிந்த பனிக்கட்டிகள் போல்தான் ஆகும்.

மற்ற மாநிலங்களான மராட்டிய மாநிலத்தோடு, குஜராத் மாநிலத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இப்பொழுதுள்ள ஆட்சியாளர்கள் பெற்றிருப்பது மிகமிகக் குறைவேயாகும். அங்கெல்லாம் நூறு தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படுகின்றன என்றால், நம் தமிழகத்தில் ஐந்து தொழிற்சாலைகளைத் திறப்பதற்கான உரிமங்களைத்தான் வாங்கியிருக்கிறோம். தமிழக அரசு எந்த முறையில் படித்த இளைஞர்களிடையேயுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முயலுகிறது என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆகவே, எம்பிளாய்மெண்ட் எக்ஸ்சேன்ஜ் அலுவலகங்களில் பதிவு செய்துகொண்டிருக்கக் கூடியவர்களின் உண்மையான எண்ணிக்கையை அரசுத் தரப்பிலிருந்து கொடுப்பது அரசினுடைய கடமையாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மாணவர்களின் பிரச்சினையைப்பற்றி எனக்கு முன் பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். மாணவர்களுடைய மத்தியில் தங்களுடைய எதிர்காலம் எப்படி அமையுமோ என்ற அச்சம் இருக்கிறது. அப்படி அவர்கள் அச்சமடைந்திருப்பதற்குக் காரணம் இருக்கிறது. தங்களுக்கு முன்னால் படித்த மாணவர்கள் வேலையில்லாமல் அலைவதைக் கண்டு தங்களுக்கும் அதே நிலைமை ஏற்படுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. பல கல்லூரிகள் மூடப்பட்டன. இன்றையதினம் விவசாயக் கல்லூரி மூடப்பட்டிருக்கிறது. கலைக் கல்லூரி மூடப்பட்டிருந்தது. சட்டக் கல்லூரி மூடப்பட்டிருந்தது. மாணவர்களுடைய பிரச்சினையைப்பற்றி கவர்னர் அவர்களுடைய உரையில் ஒரு சிறு குறிப்பும் காணப்படவில்லை. மாணவர்கள் இந்த அரசுக்குக் கொடுத்த கோரிக்கைகள் என்ன? அவற்றில் எத்தனை இந்த அரசு ஏற்றுக் கொண்டது என்பதற்கான சிறு குறிப்புகூட கவர்னர் அவர்களுடைய உரையில் இல்லையென்பதைப்பற்றி எல்லோரும் வருத்தப்படுகிறார்கள்.

[திரு. டி. மார்டின்] [1970 ஜனவரி 21

மேலும் தேர்தல் காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் குறிப்பிட்ட கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டியதற்கு இவர்கள் மூன்று வருட காலம் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். முக்கியமான கோரிக்கைகளை இவர்கள் நிறைவேற்றியிருக்கிறார்களா என்று பார்த்தால் இல்லையென்றே பதில் கிடைக்கிறது.

குறிப்பாக, சர்க்கார் ஊழியர்களை எடுத்துக்கொண்டால், மாநில அரசு ஊழியர்களுக்கும், மத்திய சர்க்கார் ஊழியர்களுக்குத் தரப்படும் சம்பள விகிதம் கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டார்களே. கொடுத்திருக்கிறார்களா? பஞ்சப்படியை அடிப்படைச் சம்பளத்துடன் சேர்க்க வேண்டுமென்று கேட்டார்களே, அப்படி இணைத்துக் கொடுத்திருக்கிறார்களா? மத்திய சர்க்கார் ஊழியர்களுக்குத் தரப்படும் வீட்டு வாடகைப்படியை தங்களுக்குத் தர வேண்டும் என்று கேட்டார்களே, அதையாவது கொடுத்தார்களா? அட்லீஸ்ட் இடைக்கால நிவாரணமாக முப்பது ரூபாய் தரவேண்டுமென்று கேட்டார்களே, அதையாவது கொடுத்தார்களா? அல்லது ரூபாய்க்கு ஒரு படி அரிசியாவது கொடுத்தார்களா? அதற்கும் இருநூறு ரூபாய்க்குக் கீழே ஊதியம் பெறுபவர்களுக்கு மட்டும் படி அரிசித் திட்டம் என்கிறார்கள்.

மேலும் ('பே கமிஷன்') சம்பளக் கமிஷன் பற்றிக் குறிப்பிட்டார்கள். சம்பளக் கமிஷன் தன்னுடைய திட்டத்தை இந்தக் கால கட்டத்திற்குள் தர வேண்டுமென்று ஏதாவது வரையறை செய்திருக்கிறார்களா என்றால், அதுவும் இல்லை. சம்பளக் கமிஷன் தன்னுடைய ரிப்போர்ட்டை 1972-லும் கொடுக்கலாம், அல்லது 1973-லும் கொடுக்கலாம். சம்பளக் கமிஷன் தன்னுடைய ரிப்போர்ட்டை இந்தத் தேதிக்குள் கொடுக்க வேண்டுமென்று காலக்கெடு ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. இந்தச் சமயத்தில் எனக்கு ஒரு பழமொழி நினைவிற்கு வருகிறது. 'கடல் எல்லாம் வற்றி, கடலிலுள்ள மீன்கள் எல்லாம் கருவாடாகி, அதை எடுத்து இலங்கைக்கு ஏற்றுமதி செய்வது' என்று ஒரு வியாபாரி ஒரு திட்டம் தீட்டினாராம். கடல் வற்றுவது எப்போது? மீன்கள் எல்லாம் கருவாடாக ஆவது எப்போது? அவர் அதை இலங்கைக்கு அனுப்புவது எப்போது?

அடுத்தபடியாக, 'பட்டினப் பாக்கம்' என்பதை அங்குள்ள மக்கள் 'பட்டினிப் பாக்கம்' என்று ஒரு எழுத்தைத் திருத்தி எழுதிக் கொண்டு, நாங்கள் பட்டினியில்தான் வாடுகிறோம் என்பதைச் சொல்லாமல் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். சம்பளக் கமிஷன் தன்னுடைய ரிப்போர்ட்டை ஆறு மாதத்தில் கொடுக்க வேண்டுமென்று இந்த அரசு கூறியிருந்தால் அதை நாம் பாராட்ட முடியும். சர்க்கார் ஊழியர்கள் மீள முடியாத நிலையில் விலைவாசிகள் உயர்ந்து விட்டிருக்கின்றன. கவர்னர் அவர்களுடைய உரையில் விலைவாசி ஏற்றத்தைப்பற்றி ஒரு வார்த்தைகூட குறிப்பிடவில்லை. எட்டு அணாவிற்கு விற்ற கத்தரிக்காய் இரண்டு ரூபாய்க்கு விற்கிறது.



1970 ஜனவரி 21] [திரு. டி. மார்டின்]

இரண்டு, மூன்று ரூபாய்க்கு விற்ற மிளகாய் வற்றல் 12 ரூபாய்க்கு விற்கிறது. பதினைந்து பைசாவுக்குக் கிடைத்த முட்டை முப்பது பைசாவுக்கு விற்கப்படுகிறது. இப்படியாக ஒவ்வொரு பண்டத்தினுடைய விலையும் விஷம்போல் ஏறிக்கொண்டிருக்கிறது. இதைத் தடுப்பதற்கான கொள்கைக் குறிப்பு எதுவும் கவர்னர் அவர்களுடைய உரையில் காணப்படவில்லை.

அதோடு ஆசிரியர்களுடைய நிலைபற்றி சமீபத்தில் சென்னைக்கு சைக்கிளில் வந்தும், நடந்து வந்தும் அவர்களே தங்கள் குறைகளைக் கூறினார்கள். தனியார் துறையில் வேலை செய்கின்ற ஆசிரியர்களுக்கும் சம்பளத்தை ஆட்சிதான் கொடுக்கிறது. இருந்தாலும் அவர்களுக்கு வீட்டு வாடகைப்படி, அவர்களுக்கு திருமண காலக் கடன், ஃபெஸ்டிவல் அட்வான்ஸ் ஆகியவை ஏன் கொடுக்கவில்லை. கவர்னர் உரையில் நான்-டீச்சிங் ஸ்டாப், Craft டீச்சர்களைப் பற்றியும் ஒன்றுமில்லை. அவற்றைப் பரிசீலனை செய்கிறோம் என்று ஒரு சிறிய ஆசை வார்த்தையையாவது கூறியிருக்கக் கூடாதா? அவதிப்படும் ஆசிரியர்களுக்கு சிறிதளவு நம்பிக்கை அளிக்கக் கூடிய உரையாக இது அமையவில்லை. கடல் கடந்து சென்று கடாரம் வென்ற தமிழர்கள் இப்போது எல்லாம் ஒவ்வொரு நாளும் கண்ணீர் வடித்துக்கொண்டு தாயகம் திரும்பி வருகிற நிலை இருக்கிறது. இலங்கையில் இருந்தும், பர்மாவில் இருந்தும் பலர் வர இருக்கிறார்கள். அவர்களைப் பற்றி கவர்னர் உரையில் ஏதாகிலும் குறிப்பிட்டிருக்கிறார்களா என்றால் இல்லை. இப்படி பல முக்கியமான பிரச்சினைகள் கவர்னர் உரையில் கவனிக்கப்படவில்லை.

மேலும் ஒன்றைப் பேரவைத் தலைவர் அவர்களே நான் தங்கள் அனுமதியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 27—1—1969 அன்று இந்தப் பேரவையில் நாம் ஏகமனதாக with all sincerity and solemnity ஒரு தீர்மானத்தைப் போட்டோம். அதில் சட்டமன்ற உறுப்பினர்களும், அமைச்சர்களும், தாங்களும் ஆகிய நாம் எல்லோரும் 30—9—1969-க்குள் நம்முடைய சொத்துக் கணக்குகளை எல்லாம் பேரவை அலுவலகத்திற்கு அனுப்பிவிட வேண்டும் என்பதாகக் குறிப்பிட்டிருந்தோம். நல்ல தீர்மானம். வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானம். ஒன்றிரண்டு குறைகள் இருந்தாலும் நிறைவேற்றிய தீர்மானப்படி எல்லோரும் கணக்குகளைக் கொடுத்தார்களா இல்லையா என்கிற செய்தியை கவர்னர் அவர்கள் தம் உரையில் குறிப்பிட்டிருக்கலாம். தன்னைச் சார்ந்திராத பிள்ளைகளின், பெண்களின் சொத்துக் கணக்கைக் கொடுக்க வேண்டாம் என்கிற குறைபாடு இருந்தாலும் 30—9—1969-ஆம் தேதிக்குள் எல்லா அமைச்சர்களும் தங்கள் சொத்துக் கணக்குகளைக் கொடுத்து விட்டார்களா? நமே போட்ட தீர்மானத்தை நாம் எல்லோருமே மதித்திருந்தாகவேண்டும். அதுபற்றி நான் ஒரு வினா எழுப்பக்கூட முடியாத நிலையில் அந்த விவரங்கள் பேரவை முன் வைக்கப்படவில்லை. ஆகவே பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக அமைச்சர்களைக் கேட்டுக்கொள்வது

என்னவென்றால் எத்தனை பேர்கள் 30—9—1969-க்குள் கணக்குகளைக் கொடுத்தார்கள். 30—9—1969-க்குப் பின்பு கணக்கு கொடுத்தவர்கள் எத்தனைபேர் என்கிற விவரம் பேரவைக்கு அளிக்கப்படவேண்டும்.

வறட்சி நிவாரணப் பணியைப் பற்றி பேசின உறுப்பினர் அவர்கள், ஏதோ யாரோ எங்கோ குற்றம் சாட்டினார்கள் என்றார்கள். அந்த அந்த வட்டாரத்தில் இருந்து ஊழல் குற்றம் சாட்டப்பட்டு வந்தால் நடவடிக்கை எடுக்க வேண்டியது ஆளும் கட்சியின் பொறுப்பு என்பேன். குறிப்பாக நெல்லை மாவட்டத்தில் ஓட்டப்பிடாரம் பஞ்சாயத்து யூனியனில் இருந்து ஒரு நகல் வந்தது. ஆட்சியாளர்களுக்கும் அனுப்பியிருக்கிறார்கள். அதைப் பார்த்து நடவடிக்கை எடுக்கவேண்டும். ஊழல் இல்லை என்று மறுக்க முடியாது. இராம ராஜ்யமா நடத்திக்கொண்டிருக்கிறோம்? அவ்வளவு புண்ணியவான்களாக எல்லோரும் ஸேஜுகளாகவா மாறிவிட்டோம்? முன்பு வாழ்ந்த மனித சமுதாயத்தில் தான் வாழ்கிறோம். லஞ்சம் பெருகி வருகிறது என்று விஜிலன்ஸ் கமிஷன் அறிக்கை கொடுத்திருக்கிறது. நாளுக்கு நாள் பெருகி வருகிற லஞ்சத்தை ஒழிக்க நடவடிக்கை எடுத்தாகவேண்டும். ஆனால் நடக்கின்ற ஊழல் நடந்துகொண்டே இருக்கிறது. நாங்கள் ஆட்சிக்கு வந்தால் குதிரைப் பந்தயத்தை ஒழிப்போம் என்று தேர்தல் அறிக்கையில் கூறினார்கள், நாங்கள் ஆட்சிக்கு வந்தால் சினிமாக் கொட்டகைகளை தேசியமாக்குவோம் என்றார்கள். அதைப்பற்றிக் கேட்டால் குதிரைகள் ஓடிக்கொண்டுதான் இருக்கின்றன, சினிமா நடந்துகொண்டுதான் இருக்கின்றன என்றார்கள். அதுபோல ஊழல்கள் பெருகிக்கொண்டேதான் இருக்கின்றன. இவற்றை ஒழிக்க இந்த அரசு என்ன என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ள இருக்கிறது என்பதை கவர்னர் அவர்கள் தம் உரையில் குறிப்பிட்டிருந்தார்கள் என்றால், இதை நல்ல உரை, பாராட்டக் கூடிய உரை என்று சொல்ல முடியும். அத்தகைய பல அம்சங்கள் இல்லாததாலே இதை ஒரு காகிதப்பூ என்று சொல்லி அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்றையதினம் பேசுவதற்கு 14 உறுப்பினர்கள், இப்போது பேசியவர்களைத் தவிர, பேர் கொடுத்திருக்கிறார்கள். அனைவரும் பேசுவது என்றால் ஒருவருக்கு 8 நிமிடத்திற்கு மேல் வராது. அலுவல் ஆய்வுக் குழுவில் பேரவையின் நிகழ்ச்சிகளை 1½ மணிக்கு முடித்துவிடவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இனிப் பேசுபவர்கள் பத்து நிமிடம் எடுத்துக்கொள்ளட்டும். 1½ மணிக்கு யார் பேசிக்கொண்டிருக்கிறாரோ அவர் நாளையதினம் தொடர்ந்து பேசுவார்.

*** திரு. என். கிட்டப்பா :** பேரவைத் தலைவர் அவர்களே, நமது மேதகு ஆளுநர் அவர்களது உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்துச் சில வார்த்தைகள் இந்த மன்றத்தில் பேசக் கடமைப்பட்டிருக்கிறேன்.



V211, 31 N70 1171-24

பேரறிஞர் அண்ணா அவர்களுடைய மறைவுக்குப் பின்னால் நமது மாற்றுக் கட்சி நண்பர்கள் எதிர்பார்த்ததைப்போல அல்லாமல் ஒரு அமைதியான ஆட்சி கலைஞர் கருணாநிதி அவர்களது தலைமையின் கீழ் அமைவதற்கு அண்ணா அவர்கள் சிறப்பான பாதையை அமைத்துக்கொடுத்தார்கள். அத்தகைய சிறப்பான பாதையையும், பண்பாட்டையும் தமிழ்நாட்டில் உருவாக்கிய [illegible] மாமேதை பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு நாம் [illegible]டன் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

61468

வரலாறு காணாத வறட்சி நிலைமை தமிழகத்தில் சென்ற ஆண்டு நிலவியதை சுட்டிக்காட்டி அத்தகை[illegible] வறட்சி நிலைமை[illegible] சமாளிக்க தமிழ்நாடு அரசாங்கமும், அமைச்சர் அவையும் மத்திய அரசாங்கத்திடம் போராடி 14¼ கோடி [illegible]வும், கடனாகவும் பெற்று அதைத் தமிழகத்தி[illegible]தி ஒரு சுமுகமான நிலையை இன்றைக்கு உருவாக்கித் தந்திருக்கிறார்கள் அதற்காக முதல் அமைச்சர் அவர்களுக்கும், ஏனைய அமைச்சர்களுக்கும் நன்றி செலுத்தப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறோம்.

மாண்புமிகு அங்கத்தினர்கள் இங்கே பேசும்போது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். மதிப்பிற்குரிய எதிர்க்கட்சி தலைவர் அவர்கள் கூட பேச்சில் அதைக் குறிப்பிட்டு வருந்தும்படியாக ஒன்றிரண்டு சொன்னார்கள். அதை நாம் நினைக்கிறபோது வெளியில் பேசுகிற பேச்சுக்கும், சட்டமன்றத்தில் பேசிய பேச்சுக்கும் நம் நாட்டு அரசியலில் தொடர்பு இல்லாமையைப் பார்க்கிறோம்.

வரலாறு காணாத வறட்சி சென்ற ஆண்டு நம் மாநிலத்தில் ஏற்பட்டது. இதற்கு முன்னால் வறட்சி ஏற்பட்ட காலத்தில் பருத்திக் கொட்டையை அரைத்துச் சாப்பிடவேண்டிய சூழ்நிலை காங்கிரஸ் ஆட்சியில் இருந்த நேரத்தில் எலியைப் பிடித்துச் சாப்பிடலாம் என்று வாக்குறுதி சொன்னதை மறந்துவிட முடியாது. அத்தகைய அவல நிலையைத் தமிழகத்தில் உருவாக விடாது மத்திய அரசோடு போராடி 14¼ கோடியைப்பெற்று சிறப்பான பல ஆக்கப் பணிகளைச் செய்திருக்கிற இந்த அரசைப். பாராட்டவேண்டும். இதைச் சில அரசியல் மேதைகள் மத்திய சர்க்கார் நம்முடைய கழக அரசினை விலைபேசி வாங்கிவிட்டார்கள் என்று வெளியிலே விமர்சிக்கிறார்கள். அப்படி விமர்சிக்கிற பெரியோர்களுக்கு நான் பணிவன்புடன் சொல்லிக்கொள்ள விரும்புவது, இந்திய துணைக் கண்டத்திலே இன்றைய அரசியலிலே எந்தக் கட்சியினர் பாராளு மன்றத்திலிருந்து சட்டமன்றங்கள் வரையிலும் எந்த அரசியல் கட்சியிலே உள்ளவர்கள் விலைபேசி வாங்கப்படுகிறார்கள் என்பதை நாட்டு மக்கள் மிக, மிக நன்றாக அறிந்திருக்கிறார்கள் என்பதுதான். எனவே, அத்தகைய நிலைகளுக்கெல்லாம் நாட்டு மக்கள்

[திரு. என். கிட்டப்பா] [1970 ஜனவரி 21

செவிமடுக்கத் தயாராக இல்லை என்பதைச் சுட்டிக்காட்டி மேதகு ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டுள்ளவற்றில் ஒரு சிலவற்றினைப்பற்றி என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

குடியிருப்பு மனைகள் வழங்குவதைப் பொறுத்தவரையில் நகரத்திலும், கிராமங்களிலும் நமது கழக ஆட்சி ஏற்பட்டதற்குப் பின்னர் எவ்வளவு பேர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றிச் சொல்லும்பொழுது 1967-68-ஆம் ஆண்டில் 22,849 ஏக்கர்களும் 1968-69-ஆம் ஆண்டில் 50 ஆயிரம் ஏக்கர் நிலமும் நில மற்ற ஏழை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டி நடப்பு ஆண்டில் கிட்டத்தட்ட ஒரு லட்சம் ஏக்கர் நிலம் கொடுக்கப்படுவதற்கு நடைமுறை சாத்திய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை நல்ல முறையில் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். நான் இந்த நோக்கிலே நம்முடைய அரசிற்கு ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குடியிருப்பு மனைகள் தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பிற்பட்ட சமுதாயத்திற்கும் நம்முடைய அரசு கொடுப்பதைப்போன்ற நல்ல காரியங்களை நாம் பாராட்டிக்கொண்டிருக்கிறோம், இந்த நாடும் பாராட்டிக் கொண்டிருக்கிறது. காகிதப் பூ மணக்காது, காங்கிரஸ் சமதர்மம் மணக்காது என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். காங்கிரஸ் சோஷலிசம் போன்று இல்லாமல் நம்முடைய ஆட்சி வந்ததற்குப் பின்னால் தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலே உள்ளவர்களுக்குக் குடியிருப்பு மனைகளும், பயிரிடக்கூடிய நிலங்களையும் எந்தவித இடைத் தரகர்களும் இல்லாமல் கொடுக்கக்கூடிய நிலைமையைப் பார்க்கிறோம். இது பேரறிஞர் அண்ணா அவர்கள் விரும்பிய ஜனநாயக முறைக்கு, சமதர்ம முறைக்கு ஏற்ற ஒன்று. அவர்கள் கூறியதை நடைமுறைப்படுத்துகின்ற நம்முடைய அரசை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

தஞ்சை மாவட்டத்திலும் இன்னும் அடுத்துள்ள மாவட்டங்களிலும் உள்ள கோவில் நிலங்களிலும், ஆதினங்களுக்குச் சொந்தமான நிலங்களிலும் பாடுபடக்கூடியவர்களில் எத்தனை பேர்கள் அனுபவிக்கிறார்கள்? இதை நான் இங்கே வாய்ப்புக் கிடைக்கின்ற பொழுதெல்லாம் கூறி வருகின்றேன். கோவில் நிலங்களிலே வேலை செய்கின்றவர்கள் எத்தனை பேர்கள் அனுபவிக்கிறார்கள்? எத்தனை பேர்கள் இடைத்தரகர்களாக இருந்து பினாமிக் குத்தகைதாரர்களாக இருந்து அனுபவித்து வருகிறார்கள் என்பதையெல்லாம் கணபதியாப் பிள்ளை கமிஷன் சுட்டிக்காட்டி உழுபவனுக்கே அத்தகைய வாய்பைக் கொடுக்கவேண்டுமென்று கூறியதற்கு இணங்க நம்முடைய அரசும் அதை நிறைவேற்ற முயற்சி மேற்கொண்டிருக்கின்ற நிலையைப் பாராட்டி மேலும் அத்தகைய வாய்ப்புக்களைக் கொடுக்க நம்முடைய அரசு முயற்சிகள் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1970 ஜனவரி 21] [திரு. என். கிட்டப்பா]

பின்தங்கிய வகுப்பினர் நலம்பற்றி அமைக்கப்பட்டிருக்கிற குழு மிகவும் தாழ்ந்த நிலையில் உள்ள சவரத் தொழிலாளர்கள், சலவைத் தொழிலாளர்கள், மண்பாண்டத் தொழிலாளர்கள் இவர்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தரக்கூடிய சலுகைகளைக் கொடுப்பதற்கு சிபாரிசு செய்ய வேண்டும். அவர்கள் 100 இல் 1 அல்லது 2 பேர்கள் என்ற அளவிலேதான் இருப்பார்கள். எனவே, அவர்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்குப் போட்டியாக வருகிறார்கள் என்று சொல்லமுடியாது, அவர்கள் மிகவும் பின்தள்ளப்பட்ட நிலையில் உள்ளவர்கள், அவர்களுக்கும் அந்த சலுகைகளைக் கொடுப்பதற்கு நம்முடைய அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்வதற்குக் கடமைப்படிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறுதியாக ஒன்றைமட்டும் சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளலாம் என நினைக்கிறேன். இன்றைய தமிழ்நாட்டு அரசு, உத்தமர் காந்தியார் அவர்கள் போதித்த மதுவிலக்குக் கொள்கையினைப் பல மாநிலங்களில் செயல்படுத்த முடியாமல் போனாலும், நமது நாட்டில் கடைப்பிடித்து வருகிறது. அவர்கள் எந்தக் காந்தியாரின் நிழலிலே தங்கியிருக்கிறார்களோ, அந்தக் காந்தியார் போதித்த மதுவிலக்குக் கொள்கையை செயல்படுத்த முடியாவிட்டாலும் காந்தியாரின் நன்னெறியைப் பின்பற்றி வந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் கொள்கையைத் தொடர்ந்து கடைப்பிடித்து வருகிற தமிழ்நாட்டு அரசு அதைக் கடைப்பிடித்து வருகிறது. காந்தியார் பிறந்த ஒரு மாநிலத்திலும் தென்னாட்டுக் காந்தி பேரறிஞர் அண்ணா பிறந்த மாநிலமான நம்முடைய மாநிலத்திலும்தான் இந்த மதுவிலக்குக் கொள்கை பல கோடி ரூபாய் இழப்பிற்கிடையே பின்பற்றப்பட்டு வருகிறது.

இன்னும் ஒன்றை வருத்தத்தோடு தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். பல கோடி ரூபாய் இழப்பிற்கிடையே மதுவிலக்குக் கொள்கையை கடைப்பிடித்துவருகின்ற பொழுது, அதிகாரிகள், போலீஸ் வர்க்கத்தினர் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் எந்த அளவிற்கு அக்கொள்கைக்கு இடையூறாக இருந்து வருகிறார்கள் என்பதை நம்முடைய அரசாங்கம் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் இருக்கிற மாயூரம் தாலுகாவிலேயும், பக்கத்திலேயுள்ள சீர்காழி தாலுகாவிலேயும் மதுவிலக்குக் கொள்கைக்கும் புறம்பான முறையிலே போலீஸ் அதிகாரிகள் கீழ் இருக்கிற அதிகாரிகளின் துணை கொண்டு லைசென்ஸ் வழங்குகிற அதிகாரம் தங்களுக்கு இருப்பதைப் போன்று நடந்து வருகிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள்மீதுள்ள பற்றின் காரணமாகவும், அவர்கள் விட்டுச்சென்ற கொள்கையை நிலைநிறுத்துவதுதன் காரணமாகவும் நம்முடைய அரசு அந்தக் கொள்கையைக் காப்பாற்றவேண்டுமென்று விரும்பி

வேண்டிக் கேட்டுக்கொண்டு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு ஆதரவளித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேச எனக்கு வாய்ப்புக் கொடுத்ததற்காக மிக்க நன்றி. நாங்கள் எல்லாம் மிக மகிழ்ச்சி கொள்ளத்தக்க முறையில் ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் தெரிவித்ததைப்போன்று, கட்டுப்பாட்டை நீக்கியதற்காக நாங்கள் அந்த முயற்சியை வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறோம். நாங்கள் அப்பொழுதே சொன்னோம், இப்பொழுதுதான் செய்திருக்கிறீர்கள். இருந்தாலும் அரைகுறையாகத்தான் நீக்கியிருக்கிறார்கள். முழுக்க முழுக்கச் செய்தால் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இருக்கக்கூடிய கட்டுப்பாட்டையும் சுத்தமாக எடுத்துவிட்டால் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கையிருப்பு வைத்துக் கொண்டால்தானே பற்றாக்குறைக் காலங்களிலே சமாளிக்க முடியும் என்று கேட்கலாம். வைத்துக்கொள்ளவேண்டியதுதான். ஆனால் இப்படிப்பட்ட கட்டுப்பாடுகள் இருக்கக்கூடிய நிலைமை இருக்கக்கூடாது. கட்டுப்பாடுகளை வைத்துக் கொண்டால் உற்பத்தியாளர்களுக்கு உற்சாகம் வாராது. கட்டுப்பாட்டை எடுப்பதன்மூலம் அவர்களுக்கு உற்சாகம் ஏற்படும். அவர்கள் சந்தோஷப்படுவார்கள் என்று ஆளுநர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது தஞ்சாவூரிலே இருக்கின்ற உற்பத்தியாளர்கள் சந்தோஷப்பட முடியாது. இதோடுகூட ஊழல் அடியோடு ஒழியவேண்டுமானால் இந்தக் கட்டுப்பாடு அடியோடு அகன்றால்தான் முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மார்க்கெட்டிற்கு 10 மூட்டை அதிகம் வந்தால் விலை குறையும், வரவில்லையென்றால் விலையேறும். எனவே, அரசாங்கம் இதிலே ஈடுபட்டு நாசம் செய்யாமலிருந்தால் நாட்டுக்கு நல்லது என்பதை அழுத்தந் திருத்தமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளுநர் அவர்கள் தம்முடைய உரையில் "இம்மாநிலத்தில் புதிய தொழில்களை நிறுவுவதற்குக் கவர்ச்சி அளிக்கும் வகையில் மின்சாரக் கட்டண அமைப்பை ஆய்வு செய்வதற்கென செயற்
ந.ப. 2-00 குழு ஒன்றை அரசு நியமித்தது" என்று சொல்லியிருக்கிறார்கள். தொழில்களுக்கு ஊக்கம் தருவதற்காக விற்பனை வரிச் சலுகைகள், மின்சாரக் கட்டணச் சலுகைகள் என்று கொடுக்கப்படுகின்றன. தொழில்கள் என்று சொல்லும்பொழுது விவசாயமும் ஒரு முக்கியமான தொழில், அந்த முறையில் விவசாயத்திற்கும் அப்படிப்பட்ட சலுகைகளைக் கொடுக்கவேண்டும், அப்படிக் கொடுக்காவிட்டாலும் உபத்திரமாவது கொடுக்காமல் இருக்கவேண்டும். எட்டேமுக்கால் பைசாவை பத்து பைசாவாக உயர்த்தியிருக்கிறார்கள். எங்கள் பகுதியாகிய கோவை போன்ற வறண்ட ஜில்லாக்களிலே





தண்ணீர் இறைக்க மற்ற ஜில்லாக்களிலே ஒரு யூனிட்டில் எடுக்கக் கூடிய தண்ணீருக்கு நாங்கள் 10 யூனிட் செலவு செய்யவேண்டிய நிலைமை இருக்கிறது. ஒரு பைப்போடு இரண்டு மோட்டார்களை இணைத்து 150, 200 அடி ஆழத்தில் இருந்து தண்ணீர் எடுக்க வேண்டியிருக்கிறது. மின்சாரச் செலவுக்குக் கூட உற்பத்தியாகும் தானியம் போதாது. ஆகவே, தொழிலுக்குச் சலுகை கொடுப்பதைப் போலவே விவசாயத்திற்கும் சலுகை கொடுத்தால், சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுக்கும் வாழ வழி ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

"பகடு புறந்தருநர் பாரம் ஓம்பிக்
குடி புறந்தருகுவை யாயின்
அடி புறந்தருவர் நின் அடங்காதோரே"

என்றதுபோல் விவசாயிகளுக்குப் பெரும் பாரத்தைப் போட்டு மற்றவர்களுக்குக் குறைப்பதைப்போல் குறைக்காவிட்டாலும், விவசாயிகளுக்கு இருக்கின்ற கட்டணத்தையாவது கூட்டாமல் இருக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

வருவாயைக் காட்டிலும் செலவினம் கூடிக் கொண்டே வருகிறது என்று கவர்னர் அவர்கள் உரையிலே கூறியிருப்பதை எல்லோரும் மனத்தில் பதித்துக் கொள்ள வேண்டும். அரசாங்கத்தின் வருவாயைப் பெருக்குவதற்கு எத்தனையோ முறைகள் எல்லாம் கையாளப்பட்டு வருகின்றது. அவ்வளவுக்குப் பிறகும் தொல்லைகளையும், வேதனைகளையும் அனுபவிக்கத்தான் வேண்டுமென்று தெளிவாகக் கூறியிருக்கிறார்கள்.

"ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை"

என்று வள்ளுவப் பெருந்தகை கூறுகின்றார். வருகின்ற வழி குறைந்தால் தவறு இல்லை. போகின்ற வழி பெருகக் கூடாது. இதை நாம் கடமையாகக் கொள்ள வேண்டும். போகின்ற வழிகளை ஏராளமாகப் பெருக்கிவிட்டு அதற்கு வருவாயைப் பெறுவதற்கு வழி செய்கிறோம். விற்பனை வரியை 50 சதவிகிதத்திற்கு மேல் கூட்டியிருக்கிறார்கள். இன்னும் எத்தனையோ வரிகளைக் கூட்டிப் போட்டும் மொத்தத்தில் வருவாய் குறைவு என்றால் அது எதைக் காட்டுகிறது? திட்டங்களில் தவறுகள் நிச்சயமாகத் தெரிய வேண்டும். வருவாயைப் பெருக்குவதற்கு முறை தவறிப் போனால் தீங்குகளைத்தான் அனுபவிக்க வேண்டி வரும். லாட்டரிச் சீட்டு போன்ற இனங்கள் நாட்டினுடைய பொருள் வருகின்ற ஊற்றை அழித்து விடும். ராஜாஜி கூறுகிறார், ஏன் வள்ளுவரே கூறுகிறார், காந்தியடிகள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் காலத்தில் அவர்களிடம் கோவா லாட்டரிபற்றிக் கேட்டதற்குக் காந்தியடிகள் பதில் கூறியிருக்கிறார். தர்ம காரியங்களுக்காக லாட்டரி

நடத்துவதில் என்ன தவறு இருக்கிறது என்று கேட்டதற்கு எந்தத் தர்ம காரியமானாலும் மக்களுடைய மனத்திலே உள்ள அறியாமையை, ஏழ்மையைக் கொண்டு பேராசையைத் தோற்றுவிக்கும் வகையில் தவறான காரியங்களைச் செய்யக்கூடாது என்று மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். இதனாலே மக்கள் படுகின்ற வேதனைகளை வருணிக்க நேரம் இல்லை. ஏழைகள் அழும் கண்ணீர் நிச்சயமாக நாட்டை வாட்டத்தான் செய்யும். நேரான முறையில் ஆட்சியாளர்கள் வரி வசூல் செய்யவேண்டும். முறை தவறி வசூலிப்பது தவறு. ஐந்தாவது பிராயத்தில் ஊமைத்தனம் நீங்கிப்பாடிய குமரகுருபர்—

"குடிகொன்று இறை கொள்ளும் கோமகற்குக்
கற்று
மடிகொன்று பால் கொளளும் மாண்பே"

என்று பாடினார். குடிகளை வருத்தி இறை கொள்ளுவது மாட்டின் மடியை அறுத்து பால்குடிப்பதற்கு ஒப்பாகும் என்றார். ஆகவே, நியாயமான முறையில் மக்களிடம் இருந்து வருவாயைப் பெற வேண்டுமே தவிர, மக்களைக் கசக்கிப் பிழிந்து பெறக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சையில் உழவுத் தொழிலாளர் சிக்கலைப் போக்க கணபதியாப் பிள்ளை கமிஷன் நியமிக்கப்பட்டது. அரசாங்கம் என்ன கருத்தைச் சொல்லுகிறதோ, அதைச் சொல்லுவதற்கு ஒரு ஆளாகத்தான் இத்தகைய கமிஷன்கள் எல்லாம் ஏற்படுத்தப்படுகின்றன. கமிஷன் ரிப்போர்ட்டில் பல தவறுகளைச் செய்திருக்கிறார்கள். கமிஷன் அக்கிரமமாக நடந்து கொண்டிருக்கிறது. ஒரு உழவுக்குக் கூலி இரண்டே முக்கால் ரூபாய் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். கடந்த வறட்சி நிலையில் கால்நடைகளை எல்லாம் விற்று விட்ட காரணத்தால் எங்கள் ஊரில் இந்த ஆண்டு ஒரு ஏருக்கு 20 ரூபாய் முதல் 22 ரூபாய் வரை கொடுத்து உழுதிருக்கிறார்கள். இது உண்மையான, சத்தியமான வார்த்தை. இந்த நிலையில் இரண்டே முக்கால் ரூபாய் என்று சொன்னால் எப்படி இருக்கும்? இந்த மாதிரிக் கமிஷன்களால் உண்மைக்குப் புறம்பான கருத்துக்கள் தான் கிடைக்கின்றன.

ஹொசூரில் நடந்த அக்கிரமம் மனத்தைப் புண்படுத்துகிறது. போலீசார் அக்கிரமமாக நடந்து கொண்டதும், அட்டகாசமும் சகிக்க முடியாதது. அதைப் பற்றிக் கமிஷன் விசாரிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இந்த அரசாங்கத்தில் 'ஒன் மேன் கமிஷன்' என்பது அரசாங்கம் சொல்லுவதைத் திருப்பிச் சொல்லும் ரப்பர் ஸ்டாம்பாகத்தான் இருக்கிறது. இந்த மாமன்றத்திலே வேட்டைக்காரன் புதூரில் தங்கவேலு கவுண்டர் செய்த அக்கிரமத்தைப் பற்றித் தெளிவாகக் கூறினார்கள். இதைப் பற்றி நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கூடக் கொண்டு வந்தேன். ஐந்து நாட்கள் போலீஸ் ஸ்டேஷனில் வைத்து அடித்துக் காயப்படுத்தி





யதை மறைந்த அறிஞர் அண்ணா அவர்களிடம் நேரிலேயே காட்டினேன். அதற்காக கமிஷன் என்குயரி என்று கெய்வாரைப் போட்டார்கள். கெய்வார் அவர்கள் ஒன்றுமே நடக்கவில்லை என்று முழுப் பூசனிக்காயைச் சோற்றில் மறைத்துத் தீர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். தங்கவேலு கவுண்டர் என்று ஒருவரே இல்லை என்று கூடச் சொல்லியிருந்தால் பொருத்தமாக இருக்கும். அத்தனை கேவலமாக எழுதி இருக்கிறார்கள். எவ்வளவு அயோக்கியத்தனமான முறையில் விசாரணை செய்கிறார்கள் என்பதை நான் நிரூபித்துக் காட்டத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** கமிஷன் 'அயோக்கியத்தனமான' முறையிலே விசாரணை செய்தது என்ற முறையிலே அங்கத்தினர் அவர்கள் வார்த்தைகளைப் பேசுவது அவர்களுடைய தகுதிக்குச் சரியல்ல என்று கருதுகிறேன். தயவு செய்து அந்த வார்த்தையைத் திரும்பப் பெற வேண்டும். ஹொசூரிலே பயங்கரமான சம்பவம் என்றார்கள். மாமேதை அண்ணா என்று அவரே சொன்னார். ஹொசூரிலே அந்த மாமேதையின் சிலையை உடைத்தார்கள். அதைக் கூடப் பாராட்டிப் பேச விரும்புகிறாரா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்:** அண்ணா அவர்களிடம் அன்பும், அபிமானமும் கொண்டவன்தான்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 'கமிஷன் அயோக்கியத்தனமானது' என்ற முறையிலே நீங்கள் சொன்ன வார்த்தையைத் திரும்பப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்:** என்னுடைய உள்ளக் கொதிப்பால் சொல்லிவிட்டேன். அது திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டிய வார்த்தைதான் என்றால் திரும்பப் பெற்றுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மறுபடியும் வற்புறுத்திக் கூறுகிறேன். 'கமிஷன் அயோக்கியத்தனமானது' என்ற வார்த்தையை இந்த மன்றத்தின் மரபைக் காக்கும் வகையில் திரும்பப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்:** நான் அதை வாபஸ் பெற்றுக்கொண்டுதான் இதைச் சொன்னேன். அந்த வார்த்தை தவறாக இருந்தால் மறுபடியும் அதை திரும்பப் பெற்றுக் கொள்கிறேன் என்று சொல்கிறேன். உண்மைக்குப் புறம்பான தவறான திட்டங்களை அரசாங்கம் என்ன நினைக்கிறதோ, அந்த விதத்தில் செய்ய கமிஷனை அமர்த்திக் கொள்ளக்கூடாது.

அடுத்தபடியாக, அண்ணா அவர்களின் சிலையை உடைத்தது ஒரு மாபெரும் தவறு என்பதை ஒத்துக்கொள்ளவில்லை என்றால் அது கொடுமையானது. தவறு செய்பவர்களைக் கண்டு பிடித்து தண்டிக்கவேண்டுமே தவிர, ஊருக்குள் சென்று கண்டவர்களை எல்லாம் பிடித்து அடிப்பது என்பது தவறான காரியமாகும். இம்மாதிரியான தவறுகள் நடக்காமல் நேர்மையான நிர்வாகம் நடைபெற தகுந்த துணை புரியவேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு என் நன்றியைக் கூறிக் கொண்டு அமர்கிறேன்.

* திரு. கொளத்தூர் கோதண்டம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மேன்மைதங்கிய ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து எனது கருத்துக்களை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எனக்கு முன்னால் பேசிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு மார்டின் அவர்கள் பேசும்போது, தமிழகத்தில் இன்றையதினம் நல்லதொரு சூழ்நிலை இல்லையென்றும், பயிர்கள் நல்லமுறையில் இல்லையென்றும் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். நான் அவர்களிடம் மெத்தப் பணிவுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புவதெல்லாம், இன்றையதினம் தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிற சூழ்நிலை, இன்றையதினம் தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிற உணவு உற்பத்திக்கான சாத்தியக் கூறுகள் இவைகளை எல்லாம்பற்றிச் சிந்தித்துப் பார்க்கிற நேரத்தில் நிச்சயமாகத் தமிழ்நாடு கடந்த பல ஆண்டுகளாக இருந்ததைவிட இன்றையதினம் நல்லமுறையில் இருக்கிறது என்பதை நான் அவர்களுக்குச் சுட்டிக்காட்டி, அவர்கள் செல்லுகிற வழிகளில் எல்லாம் இருக்கிற பச்சைப்பசேல் என்ற காட்சியைப் பார்த்தால் தமிழ்நாட்டின் நல்லநிலைமையைப் புரிந்து கொள்ள முடியும் என்பதை நான் முதன்முதலில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கவர்னர் அவர்களின் உரைமீது பேசுகிற நேரத்தில் கூற விரும்புவது, தமிழ்நாட்டில் பல வரட்சிகள் இதற்கு முன்னால் ஏற்பட்டிருக்கின்றன. வரட்சி மட்டுமல்ல, பல புயல்கள் பல இடங்களில் ஏற்பட்டிருக்கின்றன, பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட நேரங்களில், பெரிய பஞ்சம் ஏற்பட்ட நேரங்களில் எல்லாம் இந்த நாட்டை ஆண்டு கொண்டிருந்தவர்கள்—அவர்கள் எந்த வழியைப் பின்பற்றினவர்களாக இருந்தாலும் சரி அல்லது எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி. . . இந்த நாட்டு மக்களின் நலனுக்காக எடுத்துக்கொண்ட முயற்சிகள் என்ன, அதேபோன்று மத்திய அரசிடமிருந்து பெற வேண்டிய பணத்தை பெற வேண்டிய முறைப்படி பெற்றிருக்கிறார்களா என்பதையெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.



ஏறத்தாழ 14 கோடி ரூபாய் அளவிற்கு நாம் மத்திய அரசிடமிருந்து பெற்றிருக்கிறோம் என்றால், அந்தப் பணத்தைப் பெறுவதற்கான சாத்தியக்கூறுகளை ஏற்படுத்தித் தந்தது திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை யாரும் மறுத்து விடவோ அல்லது மறந்து விடவோ முடியாது. அதிலும் குறிப்பாக இன்றையதினம் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிற மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதில் எந்தளவிற்கு அக்கறை கொண்டார்கள் என்பதும் அதற்கு அமைச்சரவை எந்தளவிற்கு உதவி புரிந்தது என்பதும் நம்மால் மறக்க முடியாத பெரியதொரு உண்மையாகும். இப்படிப்பட்டதொரு வரட்சி ஏற்பட்டும், கொடியதொரு பஞ்சம் ஏற்பட்டும் அந்தப் பஞ்சத்தில் ஒருவர் கூட சாகவில்லை என்ற நற்சாட்சிப் பத்திரத்தை இன்றையதினம் தமிழ்நாடு அரசு பெற்றிருக்கிறது என்பதை நிச்சயமாக யாரும் மறுத்துவிட முடியாது.

நான் என் அருமை நண்பர்களைப் பல ஆண்டுகளுக்குப் பின்னால் செல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பெரிய பஞ்சம் ஏற்பட்ட காலத்தில், இவ்வளவு பெரியதொரு வரட்சி ஏற்படாத நேரத்தில், இரண்டு வருடங்கள் மழையே இல்லை என்ற நிலை இல்லாதிருந்த காலத்தில் எல்லா ஏரிகளும் காயாமல் இருந்த நேரத்தில் மதிப்பிற்குரிய காங்கிரஸ் கட்சி ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது பலர் பஞ்சத்தாலும் பட்டினியாலும் செத்திருக்கிறார்கள் என்பதைக் குறித்து பல உயர்நீதிமன்றங்களில் நீதிபதிகள் தீர்ப்பு கூறியிருக்கிறார்கள். சாதாரண காலங்களில் கூட பட்டினியால் சாவு ஏற்பட்டிருக்கிறது, பஞ்சத்தால் சாவு ஏற்பட்டிருக்கிறது. இதற்கு சர்க்கார்தான் பொறுப்பு என்று கூட நீதிமன்றங்களில் தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றையதினம் பல மோசமான நிலைமைகள் ஏற்பட்டும்கூட, குடிக்க தண்ணீர் கிடைக்காது இருக்கிற கால்நடைகள் நிச்சயமாக செத்து விடும் என்ற நிலைமை ஏற்பட்ட போதுகூட அதற்கு இடம் கொடுக்காமல் 14 கோடி ரூபாயை மத்திய அரசிடமிருந்து பெற்றதோடு மட்டுமல்லாமல் எப்படி எப்படி அதைச் செலவு செய்யவேண்டும், எந்த வகையில் அதை செலவு செய்யப்படவேண்டும் என்று வழி வகுத்து அதன்படி செலவு செய்திருக்கிறார்கள்.

மாண்புமிகு மார்டின் அவர்கள் பேசும்போது இதில் பல ஊழல்கள் நடந்திருப்பதாகச் சொன்னார்கள். நான் அவர்களுக்கு சொல்ல விரும்புவது, வரட்சி நிவாரணத்திற்காக செலவு செய்யப்பட்டபோது கூடுமானவரையில் ஊராட்சி ஒன்றியத் தலைவர்களின் மூலமாகச் செலவு செய்யப் பட்டது. ஊராட்சி ஒன்றியங்களில் தலைவர்களாக இன்றையதினம் பொறுப்பேற்றிருப்பவர்கள் பெரும்பாலோர் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் என்பதை மறுத்துவிட முடியாது. வரட்சி நிவாரணப் பணியில் ஊழல் ஏற்பட்டதாக இதுவரையிலும் யாரும் சொன்னதாக எங்களுக்கு தகவல் இல்லை. அதேநேரத்தில் பல காங்கிரஸ் ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பாராட்டி தீர்மானங்கள்

[திரு. கொளத்தூர் கோதண்டம்] [1970 ஜனவரி 21

போட்டிருக்கிறார்கள். வேண்டிய காரியங்களை காலாகாலத்தில் செய்ததாக திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு நற்சான்று கிடைத்திருக்கிறதே தவிர, வேறொன்றுமல்ல.

நான் மிகவும் வருத்தப்படுகிறேன், ஒன்று சொல்ல. தமிழ் நாட்டிற்கு 14 கோடி ரூபாய் கொடுத்துவிட்டார்கள், ஆனால் உத்திரப் பிரதேசத்திற்கு 2 கோடி ரூபாய்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று காங்கிரஸ் கட்சியின் பெரும் தலைவர் சொன்னதுபற்றி நான் வருத்தப்படவில்லை. யு.பி. க்கு வேண்டுமானால் அவர்கள் 20 கோடி ரூபாய் பெற்றுக் கொடுத்திருக்கலாம். ஆனால் பச்சைத் தமிழன் என்று பாராட்டப்படக் கூடியவர் தமிழ் நாடு 14 கோடி ரூபாய்தானே பெற்றிருக்கிறது, 20 கோடி ரூபாய் பெற்றிருக்கக் கூடாதா என்று அவர்கள் கேட்டிருப்பார்களானால், தமிழன் என்ற முறையில் அவர்களுக்கு நன்றி செலுத்த கடமைப்பட்டிருப்பேன். தமிழ்நாட்டிற்கு 14கோடி ரூபாய் யு.பி.க்கு 2 கோடிதானா என்று அவர்கள் சொல்லியிருப்பதை என்னைப் பொறுத்தவரையில் அதை புரிந்து கொள்ள முடியவில்லை, அதை எப்படி ஏற்றுக்கொள்வது என்பதும் தெரியவில்லை. இருபது ஆண்டு அரசியல் வரலாற்றில் செய்யப்படாத காரியத்தை திராவிட முன்னேற்றக் கழக அரசு மத்தியில் மாறுபட்ட அரசு இருந்தும், மத்திய அரசில் மாறுபட்ட தலைமை இருந்தும் 14 கோடி ரூபாய் பெற முடிந்திருக்கிறது.

அதுமட்டுமல்ல. 100, 150 ஆண்டுகளாக செய்யமுடியாத காரியங்கள் ஏறத்தாழ மூன்று மாதக் காலத்தில் இன்றையதினம் தமிழக அரசு சாதித்திருக்கிறது. உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமானால் மதுராந்தகம் ஏரி மதுராந்தகச் சோழன் காலத்தில் கட்டப்பட்டது. சரித்திரத்தை எடுத்துப் பார்த்தால் அல்லது சர்க்கார் தஸ்தாவேஜுகளைப் புரட்டிப் பார்த்தால் தெரியும், அந்த ஏரியில் இதுவரை தூர் வாரப்பட்டதாக சான்று இல்லை என்பது. அப்பேர்ப்பட்ட மதுராந்தகம் ஏரி போன்ற பெரிய ஏரிகளில் தூர் வாரப்பட்டிருக்கிறது என்ற பெருமையை இன்றையதினம் பொறுப்பேற்றிருக்கிற திராவிட முன்னேற்றக் கழக அரசு பெற்றிருக்கிறது, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னால் அதை யாரும் மறுத்துவிட முடியாது. அந்தளவிற்கு எங்களைப் பாராட்ட உங்களுக்கு எண்ணமில்லாவிட்டாலும் இந்தக் காரியங்களைச் செய்திருக்கிறார்கள் என்றளவிற்கு உங்கள் உள்ளத்தில் நீங்கள் நினைக்காவிட்டாலும் தமிழக மக்கள், விவசாயப் பெருங்குடி மக்கள், நிச்சயமாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் கவர்னர் பெருமான் அவர்கள் உரையில் எடுத்துக் கூறியிருப்பதைப் பார்த்தால், அதில் கூறப்பட்டிருக்கும் விவகாரங்கள் ஒவ்வொன்றுக்கும் இடையே உறவு இருப்பது தெரிய வரும். உதாரணத்திற்காகச் சொல்கிறேன். பதினான்கு கோடி ரூபாய்



1970 ஜனவரி] [திரு. கொளத்தூர் கோதண்டம்]

பெற்றிருக்கிறோம் என்றால் ஏரிகள், கண்மாய்கள் போன்றவற்றிற்கு தண்ணீர் விடவேண்டிய காரியத்தைச் செய்திருக்கிறோம். அதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். விவசாயப் பெருங்குடி மக்களுக்காகக் கடன்கள் வழங்குவதற்காக மேலும் 10 நில மேம்பாட்டு வங்கிகளைத் திறக்க அரசு முடிவு செய்துள்ளது. கடன்களை கொடுத்தால் மட்டும் போதாது. கிணறுகள் வெட்டினால் மட்டும் போதாது. அவற்றிற்கு வேண்டிய மின்சார இணைப்புகளைக் கொடுத்தால்தான் பயிர் செய்ய முடியும். அந்த எண்ணத்தோடு இந்த ஆண்டு 5,799 விசையேற்றங்களுக்கு மாறாக இந்த ஆண்டில் 10,000 விசையேற்றங்கள் என்று உயர்த்தப்பட்டிருக்கிறது. அப்படி மின்சார இணைப்பு கொடுப்பதன் மூலமாகத்தான் நிலமற்ற விவசாயிகளுக்கு நிலம் கொடுக்கப்பட்டாலும் அவர்கள் உற்சாகமாக வேலை செய்யமுடியும்.

நடப்பாண்டில் 100,000 ஏக்கர் நிலங்களை ஒப்படை செய்ய வேண்டும் என்பது அரசின் குறிக்கோள் என்பதை கவர்னர் பெருமான் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏறக்குறைய 4,60,000 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுக்க தயாராயிருக்கிறோம் என்றும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. விவசாயத் துறையில் வேண்டிய அக்கறை காட்டப்படுகிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும். இவற்றையெல்லாம் செய்வதோடு கூட, மக்களுக்கு கிடைக்கவேண்டிய உணவு தானியங்கள் குறித்த காலத்தில் கிடைக்கவேண்டும், அதுவும் குறைவான விலையில் கிடைக்கவேண்டும் என்பதை நன்கு சிந்தித்துப் பார்த்து நமது அரசு உணவுக் கட்டுப்பாட்டை இன்றையதினம் நீக்கியிருக்கிறார்கள். உணவுக் கட்டுப்பாட்டை நீக்கியிருப்பதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களையும் உணவு அமைச்சர் அவர்களையும் நிச்சயமாக நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். தெள்ளத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள், வாங்குவோரும், உற்பத்தி செய்வோரும், இடையிலே இருக்கும் வணிகர்களும் இந்த நாட்டுக்கு நல்ல பல காரியங்களைச் செய்ய, இதை ஒரு வாய்ப்பாகத்தான் கருதி இருக்கிறோம் என்று சொல்கிறார்கள். அப்படி வறட்சி நீங்க எல்லா இடத்திலும் தண்ணீர் கிடைக்க வேண்டிய அளவுக்குக் கிடைத்து, உணவு உற்பத்தி பெருகும் நேரத்தில், உணவுப் பொருள்கள் தட்டின்றிக் கிடைக்க வேண்டும். அப்படி இறுதியிலே தட்டுப்பாடு ஏற்பட்டால், சித்தாந்த ரீதியில், இப்பிரச்சினையை எடுத்துக் கொள்ளாமல் நாட்டு மக்களுக்குப் பயன்படும் ரீதியிலே செல்வதாக உணவு அமைச்சரவர்களும், முதலமைச்சரவர்களும் கூறியிருக்கிறார்கள்.

ஆகவே, விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டிய மின்சாரம், கடன்கள், தண்ணீர், இதற்கு மேலாக விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டிய உரிய விலை கிடைக்கப் பல சாத்திய கூறுகள் இதிலே இருக்கின்றன. எனவே, விவசாயிகளின் சார்பாக, கவர்னர் பெருமான் அவர்கள் ஆற்றிய உரைக்கு என்னுடைய நன்றியைத் தெரி

வித்துக்கொண்டு, இத்தகைய நல்ல காரியங்களைப் பாராட்டா விட்டாலும், எங்களுக்குப் பாதகமாக இருக்க வேண்டாமென்று எதிர்கட்சி நண்பர்களைக் கேட்டுக் கொண்டு திரும்பவும் இந்த நன்றி கூறும் தீர்மானத்தை ஆதரித்து விடை பெறுகிறேன், வணக்கம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** உதவி சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் ஆற்றிய உரையில் ஓரிரு கருத்துக்களைப்பற்றி நான் கூற முற்படுகிறேன். இங்கு எனக்கு முன்பு பேசிய திருவாளர் மார்டின் அவர்கள் ஆணித்தரமாக, என் கட்சியின் சார்பாக, கொள்கை விளக்கத்தோடு, ஒரு சிரிய சொற்பொழிவை நிகழ்த்தினார்கள். தமிழ் நாட்டிலே இன்றைக்கிருக்கும் அரசியல் சூழ்நிலைகளைப் பார்க்கும்பொழுது இந்த தேசம் எங்கு சென்று கொண்டிருக்கிறது என்பதை மக்கள் எல்லோரும் உற்றுக் கவனித்துக்கொண்டிருக்கிறார்கள். கவர்னர் அவர்கள் உரையைப் பார்க்கும் பொழுது, இந்தத் தேசத்திலே, செல்வப் பெருக்கு எடுத்து விட்டதாகவும், சீரும் சிறப்புமாக ஆட்சி நடப்பதால், இந்தப் பகுதியிலே வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிந்துவிட்டது என்ற பாணியில் உரையாற்றி இருக்கிறார்கள். ஆனால், இந்தத் தேசத்திலே வேலையில்லாத் திண்டாட்டம் வளர்ந்து கொண்டிருக்கிறது, பொறியியல் படித்தவர்கள் மற்ற துறையில் பயிற்சிப் பெற்றவர்கள், ஆசிரியர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தினால் வாடி வதங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. எனக்கு முன்னால் பேசிய திரு. அரங்கநாதன் அவர்கள் 75,000 என்ஜினியர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று கூறினார்கள். ஆனால், வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க இந்த அரசாங்கம் என்னென்ன திட்டங்கள் வைத்திருக்கிறது என்பதைப்பற்றி கவர்னர் உரையிலே பார்த்தால், எங்கும் இடம் பெற்றிருப்பதாகத் தெரியவில்லை. எந்த ஒரு பகுதியிலே பார்த்தாலும், அரசாங்கத்தின் கொள்கை விளக்கம் அடங்கியிருக்கும், சம்பிரதாயமாக இருக்கும் என்ற அளவிலே இருக்கும். இதைக் கொள்கை விளக்கம் என்று நாங்கள் கருதவில்லை.

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க நல்ல பல திட்டங்கள் உள்ளனவா ? இலாக்காவிலிருக்கும் பலர் வேலையிலிருந்து நீக்கப்படுகிறார்கள். குறிப்பாக சிவில் சப்ளைஸ் இலாக்காவிலே வேலை செய்து வந்தவர்கள், 4, 5 வருஷங்கள் வேலை செய்து கொண்டிருந்தவர்களுக்கு, மாற்று வேலை கொடுக்காமல் இருந்து கொண்டேயிருக்கிறார்கள். அந்த நிலைமை கன்னியாகுமரி ஜில்லாவிலே இருக்கிறது. அதற்காக, அவர்கள் பெயரால் பல மனுக்கள், முதலமைச்சரவர்களிடத்திலும், உணவு அமைச்சர்களிடத்திலும், இன்னும் மற்ற அதிகாரிகளிடத்திலும் கொடுத்தார்கள். மாற்று வேலை கொடுக்க அரசாங்கம் உடனடியாக ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.



**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், உணவுக் கட்டுப்பாடு நீக்கம் காரணமாகப் பலபேர்களுக்கு வேலையிழப்பு ஏற்பட்டுள்ளதாக இதுவரையில் தகவல் இல்லை. அப்படிப்பட்ட தகவல் இருந்தால் விசாரிக்கத் தயாராக இருக்கிறோம். 'சீசனல் எம்பிளாய்ஸ்' களாக வைக்கப்பட்டிருப்பவர்கள், கண்ட்ரோல் இருக்கும்பொழுதுகூட, அந்த சீசன் போனபிறகு நீக்கப்பட்டு விடுவார்கள். ஆனால், 4, 5 வருஷம் வேலைபார்த்து நிரந்தரமாகியுள்ளவர்கள் நீக்கப்பட்டிருக்கிறார்களா என்றால், யாரும் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருப்பதாகத் தகவல் இல்லை. அப்படித் தகவல் இருந்தால் அங்கத்தினர் அவர்கள் கூறினால் கவனிக்கப்படும்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவரவர்களே, குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் பேசும் பொழுது வாய்ப்பிருந்தால், நீங்கள் எடுத்துக் கூறலாம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** சமீபத்தில் முதலமைச்சர் அவர்கள் கன்னியாகுமரிக்கு விஜயம் செய்தார்கள். அப்பொழுது வேலைவாய்ப்பு இழந்தவர்கள், 4 வருஷம், 5 வருஷம் வேலை செய்தவர்கள் நிரந்தரப் படுத்தப்படவில்லை. ஒருவேளை அவர்கள் 10 (இ) விதியின்கீழ் அப்பாயின்ட்மென்ட் செய்யப்பட்டவர்கள் மெமோ சொல்லக்கூடும். 4, 5 வருஷங்கள் வேலை பார்த்தவர்கள் மெமோரண்டத்தை முதலமைச்சர் அவர்களைக் கண்டு சந்தித்துக் கொடுக்க சந்தர்ப்பம் இல்லாததால் 'பி.ஏ.' விடம் கொடுத்திருக்கிறார்கள். சிவில் சப்ளைஸ் கமிஷனர் அவர்களிடம் கொடுத்திருக்கிறார்கள். நானும், சிவில் சப்ளைஸ் கமிஷனரும் கன்னியாகுமரிக்கு விஜயம் செய்தபொழுது, அவர்கள் குறைகளை மனுவிலே கொடுத்தார்கள். வேண்டுமானால் இன்னொரு மனுவைப் பெற்றுக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன் என்று சொல்ல விரும்புகிறேன்.

ஆசிரியர் பயற்சி பெற்ற பலர் இருக்கிறார்கள். அவர்களுக்கு இன்னும் வேலைவாய்ப்பு இல்லை. எந்தப் பகுதியிலே சென்றாலும், வேலை வாங்கித் தாருங்கள். கம்பெனிகளிலாவது வேலை வாங்கிக் கொடுங்கள் என்று சட்டசபை உறுப்பினர்களாகிய எங்களை அடிக்கடி தொந்தரவு செய்து வருகிறார்கள். இந்தத் தேசத்திலேயுள்ள மாணவர்கள், நாம் படித்து வெளியே வந்தால் வேலை கிடைக்குமா என்று ஐயப்பாடு கொண்டிருக்கிறார்கள். விவசாயக் கல்லூரியிலே வேலை நிறுத்தம் என்று சொல்லுகின்ற காரணமாக நாங்கள் இங்கு எடுத்துக் கூற வேண்டிய நிலை இருக்கிறது. 'ஆர்ட்ஸ்' கல்லூரியில் இம்மாதிரி வேலைநிறுத்தம் ஏற்பட்டிருக்கிறது. எங்கு பார்த்தாலும், வேலை கிடைக்குமா என்ற ஐயப்பாடு நிலவி வருகிறது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** விவசாயக் கல்லூரியில் வேலைநிறுத்தம் நடைபெறுவது, வேலை கிடைக்குமா என்ற ஐயப்பாட்டின் காரணமாகத்தான் என்று அவர்கள் குறிப்பிடுகிறார்களா? அதுதான் உண்மையா? நானும் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** விவசாயக் கல்லூரியிலே அவர்கள் 'டீன்' நியமிக்க வேண்டியதுபற்றி, விவசாயப் பட்டம் பெற்றவர்கள் வர வேண்டுமென்ற ஒரு திட்டம் இருக்கிறது, அதை இல்லையென்று நான் சொல்லவில்லை. அது ஒரு காரணம். இன்றிருக்கும் மாணவர்கள் பெரும்பாலும், தங்களுடைய வாழ்க்கையிலே எதிர்காலம் இருண்டு இருக்கிறது என்று நினைக்கிறார்கள். இன்ஜினியர் பட்டம் பெற்று வெளியே வந்தால், வேலை கிடைக்கவில்லை என்ற இம்மாதிரியான மனப்பான்மை இருக்கிறது. சமதர்மம் பேசுகிறோம், பேங்குகளைத் தேசிய மயமாக்கியதாகப் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறோம். அதிகாரமெல்லாம் டெல்லியிலே குவிந்து இருக்கக்கூடாது, என்றும், ஏழை மக்களுக்காக புதிய திட்டங்களை மாநில அரசாங்கத்திற்கு வழங்க வேண்டுமென்று உரையிலே இருக்கிறது. பாங்குகளைத் தேசிய உடைமையாக்கிவிட்டதால் மட்டும் பசுமைப் புரட்சி வந்து விடாது. அவர்கள் வாழ்வு மறுமலர்ச்சி அடைய வேண்டுமென்றால், சாதாரண மக்கள் தொழில் செய்ய வேண்டிய வசதி ஏற்பட வேண்டும். அப்பொழுதுதான் சமதர்மம் ஏற்பட்டு, மறுமலர்ச்சி ஏற்படும். அதன்படி இல்லாமல், நாம் எவ்வளவு தீவிரமாக எடுத்துக் கூறினாலும் இம்மாதிரித் திட்டங்கள் வெற்றியடையப் போவதில்லை.

வறட்சி நிவாரணம் பற்றி இங்கு அதிகமாக எடுத்துக் கூறினார்கள். எங்கள் மாவட்டத்திலே, வறட்சி நிவாரணத்திற்காக 26 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். பதினைந்து கோடி, 18 கோடி ரூபாய்க்குத் திட்டமிட்டிருக்கிறார்கள். எங்கள் மாவட்டம் ஒரு சிறிய மாவட்டமாக இருக்கலாம், வறட்சி இல்லை என்ற அளவுக்குக் கட்சியிலே கருதக்கூடும். ஆனால் வறட்சி எங்கு அதிகமாக இருக்கிறதோ அந்தப் பகுதியிலே இந்த நிவாரண வேலைகளைக் கவனிக்காமல், திராவிட முன்னேற்றக் கழக அன்பர் ஜெயித்த தொகுதியிலே மட்டும் நடந்திருக்கிறது என்று பகிரங்க குற்றச்சாட்டை இந்த மன்றத்திலே சாட்ட கடமைப்பட்டவனாக இருக்கிறேன். என் போன்றவர்கள் இருக்கும் தொகுதியிலே செய்ய அங்கு இருக்கும் நிர்வாகிகள் தயாராக இல்லை. குறிப்பாக, ஆட்சித் தலைவராக இருப்பவர், ஒரு கட்சியின் பெயரால் செயலாற்றுகின்றாரோ என்று ஐயப்படும் அளவுக்கு இருக்கிறார்கள். ஆனால் இங்கு சொன்னார்கள் பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர்கள் மூலமாக இந்த வறட்சி நிவாரண வேலைகளை நடத்தினோம் என்று சொன்னார்கள். ஆனால் உண்மை அதுவல்ல என்று ஆணித்தரமாகக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.



**மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்:** இருபத்து ஆறு லட்சம் கன்னியாகுமரி ஜில்லாவில் வறட்சி வேலைக்காக ஒதுக்கப்பட்டது என்று அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். வெற்றிபெற்ற திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் தொகுதியில் அந்த வேலை செய்யப்பட்டது என்றார்கள். அந்த 26 லட்சம் ரூபாயும் வெற்றி பெற்ற திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினரின் ஒரு தொகுதியில் மட்டும் செலவு செய்யப்பட்டது என்று உறுதியோடு கூறுகிறார்களா என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: Lion's share has been spent in that constituency.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்படியெல்லாம் பேசுவது சரியல்ல. கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மற்ற மாவட்டங்களுக்கு வறட்சியின் தன்மையை எந்த அளவுக்குப் பார்த்துச் செய்ததோ அதைவிட மிகுந்த கருணையோடு செய்யப்பட்டிருக்கிறது. எனவே, இப்படிக் குற்றம் சாட்டுவதானால், கொளச்சல் தொகுதிக்கு அதிகமாகச் செய்திருக்கிறார்கள் என்று சொல்லி, உப தேர்தல் கொளச்சல் தொகுதியில் வரவிருக்கிறது, அதற்காகத்தான் இப்படிச் செய்திடுவார்கள் என்று கற்பனையாகப் பேச முடியும். அது அவ்வளவு சரியல்ல. உண்மையில், எங்களால் செய்யப்படாமல் இருக்குமேயானால், இங்கெல்லாம் செய்திருக்கிறார்கள் என்று கூறுவது நியாயமாக இருக்குமே தவிர, திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் தொகுதி என்றால், அவர் உறுப்பினராக வந்தது நாங்கள் செய்த பாவம் அல்ல, அது அந்த மாவட்ட மக்கள் அளித்த தீர்ப்பு. அந்த வகையிலே அந்தக் காரணம் தான் என்பதாக, மாவட்ட நிர்வாகத்தினரை சம்பந்தப்படுத்தி, கட்சி முறையில் செயல்படுகிறார் மாவட்டக் கலெக்டர் என்று சொல்வது, அதுவும் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொல்வது அவ்வளவு சரியானது அல்ல.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** இந்த வரட்சி நிவாரண வேலைகளை எங்கெங்கு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆதரவு இருக்கிறதோ அந்தப் பகுதிகளில் மட்டும் செய்திருக்கிறார்கள் என்பதை மறுமுறையும் நான் வற்புறுத்திக் கூறுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். அதை நிரூபிப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன். வேண்டுமானால் இந்த மன்றத்திலிருந்து ஒரு கமிட்டி அமைத்தால், நான் அதிலே அதைப்பற்றி தெளிவுபடுத்துவதற்குத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** நான் தெரிந்துகொள்ள விரும்புவது என்னவென்றால், கன்யாகுமாரி மாவட்டத்திற்கு அளித்த ரூ.26 லட்ச தொகையும் தோழர் பாலன் அவர்களின் தொகுதிக்கு மட்டும் செலவு செய்யப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கூறுகிறார்களா? அப்படியில்லை என்றால் இதைப்பற்றி இம்மாதிரி பேசிக் கொண்டிருப்பது சரியல்ல.

தக்க விஷயம் என்று மறு முறையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். கடுமையான வார்த்தைகளை என்னுடைய சொற்பொழிவில் உபயோகப்படுத்தியிருந்தால், என்னை மன்னிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மு. ச. சிவசாமி: ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர், இந்த மன்றத்திற்கு அப்பாற்பட்ட, ஒரு அரசியல் கட்சியினுடைய வேலை சம்பந்தமான செயல்களை இங்கே விவாதிப்பது முறையா?

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்கள் கலந்துகொண்ட நிகழ்ச்சிகளில் நடந்த இன்னும் சில காரியங்களைப் பற்றி. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒவ்வொரு உறுப்பினரும் 10 நிமிடங்கள் பேசவேண்டும் என்று நிர்ணயித்திருக்கிறோம். அமைச்சர் அவர்கள் உறுப்பினர் அவர்களுடைய சொற்பொழிவில் குறுக்கிட்டுப் பேச வேண்டிய அவசியம் ஏற்பட்டதால், மேற்கொண்டு அங்கத்தினர் அவர்களுக்கு 8 நிமிடங்கள் அனுமதித்திருக்கிறேன். ஒவ்வொரு உறுப்பினரும் 10 நிமிடங்கள்தான் பேசவேண்டும் 24-ம் தேதிவரையில் உறுப்பினர்களும், 27-ம் தேதி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு முதல் அமைசர் அவர்களும் பேச வேண்டும் என்றெல்லாம் பிஸினஸ் அட்வைஸரி கமிட்டியில் முடிவு எடுத்திருக்கிறோம். அதற்கு மாறாக ஒவ்வொரு உறுப்பினரும் 15 நிமிடங்கள் பேசிக் கொண்டிருந்தால் எப்படி விவாதத்தை சரியான நேரத்தில் முடிப்பது? 1½ மணிக்கு சட்டசபை ஒற்றிவைக்கப்பட வேண்டும்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டார்கள். அந்த நேரத்தைத் தள்ளிவிட்டு 10 நிமிடங்கள் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சர்கள் குறுக்கிடுவதற்கு உரிமை இருக்கிறது. அதன் காரணமாகத்தான் உறுப்பினர் அவர்களுக்கு அதிகமாக 8 நிமிடங்கள் கொடுத்திருக்கிறேன். அதற்கு மேல் நேரம் அளிக்க மறுக்கிறேன். (திரு. ஏ. ஆர். மாரிமுத்து, பேச அழைக்கப்பட்டார்).

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் உரையின் பேரிலே என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். ஆட்சியில் இருப்பவர்கள் பாராட்டத் தகுந்த சில காரியங்களைச் செய்திருந்தாலும், அதை மட்டும் இந்தச் சந்தர்ப்பத்தில் பேசிக் கொண்டிருப்பதை விட்டு செய்ய வேண்டியது யாது, செய்யத் தவறியது யாது என்பதை எடுத்துக்கூற விரும்புகியேறன். அம்மாதிரி எடுத்துக்கூறுகின்ற பொழுது, செய்ததை பாராட்டவில்லை என்று கருதிவிடக் கூடாது. [illegible] முறையிலே வைத்துப் பாராட்டுவது சரியல்ல





என்பது நீதி. அந்த முறையிலே செய்யக்கூடியது யாது, செய்யத் தவறியது யாது என்பதை மட்டும் எடுத்துக் கூற விரும்புகிறேன். ஆனால், செய்தவைகளுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு தமிழகத்தில் உணவுக் கட்டுப்பாடு ரத்து செய்யப்பட்டிருப்பது பல பகுதிகளிலிருந்து பாராட்டப்படுகிறது, பல பகுதிகளிலிருந்தே கண்டனம் செய்யப்படுகிறது எப்படி இருப்பினும், இதனுடைய விளைவை நாம் சில காலம் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். இதன் விளைவு எப்படி இருக்கும் என்று என்னால் இப்பொழுது கூற முடியவில்லை. இருந்தாலும் உணவுக் கட்டுப்பாடு கொண்டுவந்திருப்பதிலே எடுத்துக் கொண்டிருக்கிற முறைகளை சிறிது ஆராய்ந்து பார்க்கலாம் என்று கருதுகிறேன். எடுத்தது சரியா, தவறு என்று பார்க்காமல் எடுத்தவரையில் என்ன செய்யவேண்டும் என்பதை நான் கூற விரும்புகிறேன். இன்றைக்கு தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், கட்டுப்பாட்டை அப்படியே வைத்துக் கொண்டு, 10 கிலோவிற்கு மேல் வெளியே எடுத்துப் போகக் கூடாது, வியாபாரிகளிடம் விற்க வேண்டும் என்பதில் சரியான பலன் கிடைக்குமா என்பதில் சந்தேகம் இருக்கிறது. அப்பொழுது இருந்த காங்கிரஸ் ஆட்சியில். இம்மாதிரிக் கொள்கையைக் கையாண்டு பயன் அளிக்கவில்லை என்று அரசாங்கம் உணர்ந்தது. ஆகையினால், இந்தத் தடவை, அதையே மறுபடியும் பரீட்சிப்பது சரியா என்பதையும் யோசிக்க வேண்டும். நாடு பூரா லெவி ஸிஸ்டம் என்று வைத்து, அரசுக்குத் தேவையானதைக் கொள்முதல் செய்து, இப்பொழுது இருக்கும் அதிகாரிகளை அபடியே வைத்துக் கொண்டு செய்யலாமா என்பதையும் யோசிக்க வேண்டும். இப்பொழுது செய்திருக்கும் நிலையில் சங்கடங்கள் இருக்கின்றன. தஞ்சையில் வியாபாரிகள் கொள்முதல் செய்வதில், விவசாயிகளுக்குச் சரியான முறையில் பணம் கொடுத்து செயல்படுவார்களா என்பது சந்தேகம். அப்படி அவர்கள் கட்டுப்பாட்டு விலையில் வாங்கி, 50 சத விகிதத்தை அரசாங்கத்திற்குக் கொடுத்து, பாக்கியை அதிக விலைக்கு வெளியில் விற்கும்போது, அதிக லாபம் வியாபாரிகளுக்குத்தான் போகிறது. அந்த லாபம் விவசாயிகளுக்குப் போகவில்லை. இதைப் பற்றியும் அரசாங்கம் சிந்திக்க வேண்டும். அதே சந்தர்ப்பத்தில், அரசாங்கமே கொள்முதல் செய்து, பணத்தை விவசாயிகளுக்குக் கொடுக்க முயற்சி செய்தால் என்ன என்பதையும் யோசிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இது முக்கியமான விஷயம், விளக்கம் சொல்லலாம் என்று நினைக்கிறேன். தஞ்சை மாவட்டத்தில், விவசாயிகள் கட்டுப்பாடு விலைக்குக் கொடுக்க எப்பொழுது தயாராக இருந்தாலும், அரசாங்கம் அதை வாங்கிக் கொள்ளத் தயாராக இருக்கிறது என்பதை எங்கள் அறிக்கையிலும் தெளிவுபடுத்தியிருக்கிறோம். கட்டுப்பாடு விலைக்கு வாங்க அரசாங்கம்

தயாராக இருக்கிறது. கட்டுப்பாடு விலைக்குமேல் வியாபாரிகளுக்கு விற்பதற்கு உரிமை கொடுத்து, அந்தத் தானியத்தில் 50 சதவிகிதத்தை அரசாங்கத்திற்குக் கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். ஆகவே, அரசாங்கக் கொள்முதல் இயந்திரம் வேலை செய்யும்.

திரு. ஏ. ஆர் மாரிமுத்து : அந்த ஸ்தாபன அமைப்பு இருந்தால், வரவேற்கிறேன். கவர்னர் உரை சம்பந்தப்பட்டவரையில், இந்த உரையை நான் பாராட்டும் நிலையில் இல்லை. சமுதாயத்தில் இருக்கும் குறைபாடுகளை, அடிப்படைக் குறைகளைத் தவிர்க்க தீவிரமான முயற்சிகள் எடுப்பதில் கவனம் செலுத்தப் படவில்லை. ஆஸ்த்மா வியாதிக்காரனுக்கு 'அட்ரலின்' ஊசி போடுவது என்பது, நிரந்தர சிகிச்சை ஆகாது. போட்டுக் கொண்டே இருந்தால் நோய் முற்றிக் கொண்டே போகும். வியாதியை அடியோடு போக்க முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும்.

'க்ரீன் ரெவல்யூஷன்' ஏற்படுத்த வேண்டும் என்று பெரும் முயற்சிகள் செய்கிறோம். மின்சார இணைப்புக்கள் கொடுக்கிறோம்; விதைகள் கொடுக்கப்படுகிறது; உரம் கொடுக்கப்படுகிறது; இவற்றையெல்லாம் பாராட்டாமல் இருக்க முடியாது. ஆனால், க்ரீன் ரெவல்யூஷன் எந்த அளவுகுச் சமுதாயத்தில் எல்லா மக்களுக்கும் பயன்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். ஐ.நா. காரியதரிசி, திரு. ஊதாண்ட் அவர்கள், க்ரீன் ரெவல்யூஷன் மூலம் பஞ்சாபில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது, ஆனால். அதன் பலன் 20 சதவிகித நிலச் சொந்தக்காரர்களுக்குப் போயிருக்கிறதே அன்றி, நிலத்தை நம்பி வாழும், 80 சதவிகித விவசாயிகளுக்குக் கிடைக்கவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். பஞ்சாபைவிட நாம் முன்னேறிவிடவில்லை. பெரும் அளவில் உற்பத்தி பெருகும் போது, கிடைக்கும் விளைச்சல், பலன், எல்லா மக்களுக்கும், விவசாயத்தில் சாதாரண மக்களுக்கும் கிடைக்க நல்ல டிஸ்ட்ரிப்யூஷன் கிடைக்கும் வகையில் நிலச் சீர்திருத்தத்தின் அடிப்படையில் செய்ய வேண்டும். இந்த நேரத்தில் நிலச் சீர்திருத்தம் பற்றி இந்த உரையில் ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை என்பதைக் கண்டு வருந்த வேண்டியிருக்கிறது. இப்பொழுது ஏதாவது சொல்லியிருந்தால், இன்னும் இரண்டு ஆண்டுகளில் நிறைவேற்றி, செயலுக்குக் கொண்டு வரலாம் என்றாவது நினைக்கலாம். அதைக் கூடச் சொல்லவில்லை என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

நிலமற்றவர்களுக்கு நிலம் கொடுக்க புறம்போக்குகள் அதிகமாகக் கிடையாது. எங்கே பெரிதாக இருக்கிறது? பட்டா வழங்குகிறோம். அனுபவித்துக் கொண்டு இருக்கிறார்கள். முன்னால் [illegible]ட்டிருந்தார்கள், இப்பொழுது நீங்கள் நிறைவேற்றுகிறீர்கள். [illegible] பாராட்டுகிறேன். ஆனால், பெரிய அளவில் செய்து





விட, குறைந்த பட்சம், நாம் போகும் போக்கில், குறைந்தது 100 ஆண்டுகளாவது ஆகும். பணத்தைக் கொடுத்தும் வாங்க முடியவில்லை.

நிலச் சீர்திருத்தத்தைப் பற்றி விரிவாகச் சொல்ல வேண்டியதில்லை. தொழில்கள் வளர்ச்சிக்காகப் பெரும் முயற்சிகள் எடுக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறது. பாராட்டுகிறேன். ஆனாலும், தொழில் நடத்த, அறிவுரைகள் வழங்க ஸ்தாபன ஏற்பாடுகள் என்ன இருக்கின்றன என்று பார்த்தால், ஒன்றும் இல்லை. பார்க்கப் போனால், டைரக்டர் ஆப் இண்டஸ்ட்ரீஸ் இருக்கிறார். அவர் துறையில் கேட்டால், ஸ்கீம் போட்டுக் கொடுக்கிறார்கள். ஆனால், தொழில் சம்பந்தமான அனுபவம் இல்லாதவர்கள் செய்யப் புகுவதால், நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, தொழில் துறையில் அனுபவம் உள்ளவர்களைக் கொண்டு, அறிவுரைகள் கொடுக்க ஒரு ஸ்தாபன அமைப்பு வேண்டும். ஏதோ ஆறு இடங்களில் ப்ரொடக்டிவிடி கவுன்சில்கள் இருக்கின்றன. தனியார் துறையில் வைத்து, ஒரு சிலருக்கு உதவிகள் அளிக்கப்படுகின்றன. என்னைப் பொறுத்த வரையில், ஒவ்வொரு கிராமத்திலும் இருப்பவர்களுக்கு அறிவுரைகள் வழங்கக் கூடிய ஸ்தாபனம் ஒன்று வேண்டும். ஒருவர் ரூ. 1,000 இருக்கிறது, ஏதாவது ஒரு தொழிலை ஆரம்பிக்கலாம் என்றால், அதற்கான அறிவுரைகள் வழங்க, பயிற்சி உள்ளவர்களைக் கொண்டு ஒரு ஸ்தாபனம் அமைத்தால், அதை மாவட்ட வாரியாகப் போதாது, தாலுகா வாரியாகப் பணிசெய்ய அமைத்தால், நலமாக இருக்கும். அப்படி அரசாங்கமே செய்வது நல்லது. இல்லை என்றால், தனியார் அப்படிச் செய்ய முன் வந்தால், வேண்டிய உதவிகளை அளிக்க சர்க்கார் முன்வரவேண்டும். முதலீடு மட்டும் போட்டு விட்டால் போதாது. நல்ல மானேஜ்மெண்ட் வேண்டும். அது சோஷலிச சர்க்காராக இருந்தாலும், காபிடலிஸ்ட் அரசாங்கமாக இருந்தாலும், மானேஜ்மெண்ட், நிருவாகத் திறன் வேண்டும். பணத்தை மட்டும் கடன் கொடுத்து விட்டால் போதாது. தொழில் வளர்ச்சிக்குத் திறன் வேண்டும்.

வேலையில்லாத்திண்டாட்டத்தைப் போக்க என்ன திட்டம் என்பது பற்றிக் குறிப்பிடவில்லை. அது மிகவும் வருந்தத் தக்கது. நான் ஒன்று கருதுகிறேன். அதை இந்தச் சபை ஏற்றுக் கொள்ளுமோ என்னவோ தெரியாது. இந்த அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுமோ என்னவோ தெரியவில்லை. வேலையில்லாதவர்கள் இவ்வளவு பேர்கள் என்று தெரியும். இந்நாட்டில் படித்தவர்களும் படிக்காதவர்களும் இருக்கிறார்கள். வேலைவழங்குவதில், யாருக்கு அவசியம், யாருக்கு காலந்தாழ்த்திக் கொடுக்கலாம் என்பதை ஆராய்ந்து, வேலையில்லதாவர்களை யெல்லாம் இரண்டு பிரிவுகளாக பிரித்து, அவர்களில் சிலருக்கு அப்பன், பாட்டன் வைத்துவிட்டுப் போயிருக்கும் சொத்து இருக்கும். அப்படிப் பட்டவர்களுக்கு சற்று காலந்தாழ்ந்து உதவினால் போதும். சொத்தே இல்லாதவர்களுக்கு உடனடியாகச் செய்தாக வேண்டும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: ஒரு வேளை நான் 'லென்ஸ் ஷேர்' என்று ஆங்கிலத்தில் சொன்னதை அமைச்சர் அவர்கள் சரியான முறையில் புரிந்து கொள்ளாததால் இப்படிக் கேட்கிறார்களோ என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அவர் மாதிரி ஆங்கிலத்தில் புலமை வாய்ந்த வழக்கறிஞர் அல்ல என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். 'லென்ஸ் ஷேர்' என்று அவர்கள் சொன்னதை சரியாக புரிந்து கொள்ளாமல் நான் பேசவில்லை. இருந்தாலும், இம்மாதிரி பேசுவது அங்கத்தினர் அவர்களுக்கு அழகு அல்ல.

திரு ஆர். பொன்னப்ப நாடார்: அங்கத்தினர்கள் எந்த முறையில் நடந்துக்கொள்ள வேண்டும், எப்படி அழகாக நடந்து கொள்ளவேண்டும் என்பது எனக்கும் கொஞ்சம் தெரியும். நானும் கொஞ்சம் சட்டசபை அனுபவம் பெற்றிருக்கிறேன். மேலும் ஒன்றிரண்டு விஷயத்தை இங்கே கூறிக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன். மாவட்ட நல நிதி என்று ரூ. 6½ லட்சம் வசூல் செய்தார்கள். அந்த நிதியை எப்படி வசூல் செய்தார்கள் என்பதைப் பற்றி கூற விரும்புகிறேன். மாவட்ட நல நிதி தேவை தான், இல்லை என்று சொல்லவில்லை. ஆனால், நான் இங்கே எடுத்துக் கூற விரும்புவது என்னவென்றால், கலெக்டர் எப்படி கெடுபிடி செய்தார்கள், அதிகாரிகள் எப்படி கெடுபிடி செய்தார்கள், வியாபாரிகள் எப்படி நசுக்கிப் பிழியப்பட்டார்கள் என்பதைப்பற்றியெல்லாம் அந்த மாவட்டத்தில் வாழ்கின்ற மக்களுக்கு நன்றாகத் தெரியும். நானும். 5 சட்டசபை உறுப்பினர்களும், எம்.எல் ஸியாக இருக்கிற திரு. வில்சன் அவர்களும் சேர்ந்து நமது முதல் அமைச்சர் அவர்களுக்கு இம்மாதிரியாக கெடுபிடி நடக்கிறது என்று ஒரு கடிதம் எழுதினோம். அதற்கு ஒரு அக்நாலெட்ஜ்மெண்டு வந்தது. அதற்குப் பிற்பாடு எந்தவிதமான கடிதமும் வரவில்லை. பலரும் இன்று அதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மாவட்ட நல நிதி தேவை தான் ஆனால், அதை வசூலித்த முறையைப் பார்க்கிறபொழுது, அது அரசாங்கத்திற்கு அழகு அல்ல. அதிலும் குறிப்பாக ஏழைகள்பால் அதிக அன்பும், அக்கறையும் தங்களுக்கு இருக்கிறது என்று அயராது பிரசாரம் செய்துக் கொண்டிருக்கிற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாளருக்கு இது அழகல்ல. நான் கடுமையான வார்த்தைகளை உபயோகிக்க விரும்பவில்லை. அந்தப் பகுதியிலே வாழ்கின்ற மக்களுக்கு எல்லோருக்கும் இதைப் பற்றி நன்றாகத் தெரியும். எந்த முறையில் வசூல் நடந்தது, என்னென்ன காரியங்கள் நடந்தன என்பதை அவர்கள் நன்கு அறிவார்கள்.

அடுத்து, மற்றொரு நிகழ்ச்சியைப் பற்றிக் கூற விரும்புகிறேன். சமீபத்தில் நமது மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் எங்கள் ஜில்லாவிற்கு விஜயம் செய்தார்கள். அப்பொழுது அவர்களுக்கு ஒரு தங்கக் கிரீடம் அளிக்கப்பட்டது. தங்கக் கிரீடம் கொடுத்தது பற்றி நாங்கள் ஆட்சேபிக்கவில்லை. சரித்திரத்தில் தோன்றிய வரலாற்றை சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஜூலியஸ் சீஸருக்கு மூன்று முறை கிரௌன் கொடுத்தார்கள், ஃபாயர் காலில். அந்த டிராமாவை நான் படித்திருக்கிறேன். மூன்று முறை கிரௌன் கொடுத்தார்கள். மூன்று முறையும் வேண்டாம் என்று மறுத்தார் என்று ஷேக்ஸ்பியர் நாடகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. நாடக முறையில் நமது முதல் அமைச்சர் அவர்களுக்கு இந்தத் தங்கக் கிரீடம் எங்கள் ஜில்லாவில் கொடுக்கப்பட்டிருக்கலாம். அப்படிக் கொடுக்கப்பட்டதைப் பற்றி எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை. அப்படிக் கொடுத்த தங்கக் கிரீடத்தை அரசாங்கத்திற்குக் கொடுத்துவிட வேண்டும். அப்படியில்லாமல் அதைக் கட்சிக்குக் கொடுத்திருப்பது நியாயமில்லை. இது பொதுப்பணம் என்ற காரணத்தினால், இதை அரசாங்கத்திற்குக் கொடுத்துவிட வேண்டும் என்பதை நான் வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். பாராளுமன்றத்தில் மதுலிமாயி அவர்கள் சொல்லியிருப்பது எல்லோருக்கும் ஞாபகத்தில் இருக்கலாம்.





மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நான் ஒரு விளக்கத்தைச் சொல்லிவிட விரும்புகிறேன். முதல் அமைச்சர் அவர்களுக்கு தங்கக் கிரீடம் வைத்ததைப்பற்றி கனம் அங்கத்தினர் அவர்கள் இங்கே பேசினார்கள். ஆனால், அவருக்கு அங்கு வைக்கப்பட்ட தங்கக் கிரீடம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் என்ற முறையில்தான் வைக்கப்பட்டது. தமிழகத்தின் முதல் அமைச்சர் என்று விளம்பரம் செய்யாமல் வைக்கப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் என்ற முறையில்தான் தங்கக் கிரீடம் வைக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கன்யாகுமாரி மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகம் வசூலித்தது இதற்கான தொகையை. முதல் அமைச்சர் என்ற பெயரால் இது செய்யப்பட்டது அல்ல என்பதை மட்டும் விளக்கமாக நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: உண்மைக்கும், இந்த விளக்கத்திற்கும் எப்படித் தொடர்பு இருக்கிறது என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. அதைப்பற்றி இந்த ஜில்லா மக்களுக்கு நன்றாகத் தெரியும். அதற்கு எப்படி வசூல் செய்தார்கள், எந்த அதிகாரிகள் எப்படி நடந்துக் கொண்டார்கள் என்பதைப் பற்றியெல்லாம் இந்த மன்றத்திலே சொல்வது நியாயம் அல்ல அதைப் பகிரங்கமாக, பட்டவர்த்தனமாக கூறாமல், இம்மாதிரி நிகழ்ச்சியெல்லாம் நடப்பது விரும்பத்தக்கது அல்ல, வெறுக்கத்தக்கது என்று மட்டும் கூறிக் கொள்கிறேன். ஜனநாயக சர்க்காரில் முதல் அமைச்சராக இருப்பவர் இன்ன கட்சி முதல் அமைச்சர் என்பது மட்டும் அல்ல, தமிழகத்திற்கே முதல் அமைச்சர் என்ற காரணத்தினால், மக்கள் பணம் என்ற காரணத்தினால், நான் இதைச் சொல்கிறேன். இது விரும்பத்தக்க விஷயம் அல்ல, வெறுக்கத்

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வளர்ச்சியின் பயன் 'வீக்கர் செக்ஷனுக்குக் கிடைக்கும்படியாகப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறது. ஆகவே, சொத்து உள்ளவர்கள் இல்லாதவர்கள் என்று இரண்டு பாலாகப் பிரித்து, அவர்களுக்கு வேலை வாய்ப்புகள் அளிக்க வேண்டும். சமுதாயத்தில் பெரும் மாற்றம் ஏற்பட வேண்டும். 'ஸோர்ஸ் ஆப் இன்கம்' ஒன்றுதான் என்று செய்ய வேண்டும். இன்றைக்குப் பொருளாதார வளர்ச்சி இல்லாத நிலையில், அதைச் செய்யக்கூடாது என்று பலர் சொல்லலாம். நானும் ஒத்துக் கொள்ளுகிறேன். ஆனாலும், பிற்காலத்தில் செய்ய வேண்டியிருக்கும். ஒன்றுமே இல்லாதவனுக்கு, அரசாங்கத்தில் கீழ் நிலை உத்தியோகம் கொடுக்கவும், மற்றவர்களை வேறு துறைகளிலும், செயல்படுத்த ஏற்பாடு செய்யலாம். படித்தவர்கள், வசதி உள்ளவர்கள் தொழில் வளர்ச்சில் ஈடுபட அவர்களுக்கு உதவி அளிக்க, வசதி செய்து கொடுக்க, மூலதனம் கொடுக்க என்று அப்படிப்பட்ட கொள்கையை அமுலாக்கினால், வேலையில்லாத் திண்டாட்டத்தை குறுகிய காலத்தில் போக்க முடியும் என்று நம்புகிறேன்.

அடுத்து, ப்ரொகிபிஷன் பற்றியது. இது ரொம்ப மோசமாக இருக்கிறது. எங்கு பார்த்தாலும் மது பரவிக் கிடக்கிறது. மேலும் போலீஸ் மரியாதையும் போய்விட்டது. மதுவிலக்கென்று தனியாக போலீஸ் நியமிக்க வேண்டும். தனியாக போலீஸ் நியமிக்க முடியுமா என்று யோசனை செய்து பார்க்க வேண்டும். மதுவிலக்கு பற்றிய புகார்களை போலீஸ் ஸ்டேஷன்களில் போய்ச் சொன்னாலும், 'நீ ஏன் கம்ப்ளெய்ன்ட் கொடுக்கிறாய்?' என்று புகார் கூறப்போகிறவர்களையே திட்டுகிறார்கள். இது வருந்தத்தக்கது. இதற்கு மாற்று ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*புலவர் பொ. பொன்னம்பலம்: மதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மாண்புமிகு ஆளுநர் அவர்களுடைய உரையை வரவேற்று வழிமொழிந்து நானும் சில வார்த்தைகளைப் பேச விழைகிறேன். பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களை நாம் இழந்ததற்குப் பின்னாலே, மதிப்பிற்குரிய கலைஞர் அவர்களுடைய தலைமையில் இந்த அமைச்சரவை சீரோடும், செம்மையோடும் நேரிய முறையில் பணியாற்றி வருகிறது என்பதை நாடு நன்றாக அறியும். வான் பொய்த்தாலும் தான் பொய்யாக் காவிரியும் பொய்த்து விடுமோ என்று கருதத்தக்க அளவுக்கு வறட்சி உருவாயிற்று, ஏரிகளும், குளங்களும், கண்மாய்களும் வற்றிப் போயிருந்தன. நோய்வாய்ப்பட்டவர்கள் பட்டினி கிடந்து, பத்தியம் இருந்து உடலைத் தேற்றிக்கொள்வது போல ஏரிகளும் குளங்களும், கண்மாய்களும் வறண்டு கிடந்தன. பேரறிஞர் அண்ணா அவர்களின் மறைவு குறித்துத் தங்கள் வருத்தத்தை தெரிவிக்கவேண்டும் என்று கருதியோ என்னவோ, வானமும் பொய்யாமல் நாம் அவையை ஒத்திவைத்து வருத்தம் தெரிவித்ததைப் [illegible] காலத்தைத் தள்ளி வைத்துத் தன்னுடைய வருத்தத்தைத்





தெரிவித்தது. அந்தக் காலத்தில் நம்முடைய அமைச்சரவை பெரு முயற்சி செய்து, நல்ல முறையில் தூர்ந்துகிடந்த ஏரிகளையெல்லாம் தூர் அகற்றி ஆழப்படுத்தியது. 14.25 கோடி ரூபாய் அளவில் மத்திய அரசிடமிருந்து மானியமாகவும், கடனாகவும் கேட்டு, 18 கோடி ரூபாய் அளவில் இத்திட்டத்திற்கு முயற்சி எடுத்து, குளங்களையெல்லாம் சீர்படுத்தி செம்மைப்படுத்தி இருக்கிறது இந்த அரசு. காங்கிரஸ் நண்பர்கள் எல்லாம் சொல்கிற நேரத்தில் இந்த அரசு செய்த இப்படிப்பட்ட நற்காரியங்களைப் பாராட்டவில்லை. ஏரி குளங்களிலுள்ள தூர் அகற்றப்பட்டிருக்கலாம், ஆனால் அவர்களுடைய உள்ளத்தில் படிந்திருக்கும் தூரை அகற்றுவது என்பது முடியாது என்பதுபோல் பேசிக்கொண்டிருக்கிறார்கள். மக்களுடைய உள்ளத்தில் வறட்சியின் வடிவம் படியாமல் இருக்க என்னென்ன வகையில் இந்த அரசு பாடுபடுகிறது என்பதைச் சுட்டிச் சொல்லாமல், வேலையில்லாத் திண்டாட்டம் நாட்டிலே வளர்ந்து வருகிறது என்று சொல்கிறார்கள். வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிறது என்பதை அத்தனை பேரும் ஒப்புக்கொள்கிறோம். இல்லையென்று சொல்லவில்லை. வேலையில்லாத் திண்டாட்டம் தமிழகத்தில் மட்டும்தான் இருக்கிறதா, என்றால் இல்லை. இந்தியப் பெருநாடு முழுவதும் இந்தத் திண்டாட்டம் இருக்கிறது. இதனைப் போக்க எந்தவகையில் செயல்பட வேண்டும், அதற்கு என்னென்ன திட்டங்களைப் போட வேண்டும் என்று ஆலோசனைகளைச் சொன்னால், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதில் இவர்களுக்கும் அக்கறை இருக்கிறது என்ற நம்பிக்கை உண்டாகும். இந்தியப் பெருநாடு முழுவதிலுமே இருக்கக்கூடிய பிரச்சனையை, தமிழகத்திலே மட்டும்தான் இப்படி இருக்கிறது என்று பேசுவார்களேயானால், அது பொருத்தமுடையதாக ஆகாது.

பொதுவாகப் பார்க்கிறபோது, மின்சாரத் துறையை எடுத்துக் கொண்டால், நம்முடைய அரசு இந்தியாவிலேயே முதல் இடத்தை வகிக்கின்றது. இந்தியப் பெருநிலப் பரப்பில் இது முன்னணியில் நிற்கிறது. 1969-ம் ஆண்டு இறுதியளவில் 4 லட்சத்து 60 ஆயிரம் மின்விசையேற்றங்களுக்கு தமிழக அரசு மின் இணைப்புக் கொடுத்திருக்கிறது. 1969-70-ம் ஆண்டில் 6 ஆயிரம் கிராமங்களுக்கு வீதி விளக்கிற்கு மின் இணைப்புச் செய்து கொடுத்திருக்கிறது. இத்தகைய நல்ல உள்ளம் படைத்த அரசை நாம் பாராட்டியாக வேண்டும். காங்கிரஸ் அன்பர்களும் பாராட்டுவார்கள் என்று கருதுகிறேன். நான் ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். "எல்லா விளக்கும் விளக்கு அல்ல ஊர்கட்கு மின்சார விளக்கே விளக்கு" என்ற கருத்தை அடிப்படையாக வைத்து நாம் செயல்பட்டு வருகிறோம். திருவள்ளுவர் அவர்கள் கூறிய "எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப் பொய்யா விளக்கே விளக்கு" வாக்குப்படி, ஆன்றோர்களாய், சான்றோர்களாய் ஊர் கருதி, உங்கள் உள்ளத்தில் இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டிகேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உணவுக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டிருக்கிறது, அதாவது எடுக்கப்பட்டிருக்கிறது. உணவுப் பொருள்கள் மாநிலம் எங்கும் வருவதற்கு வேண்டிய நிலை இருக்கிறது. இதனை அத்துணை பேரும் வரவேற்கிறோம் என்றாலும், மாநில எல்லை அளவில் கடுமையான காவல் இருந்தாக வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எல்லைப் பகுதியில் காவல் நல்ல முறையில் இருப்பதற்கான நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. இந்தச் சமயத்தில் வணிகர்களுடைய பெரும் பங்கு என்னவென்பதை நினைவுறுத்த வேண்டும். "வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப் பிறவும் தம்போல்செயின்" என்ற வள்ளுவர் வாக்கிற்கேற்ப, வணிகர்கள் தம்முடைய நிலைபோல் மக்களுடைய நிலைகளையும் உணர்ந்து செயலாற்ற வேண்டும். ஏழை மக்களின் துன்பத்தை எண்ணிப் பார்த்து, வணிகர்களின் இலக்கணத்தைக் கடைப்பிடித்து இந்த அரசுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியை எடுத்துக்கொண்டால், புதுக்கோட்டைப் பகுதியைச் சார்ந்த திருமயம், பொன்னமராவதி ஊராட்சிப் பகுதிகளில் மழை இல்லை. பிருவயல், விராணம்பட்டி, குழிபிறை, பனையூர் போன்ற பகுதிகளிலும், ராராபுரம் பகுதிகளிலும் மழை இல்லாத நிலைமை இருந்து வருகிறது. ஆகவே, மழை இல்லாத காரணத்தினால் அந்தப் பகுதிகளில் வரிவிலக்கு அளித்து, கடன் வசூலிப்பதை நிறுத்தி வைத்து, மக்களுக்கு உதவ வேண்டுமென்பதைக் கேட்டுக்கொள்கிறேன். புதுக்கோட்டைப் பகுதி மிகவும் பின் தங்கிய பகுதி. அங்குள்ள மின்விசையேற்றங்களுக்கு மின் இணைப்புக் கொடுப்பதை விரைவு படுத்த வேண்டும். அந்தப் பகுதி முன்னேற வேண்டுமென்றால் மின் இணைப்பு உடனடியாக கொடுக்கப்பட வேண்டும். அப்படிச் செய்தால் பாதி அளவில் இருக்கக்கூடிய பயிர்கள் எல்லாம் இன்னும் நன்றாக விளையும். அந்தப் பகுதி மக்கள் முன்னேற அடிப்படைக் கூறான, ஆக்கப்பூர்வமான திட்டங்களை ஆக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பு அளித்தமைக்கு என் நன்றியைக் கூறி அமர்கிறேன். வணக்கம்.

(திரு. ஆர். என். அரங்கநாதன் தலைமை)

**திரு. கோ. இரா. ஞானசம்பந்தன் :** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய பிரசங்கத்தின்மீது என் கட்சியின் சார்பாக சில விஷயங்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இன்றையதினம் பசுமைப் புரட்சியைப் பற்றிப் பேசப்படுகிறது. பசுமைப் புரட்சி என்று சொல்லும்போது, டெக்னிகல் டெவலப்மெண்ட், அதாவது பொறுக்கு விதை, ஐ ஆர் 8 ஆகாயவிமானம் மூலம் பயிருக்கு மருந்து தெளிப்பது போன்ற அபிவிருத்தித் திட்டங்கள் தாம் பசுமைப் புரட்சி என்று சொல்லி உடனடியாய் நாட்டில் அபிவிருத்தித் திட்டங்கள் ஏற்பட்டு, நன்றாக விளைச்சல் ஏற்பட்





டால் மக்கள் திருப்தியடைந்துவிட்டார்கள், என்று சொல்லிவிட முடியாது. இதை திராவிடமுன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியில் இருந்தபோதும், நாங்களும் ஏற்றுக்கொள்ளவில்லை. சமுதாயத்தின் அடிமட்டத்திலே உள்ளவர்களுக்கு சமூக நீதி கிடைத்தாக வேண்டும். மத்திய அரசின் உள்துறை இலாகாகூட நிலச் சீர்திருத்தத்தின் குறைபாடுகளைப் போக்க குறிப்பு ஒன்றை மாநில அரசுகளுக்கு அனுப்பியது தெரியும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் மொத்த வருமானத்தில் எண்பது சதவிகிதம் விவசாயத்திலிருந்து வருகிறது. தமிழகத்திலே உள்ள சாதாரண நிலைமை என்னவென்றால், கிராமப்புரத்திலே நிலமற்றவர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வருவதே ஆகும். விவசாயத் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. கிராமபுறத்திலே இருப்பவர்களுக்கு கடன் தொல்லை அதிகமாக இருக்கிறது. டெக்னிகல் டெவலப்மென்டினால் மட்டும் இதைச் சீர்திருத்தம் செய்ய முடியுமா என்றால் நிச்சயமாக முடியாது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். 53 லட்சம் டன் உணவு உற்பத்தி 63 பி. ப. 1-00 லட்சம் டன்னாக உயரக்கூடும் என்று எதிர்பார்க்கிறோம் என்பது வாஸ்தவம். உணவு உற்பத்தி பெருகலாம். ஆயினும் அதன் பயன் சமுதாயத்தில் பரவலாகக் கிடைக்கக்கூடிய வகையில் சமூக நீதி ஏற்படுமா என்பதைப் பார்க்கவேண்டும்.

தமிழகத்தை எடுத்துக்கொண்டு பார்த்தால் 1½ கோடி ஏக்கரா சாகுபடி நிலம் என்று சொல்லப்படுகிறது. 1½ கோடி ஏக்கரா சாகுபடி நிலத்தில் உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் 23 ஆயிரம் ஏக்கரா வந்தது. இவற்றில் கோர்ட்டில் டிஸ்ப்யூட்டாக 13 ஆயிரம் ஏக்கரா இருக்கிறது. பத்தாயிரம் ஏக்காராதான் விநியோகத்திற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் என்ன கூறிற்று? இது உச்ச வரம்புச் சட்டம் அல்ல, மிச்ச வரம்புச் சட்டம் என்று திராவிட முன்னேற்றக் கழகமும், அதன் தலைவர் அண்ணா அவர்களும் குறிப்பிட்டார்கள். உச்ச வரம்புச் சட்டத்தை 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று திருத்த வேண்டும், குடும்பத்திற்கு என்று திருத்த வேண்டும் என்பதற்காக நாங்கள் பதினாயிரம் பேர் சிறை சென்றிருந்தோம். பொருளாதாரத்தில் சமூக நீதி பேசுகின்ற அனைவருக்கும் இது ஞாபகம் இருக்கும். அடித்தட்டில் இருக்கக்கூடிய உழவர்களுக்கு நிலம் தரவேண்டும்; நம் எல்லோருடைய கொள்கையாகவும் இருந்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்து மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. வேதனை அடைகிறேன். என்ன செய்தார்கள்? அதுவும் சமீபத்தில் முதல் அமைச்சர் அவர்கள் விட்டதாக பத்திரிகையில் வந்த அறிக்கையைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தேன். 30 ஏக்கருக்குக் குறைவாக உச்சவரம்பைக் குறைப்பதற்கு தற்போது நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் போவதில்லை என்பதாக அவர் அறிக்கைவிட்டதாகப் பத்திரிகையில் வந்தது. இது தமிழக உழவர்கள் உள்ளத்தில் ஓர் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. நில உச்சவரம்பு ஏக்கரை குறைக்க வேண்டும்

என்பதைத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் தம் ...டிருக்கிறது, ...யாகக் கொண்டு செயல்பட்டு வந்திருக்கிறது. நீலகிரி மாவட்ட, ... மாநிலம் எடுத்துக் கொண்டாலும், மதுரை மாவட்டம் கோடைக்கா... அத்தில் பகுதியை எடுத்துக்கொண்டாலும் மலைநிலங்களுக்கு விதிவிலக்குச் என்று சொல்லி ஆயிரக்கணக்கான ஏக்கர்களை ஒவ்வொருவர் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இது பசுமைப் புரட்சியை வெற்றி அடைய செய்யுமா என்பதைச் சிந்திக்க வேண்டும். விவசாயத் தொழிலாளர்கள் மீது ஏழைகளுடைய ஆதாரிய திராவிட முன்னேற்றக் கழக அரசு மற்றவர்கள் காட்டக் கூடிய அக்கறையைவிட அதிகமாகக் கொண்டிருக்கிறது என்று நிதி அமைச்சர் அவர்கள் பல தடவைகளில் பேசும்போது குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். அதைப் பாராட்டி வந்திருக்கிறோம். ஆட்சிப் பொறுப்பை தன் கையில் வைத்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழக அரசு அந்தக் காரியத்தை வாய் அளவில் இன்றி செயலளவில் நிறைவேற்ற முன்வந்தாலொழிய பசுமைப் புரட்சியை ஏற்படுத்தவே முடியாது. அவர்கள் ஆட்சிக்கு வந்து மூன்றாண்டுகள் ஆகியும் கூட அதைப் பற்றிச் சிந்திக்காதது வேதனை தரக்கூடியதாகும். இது சரியானது அல்ல. அமைச்சர்கள் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைச் செய்வது தவிர வேறு வழி கிடையாது. குடும்பத்திற்குப் பதினைந்து ஏக்கர் என்ற அடிப்படையில் செய்ய வேண்டும். யாருக்கும் விதிவிலக்கு கொடுக்கக் கூடாது.

கண்ட்ரோல் நீக்கத்தைப் பொறுத்தவரையில் நேரம் இல்லாத காரணத்தினால் நான் அதிகம் குறிப்பிட விரும்பவில்லை. எந்த அளவுக்கு நமக்கு அதிகமாகக் கிடைக்கும் என்பதைவிட எந்த விலைக்குக் கிடைக்கப் போகிறது என்பதை நாம் சிந்திக்கவேண்டும். எங்களுடைய உபரி மாவட்டத்திலேயே மழையின்போது நாகப்பட்டிணத்தில் பன்னிரண்டு விரலுக்கு அரிசி விலை உயர்ந்தது. கண்ட்ரோல் எடுக்கப்பட்டபின் இது எந்த அளவுக்கு உயரப் போகிறது என்பதை நின்று சிந்தித்தாக வேண்டும்.

விவசாயிகள் நிச்சயமாகக் கடன் தொல்லைகளினால் அவஸ்தைபடுகிறார்கள். 1937-இல் கடன் நிவாரணச் சட்டம் வந்தது. அதற்குப் பிறகு இல்லை. கிராமங்கள்தோறும் லேவாதேவிக்கடைகள் தோன்றி கிராமச் செல்வம் சுரண்டப்படுகிறது. அசலில் இருப்பது ஒரு வட்டிதான், வாங்குகிற வட்டி மிக அதிகம். இதைப் பார்த்துக் கொண்டே நாம் வாளா இருக்கக் கூடாது. உடனடியாக கடன் நிவாரணச் சட்டத்தைக் கொண்டுவந்தாக வேண்டும்.

போலீஸ் பற்றிக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. ஒவ்வொரு கூட்டத்திலும் சொல்லிவந்தோம். அப்போது எல்லாம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எங்களை ஆதரிக்காவிட்டாலும் இப்போது அவர்களும் சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள். போலீஸ் பண்டினர் மக்களுடைய சேவைக்காக இருக்கிறார்கள். சட்டத்



திற்குப் போலீஸ்காரர்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டுமே தவிர மக்களை துன்புறுத்தும் காரியங்களில் ஈடுபடக் கூடாது. குறிப்பாக என்னுடைய மாவட்டத்தில் இன்றைய தினம் சொல்ல வார்த்தைகள் இல்லை—காட்டுமிராண்டித்தனமான, அசுர அடக்கு முறைகளுக்கு ஓர் எல்லையே இல்லாது போய்விட்டது. கம்யூனிஸ்ட் கொடியை இறக்கச் சொல்வது, குடிசைகளைப் பிய்த்து எறிவது, பானைகளை உடைப்பது ஆகிய அசுர அடக்குமுறைகளுக்கு எல்லையே இல்லை. 15 ரூபாய் செலவு செய்து தந்தி அடித்திருக்கிறோம். கூட்டம் போட்டுச் சொல்லியிருக்கிறோம். முதல் அமைச்சரிடமே சொல்லியிருக்கிறோம் ஏழைகள் கண்ணீர்விட்டுக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய இந்த போலீஸ் படைதான் தலை சிறந்த படை என்று சொல்லப்படுகிறது. இந்த காட்டுமிராண்டித்தனமான அசுர நடவடிக்கைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும். அறிவிப்பு இல்லாமல் ஊர் ஊராக அமைச்சர் அவர்கள் என்னுடன் வரட்டும். போலீஸ்காரர்கள் நடந்து கொண்டிருக்கிற முறையைக் காட்டுகிறேன். அடித்துக் கொல்லப்பட்டவருடைய மனைவி கண்ணும் கண்ணீருமாக முதல் அமைச்சர் அவர்களுக்கே எழுதியிருக்கிறார்கள். காலஞ்சென்ற முதல் அமைச்சர் அவர்கள் சொன்னதை ஞாபகப்படுத்துகிறேன். இப்படி விமர்சனம் செய்வதை வரவேற்கிறேன் என்றார்கள். அதுபோல நாங்கள் விமரிசனம் செய்வதற்கு ஆத்திரப்படாமல் இந்தக் காட்டுமிராண்டித்தனமான அடக்குமுறைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்.

கள்ளுக்கடையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இப்போது தெருவுக்கு ஒரு கள்ளுக்கடை இருக்கிறது. போலீஸ் மொராலிடியே இப்போது போய்விட்டது. மதுவிலக்குக் கூட்டத்திற்காக நான் குளிக்கரை போய் இருந்தேன். ஓரிடத்தில் கூட்டமாக இருந்தது. என்னவென்று கேட்டேன், கள்ளுக்கடை என்றார்கள். நான் உள்ளே போனேன், குடிப்பதற்காக அல்ல. கடைக்காரரைக் கேட்டால், "ஐயா எனக்கு 300 ரூபாய் இதனால் வாரத்திற்கு வருகிறது, 200 ரூபாய் கொரடாச்சேரி போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொடுத்துவிடுகிறேன்" என்றார். இப்படி தெருவுக்கு ஒரு கள்ளுக்கடை—போலீஸ் மொராலிடி பாழ்பட்டு வருகிறதே. (ஷேம் ஷேம் ஷேம்.)

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** ஷேம் ஷேம் என்று கத்துவதில் பயன் இல்லை. பொறுப்புள்ள அங்கத்தினர் அதை உடனே போலீஸ் அதிகாரியிடத்தில் தெரிவித்தாரா? அவர் என்ன சொன்னார், என்பதையும் விளக்கிச் சொல்லவேண்டும்.

**திரு. கோ. இர. ஞானசம்பந்தன் :** நான் எக்சிக்யூடிவ் லைனில் இருந்தால் உடனே நடவடிக்கை எடுத்திருப்பேன். இதைப்பற்றி நான் அதிகாரிகளிடத்தும் சொன்னேன். கூட்டத்திலும் சொன்னேன். இதை எதற்காகக் கூறுகிறேன் என்றால் சட்டத்தினால் மக்களைத் திருத்த முடியாது. உணர்வு பூர்வமாகத்தான் திருத்தம்

[திரு. கொ. இர. ஞானசம்பந்தன்] [1970 ஜனவரி 21

வரவேண்டும். எனவே மதுவிலக்கை ரத்து செய்யவேண்டுமென்ற அடிப்படையில் நான் என்னுடைய கருத்தை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். நாட்டின் உண்மை நிலையைப் புரிந்துகொண்டு செயல்பட்டாக வேண்டும்.

தஞ்சை மாவட்டத்தில் போதுமான தண்ணீர் இருக்கிறது என்றால் வடிகால் வசதி இல்லாத காரணத்தினால், பல இடங்களில் பயிர் பாழ்பட்டுப் போகிறது. குறிப்பாக மற்றொரு பகுதியில் தண்ணீர் தேங்கிக் கிடந்தது. வடிகால் வசதி இல்லை. தேங்கியிருந்தாலும் பயிர் இயல்பாக இருக்கும் என்றார்கள். ஐ.ஆர். 8 பலன் அளிக்காது போய்விட்டது. இந்த விஷயங்களைப்பற்றியெல்லாம் இந்த அறிக்கையிலே குறிப்பிடாதது வருந்தத்தக்கது என்பதைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. ஆர். கருப்பையா :** மாற்றுத் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையின்மீது பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்ததற்காக மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பின் தங்கியவர்களைப்பற்றியும், பின்தங்கிய பகுதிகளில் சாலை வசதிகள், நீர்பாசன வசதிகள் இவற்றைப்பற்றிய திட்டங்கள் பற்றி ஒன்றுமே குறிப்படவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையில் இந்த சர்க்காரிலே எந்தக் காரியத்தையும் டெண்டர்விட்டு அதன்மூலம்தான் செய்கிறார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். குறைந்துள்ள புள்ளி கொடுத்தவர்களுக்குத்தான் டெண்டர் விடப்படுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் கொண்டு வருவதற்காக பைப்வாங்குவதில் சர்க்கார் சரிவர நடக்கவில்லை. ஒரு தனிப்பட்ட கம்பெனிக்கு 15 லட்சம் ரூபாய் அட்வான்ஸ் கொடுத்து உள்ளதாக சர்க்கார் தாக்கீது அனுப்பியுள்ளது. ஆனால் [redacted]

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த மாதிரியாக மேலெழுந்தவாரியாகக் குற்றச்சாட்டுச் சாட்டக் கூடாது. ஏதோ ஒன்று பேசவேண்டும் என்று நினைத்துக் கொண்டு அட்வான்ஸ் கொடுத்தார்கள். கான்ட்ராக்ட் கொடுத்தார்கள் என்று சொல்லக்கூடாது. அப்படிச்சொல்வது தவறாகும். எந்த அடிப்படையிலே எந்தக் கம்பெனிக்கு எந்த முறையிலே கொடுத்திருக்கிறார்கள். எந்த முறையிலே அது தவறானது என்று நிரூபிக்கின்ற முறையிலே அவர்களுடைய விவாதங்கள் அமைய வேண்டும். மேலெழுந்தவாரியாக பேசுவது நல்ல மரபல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பேசும்பொழுது அதை நிரூபிப்பதற்கும், அதற்குப் பொறுப்பேற்பதற்கும் அவர்கள் முன்



1970 ஜனவரி 21] [திரு. கே. ஏ. மதியழகன்]

வர வேண்டும். ஆனால் பொறுப்பேற்கிறேன் என்று சொல்லிக் கொண்டே ஆதாரம் இல்லாமல் பேசக் கூடாது, ஆதாரங்களுடன் பேசவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆர். கருப்பையா :** சக்தி பைப் கம்பெனி என்ற கம்பெனிக்கு, அது மகாலிங்கம் கம்பெனியோ என்னவோ எனக்குத் தெரியவில்லை.

Salthi pipe supply—Water-supply and drainage—Purchase of cast iron pipe from Sakthi pipes—

இந்த முறையிலே ஜி.ஓ.வே. இருக்கிறது. இதன் மூலம் 20 சதவிதம் முன் பணம் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் அதைப் பைப் செய்வதற்குப் பயன்படுத்தவில்லை. டெண்டர் காஸ்பார் பண்ணி இருக்கலாம். ஆனால் அந்த கம்பெனியார் சொந்தமாக பைப்செய்து விற்காமல், வடக்கேயிருந்து டாடா, பிர்லா இவர்களிடமிருந்து வாங்கி, இந்த சர்க்காருக்கு விற்றுக் கொண்டிருக்கிறார்கள். இடையிலே லாபிஷன் இருக்கிறதே அது அவர்களுக்கு மட்டும்தானா? மற்றவர்களுக்கும் இருக்கிறதா என்று தெரியவில்லை.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : I very strongly object to his statement. He must withdraw his statement.

இப்படிப் பொறுப்பற்ற முறையிலே அவர்கள் பேசக்கூடாது. ஒரு கம்பெனி இருக்கிறது. 20 லட்சம் ரூபாய் கொடுத்தார்கள் என்று பேசக்கூடாது. அதை நிலைநாட்டுவதற்கு அவர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள். அப்படியில்லாமல் என்ன பெற்றுக் கொண்டார்கள் என்று கேட்பது எல்லாம் சரியல்ல.

**திரு பி. ஜி. கருத்திருமன் :** அவர்கள் ஜி.ஓ.வை கோட் பண்ணி இருக்கிறார்கள், இன்ன கம்பெனி என்றும் சொல்லியிருக்கிறார்கள். அதற்குமேல் என்ன வேண்டும்? நீதி விசாரணைக்கு தயாரா என்று கேட்க ஆசைப்படுகிறேன். தவறு நடந்திருக்கிறது. ஊழல் நடந்திருக்கிறது என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். விசாரணை நடத்தினால் தெரிந்துவிடும். எனவே நீதி விசாரணைக்குத் தயாரா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ஆர். என். அரங்கநாதன் :** நீதி விசாரணைக்குத் தயாரா என்று கேட்பது வேறு. இங்கே மன்றத்திலே பேசும்பொழுது ஆதாரத்தோடு பேசவேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அவர்கள் ஜி.ஓ வை வைத்துத்தான் சொல்லியிருக்கிறார்கள். பொறுப்பை ஏற்றுக்கொள்கிறோம்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இப்படிப் பலமாகப் பேசுவதாலேயே நியாயமாகிவிடாது. கம்பெனி இருக்கிறது, அவர்களுடைய ஆசீர்வாதத்தோடு தொழிற்சாலை வைத்திருக்கிறார்கள். வெளியிலே குழாய்கள் வாங்கவேண்டுமென்று அவர்கள்தான் முன்பிருந்தவர்கள்தான் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தக் கம்பெனியை [redacted]

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : குற்றச்சாட்டு அவர்கள் சாட்டி இருக்கிறார்கள். அதற்கு அவர்கள் சமாதானம் சொல்லவேண்டும்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : எந்தக் கம்பெனிக்கு எந்த முறைகேடான காரியத்திற்காக எப்படி முறைகேடாகக் கொடுக்கப்பட்டது என்று ஆதாரத்தோடு சொல்லவேண்டும். அப்படியில்லாமல் எவ்வளவு பணம் என்றெல்லாம் கேட்பது சரியல்ல. இதைத் தாங்கள் அருள்கூர்ந்து சொல்லவேண்டும். எந்த எந்த டெண்டர்கள் வந்தது, எப்படி முறைகேடான உதவி செய்திருக்கிறார்கள், என்றெல்லாம் ஆதாரமாகப் பேசவேண்டும். பேசிவிட்டார்கள் என்பதற்காக நீதி விசாரணை என்று சொல்லக்கூடாது. இந்த மன்றத்தின் மரபே கொஞ்சம் சரிந்துகொண்டிருக்கிறது. இல்லாமல் இருக்கிற கருத்துக்களை இருப்பதாக சொல்லி தவறு ஏற்படுத்தி விடக்கூடாது என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன். இந்த அரசாங்கத்திற்கு எந்தவிதமான பயமும் கிடையாது. எதையும் மறைத்துக் கொள்ளவேண்டுமென்ற நிர்ப்பந்தமும் கிடையாது. கம்பெனிக்கு 20 லட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டது என்றால் மூடியிருந்த தொழிற்சாலையை திறப்பதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கலாம். அதை வைத்துக் கொண்டு ஒரு தவறான எண்ணத்தை ஏற்படுத்தவேண்டுமென்று இப்படிப் பேசுவது கூடாது. தவறாக இருந்தால் என்ன தவறு என்று விவரமாகச் சொல்லவேண்டும். பொதுவாகக் குற்றச்சாட்டு என்று சொல்வது சரியான மரபல்ல. இவ்வளவு நாட்கள் ஆண்ட உங்களுக்கும் அது நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். கருப்பையா** : வேண்டுமென்றால் அரசாங்கம் தவறு செய்தால் சொல்லக்கூடாது என்று சொல்லிவிட்டால் நாங்கள் சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : நியாயமானவற்றைச் சொல்லுங்கள். நிரூபிக்கக்கூடியவற்றைத்தான் சொல்லவேண்டும். சொல்லக்கூடாது என்று சொல்லவில்லை.

**திரு. ஆர். கருப்பையா** : பல பேர்களிடம் அதற்குப் பிற்பாடு டெண்டர்கள் கால்பார் பண்ணியிருக்கலாம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை.)

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : என்ன காரணத்திற்காகக் கொடுத்தார்கள் என்று சொல்வேண்டும். இருக்கலாம் என்ற முறையிலே சொல்லக்கூடாது. கற்பனையாகச் சொல்லிவிட்டு ஏதோ ஒன்றை அரசாங்கம் தவறாகச் செய்துவிட்டதாகச் சொல்லக்கூடாது. தெளிவான முறையிலே குற்றச்சாட்டுகள் இருந்தால் கூறுங்கள். அப்படிக் கூறினால் பதில் சொல்லுகிறோம். எந்த விசாரணைக்கும் நாங்கள் பயப்படப்போவதில்லை. அரசாங்கத்தின்மீது தவறான எண்ணம், ஒரு சந்தேகம் ஏற்படும்படி குற்றச்



சாட்டுகளைச் சொல்லக்கூடாது. நல்ல ஆதாரங்களோடு நிரூபித்தால் அவற்றைத் தாராளமாகச் சொல்லலாம். அதற்குச் சமாதானம் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறோம். இப்படிப்பட்ட காரியங்கள் இந்த நிகழ்ச்சிகளிலே இடம்பெறுவதுகூடச் சரிதானா என்பதை தாங்கள் முடிவுசெய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பல முறை கூறியிருக்கிறேன். இந்த மன்றத்திலே எதிர்க்கட்சியில் இருக்கிறவர்கள் ஆளும் கட்சியில் இருக்கிறவர்கள் செய்கிற தவறுகளைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அவ்வாறு சுட்டிக் காட்டுகின்ற நோக்கில் அந்தத் தவறுகள் நடைபெற்றிருக்கின்றன என்பதற்காகக் கையிலே இருக்கின்ற ஆதாரங்களைக் கூறவேண்டும். ஆதாரங்கள் இல்லாமல் குற்றச்சாட்டுகள் கூறக்கூடாது என்று பல முறை இந்த மன்றத்திலே கூறியிருக்கிறேன். கோவாவில் அண்மையில் நடைபெற்ற மாநாட்டில் பேரவைத் தலைவர்கள், மேலவைத் தலைவர்கள், நடாளுமன்றத் தலைவர்கள் அனைவரும் கூடிய மாநாட்டில் இப்படிப்பட்ட கேள்வி எழுப்பப்பட்டது. சட்டமன்றத்தில் குற்றச்சாட்டுகளைக் கூறும்போது தெளிவான குற்றச்சாட்டுகளை ஆதாரத்தோடு கூறவேண்டும்; ஆதாரம் அற்ற குற்றச்சாட்டுகளைச் சபையிலே கூற இடம் தரக்கூடாது என்று கோவாவிலே நடைபெற்ற பிரசைடிங் ஆபீசர்ஸ் கான்பரன்சில் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. அந்த மரபு நம்முடைய மன்றத்தில் காப்பாற்றப்பட்டாக வேண்டும். இன்ன கம்பெனிக்கு ஒரு ஆர்டரைக் கொடுத்திருக்கிறார்கள் என்றால், இன்ன காரணத்திற்காக மற்றவற்றை விட்டு விட்டு கொடுத்து விட்டார்கள் என்று தெளிவாகக் கூற வேண்டும். அந்தக் கம்பெனிக்குக் கொடுத்தார்கள் என்பதே குற்றச்சாட்டு அல்ல. ஆதாரம் இல்லையென்றால் ஆதாரம் இல்லை என்றாவது கூற முன் வர வேண்டும். ஆகவே, இப்படி ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து கூறுவது என்பது முறையல்ல.

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்** : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். நான் இந்த மன்றத்தில் கடந்த 8 வருஷமாக இருக்கிறேன். ஏதாவது ஒரு உத்தரவையோ, பத்திரிகையோ படித்துக் காட்ட வேண்டுமென்று சொன்னால் படிப்பதற்கு முன்பு தலைவருடைய அனுமதியைப் பெற்றுப் படிக்க வேண்டும். அங்கத்தினர் அவர்கள் ஜி.ஓ.-வை தலைவர் அனுமதி இல்லாமல் படிப்பதற்கு இந்த மன்றம் அனுமதி அளிக்கிறதா என்பது பற்றித் தலைவர் அவர்கள் தீர்ப்புக் கொடுக்க வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : ஜி.ஓ. வைப் படிக்கக் கூடாது என்று சட்டம் இருக்கிறதா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : ஜி. ஓ. நம்பரை 'கோட்' செய்து படியுங்கள்.

**திரு. ஆர். கருப்பையா :** ஜி. ஓ. நம்பரை முன்பே சொன்னேன். அதில் granting an advance of 20 per cent against the initial order for 15,000 tonnes for 1969–70 to enable them to meet earlier commitments and purchase of raw materials to start the plant.' என்று இருக்கிறது. அந்தக் கம்பெனியார் அந்தத் தொழிற்சாலையை ஸ்டார்ட் பண்ணாமலே வேறு ஒருவரிடமிருந்து பைப்புகளை வாங்கித் தந்திருக்கிறார்கள். அதைத் தாங்கள் செய்ததாக சீலை மாற்றிப் போட்டுள்ளார்கள். இது எப்படி நியாயம் ?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** சக்தி பைப்ஸ் என்ற அந்த நிறுவனம் என்னுடைய தொகுதியான எழலூரில் இருக்கிறது. அந்தக் கம்பெனியில் தொடர்ந்து உற்பத்தி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பது தவறான கருத்து. இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கொடுத்திருப்பதில் இன்னின்ன தவறுகள் நடைபெற்றிருக்கின்றன. இன்ன அமைச்சருக்கு இவ்வளவு பணம் கொடுத்தார்கள் என்று ஆதாரமாகச் சொல்லவேண்டும். நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்படும்போது கூட தெளிவுபட நிரூபிக்க வேண்டும். அவ்வாறு தெளிவுபட நிரூபிக்கின்ற கடமை குற்றம் சாட்டுகின்றவர்களுக்கு உண்டு. அதை விட்டு அவர்கள் உற்பத்தி செய்யவில்லை, வேறு எங்கிருந்தோ வாங்கித் தந்தார்கள். அதனால் தவறு ஏற்பட்டு விட்டது என்று சொல்வது சரியல்ல அவர்களுக்குக் கொடுத்ததில் இப்படிப்பட்ட தவறுகள் நடைபெற்றிருக்கின்றன என்று ஆதாரத்தோடு சொல்ல வேண்டும்.

**திரு. ஆர். கருப்பையா :** டெண்டர் 'கால் ஃபார்' பண்ணாமல் கொடுத்தால்தான் இந்த விதமான ஊழல்கள் நடக்க வாய்ப்புகள் இருக்கின்றன. ஏனைய மற்ற பைப் கம்பெனிகள் அட்வான்ஸ் தொகை இல்லாமல் கொடுக்கத் தயாராக இருக்கும்போது இந்தக் கம்பெனிக்கு அட்வான்ஸ் கொடுத்தும் 3 மாதங்கள் பைப் வராமல் வேலை டிலே ஆகக் கூடிய நிலையை அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கிறது. மகாலிங்கம் விருந்து கொடுத்தார் என்று மக்கள் பேசிக் கொள்ளுகிறார்கள். மக்கள் தவறாகப் புரிந்துகொண்டு அரசாங்கத்திற்கு கெட்ட பெயர் வரக்கூடாதே என்ற காரணத்திற்காகத்தான் இதை நான் கூற விரும்புகிறேன்.

அரியலூர்த் தொகுதி பின்தங்கிய பகுதி. ரோடு வசதி இல்லை. மழை இல்லாத காரணத்தால் பாசன வசதி இல்லை. ஜேடர் பாளையம் அணையைக் கட்டினால் அரியலூர், ஜெயங்கொண்டம் தாலுக்காக்கள் பாசன வசதி பெறும். இதை அரசாங்கம் கவனிக்க வேண்டும். பின்தங்கிய வகுப்பினருக்கு பாக்வேர்டு கிளாசுக்கு தனி மந்திரி போட்டிருப்பது போல் பாக்வேர்டு ஏரியாக்களுக்காகவும் தனியாக பின்தங்கிய பகுதி வளர்ச்சிக்காக ஒரு அமைச்சரை நியமித்துப் பின் தங்கிய பகுதிகளுக்கு அரசாங்கம் வசதி செய்து தரவேண்டும்.





சிரமதானத் திட்டத்தின் வேலைகளைப் பற்றி அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். 67 லட்சம் பெறுமான வேலைகள் 22 லட்சத்தில் செய்திருக்கிறார்கள் என்று கவர்னர் அறிக்கையில் காணப்படுகிறது. 2,500 ரூபாய் வேலை என்றால் யூனியனில் 5,500 ரூபாய் செலவாகி இருக்கிறது. ஒரு வேலையைக் கூடச் சிரமதான தொண்டர்கள் செய்யவில்லை. ஒரு செங்கல் கூட இவர்கள் எடுத்து வைக்கவில்லை. பஞ்சாயத்து யூனியன் பணம்தான் செலவழிக்கப்பட்டிருக்கிறது. சிரமதானத் தொண்டர்கள் செய்தார்கள் என்று சொல்வதெல்லாம் தங்களுடைய கட்சிக்காகத்தான். சிரமதானியினர் ஜீரணித்து விட்டதாக மக்கள் பேசிக் கொள்ளுகிறார்கள். சிரமதான வேலை சரியாக நடைபெறவில்லை என்பதை இதன் மூலம் தெளிவு படுத்த விரும்புகிறேன்.

அடுத்து, ஆசிரியர்கள் பிரச்சினை. அவர்கள் சமீபத்தில் சைக்கிளில் வந்து மனுக் கொடுத்தார்கள். உதவி பெறும் பள்ளிகளில் ஊழியர்களுடைய ஓய்வு பெறும் வயது 60 ஆக இருந்ததை 55 ஆகக் குறைத்திருக்கிறார்கள். இவர்களுக்கு எந்தவிதமான ஓய்வு கால ஊதியமும் கிடையாது. இவர்களுக்கு ஓய்வுகால ஊதியம் கொடுக்க முன்வர வேண்டும். இவர்களுக்கு எந்தவிதமான ப்ரோமோஷனும், ஓய்வுகால ஊதியமும் இல்லாத நிலையில் ஓய்வு வயதையாவது 60 ஆகவாவது மாற்ற வேண்டும்.

நம்முடைய சர்க்கார் நடத்துகின்ற பஸ் போகுவரத்தில் பெரும் பகுதி பஸ்கள் ஓடுவதே இல்லை. இந்த பஸ்கள் ரோட்டில் போகாமல் வேலியில் நுழைகிறது, வீட்டுக்குள் நுழைகிறது. பயிற்சி பெறாத டிரைவர்கள்; 60 மைலுக்கு மேல் போகின்ற ஓவர் ஸ்பீட் தான் இதற்குக் காரணம். மாடி பஸ் போட்டுவிட்டால் மட்டும் போதாது. ஒரு பஸ் கூட ஒழுங்காகப் பிரேக் பிடிப்பதில்லை. டிரைவர்கள், கண்டக்டர்களைக் கேட்டால் இது சர்க்கார் வண்டி என்று கூறுகிறார்கள். இடையில் கை காட்டினால் நிறுத்துவது இல்லை. கடந்த 17-ம் தேதி அரியலூர் தொகுதியில் குறிப்பாக அரியலூரிலேயே பஸ் போகும்போது நிறுத்தும்படி கையைக் காண்பித்தேன். வண்டியிலே ஏறிய ஒருவர், எம். எல். ஏ. கையைக் காண்பிக்கிறார் என்று சொன்னதற்கு 'நீ ஏறியாச்சு அல்லவா எம்.எல்.ஏக்கு என்ன சிபாரிசு ?' என்று கேட்டார். இன்று போலீஸ் அதிகாரத்தில் எல்லோரும் குடிக்கலாம், போலீசும் குடிக்கலாம் என்ற நிலை இருக்கிறது. இந்த நிலைமையிலே நீங்கள் சென்று கொண்டிருந்தால் பொதுமக்களுடைய நல்லெண்ணத்தை காங்கிரஸ் 20 ஆண்டுகளில் இழந்தது என்றால் நீங்கள் ஐந்து வருஷத்திலேயே இழந்துவிடுவீர்கள் என்று குறிப்பிட்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அங்கத்தினர் அவர்கள் நாங்கள் பொதுமக்கள் ஆதரவை பெறமுடியாது என்று குறிப்பிட்டார்கள். ஐந்து ஆண்டுகளிலேயே அவர்களுடைய ஆதரவை இழந்து விடுவோம் என்றார்கள். அதைப் பொதுமக்கள் முகை பூரிலே வலியுறுத்திக் கூறிவிட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இந்த அளவில் முடிவுற்று நாளை காலை 9 மணி அள
பி.ப. 1-30 வில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

### 7. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders*

' Nil '

B. *Reports, Notifications and other papers.*

30. Report of the Committee on Public Accounts 1969-70 of the Audit Report on the Accounts of the Tamil Nadu Electricity Board for the year 1965-66.



## APPENDIX I.

[Vide item No. (6) on page 77 ]

[Address by the Governor of Tami Nadu.]

Hon'ble Members of the Legislature,

It is my pleasant privilege to welcome you all once again to this joint session of the Legislative Assembly and the Council.

2. At the outset, I recall with deep regret the great loss we suffered early last year in the demise of the late revered Chief Minister of Tamil Nadu, Dr. C. N. Annadurai. Speaking for myself, I lost a dear friend and a wise counsellor. Tamil Nadu will ever miss the commanding and healing presence of an affectionate and great leader. His memory is truly enshrined in the hearts of the people of this State and it is only fitting that we begin to-day's session by paying our homage to him.

3. In May 1969, we suffered another grievous loss in the passing away of Dr. Zakir Husain, the universally respected President of India. In the short tenure of his office as President, he had earned the affection of millions of people. In his death, we lost a highly cultured and deeply respected friend.

4. I should also mention the widely-regretted demise of Thiru A. Govindaswami. An able Minister and a warm-hearted man, he was a pillar of strength to the Government of Tamil Nadu.

5. In the year since we met last, many great changes have taken place. The peaceful transition of leadership from the late Anna's hands to Thiru M. Karunanidhi is evidence of the maturity of Tamil Nadu's democratic traditions. In the all-India scene, a new President Dr. V. V. Giri has taken over; we know him well as a man of the masses and wish him success in his high office.

6. The year that has gone by witnessed one of the most widespread droughts Tamil Nadu has ever known. For the second consecutive year the rains failed over nearly the whole State; tanks that had never been dry within living memory presented a parched and grim scene. For the State as a whole, the rainfall in the south-west monsoon was in deficit by 20.9 per cent compared to the normal, deficiencies for individual districts ranging from 3.5 per cent to 51 per cent. Man and beast faced the dreaded prospect of having to go without food and water. Even drinking water became scarce in many tracts of the State. It speaks volumes for the imaginative and bold leadership of the State Government that far from being dismayed by this spectacle of human suffering, they organised all efforts on a massive scale to bring solace and succour to the millions and at the same time implemented measures of permanent improvement. As pointed out by the Chief Minister at the Collector's Conference organised

to consider measures of combating the drought in April 1969, Government concentrated on turning even the handicap of drought into an opportunity to do good to the people. An imaginative programme involving an outlay of Rs. 18 crores including Rs. 5 crores for water-supply, Rs. 2.5 crores for minor irrigation Rs. 2 crores for major irrigation and Rs. 2.7 crores for roads was undertaken all over the State. I would be failing in my duty if I do not compliment the Government in general and the District Administration in particular for the splendid job they did in implementing this programme in record time. It is no small credit to the administration that notwithstanding such a severe drought, there was no place in the State where people died of starvation or complained of lack of drinking water. It is also gratifying to note that as a result of these measures, many of the tanks in the State have been desilted and the recent good rains have led to most of them receiving and holding ample supplies On behalf of all of you, may I also offer our sincere thanks to the Prime Minister and the Government of India for coming forward to assist the State in its time of distress with loans and grants to the extent of Rs. 14.25 crores.

7. Following the last year's drought we would have been in serious difficulties if nature had failed us once again. Fortunately, the monsoons have played fair and we have had more than an average rainfall. What is more, our reservoirs have received good fillings and we seem set to have a good agricultural year. Kuruvai in Thanjavur was as good as normal and we expect a bumper harvest of rice in the Samba. We have also organised an impressive programme for planting the new variety of rice IR-8 in Navarai in many parts of the State and expect that this would spread. Our arrangements for institutional financing of agriculture have been intensified. Considering the importance of medium-term credit for agriculture, Government have taken a decision to open sixty more land development banks in the State. Our Agro Industries Corporation has also increased its lending operations for purposes of installation of pumpsets. During the year it is expected that 10,000 pumpsets would have been set up by the Agro Industries Corporation alone as against 3,799 during the previous year. This is over and above the pumpsets financed by other agencies. Thanks to the various measures taken by Government, the production of foodgrains during the year is expected to reach a level of 63 lakhs tonnes, as against 53.5 lakhs tonnes in 1968-69.

8. The Government of Tamil Nadu continue to accord high priority to schemes for rural electrification. In the current year, a special programme for electrification has been commenced with a view to complete total rural electrification in the State within the next two years. All possible sources of funds have been tapped in order to increase the provision for rural electrification during the current year and the coming years. During the year 1969-70, as against 3,000 villages originally programmed to be electrified, we now expect nearly 6,000 villages to be given connections. The total number of pumpests electrified up to the end of December 1969 is expected to be 4,60,000 roughly.



9. In July 1969, Government lifted the ban on the inter-district movement of paddy and rice except in Thanjavur district and in the statutorily rationed areas of Madras City and Coimbatore. The lifting of controls over the inter-district movement of paddy and rice was a significant step in the process of normalisation of trade in foodgrains. This step led to improved availability of foodgrains, stabilisation of prices at reasonable levels and the reduction of regional disparities in prices of paddy and rice. At the same time, Government spared no pains to maintain the public distribution system. It is widely admitted that the abolition of check-posts has had a wholesome effect on the administrative and economic situation in the countryside. Government of Tamil Nadu have now taken a further bold decision to abolish all controls on sale and movement of foodgrains within the State except with reference to the continuance of the One Rupee-a-measure scheme in Madras City and Coimbatore. Both these cities will be placed under informal rationing as against the statutory rationing now in force. The open market will be permitted to operate in these two cities as in the rest of the State. Government have also taken a decision that in keeping with the spirit of the One Rupee-a-measure scheme, rice will be supplied under this scheme to all persons in the City of Madras and in Coimbatore who are in receipt of incomes less than Rs. 200 per month. It is the hope of Government that as a result of free movement of rice, the general price level will be lowered and that people will welcome generally this long awaited measure. I am confident that this is an appropriate time to introduce this measure espicially when we expect a substantially higher production of rice than before. I hope that the impact of this step on the farmer as well as the consumer will be beneficial.

10. The recent drought highlighted the urgent need for speeding up the programme of providing water-supply to the villages and towns of the State. In order to have a co-ordinated approach to this problem, Government have set up a water-supply and Drainage Board which will in due course be placed on a statutory footing. This Board will be in charge of an accelerated programme of water-supply and drainage. Government have during the year taken steps to obtain funds from the Life Insurance Corporation for implementing this massive programme. So far, the Life Insurance Corporation has approved schemes costing nearly Rs. 14 crores and covering 21 municipalities and 7 town panchayats. Against this, the Life Insurance Corporation has sanctioned for the current year Rs. 1.92 crores towards its share of cost. For rural water-supply, Government would be spending during 1969-70 a total sum of Rs. 7 crores nearly, as against Rs. 1.7 crores originally allotted. This includes Rs. 5 crores

spent on account of drought. Members are aware of the steps being taken by Government in regard to expediting the water-supply schemes of Madras City. During the recent drought, the position was indeed extremely difficult. But, thanks to the ingenuity and hard work of our engineers, we were able to surmount these difficulties and provide at least a moiety of water-supply to all citizens. Government have already called for tenders for supply of pipes for the Veeranam Water-supply Scheme and meanwhile, work has already commenced on preliminary stages of the scheme.

11. During the year, Government received the report of the Justice Ganapathia Pillai Commission appointed to go into the problems of agricultural labour in East Thanjavur. Government also issued orders in August 1969 accepting the major recommendations of the Commission. The wages of agricultural labour have been revised accordingly. It is my confident belief that this decision has gone a long way to meet Government's goal of peace with social justice in Thanjavur district. Government have been gratified by the response to the effective and speedy implementation of these recommendations. Peace has been restored in the district and agrarian relations have been smooth during the year under review.

12. Industrial activity has registered an upward trend during the year. Thanks to the presistent persuasion by the Chief Minister and the Government of Tamil Nadu, the Finance Minister of India announced certain concessions in respect of the excise duty on yarn in March-April 1969. While neither the Government of Tamil Nadu nor the industry can claim that these concessions were fully satisfactory they were nevertheless a step in the right direction. A number of textile mills, which were limping along, re-activated themselves as a result. We must also mention at this stage the liberal measures taken by the Government of Tamil Nadu in this regard. Substantial concessions in sales-tax and power tariff were announced for the textile mills in May 1969. As a result of all this, one sees that the number of working mills has gone up from 163 to 175. The Government also set up a Textile Corporation for the State in April 1969. As of to-day, the Textile Corporation has so far taken over four mills and has already re-opened three mills. The Tamil Nadu Relief Undertakings (Special Provisions) Act, 1969, was also passed in October 1969 giving substantial relief to the textile mills in respect of their liabilities.

13. Another development of interest to all of us is the decision to introduce 12,500 powerlooms in the State. The imbalance in the textile industry of the State has been primarily due to the twin factors of (*a*) dependence for cotton on out-of-State production centres and (*b*) the location of the market for yarn in other far away States. Sixty per cent of the yarn produced in the State goes to the northern States to be processed in their powerlooms whose products are then sold in our State. In order that the market for the yarn produced in our mills may be stable and have



an element of growth, it is necessary that an adequate number of powerlooms are established in the State. With a view to smoothing the transition, Government of Tamil Nadu have decided to offer these powerlooms primarily to the co-operatives of handloom weavers. Government also propose to show preference to hand loom weavers in respect of assignment of lands and in granting educational concessions. Special retraining programmes are also being organised for handloom weavers.

14. In respect of the general industrial situation, I must strike a note of hope tempered with caution. I must compliment Government authorities, management and labour in the State on the excellent situation on the labour front. The economic recession in the country as a whole has also been generally lifting and engineering industries report better demand for their products. Thanks to this, a number of engineering units in the State have turned the corner and are working nearer to full capacity. Government of Tamil Nadu have also followed an imaginative policy of helping engineering units which have been in distress during the last few years.

15. In order to attract new industries to the State, Government appointed a working group to examine the structure of power tariffs. In October 1969, this group submitted an interim report based on which series of concessions to new industries were announced by Government. These have been widely welcomed and I hope that as a result, many entrepreneurs will be attracted to set up new units in the State. As the House is aware, a letter of intent has been issued to establish a fertiliser plant at Tuticorin. A new company called the Southern Petro-Chemicals Industrial Corporation has been registered and arrangements are under way to obtain the necessary foreign exchange and rupee resources for this project. Licences which have been received already for projects in the field of pharmaceuticals and plastics are also well set on the way to implementation. A Rs. 6 crores project to manufacture plastics, resins and chemicals at Tuticorin has completed its financing arrangements and installation is commencing shortly. Imperial Chemical Industries is setting up a pharmaceutical project at Ennore. Another important project coming up in the State for which financing arrangements have been completed during the year is Nagapal Petro-Chemical Refining Limited which will use products from Madras Refinery to produce transformer oils and petroleum specialities. Government are gratified at the encouraging response of industrialists to the climate for industrial entrepreneurship in the State.

16. Government have every reason to hope that an early favourable decision will be taken by the Government of India on the setting up of the Salem Steel Plant. Government have received from the Engineers India Limited a feasibility study on the establishment of a petro-chemical complex utilising the by-products of the Madras Refinery. Engineers India Limited have recommended the establishment of a Naptha Cracker with a through-put of

3,50,000 tonnes of naptha and the setting up of facilities for the manufacture of polyethylene, P.V.C., artificial rubber and other petro-chemical products. It is expected that this complex when established will involve a capital outlay of roughly Rs. 200 crores including the various downstream units. The Government of Tamil Nadu are engaged in discussions with the Government of India in order to speed up the establishment of this project.

17. I turn now to the general financial situation of the State. The Honourable Minister for Finance will no doubt cover this aspect in greater detail in the forthcoming budget speech. I shall however refer to certain general considerations. The year that has gone by saw the publication of the recommendations of the Fifth Finance Commission which have, to say the least, been extremely disappointing to the State. The effect of the recommendations has been that in the national pool of resources, the State's share has been decreased from 7.2 per cent to 6.9 per cent. This has led to the continuance of a large gap between the revenue receipts and expenditure of the State. We are also extremely distressed to note that the additional taxation which the State had done for the purposes of the Plan have been counted towards the non-plan requirements and the deficit grants correspondingly reduced. The State Government are also distressed at the fact that no credit has been given for the loss of revenue from Prohibition—a national policy which this State is almost alone in pursuing. No account has also been taken of the likely impact of the recommendations of the Pay Commission which has been appointed by the State. Prudence has been penalised and it would appear as if financial devolution would increase only in direct proportion to lack of controlled expansion of expenditure, and reluctance to raise resources.

18. The State's Fourth Five-Year Plan has not yet been finally determined. In the first draft of the Fourth-Five year Plan, Tamil Nadu had been assigned a Central assistance of Rs. 250 crores and a total State Plan of Rs. 564 crores. This was in 1966. In 1969, the approved plan stands at Rs. 502 crores and Central assistance is intimated as Rs. 202 crores. This is a position which the State can hardly accept. Indeed, considering that the annual plan in 1968–69, the year preceding the current Fourth Plan, was Rs. 93 crores, it is difficult to visualise a rate of outlay of a lower order in the current year. On this basis, the State Government have made representations at the highest level that its Fourth Plan should be at least Rs. 575 crores. Towards this, the State Government have requested that Central assistance may be increased to Rs. 250 crores (the figure accepted earlier) and debts rescheduled to the extent of Rs. 53 crores. I would strongly commend these requests for favourable consideration by Government of India.

19. The relationship between the Centre and States has been attracting a great deal of attention in recent years. It is nearly 20 years since the present Constitution was written and adopted and it is only appropriate that the question of Centre-State relations be reviewed in the light of actual experience. The Government have therefore constituted a Committee under the Chairmanship of Dr. P. V. Rajamannar, with Dr. A. Lakshmanaswami Mudaliar and Dr. P. Chandra Reddi as members to examine this entire question. The Committee will consider the relationship that should subsist between the Centre and the State in a truly federal set-up. It will examine the existing provisions of the Constitution and suggest measures necessary for augmenting the resources of the State as also for securing the utmost autonomy for the State in the executive, legislative and judicial branches. The report of the Committee is being eagerly awaited.



20. I refer now briefly to an important socio-economic change which took place in June 1969—namely the nationalisation of banking. We had expected that as a result of this measure, resources at the disposal of the State Government will be increased. This has not happened to any perceptible extent. We had also requested the Prime Minister to ensure that nationalisation should not result in the shifting of decision-making powers from their earlier locations in the States to the Secretariats at New Delhi. I hope that the Government of India will, in consultation with the State Government, take steps to see to it that this does not happen.

21. The State Government have had under consideration various measures to streamline the administrative apparatus of the State. In recognition of the need to bring the administration close to and responsive to the people, Government have introduced a scheme of the District Officers moving to the villages, hearing grievances and redressing them as much as possible on the spot. As an experimental measure, the State Government propose to abolish the scheme of Jamabandi in one taluk in each district and substitute it by a new pattern of audit of village accounts. It is expected that as a result of this and the scheme for District Officers moving to the villages for hearing grievances, the age-old system of Jamabandi, which has attracted considerable public criticism can be eliminated.

22. The relationship between the Police and the people has always been a delicate one. From time to time, attempts have been made to improve this relationship on the basis of *ad hoc* measures. For the first time in the last fifty years, Goverment have decided to have a systematic and through review of this problem. With a view to bringing the Police administration of the State in line with the needs of a modern welfare state, we have recently set-up a Police Commission. I hope and trust that, as a result of its labours we will be in a position to modernise the police organisation in the State.

23. This Government's approach to administration has been to make it a truly participative venture of the people. One of the significant steps in this direction has been the Prosperity Brigade introduced by the late Chief Minister Dr. Annadurai. The Brigade has now completed two years. With the active support of

the public, the Prosperity Brigade has so far built 822 school buildings set up 3,217 vegetable gardens, among other thing. buildings, desilted 892 tanks and channels, improved 13,500 school The total value of work executed by it comes to Rs. 67 lakhs, as against a Government expenditure of only Rs. 22 lakhs. 534 Seerani Arivagams have been started under the Prosperity Brigade Scheme. I must also make a special mention of the one-year special programme, as a result of which Prosperity Brigades have implemented production-oriented projects and remunerative enterprises. The targets for the year ending September 1970 include the building of 374 schools, sinking of 500 community wells and setting up of 60 rock blasting units. The Prosperity Brigade has thus become a part and parcel of the developmental activities in the State.

24. During the year, the State Government initiated a number of measures for the benefit of its employees. Besides implementing the measures regarding marriage advances and leave concessions, Government also liberalised rules relating to payment of pension and leave salaries. In respect of non-gazetted officers, the State Government have decided that leave salary shall be equal to the pay last drawn. Procedures in regard to the grant of pension have been liberalised. It has been ordered that the time consuming processes of verification of services for pension purposes be simplified. Besides, non-gazetted Government officers proceeding on pension will hereafter be entitled to draw their provisional pension as fixed by their heads of office and do not have to wait for pension payment orders from the Accountant-General.

25. The question of constituting a state-wide special service for Municipal staff and authorising the payment of pension to them has been under consideration of Government for some time past. Government have since decided that with effect from 14th January 1970, such a state-wide Municipal Service be constituted to cover all the employees in the superior services, viz., lower division clerks and above in all Municipalities in the State. All these employees will now become pensionable and the pension fund will be administered by the Examiner of Local Fund Accounts.

26. Government are aware that since the establishment of the last Pay Commission in 1960, there have been increases in the price levels in the State. With a view to meeting this increase in cost of living during the last two years, a series of increases of dearness allowance have been given to the employees. The State has incurred an annual expenditure of Rs. 7.20 crores as a result of these enhancements of dearness allowance. Government had placed before the Fifth Finance Commission the very reasonable request that the likely impact of the recommendations of a Second Pay Commission would have to be taken into account in its recommendations. As I have already pointed out, the Fifth Finance Commission has ignored our contention. Even so, the Government felt that it was necessary and appropriate that a Pay



Commission should be appointed to look into and revise the structure of salaries and allowances of Government servants of all categories. A Pay Commission has accordingly been set up and has already commenced its work. It is our confident expectation that as a result of the labours of the Pay Commission, a modern and rational pay structure will be evolved.

27. In keeping with Government's policy of uplift of the economically down-trodden, Government have decided that as many house-sites as possible should be assigned to landless persons in the State both in the urban and in the rural areas. With this in view, a planned drive has been launched in the current year to regularise the encroachments made on Government lands by huts, tenements, etc., if otherwise the occupation is unobjectionable. This drive has progressed satisfactorily with 61,004 cases having been regularised so far up to the end of November 1969. Even more significant is the achievement of Government in regard to assignment of lands for cultivation to landless poor. The policy of the Government is to assign as much of Government land as possible to those who are landless. As against 22,849 acres assigned in 1967-68 and 50,000 in 1968-69, the target of assignment for the current year is 1,00,000 acres. Already this target has been reached. This is a creditable achievement and has gone far to meet the legitimate demands of a number of landless peasants.

28. In pursuance of its policy of social justice, Government have taken a series of measures for the improvement of backward classes. The criteria for awarding scholarships to backward classes have been liberalised and all students from the backward and most backward classes who get not less than 40 per cent marks in the examination have been made eligible for scholarships. This compares with the earlier criteria of 45 per cent for the most backward classes and 50 per cent for backward classes. As a consequence, there has been an increase in the financial provision for scholarships to Rs. 213 lakhs. This is nearly twice the amount spent for the same purpose last year. In order to have a comprehensive appraisal of the present programme for the improvement of backward classes and to frame a future course of action, Government have set up a Backward Classes Commission under the Chairmanship of Thiru A. N. Sattanathan with Thiruvalargal S. Chinnappan and M. A. Jamal Hussain as members. The Commission has started its work and we hope to receive its report by next year.

29. The legislative programme for the current session is not very heavy. The Tamil Nadu General Sales Tax (Fourth Amendment) Ordinance, 1969, was promulgated on 27th November 1969. A Bill to replace this Ordinance is being introduced for your consideration. Similarly, jaggery and cocoanuts have been brought under Single Point tax of 5 per cent at the point of first purchase. Certain exemptions from tax provided under item 3 of the Third Schedule of the General Sales Tax Act have been withdrawn.

[1970 ஜனவரி 21

Under a notification it has been proposed that alcoholic liquor be subjected to single point tax of 12 per cent. Bills to replace these notifications are also being introduced for consideration by the Legislature.

30. The question of amending the Tamil Nadu District Municipalities Act has been under consideration for a long time. A comprehensive re-examination is now being undertaken and a Bill to implement the changes will be introduced in the Legislature during the present session.

31. The people of the State recently celebrated the two thousandth birthday of Tiruvalluvar, the Gandhi Centenary and Guru Nanak's five hundredth birth day. I am happy to note that this State has indeed been fortunate in maintaining communal harmony, an ideal which was dear to the hearts of these great souls. I hope and trust that the ideals of truth, non-violence and tolerance preached by these great sages will continue to be followed by the people of this State and elsewhere.

32. I look forward with interest to your deliberations. I am confident that you will maintain your reputation for the competence, objectivity and decorum with which you carry on the work in the Legislature. Thank you.

## இணைப்பு II

[77-வது பக்கத்தில் உள்ள அடிக் குறிப்பைக் காண்க]

[ஆளுநர் பேருரையின் தமிழாக்கம்]

சட்டமன்ற மாண்புமிகு உறுப்பினர்களே,

சட்டப் பெருமன்றமும், சட்டப் பேரவையும் கூண்டியுள்ள இக்கூட்டத் தொடருக்கு மீண்டும் ஒருமுறை உங்கள் அனைவரையும் வரவேற்கும் தனி வாய்ப்புப் பெற்றமை குறித்து நான் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன்.

2. என்னுடைய உரையைத் தொடங்குவதற்கு முன், கடந்த ஆண்டின் தொடக்கத்தில், காலஞ்சென்ற தமிழ்நாட்டின் முதலமைச்சர், நமது மதிப்பிற்குரிய டாக்டர் சி. என். அண்ணாதுரை அவர்களின் மறைவால் நமக்கு ஏற்பட்ட பெரும்இழப்பைப் பற்றி என் உள்ளம் ஆழ்ந்த வருத்தத்துடன் நினைவு கூறுவதைக் குறிப்பிட விரும்புகிறேன். என்னைப் பொறுத்தவரையில், அரிய தோர் நண்பரை—ஆன்ற அறிவுரையாளர் ஒருவரை நான் இழந்து விட்டேன். அன்பும் அருந்திறலும் கொண்ட ஒரு பெருந் தலைவரின் தறுகண்மையையும், தண்ணளியையும் தமிழகம் இனி என்றும் காணமுடியாது. இம் மாநில மக்களின் உள்ளங்களில் அவரது நினைவு உண்மையாகவே கோயில்கொண்டுள்ளது. அன்னாருக்கு நம் அஞ்சலியைச் செலுத்தி இன்றைய கூட்டத்தொடரை நாம் தொடங்குவது சாலவும் பொருத்தமான செயலாகும்.



1970 ஜனவரி 21]

3. 1969 மே திங்களில் நமக்கு ஏற்பட்ட சிந்தை நோய் கூரும் மற்றொரு மாபெரும் இழப்பு, உலகெங்கணும் புகழ் பெற்ற இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகிர் உசேன் அவர்களது மறைவாகும். குடியரசுத் தலைவராக அவர் பதவி வகித்த குறுகிய கால அளவில் கோடிக்கணக்கான மக்களின் அன்புக்குரியவரானார். அவரது மறைவால் உயர்ந்த பண்பாடும் மாண்பும் உடைய ஒருவரை நாம் இழந்தோம்.

4. தமிழக் வரைப்பின் பெருங்குடி மக்களை வருத்தத்தில் ஆழ்த்திய திரு. அ. கோவிந்தசாமி அவர்களின் இறுதியைப் பற்றியும் நான் குறிப்பிட விழைகின்றேன். திறமை வாய்ந்த அமைச்சராகவும் தண்ணெனும் உள்ளம் படைத்தவராகவும் இருந்த அவர், தமிழ்நாட்டின் அரசிற்குத் தூண்போல் நின்று துணையாயிருந்தார்.

5. இப் பெருமன்றத்தினரை நான் இறுதியாகச் சந்தித்த ஆண்டிற்குப் பிறகு பல பெரும் மாறுதல்கள் நிகழ்ந்துள்ளன. மறைந்த அண்ணாவின் கரங்களிலிருந்து அமைதியான முறையில் ஆட்சித் தலைமைப் பொறுப்பு, திரு. மு. கருணாநிதி அவர்களிடம் மாறியது, பண்பட்ட தமிழ் நாட்டின் குடியாட்சி மாபிற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். அனைத்திந்தியக் களனிலே, புதிய குடியரசுத் தலைவர் டாக்டர் வி.வி. கிரி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளார். மக்களின் தலைவராகிய அவரை நாம் அனைவரும் நனிமிக அறிவோம். வெற்றியுடன் அவர் தமது பதவியின் பொறுப்பை இனிது நிறைவேற்ற அவருக்கு நம் நல்வாழ்த்துக்கள்.

6. என்றும் காணுவகையில் மிகப் பரவலான வறட்சி ஒன்றைக் கடந்த ஆண்டு தமிழகம் கண்டது. பெரும்பாலும் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக இம் மாநிலம் முழுவதும் மழை பொய்த்தது. நினைவிற்குத் தெரிந்தவரை என்றுமே வற்றாத ஏரிகள் வறண்டு போய் அவலக் காட்சியளித்தன. மாநிலம் முழுவதற்குமான இயல்பான மழையளவுப் புள்ளிவிவரத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கையில், தென் மேற்குப் பருவ மழை 20.9 சதவீதம் குறைந்திருந்தது. தனித்தனி மாவட்டங்களின் மழையளவு 3.5 சதவீதம் முதல் 51 சதவீதம் வரையில் குறைந்திருந்தது. மக்களும், விலங்கினங்களும் உணவும், நீரும் கிடைக்காத ஓர் அச்சுறுத்தும் நிலையை எதிர்நோக்கி நின்றனர். மாநிலத்தின் பல பகுதிகளில் பருகும் நீருக்கும் கட்டுப்பாடு ஏற்பட்டது. அல்லற்படும் மக்களின் ஆற்றொணைத் துயரைக் கண்டு கலங்காமல், ஆக்கமும் துணிவும் நிறைந்த ஆள்வினையோடு, அரசு பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு ஆறுதலும், உதவியும் அளிக்கும் வகையில் பெருமளவில் எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டதோடு நிலையான மேம்பாட்டிற்கு உறுதுணையாயுள்ள பல திட்டங்களையும் நிறைவேற்றிய செயல் பல்லாற்றானும் பாராட்டத் தக்கதாகும். 1969 ஏப்ரல் திங்களில் வறட்சி நிலையைத் துடைப்பதற்கான ஏற்பாடுகளைப் பற்றி ஆலோசிப்பதற்கென்று கூட்டப்பட்ட மாவட்ட ஆட்சித்

டிருந்த எல்லாக் கட்டுப்பாடுகளையும் அகற்றிவிடுவதென்று தமிழ் நாடு அரசு துணிந்து ஒரு முடிவைச் செய்துள்ளது. இவ்விரு நகரங்களிலும் இப்போது செயலிலுள்ள சட்டப்படிக்கான பங்கீட்டு முறைக்கு மாறாக, மரபிலாப் பங்கீட்டு முறை informal rationing செயலுக்கு வரும். இம் மாநிலத்தின் பிற பகுதிகளிலுள்ளது போலவே, இவ்விரு நகரங்களிலும் வெளி அங்காடிகள் நெல்-அரிசி இவற்றை விற்க அனுமதிக்கப்படும். படி அரிசித் திட்டத்தின் உட்கருத்திற்கிணங்க, சென்னை மாநகரிலும், கோயம்புத்தூரிலும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 200-க்குக் குறைந்த வருவாயுள்ள அனைவருக்கும் இத் திட்டத்தின்கீழ் அரிசி வழங்கப்படும். எங்கேனும் தடையின்றி அரிசி எடுத்துச் செல்லப்படுவதன் விளைவாக, விலைவாசிகள் சரியுமென்றும் மக்கள் நீண்ட காலமாக எதிர்பார்த்திருந்த இந்த ஏற்பாடு பொதுவாக அவர்களால் வரவேற்கப்படுமென்றும் அரசு நம்புகிறது. குறிப்பாக, இதற்குமுன் எதிர்பார்த்ததைவிட அதிக அளவில் நெல் விளைச்சலை நாம் எதிர்பார்க்கும் நிலையில் இருப்பதால், இந்த ஏற்பாட்டினைச் செயல்படுத்துவதற்கு இதுவே சாலவும் ஏற்ற தருணமென்று நான் உறுதியாக எண்ணுகிறேன். உழவர்களுக்கும் துய்ப்பவர்களுக்கும் (consumers) இந்த ஏற்பாடு உறுபயனளிக்குமென்று நான் நம்புகிறேன்.

10. அண்மையில் ஏற்பட்ட வறட்சி, நமது மாநிலக் கிராமங்களுக்கும், நகரங்களுக்குமான குடிநீர் வசதித்திட்டத்தை விரைவுபடுத்த வேண்டிய உடனடித்தேவையை எடுத்துக்காட்டியுள்ளது. இச்சிக்கலை ஒருங்கியமாக ஆராயும் நோக்கில், அரசு "நீர் வழங்கல்-வடிகால் வாரியம்" ஒன்றை அமைத்துள்ளது. இவ்வாரியம் நாளடைவில் சட்டப்படி நிறுவப்படும். நீர் வழங்கல்-வடிகால் வசதித் திட்டங்களை விரைந்து செயல்படுத்துவதற்கு இவ்வாரியம் பொறுப்பேற்கும். இப் பெருந்திட்டத்தை நிறைவேற்றும் பொருட்டு, அரசு இவ்வாண்டில் ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து நிதி உதவி பெறுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதுவரையில், ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் 21 நகராட்சிகளுக்கும், 7 பேரூராட்சிகளுக்கும் தேவையான சுமார் ரூ. 14 கோடியளவிற்குச் செலவிடப்படும் திட்டங்களுக்கு ஏற்பு அளித்துள்ளது. இதையொட்டி, ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் நடப்பு ஆண்டில் செலவுத் தொகையில் தனது பங்காக ரூ. 1.92 கோடிக்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. கிராம நீர்வழங்கல் திட்டத்திற்காக முதற்கண் ஒதுக்கப்பட்ட ரூ. 1.7 கோடிக்கு மாறாக, 1969-70-ல் அரசு மொத்தம் சுமார் ரூ. 7 கோடி செலவு செய்யும். இதில் வறட்சி காரணமாகச் செலவு செய்யப்பட்ட ரூ. 5 கோடியும் அடங்கும். சென்னை மாநகருக்கு நீர் வழங்கும் திட்டங்களை விரைவுபடுத்துவது குறித்து அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். அண்மையில் ஏற்பட்ட வறட்சியின்போது, நீர் வழங்கல் நிலை மிக இடர்ப்பாடாக இருந்தது. ஆனால், நமது பொறியாளர்களின் கூர்மதி காரணமாகவும், கடும் உழைப்பின் பயனாகவும்



இந்த இடர்ப்பாடுகளை நாம் தீர்த்து, குடிமக்கள் அனைவருக்கும் ஓரளவிற்காவது சீரான குடிநீர் வசதி ஏற்பாடு செய்ய நம்மால் முடிந்தது. வீராணம் குடிநீர் வழங்கும் திட்டத்திற்காக குழாய்கள் வாங்குவதற்கான ஒப்பந்தப் புள்ளிகளை அரசு வரவழைத்துள்ளது. இதற்கிடையில், இத் திட்டத்தின் முன்னோடி நிலைகள் குறித்த பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

11. கிழக்குத் தஞ்சை மாவட்டத்தில் உழவுத் தொழிலாளர்களின் சிக்கல்களைப் பற்றி ஆய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட நீதிபதி திரு. கணபதியா பிள்ளை ஆணைக் குழுவின் அறிக்கை இவ்வாண்டில் அரசிற்குக் கிடைத்துள்ளது. இவ்வாணைக்குழுவின் முக்கியமான பரிவுரைகளை ஏற்றுக்கொண்டு அரசு 1969 ஆகஸ்டு திங்களில் ஆணைகள் வெளியிட்டது. அப் பரிவுரைகளுக்கிணங்க, உழவுத் தொழிலாளர்களின் கூலி விதங்கள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. தஞ்சை மாவட்டத்தில் சமூக நீதியுடன் கூடிய அமைதியை நிலைநாட்ட வேண்டுமென்கிற அரசின் குறிக்கோளை எய்துவதற்கு இம் முடிவு பெரிதும் உதவியளித்துள்ளதென்பது எனது உறுதியான நம்பிக்கையாகும். இப் பரிவுரைகளை வினைத்திட்பமுடனும் விரைந்தும் செயல்படுத்துவதில் மக்கள் முனைந்திருப்பதைக் காண அரசு பெரு மகிழ்ச்சியுறுகின்றது. கணிப்பிற்குட்பட்ட இவ்வாண்டில், இம்மாவட்டத்தில் அமைதி நிலை நாட்டப்பெற்று, உழவுத் தொழில் உறவுகள் சீர்செய்யப்பட்டுள்ளன.

12. இவ்வாண்டில் தொழில்வளம் மேனிலை அடைந்துள்ளது. முதலமைச்சர் அவர்களும் தமிழ் நாடு அரசும் மேற்கொண்ட இடைவிடாத தூண்டுதலினால் இந்திய நிதியமைச்சர் 1969 மார்ச்—ஏப்ரல் திங்களில் பருத்தி நூல் மீது விதிக்கப்படும் ஆலைத் தீர்வை குறித்துச் சில சலுகைகளை அறிவித்தார். தமிழ் நாடு அரசோ, தொழில் துறையோ இச் சலுகைகள் முற்றிலும் மனநிறைவு அளிப்பவையென்று சொல்ல இயலாமற் போனாலும், அவை சரியான வழியில் எடுக்கப்பட்ட ஒரு நடவடிக்கையாகும் என்பதில் ஐயமில்லை. இதன் விளைவாக, இதுகாறும் முடங்கிக்கிடந்த பல பஞ்சாலைகள் மீண்டும் செயல்படத் தொடங்கின. இது குறித்துத் தமிழ் நாடு அரசு மேற்கொண்டுள்ள தாராளமான நடவடிக்கைகளைப் பற்றியும் இந்த நிலையில் நான் குறிப்பிடவேண்டும். 1969 மே திங்களில் பஞ்சாலைகளுக்கு விற்பனை வரி வகையிலும் மின்சாரக் கட்டண வகையிலும் கணிசமான சலுகைகள் அறிவிக்கப்பட்டன. இவை அனைத்தின் விளைவாக, ஓடிக்கொண்டிருந்த பஞ்சாலைகளின் எண்ணிக்கை 163-லிருந்து 175-ஆக உயர்ந்திருப்பதை நாம் காண்கிறோம். 1969 ஏப்ரல் திங்களில் இம் மாநிலத்திற்காகப் பஞ்சாலைக் கழகம் ஒன்றையும் அரசு நிறுவியுள்ளது. பஞ்சாலைக் கழகம் இற்றை நாள்வரை நான்கு பஞ்சாலைகளை மேற்கொண்டு, மூன்று ஆலைகளை முன்பே நடத்தி வருகிறது. 1969-ஆம் ஆண்டு தமிழ் நாடு இடருதவி நிறுவனங்கள் (சிறப்பு விதித்துறைகள்) சட்டமும், 1969 அக்டோபர் திங்களில் நிறைவேற்றப்பட்டு, பஞ்சாலைகளின் பொறுப்புகள் குறித்து அவைகளுக்குக் கணிசமான அளவில் இடருதவியளிக்கப்பட்டுள்ளது.

தலைவர்கள் மாநாட்டில் முதல் அமைச்சர் அவர்கள் "கேட்டினும் உண்டோர் உறுதி" என்று எடுத்துக் காட்டியதுபோல் வறட்சியால் நேர்ந்த இடையூற்றினையும் மக்களுக்கு நலம் பயக்கும் வகையில் தொண்டாற்றும் ஒரு வாய்ப்பாக அதனை மாற்றுவதில் அரசு தனது நாட்டம் முழுவதையும் செலுத்தியது. நீர் வழங்கலுக்காக ரூ. 5 கோடியும், சிறுபாசனத்திற்காக ரூ. 2.50 கோடியும், பெரும் பாசனத்திற்காக ரூ. 2 கோடியும், சாலை அமைப்பிற்காக ரூ. 2.7 கோடியும் அடங்கியுள்ள 18 கோடி ரூபாய் அளவில் முதலீடு செய்யும் ஆக்கத் திட்டம் ஒன்றை இம் மாநிலம் முழுவதும் நிறைவேற்ற அரசு எடுத்துக்கொண்டது. குறுகிய கால அளவில் இத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குப் பொதுவாக அரசும், குறிப்பாக மாவட்ட நிர்வாகமும் ஆற்றிய போற்றத்தக்க பணியைப் பாராட்டாமல் இருப்பின், நான் என் கடமையினின்றும் தவறியவனாவேன். இத்தகைய கடும் வறட்சியை ஆற்ற இயலாது மக்கள் அழி பசியினால் மடிந்தனர் என்றோ, குடி நீர் இல்லாக் குறையால் குறை இறந்தனர் என்றோ, இம்மாநிலத்தின் எப்பகுதியிலிருந்தும் அவச் சொல் ஏதும் எழாதவாறு நிலைமையைச் சமாளித்த அரசின் சாதனை எளியதோர் செயலன்று. இந் நடவடிக்கைகளின் பயனாய், பல ஏரிகளின் தூர் அகற்றப்பட்டது. அண்மையில் பெய்த பெரு மழையால் பெரும்பாலான ஏரிகள் பாசனத்திற்குத் தேவையான நீர்ச்செல்வம் நிறைந்து விளங்குவதைக் கண்ணுறும்போது நம் உள்ளம் பெருங்களிப்படைகிறது. மாநிலத்தின் துன்ப வேளையில் அதற்குக் கடனாகவும் மானியமாகவும் ரூ. 14.25 கோடியளவிற்கு உதவியளிக்க முன்வந்த இந்தியத் தலைமை அமைச்சர் அவர்களுக்கும், இந்திய அரசிற்கும் நமது உளமார்ந்த நன்றியறிதலை உங்கள் அனைவர் சார்பாகவும் என் சார்பாகவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

7. கடந்த ஆண்டின் கடும் வறட்சியைத் தொடர்ந்து, பெய்யா வானம் மீண்டும் பொய்த்திருந்தால் நாம் கொடிய துன்பத்தில் சிக்குண்டிருப்போம். நற்பேற்றின் விளைவால் பருவமழை போதிய அளவிற்கு நன்கு பெய்தது. சராசரி மழையளவிற்கு மேல் நமக்குப் பலனும் கிட்டியுள்ளது. அன்றியும், நமது நீர்த் தேக்கங்கள் நிரம்பியுள்ளன. வளமான வேளாண்மை ஆண்டினை நாம் எதிர்நோக்கிய நிலையில் உள்ளோம். தஞ்சை மாவட்டத்தில் குறுவைப் பயிர் இயல்பான அளவிற்குப் பயன் தந்துள்ளது. சம்பாப் பயிர் அறுவடை நிறை விளைச்சலைத் தருமென்று எதிர்பார்க்கிறோம். இம் மாநிலத்தின் பெரும் பகுதிகளில் நவரைப் பருவத்தில் ஐ.ஆர். 8 (I.R. 8) புதிய நெல் ரகத்தினை நடுவதற்கான திட்டமொன்றிற்கு நாம் வகை செய்துள்ளோம். இத் திட்டம் மேலும் பல பகுதிகளுக்கு விரிவடையும் என்றும் எதிர்பார்க்கின்றோம். வேளாண்மைக்கு, நிறுவனக் கடன் அளிப்பதற்கான நமது ஏற்பாடுகள் மும்முரப்படுத்தப்பட்டுள்ளன. உழவுத் தொழிலுக்கு, நடுத்தரக் காலக் கடன் உதவியளிப்பதன் சிறப்பினைக் கருத்திற் கொண்டு நமது மாநிலத்தில் மேலும் ஒரு நில மேம்பாட்டு வங்கி[illegible] திறக்க அரசு முடிவு செய்துள்ளது. வேளாண்மை சார்ந்த



தொழில்கள் கழகம், விசையேற்றங்களை நிறுவுவதற்கு மேலும் அதிகக் கடன்களை வழங்க முற்பட்டுள்ளது. முந்தைய ஆண்டில் நிறுவியுள்ள 3,799 விசையேற்றங்களுக்கு மாறாக, இக் கழகம் மட்டும் இந்த ஆண்டில் 10,000 விசையேற்றங்கள் நிறுவுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஏனைய நிறுவனங்களிடமிருந்து நிதி உதவி பெற்று நிறுவப்படும் விசையேற்றங்கள் இந்த இலக்கத்தில் அடங்காது. அரசு மேற்கொண்ட பற்பல நடவடிக்கைகளின் பயனாக, 1968–69-ல் 53.5 லட்சம் டன் அளவாக இருந்த உணவு தானிய உற்பத்தி இவ்வாண்டில் 63 லட்சம் டன் அளவிற்குப் பல்கிப் பெருகிப் பயன்தருமென எதிர்பார்க்கப்படுகிறது.

8. கிராம மின் வசதித் திட்டங்களுக்குத் தமிழ் நாடு அரசு தொடர்ந்து மிக உயர்ந்ததோர் முதன்மையிடம் அளித்து வருகிறது. அடுத்த இரண்டு ஆண்டுகளில் நமது மாநிலம் முழுவதிலும் உள்ள கிராமங்கள் அனைத்திற்கும் மின் வசதியளிக்கும் நோக்கத்துடன், நடப்பு ஆண்டில் மின் வசதி குறித்த சிறப்புத் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. கிராம மின் வசதிக்கான நிதி ஒதுக்கத்தை நடப்பு ஆண்டிலும், வருகிற ஆண்டுகளிலும் உயர்த்துவதற்காக இயன்ற நிதி வாயில்கள் அனைத்தையும் ஒன்று திரட்ட வகை காணப்பட்டுள்ளது. 1969–70-ஆம் ஆண்டில் 3,000 கிராமங்களுக்கு மின் வசதி அளிக்க வேண்டுமென்று முதற்கண் வகை செய்திருந்த திட்டத்திற்கு மாறாக, இப்போது ஏறக்குறைய 6,000 கிராமங்களுக்கு மின் வசதியளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1969 இறுதிக்குள் கிட்டத்தட்ட 4,60,000 விசையேற்றங்களுக்கு மின்வசதியளிக்கப்படுமென எதிர்பார்க்கலாம்.

9. 1969 ஜூலைத் திங்களில், தஞ்சை மாவட்டத்திலும் சென்னை மாநகரம் கோயம்புத்தூர் போன்ற சட்டப்படிக்கான பங்கீட்டு பகுதிகளிலும் தவிர ஏனைய இடங்களில் மாவட்டங்களுக்கிடையே நெல்-அரிசிப் போக்குவரத்தின் மீது விதிக்கப்பட்டிருந்த தடையை அரசு நீக்கியது. உணவு தானிய வாணிபத்தை இயல்பாக்கும் நடைமுறையில் நெல்-அரிசி இவற்றை அனுப்புவதன் மீது விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை அகற்றியது குறிப்பிடத்தக்கதொரு முன்னேற்றமாகும். இந் நடவடிக்கையின் விளைவாகத் தானியங்கள் எளிதாகக் கிட்டியதோடு அவை மேலும் நியாயமான விலைத்தரங்களில் விற்கப்பட்டன. மற்றும் வெவ்வேறு பகுதிகளில் நிலவிய ஏற்றத்தாழ்வான விலைகளும் குறுகிக் குறைந்தன. அதே சமயத்தில், பொது மக்களுக்கு உணவு தானியங்களை வழங்கும் ஏற்பாடு செயலில் இருப்பதற்காகவும் அரசு தன்னால் இயன்ற எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டது. சோதனைச் சாவடிகளை நீக்கியதால், நாட்டுப்புறங்களில் பொருளாதார நிலையிலும், நிர்வாக நிலையிலும் நல்ல மாறுதல்கள் ஏற்பட்டதெனப் பரவலாக ஒப்புக் கொள்ளப்படுகிறது. சென்னை மாநகரிலும் கோயம்புத்தூரிலும் நடைமுறையில் உள்ள ரூபாய் ஒன்றுக்கான படி அரிசித் திட்டத்தைத் தொடர்ந்து நீடிப்பதைத் தவிர, இம் மாநிலத்திற்குள் உணவு தானிய விற்பனை மீதும் போக்குவரத்தின் மீதும் விதிக்கப்பட்

டிருந்த எல்லாக் கட்டுப்பாடுகளையும் அகற்றிவிடுவதென்று தமிழ் நாடு அரசு துணிந்து ஒரு முடிவைச் செய்துள்ளது. இவ்விரு நகரங்களிலும் இப்போது செயலிலுள்ள சட்டப்படிக்கான பங்கீட்டு முறைக்கு மாறாக, மரபிலாப் பங்கீட்டு முறை informal rationing செயலுக்கு வரும். இம் மாநிலத்தின் பிற பகுதிகளிலுள்ளது போலவே, இவ்விரு நகரங்களிலும் வெளி அங்காடிகள் நெல்-அரிசி இவற்றை விற்க அனுமதிக்கப்படும். படி அரிசித் திட்டத்தின் படிகளுக்கிணங்க, சென்னை மாநகரிலும், கோயம்புத்தூரிலும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 200-க்குக் குறைந்த வருவாயுள்ள அனைவருக்கும் இத் திட்டத்தின்கீழ் அரிசி வழங்கப்படும். எங்கணும் தடையின்றி அரிசி எடுத்துச் செல்லப்படுவதன் விளைவாக, விலைவாசிகள் சரியுமென்றும் மக்கள் நீண்ட காலமாக எதிர்பார்த்திருந்த இந்த ஏற்பாடு, பொதுவாக அவர்களால் வரவேற்கப்படுமென்றும் அரசு நம்புகிறது. குறிப்பாக, இதற்குமுன் எதிர்பார்த்ததைவிட அதிக அளவில் நெல் விளைச்சலை நாம் எதிர்பார்க்கும் நிலையில் இருப்பதால், இந்த ஏற்பாட்டினைச் செயல்படுத்துவதற்கு இதுவே சாலவும் ஏற்ற தருணமென்று நான் உறுதியாக எண்ணுகிறேன். உழவர்களுக்கும் துய்ப்பவர்களுக்கும் (consumers) இந்த ஏற்பாடு உறுபயனளிக்குமென்று நான் நம்புகிறேன்.

10. அண்மையில் ஏற்பட்ட வறட்சி, நமது மாநிலக் கிராமங்களுக்கும், நகரங்களுக்கும் குடிநீர் வசதித்திட்டத்தை விரைவுபடுத்த வேண்டிய உடனடித்தேவையை எடுத்துக்காட்டியுள்ளது. இச்சிக்கலை ஒருமுகமாக அணுகும் நோக்கில், அரசு "நீர் வழங்கல்-வடிகால் வாரியம்" ஒன்றை அமைத்துள்ளது. இவ்வாரியம் நாளடைவில் சட்டப்படி நிறுவப்படும். நீர் வழங்கல்-வடிகால் வசதித் திட்டங்களை விரைந்து செயல்படுத்துவதற்கு இவ்வாரியம் பொறுப்பேற்கும். இப் பெருந்திட்டத்தை நிறைவேற்றும் பொருட்டு, அரசு இவ்வாண்டில் ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திலிருந்து நிதி உதவி பெறுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதுவரையில், ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் 21 நகராட்சிகளுக்கும், 7 பேரூராட்சிகளுக்கும் தேவையான சுமார் ரூ. 14 கோடியளவிற்குச் செலவிடப்படும் திட்டங்களுக்கு ஏற்பு அளித்துள்ளது. இதையொட்டி, ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் நடப்பு ஆண்டில் செலவுத் தொகையில் தனது பங்காக ரூ. 1.92 கோடிக்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. கிராம நீர்வழங்கல் திட்டத்திற்காக முதற்கண் ஒதுக்கப்பட்ட ரூ. 1.7 கோடிக்கு மாறாக, 1969-70-ல் அரசு மொத்தம் சுமார் ரூ. 7 கோடி செலவு செய்யும். இதில் வறட்சி காரணமாகச் செலவு செய்யப்பட்ட ரூ. 5 கோடியும் அடங்கும். சென்னை மாநகருக்கு நீர் வழங்கும் திட்டங்களை விரைவுபடுத்துவது குறித்து அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். அண்மையில் ஏற்பட்ட வறட்சியின்போது, நீர் வழங்கல் நிலை மிக இடர்ப்பாடாக இருந்தது. ஆனால், நமது பொறியாளர்களின் கூர்மதி காரணமாகவும், கடும் உழைப்பின் பயனாகவும்





இந்த இடர்ப்பாடுகளை நாம் தீர்த்து, குடிமக்கள் அனைவருக்கும் ஓரளவிற்காவது சீரான குடிநீர் வசதி ஏற்பாடு செய்ய நம்மால் முடிந்தது. வீராணம் குடிநீர் வழங்கும் திட்டத்திற்காக குழாய்கள் வாங்குவதற்கான ஒப்பந்தப் புள்ளிகளை அரசு வரவழைத்துள்ளது. இதற்கிடையில், இத் திட்டத்தின் முன்னோடி நிலைகள் குறித்த பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

11. கிழக்குத் தஞ்சை மாவட்டத்தில் உழவுத் தொழிலாளர்களின் சிக்கல்களைப் பற்றி ஆய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட நீதிபதி திரு. கணபதியா பிள்ளை ஆணைக் குழுவின் அறிக்கை இவ்வாண்டில் அரசிற்குக் கிடைத்துள்ளது. இவ்வாணைக்குழுவின் முக்கியமான பரிவுரைகளை ஏற்றுக்கொண்டு அரசு 1969 ஆகஸ்டு திங்களில் ஆணைகள் வெளியிட்டது. அப் பரிவுரைகளுக்கிணங்க, உழவுத் தொழிலாளர்களின் கூலி வீதங்கள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. தஞ்சை மாவட்டத்தில் சமூக நீதியுடன் கூடிய அமைதியை நிலைநாட்ட வேண்டுமென்கிற அரசின் குறிக்கோளை எய்துவதற்கு இம் முடிவு பெரிதும் உதவியளித்துள்ளதென்பது எனது உறுதியான நம்பிக்கையாகும். இப் பரிவுரைகளை வினைத்திட்பமுடனும் விரைந்தும் செயல்படுத்துவதில் மக்கள் முனைந்திருப்பதைக் காண அரசு பெரு மகிழ்ச்சியுறுகின்றது. கணிப்பிற்குட்பட்ட இவ்வாண்டில், இம்மாவட்டத்தில் அமைதி நிலைநாட்டப்பெற்று, உழவுத் தொழில் உறவுகள் சீர்செய்யப்பட்டுள்ளன.

12. இவ்வாண்டில் தொழில்வளம் மேனிலை அடைந்துள்ளது. முதலமைச்சர் அவர்களும் தமிழ் நாடு அரசும் மேற்கொண்ட இடைவிடாத தூண்டுதலினால் இந்திய நிதியமைச்சர் 1969 மார்ச்—ஏப்ரல் திங்களில் பருத்தி நூல் மீது விதிக்கப்படும் ஆலைத் தீர்வை குறித்துச் சில சலுகைகளை அறிவித்தார். தமிழ் நாடு அரசோ, தொழில் துறையோ இச் சலுகைகள் முற்றிலும் மனநிறைவு அளிப்பவையென்று சொல்ல இயலாமற் போனாலும், அவை சரியான வழியில் எடுக்கப்பட்ட ஒரு நடவடிக்கையாகும் என்பதில் ஐயமில்லை. இதன் விளைவாக, இதுகாறும் முடங்கிக்கிடந்த பல பஞ்சாலைகள் மீண்டும் செயல்படத் தொடங்கின. இது குறித்துத் தமிழ் நாடு அரசு மேற்கொண்டுள்ள தாராளமான நடவடிக்கைகளைப் பற்றியும் இந்த நிலையில் நான் குறிப்பிடவேண்டும். 1969 மே திங்களில் பஞ்சாலைகளுக்கு விற்பனை வரி வகையிலும் மின்சாரக் கட்டண வகையிலும் கணிசமான சலுகைகள் அறிவிக்கப்பட்டன. இவை அனைத்தின் விளைவாக, ஓடிக்கொண்டிருந்த பஞ்சாலைகளின் எண்ணிக்கை 163-லிருந்து 175-ஆக உயர்ந்திருப்பதை நாம் காண்கிறோம். 1969 ஏப்ரல் திங்களில் இம் மாநிலத்திற்காகப் பஞ்சாலைக் கழகம் ஒன்றையும் அரசு நிறுவியுள்ளது. பஞ்சாலைக் கழகம் இற்றை நாள்வரை நான்கு பஞ்சாலைகளை மேற்கொண்டு, மூன்று ஆலைகளை முன்பே நடத்தி வருகிறது. 1969-ஆம் ஆண்டு தமிழ் நாடு இடருதவி நிறுவனங்கள் (சிறப்பு விதித்துறைகள்) சட்டமும், 1969 அக்டோபர் திங்களில் நிறைவேற்றப்பட்டு, பஞ்சாலைகளின் பொறுப்புகள் குறித்து அவைகளுக்குக் கணிசமான அளவில் இடருதவியளிக்கப்பட்டுள்ளது.

13 நமது மாநிலத்தில் 12,500 விசைத் தறிகளைச் செயல்படுத்துவதற்கு அரசு எடுத்துள்ள முடிவு நம் அனைவருக்கும் ஆக்கம் தரும் மற்றொரு வளர்ச்சித் திட்டமாகும். நமது மாநிலத்திற்கு வெளியிலுள்ள பஞ்சு உற்பத்தி நிலையங்களை நாம் சார்ந்திருத்தல், பஞ்சு நூலை விற்பதற்கான அங்காடிகள், தொலைவிலுள்ள ஏனைய மாநிலங்களில் அமைந்திருத்தல்—ஆகிய இவ்விரு காரணங்களே நமது மாநிலப் பஞ்சாலைத் தொழிலின் ஏற்றத் தாழ்வுகளுக்கு அடிப்படையாக உள்ளன. இம்மாநிலத்தில் உற்பத்தியாகும் பஞ்சு நூலில் 60 சதவீதம் வடக்கு மாநிலங்களிலுள்ள விசைத்தறிகளில் துணிகளாக நெய்யப்படுவதற்குச் செல்கிறது. அத்துணிகள் பின்னர், நமது மாநிலத்திலேயே விற்பனை செய்யப்படுகின்றன. நமது பஞ்சாலைகளில் உற்பத்தியாகும் நூலுக்கு நிலையான அங்காடியை ஏற்படுத்தி, அவைகளின் வளர்ச்சிக்கு வழிகோலும் பொருட்டு நமது மாநிலத்தில் போதிய எண்ணிக்கையுள்ள விசைத்தறிகளை நிறுவுவது இன்றியமையாததாகும். இந்த இடைக் காலத்தில் இம்மாற்றம் இனிதே நிறைவேறும் வண்ணம் இந்த விசைத் தறிகளை முக்கியமாக, கைத்தறி நெசவாளிகளின் கூட்டுறவுச் சங்கங்களுக்கே முதற்கண் அளிப்பதென்று தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. நிலங்கள் ஒப்படை செய்வதிலும் கல்விச் சலுகைகள் அளிப்பதிலும், கைத்தறி நெசவாளர்களுக்கு முதன்மையிடம் அளிக்கவும் அரசு கருதுகிறது. அவர்களுக்கு மறு பயிற்சி அளிப்பதற்காகச் சிறப்புத் திட்டங்களை வகுக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.

14. தொழிலின் பொது நிலையைப் பொறுத்தவரையில், நல்லதொரு நம்பிக்கை தருகிற சூழ்நிலை நிலவினாலும், நாம் விழிப்புடன் என்றும் இருக்கவேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தொழில் துறையில் நிலவிவரும் இனிய நிலைமைக்காக இம் மாநிலத்தில் உள்ள அரசு அதிகார நிறுவனங்களுக்கும், தொழில் முதலாளிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் நான் எனது பாராட்டுகளைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். நாடு முழுவதிலும் நிலவியிருந்த பொருளாதார மந்த நிலை பொதுவாக நீங்கி வருகின்றது. பொறியியல் தொழில்கள் தங்கள் உற்பத்திப் பொருள்களுக்கு நல்ல தேவை இருப்பதாக அறிவித்துள்ளன. இதன் காரணமாக, இம்மாநிலத்திலுள்ள பல பொறியியல் தொழிற்சாலைகள் இடப்பாடுகளிலிருந்து நீங்கி, கிட்டத்தட்ட தங்கள் முழுத் திறனளவுக்கும் பணியாற்றி வருகின்றன. கடந்த சில ஆண்டுகளாகத் துயரில் ஆழ்ந்து கிடந்த பொறியியல் தொழிற்சாலைகளுக்கு ஆக்கம் அளிக்கும் பரிவான கொள்கையொன்றைத் தமிழ் நாடு அரசு கடைப்பிடித்துள்ளது.

15. இம்மாநிலத்தில் புதிய தொழில்களை நிறுவுவதற்குக் கவர்ச்சி அளிக்கும் வகையில் மின்சாரக் கட்டண அமைப்பை ஆய்வு செய்வதற்கென செயற்குழு ஒன்றை அரசு நியமித்தது. 1969 அக்டோபர் திங்களில் இக்குழு இடைக்கால அறிக்கையொன்றை அனுப்பியது. இந்த அறிக்கையின் அடிப்படையில் புதிய



தொழில்களுக்கென தொடர்ச்சியான பல சலுகைகளை அரசு அறிவித்தது. இவை எங்கணும் வரவேற்கப்பட்டுள்ளன. இவற்றின் விளைவாக, தொழில் முனைவர்கள் பலர் இம்மாநிலத்தில் புதிய தொழிற் பிரிவுகளை நிறுவுவதற்கு ஈர்க்கப்படுவரென்று நான் நம்புகிறேன். தூத்துக்குடியில் உரத் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கு அதிகார பத்திரம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளதை இப் பேரவையினர் அறிவர். தென் பகுதி பாறையெண்ணெய்-ரசாயனப் பொருள்கள் தொழிற் கழகம் (Southern Petro-Chemicals Industrial Corporation) என்கிற புதிய கம்பெனி ஒன்று பதிவு செய்யப்பட்டு, இத் திட்டத்திற்குத் தேவையான அந்நியச் செலாவணியையும் பொருள் வசதியையும் பெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மருந்துப் பொருள்கள், பிளாஸ்டிக் பொருள்கள் உற்பத்தித் துறையில் ஏற்கனவே பெறப்பட்டுள்ள உரிமங்களைக்கொண்டு இத்திட்டங்களை விரைந்து நிறைவேற்றுவதற்கும் வழி கோலப்பட்டுள்ளது. தூத்துக்குடியில் பிளாஸ்டிக் பிசின், ரசாயன பொருள் இவற்றை உற்பத்தி செய்வதற்கான 6 கோடி ரூபாய்த் திட்டம் ஒன்று அதற்கான நிதி ஏற்பாடுகளை முடித்துக்கொண்டு நிறுவன வேலைகளை விரைவில் தொடங்கவிருக்கிறது. இம்பீரியல் கெமிக்கல் தொழிற்சாலை நிறுவனம், மருந்துப் பொருள்கள் தொழிற்சாலையொன்றை எண்ணூரில் நிறுவி வருகின்றது. இம்மாநிலத்தில் நிறுவப்படவிருக்கும் மற்றொரு முக்கியமான தொழிற்சாலை, நாக்பால் பெட்ரோ-கெமிக் கெமிகல் தூய்மைத் தொழில் நிறுவனமாகும் Nagpal Petro-Chemical Refining Ltd. . இதற்கான நிதி ஏற்பாடுகள் இவ்வாண்டில் முடிவடைந்துள்ளன. டிரான்ஸ்பார்மர் எண்ணெய் வகைகள், பாறையெண்ணெய் சிறப்புப் பொருள்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதற்காக, இத் தொழிற்சாலை, சென்னை எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலையிலிருந்து தயாராகும் பொருள்களைப் பயன்படுத்தும். நமது மாநிலத்தில் தொழில்களை வளர்ப்பதற்கு நிலவும் சூழலை, தொழில் முதலாளிகள் ஊக்கமளிக்கும் வகையில் பயன்படுத்திக்கொள்ள முன் வந்திருப்பதைக் குறித்து அரசு பெரிதும் ஆறுதல் அடைகிறது.

16. சேலம் உருக்காலையை நிறுவுவதற்கு இந்திய அரசு விரைவில் நமக்கு ஏற்புடையதொரு முடிவை மேற்கொள்ளுமென்று இந்த அரசு நம்புவதற்கு நியாயம் இருக்கிறது. சென்னை, எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலையின் துணைப் பொருள்களைப் பயன்படுத்தி பாறை எண்ணெய்-ரசாயனப் பொருள்கள் குறித்த பற்பல தொழில்களை நிறுவுவதன் ஏற்புடைமை பற்றி இன்ஜினியர்ஸ் இந்தியா நிறுவனத்திடமிருந்து மாநில அரசு ஆய்வறிக்கையொன்றினைப் பெற்றுள்ளது. இன்ஜினியர்ஸ் இந்தியா நிறுவனத்தார், 3,50,000 டன் நாப்தா வெடித் தொழிற்சாலை ஒன்றை (Naptha-cracker) நிறுவுவதற்கும், பாலி-ஈதிலின் (Polyethylene), பி.வி.சி. (P.V.C.), செயற்கை ரப்பர் ஏனைய பாறை எண்ணெய் ரசாயனப் பொருள்கள் இவற்றை உற்பத்தி செய்வதற்கான வசதிகளை ஏற்படுத்துவதற்கும் பரிந்துரை செய்துள்ளார்கள்,

இப்பல்வகைத் தொழில்கள் நிறுவப்பட்டவுடன், அவற்றிற்கு துணையான பல்வேறு தொழில் பிரிவுகளை நிறுவுவது உட்பட ஏறக்குறைய ரூ. 200 கோடியளவிற்கு மூலதன முதலீடு தேவைப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தை விரைந்து நிறுவுவதற்காக இந்திய அரசுடன் தமிழ்நாடு அரசு விவாதங்கள் நடத்தி வருகின்றது.

17. நமது மாநிலத்தின் பொதுவான நிதி நிலை குறித்துச் சில கூற விழைகின்றேன். மாண்புமிகு நிதியமைச்சர் தாம் நிகழ்த்தவிருக்கும் வரவு-செலவுத் திட்ட உரையில் இக்கூறு பற்றி விரிவாக ஆய்வு செய்வார். எனினும், சில பொதுவான கூறுகளைப் பற்றி நான் இங்குக் குறிப்பிட விரும்புகிறேன். சென்ற ஆண்டில், ஐந்தாம் நிதி ஆணைக்குழுவின் பரிவுரைகள் வெளியானதை நாம் கண்டோம். சுருங்கச் சொல்லின், இப்பரிவுரைகள் இம்மாநிலத்திற்கு மிக ஏமாற்றமளித்துள்ளன. இப்பரிவுரைகளினால் நிதி வாயில்கள் பற்றிய தேசியத் தொகுப்பில் நமது மாநிலத்தின் பங்கு 7.2 சதவீதத்திலிருந்து 6.9 சத விதத்திற்குக் குறைந்துள்ளது. இதனால், இம்மாநிலத்தின் வருவாய் இனங்களுக்கும் செலவினங்களுக்குமிடையே பெருந்துண்டு விழுவது தொடர்ந்து நீடிக்கிறது. திட்டத்தின் நோக்கங்களுக்காக, இம்மாநிலம் விதித்துள்ள கூடுதல் வரி விதிப்புகள் திட்டத்தின்பாற்படாத தேவைகளுக்காக கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டு பற்றுக்குறை வகையில் அளிக்கப்படும் மானியங்கள் அதற்கிணங்கக் குறைக்கப்பட்டுள்ளன என்பதை அறியும்போது நமது உள்ளம் வேதனைப்படுகிறது. தேசிய கொள்கையாகிய மதுவிலக்கினைப் பெரும்பாலும் இம்மாநிலம் ஒன்றே பின்பற்றி வருகையில், அதற்காக ஏற்படும் வருவாய் இழப்பிற்கு எவ்வகையிலும் ஈடு செய்யப்படாதது பற்றியும் மாநில அரசு வருத்தமடைகிறது. இம்மாநிலம் நியமித்துள்ள சம்பள ஆணைக்குழுவின் பரிவுரைகளால் ஏற்படக்கூடிய விளைவுகளைப் பற்றியும் இந்த அறிக்கை குறிப்பிடவில்லை. சிக்கனத்தை ஏற்றுக்கொண்டவர்களாகிய நாம் தண்டனைக்குள்ளாக்கப் பட்டுள்ளோம். கட்டுப்பாட்டிற்குள் செலவினத்தை விரிவுபடுத்தத் தவறுதலும் நிதிவாயில்களைத் திரட்டத் தயங்குவதும் எந்த அளவிற்கு அதிகமாயுள்ளதோ அந்த அளவு விகிதத்திற்கு மட்டுமே நிதி வசதி ஒதுக்கப்படும் என்றும் தோன்றுகிறது.

18. நமது மாநில நான்காம் ஐந்தாண்டுத் திட்டம் இன்னும் இறுதியாக முடிவு செய்யப்பெறவில்லை. நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் வரைவில் தமிழ் நாட்டிற்கு ரூ. 250 கோடி மத்திய உதவி ஒதுக்கப்பட்டு, மாநிலத்திட்டத்தின் மொத்த முதலீடு ரூ. 564 கோடியாக நின்றது. இது 1966-ஆம் ஆண்டில் நிலவிய நிலை. 1969-ஆம் ஆண்டில் ஏற்பளிக்கப்பட்ட திட்டம் ரூ. 502 கோடியாக நின்றது. இதற்கான மத்திய உதவி ரூ. 202 கோடியென அறிவிக்கப்பட்டது. இதை இம்மாநிலம் ஏற்பது [illegible]மாகும். நடப்பு நான்காம் திட்டத்திற்கு முந்தைய ஆண்



டான 1968-69-ல் நமது ஆண்டுத் திட்டம் ரூ. 93 கோடியாக இருந்தது என்பதைக்கருதிப் பார்க்கையில் நடப்பு ஆண்டில் அதற்கும் குறைவாகவுள்ள முதலீட்டினைக் கருதிப் பார்ப்பதே கடினமாயுள்ளது. இந்த அடிப்படையில் மாநில அரசு தனது நான்காம் திட்டம் குறைந்த அளவு ரூ. 575 கோடியாகவாவது இருக்க வேண்டுமென்று மிக உயர்நிலையில் முறையீடுகள் செய்துள்ளது. இது குறித்து, மாநில அரசு (இதற்கு முன்பு ஏற்றுக்கொண்ட இலக்கமான) ரூ. 250 கோடிக்கு மத்திய உதவியை உயர்த்தும்படியும் ரூ. 53 கோடியளவிற்குக் கடன் தவணைகளை மாற்றியமைக்கும்படியும் வேண்டியுள்ளது. இந்த வேண்டுகோள்களை இந்திய அரசு பரிவுடன் ஆய்வு செய்ய வேண்டுமென்று நான் பெரிதும் வலியுறுத்திக் கூற விழைகின்றேன்.

19. அண்மை ஆண்டுகளில் மத்திய மாநில அரசுகளின் உறவுகள் பெருமளவிற்கு நாட்டத்தைக் கவர்ந்துள்ளன. தற்போதைய அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டு ஏறக்குறைய 20 ஆண்டுகளாக அதை நாம் தழுவி வருகிறோம். நடைமுறை வாழ்வில் அரசியலமைப்புச் சட்டம் செயல்படுவதையொட்டி மத்திய, மாநில அரசுகளின் உறவுகளை மறு ஆய்வு செய்வதுதான் பொருத்தமானதாகும். எனவே, அரசு இப்பொருள் குறித்து அனைத்தையும் ஆய்வு செய்வதற்கென, டாக்டர் பி. வி. ராஜமன்னார் அவர்கள் தலைமையில் டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார், டாக்டர் பி. சந்திரா ரெட்டி ஆகியோரை உறுப்பினர்களாகக்கொண்ட குழு ஒன்றை அமைத்துள்ளது. உண்மையான கூட்டாட்சி அமைப்பு ஒன்றில் மத்திய, மாநில அரசுகளுக்கிடையே நிலவ வேண்டிய உறவுகளைப்பற்றி இக்குழு ஆய்வு செய்யும். அரசியலமைப்பில் தற்போதுள்ள விதித்துறைகளைப் பரிசீலனை செய்து, மாநிலங்களின் நிதி வாயில்களைப் பெருக்குவதற்காகவும், நிர்வாகம், சட்டம், நீதி முதலிய துறைகளில் மாநிலங்களுக்குப் பெருமளவிற்குத் தன்னாட்சி உரிமை [illegible] தேவையான நடைமுறைகளை மேற்கொள்வதற்கு அக்குழு தனது கருத்துரைகளைத் தெரிவிக்கும். இக்குழுவின் அறிக்கை ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது.

20. 1969 ஜூன் திங்களில் நிகழ்ந்த முக்கிய சமுகபொருளாதார மாறுதலைப் பற்றி, அதாவது வங்கிகளை நாட்டுடைமையாக்கியதைப்பற்றி இப்போது சுருக்கமாய்க் குறிப்பிட எண்ணுகிறேன். இந்த ஏற்பாட்டின் பலனை, மாநில அரசின் ஆளுகைக்குட்பட்ட நிதிவாயில்கள் பெருகுமென நாம் எதிர்பார்த்தோம். ஆனால், குறிப்பிட்ட அளவில் இது நிகழவில்லை. வங்கிகள் நாட்டுடைமையாக்கப்படுவதால், இதற்குமுன் மாநிலங்களில் நிலைத்து நின்ற "முடிவு செய்யும் அதிகாரங்கள்" (Decision-making Powers) இப்போது டில்லியிலுள்ள செயலகங்களுக்கு மாற்றப்பட்டுவிடாமல் உறுதிப்படுத்துமாறு இந்தியத் தலைமையமைச்சர் அவர்களை வேண்டியிருந்தோம். இது நிகழாமல் பார்த்துக்கொள்ள மாநில அரசைக் கலந்து இந்திய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமென நான் நம்புகிறேன்.

21. இம்மாநில நிர்வாக அமைப்பைச் செம்மைப்படுத்துவதற்கான பல்வேறு ஏற்பாடுகளைப்பற்றி மாநில அரசு ஆய்வு செய்து வந்துள்ளது. நிர்வாகத்தை மக்களுக்கு நெருக்கமாகவும் அவர்களது வேண்டுகோளுக்குச் செவி சாய்க்கும் வகையிலும் சீர்ப்படுத்த வேண்டிய தேவையை உணர்ந்து மாவட்ட அலுவலர்கள் கிராமங்களுக்குச் சென்று, மக்களின் குறைகளைக் கேட்டு, இயன்ற அளவில் அவற்றை அதே இடத்தில் தீர்த்து வைக்கும் "மனு நீதி" திட்ட மொன்றை அரசு செயலுக்குக் கொண்டு வந்துள்ளது. சோதனை ஏற்பாடாக, அரசு ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு வட்டத்தில் ஜமாபந்தி முறையை ஒழித்து, அதற்குப் பதிலாக கிராமக் கணக்குகளைத் தணிக்கை செய்வதற்கு ஒரு புதிய முறையைப் புகுத்தக் கருதுகிறது. இதன் விளைவாகவும், மாவட்ட அதிகாரிகள் மக்களின் குறைகளைக் கேட்பதற்காகக் கிராமங்களுக்குச் செல்லும் திட்டத்தின் பயனாகவும், பொதுமக்களின் வசைச் சொல்லுக்கு இரையாகியுள்ள நெடுங்கால ஜமாபந்தி முறையை நாளடைவில் நீக்கிவிட இயலுமென எதிர்பார்க்கப்படுகிறது.

22. காவல்துறைக்கும் மக்களுக்கும் இடையேயுள்ள உறவு முறை எப்போதுமே நுண்ணிய தன்மைவாய்ந்ததொன்றாகும். தற்காலிக ஏற்பாடுகளின் அடிப்படையில் இந்த உறவைச் சீரமைக்க அவ்வப்போது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. கடந்த ஐம்பது ஆண்டுகளில் முதல் தடவையாக, அரசு இச் சிக்கலை முறைப்படியும் முழுவதுமாக ஆய்வு செய்யத் தீர்மானித்துள்ளது. இம் மாநிலக் காவல்துறை நிர்வாகத்தை புதிய வளங்கெழு அரசின் தேவைகளுக்கிணங்க அமைக்கும் நோக்கத்தில், காவல்துறை ஆணைக்குழு (Police Commission) வொன்றை நாம் அண்மையில் அமைத்துள்ளோம். இந்த ஆணைக் குழு ஆற்றும் பணியின் விளைவாக, நாம் நமது மாநிலக் காவல் துறை நிர்வாகத்தைப் புதுப்பிக்கும் நிலையிலிருப்போம் என்று நம்புவோமாக.

23. நிர்வாகத்தில் மக்கள், மேலும் பங்கு கொள்ளவேண்டுமென்பதே அரசாங்கத்தின் கொள்கையாகும். இத்துறையில் மேற்கொண்டுள்ள முக்கியத் திட்டங்களில் ஒன்று, மறைந்த முதலமைச்சர் டாக்டர் அண்ணாதுரை அவர்கள் செயல்படுத்திய சீரணியாகும். சீரணி நிறுவப்பட்டு இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. பொது மக்களின் இடைவிடாத ஆதரவைப் பெற்று, சீரணி ஏனைய பணிகளுடன் இதுவரை 822 பள்ளிக் கட்டிடங்களைக் கட்டியுள்ளது; 892 ஏரிகளிலும் கால்வாய்களிலும் தூர் அகற்றியுள்ளது; 13,500 பள்ளிக் கட்டிடங்களை மேம்படுத்தியுள்ளது; 3,217 காய்கறித் தோட்டங்களைப் பயிரிட்டுள்ளது. அது நிறைவேற்றியுள்ள பணியின் மொத்த மதிப்பு ரூ. 67 லட்சம்; ஆனால், இதில் அரசிற்கு ஏற்பட்டுள்ள செலவினம் ரூ. 22 லட்சமேயாகும். சீரணித் திட்டத்தின்கீழ் 534 சீரணி அறிவகங்கள் தொடங்கப்பட்டுள்ளன. ஓராண்டுச் சிறப்புத் திட்டத்தின் விளைவாக, சீரணிகள் உற்பத்தி சார்ந்த திட்டங்களையும் ஆதாயந்தரும் திட்டங்களையும் செயல் படுத்தியுள்ளதைப் பற்றியும் நான் சிறப்பாகக் குறிப்பிட விரும்புகின்றேன். 1970 செப்டம்பர் திங்களோடு முடிவடையும் ஆண்டிற்கான இலக்குகளில், 374 பள்ளிகள் கட்டுதல், 500 சமுதாயக் கிணறுகள் தோண்டுதல், பாறைகள் உடைக்கும் 60 பிரிவுகளை அமைத்தல் ஆகிய பணிகளும் அடங்கும். இவ்வாறு சீரணி நமது மாநில வளர்ச்சிப் பணிகளில் உடலும் உயிரும்போல் ஒன்றி விட்டது.





24. இவ்வாண்டில், மாநில அரசு தனது பணியாளர்களின் நலன் கருதிப் பல நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளது. திருமணக் கடன்கள், விடுப்புச் சலுகைகள் பற்றிய திட்டங்களை நிறை வேற்றியிருப்பதோடு, ஓய்வுச் சம்பளம், விடுப்புச் சம்பளங்கள் இவற்றை அளிப்பது பற்றிய விதிகளையும் அரசு தளர்த்தியுள்ளது. அரசிதழ் பதிவுறு அலுவலர்களைப் பொறுத்தவரையில், விடுப்புச் சம்பளம் இறுதியாக வாங்கிய சம்பளத்திற்கு நிகராயிருக்க வேண்டுமென அரசு முடிவு செய்துள்ளது. ஓய்வுச் சம்பளம் அளிப்பது குறித்த நடைமுறைகள் தாராளமான அடிப்படையில் இயற்றப்பட்டுள்ளன. ஓய்வுச் சம்பளம் முடிவு செய்யப் படுவதற்காக பணிக்கால அளவைச் சரி பார்க்கிற கால நீட்டமாகும் நடை முறைகள் எளிதாக்கப்படும். இவை தவிர, ஓய்வில் செல்கிற அரசிதழ் பதிவுறு அலுவலர்கள் இனிமேல் தங்கள் அலுவலகத் தலைவர்கள் முடிவு செய்துள்ள தற்காலிக ஓய்வுச் சம்பளத்தைப் பெறலாம்; மாநில தலைமைக் கணக்காயரிடமிருந்து ஓய்வுச் சம்பளச் செலுத்தாணைகளைப் பெறும்வரையில் அவர்கள் காத்திருக்க வேண்டியதில்லை.

25. நகராட்சிப் பணியாளர்களுக்கு, மாநில முழுவதற்குமாகச் சிறப்புப் பணித் தொகுப்பு ஒன்றை அமைத்து அவர்கட்கு ஓய்வுச் சம்பளம் அளிக்க அதிகாரமளிப்பது பற்றிக் கடந்த சிறிது காலமாகவே அரசு ஆய்வு செய்து வந்துள்ளது. மாநிலம் முழுவதும் உள்ள நகராட்சிகளில் பணியாற்றும் கீழ்நிலை எழுத்தர்கள், அதற்கு மேல்நிலைகளில் உள்ள பணியாளர்கள் போன்ற மேல்நிலைப் பணிகளிலுள்ள அனைத்துப் பணியாளர்களும் அடங்கும் வகையில் மாநில முழுவதற்குமான நகராட்சிப் பணித் தொகுப்பு ஒன்றை 1970 ஜனவரி 14-ம் நாள் முதல் அமைப்பதென அரசு இப்போது முடிவு செய்துள்ளது. இப்பணியாளர்கள் அனைவரும் இப்போது ஓய்வுச் சம்பளம் பெறுவர். இவர்களது ஓய்வுச் சம்பள நிதி, தல நிதிக் கணக்குகள் ஆய்வாளரின் நிர்வாகத்திற்கு உட்பட்டிருக்கும்.

26. கடந்த சம்பள ஆணைக்குழுவை 1960-ல் அமைத்தது முதல் இம்மாநிலத்தில் விலைவாசிகள் உயர்ந்து வந்துள்ளன என்பதை அரசு அறிந்துள்ளது. கடந்த இரு ஆண்டுகளில் வாழ்க்கைச் செலவுப் புள்ளியில் ஏற்பட்ட இந்த உயர்வை ஓரளவுக்கு ஈடு செய்யும் வகையில் பணியாளர்களுக்குத் தொடர்ச்சியாகப் பல அகவிலைப்படி உயர்வுகள் அளிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அகவிலைப்படி உயர்த்தப்பட்டதன் விளைவாக, அரசிற்கு ஆண்டு

அன்மையில் கொண்டாடினர். இப் பெரியார்களின் அகவுயிர்க்கு இன்பமளிக்கும் குறிக்கோளான வகுப்பு அமைதியைப் பேணுவதில் இம் மாநிலம் நற்பேறு பெற்றுள்ளது என்பதை நான் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப் பெரியவர்களால் அருளப்பட்ட வாய்மை, அன்பு, பொறையுடைமை முதலிய உயர்ந்த கொள்கைகள் இம் மாநில மக்களாலும் பிறராலும் தொடர்ந்து பின்பற்றப்பட்டு வரும் என்று நான் திண்ணமுற எண்ணுகிறேன்.

32. இச் சட்ட மன்றத்தில் நீங்கள் நடத்தும் பணியை ஏற்புடைமையும், நடுநிலை உணர்வோடும், அமைதி செறிந்த கண்ணியத்தோடும் நடத்துவதில் உங்களுக்குள்ள மங்காத புகழை நிலை நாட்டுவீர்கள் என்ற ஆழ்ந்த நம்பிக்கை எனக்கு உண்டு. உங்கள் விவாதங்களை ஆர்வநெஞ்சுடன் கண்ணுற்று வருவேனென்று கூறி எனது உரையை முடிக்கிறேன். நன்றி.

## தமிழ் நாடு சட்டப் பேரவை

---

### வியாழக்கிழமை, 1970 சனவரி 22.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### (1) வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

*Periods allotted for Tamil Language*

* 21 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Health be plesaed to state—

(*a*) whether the number of periods allotted for the study of Tamil Language has been reduced in 1968;

(*b*) if so, the reasons therefor;

(*c*) whether there is any proposal to upgrade the scales of pay of Tamil Teachers to keep them on par with other B.T. Teachers and

(*d*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

(இ) முதல் நிலைத் தமிழாசிரியர்கட்கும், பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்கட்கும் ஒரே சம்பள விகிதம் அதாவது ரூ. 140-250 ஆக அளிக்கப்படுகிறது.

(ஈ) கேள்விக்கு இடமில்லை.

Dr. H. V. HANDE : Sir, have the Government realised that instead of pulling down the standard of English it is better to bring the standard of Tamil to that of English by giving sufficient encouragement to Tamil candidates? From the answer given by the Hon. Minister I find that they are getting the same pay. But, my information is that the salary of the B.T. Assistants I Grade is Rs. 225–10–275–15–350 whereas the salary of the Tamil Pandits I Grade is Rs. 140–5–180–10–250. Similarly, the salary of the B.T. Assistants—II Grade is Rs. 140–5–180–10–250 and the salary of the Tamil Pandits—II Grade is Rs. 90. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இவ்வளவு தகவலும் கேள்வி நேரத்திலா கேட்பது?

Dr. H. V. HANDE : Sir, this is a very important question relating to the poor Tamil Pandits. I want to point out that even with regard to the I Grade and II Grade, there is a substantial

தோறும் 7.20 கோடி ரூபாய் செலவாகியுள்ளது. இரண்டாம் சம்பள ஆணைக்குழுவின் பரிவுரைகளால் ஏற்படக்கூடிய விளைவுகளை ஐந்தாம் நிதி ஆணைக்குழு, தனது பரிவுரைகளில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்கிற மிக நியாயமான தனது வேண்டுகோளை நிதி ஆணைக் குழுவிடம் அரசு தெரிவித்தது. நான் ஏற்கெனவே குறிப்பிட்டிருப்பதைப்போல, ஐந்தாம் நிதி ஆணைக்குழு நமது வாதத்தைப் புறக்கணித்துள்ளது. இவ்வாறு இருப்பினும், அனைத்துத் தரங்களையும் சேர்ந்த அரசு ஊழியர்களின் சம்பளங்கள், படிகள் இவற்றை ஆய்ந்து திருத்தியமைக்கச் சம்பள ஆணைக் குழு ஒன்றை நியமிப்பது தேவையானதென்றும் பொருத்தமானதென்றும் அரசு கருதியது. இதற்கிணங்க சம்பள ஆணைக்குழுவொன்று அமைக்கப்பட்டு ஏற்கனவே அது தனது பணியைத் தொடங்கியுள்ளது. ஆணைக்குழு ஆற்றும் பணியின் விளைவாக, புதிய சீரான சம்பளக் கட்டுக்கோப்பு ஒன்று உருவாகுமென்பது நமது உறுதியான நம்பிக்கையாகும்.

27. பொருளாதார நிலையில் தாழ்ந்தப்பட்டுள்ள மக்களை முன்னேற்றவேண்டுமென்னும் தனது கொள்கைக் கிணங்க அரசு இம் மாநிலத்தில், நகர்ப்புறங்களிலும் கிராமப்புறங்களிலும் உள்ள நிலமற்ற மக்கள் எத்துணை பேருக்கு வீட்டு மனைகள் ஒதுக்க முடியுமோ அத்துணை பேருக்கும் ஒதுக்க முடிவு செய்துள்ளது. இதைக் கருத்தில் கொண்டு, அரசு நிலங்களில் குடிசைகள், குடியிருப்புகள் போன்றவற்றைக் கட்டியிருந்து, அவற்றிற்குப் பிற வகையில் மறுப்பு ஏதும் இல்லாமலிருந்தால், அத்தகைய நில வளைவுதல்களை முறைப்படுத்த நடப்பு ஆண்டில் திட்டமிட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 1969 நவம்பர் இறுதிக்குள் இந்த நடவடிக்கை காரணமாக, இதுவரை 61,004 வீட்டு மனை வளைவுதல்கள் மனநிறைவளிக்கும் வகையில் முறைப்படுத்தப் பட்டுள்ளன. இதைவிட மிகவும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது, நிலமற்ற ஏழை மக்கள் உழுது பயிரிடுவதற்காக அவர்களுக்கு நிலங்களை ஒப்படை செய்வதில் அரசிற்குக் கிட்டியுள்ள சாதனையாகும். நிலமற்ற ஏழைகளுக்கு இயன்ற அளவில் அரசு நிலம் ஒப்படை செய்யப்படவேண்டுமென்பதே அரசுக் கொள்கையாகும். 1967-68-ல் 22,849 ஏக்கர் நிலங்களும், 1968-69-ல் 50,000 ஏக்கர் நிலங்களும் ஒப்படை செய்திருந்ததற்கு மாறாக, நடப்பு ஆண்டில் 1,00,000 ஏக்கர் நிலங்களை ஒப்படை செய்ய வேண்டுமென்பது நமது குறிக்கோளாகும். ஏற்கனவே இந்தக் குறிக்கோள் அளவை எட்டிவிட்டோம். இது போற்றத்தக்க சாதனையாகும். நிலமற்ற ஏராளமான உழவர்களின் நியாயமான கோரிக்கைகள் இதனால் பெருமளவிற்கு ஏற்கப்பட்டுள்ளன.

28. சமூக நீதி வழங்கவேண்டுமென்கிற தனது கொள்கையையொட்டி, அரசு பின்தங்கிய வகுப்பினர்களின் மேம்பாட்டிற்காகத் தொடர்ந்து பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. பின் தங்கிய வகுப்பினர்களுக்கு உதவிச் சம்பளங்கள் வழங்குவதற்கான நிபந்தனைகள் தளர்த்தப்பட்டு, தேர்வுகளில் 40 சத விகிதத்திற்குக் குறையாமல் மதிப்பெண் வாங்கும் பின்தங்கிய, மிகப் பின்தங்கிய வகுப்பு மாணவர்கள் அனைவரும் உதவிச் சம்பளங்கள் பெறத் தகுதியளிக்கப்பட்டுள்ளார்கள். இதற்குமுன், பின்தங்கிய வகுப்பினர் 50 சதவீத மதிப்பெண்களும், மிகப் பின்தங்கிய வகுப்பினர் 45 சதவீத மதிப்பெண்களும், வாங்கியிருந்தால் மட்டுமே அவர்கள் உதவிச் சம்பளம் பெற இயலும். இதன் விளைவாக, உதவிச் சம்பளங்களுக்கான நிதி ஒதுக்கம் ரூ. 213 லட்சமாக உயர்ந்துள்ளது. கடந்த ஆண்டில் இதற்கெனச் செலவழித்த தொகையைப் போல் இது கிட்டத்தட்ட இருமடங்கு தொகையாகும். பின்தங்கிய வகுப்பினர்களின் மேம்பாட்டிற்காகத் தற்போதுள்ள திட்டத்தை விரிவாக ஆய்வு செய்வதற்கும். எதிர்காலத்தில் அவர்களுக்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை முறையை வகுக்கவும், திரு ஏ. என். சட்டநாதன் அவர்களைத் தலைவராகவும் திருவாளர்கள் எஸ். சின்னப்பன், எம். ஏ. ஜமால் உசேன் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட பின்தங்கிய வகுப்பினர் ஆணைக்குழுவொன்றை அரசு அமைத்துள்ளது. இவ்வாணைக்குழு தனது பணியைத் தொடங்கியுள்ளது. அதன் அறிக்கை அடுத்த ஆண்டிற்குள் கிட்டலாமென நாம் எதிர்பார்க்கிறோம்.



29. நடப்புக் கூட்டத் தொடரில் சட்டமியற்றும் பணி அதிகமாக இல்லை. 1969-ஆம் ஆண்டு தமிழ் நாடு பொது விற்பனைவரி (நான்காம் திருத்த) அவசரச் சட்டம், 1969 நவம்பர் 27-ஆம் நாளன்று சாற்றப்பட்டது. இந்த அவசரச் சட்டத்திற்குப் பதிலாக, மசோதா ஒன்று உங்கள் ஆய்விற்காக முகவுரைக்கப்படுகின்றது. இவ்வண்ணயே, வெல்லம், தேங்காய் இவற்றின் முதல் கொள்முதல் முனையில் இவற்றிற்கு 5 சதவீத ஒருமுனை வரி விதிக்கப்பட்டுள்ளது. பொது விற்பனைவரிச் சட்டத்தின் 3-ஆம் அட்டவணையின் 3-வது இனத்தின் கீழ் அளிக்கப்பட்டிருந்த சில வரி விலக்குகள் நீக்கப்பட்டுள்ளன. வெறியம் சார்ந்த சாராயத்திற்கு ( Alcoholic liquar ) 12 சதவீத ஒருமுனை வரி விதிக்க வேண்டுமென்று அறிவிப்பு ஒன்றின்கீழ் செயற்குறிப்பு வெளியாகியுள்ளது. இந்த அறிவிப்புகளுக்குப் பதிலாக, மசோதாக்கள் தயாரிக்கப்பட்டு அவையும் சட்ட மன்ற பேரவையின் ஆய்விற்காக முகவுரைக்கப்படுகின்றன.

30. தமிழ் நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தைத் திருத்துவதுபற்றி நீண்ட காலமாகவே ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. அடங்கல் மறு ஆய்வு ஒன்று இப்போது மேற்கொள்ளப் பட்டு திருத்தங்களைச் செயல்படுத்துவதற்கான மசோதா ஒன்று நடப்புக் கூட்டத் தொடரில் சட்டமன்றப் பேரவையில் முகவுரைக்கப்படும்.

31. திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டு விழாவையும், காந்தி அடிகளின் நூற்றாண்டு விழாவையும், குருநானக் அவர்களின் 500-வது ஆண்டு பிறந்த நாள் விழாவையும், தமிழ் மக்கள்

[1970 ஜனவரி 22

reduction in the pay scales. So, will the Government come forward to reconsider their stand and revise their policy to encourage the Tamil Pandits so that candidates may openly and boldly come forward to take up Tamil and teach Tamil to the students and as a result the standard of Tamil may be improved ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, எஸ்.எஸ்.எல்.சி. படித்து, பி.ஓ.எல். பாஸ் பண்ணியிருந்தால் அவர்களுக்கும், மற்ற பி.டி. அசிஸ்டெண்டுகளுக்கும் ஒரேவித சம்பளம் தான் தரப்படுகிறது. அதிலே எந்தவித மாற்றமும் இல்லை. முதல் நிலைத் தமிழாசிரியர்களுக்குத் தகுதி அடிப்படையில் பி.டி. ஆசிரியர்களுக்கு எவ்வளவு சம்பளம் தரப்படுகிறதோ அவ்வளவு சம்பளம்தான் தரப்படுகிறது. எம்.ஏ. படித்தவர்களுக்கு மட்டும் இரண்டு இன்க்ரிமேண்ட்கள் தரும் அளவுக்கு அவர்களுக்கு அதிகமாகத் தரப்படுகிறதே தவிர, மற்றபடி எந்த பி.டி. அசிஸ்டென்டுக்கும் அதிகமாகத் தரப்படவில்லை. எஸ்.எஸ்.எல்.சி. முடித்து ஓரியண்டல் டைட்டில் பெற்றிருந்தால் அவர்கள் முதல் நிலைத் தமிழாசிரியர்களாகக் கருதப்படுகிறார்கள். அவர்களுக்கு அதே விகிதச் சம்பளம் தரப்படுகிறது. ஓரியண்டல் டைட்டில் மட்டும் பெற்றிருக்கிறவர்கள் அல்லது செகண்டரி கிரேடு டிரெயினிங் பெற்றிருக்கிறவர்கள் இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களாகக் கருதப்படுகிறார்கள்.

**புலவர் பொ. பொன்னம்பலம் :** மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளிகளில் இந்தியை நீக்கியதற்குப் பின்னர் இந்திக்காக இருந்த பீரியடுகளில் தமிழுக்கு ஒதுக்கப்பட்ட பீரியடுகள் எத்தனை என்பதை அறிய விழைகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தமிழுக்கு ஏற்கனவே இருக்கும் பீரியடுகளில் எதும் குறைக்கப்படவில்லை. 1 முதல் 3-ம் வகுப்புகளில் பத்து பீரியடுகள் தமிழுக்கு ஒதுக்கப்படுகின்றன. 4 முதல் 8-ம் வகுப்புகளில் எட்டு பீரியடுகள் தமிழுக்கு ஒதுக்கப்படுகின்றன. 9 முதல் 11-ம் வகுப்புகளில் ஆறு பீரியடுகள் தமிழுக்கு ஒதுக்கப்படுகின்றன. அதிலே எதும் குறைக்கப்படவில்லை. இந்தி நீக்கப்பட்ட பிறகும், அதே நிலையில்தான் இருந்து வருகிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, சில நாட்களுக்கு முன்பு கல்வி அமைச்சரவர்கள், அடுத்த கல்வி ஆண்டிலிருந்து பட்ட மேல் படிப்புக்கும் தமிழே போதனைமொழியாகும் என்று அறிவிப்புக் கொடுத்தார்கள். பின்னர், மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அதை மறுத்தார்கள். கல்வி அமைச்சரவர்கள் கொடுத்த அறிவிப்பு சரியா? அல்லது, முதலமைச்சர் அவர்கள் கொடுத்த மறுப்பு சரியா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதற்கும் மூலக் கேள்விக்கும் தொடர்பு இல்லையே.



1970 ஜனவரி 22]

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கும் மாண்புமிகு உறுப்பினர் கேட்ட துணைக் கேள்விக்கும் தொடர்பு இல்லை. ஆனால், அதற்கு விளக்கம் தந்து விடுவது பொருத்தம் என்று கருதுகிறேன். நான் சொன்னது, பி.ஏ. வகுப்பில் தமிழைக் கொண்டுவந்திருப்பதைப்பற்றி. எம்.ஏ. வகுப்பைப்பற்றி—குறிப்பாக எம்.எஸ்சி. வகுப்பைப்பற்றி—நான் பேசவில்லை. எம்.ஏ.-க்கு நாற்பது, ஐம்பது 'ரெஃபரன்ஸ்' புத்தகங்கள் இருக்கின்றன. அவ்வளவையும் தமிழில் கொண்டுவர முடியாது; இப்பொழுது தமிழில் பி.ஏ. எடுத்தவர்கள் எம்.ஏ. படிக்கவேண்டும் என்று நினைத்தால், வரலாறு, பொருளாதாரம் இவற்றுக்குத்தான் இப்பொழுது நாம் ஓரளவுக்கு எம்.ஏ.-க்கு புத்தகங்கள் தயாரிக்க முயற்சி செய்யலாம். புத்தகங்கள் தயாரிக்க முயற்சி செய்யும்படி பல்கலைக்கழகத் துணைவேந்தர்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறோமே தவிர, அடுத்த ஆண்டிலிருந்து அதைப் புகுத்துவேன் என்று நான் சொல்லவில்லை. திட்டவட்டமாகத் தெளிவாகவே நான் சொன்னேன். ஆனால், பத்திரிகையிலே தவறாக வந்திருக்கிறது. 40, 50 'ரெஃபரன்ஸ்' புத்தகங்களை இப்பொழுதிருந்து மொழி பெயர்க்க ஆரம்பித்தால், அடுத்த ஆண்டுக்குள் மூன்று புத்தகங்களை மொழிபெயர்க்கக்கூடும். இப்போதைக்கு ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழி பெயர்க்கும் அளவுக்குத்தான் வரவேண்டியிருக்கும். அவ்வளவு ரெஃபரன்ஸ் புத்தகங்களும் தமிழில் மொழிபெயர்க்கப்படுவதற்கு நீடித்த காலம் ஆகும். இடைக்காலத்தில் சில சங்கடங்கள் இருக்கின்றன. எம்.ஏ. படிப்பை வரலாற்றில் கொண்டுவரலாம்; இக்கனாமிக்ஸில் கொஞ்சம் கொண்டுவரலாம். ஆனால், எம்.எஸ்சி.யைப்பற்றி இப்பொழுது எண்ணுவதற்கில்லை, சில காலம் சென்றதற்குப் பிறகுதான் எண்ணக்கூடும் என்று திட்டவட்டமாகத் தெரிவித்தேன். ஆனால், பத்திரிகையில் வேறுவிதமாக வந்தது. முதலமைச்சரவர்கள், பத்திரிகையில் நான் பார்த்தேன் என்று அந்தச் செய்தியைச் சொன்னாரேயொழிய நான் சொன்ன கருத்துக்களை அவர்கள் மறுக்கவில்லை. அது இல்லை என்று சொல்லவில்லை. கல்வி அமைச்சரவர்கள் அப்படிச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் கருத்தைப்படி சொல்லியிருக்கிறார்கள். நான் பத்திரிகையில் பார்த்தேன் என்று முதலமைச்சரவர்கள் சொன்னாரே தவிர, அதை மறுக்கவில்லை.

Thiru T. MARTIN : Sir, Economics Graduates are being refused admission in the B.T. Training Colleges in the Madras and Madurai Universities. May I therefore request the Hon. Minister to clarify whether any such bar has been in force and if so, whether the Government will come forward to give necessary directions or request the Universities to admit Economics Graduates also in the B.T. Training Colleges?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கும் மூலக் கேள்விக்கும் தொடர்பு இல்லையென்றாலும்கூட விடை அளிக்கின்றேன். பள்ளிக்கூடப் படிப்பில்

பொருளாதாரத் துறைப் பாடங்கள் இல்லை. ஹிஸ்டரி எடுத்துப் படித்தவர்களுக்கு பி.டி. கோர்ஸில் இடம் தரப்படுகிறது. இக்கனமிக்ஸ் மட்டும் எடுத்துப் படித்தவர்கள் சொல்லிக் கொடுப்பதற்கு பள்ளிக்கூடங்களில் பாடம் இல்லை. என்ன என்ன பாடங்கள் எந்தெந்த வகுப்பில் சொல்லிக் கொடுக்கப்பட வேண்டும் என்பதை பல்கலைக்கழகம்தான் முடிவு செய்ய வேண்டும். இக்கனமிக்ஸ் எந்த ஸ்டாண்டர்டிலிருந்து ஆரம்பிக்கலாம் என்று அவர்கள்தான் முடிவு செய்ய வேண்டும். நீண்ட பெருங்காலமாக கல்லூரியில் இக்கனமிக்ஸ் எடுத்துப் படிக்கக்கூடிய நிலை இருக்கிறது. பள்ளிக் கூடத்தில் புகுத்துவதனால் பலன் ஏற்படாது என்ற கருத்தின் அடிப்படையில் பல்கலைக்கழகம் முடிவு செய்திருக்கிறது. இக்கனமிக்ஸ் எடுத்தவர்கள் பி.டி. பயிற்சிக்குத்தான் வரவேண்டும் என்று அவர்கள் கருத முடியாது. ஆனால், ஹிஸ்டரி எடுத்தவர்கள் பி.டி.-இல் சேர்ந்து, பள்ளிகளில் வரலாற்றுப்பாடம் போதிக்க வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், இக்கனமிக்ஸ் படித்தவர்கள் பள்ளிகளில் சொல்லிக்கொடுப்பதற்கு அந்தப் பாடம் இல்லை. அதனால் அவர்கள் பி.டி.-இல் சேர்த்துக்கொள்ளப்படுவதில்லை' எந்தப் பாடத்தைப் பள்ளிகளில் சொல்லிக்கொடுக்க முடியுமோ—அதாவது, ஃபிஸிக்ஸ், கெமிஸ்ட்ரி, மாதமாடிக்ஸ், ஆங்கிலம், வரலாறு போன்றவைகள்—அந்தவையவர்களுக்குத்தான் பி'டி.-இல் இடம் இருக்கிறது.

**Dr. H. V. HANDE :** Sir, may I request you to allow only such questions which are directly connected with the main question. The question relates to a very important subject, viz., Tamil Pandits. This has been pending for a long time. Now that the question has come, I am anxious that the importance should not shift to other matters.

***மாண்புமிகு பேரவைத் தலைவர் :*** மூலக் கேள்விக்குத் தொடர்புள்ள துணைக் கேள்விகள்தான் போடவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அடிக்கடி சொல்லிக்கொண்டு வருகிறேன். ஆனால், சில சமயங்களில் மாண்புமிகு உறுப்பினர்கள் மூலக் கேள்வியிலிருந்து விலகி எங்கெங்கோ போகும்போது நானோ மாண்புமிகு அமைச்சர்களோ என்ன செய்ய முடியும் ?

**Dr. H. V. HANDE :** Sir, the Tamil Pandits are feeling so bad. (interruption) I do not want to hurt the feelings of anybody. This is a very important subject. That is why I have to make those observations.

Arising out of the answer of the Minister, I would like to point out that there has been a substantial reduction in the Tamil classes. Is it not a fact that in 1952, the Tamil periods in High Schools were seven? When Hindi was introduced one period was taken away for Hindi. Again, as soon as the D.M.K. came to power, three periods from Hindi were taken for Special Tamil. (சிறப்புத் தமிழ்). In 1968 after the abolition of Hindi, seven periods for General Tamil and three periods for Special Tamil (சிறப்புத் தமிழ்) were taken away. The ultimate result was





that the number of classes for Tamil had been cut down. Is it not a fact that the Tamil Pandits have submitted a representation to the Government requesting revision of pay scales and bringing them on a par with those of other B.T. Assistants?.

***மாண்புமிகு பேரவைத் தலைவர் :*** 1952-இலிருந்து நடைபெற்ற நிகழ்ச்சிகளை அமைச்சர்கள் நினைவில் வைத்து துணைக் கேள்விக்கு விடையளிக்க முடியும் என்று உறுப்பினர்கள் எப்படி எதிர்பார்க்க முடியும் ?

**Dr. H. V. HANDE :** Sir, I have confidence in the Hon. Minister.

***மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :*** தலைவர் அவர்களே, பீரியடுகளைப் பொறுத்து, எந்தெந்த வகுப்புப் பாடங்களுக்கு என்னென்ன பீரியடுகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன என்ற தகவல் என்னிடம் இல்லை. ஆனால், 40 பீரியடுகள் என்பது உயர்வாக உள்ளது, அது முப்பத்தைந்தாக இருக்கவேண்டும் என்று எல்லாத் தலைமையாசிரியர்களும் கேட்டுக்கொண்டதற்குப் பிறகு, அவர்களையெல்லாம் கூப்பிட்டு வைத்து, இது 35 ஆகக் குறைக்கப்பட்டது. புதிதாக 'எலெக்டிவ்ஸ்' புகுத்தியிருக்கிறோம். அதற்கு இரண்டு, மூன்று பீரியடுகள் தேவைப்படுகின்றன. விவரம் வேண்டுமென்றால் தனிக் கேள்வி போட்டால் விவரம் தரலாம். இப்பொழுது, 1 முதல் 3-வகுப்புகளுக்குப் பத்து பீரியடுகளும், 4 முதல் 8 வகுப்புகளுக்கு ஏழு பீரியடுகளும், 9 முதல் 11 வகுப்புகளுக்கு 6 பீரியடுகளும் என்று தமிழுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இருக்கின்றதைப் பிரித்து அதற்கு வகையில் செய்திருக்கிறார்கள். முழு விவரம் வேண்டுமென்றால் தனிக் கேள்வி போடலாம். என்னிடமுள்ள தகவல்படி, முதல் கிரேடு தமிழ் ஆசிரியர்களுக்கும் பி.டி. அசிஸ்டெண்டுகளுக்கும் ஒரே விகிதத்தில்தான் சம்பளம் தரப்படுகிறது என்று இருக்கிறது. செகண்டு கிரேடு பற்றிய கருத்து இருந்தால், அது பற்றித் தமிழ்நாடு அரசு ஆராய்ந்து தக்க முடிவு எடுக்கப்படும்.

**திரு. கே. விநாயகம் :** தமிழ் மொழியைப் பொறுத்தவரையில் உயர்நிலைப் பள்ளிகளில் எத்தனையோ இருந்த பீரியடுகள் என்னவாயிற்று? அதிலிருந்து குறைக்கப்பட்டிருக்கிறது என்று நாட்கள் இரண்டாவில் இருந்து ஒரு அறிக்கை வந்ததன் காரணமாகத்தான் இந்தக் கேள்வியை நாங்கள் போட்டோமே தவிர இப்போது அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள், அப்படிக் குறைக்கவில்லை என்று. ஆனால் பல கேள்விகளுக்குப் பதில் அளிக்கும்போது கூறியிருக்கிறார்கள். 45-லிருந்து 35-க்கு எந்தவிதமாக குறைத்து சொல்கிறார்கள். இதில் எது உண்மை? கல்வி இலாகா இயக்குநர் தவறான பாதையில் அழைத்துச் சென்று அல்லது தவறான கருத்துக்களைக் கொடுத்து தடுமாற வைக்கிறார்களா? அல்லது அமைச்சர் அவர்களே மாற்றிச் சொல்கிறார்களா? இதில் எது உண்மை?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இப்படிப்பட்ட நிலையைப் போக்க, கால்நடை இலாகாவில் ஒரு புதிய மாற்றத்தைச் செய்ய வேண்டும் என்று ஏற்பாடுகள் செய்யப்பட்டு, அமுலுக்கு வரவிருக்கிறது. அமுலுக்கு வந்த பிறகு நிலைமைகள் மாறும். உடனடியாக அமுலுக்குக் கொண்டு வர முடியவில்லை. இரண்டொரு மாதங்களில் நிறைவேறும் என்று நினைக்கிறேன். அந்த முறைப்படி, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு மருத்துவமனை வரும்; ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு லைவ் ஸ்டாக் அஸிஸ்டெண்ட் கொடுக்கப்பட்டு, ஊராட்சி ஒன்றியங்கள் ஸப்-ஸெண்டர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஸப்-ஸெண்டர்களில் லைவ் ஸ்டாக் அஸிஸ்டெண்டுகள் பணியாற்றுவார்கள். மாட்டுக்கு வியாதி என்றால் நேரிடையாக லைவ் ஸ்டாக் அஸிஸ்டெண்ட் வைத்தியம் செய்யச் செல்வார். அவர்கள் டாக்டருக்கு சீட்டு அனுப்புவார்கள், சிக்கலிருந்தால் லெட்டர் அனுப்புவார்கள். டாக்டர்கள் அரசாங்கத்தால் வழங்கப்பட்டிருக்கும் மோட்டார் ஸைகிள் அல்லது ஸ்கூட்டரில் கிராமங்களுக்கு வந்து வைத்தியம் செய்வார்கள். இப்பொழுது இருக்கும் முறை, மாடுகள் ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டும் என்பது, புதிதாக வரும் முறைப்படி, டாக்டர்கள் மாடு இருக்கும் இடத்திற்குப் போக வேண்டும் என்பது.

### தரங்கம்பாடி—காரைக்கால்—நாகூர் இருப்புப்பாதை

* 36 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தரங்கம்பாடி-காரைக்கால்-நாகூர் ஆகிய இடங்களை இணைக்க இருப்புப்பாதையினை புதிதாகப் போட மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்துள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** இல்லை.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, தரங்கம்பாடி, காரைக்கால், நாகூர் இவற்றை ஒன்றாக இணைக்கும் பாதை போடும் ஏற்பாட்டால், பொது மக்களுக்குச் சிறப்பான வசதி ஏற்படும். ஆகையால், மேற்கொண்டு நிலைமைகளைப் பரிசீலித்து மத்திய சர்க்காரை வலியுறுத்திச் சொல்ல மாநில சர்க்கார் முன் வருமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர்களே, ஏற்கனவே பல திட்டங்களை நாம் மத்திய சர்க்காருக்குப் பரிந்துரை செய்திருக்கிறோம். அவற்றின் நிலைகள் என்ன என்று தெரியாது இருப்பதால், இதைப் பற்றி இப்பொழுது சொல்வதற்கில்லை.

**திரு. நா. காசிராமன் :** தலைவர் அவர்களே, முன்பு மாயவரம்—தரங்கம்பாடி இருப்புப்பாதை லாபம் இல்லை என்று அது எடுக்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டது. இப்பொழுது



அந்த மாயவரம் தரங்கம்பாடி லைனையும் லாபகரமாக நடத்த இந்தத் தரங்கம்பாடி—நாகூர் பாதை பயன்படுமாதலால், மத்திய சர்க்காருக்குச் சிபாரிசு செய்ய நம் சர்க்கார் முன் வருமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** நான் ஏற்கனவே சொன்னது போல, பல திட்டங்களைப் பரிந்துரை செய்திருக்கிறோம். அவற்றின் விதி என்ன என்று தெரியாத போது இதையும் சொல்வது பயன் அளிக்காது என்றுதான் நினைக்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** நம்முடைய அரசு ஏதாவது ப்ரையாரிடி லிஸ்ட் தயார் செய்திருக்கிறதா ? அப்படி ப்ரையாரிடி லிஸ்ட் தயார் இருந்தால், அதை வெளியிட சர்க்கார் முன் வருமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே அளவை செய்வதற்காக கீழ்க்காணும் பாதைகள் இந்திய அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்டன :—

1. சின்னசேலம்—செங்கற்பட்டு,
2. தேனி—கடலூர்,
3. மானாமதுரை—தூத்துக்குடி,
4. திருப்பத்தூர்—கிருஷ்ணகிரிக்குமிடையே பிரித்தெடுக்கப்பட்ட இருப்புப்பாதையை மீண்டும் அமைத்தல்,
5. தஞ்சாவூர்—பட்டுக்கோட்டை,
6. கோயம்புத்தூர்—சாம்ராஜ்நகர்,
7. கும்பகோணம்—நீடாமங்கலம்,
8. மன்னார்குடி—திருத்துறைப்பூண்டி,
9. தூத்துக்குடி—திருச்செந்தூர்,
10. திருச்செந்தூர்—கன்யாகுமரி,
11. சென்னை மாநகரைச் சுற்றிலும் வட்ட இருப்புப் பாதை.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அமைப்பதற்காவும், அளவை செய்வதற்காகவும் எடுத்துக் கொள்ள வேண்டிய புதிய இருப்புப் பாதைகள் பற்றி இந்திய சர்க்கார் இன்னும் முடிவெடுக்கவில்லை.

கன்யாகுமாரி மாவட்டத்திற்கு ரயில் வசதிகள் ஏதும் இல்லை என்பதைக் கருத்தில் கொண்டு, நாகர்கோயிலிலிருந்து கன்யாகுமரி வரையுள்ள கிளைப்பாதையுடன், திருநெல்வேலியிருந்து திருவனந்தபுரத்திற்கு நாகர்கோயில் வழியாக பாதை அமைந்தால்தான் அங்கு நல்ல வளர்ச்சியைக்காண முடியும் என்று கருதி, நான்காவது திட்டக் காலப் பணியில் இந்தப் பணியையும் சேர்த்துக் கொள்ளுமாறு மாநில அரசு இந்திய அரசிடம் பரிவுரை செய்துள்ளது. மேற்சொன்ன இருப்புப் பாதையை அமைப்பதற்காக போக்குவரத்து—பொறியியல் அளவைப் பணிகளை தென்னிந்திய

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** பி.யு.ஸி.-யில் இலவசக் கல்வி என்று சொன்னால் அது கட்டணம் ஒன்றுக்குத்தான். சாப்பாடு, உடை, புத்தகங்கள் இவற்றிற்கு ஒரு வசதியும் இல்லை. இலவசக் கல்வி என்று சொன்னால் ஏழை மாணவர்களுக்கு சகலவிதமான வசதிகளும் செய்துகொடுப்பதுதான் இலவசக் கல்வி. ஆகவே புத்தகங்கள் கூட வாங்க முடியாமல் இருக்கும்படியான ஏழை மாணவர்களுக்கு இனிமேலாவது ஒரு புத்தக பாங்க் ஏற்படுத்திக் கொடுக்கக்கூடிய அளவிற்கு ஏற்பாடுகள் செய்ய உத்தேசமுண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஏழை மாணவர்களுக்காக புத்தக வங்கி ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா என்று கேட்டார்கள். அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை என்று சொன்னேன். ஏழை மாணவர்கள் படிப்பதற்காக வேண்டி யூனிவர்ஸிட்டி கிரான்ட்ஸ் கமிஷன் பாடப் புத்தகங்களை மட்டும் வாங்கி வைக்க கல்லூரிக்கு ரூ. 10,000 வரை நிதி தருகிறார்கள். அதிலிருந்து பாடப் புத்தகங்களை மட்டும் வாங்கி வைத்து கல்லூரியில் உள்ள ஏழை எளிய மாணவர்கள் அதை எடுத்துப் படிக்க வசதி செய்யப்பட்டிருக்கிறது. பி.ஏ., பி.எஸ்ஸி. போன்றவை உள்ள கல்லூரிகளுக்கு ரூ. 10,000-ம், போஸ்ட் கிராஜுவேட் கல்லூரிகளுக்கு ரூ. 15,000-ம், யு.ஜி.ஸி. கிரான்ட் தருகிறார்கள். இதன்படி 60 கல்லூரிகள் ரூ. 10,000, ரூ. 15,000 என்றவிதத்து புத்தகங்கள் வாங்கி வைத்திருக்கிறார்கள். தனியார் ஸ்தாபனங்கள் தனியாக புத்தக பாங்க் வைத்து மாணவர்களுக்கு படிக்கக் கொடுத்து அவர்கள் படித்த பின்னர் அதைத் திருப்பி வாங்கி மற்ற மாணவர்களுக்குக் கொடுக்கிறார்கள். மேலும், தனியார்கள் அப்படிப்பட்ட முயற்சியில் ஈடுபடுவார்களேயானால் மாணவர்களுக்கு வசதியாக இருக்கும். அரசாங்கம் அப்படி ஒரு புத்தக பாங்க் வைக்கும் உத்தேசம் இல்லை.

THIRU K. VINAYAKAM : Whereas it is not possible for Government to open such book banks for the use of poor college boys, is it not possible to request private colleges and other Government colleges to bring in more text-books to be used in the libraries (libraries at present maintain books of a general nature and research books) ? Would it not be possible to compel principals of such colleges to purchase text-books and place them in the libraries for the use of boys who could not afford to purchase such books ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** நான் முன்னால் சொன்னபடி யு.ஜி.ஸி. கிரான்ட் அடிப்படையில் ரூ. 10,000-க்கு பாடப் புத்தகங்கள் மட்டும் வாங்கப்படுகிறது. ரெஃபரன்ஸ் புக்ஸ்



அல்ல. அந்தந்தக் கல்லூரிக்குக் கொடுக்கிற நிதியிலிருந்து ஓரளவிற்குப் பாடப்புத்தகங்கள் வாங்குவதற்கான முயற்சிகள் செய்ய இயலுமா என்பதுபற்றி பரிசீலிக்கலாம்.

**திரு. டி. மார்டின் :** ஆரம்பப் பாடசாலைகளுக்குள்ள புத்தகங்களில் சிலவற்றை அரசே வெளியிடுகிறது குறைந்த விலையில், அதேபோல் கல்லூரிகளுக்குள்ள பாடப் புத்தகங்களை எல்லாம் அரசினரே அரசாங்க அச்சுக்கூடத்தில் அச்சடித்து குறைந்தவிலையில் கொடுக்கும் ஒரு முயற்சியை அரசு மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கல்லூரிகளுக்குத் தேவைப்படுகிற தமிழ்ப் பாடப் புத்தகங்களை எல்லாம் அரசே அச்சடித்துக் கொடுத்துவருகிறது. அம்முறையில் பி.ஏ., பி.எஸ்ஸி.-க்கான தமிழ் பாடப் புத்தகங்கள் வந்திருக்கின்றன. இது வரை 228 புத்தகங்கள் கல்லூரிகளில் பயன்படுத்தப்படுகின்றன. பலவேறு துறைப் பாடப் புத்தகங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. இந்திய அரசு ஒரு கோடி ரூபாய் வரையில் ஐந்தாண்டுக் காலத்தில் கல்லூரிகளில் தமிழ் வட்டார மொழியைக் கொண்டு வருவதற்கான முறையில் பயன்படுத்த ஐந்து வருட காலத்தில் செலவு செய்ய நிதி ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். மேலும் தமிழில் கொண்டுவருகிற புத்தகங்களை எல்லாம் அரசு வெளியிட முடியும். கல்லூரிக்குத் தேவைப்படுகிற அத்தனையும் கொண்டு வர முடியாது அரசாங்கம். மேற்படி படிக்கிறவர்களுக்கு ரெஃபரன்ஸ் புக்ஸ் 100, 200 புத்தகங்கள், பல்வேறு புத்தகங்கள், பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட புத்தகங்கள், பல்வேறு பதிப்பகங்களால் வெளியிடப் படும் புத்தகங்கள் உள்ளன. தமிழ் பாடப் புத்தகங்கள் வெளியிடப் பட்டு வருகின்றன. மேலும் வெளியிட முயற்சி எடுத்துக் கொள்ளப்படும்.

### *Palace at Thanjavur*

* 25 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether any valuable books and records are left uncared for in the Thanjavur Palace and the Durbar Hall ; and

(*b*) whether old oil paintings of the Rajah of Maharashtrian origin are ill maintained and damaged ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) திருவோலக்கு மண்டபங்கள் ஒன்றின் அண்மையிலுள்ள சரஸ்வதி மஹாலில் மிக மதிப்புள்ள நூல்களும், ஆவணங்களும், கையெழுத்து ஏடுகளும் உள்ளன. இந்நூல்கள், ஆவணங்கள் முதலியவற்றை நூலக அதிகாரிகள் தங்களால் இயன்ற வரையில் செவ்விய முறையில் காத்து பேணி வருகின்றனர்.

(இ) இரண்டாம் சிவாஜியின் சுவர் ஓவியம் ஒன்று உள்ளது. இந்த ஓவியமும், ஹனுமான், லட்சுமி, வேணுகோபாலன் ஆகிய மூன்று ஓவியங்களும், நல்ல முறையில் பாதுகாக்கப்பட்டு

வருகின்றன. திரைச்சீலையில் வரையப்பட்ட ஐந்து ஓவியங்கள் பழுதடைந்த நிலையில் உள்ளன.

**திரு. கே. விநாயகம் :** சார், இந்த விலை மிகுந்த புத்தகங்கள் அவர்களால் முடிந்த அளவுக்குப் பாதுகாக்கப்படுகின்றன என்று மந்திரியவர்கள் சொல்லுகிறார்கள். எந்த அளவுக்கு முடிந்தது, எந்த அளவுக்கு முடியவில்லை? எத்தனை புத்தகங்கள் பராமரிக்கப் படாமல் விடப்பட்டு பயனில்லாத காகிதங்களாக ஆகும் நிலைமைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்? அதுமட்டுமல்லாமல், இந்த பெயிண்ட் ஓவியங்கள் கெடாமல் பார்த்துக்கொள்ள ஏதாவது ஏற்பாடுகள் அரசாங்கமோ, அந்த அதிகாரிகளோ எடுக்க என்ன முயற்சி செய்தார்கள்?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, சரஸ்வதி மஹாலில் மதிப்புள்ள நூல்கள், ஆவணங்கள் எல்லாம் இருக்கின்றன. அதுபற்றி மத்திய சர்க்காருக்கு எழுதப்பட்டிருக்கிறது. 'மோடி ரிக்கார்ட்ஸ்', மோடி தாள்களில் ரிகார்டுகள் எழுதப்பட்டிருக்கின்றன. மராட்டியத்தில் அவர்கள் வரவு-செலவு, மற்றவைகள் பற்றிய கணக்குகள் இருக்கின்றன. மூட்டை மூட்டையாகக் கட்டப்பட்டு 1,500 மூட்டைகள் இருக்கின்றன. அதிலிருந்து குறிப்புகளை எடுப்பதற்கு இரண்டு அதிகாரிகளை நியமித்து அவர்கள் மூட்டைகளை அவிழ்த்து அதிலிருக்கும் குறிப்புகளை எடுத்திருக்கிறார்கள், இன்னும் ஆயிரம் மூட்டைகள் பாக்கியிருக்கின்றன. ஆனால் சரஸ்வதி மகாலுக்கு ஒதுக்கப்படும் பணம் மிக மிகக் குறைவாக இருப்பதால், அதிகமாகச் செலவழிக்க வேண்டுமென்று இந்திய அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டிருக்கிறது. 'ஃபோர்ட் பவுண்டேஷன்' பார்த்திருக்கிறார்கள். 'ஃபிலிம்' எடுத்து அவைகளைக் காப்பாற்றவேண்டிய நிலைமை இருக்கிறது. சித்த, ஆயுர்வேத சம்பந்தமான நூல்கள் இருக்கின்றன. புத்தகங்கள் எல்லாம் ஒரு அளவுக்குப் பாதுகாக்கப்படும் முறையில் இருக்கின்றன. ஆனால் இன்னும் வசதிகள் தேவைப்படுகின்றன. அவைகளை இந்திய அரசிடம் இந்த அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது.

**THIRU K. S. KOTHANDARAMIAH :** Sir, in Thanjavur Saraswathi library many manuscript books are decaying and so quick arrangements have to be made to re-write and preserve them. Moreover officers there are not properly and reasonably paid and they make many complaints. Since there are a number of books in Telugu and Marathi languages also, I think it is better that we ask the Governments of those language States also to share the expenditure to some extent and so will the Hon. Minister be pleased to take up this matter with those Governments?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, நான் முதலிலே எடுத்துக் கூறியபடி அங்கு விலையுயர்ந்த நூல்கள், மதிப்புள்ள நூல்கள் இருக்கின்றன. மராட்டிய மொழியில், தெலுங்கு மொழியில், சமஸ்கிருத மொழியில், தமிழ் மொழியில்





ஏராளமான நூல்கள் இருக்கின்றன. அவைகளைப் பரிசீலிக்க அதிகாரிகள் நியமிக்கப்பட்டு, அவைகளிலிருந்து படிகள் எடுத்திருக்கிறார்கள் அதை 'ஃபிலிம்' எடுக்க வேண்டிய நிலைமைகள் இருக்கின்றன. 'ஃபோர்ட் பவுண்டேஷன்' நிறுவனத்தினர் உதவி செய்ய முன் வந்திருக்கிறார்கள். அவர்களிடமும் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அவர்களின் நிதி வசதி குறைவாக இருப்பதால் செய்யப்பட வேண்டிய வேலைகள் நிரம்பச் செய்யப்பட முடியவில்லை. இன்னும் நிதி வசதி பெற்று அலுவலக அதிகாரிகளை அதிகமாக நியமிப்பது, அவர்களின் சம்பளம், படி பற்றிக் கவனிக்கலாம்.

**திரு. ஆர். கருப்பையா :** தலைவரவர்களே, தஞ்சை சரஸ்வதி மஹாலில் உள்ள மருத்துவ நூல்களிலே சில படி எடுப்பவர்களாலேயே வெளியே எடுத்துச் செல்லப்படுவதாக தஞ்சையிலே உள்ளவர்கள் சொல்லுகிறார்களே, அது உண்மையா? உண்மையென்றால், அப்படி எடுத்துச் செல்பவர்களைத் தக்க முறையில் தண்டிக்கவும், முடிந்தவரையில் என்ற பதிலைச் சொல்லாமல், கண்டிப்பாக என்ற வகையில் அந்த நூல்களைக் காப்பாற்றுவார்களா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது பற்றிய குற்றச்சாட்டு எதுவும் அரசாங்கத்திற்கு இதுவரையில் வரவில்லை. ஏற்கெனவே சொல்லுவார்கள், தஞ்சை சரஸ்வதி மஹாலில் நூல்களை எடுத்துக் கொண்டு, ஜெர்மனிக்கும், இங்கிலாந்திற்கும், அமெரிக்காவிற்கும் சென்று, அவர்கள் மருந்துகளைக் கண்டுபிடித்து அனுப்புவார்கள் என்ற கருத்து, வெறுங்காற்றிலே உள்ள கருத்து இருக்கிறது. ஆனால், இப்பொழுதுள்ள புத்தகங்களிலிருந்து படிகளை எடுத்து, அதைப் பார்த்து, மருந்து செய்யும் அளவுக்கு யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. அப்படி இங்கிருந்து எடுத்துச் சென்று, அவைகளைக் கற்று, அதன்படி மருந்துகள் செய்து அனுப்புவார்களேயானால் அது பாராட்டத் தக்கதாகும். ஆனால், இப்பொழுது, படி எடுப்பவர்களாக இருக்கிறார்களே தவிர, அதைப் பயன்படுத்துகின்ற அறிவு, ஆற்றல் அவர்களுக்கு இருந்தால் நாம் கூட பாராட்டலாம். இப்பொழுது, திருட்டுப் போகாத அளவுக்கு, பாதுகாக்கப்படத்தக்க முறையில் அதிகாரிகளை நியமித்து படியெடுத்து அதைப் பயன்படுத்துகின்ற வகையில் இருக்கிறது. ஆராய்ச்சிக்கூடம் அமைக்கப்பட்டிருக்கிறது. இரண்டு, மூன்று பேர் தொகுத்து ஆராய்ந்து வருகிறார்கள்.

**திரு. ஆர். நாகசுந்தரம் :** தலைவரவர்களே, சரஸ்வதி மஹாலில் பல நல்ல சுவடிகள் கடத்தப்பட்டு, அதற்குப் பதிலாக போலி சுவடிகள், தற்காலத்தில் எழுதப்பட்ட சுவடிகள் அங்கு இருப்பதாகச் சொல்லப்படுவது உண்மையா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அப்படிப்பட்ட குற்றச்சாட்டு வரவில்லை. அப்படி வந்தால் அதற்கான ஆய்வு, பரிசோதனை நடத்தச் சொல்லலாம். அப்படிப்பட்ட குற்றச்சாட்டு எதுவும் வரவில்லை.

## மறு நில அளவை

* 26 வினா.—திரு. எம். சுரேந்திரன் : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராஜ்யத்தில் மறு சர்வே நடைபெற்று வருகிறதா ?

(இ) ஆம் எனில், நடைபெறும் பகுதிகளின் பெயர் விபரங்கள் யாவை ?

(உ) சர்வேயின்பொழுது சங்கிலி பிடிக்கும் ஆட்களுக்கும், சர்வே கற்களுக்கும் ஆகும் செலவு சர்வேக்குட்பட்ட நில உரிமையாளரிடமிருந்து பெறப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பேரவை முன் விவர அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. எம். சுரேந்திரன் : சார், இந்த சர்வே செய்யும்பொழுது, தீர்வை ஏற்பட்ட தரிசு, தீர்வை ஏற்படாத தரிசு என்று இருக்கின்றன. இந்தத் தீர்வை ஏற்படாத தரிசை தீர்வை ஏற்பட்ட தரிசாக மாற்றியமைக்க அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : ரீ சர்வே செய்யப்படும் விஷயம், சில குறிப்பிட்ட, ஏற்கெனவே செய்யத் தொடங்கிய இடங்களுக்கு மட்டும்தான் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் இது எழவில்லை.

THIRU K. VINAYAKAM : Whereas it has been found that survey and statement process is a very cumbersome technical affair, whereas during the survey and settlement process the people who are actually affected by the survey are not summoned by the officers concerned with the result that they summarily dispose of the land as if it belongs to the Government just like a poramboke and whereas it is difficult to correlate 'Paimash' numbers with the survey numbers, will the Minister take steps to instruct the department concerned to see that the measurements are given not in links—God only knows what is meant by links—but in metres so that it may be intelligible to the ordinary people? Nobody knows what is meant by 'link' or 'paimash'. They want to keep everything in the dark.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள்.

திரு. கே. விநாயகம் : நானாக உட்கார மாட்டேனா? ஸ்கூலா இது ? ஹெட்மாஸ்டர் போல் உட்காருங்கள் உட்காருங்கள் என்று சொல்லுகிறீர்களே ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியைக் கேட்டுவிட்டு உறுப்பினர் உட்கார வேண்டும். "சர்வே என்றால் யாருக்கும்

* 248ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.





தெரியவில்லை, செட்டில்மெண்ட் என்றால் தெரியவில்லை" என்று சொல்வதற்கு, இப்படிப்பட்ட உபதேசம் செய்வதற்கு இது நேரம் அல்ல, அது உறுப்பினரின் கடமையோ, உரிமையோ அல்ல. அதைச் சுட்டிக்காட்டுவதற்கு பேரவைத் தலைவருக்கு உரிமை இருக்கிறது. பள்ளிக்கூட மாணவரை உட்கார வைப்பது என்ற அந்த முறையிலே அல்ல.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் மெட்ரிக் முறையிலேதான் இப்போது அளவைகள் எல்லாம் மாற்றப்பட்டு வருகின்றன. 'ஃபுட் பவுண்ட்' முறையை இப்போது அனுசரிக்கவில்லை. ரீ-சர்வே இப்பொழுது செய்யவில்லை. பல கோடிக் கணக்கான ரூபாய் ஆகும் என்றிருப்பதால், ஏற்கெனவே ஆரம்பித்து வைக்கப்பட்ட, குறிப்பிட்டு இருக்கிற சில இடங்களில் மட்டும்தான் இது செய்யப்படுகிறது. ரீ-சர்வே வேண்டுமென்று ஏற்கெனவே இருக்கிற நிலைமை, நமக்கு உதவாது என்று கலெக்டரோ, வருவாய்த்துறை அதிகாரியோ, டெபுடி டைரக்டரோ சொல்லி, அதுகூட நிதி ஆதாரம் பாதிக்காத முறையிலே இருந்தால் ரீ-சர்வேக்கு ஆணையிடப்படுகிறது. மு:ப. 9-30

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : கன்யாகுமரி ஜில்லாவில் இப்பொழுது ரீ-சர்வே நடந்துகொண்டே இருக்கிறது. முன்னால் நடந்த சர்வே அளவுக்கும் இப்பொழுது நடக்கின்ற ரீ-சர்வே அளவுக்கும் மாறுதல் ஏற்பட்ட காரணத்தினால் அந்த ரிகார்டு மெய்ன்டெனன்ஸில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. ஆதலால் பொது மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தமாதிரி தவறுகள் நிகழாமல் சரியான முறையிலே நடத்துவதற்கு அரசாங்கம் தகுந்த ஏற்பாடுகள் செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : என்ன பாதகங்கள், என்ன தவறுகள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவருவார்களேயானால், அவைகள் உண்மையில் பாதகம் தானா, தவறுகள் தானா என்பதைப் பரிசீலனை செய்து, தகுந்த நிவாரணம் தேடலாம்.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : ஏற்கெனவே செய்யப்பட்ட சர்வேயில் சில இடங்களில் பழைய கோவில் ஊரணிகள் கூட விடுபட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட கேஸ்களை தனிக் கவனம் செலுத்தி, மறுபடியும் சர்வே செய்து சேர்த்துக் கொள்வதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : முன்பே சொன்னேன். ஏற்கனவே இருக்கும் முறைகள் ஒன்றுக்கும் உதவாது, மறுமுறை ரீ-சர்வே செய்து தான் ஆகவேண்டும் என்ற ஒரு நிலைமையை மாவட்ட அதிகாரிகளும், வருவாய்த்துறை அதிகாரிகளும், சர்வே அதிகாரிகளும் குறிப்பிட்டு பரிந்துரை அனுப்பினால் அதன் பேரில் தான் அதைப்பற்றிய நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

**திரு. எம். சுரேந்திரன் :** மேட்டூர் தாலுகாவிலே சர்வே செய்வதற்காக விசேஷ அதிகாரிகள் நியமிக்கப்பட்டு, மறுபடியும் நிறுத்தப்பட்டுவிட்டார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? மீண்டும் புதிதாக சர்வே செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வார்களா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஏற்கனவே சொன்ன பதில்தான் இருக்கும். ரொம்ப எதிர்பாராவிதமாக, தவிர்க்க முடியாத அவசியம் ஏற்பட்டாலன்றி ரீ-சர்வே செய்வதாக உத்தேசம் இல்லை.

*Retired Officers Association*

* 27 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Finance be pleased to state:

(*a*) whether any memorandum was submitted to the Government by the Retired Officers Association about the 17th June, 1969;

(*b*) if so, the details thereof; and

(*c*) the action taken thereon?

THE HON. THIRU K. A. MATHIALAGAN:

(*a*) Yes, Sir,

(b) The Association has requested that

(i) an addition to pension of an amount equal to 10 per cent of the pension subject to a minimum of Rs. 10 per mensem may be sanctioned as Dearness Allowance to the pensioners on an ad hoc basis in view of the increase in the cost of living.

(*ii*) the minimum pension of Rs. 20 p.m. may be raised to Rs. 35 p.m. and;

(*iii*) the pensioners may be continued to be allowed the same medical concessions as were granted to them while in service.

(*c*) The matter is under consideration of the Government.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :** தலைவர் அவர்களே, ஓய்வு பெற்ற அதிகாரிகளுடைய பென்ஷன் அவர்களுடைய வாழ்க்கைக்கே மிகவும் குறைவாக இருப்பதினாலும், அநேகம் பேர்கள் மிகவும் கஷ்டப்படுவதாலும், கொஞ்சம் அன்பு கூர்ந்து அவர்களுடைய நிலைமையை உயர்த்துவதற்கு உடனடியாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கஷ்டம் என்பது பொதுவாக நாம் எல்லோருக்கும் இருக்கிற நிலைமையே தவிர, பென்ஷனர்களுக்கு மட்டும் இருக்கிற கஷ்டம் அல்ல. இது நம்முடைய பொது பொருளாதார நிலைமையினுடைய பிரதிபலிப்பு. சாதாரணமாகத் தோன்றுகிற கோரிக்கைகளை நிறைவேற்று



வதற்கே அதிகப் பணம் தேவைப்படும். ரூ. 10 அதிகரிக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். ரூ. 10 அளவுக்குச் செய்யவேண்டும் என்றால் ரூ. 42 லட்சம் அரசாங்கத்திற்கு செலவாகும் என்று மதிப்பிடப்படுகிறது. ரூ. 20 கொடுக்கின்ற பென்ஷனை ரூ. 35 ஆக ஆக்கவேண்டும் என்ற ஒரு நிலைமை வந்தாலேயே, அந்த நிலைமைக்கு ரூ. 15 லட்சம் தேவைப்படுகிறது. இவைகளின்பேரில் நம்முடைய நிதி நிலைமையைப் பொறுத்து முடிவுகள் ஏற்படுகின்றன.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லும்பொழுது ரூ. 42 லட்சம் அதிகமாகச் செலவு ஏற்படும் என்று சொன்னார்கள். அவர்களே அன்று நேரிடையாகப் பார்த்தார்கள். அன்று சிலையிலிருந்து ஊர்வலமாக கோட்டைக்கு முன்வந்து தங்கள் கோரிக்கைகளை அவர்கள் தெரிவித்துக் கொண்டார்கள். பாவம் வயோதிகர்கள். அந்தப் பரிதாபத்திற்காகவாவது அமைச்சர் அவர்கள் செவிசாய்ப்பார்களா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பரிதாப உணர்ச்சியும், பரிவு உணர்ச்சியும் அரசாங்கத்திற்கும் உண்டு. அவர்களுடைய பரிவு உணர்ச்சியை நான் பாராட்டுகிறேன்.

DR. H. V. HANDE: Sir, is it a fact that the D.M.K. Party before coming to power, had given assurances to the pensioners that their grievances would be considered sympathetically when it came to power and if so, is it not necessary for the Government to reconsider their decision and grant an ad hoc increase of Rs. 10 or 15 as has been given by the Central Government and some other State Governments? I want to know whether the Hon. Minister has got anything secret to announce in the coming Budget speech. Now, will the Hon. Minister give a categorical answer to my question?

THE HON. THIRU K. A. MATHIALAGAN: Sir, I cannot give a categorical answer to this question. But I can assure the hon. Member that the Government are certainly sympathetic to the pensioners. They have made so many promises but it is subject to the financial limitations. That is my point. But it does not necessarily mean that we have totally rejected their demand. In the main answer itself, I have stated that the matter is under the consideration of the Government. It is not correct to say now what is going to happen in March.

அரசுக் கடன்கள் வசூல்

* 28 வினா.—திரு. மா. பா. சாரதி : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பல்வேறு காரணங்களுக்காக கொடுக்கப்பட்டுள்ள அரசாங்கக் கடன்கள் பஞ்சநிலை காரணமாக வட ஆர்க்காடு மாவட்டத்தில் வசூலிப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளதா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஆம்.

**திரு. எஸ். முருகையன் :** தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் சென்ற இரண்டு ஆண்டு காலமாக மழை இல்லாமலும், மழை காலம் கடந்து பெய்து இருப்பதாலும், ஏற்கனவே அங்குள்ள விவசாயிகள் பல வழிகளிலே கடன் வாங்கிவிட்டு மிகவும் தொல்லைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தக் கடன் தவணையை இந்த ஆண்டு வசூலிக்காமல், அடுத்த ஆண்டு வசூலிப்பதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை நான் ஏற்றுக்கொள்வதாக இல்லை. ஏனென்றால், வட ஆற்காடு மாவட்டத்தில் ஒரு கோடி 2 லட்சம் ரூபாய் பாக்கி இருந்தது. இருந்தாலும் கூட, வறட்சிநிலை காரணமாக, பஞ்ச நிலை காரணமாக, கடன் வசூலில் ஒரு மெத்தனமான நிலையை அரசாங்கமே காட்டியது. அப்படிப்பட்ட நிலைமையில் ரூ. 38 லட்சம் தான் வசூலாயிற்று. ஆனால், இந்த ஆண்டு மழைமாரி நன்றாகப் பெய்து, குளங்கள் நிரம்பி நல்ல வகையில் வட ஆற்காடு மாவட்டம் பழைய நிலைமையை எட்டியிருக்கின்ற காரணத்தினால், நியாயமான முறைகளில் செய்ய வேண்டிய காரியங்களை அரசாங்கம் செய்யும். கடன்களை யெல்லாம் திருப்பிக் கொடுக்க வேண்டும். இன்னும் சேர்த்து வைத்துக் கொள்ளக் கூடாது என்பதற்காக கடன் வசூலிப்பதில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அரசாங்கத்திற்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** வட ஆற்காடு மாவட்டத்தில் இரண்டு ஆண்டுகளாக மழை பெய்யாமல் வரண்டுபோய் பயிர்கள் பாதிக்கப்பட்ட காரணத்தினால், இந்த மாவட்டத்திலுள்ள விவசாயிகள், அரசாங்கத்தினிடமிருந்து மட்டும் அல்லாது வெளியிடங்களிலிருந்தும் நிறையக் கடன்களை வாங்கியிருக்கிறார்கள். அவர்கள் தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் கொடுக்காமல் இருந்த கடன் தவணைகளை இந்த ஆண்டு கட்ட வேண்டுமென்று சொன்னால், அப்படிக் கட்ட முடியாத காரணத்தினால், அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். எனவே ஒரு ஆண்டு கடன் தவணை வசூலை தள்ளிப்போட்டு, அடுத்த ஆண்டு வசூல் செய்தால் நலமாக இருக்கும். எனவே, அரசாங்கம் இதைப்பற்றி பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** முதலிலே சொன்ன பதில் தான் இதற்கும் பொருந்தும். திரு. முருகையன் அவர்களும், உறுப்பினர் அவர்களும் கடன் தவணையை வசூலிப்பதற்கு அரசாங்கத்தினுடன் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளின்படி 29, 30, 31, 32 எண்ணுள்ள கேள்விகள் தள்ளிவைக்கப்படுகின்றன.

*Exemption of sales tax on yarn*

* 33 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state the details of sales tax exemption granted to yarn exports from this State?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தென் இந்திய ஆலை உடைமையாளர்கள் சங்கத்தின் வேண்டுகோளின் பேரிலும், இம்மாநிலத்தில் துணி ஆலைத் தொழிலில் இருந்த நெருக்கடி நிலைமை காரணமாகவும், தமது மாநிலத்தில் உள்ள ஆலைகளில் தயாரிக்கப்பட்டு, ஏற்றுமதி முகவர்கள் மூலம் நாட்டிற்கு வெளியே ஏற்றுமதி செய்யப்படும் பருத்தி நூல் விற்பனை குறித்து, தமிழ் நாடு 1959-ம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழும், 1956-ம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழும் விதிக்கப் படத்தக்க வரியிலிருந்து அரசாங்கம் விலக்களித்துள்ளது. 1—6—1968 முதல் இந்த வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்பொழுது இந்த விற்பனை வரியிலிருந்து விலக்களித்திருப்பதாகச் சொன்னார்கள். இதனால் அரசாங்கத்திற்கு எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டது என்பதை அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, 1968-69-ல் தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் ரூ. 4,35,000 ; மத்திய விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் ரூ. 11,00,700 ; 1969-70-ல் தமிழ் நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் ரூ. 7,00,900; மத்திய விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் ரூ. 11,54,000.

### அரிசி ஆலைகளுக்கு அனுமதி

* 34 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவு வாணிகத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

அரிசி ஆலைகளுக்கு அனுமதி வழங்குவதில் மாற்றம் ஏதேனும் செய்யப்பட்டுள்ளதா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இல்லை.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, நம்முடைய அரசாங்கத்தின் தீவிர முயற்சியின் காரணமாக உணவு உற்பத்தி பெருகியிருக்கும்போது, இத்தகைய ஆலைகளுக்கு, உரிமம் வழங்குவதை மாவட்ட கலெக்டர்களுக்குக் கொடுக்க, சர்க்கார் முன்வருமா ?

[1970 ஜனவரி 22

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இந்தச் சட்டம் மத்திய சர்க்காரால் நிறைவேற்றப்பட்டு, மாநில சர்க்காரால் அமுல் படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதன்படி அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** கேரள மாநிலத்தோடு ஒட்டிக் கிடக்கும் பகுதிகளில், ரைஸ் மில்கள் வைக்க அனுமதி கொடுக்கக் கூடாது என்கிற விதி ஏதாவது அரசாங்கம் அமுல் நடத்துகிறதா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, அப்படி ஒன்றுமில்லை.

**திரு. தி. பொன்னுமலை :** தலைவர் அவர்களே, இந்த ரைஸ் மில் சம்பந்தமாக கிராமங்களில் நிறையக் கஷ்டப்படுகிறார்கள். ஒவ்வொரு ஊரிலும், 4, 5 பேர்கள் ரைஸ் மில்கள் வைக்க வேண்டும் என்று, எம்.எல்.ஏ.-க்களைச் சிபாரிசு செய்ய வேண்டும் என்றும் வந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, ஒவ்வொரு ஊரிலும் அவசியத்திற்குத் தக்கபடி, மாவட்டத் தலைவரோ அல்லது பஞ்சாயத்து அதிகாரியோ எத்தனை மில்கள் வேண்டுமோ அத்தனைக்கு லைசென்ஸ் கொடுக்கலாம் என்று சர்க்கார் அனுமதி வழங்க உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இந்த அரிசி ஆலைகள் சம்பந்தமாக, போடப்பட்டிருக்கும் சட்டம் மத்திய சர்க்காரால் போடப்பட்டிருக்கிறது என்று சொன்னேன். இந்த அரசாங்கம் உரிமம் வழங்குவதை விட்டுவிட்டால், உரிமங்கள் வாங்க டெல்லிக்குப் போக வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும்.

THIRU T. MARTIN : In granting rice mill permits formerly 3 mile radius from the village natham was taken as basis for taking into consideration the availability of paddy for these rice mills. Recently it was changed and Panchayat jurisdiction has been taken into consideration for granting rice permits after considering the availability of paddy. May I request the Hon. Minister to state which is the standard that is now being accepted and implemented by Government for granting rice mill permits ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, சட்டத்திற்கு உட்பட்டு எந்த வகையில் அரசாங்கத்தால் சலுகை காட்டி அனுமதி வழங்கக் கூடுமோ அந்த வகையில் வழங்க வேண்டிய முறைகளைக் கையாண்டு வருகிறோம்.

**திரு. எம். பூபதி :** அரிசி ஆலைக்காரர்கள் அரிசியை நாற்றம் பிடிக்க அடித்து விடுகிறார்கள் ; ஒரு முறை உபயோகித்த தண்ணீரையே மறுமுறையும் உபயோகிக்கக் கூடாது ; அதிலே மறுபடியும் சோடாவைப் போட்டு நெல் உப்பும் முறையில் இல்லாமல் மணல் கலக்காமல் செய்யவேண்டும் என்று வற்புறுத்திச் [illegible]தக்க நடவடிக்கை எடுக்குமா ?



1970 ஜனவரி 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது ரைஸ் மில் லைசென்ஸ் சம்பந்தப்பட்டது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இது லைசென்சைப் பொறுத்த கேள்வி. அங்கத்தினர் கேட்பதைப் பற்றித் தனிக் கேள்வி போட்டால் சொல்லலாம். இருந்தாலும், உணவு கண்ட்ரோல் இல்லாததால், அப்படி இனி நிகழாது என்று நினைக்கிறேன்.

THIRU K. VINAYAKAM : Whereas the Rice Milling Regulation Act is an Act passed by the Central Government and whereas the Centre have appointed the State Government as the authority to issue licences, would not this Government think of liberally exercising that authority by issuing the permit as and when people come and ask for the same? Whether he runs efficiently or not, whether he makes profit or loss, it is his pigeon and coffin. Why not this Government be liberal in issuing licences whenever asked for?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, சட்டத்தின் கீழ் அனுமதி வழங்குகிறோம். சட்டம் மத்திய சர்க்காரால் இயற்றப்பட்டது. ஆகவே, சட்டத்திற்குப் புறம்பாக வழங்கினால், நீதி மன்றங்களுக்குப் போகிறார்கள். நீதி மன்றத்தில், மத்திய சர்க்காரின் சட்டத்தின்படி கொடுத்திருக்க வேண்டும் என்று பல உரிமங்கள் அடிபட்டிருப்பதால், சட்டப்படிதான் நடக்க வேண்டியதாக இருக்கிறது.

## கறவை மாடுகளிடையில் தோல் நோய்

*35 வினா.—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு உணவு வணிகவரித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை ராஜ்பவன், கிண்டி பகுதிகளில் 1969 மே, ஜூன் மாதங்களில் கறவை மாடுகளிடையே தோல் நோய் பரவியதன் காரணமாக மாடுகள் இறந்தனவா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) சென்னை மாநகரிலுள்ள ராஜ்பவன், கிண்டி பகுதிகளில் 1969-ல் கறவை மாடுகளிடையே சரும நோய் ஏற்படவில்லை.

(இ) இவ் வினாவிற்கு இடமில்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, கால்நடைச் செல்வங்கள் விவசாயத்திற்கு மிகவும் இன்றியமையாதவை. இந்த மாதிரிச் சில இடங்களில் நோய் ஏற்பட்டு, மாடுகள் இறந்து விடுகின்றன. அதை தடுக்க எடுக்கப்பட்ட சிறப்பான ஏற்பாடுகள் என்ன என்பதை விளக்க முடியுமா ?

[1970 ஜனவரி 22

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** நான் மொத்தத்தில் சொன்னேன், 40 என்பது 35 ஆக குறைக்கப்பட்டிருக்கிறது என்று. தமிழைப் பொறுத்தவரையில் ஒதுக்கப்பட்டவை குறைக்கப்படவில்லை.

* 22 வினா—**திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ் வளர்ச்சிக்காக உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றின் பாட திட்டங்களில் மாறுதல் செய்ய உத்தேசம் ஏதேனும் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரை திட்டம் ஏதுமில்லை. கல்லூரிகளைப் பொறுத்தவரை, இது பல்கலைக்கழகம் பரிசீலனை செய்ய வேண்டிய காரியம்.

**திரு. வை. சுவாமிநாதன் :** தமிழ் ஆர்வம் அதிகமாக இருக்கும் இந்த நேரத்தில் பாடப்புத்தகங்கள் பழைய முறையில் இருப்பதால் ஆர்வம் குறைந்து வருகிறது. ஆகவே நடப்பாண்டிலிருந்தாவது தமிழ் பாடப் புத்தகங்களை புதிய முறையில் மாற்றியமைக்க உத்தேசித்துள்ளதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இதற்கு செகன்டரி போர்ட் இருக்கிறது. ஸிலபஸ் பற்றி அவர்கள் தீர்மானிக்க வேண்டும். கல்லூரிகளைப் பொறுத்தவரையில் பல்கலைக்கழகம் தீர்மானிக்கவேண்டும். நிர்வாகத்தைப் பொறுத்தவரையில்தான் அரசு தலையிடுகிறது. ஸிலபஸ் என்னென்ன வைப்பது, என்னென்ன பாடப்புத்தகங்களை வைப்பது என்பது பற்றி எக்ஸ்பர்ட் கமிட்டியில் தீர்மானிக்கப்படுகிறது. அதற்குரிய போர்டில் தக்க முறையில் ஆராய்ந்து வகை செய்ய முற்படுவார்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** அரசின் இரு மொழிக் கொள்கையினால் பாதிக்கப்பட்ட இந்தி ஆசிரியர்கள்—முந்திய கேள்விக்கு தொடர்புள்ளது இது. . .

**திரு. எம். பூபதி :** தமிழின் தரம் உயர்வதற்காக ஆசிரியர்கள்-மாணவர்கள் விகிதாசாரத்தை 1 : 25 ஆக மாற்றியமைக்க உத்தேசமுள்ளதா? அப்படி இல்லாவிட்டால் அதுபற்றி மேற்கொண்டு பரிசீலனை செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இப்போது தேவையை உத்தேசித்து மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். நிதி வசதியை உத்தேசித்து மாணவர்களை இருக்கிற ஆசிரியர்களிடம் இவ்வளவு பேர்கள் என்று ஒப்படைக்கலாம் என்றிருக்கிறது. நிதி வசதி பெருகப் பெருகத்தான் ஆசிரியர்கள்—மாணவர்கள் விகிதாசாரத்தைக் குறைப்பதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டும். ஒரு ஆசிரியருக்கு 25 அல்லது 30 பிள்ளைகள் இருந்தால் நல்லதுதான்.



1970 ஜனவரி 22]

ஆனால் இருக்கிற நிதி வசதியைப் பொறுத்து ஒரு ஆசிரியரிடம் எவ்வளவு பேர்களை ஒப்படைக்கலாம் என்று பார்க்கும்போது 30, 40 என்று வருகிறது. நிதிவசதி பெருகப் பெருகத்தான் அதைத் திட்டவட்டமாகச் செய்யமுடியும்.

*Madurai University*

* 23 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether Madurai University proposes to abolish Tamil from Part II and introduce Hindi department in its research centre ; and

(*b*) whether the students of Ganesar Senthamil College, Melaisivapuri went on strike on that account?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(ஆ) கல்லூரி மாணவர்கள் 27—12—1968 முதற்கொண்டு வேலை நிறுத்தம் செய்தனர். அவர்கள் செய்த வேலை நிறுத்தத்திற்கு, மற்ற காரணங்களுடன், வினாவின் (அ) பிரிவில் தொக்கியுள்ள குற்றச்சாட்டுகள் காரணங்களாகக் கொடுக்கப்பட்டன.

**திரு. கே. விநாயகம் :** மதுரைப் பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரையில் ஆராய்ச்சித் துறையில் இதற்கு முன்னே இருந்த நிலைமைப்படி தமிழ் ஆராய்ச்சி செய்வதற்கு பார்ட் 2 செக்ஷனில் இருந்ததை மாற்றியமைத்து அதற்குப் பதிலாக இந்தியைப் புகுத்த வேண்டுமென்று அவர்கள் யோசனை சொன்னார்களா ? அப்படிக் கூறியதன் விளைவாகத்தான் மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்து அதன் காரணமாக அதை திரும்பப்பெற்றுக்கொண்டார்களா ? இந்தத் தகவல் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மதுரைப் பல்கலைக் கழகத்தில் அப்படிப்பட்ட மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை. அதுபற்றி எனக்குத் தகவல் இல்லை. பல்கலைக்கழகத் துணை வேந்தர் கருத்துப்படி அப்படிப்பட்ட மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை. பல்வேறு காரணங்களை வைத்து வேலைநிறுத்தம் செய்யப்பட்டது. அப்படி இந்திக்கு இடம் ஒதுக்கப்படவில்லை என்று தெரிவித்த பிறகு வேலைநிறுத்தத்தை விட்டுவிட்டார்கள். தவறான கருத்தின் பேரில் வேலைநிறுத்தம் நடைபெற்றதாகச் சொல்லப்படுகிறது.

### ஏழை மாணவர்களுக்கு 'புத்தக வங்கி'

* 24 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்லூரிகளில் படிக்கும் ஏழை மாணவர்கள், இலவசமாக படிப்பதற்காக, 'புத்தக பேங்க்' ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா ?

ரெயில்வே முடித்துவிட்டு அந்த அறிக்கைகளை ரயில்வே வாரியத்திற்கு அனுப்பியுள்ளது. இந்த இருப்புப் பாதை போடுவதற்கு ஏறத்தாழ ரூ. 8.6 கோடி செலவாகுமென்றும், இந்தப் பகுதியில் சாலைப் போக்குவரத்து நன்கு அமைந்துள்ளதால் இது அவ்வளவாக ஆதாயம் தரத்தக்கதல்ல என்றும் இந்திய அரசின் ரெயில்வே அமைச்சகம் கருத்துத் தெரிவித்துள்ளது.

தூத்துக்குடி பெருந் துறைமுகமாக வளர்ச்சியடைந்த பின்னர் இந்த வட்டாரம் மேற்கொண்டு வளர்ச்சியடையும்வரை, இச்செயற் குறிப்பு ஒத்திப் போடப்பட்டுள்ளதென்றும், அவர்கள் கூறியுள்ளனர். இந்த இருப்புப் பாதை அமைக்கப்படுவதற்குக் காலதாமதமானாலும், நாம் இந்திய அரசிடம் இதுபற்றித் தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டேயிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. திருநெல்வேலி-கன்னியாகுமரி-திருவனந்தபுரம் ரயில் பாதைகள் குறித்து முன்னர் செய்யப்பட்டுள்ள அறிக்கைகளை மீண்டும் மதிப்பிட்டு ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள முடிவு செய்திருப்பதாகவும், 1969-70-ம் ஆண்டுக்கான வேலைத் திட்டத்தின்கீழ் புதிதாக அளவைப் பணியை மேற்கொள்ள அவர்கள் திட்டமிட்டுள்ளனர் என்றும் இந்திய அரசு பின்னர் கூறியுள்ளனர். திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கலந்தாலோசித்த பிறகு, நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலேயே இந்த இருப்புப்பாதை அமைக்கும் பணியை எடுத்துக் கொள்ளுமாறு இந்திய அரசிடம் மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## கொல்லிமலை அணைக்கட்டு

*** 37 வினா.—திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

கொல்லிமலை அணைக்கட்டைக் கட்டுவதற்காக மத்திய அரசிடமிருந்து கடன் ஏதேனும் மாநில அரசினால் கேட்கப்பட்டுள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** இத் திட்டம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. ஆகையால் இதற்கு மத்திய அரசு நிதி உதவி கிடைக்கும்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, இந்த கொல்லிமலை அணைக்கட்டினால் எவ்வளவு மொத்தம் செலவாகும்? புதிதாக எத்தனை ஏக்கர்களுக்குப் பாசன வசதி ஏற்படும்? இதன் காரணமாக எத்தனை டன் நெல் அதிகமாக விளையும் ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர்களே, இந்த அணைக்கட்டு சுமார் 2.86 கோடி கன அடி கொள்திறனுள்ள நீர்த்தேக்கமாக அமையும். இதன் மதிப்பீட்டுச் செலவு 255 லட்சம் ரூபாய் ஆகும். நீர்த் தேக்கத்தின் கொள்திறன் 2.86 கோடி கன அடி. பெறவிருக்கும் நீர் அளவு 5.72 கோடி கன அடி. புதிய பரப்பில் உள்ள ஏக்கர் ஒன்றுக்கு ஏற்படும் செலவு ரூ. 7,727. பாசன வசதி உறுதிப்படுத்தப்பட்ட பரப்பளவு உட்பட மொத்தப்



பரப்பளவுக்காக ஏற்படும் செலவு ரூ. 3,643. பயனடையப் போகும் பரப்பளவு புதிய 3,300 ஏக்கர். பாசன வசதி உறுதிப்படுத்தப்பட்டது 3,700 ஏக்கர். கூடுதல் விளைச்சல் 4,410 டன் ஆகும்.

## *Wild Life as State property*

* 38 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether there is a proposal to make wild life as State property ; and

(b) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** (அ) ஆம்.

(இ) இம் மாநிலத்தில் உள்ள வன விலங்குகளைப் பாதுகாப்பதற்கும், பேணி வருவதற்கும் அடங்கல் சட்டம் இயற்றுவதற்கான செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது. இறந்த அல்லது உயிருடன் உள்ள வனவிலங்குகளை மாநிலத்தின் உடைமையாக அறிவிப்பதற்கு இயற்ற எண்ணியுள்ள மசோதாவில் வகை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, இந்த வன விலங்குகள் எல்லாம் மதிப்பிட முடியாத செல்வங்கள். இவைகளினால் நமக்கு அன்னியச் செலாவணி கிடைக்கிறது. இவைகளினுடைய மொத்த மதிப்பு என்ன ? இதனை அரசுடைமையாக்கினால் மக்களுக்கு ஏற்படும் பயன் என்ன ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவர் அவர்களே, பொதுவாக, வன விலங்குகள் எல்லாம் நன்கு பாதுகாக்கப்பட வேண்டும் என்று மத்திய அரசிலிருந்து ஒரு பரிந்துரை செய்யப்பட்டு, ஒரு மசோதா அனுப்பியிருக்கிறார்கள். வன விலங்குகள் நாளுக்கு நாள் அழிக்கப்பட்டு வருகின்றன. வேறு நாடுகளில் இல்லாத விலங்குகள் இந்தியாவில் இருக்கின்றன. அவைகளுக்கு நல்ல பாதுகாப்புத் தர வேண்டுமென்றுதான் மத்திய அரசு மசோதாவை அனுப்பியிருக்கிறது. எல்லா மாநிலங்களும் ஒரே சீரான கொள்கையைக் கடைப்பிடித்தால்தான் பயன்பெற முடியும் என்பதைச் சுட்டிக்காட்டி, மசோதா அனுப்பியிருக்கிறார்கள். அந்த மசோதாவை நாம் முழுமையாகப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். பின்பு அது சட்டமாக நிறைவேற்றப்படும். வனவிலங்குகளின் மொத்த மதிப்பு எவ்வளவு என்று கனம் உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். அதற்கான குறிப்புகள் என் வசம் இல்லை.

**ஹாஜி ம. மு. பீர் முகம்மது :** பேரவைத் தலைவர் அவர்களே, நம் மாநிலக் காடுகளிலுள்ள யானைகள் நம் மாநிலத்திற்குச் சொந்தமானவையா? அல்லது பிற மாநிலத்திற்குச் சொந்தமானவையா ? ஏனென்றால், கேரள மாநிலத்திற்குத்தான் யானைகள் சொந்தம் என்ற நிலையிருக்கிறதே, அதுபற்றிய தகவலை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, நம் மாநிலத்திலுள்ள யானைகள் நமக்குத்தான் சொந்தம்.

திரு. கே. போஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, வன விலங்குகளை அரசுடைமையாக்க முடியுமா? அப்படி எல்லா விதமான விலங்குகளையும் அரசுடைமையாக்காவிடினும், ஒரு குறிப்பிட்ட இனத்தை மட்டுமாவது அரசுடைமையாக்க முடியுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, இப்பொழுது ரிசர்வ்டு பாரஸ்ட், அன்-ரிசர்வ்டு பாரஸ்ட் என்ற இருவகைக் காடுகள் இருக்கின்றன. ரிசர்வ்டு பாரஸ்ட்டில் உள்ளவைகளை பாதுகாக்கிறோம். இவைகளுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டுமென்று சட்டம் கொண்டுவந்திருக்கிறோம். எல்லா இடங்களிலும் இருக்கிற விலங்குகளுக்கும் சட்டப்படி பாதுகாப்பு செய்ய முடியாது. ரிசர்வ்டு பாரஸ்ட்டில் உள்ளவற்றைப் போல அன்-ரிசர்வ்டு பாரஸ்ட்டில் உள்ளவைகளுக்கும் பாதுகாப்பு அளிக்க, அவற்றைச் சட்டத்தின்கீழ் கொண்டு வரலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. மு. ச. சிவசாமி : தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டில் இல்லாத வன விலங்குகளை—உதாரணமாக, ஆஸ்திரேலியா நாட்டிலுள்ள கங்காரு போன்றவற்றை—புதுரக வனவிலங்குகளை நம் நாட்டிற்குக் கொண்டுவந்து அவற்றின் இனவிருத்தியைப் பெருக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, சில தடவைகளில் நாம் மிருகக் காட்சிசாலைகளில் கொண்டுவந்து வளர்க்கிறோம். மற்றபடி இதற்கான வேறு திட்டம் ஒன்றும் இல்லை.

### *Beedi and Cigar Workers*

*39 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the Central Government have asked this Government to implement the Beedi and Cigar Workers Regulation (Conditions of Employment) Act. 1966 from the 1st of April 1968 ;

(*b*) the total number of workers who will be benefited by this Act in the State ;

(*c*) the total number of Beedi workers and the number of children employed in this Industry in this State ;

(*d*) whether this Government have any other concrete proposal to improve the wage earnings of the Beedi workers in this State ; and

(*e*) if so, the details thereof ?



மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : (அ) ஆம்.

(இ) 95,765.

(உ) பீடித் தொழிலில் அமர்த்தப்பட்டிருக்கும் மொத்தத் தொழிலாளர்களின் எண்ணிக்கை—95,765.

சிறுவர்களின் எண்ணிக்கை—4,176.

(எ) இல்லை.

(ஐ) இவ்வினா எழவில்லை.

*40 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முக்கூடல்பீடி குறைந்தபட்ச கூலியை எதிர்த்து எந்தெந்த முதலாளிகள் உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்துள்ளனர்?

(இ) அவைகள் மீது வழங்கப்பட்ட தீர்ப்பு என்ன?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : (அ) புகையிலை (பீடி சுற்றுதல் உட்பட) தொழிற்சாலையில் உள்ள தொழிலாளர்களுக்கான குறைந்த அளவு ஊதியம் வரையறுக்கும் அறிவிப்பை எதிர்த்து முக்கூடலில் உள்ள திரு. த. பி. சொக்கலால் ராம்சேட் தொழிற்சாலை (தனி நிறுவனம்) உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்துள்ளது.

(இ) அந்த அறிவிப்பு செல்திறனுள்ளது என்றும் ஆனால் அரசு ஆணையிட்டுள்ளது போல 30—5—1968 அன்று முதல் செயலுக்கு வருவதற்குப் பதிலாக, தமிழ்நாடு அரசிதழில் வெளியான நாளிலிருந்து மூன்று திங்களுக்குப் பின்னர் இது செயலுக்கு வரும் என்று உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்தது.

Dr. H. V. HANDE : When there is a Government Order it is better that it is implemented. On the advice of the Central Government, the State Government passed the order in May 1968. Have the Government taken care to see that the order is properly implemented by the proprietors especially in Tirunelveli District, because the maximum number of workers are in that district? What is the type of watch that the Government are keeping over the workers to see that they get their pay, etc. ? Have the Government got the controlling machinery and will they come forward to see that the workers are benefited to a certain extent at least by this method? Are the Government aware that a number of people are using their children? The statistics given here are very different from the number of children employed in these factories.

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, இந்த அரசாணை 30—5—1968-ல் பிறப்பிக்கப்பட்டது. இதை எல்லா முதலாளிகளும் நிறைவேற்றிச் செயல்பட வேண்டுமென்று

'Arrest of prominent Congressmen including Thiru S. V. Lakshmanan, M.L.C., at Coimbatore, on 17th January 1970, in spite of the magistrate's refusal to entertain a police complaint under section 145, Criminal Procedure Code, and the failure of the Government to maintain and up hold the rule of law.

இந்நிகழ்ச்சியும் அரசினரின் அன்றாட நிர்வாகத்தின் கீழ் வருகின்ற காரணத்தினாலும், இது பற்றிய வழக்கு நீதி மன்றத்தில் இருக்கிற காரணத்தினாலும் இதற்கு அனுமதிதர மறுக்கிறேன்.

## (இ) எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரியில் புகுமுகவகுப்பு மாணவிகளிடமிருந்து கட்டணம் வசூலிப்பது குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அடுத்து, திரு. இராமமூர்த்தி அவர்களும், திரு. சித்தன் அவர்களும், திரு. வி. கே. கோதண்டராமன் அவர்களும் எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரியில் புகுமுக வகுப்பு மாணவிகளிடமிருந்து கட்டணம் வசூலிப்பது சம்பந்தமாக கல்லூரி நிர்வாகிகளுக்கும், அரசுக்கும் இடையில் உள்ள தகராறு சம்பந்தமாக ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி ஒத்திவைப்புத் தீர்மானத்திற்குரியதாகும் என்பதைச் சுருக்கமாகச் சொல்லும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி** : தலைவர் அவர்களே,

'The continued collection of college fees from the P.U.C. students of the S.I.E.T. College against the direction of the Government of Tamil Nadu',

என்பது என்னுடைய ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான பொருள். பி.யு.சி. மாணவ மாணவிகளிடம் ஃபீஸ் வசூல் பண்ணக் கூடாது என்பது அரசாங்கத்தின் திட்டவட்டமான கொள்கையாகும். இந்த அடிப்படையில் எல்லாப் பகுதிகளிலும் இருக்கிற கல்லூரிகளில் பி.யு.சி. மாணவர்களுக்கு இலவசக் கல்வி தரப்படுகிறது. ஆயினும், சென்னையில் இருக்கிற ஒரே ஒரு கல்லூரியில் மட்டும் இலவசக் கல்வி தர முடியாத நிலைமை இந்த ஆண்டில் இருந்து கொண்டிருக்கிறது. எஸ்.ஐ.இ.டி. கல்லூரி பி.யு.சி. மாணவிகள் இரண்டு டெர்ம் ஃபீஸ் கட்டிவிட்டார்கள். மூன்றாவது டெர்ம் ஃபீசும் கட்டப்பட வேண்டும் என்கிற நிர்ப்பந்தம் இருந்து கொண்டிருக்கிறது. அரசு ஆரம்பத்திலேயே இத்தகைய ஒரு தகராறுக்கு இடம் இல்லாது செய்திருக்க வேண்டும். அரசாங்கத்தின் கொள்கையை கல்லூரி நிர்வாகிகள் துச்சமாக மதித்து ஃபீஸ் வசூல் செய்திருக்கிறார்கள். இப்போது தகராறு எழுந்திருக்கிறது. ஆகவே, இதுபற்றி உடனடியாக விவாதிப்பதற்காக நான் கொடுத்திருக்கிற ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி வழங்கவேண்டுமென்று கோருகிறேன்.

* **திரு. என். எஸ். வி. சித்தன்** : தலைவரவர்களே,

'The dispute between the S.I.E.T. College for women and the Government over the payment of fees by the students of the P.U. Course'.



என்கிற இதே கருத்தில் தான் நானும் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். திரு. இராமமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டதைப்போல் ஆரம்பத்திலேயே அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். கல்லூரி நிர்வாகிகளுடன் பேசி தக்கதொரு முடிவை எடுக்கத் தவறியதோடு கூட இப்போது மாணவிகளிடம், நீங்கள் ஃபீஸ் கட்டாதீர்கள் என்று நேரிடையாக சொல்வது கல்லூரியில் மாணவியரிடையே ஒழுங்கீனத்தை உண்டாக்காதா ? பணத்தைக் கட்டிவிடுங்கள், ரீபண்டு ஆகிவிடும் என்று சொல்வதற்குப் பதில், பணத்தைக் கட்டாதீர்கள் என்று நேரிடையாக மாணவியரிடையே தூண்டிவிடுவது வருந்தத்தக்கது, அபாயகரமானது. ஆகவே, இதுபற்றி விவாதிக்க அவையின் பிற நடவடிக்கைகளை ஒத்திவைக்க கோருகிறேன். எனக்கு அனுமதி தரவேண்டும்.

**திரு. வி. கே. கோதண்டராமன்** : தலைவர் அவர்களே, பி.யு.சி. இலவசக் கல்வித் திட்டத்தின் கீழ் அரசு அனுப்பிய உத்திரவை எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரி நிர்வாகம் மீறியதைப் பற்றியும், அதனால் மாணவர் மத்தியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலையைப் பற்றியும் விவாதிக்க வேண்டுமென்று நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரிக்கு மானியம் கொடுக்காத காரணத்தினால் தான் அவர்கள் ஃபீஸ் வசூலிக்க வேண்டிய நிலைமை வந்தது என்று அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் அரசிடம் அவர்கள் மானியம் கொடுக்க வேண்டுமென்று கேட்கவில்லை என்று அரசுத் தரப்பில் சொல்லப்படுகிறது. அதனால் அந்தக் கல்லூரியைக் கணக்கில் எடுக்கவில்லை என்கிறார்கள். அரசு கூறுவது உண்மையா, அவர்கள் கூறுவது உண்மையா, எது உண்மை, எது பொய் என்று தெரியவேண்டும். இதன்காரணமாகக் கிளர்ச்சி ஏற்படுகின்ற நேரத்தில் பலபேர் பழிவாங்கப்படுகிற நிலைமை வந்திருக்கிறது. ஆகவே அவசரமான, அத்தியாவசியமான இந்தப் பிரச்சினையை உடனே விவாதம் செய்தே தீரவேண்டுமென்ற அடிப்படையில் எனது ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் மூவரும் எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரியில் புகுமுக வகுப்பு மாணவிகளிடம் கட்டணம் வசூல் செய்வது பற்றியது சம்பந்தமாக ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். இது ஒத்திவைப்புத் தீர்மானத்திற்குரியது அல்ல என்றாலும் திரு. இராமமூர்த்தி அவர்கள் அரசாங்கம் எடுத்திருக்கிற நடவடிக்கைக்கு ஆதரவாகத் தெரிவித்தார்கள். திரு. சித்தன் அவர்கள் கல்லூரி நிர்வாகத்திற்கு ஆதரவான கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். உண்மையை விளக்குவது என் கடமையாகும். புகுமுக வகுப்பு மாணவ மாணவிகளுக்கு இலவசக் கல்வி அளிப்பது 1969-70-ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட திட்டமாகும். அதற்கு முன்னால்

வற்புறுத்தப்பட்டது. ஆனால் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. த. பி. சொக்கலால் அவர்கள் இந்த அரசாணையை எதிர்த்து நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்து ஸ்டே ஆர்டர் வாங்கினார். உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பில் 31—8—1968 முதல் அரசின் ஆணையை எப்படியாவது நிறைவேற்ற வேண்டுமென்று கூறியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல், பீடித் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் தங்களுடைய கோரிக்கை மனுக்களை அரசாங்கத்திற்கு அனுப்பினால், அவைகளைப் பரிசீலித்து உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** பேரவைத் தலைவர் அவர்களே, 1958-ம் ஆண்டு சட்டத்தை பத்து வருஷமாகியும் அமல் படுத்த முடியவில்லை. மத்திய சர்க்கார் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிற இந்த நேரத்தில் அச் சட்டத்தை அமல்படுத்த முடியாத நிலையில் முதலாளிகள் ஸ்டே ஆர்டர் வாங்கியிருக்கிறார்கள். ஆகவே, சர்க்கார் உடனடியாக அந்தத் தடையை உடைப்பதற்கான முயற்சியை ஏன் எடுக்கவில்லை?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் இருக்கும் நேரத்திலே இந்தச் சர்க்கார் அதை உடைக்க முடியாது. தடைகளை அகற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறோம். வழக்கின் முடிவை உயர்நீதி மன்றம்தான் முடிவுகட்ட வேண்டும்.

THIRU K. VINAYAKAM : Is it not a fact that this Beedi and Cigar Workers (Conditions of Employment) Act is more often respected in the breach than in the observance and the benefits accruing out of this Act do not go to the beedi workers as a result of which they very often stage strikes, etc., thus causing disturbance to the locality? Will the Government implement it through the officers and see that the benefits accrue to the actual workers who are suffering for want of these benefits?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, 1958-ல் இயற்றப்பட்ட சட்டம் இன்னும் சரிவர அமல்படுத்தப்படவில்லை. காரணம், தொழிலாளர்கள் நலனைப்பொறுத்த இச் சட்டத்தை எதிர்த்து முதலாளிகள் ரிட் மனுக்கள் தாக்கல் செய்திருக்கிறார்கள். இந்த நேரத்தில் இடைக்கால நிவாரணத்திற்கென கோரிக்கைகள் வரும்போது என்ன என்ன விதமான நடவடிக்கை எடுக்கவேண்டுமோ அப்படிச் செய்ய இந்த அரசு முடிவு எடுத்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்படவில்லை என்பதைக் குறிக்கும்.]





**திரு. ஆர். கருப்பையா :** தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். நமது சட்டமன்றம் அத்திபூத்தாற்போல 6 மாதத்திற்கு ஒரு முறைதான் கூடுகிறது. உறுப்பினர்கள் அதிகமான தகவல்களை முதலமைச்சர் அவர்களிடமிருந்து பெற விரும்புகிறார்கள். நேற்று முதல் அமைச்சர் அவர்கள் வரவில்லை. எனவே அவர்களுடைய வினாக்கள் சேர்க்கப்படவில்லை. இன்று, முதல் அமைச்சர் அவர்கள் வந்தும் முதல் அமைச்சர் அவர்களுடைய வினாக்கள் சேர்க்கப்படாததற்கு வேறு காரணம் ஏதாவது இருக்குமா என்று அறிய விரும்புகிறேன். மு.ப. 10-0

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது பாயின்ட் ஆப் ஆர்டரின் கீழ் வராது. முதல் அமைச்சர் அவர்கள் இன்று நேரம் கழித்தே வருவதாக இருந்தது. குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பாக அவர் வந்தது முறைதானா என்று கேட்பதுபோல இருக்கிறது! (சிரிப்பு).

2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

**(அ) நங்கவள்ளி அரிசனங்கள் நடைபாதையைப் பயன்படுத்தும் உரிமைகோரி உண்ணாவிரதம்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து திரு. எம். சுரேந்திரன் அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதாவது,

"நங்கவள்ளி அரிசனக் குடியிருப்பில் இருந்துவரும் சுமார் 1,000 அரிசனங்கள், தலைமுறை தலைமுறையாக நடந்துவரும் பாதையில் நடக்கக் கூடாது என்று தடுக்கப்பட்டனர்.

தைப் பொங்கலில் ஒரு தோட்டத்துக்கு மாடுகளைப் பிடித்துச் சென்ற ஐந்து அரிசன பேர்களை போலீசார் 16—1—1970-இல் கைது செய்தார்கள். இதைத் தொடர்ந்து குறிப்பிட்ட பாதையைப் பயன்படுத்தும் தங்களின் உரிமை கோரி நங்கவள்ளி நில உடைமையாளர் வீட்டிற்குமுன் ஐந்து அரிசனங்கள் 17—1—1970-இல் இருந்து உண்ணாவிரதம் துவங்கி இருக்கின்றனர்.

ஆகவே அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பிரச்சினையை விவாதிப்பதற்கு சபையை ஒத்திவைக்கவேண்டும்" என்பதாக அத் தீர்மானத்தில் கோரியிருக்கிறார்கள். உண்ணாவிரதம் இருப்பது ஒத்திவைப்புத் தீர்மானத்தின் கீழ் வராது. இது அரசினரின் அன்றாட அலுவலுக்கு உட்பட்ட காரணத்தினால் இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

**(ஆ) கோவையில் சட்டமன்ற மேலவை உறுப்பினர் திரு. எஸ். வி. இலட்சுமணன் உட்பட பல காங்கிரஸ்காரர்கள் கைது செய்யப்பட்டது குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்ததாக, திரு. சித்தன் அவர்களும், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் கோவையில் நடந்த ஒரு சம்பவம் பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதாவது

குறிப்பிட்ட அளவுக்குக் கீழ் வருமானமுள்ளவர்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பிற்பட்ட மக்களுக்கும் இலவசக் கல்வி அளிக்கப்பட்டு வந்திருக்கிறது. அந்தக் காலத்தில் ஒரு கல்லூரியில் அப்படி எவ்வளவு மாணவர்கள் இலவசக் கல்வி பெறுகிறார்களோ அவர்களுக்கு என்று அரசாங்கம் அந்தக் கல்லூரிகளுக்கு ஈட்டுத்தொகை வழங்கியது. அப்படி ஈட்டுத்தொகை எந்த அடிப்படையில் வழங்குவது என்பது முடிவு செய்யப்படுகிறபோது 1966-67-இல் ஒரு மாணவரிடமிருந்து என்ன கட்டணம் வசூலித்தார்களோ—அதாவது 65 அல்லது 70 என்று ஒவ்வொரு கல்லூரியிலும் என்ன தொகை வாங்கப்பட்டதோ அதைக் கொடுப்பது அல்லது 75, 80 என்று இருந்தால் அதிகபட்சம் 70 கொடுப்பது என்பது முடிவு செய்யப்பட்டது.

எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரியைப் பொறுத்தவரையில் 1966-67 தொகையை கணக்கில் எடுக்க கூடாது. 1967-68-ஐ எடுத்துக் கொள்ள வேண்டும் என்றார்கள். 1967-68-இல் 76 என்று இருந்தது. அரசாங்கத்தின் அனுமதியைப் பெறாமலே அவர்கள் 1966-67-இல் இருந்த கட்டணத்தை உயர்த்தி 76 என்று கொண்டு அந்த ஈட்டுத் தொகை தரவேண்டும் என்று தகராறு செய்தார்கள். 1969-70-இல் கட்டணத்தை 80 ஆக உயர்த்திவிட்டார்கள்.

நம்முடைய திட்டத்தை மொத்தமுள்ள 139 கல்லூரிகளில் 138 கல்லூரிகள் ஒழுங்காக ஏற்று அமுல்படுத்துகின்றன. மற்ற மற்ற கல்லூரிகளில் 70 ரூபாய் கட்டணம் இருந்தபோது அரசினர் கல்லூரியில் 48 ரூபாய் வைத்திருந்தோம். ஒரு மாணவனுக்கு 70 ரூபாய் என்ற அடிப்படையில் நட்டஈடு தருகிறோம் என்றால் அவர்கள் நீங்கள் தரவேண்டியதே இல்லை, நாங்கள் கட்டணம் விதித்தே நடத்திக் கொள்கிறோம் என்று கடிதம் எழுதிவந்தார்கள். கொள்கை அடிப்படையில் அதை அனுமதிப்பதற்கில்லை என்று வற்புறுத்தி வந்தோம். 80 ரூபாய் என்ற வீதத்தில் அரசாங்கம் கொடுக்கவேண்டும், இல்லை என்றால் நாங்களே மாணவியரிடை வசூல் செய்ய வேண்டியிருக்கும் என்று சொன்னார்கள். அப்படி வசூல் செய்யக் கூடாது என்று அரசாங்கம் சொல்லியது. ஏற்கனவே முதல் பருவத்திலேயும், இரண்டாவது பருவத்திலேயும் வசூல் செய்ததைத் திருப்பித்தரவேண்டும், அவர்களிடம் வசூல் செய்ததற்கான பட்டியலைத் தந்தால் அரசாங்கம் அதற்கான மானியம் கொடுக்கும் என்று மீண்டும் அரசாங்கம் எடுத்துக் கூறியது. ஆனால் அவர்கள் அப்படி வசூல் செய்வதையும் நிறுத்தவில்லை, அவர்கள் வசூல்செய்தது பற்றிய பட்டியலையும் தரவில்லை. கேட்டால் அரசியலமைப்புச் சட்டத்தின்படி நாங்களே வசூல் செய்து கல்லூரி நடத்துவதற்கு உரிமை இருக்கிறது என்று சொல்லுகிறார்கள், திருப்பித் திருப்பி அதையே சொல்லிவருகிறார்கள்.

எல்லாக் கல்லூரிகளும் ஒரு முறையைக் கையாளுகின்றபொழுது இந்த ஒரு கல்லூரிமட்டும் வேறு ஒரு முறையைக் கையாளுவது சரியல்ல, கையாளக்கூடாது என்று சொல்லப்பட்டது. அவர்கள்





அதற்கான பட்டியலைத் தந்தால் அந்தத் தொகையை அரசாங்கம் தரலாம். அந்தப் பட்டியல் எதற்காக என்றால் வேறு மாநிலங்களிலிருந்து, வேறு நாடுகளிலிருந்து, சிலோன், பர்மா, மலேயா போன்ற நாடுகளிலிருந்து வந்து படிக்கின்றவர்களுக்குக் கட்டணம் வசூலிக்கவேண்டும். எனவே அவர்களைத் தவிர்த்து மற்றவர்களுக்கு பணம் வசூலிக்கப்பட்டிருந்தால் அரசு அதைத் திருப்பித் தரலாம். அவர்கள் 80 ரூபாய் அளவில் தரவேண்டும் என்று கேட்கிறார்கள். அது முடியாது 70 ரூபாய் அளவிற்குத்தான் அரசாங்கம் தரமுடியும், அதுவும் மூன்று தவணைகளிலேதான் தர முடியும், அப்படித்தான் ஒவ்வொரு கல்லூரிக்கும் தரப்பட்டு வருகின்றது. பட்டியல் வந்தால்தான் அதை அரசாங்கம் கொடுக்கமுடியும். முதல் தவணைக்கான பட்டியலை அவர்கள் அனுப்பியிருந்தால் அதற்கான பணத்தை அரசாங்கம் கொடுத்திருக்கும். இரண்டாவது தவணைக்கான பட்டியலையும் அவர்கள் அனுப்பியிருந்தால் அதற்கான மானியத்தையும் அரசாங்கம் தந்திருக்கும்.

அவர்கள் வாங்கிய தொகையையும் இன்னும் திருப்பித்தரவில்லை. இந்த நிலைமையிலே அரசாங்கம் தலையிடலாமென்றால் எந்த அளவுக்குத் தலையிடலாமென்றால் கிராண்டை நிறுத்திவைக்கலாம். அவர்களுக்கு இன்னும் கிராண்ட் தரவில்லை. நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. பி.ஏ., பி.எஸ்ஸி-க்கு இன்னும் கிராண்ட் கொடுக்கப்படவில்லை. எண்பது ரூபாய் வீதம் மாணவியரிடமிருந்து வசூல்செய்ததை அவர்களுக்குத் திருப்பித் தந்துவிடவேண்டும். 1967-68-ஆம் ஆண்டிலே வசூல் செய்ததைப் போன்று 70 ரூபாய் வீதத்திலேதான் வசூல்செய்யவேண்டுமென்று சொல்லிவருகிறோம். ஆனால் அவர்கள் இந்த இருபதாம் தேதிக்குள் 80 ரூபாய் கட்ட வேண்டுமென்று சொன்னார்கள். அப்படிக் கட்டாவிட்டால் பெயர் எடுக்கப்பட்டுவிடும் என்று சொன்னார்கள். மாணவியர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், என்னையும், கல்வித்துறை செயலாளரையும் வந்து சந்தித்தார்கள். கட்டவேண்டுமா வேண்டாமா என்று அவர்கள் கேட்டார்கள், கட்டவேண்டியதில்லை என்று நாங்கள் சொன்னோம். பயந்தவர்கள் சிலர் அதற்குள் கட்டியிருக்கிறார்கள், இன்னும் கட்டாதவர்களும் இருக்கிறார்கள். மாணவியர் தேர்வு எழுதுவதற்குரிய வாய்ப்புக் கொடுக்காவிட்டால் என்ன செய்வது என்றால் அரசாங்கம் இதிலே அதற்கான முயற்சிகளை செய்துவருகின்றது. இந்தத் தகவல் பல்கலைக் கழகத் துணைவேந்தருக்கும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதிலே உரிய நடவடிக்கை எடுக்கவேண்டியது பல்கலைக் கழகத் துணைவேந்தர்தான். அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலும் கிராண்ட்டை நிறுத்திவைக்கலாம். தேர்வு எழுதுவதில் பாதிக்கப்படாத அளவிற்கு பார்த்துக்கொள்ள வேண்டுமென்று பல்கலைக் கழகத்திற்கு அரசாங்கம் சொல்லியிருக்கிறது.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1970 ஜனவரி 22

இந்த ஒரு கல்லூரி மட்டும் இந்த நிலைமைக்குப் போகின்ற நிலைமை இருப்பதால் இதைப்பற்றி நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். இப்பொழுது எனக்கு வந்திருக்கிற தகவலின்படி நேற்றுத்தான் ஒரு லிஸ்டை அவர்கள் அனுப்பியிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அதற்கும் 70 ரூபாய் வீதத்தில்தான் அரசாங்கம் தரமுடியும். மாணவியர்களுக்கு அந்தத் தொகையைக் கொடுக்காமல் இருந்தால் மேலும் என்ன நடவடிக்கைகள் எடுக்கமுடியும் என்பதை பல்கலைக் கழகமும் அரசாங்கமும் முடிவுசெய்யும். அவர்கள் அதிகமாகச் செலவாகிறது என்றும் கணக்குக் காட்டுகிறார்கள். எழுபது ரூபாய் ஒரு மாணவனுக்கு என்ற அளவுக்குத்தான் பொதுவாக நாம் ஈட்டுத் தொகை தந்துவருகிறோம். மொத்தச் செலவிலே ஒவ்வொரு வருக்கும் 30 ரூபாய் என்று கணக்கு வைத்துக்கொண்டால் 40 ரூபாய் மிச்சம் வருகிறது. பல்வேறு பணிகளைச் சிறப்பாகச் செய்வதற்காக அந்தத் தொகையை அவர்கள் பயன்படுத்தி வருகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. மொத்தச் செலவிலே மூன்றில் இரண்டு பங்கை அரசாங்கம் கொடுக்கிறது. ஒவ்வொருவருக்கும் 40 ரூபாய் என்ற அளவிலே மிச்சப்படுகிறது. எனவே 30 ஆயிரம் ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது என்ற அவர்கள் கணக்கும் தவறானதுதான். எல்லாக் கல்லூரிகளும் நல்ல முறையிலே இந்த வகையில் நடந்துவரும்பொழுது இந்தக் கல்லூரி ஒன்று மட்டும் அதைமீறி வேறு ஒரு வகையில் நடப்பது சரியல்ல. இதிலே அரசாங்கமும், பல்கலைக் கழகமும் வேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதால் இந்த விஷயம் ஒற்றிவைப்புப் பிரேரணையின்கீழ் வராது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU K. VINAYAKAM : Sir, on a point of further elucidation. If the College continues to adopt a very intransigent attitude as it is doing to-day, I want to know whether the Government would come forward boldly to recommend to the Vice-Chancellor to cancel the affiliation of that College?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நான் முதலிலேயே ஏடுத்துச் சொல்லியபடி மாணவர்களுக்கு எந்தவிதமான பாதகமும் ஏற்படாதபடி அரசும் பல்கலைக் கழகமும் வேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பதைப் பல்கலைக் கழகம் தான் முடிவெடுக்கவேண்டும். எனவே இதிலே அரசாங்கமும் பல்கலைக் கழகமும் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துவருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது அரசினரின் அன்றாட நிர்வாகத்திற்கு உட்பட்ட ஒரு நிகழ்ச்சியாக இருப்பதாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்குப்



1970 ஜனவரி 22] [மாண்புமிகு பேரவைத் தலைவர்]

பிறகும், இந்த நிகழ்ச்சி ஒற்றிவைப்புத் தீர்மானத்தின் கீழ் வராது, அப்படிப்பட்ட விவாதத்திற்குரியதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**(ஈ) தாளவாடி பிர்க்காவை மைசூர் மாநிலத்தோடு இணைக்க வேண்டுமென்று மைசூர் மாநில சட்டமன்ற உறுப்பினரும் வேறுசிலரும் துவங்க இருக்கும் போராட்டம் குறித்து.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்தபடியாக, எதிர்க் கட்சித் தலைவர் திரு. பி. ஜி. கருத்திருமன் அவர்கள் கீழ்க்கண்ட ஒற்றி வைப்புத் தீர்மானமொன்றைக் கொடுத்திருக்கிறார்கள் :

'That the business of the House do stand adjourned to discuss an urgent matter of public importance, namely, the proposal to launch an agitation for the merger of Talavadi Firka with the Mysore State by a member of the Legislative Assembly of the Mysore State and others.'

என்று கொடுத்திருக்கிறார்கள். அவர்களைச் சுருக்கமாக விளக்கம் கூறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : இந்த ஒற்றிவைப்புத் தீர்மானம் கொண்டுவந்ததன் நோக்கம் பல காலமாக தாளவாடி பிர்க்கா நம்முடைய பகுதியைச் சேர்ந்ததாக இருக்கிறது. அங்கே கன்னடம் பேசுகிறவர்கள்தான் இருக்கிறார்கள். அது என்னுடைய தொகுதியைச் சேர்ந்த பகுதியாகும். முன்னாலே அவர்கள் மைசூருக்குப் போகிறேன் என்று சொன்னார்கள், அவர்கள் சொன்னதற்குக் காரணம் என்ன என்று கேட்ட சமயத்திலே போக்குவரத்து சரியாக இல்லை, மைசூருக்கும் தமிழ்நாட்டிற்கும் பஸ் போக்குவரத்து சரியாக இல்லை, நடுக்காட்டிலே நிற்கவேண்டியிருக்கிறது என்று சொன்னார்கள். இதைத்தவிர கோர்ட் முதலியவற்றிற்குப் போகவேண்டுமென்று சொன்னால் 60 மைல்களுக்கு அப்பால் சென்று கோபிசெட்டிபாளையத்திற்கு வரவேண்டியிருக்கிறது, கொள்விலை, கொடுப்பிலை எல்லாம் மைசூரிலேதான் இருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் அதற்குப் பிறகு கடந்த 10, 15 வருட காலமாக அங்கே நல்ல அபிவிருத்திகள் நடந்துவருகின்றன. இப்பொழுது மைசூருக்கும், தாளவாடிக்கும் நேரடி பஸ் போக்குவரத்து இருந்துகொண்டிருக்கிறது. மக்கள் மனம் மாறிக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்திலே வெளி மாநிலத்திலே இருக்கிறவர்கள் மக்களைத் தூண்டிவிட்டு கொடியைக் கட்டுவோம் அதைக் கட்டுவோம் இதைக் கட்டுவோம் என்று சொல்லி பஞ்சாயத்துத் தலைவர்களிடத்திலே கையெழுத்துப் போடவேண்டுமென்றெல்லாம் சொல்லிவருகிறார்கள். நான் இந்த நேரத்திலே ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். தமிழ் நாட்டிலிருந்து பிரிந்துபோன பகுதி கொள்ளேகால் பகுதியும்தான். அங்கே 40 ஆயிரம் மக்கள் இருக்கிறார்கள். அங்கேயுள்ளவர்கள் அங்கே எதுவும் செய்யவில்லை என்று சொல்லிவருகிறார்கள். அதையும்

தருகிறோம் என்று அவர்கள் சொன்னால் இதையும் பரிசீலனை செய்யுங்கள் என்று அவர்கள் சொல்லலாம். நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான் இதிலே வேண்டியவற்றைச் செய்ய வேண்டும். அதேபோன்று கேரளாவிலே தேவிகுளம், பீர்மேடு பகுதிகள் போய் இருக்கின்றன, 100-க்கு 90 பேர்கள் தமிழ்நாட்டைச் சார்ந்த மக்கள்தான். முதலமைச்சர் அவர்கள், எதிர்க்கட்சியில் இருந்த நேரத்திலே அதை இங்கே சேர்க்கவேண்டுமென்று பூரணமாகப் போராடி இருக்கிறார்கள். தாளவாடி பிரச்சினையை மறுபடியும் எடுத்துக் கொண்டால் தேவிகுளம்-பீர்மேடு நம்முடன் சேர வேண்டுமென்பது பற்றியும் மறுபடியும் எடுத்துக் கொள்ளத்தான் வேண்டும். இதிலே, தமிழ்நாட்டு சர்க்காரும் மைசூர் சர்க்காரும் சேர்ந்து சமாதானமாக பிரச்சினையைத் தீர்க்க முற்பட்டால் நான் குறுக்கே நிற்கமாட்டேன். அந்தப் பகுதியில் உள்ள 35,000 மக்களில் ஐயாயிரம் இருந்தவர்கள், நாலாயிரம் முஸ்லிம்கள், அரிசனங்கள் என்று தமிழ் பேசுபவர்கள் இருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே 80 சதுர மைல்தான் ரெவின்யூ ஏரியா, மற்ற 120 சதுர மைல் காடு. சேல்ஸ் டாக்ஸ் செக் போஸ்டை பண்ணாரியில் போட்டிருக்கிறார்கள். இன்னொரு செக் போஸ்டை திம்பத்தில் போட்டிருக்கிறார்கள். செக் போஸ்ட் போடும்போது எது எல்லையோ அங்கே கொண்டு போய்ப் போட வேண்டும். அப்போதுதான் அது மக்களுக்கு நன்மையாக இருக்கும். தாளவாடி பகுதி மக்களுக்கு போக்குவரத்து வசதிகளையும் மற்ற வசதிகளையும் செய்து கொண்டு வருகிறோம். இதிலே நமது முதலமைச்சர் அவர்களும் மைசூர் முதலமைச்சர் அவர்களும் சேர்ந்து சமாதானமாகப் பேசி முடிவு எடுப்பார்களானால் அதற்கு நான் தயாராக இருக்கிறேன். போர்க்கோல நிலைமை இல்லை. இதை அரசியல் பிரச்சினையாகக் கருதக் கூடாது. மக்களுக்குச் சவுகரியங்கள் செய்து தர வேண்டும். அந்தப் பகுதியில் இருக்கும்படியான சட்டமன்ற உறுப்பினர் ரத கஜ துரக பதாதிகளுடன் வந்து இங்கு யூனியன் ஆபீசில் கொடியைக் கட்டுகிறேன் என்று சொல்லுகிறார்கள். இதற்கு யார் உற்சாகத்தைத் தந்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. மைசூர் சர்க்கார் இப்படி அவர்களுக்கு ஊக்கமளிப்பதாக இருந்தால் நம்முடைய சர்க்கார் எங்களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும். நாங்கள் கொள்ளேகாலில் போய்க் கொடி கட்டுகிறோம். இந்தப் பிரச்சினையிலே ஒரு நல்ல முடிவு காண சபையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து இதை விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ம. பொ. சிவஞானம்:** தலைவர் அவர்களே, நான் ஒரு ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்ப விரும்புகிறேன்.

**Thiru K. Vinayakam:** On a point of order, Sir, I think nobody has got a right to speak after the mover of the adjournment motion.



**திரு. ம. பொ. சிவஞானம்:** நான் ஒரு ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்புகிறேன். விவாதத்தை நடத்த விரும்பவில்லை. ராஜ்ய புனரமைப்புக் கமிஷன் முடிவுக்குப் பிறகு எல்லைப் பிரச்சினை தீர்ந்து போன ஒன்று என்று மத்திய அரசு முடிவு கூறிவிட்ட பிறகு இப்போது அது விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள முடியாத ஒன்றாக ஆகிவிட்டது. முடிந்துவிட்ட ஒன்றை இப்போது மறுபடியும் கிளப்புவது, மறைமுகமாகக் கூடக் கிளப்புவது சரியாக இருக்காது. 'மீண்டும் முதல்வர்கள் சந்தித்து அவர்கள் உட்பட்டால். . . .' என்ற முறையில் மறைமுகமாகப் பேசுவது கூட அந்தக் கிளர்ச்சிக்கு ஆதரவு அளிக்கத்தக்க நிலை என்ற காரணத்தால் இந்த விவாதத்திற்கு அனுமதி அளிக்கக் கூடாது என்ற ஒழுங்குப் பிரச்சினையை எழுப்புகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** இவர்தான் வீரர், நாங்கள் எல்லாம் கோழைகளா? சமாதானமாகத் தீர்க்க வேண்டுமென்று சொன்னேன். இவர் நடத்தியதுதான் போராட்டம்; நாங்கள் எல்லாம் கோழைகளா? முதலமைச்சர் அவர்களுக்குச் சிரமம் இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் சொன்னேன். நானே ஒரு கன்னடத்துக்கார தமிழன். இவர்கள் சுய ஆட்சி வேண்டுமென்று சொல்லி அதற்காகப் போராடவில்லையா? இந்தப் பேச்சுக்குச் சபாநாயகர் அவர்கள் தீர்ப்புக் கொடுக்கவேண்டும். இப்படி அவர்கள் பேசலாமா?

* **மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்ற தீர்மானத்தின் மீது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், ஒத்திவைத்து விவாதிக்கும்போது எவ்வளவு நேரம் எடுத்துக் கொள்ளலாமோ அவ்வளவு நேரம் எடுத்துக்கொண்டு நிறைய விளக்கங்களைத் தாளவாடி தகராறு சம்பந்தமாக இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். தாளவாடி தகராறு என்று குறிப்பிட்டதிலே உள்ளபடியே தகராறுக்கு உரிய பிரச்சினை இல்லை என்பதை நான் இங்கே தெளிவாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தாளவாடியில் வசதிகள் வாய்ப்புகள், அங்கிருக்கின்ற மக்களுக்கு நல்வாழ்க்கை முறை இவைகள் இல்லையென்ற முறையீடு கடந்த 20 ஆண்டு காலமாக எடுத்துச் சொல்லப்பட்டு வந்து அதன் காரணமாக எரிச்சல் கொண்ட சிலர் தாங்கள் மைசூர் மாநிலத்தோடு சேரவேண்டுமென்ற சிறு ஒலியை சில பகுதிகளில் இருந்து எழுப்பி அதற்குப் பிறகு இன்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒப்புக் கொண்டது போல் இந்த அரசு போக்குவரத்து வசதிகளையும் வேறுபல வசதிகளையும் தாளவாடி பகுதி மக்களுக்குச் செய்து கொடுத்து அந்தக் குறைபாடும் இப்போது அங்கே அடங்கிவிட்டிருக்கிறது.

உள்ளூரில் இருந்து அப்படிப்பட்ட முயற்சிக்கான அடிப்படை இல்லையென்றாலும் ஆத்திரம் கொண்ட மைசூர் மாநிலத்தில் உள்ள ஒருசிலர் எதையாவது, எப்போதும் செய்து கொண்டிருக்க வேண்டு

மென்ற எண்ணத்தில் உழன்று கொண்டிருக்கும் சில அரசியல்வாதிகள், தாளவாடிக்குள் படை எடுக்கப் போவதாகவும், கொடியைக் கொண்டு வந்து ஊராட்சி ஒன்றியத்தின் மீது நாட்டப் போவதாகவும் சொல்லிக் கொண்டார்கள். ஏதோ தமிழ்நாட்டில் அரசாங்கமே இல்லாதது போலவும், யார் வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் திறந்த வீட்டில் நுழைவது போல் நுழைந்து விடலாம் என்றும் யாராவது எண்ணிக் கொண்டிருப்பார்களானால், இந்த அரசு கை கட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டிராது என்பதை மாத்திரம் நிச்சயமாகக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் நேற்றையதினம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றைப் பார்த்தேன். அதில் திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறார்கள். தாளவாடிப் பிரச்சினை கிளப்பப்படுவதாக இருந்தால் எல்லாப் பிரச்சினைகளையும் மறுபடியும் கிளப்பித் தீரவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். 'நான் முன்பெல்லாம் சொன்னேன்—மைசூரும் தமிழ்நாடும் ஒத்துக் கொண்டு மத்திய அரசும் ஏற்றுக் கொள்ளுமானால் தாளவாடி மைசூருக்குப் போவதைப்பற்றி ஆட்சேபணை இல்லை என்று சொன்னேன். இப்போது, அந்தப் பிரச்சினையைக் கிளப்புவதாக இருந்தால் எல்லா எல்லைப் பிரச்சினையையும் கிளப்பியாகவேண்டுமென்று சொல்லியிருந்தார். இன்று பேசுகிற நேரத்தில் அந்த முடிவை விட்டு விட்டு மறுபடியும் இரண்டு சர்க்காரும், மத்திய சர்க்காரும் ஏற்றுக் கொள்ளுமானால் எனக்கு ஆட்சேபணை இல்லை என்று கூறியிருக்கிறார். இரண்டு சர்க்கார் ஒத்துக் கொண்ட பிறகு அதற்குக் குறுக்கே நிற்கக் கூடாது என்ற பரந்த மனப்பான்மையை அது காட்டுவதாகக் கருத முடியாது. அப்படி அதை ஒத்துக் கொள்வதாக இருந்தால் தமிழ் நாட்டு சர்க்காரும் கேரள சர்க்காரும் பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தில் ஒரு முடிவை ஏற்றுக் கொண்ட பிறகு அவர் சும்மா இருந்துவிடவில்லை. "அதை எப்படி ஒத்துக் கொண்டீர்கள்? இது தவறு" என்றெல்லாம் சொன்னார். தாளவாடி மைசூருக்குப் போகவேண்டுமென்று சொல்வதை எதிர்க்கின்ற துணிவோடு கன்னடத்தைச் சேர்ந்த தமிழர் கருத்திருமன் இருக்க வேண்டுமென்று நான் அவரைக் கேட்டுக் கொள்கிறேன். அப்படிப்பட்ட உறுதியை அவர் நமக்குத் தந்தாக வேண்டும். தாளவாடிக்குள் அவர்கள் வருவதாக இருந்தால் கொள்ளேகாலத்திற்குள் கொடிபிடித்துக் கொண்டு போக எங்களுக்கு அனுமதி கொடுங்கள் என்று கேட்கிறார்கள். கொள்ளேகாலத்திற்குள் போவதற்கு அனுமதி கொடுக்கவும் தேவையில்லை; தாளவாடிக்குள் வருபவர்களை பார்த்துக் கொண்டிருக்கவும் தேவையில்லை. மைசூர் முதல்வர் கூட இதைப்பற்றி பேசுகிறேன் என்று சட்டமன்றத்தில் சொல்லியிருப்பதாகப் பத்திரிகையில் பார்த்தேன்.





பத்திரிகைச் செய்தியை மட்டும் முழுமையாக வைத்துக் மு.ப.
கொண்டு பதில் சொல்லவில்லை. பேசுவதாக இருந்தால் எல்லாப் 10 30
பிரச்சினைகளையும் பேசியாக வேண்டும். தேவிகுளம்-பீர்மேடு பற்றி எதிர்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தேவிகுளம்-பீர்மேடு போராட்டத்தில் ஈடுபட்ட நேரத்தில், குளமாவது மேடாவது என்று பேசிக்கொண்டிருந்த தலைமையின்கீழ் இருந்த நமது எதிர்கட்சித் தலைவர் அவர்கள் இப்போதாவது தேவிகுளம்-பீர்மேடு தமிழர்களுக்குத் தான் சொந்தம் என்பதை ஒத்துக் கொண்டிருக்கிறார்களே. இருந்தாலும் அது முடிந்து விட்ட பிரச்சினை. அதைக் கிளப்புவதில் பயன் இல்லை. முடிந்துவிட்ட பிறகாவது அவை நமக்குத்தான் சொந்தம் என்பதை ஒத்துக் கொண்டதற்காக அவர்களுக்கு நான் நன்றி கூறிக்கொண்டு இது ஒத்திவைப்புக்கு ஏற்ற காரணம் அல்ல என்று கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முதல் அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இப்பொருள் குறித்து விவாதிக்க சபையின் பிற அலுவல்களை ஒற்றிவைப்பதற்குத் தேவை இல்லை என்ற காரணத்தால் இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

அடுத்து, தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கை அளிப்பார்கள்.

## (3) நடைமுறைக் கேள்வி

## தவறாக அளிக்கப்பட்ட விடையைத் திருத்த அறிக்கை அளிப்பதில் தாமதம்.

**திரு. க. இராமமூர்த்தி :** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். பழைய பதில்களுக்குத் தருகிற விளக்கங்களைப் பொறுத்தவரையில் 26—2—1969 அன்று தரப்பட்ட பதிலுக்கு இன்றையதினம் ஒரு திருத்தத்தைத் தர இருக்கிறார்கள். அதற்குப் பிறகு இரண்டு மூன்று தடவை இச்சட்ட மன்றம் கூடியிருக்கிறது. ஒருமுறை அமைச்சர் அவர்கள் பதில் தந்தால் அது முடிவான பதில், அது உண்மை என்பதை ஏற்றுக்கொள்ள நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். அது தவறாக இருந்தாலும் அதைத் தவறு என்று இந்த நேரத்தில் நாம் சொல்லமுடியாது. அப்படி விதிகள் இருப்பதாக தாங்கள் கூட தீர்ப்பு தந்திருக்கிறீர்கள். ஒரு வருடத்திற்குப் பிறகு இப்படி திருத்தங்கள் வந்தால் பழைய பதில்கள் என்னவாவது? கேள்விகளுக்குப் பதில் அளிக்கும்போது அவற்றை வைத்து துணைக் கேள்விகள் கேட்கிறோம். அவையும் தவறான முறையில் இயங்கும் நிலைதான் இருக்கிறது. ஆகவே, பதில்கள் இலாகாவிலிருந்து வருகிற குறிப்புகளை வைத்து தரப்படுவதால் உடனடியாக அந்த இலாகா அதுபற்றிய திருத்தம் இருந்தால்

அதைத் தர கடமைப்பட்டிருக்கிறது. ஒரு வருடம் கழிந்த பிறகு, அதற்குப் பின்னர் இரண்டு மூன்று முறை சட்டமன்றம் கூடிய பிறகு இத்திருத்தம் தரப்படும் நிலை இருக்கிறது. ஆகவே தலைவர் அவர்கள் எங்கள் உரிமைகளைப் பாதுகாக்கும் விதத்தில் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் இனியாவது நடைபெறாமல் தடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது ஒரு ஒழுங்குப் பிரச்சினை அல்ல. அதை உடனடியாகக் கொடுத்திருக்க வேண்டுமென்று சொல்கிறீர்களே தவிர இது ஒரு ஒழுங்குப் பிரச்சினை அல்ல.

### (4) அமைச்சர் அறிக்கை.

### 26—2—1969 அன்று வினா எண் 89-ன் மேல் கேட்கப்பட்ட துணை வினாவிற்கு அளித்த விடையைச் சரிசெய்தல்.

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு பிரச்சினையைக் கிளப்பினார்கள். அப்படித் திருத்திக் கொள்வதில் பெரிய தவறு ஒன்றுமில்லை. ஒரு சிறிய விளக்கம் மாறுபட்டிருக்கிறது. அதற்கான திருத்தத்தைத் தருகிறேன். மேலும் தவறு ஏற்படக்கூடாது என்பதற்காக சரியான விவரத்தைப் பெற்றுத் தரவேண்டியிருக்கிறது. மீண்டும் தவறு நிகழக்கூடாது என்பதினால்தான்.

தலைவர் அவர்களே, பொள்ளாச்சியில் தொழிலாளர் அரசு காப்புறுதி மருத்துவமனை ஒன்றைக் கட்டுவது குறித்து கேட்கப்பட்ட 1990-ம் எண் (89) வினாவிற்கு 26—2—1969 அன்று விடையளிக்கப்பட்டது. அப்போது திரு. அ. ப. சண்முகசுந்தரம் கேட்ட துணை வினாவிற்கு முன்னாள் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் அளித்த விடையில் கீழ்க்காணும் திருத்தத்தைச் செய்ய நான் விரும்புகிறேன்.

பெண் தொழிலாளிகளுக்காக மகப்பேறு பிரிவு ஒன்றையாவது அரசு கட்டுமா என்ற துணை வினாவிற்கு விடையளிக்கையில் பொள்ளாச்சியில் 16 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் அரசு காப்புறுதி மருத்துவமனை ஒன்றைக் கட்ட ரூ. 1,10,000 செலவிட அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது என்றும், கட்டட வேலை விரைவில் தொடங்கிவிடும் என்றும் நினைவில் இருந்த புள்ளிவிவரங்களைக் கொண்டு விடையளிக்கப்பட்டது. பொள்ளாச்சியில் உள்ள அரசு மருத்துவமனையில் தான் 16 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் அரசு காப்புறுதி மருத்துவப் பகுதி ஒன்றைக் கட்டுவதற்கான செயற்குறிப்பு உள்ளது என்றும் பொள்ளாச்சியில் தொழிலாளர் அரசு காப்புறுதி மருத்துவமனை ஒன்றைத் தனியாகக் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதும் இல்லை என்றும் புள்ளிவிவரங்களைச் சரிபார்த்ததிலிருந்து இப்பொழுது தெரிய வருகிறது.



### (5) அரசினர் தீர்மானம்.

### பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்.

**THE HON. THIRU V. R. NEDUNCHEZHIAN :** Mr. Speaker, Sir, under Rule 21 (3) of the Tamil Nadu Legislative Assembly Rules, I move :

"That item III in the list of business of to-day be postponed ".

**DR. H. V. HANDE :** On a point of Order, Sir. There is a motion moved by the Hon. Minister and it is before the House now. I would like to submit a few remarks on the same. I do not approve of the withdrawal of item III for the following reasons. I brought this to the attention of Government.

**THE HON. THIRU V. R. NEDUNCHEZHIAN :** It is not withdrawal and it is only postponement.

அமைச்சர் அவர்கள் வராததால் ஒத்திவைக்கப்படுகிறது. இரண்டு மூன்று நாட்களுக்குள் எடுத்துக் கொள்ளப்படும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

* * *

### (6) ஆளுநர் அவர்களின் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி.

*** திரு. மு. ச. சிவசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக ஆளுநர் அவர்களுடைய உரையின் மீது மாண்புமிகு உறுப்பினர் திரு. அரங்கநாதன் அவர்கள் கொண்டு வந்துள்ள பாராட்டுத் தீர்மானத்தின் மீது ஒரு சில கருத்துக்களைக் கூறுவதற்கு விரும்புகிறேன். ஆளுநர் அவர்களுடைய உரையில் தமிழக அரசினுடைய சாதனைகளைப்பற்றி விரிவாக எடுத்துக் கூறியிருந்தாலும்கூட, குறிப்பிடத்தக்கவை நகராட்சிப் பணியாளர்களுக்கு ஓய்வு ஊதியத்தை அமுலுக்குக் கொண்டு வந்தது ஒன்று. உணவு தானியக் கட்டுப்பாட்டை நீக்கியது ஒன்று. கடந்த ஆண்டிலிருந்து வரட்சி நிவாரண வேலைத் திட்டங்களையெல்லாம் நடத்தியது ஒன்று. குறிப்பாக கழக ஆட்சியில் தொழில் வளம் பெருகவில்லை, புதிய தொழிற்சாலைகள் அமையவில்லை என்று அவர்கள் கூறிவந்ததற்கு மாறாக பல புதிய பெரும் தொழிற்சாலைகளை நம்முடைய தமிழகத்தில் கொண்டு வந்தது ஒன்று. ஆக, நான்கு பெரிய காரியங்களைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் நான் கூற விரும்புகிறேன்.

---

* பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[திரு. மு. ச. சிவசாமி] [1970 ஜனவரி 22

குறிப்பாக காங்கிரஸ்காரர்கள் இந்த நாட்டை ஆண்டு வந்த காலத்தில் கொண்டுவந்த பங்கீட்டு முறையைக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற இரண்டு ஆண்டுக்குள் நீக்கியது என்றால்,

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு".

என்பது வள்ளுவர் வகுத்துத் தந்த முறை. எந்த நாட்டில் பசி இல்லையோ, எந்த நாட்டில் நோய் இல்லையோ, எந்த நாட்டில் பகை இல்லையோ, அது தான் ஒரு நாட்டிற்குரிய இலக்கணம் ஆகும் என்பது தான் குறளின் கருத்து. அந்த முறையில் இந்த நாட்டில் இன்றையதினம் அரசு உணவுப் பங்கீட்டு முறையை எடுத்திருக்கிறது என்றால், இங்கே பசி இல்லை என்று ஆகிறது. இந்திய உபகண்டத்தில் இருக்கிற 14 மாநிலங்களிலும், தமிழக அரசைத் தவிர, பிற மாநிலங்களை எடுத்துக்கொண்டால், அங்கெல்லாம் உட்பூசல்களும், குழப்பமும் இருக்கிற நிலைமையைப் பார்க்கிறோம். இந்த நிலையில் நான் இங்கே உணவு அமைச்சர் அவர்களுக்கு ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இப்பொழுது உணவு தானியக் கட்டுப்பாட்டை எடுத்து விட்டோம். வருகிற ஜூலை-ஆகஸ்டு திங்கள்கள் கோடையாக இருக்கிற காலத்தில் வியாபாரிகள் உபரியாகக் கொள்முதல் செய்து விலையைக் கூட்டுவதற்கு முயற்சிப்பார்கள். நாம் உணவு தானியக் கட்டுப்பாட்டை நீக்கியிருப்பதை வெற்றிகரமாகத் தொடர்ந்து அமுல் நடத்தவேண்டுமானால், நெல்லை எல்லோரும் கொள்முதல் செய்யலாம், எவ்வளவு வேண்டுமானாலும் கொள்முதல் செய்யலாம் என்ற நிலையிலிருந்து சற்றுக் கட்டுப்படுத்தினால் தான், விலைவாசி உயர்வைத் தடுக்க முடியும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இத்தனை மூட்டைகளுக்கு மேல் யாரும் கொள்முதல் செய்யக்கூடாது என்ற ஒரு கட்டுப்பாட்டை ஏற்படுத்தினால் கூட வியாபாரிகள் என்ன செய்வார்கள் என்றால், தங்களுடைய குமாஸ்தா, பிள்ளைகள், மைத்துனர்கள் இப்படி பலபேர் பேரில் ஃபுட் கிரைன்ஸ் லைசென்ஸ் வாங்கி பல ரூபங்களில் கொள்முதல் செய்வார்கள். அதைத் தடுத்து நிறுத்தவேண்டும். தமிழ்நாடு பொது விற்பனை வரி சட்டத்தின் கீழ் ரிஜிஸ்டர் செய்துகொண்டு ஆர்.ஸி. நெம்பர் வைத்திருப்பவர்கள், இன்கம் டாக்ஸ் அசெஸிஸ் ஆகியோர்களுக்குத்தான் ஃபுட் கிரைன்ஸ் லைசென்ஸ் கொடுக்கப்படவேண்டும் என்ற விதிமுறையை ஏற்படுத்தி விட்டால், பல ரூபங்களில் வியாபாரிகள் கொள்முதல் செய்வதைத் தடுத்து நிறுத்த முடியும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். மெட்ராஸ் ஜெனரல் சேல்ஸ் டாக்ஸ் ரிஜிஸ்டர் நெம்பரை, இன்கம் டாக்ஸ் அசெஸி நம்பரைக் காட்டினால் தான் ஃபுட் கிரைன்ஸ் லைசென்ஸ் கொடுக்கப்படும், அப்படி ஃபுட் கிரைன்ஸ் வைத்திருப்பவர்கள் இவ்வளவு மூட்டைகளுக்கு மேல் ஸ்டாக் வைத்திருக்கக் கூடாது என்ற இந்த இரு விதிகளைக்



1970 சனவரி 22] [திரு. மு. ச. சிவசாமி]

கொண்டுவந்தால், வியாபாரிகள் அதிகமாகக் கொள்முதல் செய்து பதுக்கவோ அல்லது விலையைக் கூட்டவோ முடியாது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நம்முடைய தமிழகத்தில் உள்ளாட்சித் துறை ஏற்பட்டு 105 ஆண்டுகள் ஆகின்றன. 105 ஆண்டுகளாக வெள்ளையர் அரசாங்கத்திலும் சரி, இடையே காங்கிரஸ்காரர்கள் 20 ஆண்டு காலம் ஆட்சிபுரிந்த காலத்திலும் சரி, வெள்ளைக் காரர்களும், காங்கிரஸ்காரர்களும் சாதிக்க முடியாத ஒரு பெரிய சாதனையை இன்றைய தமிழக அரசு சாதித்திருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நகராட்சி மன்றங்கள் தோன்றி 105 ஆண்டுகள் கடந்து, 105 ஆண்டுகளாக நகராட்சி மன்றங்களில் பணியாற்றும் அலுவலர்கள் தங்களையும் அரசாங்க அலுவலர்களாக பாவிக்கவேண்டும், தங்களுக்கு ஓய்வு ஊதியம் வேண்டும் என்று அவர்கள் 105 ஆண்டுகாலமாக கோரிக்கை விட்டு, போராடியும் கூட அவர்களுக்குக் கிடைக்காத ஒரு பெரிய பேறு, தமிழக அரசினால் இந்தத் திங்கள் 14-ம் தேதி கிடைத்திருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். 105 ஆண்டுகளாகக் கேட்ட கோரிக்கையை வைத்து, இன்றைக்கு ஒரு பெரிய பேற்றை நகராட்சி மன்ற ஊழியர்கள் பெற்றிருக்கிறார்கள், அதாவது ஓய்வு ஊதியத்தைப் பெற்றிருக்கிறார்கள் என்றால், அது தமிழக அரசு செய்த மிகப் பெரிய ஒரு சாதனை என்றால், அது மிகையாகாது.

அதே போலத்தான் 1951-ம் ஆண்டில், 1939-ம் ஆண்டில் எப்படி வறட்சி நிலை ஏற்பட்டதோ, அப்படி ஏற்பட்டது. 1951-ம் ஆண்டில் குடிதண்ணீர் கொடுப்பதற்கே அன்றைய அரசாங்கத்தினால் முடியவில்லை. அன்றைய அரசாங்கம் மக்கள் மத்தியிலே பேசினார்கள்: 'பருத்திக்கொட்டைப் பாலைச் சாப்பிடுங்கள், புண்ணாக்கைச் சாப்பிடுங்கள், எலியைச் சாப்பிடுங்கள்' என்று பேசினார்கள். ஆனால், 1969-ல் வறட்சி நிலை ஏற்பட்டபொழுது, குறிப்பாக நம் சென்னை நகரத்தில் குடிநீருக்கு என்ன செய்வது என்ற நிலை ஏற்பட்ட சமயத்தில்—புராணங்களில் நாம் படித்திருக்கிறோம்—விசுவகர்மாக்கள் இரவிலே ஒரு பெரிய நகரத்தையே கட்டி முடித்து விட்டார்கள்—புராணகால விசுவகர்மாக்கள் செயல்படுகிற முறையிலே சென்னை நகரததில் ஒரு வாரத்திற்குள் 11,000 குழாய்க் கிணறுகளைத் தோண்டி 30 லட்சம் மக்கள் வாகிழ்ன்ற நகரத்திற்கு குடிதண்ணீர் வழங்கியுள்ளது இந்த அரசு. இது மிகச் சிறந்த ஒரு சாதனையாக இருக்கிறது என்றால், தமிழக அரசு எந்த சாதனையையும் செய்து முடிக்க வல்லமை உடையதாக இருக்கிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

'சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல்' இருக்க வேண்டும் என்பது வள்ளுவன் புத்திமதி. கட்சி வேறுபாடுகள் இருக்கலாம். மு.ப. 11-00
கொள்கை வேறு பாடுகள் இருக்கலாம். மாற்றுக் கட்சியாக

[திரு. மு. ச. சிவசாமி] [1970 சனவரி 22

இருந்தாலும், அவர்கள் செய்திருக்கும் நன்மைகளை, எல்லாவற்றையும் இல்லாவிட்டாலும், ஒரு சிலவற்றையாவது, பிரதான எதிர்க்கட்சியாக இருப்பவர்கள் பாராட்ட வேண்டாமா? அப்படி அவர்கள் செய்யவில்லை. 'சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல்' அவர்கள் இல்லை. இது மிக மிக வருந்தத் தக்கது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். சொல்லொண்ணாக் கஷ்டங்கள் அனுபவித்து வந்த மக்களுக்கு உணவுக் கட்டுப்பாட்டை எடுத்ததன் காரணமாக ஏற்பட்டிருக்கும் மகிழ்ச்சியை மனதில் கொண்டு, அந்தக் காரியத்தை காங்கிரஸ் உறுப்பினர்கள் பாராட்ட வேண்டாமா? 105 நகராட்சி அலுவலங்களிலும் உள்ள அலுவலர்களுக்கு ஓய்வூதியம் இல்லாமல் இருந்ததே; அதை மாற்றி இன்றைய தமிழக அரசு ஓய்வூதியம் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறதே, அதையாவது பாராட்ட வேண்டாமா? வற்றாத குளங்களும், செங்கல்பட்டு போன்ற மாவட்டங்களில் வறண்டு போயிருந்த காலத்தில், சென்னை நகரத்திலே முக்கியமாக குடி தண்ணீர் இல்லாமல் இருந்த நிலையில் 11,000 குழாய் கிணறுகள் அமைத்து, 30 லட்சம் மக்கள் வாழும் சென்னைக்கு குடி தண்ணீர் வசதி செய்து கொடுத்தார்களே; அதையாவது பாராட்ட வேண்டாமா? சென்ற இரண்டு கவர்னர் உரையிலும் விவாதம் நடந்தபோது, தொழில் வளம் ஏற்படவில்லை என்று குற்றம் சாட்டினார்கள் காங்கிரஸ் நண்பர்கள். இந்த ஆண்டு கவர்னர் உரையில் பார்க்கிறோம் பல தொழிற்சாலைகள் வரவிருப்பதை. அதில் அதிர்ஷ்டம் செய்தவன் நான்தான். தூத்துக்குடியில் 45 கோடி ரூபாயில் பெட்ரோ-கெமிகல் இண்டஸ்ட்ரி வர இருக்கிறது. அதையாவது நம்முடைய அருமை காங்கிரஸ் நண்பர்கள் பாராட்ட வேண்டாமா? இன்னும் தூத்துக்குடியில், ப்ளாஸ்டிக் இண்டஸ்ட்ரி ஆறு கோடி ரூபாயில் வரவிருக்கிறது. அதையாவது நீங்கள் பாராட்ட வேண்டாமா? மணலியில் தொழிற்சாலை ஆரம்பித்திருக்கிறார்களே, அதைப் பாராட்ட வேண்டாமா? ஐ.ஸி.ஐ. கம்பெனிக்காரர்கள், எண்ணூரில் கெமிகல் இண்டஸ்ட்ரி 15 கோடி ரூபாயில் ஆரம்பிக்க இருக்கிறார்கள். அதை எடுத்துக் காட்டினார்களா? பாராட்டினார்களா? இந்த ஆண்டு கவர்னர் உரையில் இப்படி எத்தனை தொழிற்சாலைகளைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். இவைகளையெல்லாம் பார்க்க வேண்டாமா? இன்னும் இப்படி தொழிற்சாலைகள் அமைக்க மத்திய சர்க்காரோடு நம் சர்க்கார் பேச்சு வார்த்தைகள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள், இந்த முயற்சிகளையெல்லாம் பாராட்ட வேண்டாமா?

இறுதியாக, நம்முடைய தமிழக அரசு தூத்துக்குடி அபிவிருத்தியில் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். தூத்துக்குடியில் எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையைப் பற்றி அடுத்துவரும் ஆளுநர் உரையில் நிறைவேறியதாகக் குறிப்பிடும் அளவில் செய்யுங்கள் என்று கேட்டுக் கொண்டு விடைபெறுகிறேன்.



1970 சனவரி 22] [திரு. மு. ச. சிவசாமி]

**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. மார்ட்டின் அவர்கள் பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று எழுந்து கூறியதிலிருந்து, அது பற்றிய விவாதம் நடைபெற்ற நிகழ்ச்சிகளையெல்லாம் சபையினுடைய நடவடிக்கை ஏட்டிலிருந்து நீக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல் அமைச்சர் கோரி, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் ஒரு முகமாக ஒப்புக் கொள்கிற காரணத்தால், சட்டசபையின் 235-வது விதியின் கீழ் அந்த நிகழ்ச்சிகள் பற்றிய விவாதம் எல்லாவற்றையும் நீக்க வேண்டும் என்று உத்தரவிடுகிறேன். பத்திரிகையாளர்களும். அவற்றை வெளியிடவேண்டாம் என்று தெரிவிக்கிறேன்.

*** திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் ஆற்றிய உரை, சம்பிரதாயத்திற்காகச் செய்யப்பட்ட சடங்காக இருக்கிறதே அல்லாமல் பாராட்டுவதற்கோ அல்லது வரவேற்பதற்கோ அதில் சிரான அம்சம் ஒன்றும் இல்லை. நேற்றைய தினம் கவர்னர் உரைக்கு நன்றி செலுத்தும் முகத்தான் உரை ஆற்றிய திரு. அரங்கநாதன் அவர்கள், சென்ற ஆண்டு தமிழகத்தில் மாநில தலைமை பிரிவு பிணக்கு ஒன்றும் இல்லாமல் சுமுகமாக ஏற்பட்டது என்று குறிப்பிட்டார்கள். சென்ற ஆண்டு தமிழக ஆளும் கட்சித் தலைமையில் எப்படி மாறுதல் ஏற்பட்டது, விடப்பட்ட அறிக்கைகள் என்ன என்ன, கொடுக்கப்பட்ட போட்டிகள் என்ன என்ன. அதைத் தொடர்ந்து, அமைச்சர் அவையில், மூத்தவர் ஒருவர் விலகியிருந்த நிலைமைகள் என்ன என்று இவற்றையெல்லாம் நான் எடுத்துச் சொல்வேனானால், அது அவர்களுக்கு மிக்க வேதனையாக இருக்கும். ஆகவே, அவற்றையெல்லாம் சொல்லாமலேயே விட்டு விடுகிறேன்.

நம்முடைய ஆளும் கட்சி நண்பர்கள், சென்னையிலே வறட்சி ஏற்பட்டபோது, 10,500 குழாய்க் கிணறுகளை அமைத்தது பற்றிப் பெருமைப்பட்டுக் கொண்டார்கள். சென்னை நகரத்தில் எத்தனை குழாய்கள் போடப்பட்டன? அவற்றில் எத்தனை குழாய்களில் தண்ணீர் வந்தது? இப்பொழுது எத்தனை குழாய்கள் இருக்கின்றன. அவற்றில் எத்தனை பழமையானவை? இதெல்லாம் சென்னை மக்களுக்கு நன்றாகத் தெரியும். தமிழ்நாட்டில் ஏற்பட்ட வறட்சி பற்றியும், வறட்சி நிவாரண வேலைகள் பற்றியும் குறிப்பிட்டார்கள். வறட்சி நிவாரணத்திற்காக மத்திய சர்க்காரிடமிருந்து 14¼ கோடி ரூபாய் கிடைக்க ஆதரவாக இருந்த சூழ்நிலையை நாடு நன்றாக அறியும். நாங்கள் கூறுவது அந்தப் பணங்கள் சரியாகச் செலவழிக்கப்படவில்லை என்பது. எந்த எந்தப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டனவோ, அந்தப் பணிகளுக்குச் செலவழிக்கப்படவில்லை. ஒரு பானை சோற்றுக்கு ஒரு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

சோறு பதம் என்பது போல ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். எங்கள் திருமங்கலம் பகுதியில் அம்மகுண்டு என்றவிடத்தில் சமுதாயக் கிணறு ஒன்று வெட்டப்பட்டு அந்த ஒரே கிணற்றுக்கு செல்லம்பட்டி, சேடபட்டி ஆகிய இரண்டு பஞ்சாயத்து யூனியன் களிலும் பணம் வாங்கியிருக்கிறார்கள். இந்த மாதிரி எத்தனை நடந்ததோ தெரியாது.

(திரு. ந. தருமலிங்கம் தலைமை)

நேற்றையதினம் பேசிய நண்பர், பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர்கள் காங்கிரஸ்காரர்களாக இருப்பதால், வறட்சி நிவாரண வேலைகளில் தவறு ஏற்பட்டிருந்தால், அதற்கு அவர்கள்தான் காரணம் என்று குற்றம் சாட்டினார்கள். பொதுவாக ஒன்றியத்தில் நடைபெறும் வேலைகளுக்குப் பஞ்சாயத்து ஒன்றியத்தில் தீர்மானம் வரும். தீர்மானம் பாஸ் செய்த பிறகுதான் காரியங்கள் நடைபெறும். ஆனால், பஞ்ச நிவாரண வேலைகள், கவுன்சிலின் அனுமதிக்கு வராமலேயே, ஒன்றியத் தலைவர்களின் கவனத்துக்கு வராமலேயே சர்க்காரால் நேரிடையாகச் செய்யப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, அண்மையில் உசிலம்பட்டிக்கு வந்திருந்த, அதிகாரி திரு. ராயப்பா அவர்கள், 'நீங்கள் தொடங்குங்கள்' என்று வந்த இடத்திலேயே வாய் உத்தரவாக கொடுத்திருக்கிறார்கள். இம்மாதிரி வகையில் வேலைகள் நடைபெற்றதனால்தான் ஊழல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதற்கெல்லாம் அரசாங்கமேதான் பொறுப்பு; காங்கிரஸ்காரர்கள் பொறுப்பல்ல என்பதை மட்டும் இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

தலைவர் அவர்களே, தமிழகத்திலேயே இன்றையதினம் உணவு உற்பத்தி பெருகியிருப்பதற்கு முக்கியமான காரணம், அன்றையதினம் ஆட்சியில் இருந்த காங்கிரஸ்காரர்கள் போட்ட கல்தான்—அஸ்திவாரம்தான்—என்பதை நடுநிலையில் இருப்பவர்கள் நன்றாக உணர்வார்கள். காடுமேடுகளையெல்லாம் கழனிகளாக மாற்றி விளைநிலமாக மாற்றினார்கள் காங்கிரஸ்காரர்கள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : 'உணவுப் பெருக்கத்திற்குக் கல் போட்டவர்கள்' நீங்கள்தான் என்பதை நாங்கள் ஒத்துக்கொள்கிறோம். (சிரிப்பு)

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, கல்போட்டது என்றால் அஸ்திவாரக் கல் என்றுதான் குறிப்பிட்டேன். அன்றையதினம் காடுமேடுகளையும் நிலங்களாக மாற்றி உழைத்தது காங்கிரஸ். அன்றையதினம் விதையை விதைத்தது, கண்ணீரையும், வியர்வையையும் நீராகப்பாய்ச்சி, உழைப்பென்னும் உரமிட்டது காங்கிரஸ். ஆனால் இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அறுவடைக்கு வந்திருக்கிறார்கள் என்பது நாட்டிற்கு நன்றாகத் தெரியும். அதிக உணவு உற்பத்தியின் காரணமாக ரேஷனை எடுத்துவிட்டோம் என்று கூறுகிறார்கள். இன்றையதினம் 1,500, 2,000 பேர் இதனால் அரசாங்கத்தில் வேலையிழந்து வாடுகிறார்கள்.



நம்முடைய உணவு அமைச்சர் அவர்கள் இதற்கு ஆதாரம் என்ன என்று நேற்று கேட்டார். இதோ இருக்கிறது ஆதாரம். மதுரை மாவட்ட கலெக்டரின் ஆணைப்படி, எண் 8848/ஜி. தேதி 16-1-70 76 பேருக்குச் சீட்டு கிழிக்கப்பட்டிருக்கிறது. இதுபோல எத்தனை பேருக்கோ? எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் 1964-ல் அங்கு வேலைக்குச் சேர்ந்தார். அங்கு பணிபுரிந்து கொண்டிருந்த ஒரு பெண்ணைத் திருமணம் செய்துகொண்டார். ஆனால் இன்றையதினம் அந்த இரண்டுபேரும் வேலையிழந்து தவிக்கிறார்கள். இதே போல தமிழகத்திலே பரிதாபகரமான ஜோடிகள் இன்னும் எத்தனை இருக்கின்றனவோ? வேலை இழந்த என்.ஜி.ஓ.-களுக்கு அரசாங்கம் உடனடியாக மாற்று வேலை கொடுக்க புதிய திட்டங்களை செயல்படுத்தவேண்டும்.

அடுத்தபடியாக, அரசாங்கம் விவசாயிகள் உபயோகிக்கும் மின்சாரக் கட்டணத்தை 8¼ பைசாவிலிருந்து 10 பைசாவாக உயர்த்தியிருக்கிறது. லட்சக் கணக்காக, கோடிக்கணக்காக லாபம் சம்பாதித்துக்கொண்டிருக்கும் ஆலை அதிபர்களுக்கு மின்சாரக் கட்டணத்தை உயர்த்தியிருக்கலாம். ஆலை அதிபர்கள் கட்டண பாக்கியை சரியாகக் கொடுக்காமல் இருக்கிறார்கள். ஆலைகளுக்குச் சலுகைகாட்டும் அரசு ஏழை விவசாயிகளின் தலையில் வரியை உயர்த்துவது, 'ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி' என்று சொல்வதுபோல்தான் இருக்கிறது. மின்சாரக் கட்டணத்தை 8¼ பைசாவிலிருந்து 10 பைசாவாக உயர்த்தியது அநீதி என்று இந்த அரசு மீது குற்றம் சாட்ட விரும்புகிறேன். நேற்றையதினம் மின்சார அமைச்சர் அவர்கள் பேசும்போது, 'இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, குறைந்த விலையில் நாம் தான் விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்குகிறோம்' என்று குறிப்பிட்டார்கள். அண்மையில் இருக்கிற கேரள மாநிலத்தில் யூனிட் ஒன்றுக்கு 8 காசு வீதம் மின்சாரம் வழங்குகிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி செய்யும் கேரள மாநிலத்தைவிட்டு, காங்கிரஸ் ஆள்கின்ற அதுவும் சிண்டிகேட் காங்கிரஸ் ஆள்கின்ற மைசூரில் என்ன கட்டணம் என்பதை கனம் உறுப்பினர் அவர்கள் விளக்க வேண்டும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசியதை முதல்வர் கவனமாக கேட்டிருப்பார்கள் என்று நினைக்கிறேன். 'இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களைவிட தமிழகத்தில்தான் குறைவாக கட்டணம் வசூலிக்கப்படுகிறது' என்று நேற்றையதினம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

காங்கிரஸ் ஆட்சியில் விலைவாசிகள் எல்லாம் ஏறுமுகமாக இருக்கின்றன என்று பட்டியலைப்போட்டு அன்றையதினம் இதே மன்றத்தில் ஆளும் கட்சியினர் கூறினார்கள். இன்றைய ஆட்சியாளர்கள்

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1970 சனவரி 22

விலைவாசி உயர்வைக் காட்டி அரியாசனத்தைக் கைப்பற்றியவர்கள், என்னிடம் ஒரு பட்டியல் இருக்கிறது. 1967-ம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஆட்சியில் அமர்ந்தபோது, தமிழகத்தில் இருந்த விலைவாசிகள் என்ன என்ன, இன்றையதினம் 1970-ம் ஆண்டு விவரப்படி இருக்கும் விலைவாசிகள் என்ன என்ன என்ற விவரப்பட்டியல் என்னிடம் இருக்கிறது. அந்தப் பட்டியலைப் படிக்க நேரம் இல்லாத காரணத்தினால் சிலவற்றை மட்டும் சொல்கிறேன்.

மஞ்சள், மிளகாய் போன்றவற்றின் விலையை, பேரவைத் தலைவரின் அனுமதியுடன் படிக்க விரும்புகிறேன். புளி, துவரம் பருப்பு, உளுத்தம்பருப்பு, கடலைப்பருப்பு, மிளகு, சீரகம், தனியா, தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய், கடலை எண்ணெய், ஏலக்காய், லவங்கம், திராட்சை, வெங்காயம், தேங்காய் போன்றவைகளின் விலை ஒன்றுக்கு மூன்று அல்லது நான்கு பங்காக உயர்ந்திருக்கிறது. மக்கள் அத்தியாவசியப் பொருள்களை வாங்க முடியாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். பேரவைத் தலைவர் அவர்களின் அனுமதியுடன் சில கருத்துக்களைப் படிக்க விரும்புகிறேன்.

"இன்றைக்கு மக்கள் தேவையில் அழுந்தி நிற்கிறார்கள். இதற்குப் பரிகாரம் தேட வேண்டிய பொறுப்பு, அவர்களுடைய நல்வாழ்வுக்கு வசதி செய்ய வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. இன்றைக்கு புளி விலை எப்படி ஏறியிருக்கிறது? தேங்காய் விலை எப்படி ஏறியிருக்கிறது? எப்படி என்.ஜி.ஓ.க்களால் வாழ முடியும்? வசதி உள்ளவர்களாலேயே வாழ முடிகிறதா? இது சர்க்கார் பொறுப்பு அல்லவா?"—இப்படிப் பேசியிருப்பவர் எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று யாரும் தயவுசெய்து எண்ண வேண்டாம். முன்னாள் உணவு அமைச்சரும், இந்நாள் நிதி அமைச்சருமான மாண்புமிகு திரு. மதியழகன் அவர்கள் 4—2—66-இல், இதே மன்றத்தில், இதே வரிசையிலிருந்து ஒலித்த குரலின் ஒரு பகுதி இது.

"விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த தங்களுடைய செயல் திட்டங்களை எந்தெந்த முறையில் மாற்றி அமைக்கப் போகிறார்கள் என்பதைக் கூட இந்த மன்றத்தில் தெளிவாகக் கூறவில்லை. இவர்கள் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கு எந்த சோஷலிஸத்தைக் கொண்டு செயல்திட்டங்களைத் தருவார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். ஆனால் எதிர்பார்த்து ஏமாந்து விட்டோம் பொதுமக்களும் ஏமாந்து போய்விட்டார்கள்" இந்தச் சொற்கள் எங்கள் கட்சியினர் சொல்லவில்லை. 17—1—1964-ல் இன்றைய தொழில் அமைச்சரின் வாயிலிருந்து சிதறிய முத்துக்களில் சில.

"விலைவாசி ஆண்டுதோறும் ஏறுகிறது. ஏறுகின்ற விலைவாசியைக் குறைப்பதற்கு வழிவகை செய்யப்படவில்லை. அதற்குப் பரிகாரம் ஒன்றும் தேடப்பட வில்லை."



1970 சனவரி 22] [திரு. என். எஸ். வி. சித்தன்]

"சர்க்காரை நான் குற்றஞ்சாட்ட விரும்புவது என்னவென்றால் பல காரணங்களைக் காட்டித் தப்பித்துக் கொள்வதோ வழிவகை காணும் பிரச்சினையைத் தட்டிக் கழிப்பதோ நல்ல அரசாங்கத்துக்கு உகந்ததல்ல".

"நாட்டிலே விலைவாசிகள் விஷம்போல ஏறிக்கொண்டு இருப்பானேன்? அதற்கு என்ன பரிகாரம் தேடி இருக்கிறீர்கள்? எப்படி இந்தப் பிரச்சினையைத் தீர்க்கப் போகிறீர்கள் என்று உள்ளபடியே நான் ஆயாசத்தோடு இந்த அரசாங்கத்தைக் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்".

"விலைவாசி ஏற்றம் என்பதை ஒப்புக்கொள்கிற சர்க்கார் அதற்கு ஏற்றபடியான பரிகாரத்தைத் தேடவில்லை என்ற குற்றச்சாட்டை நான் இந்த சர்க்கார் மீது சுமத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்" இவ்வாறு எங்கள் கட்சியிலிருந்து நாங்கள் சொல்லவில்லை. இவ்வாறு முழங்கியவர் நமது உணவு அமைச்சர் மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் அவர்கள் 18—1—1964-ல் இதே மன்றத்தில். அந்த வீரம் இன்றைக்கு எங்கே போயிற்று? இந்த மூன்று ஆண்டுக் காலமாக உங்கள் கைகளில் அதிகாரம் இருக்கிறதே, விலைவாசி குறைந்ததா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : தலைவர் அவர்களே, 1964-ல் இருந்த நிலவரம் இன்று முழுமையாக இல்லை. என்னிடத்திலே கூடச் சொன்னார்கள், மிளகாய் போன்ற மளிகைச் சாமான்கள் ரொம்ப குறைந்துவிட்டது என்று. திருமங்கலத்தைச் சேர்ந்த விவசாயிகள் எல்லாம் உற்பத்தி அதிகரித்திருப்பதற்காகப் பெருமைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதை ஏற்றுமதி செய்வதற்கு சர்க்கார் வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டார்கள். ஏதாவது ஏற்பாடு செய்ய முடியுமா என்று உறுப்பினர் அவர்கள்கூட கேட்டதாக எனக்குக் கவனம். முன்பு சிலோன் போன்ற இடங்களுக்கு நாம் ஏற்றுமதி செய்துகொண்டிருந்தோம். கடந்த மூன்று ஆண்டுகளில் இருக்கும் நிலவரத்தைப் பார்த்தால் கனம் உறுப்பினர் அவர்கள் காட்டுகிற சித்திரம் தவறானது என்பது நன்கு விளங்கும். விலைவாசிகள் எல்லாம் ரொம்ப குறைந்துவிட்டது. பத்திரிகைகளில் வருவது, போர்டுகளில் எழுதி வைத்திருப்பது எல்லாம் சரியல்ல. இந்தியாவிலேயே, நம் மாநிலத்தில் அரிசி விலை குறைந்திருக்கிறது. இந்த மூன்று ஆண்டுகளில் விலைவாசிகள் மிகவும் குறைந்திருக்கிறது. அரிசியை அடுத்து, பருப்பு வகைகளின் விலைகளைக் குறைக்க வழி செய்யப்படும். சர்க்கரையை பொறுத்தவரையில் அதை வாங்க முயலாத நிலையில் மக்கள் இருக்கிறார்கள். விலை மிகவும் குறைந்திருக்கிறது. மற்றைய பொருள்கள், வேறு உணவுப் பொருள்கள் கட்டுப்படுத்தப்பட்டன இந்த மூன்று ஆண்டுகளில். இன்றைக்குக் காய்கறிகள் விலை ஏறுமுகமாக இருப்பது எல்லாம் தற்காலிக நிலைமைதான். இதை வைத்துக் கொண்டு சர்க்காரை வேறுவிதமாகச் சித்தரிப்பது ஆதாரபூர்வமானது அல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, விலைவாசிகள் எந்த அளவிற்கு உயர்ந்துகொண்டு வருகின்றன என்பதை தமிழகத்தில் உள்ள அத்தனை மக்களும் நன்றாக அறிவார்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கொடுத்த கருத்தை முழுக்க நான் எதிர்க்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, நிதியமைச்சர் அவர்களுடைய கருத்தை முழுக்க முழுக்க எதிர்க்கிறேன் என்று உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அரிசி விலையையும் சேர்த்து அப்படி கருதுகிறாரா ?

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, உங்களுடைய அனுமதியுடன் ஒருசிலவற்றைப் படிக்க விரும்புகிறேன்.

" அரிசி விலையை மட்டும் குறைக்கும் முறையில் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். சோறு போடு என்று சொன்னால், சோற்றை மட்டும் போட்டால் போதுமா ? விலைவாசியைக் குறைக்க வேண்டுமென்று சொன்னால், அரிசி விலையை மட்டும் குறைத்துவிட்டால் போதுமா ? ஒரு மூட்டை நெல்லை விற்றால் ஒரு பிள்ளைக்கு வேண்டிய துணிமணிகளைக்கூட வாங்க முடியவில்லை. இரண்டு மூட்டை நெல்லை விற்றால் கூட ஒரு மாதத்திற்கு வேண்டிய மளிகை சாமான்கள் வாங்க முடியவில்லை. மூன்று மூட்டை நெல்லை விற்றால்கூட ஒரு ஏக்கருக்கு வேண்டிய உரத்தை வாங்க முடியவில்லை. பிற பொருள்களின் விலை அந்த அளவிற்கு ஏறியிருக்கிறது. இந்த நிலையில் எல்லாப் பொருள்களின் விலையும் மலைபோல இருக்கிற நேரத்தில் நெல் விலையை மட்டும் மடுவுக்குக் கீழே கொண்டு வந்துவிட்டால் உழவன் எப்படி உற்பத்தி செய்வான் ?" இதை நான் சொல்லவில்லை.. எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் சொல்லவில்லை. விலைவாசிகள் ஏறியிருக்கின்றன என்று புலவர் கா. கோவிந்தன் அவர்கள் 20—1—1964-ல் பேசிய பேச்சுத்தான் இது. அன்று எதிர் வரிசையிலிருந்து பேசிய ஆர்வமும் துடிப்பும், வீரமும் இன்றைக்கு எங்கே இருக்கிறது ? விலைவாசியைக் குறைக்க இந்த அரசு தன்னுடைய சுட்டுவிரலைக்கூட அசைக்கவில்லை என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

நேற்றையதினம் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் விலைவாசி உயர்வைப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். நான் கேட்கிறேன், இப்போதே மூன்று ஆண்டுகள் கழிந்துவிட்டன. பரிசீலனை 1972-க்குள் முடிந்து விடுமா, இல்லை, அதற்கு அப்பாலும் போகுமா ? விலைவாசி உயர்வால் வறுமை தாங்காமல் குடும்பம் குடும்பமாக தற்கொலைகள் நிகழ்ந்திருப்பதைப் பார்த்துக்கொண்டிருக்க வேண்டுமா ? இந்தத் தொகை பெருகுவதற்கு முன்னதாகவே விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்தபடியாக அரசாங்கம் நிலம் அளிப்பதில் பாரபட்சம் காட்டுகிறது. ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கே அளிக்கிறது என்கிற குற்றத்தை அரசாங்கத்தின் மீது சுமத்த விரும்புகிறேன். சென்னையில் சத்தியா ஸ்டுடியோ இருக்கிறது. ஆளும் கட்சியைச் சேர்ந்த பிரபல நடிகர், பல லட்சக்கணக்கான சொத்துகளை உடையவர் அதன் பங்குதாரர் சுமார் 10 லட்சம் பெருமான 6 ஏக்கர் நிலத்தை அரசாங்கம் சத்தியா ஸ்டுடியோ நிர்வாகிக்கு ஸ்டுடியோவுக்கு அருகில் கொடுத்திருக்கிறது என்கிற குற்றச் சாட்டைச் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பத்து லட்சம் பெருமான நிலம் என்று சொன்னார்கள். வேண்டுமென்றால் கொஞ்சம் குறைத்தே கொடுக்கிறேன். 9½ லட்சம் ரூபாயை இவர்கள் கொடுப்பதாக இருந்தால் அந்த நிலத்தை இவர்களுக்கே கொடுக்கிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** ஆளும் கட்சியில் இருக்கிறவர்கள் இப்படி தங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு நிலம் கொடுத்திருக்கிறார்கள் என்பதுதான் என் குற்றச்சாட்டு.

சென்னையில் 3 பொருட்காட்சிகள் நடக்கின்றன. சுற்றுலா பொருட்காட்சிக்கு மத்திய அரசாங்கம் பல லட்சக்கணக்கான ரூபாய் உதவி அளித்திருக்கிறது. முதல் அமைச்சர் அவர்கள் போலீசார் புடைசூழ சுற்றுலா பொருட்காட்சியைத் திறந்து வைக்க குதிரையில் பவனி வந்த காட்சியைப் பார்த்தோம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நான் ஊர்வலம் வந்தது சுற்றுலா பொருட் காட்சிக்காக அல்ல. பார்க்ஃபேர் பொருட் காட்சி. உறுப்பினர் விஷயம் தெரிந்து பேச வேண்டும்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பார்லிமெண்டைத் திறந்து வைக்க ஜனாதிபதி குதிரையில் பவனி வருகிற காட்சியைப் பார்த்திருக்கிறோம். ஆனால் பொருட்காட்சியைத் திறந்துவைக்க அமைச்சர் குதிரையில் பவனிவருகிற காட்சியை இப்போதுதான் பார்க்கிறோம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பார்க்ஃபேர் பொருட் காட்சியைத் திறந்துவைக்க ஒவ்வொரு ஆண்டும் கவர்னர் அழைக்கப்படுவதும், அவர் குதிரையில் பவனி வருவதும் நடந்தே வந்திருக்கிறது. நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்தான் அந்தமுறை மாற்றப்பட்டு முதல் அமைச்சர் அவர்கள் குதிரையில் பவனி சென்று திறந்துவைக்கிற நிலை வந்தது. அண்ணா அவர்களும் அப்படித் திறந்துவைத்திருக்கிறார்கள். ஜனாதிபதி அவர்கள் தான் குதிரையில் பவனி போகலாம், எங்களைப்போன்ற ஏழைகள் போகக் கூடாது என உறுப்பினர் சொல்கிறாரா என்று தெரியவில்லை. எதையும் தெரிந்துகொள்ளாது பேசிவிடுவதில் பயன் இல்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ந. தருமலிங்கம்) :** தாங்கள் 22 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். அடுத்தபடியாக திரு. பால கிருஷ்ணன் பேசுவார்.

* **திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, இன்று விவாதம் ஆரம்பிக்கும்போதே கொஞ்சம் காரசாரமாக இருந்தது. இருந்தாலும் எனது பேச்சுக்குப் பிறகு கொஞ்சம் சூடு தணியும் என்று கருதுகிறேன்.

நேற்று விவாதத்திலே பங்கெடுத்த எதிர்க் கட்சி உறுப்பினர் மாண்புமிகு திரு. மார்டின் அவர்கள் கவர்னரது (ஆளுநரது) உரையை காகிதப் பூ என்று குறிப்பிட்டார்கள். இந்தக் காகிதப் பூ என்ற வார்த்தை எங்கிருந்து வந்தது என்பது அவருக்குத் தெரிந்திருக்கும் என்று கருதுகிறேன். இருந்தாலும் அவர் அந்த வார்த்தையை துண்டாக சொல்லிவிட்டுப்போனது நல்லது அல்ல. இன்னொன்றையும் நான் கவனமாகக் கேட்டேன். காகிதப் பூ மலர்ந்தது என்றார்கள். மொட்டு மலர்ந்தது என்றால் பொருத்த மாக இருக்கும். பூ மலர்ந்தது என்றார்கள். அவர் ஒரு வழக்கு அறிஞர். தமிழில் எப்படி வரும் என்பதை உணர்ந்து சொன்னார்களோ என்னவோ, அதுவும் காகிதப் பூ மலர்வதாவது. வெட்டும்போதே பூ மாதிரி வெட்டுவது, ஒட்டுவது (சிரிப்பு) ஏதோ பேசவேண்டும் என்று பேசுவது. கவர்னர் உரை காகிதத்தில் தான் அச்சிட்டுக் கொடுத்திருக்கிறது. காங்கிரஸ் கட்சியினர் ஒழுங்காகப் பேசினால் பதில் சொல்லலாம். அவர்கள் ஒழுங்காகப் பேசவேண்டும்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** காங்கிரஸ் கட்சியினர் ஒழுங்காகப் பேசவேண்டும் என்றால் இப்போது ஒழுங்காகப் பேசவில்லை என்கி றார்களா ?

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** பேசுகின்றபோது ஒழுங்கு படுத்திப் பேசவேண்டும் என்பதுதான் என் அபிப்பிராயம். ஆனாலும் அவரவர்களுடைய பழக்கங்களை மாற்றுவது என்பது சுலபமான காரியம் அல்ல. உதாரணமாக பத்து வருஷங்களுக்கு முந்தி பத்திரிகையில் ஒரு படத்தைப் பார்த்தேன். போலீஸ் நண்பர்கள் யாராவது இருந்தால் என்னிடம் கோபப்பட்டுக் கொள்ள வேண்டாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு போலீஸ்காரர் தன் குழந்தையை எடுத்துக் கொஞ்சுகிறபோது 'போடா திருட்டுப்பயலே, போடா கேடிப் பயலே' என்று கொஞ்சுவதுபோல படம் சித்தரித்து வந்திருந்தது.

**திரு. கே. விநாயகம் :** அவருடைய அநுபவமா ?





**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** நான் உதாரணத்திற்குச் சொன் னேன். அப்படித்தான் காங்கிரஸ்காரர்கள் தங்கள் பழக்கங்களை விடாது பேசுகிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

இனி கவர்னர் உரைக்கு வருகிறேன். முன்பெல்லாம் முதலில் பேசுகிறவர்களுக்கு அதிக நேரம் கிடைக்கும். இப்போது கவர்னர் உரையில் நேரம் குறைந்துவிடுகிறது. அப்படி நேரத்தைக் குறைக்காமல் பேசுகிறவர்களுடைய எண்ணிக்கையைக் குறைக் கலாம்.

சென்ற ஆண்டு கடும் பஞ்சம் வந்தது. அந்தக் கடும் பஞ்சத் தில் எப்படிப் பிழைப்போம் என்று நினைத்தோம். சொன்னால் கூட நம்பமாட்டார்கள். நான் ஏழைக் குடும்பத்தைச் சார்ந்தவனும் அல்ல, பணக்கார குடும்பத்தைச் சார்ந்தவனும் அல்ல. நடுத்தர குடும்பத்தைச் சார்ந்தவன். எத்தனையோ நாள் பட்டினி கிடக்க வேண்டிய நிலைமை இருந்தும் அரசாங்கம் கொடுத்த சோ[illegible] தையும் கோதுமையையும் உடைத்து உண்ணவேண்டிய நிலை வந்தது. அவ்வளவு கடுமையான பஞ்சத்தில் இருந்து நம் மக்களை இந்த அரசாங்கம் காப்பாற்றியிருக்கிறது. நம்முடைய மக்கள் பட்டினி இல்லாமல் இருக்கவேண்டும், வேலை வாய்ப்பு இருக்க வேண்டும் என்கிற அடிப்படையில் ரொம்ப சாமர்த்தியமாக கடும் பஞ்சத்தை வென்றிருக்கிறார்கள். சிலர் பஞ்ச நிவாரண வேலை களில் அரசாங்கம் தவறு செய்துவிட்டதுபோலச் சொன்னார்கள். வானூர் பஞ்சாயத்து யூனியனுக்கு பத்து லட்சம் ரூபாய், மரக் காணம் பஞ்சாயத்து யூனியனுக்குப் பத்து லட்சம் ரூபாய் அரசாங் கத்தின் உதவியாலும், என்னுடைய முயற்சியாலும் வாங்கித்தரப் மு.ப.
பட்டது. இதை எல்லோரும் உணர்வார்கள். வாங்கித் தந்ததோடு 11-1
என் பொறுப்பு முடிந்து விட்டதே தவிர அதை எப்படித்தான் செலவு செய்தார்கள் என்கிறபோது வருத்தத்தோடு சொல்ல வேண்டும். அங்கே இருக்கிற பஞ்சாயத்து யூனியன் சேர்மன் இரண்டு பேர்களும் அந்தப் பணத்தை எப்படித்தான் செலவு செய் தார்களோ தெரியவில்லை நண்பர் சித்தன் அவர்கள் குறிப் பிட்டார்கள், வேண்டியவர்களுக்கு அதிகாரிகளே சம்பந்தம் இல்லா மலே தீர்மானம் இல்லாமலே செய்துவிட்டார்கள் என்று. நான் சொல்கிறேன் பஞ்சாயத்து யூனியன் சேர்மன் வெறும் சீட்டிலே யார் யார் வேண்டியவர்களோ அவர்களுக்கு நீ இதைச் செய், நீ இதைச் செய் என்று சரிவரக் கணக்குப் பார்க்காமல் செய்திருக் கிறார்கள். என்னுடைய தொகுதியிலே இருபது லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. குடிநீருக்காக வெட்டப்பட்ட கிணறுகள்தான் இன்றைக்கு அங்கே உருவோடு இருக்கின்றனவே தவிர மற்றவை எங்கே போய் இருக்கிறதோ தெரியவில்லை. இதற் கெல்லாம் காரணம் பஞ்சாயத்து யூனியன் சேர்மன்களும், வேலை செய்கிறவர்களும்தானே தவிர அரசாங்கம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். குற்றம் சொல்ல

[திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்] [1970 சனவரி 22

வேண்டுமானால் எதை வேண்டுமானாலும் யார்மீது வேண்டுமானாலும் சொல்லலாம் என்பதில்லை. இந்த விஷயத்திலே அரசாங்கத்தின் தவறா அல்லது அங்கு இருந்தவர்களுடைய தவறா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

என்னுடைய தொகுதியிலே சென்ற ஆண்டு கடன்களையும் சர்க்கார் தீர்வைகளையும் தள்ளி வைக்க சர்க்கார் உத்திரவிட்டது. இந்த ஆண்டு அப்படித் தள்ளி வைக்கப்பட்ட கடன்களையும் இந்த ஆண்டுக்கான கடன் பாக்கியையும் சேர்த்துக் கட்டவேண்டுமென்று அரசாங்கத்திடமிருந்து உத்திரவு வந்திருப்பதாகச் சொல்கிறார்கள். நான் நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். சென்ற ஆண்டு தள்ளி வைக்கப்பட்ட கடன்களை, இந்த ஆண்டு கட்ட வேண்டியவை அத்தனையையும் கட்டவேண்டுமென்று சொல்வதாலே மக்கள் வேதனையோடு அங்கே இருக்கிறார்கள். அவையும் பொருள்களை எல்லாம் சர்க்கார் ஏலத்திலே எடுப்பார்களோ என்ற பயம் இருக்கிறது. அதனால் இந்தக் கடன்களை ஒத்திவைக்க வேண்டும் அல்லது, ஒரு தவணைமட்டும் கட்டவேண்டுமென்று கேட்டுக் கொண்டு நேரம் இல்லாத காரணத்தினாலே இந்த அளவோடு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: பேரவையின் உதவித் தலைவர் அவர்களே, ஆளுநர் பெருமான் அவர்களின் உரையின்மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்புக் கொடுத்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நாட்டிலே குறிப்பாகத் தமிழ்நாட்டிலே குடியரசுப் பண்பாடு பாதுகாக்கப்பட்டு வருவது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். நமது மாமேதை அறிஞர் அண்ணா அவர்கள் மறைந்ததற்குப் பிறகு நம்முடைய கலைஞர் அவர்கள் பொறுப்பேற்று அமைதியாக நல்ல முறையிலே ஆட்சி புரிந்துவருவது எங்கும் காணமுடியாத ஒன்றாகும். பாரத மக்கள் முன்னாள் தலைவர் டாக்டர் ஜாகீர் உசேன் மறைந்ததற்குப் பிறகு டாக்டர் கிரி அவர்களைத் தேர்ந்தெடுத்த முறையும் மகிழ்ச்சிக்குரிய முறையாகும். இது நம் நாட்டில் நிலவும் குடியரசுப் பண்பாட்டைக் காட்டக்கூடிய விஷயமாகும்.

இந்த நேரத்திலே நான் ஒரே ஒரு விஷயத்தை மாத்திரம் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். இப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கக்கூடிய இந்தக் குடியரசு மரபை எவ்வளவு கஷ்டப்பட்டாகிலும் காப்பாற்றியே தீரவேண்டியவர்களாக நாம் இப்பொழுது இருக்கிறோம். கிழக்குத் தஞ்சையில் நடைபெற்ற கலவரத்தைப் பற்றி ஒரு சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். தொழிலாளர்களிடத்திலே கூலி விஷயத்தில் இருந்த ஏற்றத்தாழ்வை நீக்குவதற்காக நம்முடைய அரசு நல்ல நோக்கத்தோடு ஒரு கமிஷன் நியமித்தது. அந்தக் கமிஷன் சிபாரிசு செய்த முடிவுகளின்



1970 சனவரி 22] [திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி]

வாயிலாக கிட்டத்தட்ட முக்கால் வாசி முடிவுகளை நம்முடைய அரசு ஏற்றுக்கொண்டு நல்ல தீர்ப்பை வழங்கியுள்ளது. நாம் செய்த அந்தச் சமூக நீதிக்கு அங்கே நல்ல பலன் கிடைத்திருக்கிறதா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

மாவோவின் சிந்தனைகள் சில இடங்களிலே கையால் எழுதப்படும் வாசகங்களும் படங்களும் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கொடிகளும் கொண்டு சில பகுதிகள் பிரசுரிக்கப்பட்டதாக பத்திரிகை வாயிலாக நான் அறிகிறேன். நேற்றோ அல்லது இன்றைய பத்திரிகையிலோ இராமநாதபுரத்திலே ஒரு ஆசிரியர் மாவோவின் சிந்தனைகளைப்பற்றிய கேள்விகளைக் கேட்டிருக்கிறார் என்று படித்தேன். இது எதைக் காட்டுகிறது என்றால் கிழக்குத் தஞ்சையில் தொழிலாளர்களுக்கு அளித்த சமூக நீதி இருக்கிறதே அது தவறுதலான பாத்திரத்திலே அளிக்கப்பட்டு விட்டதோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது. இது சிறிய விஷயமாக இருந்தாலும்கூட அதிகக் கவனம் செலுத்தவேண்டியவர்களாக நாம் இருக்கிறோம்.

கேரளாவில் இப்பொழுது இருக்கக் கூடிய நிலைமை என்ன? முன்பு அங்கிருந்த நிலைமைகள் என்ன? அதேமாதிரி வங்கத்திலே என்ன நிலைமை இருந்தது, இப்பொழுது என்ன நிலைமைகள் இருக்கின்றன? என்பதையெல்லாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். கேரளாவிலே ஒரு கட்சி மாநாட்டிலே மாவோவின் சிந்தனைகளைப் பற்றிய வாசகங்களும், படங்களும் இருந்தன என்பதைப் படித்தோம். இப்பொழுது கேரளா மாநிலத்திலே நடந்த கதைகள் எல்லாம் நமக்குத் தெரியும். நம்முடைய தமிழகத்திற்கு கருவூலமாக இருக்கிற தஞ்சைப் பகுதியிலே அத்தகைய நிகழ்ச்சிகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள நாம் சர்வ ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் படங்களைப் போலீசார் கைப்பற்றுவதோடு மட்டும் நின்றுவிடக்கூடாது. எங்கிருந்து அது வெளிப்பட்டது, என் வெளிப்பட்டது என்பதையெல்லாம் அவர்கள் கண்டுபிடிக்க வேண்டும்.

(திரு. கொ. இ. ஞானசம்பந்தன் அவர்கள் எழுந்தார்கள்)

THIRU SOWDI S. SUNDARA BHARATHI : I am not yielding.

THIRU K. R. GNANASAMBANDAN : On a point of Order, Sir.

THIRU SOWDI S. SUNDARA BHARATHI : I am not yielding.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பியிருக்கிறார்.

**திரு. என். சங்கரய்யா :** பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பினால் அதைப் பற்றித் தாங்கள்தான் தீர்ப்பளிக்க வேண்டும். எழுப்புகின்றவர்கள் அதைப் பற்றி முன்பே தெரிந்து கொண்டிருக்க முடியாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் எழுப்பியது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல என்று ஏற்கனவே தீர்ப்பு அளித்து விட்டேன்.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி :** தலைவர் அவர்களே, இன்னும் ஒரு விஷயத்தை முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இராமநாதபுரத்தில் ஒரு பள்ளியில் வினாத்தாளில் மாவோவைப் பற்றி வினா வந்ததாகத் தெரிகிறது. எந்த ஆசிரியர் அதைத் தயாரித்தார், என்ன காரணத்திற்காக வினாத்தாளை அப்படித் தயாரித்தார் என்பதைப் பற்றிய முழு விவரங்களையும் நமக்கு அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த ஆசிரியர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் படப் போகிறது என்பதையும் அறிவிக்க வேண்டும். தேச விரோதச் சக்திகள் எதுவாக இருந்தாலும் கண்டிப்புடன் இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் குறிப்பிடுகிறேன். இதனால் தொழி லாளர்களுக்கு விரோதமாக இருப்பதாகக் கருத வேண்டாம். உதாரணத்திற்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். இன்டக்ரால் கோச் பாக்டரியில் சமீபத்தில், 8-ம் தேதியன்று துப்பாக்கிச் சூடு தொழிலாளர்களுக்கும், ப்ரொடெக்ஷன் ஃபோர்சுக்கும் இடையே நடந்தது. அதற்கு ஒரு நீதி விசாரணை வேண்டும். தொழி லாளர்களுடைய கோரிக்கை நியாயமானதாக இருந்தால் பெருந் தன்மையுடன் நடந்துகொள்ளவேண்டும். தற்போது வெறும் போலீஸ் இன்வெஸ்டிகேஷன் மட்டுந்தான் செய்யப் போவதாகத் தெரிகிறது. தேச விரோத சக்தியில் ஈடுபட்டால் சற்றும் ஈவு இரக்கம் காட்டாமல் நசுக்க வேண்டும். அப்போதுதான் நல்ல குடியாட்சிப் பண்பை, மாண்பை நிலைநிறுத்த முடியும் என்பதற் காகத்தான் இதைக் குறிப்பிடுகிறேன்.

அடுத்தபடியாக, ஃபண்டமென்டல் ரைட்சில் சொத்துரி மையைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். ஓரளவு சொத்து வைத்துக் கொள்ள உரிமை இருக்கிறது என்பதைப் பற்றி இந்திரா காந்தியினுடைய அமைச்சரவையே கூட ஒப்புக் கொண் டிருக்கிறது. நான் 50 ஏக்கர் நிலம் வைத்திருக்கிறேன் என்றால், அதிலே 5 ஏக்கரிலாவது எனக்கு முழு உரிமை இருக்க வேண்டும். அதிலே உழவர்களுக்கு எவ்விதமான உரிமையும் இருக்கக்கூடாது. ஐந்து ஏக்கருக்கு மேல் அதிகப்படியாக இருப்பதில் அவர்களுடைய உரிமையை எல்லாம் வைத்துக் கொள்ளலாம். டெனன்சி ரைட்ஸ் எல்லாம் வைத்துக் கொள்ள லாம். நான் பத்து கார் வைத்திருக்கிறேன் என்றால் ஒரு காரில் எனக்கு முழு உரிமை இருக்கவேண்டும். டிரைவருக்கு எந்த வித உரிமையும் கூடாது. மீதியுள்ள 9 கார்களில் வேண்டுமானால் உரிமை



களைக் கோரலாம். பத்து வீடு வைத்துக் கொண்டிருந்தால் ஒரு வீட்டில் எனக்குக் குடியிருக்க உரிமை இருக்க வேண்டும். மற்ற 9 வீடுகளில் குடியிருப்பவர்கள் உரிமையை வைத்துக் கொள்ளலாம். குறைந்த பட்ச சொத்து வைத்திருப்பதில் வேலை செய்பவர் களுக்கோ மற்றவர்களுக்கோ உரிமை இல்லாத முறையைக் கொண்டு வருவதற்கு சட்டத்தை இயற்றுவது அவசியம் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, கைத்தறி நெசவாளர் பிரச்சினை. இன்னும் நம்முடைய நாட்டில் விசைத் தறியைப் புகுத்த முடிவு எடுத்திருக்கிறார்கள். விசைத் தறியைப் புகுத்தும்போது கைத்தறித் தொழிலாளர்கள் வேலை இழக்காத முறையில் முழுப் பாதுகாப்பும் கொடுக்க வேண்டும். வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாகப் போக முடியாத அளவுக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனக்குப் பேச வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

***திரு. என். வரதராஜன் :** தலைவர் அவர்களே, கவர்னர் உரையின் மீது என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்று வறட்சி பூரணமாக நீங்கிவிட்டது என்று கூறப்படுகிறது. மதுரை மாவட்டத்தில் என்னுடைய பகுதியில் வேடசந்தூர், திண்டுக்கல், பழனி வட்டம் ஆகிய இடங்களில் வறட்சி நிலைமை நீடிக்கிறது. வேடசந்தூர் வட்டத்தில் மழையின்மையால் கிணறுகளில் குடிநீர் கூட இல்லாமல் மக்கள் அவதியுறுகிறார்கள். நேற்றையதினம் பேசிய உறுப்பினர் திருமயத்திலும் வறட்சி நிலைமை இருப்பதாகப் பேசினார்கள். பூரணமாக வறட்சி நிலைமை தீர்ந்து விட்டது என்று போகாமல் வறட்சி நிவாரணப் பணிகளைத் தொடர வேண்டியது அவசியம். கடன் நிவாரணம், கிஸ்தி வஜா, புதிய கடன் கொடுப்பது, வேலைவாய்ப்பு அளிப்பது ஆகியவற்றுக்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

சென்ற காலத்திலே நடைபெற்ற வறட்சி நிவாரணப் பணிகளில் இருந்து நாம் புதிய அனுபவத்தைப் பெற்றுக் கொள்ளவேண்டும். வறட்சி நிவாரணப் பணிகளுக்காக 18 கோடி ரூபாயைச் செலவழித் திருக்கிறார்கள். இன்றைக்கு உள்ள அமைப்பின்படி காண்ட்ராக்ட் மூலந்தான் அந்த வேலைகள் நடைபெற்றிருக்கின்றன. இதிலே பாதிக்குப் பாதி கூட நன்மை விவசாயிகளுக்கோ, ஜனங்களுக்கோ கிடைப்பதில்லை. அதிலே தடைகள் இருக்கின்றன என்பது சகல தரப்பினரும் ஏற்றுக்கொள்ள வேண்டிய உண்மையாக இருக்கிறது. என்னுடைய தொகுதியில் அப்படிப்பட்ட அனுபவங்கள் இருக் கின்றன. வேலையில்லாத் திண்டாட்டத்தால் அவதிப் பட்டுக் கொண்டிருக்கின்ற ஆயிரக்கணக்கான மக்களைக் கொண்டு சர்க் காரோ அல்லது பஞ்சாயத்து யூனியன்களோ இந்த பஞ்ச நிவாரண வேலைகளை நேரடியாகச் செய்ய வேண்டும். அப்போதுதான் மக்களுக்கு உண்மையான நிவாரணம் கிடைக்கும்.

**திரு. கோ. இர. ஞானசம்பந்தன் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார், கனம் உறுப்பினர் சட்டசபைக்குத் தவறான தகவலைத் தருகிறார்கள், அதைத் திருத்திக்கொள்ள வேண்டுமென்பதற்காகத் தான் சொல்கிறேன். கிழக்குத் தஞ்சையில் கைப்பற்றியதாகச் சொன்னார்கள், கிழக்குத் தஞ்சை அல்ல, தஞ்சாவூர் நகரத்தில் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி :** கிழக்குத் தஞ்சை இல்லாமல் இருக்கலாம், தஞ்சாவூரில்தானே நடந்திருக்கிறது. முன்பு நடந்த மாநாட்டிலே போராட்ட வாசகங்கள் இருந்தன என்பதை நாம் அறிவோம். கிழக்குத் தஞ்சையிலே அப்படிப்பட்ட நிலைமை இரண்டு, மூன்று வருடங்களில் வளருவதற்கு நாம் இடம் கொடுக்க வேண்டுமா என்று கேட்க ஆசைப்படுகிறேன். படங்களை கைப் பற்றிவிட்டோம் என்று திருப்தி அடைந்துவிடக் கூடாது. அப்படிப் பட்ட தேச விரோத சக்திகளை, தேச விரோத எண்ணங்களை வளர விடுவது தவறான செயலாகும். வங்கத்திலே, கேரளத் திலே எத்தகைய சூழ்நிலைகள் வேண்டுமானாலும் இருந்துவிட்டுப் போகட்டும் என்று நாம் இருந்துவிடக்கூடாது, கண்காணிப்பாக இருக்க வேண்டும். . .

* **மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தேச விரோதப் படங்களைப் பகிரங்கமாக அறிவித்துவிட்டுப் போடுவது அல்ல, அல்லது இயக்கம் நடத்திச் செய்வதல்ல. இரவோடு இரவாக ஒட்டி விட்டுப் போகிறார்கள். ஆனாலும் கண்டுபிடிக்க வேண்டும். அப்படி ஒட்டுவோரைக் கண்டுபிடிக்க வேண்டும் என்பதிலே காவல் துறை யினர் கண்காணிப்பாக இருக்கவா வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். காவல் துறையினரும் மிகுந்த முனைப்போடும் ஊக்கத்தோடும் செயல்பட்டு வருகிறார்கள். காவல் துறையினர் மட்டுமல்ல, இரவோடு இரவாக இரகசியமாக நடந்து வருகிற இப்படிப்பட்ட காரியங்களைக் கண்டுபிடிப்பதில் பொது மக்களும் ஒத்துழைப்பு நல்கி அவர்களை அடையாளம் காட்ட வேண்டும். வங்கத்திலே பரவலாக இருக்கிற நிகழ்ச்சி இங்கே ஆரம்பிக்காமல் நிச்சயமாக முளையிலேயே அவை கிள்ளியெறியப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. என். சங்கரய்யா :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், வங்கத் திலே இருப்பது என்று அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள். வங்கத்தில் இருப்பது ஐக்கிய முன்னணியின் ஆட்சி, அதைப் பற்றிக் குறிப்பிடுகிறார்களோ என்று நினைக்கிறேன், அப்படிக் குறிப்பிட்டால் இன்னொரு ஆட்சியைப்பற்றி இந்த மன்றத்திலே குறிப்பிடுவது முறைதானா என்பதை அறிந்துகொள்ள விரும்பு கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** வேறு ஒரு மாநில அரசைப் பற்றிப் பேசக்கூடாது என்று கூறுகின்ற நண்பர் அவர்கள் இங்கு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வந்து வேறு ஒரு மாநிலத்தை



பற்றிப் பேசிக் கொண்டிருந்தபோது இந்த யோசனையைச் சொல்லி யிருந்தால் நலமாக இருந்திருக்கும்.

**திரு. என். சங்கரய்யா :** அப்படிப்பட்ட பொருளைப் பற்றி நாங்கள் பேசும்போது பேசுவதற்கு வாய்ப்பு இருக்கும் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** முதலில் பேசிய உறுப்பினர் அவர்கள் வங்கத்தின் ஆட்சியைப் பற்றிக் குறிப்பிடவில்லை. நானும் அங்கு நடைபெறுகின்ற ஆட்சியைப் பற்றிக் குறிப்பிடவில்லை; குறிப்பிடத் தேவையுமில்லை. அங்கு இப்படி வன்முறையில் ஈடுபடுகிறார்கள், தேசவிரோத சக்தி வங்கத்தில் தலைதூக்கி நிற் கிறது. அந்த நிலை இங்கு ஏற்பட விடக்கூடாது என்றார், நானும் அதற்கேற்ற வண்ணம் பதில் அளித்தேன்.

**திரு. என். சங்கரய்யா :** அங்கத்தினர் குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் வங்கத்தில் மட்டுமல்லாமல் இந்தியாவில் பல மாநிலங்களில் நடை பெற்று வருகிறது. குறிப்பாக வங்கத்தைப் பற்றி மட்டும் குறிப் பிடுவது அங்குள்ள ஐக்கிய முன்னணி ஆட்சியைப் பற்றிக் குறிப் பிடுவதாகத்தான் ஆகும். அப்படிப்பட்ட பேச்சு வரக்கூடாது என்பதற்காகத்தான் குறிப்பிட்டேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** வங்கத்தில் மாத்திர மல்லாமல் மற்ற பல இடங்களிலும் அந்த நிலைமை இருப்பதாக உறுப்பினர் அவர்கள் கூறுகிறார்கள். ஆகவே, 'வங்கம் போன்ற மாநிலங்களில்' என்று இணைத்துக் கொண்டால் நல்லது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர்கள் பேசு கின்றபோது இடைமறிக்கின்ற உரிமை அமைச்சர்களுக்கு மட்டுந் தான் இருக்கிறது. மற்ற உறுப்பினர்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பலாமே தவிர, விளக்கங்கள் கொடுப்பதற்கான உரிமை கிடையாது என்று தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

**திரு. என். சங்கரய்யா :** நான் பாயின்ட் ஆப் ஆர்டர் என்ற முறையிலேதான் எழுப்பினேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் எழுப்பிய பிரச்சினை பாயின்ட் ஆப் ஆர்டரின் கீழ் வராது. விளக்கங்கள் கூறுவது 'கிளாரிபிகேஷன்' அல்லது 'எக்ஸ்பிளனேஷன்' என்று தான் ஆகும். இடைமறித்துப் பேசுகின்ற உரிமை அமைச்சர் களுக்கு மட்டுந்தான் இருக்கிறதே தவிர, உறுப்பினர்களுக்கு இல்லை. நிறைய உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. இடைமறித்துப் பேசுகின்ற காரணத்தால் பத்து நிமிடத்திற்கு அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்றால் அதற்கு நேரம் இல்லை. ஆகவே, தயவு செய்து குறுக்கிடாமல் இருக்கும்படி உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் அறிக்கையிலே வரிகளைக் குறைப்பது பற்றி வலியுறுத்தியிருந்தது. தமிழ்நாட்டில் சமீப காலத்தில் நகர்ப்புற வீட்டு வரிகளை ஒன்றுக்குப் பத்து மடங்காக உயர்த்தியிருக்கிறார்கள். அமைச்சர்களைக் கேள்விகள் கேட்டால், உயர்த்தியது உயர்த்தியதுதான், குறைக்க வசதி இல்லை, வாய்ப்பு இல்லை என்று அறிவித்து விட்டார்கள். ஐந்து ரூபாய் வரியை 25 ரூபாய் என்று வீட்டு வரியை உயர்த்தியிருக்கிறார்கள். 50, 100 என்று வீடுகள் வைத்திருப்பவர்களுக்கு வாடகை அதிகமாக வாங்குகிறவர்களுக்கு, 200, 300 என்று எவ்வளவு வரியைப் போட்டாலும், பரவாயில்லை. சாதாரண பொதுமக்கள் மீது வரியை உயர்த்துவதை அனுமதிக்கக் கூடாது. புஞ்சைக்கு நில வரியை ரத்து செய்து இருக்கிறோம் என்பதும் விவசாயிகளுக்கு ஏமாற்றமாகத்தானிருக்கிறது. புஞ்சைக்கு எட்டணா நில வரியைத் தள்ளுபடி செய்து விட்டு தற்போது ஒரு ரூபாய் செஸ் வரி உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஆகவே, வரி எவருக்குப் போடவேண்டும் என்ற கொள்கை ஒரு அரசுக்கு இல்லாததாலேயே இந்த நிலை நீடிக்கிறது, வருவாய் அதிகமாக இருப்பவர்கள் மீது அதிக வரி விதிப்பதும், வருமானம் குறைவாக உள்ளவர்கள் மீது அதைக் குறைப்பது என்ற, கொள்கை இல்லாவிடில் பழைய நிலையே நீடிக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இந்த இடைக்காலத்தில் 12,500 விசைத்தறிகளைக் கொண்டு வருவதற்கு அமைச்சரவை முடிவு செய்திருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். இது பயங்கரமானதாகும். நமது மாநிலத்திலுள்ள நூற்பாலைகள் பிற மாநிலங்களிலுள்ள துணி ஆலைகளை நம்பி நிற்கின்றன. இந்த நிலைமையைத் தவிர்க்க விசைத்தறியைக் கொண்டு வருகிறோம் என்று காரணம் கூறப்படுகிறது. இந்தக் காரணம் உண்மையானது அல்ல. ஒரு விசைத்தறியினால் 20 கை நெசவாளர்களின் வேலை பாதிக்கப்படுகிறது. இதை நாம் உணர வேண்டும். இதனால் சுமார் 1½ லட்சம் கை நெசவாளர்களின் வேலை பாதிக்கப்படும். ஏற்கனவே வேலையில்லாத் திண்டாட்டம் பெருகிக் கொண்டிருக்கிறது. இன்று மாதம் ஒன்றுக்கு 30 அல்லது 40 ரூபாய் கூலி பெற்றுக்கொண்டிருக்கும் இந்த ஏழைத் தொழிலாளர்கள் ஏற்கனவே உள்ள வேலையில்லாத் திண்டாட்டப் பட்டாளத்தில் சேரப்போகிறார்கள். அந்த நிலைக்கு அவர்களை நாம் ஆளாக்கக்கூடாது. ஆகவே இதைப்பற்றி புனர்ப்பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கனவே இந்தச் சட்டசபையில் அன்றைய தொழில் அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். விசைத்தறியைப் புகுத்துவது என்றால் இச்சபையில் உள்ள சகல கட்சித் தலைவர்களையும் கலந்துதான் செய்வோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இடையில் இப்படி விசைத்தறி புகுத்தப்படுவதின் காரணமாக வேலையில்லாத் திண்டாட்டத்தை [illegible] மேலும் தமிழ்நாட்டில் அதிகமாக்குகிறோம்.





அடுத்து, விலைவாசி உயர்வைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம். விலைவாசிகள் குறைந்துள்ளதா அல்லது கூடியுள்ளதா என்பதைப் பற்றிய உண்மை நிலை என்ன என்று பார்க்க வேண்டும். விலைகள் பயங்கரமாக உயர்ந்திருக்கின்றன. அதில் மாநில அரசுக்கும் மத்திய அரசுக்கும் பொறுப்பிருக்கிறது. மத்திய அரசு சமீபத்தில் தேங்காய் எண்ணெய் டின் ஒன்றுக்கு 113 ரூபாய் என்று அதுவே உத்தரவிட்டிருக்கிறது. இன்று கடலெண்ணெய்யின் விலை ரூ. 64. ஒரு கிலோ மிளகாய் வத்தல் ரூ. 15. ஆகவே விலை உயர்வு என்பதில் மத்திய அரசும், மாநில அரசும் சம்பந்தப்பட்டிருக்கிறது. இந்த விலைவாசி உயர்வு காலத்தில் நாம் உணவுக் கட்டுப்பாட்டை நீக்கியிருக்கிறோம். மற்ற பொருள்கள் விலை உயர்ந்து கொண்டேயிருக்கும்போது அரிசி விலை மட்டும் எப்படிக் குறையும்? அப்படி கட்டுப்பாட்டை நீக்குவதின் மூலமாக தமிழ்நாட்டில் குறைந்த விலைக்கு உணவு கிடைக்குமா என்பது தான் கேள்வி. எங்கள் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரையில், கட்டுப்பாடு விலையில் தான் மக்கள் அரிசியை வாங்கி உட்கொள்ளவேண்டும் என்ற கொள்கையைக் கொண்டிருக்கும் கட்சி அல்ல. ஏன் இந்தக் கட்டுப்பாடு வந்தது? இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின்னால் பொருள்களை மறைத்து வைத்து, கள்ள மார்க்கட்டில் விற்று மக்களின் வருவாயைத் தட்டிப் பறிக்கும் ஒரு மோசமான பணி சமுதாயத்தில் வளர்ந்துவிட்ட காரணத்தால் எந்த எந்தப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படுகிறதோ அவைகளைக் கட்டுப்படுத்தக்கூடியதொரு நிலை ஏற்பட்டது. அதிலும் இன்றைய அரசு அமைப்பு முறை காரணமாக அது பூர்ணமாக அமல் நடத்தப்படாமல் மக்கள் இன்று பல சிரமங்களை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இன்று தமிழ்நாடு ஒரு உபரி மாநிலம் என்று மட்டும் கவனத்தில் வைத்துக்கொண்டு கட்டுப்பாட்டை நீக்கினால் எல்லா இடங்களிலும் நியாய விலையில் அரிசி கிடைக்கிறதா என்று பார்க்க வேண்டும். மதுரை மாவட்டத்தில் பல இடங்களில் 2½ ரூபாய், ரூ. 1.80, ரூ. 1.70, என்று அரிசி விற்கிறார்கள். 2½ ரூபாய் என்று சொல்லும்போது, நியாய விலையை விட ஒரு ரூபாய் அதிகமாகக் கொடுக்கவேண்டியிருக்கிறது. எல்லா இடங்களிலும் எல்லோருக்கும் சமமான, சரியான விலையில் அரிசி கிடைக்க முயற்சி செய்யவேண்டும். எல்லா இடங்களிலும் அரிசி கிடைக்கிறது என்று சொல்லிப் பிரயோஜனமில்லை. என்ன விலைக்குக் கிடைக்கிறது என்பதுதான் கேள்வி. மாதம் 200 ரூபாய்க்கு மேல் வருமானம் வருபவர்களுக்கும் படி அரிசி வேண்டும் என்றும் சர்க்கார் சிப்பந்திகள் கூறுகிறார்கள். மக்களுக்கு நியாய விலையில் அரிசி கொடுக்க வேண்டியதைத் தட்டிக் கழிக்கும் முயற்சியே கட்டுப்பாட்டைக் கைவிடும் முயற்சி. இந்த விஷப் பிரச்னையில் சர்க்கார் இறங்கக் கூடாது என்று எச்சரிக்க விரும்புகிறேன்.

[திரு. என். வரதராஜன்] [1970 சனவரி 22

அடுத்து, ஆசிரியர்கள், சர்க்கார் சிப்பந்திகளின் அதிருப்தி வளர்ந்து கொண்டிருக்கிறது. ஆசிரியர்கள் பல ஆயிரக்கணக்கில் சென்னை நகருக்கு வந்துவிட்டுப் போயிருக்கிறார்கள். அவர்கள் ஏழு கோரிக்கைகளைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். அவர்களின் முக்கியமான கோரிக்கைகளையாவது கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். மாதம் ரூ. 30 இடைக்கால நிவாரணம் வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். அதை நிறைவேற்றவேண்டும்.

அடுத்து தனியார் துறைப்பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு சட்டப் பாதுகாப்பு கேட்கிறார்கள். இதையாவது நிறைவேற்ற வேண்டும்.

அதேபோல், சர்க்கார் சிப்பந்திகள் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் இருந்தே கேட்கிறார்கள், ரகசியக் குறிப்பேடுகள் முறை ஒழிக்கப் படவேண்டுமென்று. அதைக்குறித்து ஏற்கனவே மறைந்த முதல் அமைச்சர் அவர்களும் கொள்கை ரீதியாக ஏற்றுக்கொண்டிருக் கிறார்கள். அதையும் ஏன் இதுவரை நிறைவேற்றவில்லை? அந்த முறையை ஒழிக்கவேண்டும். அதோடு அவர்களுக்கு இடைக்கால நிவாரணமும் அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. ரா. ராமச்சந்திர துரை: மதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. ஆளுநர் அவர்களின் உரை மீது நடைபெறுகின்ற விவாதத்தில் எனக்குப் பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்தமைக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் பேசத் தொடங்குவதற்கு முன்பு தலைவர் அவர்களிடம் ஒரு வேண்டுகோள். நான் பேசுகிறபோது அமைச்சர்களானாலும் சரி, அங்கத்தினர்களானாலும் சரி குறுக்கீடு செய்தால் அவற்றை எண்ணி வைத்துக்கொண்டு எவ்வளவு குறுக்கீடுகள் நடக்கின்றனவோ அதற்குத் தகுந்தமாதிரி எனக்குப் பேச நேரம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆளுநர் அவர்களது உரையில் முதன்முதலாக, முன்னாள் முதல் அமைச்சர் அவர்கள் மறைந்தவுடன் அதற்கடுத்தபடியாக ஆட்சிக்கு வந்திருக்கும் நம் மாண்புமிகு முதல் அமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் அமைச்சரவை வந்தது ரொம்ப அமைதியான முறையில் இந்த நிகழ்ச்சி நடந்ததாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். பத்திரிகைகளில் நாம் பார்த்தோம். அறிக்கைகளின் மேல் அறிக்கைகள் வந்ததை. சவால்களுக்கு மேல் சவால்கள் வந்தன. ஒரு மேல்சபை உறுப்பினர் உண்ணாவிரதம் இருப்பேன் என்று சொல்லியதும், இரண்டாவதாக இருப்பவன் மூன்றாவதாக வரமாட்டேன் என்று சொன்ன நிகழ்ச்சிகளை எல்லாம் பார்த்தோம். எல்லாம் அவ்வளவு சுமுகமாக முடிந்ததாகக் கூற முடியாது.

அடுத்தபடியாக, இந்த நாட்டில் நடைபெறுகிற நிகழ்ச்சி களையும், சில அசம்பாவித சம்பவங்களையும் இந்த அமைச்சரவைக்கு அறிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.



1970 சனவரி 22] [திரு. ரா. ராமச்சந்திர துரை]

அரசாங்க ஊழியர்கள் கட்சிக் கூட்டங்களில் தலைமை வகிக்கிறார்கள். கந்தர்வகோட்டையில் ஒரு நிகழ்ச்சி நடந்தது. கந்தர்வகோட்டை திராவிட முன்னேற்றக் கழகம் சார்பாக நிலம் இல்லாத ஏழை விவசாயிகளுக்குப் பட்டா வழங்கும் விழா. இதற்குத் தலைமை வகிப்பவர் தஞ்சாவூர் மாவட்ட டி.ஆர்.ஓ. நோட்டீஸ் இருக்கிறது. ஆகவே அது கட்சிக்கூட்டமாகக் கருதப் படுகிறது. டி.ஆர்.ஓ. தலைமையில் மாண்புமிகு அமைச்சர் திரு. சுப்பையா அவர்கள் பட்டா வழங்குகிறார்கள். இரண்டு வட்டச் செயலாளர்கள் சொற்பொழிவு ஆற்றுகிறார்கள். என் தொகுதியில் 1½ மாத காலத்தில் நான்கு பட்டா வழங்கும் நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. இந்த நான்கு நிகழ்ச்சிகளுக்கும் அத்தொகுதி சட்டமன்ற உறுப்பினராகிய என்னைக் கலக்கவில்லை. என்னிடம் பட்டா வழங்குவதுபற்றி அறிவிப்பு கொடுக்கவில்லை. இந்த நான்கு நிகழ்ச்சிகளையும் வேறு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை வைத்து நடத்தியிருக்கிறார்கள். இதைப் பார்க்கும் போது கட்சியை வளர்ப்பதற்கு இம்மாதிரிப் பயன்படுத்தியிருக் கிறார்கள் என்று எண்ணவேண்டியிருக்கிறது. ஐந்தாம் தேதி அன்று அந்த நிகழ்ச்சி நடந்தது. அன்று காலை டி.ஆர்.ஓ. அவர்களை நான் நேரில் சந்தித்து இந்தப் பத்திரிகையைக் காட்டி இதன் பொருள் என்ன, திராவிட முன்னேற்றக் கழகம் சார்பாக என்று போட்டிருக்கிறதே. இது உங்கள் கவனத்திற்கு வராதிருந்தாலும் கூட நீங்கள் அந்தக் கூட்டத்தில் கலந்து பேசுகிற நேரத்தில் நீங்கள் அவசியம் இதற்கு மறுப்பு தெரிவிக்கவேண்டும், அது மட்டுமல்ல. இந்த நோட்டீஸை அச்சடித்தவர்கள் அந்தக் கூட்டத்தில் மறுப்பு சொல்லவேண்டுமென்று சொல்லியும் எந்த விதமான நிகழ்ச்சியும் நடக்கவில்லை. இதோ இருக்கிறது நோட்டீஸ். இதை துணைச் சபாநாயகர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆகவே இந்த அரசாங்கமும், அமைச்சர்களும் தலையிட்டு இந்த நோட்டீஸ் அடித்தவர்கள் மீது தகுந்த நடவடிக்கைகள் எடுக்காவிட்டால், அல்லது நோட்டீஸ் அடித்தவர் கள் தகுந்த மறுப்பு கொடுக்காவிட்டால் நிச்சயமாக எங்கள் தொகுதியில் நடக்கும் அரசாங்க நிகழ்ச்சிகளில் பெரிய கிளர்ச்சி செய்வேன் என்று அறிவிக்க விரும்புகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக,—'காஞ்சி' என்று ஒரு பத்திரிகை,— 12-0
அந்தப் பத்திரிகைக்குக் காதி இலாக்காவிலுள்ள ஊழியர்கள், சந்தா சேர வேண்டுமென்று ஒரு கவர்ன்மெண்ட் ஆபீசர்—ஒரு டெபுடி டைரக்டர்—அவர்கள் சர்க்குலர் அனுப்பியிருக்கிறார்கள். தமிழ்நாடு . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எதிலிருந்து வாசிக் கிறீர்கள்?

திரு. ரா. ராமச்சந்திர துரை: தனியாகக் குறிப்பெடுத்திருக் கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** எதிலிருந்து ?

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** சர்க்குலரிலிருந்து.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** எந்தச் சர்க்குலரிலிருந்து ?

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** என் உள்பட படிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சபையிலே எப்படி வாசிக்க முடியும் ?

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** அந்தச் சர்க்குலருடைய காப்பியை . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதை எப்படி வாசிக்க முடியும் ? சர்க்குலரின் காப்பியை எப்படி வாசிக்க முடியும் ?

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** விஷயத்தைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அந்த டெபுடி டைரக்டர் அவர்கள் காதி இலாகாவிலுள்ள ஊழியர்கள் அனைவருக்கும், இந்தக் 'காஞ்சி' பத்திரிகைக்கு சந்தாதாராக வேண்டுமென்று சர்க்குலர் அனுப்பியிருக்கிறார்கள் என்றால் ஒரு கட்சியின் பத்திரிகைக்காக அரசாங்க டெபுடி டைரக்டர் அனுப்பியிருக்கிறார்கள் என்று எண்ணும் நேரத்தில் அரசாங்க உத்தியோகஸ்தர்களை கட்சியை வளர்க்க இவர்கள் நியமித்திருக்கிறார்களோ என்று எண்ண வேண்டியிருக்கிறது.

அடுத்தபடியாக, சென்ற கூட்டத்தில், சட்டசபை நடந்த நேரத்தில் ஒரு பெரிய நிகழ்ச்சியை இங்கு குறிப்பிட்டேன். நாமக்கல் என்ற கல்லூரி பெயரால் ஒரு ஊழல் நடந்திருப்பதாகவும், ஒரு பட்டா நில சம்பந்தமாக ஒரு பிரச்சினையையும் இந்தச் சட்டசபையிலே குறிப்பிட்டேன். ஒரு உறுப்பினர், தன்னுடைய கவனத்திற்கு வந்த பிரச்சினையை, தன்னுடைய சந்தேகத்தைச் சட்டசபையிலே கிளப்ப வேண்டியதற்கு எங்களுக்கு உரிமை இருக்கிறது. அதற்குப் பதில் சொல்ல அமைச்சரவர்களும் கடமைப்பட்டவர்கள். அந்த முறையிலே அந்த இரண்டு பிரச்சினைகளையும் வைத்த நேரத்தில், அந்த உறுப்பினர் இங்கு இல்லை, குறிப்பிட்ட அமைச்சரவர்களும் இங்கு இல்லை. நான் சென்ற பிறகு இங்கு வந்து அதற்கு இரண்டு பேரும் விளக்கம் தந்தார்கள். அந்த நேரத்தில் நான் இங்கு வந்தேன். அன்று முதலமைச்சராக அமர்ந்திருந்த கருணாநிதி அவர்கள், நான் கூட விசாரணை கேட்கவில்லை, அவர்களாகவே எழுந்து, நீங்கள் இதற்கு விசாரணைக்குத் தயாரா என்று சவால் விட்டார்கள். நான் அந்தச் சவாலை ஏற்றுக் கொண்டேன். இன்று, 3 மாதம், 4 மாதங்களுக்கு மேல் ஆகிறது. ஆனால், இதை சபாநாயகரவர்கள் இந்தத் தேதியைக் குறிப்பிட வேண்டியவர்கள், நான் சபாநாயகரவர்கள் [illegible] குற்றம் சாட்டவில்லை,—நான் குற்றம் சாட்டியது, நான்





என்னுடைய சந்தேகத்தைக் கிளப்பியது அமைச்சர் மீது, சட்டமன்ற உறுப்பினர் மீது—ஆனால், இதுவரையில் அவர்கள் ஏன் தேதி வைக்கவில்லை என்றாவது இந்த இடத்தில் கேட்டிருக்கிறார்களா ? இல்லை. நான் கேட்கிறேன், ஏன் தேதி வைக்கவில்லை ? அதனால், இந்தக் குற்றத்தைச் செய்திருப்பார்கள் என்று எண்ணுகின்ற அளவில்தான் நான் நினைக்கிறேன்.

ஒரு வட்டச் செயலாளர் அவர்களுக்கு நன்கொடை தருகிறேன் என்று சொல்லி, புதுக்கோட்டை பகுதி, ஆலங்குடி தொகுதியில், அதற்காக அங்குள்ள தாசில்தார்களும், அரசாங்க உத்தியோகஸ்தர்களும் நன்கொடை வசூலிக்கிறார்கள். இம்மாதிரி நிகழ்ச்சிகளெல்லாம் நீடித்து விடக்கூடாது என இந்த மன்றத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஜனநாயகத்திலே, எழுத்துரிமை, பேச்சுரிமை எல்லோருக்கும் உண்டு. கிட்டத்தட்ட காங்கிரஸ் சுதந்திரம் வாங்கிய பிறகு எழுத்துரிமை எல்லாம் கொடுத்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் எவ்வளவோ பேசியிருக்கிறார்கள். இப்பொழுது நடக்கிற வழக்குகள் கொஞ்சநஞ்சமல்ல. கிட்டத்தட்ட நாத்திகம் பத்திரிகை மீது 30 வழக்குகள், எம். கே. டி. சுப்பிரமணியம் என்ற பேச்சாளர் மீது வழக்குகள். இதுமாதியான வழக்குகளைப் பார்த்தால் நூற்றுக்கணக்கான வழக்குகள் இன்று நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. சுதேசமித்திரன் பத்திரிகை ஏதோ எழுதினார்கள் என்பதற்காக அதை சிந்தாதிரிப்பேட்டையில் நடந்த கூட்டமென எண்ணுகிறேன், அதில் பத்திரிகையைக் கண்டித்து எச்சரித்து பயமுறுத்தியிருக்கிறார்கள் அமைச்சரவர்கள். இதை முரசொலி பத்திரிகையில் பார்த்தேன். இம்மாதிரி நிகழ்ச்சிகள் நடைபெறாமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, ஆளுநர் அவர்களின் உரையின் மீது பேச சந்தர்ப்பம் அளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

■ **திரு. எம். சுரேந்திரன் :** மாண்புமிகு தலைவரவர்களே, இங்கே ஆளுநர் உரையின் மீது சில கருத்துக்களைச் சொல்வதற்கு முன்னால், இந்தச் சபையிலே இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர்கள் எல்லாம் தோழமைக் கட்சிகளைச் சேர்ந்த கட்சி என்று சொல்லும் பிரஜா சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினன் நான் என்று நினைவுபடுத்திக் கொண்டு என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இதிலே அண்ணா அவர்களுடைய மறைவுக்குப் பின்னால் அமைச்சரவை ஏற்படுத்திய நிலைமை ஜனநாயகம் நல்லமுறையில் செயல்படுவதற்கான ஒரு எடுத்துக்காட்டாகக் கூறப்பட்டிருக்கின்றது. அது, நல்லமுறையிலே ஏற்பட்ட ஒரு அமைப்பு என்று கருதினாலும்கூட, இந்த அரசிலே ஜனநாயகம் சரியாக மதிக்கப்படுவது இல்லை என்பதற்கு ஒரு நிகழ்ச்சியை மட்டும் சொல்லிக்

கொள்ள ஆசைப்படுகிறேன். என்னுடைய தொகுதியிலே மேட்டூர் நகரம், டவுன்ஷிப் கமிட்டியால் நிர்வகிக்கப்படுகிறது. அந்த டவுன்ஷிப் கமிட்டி 1936-ஆம் ஆண்டிலேயிருந்து ஜில்லா போர்டினுல் செயல்பட்டு வந்தது. 1940-ம் ஆண்டிலே அம்மாதிரி செயல்படுவது முடியாது, என்று கருதி ஒரு டவுன்ஷிப் கமிட்டி சட்டம் நிறைவேற்றி சில வெளியாட்களேயும் போட்டு நிர்வகிப்பது என்று முடிவு செய்தார்கள். அதற்குப் பின்னுல், சிறிது விரிவு படுத்தி தொழிலாளர்களின் பிரதிநிதிகளேயும் கொண்ட ஒரு அமைப் பாகச் செய்ய வேண்டுமென்று விரும்பி மாற்றம் செய்தார்கள். இப்பொழுது அந்த டவுன்ஷிப் கமிட்டி பிரதிநிதித்துவம் இல்லாத ஒரு நிர்வாக அமைப்பாக இருக்கிறது. எல்லா அரசியல் கட்சிகளும், தன்னுடைய தீர்மானத்தின் மூலம் டவுன்ஷிப் கமிட்டியைக் கலேக்க வேண்டுமென்று தீர்மானம் நிறை வேற்றியிருக்கிறது. அங்கிருக்கும் மக்களெல்லாம் மகஜர் தயாரித்து அரசாங்கத்திற்கு அளித்திருக்கிருர்கள். ஆனுல், அரசாங்கத்திலே யிருந்து வந்த பதிலில், “இப்பொழுது அதைக் கலேக்க வேண்டிய தில்லே” என்று மட்டும் குறிப்பிட்டிருக்கிறதே தவிர, அதற்கான காரண காரியங்களேச் சொல்லவில்லே. 1940-ஆம் வருஷத்திலே சட்டம் நிறைவேற்றியபொழுது அந்தச் சட்டத்தின் நோக்கம் சொல்லப்பட்டுள்ளது. அதனுடைய வருமானம் குறைவாக இருப்பதால், டவுன்ஷிப் கமிட்டி நியமிக்கப்பட்டது. இப்பொழுது வருமானம் உயர்ந்திருக்கிறது, ஜனத்தொகை உயர்ந்திருக்கிறது. எல்லா மக்களும், டவுன்ஷிப் கமிட்டியைக் கலேத்துவிட்டு நகரசபையாக ஆக்க வேண்டுமென்று விரும்புகிருர்கள். அப்படிப் பட்ட ஜனங்களின் உணர்வுகளே மதித்து, அதற்கு அனுசரணேயாகச் செயல்படுவதுதான் ஜனநாயகம் என்ருல் அம்மாதிரி ஜனநாயகத்தை இந்த அரசு நிலேநிறுத்தச் செய்யவில்லே என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

வறட்சி நிவார்ணம்பற்றி ஓரிரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த வறட்சி நிவாரணம் சம்பந்தமாக எல்லோரும் கூறுவதற்கு முன்னுல் ஜனவரி மாதத்திலே அரசின் கவனத்திற்கு “இங்கே வறட்சி ஏற்பட்டிருக்கிறது, இதிலே கவனம் செலுத்த வேண்டுமென்று” நான் கடிதம் எழுதியிருந்தேன். அதற்குப் பின்னுல் சட்ட சபையிலே வறட்சி நிவாரணப் பகுதி என்பதை எங்கெங்கே அறிவிக்க வேண்டுமென்று அந்தந்த ஜில்லாவிலே இருக்கின்ற கலெக்டர்கள்தான் செய்ய வேண்டுமென்று இந்தச் சபையிலே அமைச்சரால் சொல்லப்பட்டது. அதற்குப் பின்னுல் அங்கே ஒரு வறட்சி நிவாரணக் கமிட்டி, கோட்டாட்சித் தலேவர் தலேமையில் அமைக்கப்பட்டது. வறட்சி நிவாரணத்திற்காக விசேஷமாக நியமிக்கப்பட்டிருந்த திரு. ராயப்பா அவர்கள் வந்திருந்து கூட்டத்தை நடத்திஞர்கள். இப்படியிருந்தாலும்கூட, அந்தப் பகுதியை வறட்சி நிவாரணப் பகுதியாக ஏற்றுக்கொள்ள [illegible] பின்னுலே கலெக்டருக்கு அறிவித்தோம், நாங்கள் [illegible] என் வறட்சி நிவாரணப் பகுதியாக அறிவிக்கவில்லே





என்று. அவர்கள், எனக்கு அதிகாரம் இல்லே, அதை அமைச்சர்கள் தான், அரசாங்கம்தான் செய்ய வேண்டுமென்று சொன்னுர்கள். ஒரு சந்தர்ப்பத்தில் ஸ்தல ஸ்தாபன அமைச்சரவர்கள் ஜில்லாவின் தலேநகரத்தில் எல்லோரையும் கூப்பிட்டு, வறட்சி நிவாரணப் பணிகளேப்பற்றி ஆராய்ந்தபொழுது நான் கூறினேன், “கலெக்டரிடத்திலே கேட்கின்றபொழுது, வறட்சி எங்கே என்று தீர்மானிப்பது அரசாங்கம் என்று சொல்லுகிருர்கள், அரசாங்கத்திலே கேட்டால் கலெக்டர் தீர்மானிக்க வேண்டுமென்று சொல்லுகிருர்கள்”. இதன் உண்மை நிலே என்ன என்று கேட்ட பொழுது அவர்கள் ஏளனமாகப் பேசினுர்கள். சட்டசபையிலே பேச வேண்டிய பேச்சை இங்கே பேசுகின்றீர்களே என்று கூறினுர்கள். ஆகவே, நான் கூறுகிறேன், உண்மையிலே வறட்சி ஏற்பட்டு பலயிடங்களில் குடிதண்ணீர் கூட இல்லாமல் மக்கள் கஷ்டப்பட்டார்கள். வாக்குறுதி கொடுத்தார்கள், வறட்சி நிவாரணப் பகுதி என்று அறிவிக்காவிட்டாலும் மற்றப் பகுதியிலே என்னென்ன சலுகைகள் அளிக்கப்படுகிறதோ, அவ்வளவு சலுகைகளும் அளிக்கப்படும் என்ருர்கள். ஆனுல், அவ்வாறு அளிக்கப்படவில்லே. வறட்சி நிவாரணப் பகுதி என்றும் அறிவிக்கப் படவில்லே. அது ஒரு பிரஜா சோஷலிஸ்ட் கட்சியின் உறுப்பினர் உள்ள தொகுதியாக இருப்பதால் வறட்சி நிவாரணப் பகுதியாக அறிவிக்கப்படவில்லே. அது, திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் உள்ள தொகுதியாக இருந்திருந்தால் வறட்சி நிவாரணப் பகுதியாக அறிவிக்கப்பட்டிருக்கும் என்று நம்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** பாராளுமன்றத்திற்குச் சென்றிருப்பவர் திராவிட முன்னேற்றக் கழகத்து உறுப்பினர்தான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதோ பிரஜா சோஷலிஸ்ட் கட்சி உறுப்பினராக இருப்பதால் என்று, இப்படிப் பேசுவது சரியாக இல்லே.

**திரு. எம். சுரேந்திரன்:** விளக்கத்திற்கு நன்றி. ஒன்றிரண்டு விஷயங்களே நான் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்து, இன்னெரு சின்ன விஷயம். அங்கே மேட்டூர் டவுன்ஷிப் கமிட்டி என்று சொல்வதிலே, இதற்கு முன்னுலே அந்தத் தொகுதி எம்.எல்.ஏ. மெம்பராக இருந்தார்கள். எல்லா டவுன்ஷிப் கமிட்டியிலும் சட்டசபை உறுப்பினர் மெம்பராக நியமிக்கப் பட்டிருக்கிருர்கள். ஆனுல், மேட்டூர் டவுன்ஷிப் கமிட்டியில் அவ்வாறு நியமிக்கப்படவில்லே. அதற்கும் மேற்குறிப்பிட்டது போன்ற காரணம்தான் சொல்லவேண்டும்.

அடுத்தபடியாக, கடந்த செப்டம்பர் மாதம், திரு. கருணாநிதி அவர்கள் என்னுடைய தொகுதிக்குச் சுற்றுப்பிரயாணம் வந்திருக் கிருர்கள். அப்படி வரும்பொழுது செப்டம்பர் மாதம் இரண்டொரு நாள் சட்டசபை நடந்துகொண்டிருந்தது. அந்த நேரத்திலே

[திரு. எம். சுரேந்திரன்] [1970 சனவரி 22

" நீங்கள் எப்பொழுது வரப்போகிறீர்கள், என்னென்ன உங்கள் திட்டம் என்று விசாரித்தேன். அப்பொழுது அவர்கள் கூறினார்கள், நான் இப்பொழுது வரப்போவதில்லை, இரண்டொரு மாதங்கள் கழித்துத்தான் என்று குறிப்பிட்டார்கள். அதற்கு முன்னால் ஜில்லா கலெக்டரை விசாரித்தேன், " இங்கே முதலமைச்சரவர்கள் வருகிறார்களாமே, அவர்களுடைய திட்டங்கள் என்னென்ன", என்னென்ன வேலைகளுக்காக வருகிறார்கள் என்று விசாரித்த பொழுது, தனக்கு அந்த விஷயம் தெரியாது என்று கூறினார்கள். இந்த நிலையில் முதல் அமைச்சர் வந்தபொழுது நான் தொகுதியில் இல்லாமல் போய்விட்டேன்.

எனக்கு முன்பு நண்பரொருவர் பேசினார் பட்டா வழங்கியது பற்றி. சப்-கலெக்டர் அவர்கள் ஒரு இன்விடேஷனை அனுப்பியிருந்தார்கள். இதுவும் குறித்த நேரத்தில் அனுப்பவில்லை. அழைப்பிலே என்னுடைய பெயரைச் சேர்க்கவில்லை. இம்மாதிரி நிகழ்ச்சி நடப்பதாக என்னிடத்தில் சொல்லவில்லை. என்னிடத்திலே முதல் அமைச்சர் வரவில்லை என்று கூறி அதற்குப் பின்னால் வந்திருக்கிறார்கள். வருவதுபற்றி முறையாக எனக்குத் தகவல் இல்லை. பட்டா வழங்கும்பொழுது அந்தப் பகுதியிலே உள்ள உறுப்பினர்களைக் கலந்து செய்ய வேண்டிய சாதாரண ஜனநாயகப் பண்பு இதில் கடைபிடிக்கவில்லை. எதிர்க்கட்சிக்குச் செய்யவில்லை என்றாலும், தோழமைக் கட்சியிடம் இதுபோன்று நடக்கலாமா ?

இன்னொன்று கூற விரும்புகிறேன். அங்கே நகரத்திலே இருக்கும் நிலத்தை விட்டு மனைக்கு வழங்க 1954-ஆம் வருஷத்திலே உத்தரவு போடப்பட்டது. இன்னும் 3,000 அப்ளிகேஷன்கள் பைசல் ஆகாமல் இருந்துகொண்டிருக்கின்றன. அங்கு இரண்டு டெப்யூடி தாசில்தார்கள், இரண்டு ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள், இரண்டு சர்வேயர்கள், 4 சைன்மென், ப்யூன், டைபிஸ்ட் இவ்வளவு பேர்களையும் ஸ்பெஷலாக நியமித்திருக்கின்றனர். இதுவரை இதற்காக சுமார் ரூ. 3-லிருந்து 4 லட்சம் வரை செலவு செய்யப் பட்டு இருக்கிறது. இருந்தாலும், இந்தப் பிரச்னை தீரவில்லை. 1970-வது வருஷத்திலாவது முடியுமா ?

வீட்டு மனைக்கு நிலம் வழங்குவது என்று சொல்லும்பொழுது மிக எளிய முறையில் வழங்கக்கூடிய ஒரு நிலை இருக்கவேண்டும். செண்டுக்கு ரூ. 10, அல்லது ரூ. 15 அல்லது ரூ. 30 என்று விலையை 1954-ல் நிர்ணயித்தார்கள். இன்றைக்கு ரூ. 200, 300, 400 என்று செண்டுக்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. அதோடு சமீபத்தில் 1970-ல் ஒரு செண்டு விலை மீண்டும் ரூ. 50 அதிகப் படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, வீட்டு மனைக்கு நிலத்தை விநியோகிப்பது என்பது ஏதோ வியாபாரம் செய்து சர்க்கார் பணம் உண்டாக்குவது போல எடுத்துக்கொண்டால், அது முறையாக இல்லை. (மணி அடிக்கப்பட்டது). இன்னும் சிறிது நேரம் எனக்கு அளித்தால் மிகவும் உதவியாக இருக்கும்.



1970 சனவரி 22]

(அடுத்து திரு. பெ. சௌந்தரபாண்டியன் பேசுவதற்கு அழைக்கப்பட்டார்).

* திரு. பெ. சௌந்தரபாண்டியன் : சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கவர்னர் அவர்களின் உரையின் மீது எனக்குப் பேசுகின்ற நல்ல வாய்ப்பினை அளித்தமைக்கு என்னுடைய உளங்கனிந்த நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு கவர்னர் அவர்கள் மறைந்த மாமேதை அண்ணா அவர்களின் ஆற்றலையும், அண்ணாவின் ஆட்சித் திறமையையும், அவர் இந்த நாட்டு மக்களுடைய உள்ளத்திலே பெற்றுள்ள இடத்தையும் எடுத்துக் காட்டியிருப்பது அவருடைய பெருந்தன்மையை எடுத்துக்காட்டுவதாகும். ஆகவே, அந்த மாமேதையைப் பற்றிக் கூறிய கவர்னர் அவர்களுக்கு என்னுடைய உளமார்ந்த நன்றியை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த மூன்று ஆண்டுக் காலத்தில் திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்ற பிறகு, எல்லாத் துறைகளிலும் எந்த அளவுக்கு முன்னேற்றத்தைப் பெற்றிருக்கிறோம் என்பதை கவர்னர் அவர்கள் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார். நான் இந்த மாமன்றத்தில் ஒவ்வொரு துறையிலும் திராவிட முன்னேற்றக் கழக அரசும், காங்கிரஸ் அரசும் எந்த அளவுக்கு செயல் திட்டத்தை வகுத்திருக்கிறது என்பதற்கு பல ஆதாரங்களைக் காட்ட விரும்புகிறேன். மின்சாரத் துறையை எடுத்துக்கொண்டால், கழக அரசு பொறுப்பேற்றவுடன் இந்த நாட்டில் எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்கவேண்டும் என்ற ஒரு நல்ல முடிவை உருவாக்கி, நடப்பு ஆண்டில் ஏறத்தாழ 3,000 கிராமங்களுக்கு மின்சாரம் வழங்க வேண்டும் என்று திட்டம் தீட்டியது. ஆனால், முன்னேற்றக் கழக அரசின் திறமையாலும், ஆற்றலாலும், நுண்ணிய அறிவாலும், ஏறத்தாழ 6,000 கிராமங் களுக்கு மின்சாரம் வழங்குகின்ற ஒரு சாதனையை ஏற்படுத்தி யிருக்கிறது என்பதை இந்த மாமன்றம் தெளிவாக அறிய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, 1967-ம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கு முன்பு 20 ஆண்டு காலம் ஆட்சி செய்த காங்கிரஸ் அரசு காலத்தில் மின்சார பம்பு செட்டுகளுக்கு இணைப்பு வழங்குவதிலே அவர்கள் சராசரி ஒரு ஆண்டுக்குக் கொடுத்த இணைப்புகள் ஏறத்தாழ 25,000 தான். ஆனால், முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்றவுடன் கிராம மக்களுக்கு, விவசாயிகளின் பம்பு செட்டுகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு சராசரியாகக் கொடுக்கப்பட்ட இணைப்புகளின் எண்ணிக்கை 50,000. இந்த மாமன்றம் நன்முறை எண்ணிப்பார்க்கவேண்டும். காங்கிரஸ் ஆட்சி காலத்தில் மின்சார பம்பு செட்டுகளுக்கு வழங்கப்பட்ட இணைப்புகள் சராசரி 25,000, முன்னேற்றக் கழக அரசினால் வழங்கப்பட்ட இணைப்புகள் சராசரி ஆண்டு ஒன்றுக்கு 50,000. எங்களுடைய திறமை உங்களைவிட இரண்டு மடங்காக

பளிச்சிட்டுக் காட்டுகிறது என்பதை இந்த மாமன்றமும், காங்கிரஸ் கட்சி சட்ட மன்ற உறுப்பினர்களும் உணரவேண்டும் என்று விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

மின்சார வாரியத்தில் தினக் கூலிகளாக பணியாற்றுகிறவர்களுக்கு 20 ஆண்டு காலமாக ஆண்ட காங்கிரசார் அளித்த சம்பளம் ஏறத்தாழ சராசரியாக இரண்டு ரூபாய் தான். ஆனால் மூன்று ஆண்டு காலத்தில் புதிதாக ஆட்சிப் பொறுப்பினை ஏற்ற முன்னேற்றக் கழக அரசு அவர்களுக்குச் சராசரி சம்பளமாக மூன்று ரூபாய் கொடுத்து வருகிறோம். இதனால் மின்சார வாரியத்தில் தினக் கூலியாக பணியாற்றிவருகின்ற 12,000 தொழிலாளர்கள் பயன்பெற்றிருக்கிறார்கள். இதனால் நம்முடைய அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு கூடுதல் தொகையாக ரூ. 20 லட்சம் செலவாகிறது என்பதை இந்த மாமன்றமும், காங்கிரஸ் நண்பர்களும் தெளிவாக உணரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மின்சாரத் துறையைப் பொறுத்தவரையில், பட்டப் படிப்புப் படித்து முடித்த பொறியாளர்களுக்கு, திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, கிட்டத்தட்ட 600 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் மாமன்றமும் மக்களும் வரவேற்பார்கள் என நம்புகிறேன். 1972-க்குள் தமிழகத்தில் இருக்கும் எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் அளிக்க வேண்டும் என்கிற நல்ல திட்டத்தைத் தமிழக அரசு தீட்டி, விரைவில் செயல் படுத்த, மாண்புமிகு முதல் அமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள், மின்சாரத் துறை அமைச்சருக்கும் அலுவலர்களுக்கும் ஆக்கமும் ஊக்கமும் தந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நாடு அறியும்.

நம்முடைய தமிழக அரசு, முதல்வர் கலைஞர் அவர்களின் தலைமையில் நல்ல பல பணிகளைச் செய்து வருகிறது. கிராம மக்களுக்கு அடிப்படைத் தேவையான குடி தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க என்ன என்ன ஆக்கப் பணிகள் செய்கிறார்கள் என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். "நீர் வழங்கு வடிகால் வாரியம்" என்று ஒரு நிறுவனத்தை அமைத்து, அதன் மூலம் எல்லாக் கிராமங்களுக்கும் குடிநீர் வழங்கத் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. மேலும், 21 நகராட்சிகள், 7 பேரூராட்சிகள் இவற்றிற்குத் தேவையான குடிநீர் வசதி செய்ய ஆயுள் காப்பீட்டுக் கழகம் ரூ. 11 கோடிக்கு ஏற்பு அளித்தது. அதுவும் செயல்படும் நிலை உருவாகியிருப்பதையும் காங்கிரஸ் நண்பர்கள் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

எனக்கு முன்னால் பேசிய வேலாயுதம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், பஞ்சாலைத் தொழிலாளர்களைப் பற்றிக் குறிப்பிடுகையில் முன்னேற்றக் கழகம் பதவியேற்ற பிறகு பஞ்சாலைத் தொழிலாளர்களுடைய நிலைமை சீர்கெட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்றுக்





கொண்டபிறகு அவர்கள் எவ்வளவு நன்மைகள் அடைந்திருக்கிறார்கள் என்பதை காங்கிரஸ் நண்பர்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். இருபது ஆண்டு காலம் ஆட்சியில் இருந்தபோது, ஒவ்வொரு தீபாவளியின் போதும், பொங்கல் திருநாள் சமயத்திலும், எத்தனை போனஸ் தகராறுகள் ஏற்பட்டு, கிளர்ச்சிகள் நடந்தன என்பதையெல்லாம் சட்ட மன்ற நடவடிக்கைக் குறிப்புகளில் பார்க்கலாம். ஆனால், முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பு ஏற்றபிறகு, கடந்த தீபாவளி, பொங்கல் நேரங்களில் தொழிலாளர்கள் மத்தியில் எந்தவிதமான கிளர்ச்சியும் நடக்கவில்லை என்பதை அத்தனைபேரும் பாராட்ட வேண்டும்.

தொழில் துறையில் அமைதி இருந்திருக்கிறது. தொழிலாளர்கள், முதலாளிகள் மத்தியில் நல்ல உறவு முறை உருவாகியிருக்கிறது. அதையும் யாவரும் அறிவார்கள். மொத்தத்தில், மாண்புமிகு தொழில் அமைச்சர் நல்ல இளைஞராக இருப்பதால், அவ்வப் பொழுது எழும் பிரச்சினைகளை நேரில் சென்று கண்டறிந்து, தீர்த்துவைக்கும் ஆற்றலைப் பெற்றிருக்கிறார்.

மேலும், 'கேர்' நிறுவனத்தின் மூலம் ஒரு கோடி ரூபாய்க்கு உணவுப் பண்டங்கள் வாங்கி தொழிலாளர்களின் குடும்பங்களுக்கும், அவர்கள் குழந்தைகளுக்கும் வழங்கி, அவர்கள் ஊட்டமுடன் வாழ நல்ல திட்டத்தை செயல்படுத்திக்கொண்டு வருகிறது தமிழக அரசு. மேலும், கழக அரசு பொறுப்பேற்றவுடன் பஞ்சாலைத் தொழிலாளர்கள், கைத்தறி நெசவாளர்கள் முன்னேற்றம் அடைய நல்ல திட்டங்களை வகுத்து இருக்கிறார்கள். அதே போல கிராம மக்கள், ஏழை நடுத்தர மக்கள், அதிகாரிகளிடம் சென்று தங்கள் குறைகளைக் கூற "மனு நீதி திட்டம்" என்கிற திட்டத்தை வகுத்து, மாதம் தோறும் 5-ம் தேதி, அந்த அந்தக் கிராமங்களுக்கு அதிகாரிகளே சென்று, மனுக்களைப் பெற்று அவற்றைப் பரிசீலனை செய்து, உடனடியாகத் தீர்த்து வைக்க வழிகாணும் ஏற்பாட்டை கலைஞர் அவர்கள் ஏற்படுத்தியிருப்பதை, நாட்டு மக்கள் பாராட்டுகிறார்கள். அதேபோல், ஜமாபந்தியை ஒழிக்க வேண்டும் என்கிற நல்ல ஏற்பாட்டினைத் தமிழக அரசு மேற்கொண்டிருப்பதையும் பாராட்ட வேண்டும்.

நேற்று உரையாற்றிய திரு. மார்டின் அவர்கள் ஆடு நனைகிறது என்று ஓநாய் வருந்தியதாம் என்பது போல, அரசுப்பணியாளர்கள் நலிகிறார்கள் என்று வருந்தி எடுத்துரைத்தார்கள். இருபது ஆண்டு காலம் ஆட்சி செய்த இவர்கள், அரசுப் பணியாளர்களுக்கு அகவிலைப் படியை உயர்த்தவில்லை, பஞ்சப்படி தரவில்லை. ஆனால், மூன்று ஆண்டுகளே ஆட்சி செலுத்திவரும் முன்னேற்றக் கழகம், அரசுப் பணியாளர்களுக்கு திருமணக் கடன்கள், விடுப்புச் சலுகைகள் போன்று பலவற்றை நிறைவேற்றியிருக்கிறார்கள். ஓய்வுச் சம்பளம் பெறும் விதிகளைத் தளர்த்தியிருக்கிறார்கள். அலுவலகத் தலைமையாளரே தாற்காலிக ஓய்வூதியம்

[திரு. பெ. சௌந்தரபாண்டியன்] [1970 சனவரி 22

கொடுக்கும் வழியைச் செய்திருக்கிறார்கள். கடந்த காலத்தில் அகவிலைப்படியை உயர்த்தியிருக்கிறார்கள். அதன் மூலம் அரசுக்கு ஆண்டுக்கு 7.20 கோடி செலவு என்பதையும் நாம் அறிவோம்.

* திரு. ஏ. அ. சுப்பராஜா : தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் உரைமீது ஒரு சில வார்த்தைகள் பேச விழைகிறேன். சிலபல நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன என்றாலும், இன்னும் குறைகள் இருக்கின்றன. முக்கியமாக வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பற்றி இந்த உரையில் குறிப்பிடப்படவில்லை. அது வருந்தத்தக்கதாக இருக்கிறது. அதில் அக்கறை செலுத்தாமல் இருப்பது வருந்த வேண்டியதாக இருக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டம், மாநிலம் முழுவதும் பெருகி வருகிறது. நெசவாளர்களைப் பற்றி நினைத்தால் மிக்க வேதனையாக இருக்கிறது. இன்றைக்கு விசைத்தறிகளை புகுத்துகிறோம். அதே நேரத்தில், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முதல் இடம் என்றும் சொல்லுகிறார்கள். அதன் உள்ளே இருக்கும் கருத்தைப் பார்த்தால், கவலையாக இருக்கிறது. அங்கே வேலை செய்து கொண்டிருக்கும் நெசவாளர்கள் மத்தியில் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படும் நிலை இருக்கிறது. சாதாரணமாக ஒரு சொசைடியில் 20 பேர்கள் இருக்கிறார்கள் என்றால், நாம் 20 விசைத் தறிகளைக் கொடுக்கப் போவது இல்லை. அப்படி வாங்கவும் அவர்களுக்குச் சக்தி கிடையாது. இரண்டு விசைத்தறி வாங்கினால் 18 நெசவாளர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படும். தஞ்சாவூர் பகுதியில், இன்றைக்கு ரூ. 7-க்கு விசைத்தறிச் சேலை கொடுக்கிறார்கள். அந்தச் சேலை கிடைப்பதால், கைத்தறிச் சேலைகள் விற்காமல் தேங்கிக் கிடக்கின்றன. இதை யாரும் மறுக்க முடியாது. இந்த நிலையை உற்று நோக்கி, உடனடியாக நெசவாளர்களுக்கு உதவியளிக்க, கைத்தறியில் இல்லாவிட்டாலும், வேறு வகையிலாவது நிவாரணம் அளிக்க வகை செய்ய வேண்டும்.

பஞ்ச நிவாரணம் சம்பந்தமாக எடுத்துக் கொண்டால், ஆரம்பித்த வேலைகள் அத்தனையும் முடிவடையவில்லை. பாதி முடிந்தும், பாதி முடியாமலும் இருக்கின்றன. அதற்குள்ளாக மத்திய சர்க்காரிலிருந்து வாங்கிய தொகையெல்லாம் செலவாகி விட்டது என்கிறார்கள். முடியாத வேலைக்கு பணத்திற்கு எங்கே போவது? அதைப் பற்றி ஒன்றும் இந்த கவர்னர் உரையில் காணவில்லை.

1.ப.-30 அதோடு மட்டுமல்ல, எங்கு பார்த்தாலும் தண்ணீர்த் தட்டுப்பாடு இருக்கிறது. குடிதண்ணீர் வழங்குகிறோம் என்று சொல்கிறார்கள். மேலும் எல்லா நகராட்சிகளுக்கும் எல்.ஐ.சி. மூலம் லோன் வாங்கித் தருகிறோம் என்று சொல்கிறார்கள். எல்.ஐ.சி. என்ன கண்டிஷன் போடுகிறது என்றால், ஒவ்வொருவருக்கும், ஒவ்வொரு குழாய்க்கும் ரேட் அதிகரிக்கப்படும் என்று சொல்கிறார்கள். அப்படிச் செய்தால்தான் நாங்கள் கடன்



1970 சனவரி 22] [திரு. ஏ. அ. சுப்பராஜா]

கொடுப்போம் என்று எல்.ஐ.சி. சொல்கிறார்கள். ஒரு பக்கம் நாம் பொதுமக்களின்மீது வரியை ஏற்றக்கூடாது என்று சொல்லிவிட்டு, நகரசபைகளின் தலையில் இவ்வளவு கடனையும் போடலாம், நகரசபைகள் பொதுமக்களின்மீது வரியைப் போடட்டும் என்று நினைக்கிறார்கள். நகரசபைத் தலைவர் என்ற முறையில் நான் இதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய சர்க்காரிடத்திலே அதிகாரங்கள் குவிந்து கிடக்கின்றன என்று நீங்கள் சொல்லிவிட்டு, நகராட்சிகளின் அதிகாரங்களையெல்லாம், உங்களுடைய கைகளிலேயேதான் நீங்கள் வைத்துக்கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் மத்திய அரசுடன் எப்படிப் போராடுகிறீர்களோ, அப்படியே நகரசபைத் தலைவர்களும் உங்களுடன் போராட வேண்டியிருக்கும். அல்லது நகரசபைத் தலைவர்கள் வேண்டாமென்று சொல்லிவிடுங்கள். அவர்களுக்குப் பதிலாக ஸ்பெஷல் ஆபீசர்களைப் போட்டு நிர்வாகத்தை நடத்திக்கொண்டு போகலாம். எல்லா அதிகாரங்களையும் நீங்களே வைத்துக் கொள்வதால் நகரசபைத் தலைவருக்கு அதிகாரம் இல்லாமல் போகிறது. பிறகு ஊரில் உள்ளவர்கள் நகரசபைத் தலைவரை மதிக்கக்கூட மாட்டார்கள். ஏதோ ஒன்றிரண்டு நகரசபைத் தலைவர்கள் தவறுதலாக நடந்திருக்கலாம். அதற்காக எல்லோருமே தவறுதலாக நடந்துகொள்கிறார்கள் என்று குற்றம் சாட்டக் கூடாது.

எங்களுடைய நகரசபையில் உள்ள டிராப்ட்ஸ்மன் ஒருவருக்கு டிரான்ஸ்பர் ஆர்டர் கொடுத்திருக்கிறார்கள். பொதுவாக நகரசபை சிப்பந்திகளை மாற்றல் செய்ய மாட்டார்கள். காங்கிரஸ் கட்சியின் மெம்பர்கள்கூட என்னைக் கேட்டார்கள், "ஏன் திடீரென்று டிரான்ஸ்பர் செய்துவிட்டார்கள்" என்று நான் இதுபற்றி எழுதிக் கேட்டிருக்கிறேன். இப்படியாகச் செய்வது நன்றாக இருக்காது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நகரசபைகளிலுள்ள வரிப்பளுவைக் குறைக்க வேண்டும். ஐந்தாறு ரூபாய் வருமானம் உள்ளவருக்கு அதிகமான வரியைப் போட்டால் தாங்க முடியுமா? உள்ளூர் நிலைமைகள், பிரச்சினைகள் இவைகள் எல்லாம் எங்களுக்குத்தான் நன்றாகத் தெரியும். கீழ்மட்டத்தில் உள்ளவர்களை, கட்சியில் இல்லாதவர்கள்கூட மிரட்டுகிற நிலைமை இருக்கிறது. அமைச்சர்களுக்கு இது தெரியாமல் இருக்கலாம். இது கண்டிக்கப்பட வேண்டிய விஷயம். கண்டிக்க வேண்டிய நேரத்தில் நீங்கள் கண்டிக்க வேண்டும்.

அடுத்தபடியாக, ரேஷன் எடுத்ததைபற்றி ரொம்ப சந்தோஷம். நெல் விலையினுடைய இறக்கம் எப்போதும் இருக்குமா? இதை நான் உறுதியாகச் சொல்ல முடியாது. இரண்டு மூன்று மாதங்கள் போன பின்னர்தான் தெரியும். ஒருபுறம் வியாபாரிகள் எல்லாம் லாபத்தைச் சம்பாதிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் நெல்லைக் கொண்டுவந்து முடக்கிவிடுவார்கள். அவர்களுடைய நோக்கம் எல்லாம் எப்படியாவது லாபம் சம்பாதிப்பது என்பதே. மக்கள்

எப்படிக் கஷ்டப்படுகிறார்கள் என்பதைப்பற்றியெல்லாம் அவர்களுக்குக் கவலை இல்லை. பின்னர் திடீரென்று பற்றாக்குறை நிலைமையை ஏற்படுத்தி கொள்ளை லாபம் அடிப்பார்கள். தஞ்சாவூரில் கொள்முதல் செய்யும் நெல்லில் ஐம்பது சதவிகிதத்தை அரசாங்கத்திற்குக் கொடுத்துவிட வேண்டுமென்றும் மற்ற இடங்களில் கொள்முதல் செய்வதில் 15 சதவிகிதத்தை அரசாங்கத்திற்குக் கொடுத்துவிடவேண்டும் என்றும் ஏற்பாடு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. நாம் வியாபாரிகளை கட்டுப்படுத்த வேண்டும். நான் ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். அதாவது கூட்டுறவுப் பண்டகசாலைகளும் முன்னுக்கு வந்து இந்த வியாபாரத்தைச் செய்ய வேண்டும். எங்கள் பக்கத்தை எடுத்துக் கொண்டால், கூட்டுறவுப் பண்டகசாலையில் வெளியில் இருக்கும் மார்க்கெட் ரேட்டை விட கூடுதலாக இருக்கிறது. கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கும், வியாபாரிகளுக்கும் ஒரு ஹெல்த்தி காம்ப்படிஷன் இருக்கும்படியான, நல்லவிதமாக ஒரு ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மணி அடிக்கப்பட்டு, அடுத்த உறுப்பினர் திரு. கே. எஸ். கோதண்டராமய்யா அவர்கள் பேச அழைக்கப்பட்டார்கள்.)

*THIRU K. S. KOTHANDARAMIAH: Hon. Deputy Speaker, I rise to say a few words on the Governor's Address. No doubt our Government have done a lot of good things for the improvement of the State, such as the scheme for the electrification of the entire State in two years, lifting of controls, provision of marriage advances, grant of leave concessions, liberalised rules relating to payment of pensions, awarding of scholarships to students, etc. In spite of all these things, I wish to state that so many important and vital points connected with the life of the people have not been mentioned in the Governor's Address. For example, in regard to drought conditions, it is said that drought existed in our Satate only for two years. Over a large extent of the area of the State it may be like that. But there are areas in our State where drought existed for five years and even more and they have been in a chronically backward condition. Why it has been like that and what are the steps taken to combat the backardwness? All these details have not been mentioned in the Governor's Address. In Hosur taluk, and in certain parts of Krishnagiri taluk and in certain parts of Harur taluk, drought existed for five years. In Hosur taluk due to failure of crops, there was a heavy loss. At the rate of five crores per year, people sustained a loss of about twenty to twenty-five crores of rupees during the drought period. But the amount spent during the last year to remove the drought was only ten lakhs and with these ten lakhs it is not possible to remove the chronic drought condition. Unless these things are mentioned in the Governor's Address and the Budget speech, the officers will not realise that more funds will have to be allotted to remove chronic drought from that place.



With regard to backward areas, the Government have said that thirty-one taluks in this State have become backward. But nothing has been mentioned about the backwardness of these taluks and the steps that the Government are going to take to remove the backwardness.

Coming to law and order, I wish to state that nothing has been mentioned in the Governor's Address about the unhappy incidents that took place in Hosur taluk from the 9th to the 16th of December. I wish to submit that there was a region of terror in Hosur taluk during these seven days and it bore a resemblance or similarity to the rule that existed in the Punjab in 1919 under a martial law regime. But the difference between the two is this. There the people were tied to a triangular frame and beaten. Here the people were not tied. But people were taken into custody, made to sit, cold water was poured on their heads, and they were beaten. Not only men, women and children also were beaten. Not stopping with this, the police went to the villages and beat women and children.

This kind of public punishment, I do not think, will do any good to the State in these days of democracy. My idea is to bring to the kind notice of our Hon. Chief Minister and others that the people of the Hosur taluk have been compleely humiliated and frustrated and they feel that there is no security for them. The Government did not take any steps to stop the public punishment even though we sent a wire on the very night of 9th to the Hon. Chief Minister to send somebody or to issue immediate orders to stop it. Therefore, the entire taluk has been in a state of terror and the people began to run away. In this connection, I wish to state that six teachers who were working in a local high school were unnecessarily taken into custody and they were severely beaten. Also, vulgar words decrying the Telugu language and the Telugu people were used and words like "Telugu people should not remain here and they should be burnt and reduced to ashes" were also used. All these things, I think, have wounded the feelings of the peoplpe beyond repair and they feel how this Government which have been kind to the people of the taluk and where they had spent nearly Rs. 10 lakhs for drought relief, have charged their attitude and began to use force against them. I think law and order did not prevail there. If we think of punishing all the people in the name of law and order, I think we have to give a new interpretation to the law and order in the State. So, I request the Hon. Chief Minister to understand the whole thing

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அங்கு லா அண்டு ஆர்டர் இல்லை என்று குறிப்பிட்டார்கள். அந்தப் பகுதியில் இத்தகைய கலவரத்திற்குக் காரணமாக இருந்தவர்கள் தங்களுடைய செயலுக்கு வருத்தம் தெரிவித்து கடிதம் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். நமது உறுப்பினர் அவர்களுக்கும் அதில் எவ்வளவு சம்பந்தம் உண்டு என்பது அவர்களுக்கே தெரியும்.

வேண்டுமென்றால் விளக்கம் கோரட்டும், நான் என்னுடைய பதிலில் விவரமாகச் சொல்கிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : I thank the Hon. Chief Minister for giving this information. No doubt, the people were forced to sign the agreement.

THE HON. THIRU P. U. SHANMUGHAM : Sir, the hon. Member has referred to the law and order situation in the Hosur taluk. I would request him to speak about the statue of Anna and how it was broken to pieces and who were the rowdy elements who were behind that. Kindly let him reveal the fact.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, I am glad that the Hon. Minister wants certain particulars. This is not the first time that the police beat the Telugu people. Even in 1968 the police beat the school children very severely and immediately the late Thiru Anna who was then the Chief Minister sent two persons there to find out the real thing. Then we thought action would be taken to find out the whole truth but nothing was done in that direction. Afterwards both of us, myself and Thiru B. Venkataswamy, the M.L.A., representing Hosur, prepared a detailed memorandum and submitted it to the then Chief Minister requesting him to take necessary steps to see that the police did not indiscriminately beat Telugu people only but no action was taken in the matter.

* மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : முற்றிலும் தவறான கருத்தை எடுத்து உறுப்பினர் அவர்கள் பேசிக்கொண்டு போகிறார்கள். வேண்டுமென்றால் அந்த வழக்கை எடுத்து மீண்டும் பரிசீலனை செய்யவும் நான் தயாராய் இருக்கிறேன். அண்ணா சிலை உடைக்கப்பட்டதையும் பொறுத்துக்கொண்டிருந்திருக்கிறோம். அது சம்பந்தமாக ஏற்பட்ட குழறலும் அந்தப் பகுதி எம்.எல்.ஏ. அவர்கள் என்ன என்ன என்னிடம் கூறினார்கள் என்பதும் எனக்கு நினைவு இருக்கிறது. மகஜர் கொடுக்கப்பட்டவுடனே—அண்ணா சிலை உடைக்கப்பட்டாலும் பரவாயில்லை, மக்கள் பொறுமையாக இருக்க வேண்டுமென்று கலந்து பேசி சம்பந்தப்பட்டவர்களை எல்லாம் அழைத்துப் பேசியபோது—சம்பந்தப்பட்டவர்கள் தங்கள் செயலுக்காக வருத்தம் தெரிவித்து—திரு. ரங்கா அவர்கள், ராஜாஜி அவர்களே பொதுமக்கள் சார்பில் உடைந்த சிலையைச் செப்பனிட்டு வைக்கும் சூழ்நிலை உருவாகியிருக்கிறது என்றெல்லாம் தெரிவித்தார்கள். இது போதாது, வழக்கு நடைபெறத்தான் வேண்டும் என்று உறுப்பினர் சொன்னால் வழக்கை நடத்த அரசாங்கம் தயாராய் இருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : No doubt I express my thankfulness to the Hon. Chief Minister. As per his wishes, we also gave approval to the agreement. But what I want to bring to the kind notice is that the people there suffered on account of



public beating. I want to stress this point to the Hon. Chief Minister so that he can know the feelings of the people there and see that such things do not take place hereafter. Thank you, Sir.

* திரு. என். மருதாசலம் : உதவி சபாநாயகர் அவர்களே, நமது ஆளுநர் அவர்களின் உரையின் மீது என்னுடைய கருத்தைக் கூற விரும்புகிறேன். ஆளுநர் அவர்கள் தம்முடைய உரையிலே தொழில்கள் முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்கிற கருத்துப்படக் கூறியிருக்கிறார். மூடப்பட்ட மில்களை எடுத்து நடத்துவதற்காக சென்ற அசெம்பளியில் கமிஷன் ஏற்படுத்தப்பட்டது. அவர்கள் 3 மில்களை மட்டும்தான் எடுத்து ஓட்டுகிறார்கள். அதுவும் தொழிலாளர்களுக்கு அதிக வேலைப் பளுவை ஏற்றி ஓட்டுகிறார்கள். மொத்தம் 16 மில்களிலே 3 மில்கள் ஓடுகின்றன என்றால் மற்ற மில்கள் மூடப்பட்டவை மூடியே கிடக்கின்றன. மற்றவற்றையும் திறந்து நடத்த இந்தக் கமிஷன் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறியவிரும்புகிறேன். அது பற்றி எத்தகைய குறிப்பும் ஆளுநர் உரையிலே காணப்படவில்லை.

அதேபோல ஆளுநர் உரையிலே இன்றைக்குத் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக எந்தச் சலுகையும் இருப்பதாகத் தெரியவில்லை. கல்லூரியில் தங்கிப் படிக்கும் தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு 50 ரூபாய் கொடுக்கப்படுகிறது. அரசாங்க விடுதியில் படிக்கும் மாணவர்களுக்கும் 30 ரூபாய்தான் கொடுக்கப்படுகிறது. முப்பது ரூபாயில் ஒரு மாணவன் சாப்பிட்டுப் படிக்க முடியுமா என்பதைச் சிந்திக்கவேண்டும். குறைந்தபட்சம் 75 ரூபாயாவது அவர்களுக்குக் கொடுக்கப்படவேண்டும். அப்படிக் கொடுத்தால் தான் 3 வேளை உண்ண முடியும். நன்றாகப் படிக்க முடியும். ஆகவே அரசு ஒரு மாணவனுக்கு 75 ரூபாய் கொடுக்க முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்குப் பல இடங்களில் தூர் எடுத்திருப்பதாக கூறப்படுகிறது. என்னுடைய பகுதியில் 12 ஏரிகள் இருக்கின்றன. 12 ஏரிகளிலும் தூர் எடுக்கப்படவில்லை. நேரிடையாக அமைச்சர் அவர்களே வந்து பார்த்தால்தான் தெரியும். அவை மேடாகவே இருக்கின்றன. மழை காலத்தில் தண்ணீர் வந்தாலும் அதில் 10 நாளைக்குத் தேங்க முடியவில்லை. அந்த ஏரி, குளங்களைத் தூர் எடுத்துத் தண்ணீர் தேங்க வசதி செய்தால் நண்ணீர் வசதி ஏற்படும். கிணறுகளிலும் தண்ணீர் ஊற்று ஏற்படும். அவற்றைத் தூர் எடுத்துத்தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக இன்றைக்குத் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் தான் போலீஸ் நடமாடுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்கு பார்த்தாலும் சாராயம், கள் காய்ச்சுவது சுலபமாகப் போய்விட்டது. போலீசார் காய்ச்சுகிறவர்களை, குடிக்கிறவர்களை விட்டுவிடுகிறார்கள். யாரோ ஒருவன் போவான்.

வேண்டாதவன். அவனை வாயை ஊதச் சொல்வது, சாராய வாடை வரவில்லை என்றாலும், ஸ்டேஷனுக்கு அழைத்துப் போய் அவன் வாயில் சாராயத்தை ஊற்றிச் சாராயம் குடித்ததாக அவன் மேல் கேஸ் போடுவது ஆகியவைதான் நடக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகள் பல இடங்களில் இருக்கின்றன. நான் நேரடியாகப் பார்த்த நிலைமை இது. இதுமாதிரி முறைகளைப் போக்கப் போலீஸாருக்குத் தாக்கீது அனுப்பவேண்டும். தவறு செய்தவர்களைத் தண்டிக்க வேண்டியதுதான். அதனால் நல்ல யோக்கியர்களாக இருப்பவர்களை. மரியாதையாக ரோட்டிலே நடமாட முடியாதபடி செய்வதை அனுமதிக்கக்கூடாது. இந்த நிலைமை தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கிற சேரிகளில்தான் நடக்கிறது. இந்த விஷயங்களை அரசாங்கம் கவனிக்கவேண்டும்.

அடுத்தபடியாக, நகரசபை ஊழியர்களுக்கு பென்ஷன் திட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஓய்வுகால ஊதியமானது 90 ரூபாய் அடிப்படைச் சம்பளம் இருந்தால்தான் கொடுக்கப்படும் என்று போட்டு இருக்கிறார்கள். 90 என்று இல்லாமல் 50 ரூபாய் அடிப்படைச் சம்பளம் இருந்தாலே ஓய்வுகால ஊதியம் பெறக்கூடிய அளவுக்கு அனுமதி வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதைத்தவிர இந்தத் திட்டத்தைப் பஞ்சாயத்துக்களில் வேலைபார்க்கின்ற சிப்பந்திகளுக்கும் விரிவுபடுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். படிப்படியாக அப்படிச் செய்தால்தான் அவர்கள் ஊக்கமாகவும், உற்சாகத்தோடும் வேலை செய்வார்கள், வேலை நன்றாக நடக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* திரு. சி. வீரமணி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய உரையைத் தொடங்குவதற்கு முன்னர் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு அஞ்சலி செய்யும் முகத்தான் அவர்களுடைய திருவுருவப்படத்தை இந்த அவையிலே அமைத்த இந்த அரசுக்கும், அவர்களுடைய படத்தைத் திறந்துவைத்த இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அவர்களுக்கும் நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி காங்கிரஸ்காரர்களைப் பற்றிச் சொல்லும்பொழுதெல்லாம் "காங்கிரஸ்காரர்கள் தொட்டது துலங்குவதில்லை, இவர்கள் தொடாதது எதுவும் இல்லை" என்று சுட்டிக்காட்டுவார்கள். அதே உண்மைதான் இன்றையக் காங்கிரஸ்காரர்களின் மத்தியிலும் நிலவி வருகிறது. இந்தச் சட்டப் பேரவைக் கூட்டத் தொடரிலும் அவர்கள் பேசுகின்றபொழுது அதை வெளிப்படுத்துகிறார்கள். அவர்கள் பேசும்பொழுது எல்லாப் பிரச்சினைகளையும் தொட்டார்கள். அவர்கள் தொடாத பிரச்சினை எதுவும் இல்லை. ஆனால் எதைப்பற்றிச் சொல்லும்பொழுதும் இப்படி செய்தால் நன்றாக இருக்கும் என்ற கருத்தைச் சொல்லவில்லை. திரு. மார்டின் அவர்கள் பேசும்பொழுது கவர்னர் உரை





"காகிதப்பூ" போன்றது என்று சொன்னார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் எங்களுக்கு இதைப் பாலபாடமாகக் கற்பித்தார்கள். "காகிதப் பூ மணக்காது, காங்கிரஸ் சமதர்மம் இனிக்காது" என்று கற்றுத் தந்தார்கள். நாங்கள் ஒரு கட்சியாக வளர்ந்து, எதிர்க்கட்சியாக இருந்து, இன்றைக்கு ஆளுங்கட்சியாக வந்திருக்கிறோம், இன்றைக்கு மற்ற அரசியல் கட்சிகளுக்கு நாங்கள் பாடம் கற்றுத்தரும்பொழுது அவர்கள் எங்கள் பாடத்தையே நினைப்பூட்டுவது காலம் கடந்த கற்பனையாகி விட்டது என்பதை அவர்கள் உணர்ந்துகொள்ளவேண்டும். திரு. மார்டின் அவர்கள் பேசும்பொழுது அரசுத் திட்டங்களைப் பற்றிக் குறைகூறி "கடல்நீர் வற்றப்போவதில்லை, கருவாடும் கிடைக்கப்போவதில்லை" என்றார்கள். காங்கிரஸ் கடல் நீர், அது வற்றிவிட முடியாது என்றார்கள். அந்தக் காங்கிரஸ் என்ற கடல் நீரை வற்றவைத்து அதில் வடிகட்டி மீன்களைப் பிடித்துக்கொண்டிருக்கிறோம். எந்தச் சின்ன மீனைப் போட்டு எப்படிப் பெரிய மீனைப் பிடிப்பது என்பதைப்பற்றியெல்லாம் பேரறிஞர் அண்ணா அவர்கள் பாடம் கற்றுத் தந்திருக்கிறார்கள். எனவே, அவர்கள் அப்படி நினைத்துக் கொண்டு பேசவேண்டாம் என்பதை மறுபடியும் நினைவூட்ட விரும்புகிறேன்.

இந்த கவர்னர் உரையைக் காகிதப்பூ என்று குறிப்பிட்டார்கள். நான் இதை மக்களுக்குகந்த மல்லிகைப் பூ என்று சொன்னால் வாசனை ஒரு நாளிலே போய்விடும், எனவே மல்லிகை என்று சொல்லமாட்டேன். அதை ரோஜாப்பூ என்று சொன்னால் அது உதிர்ந்துபோகும், எனவே ரோஜாப்பூ என்றும் சொல்லமாட்டேன். கவர்னர் அவர்களுடைய உரை அறிஞர் அண்ணாவின் தமிழ்போல் இனிக்கிறது, மக்களுக்குப் பயனளிக்கவல்லது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

எதிர்க்கட்சியினர் பேசும்பொழுது, நாங்கள் செய்யத் தவறியது என்ன என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டும். உங்கள் ஏச்சுக்கும் பேச்சுக்கும் இடையே நீங்கள் மத்திய அரசினிடம் கொடுக்கக் கூடாது என்று சொல்லிக்கொண்டிருந்தபொழுது தமிழ் மக்களுக்காக 18 கோடி ரூபாயைப் பெற்றுத் தந்தோமே அது தவறு என்று குறிப்பிடுகிறீர்களா?

பத்தாயிரம் விசையேற்றங்களை ஏற்படுத்தி 1959-ஆம் ஆண்டிலே 53.5 இலட்சம் டன்னை இருந்த உற்பத்தியை 1969-70-லே 61 இலட்சமாக அதிகமாக்கியிருக்கிறோமே அதைக் குறை கூறுகிறீர்களா?

1969-70-ஆம் ஆண்டிலே செய்யவேண்டுமென்று திட்டமிட்டிருந்தது 3 ஆயிரம் மின்விசைகள்தான் என்றாலும் அதற்கும் மேலே அதிகமாக ஏற்படுத்தியிருக்கிறோமே அதைக் குறை கூறுகிறீர்களா?

நான்கு இலட்சத்து 60 ஆயிரம் பம்புசெட்கள் வழங்குவது என்று ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றதே அதைக் குறை கூறுகிறீர்களா ? எதைக் குறை கூறுகிறீர்கள் ?

கடந்த இருபதாண்டுக் காங்கிரஸ் ஆட்சியிலே குடிநீர் இல்லாமல் தமிழ் மக்கள் வாடினார்களே, அப்படிப்பட்ட பஞ்சத்தைப் போக்கு வதற்காக கலைஞர் அவர்களின் ஆட்சியில் வாட்டர் போர்டு ஒன்று ஏற்படுத்திக் கிட்டத்தட்ட 24 நகராட்சிகளிலும் 7 பேரூராட்சி களிலும் குடிநீர் வசதி ஏற்படுத்த 14 கோடி ரூபாய் எல்.ஐ.சி. யிலிருந்து பெறத் தீர்மானித்திருக்கிறார்களே அதைக் குறை கூறு கிறீர்களா?

நலத் திட்டங்கள் அத்தனையும் கிராமங்களுக்குப் போய்ச்சேர வேண்டுமென்ற முறையிலே போட்ட 7 கோடி ரூபாய்த் திட்டத்தை அமல்படுத்தியிருக்கிறோமே அதைக் குறை கூறுகிறீர்களா? நண்பர்களே எதைக் குறை கூறுகிறீர்கள் ?

அரிசனங்களுக்கு 60 ஆயிரம் வீட்டு மனைகள் வழங்குவதற்கும் 1967-68-லே 22,000-ஆக இருந்தது 1968-69-லே 50 ஆயிரமாக உயர்ந்து 1969-70-லே 1 லட்சம் ஏக்கராவுக்கும் அதிகமாகத் தரிசு நிலங்களை ஏழைகளுக்கும் நிலமில்லாத விவசாயிகளுக்கும் வழங்கிக்கொண்டிருக்கிறோமே அதைக் குறை கூறுகிறீர்களா? நீங்கள் எங்களைப் பாராட்ட மாட்டீர்கள். உங்கள் கட்சிதான் மத்திய ஆட்சியில் இருக்கிறது. அதையே இன்றைக்கு நீங்கள் பாராட்டக்கூடிய நிலைமை இல்லாமலிருக்கும்பொழுது எங்களை நீங்கள் பாராட்டுவீர்கள் என்று எதிர்பார்ப்பது நல்லதல்ல. திட்டங்களை நீங்கள் நட்புறவோடு சொல்லுங்கள். நட்புறவைப் பேணுவதற்கு ஏற்றமுறையில் நல்ல செயல்களை நீங்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறீர்கள். நாங்கள் சொல்லி நீங்கள் பாராட்ட வேண்டுமென்பதில்லை. எங்களுக்கு மக்களுடைய பாராட்டுக் கிடைத்தால் போதும். மக்களைத்தான் தெய்வமாக நாங்கள் கருதி வருகிறோம். நீங்கள் இங்கே மட்டுமல்ல, மத்திய ஆட்சிக்கும் எதிர்க்கட்சியாக இருக்கிறீர்கள். இந்த நேரத்திலே நீங்கள் உரக்கக் கத்தலாம். இந்திய அளவிலே 250 கோடி ரூபாயாக இருந்ததை 200 கோடியாகக் குறைத்து 7 சத விகிதம் ஆக இருந்ததை 6 சத விகிதம் ஆகக் குறைத்திருக்கிறார்கள். அதற்காக நீங்கள் போராடத் தயாராக இருங்கள். தமிழ் மக்களுக்காக நீங்கள் போராடத் தயாராக இல்லையென்றால் தமிழ் மக்கள் உங்களைக் கண்டித்தே தீருவார்கள் என்பதைக் கூறிக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. வ. ஜார்ஜ்: மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது. நான், எரிமலை எனக் குமுறிக்கொண்டிருக் கின்ற வேலையில்லாத் திண்டாட்டத்தைப்பற்றியும் விஷம்போன்று ஏறிக்கொண்டிருக்கின்ற விலைவாசிப் பிரச்சினைபற்றியும் வறட்சி நிவாரணப் பணிகள் மக்களாட்சி முறைப்படி செய்யப்படாத





நிலைமை குறித்தும், கன்னியாகுமரி மாவட்டத்திலே பஞ்சாயத்துப் பிரிவினை மக்களாட்சி முறைக்கு முரண்பட்ட முறையிலே செய்யப் பட்டிருப்பதுகுறித்தும் திருத்தத் தீர்மானங்கள் கொடுத்திருக் கிறேன், இவற்றைப்பற்றியெல்லாம் எனக்குப் பின்னால் பேச இருக் கிறவர்கள் நிறையப் பேசுவார்கள் என்றாலும் நேரம் குறைவாகக் கொடுக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினால் நான் என்னுடைய மாவட்டத்திலே செய்யப்பட்டுள்ள பஞ்சாயத்துப் பிரிவினையைப் பற்றி முதலிலே பேசலாம் என்று நினைக்கிறேன்.

அங்கே 46 டவுன் பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. ஒன்றி ரண்டைத் தவிர, கிட்டத்தட்ட எல்லாமே ஒரு ரெவின்யூ வில்லே ஜுக்கு ஒரு பஞ்சாயத்து என்ற முறையிலே இருக்கிறது. ஆனால் அங்கே மறைமுகமாகப் பஞ்சாயத்துப் பிரிவினை செய்ய வேண்டு மென்ற முறையிலே தக்க நோட்டீஸ் கொடுக்காமல் மாவட்ட வளர்ச்சி மன்றத்திலே அஜண்டாவிலே சேர்க்காமல் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அவர்கள் என்ன நடவடிக்கைகள் எடுத் திருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

முதலில், பஞ்சாயத்துப் பிரிவினைகள் அதிகாரிகளால் ஒழுங்கான பி.ப.
முறையில் செய்யப்பட்டு அனுப்பப்பட்டதாகத் தெரிகிறது. நான் 1-00
ஆர்.டி.ஓ.விடம் பேசியதை வைத்துக் கூறுகிறேன். அதற்குப் பிறகு கட்சிக்காரர்களின் தூண்டுதல்பேரில் இன்னொரு முறையில் பிரிவினைசெய்து இரண்டாவது ப்ரொப்போசல் அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டதாகக் கூறப்படுகிறது. அந்த இரண்டு ப்ரொப் போசல்களில் கட்சிக்காரர்களின் தலையீட்டின்பேரில் கொடுக்கப் பட்டதற்கு கெஜட் நோடிபிகேஷன் கொடுத்திருக்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதில் நடந்த தில்லுமுல்லுகளைப்பற்றி மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் விவாதிக்க வேண்டு மென்றும், புனராலேசனை செய்யவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டபோது கலெக்டர் அதற்கு இணங்கவில்லை. பஞ்சாயத்துச் சட்டம் செக்ஷன் 3-ன்படி பஞ்சாயத்துக்களின் அபிப்பிராயத்தின் பேரில்தான் இதிலே முடிவு எடுக்கவேண்டுமென்று இருக்கிறது. பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் இன்னின்ன முறையில்தான் பிரிக்க வேண்டுமென்று கூறித் தீர்மானங்களை அனுப்பின. அது குறிப்பிட்ட 15 நாட்களுக்குள்ளாக அரசாங் கத்திற்கு வரவில்லை என்று சொன்னார்கள். ஆனால் அந்தத் தாம தத்திற்குக் காரணம் அதிகாரிகள்தான். அவர்கள் வேண்டு மென்றே அந்தத் தீர்மானங்களை ஒரு பக்கத்தில் தூக்கி வைத்து விட்டார்கள். அது கலெக்டரின் தூண்டுதல்பேரில்தான் நடந் திருக்கிறது என்பதை என்னால் நிரூபிக்க முடியும். பஞ்சாயத்துத் தலைவர்களுடைய அபிப்பிராயத்தின்பேரில் இந்தப் பிரிவினையைச் செய்தால் நலமாக இருக்கும். அப்படிச் செய்யாது பிரிவினை செய்தால் அது அபாயகரமான நிலைமைக்குக் கொண்டு சென்று விடும். குமரி மாவட்டத்திற்கும் மற்ற மாவட்டங்களுக்கும் இடையே இதில் பெரிய வித்தியாசம் இருக்கிறது. எல்லா

காட்சியளிக்கின்றன, ஆகவே பிரதமர் அவர்கள் இங்கு வரத் தேவை இல்லை என்று அவர்கள் அன்று சொன்னதைக் காங்கிரஸ் காரர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்களோ என்னவோ, தெரியாது. அந்த அளவிற்குத் தமிழ்நாட்டு மக்களை மறந்துவிட்டு—மத்திய அரசு இந்த அரசுக்குப் பலம் கொடுத்தால் திராவிட முன்னேற்றக் கழகம் வலுப்பெற்று விடுமே, அவர்களின் ஆட்சி மீண்டும் மீண்டும் வந்துகொண்டிருக்குமே என்ற எண்ணத்தில்—பிரதமர் அவர்களை இங்கு வரக்கூடாது என்று சொன்னார்கள். மேடைகளில் எப்படி எப்படியெல்லாமோ பேசினார்கள். அந்த நிலைமையை எப்படி எப்படியெல்லாம் சீர் செய்ய முடியுமோ அப்படியெல்லாம் சீர் செய்துள்ளது இந்த அரசு.

செப்பனிடும் பணிகளில் சில மோசடிகள் நடந்ததாகச் சொன்னார்கள். சரிவர வேலைகள் நடக்கவில்லை என்று சொன்னார்கள். உங்கள் ஆட்சிக்காலத்தில் நடக்காததா? எத்தனை கான்ட்ராக்டர்கள் பெரும் பணக்காரர் ஆனார்கள் பெரும்புள்ளிகள் எத்தனைபேர். வறட்சி நிவாரணப் பணிகள் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் திராவிட முன்னேற்றக் கழக மாவட்டச் செயலாளர்கள் என்று கூடக் காங்கிரஸ்காரர்கள் மேடைகளில் பேசியிருக்கிறார்கள். அவர்கள் அதிகாரிகளை எங்களோடு ஒப்பிட்டுப் பேசியிருக்கிறார்கள் என்று சொன்னால் அவர்கள் எவ்வளவு தரம் குறைந்து கீழே இறங்கியிருக்கிறார்கள் என்பதைக் கூர்ந்து கவனிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ஆளுநர் அவர்கள் உரையில் மின் இணைப்புக் கொடுப்பதுபற்றி கூறியிருக்கிறார்கள். 6000 கிராமங்களுக்கு மின் விளக்கு வசதியும் 4 லட்சத்திற்கும் மேலாக மின்விசை ஏற்றமும் அளிக்கப்படும் என்று எதிர்பார்ப்பதாக உரையில் கூறியிருக்கிறார்கள். ஒரே ஒரு குறைமட்டும் இருக்கிறது. அதையும் நீக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மழை பொய்த்துப் போயும் மின்சாரத்தை நம்பித்தான் மக்களைக் காப்பாற்றியிருக்கிறோம்.

வட ஆர்க்காடு, செங்கல்பட்டு பகுதிகளில் பாலாறு நற்சான்று மடல் என்ற ஒரு விதிமுறை இருக்கிறது. அதைக் கட்டாயம் நீக்கியாகவேண்டும். அதை நீக்கினால்தான் விவசாயிகள் மின் இணைப்புக் கோர வசதியாக இருக்கும். அப்படி அந்த ரூல்ஸ் நீக்கப்படாவிட்டால் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும்சரி, இப்போதும்சரி ஒரு சில அதிகாரிகள் அதை வைத்துக்கொண்டு தாமதம் செய்கிறார்கள். நற்சான்று மடல் வழங்க ஆறு மாதத்திலிருந்து நான்கு வருடம் வரை காலதாமதமாகிறது. ஆகவே இந்த ரூல்ஸ் நீக்கப்படவேண்டும்.

எந்த இடத்தில் கிணறு எடுத்தாலும் அவற்றிற்கு மின்சார இணைப்பு கொடுப்பதன் மூலமாகவும், அவற்றிற்கு வேண்டிய [illegible] விவசாயிகளுக்கு வழங்கி வளம் பெறச் செய்தால் [illegible] ஆட்சியில் எந்த நாட்டின்





உதவியும் தயவுதாட்சண்யமும் இல்லாமல் வளம் பெற்று விவசாய மக்கள் நல்லமுறையில் வாழ முடியும். மற்றவர்களுக்கும் வாழ்வளிக்க முடியும் என்று கூறிக்கொண்டு ஆளுநர் அவர்களின் உரையைப் பாராட்டி இந்த அளவோடு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. பி. எஸ். எல்லப்பன்: தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்களின் உரைமீது இரண்டு நாட்களாக விவாதம் நடக்கிறது. பாரம்பரியமாக, நியாயமாக, சட்டரீதியாக என்னென்ன சொல்லவேண்டுமோ—நான்கு வார்த்தைகள் சொன்னாலும் நல்லாச் சொன்னாண்டி என்பதுபோல்—அதை, முக்கியமான அரசியல் சம்பந்தமான விஷயங்களைச் சொல்லிவிட்டுப்போனார். அப்படி சொல்லியிருப்பதைப் புகழ்ந்து பேசுகிறேன், புகழ்ந்து பேசவில்லை என்று சொல்லிவிட்டுத் தொடர்ந்து எதையோ பேசிக் கொண்டு போகிறீர்கள். நான் அதுவரை போகவில்லை. கவர்னர் அவர்கள் பேச்சில் நான் போய் குறுக்கே புகுந்தால் என்ன கதியாவது? அது ரொம்பப் பெரிய விஷயம். நமக்கு எவ்வளவோ காரியங்கள் இருக்கின்றன, அவற்றைச் சொல்லிவிட்டுப் போகலாம். எப்போது என்னைக் கூப்பிடுவார்களோ என்று நான் காபிகூடச் சாப்பிடப் போகாமல் காத்துக் கொண்டிருக்கிறேன், சான்ஸ் போய்விடக்கூடாதே என்று.

என் தொகுதியில் ஓங்கூறு ஆறு என்று ஒன்றிருக்கிறது. அரசூர் பக்கத்தில் சர்க்கார் ஒரு டாம் கட்டியிருக்கிறார்கள் 1½ லட்சம் ரூபாய் செலவில், அந்த டாமுக்கு வட புறத்தில் 3 பர்லாங் தூரம் ஆறு உடைபட்டு அரசூர் கிராமத்திலுள்ள விவசாய நிலங்கள் 117 ஏக்கர் மண் மேடாகி விட்டது. கடந்த நவம்பரில் பெரிய மழை பெய்தது. அதனால் அரசூர், வன்னியநல்லூர், விளாம்பட்டு வெள்ளல் கொண்ட அகரம், புதுப் பேட்டை, சூரைப்பேடு, வில்லிவாக்கம் போன்ற பகுதிகள் ஜலமயமாகிவிட்டன. அரசூரில் மட்டும் 117 ஏக்கர் நிலம் அப்படியே மண்ணாகிப் போய்விட்டது. அங்கு 11 கிணறுகள் இருக்கிற இடமே தெரியவில்லை. சர்க்கார் நிவாரண வேலையாக ஒவ்வொரு பிர்க்காவிற்கும் 10,000 ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். மதுராந்தகத்திற்கு 20,000 ரூபாய், அச்சரப்பாக்கத்திற்கு ரூ. 10,000, சித்தாமூருக்கு ரூ. 10,000, லத்தூருக்கு ரூ. 10,000 என்று ஒதுக்கியிருக்கிறார்கள். அரசூர் கிராமத்திற்குமட்டும் மண் வார ரூ. 40,000 செலவு ஆகும். 10,000 ரூபாயில் ஒன்பது கிராமங்களில் எப்படி மண்ணை வாருவது? இதுபற்றி அமைச்சர் அவர்களைப் பார்த்துச் சொல்லியிருக்கிறேன். [illegible]ரெல்லாம் மண்ணாகிப்போய் விட்டது. இந்த மாதிரியான இடத்திற்கு நீங்கள் உடனடியாக வரவேண்டுமென்று சொன்னேன். கலெக்டரிடமும் சொல்லியாயிற்று. என்ஜினியர் அவர்களிடமும் சொல்லியாகிவிட்டது. கமிஷனரிடமும் சொன்னால், விதைக்குக் கடன் வாங்கிக் கொள்ளுங்கள், மருந்துக்குக் கடன் வாங்கிக்கொள்ளுங்கள் என்று சொல்கிறார்கள். இந்தக் கிராமங்களில் உள்ள அந்த [illegible] வாரினால்தானே விவசாயம் செய்யமுடியும். [illegible] விவசாயத்

இடங்களுமே நகரத்தைப்போலவே அமைந்திருக்கும். குளச்சல் பஞ்சாயத்தில் முன்பு 16 வார்டுகள் இருந்தன. அதில் இரண்டு வார்டுகள் கொண்ட ஒரு இடத்தை, கடற்கரைப் பிரதேசத்தை, நான்கு பஞ்சாயத்துக்களாகப் பிரித்திருக்கிறார்கள். அதில் ஒரு பஞ்சாயத்து ஏரியாவுக்கு இரண்டு ரீ-சர்வே நம்பர், சுமார் 10 ஏக்கர் இடம் ஒரு கிராமப் பஞ்சாயத்து. மற்ற 14 வார்டுகளையும் சேர்த்து 3 பஞ்சாயத்துகளாகப் பிரித்திருக்கிறார்கள். இந்தத் தில்லுமுல்லுகள் இல்லாமல் பஞ்சாயத்துக்கள் பிரிவினையைச் செய்யவேண்டும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குற்றங் குறைகளை எடுத்துச் சொல்லட்டும். தவறு இருந்தால் நிவர்த்திக்க வழிவகைகள் காணலாம். அவர்கள் நல்ல வழக்கறிஞர். தில்லுமுல்லு போன்ற வார்த்தைகளை உபயோகிப்பது அவ்வளவு நல்லதல்ல.

**திரு. வ. ஜார்ஜ் :** முதலமைச்சர் அவர்களுக்கு அந்த வார்த்தை பிடிக்கவில்லை என்றால் நான் உபயோகிக்க விரும்பவில்லை. அமைச்சரவையைக்கூட நான் குற்றம் சொல்லவில்லை. மாவட்டக் கலெக்டரைத்தான் நான் குறிப்பிடுகிறேன். இரணியல் பஞ்சாயத்தில் திங்கள் சந்தை என்ற இடம் இருக்கிறது. எங்கு பார்த்தாலும் மச்சு வீடுகள், சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ், கச்சேரி, போலீஸ்டேஷன், பொதுப் பணித்துறை செக்ஷன் ஆபீஸ், நொய்யூர் தபால் ஆபீஸ் எல்லாம் இருக்கிறது. இவை எல்லாம் சேர்ந்து தச்சன் பறம்பு என்ற கிராமப் பஞ்சாயத்துக்கள். ஆனால் அதை யொட்டிக் குடிசை வீடுகள்கூடச் சரியாக இல்லாத இடங்கள் டவுன் பஞ்சாயத்துக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. பஞ்சாயத்துப் பிரிவினை 'வயபிள் யூனிட்' ஆக இருத்தல் வேண்டும். இந்தப் பஞ்சாயத்துக்களை எல்லாம் எப்படிப் பிரிக்கவேண்டுமென்று அந்த தலைவர்கள், யூனியன் தலைவர்கள் கூறுகிறார்களோ அதைப் பரிசீலனை செய்து மறுபடியும் சரியான முறையில் பிரிக்க வழிவகை செய்யவேண்டுமென்று முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். ஒரு தனி அதிகாரியை நியமித்தாவது பஞ்சாயத்துப் பிரிவினையை ஒழுங்காகச் செய்யவேண்டும். பத்து சதுர மைல் இருக்கும் நெட்டாலம் பஞ்சாயத்து 18 பஞ்சாயத்துக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. அதை இரண்டு அல்லது மூன்றாகப் பிரித்திருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும். முதலமைச்சர் அவர்கள் பஞ்சாயத்துக்கள் அனுப்பிய தீர்மானங்களை வைத்து மறு பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நேரமாகிவிட்டது. நீங்கள் ஒரே பிரச்சினையைத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். அடுத்து திரு. க. மு. இராசகோபால் அவர்கள் பேசுவார்கள்.





**திரு. க. மு. இராசகோபால் :** மதிப்பிற்குரிய சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் உரைமீது இங்கே பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக முதற்கண் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்பட்டு மூன்று ஆண்டுக் காலத்தில் இரண்டு ஆண்டுக் காலம் கடுமையான வறட்சி நிலைமை நாட்டில் ஏற்பட்டிருந்தது. ஆனால், இந்த ஆண்டு மோசமான நிலைமை இல்லை. முன்பு ஆளும் கட்சியாக இருந்து இப்போது எதிரிலே இருக்கிற காங்கிரஸ் நண்பர்கள், நம்மைப் பார்த்து என்ன செய்தீர்கள் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். பஞ்சமும் வறட்சியும் இப்போது ஏற்பட்டது அல்ல; நீண்ட நெடுங் காலமாகவே இருந்து வருவது. அப்போது 1964-ல் இருந்து 1966 வரையில் இந்த நாட்டில் அரிசியே கிடைக்காத நிலைமை இருந்தது. நீண்ட நெடு வரிசையில் ஒரு நாள், இரண்டு நாள் என்று இரவு பகல் இல்லாமல் தாய்மார்களும், குழந்தைகளும், முதியவர்களும் அரிசிக்காகக் காத்து நின்றதை யாரும் மறக்க முடியாது. மழை பெய்த அந்த நேரத்திலேயே அப்பேர்ப்பட்ட நிலைமை இருந்தது. ஏரி குளங்கள் நிறைந்து இருந்த நேரம் கள்ளமார்க்கட்காரர்கள் அரிசியைப் பதுக்கிவைத்திருந்ததை வெளிக்கொணரக் காங்கிரஸ் அரசு தவறி விட்டது. இந்த அரசு வறட்சி நிலைமையில்—நம்முடைய முதல்வர் அவர்கள் மத்திய அரசிடமிருந்து பணம் வருவதற்கு முன்னாலேயே வறட்சி நிவாரணப்பணிகளை மேற்கொள்ளும் வகையில்—சட்டமன்றத்தைக் கூட்டி வறட்சி நிவாரணப் பணிகளுக்கான நடவடிக்கைகளை எடுத்து ஐந்து கோடி ரூபாய்க்கு மேல் குடி நீருக்காக மட்டும் செலவழித்திருக்கிறது. இப்போது நம்முடைய அரசு மத்திய அரசிடமிருந்து பணம் பெற்றுக் கொள்வதைக் காண அவர்களுக்கு வயிற்றெரிச்சலாக இருக்கிறது. மத்திய சர்க்கார் இடும் ஐந்தாண்டுத் திட்டங்களில் எல்லாம் நம்முடைய பங்கைக் கேட்டுப் பெற வேண்டுமென்று அன்றைக்கே கழகத் தலைவர்களும், தொண்டர்களும் ஒருசேரக் கூறினார்கள். இன்றைக்கு நம்முடைய அரசு அங்கிருந்து பணத்தை வாங்கி வறட்சி நிவாரணப் பணிகளுக்காகச் செலவழிக்கும்போது அவர்கள் ஏன் கொடுத்தார்கள் என்று இங்கிருந்து வெளியேற்றப்பட்ட ஒரு பெரிய தலைவர் பேசியிருக்கிறார்.

நேற்றுக் கூட காரசாரமாக வாதம் செய்தார்கள். வறட்சி ஏற்பட்டு, பெரியதொரு பஞ்சம் ஏற்பட்டுத் தண்ணீர் இல்லாமல் ஆடு மாடுகள் மடிந்து போகக்கூடிய நிலை ஏற்பட்டபோது நம் முதல் அமைச்சர் அவர்கள் இந்திய உபகண்டப் பிரதமர் அவர்களைத் தமிழகத்திற்கு வரவேண்டும் என்று அழைத்திருந்தார்கள். அம்மையார் அவர்களும் வருவதாக வாக்குறுதி தந்தார்கள். ஆனால் இன்று இவர்களிடமிருந்து மாறுபட்ட கருத்துக்கொண்ட திரு. இ. சுப்பிரமணியம் அவர்கள் அன்று என்ன சொன்னார்கள்? தமிழகத்தில் வறட்சியாவது, பஞ்சமாவது? திட்டுத் திட்டாகப் பல இடங்களில் [illegible], பஞ்சப் பகுதி என்று [illegible]

தைப்பற்றி மாலை ஆறு மணியிலிருந்து பத்து மணிவரை பேசுகிறார்கள். நான் பேசினால், உனக்கு வயதாகிப் போய்விட்டது, உன்னைக் கொண்டுவந்து போட்டார்களே என்று சொல்கிறார்கள். விவசாயம் பாழாகிப் போயிருக்கிறது, மண்ணை எடுக்கவேண்டும், நீ என்ன பண்ணுகிறாய் என்று கேட்கிறார்கள். என்னவென்னவெல்லாமோ சொல்கிறார்கள். நான் இதற்கு என்ன பண்ணுவது என்று எனக்கே தெரியவில்லை.

அரசாங்கத்தைப்பற்றி ஏதேதோ பேசினார்கள். ஒன்று, குற்றம் சொல்ல வேண்டுமென்றால், எதைப்பற்றி வேண்டுமானாலும் குற்றம் சொல்லிக்கொண்டே இருப்பார்கள். எது வரையிலே நன்மை இருக்கிறது, எது வரையிலே தீமை இருக்கிறது என்று பார்த்து, நல்லது இருந்தால் போற்ற வேண்டாமா? கெடுதல் இருக்கத்தான் செய்யும். ஒரு தாலுக்காவை, ஒரு பிர்க்காவை நிர்வாகம் செய்வதே முடிவதில்லையென்றால், ஒரு பெரிய நாட்டையே, தமிழ்நாட்டையே என்ன செய்ய முடியும்? கூடுமான வரையில் செய்யவேண்டியதை எல்லாம் செய்ய வேண்டியதுதான். தயவுசெய்து நான் ஒன்றைக் கேட்டுக்கொள்கிறேன். [illegible]த்துக்கொள்ள மாட்டீர்கள் என்று கருதுகிறேன், காதுகுத்தல் திருவிழா, கல்யாணம், சீமந்தம் இதற்கெல்லாம் நீங்கள் போகாதீர்கள். (சிரிப்பு) எவ்வளவோ செய்ய வேண்டிய காரியங்கள் இருக்கின்றன. அந்தக் காலத்திலே மினிஸ்டரைப் பார்ப்பது என்றால், சி.பி.யையோ, கேசவப்பிள்ளை போன்றவர்களையோ பார்க்க முடியுமா? இப்பொழுது ஒவ்வொரு மந்திரி வீட்டு வாசலிலும் துக்கம் கொண்டாடுவதுபோல் காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

செய்ய வேண்டிய காரியம் எவ்வளவோ இருக்கிறது. ரொம்ப மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன். இப்போதிருக்கும் நிலைமை போலீஸ் விஷயமாக இருந்தாலும் மற்ற விஷயமாக இருந்தாலும் கொஞ்சம் பயம்தான் இல்லை. ரொம்ப லேசாக இருக்கிறது.

மதுவிலக்குபற்றி நான்தான் முதலில் சட்ட சபையில் பேசினேன். அது, கட்சிக்கு மீறி நான் சொன்னேன். நாட்டின் நிலைமை அப்படி இருக்கிறது. சகிக்க முடியவில்லை. கள்ளுக்கடை வந்துதான் தீர வேண்டுமென்று சொன்னேன். ஆனால், சர்க்கார் மதுவிலக்கை எடுக்கக்கூடாது என்று தீர்மானத்து விட்டது. அதைப் பற்றிக் கவலை இல்லை. ஆனால் இப்பொழுது நிலைமை என்ன என்று பார்த்தால் "அங்கிங்கெனாதபடி" எங்கும் நிரந்தரமாகி இருக்கிறது. இதற்கு வேண்டிய வருவாய் முழுவதும் அனுபவிக்க வேண்டிய இலாகாவிற்குப் போய்ச்சேர்ந்து விடுகிறது. நமக்குக் கஷ்டம் இல்லை.

[illegible]தயவுசெய்து, மாண்புமிகு அமைச்சர்கள், எங்கேயும் [illegible] [illegible] பழுதுபட்ட இடத்தை நேரில் பார்த்து, [illegible]
[illegible]



வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொள்ளுகின்றேன். நீங்கள் வந்துவிட்டுப் போனால் போதும், செய்யாவிட்டாலும் பரவாயில்லை. பரவாயில்லை, பாகவதர் மினிஸ்டரைக் கொண்டுவந்துவிட்டார் என்று சொல்லுவார்கள். எனவே, நீங்கள் வந்தால் போதும். அங்கு இரண்டு எம்.எல்.ஏ.க்கள் இருக்கிறோம். கோதண்டமும் நானும் ஆக இரண்டுபேரும் இருந்தும் ஒரு காரியமும் நடக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். ஆகவே, தயவு செய்து மிகவும் பழுதுபட்ட இடங்களைப் பார்த்து, விவசாயத்திற்காக நல்லமுறையில் பணியாற்றுகிறீர்கள், இருந்தாலும் இன்னும் கவனமாக ரொம்பப் பழுதுபட்ட இடங்களைப் பார்த்து நடவடிக்கை எடுத்து ஆதரவு கொடுக்குமாறு வேண்டிக்கொண்டு முடிக்கிறேன்.

* திரு. கே. சகாதேவக் கண்டர்: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் பேருரையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். இந்தச் சபையிலே மதிப்பிற்குரிய காலம்சென்ற முதலமைச்சர் அண்ணாவின் படத்தின்கீழே கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்று எழுதப்பட்டிருப்பதைப் பார்த்து பெருமகிழ்ச்சியடைகிறேன். மக்களிடத்திலே சொன்ன கடமை ஆளும் கட்சியினரிடத்தில் நிலவுகிறதா என்றால் இல்லை என்று சொல்ல ஆசைப்படுகிறேன். 1966-ம் வருஷம் நவம்பர் மாதம் 8-ம்தேதி அன்று மதிப்பிற்குரிய சட்டமன்ற உறுப்பினரும், இப்பொழுது மதிப்பிற்குரிய சபாநாயகராகவும் வீற்றிருக்கும் அவர்கள் சில உதாரணங்களை எடுத்துச் சொல்லிருக்கிறார்கள். நிலவரி நீக்கப்பட வேண்டுமென்ற தீர்மானத்தின்மீது முன்மொழிந்து பேசும்பொழுது பல அறிவுரைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அவற்றை எடுத்துச் சொல்ல நான் ஆசைப்படுகிறேன். 1962-ம் ஆண்டு, 1963, 1964, 1965, 1966-ம் ஆண்டு இந்த 5 ஆண்டுகளாக அதற்காகப் பெரும் போராட்டங்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. பிரச்சாரம் செய்துள்ளார்கள். பல தீர்மானங்களைக் கொண்டு வந்து வாதாடினார்கள். 1966-ம் ஆண்டு நவம்பர் மாதம் 8-ஆம் தேதி ஒரு உதாரணத்தைச் சொல்லியிருக்கின்றார்கள். "வாங்கும் கவளத்து ஒரு சிறிது வாய்தப்பின் தூங்கும் களிறோ துயருறா, ஆங்கு அதுகொண்டு ஊரும் எறும்பு இங்கு ஒரு கோடி உய்யுமால்" என்ற கவியைப் பாடி அதற்கு விளக்கமும் சொன்னார்கள். யானையின் கவளத்திலிருந்து சிறிது அரிசிகள் சிந்துமாயின் அதற்கு கவலை இல்லை. ஆனால் சிந்திய அரிசி ஆயிரக்கணக்கான எறும்புகளுக்கு உணவாகிறது. அதைப்போல் நிலவரியை ரத்து செய்தால் ரூபாய் பத்து கோடி நஷ்டமாகும். 200 கோடி ரூபாய் வரும் போது இந்த பத்து கோடி ரூபாய் குறைந்துவிட்டால் ஒன்றும் குடிமுழுகிப் போய்விடாது. காங்கிரஸ் சர்க்கார் நிலவரியை அடியோடு ஒழிக்கவேண்டுமென்று வாதாடினார்கள். இப்பொழுது திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்று மூன்று ஆண்டுக் காலமாகிவிட்டது. முன்பு ரூ. 200 கோடியாக இருந்த

வருமானம் இப்பொழுது ரூ. 250 கோடியாக உயர்ந்திருக்கிறது. அப்படியிருந்தும் ஏன் இன்னும் நில்வரி அடியோடு ஒழிக்கப்படவில்லை என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஏழை விவசாயிகளிடம் அருள்கூர்ந்து, நஞ்சை, புஞ்சை என்ற பாகுபாடு இல்லாமல் நில்வரியை ஒழித்துவிடவேண்டும் என்று இந்த மாமன்றத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

சிரணிப் படை வேலைகளைச் செய்கிறது என்று சொல்லி, சர்க்கார் பணம் தங்களுடைய கட்சியை வளர்ப்பதற்காகச் செலவழிக்கப் படுகிறது என்ற குற்றச்சாட்டைச் சுமத்துகிறேன். உண்மையிலேயே நாட்டு மக்களுக்குத் தேவைப்படுகிற வேலைகள் செய்யப் படவில்லை என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். என்னுடைய தொகுதியில் 1968-ம் ஆண்டு மார்ச்சு மாதம் ஒரு பள்ளி கட்டப்படுவதாகச் சொல்லி, சிரணிப் படையினருக்கு ரூ. 4,000 வழங்கப்பட்டது. அங்கே உண்மையில் பார்த்தால் 1970-வது ஆண்டில்கூட பள்ளி இல்லை. இன்னும் பல இடங்களில் இம்மாதிரி ஒரு வேலையும் நடைபெறாமலேயே, நடைபெற்றதாகச் சொல்லி பணத்தை வாங்கிக்கொள்கிறார்கள். மக்கள் பணத்தை, அரசாங்கத்தின் பணத்தை இப்படிப் பாழாக்காமல் நல்ல முறையில் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பஞ்ச நிவாரணை வேலைகள் சம்பந்தமாக பலவிதமான ஊழல்கள் நடந்திருப்பதாக ஆளும் கட்சியினரே ஒத்துக்கொள்கிறார்கள் என்பதையும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பஞ்ச நிவாரண வேலைகள் செய்வதில் பல இடங்களில் பலவிதமான மோசடிகள் செய்யப்பட்டிருக்கின்றன. அது அரசாங்கத்திற்குச் சம்பந்தமில்லை, அங்குள்ள பஞ்சாயத்துத் தலைவர்கள்தான் செய்கிறார்கள், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள், சேர்மன்கள்தான் செய்கிறார்கள், அதற்குத் தாங்கள் பொறுப்பு இல்லை என்று சொல்லப்படுகிறது. இங்கிருந்து அரசாங்கம் பணம் கொடுக்கிறது, அங்கு பணம் செலவு செய்யப்படுகிறது. ஆகவே, கொடுக்கப்பட்ட பணம் சரிவரச் செலவழிக்கப்படுகிறதா என்று கண்காணிக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தினுடையதுதான் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

உதாரணமாக, என்னுடைய தொகுதியில் ரெட்டியார்பாளையம் என்ற இடத்தில் ஒரு சிறிய அணை ரிப்பேர் செய்யப்பட்டது. அணையைக்கட்டும்பொழுது, கீழே வெறும் மண்ணைப்போட்டு, மேலே கல்லை அடுக்கி அதற்கு மேலே சிமெண்டு பாயிண்ட் செய்யப் படுகிறது என்று பொது மக்கள் மகஜர் கொடுத்தார்கள். அந்த மகஜரை மாவட்ட ஆட்சியாருக்கு அனுப்பினேன், இன்ஜினியர் அவர்களுக்கும் மகஜரிலுள்ள விஷயத்தைத் தெரிவித்தேன். ஆனால், அந்த மகஜரின்பேரில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கடைசியாக வந்த தகவல் என்னவென்றால், அணையிலே தண்ணீர் இருக்கிறது, தண்ணீர் குறைந்தவுடன் ரிப்பேர் செய்யப்



படும் என்பதுதான். செய்த வேலை என்ன ஆயிற்று என்று பார்ப்பதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கட்சிக்காரருக்கு அப்படிப்பட்ட வேலையைக் கொடுத்துவிட்டு, அவர்கள் என்ன செய்தாலும் மறைக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்தச் சர்க்கார் நடந்துக் கொண்டால் அது சரியல்ல. . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அந்த அணையில் ஏற்பட்ட சீர்கேடு யாரால் ஏற்பட்டது, அந்த வேலையை காண்டிராக்ட் எடுத்தவரால் ஏற்பட்டதா, யாரால் ஏற்பட்டது என்பதைச் சொல்லவேண்டும்.

**திரு. கே. சகாதேவக் கண்டர் :** காண்டிராக்ட் எடுத்தவர் ஊழல் செய்திருக்கிறார் என்று சொன்னபிறகு, நடவடிக்கை எடுக்கவேண்டுமா, இல்லையா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இந்த அணையை நான் போய் பார்த்தேன். கால்கோள் விழாகூட நான்தான் செய்து வைத்தேன். அது சம்பந்தமாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் என்னிடம் பேசினார்கள். கோட்டாட்சித் தலைவரும் என்னுடன் பேசினார்கள். அணையிலே என்ன கோளாறு இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. அணை சரியாகத்தான் இருக்கிறது. தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது என்றுதான் எஸ்.ஈ. அவர்கள் சொல்லிவிட்டுப் போனார்கள், எல்லா அதிகாரிகளும் சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது அணையிலே என்ன கோளாறு என்பது எனக்குத் தெரியவில்லை. தயவுசெய்து அணையிலே இருக்கிற கோளாறை விளக்கவேண்டும்.

**திரு. கே. சகாதேவக் கண்டர் :** அணை பழுதாக இருக்கிறது என்று அதை ரிப்பேர் செய்வதற்கு எஸ்டிமேட் போட்டு, டெண்டர் கொடுத்து, வேலை துவக்கப்பட்டிருக்கிறது. வேலை செய்வதிலே ஊழல் ஏற்பட்டிருக்கிறது. கீழே வெறும் மணலைப் போட்டு, மேலே கல்லை அடுக்கி, சிமெண்டு பாயிண்ட் செய்ததாகப் பொது மக்கள் மகஜர் அனுப்பினார்கள். அதன்பேரில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நேற்று முன்தினம்கூட எஸ்.ஈ. அவர்கள் சென்று பார்த்துவிட்டு எந்தக் குறையும் இல்லை, ஒழுங்காகத்தான் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதுமாத்திரமல்ல. காண்டிராக்ட் எடுத்தவர்கூட காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்தான். ஆகவே, எந்தக் குறைபாடும் இல்லை. யார் காண்டிராக்ட் எடுத்திருந்தாலும், காங்கிரஸ்காரரே காண்டிராக்ட் எடுத்திருந்தாலும்கூட, அது ஒழுங்காகத்தான் இருக்கிறது.

**திரு. கே. சகாதேவக் கண்டர் :** காங்கிரஸ்காரர் காண்டிராக்ட் எடுத்திருந்தாலும் தப்பு செய்தால் அரசாங்கம் கேட்க மாட்டார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன். யார்

காண்டிராக்ட் எடுத்தாலும், செய்யப்பட்ட வேலைகளில் ஊழல் நடந்திருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அங்கு யாரும் சென்று விசாரணை செய்யவில்லை. விசாரணை செய்யப் பட்டதாக எனக்குத் தகவல் தெரிவிக்கப்படவில்லை. மேற்கொண்டு அணையில் தண்ணீர் வந்தபிறகு வேலை செய்வார்கள் என்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது. அப்படி ஒன்றும் பழுது இல்லை என்றால் என்ன வேலை செய்யப்போகிறார்கள், எதற்காக அம்மாதிரி உத்தரவு போடப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அணையின் இன்னொரு கோடியில் கட்டாமலேயே விடப்பட்ட அந்த வேலையைப்பூர்த்தி செய்வார்கள் என்றுதான் எழுதப்பட்டிருக்கிறதே தவிர, மறுமுறை அணையிலே எதுவும் செய்யப்படும் என்று சொல்லப்படவில்லை. ஒரு கோடியிலே வேலை பூர்த்தியாகாமல் இருக்கிறது. அது செய்து முடிக்கப்படும் என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது.

**திரு. கே. சகாதேவக் கண்டர்:** காண்டிராக்ட் எடுத்தவர் செய்திருந்த வேலையில் ஊழல் நடந்திருக்கிறது என்று அரசாங்கத்திற்கு எடுத்துச்சொன்னபோதிலும், அதுபற்றி உடனடியாகப் பரிசீலனை செய்யப்படவில்லை. அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இப்படிப்பட்ட ஊழல்கள் நடை பெறுகின்றன என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். கடைசியாக . . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** ஊழல் நடைபெறவில்லை என்று சொல்லப்பட்டபொழுதும், இப்படிப்பட்ட ஊழல்கள் நடைபெறுகின்றன என்று தான் சொல்லிவிட்ட தவறான வாதத்தை வலுப்படுத்துவதற்காக உறுப்பினர் அவர்கள் அதே வார்த்தைகளைத் திரும்பவும் கையாண்டு கொண்டிருக்கிறார். எந்த ஊழலும் நடை பெறவில்லை என்று எஸ்.ஈ. அவர்கள் சென்று பார்த்து, அரசாங் கத்திற்கு அறிவித்திருக்கிறார்கள்.

**திரு. கே. சகாதேவக் கண்டர்:** எந்த ஊழலும் நடைபெறவில்லை யென்றால், அதை எனக்குத் தெரிவித்திருக்கலாம். ஊழலை மறைப்பதற்குத்தான் எனக்குத் தெரிவிக்கப்படவில்லை என்று நான் மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இந்த அளவோடு முடிவடைகின்றன. பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணிக்குக் கூடும். திரு. சகாதேவக் கண்டர் அவர்கள் நாளை தொடர்ந்து பேசலாம்.

*பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.*





## (7) பேரவையின்முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

131. Notification issued with R.O.C. No. 85446/69-F2, dated the 20th September 1969 in regard to alteration of classification of certain Village Panchayats into Town Panchayats with effect from 1st October 1969. [Laid on the Table of the Hosue under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958)].

### B. Reports, Notifications and other papers.

• 'Nil' •

## இணைப்பு

[170ம் பக்கத்தில் 26-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்கான விடையைக் காண்க.]

இம் மாநிலம் முழுவதையும் படிப்படியான திட்டத்தின்கீழ் மறு நில அளவை செய்வதற்கு 1963-ல் அரசு ஒப்புதல் வழங்கியது. ஆனால், நில அளவைத் துறைக்கான செலவு பெருகிக்கொண்டேயிருந்த காரணத்தினால் கீழ்க்கண்ட பகுதிகளில்மட்டும் மறு நில அளவை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே மெட்ரிக் முறையின்கீழ் நில அளவை மேற்கொள்ளப்பட்ட நீலகிரி மாவட்டம், தென்னாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த கடலூர் வட்டம், வடஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த திருவண்ணாமலை, வேலூர் வட்டங்கள், மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த கோடைக்கானல் வட்டம் ஆகிய பகுதிகளிலும் ஏற்கனவே அடி ராத்தல் முறையின்கீழ் நில அளவை மேற்கொள்ளப்பட்ட கோயம்புத்தூர் மாவட்டத்தின்கீழ் பவானித் திட்டத்திலடங்கிய பவானி, கோபிச்செட்டிப்பாளையம், ஈரோடு, தாராபுரம் ஆகிய நான்கு வட்டங்களிலும் மேற்கூறியவாறு மறு நில அளவை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஏனைய பகுதிகளைப் பொறுத்தவரை, பழைய ஏற்பாடு முற்றிலும் பயன்படாத நிலை வருமானால், கலெக்டர் அல்லது மாவட்ட வருவாய் அதிகாரியும் நில அளவைத் துறை துணை இயக்குநரும் அறிவிப்பதன்பேரில், அதுகுறித்துக் கூடுதல் செலவு ஏதும் ஏற்படாதென்றால் அத்தகைய கிராமத்தை மறு நில அளவை செய்ய வருவாய்த்துறை வாரியம் ஆணை பிறப்பிக்கும். தமிழ் நாட்டு ஜமீன் ஒழிப்புச் சட்டம், இனாம் ஒழிப்புச் சட்டம் ஆகியவற்றின்கீழ் உள்ள பகுதிகள் அண்மையிலே நில அளவை செய்யப்பட்டன. இந்தப் பகுதிகளுக்குரிய பதிவேடுகளும் அடி ராத்தல் முறையில் மறு அளவை செய்யப்பட்ட பகுதிகளுக்குரிய பதிவேடுகளும் அளவை மாற்றுகைப் பட்டியல் துணைகொண்டு ஒரு வகை அளவையிலிருந்து மற்றொன்றிற்கு மாற்றும் முறையில் மெட்ரிக் யூனிட்டு அளவைக்கு மாற்றப்படும். சர்வே கற்களுக்கும், சங்கிலி பிடிக்கும் ஆட்களுக்கும் ஆகும் செலவு, நில உரிமையாளரிடமிருந்து வசூலிக்கப்படுகிறது.

In 1963, the Government sanctioned the resurvey of the entire State in a phased programme, but in view of the fact that the expenditure on the Survey department was on the increase they have now restricted resurvey to the Nilgiris district, Cuddalore taluk of South Arcot district, Tiruvannamalai and Vellore taluks of North Arcot district and Kodaikanal taluk of Madurai district where resurvey under metric system was already taken up and in the four taluks of Bhavani, Gobichettipalayam, Erode and Dharapuram in Coimbatore district covered by the Lower Bhavani Project where resurvey under foot-pound system was already taken up. In other areas if it is found that the old frame work has completely broken down, resurvey of such village



will be ordered by the Board on the report of the Collector or the District Revenue Officer and the Deputy Director of Survey, provided no additional expenditure is incurred in this regard. In the case of areas under Madras Estates Abolition Act and Inams Abolition Act which were recently surveyed, the records relating to this area and the record relating to the areas resurved under foot-pound system will be converted into metric units of measurements as a table process. The expenditure incurred on account of survey stones and employment of Chairman is recovered from the ryots.

# தமிழ்நாடு சட்டப் பேரவை

***வெள்ளிக்கிழமை, 1970 சனவரி 23***

*சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.*

## *(1) வினாக்கள்-விடைகள்.*

### *வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.*

### *Harijan Colony at Pagalmedu*

* 41 Q.—THIRU T. MARTIN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that the police resorted to lathi charge in the Harijan Colony of Pagalmedu village, Chingleput district, on 3rd November 1968; and

(b) if so, the details thereof?

***மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :*** *(அ) இல்லை.*

*(இ) இவ்வினா எழவில்லை.*

THIRU T. MARTIN : Mr. Speaker, Sir, may I request the Hon. the Chief Minister to state whether no such incident had eve happened in that area in November 1968?

***மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :*** *அங்கே ஒரு கலகம் 3—11—68 அன்று நடந்தது உண்மை. அந்தக் கலகத்தில் போலீசார் தடியடி எதுவும் செய்யவில்லை.*

***திரு. கே. வினாயகம் :*** *அந்தக் கலகத்தின் விவரம் என்ன? யாருக்கும் யாருக்கும் கலகம் ஏற்பட்டது? போலீசுக்கு தெரியப் படுத்தப்பட்டது எப்பொழுது? போலீசார் வரவே, என்ன நடந்தது? ஏதாவது நஷ்டம் இருந்தால், அதைச் சொல்ல முடியுமா?*

***மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :*** *கலகத்திற்குக் காரணம் சீட்டு விளையாடியது. சீட்டு விளையாட ஒரு வீட்டில் வழக்கமாக இடம் தருபவர் சீட்டு ஆட இடம் தர மறுக்கவே இரண்டு கிளைகளாகப் பிரிந்து அரிசன சமுதாயத்தினர் தாக்கிக் கொண்டார்கள். போலீசாருக்குத் தகவல் கிடைத்தது, அவர்கள் வர, 3 பேர்கள் ஓடி, அவர்களில் ஒருவர் கீழே விழுந்து காயம் ஏற்பட்டது. அதன் பிறகு வழக்கு நடந்தது. கடைசியில் அனைவரும் விடுதலை செய்யப்பட்டார்கள்.*

*[1970 சனவரி 23*

THIRU T. MARTIN : Sir, the Hon. Chief Minister has now stated in this House that they were playing cards. But the police had gone there to arrest them. May I request him to state whether they had gone for catching those who were playing cards or for any prohibition raid?

***மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :*** *ஏற்பட்ட கலகத்தைத் தடுப்பதற்காக, தகவல் கிடைத்ததன் பேரில் போலீசார் சென்றார்கள். கலகம் ஏற்பட்ட பிறகுதான் போலீசாருக்குத் தகவல் தெரிந்தது.*

### *Arrests in Pudukottai*

* 42 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether a number of people including Members of Parliament have been arrested in Pudukottai about the month of June 1969; and

(*b*) if so, the reasons therefor?

***மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :*** *(அ) ஆம். நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் உட்பட, 110 பேர் கைது செய்யப்பட்டனர்.*

*(இ) சில உரிமைக் கோரிக்கைகளின்பால் அரசின் நாட்டத்தை ஈர்க்கும் வகையில் அவர்கள் புதுக்கோட்டையிலுள்ள மாவட்ட உதவி ஆட்சியாளர் அலுவலகத்தின் முன்பும், தலைமை அஞ்சல் அலுவலகத்தின் முன்பும் மறியல் செய்து அலுவலகப் பணியாளர் அலுவலகத்தில் நுழைவதையும், அங்கிருந்து வெளியேறுவதையும் தடைசெய்து இடையூறு விளைவித்தனர்.*

THIRU T. MARTIN : Mr. Speaker, Sir, may I request the Hon. the Chief Minister to state the reasons for staging such a demonstration by those people?

***மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :*** *காவிரி நூற்பாலையை அரசு எடுக்கவேண்டும் என்ற கோரிக்கை ஒன்று; புதுக்கோட்டையைத் தனி மாவட்டமாகப் பிரிக்க வேண்டும் என்பது இன்னொன்று; இன்னும் சில கோரிக்கைகளின் மேல் மறியல் போராட்டத்தை நடத்தினார்கள். கைது செய்யப்பட்டார்கள்.*

THIRU T. MARTIN : Mr. Speaker, Sir, if that is so, whether the Government have taken any action regarding the division of Pudukottai taluk to make it a separate district?

***மாண்புமிகு பேரவைத் தலைவர் :*** *அது இதில் வராது.*

***மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :*** *மாவட்ட நிர்வாகத்தை உத்தேசித்து, இப்படித் தனிப்படுத்தப்பட வேண்டும் என்கிற கொள்கை அரசின் பரிசீலனையில் இருந்துவருகிறது. நிதி வசதி, நிர்வாக வசதி இவற்றைப்பொருத்து உடனடியாக நிறைவேற்றுவதற்கில்லை.*



*1970 சனவரி 23]*

### *Agricultural labourers of East Thanjavur district*

* 43 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Chief Minister be pleased to state whether the agricultural labourers in the East Thanjavur district have walked all the way from Thanjavur to Madras to make representations to the Chief Minister?

***மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :*** *இல்லை.*

***திரு. கே. விநாயகம் :*** *ஒருவேளை அந்த விவசாயத் தொழிலாளர்கள் நடந்துவரவில்லை என்று இருக்கலாம். வேறு எந்த முறையிலாவது வந்து மந்திரி அவர்களைப் பார்த்து, அவர்கள் கோரிக்கைகளைக் கொடுத்தார்களா? அதன்பேரில் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா?*

***மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :*** *அவர்கள் யாரும் வரவில்லை, வராமலேயே, அவர்களுடைய பிரச்சினைகளை அரசு கவனித்து, கணபதியாப் பிள்ளை அறிக்கையின் அடிப்படையில் ஆவன செய்யப் பட்டிருக்கிறது.*

***திரு. கே. விநாயகம் :*** *அமைச்சரவர்கள் சொல்வதை சரி என்று எடுத்துக்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறேன். ஆனாலும், சிகப்புச் சட்டை அணிந்து இங்கே வந்து—நானே பார்த்தேன்—மவுண்ட் ரோடு வழியாக, கோட்டை போர்ட் செயின்ட் ஜார்ஜுக்கு வந்தார்கள். ஒருவேளை தாங்கள் (முதல் அமைச்சர்) இல்லாமல் இருந்திருந்தாலும், வேறு ஒரு அமைச்சரிடம் கோரிக்கையை சமர்ப்பித்திருக்கிறார்களா? அது தெரியுமா?*

***மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :*** *தஞ்சாவூரிலிருந்து அப்படி யாரும் வரவில்லை. சிகப்புச் சட்டையைக் கண்டாலேயே தஞ்சாவூர்க்காரர் என்று எண்ணிக் கொள்வது தவறு.*

* 44 விஞ—திரு. என். எஸ். வி. சித்தன் : *மாண்புமிகு முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கீழ்த் தஞ்சை மாவட்டம், ஆவராணி புதுச்சேரியில் போலீஸ் சூப்பரின்டெண்டெண்ட் முன்னிலையிலேயே இடதுசாரி இசான்கள் போலீசாரைத் தாக்கினார்களா?*

*(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

***மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :*** *(அ) & (இ) புதுசசேரிக்கும் ஆவராணிக்கும் இடையே உள்ள பொதுச்சாலையில் மூன்று காவலர்கள் தாக்கப்பட்ட ஒரு நிகழ்ச்சி நடந்தது. ஆனால் தஞ்சாவூர் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் முன்னிலையில் இச்சம்பவம் நடக்கவில்லை. இந்த நிகழ்ச்சி நேரிட்டபோது, தஞ்சாவூர் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் ஆவராணி கிராமத்தில் இருந்தார். இடதுசாரி அரிசன உழவுத் தொழிலாளர்*

[1970 சனவரி 23

களுக்கும் நிலக் கிழார்களுக்குமிடையே ஏற்பட்ட ஊதியத் தகராறே இந்த நிகழ்ச்சி ஏற்படக் காரணமாகும். சட்டம் ஒழுங்கை நிலைநிறுத்துவதற்காக காவலர்கள் தலையிட்டபோது உழவுத் தொழிலாளர்கள் காவலர்கள் மூன்று பேரைத் தாக்கினர்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கலவரம் நடந்தபோது, காவலர்கள் தாக்கப்பட்டார்கள் என்ற செய்திகளைப் பார்த்தேன். அவை உண்மையா? அங்கே போலீசார் நடந்து கொண்டவிதம் சரியாக இல்லை என்றும் அறிந்தேன். அது தவறான முன்மாதிரி ஆகாதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அந்தச் செய்தி முற்றிலும் தவறு.

**திரு. மு. கிருஷ்ணமூர்த்தி :** தலைவர் அவர்களே, கீழ்த் தஞ்சாவூரில் இப்பொழுது நல்ல நிலைமை இருக்கிறதா? அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை சர்க்கார் எடுத்துக் கொண்டிருக் கிறதா? நிலைமை என்ன?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்போது அமைதியாக இருக்கிறது. சர்க்காரும் மக்களும் சேர்ந்து அமைதியை உருவாக்கி யிருக்கிறார்கள்.

### *Fire Service Personnel*

* 61 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether some fire service personnel in Madras city have been injured when the crowds attacked them about the 25th May 1969; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) ஆம். தீயணைப்பவர்-வலவர் ஒருவர் காயமுற்றார்.

(இ) 24—5—1969 அன்று இரவு 11.01 மணிக்கு தியாகராய நகர், ராகவய்யா சாலையிலுள்ள 7-ம் எண்ணுள்ள வீட்டில் தீ விபத்து ஏற்பட்டு உள்ளதாக தீயணைப்புக் கட்டுப்பாடு நிலையத்திற்குத் தகவல் கிடைத்தது. உடனடியாக, சைதாப் பேட்டை தீயணைப்பு நிலையத்தின் வலம் வரும் நீர்த் தொட்டிப் பிரிவு (Mobile Tank Unit) தனது பணியாளர்களுடன் தீ விபத்து நடந்த இடத்துக்கு விரைந்தது. இந்தத் தீயணைப்புப் பிரிவு 3.6 கிலோ மீட்டர் தொலைவைக் கடந்து தீ விபத்து ஏற்பட்டுள்ள இடத்தை இரவு 11.07 மணிக்குச் சென்றடைந்தது. இதற்குப் பிறகு, உடனடியாக கோடம்பாக்கம் தீயணைப்பு நிலையத்தைச் சேர்ந்த வலம்வரும் நீர்த்தொட்டி பிரிவு ஒன்றும், தேனாம்பேட்டை தீயணைப்பு நிலையத்தைச் சேர்ந்த தீயணைப்புப் பிரிவுகளும், நோயாளி வசதி வண்டியும் (Ambulance) தீ விபத்து ஏற்பட்ட



1970 சனவரி 23]

இடத்தைச் சென்றடைந்தன. தளம் போட்ட ஒரு வீட்டின் மேல் உள்ள 15 அடி  10 அடி பரப்பளவு கொண்ட ஓலை வேயப்பட்ட பந்தல் தீ விபத்துக்குள்ளாயிற்று. இந்தத் தீ உடனடியாக அணைக் கப்பட்டது. அந்த இடத்தில் கூடியிருந்த கூட்டத்தினரிடையே ஒழுங்கை நிலைநாட்ட காவலர்கள் முயன்றபோது கூட்டத்தினர் கற்கள் எறிவதில் ஈடுபட்டனர். இதன் விளைவாக, தீயணைப்பவர்-வலவர் ஒருவருக்கு இடுப்பின் வலதுபுறத்தில் காயம் ஏற்பட்டது. அவர், ராயப்பேட்டை அரசு மருத்துவ மனையில் அகப்பிணியாளராக அனுமதிக்கப்பட்டு 27—5—1969 அன்று சிகிச்சைக்குப் பிறகு மருத்துவ மனையிலிருந்து அனுப்பப்பட்டார்.

THIRU T. MARTIN: Mr. Speaker, Sir, may I request the Hon. the Chief Minister to state the reasons for such an attack being made by the crowd on the Fire Servicemen and alss whether any case has been filed against those who have attacked those personnel?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** காரணம் எதுவும் தெரிய வில்லை. ஒழுங்குபடுத்துவதற்காகக் காவலர்கள் சென்றார்கள். அவர்கள் மேல் கல் எறியப்பட்டது. வழக்கு எதுவும் பதிவு செய்யப்படவில்லை.

### *Peace corps at Thanjavur*

* 62 *Q.*—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government is aware of the organisation of the peace corps by the C.P.I. in Thanjavur district during November 1968?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அரசுக்குக் கிடைத்துள்ள தகவலின்படி, இந்தியப் பொதுவுடைமைக் கட்சி அத்தகைய அணி எதையும் தஞ்சை மாவட்டத்தில் 1968 நவம்பர் திங்களில் அமைக்க வில்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியினர் ஆரம்பித்திருக்கும் "சமாதானப் படை" தஞ்சை மாவட்டத்தில் மட்டும் இருக்கிறதா? அல்லது வேறு மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டிருக்கிறதா? அப்படி அமைக்கப்பட்டது என்றால் மொத்தம் எத்தனை பேர் இந்தப் படையில் இருக்கிறார்கள் என்ற விவரத்தை அரசு அறிவிக்குமா? மேலும், திரு. ஜோதிபாசு அவர்கள் இங்கு வந்திருந்த நேரத்தில், அவர் தங்கியிருந்த இடத்திற்கும், நடந்த பொதுக்கூட்டத்திற்கும் போலீஸார் காவல் தேவையில்லையென்றும், சமாதானப் படையினரே அவருக்குப் பாதுகாப்பு அளிப்பார்கள் என்றும் சொன்னதாகத் தெரிகிறது. அதற்கொப்ப போலீஸார் பாதுகாப்புக்குச் செல்லவில்லை. இப்படிச் செய்வதனால், போலீஸார் மேல் நம்பிக்கையில்லை என்ற எண்ணம் பொதுமக்களின் மனதில் உண்டாகாதா?

[1970 சனவரி 23

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, அப்படி இருந்தது தெரியும், இப்பொழுது இருக்கிறதா, இல்லையா என்பது தெரியவில்லை.

**திரு. நா. வீராசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தமிழ்நாட்டில் 'வெண்புறாச் சேனை' போன்ற படைகள் எல்லாம் அமைக்கப்பட்டனவே, அவைகளையெல்லாம் தடை செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, அந்தப் படையை அமைத்தவரே வேறு இடத்திற்குப் பறந்துவிட்டார்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, கம்யூனிஸ்ட் கட்சியினரின் சமாதானப் படை தஞ்சாவூர் மாவட்டத்தில் மட்டும் இருக்கிறதா? வேறு மாட்டங்களிலும் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, கொஞ்சம் கண்ணுக்குத் தெரிவதுபோல் தஞ்சாவூரில் மட்டும் தெரிகிறது. வேறு இடங்களில் இருக்கிறதா, இல்லையா என்பது தெரியவில்லை.

## *University for Technical Education*

* 45 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) whether there is a proposal to start a University for technical education; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) இந்தச் செயற்குறிப்பு தொடக்க நிலையிலேயே உள்ளது. இது குறித்த விவரங்கள் இன்னும் தயாரிக்கப்படவில்லை. இந்தச் செயற்குறிப்புக்கு தாற்காலிக முறையில் இசைவளிக்கப்பட்ட பின்னரே இப்பணி மேற்கொள்ளப்படும்.

Dr. H. V. HANDE : May I know what is the basis on which such a university is going to be started? We hear that Government is going to start an agricultural university, technical education university, etc. Such information is given outside while the Ministers inaugurate some function or give speeches in some place, without taking the House into confidence at all. Will the Ministers take us into greater confidence and tell us what sort of University is going to be started, what is the basis on which it is going to be started, what will be the number of colleges that will be affiliated to it, whether the Ministry is going to empower any particular person or committee to investigate the whole matter and what are the exact details that the Ministry has so far gathered in this particular regard?



1970 சனவரி 23]

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தொழில்நுட்ப பல்கலைக் கழகம் ஒன்று அமைக்கலாம் என்று கருதப்பட்டு, இதற்கு டெக்னிகல் எஜுகேஷன் போர்டும் சிபாரிசு செய்தது. எல்லா பொறியியல் கல்லூரிகளிலும் உள்ள தொழில்நுட்பக் கல்வி, பாலிடெக்னிக்குகள் எல்லாம் இந்தப் பல்கலைக் கழகத்தின்கீழ் கொண்டு வரலாமென்று இந்த போர்டு சிபாரிசு செய்தது. அரசாங்கத்தின் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதைச் செய்யலாம் என்றும், இதற்கு மொத்தச் செலவு 20 லட்சம் ரூபாய் ஆகும் என்றும், ரெக்கரிங் செலவு 2 லட்சம் ரூபாய் ஆகும் என்றும் கருதப்படுகிறது. இதற்கு இந்திய அரசாங்கத்தின் கல்வித் துறையின் இசைவையும், யூனிவர்சிட்டி கிராண்ட் கமிஷனின் இசைவையும் பெறலாம் என்று கருதப்பட்டு, இதற்கான வேலைகளில் தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் தொடர்பு கொண்டிருக்கிறார். இதைப்பற்றி தொழில் நுட்ப வாரியத்திலே விவாதிக்கப்பட்டு, தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. அ. லெ. சுப்ரமணியம் :** பேரவைத் தலைவர் அவர்களே, மேல்நாடுகளில் எல்லாம் மாணவர்கள் படித்துக்கொண்டிருக்கும் போதே, சம்பாதிக்கின்ற முறையில் விதிமுறைகள் இருக்கின்றன. நம் நாட்டிலும் இப்படி விதிமுறைகளை அமைத்தால், மாணவர்கள் காலையில் பள்ளிக்குச் சென்று படிக்கலாம், மாலையில் ஏதாவது வேலைசெய்து சம்பாதிக்கலாம். இப்படியாக பள்ளியில் படிக்கின்ற மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு தருகின்ற வகையில் இதை மாற்றியமைக்க இந்த அரசுக்கு எண்ணம் உண்டா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, தொழில்நுட்பப் பல்கலைக் கழகம் இன்னும் அமைக்கப்படவில்லை. அதற்கான முன் ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. பல்கலைக் கழகம் அமையும்போது உறுப்பினர் கூறிய கருத்துக்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

Dr. H. V. HANDE : Will this Committee also go into the question of how to properly give job opportunities for the engineers who are going to come out of the colleges? The present position is unsatisfactory and most of the engineers, nearly 60 per cent, do not get any job at all, after studying in the engineering college for five years. Will this Technical Education University or Committee that is going to be appointed find ways and means to evolve a method by which the seats in the engineering colleges are reduced and also the engineers coming out of the colleges are provided with job opportunities? Otherwise it will end in a lot of frustration for the whole lot? Will the Committee examine this aspect also?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அந்தப் பிரச்சினையை பல்கலைக் கழகம் அமைந்ததற்குப் பிறகுதான் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதில்லை. இப்பொழுது தொழில் பயிற்சிக் கல்லூரிகள் எல்லாம் சென்னை பல்கலைக் கழகத்தின் கீழ் செயல்படுகின்றன. தொழில் நுட்பப் பயிற்சிக் கல்லூரிகளை எல்லாம் ஒரு

தனி பல்கலைக் கழகத்தின் கீழ் கொண்டுவந்தால் அதன் மூலமாக பலபேர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படும் அனுகூலங்கள் ஏற்படும் என்பதுதான் நோக்கம், இப்போதே 600-க்கும் மேற்பட்ட பொறியியல் பட்டதாரிகளை மின்சார வாரியத்திலும், மருத்துவ, சுகாதார பொறியியல் துறையிலும் எடுத்துக்கொள்ளும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எதிர்காலத்தில் புதியதாக பொறியியல் கல்லூரியில் சேர்த்துக்கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைக்கவேண்டுமென்று மத்திய அரசு சிபார்சு செய்தார்கள். சென்ற ஆண்டே நானூற்றுச் சில்லரை இடங்கள் குறைக்கப்பட்டன. மேலும் குறைக்கவேண்டுமா என்பது யோசனை செய்யப்படவேண்டும். இன்னும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் உருவாகி நடைமுறைக்கு வருமானால் நான்கைந்து ஆண்டுகளில் அதிகமான பொறியியல் வல்லுநர்களுக்குத் தேவையும் ஏற்படலாம். அதைக் கருத்தில் கொண்டும் எந்த அளவு குறைக்கலாம் என்பது ஆராயப்பட்டு வருகிறது.

### *Senior doctors for duty on Sundays.*

* 46 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether the Government are aware that senior doctors are not available in the Government Hospitals to patients on Sundays in Madras City?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** சென்னை மாநகரிலுள்ள அரசு மருத்துவமனைகளில் ஞாயிற்றுக் கிழமைகளிலும் நோயாளிகளுக்கு முதுநிலை மருத்துவ அதிகாரிகளின் சேவை கிட்டுகிறது.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :** ஞாயிற்றுக்கிழமை முதலிய விடுமுறை நாட்களில் ஆஸ்பத்திரிகளில் உயர்தர மருத்துவ அதிகாரிகளுடைய சேவை இல்லாததனால் நோயாளிகளின் உயிருக்கே ஆபத்து வரும் என்ற நிலைமை இருப்பதால் உயர்தர மருத்துவ அதிகாரிகள் ஞாயிற்றுக்கிழமைகளிலும் சேவை செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** முன்பே என்னுடைய பதிலில் இருந்து வருகிறார்கள் என்றுதான் சொன்னேன். சென்னையை எடுத்துக்கொண்டால் Raja Sir Ramaswamy Mudaliar's Lying-in Hospital Superintendent, Assistant Superintendent and Resident Medical Officer ஆகியவர்களும், ஸ்டான்லி ஆஸ்பத்திரியை எடுத்துக்கொண்டால், Civil Surgeon, Duty Assistant Surgeon and Duty Assistant Physician ஆகியவர்களும், Tiruvateeswarar Tuberculosis Hospital



Superintendent ஆகியவர்களும் இருக்க வேண்டுமென்றுதான் உத்தரவு போடப்பட்டு இருக்கிறது. பலயிடங்களில் யூனிட்டைச் சேர்ந்தவர்கள் ரொடேஷன் முறையில் இருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. நடைமுறையிலும் இருந்து வருகிறார்கள்.

### அரசு உதவிபெறும் செகண்டரி பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மகாநாடு

**47 வினா—திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு உதவி பெறும் செகண்டரி பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் 1968 மார்ச் மாதத்தில் கூட்டிய தங்கள் மாநாட்டில் தீர்மானங்கள் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பியுள்ளனரா ?

(இ) ஆம் எனில், தீர்மானங்களின் விவரங்கள் யாவை ?

(உ) அத் தீர்மானங்களின் மீது என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) & (உ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.

THIRU K. VINAYAKAM : Is it not a fact that recently a deputation of Headmasters of Aided Secondary Schools met the Education Minister and represented their grievances, and did not the Minister give them the assurance that their grievances would be looked into, even though the resolutions passed at the conference might not have been received by the Minister?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, 1968 மார்ச் மாதத்தில் கூட்டிய மகாநாட்டின் தீர்மானங்கள் கிடைக்கவில்லை என்று சொன்னேன். அண்மையில் ஒரு மகாநாடு கூட்டி சில கோரிக்கைகளைக் கொடுத்திருக்கிறார்கள். அதுபற்றி ஆராயப்படும் என்று எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

**திரு. ஆர். கருப்பையா :** உதவி பெறும் உயர்நிலைப் பள்ளி ஏவலர், காவலர், எழுத்தர் போன்ற அலுவலர்களது ஓய்வுபெறும் 60 வயதை 55 ஆகக் குறைத்திருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். ஓய்வு ஊதியமும் இல்லை என்கிறார்கள். ஆகவே ஓய்வு ஊதியம் தரப்படுமா அல்லது 60 வயதாகவே வைக்கப்படுமோ என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துக் கொடுக்கிறேன்.

**திரு. ஆர். நாகசுந்தரம் :** சென்னையில் சமீபத்தில் நடைபெற்ற தொடக்கப் பள்ளி ஆசிரியர்களின் மகாநாட்டில் ஒரு பெண் வசவாளர் ஒருவர் . . . .

[1970 சனவரி 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் அந்த வார்த்தையை உபயோகப்படுத்தக் கூடாது. பேச்சாளர் என்று கூறுங்கள்.

**திரு. ஆர். நாகசுந்தரம்:** ஒரு பெண் பேச்சாளர் இந்த அரசையும், உள்ளாட்சித்துறை அமைச்சரையும், நகராண்மைக் கழக மேயரையும் கடுமையாகத் தாக்கிப் பேசிய காரணத்தினால் அன்று கூட வேண்டிய பொதுக்குழு தீர்மானங்கள் எதுவும் எடுக்காது கூட்டம் கலைந்து விட்டதாகச் சொல்லப்படுகிறது. அதுபற்றிய தகவல் உண்டா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அதுபற்றிய தகவல் வரவில்லை.

**திரு. வை. சுவாமிநாதன்:** ஆசிரியர்கள் மகாநாட்டில் எந்த விதமான கோரிக்கைகள் அரசாங்கத்திடம் கொடுக்கப்பட்டிருக்கின்றன? அந்தக் கோரிக்கைகளின் மீது அரசு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அவர்கள் பல கோரிக்கைகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். தனிக் கேள்வி போட்டால் விவரம் முழுவதையும் எடுத்துக் கொடுக்கிறேன்.

## தேசியக் கல்விக் கொள்கை

48 வினா—திரு. ஆ. கு. சுப்பையா:
திரு. கே. வினயகம்: } மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசு வெளியிட்டுள்ள 'தேசியக் கல்விக் கொள்கைத் தீர்மானம்' மாநில அரசின் ஆலோசனைக்கு அனுப்பப் பட்டதா?

(இ) மேற்சொன்ன தீர்மானத்தின் நகல் சட்டப் பேரவை முன்பு வைக்கப்படுமா?

(உ) இந்தத் தீர்மானத்தின் கருத்துக்களை தமிழக அரசு பரிசீலித்ததா?

(எ) அப்படியானால் முடிவுகளின் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ) ஆம்.

(இ) மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காகச் சட்டமன்ற நூலகத்தில் தீர்மானத்தின்படி ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

(உ) ஆம்.

(எ) மத்திய அரசு 24—7—1968-ஆம் நாளன்று வெளியிட்ட 'தேசியக் கல்விக் கொள்கை" குறித்த தீர்மானத்தில் பயில வேண்டிய மொழிகள், கல்வியின் அமைப்பு குறித்த பகுதிகள் நீங்கலாக, அத் தீர்மானத்தில் கண்டுள்ள கோட்பாடுகளில் பெரும்பாலானவற்றை இந்த அரசு பொதுவாக ஏற்றுக்கொண்டுள்ளது.



1970 சனவரி 23]

THIRU K. VINAYAKAM: My question is whether a copy of the resolution will be placed on the table of the House. It does no credit to me to be asked to go to the Library, read and then ask supplementary questions. Will the Minister be pleased to postpone this question to tomorrow? I must read and then only put supplementary question. He cannot simply ask me to run to the Library and read. Will you please adjourn the House for half an hour so that I may go and read and then come back?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, 'மத்திய அரசு வெளியிட்டுள்ள தேசிய கல்விக் கொள்கைத் தீர்மானம் மாநில அரசின் ஆலோசனைக்கு அனுப்பப்பட்டதா? அதன் கருத்துக்களை அரசு பரிசீலித்ததா, முடிவுகளின் விவரம் என்ன' என்பதுதான் உறுப்பினர் அவர்களின் கேள்வி. அந்தத் தீர்மானம் அனுப்பப்பட்டது, நூலகத்தில் அதன் நகல் வைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னேன். அதுபோன்ற அறிக்கைகள், ரிப்போர்ட்டுகள் எல்லாம் நூலகத்தில் வைப்பதுதான் வழக்கம். அவையில் வைக்க வேண்டுமென்று தனியாகக் கேட்டிருந்தால் அது பரிசீலிக்கப் பட்டிருக்கும்.

THIRU K. VINAYAKAM: I do not want to be mistaken. The Minister gave the impression that I had not read the question properly. Part (b) of the question is " whether a copy of the said resolution will be placed on the Table of the House " and not whether it will be placed in the Legislature Library. Never mind these small mistakes. Let him say whether he is going to place or he is not going to place. I am not going to give up my right. Let him say what the gist of the resolution is, which of the resolution the Government are going to give effect to and which of them they are unwilling to give effect to.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** பொதுவாக மத்திய அரசு குறிப்பிட்ட தேசியக் கல்வி கொள்கைத் தீர்மானம் பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. மும்மொழித் திட்டம் என்பதைத்தான் நாம் இருமொழித் திட்டமாக மாற்றியிருக்கிறோம். அடுத்து, பத்து ஆண்டுக் கல்வி, 2 ஆண்டு ஹையர் செக்கண்டரி, அதற்குப் பிறகு டிகிரி கோர்ஸ் என்பதை நாம் 11 ஆண்டு பள்ளிக் கல்வி, 1 ஆண்டு புகுமுகக் கல்வி, 3 ஆண்டு டிகிரி கோர்ஸ், 2 ஆண்டு போஸ்ட் கிராஜுவேட் கோர்ஸ் என்று வைத்திருக்கிறோம். முன்பு இருந்த அரசாங்கமே இதுபற்றி இப்படித்தான் முடிவு எடுத்திருந்தது நாமும் அதையே பின்பற்றி வருகிறோம். மற்றபடி

Free and compulsory education.

Status, emoluments and education of teachers.

Development of languages.

Equalisation of educational opportunity.

Identification of talent.

Works-experience and National Service.

Science, education and research.

Education for agriculture and industry.

Production of books.

Examinations.

Secondary education.

University education.

Part-time education and correspondence courses.

Games and sports.

Spread of literacy and adult education.

Education of minorities.

Educational structure.

என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள்.

*Portrait of Dr. Ambedkar*

* 63 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) whether the Government have any proposal to keep the portrait of Dr. Ambedkar in every educational Institution in Tamil Nadu;

(b) if so, the particulars of the size, colour etc;

(c) the total amount allotted for the same; and

(d) the approximate time within which it is expected to provide the portraits to all the educational institutions?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ) இல்லை.

(இ) & (உ) எழவில்லை.

(எ) மகாத்மா காந்தி, இந்தியக் குடியரசுத் தலைவர், இந்திய தலைமை அமைச்சர் ஆகியோர் தவிர ஏனைய தேசியத் தலைவர்களின் படங்களை அரசு அலுவலகங்களில் வைக்கவேண்டுமானால் அரசின் முன் அனுமதி பெற வேண்டும். எனினும் டாக்டர் அம்பேத்காரின் படம் அன்பளிப்பாகப் பெறப்படுமெனின் அதனை ஏற்றுக்கொள்ள கல்வி நிலையங்களுக்கு அரசு அனுமதி தந்துள்ளது.

DR. H. V. HANDE: Sir, the D.M.K. Party while in opposition, if I remember aright, had passed a resolution that in the books prescribed for the middle and secondary schools, the history of Dr. Ambedkar should be introduced and also the portrait of Dr. Ambedkar should be kept in all the schools. So, will this Government at least now come forward to implement that resolution?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அவர்கள் குறிப்பிட்ட ஒரு கருத்துத் தீர்மான வடிவில் தெரிவிக்கப் பட்டு இருக்கிறதா என்பது எனக்கு நினைவில் இல்லை. இந்தியக் குடியரசுத் தலைவர், காந்தியடிகள், இந்தியத் தலைமையமைச்சர் ஆகியோரின் படங்கள்தான் அனுமதியில்லாமல் எல்லாப் பள்ளிக்



கூடங்களிலும் வைக்கப்படுகின்றன. மற்றப் படங்களை வைக்க வேண்டுமென்றால் அனுமதிபெற்று வைக்கலாம் என்ற முறை இருந்து வருகிறது. அந்த முறையிலே டாக்டர் அம்பேத்கார் அவர்களுடைய படம் வைக்க வேண்டுமென்றால் அதற்கும் அனுமதி அளிக்கப்படுகிறது. மறுக்கப்படவில்லை. படங்களைப் பரிசாக நல்கினாலும் அவற்றைப் பள்ளிகளில் வைக்க வேண்டுமானால் அனுமதி பெற்றுத்தான் வைக்கிறார்கள். வள்ளுவர், அறிஞர் அண்ணா அவர்கள் படங்களை வைப்பதற்கும் கல்வி அதிகாரிகள், டி.இ.ஓ. அனுமதி அளிக்கப்படுகிறது.

**திரு. கே. பி. எஸ். மணி:** தலைவர் அவர்களே, டாக்டர் அம்பேத்கார் படத்தை சென்னைச் சட்டமன்றத்திலே வைப்பதற்குச் சர்க்காருக்கு ஏதேனும் யோசனை உண்டா? இதுபற்றி ஏதாவது கோரிக்கை வந்ததா? அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டு இருக்கிறது?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அப்படிப்பட்ட உத்தேசம் இப்பொழுது இல்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, from Rajaram Mohan Roy to Rajendra Prasad, we have got very eminent leaders and patriots who have done yeoman service to this country. Their portraits are very valuable to schools, considering the increasing indiscipline and troubles there. So, consulting the Central Government, will this Government prepare a list of such portraits which can be placed in the schools and colleges of the State?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, நான் முதலிலே சொல்லியபடி அப்படிப்பட்ட பெரியோர்களுடைய படங்களை வைப்பதற்கு ஆட்சேபணையில்லை, ஆனால் அனுமதி பெற வேண்டும். அனுமதியில்லாமல் மூவர் படங்கள், அதாவது இந்தியக் குடியரசுத் தலைவர், மகாத்மா காந்தியடிகள், இந்தியத் தலைமை அமைச்சர் ஆகியோரின் படங்கள்தான் வைக்கப்படுகின்றன. மற்றவர்களின் படங்களை வைப்பதற்கு, உறுப்பினர் அவர்கள் சொன்ன படங்களை வைப்பதற்கு, அனுமதிபெற்று வைக்கலாம்.

DR. H. V. HANDE: Sir, will the Government at least give an assurance that whenever permission is sought by anybody, Dr. Ambedkar's portrait will be allowed to be kept? Also, is there any distinction made with regard to the portraits of Dr. Ambedkar and certain other leaders? Also, will the Government give an assurance that as far as Dr. Ambedkar's portrait is concerned, in view of the fact that he stood for the respect and rights of the vast sections of the people, Harijans, who formed one-third of the population—it would be put on a high pedestal and on a different footing?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, திரு. ஜோதிபாசு அவர்கள் தமிழ்நாட்டிற்கு வந்திருந்த நேரத்தில், அவர் தங்கியிருந்த இடத்திற்கு போலீஸார் காவல் தரத் தேவையில்லையென்று யாரும் சொன்னதாகத் தெரியவில்லை. ஒரு மாநிலத்தினுடைய முதலமைச்சர் அல்லது துணை முதலமைச்சர் இன்னொரு மாநிலத்திற்கு வருகிறார்கள் என்று அரசின் தரப்பில் அறிவிக்கலாம், அப்படி அறிவிக்காமலும் இருக்கலாம். பொதுவாக அரசுத் தரப்பில் அறிவிப்பதுதான் மரபு. அப்படி அறிவிப்பு வந்திருந்தால் அவருக்குப் போலீஸ் பாதுகாப்பு அளிப்பது அந்த அரசின் கடமையாகும். மேலும், ஒரு பெரிய கட்சியினுடைய தலைவருக்குப் பாதுகாப்பு அளிக்க அந்தக் கட்சியின் தொண்டர்களே முன்வருவார்கள். ஆகவே, அரசாங்கத்திற்கு அதிகாரப்பூர்வமான தகவல் வந்தால்தான் அவர் தங்கியிருக்கும் இடத்திற்கும், அவர் பேசும் பொதுக்கூட்டங்களுக்கும் போலீஸ் காவல் தரப்படுகிறது. பொதுவாக எல்லோருக்கும் போலீஸ் பாதுகாப்பு தரப்படுகிறது. மேலும் அவர் வெண்மணி கிராமத்திற்கு அருகில் பேசிய பொதுக்கூட்டத்திற்கு போலீஸார் வரத் தேவையில்லையென்று சொன்னதாக அறிக்கை எதுவும் வரவில்லை. அப்படிப் பேசிய இரண்டொருவர் கைது செய்யப்பட்டு அவர்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ஜோதிபாசு அவர்கள் திருவாரூர் டி.பி.-யில் தங்கியிருந்தார். அவரைச் சுற்றிலும் தொண்டர்கள் இருந்துகொண்டிருந்தார்கள். போலீஸ் அந்த இடத்திற்குக் காவலுக்குச் சென்றபோது அவர்கள் வரவேண்டாமென்று சொன்னதும் போலீஸார் அப்பாலே போய் விட்டதாகத் தெரிகிறது. மேலும் பொதுக் கூட்டம் நடக்கும் இடத்திற்கு போலீஸார் சென்ற போதும், அவர்கள் அந்த இடத்தைவிட்டு தூரப்போய்விட்டார்கள் என்பதும் அரசாங்கத்திற்குத் தெரியுமா ? இது ஒரு தவறான முன்மாதிரியாகாதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, திரு. ஜோதிபாசு அவர்களுக்கு அரசாங்க முறைப்படி போலீஸ் பாதுகாப்பு அளிக்கவில்லை. அவருடைய கட்சித் தொண்டர்களே அவருக்குப் பாதுகாப்பாக இருந்தார்கள். ஒரு கட்சியின் தலைவர் என்றால் அவரைச் சுற்றி, அந்தக் கட்சியின் தொண்டர்கள் சூழ இருப்பது வாடிக்கை. ஆனால் அங்கு அதிகமான அளவில், சீரான சிவப்புச்சட்டையணிந்த தொண்டர்கள் இருந்த காரணத்தால், அது கண்ணுக்குப் பளிச்சென்று தெரிந்திருக்கலாம். போலீஸார் அங்கே போனதைத் தொண்டர்கள் தடுத்தார்கள் என்று சொல்வதற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ஜோதிபாசு அவர்கள் அங்கு தங்கியிருந்த நேரத்திலே, காங்கிரஸ்காரர்களும், மிராசுதார்களும் அவரைத் தாக்குவதற்கான முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டது. (குறுக்கீடு). அப்படி அவர்கள்



முயற்சியில் ஈடுபட்டிருந்த நேரத்திலே, பாதுகாப்புக்கு போலீஸ் தேவையில்லை, சமாதானப் படையிலுள்ள தொண்டர்களாகிய நாங்களே அவருக்குப் பாதுகாப்பு அளிக்கிறோம் என்ற அடிப்படையில்தான் சொன்னார்கள் என்பது தெரியுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் சொன்னதும் சரியல்ல, திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் சொன்னதும் சரியல்ல.

**திரு. கே. வினாயகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, கம்யூனிஸ்ட் இடதுசாரியோ, வலதுசாரியோ ஒவ்வொன்றும் 'வாலன்டியர்ஸ் ஸ்க்வாட்' என்றும், சமாதானப் படை என்றும் அமைத்துக்கொண்டு, இந்த நாட்டிலே கலகம் விளைவிக்க தக்க தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். தக்க நேரத்தைப் பயன்படுத்திக்கொண்டு இந்த அரசாங்கத்திற்கு ஊறு விளைவிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் ஒரு இயக்கம் வளருகிறதே, அது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அதைத் தடுப்பதற்கு எந்தவிதமான முயற்சிகள் எடுத்திருக்கிறார்கள் ? எந்த அரசியல் கட்சியும் இந்தமாதிரியான படைகளை வைத்துக் கொள்வதற்கான அனுமதியைத் தருகிறீர்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, 1967 டிசம்பர் திங்களில் திருவாரூரில் இடதுசாரி (மார்க்சிய) பொதுவுடைமைக் கட்சி கூட்டிய தமிழ்நாடு கிசான் சபை மகாநாட்டிற்காக இக் கட்சி 1,000 பேரைக் கொண்ட "தொண்டர் படை" ஒன்றை அமைத்தது. பின்னர் வலதுசாரிப் பொதுவுடைமைக் கட்சியும் 20—12—1967-ல் கீவளூரில் சுமார் 500 பேர் கொண்ட போட்டித் தொண்டர் படை ஒன்றை அமைத்தது. இந்த இரண்டு தொண்டர் படைகளின் நோக்கம் கட்சிப் பணிகளில் ஈடுபடுதல், கட்சி ஊர்வலங்களை ஒழுங்குபடுத்தல், அமைதி காத்தல் போன்றவைகளில் ஈடுபடுவது என்பதாகும். இதற்கிடையே இந்தியப் பொதுவுடைமைக் கட்சி, மாநில அளவிலே தொண்டர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டுமென்று கட்சித் தலைமையினர் முடிவெடுத்து, அதற்காக ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் தொண்டர்களைத் தேர்ந்தெடுத்து, பஞ்சாப் மாநிலத்திலுள்ள சண்டிகார்—அதாவது இப்பொழுது இருதரப்பினரும் போராடும் நகரம்—நகரத்திற்கு அனுப்பினார்கள். அங்கே அந்தத் தொண்டர்களுக்கு ராணுவப் பயிற்சி போன்ற பயிற்சி தரப்பட்டதாக நமக்குத் தகவல் தரப்பட்டது. அவர்களுக்கு எப்படி பயிற்சி அளிக்கப்படுகிறது, அவர்களுடைய நடவடிக்கை என்ன என்பதையெல்லாம் இந்த அரசு உன்னிப்பாகக் கவனித்து வருகிறது.

**திரு. மு. சின்னசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, அகில இந்தியக் காங்கிரஸ் சார்பில் 'ராஷ்ட்ரீய சேவாதளம்' என்ற பெயரில் படை ஒன்று இருப்பது இந்த அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, பொதுவாக தேசியத் தலைவர்களை, மக்களால் மதிக்கப்பட்டவர்களை, புகழ்பெற்றவர்கள், பெருமைபெற்றவர்கள் மக்களால் தலைவர்கள் என்று ஒப்புக்கொள்ளப்பட்டவர்களைப் பொறுத்தவரையில் அந்தப் பட்டியலிலே டாக்டர் அம்பேத்கார் அவர்களும் வருகிறார்கள். இதிலே யார் பெரியவர், யார் சிறியவர் என்ற விவாதத்தில் நாம் இறங்காமல் இருப்பது நல்லது. யார் பெரியவர் யார் சிறியவர் என்று நாம் அறுதியிட்டுக் கூறுவதற்கு இல்லை. அவரவர்கள் தங்கள் தங்கள் திறமையின் அடிப்படையிலே புகழ்பெற்று விளங்கி இருக்கிறார்கள். பள்ளிக்கூடக் கட்டடங்களைக் கட்டுவதற்காக 2½ லட்சம் ரூபாய் 3 லட்சம் ரூபாய் நன்கொடை கொடுத்துக் கட்டிக்கொடுத்தவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பெரும்புகழ் பெற்றவர்களாக இருக்கமாட்டார்கள், நேஷனல் லீடர்சாக இருக்க மாட்டார்கள் என்றாலும் அவர்களுடைய படங்களை வைக்க வேண்டுமென்றால் அனுமதி கேட்கிறார்கள், அனுமதி தரப்படுகிறது. புகழ் வாய்ந்தவர்கள், உதவிசெய்தவர்களின் படங்களை பள்ளிகளிலே வைப்பதற்கு அனுமதி பெறக்கூடிய முறைதான் இருக்கின்றது. அவ்வப்பொழுது பரிசீலனை செய்து தக்க அனுமதி வழங்கப் படுகிறது.

**திரு. என். ராஜாங்கம் :** டாக்டர் அம்பேத்கார் படத்தை பள்ளிக்கூடங்களிலும் பொது இடங்களிலும் வைப்பதற்கு அரசாங்கத்தின் அனுமதிபெற்று வைக்கவேண்டுமென்று பொது விதி இருந்தாலும் அவர் தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவர் என்ற முறையிலும் சட்ட நிபுணர் என்ற முறையிலும் லேபர் வெல்பேர் இலாகாவை ஸ்தாபித்தவர் என்ற முறையிலும் அப்படி அவர் ஏற்படுத்தியதால் இன்று நடந்துவருகின்ற வெல்பேர் ஸ்கூல்களிலாவது அவருடைய படத்தை அனுமதியில்லாமல் வைப்பதற்கு அரசாங்கம் உத்திரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** வள்ளுவர், பேரறிஞர் அண்ணா ஆகியவர்களுக்கு மதிப்பு எந்த அளவுக்கு அளிக்கப்படுகிறதோ அதேமாதிரி டாக்டர் அம்பேத்கார் அவர்களுக்கும் தரப் படுகிறது. அனுமதி முறையில்லாமல் போனால் பள்ளிகளிலே 100 அல்லது 150 படங்கள் வைக்கக்கூடிய அளவுக்கு பட்டியல் நீண்டு கொண்டே இருக்கும். அறிவியல் துறையிலே சிறந்தவர்கள் இருக்கிறார்கள், மற்ற மற்றத் துறையிலே சிறந்து விளங்கியவர் களும் உண்டு. சர் சி. வி. ராமனுக்கு வைக்கவேண்டுமென்று சொல்வார்கள் வைக்கக் கூடாது என்று சொல்ல முடியாது. எனவே குறிப்பிட்ட மூவரின் படங்களுக்கு மட்டும் அனுமதி தேவையில்லை என்று வைத்துவிட்டு மற்றவர்களின் படங்களை வைப்பதற்கு அனுமதிபெற வேண்டுமென்று வைத்திருக்கிறோம். டாக்டர் அம்பேத்கார் அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய மதிப்பு முழுவதும் கொடுத்து அரசு அவர்களுக்கு மரியாதை செய்யக் கூடிய முறையிலே ஆங்காங்கு அவர்களுடைய படத்தை வைப்ப தற்கு அனுமதி அளித்து வருகிறது.



*Tuition fee for students of pre-technical course.*

* 64 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether the Government have proposed from the coming academic year not to levy any tuition fees on students of pre-technical course; and

(*b*) if so for what reasons?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளில் தொழில் நுட்பப் புகுமுக வகுப்பில் பயிலும் மாணவர்களின் பெற்றோர்கள் அல்லது காப்பாளர்களின் சாதி அல்லது ஆண்டு வருமானம் எதுவாயிருப்பினும், இம்மாணவர் எவரிடமிருந்தும் 1969-70 முதல் கல்விக் கட்டணம் எதுவும் விதித்து வசூலிக்கக் கூடாது என்று ஆணைகள் ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளன.

(இ) தொழில் நுட்பப் புகுமுக வகுப்பு கல்லூரிப் புகுமுக வகுப்புக்குச் சமமானதென்று ஏற்கப்பட்டுள்ளது. கல்லூரிப் புகுமுக வகுப்புக்காக அளிக்கப்பட்டுள்ள இலவசக் கல்விச் சலுகை தொழில் நுட்பப் புகுமுக வகுப்புக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

THIRU K. VINAYAKAM : Sir, while appreciating the good gesture of the Government in not levying any tuition fees for the pre-technical course, I want to know the income derived by the Government under this head till they decided not to levy any tuition fees. Also, as a result of this concession, how much loss the Government would incur?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதைப்பற்றிய முழுத்தகவல் இல்லை, தனிக் கேள்வி போடவும்.

**திரு. ஆர். கருப்பையா :** தலைவர் அவர்களே, இப்பொழுது சாதாரணக் கல்லூரியில் உள்ள கல்லூரிக் கட்டணத்திற்கும் மாலை நேரக் கல்லூரியில் வாங்கப்படும் கல்லூரிக் கட்டணத்திற்கும் வேறுபாடு இருக்கிறது. மாலை நேரக் கல்லூரிக்கு அதிகமாகச் கட்டணம் வாங்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. எனவே சாதாரணக் கல்லூரியில் கட்டணம் என்ன வாங்கப்படுகிறதோ அதேபோல் மாலை நேரக் கல்லூரியிலும் வாங்குவதற்கு அரசு உத்திரவிடுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இப்பொழுது பகல் நேரக் கல்லூரியிலே என்ன கட்டணம் வசூலிக்கப்படுகிறதோ அது தான் மாலைநேரக் கல்லூரியிலும் வசூலிக்கப்படுகிறது. ஒரு வேறு பாடு இருந்தது. இப்பொழுது அதைப் போக்கக்கூடிய முறையிலே பகல் நேரக் கல்லூரியில் என்ன கட்டணம் வாங்கப்படுகிறதோ அதே கட்டணத்தை மாலை நேரக் கல்லூரிக்கு மூன்று ஆண்டுகளில் வாங்க வேண்டும் என்று உத்திரவிடப்பட்டிருக்கிறது.

*Road works in Madurai and Ramanathapuram districts*

*49 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Advisor of the Planning Commission visiting this State has recommended the stoppage of road works in Madurai, Ramanathapuram districts about the 27th June 1969; and

(*b*) if so, the details of the road-works closed consequently?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** (அ) & (இ) இம் மாநிலத்திற்கு வருகை தந்திருந்த திட்ட ஆணைக் குழுவின் ஆலோசகர் சாலைப் பணிகளை நிறுத்துமாறு சொல்லவில்லை. வறட்சி நிவாரணத்தின் நிதியிலிருந்து தொகை இந்த வேலைகளுக்கு அதிகமாக ஒதுக்குவதைக் காட்டிலும் விவசாய அபிவிருத்தியை ஏற்படுத்தக்கூடிய முறையில் உற்பத்திப் பணிகளுக்குச் செலவிடலாம் என்ற முறையிலேதான் பொதுவாகப் பரிந்துரைத்திருக்கின்றார்கள்.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்:** இந்திரி அவர்களுடைய சிபாரிசின் பேரில் ரோடு வேலைகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. அங்குள்ள மக்களுக்குப் போக்குவரத்து வசதி மிகவும் கஷ்டமாக உள்ள நிலைமையில் அந்த ரோடு வேலைகளைத் தொடர்ந்து நடத்துவதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** ரோடு வேலைகள் நிறுத்தப்படவில்லை. இராமநாதபுரம் மாவட்டத்தில் துயர் தணிப்புப் பணிகளில் 50 சதவிகிதம் தொகை சாதாரண இணைப்புச் சாலைகள் போடுவதற்காக ஒதுக்கப்பட்டது. பொதுவாக அவர்கள் சொல்லியதற்குப் பிறகு சாலைகளுக்காக ஒதுக்கப்படுகின்ற தொகையைக் காட்டிலும் விவசாய உற்பத்திக்குப் பயன்படுகின்ற வகையிலே ஏரிகள், குளங்கள் தூர்வாருதல், குடிதண்ணீர்த் திட்டங்கள் ஆகிய காரியங்களுக்காகச் செலவு செய்யப்படுகிறது.

*Madras Travelling Allowance Rules*

*50 *Q.*—THIRU N. KASIRAMAN: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) when the Madras Travelling Allowance Rules governing the travelling allowance payable to Government servants were framed, and

(*b*) whether there was any revision in the scale of travelling allowance payable to Government servants in accordance with the increase in the cost of living, travelling and other expenditure?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** (அ) தமிழ்நாடு பயணப்படி விதிகள் 1—9—1922 முதல் செயலுக்கு வந்தன.

(இ) இல்லை. எனினும், முதல் இரண்டு தரங்களைத்தவிர, பிற தரங்களைப் பொறுத்தவரையில், 1—10—1943-க்கு முன்பு செயலில் இருந்த நாட்படி வீதங்கள் 50 சதவீதமும், பயணத் தொலைவுப்படி வீதங்கள் 50 சதவீதமும் அந்நாள் முதல் உயர்த்தப்பட்டன. முதல் இரண்டு தரங்களில் இப் படி வீதங்களில் ஏற்பட்ட உயர்வு குறைவாக இருந்தது. திங்கள் ஒன்றுக்கு ரூ. 55 வரை ஊதியம் பெறும் அரசுப் பணியாளர்களுக்கும் கடைநிலைப் பணியில் உள்ள சார்நிலைப் பணியாளர்களுக்கும் 1958-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் நாட்படி வீதம் 12 அணாவிலிருந்து ரூ. 1-4-0 ஆக உயர்த்தப்பட்டது.



**திரு. நா. காசிராமன்:** அண்மையில் சட்டமன்ற அங்கத்தினர்களுக்குக் கூட டெய்லி அலவன்சை உயர்த்தியிருக்கிறார்கள். நம்முடைய அரசினரிடம் பணி புரியும் சிப்பந்திகளுக்குக் கொடுக்கப்படும் தினப்படி கேரள அரசாங்க சிப்பந்திகளுக்குக் கொடுக்கப்படுகின்ற தினப்படியை விடக் குறைவாக இருக்கிறது என்பதை உணருவார்களா? அங்கு வெளியூர்களுக்குச் செல்லுகின்றபோது ரயில்வே சார்ஜைப் போல் 1½ மடங்கு அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது. எல்லா விலைகளும் ஏறி இருக்கும் நிலையில் நம்முடைய அரசு ஊழியர்களுக்கான தினப்படியை அதிகப்படுத்த அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற கோரிக்கையின் நியாயத்தை இந்த அரசாங்கம் முற்றிலும் உணர்ந்திருக்கிறது. 26 வருஷத்திற்கு முன்னால் நிர்ணயிக்கப்பட்ட டெய்லி அலவன்ஸ் முறைகள் அப்படியே நீடிப்பது நியாயமல்ல. இதை அதிகப்படுத்த வேண்டுமென்பதற்காக நாங்கள் ஐந்தாவது நிதிக் கமிஷனிடம் கொடுத்த மெமோராண்டத்தில் அதிகப் பணம் இந்த இனத்திற்காக ஒதுக்கப்பட வேண்டுமென்று கோரினோம். இந்த ஒரு காரியத்திற்காக மட்டும் வருஷத்திற்கு 75 லட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. நிதிக் கமிஷன் இந்த நியாயமான கோரிக்கையைக் கூடப் புறக்கணித்துவிட்டது. ஆகவே, நாம் இப்போது அமைத்திருக்கும் பே கமிஷன் இதைப் பற்றியும் பரிசிலனை செய்ய வேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய பரிந்துரையின் அடிப்படையில் எந்த அளவுக்கு ஏற்றுக் கொள்ளலாம் என்பது அறிக்கை கிடைத்த பிறகு யோசிக்கப்படும்.

**திரு. அ. லெ. சுப்ரமணியம்:** வழக்குமன்றத்தில் பணியாற்றக் கூடிய பணியாட்களின் தினப்படியும், வழக்கு மன்றத்திற்கு சாட்சி சொல்ல வருகிற அரசு அலுவலர்களின் தினப்படிக் கூலியும் குறைவாக இருக்கிறது. இதையும் கூட்ட அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** அதுவும் இதற்குள் அடங்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார் [illegible].

**திரு. நா. சௌந்தரபாண்டியன்:** கிராம உத்தியோகஸ்தர்கள் [illegible]ப்படி, தினப்படி ஆகியவற்றை உயர்த்துவது பற்றியும் [illegible] கமிஷனில் பரிசிலனை செய்வதற்கு அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** 90 ரூபாய்க்குக் கீழ் இருப்பவர்களுடைய தினப்படியும் இதில் அடங்கியதுதான். அரசாங்க ஊழியர்களுக்கு நாலைந்து முறை டியர்னஸ் அலவன்சை உயர்த்த வேண்டிய நிலைமை ஏற்பட்டது. சிட்டி காம்பன்சேட்டரி அலவன்ஸ் சென்னை நகருக்கும் மதுரை நகருக்கும் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. வீட்டு வாடகைப்படியும் குறிப்பிட்ட சில ஊழியர்களுக்கு உயர்த்த வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இப்படி நிதிவாயில்கள் சரியாக இல்லாத காரணத்தால் இந்தக் காரியங்கள் தடைப்படுகின்றனவே தவிர, இதில் இருக்கின்ற நியாயத்தை அரசாங்கம் ஒருநாளும் புறக்கணிப்பதில்லை.

*Rice contributed to draught stricken people*

* 51 *Q.*—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Chief Minister seceived 307 bags of rice, contributed by institutions and people of Mayuram on June 21 of 1969, for distribution to draught stricken people; and

(*b*) if so, how the rice was distributed?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) ஆம்.

(இ) அவை கீழ்க்கண்டவாறு பகிர்ந்தளிக்கப்பட்டது—

மதுராந்தகம்—161 மூட்டைகள்.

சைதாப்பேட்டை—46 மூட்டைகள்.

உடுமலைப்பேட்டை—100 மூட்டைகள்.

**திரு. கே. விநாயகம் :** பஞ்சப் பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தரவேண்டுமென்பதற்காகத்தான் முதலமைச்சர் அவர்கள் போனபோது அந்த மிராசுதார்கள் அரிசியை அளித்திருக்கிறார்கள். அதைக் கொளத்தூர் கோதண்டம் இருக்கின்ற மதுராந்தகத்திலும் . . . . (மணியடிக்கப்பட்டது)
All right. People know it.
மதுராந்தகத்திலும், முதலமைச்சர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற சைதாப்பேட்டையிலும் மட்டுந்தான் பஞ்சமா? என் பகுதியில் பஞ்சம் இல்லை? அரசியலில் இருக்கின்றவர்கள்தான் இப்படிச் செய்கிறார்கள் என்பது உண்மையா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒன்றை விட்டு விட்டார்கள். நிதியமைச்சருடைய உடுமலைப்பேட்டை என்றும் சேர்த்திருக்கலாம். அரிசி ஆலைகள் உள்ள மதுராந்தகத்திலே அரிசி வாங்க கியூவில் நிற்கும் நிலை இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களே கூறி இருக்கிறார். மதுராந்தகத்தில் நெருக்கடியான நிலை இருப்பதால் கொடுக்கப்பட்டது. உடுமலைப்பேட்டைப் பகுதியைப் பொறுத்த வரை மதிய உணவுக்காகவும் வேறு வகை அனாதை இல்லங்களுக்காகவும் நூறு மூட்டைகள் கொடுக்கப்பட்டன. அந்த அரிசியை வசூலித்துக் கொடுத்த திரு. கிட்டப்பா போன்றவர்கள் மதுராந்தகத்திற்கும் ரொம்ப நெருக்கடியான பகுதிகளுக்கும் கொடுக்கவேண்டுமென்றுதான் கொடுத்தார்கள். சைதாப்பேட்டை என்று சொல்லும்போது முதலமைச்சர் அவர்களுடைய சைதாப்பேட்டை அல்ல, அதற்கு வெளியில் பரந்து இருக்கும் சைதாப்பேட்டை தாலூகா என்பதுதான் அடிப்படை. இவை எல்லாம் அரசாங்க அதிகாரிகள் மூலந்தான் விநியோகிக்கப்பட்டன.





**திரு. என். கிட்டப்பா :** மாயூரத்தில் அளிக்கப்பட்ட அரிசி நன்கொடை அந்தப் பகுதியில் உள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தினரால் வசூலிக்கப்பட்டது என்பதும் கழகத் தலைவர் என்ற முறையில் முதலமைச்சர் அவர்கள் வந்தபோது அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது என்பதும், கழகத் தோழர்கள் விருப்பத்திற்கு ஏற்ப வசூலிக்கப்பட்டுப் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கிறது என்பதும் அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தெரியும் என்று ஏற்கனவே சொல்லிவிட்டேன்.

**திரு. கே. விநாயகம் :** கழக அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதியில் மட்டுந்தான் வறுமை இருக்கிறதா? காங்கிரஸ் அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதியில் வறுமை இல்லையா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** சைதாப்பேட்டையில் விநியோகிக்கப்பட்ட அரிசிக்கு திரு. விநாயகம் அவர்களும் பாத்தியம் உடையவர்கள்தான். அவர்கள் சைதாப்பேட்டைத் தொகுதியில் கோடம்பாக்கத்தில் குடியிருந்து வருகிறார்கள். அவர் அங்கிருப்பதை உத்தேசித்துத்தான் சைதாப்பேட்டைத் தொகுதியில் தரப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்விகள் எண்கள் 52 முதல் 55 வரை ஒத்திவைக்கப்படுகின்றன.

*Minimum support price for paddy, etc.*

* 56 *Q.*—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state—

(*a*) whether the Central Government has fixed the minimum support price for standard variety of paddy, ragi, jowar, bajra and maise for this year; and

(*b*) if so, what the prices are?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) ஆம்.

(இ) மத்திய அரசு தமிழகத்தில் நெல்லுக்கு நிர்ணயித்துள்ள குறைந்த அளவு விலை குவிண்டாலுக்கு ரூ. 45.

சோளம், ராகி, கம்பு, மக்காச்சோளம் குறைந்த அளவு விலை குவிண்டாலுக்கு ரூ. 44.

**திரு. கே. விநயகம் :** சப்போர்ட் பிரைஸ் என்பது விலை குறைந்துவிட்டால் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காகக் கொடுக்கப்படுவது. இப்போது எந்த அளவுக்கு விலை குறைந்திருக்கிறது. சப்போர்ட் பிரைஸ்மூலம் எவ்வளவு நஷ்ட ஈடு தரப்படுகிறது ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இது திர்ணயிக்கப்பட்டது வெகு நாட்களுக்கு முன்பு. அதற்குப் பிறகு விலைகள் மாற்றியமைக்கப்பட்டிருப்பது கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிந்திருக்கும். மத்திய அரசாங்க உத்தரவுப்படி குறைந்த அளவு இந்த விலையாவது விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டுமென்பது நோக்கம். அதை இந்த அரசு ஏற்றுக் கொண்டது.

**திரு. ஆ. கு. சுப்பையா :** சாகுபடிச் செலவுகள் அதிகமாகியிருப்பதால் நெல்லின் விலையை உயர்த்தவேண்டுமென்று அரசாங்கத்திற்கு முறையீடுகள் வந்ததா ? அப்படியானால் அரசு என்ன யோசனை செய்திருக்கிறது ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அது அடுத்த கேள்வியில் வருகிறது. ரூ. 45 என்று இருந்ததை இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு 2—8—1969 வரையில் நெல் கொள்முதல் விலையில் மாறுதல் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுவரையில் இருந்த போனஸையும் நெல் விலையோடு சேர்த்து உயர் ரகத்திற்கு ரூ. 48, நடுத்தர ரகத்திற்கு ரூ. 45, மட்ட ரகத்திற்கு ரூ. 43 என்று இப்படி போனஸையும் சேர்த்து நாம் கொடுத்திருக்கிறோம். அதுதவிர வேறு கோரிக்கை இல்லை.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** இப்போது சன்ன ரக நெல்லுக்கு ஒரு விலை, மட்டரக நெல்லுக்கு ஒரு விலை என்றிருக்கிறது. அரக்கோணம் தொகுதியில் கொள்முதல் செய்த 10,000 மூட்டைக்கு இச்சிலிச் சம்பா, சூப்பர் ஃபைன் வெரைட்டிக்கு ரூ. 37½ என்று கொடுக்கப்பட்டுள்ளது. அது தவறான விலையாகும். இதற்கு முன்பு ஒரு ரூபாய் கூட்டிக் கொடுக்கப்பட்டது. அது குறித்துத் திரும்பப் பரிசீலனை செய்யப்படுமா ? சூப்பர் ஃபைன் வெரைட்டிக்குத் தனியாக ஒரு ரேட்டை அரசாங்கம் அமைத்துக் கொடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** உறுப்பினர் அவர்கள் இது பற்றி முறையீடு செய்திருக்கிறார்கள். அரசாங்கத்தால் தரம் பிரிக்கப்பட்ட முறைப்படி உயர் ரகம், நடுத்தர ரகம், மட்ட ரகம் என்றுதான் பிரித்து வைக்கப்பட்டிருக்கிறது. சூப்பர் ஃபைன் ரகம் என்று பிரித்து வைக்கவில்லை.

**திரு. கே. விநயகம் :** இந்த 'ஸப்போர்ட் ப்ரைஸ்'-ன் நோக்கமே மார்க்கெட்டில் ஒரு விலைக்குக்கீழே போய்விட்டால் அதனால் விவசாயிக்கு நஷ்டம் ஏற்படக்கூடாது என்பதுதான். அதற்காகத்தான் இந்த 'ஸப்போர்ட் ப்ரைஸ்' என்று சென்ட்ரல் கவர்ன்



மென்ட் நம் சர்க்காருக்குத் தாக்கீது கொடுத்திருக்கிறது. இப்போது கண்ட்ரோலை எடுத்துவிட்டோம் என்று சொன்னபிறகு திருத்தணியில் வையகுண்டா, இச்சிலி போன்றவை ரூ. 45 ஒரு மூட்டைக்கு இருந்தது இப்போது ரூ. 55 என்று விலை ஏறியிருக்கிறது. ஆகவே இந்த 'ஸப்போர்ட் ப்ரைஸ்'-க்கே இடமில்லை.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** விலை குறைந்துவிட்டால் விவசாயிகளுக்குக் குறைந்தபட்சம் இந்த விலையாவது கிடைக்க வேண்டும் என்பதுதான் இந்த உத்தரவின் நோக்கமேதவிர என்ன விலை கொடுத்து வாங்குவது என்பது அதன் நோக்கம் அல்ல, விவசாயிகளுக்குக் கட்டுப்படியான விலை, குறைந்த பட்ச விலை இந்த விலை கிடைக்கவேண்டுமென்று மத்திய அரசு நிர்ணயித்து மாநில அரசுக்கு அனுப்பினார்கள். அதை இந்த அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது.

* 57 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state whether the Government are aware of the report of the Agricultural Commission on the fixation of procurement prices?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** வேளாண்மை-விளைபொருள் விலைகளை வரையறுக்கும் குழு 1968-69-ம் ஆண்டுக்கான தனது அறிக்கையில், தமிழ்நாட்டில் கையாளப்பட்டுவரும் நெல் கொள்முதல் விலைகளில் மாறுதல் ஏதும் தேவையில்லை என்று பரிந்துரைத்துள்ளது. இப்பரிவுரையைத் தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. எனினும், உழவர்கள் நெல் பயிரிடுதலை ஊக்கப்படுத்தும் பொருட்டும், அவர்களிடம் உபரியாக நிற்கும் நெல்லைக் கொள்முதல் செய்வதற்குத் தூண்டும் வகையிலும் 3—8—1969 முதல் உயர் ரக, நடுத்தர ரக, மட்ட ரக நெல்லின் கொள்முதல் விலைகளை முறையே ரூ. 50, ரூ. 47, ரூ. 45 ஆக அரசு மாற்றி அமைத்துள்ளது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** இன்றைய தினம் ஏனைய விளைபொருள்களான கடலை, மிளகாய், பருத்தி போன்றவைகளின் விலை அதிகமாகக் கூடியிருக்கிறது. அதை ஒப்பிட்டுப் பார்க்கும்போது நெல்லின் விலை மிகவும் குறைவு என்பதை அரசு ஒப்புக் கொள்கிறதா ? விவசாயிகள் உற்சாகத்தோடு மேலும் நெல் உற்பத்தியைப் பெருக்கவேண்டுமானால் அவர்களுக்கு மேலும் ஏதாவது போனஸ் கொடுக்க அரசாங்கம் கருதுகிறதா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அத்தியாவசியப் பண்டங்களின் விலைகள் சற்று உயர்ந்திருக்கின்றன என்பதை அரசு ஒப்புக்கொள்கிறது. ஆனால் நெல்லுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள இந்த விலை குறைவு என்பதை அரசு ஒத்துக்கொள்ளவில்லை.

[1970 சனவரி 23

* 58 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state—

(a) whether the Government has increased rupees two per quintal in the procurements prices of paddy with effect from 3rd August 1969; and

(b) if so, whether there would be any increase in the sale price of rice distributed in the statutory and non-statutory rationing areas of the State?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) ஆம்.

(இ) சட்ட பூர்வமான உணவுப் பங்கீட்டு முறை அமலிலுள்ள சென்னை, சென்னையின் சுற்றுப்பகுதிகள், கோவை முதலிய இடங்களைத்தவிர மற்ற எல்லா இடங்களிலும் அரிசியின் விலை ஒரு சிறிது உயர்த்தப்பட்டுள்ளது.

**திரு. கே. விநாயகம்:** இந்தக் கேள்வி போட்டது சில மாதங்களுக்கு முன்னால். இப்போது இந்த இரண்டாவது பகுதிக்கு அர்த்தமே இல்லை. ரேஷனை நாம் எடுத்துவிட்டோம். அவரவர்கள் அவர்கள் இஷ்டம்போல் விலை கொடுத்து அரிசியை வாங்கிக் கொள்ளலாம். இப்போது குவிண்டாலுக்கு ரூ. 3 ஏற்றியிருக்கிறார்கள். மார்க்கெட் ரூலிங் ரேட்டுக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? ரேஷனை எடுத்தபோது சிறிது குறைந்தது. இப்போது அது அதிகமாகப் போயிருக்கிறது. குவிண்டாலுக்கு ரூ. 45 என்றிருந்தது இப்போது ரூ. 55 என்று திருத்தணி, அரக்கோணம் பக்கத்தில் விற்கப்படுகிறது, இது அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோன்று அந்த அளவிற்கு வித்தியாசம் இருக்கிறது என்று ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை. நெல் விலை சற்று உயர்ந்திருக்கலாம். அது விவசாயிகளுக்குச் சிறிது வசதியாக இருக்கக் கூடிய விலை. விவசாயிகளுக்கு இப்போதுதான் சிறிது மன நிம்மதி ஏற்பட்டிருக்கிறது. அதைத் தயவுசெய்து திரு. விநாயகம் அவர்கள் கெடுக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை:** இப்போது ரூ. 200 வருமானத்திற்குக் குறைவாக உள்ளவர்களுக்குமட்டுமே உணவுப் பங்கீட்டு முறைப்படி அரிசி கொடுக்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள். சர்க்கரை கிடைக்காத நேரத்தில் 100 ரூபாய் வருமானம் உள்ளவர்கள்கூட தங்களுக்குச் சர்க்கரை கிடைக்க வேண்டும் என்பதற்காகத் தங்களது வருமானம் ரூ. 200, ரூ. 250 என்று கொடுத்திருக்கிறார்கள். இதனால் அவர்கள் இப்போது பாதிக்கப்படுகிறார்கள். இதனால் படி அரிசித் திட்டத்தைத் தீர்க்க உங்களுக்குச் சுலபமாக இருக்கிறது என்பதை அரசு உணருமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** சர்க்கரைக்காக அதிக வருமானத்தைக் காட்டிவிட்டார்கள் என்று சொல்வது, அவ்வளவு தூரம் தவறாகச் செய்திருப்பார்கள் என்பதை இந்த அரசு ஏற்றுக்



1970 சனவரி 23]

கொள்ளவில்லை. அந்த அளவிற்குப் போய்த் துருவிப் பார்த்தால் புதிதாகக்கூட இப்போது அவர்கள் தங்கள் வருமானத்தைக் குறைத்துக் கொள்ளக்கூடும். அதையும் அரசு ஏற்றுக்கொள்வதற்கில்லை.

### National Commission on Labour

* 59 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether the study group of the National Commission on labour for the Southern Region has reported that the industrial relaitons in Tamil Nadu State have taken a turn for the worse during the past eight months;

(b) if so, the details thereof;

(c) whether the study vroup met the then Hon. Minister for Law and Co-operation at Madras; and

(d) if so, the views expressed on behalf of the Tamil Nadu Government before the study group?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்:** (அ) முதல் (எ) வரை: மன்றப் பேரவைமுன் விவரஅறிக்கை * ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

DR. H. V. HANDE: Sir, is it a fact that the opinions expressed by this Commission and the opinions of the Tamil Nadu Government—the Hon. Minister Thiru S. Madhavan was then in charge of the subject—were different and that the previous Minister for Labour refuted the charges levelled by this Commission and said that the position in Tamil Nadu was different? Is what the Minister said a fact or is what the Commission said a fact? Is it also a fact that a little amount of capital flew out of Tamil Nadu to other States because of the unfortunate labour situation, especially in the first one year after the present Ministry took over?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்:** அந்தக் குழுவின் அறிக்கை முன்னுக்குப்பின் முரணானது மட்டுமல்ல, உண்மையின் அடிப்படையில் அது அமையவில்லை என்பதை அந்தக் குழு அறிக்கை வெளியிடப்பட்ட நேரத்தில் இங்கு இம்மன்றத்தில் உறுப்பினர்கள் பங்கேற்றுக்கொண்டு அந்த அறிக்கையை ஒப்புக் கொள்ளாதது மட்டுமல்ல, அப்போது அந்த இலாகா அமைச்சராக இருந்த திரு. மாதவன் அவர்கள் இது முழுக்க முழுக்க உண்மையின் அடிப்படையில் அமையவில்லை என்றும், அதில் இடம் பெற்றிருந்த உறுப்பினர்கள் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்ததால் இப்படிப்பட்ட ஒரு அறிக்கை வெளியிடப்பட்டது என்றும் அப்போதே சொல்லியிருக்கிறார்கள்.

**திரு சு. துரைசாமி:** அந்தக் குழுவில் உறுப்பினர்களாக இருந்தவர்கள் யார் யார்? அவர்களது பெயர்கள் என்ன? அவர்கள் எந்தெந்த ஸ்தாபனங்களோடு தொடர்பு உள்ளவர்கள் என்பதை அறிவிக்க முடியுமா?

---

* 350–358 ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** தலைவர், திரு. என். எஸ். பட், பின்னி நிறுவனம். உறுப்பினர்கள், திரு. வி. எ. இராமச் சந்திரன், இந்தியன் மெட்டல் பாக்ஸ் நிறுவனம், திரு. ஆர். இராமநாத ராவ், இந்திய புகையிலை வளர்ச்சி நிறுவனம், திரு. எம். ஆர். கே. ராவ், தொழிலாளர் நல அதிகாரி, கிர்லோஸ்கர் மின்சார நிறுவனம், பெங்களூர், திரு. எஸ். சி. சி. அந்தோணிப் பிள்ளை, பொறுப்பாளர், சென்னை பொறுப்பாண்மைக் கழகம், திரு. பி. வெங்கடேஷ், மைசூர் மாநிலம், திரு. பி. பாலச்சந்திர மேனன், துணைத் தலைவர், அனைத்திந்திய தொழிற் சங்க காங்கிரஸ், திருவனந்தபுரம்.

**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** அந்த 'நாஷனல் கமிஷன் ஆன் லேபர்' ஸ்டடி க்ரூப் சென்னைக்கு வரவில்லை என்பதும் இங்கு நம் அமைச்சர் அவர்களையோ அல்லது அந்த இலாகா அதிகாரிகளையோ சந்திக்கவே இல்லை என்பதையும் அரசு நினைவில் கொண்டிருக்கிறதா ? அந்த அட்வைஸரி க்ரூப் தமிழ்நாடு பற்றி தாக்கியிருப்பது அவதூறானதாகும் என்ற ஏகமனதான அபிப்பிராயம் உருவானதா ? அது சம்பந்தமான விவரங்களை சபைக்கு அறிவிக்கமுடியுமா ?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** அந்தக் கமிட்டி எந்தக் குறிக்கோளுடன் நியமிக்கப்பட்டதோ அதை நிறைவேற்றவில்லை. உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் இந்த இலாகா அதிகாரி களையோ அல்லது இத்துறை அமைச்சராக இருந்த திரு. மாதவன் அவர்களையோ இந்தக் கமிட்டியினர் சந்திக்கவேயில்லை. அப்படிச் சந்திக்காமல் இம்மாநிலத்தில் தொழில் தகராறுகள் அதிகமாகி யிருக்கிறது என அவர்கள் இருந்த இடத்திலிருந்தே அறிக்கை விட்டிருக்கிறார்கள். தவறான முறையில் அந்த அட்வைஸரி போர்ட் முடிவு எடுத்திருக்கிறது, ஆகவே அந்தக் குழுவின் அறிக்கையை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை என்று தீர்மானிக்கப் பட்டிருக்கிறது.

THIRU K. VINAYAKAM : Sir, on a point of order. The question has been asked and the report of the Commission has been placed on the table of the House. But, Sir, we come here at 8.45 a.m. or 9 a.m. Under any circumstances, hon. Members cannot read the report, assimilate it and frame questions within such a short time. So, may I suggest that it is not in order to place it on the table of the House. When the Question List is sent to our home, the report also could be sent. Then only we can know the contents of the report and ask supplementary questions. Now, the Hon. Minister has stated that members are all Conyresmen. How on earth can we call Thiru Bhatt a Congressman? How on earth can we call the Labour Secretary a Congressman? It may be that Thiru Anthony Pillai is a Cangressman......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்பொழுது ஒரு பாயின்ட் ஆப் ஆர்டரோடு நில்லுங்கள். ஒரே நேரத்தில் 2 பாயின்ட்ஸ் ஆப் ஆர்டரை எழுப்பாதீர்கள். திரு. விநாயகம் அவர்கள், மேஜை மீது





வைத்திருப்பது முறைதானா என்று கேட்கிறார்கள். இதுதான் 20 ஆண்டு காலமாக நடைபெற்று வரும் மரபு. அதன் மேல் விளக்கம் கேட்க வேண்டுமென்றால் ஒரு கேள்வியாகப் போடுங்கள், அனுமதிக்கிறேன்.

**திரு. கே. விநாயகம் :** படிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பிறகு, படித்து விட்டுத்தான்.

### பஞ்சாலை நிர்வாகத்தில் தொழிலாளர்கள் இணைப்பு

* 60 **வினா.—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடை யளிப்பாரா—

பஞ்சாலைகளின் நிர்வாகத்தில் தொழிலாளர்களை இணைத்துச் செயல்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** தொழில் நிறுவனங்களில் கூட்டு நிர்வாக மன்றங்கள் அமைக்கப்படுவதற்கு ஊக்கமளிக்க வேண்டும் என்பது இந்த அரசினுடைய நோக்கமாகும். அத்தகைய மன்றங்கள் இம்மாநிலத்தில் மூன்று பஞ்சாலைகளில் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, அவ்வப்பொழுது பஞ்சாலைகளின் முன்னேற்றம் குறித்தும், தொழிலாளர்களின் பிரச்னை குறித்தும், விவாதிப்பதற்கு நிர்வாகிகள், அரசு பிரதிநிதிகள், தொழிலாளர் தலைவர்களைக் கொண்ட குழு நியமிக்கும் எண்ணம் அரசாங்கத்திற்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** அப்படிப்பட்ட தீவிர நோக்கத்தோடுதான் இப்பொழுது அந்தக்குழு நியமிக்கப்பட்டு, அடிக்கடி அந்தக் கூட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### (2) ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்

(அ) திருச்சி மாவட்டத்தில் காஜாமலைப் பகுதி இராணுவ துப்பாக்கி சுடுபயிற்சி இடமாக பயன்படுத்தப்படுவதால் ஏற்பட்டுள்ள அபாய நிலை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சாமிநாதன் அவர்கள் ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானம் ஒன்றைக் கொடுத்திருக்கிறார்கள். அதாவது, "திருச்சி தாலுகாவிலுள்ள கிராப்பட்டி, காஜாமலை பகுதி, பட்டுமேடு ராணுவ துப்பாக்கி சுடுபயிற்சி இடமாக

பயன்படுத்தப்பட்டு வருகின்றது, இங்கு அடிக்கடி துப்பாக்கி சுடு பயிற்சி நடைபெறுவதால் பொதுமக்களுக்கு மிகவும் அபாயகரமாக உள்ளது என்ற இந்தப் பொருள் பற்றி விவாதிக்க வேண்டும்" என்று கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே, சுருக்கமாக எப்படி இது இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்கத் தக்க முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது என்பதைப்பற்றி மட்டும் கூறுமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

■ **திரு. வை. சுவாமிநாதன்:** தலைவரவர்களே, அந்தப் பகுதி முன்பெல்லாம் காலியிடமாக இருந்தது. இப்பொழுது அந்தப் பகுதியில் சபரிமில், சிம்கோ பேக்டரி போன்றவைகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. அதோடு, அரசாங்க ஹவுஸிங் யூனிட்டால் பல வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. அதனால் கிராமப்பட்டியில் குடியிருப்புகள் நிறைய அமைக்கப்பட்டு மக்கள் ஏராளமாகக் குடியிருக்கிறார்கள். சுடப்படும் குண்டு அந்த ரேஞ்சைத்தாண்டி எட்டி விழுவதால் பலர் மரணம் அடைந்திருக்கிறார்கள். 5—1—1970-ஆம் தேதிகூட ரெங்கசாமி என்ற ஒருவர் மரணம் அடைந்திருக்கிறார். மறுநாள் இன்னொரு பெண்ணுக்குப் பலத்த காயம் ஏற்பட்டிருக்கிறது. அத்துடன், அது நகரத்திற்கு அருகே இருப்பதால் பல விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே, நகர எல்லையைவிட்டு அப்புறப்படுத்தினால் அங்குள்ள மக்களுக்கு உயிர்ப் பாதுகாப்பு அளிப்பதோடு, அதன்மூலம் கிட்டத்தட்ட 50 ஏக்கரா நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டுவர முடியும். இது மக்களின் உயிர்ப்பிரச்சினையாக இருப்பதால், இந்தச் சபையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து இதுபற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவரவர்களே, திருச்சி மாவட்டத்தில் காஜாமலைப் பகுதியில் பல ஆண்டுக் காலமாக, இராணுவ முகாமில் இந்தத் துப்பாக்கிப் பயிற்சி நடைபெற்று வருகின்றது. அந்த இடம் நம்முடைய மாநில அரசுக்குச் சொந்தமான இடம் அல்ல, இராணுவத்திற்குச் சொந்தமான இடம். அப்படித் துப்பாக்கிப் பயிற்சி நடைபெறும் நிலையில், ஒரு பெண் 6—1—1970-ஆம் தேதியில் சுடப்பட்டு காயமுற்றார்கள். 5-ம் தேதியன்று ஒரு சிறுவன் மீது, பயிற்சி நேரத்திலே அந்தப் பக்கம் சென்ற நேரத்திலே, துப்பாக்கிக் குண்டு பாய்ந்து மரணம் அடைந்திருக்கிறான். இவையொட்டி உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் நடவடிக்கை எடுத்து, அதை உடனடியாக ஒத்தி வைக்க வேண்டுமென்றும், இப்பொழுது அந்தப் பயிற்சி நடை பெறக் கூடாது என்றும் நடவடிக்கை எடுத்ததனால் அந்தப் பயிற்சிகள் நிறுத்தப்பட்டுவிட்டன. ஆனாலும், இது இராணுவம் சேர்ந்த நிலை, நாம் எந்த அளவுக்குத் தலையிடலாம் என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் அறிவார்கள் என்று கருதுகிறேன். இப்பொழுதிருக்கும் அந்த இடத்தைச் சுற்றி, பல ஆண்டுக் கால



மாக வெட்டவெளியாக இருந்ததில் இப்பொழுது பல கட்டடங்கள் வந்துவிட்டன. சில ஏழை எளிய மக்கள் சிறுசிறு குடிசைகளும் அமைத்துக்கொண்டனர். அதன் காரணமாக இந்த இரண்டு சம்பவங்களும் ஏற்பட்டன. அவர்கள் அந்த இடத்திற்குப் பதிலாக வேறு ஒரு இடத்தைத் தந்தால் சென்று விடுவதாகச் சொல்லுகிறார் கள். உறுப்பினரவர்கள் கூட அந்த இடத்தில் 50 ஏக்கர் சாகுபடி செய்யலாம் என்று சொல்லுகிறார்கள். அவர்களுக்கு மாற்று இடம் கொடுத்தால், சாகுபடி செய்யும் வகையில் 50 ஏக்கர் நிலத்தையும் அவர்களுக்குத் தர வேண்டியிருக்கும். அதிலிருக்கும் இடையூறுகளை யோசித்து, அதில் முடிவெடுக்கும் வரையில் துப்பாக்கிப் பயிற்சியை நிறுத்தி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறது. அதன்படி நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த அளவோடு நிறுத்திக் கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொண்டு, இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்று தங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இதை விவாதிக்க வேண்டியதில்லை என்று கருதுகின்ற காரணத்தால் இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

## (ஆ) ஐ.சி.எஃப்.-இல் இரயில்வே காவல் துறையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததும் அதன் விளைவுகளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்தபடியாக, திரு. கோதண்டராமன் அவர்கள், 8—1—1970-ம் தேதி ஐ.சி.எப். தொழிற்சாலையில் தொழிலாளர்களின் மீது ஆர்.பி.எப். போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்து அதனால் ஒரு தொழிலாளி இராசமாணிக்கம் என்பவர் இறந்ததைப் பற்றி தொழிலாளர்களின் மத்தியில் மிகப் பெரிய அளவுக்கு ஆத்திரமும், அதிருப்தியும் ஏற்பட்டுள்ளதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப்பற்றி மட்டும் சுருக்கமாக எடுத்துக் கூறுமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** சார், 8—1—1970-ஆம் தேதி ஐ.சி.எப். தொழிற்சாலையிலே நடந்த துப்பாக்கிப் பிரயோகம் காரணமாக இராசமாணிக்கம் என்ற ஒரு தொழிலாளி மாண்டு விட்டார். சொல்ல வேண்டுமானால் இது வேண்டுமென்றே திட்டமிட்டு நடைபெற்றிருக்கக் கூடிய ஒரு பிரச்னை என்று கருத வேண்டியுள்ளது. காரணம் என்னவென்றால், அந்தத் தொழிற் சங்கத்தின் முக்கியப் பிரதிநிதி, அதேபேட்டையிலே உள்ள தொழிலாளர்களைச் சேர்ந்த ஒரு தொழிலாளி, அதிகாரி

களிடத்திலே தொழிலாளர் பிரச்னை குறித்து பேச்சு வார்த்தை நடத்த வேண்டிய ஆபீசுக்குச் சென்று கொண்டிருக்கும் நேரத்தில், கேட் பாஸ் காண்பித்தும், அவர் சென்று கொண்டிருக்கும் நேரத்தில் ஆர்.பி.எப். என்ற படை அவரைப் பார்த்துக் கேட்ட நேரத்தில் அந்தப் பாஸைக் காட்டிய பிறகு அவர் எது சம்பந்தமாக பேச வேண்டுமென்று ரிக்கார்டுகளையெல்லாம் காட்டிய பிறகும் அவரை ஆர்.பி.எப். அவர் இருக்கக்கூடிய அறைக்குச் சென்று அடித்திருக்கிறார்கள். அதன் விளைவாகத்தான் அங்கேயிருக்கும் தொழிலாளர்கள் ஒன்றுபட்டுக் கேட்டதற்காக வேண்டி, ஒரு துப்பாக்கிப் பிரயோகம் நடத்தி, இதுபோன்ற ஒரு குட்டி ஜாலியன்வாலாபாக் நடத்தக்கூடிய அளவுக்கு இருக்கிறது. ஆகவே தான், இதுபோன்ற தொழிற்சாலைகளிலே ஒரு படையை வைக்கக் கூடாது என்று பார்லிமெண்டிலே ஒரு விவாதத்தின்போது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த அங்கத்தினர்களும், கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்களும் ஒன்றுபட்டு அதை எதிர்த்திருக்கிறார்கள். இது நடைமுறையிலே வந்தால் உண்மையிலே பல குழப்பங்களை விளைவிக்கும் என்று சென்ற ஆண்டிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விளைவை நடைமுறை யிலே கூட பார்த்து விட்டோம். ஆகவே, அப்பேர்ப்பட்ட அதிகாரிகளை, பலவந்தமாகத் துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களை இதுவரை யில் கைது செய்தது உண்டா? அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது உண்டா? ஏதோ போலீஸ் விசாரணை என்றுதான் கேள்விப்படுகிறேன். நீதி விசாரணை . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விளக்கமாகச் சொல்லிக் கொண்டு வருகிறீர்களே, விவாதம் நடத்த அனுமதி கொடுக்கப்பட வில்லையே.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** நேற்று எதிர்க்கட்சித் தலைவரவர்கள் அரை மணி நேரம் பேசினார்கள். நான் ஐந்து நிமிஷம் பேசக்கூடாதா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இது என்னுடைய உரிமையைப் பாதிக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் பேசினார் என்றால், அவர் எதிர்க்கட்சித் தலைவர் இல்லையே.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** ஆகவே, இப்படிப்பட்ட பொறுப்பற்ற முறையிலே, வேண்டுமென்றே தொழிலாளர் இயக்கத்தை நசுக்க வேண்டுமென்று ஏற்பட்டிருக்கும் இதை உடனடியாகத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், அந்தக் குடும்பங்களுக்கு நஷ்டஈடு கொடுக்க வேண்டுமென்றும் குண்டடிபட்ட தொழிலாளருக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையிலே விவாதம் நடத்த வேண்டி இந்தச் சபையின் பிற அலுவல்களை ஒற்றி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.





**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இந்த ஒற்றிவைப்புத் தீர்மானம் அண்மையில் ஐ.ஸி.எஃப்.-இல் நடைபெற்ற கலவரம், அதை ஒட்டி நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகம் இவைகளின் விளைவுகளைப்பற்றியது ஆகும். அங்கே கிருஷ்ணசாமி என்கின்ற ஒரு தொழிலாள நண்பர் அலுமினியம் கம்பிகளை தான் கொண்டுசென்ற ஒரு ஃபைலில் மறைத்து வைத்துக்கொண்டு சென்றதாகவும், அவரை அந்த வாயிலிலிருந்த காவலர் தடுத்து நிறுத்தியதாகவும், அதன் காரணமாகத் தகராறு முற்றியதாகவும். பிறகு அங்கிருந்து மேலதிகாரி இருக்கிற அறைக்கு அந்தப் புகார் கொண்டு செல்லப்பட்டதாகவும், அப்பொழுது அந்தத் தொழிலாளர் தன்னை அடித்துவிட்டதாகக் கூச்சல் போட்டதாகவும், அதை ஒட்டி 300 தொழிலாளர்கள் நிர்வாகத்தினரை அணுகி, உடனடியாக அந்த சுருளிவேலு என்ற அந்தத் தொழிலாளியைத் தடுத்த காவலரைப் பதவியிலிருந்து விலக்கவேண்டும் என்று வற்புறுத்தியதாகவும், அதன்பேரில் சுருளிவேலு என்ற அந்தக் காவலர் பாதுகாப்பு அதிகாரியினால் தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டு வைக்கப்பட்டதாகவும், அதற்குபிறகு ஒரு தொழிலாளி தாக்கப்பட்டார் என்ற செய்தி அந்தத் தொழிற்சாலை முழுவதும் பரவியதன் காரணமாக 3,000 தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து காவல் நிலையத்தைச் சூழ்ந்துகொண்டு—அந்தக் காவல் நிலையத்தில் 5, 6 காவலர்கள்தான் இருந்தார்கள். அந்தக் காவலர்கள் ரயில்வே பாதுகாப்பு இலாகாவைச் சேர்ந்த போலீசார், மாநிலப் போலீசார் அல்ல—அந்த 5, 6 காவலர்களையும் சூழ்ந்து கொண்டு, கட்டடத்தின்மீது கற்களை வீசியதாகவும், வேறு பல பொருள்களையும் வீசி எறிந்ததாகவும், உள்ளே இருந்த துப்பாக்கிகளைக் கைப்பற்ற முயன்றதாகவும், அதன் காரணமாகத் துப்பாக்கிச்சூடு தவிர்க்க முடியாத அத்தியாவசியமான சூழ்நிலையிலே ஏற்பட்டதாகவும், இராஜமாணிக்கம் என்ற ஒரு தொழிலாளி குண்டுபட்டு இறந்துவிட்டதாகவும் செய்தி கிடைத்திருக்கிறது. நான் இவைகள் அத்தனையும் எனக்குக் கிடைத்த செய்திகளாகத்தான் இங்கு எடுத்துக்கூறுகிறேன். இவைகள் இப்படித்தான் என்று நான் திட்டவட்டமாகக் கூறவில்லை. காரணம், ஒரு மாஜிஸ்டிரேட் விசாரணை இதற்காக நடந்துகொண்டிருக்கிறது. எனக்கு வந்த செய்திகளைப்பற்றி இங்கே குறிப்பிட்டேன்.

இ. ராஜமாணிக்கம் என்ற தொழிலாளிக்கு நஷ்டஈடு கொடுக்க வேண்டும் என்று திரு. கோதண்டராமன் சொன்னார்கள். நிர்வாகத்தினர் சார்பில் ரூ. 11,970 அந்த ராஜமாணிக்கத்தின் மனைவிக்கு நஷ்டஈடாகத் தரப்பட்டதாகவும், அதோடு மாதம் ஒன்றுக்கு ரூ. 87 பென்ஷன் 9—1—1970 முதல் தர உத்தேசித்திருப்பதாகவும் உத்தரவிடப்பட்டிருக்கிறது என்று எனக்குச் செய்திகள் வந்திருக்கின்றன. ஆகவே, இது முழுக்க முழுக்க நமது மாநில அரசைச் சார்ந்தது அல்ல என்றாலும், ரயில்வே நிர்வாகப் போலீசார் அவர்களுடைய நிலையில் நடைபெற்றது என்றாலும், சட்டம்,

1970 சனவரி 23] [திரு. மு. கருணாநிதி]

ஒழுங்கு அமைதி என்பதைப்பொறுத்து ஒரு மாஜிஸ்டிரேட்டைக் கொண்டு நீதி விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்த விஷயம் நீதி விசாரணையில் இருக்கிற காரணத்தினால், இது ஒத்தி வைப்புக்கு ஏற்றது அல்ல என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்தை ஒட்டி, இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் எழுந்திருந்தார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதிலே வேறு ஒன்றும் விளக்கம் தேவையில்லை.

## (3) அரசினர் தீர்மானம்.

### விதி 41(3)-ஐத் தளர்த்தல்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, "தமிழ் நாடு சட்டப்பேரவை விதிகளின் 41(3)-வது விதியின்கீழ் ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களைப்பற்றிக் கவன ஈர்ப்புத் தீர்மானம் எழுப்பக்கூடாது என்ற விதியை இன்று தளர்த்தவேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

## (4) கவன ஈர்ப்பு.

### (அ) ஹோசூரில் தெலுங்கு மாணவர்களுக்கும், போலீசாருக்கும் இடையே ஏற்பட்ட மோதல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கோமதிசங்கர தீட்சிதர், டாக்டர் ஹாண்டே, திரு. கோதண்டராமையா, திரு. வெங்கடசாமி ஆகிய நால்வரும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள்.

THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Mr. Speaker, Sir, I wish to call the attention of the Hon'ble Chief Minister to a matter of urgent public importance, namely, the clash between the Telegu students and the Police around 11th December 1969 in Hosur in Dharmapuri district and the tense situation prevailing in that area.



1970 சனவரி 23]

DR. H. V. HANDE : Sir, I wish to call the attention of the Hon'ble Chief Minister to a matter of urgent public importance, namely, the clash between the Telugu students and the Police around 11th December 1969 in Hosur in Dharampuri District and the tense situation prevailing in that area.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, I wish to call the attention of the Hon'ble Chief Minister to a matter of urgent public importance, namely, the clash between the Telugu students and the Police around 11th December 1969 in Hosur in Dharmapuri district and the tense situation prevailing in that area

THIRU B. VENKATASWAMY : Sir, I wish to call the attention of the Hon'ble Chief Minister to a matter of urgent public importance, namely the clash between the Telugu students and the Police around 11th December 1969 at Hosur in Dharmapuri district and the tense situation prevailing in that area.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, ஹோசூரில் உள்ள அரசு மாணவர் உயர்நிலைப்பள்ளியில் பயிலும் தமிழ், தெலுங்கு மாணவர்கள் ஒருவருக்கொருவர் கடுஞ்சொற்களைப் பயன்படுத்தியதன் விளைவாக 4—12—1969 அன்று கலவரம் ஏற்பட்டது. இந்த நிகழ்ச்சிக்குப்பிறகு அப்பள்ளியைச் சேர்ந்த தெலுங்கு ஆசிரியர் ஒருவர் மேற்சொன்ன நிகழ்ச்சிக்குத் தமிழ் மாணவர்கள்தான் காரணம் என்று கூறி அவர்களை ஏசியதாகக் கூறப்படுகிறது. இதனால் வெகுண்ட தமிழ் மாணவர்கள் வகுப்புகளுக்குச் செல்லாமலிருக்க விரும்பினர். ஆனால் அவ்வாறு செய்ய வேண்டாமெனத் தலைமையாசிரியர் அவர்களை வற்புறுத்திக் கேட்டுக்கொண்டார்கள்.

ஹோசூர் அரசு மாணவர் உயர்நிலைப்பள்ளியில் 10 மணி அளவில் இறைவணக்கம் தமிழில் பாடப்பட்டபொழுது தெலுங்கு மாணவர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இறைவணக்கப்பாடல் பாடப்படுவதற்கு இடையூறு விளைவிக்க முற்பட்டனர். இதற்கிடையில் அண்மையிலுள்ள தெலுங்கு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி மாணவர்களும் இந்த உயர்நிலைப்பள்ளி மாணவர்களுடன் சேர்ந்து கொண்டு, தமிழ் மாணவர்கள்மீது கற்களை வீசியெறியத் தொடங்கினர். தகவல் கிடைத்ததன்மேல் உள்ளூர் காவல்துறை இன்ஸ்பெக்டரும், தாசில்தாரும், ரிசர்வ் காவற்படையுடன் அந்த இடத்திற்கு விரைந்து மாணவர்களை அமைதியாயிருக்கும்படி செய்ய முயன்றனர். ஆனால் 500 பேர்கொண்ட கூட்டம் கட்டுக்கு மீறிக் காவற்படைமீது கற்களை வீசியெறியத் தொடங்கியது. இதன் விளைவாக, தாசில்தாரும், காவல்துறை இன்ஸ்பெக்டரும், சப்இன்ஸ்பெக்டர் ஒருவரும், காவலர் நால்வரும் காயமுற்றனர். சிறிது நேரத்திற்குப் பின்னர், அந்த இடத்திற்கு விரைந்து ஹோசூர் மாவட்ட எஸ்.பி. அவர்களும் கல்லெறி பட்டார். நிலைமை கட்டுக்கடங்காமற் போகவே, கலவரம் ஏற்பட்ட இடத்திலிருந்து கட்டுக்கடங்காத கூட்டத்தினர் கலைந்து செல்வதற்காக, காவற்படையினர் தடியடி பயன்படுத்தவேண்டிய நிலை ஏற்பட்டது.

ஆயினும், பள்ளி அருகே சட்டம், அமைதி காக்கும் பணியில் காவற்படை முழுவதும் ஈடுபட்டிருக்கையில், தெலுங்கு மாணவர்களும் பிற கலகக்காரர்களும் அடங்கிய ஒரு கூட்டம் பள்ளியிலிருந்து சுமார் இரண்டு பர்லாங் தொலைவில் வட்ட அலுவலகத்தின் அருகே அமைந்துள்ள, மறைந்த அண்ணா அவர்களின் சிலைக்கு நேராகச் சென்று சிலையின்மீது கற்களை வீசிச் சிலைக்கு மிகுந்த சேதம் ஏற்படுத்தியது.

டிசம்பர் 9-ஆம் நாள் பிற்பகலில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஹோசூரிலுள்ள உள்ளூர் தலைவர்கள் சிலருடன் அமைதி காப்பது குறித்து உரையாடல்கள் நடத்தினார். ஆனால் இந்த உரையாடல்களினால் பயன் ஏதும் ஏற்படவில்லை. மேற்கொண்டும் கலவரம் விளைவிப்பதிலேயே இக் கலகக்காரர்கள் முனைந்திருந்ததால், இந்த நிகழ்ச்சிகளின் தொடர்பாகக் காவலர் டிசம்பர் 9, 10-ம் நாட்களில் 58 பேர்களைக் கைதுசெய்து தனித்தனியாக இரண்டு வழக்குகளைப் பதிவு செய்ய வேண்டிவந்தது. ஹோசூர் தாசில்தார் அப்பகுதியில் 10—12—1969 தொடங்கி 7 நாட்களுக்கு கி.பு.கோ. 144-வது பிரிவின் கீழ் தடை ஆணை பிறப்பித்தார்.

உள்ளூர் தலைவர்கள் அடங்கிய அமைதிக் குழு ஒன்றை மாவட்ட ஆட்சித் தலைவர் 1969, டிசம்பர் 12-ஆம் நாளன்று அமைத்தார். இந்த நிகழ்ச்சிகளில் தொடர்புகொண்ட மாணவர்களின் பெற்றோர்கள் மன்னிப்புக் கேட்டனர். காவற்படைமீது மாணவர்கள் கற்களை வீசியெறிந்தமைக்காகவும், மறைந்த முதலமைச்சர் அண்ணா அவர்களின் சிலைக்குச் சேதம் ஏற்படுத்தியதற்காகவும் பெற்றோர்கள் வருத்தம் தெரிவித்தனர். மக்களிடையே அமைதியும் நல்லெண்ணமும் நிலவச் செய்வதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்குமாறு ஆணை பிறப்பித்து அவர்கள்மீது மேற்கொண்டும் நடவடிக்கை எடுக்கப்படுவதைக் கைவிடுமாறு ஆணையிட்டார். இப்பொழுது இப்பகுதியில் முழு அமைதி நிலவுகிறது.

இப்பகுதி மக்களிடையே அமைதியும் நல்லெண்ணமும் நிலவச் செய்யும் நோக்கத்துடன், டிசம்பர் 20-ஆம் நாளன்று மாவட்ட ஆட்சித் தலைவர், திருவாளர்கள் முனிரெட்டி, ராமசந்திரா ரெட்டி ஆகிய தெலுங்குத் தலைவர்களுடன் உத்தனபள்ளித் தொகுதிச் சட்ட மன்றப் பேரவை உறுப்பினர் திரு. கோதண்டராமையா அவர்களையும், சட்டமன்றப்பேரவை உறுப்பினர் திரு. வெங்கடசாமி அவர்களையும் சந்தித்தார். மாணவர்களையும் அவர்களது பெற்றோர்களையும் ஹோசூர் பகுதியிலுள்ள தமிழ், தெலுங்கு வகுப்பினர்களைச் சேர்ந்த பிற முக்கியமானவர்களையும் கொண்ட கூட்டம் ஒன்றை மாவட்ட ஆட்சித் தலைவர் 26—12—1969 அன்று கூட்டினார். தமிழர், தெலுங்கரிடையே மனக்கசப்பை அகற்ற வேண்டிய அவசியம்பற்றி உள்ளூர் தலைவர்கள் வற்புறுத்தினர். 'அண்ணா' சிலையை மீண்டும் அமைக்க ஹோசூர் பகுதியில் உள்ள





முக்கியமான தலைவர்கள் அனைவரும் கொண்ட குழு ஒன்றை அமைப்பது என்று அக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. பெரியோர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, உயர்நிலைப்பள்ளியை 29—12—1969 அன்றும், தெலுங்கு ஆசிரியர் பயிற்சிப் பள்ளியை 2—1—1970 அன்றும் மீண்டும் திறப்பதென்று முடிவு செய்யப்பட்டது. அவ்வண்ணமே ஹோசூர் அரசு மாணவர் உயர்நிலைப் பள்ளி 29—12—1969 அன்றும், தெலுங்கு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி 2—1—1970 அன்றும் மீண்டும் திறக்கப்பட்டது. பள்ளிக்குச் சென்று பார்வையிட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் தமிழ், தெலுங்கு இரு இன மாணவர்களும், ஆசிரியர்களும் தங்களிடையே நல்லுறவுகளைப் பேணிவருமாறு கேட்டுக்கொண்டிருக்கிறார். தற்பொழுது இங்கு அமைதி நிலவுகிறது.

DR. H. V. HANDE : The position is slightly different from what the Chief Minister has read out just now. On the 9th. . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் விளக்கம் தான் கேட்கலாம். இன்றைக்கு ஸ்டேட்மெண்டு கொடுக்க முடியாது.

DR. H. V. HANDE : You don't want me to talk anything?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நோ, நோ. இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கும் அறிக்கையிலிருந்து விளக்கம் பெறலாம். மேற்கொண்டு நீங்கள் ஒரு ஸ்டேட்மெண்ட் கொடுப்பது கூடாது. நீங்கள் ஒரு ஸ்டேட்மெண்ட் கொடுக்க, வேறு செய்திகளைச் சொல்ல இப்பொழுது இடம் இல்லை.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** நான் சொல்வதைக் கேளுங்கள். ஆனரபிள் சீப் மினிஸ்டர் ஒரு ஸ்டேட்மெண்ட் கொடுத்திருக்கிறார்கள். அதற்கும் எங்களுக்குத் தெரிந்த விவரத்திற்கும் கொஞ்சம் வித்தியாசம் இருக்கிறது என்று நினைக்கிறேன். அதை எடுத்துச் சொல்ல உரிமை இருக்கிறதா ? இல்லையா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் இப்பொழுது விளக்கம் தான் கேட்கலாம்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** நாங்கள் பேசும்போது எந்த அமைச்சரும் குறுக்கிடலாம் என்ற நிலை இருக்கிறது. கொஞ்சம் விஷயத்தைக் கேட்டால் நன்றாக இருக்கும். இங்கே 234 அங்கத்தினர்களையும் இரண்டு வகுப்புகளாகப் பிரித்து, மந்திரிகள் எப்படி வேண்டுமானாலும் பேசலாம், மற்றவர்கள் வாயை மூடிக் கொண்டு இருக்கவேண்டுமா? அப்படி இரண்டு வகுப்புத்தான் என்று ரூல் ஃப்ரேம் செய்து விட்டுவிடுங்கள். நாங்கள் ஒத்தி வைப்புத் தீர்மானம் சொடுத்தால் என்னுடையதாகிவிடுகிறது. நேற்று எஸ்.ஐ.ஈ.டி. கலேஜ்பற்றி கால் அட்டென்ஷன் நோட்டீஸ் கொடுத்திருக்கிறேன். இங்கே அடையாறில் இருக்கும் சாஸ்திரி நகர்பற்றி . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதற்கெல்லாம் இப்பொழுது சந்தர்ப்பம் இல்லை.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** எதையுமே பேசக்கூடாதா ? எதையும் பேசுவதற்கு உரிமை இல்லையா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேசக்கூடாது என்று சொல்லவில்லை. சட்டசபை விதி முறைகள் இருக்கின்றன. அந்த விதி முறைகளை ஒட்டித்தான் பேசவேண்டும். அப்படிப் பேசினால் யாரும் குறை சொல்ல முடியாது. அப்படியன்றி, எப்பொழுது வேண்டுமானாலும் எதைவேண்டுமானாலும் பேசவேண்டும் என்றால், அந்த முறையில் விதிமுறைகளை மாற்றி என் கையில் கொடுத்து விடுங்கள். நான் வேண்டும் போதெல்லாம் அனுமதி கொடுக்கிறேன். என்னிடத்தில் கொடுக்கப்பட்டுள்ள விதி முறைகளின்படி, இந்த அறிக்கையின்மீது தெளிவு பெறுவதற்கு, அதுவும் பேரவைத் தலைவர் விரும்பினால், இரண்டொரு கேள்விகள் கேட்கலாம். அதுவும் திட்டவட்டமாக இல்லை. "பேரவைத் தலைவர் விரும்பினால்" என்று இருக்கிறது. அப்படிக் கேட்கத் தாராளமாக அனுமதி தருகிறேன். அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம். எந்த உரிமையையும் மறுக்கவில்லை.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** விளக்கம்தான் கேட்கிறேன். அதற்குள்ளே விடமாட்டேன் என்கிறீர்களே. (குறுக்கீடு) சற்றுப் பொறுத்துக் கொள்ளுங்கள். ஒன்றும் பயங்கரமாக, ஒரு வார்த்தை கூட வராது. கவலைப்பட வேண்டாம். (குறுக்கீடு) நான் அண்ணாவின் வழியில் நிற்பவன். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு உள்ளவன். ஹோசூரில், நடந்தது என்னவென்றால், ட்ரெயினிங் ஸ்கூலில் போலீஸ் தடியடி நடந்தது. இன்னொரு ஸ்கூல் மாணவர்களிடம் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மறுபடியும் நீங்கள் வேறு செய்திகள் சொல்லுகிறீர்கள். உங்களுடைய விளக்கத்தைக் கூறுவதற்கு இதுவல்ல சந்தர்ப்பம். ரூல் 41-ன் கீழே அறிக்கை கொடுத்தபிறகு, விளக்கம் கேட்கலாம். அந்த விளக்கம் போதவில்லை என்றால், அதற்கும் சட்டசபை விதியில் இடம் இருக்கிறது. அடுத்துப் பேசவிருக்கும், கவர்னர் உரைமீது நடக்கும் விவாதத்தில் கருத்துக்களைச் சொல்லலாம். அதுவும் போதாது என்றால், இந்தப் பொருள்பற்றிப் பேச ஒரு மணிநேரம் விவாதம் கேட்கலாம். ஆனால் இந்த அறிக்கையின்மேல் தெளிவு பெற, சுருக்கமாக இரண்டொரு கேள்விகள் கேட்கலாமே ஒழிய, நீங்கள் இன்னொரு அறிக்கை அளிக்க முடியாது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** தெளிவு பெறத்தான் கேட்கிறேன். அதற்குள் நீங்கள் விடவில்லை.

**Is there any rule that we should get clarification only in nine words, twelve words or fourteen words ? I may exceed by a few words over what the Speaker may have in his mind as normal.**



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விளக்கம் பெறுவதற்கு முறையிருக்கிறது.

DR. H. V. HANDE : I am only asking for a clarification. If only the Speaker hears me patiently, it will be a beautiful clarification in a question form. If only the Speaker had allowed me, by this time everything would have been over.

Actually when the students were marching into the Training School and the Headmaster was trying to pacify them saying 'you don't march ', suddenly a batch of Police people came and then the whole thing started. Ultimately the unfortunate incident occurred in which Anna's statue was completely smashed. Yesterday also the Minister said it. Will the Chief Minister clarify whether it is not a fact that, after the Anna statute was smashed, a few Telugu students were taken and kept in Police custody—this information might not have been given to the Chief Minister—and beaten indiscriminately? I have got twentynine witnesses.

(Hon. Thiru M. Karunanidhi rose.)

DR. H. V. HANDE : I will complete the question.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, . .

. . . (திரு. ஹாண்டே தன்னிடத்தில் நின்றார்) கொஞ்சம் இருங்கள். நான் சொல்லுகிறேன் . . . .

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** அப்புறம் விடமாட்டார். I am really scared by the Speaker. சொல்லிவிடுகிறேன். க்வெஸ்சின் கொடுத்தால், கால் அடென்ஷன் நோட்டீஸ் கொடுங்கள் என்கிறார்கள். கால் அடென்ஷன் நோட்டீஸ் கொடுத்தால் . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, ஹோசூரில் நடைபெற்ற நிகழ்ச்சி. இப்பொழுது ஒரு அமைதியான வடிவம் எடுத்திருக்கிறது. இப்பொழுது சட்டசபையில் அதைப் பற்றிமாறி மாறிக் கேள்விகள் கேட்டுக்கொண்டிருப்பது, மிக்கச் சிரமப்பட்டு தெலுங்கர், தமிழர் என்ற வேறுபாடு இன்றி உருவாகியிருக்கும் அமைதியான நிலைமையைக் கெடுத்துவிடும் என்று கருதுகிறேன். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள், சமாதானத்தில் அக்கறை வைத்து, இதற்குமேல் அதுபற்றிப் பேசாமல் இருப்பது நல்லது என்பது என்னுடைய பணிவான வேண்டுகோள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கோதண்டராமையா. .

(டாக்டர் ஹாண்டே தன் இடத்தில் எழுந்தார்) நீங்கள் இருங்கள். திரு. கோதண்டராமையா . . . .

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** என்னைக் கேட்கவே இல்லையே ? **So, you are not allowing me any clarification.**

[1970 சனவரி 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்களுக்கு வேண்டுமென்றால், உங்கள் சந்தர்ப்பத்தில் கேளுங்கள். இப்பொழுது திரு. கோதண்டராமையாவைக் கூப்பிட்டிருக்கிறேன்.

DR. H. V. HANDE : Before I completed, I was interrupted by the Chief Minister.

**திரு. ம. பொ. சிவஞானம் :** பேரவைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர் சிவஞானத்தை நான் கேட்டுக் கொள்வது, யார் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்களோ அவர்கள் மட்டுந்தான் விளக்கம் பெறுவதற்கு, ஓரிரு கேள்விகள் கேட்க, அனுமதி அளிக்க விதி இருக்கிறது. மற்றவர்கள் இந்த நேரத்தில் விளக்கம் கோருவது முறையல்ல.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** பாயின்ட் ஆப் ஆர்டர், சார். இந்த மன்ற நூல் 41-ல், இதுவரையில், அறிக்கைகள் கொடுத்திருக்கிறது, அதன்மேல் விளக்கம் அமைச்சர்கள் கொடுத்திருக்கிறார்கள், அந்த முறையை விட்டுவிட்டு மன்றத்தின் பொன்னான நேரத்தை இப்படிப் பாழாக்குவது சரியல்ல ; இந்த மன்றத்தின் மரபை ஒட்டி, இந்த விவாதத்திற்கு இது சமயம் இல்லை என்று தெரிவிக்கிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, the hon. Member Dr. Hande said that the information given by the Hon. Chief Minister was not completely correct. It requires some verification; and also some misleading information is given. My idea is that the Hon. Chief Minister must be in possession of full details and correct details. My anxiety is to provide him the entire truth. If you permit me.........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவைபற்றியெல்லாம் ஆளுநர் உரை மீது பேசும்போது பேசுங்கள், கருத்துக்களைச் சொல்லுங்கள். விளக்கம் வேண்டுமென்றால் சுருக்கமாகச் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இது பற்றிய முழு விவரம் தரவேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். அப்படி முழுமையான விவரத்தைக் கொடுத்தால் அதில் சில எம்.எல்.ஏ.-க்களும் சம்பந்தப்பட்டவர்களாக இருக்கலாம். அதனால்தான் நான் அதைத் தரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர்கள் விளக்கம் பெறுவதற்காக வேண்டி சில கேள்விகள் வேண்டுமானால் கேட்கலாம். அதை ஒரு பெரிய அறிக்கையாக இருக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU K.S. KOTHANDARAMIAH : Sir, my submission is that a copy of the statement made by the Hon. Chief Minister be made available to me and I will prepare a statement and hand it over to him.



1970 சனவரி 23]

THIRU B. VENKATASWAMY : Mr. Speaker, Sir so far as the statement made by the Hon. Chief Minister is concerned, it contain many points which differ from truth......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அறிக்கையில் தவறான செய்திகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று உறுப்பினர்கள் குற்றச்சாட்டுச் செய்வது கூடாது. குற்றச்சாட்டுகள் செய்வதற்கு இதுவல்ல நேரம். விளக்கம் பெறுவதற்காக வேண்டி, இரண்டொரு கேள்விகளைச் சுருக்கமாகக் கேட்கலாம். நம்முடைய பேரவை விதி,

'The Speaker may at his discretion permit one or two questions by the same member by way of elucidation '.

என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பல ஆண்டுகளாக இந்த மன்றத்தில் பணிபுரிபவர்கள் இந்த விதிமுறைகளைப் படித்து விட்டு, பேரவையின் மரபைக் கடைப்பிடித்துப் பணியாற்ற வேண்டும். உறுப்பினர்களின் உரிமைகளைப் பறிக்கவேண்டும் என்ற எண்ணம் பேரவைத் தலைவருக்குக் கிடையாது. ஆனால் அதே நேரத்தில் மன்றத்தின் மரபைக் கட்டிக் காத்தவரும் பொறுப்பு பேரவைத் தலைவருக்கு உண்டு. 'முதலமைச்சர் இவ்வாறு விளக்கம் அளித்திருக்கிறார், அது அப்படி அல்ல, அது இப்படித் தான்' என்று விளக்கம் சொல்வதற்கு இது நேரமல்ல. மேலும் பேரவை விதிமுறைகளில் இதைப்பற்றித் தெளிவாகச் சொல்லப் பட்டிருக்கின்றது

' ...... Permit one or two questions by the same member by way of elucidation '.

அதாவது, பேரவைத் தலைவர் அவர்கள் விரும்பினால், உறுப்பினர்கள் இரண்டொரு கேள்விகள் கேட்க வாய்ப்புத் தரலாம் என்று கூறப்பட்டிருக்கிறது.

THIRU B. VENKATASWAMY : Sir, is it not a fact that the linguistic minorities like Telegu, Kannada and Urdu-speaking persons were discriminately taken by the Police and punished at the Police station? I want a reply on this point from the Hon. Chief Minister. I will refer to other things in my speech on the Governor's Address.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இதிலே எந்தவிதமான பாரபட்சமும் காட்டப்படுவதல்ல. எங்கெங்கு பாதுகாப்புவேண்டுமோ, அங்கெல்லாம் பாதுகாப்பு அளிக்கப்பட்டு, நியாயம் வழங்கப்பட்டு, வன்முறைகள் தடுக்கப்பட்டு அமைதியைக் காக்கக் காவல்துறை உறுதியாக நடந்துகொள்ளும்.

### (ஆ) திருமயம் தொகுதியில் மழையின்மையும் சில இடங்களில் நியாய விலைக்கடைகளை அமைத்தலும்.

**புலவர் பொ. பொன்னம்பலம் :** பேரவைத் தலைவர் அவர்களே, " திருச்சி மாவட்டம், திருமயம் தொகுதியில், மழை பொழியாமல் இருப்பதால் வேந்தன்பட்டி, பொன்னமராவதி, ஆலவயல், நகரப்

பட்டி, செம்பூதி, ராங்கியம், குழிபிறை, விராச்சிலை, காரையூர் ஆகிய இடங்களில் நியாயவிலைக்கடைகள் அமைத்துக்கொடுக்க வேண்டியதுபற்றிய அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு உணவு—வணிகத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு பருவமழை பொய்த்ததால், திருமயம் வட்டத்தில் சுமார் 32 இடங்களில் விளைச்சல் இல்லாமல் போய்விட்டது. இங்கு சுமார் 77,600 குடிமக்கள் வாழ்கின்றனர். இந்த 32 இடங்களில் திருமயம், அரிமளம், பொன்னமராவதி ஆகிய மூன்று கிராமங்களில் நியாயவிலைக் கடைகள் திறந்து அரிசி வழங்கப் பட்டது. ஏனைய இடங்களில் பொதுமக்கள் தங்கள் தேவையை வெளிச்சந்தையில் பெற்றுக்கொண்டனர். வெளிச்சந்தையிலும் அவர்களுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் கிடைத்தன.

இவ்வாண்டு தமிழ்நாடு முழுவதும் நல்ல மழைபெய்து விளைச்சலும் அதிகமாகி உள்ளது. இவ்வடிப்படையில்தான் இவ்வரசு சமீபத்தில் சட்டப் பூர்வப் பங்கீட்டு முறையை நீக்கியுள்ளது. அத்துடன் தஞ்சை மாவட்டம் நீங்கலாக ஏனைய இடங்களிலிருந்து அரிசி நெல் போக்குவரத்துத் தடையும் நீக்கப்பட்டுள்ளது. இவ்வாறு உணவுப் பொருட்கள் மீதிருந்த கட்டுப்பாடுகளை நீக்கியதால் எல்லா இடங்களுக்கும் நெல்லும் அரிசியும் தாராளமாகச் செல்ல இயலும் என்றும், அதனால் மக்களுக்குப் போதுமான அளவு அரிசி நியாயமான விலையில் கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, தற்போது திருமயம் தொகுதியில் நியாயவிலைக் கடைகள் திறக்க வேண்டிய அவசியம் ஏதுமில்லை என்று அரசு கருதுகிறது.

மேலும், திருமயம் வட்டத்தில் பெரும்பாலான மக்கள் விவசாயிகள். அவர்களுக்கு என்று உள்ள நிலங்களிலிருந்து வரும் மகசூலைக்கொண்டு அவர்கள் தங்கள் சுய தேவைகளைத் தாராளமாகப் பூர்த்தி செய்துகொள்ள இயலும் எனக் கருதப்படுகிறது.

**புலவர் பொ. பொன்னம்பலம் :** பேரவைத் தலைவர் அவர்களே, திருமயம் தொகுதிக்கு ஒரு பக்கத்தில் தஞ்சாவூர் மாவட்டமும், இன்னொரு பக்கத்தில் முகவை மாவட்டமும் அமைந்திருக்கிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் உணவுக் கட்டுப்பாடு நிலைமை இருந்து வருகிறது. முகவை மாவட்டம் விளைச்சல் இல்லாத மாவட்டமாக இருக்கிறது. ஆகவே, இந்தக் கிராமங்களில் நியாயவிலைக் கடைகள் தேவையாக இருக்கின்றன என்பதை நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். அரசும் இதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன்.

(விடை இல்லை.)



## (இ) சர்க்கரை ஆலைக்கிடங்குகளில் சர்க்கரைத் தேக்கம்.

**Dr. H. V. HANDE :** Sir, I wish to call the attention of the Hon. Minister for Food and Commercial taxes to a matter of urgent public importance, namely, the accumulation of stocks of sugar in the godowns of almost all the sugar factories in Tamil Nadu on account of the levy sugar not being lifted in time.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, வெளிச்சந்தைச் சர்க்கரை விலை மிகவும் சரிந்துவிட்டதனால், சர்க்கரை ஆலைகளிலிருந்து இம் மாநிலம் முழுவதற்குமாக 1969 ஜூன் திங்களில் எடுத்துக்கொள்ளப்பட்ட விதிமுறைக் கொள்முதல் சர்க்கரையின் மொத்த அளவு 8401.0 டன் ஆக இருந்ததற்கு மாறாக, 1969 அக்டோபர் திங்களில் 5448.0 டன்னாகக் குறைந்துள்ளது. மிகத் தொலைவிலுள்ள கிராமங்களுக்குக் கூட விதிமுறைக் கொள்முதல் சர்க்கரைக் கிட்டும்படிச் செய்யவேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர். அரசிடம் போதுமான அளவிற்குச் சர்க்கரை இருப்பு உள்ளதால், ஒதுக்கப்பட்ட சர்க்கரையளவுகள் முழுவதும் கடந்த சில திங்கள்களாக எடுத்துக்கொள்ளப்படவில்லை. இவற்றை எடுத்துக்கொள்வது அவசியமென்ற நிலை எழுந்தால், காலங் கடந்துபோன இச் சர்க்கரை ஒதுக்கீட்டு அளவுகளை மீண்டும் ஒதுக்குமாறு இந்திய அரசை வேண்ட அரசு தயங்காது.

**Dr. H. V. HANDE :** Sir, I want to know whether it is a fact that a few other State Governments also have not taken sugar from this State because of the levy procedure and if so, will this Government request the Central Government to see that the levy procedure is scrapped so that liberal quantity of sugar can be lifted from the godowns. Otherwise, there is a serious possibility of sugar being spoiled.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா மாநிலங்களின் சார்பில் 'உணவு அமைச்சர்கள் மாநாடு' ஒன்று நடந்தது. சர்க்கரையைப் பொறுத்தவரையில் கட்டுப்பாடு தேவையில்லையென்று கூறினார்கள். இந்திய அரசின் உணவு அமைச்சரும் மற்ற மாநிலங்களின் சில முதலமைச்சர்களும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. இப்போதுள்ள நிலையில் கிடங்குகளில் சர்க்கரை தேங்கியிருக்கிறது. லெவி முறையில் எடுக்க வேண்டியதை எடுத்து நீங்கள் வேறு யாருக்காவது விற்று விடுங்கள் என்று கேட்டிருக்கிறார்கள். லெவி முறையில் விற்க வேண்டிய விலை வேறு, நாம் நிர்ணயித்த விலை வேறு. நாம் நிர்ணயித்த விலைக்கு மேல் விற்கக்கூடாது. நாம் நிர்ணயித்த விலையில் எடுத்து வெளியாருக்குக் கொடுக்க முடியுமா என்பதையெல்லாம் அரசு பரிசீலித்துக்கொண்டு வருகிறது. கூடிய விரைவில் தக்க முடிவு எடுக்கப்படும். இதை அரசு நன்றாக உணர்ந்திருக்கிறது.

## (5) அறிவிப்பு.

### தமிழ்நாடு 1970-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) மசோதா.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ்நாடு 1970-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) மசோதாவை இப் பேரவைக்கு அறிமுகம் செய்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (6) அரசினர் மசோதா.

### தமிழ்நாடு 1970-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) மசோதா.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1970-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) மசோதாவை நான் இந்தப் பேரவையின் திருமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இம் மசோதாவை அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இம் மசோதா அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

## (7) 1969-70-ம் ஆண்டுக்கான செலவு குறித்த இரண்டாம் துணை நிதி அறிக்கை—அளித்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 1969-70-ம் ஆண்டுக்கான செலவு குறித்த இரண்டாம் துணை நிதி அறிக்கையை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இப்பேரவைக்கு அளிப்பார்கள்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஐயா அவர்களே, இம் மன்றத்தின் முன் 1969-70-ஆம் ஆண்டுக்கான துணை மதிப்பீடுகளை வைக்க வேண்டி, உங்கள் முன்பு வந்துள்ளேன். பற்பல மானியக் கோரிக்கைகளை விளக்கும் விரிவான விவர அறிக்கை ஒன்று மன்றத் தின் முன் வைக்கப்பட்டுள்ளது. இத் துணை மானியக் கோரிக்கை யின் மொத்தம் 4 கோடியே 74 லட்சம் ரூபாயாகும். இதில் 3 கோடியே 77 லட்சம் ரூபாய் வருவாய்க் கணக்கிலும், 97 லட்சம் ரூபாய் கடன், மூலதனக் கணக்குகளிலும் அடங்கும். கடந்த ஆகஸ்ட் திங்களில் முதல் துணை மதிப்பீடுகளைச் சட்ட மன்றத்தின் முன் வைத்த பின்னர், அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ள "புதுப் பணி"த் திட்டங்களையே தற்போதைய துணை மதிப்பீடுகள் குறிக் கின்றன. நிகழ்காலத்தின் செலவினப் போக்கை கருத்திற் கொண்டு நோக்கும்போது, தற்போது வகை செய்யப்பட்டுள்ள நிதி



ஒதுக்கங்களை விடச் செலவினங்கள் கூடுதலாகலாம் என்று எதிர்ப் பார்க்கப்படுகிற சில மானியங்களின் கீழ் அதிக நிதி ஒதுக்கம் பெறவும் இச் சந்தர்ப்பம் பயன்படுத்திக் கொள்ளப்பட்டது.

குடி மக்கள் அனைவருக்கும் இடையறாத தூய குடிநீர் வசதியை வழங்குவதற்காக, அரசு துணிவான திட்டம் ஒன்றை வகுத்துள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். அண்மையில் நமது மாநிலத்தில் ஏற்பட்ட வறட்சி நிலை, இத் திட்டத்தை உட னடியாக விரைந்து தொடங்க வேண்டிய தேவையை உண்டாக் கியது. "வறட்சித் துயர் தணிப்புத் திட்டங்களின்" கீழ், இத் துறையில் நாம் சிறப்பான முன்னேற்றங்காண முடிந்தது. கிராமப் புறப் பகுதிகளில் நீர் வழங்கலுக்காக இயல்பாக வகை செய்யப் படும் இரண்டு கோடி ரூபாய் அளவிற்கு மாறாக, நடப்பு ஆண்டில் 7 கோடி ரூபாய்க்கு மேல் செலவிடப்பட்டுள்ளது. நாம் கருதி யாங்கு பெரும் அளவில் உருவாக்கப்பட்ட இத் திட்டத்தின் வெற்றி இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் போன்ற கடன் வழங்கும் நிறுவனங்களிடமிருந்து நாம் எந்த அளவிற்குக் கடன் உதவி பெற இயலும் என்பதையும் இத் திட்டத்தை நிறை வேற்றுவதற்கு ஒப்படைக்கப்படும் நிர்வாக அமைப்பின் திறனையும் பொறுத் துள்ளது. இவ்விரு நோக்கங்களையும் கருத்திற்கொண்டு, அரசு "நீர் வழங்கல் வடிகால் வாரியம்" ஒன்றை அமைத்துள்ளது. இவ் வாரியம் நாளடைவில் சட்டப்படி அமைக்கப்படும். இந்த ஏற் பாட்டிற்காக மானியம் 3-ன் கீழ் நிதி ஒதுக்கம் செய்வதன் வாயி லாகச் சட்ட மன்றத்தின் இசைவு வேண்டப்பட்டுள்ளதை மாண்பு மிகு உறுப்பினர்கள் கண்ணுற்றிருப்பர் என்பதில் ஐயமில்லை.

வறட்சியின் விளைவு நாட்டுப்புறப் பகுதிகளில் கடுமையாக இருந்ததைப் போலவே சென்னையிலும் கடுமையாக இருந்தது. சென்னைமாநகரில் 12 ஆயிரம் வடிமூளைக் குழாய்க் கிணறுகளை இறக்கும் விரைவுத் திட்டம் ஒன்றின் வாயிலாக இத்துன்பத்தை நாம் துடைக்க முடிந்ததென்றாலும், வீராணம் திட்டத்தை விரை வாக நிறைவேற்றுவதிலேயே இதற்கு நிலையான தீர்வு காண முடியும். மேற்சொன்ன 12,000 வடி மூளைக் குழாய்க் கிணறுகளை இறக்கியதற்காக 25 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் வேண்டப் பட்டுள்ளது; இத் திட்டத்தை விரைந்து நிறைவேற்ற நாம் முனைந்துள்ளோம் என்பதை அறிய இம் மன்றத்தினர் களிப்படை வர் என்று நம்புகிறேன். இப் பணி ஏறக்குறைய இரண்டு ஆண்டு களில் நிறைவேற்றப்படலாம். இத் திட்டத்திற்கான முன்னோடிப் பணிகளுக்குத் தேவையான பணியாளர்களை நியமிக்க முன்னரே ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இதன் பொருட்டு மானியம் 28-ன் கீழ் சட்ட மன்றத்தின் இசைவு வேண்டப்பட்டுள்ளது.

நமது மாநிலத் தலைநகராகிய சென்னை மாநகரம் எதிர் நோக்கியுள்ள சிக்கல்களைக் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். சென்னை நகர்ப் "பகுதிகளிலே" பெரு

[திரு. கே. ஏ. மதியழகன்] [1970 சனவரி 23

திட்டம்" ஒன்றைத் தயாரிக்கும் பணியை நாம் மேற்கொண்டுள்ளோம். உலக வங்கி இத் திட்டம் குறித்து மிகுந்த ஆர்வம் காட்டியுள்ளது. இதற்கென பல்விதமான வண்டிகளின் போக்குவரத்து பற்றிய ஆய்வு ஒன்றை 4.6 லட்சம் ரூபாய்ச் செலவில் நடத்துவதற்காக ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. மானியம் 15-ன் கீழ் இதற்கு நிதி வகை செய்யப்பட்டுள்ளது. வீராணத் திட்ட நிறைவேற்றத்தால், நீர் வழங்கல் நிலை எளிதாகும் என்றாலும், சாலைகளை மேம்படுத்துதல், வடிகால் வசதிகளை ஏற்படுத்துதல், போக்குவரத்து ஏற்பாடுகளைப் புதுப்பித்தல், கூவம் ஆற்றினாலும், பக்கிங்காம் கால்வாயினாலும் விளைகிற சுகாதாரக் கேடுகளை அகற்றுதல் போன்ற திட்டங்களுக்குப் பெரும் முதலீடு தேவைப்படுகிறது. நிதி நிலை இறுக்கமாக இருந்தபோதிலும், கூவம் சீரமைப்புத்திட்டம் குறித்து சிந்தை மகிழும் வகையில் பணிகளைத் தொடங்கியுள்ளோம். இதற்காக மானியம் 41-ன் கீழ் சட்டமன்றத்தின் இசைவு வேண்டப்பட்டுள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் கண்ணுறலாம். மாநகரில் செய்துள்ள மற்றுமொரு மேம்பாடு முன்னைவிட ஒளி தரும் விளக்குகளை மலைச் சாலையில் அமைத்ததாகும். இதற்காகும் செலவினம் முழுவதும் அரசால் சென்னை மாநகராட்சிக்குத் திரும்ப வழங்கப்படும். இதற்காக, மானியம் 29-ன் கீழ் ரூ. 13.5 லட்சம் வகை செய்யப்பட்டுள்ளது.

அரசு மேற்கொண்டுள்ள ஒரு முக்கிய முடிவு குறித்து—அதாவது இரண்டாம் சம்பள ஆணைக் குழுவை அமைத்தது குறித்து தற்போதைய துணை மதிப்பீடுகளின் வாயிலாகச் சட்டமன்றத்தின் இசைவு வேண்டப்பட்டுள்ளது. நமது பணியாளர்களின் சம்பள வீதங்களையும், படிகளையும் உண்மையாகவே சீரமைக்க வேண்டுமென்பதை நாம் உணர்ந்துள்ளோம். இவ்வகையில் ஐந்தாம் நிதி ஆணைக் குழு நமது மாநிலத்திற்கு இழைத்துள்ள பெரும் அநீதி பற்றி நான் குறிப்பிடாமல் இருக்க இயலாது. அண்டை மாநிலங்களில் சம்பள வீதங்களை மாற்றி அமைப்பதனால் ஏற்படும் விளைவுகளுக்காக, நிதி ஆணைக்குழு தனது அறிக்கையில் வகை செய்திருந்தபோதிலும், இது குறித்து நமது மாநிலத்தில் ஏற்படக்கூடிய பொறுப்புகளைப் பற்றி அது கருத்தில் கொள்ளவில்லை. ஆணைக்குழுவின் பரிவுரைகளில் காணும் இப் பெருங் குறையைக் கருத்தில்கொள்ளும்படியும் ஏற்ற முறையில் விருப்பக் கொடைகள் வழங்குவதன் மூலம் நமக்கு ஏற்பட்டுள்ள இந்த இழப்பினைச் சரிக்கட்டும்படியும் மிக உயர்ந்த அளவில் இந்திய அரசிடம் முறையிட வேண்டுமென நாம் கருதியுள்ளோம். மாநிலங்களுக்கிடையே நீதி நிலவவேண்டுமென்றால், இவ்வாறு செய்வது இன்றியமையாததாகும்.

குடியாட்சி வெற்றியுடன் செயல்படவேண்டுமெனில், நீதித் துறைக்குத் தனி உரிமை அளிக்க வேண்டுவது முதல் தேவையாகும். இத் தேவையை நிறைவேற்ற, நீதித் துறை அலுவலர்கள் அச்சம்-



1970 சனவரி 23] [திரு. கே. ஏ. மதியழகன்]

அவாவின்றித் தங்கள் கடமைகளை ஆற்றுவதற்காக அவர்களுக்குச் சிறப்பான சில வசதிகளை நல்க வேண்டியுள்ளது. அவர்களுக்கு வீட்டு வசதி செய்து தர வேண்டியது அத்தகைய தேவைகளில் ஒன்றாகும். இதை ஏற்றுக்கொண்டு, நமது மாநில நீதித் துறை அலுவலர்களுக்கு மொத்தம் ரூ. 80 லட்சம் செலவில் வீடுகள் கட்டித் தர நாம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளோம். நீண்ட காலத்திற்கு முன்னதாகவே ஒப்பளிப்பு வழங்கியிருக்க வேண்டிய இத் திட்டத்திற்கு, மானியம் 47-ன்கீழ் சட்ட மன்றத்தின் இசைவு வேண்டப்பட்டுள்ளது.

மணலிக்கு அண்மையிலுள்ள பகுதியில், பாறை எண்ணெய் இரசாயனப் பொருள்கள் குறித்த பல்வகைத் தொழில்களை நிறுவுவது குறித்து மாநில அரசு முனைந்து நடவடிக்கை எடுத்து வருவது பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இங்குள்ள எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலை ஏற்கனவே உற்பத்தியைத் தொடங்கிவிட்டது. உரத் தொழிற்சாலையும் அடுத்த ஆண்டில் இயக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இப் பகுதியில் ஏறக்குறைய 2,000 ஏக்கர் அளவுள்ள நிலப்பரப்பைக் கையகப்படுத்துவதற்காக முன்னரே நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பாறை எண்ணெய்-இரசாயனப் பொருட்கள் குறித்த பற்பல தொழிற்சாலைகளுக்கு இந்நிலங்கள் நாளடைவில் ஒதுக்கப்படும். இதற்கென மானியம் 40-ன் கீழ் 25 லட்சம் ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது.

உள்ளூர் தீர்வை மேல் வரி (ரூ. 24 லட்சம்), கேளிக்கை வரி (ரூ. 14 லட்சம்), உள்ளூர் சாலை மானியம் (ரூ. 7 லட்சம்) ஆகிய இனங்களின்கீழ் தற்போதைய துணை மதிப்பீடுகளில் பொருத்தமான மானியங்களின் கீழ் பெருமளவில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதை இம்மன்றம் வரவேற்கும் என்பதில் எனக்கு ஐயமில்லை. தற்போது வகை செய்யப்பட்டுள்ள கூடுதல் நிதி வசதியின் விளைவால் உள்ளாட்சி மன்றங்களின் பொறுப்பில் உள்ள பொதுமக்களின் நலன் பற்றிய திட்டங்கள், வளர்ச்சிப் பணி முதலிய அலுவல்கள் முன்னைவிடத் திறமையாகவும் செவ்வையாகவும் நிறைவேற்றப்படுவதற்கு நல்ல வாய்ப்பு ஏற்படும். பற்பல ஊராட்சி ஒன்றியங்களுக்கு உள்ளூர் சாலை மானியங்களை வழங்குவதில் முன்னைய முறையைவிட இப்போது கையாளப்பட்டு வரும் சிறப்பான ஏற்புடைய கொள்கைகளைப் பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். ஊராட்சி ஒன்றியங்களின் மக்கள் தொகை அடிப்படையில் இந்த மானியம் இதுகாறும் அளிக்கப்பட்டு வந்ததைப்போல மேலும் அளிக்கப்பட்டு வருவதோடு, இப் பகுதிகளில் உள்ள சாலைகளின் நீளத்தை அடிப்படையாகக் கொண்டும் இனிமேல் அளிக்கப்படும். இம் முடிவு எங்கணும் வரவேற்கப்படும் என்பதில் எனக்கு ஐயமில்லை.

நமது மாநிலத்திலுள்ள எளிய மக்களின் நலன் பற்றி அரசு என்றும் மிக அக்கறை காட்டிவருகிறது. பின்தங்கிய வகுப்பினரின் சிக்கல்களைக் குறித்து 'அடங்கல் ஆய்வு' ஒன்றைச்

[திரு. கே. ஏ. மதியழகன்] [1970 சனவரி 23

comprehensive examination ) செய்வதற்கும் அவர்களுடைய குறைகளைப் போக்குவதற்கான கருத்துக்களை எடுத்துரைப்பதற்கும், அரசு ஆணைக்குழு ஒன்றினை நிறுவியுள்ளது. இவ்வாணைக் குழு தனது பணிகளைத் தொடங்கியுள்ளது. அடுத்த ஆண்டில் அது தனது அறிக்கையைப் பணிந்தனுப்பும். இந்த ஆணைக்குழுவின் அமைப்பிற்காக, 25-வது மானியக் கோரிக்கையின் வாயிலாகச் சட்டப் பெரு மன்றத்தின் இசைவு வேண்டப்படுகிறது.

நாம் சிறப்பாக நாட்டம் செலுத்த வேண்டிய மற்றொன்று, பர்மா, இலங்கை அகதிகள் பற்றியதாகும். தொழில் நடத்துவதற்காகவோ பயிர்த் தொழிலில் ஈடுபடுவதற்காகவோ இவர்களுக்கு அரசு இதுவரை நேரடியாகக் கடன்கள் வழங்கி வந்துள்ளது. அகதிகள் கூட்டுறவுக் கடன் வழங்கும் வளர்ச்சி வங்கி ஒன்றை நிறுவுவதற்கு, இந்திய அரசு இப்போது முடிவு செய்துள்ளது. இதன்பொருட்டு மாநில அரசு தனது பங்காக 1 லட்ச ரூபாய் பங்கு மூலதனத் தொகை வழங்கியுள்ளது. பற்பல உற்பத்திப் பணிகளுக்கென இந்த வங்கி அகதிகளுக்குக் கடன்கள் வழங்கும் பணியை மேற்கொள்ளும். இது தவிர, இலங்கை அகதிகளுக்கு மறுவாழ்வளிப்பதற்காக, மாநில அரசு, காடுகள் துறையின் பொறுப்பில் நீலகிரி மாவட்டத்தில் தேயிலைத் தோட்டங்களையும், கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தோட்டங்களையும் பயிரிடத் தொடங்கியுள்ளது. இந்தத் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கங்கள் 35-வது மானியத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறையின் பணி குறித்து ஆய்வு செய்த உயர் அதிகாரக் குழுவின் பரிவுரைகளின் அடிப்படையில் அத் துறையின் தொழிலாளர்களுக்கும், பணியாளர்களுக்கும் அனுமதிக்கப்பட்டுள்ள நாட்படிகளையும், பிற படிகளையும் திருத்தி அமைத்திருப்பது அரசு மேற்கொண்டுள்ள ஒரு முக்கிய நடவடிக்கையாகும். இதற்குச் சட்ட மன்றத்தின் இசைவு வேண்டப்படுகிறது. பள்ளிப் பாட புத்தகங்களை அரசினரே வெளியிடும் பணியை விரைவுபடுத்தவேண்டி, பாட புத்தகக் கழகம் ஒன்றை நிறுவியது அரசு மேற்கொண்டுள்ள மற்றொரு முக்கிய முடிவாகும். அதற்குரிய நிதி ஒதுக்கமும், தற்போதைய துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. இதற்கான நிதி ஒதுக்கம் 13, 40-வது மானியங்களில் சேர்க்கப்பட்டுள்ளது.

எனது உரையை முடிப்பதற்கு முன், காஞ்சிபுரத்தில் அறிஞர் அண்ணா நினைவுப் புற்றுநோய் நிலையத்திற்கான மருத்துவமனைக் கட்டிடங்களைக் கட்டுவதற்கு 42-வது மானியத்தின் கீழ் வகை செய்துள்ள நிதி ஒதுக்கத்தைப்பற்றி இம் மன்றத்தினரின் நாட்டத்தை ஈர்க்க விரும்புகிறேன். நமது மதிப்பிற்குரிய மறைந்த முதலமைச்சர் அவர்களின் நினைவுக்குப் படைக்கப்படுகிற இந்த நிலையம் மருத்துவ ஆராய்ச்சியாளர்கள், பொதுமக்கள் ஆகியோரின் தேவைகளைப் பெருமளவில் நிறைவேற்றும் என நாம் நம்புகிறோம்.



1970 சனவரி 23] [திரு. கே. ஏ. மதியழகன்]

இவை கூறி, 1969-70-ம் ஆண்டுக்கான இந்த இரண்டாம் துணை மதிப்பீடுகளை இம் மன்றம் ஏற்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

## (8) அறிக்கை அளித்தல்.

### "கடிதம்" நாளிதழ் ஆசிரியர்—பதிப்பாளர் மீதான அவையுரிமைக் குழுவின் அறிக்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, பேரவைத் துணைத் தலைவர் அவர்கள், அவையுரிமைக் குழுவின் அறிக்கையை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற தீர்மானத்தை முன்மொழிவார்கள்.

**திரு. ஜி. ஆர். எட்மண்ட் :** தலைவர் அவர்களே, "12—9—1969-ம் நாளன்று சட்டப் பேரவைமுன் அளிக்கப்பட்ட 'கடிதம்' தமிழ் நாளிதழின் ஆசிரியர்-பதிப்பாளர் மீதான அவையுரிமைக் குழுவின் அறிக்கை சட்டப் பேரவையின் 191 (b) விதியின்கீழ் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அறிக்கை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

**திரு. ஜி. ஆர். எட்மண்ட் :** தலைவர் அவர்களே, "இந்த அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளை சட்டப் பேரவையின் 191 (d) விதியின்கீழ் இப்பேரவை இசைந்து ஏற்றுக்கொள்கிறது" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் ஏற்றுக்கொள்ளப் பட்டன.

## (9) ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் தொடருகிறது. திரு. சகாதேவக் கண்டர் அவர்கள் தொடர்ந்து பேசுவார்கள். ஐந்து நிமிடங்கள்தான்.

* **திரு. கே. சகாதேவக் கண்டர் :** தலைவர் அவர்களே, இந்த ஆளுநர் உரையில் ஐ.ஆர். 8 நெல் அமோக விளைச்சலைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. வானொலி மன்றங்களில் மாலை ஏழுமணி முதல் 8 மணிவரை செய்யப்படும் பிரச்சாரங்கள் முன்னுக்குப் பின் முரணாக இருக்கின்றன. ஐ.ஆர். 8 நெல்லுக்காகச் செலவாகும் உரக்கட்டணம் 150 ரூபாயிலிருந்து 220 ரூபாயாக உயர்ந்திருப்

பதாகச் சொல்லுகிறார்கள். உரங்களை விவசாயிகளுக்கு வாசற்படியிலே கொண்டுவந்து கொடுப்பார்கள் என்றெல்லாம் பிரச்சாரம் செய்கிறார்கள், மேடைகளிலேயும் பேசுகிறார்கள். உரங்கள், பூச்சிமருந்துகள் இவை காலா காலங்களிலே கொடுக்கப்படவில்லையென்றால் பலன் விவசாயிகளுக்குக் கிடைக்காது. டிசம்பர் மாதத்திலே உரக்கடனுக்காக மனுப்போட்டவர்களுக்கு பெர்மிட்டோ உரக்கடனோ இதுவரை அளிக்கப்படவில்லை. உதாரணமாக என்னுடைய கிராமத்திலே 50 பேர்கள் உரத்திற்காக மனுப் போட்டார்கள். 5, 6 பேர்களுக்குத்தான் பெர்மிட் வழங்கப்பட்டிருக்கிறது. அதிலே நானும் ஒருவன் என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். மற்றவர்களுக்கு இன்றையதினம் வரை பெர்மிட் வழங்கப்படவில்லை. பெர்மிட்காரர்களுக்கு உரமும் வழங்கப்படவில்லை. பெர்மிட் இருக்கிறது உரம் கிடைக்கும் பூச்சி மருந்து கிடைக்கும் என்று நம்பி நாற்று விட்டவர்கள் எல்லாம் கஷ்டப்படுகிறார்கள். எதுவும் கிடைக்கவில்லை . . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : டிசம்பர் மாதத்திலே அளிக்கப்பட்ட பெர்மிட்டுகளுக்கு உரம் வழங்கப்படவில்லையென்று உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். யாருக்கு என்ற விவரத்தைத் தந்தால் அதைப்பற்றி அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு பேசி ஏற்பாடு செய்யலாம். சொஸைடியிலே ஓவர்டியூஸ் இருந்ததால் கிடைக்காமல் இருக்கிறதா, என்பதை அவர்கள் விவரமாகச் சொல்லவேண்டும்.

**திரு. கே. சகாதேவக் கவுண்டர்** : டிசம்பர் மாதத்தில் நானே பெர்மிட் வாங்கியிருக்கிறேன். எனக்கு இன்னும் கிடைக்கவில்லை. பெர்மிட்டை வீட்டிலே கொடுத்து வந்தால் வாங்கிக்கொள்ளலாம் என்று இருக்கிறேன். கிடைக்கவில்லை என்ற விவாத்தைப்பற்றி கலெக்டரிடம் ரிப்போர்ட்டும் 16-ந் தேதி எழுதியிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அரசாங்கம் விவசாயிகளுக்குக் கருணை வைத்து எந்த எந்த முறையிலே சொல்லி வருகிறார்களோ அந்த முறையிலே உதவி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய நாட்டிலே மதுவிலக்குச் சட்டத்தைத் தீவிரமாக அமல்படுத்துவதாகச் சொல்லப்படுகிறது. அதை எவ்வளவு தீவிரப்படுத்துகிறார்களோ தெரியவில்லை. அதற்கு மாறாக இன்றைய தினம் கிராமங்களிலே சாராயக் கடைகள் உற்பத்தியாகிக் கொண்டே இருக்கின்றன. எந்த எந்தக் கிராமங்களிலே இல்லாமல் இருக்கிறதோ அங்கெல்லாம் புதிது புதிதாக சாராயக் கடைகள் உற்பத்தியாகிக் கொண்டிருக்கின்றன. அல்லப்பனூர் என்ற கிராமத்திற்கு ராயண்டபுரத்திலிருந்து குடத்தோடு கொண்டு வந்து சாராய விற்பனை செய்து அந்தக் கிராமத்து மக்களைத் துன்புறுத்துகிறார்கள். இதைப்பற்றி தண்டராம்பட்டு போலீஸ் ஸ்டேஷனிலே புகார் செய்தால் குடத்தோடு நபரையும் கொண்டுவா



என்று சொல்கிறார்கள். கிராம மக்கள் அந்த பார்ட்டியைப் பிடிக்கமுடியவில்லை. சாராயக் குடத்தைப் போலீஸில் ஒப்படைத்திருக்கிறார்கள். அதைப்பற்றி அவர்கள் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அப்படியிருந்தால் கிராமத்திலே மக்கள் வாழமுடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். போலீஸ் அதிகாரிகள் அவர்களுடைய கடமையைச் செய்வார்கள். அங்கேயுள்ள கட்சிக்காரர்கள் ஒன்றும் தலையிடாமல் இருக்கவேண்டும். ஒரு குடிகாரன் குடித்துவிட்டு கலாட்ட செய்கிறான். அதே சமயத்திலே இரண்டு போலீஸ்காரர்கள் வந்து அவர்களும் சேர்ந்து கொண்டு குடித்துவிட்டு விளையாடுகிறார்கள். இதைப்பற்றி போலீஸ் ஸ்டேஷனிலே சொன்னால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. கட்சிக்காரர்கள் தலையிடாமல் இருக்கவேண்டும். அப்படிச் செய்தால்தான் பொதுமக்களுக்கு பாதுகாப்பு இருக்கமுடியும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்**: உறுப்பினர் அவர்கள் போலீஸ்காரர்களும் சேர்ந்து குடித்துவிட்டு ஆடுகிறார்கள் என்று சொன்னார்கள். அந்தப் போலீஸ்காரர்களின் நம்பர், பெயர் என்ன என்று சொன்னால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உரப் பெர்மிட் கொடுக்கப்பட்டும் உரம் கிடைக்கவில்லை என்று அவர்கள் சொன்னார்கள். அவர்கள் சொல்கிறபடி சொசைடியிலே இல்லையென்றாலும் தனிப்பட்டவர்களிடத்திலே வாங்கிக் கொள்ளலாம் என்று உத்திரவிடப்பட்டிருக்கிறது. அங்கே அவர்கள் வாங்கிக்கொள்ளலாம். யூரியா கிடைக்கவில்லை என்று சொல்கிறார்களோ என்று தெரியவில்லை. ஏழுநாட்கள் ஆகிறது இப்பொழுது யூரியா வட ஆற்காடு முழுவதும் நிறைந்து கிடைக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* **திருமதி கோ. பத்மாவதி** : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் உரைமீது நானும் எனது இரண்டொரு கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சென்ற ஆண்டு இந்த அரசில் விவசாய அமைச்சராக இரவு, பகலாக தனது உடல் நலத்தைச் சிறிதும் பாராது வேலை செய்து, அகால மரணமடைந்த எனது கணவர் அவர்கள் மறைவுக்கு ஆளுநர் அவர்கள் தனது உரையில் குறிப்பிட்டு அனுதாபம் தெரிவித்துள்ளார்கள். அவருக்கும், இன்னும் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்ட ஆயிரக் கணக்கானவர்களுக்கும் எனது நன்றியை இந்த நேரம் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, எங்களை நிராதாரவாக விட்டுசசென்ற எனது கணவரது பிரிவாற்றலால் துயருறும் எங்கள் குடும்பத்திற்கு, ஒரு பெரிய நிதி திரட்டி சமயத்தில் எங்களைக் காப்பாற்றிய முதல்வர் அவர்

1970 சனவரி 23] [திருமதி கே. பத்மாவதி]

களுக்கும், தாய்மார்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது முதல்வரும், நாவலரும் மற்றும் நமது இயக்க நண்பர்கள் அனைவரும் எப்போதும் பொதுநலத் தொண்டர்களுக்கு மதிப்புத் தந்து வருபவர்கள்.

அதனை மெய்ப்பிக்கும் வகையில்தான் உடையார்பாளையம் வேலாயுதம், போளூர் சுப்பிரமணியம் நமது மறைந்த அண்ணன் சென்னை மாநகராட்சி பொற்செழியன் ஆகியோர் மறைந்த உடன், அடுத்து வந்த துணைத் தேர்தலில் அவர்களது துணைவியரைத் தேர்தலில் நிறுத்தி வெற்றிபெறச் செய்துள்ளது. அந்த வகையில் எனது கணவர் மறைந்தவுடன் என்னை அதே தொகுதியில் நிறுத்தி வெற்றிபெறச் செய்த முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், என்னை வெற்றி பெறச் செய்த, அத்தனை ஊழியர்களுக்கும், பெரியவர்களுக்கும் நிதியளித்து உதவிய அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காங்கிரஸ் சார்பாக மிகப் பெரும் பேச்சாளர் திரு. திருக்குறள் முனுசாமி அவர்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தும், பெருந்தலைவர் காமராஜர், கக்கன் போன்றவர்கள் அதிதீவிரப் பிரச்சாரம் செய்தும், எனது கணவரைவிட இரண்டு மடங்கு அதிக வித்தியாசத்தில் என்னை வெற்றியடையச் செய்த எனது முகையூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என் கணவர் அமைச்சர் ஆக இருந்து தமிழகத்திற்குத் தொண்டு செய்துவந்த அதே நேரத்தில் என்னுடைய தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் என்ற வகையில் எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார விசை வழங்க ஏற்பாடு செய்துள்ளார்கள், சாலைகள் அமைத்தும், தொகுதி முழுதும் மிகக் குறைந்த காலத்தில் பல நன்மைகள் செய்துள்ளார்கள். இதனை நான் வாக்குச் சேகரிக்கச் சென்றபோது மக்களே கூறினார்கள். அதற்காக இந்த அரசுக்கு நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

மேலும் நான் சார்ந்துள்ள சமூகம் மிகவும் பின்தங்கிய மக்களைக் கொண்ட சமூகம். பொருளாதாரத் துறையில் பின்தங்கிய இந்த வகுப்பினர் மேம்பாட்டிற்கு இந்த அரசு ஒரு தனிக்குழு நியமித்திருப்பதை மிக மிகப் பாராட்ட வேண்டும்.

எங்கள் வகுப்பு மாணவர் உதவிச் சம்பளம் பெற 50 மார்க்குகளிலிருந்து 40 மார்க்காகக் குறைத்துள்ளார்கள். இதனால் நிதி ஒதுக்கீடு 213 லட்சமாக இருந்தும் நமது அரசு ஏற்றுக்கொண்டதை [illegible] நான் பெருமைப்படுகிறேன் [illegible] பாராட்டுகின்றேன்.



1970 சனவரி 23] [திருமதி கே. பத்மாவதி]

மேலும் முகையூர் தொகுதி மக்கள் என்னைப் பாராட்டும் வகையில் தமிழக அமைச்சர்கள் எனக்கு உறுதுணையாக இருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

எனக்குப் பேச வாய்ப்பளித்த [illegible] விடை பெறுகிறேன். வணக்கம்.

**திரு. க. இராமமூர்த்தி:** [illegible]வைத் தலைவர் அவர்களே, இந்த மு.ப. 11-00
அவை மிகுந்த நம்பிக்கையோடு எதிர்பார்த்த ஆளுநர் உரை பெருத்த ஏமாற்றத்தைத் தருகிற உரையாக அமைந்திருக்கும் நிலைமையை அவையின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப் பட்டிருக்கிறேன். விவசாயிகளை [illegible] வஞ்சிக்கிற வஞ்சகப் புகழ்ச்சி முறை இந்த உரையில் [illegible] கையாளப் பட்டிருக்கிறது. பசுமைப் புரட்சி [illegible]காரிகளும், அமைச்சர்களும் பேசிக் கொண்டு ஐ.ஆர். 8 என்ற வகை நெல்லுக்கு ஆதரவு திரட்டுகின்ற நேரத்தில் ஒன்றை மனத்தில் கொண்டு செய்து வருகிறார்கள் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். டை அம்மோனியம் பாஸ்பேட் என்ற விற்காத உரத்தை விவசாயிகள் தலையில் கட்டுவதற்காகத்தான் ஐ.ஆர். 8 விதையைப் பயிரிட வேண்டுமென்று கூறுகிறார்கள். அந்த உர மூட்டையும் எந்த அளவு இருக்க வேண்டுமோ அதைவிட 10 அல்லது 15 கிலோ குறைவாக இருக்கின்றது. இந்த வகையில் அரசிடமிருந்து உர மூட்டைகளை விவசாயிகள் வாங்க வேண்டிய நிலையில் விவசாயிகளைத் தவிர வேறு யாருக்கு இந்த அரசு இத்தகைய கஷ்டத்தை உண்டாக்க முடியும் என்று பார்க்க வேண்டும்.

வறட்சி துயர் தணிப்பு என்று கடந்த காலத்தில் பரவலாகப் பேசப்பட்டது. இந்த அரசு வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு என்ன நன்மைகளைச் செய்திருக்கிறார்கள்? சென்ற ஆண்டு ஒத்தி வைக்கப்பட்ட கடன்கள் இந்த ஆண்டு சென்ற ஆண்டுத் தவணையும், இந்த ஆண்டுத் தவணையும் சேர்ந்து வசூலிக்கப்படுகின்ற கொடுமையான முறை கையாளப்படுகிறது. இந்த மாதிரி கடன்களைத் தள்ளிவைக்கும்போது அதைத் திருப்பித் தருகின்ற ட்யூரேஷனை ஐந்து ஆண்டுகள் என்றால் ஆறு ஆண்டுகள் என்றும், மூன்று ஆண்டுகள் என்றால் நான்கு ஆண்டுகளிலும் வசூலிப்பதுதான் வழக்கம். அதை விட்டு விட்டு அடுத்த ஆண்டு சேர்த்து இரண்டு தவணைகள் சேர்த்து வசூலிக்கப்படுகின்ற கொடுமையான முறை கையாளப்படுகிறது என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்ற ஆண்டு 3,799 பம்ப் செட்டுகள் நிறுவப்பட்டதாகவும் இந்த ஆண்டு பத்தாயிரம் பம்ப் செட்டுகள் அக்ரோ இண்டஸ்டிரீஸ் கார்ப்பரேஷன் மூலம் நிறுவப்படும் என்றும் பெருமையோடு சொல்லியிருக்கிறார்கள்.

[திரு. க. இராமமூர்த்தி] [1970 ஜனவரி 23

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இந்தப் பெருமையைக் கொண்டாட இவர்களுக்கு என்ன இருக்கிறது? இந்த அரசு அக்ரோ இண்டஸ்ட்ரிஸ் கார்ப்பரேஷனுக்குக் கேட்ட அளவுக்குப் பணம் கொடுத்திருக்கிறார்களா என்றால், இல்லை. அவர்களுக்கு வேண்டிய நிதியைக் கொடுக்காமல் அவர்கள் இப்படி செய்வார்கள் என்று பெருமை பேசிக் கொண்டிருப்பதில் பயன் இல்லை. விவசாயிகளுக்கு உதவி செய்வதாகக் கூறிக்கொண்டு விவசாய பம்ப் செட்டுகள் மீது விற்பனை வரியை வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால் 100 அல்லது 150 ரூபாய் அதிகமாக விவ்சாயி செலவு செய்யும் நிலைமை இருக்கிறது. அதை நீக்க இந்த அரசு முயற்சித்ததா என்றால் இல்லை. அறிஞர் அண்ணா அவர்கள், நெய்வேலி மின்சாரம் வந்தவுடன் விவசாயிகளுக்கு மின்சாரக் கட்டணத்தைக் குறைத்து விடுகிறேன் என்று சொன்னார்கள். நெய்வேலி மின்சாரம் வந்து விட்டது, நம்முடைய மின்சாரமும் எதிர்பார்த்த அளவுக்குப் பெருகியிருக்கிறது. ஆனால் இப்போது விவசாயிகளுக்குத்தான் இந்த மின்சாரக் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறதே தவிர, அலுமினியம் தொழிற்சாலைக்கு உயர்த்தப்படவில்லை. இவ்வாறு விவசாயிகளுக்கு மட்டும் மின்சாரக் கட்டணத்தை உயர்த்தியிருக்கின்ற கொடுமையை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

ஆளுநர் அவர்களுடைய உரையிலே உணவுப் பங்கீட்டு முறையை எடுத்து விட்டது பற்றிய புகழ்ச்சியைக் காணுகின்றேன். அதே நேரத்தில் விவசாயிகளுடைய விளைபொருளுக்கு, நெல்லுக்கு குறைந்த விலைக்கான உத்தரவாதம் இருக்கிறதா என்றால் இல்லை. அமைச்சர்களும், அதிகாரிகளும் வெளியே சொல்லுகிறார்களே தவிர, அதிகாரபூர்வமான உத்தரவாதம் இந்த அவையிலே கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் புரட்சிகரமான திட்டங்களை வைத்திருக்கிறேன், 'ரெவல்யூஷனரி காம்ப்ரஹன்சிவ் பில் ஆன் அக்ரிகல்சர்'ஐக் கொண்டு வர இருக்கிறேன் என்ற கனவுகளைப் பற்றி எல்லாம் சொன்னார்கள். அந்தக் கனவுகளைப் பற்றி ஒரு வார்த்தை கூட கவர்னர் உரையில் இல்லை. அதேபோன்று கால் நடைச் சீரமைப்புப் பற்றி வெளியிலே கூறும் அளவுக்கு ஒன்று கூட இதிலே காணோம். இவ்வாறு வெளியே பேசப்பட்ட திட்டங்கள் செயல்பட முடியாத நிலையிலேதான் இருந்து கொண்டிருக்கின்றன.

பஸ்களைத் தேசிய மயமாக்கும் திட்டம் எந்த நேரத்தில் புதிய அமைச்சரிடத்தில் சென்றதோ அந்த க்ஷணமே தேசியமயமாக்கும் திட்டம் குழிதோண்டிப் புதைக்கப்பட்டு விட்டது என்பதை மன வேதனையோடு கூறுகிறேன். லாப நோக்கோடு, வியாபாரியைப் போல் தேசிய மய பஸ் போக்குவரத்தை நடத்து



1970 ஜனவரி 23] [திரு. க. இராமமூர்த்தி]

வதைப் பார்க்கிறோம். முன்பு கட்டணத்தைக் குறைத்து விட்டோம் என்று தம்பட்டம் அடித்தார்கள். இன்றையதினம் அரசு பஸ்களின் கட்டணத்தை எந்த அளவுக்கு உயர்த்த முடியுமோ அந்த அளவுக்கு உயர்த்தியதோடு மட்டுமல்லாமல் ஸ்டாப் சர்வீஸ், கட சர்வீஸ் என்று சொல்லிக் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறார்கள். வருவாயைப் பெருக்குவதில்தான் கவனம் செலுத்தப்பட்டு வருகிறதே தவிர, மக்களுக்கு நன்மை செய்வதில் கவனம் செலுத்தப்படவில்லை.

டூரிஸ்ட் பஸ் என்ற பெயரில் பிரயாணிகளை ஏற்றிச் செல்லுவது நாடு எங்கிலும் நடக்கிறது. நேற்றையதினம் எஸ்.ஐ.இ.டி. கல்லூரி அரசின் உத்தரவைப் பார்த்து எள்ளி நகையாடி மதிக்காத தன்மையில் இருப்பதைப் பற்றிப் பார்த்தோம். டூரிஸ்ட் பஸ்களில் லௌட் ஸ்பீக்கரை வைத்துக் கொண்டு ஆளை ஏற்றிக் கொண்டிருக்கிறார்கள். எக்மோர் ஸ்டேஷன் அருகில் போக்குவரத்து ஸ்தம்பிக்கும் அளவுக்கு டூரிஸ்ட் பஸ்களில் ஆட்களை ஏற்றிக் கொண்டிருக்கிறார்கள். இங்கே அரசு இருக்கிறதா, போலீஸ் இருக்கிறதா, இந்த நிலைமை எப்படி நடைபெறுகிறது என்பதைப் பொறுப்புள்ள சர்க்கார் கவனிக்க வேண்டும்.

மதுவிலக்குத் திட்டத்தைப் பற்றிப் பெருமையாகச் சொல்லுகிறார்கள். நாங்கள் காந்தியார் வாரிசுகள், மதுவிலக்குத் திட்டத்தை எடுக்க மாட்டோம் என்று சொல்லுகிறார்கள். இவ்வளவு சொல்லுகின்ற இவர்களுடைய ஆட்சியில் எந்த அளவுக்கு ஸ்பிரிட் லைசென்ஸ் கொடுக்கப்படும் அளவு உயர்ந்திருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். முன்பு இருந்த கோட்டாவை விட இப்போது அதிகரித்திருக்கிறது. பல புதியவர்கள் ஸ்பிரிட் லைசென்ஸ் பெற்றிருக்கிறார்கள். அப்படி அதைப் பெறுகின்றவர்கள் என்ன தொழிலைச் செய்கிறார்கள்? இந்த அரசு மனச் சாட்சியோடு பதில் சொல்ல வேண்டும். அந்த ஸ்பிரிட் குடிகாரர்களுக்காக, 'இல்லிசிட் ட்ரங்கன்னஸ்'க்காக உபயோகப்படுத்தப்படுகிறது என்பது அனைவருக்கும் தெரியும். இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டாமா? மாண்புமிகு உறுப்பினர் எல்லப்ப பாகவதர் சொன்ன மாதிரி கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் செலுத்த வேண்டிய வருமான வரியைச் செலுத்தி விடுகிறார்கள். போலீஸ்காரர்கள் ஸ்பிரிட் வியாபாரிகளுடைய ஆட்களாக, ஏவலாளர்களைப் போல் மாநிலத்தின் பல பகுதிகளில் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த அரசு வெட்கத்தோடு ஏற்றுக்கொள்ளவேண்டிய நிலைமை இருக்கிறது.

போலீஸார் கள்ளக்குறிச்சியில் இருக்கிறார்களா இல்லையா என்ற நிலைமையில் அங்கு தீ வைப்புச் சம்பவம், கொலை போன்றவை நடந்திருக்கின்றன. அங்கு காலையில் இருந்து மாலை ஆறு மணி வரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதைக் கூறிக்கொண்டு கீழ்வெண்மணிச் சம்பவங்கள் திரும்பத் திரும்ப நடைபெறுவதற்கு இந்த அரசு அறிந்தோ அறியாமலோ இடம்

கொடுத்துக் கொண்டிருக்கிறது. அவற்றிற்கு முடிவு கட்டுகிற பொறுப்புள்ள அரசாங்கமாக இந்த அரசு மாறவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த கவர்னர் உரை ஏமாற்றம் அளிப்பதோடு மட்டுமல்ல பொருத்தமற்ற ஒன்றாகவும், ஏமாற்றுகிற ஒன்றாகவும் அமைந்து விட்டது என்று வேதனையோடு சொல்லி என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* **திரு. எம். எஸ். மணி :** சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் முகத்தான் எனது கருத்தினையும் இங்கு சொல்லலாம் என்று கருதுகிறேன். எந்த ஆண்டிலும் இல்லாத வகையில் ஆளுநர் அவர்களின் உரை இந்த ஆண்டு மிகவும் சிறப்பாக இருக்கிறது. அப்படி மிகவும் சிறப்பாக இருந்தாலும் கூட அவர்கள் தமது உரையை ஆரம்பிக்கிறபோது மறைந்த அண்ணா அவர்களையும், திறமை மிக்க அமைச்சர் திரு. கோவிந்தசாமி அவர்களையும், திரு. ஜாகீர் ஹூசேன் அவர்களையும் மறந்து விடாமல் அவர்கள் மறைந்த துக்கத்தைத் தாளாமல் தமது உரையை நிகழ்த்தியிருக்கிறார்கள்.

அண்ணா அவர்களது மறைவிற்குப் பின்னால் தமிழக அரசு கலைஞர் கருணாநிதி அவர்களின் தலைமையில் சிறப்பாக நடைபெறுகிறது என்பதையும் அவரது உரை அகில இந்தியாவிற்கும் எடுத்து உணர்த்துகிறது. சமீபத்தில் நாம் பார்த்தோம், கேள்விக் குறி, கேள்விக்குறி என்று அவர்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆனால் எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் அவர்களது திறமையைப் புரிந்துகொள்ளவில்லை. அந்தக் கேள்விக்குறியின் எதிரொலி தான் இன்றையதினம் நமக்கு 14 கோடி ரூபாய்க்கு மேல் கிடைத்திருக்கிறது. அவர்கள் தமது சாமர்த்தியத்தால் அதை வாங்கித் தந்திருக்கிறார்கள். அதை வைத்துக் கொண்டு வறட்சிப் பகுதிகளைப் பசுமையாக்குவதற்கு இன்றையதினம் நாம் பல நல்ல காரியங்களை செய்து கொண்டிருக்கிறோம்.

அதுமட்டுமல்ல. தற்போது நம் உணவு அமைச்சர் அவர்களும் முதல் அமைச்சர் அவர்களும் சேர்ந்து உணவுக் கட்டுப்பாட்டை தைரியமாக நீக்கியிருக்கிறார்கள். அவர்களின் தைரியத்தை அது காட்டுகிறது. உணவு உற்பத்தி அதிகமாகியிருக்கிறது. எல்லா இடங்களிலும் அது கிடைக்கிறது என்ற அளவிற்கு ஒருசாரார் கட்டுப்பாட்டை நீக்க வேண்டுமென்று சொல்வதை திருப்திப் படுத்துகின்ற அளவில் இன்றையதினம் உணவுக் கட்டுப்பாடு ரத்து செய்யப்பட்டிருக்கிறது. அதற்காக இந்த அரசை நாம் மிக மிகப் பாராட்ட வேண்டும்.

அதுமட்டுமல்ல. கடந்த இரண்டு மூன்று தினங்களாக ஆளுநர் அவர்களின் உரைமீது நடைபெறுகிற விவாதத்தில் பங்கு கொண்ட காங்கிரஸ் உறுப்பினர்கள் மதுவிலக்கை நாம் இன்னும் அமல் செய்கிறோம் என்பதைப்பற்றி ஒரு பாராட்டு வார்த்தை கூடச் சொல்லவில்லை. மது வேண்டும் என்பதை அவர்கள் விரும்புகிறார்கள்,





என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். காங்கிரஸ் ஆட்சியில் உள்ள பல மாநிலங்களில் இன்று மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டிருக்கிறது.

அதோடு தமிழக ஆட்சி செய்துள்ள நன்மைகள் என்னென்ன என்பதைப் பார்க்க வேண்டும். 1962-ல் இருந்தே கேட்டுக் கொண்டிருந்தேன், நகராட்சிச் சிப்பந்திகளுக்கு பென்ஷன் கொடுக்க வேண்டுமென்று. அன்றைய ஆட்சியாளர்கள் யாரும் அதைக் கேட்கவில்லை. ஆனால் இன்றையதினம் அந்த நகராட்சிச் சிப்பந்திகளுக்குப் பென்ஷன் தரப்பட்டிருக்கிறது, அதை அவர்கள் எல்லோரும் பாராட்டுகிறார்கள். அதோடு திருமணக் கடனும் அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. முன்பு இருந்த முதல் அமைச்சர் அவர்கள், திருமணக் கடன் கொடுக்க வேண்டுமென்று அப்போது சொன்னபோது திருமணத்திற்குக் கூட கடனா என்று கேலி பேசினார்கள். ஆனால் இன்றையதினம் நம் நாட்டு மக்களில் ஒரு சாராராக உள்ள சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு, அரசாங்கத்தில் பணியாற்றுகிறவர்களுக்குத் திருமணக் கடன் கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. மார்டின் அவர்கள் பேசும்போது கவர்னர் உரையில் ஒன்றுமேயில்லை, அது காகிதப் பூ என்று குறிப்பிட்டார்கள். அந்த வார்த்தையைக் கூட, புதிதாக ஒரு வார்த்தையைச் சொல்ல அவர்களுக்குத் தெரியவில்லை. கலைஞர் அவர்கள் சொன்னதுதான், அந்த காகிதப் பூதான் தெரிகிறதே தவிர என்னென்ன சொற்களைச் சொல்வது, அல்லது புது வார்த்தைகளை எப்படிப் போடுவது என்பது அவர்களுக்குத் தெரியவில்லை, அவர்களால் போட முடியவில்லை.

1962-ல் நாங்கள் எதிர்க் கட்சியாக இருந்தபோது நாங்கள் என்னென்ன பேசியிருக்கிறோம் என்பதை நீங்கள் படித்தாலே நீங்கள் நல்லதொரு எதிர்க்கட்சியாக விளங்கலாம். ஆனால் அவற்றை படிக்காமலே நீங்கள் பேசிக்கொண்டிருக்கிறீர்கள் என்று கருதுகிறேன். நாங்கள் பேசியதை நீங்கள் திரும்ப ஒரு முறை படித்துப் பாருங்கள். அப்படி அவற்றைப் படித்துப் பார்த்தால் நல்லதொரு எதிர்க் கட்சியாக விளங்க வசதியாக இருக்கும்.

குறிப்பாக ஆளுநர் அவர்களது உரையில் ஒன்றுமேயில்லை என்று சொன்னவர்களுக்கு நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஆளுநர் அவர்கள் தமது உரையில் ஒன்றைச் சொல்ல மறந்து விட்டார்கள். முகையூர் தொகுதியில் 28,000 வோட்டு வித்தியாசத்தில் காங்கிரஸை நாங்கள் தோற்கடித்திருக்கிறோம் என்பதையும் அவர்கள் சொல்லியிருந்தால் மிக நன்றாகயிருந்திருக்கும். காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர் 28,000 வோட்டு வித்தியாசத்தில் தோற்றுவிட்டார் என்பதையும் சொல்லி இருந்தால் கவர்னர் அவர்களது உரை மிகத் திருப்தியோடு அமைந்திருக்கும். ஆனால் ஆளுநர் அவர்கள் எதை எங்கே சொல்லவேண்டும் என்ப

பெருந்தன்மையில் அதைக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அதைப் புரிந்து கொள்ளவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

கடந்த ஆண்டு பேசினார்கள், இந்த அரசு பரிசுச் சீட்டுத் திட்டத்தைக் கொண்டு வந்தது, அவற்றை வாங்குவதற்கு ஆள் இல்லை என்று. எதிர்க்கட்சி கொறடா அவர்கள் அதைப்பற்றி திறமையாகப் பேசினார்கள். ஆனால் இன்றைய தினம் பரிசுச் சீட்டு அதிகமான விலை கொடுத்து வாங்கக்கூடிய அளவில் அவை கிடைக்காது இருக்கிற நிலைமைதான் இருக்கிறது. (குறுக்கீடு) ப்ளாக் மார்க்கட் செய்பவர்களும் நம் நாட்டில்தான் இருக்கிறார்கள். அதைக் கண்காணிக்க வேண்டும். எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்கள் பத்து பைசா கூடுதலாகத் தருகிறோம், வாங்கித்தாருங்கள் என்று கேட்கிறார்கள். அவர்களுக்கு பரிசு சீட்டில் நம்பிக்கை இல்லை, ஆனால் லட்சம் ரூபாய் பெற விரும்புகிறார்கள். அந்த முறையில் இன்றையதினம் பரிசுச் சீட்டு திட்டம் சிறப்பான முறையில் நடந்துக் கொண்டிருக்கிறது.

அடுத்து, 16 ஆண்டுகளுக்கு முன்னால் நாங்கள் போராட்டம் நடத்தினோம், கள்ளக்குடி என்று பெயர் மாற்ற வேண்டுமென்று. அதை அப்போது ஒத்துக்கொள்ளாமல் இப்போது 16 ஆண்டுகளுக்குப் பிறகு அந்தக் கள்ளக்குடி ரயில் தண்டவாளத்தில் தலை வைத்தாரே அவர் முதல் அமைச்சரான பிறகு அவர்கள் தலைமையிலேயே அந்த விழா நடத்த வேண்டுமென்று இந்திய அரசு பார்த்து இப்போது கள்ளக்குடி என்று பெயர் வைக்கச் சொல்லி அனுமதி கொடுத்து வெற்றி விழாவும் நடைபெற்றிருக்கிறது. அதைப்பற்றி ஒரு வார்த்தை கூட நீங்கள் சொல்லவில்லை.

முன்னாள் முதல் அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் எங்களது திறமையை வெகுவாகப் பாராட்டியிருக்கிறார்கள். நீங்கள் சொல்லலாம் அவர்கள் எங்களைப் பார்த்து விஷக் கிருமிகள் பரவி விட்டன என்று சொன்னாரே என்று. அவர்களிடம் கேட்டோம். என்னை குடைந்தெடுத்து விட்டார்கள், நான் என்ன செய்வது என்று சொன்னார்கள். உங்கள் நிர்பந்தத்தால் அவர்கள் விஷக் கிருமிகள் என்று சொல்லியிருக்கிறார்கள். அதோடு சமீபத்தில் ஒரு அச்சக விழாவில் பேசுகிறபோது எதிர்க்கட்சியாக இருந்தபோது கலைஞர் அவர்களும், அவர்களைச் சார்ந்தவர்களும் எவ்வளவு திறமையான கேள்விகள் கேட்டார்கள், நான் பல நேரங்களில் அவற்றைச் சமாளிக்க முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தேன் என்பதை அவர்கள் ஒப்புக் கொண்டார்கள். அவர் பெரியவர். உண்மை தெரியும்போது ஒப்புக்கொள்கிறார். ஆனால் அந்த உண்மையை நீங்கள் புரிந்து கொண்டு ஒத்துக்கொள்ளவில்லையே என்பதற்காக நான் வருந்துகிறேன்.

ஒரு சின்னக் காரியத்தில் உங்களிடையே ஒரு சமாதானத்தை ஏற்படுத்திக் கொள்ள முடியவில்லை. மாட்டுச் சின்னம் யாருக்கு? இதற்கு அடிதடியா? (ஆரவாரம்)





THIRU K. VINAYAKAM: How does it form part of the Governor's Address? Has it got anything to do with the Governor's **Address?**

***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:*** உறுப்பினர்கள் பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பலாம். ஆனால், பேசிக் கொண்டிருக்கும்போதே குறுக்கிடுகிற அதிகாரம் உங்களுக்கு இல்லை என்று நேற்றே சொல்லியிருக்கிறேன்.

THIRU K. VINAYAKAM: I accept the ruling. Has reference to the symbol of a party which has nothing to do with the Governor's Address got any relevance or sense? It is not even the Governor's Address; it is the Chief Minister's speech. How will a Governor refer to Mugaiyar and the votes they secured? This is not part of the policy.

***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :*** கவர்னர் அவர்களது உரையில் எது இல்லை என்று வருத்தப்படுகிற உரிமை உங்களுக்கு எப்படி இருக்கிறதோ அதே உரிமை இந்தப் பக்கத்தில் உள்ளவர்களுக்கும் இருக்கிறது.

***திரு. எம். எஸ். மணி :*** நான் தமிழக அரசின் நிலைபற்றிச் சொல்கிறேன். தமிழ் நாட்டிலுள்ள போலீசார் இன்று தங்கள் வேலைகளைக் கவனிக்க முடியாமல் இவர்களது சண்டையைத் தீர்க்க வேண்டிய நிலைக்குப் போக வேண்டியிருக்கிறதே என்ற நிலையைத் தான் சொல்கிறேன். பெரியார், ராஜாஜி அவர்கள் கூடச் சொல்லி இருக்கிறார்கள். சிலர் மாட்டை எடுத்துக் கொள்ளுங்கள். சிலர் கொடியை எடுத்துக் கொள்ளுங்கள் என்ற முறையில். ஏதாவது ஒரு சமாதானத்திற்கு வரவேண்டாமா? படித்தவர்கள், அரசியலில் தியாகம் செய்தவர்கள்; போலீசார் அவர்களது மற்றவேலைகளைப் பார்க்க இடம் கொடுக்க வேண்டாமா என்று கேட்கிறேன். ஒரு கட்டிடத்திற்காக சண்டை. போலீசார் புகுந்தார்கள். போலீசார் புகவில்லை என்று சொன்னாலும் . . .

THIRU J. JAMES: On a point of order, Sir. The matter relating to the building, the symbol and the other things are before a court of law. The matter is *sub judice* and if Members talk about these things, it will affect the course of justice. The Chair has to give a ruling and stop the Member from proceeding on that line.

***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :*** ஒரு கட்டிடத்திற்காக இரண்டு கோஷ்டிகளைச் சார்ந்தவர்கள் தகராறு பண்ணுகிறார்கள் என்றுதான் அவர்கள் சொன்னார்களேயொழிய அந்தக் கட்டிடம் யாருக்குச் சொந்தம் என்ற கருத்தைச் சொல்லவில்லை. அவர் அப்படிச் சொல்லியிருந்தாரானால் அது சப்-ஜூடிஸ் ஆக இருக்கும் பொருளைப்பற்றி குறிப்பிட்டதாக ஆகுமே தவிர மற்றபடி ஆகவில்லை.

**திரு. எம். எஸ். மணி :** ஒரு பெரியவர் பேசுகிறார், என்ன நடக்கும் தெரியுமா என்று சொல்லுகிறார். பழுத்த அனுபவம் உள்ள பெரியவர், ஒரு முதலமைச்சராக இருந்தவர் ஜாக்கிரதையாகப் பேச வேண்டாமா? அதை எதிர்க் கட்சி அங்கத்தினர்களுக்கு நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

சாதாரணமாக நல்லது செய்வதைப் பாராட்ட வேண்டாமா? கூவம் நதி நாறுகிறது என்பது பற்றி 63-ம் ஆண்டிலே சொன்னேன். அப்போது இங்கிருந்த அமைச்சரவர்கள் சொன்னார்கள் கூவம் நாறுகிறது, அங்கத்தினர்களுக்கு நாற்றம் என்றால் தெரியும். இதைத்தான் பதிலாக அவர்கள் சொன்னார்கள். இது ஒரு சாதாரண பிரச்சினை. ஆனால் இப்பொழுது, அங்கே 'பார்க்' வைத்து, எதிர்க்கட்சிகளிலே உள்ள நீங்களும் போய்ப் பார்ப்பதற்காக புதுத் தண்ணீரை நிரப்ப ஆயிரக்கணக்கானவர்கள் வேலை செய்கிறார்கள். இதையாவது பாராட்ட வேண்டாமா? இந்தக் காரியத்தை நீங்கள் செய்திருந்தால் எதிர்க் கட்சியிலே அப்போதிருந்த நாங்களும் பாராட்டியிருப்போம். ஆனால் நாறுகிறது, எப்படி நாறுகிறது என்று கேட்டுக் கொண்டிருந்தார்கள். எதிர்க் கட்சியிலே உள்ளவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன், இப்பொழுது 48 அங்கத்தினர்கள் இருக்கிறீர்கள். இவ்வளவு பேர்களும் அடுத்த தேர்தலில் வரவேண்டும். மாஜி அமைச்சர் திரு. பூவராகன் அவர்களை முன்பெல்லாம் பார்த்தால் அவர் சிரித்த முகத்துடன் இருக்க மாட்டார். ஆனால், இப்பொழுது பார்த்தால் சிரித்த முகமாக இருக்கிறார்கள். ஆகவே சொல்லுகிறேன், திறமையான ஆட்சி நடைபெறுகிறது, கலைஞருடைய ஆட்சி திறமையாக நடைபெறுகிறது. நீங்கள் எதிர்க் கட்சியிலே உள்ளவர்கள். இப்போது எதிர்க் கட்சியிலேயுள்ளவர்கள் ஆட்சி நடத்தியபோது 1½ கோடி ரூபாய்க்குக் கதரை விற்றிருக்கிறார்கள். அப்போது எதிர்க் கட்சியாக இருந்த நாங்கள் இப்போது 2½ கோடி ரூபாய்க்குக் கதரை விற்று இருக்கிறோம். கதரைப்பற்றி நீங்கள் நாட்டிலே சொல்லவில்லை. நாங்கள் சொல்லுகிறோம், கதரைப்பற்றி, அது வெய்யிலுக்கும் நல்லது, குளிருக்கும் நல்லது என்று நாங்கள் சொல்லுகிறோம்.

**திரு. கே. விநாயகம் :** நீங்கள் கதர் போடவில்லையே.

**திரு. எம். எஸ். மணி :** கனம் அங்கத்தினருக்குக் கதர் எது என்று தெரியவில்லை. நான் உண்மையான கதரை அணிந்திருக்கிறேன். நான் பேசி முடித்தவுடன் கனம் எதிர்க் கட்சிக் கொறடா அவர்களின் பக்கத்தில் போய் உட்காருகிறேன், பார்த்துக் கொள்ளட்டும். நான் 16 கால் நூலிலே நெய்த கதரைப் போட்டிருக்கிறேன்.

சமீபத்திலே எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்கள் பேசினார்கள். முன்பு முதலமைச்சராக இருந்த ஒரு பெரியவர் சரியாக ஆட்சி செய்யாத காரணத்தால் இப்படி நாங்கள் தோல்வியடைந்தோம்



என்று சொல்கிறார்கள். நாங்கள் அப்போது சொன்னதைக் கவனத்தில் வைத்துக் கொள்ளவில்லை, ஆகவே இப்பேர்ப்பட்ட கதி வந்தது. ஆகவே, நான் சொல்லிக் கொள்வது, மறைந்த அண்ணா அவர்களுடைய துணைவியாரை மேல் சட்டமன்றத்தில் உட்கார வைத்தோம், மறைந்த கோவிந்தசாமி அவர்களின் துணைவியாரை இங்கே உட்கார வைத்திருக்கிறோம், தியாகம் செய்த வேலாயுதத்தின் துணைவியாரை கொண்டு வந்து கடந்த சட்டமன்றத்தில் உட்கார வைத்தோம். போளூர் சுப்பிரமணியம் அவர்களின் துணைவியாரை உட்கார வைத்திருக்கிறோம். பத்து, பன்னிரண்டு பெண்கள் எதிர்க் கட்சியிலே உட்கார்ந்திருந்தார்கள். இப்பொழுது அங்கு ஒருவரைக்கூடக் காணோம். கொஞ்சம் நிறுத்திப் பார்க்க வேண்டிர், என் வரவில்லையென்று, பன்னிரண்டு பெண்கள் இருந்தார்கள் முன்பு, இரண்டு பெஞ்சிலே, அழகாகப் பேசக்கூடிய, திறமையுள்ளவர்கள் இருந்தார்கள், அவர்கள் வரவில்லையே என்று யோசித்தீர்களா? அங்கு தொண்டர்களுக்கு மதிப்பு அளிப்பது இல்லை, கட்சியிலே சொன்னதைக் கேட்கவில்லை. ஆதலால் நான் சொல்வது, நாங்கள் எப்படியோ போங்கள் என்று சொல்லவில்லை, எதிர்க் கட்சியிலே உள்ளவர்கள் திறம்படச் செயல்பட வேண்டுமென்ற அன்பினாலேதான் சொல்கிறேன், எதிர்க் கட்சியிலே உள்ளவர்கள் தியாகம் செய்தவர்கள், அது 50 வருஷத்திற்கு மேல் ஆகி ரிடையர் ஆகிவிட்டது, எனவே உங்கள் தியாகத்தைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன். நீங்கள் எதாவது போராட்டம் நடத்துங்களேன். போராட்டம் நடத்தி ஒரு மூன்று மாதங்களுக்கு ஜெயிலுக்குப் போங்களேன். நாங்கள் ஒரு மாதம், இரண்டு மாதம் என்று போயிருக்கிறோம். அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதை, கலைஞர் கருணாநிதி அவர்கள் சொன்னதைக் கேட்டோம். நீங்களும் விலைவாசி ஏறிவிட்டது என்று மறியல் செய்து இரண்டு மூன்று மாதங்கள் சிறைக்குப் போங்கள். நான் இதையெல்லாம் உங்கள் மீது அன்பிருப்பதால் சொல்லுகிறேன்.

நாங்கள் தேர்தல் நேரத்தில் கூட்டு சேர்ந்தோம். அதைப் பற்றி எவ்வளவு கேவலமாகப் பேசினார்கள், கூட்டு சேரக் கூடாது என்று சொன்னார்கள். ஆனால் இப்பொழுது கூட்டு சேருவோம் என்று பெரிய தலைவர்கள் அகில இந்திய ரீதியில், தமிழ்நாட்டிலேயும் பேசுகிறார்கள். யார் யாருடன் கூட்டு சேரக் கூடாது என்று சொன்னார்களோ இன்று அவர்களோடு சேர வந்திருக்கிறார்கள்.

இப்பொழுது பல நல்ல காரியங்கள், அறிஞர் அண்ணா அவர்கள் சொல்லிவிட்டுச் சென்ற அந்தப் பாதையிலே கலைஞர் அவர்களின் ஆட்சி திறம்பட நடக்கிறது. நாங்கள் திறம்பட ஆட்சி நடத்துகிறோம். அவர்கள் இருந்தபொழுது திறமையாக ஆட்சி நடத்தவில்லை, அதனால்தான் அவர்களை எதிர்க் கட்சியிலே உட்கார வைத்திருக்கிறார்கள், எதிர்க் கட்சித் தலைவர் அவர்களைப்

பார்க்கும் பொழுது, அடுத்தமுறையும் அவர்களை எதிர்க் கட்சித் தலைவராக வந்து இன்னும் கொஞ்சம் திறமையாகப் பாடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளத் தோன்றுகிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** எனக்கும், இவர்களை மக்கள் அதுவரை விட்டு வைக்கவேண்டுமென்று ஆசை.

**திரு. எம். எஸ். மணி :** ஆளுநர் அவர்களின் உரையை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. ஏ. ஆர். பெருமாள் :** தலைவரவர்களே, என்னுடைய தலைவர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் பிறந்த தினமாகிய ஜனவரி 23-ம் தேதியன்று ஆளுநர் அவர்களின் உரையின் மீது பேச எனக்கு வாய்ப்பளித்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆளுநர் அவர்களின் உரையை வரவேற்று என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

சென்னை நகரத்திலேயுள்ள தெருக்கள், சாலைகளுக்குள்ள ஆங்கிலப் பெயர்களையும், ஆங்கிலேயர் பெயர்களையும் மாற்றும் நிலைமையை வரவேற்கிறேன். சென்னை நகரத்திலேயுள்ள வெள்ளைக் காரர்களின் சிலைகளையும் அகற்றிவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, நம்முடைய அரசு செய்திருக்கும் துணிச்சலான காரியம் இந்த உணவுக் கட்டுப்பாட்டை ரத்து செய்தது ஆகும். அதை இந்த நாடு, நாட்டிலேயுள்ள மக்கள் வரவேற்கிறார்கள். ஆனால், இந்த உணவுக் கட்டுப்பாட்டை ரத்து செய்த பின்னால், இன்னும் சில மாதங்களுக்குள்ளாக விலைவாசிகள் அதிகமாக உயர்ந்து பதுக்கல் நிறைந்துவிடும் என்று சிலபல பேர்கள் பேசுகிறார்கள். அதற்குக் காரணம் என்னவென்றால், கடந்த காலத்திலே உள்ள நிலைமைகளை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது அதுபோன்ற நிலைமை மீண்டும் வரலாம் என்று அஞ்சுகிறார்கள். ஆகவே, உணவுக் கட்டுப்பாட்டை நீக்கியதன் மூலம் நம்முடைய அரசு செய்த இந்த மகத்தான சாதனையை மக்களும், விவசாயிகளும் பயன்பெற்று அனுபவிக்க வேண்டுமென்றால் பதுக்கலை ஒழித்தாக வேண்டும். அதற்காக கடுமையான சட்டங்களை நிறைவேற்ற வேண்டும். இப்போதுள்ள சட்டங்கள் போதுமானவையாக இல்லாமலிருப்பதால் புதிதாகச் சட்டங்களை இயற்ற வேண்டும். பதுக்கல் செய்பவர்களை மாநிலத்தின் எல்லையை விட்டு வெளியேற்றும் அளவுக்குக் கடுமையான தண்டனை அளிக்கும் வகையில் போதிய சட்டங்களை நிறைவேற்ற வேண்டும்.

இந்த மாதிரியான உணவுக் கட்டுப்பாடு நல்ல முறையிலே செயல்பட வேண்டுமென்றால், தமிழகத்திலுள்ள அரிசி மில்களை நாட்டுடைமை ஆக்க வேண்டும். அப்படிச் செய்தால் பதுக்கலை யும், ஊழலையும் தடுத்து விட முடியுமென்று நான் கருதுகிறேன்.



அதற்கடுத்தபடியாக, வறட்சி நிவாரணத்தில் நம்முடைய அரசு செய்த சாதனை, அதற்காகச் செய்யப்பட்ட பணிகளை நாட்டிலுள்ள மக்கள் போற்றுகிறார்கள் ஆனால் நம்முடைய பெருந்தலைவர் ஒருவர், நம்முடைய மாநிலத்திற்குக் கொடுக்கப்பட்ட தொகையை கடுமையாக எதிர்த்தார்கள். காங்கிரஸ் கட்சி ஆட்சியிலுள்ள மாநிலங்களுக்கு 2 கோடி, 3 கோடி கொடுத்துவிட்டு, எதிர்க் கட்சிகள் ஆட்சியில் இருக்கக்கூடிய மாநிலங்களுக்கு 16 கோடி, 17 கோடி கொடுக்கிறார்களே என்று பேசினார்கள். அது மட்டுமல்ல. அந்தப் பெருந் தலைவருடைய பெயரை நான் கூற விரும்பவில்லை. அவருடைய சமீபத்திய பேச்சுக்கள், தமிழகத்திலே பலாத்கார சூழ்நிலையை உண்டாக்கி இருக்கிறது, அராஜக நிலைமையைத் தோற்றுவித்திருக்கிறது. அவைகள் பத்திரிகைகளில் வராமல் இருக்கலாம். கருத்தெழுத்துக்காரர்கள் ஒழுங்காக அரசுக்குத் தெரிவிக்காமல் இருக்கலாம். ஆனால் அவருடைய பேச்சை நான் நேரடியாகவே கேட்டேன். அவருடைய பேச்சு, அந்த பெருந் தலைவருடைய பேச்சு, தமிழ்நாட்டில் அராஜகத்தையும், பலாத் காரத்தையும், கிளர்ச்சிகளையும் தூண்டிவிடக்கூடிய அளவுக்கு இருக்கிறது. எனக்குக் கிடைத்த நம்பிக்கையான தகவல்களை வைத்துக் கொண்டு சொல்லுகிறேன், இன்னும் 6 மாதங்களுக்குள், ஓரிரு மாதங்கள் முன் பின்னாக ஆகலாம், தமிழ்நாட்டில் ஒரு பலாத்காரப் புரட்சி, அராஜகப் புரட்சி அந்தத் தலைவரால் தூண்டி விடப்படும் என்று கருதுகிறேன். அந்தப் பெருந் தலைவரைக் கைது செய்து தமிழகத்திலே சட்டம், ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக பிற்பட்டவர்கள் நலனுக்கு என்று தனியாக மு.ப. 11-30
ஒரு இலாகாவை ஏற்படுத்தி, அந்த இலாகாவிற்கு ஒரு தனி இயக்குனர் நியமித்து, பிற்பட்டோர் நலனுக்காகச் செய்கின்ற அரிய பெரிய பணியில் இந்த அரசு எடுத்துக் கொண்ட முயற்சி நெஞ்சாரப் பாராட்டத்தக்கது.

காரியாப்பட்டி சட்டமன்றத் தொகுதியைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறிக் கொண்டு என்னுடைய உரையை முடிக் கிறேன். காரியாப்பட்டித் தொகுதியில் கிருதுமால் நதி என்ற ஒரு நீண்ட நதி இருக்கிறது. அங்கே உள்ள பிரைந் கால்வாய், சிந்தனைப்பட்டிக் கால்வாய் ஆகிய கால்வாய்களைச் சீர்செய்து, செப்பனிட்டு அந்தப் பகுதிவாழ் மக்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், காரியாப்பட்டித் தொகுதியில் நெல்குடி என்ற இடத்தில் ரோடு மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. அதை ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்து செப்பனிட்டுத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் முன்பு சொன்னபடி பலாத்காரத்தையும், அராஜகத்தையும் தூண்டிவிடக்கூடிய நிலைமையில் உள்ள பேச்சுக்களைப் பற்றி நான் நேரடியாகக் கேட்ட காரணத்தினால் சொல்கிறேன். நான் அப்படிப்

பேசுகிறவர் ஒரு பெரிய தலைவர் என்று குறிப்பிட்டேன். அவர் யார் என்பது சட்டமன்றத்திலுள்ள சில பேர்களுக்குத் தெரிந்திருக்கலாம், சில பேர்களுக்குத் தெரியாமலும் இருக்கலாம். ஆகவே, அந்தப் பெரும் தலைவரின் பெயரைச் சொல்லிவிட விரும்புகிறேன். தமிழகத்தின் மாபெரும் தலைவர் திரு. காமராஜர் தான் அப்படிப் பேசுகிறவர். சமீபத்திலே ஒரு கூட்டத்திலே அவர்கள் பேசியதை நான் கேட்டேன். நான் அப்படியே அதை இங்கே சொல்கிறேன். 'சர்க்காரை என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள், அது நம்முடைய படைப்புத் தான். நமக்கு வேண்டிய காரியங்களைப் பண்ணவில்லை என்றால், அந்த சர்க்காரை எதிர்த்துப் போராடித் தான் ஆகவேண்டும். துப்பாக்கியைக் கண்டு பயப்பட வேண்டாம். துப்பாக்கி நம்மை என்ன செய்யும்' என்று பேசியிருக்கிறார். மக்கள் தங்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு போராட்டங்கள் மூலம் தான் சாதித்துக்கொள்ள வேண்டும் என்ற மனோபாவத்தை உருவாக்கத் தக்க பேச்சுக்களாக இருக்கின்றன இவை. உயிர் தியாகம் செய்யத் தயாராக வேண்டும் என்றெல்லாம் கூட அவர் பேசப் போகிறது. இரண்டு மாதத்திற்குள்ளாக திரு. காமராஜர் பேச்சு தமிழகத்தில் பலாத்காரத்தையும், அராஜகத்தையும் தாண்டிவிடத்தக்க அளவில் போய்க் கொண்டிருக்கிறது. பத்திரிகையில் வரவில்லை என்றோ அல்லது சுருக்கெழுத்தாளர்கள் ரிபோர்ட்டு வரவில்லை என்றோ அரசு நடவடிக்கை எடுக்காமல் இருக்க வேண்டாம். இந்த அரசு திரு. காமராஜ் அவர்களைக் கைது செய்து, சட்டம், ஒழுங்கு இவைகளைப் பாதுகாக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து, முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. கே. பி. எஸ். மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கவர்னர் பெருமானுடைய உரையின் மீது பேச வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி கூறிக் கொள்கிறேன். அந்த உரையை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது அரசியலில் காட்டப்படுகிற அழகிய ஒரு கண்ணாடி, அந்தக் கண்ணாடிக்கு முன்னால் தெள்ளத் தெளிவாக எந்த ரூபத்தைப் பார்க்கின்றோமோ அதைப்போலவே இந்த நாட்டு அரசு எதை எதைச் செய்திருக்கிறது என்பதைத் தெளிவாகக் காட்டுகின்ற புள்ளிவிவரங்கள் அதிலே காட்டப்படுகின்றன. அந்தப் புள்ளி விவரங்களைத் துருவிப் பார்க்கும்பொழுது இந்த நாட்டில் பெரும்பான்மையாக, ஏகபோகமாக இருக்கிற ஒரு பெரிய சமூகத்தைப்பற்றிய குறிப்பு ஒரு சிறிது கூட அதில் காணப்படவில்லை. தாழ்த்தப்பட்ட மக்களுடைய நிலை இந்த நாட்டிலே எப்படி இருக்கிறது, அவர்களுக்காக என்ன புதிய திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன, அவைகள் எந்தக் காலத்தில் செயல் படுத்தப்படும் என்பது பற்றி ஒரு சிறு குறிப்பு கூட அதிலே இல்லை என்பதை மிகவும் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.





உணவுக்கட்டுப்பாடு ரத்து செய்யப்பட்டிருப்பது போற்றத் தக்கது, வரவேற்கத்தக்கது. அதை நான் குறையாகச் சொல்லவில்லை. புறம்போக்கு நிலங்களை அளிப்பதற்காக, தனி அதிகாரிகளை நியமித்து ஏழை எளியவர்களுக்கு குடியிருப்பதற்காக நிலங்களை அளிப்பதற்காக இந்த அரசு தேவையான உத்தரவுகளை இட்டிருக்கிறது என்று கூறப்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். அதற்காகப் பெருமைப்படுகிறேன். உர விநியோகத்தைக் கூட பஞ்சாயத்து யூனியன்கள் நேரடியாக ஏற்றுக்கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது, வரவேற்கிறேன்.

நாட்டிலுள்ள இத்தகைய பெரும்பான்மை மக்களுக்காகத் தனி அமைச்சரவை ஏற்படுத்தி, தனி இலாகா ஏற்படுத்தி, அந்தக் காலத்திலிருந்து இந்தக் காலம் வரையில் கிட்டத்தட்ட 21 ஆண்டுகளாக பல திட்டங்களை நிறைவேற்றியிருந்தும், இன்னும் சரிவர இந்தச் சமூகம் முன்னேறவில்லை என்று கருதி, மத்திய சர்க்காரால் அண்மையில் 10 ஆண்டு காலத்திற்கு சலுகைகள் நீடிக்கப்பட்டிருக்கின்றன. இந்த சமூகத்தின் நிலை என்ன, மாநில சர்க்கார் இவர்களுக்காக என்ன செய்யப் போகிறது என்பதுபற்றி கவர்னர் அவர்களின் உரையிலே குறிப்பிடப்படவில்லை. எங்களுடைய கோரிக்கைகளைப் பற்றி, எங்களுடைய நிலைமைகளைப் பற்றி கவர்னர் பெருமான் கவனம் எடுத்துக் கொள்ளவில்லை. அதைப்போல, காலப்போக்கிலே பத்திரிகை உலகம் கூட எங்களைப் பற்றி அக்கறையோடு எழுதவோ, எங்கள் சமூகத்திற்கு ஒரு நல்ல செய்திகளைக் கொடுக்கவோ. அல்லது விழிப்பு உணர்ச்சியைக் கிளப்பவோ இல்லை, எங்களைப் பற்றிய செய்திகளைக் குறைத்துக் கொண்டே வருகிறது.

சட்டமன்றத்தில் நாங்கள் எல்லாம் ரிசர்வ் ஸ்தானம் என்ற பெயரால் இருக்கிறோம். எங்களுடைய அரும்பெரும் தலைவர் பாபாஜி அம்பேத்கார் அவர்கள் கொடுத்த பிச்சையே தவிர வேறு எதுவும் இல்லை என்று தைரியமாக நான் சொல்ல முடியும். அப்படி வந்திருக்கிற நாங்கள் அவர்களுடைய படத்தைக் கூட இந்த மாமன்றத்தில் மட்டுமல்ல, அகில இந்தியாவிலும் இருக்கிற சட்ட மன்றங்களில் வைப்பதற்கு முடியாத ஒரு நிலையில் இருக்கிறோம். இதற்குக் காரணம், எங்களை நாங்களே தேர்ந்தெடுத்துக்கொள்ள தகுதியில்லாத, சட்டம் இல்லாத, சட்டம் துணை செய்யாத நிலையில் இருக்கிறோம். பூனா ஒப்பந்தத்தின் அடிப்படையில் எங்களுடைய தலைவர் பாபாஜி அம்பேத்கார் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட கோரிக்கையை, தனித் தொகுதி உரிமையை மீண்டும் வற்புறுத்துகிற நிலையில் அகில இந்திய ரீதியில் எங்களுடைய செயல்முறைகளை நடைமுறைக்குக் கொண்டுவர முடிவெடுத்திருக்கிறோம். நான் ஏதோ தனிப்பட்ட நபர் சொல்லுவதாகப்

பலரும் இழுக்காகவும் கேலி வார்த்தையாகவும் பேசலாம். ஆனால், காலப்போக்கிலே, அரசாங்கமும், அகில இந்திய அரசும் இதை உணருகிற நிலைமை நிச்சயம் வரும்.

தாழ்த்தப்பட்ட மக்கள் இல்லாத ஒரு அரசியல் கட்சியோ அல்லது அவர்கள் பிரதிநிதித்துவம் வாங்காத அரசியல் மன்றமோ இருக்க முடியாது, இருக்கவில்லை. பார்லிமெண்டிற்கு ஒரு ஜகஜீவன்ராம் தேவைப்படுகிறது. தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு ஒரு கக்கன் தேவைப்படுகிறது. நம்முடைய முன்னேற்றக் கழக அமைச்சரவையைப் பார்க்கும்பொழுதும், சட்டமன்றத்தைப் பார்க்கும்பொழுதும் 33, 36 தாழ்த்தப்பட்ட எம்.எல்.ஏ.-க்கள் தேவைப்படுகிறது. இது எதை எடுத்துக் காட்டுகிறது என்று சொன்னால் இந்த நாட்டில் தாழ்த்தப்பட்ட மக்களின் உண்மையான பிரதிநிதித்துவம் இல்லாமல் எந்த அரசியல் கட்சியும் வேர் ஊன்றி நிற்க முடியாது என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது.

இந்த நிலையிலே நான் மறுபடியும் வலியுறுத்திச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எங்களுடைய பிரதிநிதிகள் சுயேச்சையாக இயங்கச் சந்தர்ப்பங்கள் வேண்டும். நாங்கள் சுயேச்சையாக இயங்குகிறோம் என்று வாதத்திற்கு வேண்டுமானால் சொல்லிக் கொண்டிருக்கலாமே தவிர, உள்ளக்கிடக்கையை தொட்டுப் பார்க்கும்பொழுது நிச்சயம் அவர்கள் சார்ந்திருக்கிற கட்சியின் அடிமைகளாக அவர்கள் கட்டுப்பட்டு இருக்க முடிகின்றதே தவிர, தாங்கள் எந்தத் தொகுதி, எந்த ஸ்தானத்தில் இருந்து வந்தோமே அந்தக் கொள்கையை எடுத்து பிரதிபலிக்க முடியாத அவல நிலை இருக்கிறது என்பது ஒத்துக் கொள்ள வேண்டிய விஷயம். இந்த நிலையைத்தான் பாபாஜி அம்பேத்கார் அவர்கள் 25—12—1945-ல் ஒரு மிகப் பெரிய சமூகத்தைப்பற்றி வெகு அழகாகச் சொல்லியிருக்கிறார்கள். எங்களுடைய பிரதிநிதித்துவம் அத்தனையும் நாட்டிலுள்ள மற்ற, ஏனைய அரசியல் கட்சிகளுக்கு லாபகரமான வேட்டைக்காடாக அமைந்திருக்கிறதே தவிர, நாங்கள் அதிலே வாழ முடியவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த எண்ணம் இப்பொழுது தான் அமைச்சர்களாக இருந்தாலும், மற்றைய அங்கத்தினர்களாக இருந்தாலும், பெரும் சக்தி வாய்ந்த கட்சித் தலைவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு ஏற்பட்டுக் கொண்டு வருகிறது.

உதாரணத்திற்கு நான் சொல்லவேண்டுமானால் தாழ்த்தப்பட்ட மக்களுடைய தொகுதியிலிருந்து வந்திருக்கிறவர்கள் எம்.எல்.ஏ. அல்லது அமைச்சர், எம்.பி. அல்லது எம்.எல்.சி. பதவியில் தான் இருக்கிறார்களே தவிர, வேறு பொது ஸ்தாபனங்களில் மில்களிலோ அல்லது கூட்டுறவு ஸ்தாபனங்களிலோ டைரக்டர் அல்லது சேர்மனாக வருவதற்கு இன்று இருக்கிற அரசியல் கட்சிகள் விடுகின்றனவா என்றால், ஒன்று கூட விடவில்லை, ஒன்றும் இடையாது. அதை எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியாது.





நான் ஒருவன்தான் சொல்லுகிறேன் என்று நினைக்கலாம். இல்லை. காலப்போக்கில் இந்த மன்றத்தில் உள்ள 39 அங்கத்தினர்களும் பேசும் காலம் நிச்சயமாக வரப் போகிறது (குறுக்கீடு) ஏன் கருடா சுகமா என்று கேட்டால் எப்படியோ அப்படித்தான். அடுத்த ஆண்டாவது, நிலைமை மாறும். ஆகவேதான் சொல்லுகிறேன். ஒரு காலம் வந்தே தீரும். அந்த வகையான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது

அடுத்த ஆண்டிலாவது கவர்னர் பெருமான் உரையிலே எங்களுக்கு இருக்கும் திட்டங்களை, முற்போக்கு நிலைகள் பற்றி விரிவாக எடுத்து உரைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, விடைபெறுகிறேன், வணக்கம்.

■ திரு. பெ. மலைச்சாமி: சட்டப் பேரவை துணைத் தலைவர் அவர்களே. கவர்னர் பெருமானின் பேருரைமீது நானும் என் கருத்துக்களைச் சொல்ல வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி தெரிவிக்கிறேன். இந்த ஆண்டு கவர்னர் பேருரையில் சிறப்பில்லை என்று மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர்கள், அதுவும் குறிப்பாக காங்கிரஸ் உறுப்பினர்கள் கூறினார்கள், நான் சொல்லுவேன், எந்த ஆண்டும் இல்லாத அளவிற்கு, காங்கிரஸ்காரர்களுக்கு இந்த ஆண்டு குழப்பம் ஆகிவிட்டதால், அவர்களுக்கு இந்தப் பேருரை சிறப்பில்லை என்று சொல்லுகிறார்கள். அவர்களுக்கு இருக்கும் குழப்பம் பெரிது. முருங்கைப் பூவை மூக்கிலே வைத்து மணந்தவர்களுக்கு, முல்லைப் பூவைப் பார்க்கும்போது, முருங்கைப் பூவின் மணந்தான் என்றால், அது மலரின் குற்றமா? அது மூக்கின் குற்றந்தான். ஆகவே, எதிர்க் கட்சித் துணைத் தலைவர், அந்த நிலையில் எங்கள் தலைவருக்குத் தங்கக் கிரீடம் கொடுத்ததைப் பற்றி மிகச் சுறுசுறுப்பாகச் சொன்னார்கள். அடுத்த வீட்டுக்காரி அழகான பிள்ளை பெற்றாள் என்பதற்காக எதிர் வீட்டுக்காரி குழவியை எடுத்து வயிற்றில் இடித்துக் கொண்டாளாம் என்பது போல, இப்படிச் சொல்வது அவர்களுக்கு நியாயந்தானா என்று கேட்க விரும்புகிறேன். ஆம் எங்கள் தலைவருக்கு நாங்கள் தங்கக் கிரீடம் கொடுத்தோம். நீங்களும் உங்கள் பெருந்தலைவர் காமராஜருக்கு 100 பவுனில் வைரத்தை வைத்து, தங்கக் கிரீடத்தைக் கொடுங்களேன். இல்லை கிரீடம் தேவையில்லை என்றால், தங்கத்தில் குல்லாய் தைத்துக் கொடுங்களேன். அதற்காக எங்களுக்கு எந்தவிதமான வேறுபாடோ மாறுபாடோ கிடையாது. தமிழகத்திலே எங்கள் தலைவருக்கு நாங்கள் கிரீடம் வைக்கிறோம். இந்த அரசு மாசற்ற அரசு, தூய்மையான இதயம் கொண்ட அரசு, இதன் உள்ளம் தங்கம் போன்றது. தங்கக் கிரீடம் வைத்தோம்.

சட்டம், ஒழுங்கு இல்லை என்று காங்கிரஸ் நண்பர்கள் சொன்னார்கள். காங்கிரஸ்காரர்களுக்குச் சொல்வேன், மேலூர் வட்டத்தில் பொங்கல் அன்று நடந்த சம்பவம் பற்றி. திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் கீழையூர் என்ற இடத்தில், சேரியில் சென்று கொடியேற்றிவிட்டு வீட்டுக்கு வருவதற்குள், கொடி

மரத்தை வேரோடு பிடுங்கி நடுத் தெருவில் கொண்டு வந்து போட்டார்கள். அதைப் பார்த்து திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் கலகம் விளையாதவாறு காவல் துறையினருக்குச் சொன்னார்கள். அந்த அலுவலகத்தில் விளைவைப் பாம் கொடுத்தார்கள். காவல்துறை அதிகாரிகள் மிறையூருக்கு வந்து, சம்பந்தப் பட்டவர்களைக் கூப்பிட்டு வரச்சொல்லி, விசாரணை செய்து கொண்டிருந்தபோது, கலவரம் நடந்தது. அங்கேயிருக்கும் தமிழக புதிய காங்கிரஸ் தலைவருக்கு உறவினர்கள் அத்தனை பேரும் தலைமை போலீஸ் அதிகாரியை அடித்து, அவருடைய சட்டையைக் கிழித்து, வீதியில் விழுகின்ற அளவிற்கு நிலைமை போயிற்று. தலைமை போலீஸ் அதிகாரியைத் தாக்கினார்கள். யார் தெரியுமா? வேடிக்கை. சமூகநல ஊழியர்கள் என்று சொல்லப்படுபவர்கள். இவர்கள் காங்கிரஸ்காரர்களாக இருப்பதால், காங்கிரசுக்கு ஆதரவு தேட விரும்பியதால் இப்படிச் செய்திருக்கிறார்கள். அரசியல் நாகரிகத்திற்கு உகந்ததா இது என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். கதர் சட்டையை அணிந்து கொண்டு, அரசாங்கப் பணத்தில் வாழ்க்கை நடத்திக் கொண்டு இருக்கிற காங்கிரஸ்காரர்கள், காவல் துறை அதிகாரியைத் தாக்கியிருக் கிறார்கள். அங்கே இதன் பேரில் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றால், முன்னாள் உள் துறை அமைச்சராக இருந்த வரும், இன்றைய காங்கிரசிற்குப் புதிய தலைவராக இருப்பவரும். மதுரை காங்கிரஸ் தலைவரும் பழைய நினைவில், தொலைபேசி மூலம், வழக்கு பதிவு செய்யாதே என்று மிரட்டுகிறார்கள். இவர்கள் சட்டம் இல்லை, ஒழுங்கு இல்லை என்கிறார்கள். ஒரு அமைச்சராக இருந்தவர், சட்டம் ஒழுங்கைப் புறக்கணித்து, அரசியல் நாகரிகம் இல்லாமல் இந்த அளவிற்கு போய்க் கொண்டிருக்கிறார் என்றால். இதைச் சிந்திக்க வேண்டும். நான் இந்த அமைச்சரவைக்கு வேண்டுவது, பழைய காங்கிரஸ்காரர்களுக்கு ஊதியம் கொடுக்க வேண்டும் என்றால், அவர்களுடைய வீட்டுக்கே அனுப்பிவிடுங்கள். வெளியே அவர்கள் சமூகத்தில் சேவை செய்வதாகக் காட்டி, சமுதாயத்தில் துரோக நிகழ்ச்சிகளை செய்து கொண்டு இருப்பதைத் தடுக்க வேண்டும்.

உணவுத் துறையில், கண்ட்ரோல் எடுக்கப்பட்டு விட்டதால், அதிகாரிகளை வெளியேற்றக் கூடிய நிலை இருக்கிறது என்று ஒரு அச்சம் இருக்கிறது. தமிழகத்தில் மனு நீதி முறையைக் கையாண்டு வருகிறோம். ஒவ்வொரு சிற்றூருக்கும் அதை அமலுக்கு கொண்டு வந்து, இந்த அதிகாரிகளை மனு நீதி முறையை அமல் நடத்த நியமித்து, அவர்களைப் பயன்படுத்தினால், அது இந்த அரசுக்கு நலமாக இருக்கும்.

நிலச் சீர்திருத்தத்தைப் பற்றிப் பேசினார்கள். இதைப் பற்றி அதிகம் பேசத் தேவையில்லை. நிலச் சீர்திருத்தம் எப்படி எந்த வகையில் வேண்டும் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். தமிழகத்தைப் பொறுத்த வரையில், 100, 200, 1,000 ஏக்கர் என்று





வைத்திருப்பவர்கள் மிக மிகக் குறைவு. அநேக விவசாயிகள் அரை ஏக்கர், ஒரு ஏக்கர் வைத்திருப்பவர்கள்தான். ஆகவே, தமிழகத்தைப் பொறுத்த வரையில், கூட்டுறவுப் பண்ணைகளை உருவாக்கி, 100, 50 ஏக்கர் என்று வைத்து, விவசாயிகளை வேளாண்மையில் ஊக்குவித்தால், உற்பத்தி பெருக நல்ல வாய்ப்பு ஏற்படும். (மணியடிக்கப்பட்டது)

**திரு. வி. கே. கோதண்டராமன்:** ஐயா, நமக்கு முன்னால் இருக்கும் ஆளுநர் உரையிலே சாதாரண ஏழை, எளியவர்களை வாழவைக்கக் கூடிய அம்சங்கள் எதுவும் இல்லை என்பதுதான் என்னுடைய கருத்து. உணவுக் கட்டுப்பாட்டை அமைச்சரவை நீக்கியிருப்பதன் விளைவாக, ஏழை மக்களும் பாதிக்கப் படக்கூடிய அளவிற்குத் தான் சூழ்நிலைகள் உண்டாகும். ஏற்கனவே இரண்டு முறை கட்டுப்பாடு எடுக்கப்பட்டு, விலை உயர்ந்ததன் மேல், அதனால் மக்கள் பாதிக்கப்பட்ட பிறகு, கட்டுப்பாட்டை நீடிக்கும் நிலைமைகள் ஏற்பட்டன. பத்திரிகையில் விலைவாசிகள் இறங்கி இருப்பதைப் படித்தீர்களா என்று நேற்றைய தினம் கூடச் சொன்னார்கள். ஆனால் இப்பொழுது வேலூரில் மூட்டைக்கு ரூ. 10, 15 விலை உயர்ந்திருக்கிறது என்பதைப் பார்த்தார்களா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** நேற்றைய முன் தினம், 'இந்தியன் எக்ஸ்பிரஸ்', 'தின மணி' பத்திரிகைகளில் செய்தி வந்தது. உடனே நான் வட ஆர்க்காடு ஆட்சி மன்றத் தலைவரை விசாரித்துத் தகவல் கொடுக்கும்படி கேட்டேன். அவர்கள் மண்டிகளில் விசாரித்து, 10 ரூபாய் இல்லை, 2 ரூபாய்தான் ஏறியிருக்கிறது என்று அதிகார பூர்வமான செய்தியை அளித்திருக் கிறார்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** ஆகவே, அறுவடைக் காலத்தில் விலைகள் ஏறுவது, இறங்குவது சகஜம். இந்த நிலைமை ஒரு மாதம் அல்லது இரண்டு மாதம் நீடித்து இருக்கும். கட்டுப் பாடுகளை எடுத்துவிட்டதாலேயே விலைகள் குறைந்துவிட்டது என்று கூறுவது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றையதினம் மாத வருமானம் 200 ரூபாய்க்கு உட்பட்டவர் களுக்கு மட்டும்தான் சென்னையிலும், கோயம்புத்தூரிலும் அரிசி கொடுக்கப்படும் என்று இருப்பது நியாயமில்லை. இந்த ரேஷன் மற்ற இடங்களிலும் இருக்க வேண்டும். நியாயவிலைக் கடைகளை இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்தால், அது பதுக்கல்காரர்களுக்கு, கள்ளமார்க்கெட்டில் கொள்ளை லாபம் சம்பாதிக்கக்கூடியவர் களுக்குத்தான் உதவியாக இருக்கும் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். கட்டுப்பாட்டை எடுத்தது சரியல்ல, கட்டுப்பாடு இருக்க வேண்டுமென்பதைத் திட்டவட்டமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, கட்டுப்பாடு இருக்கும். அது யாருக்கு என்றால், கள்ளமார்க்கெட்காரர்களுக்கு, கொள்ளை லாபம் அடிக்கக்கூடிய பதுக்கல்காரர்களுக்கு—கட்டுப்பாடு இருக்கத்தான் செய்யும். அவர்கள் ஓரளவுக்குத்தான் உணவுப் பொருள்களை வைத்திருக்கலாம். அதற்குமேல் இருந்தால் அதை அரசு எடுத்துக் கொள்ளும். ஆகவே, கள்ளச்சந்தைக்காரர்கள் கொள்ளை லாபம் அடிப்பார்கள் என்ற அச்சம் கனம் அங்கத்தினருக்கு இருக்கத் தேவையில்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** தலைவர் அவர்களே, அடுத்தபடியாக, இந்த அரசு தொழிலாளர்களுக்காகச் சாதகமாக இருக்கக் கூடிய அரசு என்று சொல்லப்படுகிறது. போலீஸ் தலையீடு எந்த அளவிற்கு இருக்கிறது என்பது நமக்குத் தெரியும். தொழிலாளர்களுக்குத் தக்க பாதுகாப்பு இல்லை. முதலாளிகளுக்குத்தான் போலீஸ் பாதுகாப்பு இருக்கிறது. அதற்காக வேண்டித்தான் ஒரு கமிஷனை ஏற்படுத்தியுள்ளோம் என்று சொல்லலாம். ஆனால் அந்தக் கமிஷன் யாரிடத்தில், எந்த முறையில், என்ன விசாரணை செய்யப் போகிறது என்பதைப் பார்க்க வேண்டும். தொழிலாளர்களிடத்திலே, விவசாயிகளிடத்திலே, சாதாரண மக்களிடத்திலே விசாரணை செய்வதன் மூலமாகத்தான் இந்தக் கமிஷன் எப்படி நடக்கிறது, எப்படி பிரச்சினையை அணுகுகிறது, உண்மையான நிலவரம் என்ன என்பதைப்பற்றி யெல்லாம் சரியான ரிப்போர்டைக் கொடுக்க முடியும்.

இன்றைக்குத் தொழிலாளர்களைப் பல வழிகளில் கஷ்டப்படுத்துகிறார்கள். இரண்டொரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். விருதுநகர் ஐயனார் மில்லில் பல கருத்துக்களையுடைய தொழிலாளர்கள் சேர்ந்து ஒரு சங்கத்தை அமைத்திருக்கிறார்கள். அதற்குப் போட்டியாக ஒரு சங்கத்தை முதலாளி உருவாக்கி, அங்குள்ள தொழிலாளர்களின் மத்தியில் ஒரு குழப்பத்தை உண்டாக்குகிறார்கள். அந்த இடத்திலே தொழிலாளர்களைப் போலீஸ்காரர்களை விட்டு அடக்கக்கூடிய அளவிற்கு நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. போலீஸ் முதலாளிகளுக்குத்தான் பக்கபலமாக இருக்கிறது. இது சம்பந்தமாக அமைச்சர் அவர்களிடத்திலே எங்களுடைய தலைவர்கள் நேரிலும் மனுக்கள் மூலமாகவும் எடுத்துக் கூறி, அந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். மேலும், தாரங்கதாரா தொழிற்சாலையிலும் தொடர்ந்து பல பிரச்சினைகள் இருக்கின்றன. அங்குள்ள இரு சங்கங்களும் கோரிக்கைகளை அனுப்பி வைத்தும், இந்த அரசும், முதலாளிகளுக்குத்தான் பாதுகாப்பு அளிக்கிறது. இதையெல்லாம் எதற்காகச் சொல்லுகிறேன் என்று சொன்னால், தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பாக இருக்கும் என்று சொல்லக்கூடிய சர்க்கார் அந்தத் தன்மையிலே இருக்க வேண்டும். கோர்ட் தீர்ப்பு வந்தாலும் முதலாளிகள் மதிப்பதே கிடையாது. லேபர் டிபார்ட்மெண்டிலிருந்து எந்த அதிகாரிகள் சொன்னாலும் அதை





முதலாளிகள் மதிப்பது கிடையாது. அப்படி மதிக்காதவர்களுக்கு எல்லாம் போலீஸ் பாதுகாப்பு கொடுப்பது என்பது என்ன முறை என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதுமட்டுமல்ல. தொழிலாளர்களுக்கு சேமநிதி செய்யக்கூடிய பிராவிடெண்ட் பண்ட் போன்றவற்றை எத்தனையோ முதலாளிகள் ஊதாரித்தனமாக வீண் செலவு செய்து கொண்டு, வீண் விரயம் செய்திருக்கிறார்கள் என்பதை ஏற்கெனவே கூறியிருந்தார். அப்பேர்பட்ட முதலாளிகள் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கண்டிப்பாக அப்பேர்ப்பட்ட முதலாளிகள்மீது நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

அடுத்தபடியாக, இந்த மாநிலத்தில் பீடித் தொழிலாளர்களுக்காக ஒரு சட்டம் வேண்டுமென்று சொல்லி வந்தோம். அந்தச் சட்டம் வந்திருக்கிறது. அது மத்திய சர்க்கார் வகுத்த சட்டம். அந்தச் சட்டத்தை அமல்படுத்தக் கூடிய நேரத்தில் ஹைகோர்ட்டில் முதலாளிகள் ரிட் போட்டிருக்கிறார்கள். தொழிலாளர்களுக்குச் சாதகமாக இருக்கக்கூடிய சர்க்கார் ஸ்டே ஆர்டரை ரத்து செய்து, விசாரணை செய்து அதை அமல்படுத்தக்கூடிய அளவிற்கு, அமைச்சர்களும், அதிகாரிகளும் செயலாற்ற வேண்டாமா? நாம் அதிகாரிகளையும் அமைச்சர்களையும் சந்தித்துச் சொன்னதெல்லாம் ஏதோ 'செவிடன் காதில் சங்கு ஊதியது' போல் கவலைதரும் நிலையில் இருக்கிறது. இது வேதனைப்படக்கூடிய விஷயம், வருத்தப்படக் கூடிய விஷயம்.

அடுத்தபடியாக, துயர்தணிப்புச் சட்டம் என்று ஒன்று வந்தது. இந்தச் சட்டம் வரக்கூடிய நேரத்தில் நாம் அதை பாராட்டினோம். ஏற்கெனவே பலர் உடைமைகளை இழந்தனர். வேலைப் பளுவை அதிகப்படுத்தி, பஞ்சப்படியைக் குறைத்து இருக்கிறது. 64-ஐ, 56 ஆகக் குறைத்தது, வேலை வாங்கக் கூடிய அளவில் இருக்கிறது. இது வேதனைப்படக் கூடிய விஷயம். சர்க்கார் இதில் உடனடியாக கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக டிரான்ஸ்போர்ட் ஒர்க்கர்ஸ் தங்களுடைய உரிமைகளுக்காக பல ஆண்டுக் காலமாக போராடி வருகிறார்கள். அதற்காக ஹைபவர் கமிட்டி ஏற்படுத்தப்பட்டது. ஒன்றரை ஆண்டுகாலமாக விசாரணை செய்தும், அதை அமல்படுத்தவில்லை. இப்போது அந்தத் தொழிலாளர்கள் கவர்ன்மெண்ட் எம்ப்ளாயீஸ் என்ற முறையில் செகண்ட் பே கமிஷனில் சேர்க்கப்பட்டிருப்பது மிகவும் வருத்தப்படக் கூடிய விஷயம். (மணியடிக்கப்பட்டது) தலைவர் அவர்கள் இன்னும் ஐந்து நிமிடங்களை ஒதுக்கித் தர வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்களே என்னுடைய நேரத்தில் மூன்று நிமிடங்கள் எடுத்துக் கொண்டார். அந்தத் தொழிலாளர்களுக்கு இடைக்கால நிவாரணம் கொடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக 107-வது செக்ஷன்கீழ் எடுக்கப்படும் நடவடிக்கை; வெள்ளைக்காரன் காலத்திலேயே இதை எதிர்த்தோம். எல்லோரும் அதை எதிர்த்தவர்கள்தான். இதை யாரும் மறுக்க

முடியாது. இன்றையதினம் இந்துப் பத்திரிகை இருக்கிறது. நம்முடைய முன்னாள் முதல்வர் அண்ணா அவர்கள் உயிரோடு இருந்த காலத்தில், அப்பத்திரிகையின் தொழிற்சங்கத்தினர் 75 நாட்கள்வரை போராட்டம் நடத்தினார்கள். அண்ணா அவர்கள் அப் பத்திரிகையின் நிர்வாகத்தைக் கூப்பிட்டும் மதிக்காத நிலை இருந்தது. அப்பேர்ப்பட்ட இடத்தில் தொழிற்சங்கத்திற்கு எங்கள் கட்சித் தலைவர்களில் ஒருவரான திரு. வி. பி. சிந்தன் என்பவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அவருக்கு எதிராக ஒரு போட்டிச் சங்கத்தை முதலாளி உருவாக்கியிருக்கிறார். தொழிலாளர்களின் உரிமைக்காகப் போராடுவதை வெள்ளையன் காலத்தில் தடுத்திருக்கிறார்கள். இப்போது அரசியல்வாதிகளை தொலைத்துக் கட்டுவதற்காக 107-வது செக்ஷன்கீழ் திரு. வி. பி. சிந்தன் அவர்கள்மீது நடவடிக்கை எடுத்திருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. இது கேவலமான போக்காகும், வருத்தப்படக் கூடிய போக்காகும். இது நீக்கப்பட வேண்டும்.

அடுத்தபடியாக அகில இந்திய ஊதியக் குழு தீர்மானத்தை உடனடியாக அமல்படுத்த வேண்டும். விவசாயத்தை பெருக்க வேண்டும் என்று பேசுகிறோம். தொழிற்சாலைகளுக்கு விற்பனைவரிச் சலுகை, மின்சாரக் கட்டணச் சலுகை போன்றவைகளை அளிக்கிறோம். ஆனால், விவசாயிகளுக்கு உண்டான மின்சாரக் கட்டணம் யூனிட் ஒன்றுக்கு 8¼ பைசாவிலிருந்து 10 பைசாவாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இது விவசாய அபிவிருத்தியை உண்டாக்குவதற்கான வழியா? சும்மா இருக்கிற விவசாயியை ஒரு குழப்பத்தில் கொண்டு வந்து பிறகு 'நீதான் விவசாயியை தூண்டிவிட்டாய், நீதான் அதற்குப் பொறுப்பு' என்று மற்றவர்கள் மீது வழக்குப்போடக் கூடிய அளவிற்குச் செல்ல வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க வேண்டும். மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க வேண்டும், குறைக்க வேண்டும் என்று சொல்லி வந்தோம். குறைக்க வேண்டியதற்குப் பதிலாக, இருக்கும் கட்டணத்தை இன்னும், பத்து பைசா அளவிற்கு உயர்த்த வேண்டாமென்று வேண்டிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விசைத்தறியைப்பற்றி ஆளுநர் அவர்களின் ரிப்போர்ட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. "இதை எல்லா மாநிலங்களிலும் கொண்டுவந்துவிட்டார்கள். நம் மாநிலத்தில் மட்டுமல்ல, அதை நம் மாநிலத்தில் கொண்டுவரவில்லையென்றால் தொழில் வளராது" என்றெல்லாம் சொல்கிறார்கள். நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். எல்லா மாநிலங்களிலும் மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டிருக்கிறதே, இங்கே மட்டும் ஏன் அதை வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? எல்லா மாநிலங்களையும் உதாரணம் காட்டுகிறீர்களே, இதற்கு மட்டும் விதிவிலக்கா?





**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** விசைத்தறியைப் பொறுத்த வரையில், தேங்கியிருக்கிற நூலைத் துணியாக நெய்ய ஆலைகள் நம் மாநிலத்தில் குறைவாக இருப்பதால் விசைத்தறியை உபயோகித்தால், பம்பாய், மகாராஷ்டிரம் போன்ற பகுதிகளோடு போட்டி போடுவதற்கு வசதியாக இருக்கும் என்ற எண்ணத்தில் தான் இந்த முடிவை அரசாங்கம் எடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** இப்படிப் போட்டி போடுவது என்ற அடிப்படையில் இன்றைக்கு ஒரு லட்சம் பேரை நடுத் தெருவில் நிறுத்தக்கூடிய நிலைமை வந்து விட்டது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தமிழ் நாடு கூட்டுறவு நெசவாளர் சங்கம் இசைவு தந்த பிறகுதான் இதைப் பற்றியே அரசாங்கம் பரிசீலித்து ஒரு முடிவுக்கு வந்ததே தவிர வேறு இல்லை. இந்த விசைத்தறிகளை கூட்டுறவு சங்கங்களுக்கே கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** யாருடைய இசைவின் மீது இந்த முடிவுக்கு வந்திருந்தாலும், இசைவு இல்லாமல் வந்தாலும் அது சரியல்ல. விசைத்தறிகள் கொண்டு வருவதைக் கைவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கைத்தறி நெசவாளர்களுடைய பிரச்சினைக்காக வேண்டி கைத்தறித் துணிகளை தலையில் எடுத்துச் சென்று விற்பனை செய்தோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய பிரச்சினை தீர்ந்துபோகவில்லை. ஆகவே விசைத்தறிகளைக் கொண்டு வரக் கூடாது என்று சொல்லிக் கொண்டு . . . . (மணியடிக்கப்பட்டது)

**திரு. பெ. சீனிவாசன்:** மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, உணவுக் கட்டுப்பாட்டை நீக்கிய உணவு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதலை முதலில் தெரிவித்து, கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து நான் என்னுடைய நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பேசிய அருமை காங்கிரஸ் நண்பர்கள் கவர்னர் உரையில் பேசுவதற்கு எதுவும் இல்லை, காகிதப் பூ, மணம் இல்லாமல் இருக்கிறது என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். காங்கிரஸ் நண்பர்களைப் பொறுத்தவரையில் கவர்னர் உரை மாத்திரம் அல்ல, நாட்டின் அரசியலிலும் பேசுகின்ற வேலை இல்லை. நாட்டு அரசியலில் காங்கிரஸ் ஆட்சிக்கு எதிர்காலத்தில் எந்தப் பங்கும் இல்லை என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த 3 ஆண்டு காலமாக நாட்டின் பொருளாதாரத்தை முறியடிக்கக் கூடிய வகையில் தமிழகத்தில் நிலவி இருந்த பஞ்சம் இன்று ஓரளவு நீங்கியிருக்கிறது. கடந்த இரண்டாண்டுகளாக நம்மை ஏமாற்றிய பருவ மழை இந்த ஆண்டு கார்காலத்தில் இராமநாதபுரம்

மாவட்டத்தைத் தவிர ஏனைய மாவட்டங்களில் மழை பெய்திருக்கிறது. வெம்மையின் கொடுமை நீங்க நல்ல மழை பெய்த நேரத்தில் அரசியல் நன்னடையைப புறக்கணித்து, கட்சி நலனையே கருத்தில் கொண்டு காங்கிரஸ் தலைவர்கள் அரசியலில் ஏராளமான குழப்பங்களை உண்டாக்கிக் கொண்டு வந்தார்கள். காங்கிரஸ் கட்சியில் பெரிய பிளவு நேர்ந்தது, இந்த நாட்டுக்கு ஏற்பட்ட பெரிய நல்ல காலம். காங்கிரஸ் நண்பாகள் ஆட்சியாளர் செய்கின்ற நல்ல காரியங்களுக்கு இடையூறு செய்வதும், ஒவ்வொரு நல்ல செயல்களுக்கும் முட்டுக்கட்டை போடுவதும், தொழிலாளர்களுக்கிடையே ஐ.என்.டி.யு.ஸி. என்று புகுந்து ஐந்தாம்படை வேலை செய்வதுமாக இருந்த தலைவர்களின் தராதரத்தை இன்றைக்கு ஒருவருக்கொருவர் விமரிசனம் செய்வதில் நன்றாகப் பொழுதைக் கழிக்கிறார்கள். அவர்களுக்குள் ஏற்பட்ட இந்தப் பிளவு வாழட்டும், இந்தப் பிளவு நீடிக்கட்டும், இந்தப் பிளவிலேயே காங்கிரஸ் கட்சியின் முடிவும் ஏற்படட்டும் என்று வாழ்த்துகிறேன்.

இன்றைக்கு பஞ்சநிவாரண வேலைகளைப் பற்றி காங்கிரஸ் நண்பர்கள் சொன்னார்கள். காங்கிரஸ் ஆட்சியில் பஞ்சம் ஏற்படவில்லையா, பஞ்ச நிவாரண வேலைகளைச் செய்யவில்லையா என்று கேட்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஏற்பட்டதுபோல இவ்வளவு பயங்கரமான பஞ்சம் முன்பு ஏற்படவில்லை. எப்போதுமே பார்த்தறியாத---வற்றி அறியாத மதுராந்தகம் ஏரி முதற்கொண்டு நீர்நிலைகள் எல்லாம் எங்கும் வற்றிக் கிடந்தன. இப்படிப்பட்ட பயங்கரமான பஞ்சம் வந்து விட்டதே என்கிற நிலையில் திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் மனம் சோர்ந்து விடாமல் இயற்கையை எதிர்த்து நின்று மக்களைத் துன்பத்தினின்று காக்க எவ்வளவுதூரம் சேவை செய்ய முடியுமோ அவ்வளவுதூரம் செய்தது.

முன்பெல்லாம் காங்கிரஸ் ஆட்சியில் பட்டினிச் சாவை எடுத்துச் சொன்னால் எதிர்க்கட்சிக்காரர்கள் பிரசாரத்திற்காகச் சொன்னார்கள் என்று குறைகாட்டினார்கள். அரிசி விலை உயர்ந்துவிட்டதே என்றால் அரிசி விலை உயர்வு நாட்டின் பொருளாதார உயர்வை, மக்களின் வாங்கும் சக்தி உயர்ந்திருப்பதைக் காட்டுகிறது என்றார்கள். உள்ளபடியே இந்தக் கடுமையான பஞ்சத்தில் நம் மக்கள் எப்படிக் கஷ்டப்படுவார்களோ என்று மனம் வருந்தி திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் தன் பொறுப்பைத் தட்டிக் கழிக்காமல் பஞ்ச நிவாரண வேலைகளை வேகமாக, பரவலாக நிறைவேற்றி மக்கள் உள்ளத்தில் இன்றைக்கு ஒரு புதுத் தெம்பையும், நம்பிக்கையையும் உருவாக்கியிருக்கிறது. இதைப்போல மக்கள் குறைகளை உணர்ந்து செயல்படக்கூடிய திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் இருந்தால் எந்தச் சோதனைகளையும் நம்மால் தாங்கிக் கொள்ள முடியும் என்பதை மக்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அந்த அளவுக்கு வெற்றிகரமாக பஞ்சத்தைச் சமாளித்த





அரசாங்கத்திற்கும், அரசாங்க ஆணைக்குட்பட்டு செயலாற்றிய மாவட்ட ஆட்சியாளர்களுக்கும், அதிகாரிகளுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமீபத்தில் பெய்த மழை கூட எங்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில் இல்லாத காரணத்தினால் பஞ்சத்தில் இருந்து அது முழுதும் விடுபடவில்லை. இப்பொழுதே குடிதண்ணீர் கஷ்டம் தொடங்க ஆரம்பித்துவிட்டது. ஓரளவுக்கு பஞ்ச நிவாரண வேலைகள் நடைபெற்றிருக்கின்றன என்றாலும் குடி தண்ணீர் பஞ்சத்தை நீக்கவும், நீர்ப்பாசனக் கிணறுகளை அதிகப்படுத்தவும் தொடர்ந்து பஞ்சநிவாரண வேலைகளாக அங்கே நடைபெற கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டம் பரம்பரை பரம்பரையாக ஒரு பஞ்சப் பிரதேசமாக இருந்து வருகிறது. இது அனைவருக்கும் தெரியும். ஆனால் அந்த மாவட்டத்தைப் பற்றி 47-ல் இருந்து 67 வரை யாரும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அந்த மாவட்டம் தான் உலகப புகழ் பெற்ற தலைவர்களைக் கொடுத்தது. அவர்கள் தங்கள் புகழை வளர்த்துக்கொண்டார்களே தவிர மாவட்டத்தின் நிலையைக் கவனிக்கவே இல்லை. ஒரே நேரத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இருந்தவரும், அகில இந்திய காங்கிரஸ் தலைவராக இருந்தவரும் எங்கள் மாவட்டத்தின் சொந்தக்காரர்களாக இருந்தார்கள். ஆனால் அவர்கள் தங்கள் பதவியைக் காப்பாற்றப் பார்த்தார்களே தவிர மாவட்ட மக்களுக்கு எந்த உதவியும் செய்யவில்லை. அந்த மாவட்டத்தை தனிக் கண்காணிப்பின் கீழ் கொண்டு வந்து மற்ற மாவட்டங்களைப் போல பொருளாதார வளர்ச்சி பெற நமது அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தொழிலாளர் பிரச்சினையை எடுத்துக்கொண்டால் எங்கள் பகுதியில் இருந்துவரும் ஐயனார் மில் தொழில் தகராறு பலகாலமாக இருந்து வந்தது இப்போதுதான் மறையத் தொடங்கியிருக்கிறது. அந்தத் தொழிற்சங்கத்தின் தலைவராக பொறுப்பேற்றுப் பணியாற்ற என்னைக் கேட்டிருக்கிறார்கள். நானும் சம்மதித்திருக்கிறேன். ஆகவே, ஒற்றுமை குறையாத வண்ணம் இந்தத் தொழிற்சங்கம் திறமையாகச் செயல்பட முயற்சிப்பேன் என்பதை தங்கள் மூலமாக நண்பர் கோதண்டராமனுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டு குறைகளை அரசாங்கம் நிவர்த்திக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தொழிற்சாலைகளுக்கு லேபர் ஆபீசர்களை நியமிக்கின்ற பொறுப்பு தொழில் அதிபர்களிடம் இருக்கிறது. ஆகவே லேபர் ஆபீசர்கள் எல்லா இடங்களிலும் முதலாளிகளுக்குச் சாதகமாகவே, யார் யாரை நீக்கினால் நல்லது என்று கண்டு பிடிக்கும் ஸி.ஐ.டி.-யாக முதலாளிகளுக்கு உதவி

[திரு. பெ. சீனிவாசன்] [1970 சனவரி 23

வருகிறார்கள். ஆகவே லேபர் ஆபீசர்கள் என்றால் அரசாங்கம் அவர்களது பொறுப்பை தானே ஏற்கவேண்டும். அவர்கள் தங்குகின்ற வீடு, அலுவல் இடம் எல்லாம் தொழிற்சாலையின் எல்லைக்கு அப்பால் இருக்கவேண்டும். அவர்களுடைய சம்பளத்தை அரசாங்கமே தரவேண்டும். பல காலமாக பல தொழிற்சங்கத் தலைவர்கள் இதைச் சொல்லி வந்திருக்கிறார்கள். காங்கிரஸ் ஆட்சி அதைச் செய்யவில்லை. அதற்குமாறாக ஐ.என்.டி.யு.ஸி.-யை ஏற்படுத்தி தொழிலாளர்களுக்கிடையே பிளவு உணர்ச்சியை, கசப்பு உணர்ச்சியை வளர்ப்பதற்கு எல்லா வகையிலும் உதவி செய்து வந்தது. இன்றைக்கு நமது அரசாங்கம் லேபர் ஆபீசர்களை அரசாங்க நேரிடை நிர்வாகத்தின் கீழ் கொண்டுவந்தாகவேண்டும்.

அடுத்ததொரு மிகப்பெரிய குறை தொழிலாளர்களுக்கும், முதலாளிகளுக்கும் இடையே வழக்கு ஏற்படுகிறபோது உள்ளது. எனது பகுதியில் உள்ள மிகப்பெரிய சிமின்ட் தொழிற்சாலையில் 2 பேர் வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள். இன்னமும் அந்த வழக்கு முடிவு பெறவில்லை. முதலாளிகள் டைம் கேட்டுக் கொண்டே இருக்கிறார்கள். இன்றைக்கு, நாளைக்கு என்று வழக்கு தள்ளிப்போடப்பட்டுக்கொண்டே வருகிறது. வழக்கை முடிவு செய்யவேண்டியது நீதி மன்றம் தான். என்றாலும் ஒரு தொழில் தகராறு நீதி மன்றத்திற்கு வந்தால் அதை இத்தனை நாளைக்குள் பைசல் செய்தாக வேண்டும் என்கிற கால வரையறையை ஏற்படுத்த வேண்டியது மிகவும் அவசியமானதாகும்.

இன்றைக்கு இருக்கிற தொழிற்சங்கச் சட்டம் முதலாளிகளுக்குத்தான் முட்டுக் கொடுக்கிறது. அது இந்திய சர்க்காரால் ஏற்படுத்தப்பட்ட சட்டம். அதை அமுல்படுத்துகின்ற முறைகளும் முழுக்க முழுக்க தொழிற்சங்க உரிமைகளைப் பாதிப்பதாக இருக்கிறது. அவற்றை நம்மால் ஒன்றும் செய்வதற்கில்லை என்றாலும் நீதிமன்றங்களில் வழக்கு வந்தால் இவ்வளவு காலத்திற்குள்ளாக முடித்தாக வேண்டும் என்கிற நியதியையாவது நாம் ஏற்படுத்தியாகவேண்டும். தொழில் வழக்குகளை விசாரிக்க உயர்நீதிமன்றத்தில் இருந்து—புல்பெஞ்சைத் தவிர—எல்லா இடங்களிலும் தொழில்கோர்ட்கள் ஏற்படுத்தப்பட்டாக வேண்டும். இன்றைக்கு தொழிற்சங்கத்தில் ஈடுபடுகிறவர்களுக்குத் தெரியும். ஏறத்தாழ ஒரு வழக்கில் எங்களுக்கு முதலாளிகளை எதிர்த்து நடத்துகிறபோது ஏழாயிரம் ரூபாய்க்கு மேல் செலவாகியிருக்கிறது. இந்த நிலை மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்று கூறி கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. நா. சௌந்தரபாண்டியன் : மதிப்பிற்குரிய சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய ஆளுநர் அவர்கள் இந்த மன்றத்திலே நிகழ்த்திய உரைமீது ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.



1970 சனவரி 23] [திரு. நா. சௌந்தரபாண்டியன்]

வறட்சி நிவாரண நிதியை மாவட்டத்திற்கு மாவட்டம் பகிர்ந்து கொடுப்பதில் இந்த அரசு பாரபட்சம் காட்டியிருக்கிறது என்பதை முதன்முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். சில மாவட்டங்களுக்கு மூன்று கோடி ரூபாய் என்றும், சில மாவட்டங்களுக்கு 3 கோடி, 2½ கோடி ரூபாய் என்றும் திருநல்வேலி மாவட்டத்திற்கு 78 லட்சம் ரூபாய் மட்டும் கொடுத்திருப்பது பாரபட்சம் என்று சொன்னால் மிகையாகாது. வறட்சி நிவாரண நிதியிலிருந்து என்ன என்ன வேலைகளைச் செய்யலாம் என்று வேலைகளை நிர்ணயம் செய்வதிலும் இடத்திற்கு இடம் பாரபட்சம் காட்டியிருக்கிறார்கள். வேலைகள் ஒழுங்காக நடைபெற்றிருக்கின்றனவா என்றால் இல்லை என்றுதான் சொல்லவேண்டி இருக்கிறது. ஒழுங்கீனங்கள் நடைபெற்றதற்குக் காரணம் பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர்கள்தான் என்று முதலமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது . . . .

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னது என்னவென்றால் பஞ்சாயத்துப் பெருந் தலைவர்களைக் கலந்துகொண்டுதான் வேலைகள் செய்யப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். ஊழல் ஏற்பட்டிருக்கிறது என்றால் பஞ்சாயத்து யூனியன் தலைவர்களால் ஏற்பட்டது என்று அவர்கள் சொல்லவில்லை. அவர்கள் மூலம்தானே செய்யப்பட்டிருக்கிறது, அப்பொழுது அவர்கள் ஊழல் செய்திருக்கிறார்களா என்றுதான் கேட்டார்கள்.

• திரு. நா. சௌந்தரபாண்டியன் : நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது என்னவென்றால் வறட்சி நிவாரண வேலைக்கும் ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. ஆணையர், கோட்டாட்சித் தலைவர், மாவட்ட ஆட்சித் தலைவர் இவர்கள் முடிவுசெய்தார்களே ஒழிய ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக முடிவு செய்யப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(திரு. அ. லெ. சுப்பிரமணியம் அவர்கள் எழுந்தார்கள்)

THIRU N. SOUNDARAPANDIAN : I am not yielding.

திரு. அ. லெ. சுப்பிரமணியம் : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், சார். இந்த வேலைகளை கலெக்டர் அவர்கள் சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்களையெல்லாம் கூட்டிவைத்து எப்படி எப்படிச் செய்யவேண்டும் என்று கேட்டு கலந்து பேசிச் செய்திருக்கிறார்கள். அதிலே திரு. சௌந்தரபாண்டியன் அவர்களும் கலந்து கொண்டிருக்கிறார்கள். அப்படி இருக்கும்பொழுது கலக்காமல் செய்தார்கள் என்று சொல்வது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆலடி அருணா:** அங்கே ஆர்.டி.ஓ. ஊராட்சி ஒன்றியத் தலைவர்களையும், சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களையும், எல்லா அதிகாரிகளையும் வைத்து எப்படிப் பங்கிடு செய்வது என்று நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கருத்தை இப்பொழுது இங்கே தவறான முறையிலே சொல்வது முறைதானா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**திரு. நா. சௌந்தரபாண்டியன்:** இந்த வறட்சி நிவாரண நிதிக்கும் ஊராட்சி ஒன்றியத்திற்கும் சம்பந்தமில்லை. ஆணையரும், கோட்டாட்சித் தலைவரும், மாவட்ட ஆட்சித் தலைவரும் சேர்ந்து முடிவுசெய்து வேலைகளுக்கு அங்கீகாரம் கொடுங்கள் என்று மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் கேட்டார்களேயொழிய ஊராட்சி ஒன்றியக் குழுவின் பரிசீலனைக்கும் ஒப்புதலுக்கும் அது வரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பல இடங்களிலே இன்னும் வறட்சி நீடித்துக்கொண்டிருக்கிறது என்பதை இந்த அமைச்சரவை உணரும் என்று நினைக்கிறேன். ராதாபுரம் உள்வட்டத்திலே பல குளங்களிலே தண்ணீர் இல்லை. குடிநீர்கூட சில கிராமங்களிலே இல்லை. இந்த அரசானது கூடுதலாக அங்கே வேலைகள் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்வசதித் திட்டத்தைப் பொறுத்தவரையிலே பேச்சிலும் அறிக்கைகளிலும்தான் வேகம் இருக்கிறதேதவிர மின்சார விஸ்தரிப்புத் திட்டத்திலே வேகத்தைக் காணவில்லை. இதைப்பற்றி அதிகாரிகளிடம் கேட்டால் சாமான் இல்லை என்றுதான் சொல்கிறார்களே தவிர விவசாயிகளுக்கு உடனடியாக மின்சார இணைப்பு கொடுக்க நடவடிக்கை எடுப்பதற்கு முன்வரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே அதையும் விரைவாகச் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஆளுநர் அவர்களுடைய உரையில் வேளாண்மை அபிவிருத்தி, விவசாயப் பெருமக்களுடைய வாழ்க்கை முன்னேற்றம் இவற்றிற்காக யாதொன்றும் சொல்லவில்லை என்பது வருந்தத் தக்கது. ஆளுநர் உரையிலே வேளாண்மைக்காக என்ன என்ன செய்யப் போகிறோம், என்ன என்ன செய்வோம் என்பதைப்பற்றி அழுத்தந்திருத்தமாகச் சொல்லியிருக்கவேண்டும்.

விவசாயிகளுக்கு மிகவும் முக்கியமான பயிர் பாதுகாப்புத் திட்டம்பற்றியும், கால்நடை பாதுகாப்புத் திட்டம்பற்றியும் அமுல் நடத்துவதற்கு இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? மூன்று ஆண்டுகள் ஆகின்றன. அவர்கள் எதிர்க் கட்சியிலே இருந்தபோது இந்தத் திட்டங்கள் பற்றி என்ன என்ன பேசினார்கள்? ஆனால் இப்பொழுது நடவடிக்கை ஏன் எடுக்கவில்லை





**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** கால்நடை பாதுகாப்புத் திட்டம்பற்றிச் சொன்னார்கள். புதிதாக இப்பொழுதுதான் அது சீரமைக்கப்பட்டிருக்கிறது. அதன்மூலம் கால்நடைகளுக்குப் பாதுகாப்பு ஏற்படும் என்று நம்புகிறோம். ஒரு ஆண்டு காலம் இந்தப் புதிய திட்டத்தைப் பரீட்சித்துப் பார்த்ததற்குப் பிறகு நல்ல பலன் ஏற்பட்டால் மேலும் விஸ்தரிக்க ஏற்பாடு செய்யலாம என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. நா. சௌந்தரபாண்டியன்:** இப்பொழுதே மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்னும் ஓர் ஆண்டுக் காலம் என்றால் அமுல் நடத்துவதற்குள் ஐந்தாண்டுகள் முடிந்துவிடும், அதற்குள் உங்களுடைய ஆட்சிக்காலம் போய்விடும் . . . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** எங்களுடைய ஆட்சிக் காலம் போய்விடும் என்று கவலைப்படத் தேவையில்லை. எங்களுடைய ஆட்சி நீடித்து இருக்கும்.

**திரு. நா. சௌந்தரபாண்டியன்:** காங்கிரஸ்காரர்கள் அப்படித் தான் நினைத்துக் கொண்டிருந்தார்கள். விவசாயிகளுடைய கோரிக்கைகளை உடனடியாகக் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நீங்கள் ஆட்சிக்கு வருகிறபோது வரிகளைக் குறைப்போம் வசதியைப் பெருக்குவோம் என்று சொன்னீர்கள். என்ன வரியைக் குறைத்திருக்கிறீர்கள்? புஞ்சைக்கு வரியைக் குறைத்ததைப் போன்று நஞ்சைக்கும் வரியை எடுத்திருந்தால் நல்லது. புஞ்சைக்குள்ள 25 பைசா தீர்வையை மட்டும் தான் எடுத்திருக் கிறீர்கள். எல்லா வரியையும் குறைக்கவேண்டும். முழுவதும் எடுத்து விடுவது நல்லது.

ராதாபுரம் பகுதியிலுள்ள ஆலத்துறையாறுத் திட்டம் மூன்று ஆண்டுக்காலமாக நிறைவேற்றப்படாமல் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. வள்ளியூர் பெரிய குளம், புலிமான் குளம் போன்ற திட்டங்களைப்பற்றியும் யாதொரு முடிவும் எடுக்கப்படவில்லை. இவற்றையெல்லாம் பற்றி பொதுப்பணித் துறையமைச்சர் அவர் கள் சீக்கிரத்திலே முடிவெடுப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். இன்னும் காலம் தாமதிக்காமல் விரைவிலேயே முடிக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சாரத்தைப் பொறுத்தவரையில் ஒரு யூனிட்டுக்கு 8.25 பைசாவாக இருந்ததை இப்பொழுது 10 பைசாவாக உயர்த்தி யிருக்கிறார்கள். விவசாயிகளுக்குப் பொங்கல் பரிசாக இதைச் செய்திருக்கிறார்கள். கேட்டால் மற்ற மாநிலங்களிலே கூட்டியிருக் கிறார்கள் என்று காரணம் சொல்கிறார்கள். மற்ற மாநிலங்களைப் பார்த்துக் கூட்டியிருப்பதற்கு இந்த அரசு வெட்கப்பட வேண்டாமா? மற்ற மாநிலங்களிலே எப்படியிருந்தால் என்ன? குறைத்து இருக்கவேண்டுமே தவிர கூட்டியிருப்பது வருந்தப்படத் தக்கது.

வேலையில்லாத் திண்டாட்டம் பரவிவருகிறது என்பதை அமைச்சர்கள் ஒப்புக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். இந்த அறிக்கையில் அதற்காக இந்த அரசு நடவடிக்கை எடுத்ததாக ஒரு வார்த்தைகூடச் சொல்லப்படவில்லை.

தூத்துக்குடியில் உரத் தொழிற்சாலை, பிளாஸ்டிக் பிசின், ரசாயனப் பொருள் இவை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் எப்பொழுது ஆரம்பிக்கப்படும், எப்பொழுது உற்பத்தி துவங்கும் என்பதைப்பற்றியும் குறிப்பிடவில்லை. இவையெல்லாம் காகிதத்தில் மட்டும் இருந்துவிடாமல் உடனடியாகச் செயல்படுத்தப்பட வேண்டும்.

வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டவுடன் விவசாயிகளுக்கு மிகவும் நன்மை கிடைக்கும் என்று சொன்னார்கள். ஆனால், இதனால் மாநில அரசுக்குக் கூட யாதொரு நன்மையும் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். விவசாயத்தில் ஈடுபட்டுள்ள பெருமக்களுக்கு யாதொரு நன்மையும் இதனால் இதுவரையில் ஏற்படவில்லை. இந்த அரசு மத்திய அரசிடம் சொல்லி நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கின்றவர்களுக்கு உதவி செய்யக்கூடிய முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விலைவாசிகள் விஷம் போல் ஏறிக் கொண்டிருக்கின்றன. இதைத் தடுக்க இந்த அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன? வற்றல் விலை என்ன, மஞ்சள் விலை என்ன, புளி விலை என்ன என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த விலைவாசி ஏற்றத்தை தடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கையை எடுத்திருக்கிறது, எடுத்துக் கொண்டிருக்கிறது? எங்கள் பகுதியில் அரிசி விலை இரண்டு ரூபாய், ரூ. 2.20, ரூ. 2.40 என்று விற்றுக் கொண்டிருக்கிறது. இதையெல்லாம் குறைக்க இந்த அமைச்சரவை யாதொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. (மணி அடிக்கப் பட்டது).

**திரு. எம். சி. பாலன்:** பெருமதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவித்து என்னுடைய கருத்துக்களை இந்த மன்றத்திலே தெரிவிப்பதற்குச் சந்தர்ப்பம் தந்தமைக்காக முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கு பேசிய அருமை காங்கிரஸ் நண்பர்கள் எல்லாம் கவர்னர் உரையிலே எதுவும் இல்லை-இல்லை-இல்லை என்றும், இது வெறும் காகிதப் பூ என்றும் சொன்னார்கள். வெளியில் இருக்கும் மக்கள் கவர்னர் பெருமான் உரையைப் படித்துப் பார்த்து விட்டு, காங்கிரஸ் கட்சியில் இருப்பவர்கள் இதில் எதுவும் இல்லை என்று சொல்கிறார்களே, அவர்கள் வர வர நல்லதை உணருகின்ற



தன்மையையே இழந்து விட்டார்களா என்று மக்கள் சங்கடப் படுகிறார்கள். உள்ளபடியே காங்கிரஸ் கட்சி நண்பர்கள் இதில் ஏதாவது இருக்கிறது என்று சொல்லி விட்டார்கள் என்றால் எதிர்க் கட்சிக்கே வேலை இல்லாது போய்விடுமோ என்ற காரணத்திற்காக இதிலே ஒன்றும் இல்லை என்று பேசியிருக்கலாம்.

கவர்னர் பெருமான் உரையிலே தமிழக அரசு ஆற்றியிருக்கிற திட்டங்கள், ஆற்ற இருக்கிற நல்ல பல திட்டங்கள் பற்றியெல்லாம் மிகச் சிறப்பாகவும் தெளிவாகவும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மற்ற ஆண்டுகளைவிட இந்த ஆண்டு கவர்னர்பெருமான் அவர் களுடைய உரை மக்களால் வரவேற்கக்கூடிய அளவுக்கு நல்ல பல திட்டங்களைக் கொண்டதாக சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த நாட்டில் உணவுக் கட்டுப்பாட்டை நீக்கியிருக்கின்ற இந்த நல்ல நேரத்தில் தமிழகமே இந்தச் சர்க்காரைப் பாராட்டிக் கொண்டிருக்கிறது. உணவுக் கட்டுப்பாடு எப்போது வருகிறது? உணவுக்குத் தட்டுப்பாடு ஏற்படுகிறபோது கட்டுப்பாடு வருகிறது. இந்த அரசு கடந்த மூன்று ஆண்டுக் காலமாக தட்டுப்பாடு இல்லாமல் இந்த நாட்டில் உணவு உற்பத்தியைப் பெருக்குகின்ற அளவுக்கு நல்ல பல திட்டங்களை உருவாக்கி விவசாயத்தில் மாபெரும் புரட்சியை ஏற்படுத்திய காரணத்தால்தான் ஓரளவு தட்டுப்பாடு நீங்கி அதிகமான விளைச்சல் ஏற்பட்ட காரணத்தால் இன்றைய தினம் தமிழக அரசு உணவுக் கட்டுப்பாட்டை நீக்கி யிருக்கிறது. நான் அதற்காக இந்த அரசைப் பொதுமக்கள் சார்பிலும் என்சார்பிலும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்களது மாவட்டத்தைச் சேர்ந்தவரும், நான் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும்போதே சட்ட மன்ற உறுப்பினராக இருந்தவரும், இப்போது இந்தச் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் துணைத் தலைவராக இருப்பவருமான திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் இரண்டு தினங்களுக்கு முன்பு பேசியபோது பல கருத்துக்களைத் தெரிவித்தார்கள். அந்தப் பேச்சுக்கு நான் பதில் சொல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்ட காரணத்தால், என்னையும் சுற்றி வளைத்துப் பேசிய காரணத்தால், தன்னிலை விளக்கம் என்ற அடிப்படையில் பதில் கூற விரும்புகிறேன்.

அவர் இங்கு பேசியபோது குமரி மாவட்டத்திற்கு தமிழக அரசு வறட்சி நிவாரணப் பணிகளுக்காக 26 லட்சம் தந்ததைப் பாராட்டிப் போற்றுவார்கள் என்று எண்ணினேன். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் ஏற்பட்ட வறட்சி நிலைமையில் வற்றாத ஏரிகள் எல்லாம் கூட வற்றி மனிதர்களும் மாடுகளும் குடிக்கக் கூடத் தண்ணீர் பெற முடியாத அளவுக்குப் பஞ்சம் இருந்தது. அந்த நேரத்தில் எங்கள் பகுதியில் உள்ள பேச்சிப்பாறை, பெருஞ்சாணி ஆகிய இரண்டு அணைகளிலும்—பேச்சிப்பாறையின் கொள்ளளவு 42 அடி தண்ணீர்—முறையே 32 அடி தண்ணீரும், 10 அடி தண்ணீரும் இருந்தது. எங்கு பார்த்தாலும் பச்சைப் பசேல் என்ற நிலைமை இருந்தது. மழை இல்லை, வறட்சி இருக்கிறது

என்று குமரி மாவட்ட ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் மத்திய சர்க்காருக்கு தந்தி தர மறுத்தார்கள். அரசியல் தலைவர்கள் இங்கே வறட்சியே இல்லையென்று பேசினார்கள். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள், கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் அங்கு வறட்சி நிலை இல்லையென்று சொன்னார்கள். அது மட்டுமல்லாமல் தமிழகத்திற்கு வறட்சிப் பணிகளுக்காக மத்திய சர்க்காரில் இருந்து கிடைக்கின்ற பணம், திராவிட முன்னேற்றக் கழகத்தை விலைக்கு வாங்குவதற்காகத் தரப்படுகின்ற பணம் என்று காங்கிரஸ்காரர்களால் பரிகசிக்கப்பட்ட நேரத்தில், பேச்சிப்பாறை. பெருஞ்சாணி அணைக்கட்டுகளில் தண்ணீர் நிறைந்திருந்த நேரத்தில், வறட்சி இல்லாத நேரத்தில், பச்சைப்பசேல் என்று இருந்த நேரத்தில் தமிழக முதல்வர் அவர்கள் 26 லட்சம் ரூபாயை கன்னியாகுமரி மாவட்டத்திற்காகத் தந்தார்கள். அதை அவர்கள் பாராட்டுவார்கள் என்று எதிர் பார்த்தேன். ஆனால் பொன்னப்ப நாடார் அவர்கள் அந்தப் பணம் எங்கே போயிற்று என்று தெரியவில்லை என்று சொல்லுகிறார். அது எங்கும் போகவில்லை உயர்நிலைத் தொட்டிகளாகவும், மாட்டுத் தொட்டிகளாகவும், கிணறுகளாகவும் உருவாகியிருக்கின்றன.

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. மகாதேவன் பிள்ளை அவர்கள் நாலைந்து திறப்பு விழாக்களுக்கு அழைக்கப் பட்டிருந்தார். உணவு அமைச்சர் அவர்கள் எட்டாமடைப் பகுதியில் குடிதண்ணீர்த் திட்டத்தை திறந்து வைத்த நேரத்தில் மகாதேவன் பிள்ளை அவர்கள் பேசிய பேச்சை இந்த மாமன்றத்தில் குறிப்பிட விரும்புகிறேன். 26 லட்சம் ரூபாயை குமரி மாவட்டத் திற்கா தமிழக முதல்வர் அவர்கள் கொடுத்ததை நான் மனமாரப் பாராட்டுகிறேன் என்று கூறினார். அவர்கள் சொன்ன இன்னொரு கருத்தையும் சொல்லுகிறேன். 'என்னுடைய தொகுதியில் ஐந்து லட்சம் ரூபாய்க்கு நல்ல வேலைகள் நடை பெற்றிருக்கின்றன. இந்தப் பணத்தைப் பிரித்துக் கொடுப்பதில் எந்தவிதமான பாரபட்சமும் இல்லாமல், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் பாலன், நான் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவன் என்ற முறையிலே பேதத்தை காட்டாது ஒரே விதமாகப் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது' என்று திரு. மகாதேவன் பிள்ளை அவர்கள் அந்தக் கூட்டத்திலே பாராட்டுத் தெரிவித்தார்கள். அவர்கள் ஏழெட்டுக் கூட்டங்களில் கலந்து கொண்டு தமிழக அரசையும், குறிப்பாக தமிழக முதல்வர் அவர்களையும், அந்த மாவட்டத்தில் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டு வருகின்ற மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களையும் பாராட்டிப் பேசியிருக்கிறார்கள்.

ஆனால் இங்கு பேசிய திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் பாராட்டாதது மாத்திரமல்லாமல் எல்லாப் பணமுமே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த பாலன் தொகுதியில் உள்ள வேலைகளுக்கு மட்டுந்தான் செலவழிக்கப்பட்டன என்ற ஆதார





மற்ற குற்றச்சாட்டைச் சுமத்தியிருக்கிறார்கள். அதைப் பார்க்கும் போது எனக்கு வேடிக்கையாக இருக்கிறது. ஒன்று, அவர் தொகுதியில் என்னென்ன வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக் கின்றன என்பதைக் கூட தெரிந்துகொள்ள இயலாத நிலைமையில் அவர் இருக்கிறார். இரண்டாவது, ஏதோ ஒரு குற்றச்சாட்டைச் சொல்லவேண்டுமே என்பதற்காகச் சொல்லியிருக்கிறார். என்னுடைய தொகுதியில் எவ்வளவு ரூபாய் செலவு செய்யப் பட்டிருக்கிறது? நண்பர் ஜார்ஜ் அவர்களுடைய தொகுதியில் எவ்வளவு ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது? மகாதேவன் பிள்ளை அவர்கள் தொகுதியில் எவ்வளவு செலவிடப்பட்டிருக்கிறது என்ற புள்ளி விவரத்தைப் பார்க்க வேண்டும்.

சென்ற ஆண்டு 13—9—1969-ல் இந்தச் சட்ட மன்றம் கலைகின்ற கடைசி நாளன்று ஒரு ஏடு வைக்கப்பட்டது. சபாநாயகர் அனுமதி யோடு அதிலுள்ள விவரங்களை நான் இங்கே படிக்க விரும்புகிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர் குமரி மாவட்டத்தில் வறட்சிப் பணியாக என்னென்ன வேலைகள் நடைபெற்றிருக்கின்றன என்பதைப் பற்றிச் சிறப்பு மலராகக் கூட வெளியிட்டிருக்கிறார்கள். நன்றாகப் பார்த்துக் கொண்டே கண் தெரியாதவர்கள் போல் நடிக்கிறார்கள்; நன்றாகக் கேட்டுக் கொண்டே காது கேட்காதவர்கள் போல் நடிக்கிறார்கள். அந்த மலரிலே சொல்லப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதி நாகர்கோயில் பட்டினம். அந்த நகரத்திற்கு வறட்சி நிவாரணத்திற்காக ஒரு பைசா கூடச் செலவு செய்யப்பட வில்லை. ராஜாக்கமங்கலம் ஊராட்சி மன்றத்தில் பகுதி பாகம் என்னுடையது; இன்னொரு பகுதி சிதம்பரநாத நாடார் தொகுதியைச் சேர்ந்தது. அதற்கு ரூ. 3,06,930 செலவு செய்யப் பி.ப. 12-30 பட்டிருக்கிறது. ரூ. 40,000 குளச்சலுக்கு செலவு செய்யப் பட்டிருக்கிறது. என் தொகுதியில் 2½ லட்சம் ரூபாய்க்கு வேலை நடைபெற்றிருக்கிறது. ஆனால் பார்ப்பவர்களுக்கு பத்து லட்சம் ரூபாய் அளவிற்கு வேலைகள் நடைபெற்றிருப்பதாகத் தோன்றும். வறட்சி நிவாரண வேலைகள் வருவதற்கு முன்னாலேயே பலமுறை அங்குள்ள குடிதண்ணீர் பிரச்னைபற்றி சொல்லியிருக்கிறேன். அங்குள்ள மீனவ மக்கள் உப்புத் தண்ணீர் அருந்திக்கொண்டிருக் கிறார்கள் என்பதற்காக அப்பிரச்னையைத் தீர்ப்பதற்காக பெல்ஜியத்தில் உள்ள ஒரு கத்தோலிக்க மிஷனரியோடு சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் நான் தொடர்பு கொண்டு, எங்கள் பகுதியில் உள்ள மீனவர்கள் குடிநீருக்காக உப்புத் தண்ணீரை அருந்திக் கொண்டிருக்கிறார்கள், அப்பிரச்னையைத் தீர்க்க வேண்டும், அதற்காக நீங்கள் சிறிது உதவி செய்ய வேண்டுமென்று கோரி அவர்களிடமிருந்து சில லட்சக்கணக்கான ரூபாய்களைப் பெற்று அது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பெயரில் அனுப்பப்பட்டு அந்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக் கின்றன. அந்தப் பணம் தமிழ்நாடு சர்க்காரோ அல்லது டெல்லி சர்க்காரோ தந்த பணம் அல்ல. பெல்ஜியம் மிஷனரி ஒருவரிட மிருந்து வாங்கி அந்த வேலைகள் நடைபெற்று வருகின்றன

என்பதை நான் அருமை நண்பர் பொன்னப்ப நாடார் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ராஜாக்கமங்கலம்—ரூ. 3,96,929, அகஸ்தீஸ்வரம்—ரூ. 2,39,000, தோவாளை—ரூ. 2,96,8000; குழித்துறை—ரூ. 2,46,290, தக்கலை—ரூ. 2,35,380; திருவட்டாறு—ரூ. 2,55,550, கள்ளியூர் (திரு. ஜேம்ஸ், திரு. ஜார்ஜ், திரு. பொன்னப்பநாடார் இவர்கள் பகுதிகள்)—ரூ. 3,24,700, மேல்புறம்—ரூ. 2,20,700, முஞ்சிறை—ரூ. 2,87,900, பத்மனுபபுரம்—ரூ. 26,000. நான் கேட்கிறேன். இந்த மன்றத்தில் என்மீது பகிரங்கமாக, பாலன் தொகுதிக்குத்தான் அதிகமாக செலவு செய்யப்பட்டிருக்கிறது என்று, தமிழக சர்க்கார் ஓரவஞ்சனையோடு காரியங்கள் செய்கிற சர்க்கார் என்று மாசுபடுகிற வகையில் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். நான் அதற்காகத்தான் இந்த ஆதாரங்களைக் காட்டியிருக்கிறேன். துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் ஒரு நீதி விசாரணை நடத்துங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். இதுபற்றி தாங்கள் என்ன தீர்ப்பு கூறப்போகிறீர்களோ?

திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் போகக்கூடாத ஒரு விஷயத்தில் போயிருக்கிறார்கள். ஒருவன் தன் மனைவிக்கு அல்லது குழந்தைக்கு நகைகள் செய்துபோட்டு அழகு பார்ப்பான். ஆனால் அடுத்த வீட்டில் இருக்கிறவன் இந்த நகையை இவன் எப்படிச் செய்தான், ஏன் மனைவிக்கு இவ்வளவு நகை செய்து போட்டிருக்கிறான் என்று பேசுகிறவர்களை சாதாரணமாக நாம் மூட்டாள்கள் என்றுதான் சொல்வோம். எங்கள் கட்சித் தலைவர் அண்ணா அவர்களுக்குப் பிறகு புதிதாக தலைமைப் பொறுப் பேற்றிருக்கும் எங்கள் ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்கள் எங்கள் மாவட்டத்திற்கு, தலைமை அமைச்சர் பொறுப்பேற்ற பிறகு, முதன் முறையாக வந்தார்கள். நாங்கள் அந்தக் கூட்டத்தைக் கூட, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்களுக்கு வரவேற்பும், பாராட்டும் என்றுதான் சுவரொட்டிகள் அடித்து அவர்களை எந்தெந்த அளவில் வைத்து நாங்கள் பார்த்து மகிழவேண்டும் என்று நாங்கள் எண்ணினேமோ அந்த அடிப்படையில் எங்கள் மாவட்டத்தில் உள்ள பத்தாயிரம் தோழர்கள், வறுமையில் வாடுகிறவர்கள், அவர்களால் இயன்ற அளவிற்கு கை காசு போட்டு எங்கள் தலைவர் அவர்களுக்கு ஒரு கிரீடத்தை வைத்து நாங்கள் அழகு பார்க்க எண்ணினேம். அதை வைத்து நாங்கள் பார்த்தோம். எங்கள் தலைவர், இந்தக் கிரீடத்தை நாங்கள் வைக்கக் கூடாது என்று பலமுறை எங்களிடம் சொன்னார்கள். கடைசியாக அதைக் கழக நிதியில் சேர்க்க இருக்கிறார்கள் என்ற காரணத்திற்காக அதை ஒத்துக்கொண்டார்கள். திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் பேசியபோது அந்த நிதி பொதுமக்களின் நிதி என்றும், அது முதல் அமைச்சர் அவர்களுக்குத் தரப்பட்டது என்றும் தவருகப் பேசியிருக்கிறார்கள். அது முதல் அமைச்சர் அவர்களுக்குத் தந்ததல்ல. அது திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்களுக்கு எங்களால் தரப்பட்டது. அவர்களிடம் நான் ஒன்று





கேட்கிறேன். ஸி. பி. குப்தாவிற்கு, சிண்டிகேட் குப்தாவிற்கு 65 லட்சம் ரூபாய் கொடுத்து முக்கால் கோடீஸ்வரனாக்கினீர்களே—அவர்கள் இன்கம் டாக்ஸ் தரவில்லை என்று சொல்கிறார்கள்—அதை அவர்கள் எந்த நிதியில் சேர்த்தார்கள்? அதுமட்டுமல்ல,

* * * *

*மாவட்ட நலக் கமிட்டி என்று ஒன்று ஆரம்பித்து அதற்காக பத்து லட்சம் ரூபாய் பிரித்ததுபற்றிச் சொன்னார்கள். திரு. மகாதேவன் பிள்ளை அவர்களும் அதில் ஒரு உறுப்பினர். நானும் அதில் ஒரு உறுப்பினர். நானும் 1½ லட்சம் ரூபாய் பிரித்திருக்கிறேன், அவர்களும் 1½ லட்சம் ரூபாய் பிரித்திருக்கிறார்கள். அதிகாரிகளை வைத்துக் கொண்டு பணம் பிரித்ததாகச் சொன்னார்கள். மகாதேவன் பிள்ளை அவர்கள் அதிகாரிகளை வைத்துக் கொண்டு பிரித்தாரோ என்னவோ தெரியாது, நான் பிரித்த 1½ லட்சம் ரூபாய் நான் நேரிடையாகப் பிரித்ததுதான். நல்ல காரியத்திற்காக அது பிரிக்கப்பட்டிருக்கிறது. அண்ணா அவர்களின் பெயரால் ஒரு விளையாட்டு அரங்கமும், கலைஞர் அவர்களின் பெயரால் ஒரு கலை அரங்கமும் நிறுவப்பட இருக்கிறது. அத்தொகையை வைத்துக்கொண்டு, நல்ல காரியங்கள் நடைபெற்று வருவதைக் கண்டு வயிற்றெரிச்சல் கொண்ட நண்பர்கள் எதையெல்லாமோ பேசிவருகிறார்களென்று கூறிக்கொண்டு கவர்னர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. எம். ராமசாமி கவுண்டர்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதத்தில் நானும் சில கருத்துக்களை கூற விரும்புகிறேன். பேசிய உறுப்பினர்கள் பலர் உணவுக் கட்டுப்பாடு பெரும் அளவிற்கு நீக்கப்பட்டிருப்பது குறித்து பாராட்டினார்கள். ஒரு சிலர் கட்டுப்பாட்டை எடுத்திருக்கவே கூடாது, அது ஏழை மக்களையும் தொழிலாளர் மக்களையும் பெரிதும் பாதிக்கும் என்ற முறையில் கருத்து தெரிவித்தார்கள். இதிலும்கூட கட்சிக் கண்ணேட்டமே அதிகமாக இருப்பதாகத் தோன்றுகிறது. குதிரைக்கு முகமூடி போட்டது போல் நகர்புறங்களில் உள்ள தொழிலாளர்களுக்கு இந்தக் கட்டுப்பாடு நீக்கம் பாதகத்தை விளைவிக்கும் என்ற கற்பனை இருந்தாலும் கூட, பெருவாரியான ஏழை மக்கள், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், நடுத்தர மக்கள் இவர்களுக்கெல்லாம் இந்தக் கட்டுப்பாடு நீக்கம் ஒரு பெரிய வரப்பிரசாதமாக அமைந்திருப்பதை கூர்ந்து கவனிக்கவேண்டும். கட்டுப்பாடு இருந்த காலத்தில், இந்தக் கட்டுப்பாட்டை நீக்கவேண்டும், முற்றிலும் அதை நீக்கவேண்டும், அதனுல் ஏற்படுகிற தொல்லைகள், ஒழுங்கீனங்கள் இவற்றை போக்கவேண்டும் என்று சுதந்திராக் கட்சி கூறி வந்திருக்கிறது. அப்படிக் கூறி வந்த காலத்தில் கூட ஏழை விவசாயிகள், சிறிய நிலச்சுவான்தார்கள் இவர்கள்தான்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

அவதிப்பட்டுக்கொண்டிருந்தார்கள். பெரிய நிலச்சுவான்தார்களை அதிகாரிகள் அணுகுவதில்லை. மதுவிலக்குச் சட்டத்தை அமுல் நடத்துவதில் காவல் துறையினரின் ஒழுங்கீனங்கள் அதிகமாகி வருவதால் மதுவிலக்கை ரத்து செய்யவேண்டுமென்று சிலர் சொல்கிறார்கள். அதேபோல் ஒரு ஏக்கர் நிலம் உள்ளவர்களிடமிருந்து தானியம் வசூலிக்கக்கூடாது என்று சொன்னாலும் மகசூல் காலத்தில் அவர்களிடமிருந்தும் ஒரு மூட்டை இரண்டு மூட்டை என்று வசூலித்து வந்தார்கள், அரை ஏக்கர் உள்ளவர்களிடமிருந்தும் ஒரு மூட்டை கொடு என்று செக்போஸ்ட்களில் அதிகாரிகள் வற்புறுத்தி வாங்கி வந்திருக்கிறார்கள். தன் வீட்டிற்கு தன் உபயோகத்திற்காக நெல் கொண்டு சென்றாலும் அவர்களை வழியில் தடுத்து வழி மறித்து பறிமுதல் செய்திருக்கிறார்கள். இப்படியெல்லாம் ஒழுங்கீனங்கள் நடந்திருக்கின்றன. உழவுத் தொழில் செய்வோர், ஏர் முனையில் பாடுபட்டு உற்பத்தி செய்கிறவர்கள் பாதிக்கப்படாமல் இருக்கவேண்டும். உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் என்று சொல்வதுபோல் நாம் அவர்களை கண்ணியமாக நடத்தவேண்டும். விவசாயிகளுக்கு யதொரு தங்குதடையும் இல்லாமல் விவசாயம் செய்ய ஆவன செய்யவேண்டும். கட்டுப்பாட்டை முற்றிலும் நீக்கவேண்டும் என்று நாங்கள் கோரி வந்திருக்கிறோம். விவசாயிகளுக்கு பெருமதிப்பு கொடுத்து வந்த ஒரு காலம் இருந்தது. 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது அந்த விவசாய மக்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குள்ள வரிச்சுமை, உரம் கிடைப்பதில் உள்ள சங்கடங்கள் இவற்றைப் பற்றியெல்லாம் விரிவாகச் சொல்லிவிட்டார்கள். அந்த அளவிலே கட்டுப்பாட்டை, பெருமளவுக்குத் திட்சித்தத்தோடு, மிகத் தைரியத்தோடு, நீக்க மிகவும் உறுதுணையாயிருந்த, சிறப்பாக உணவு அமைச்சரவர்களுக்கும் இந்த அமைச்சரவைக்கும் நான் பாராட்டைத் தெரிவித்துக் கொள்ளக்கடமைப்பட்டிருக்கிறேன். இனிமேல் கட்டுப்பாடு வருவதானாலும், அவர்கள் சொன்னது போல் பதுக்கலை எதிர்க்கக் கடுமையான சட்டத்தை ஆக்க வேண்டும். முன்னாள் இந்நாட்டுப் பிரதம மந்திரி அவர்கள் கறுப்பு மார்க்கெட் செய்பவர்களாகயிருந்தால் அவர்களைத் தூக்கு மேடைக்கு அனுப்ப வேண்டும் என்று சொன்னார்கள். விவசாயிகளுக்குக் கட்டுப்பாடு, விளைச்சல் செய்யும் நெல்லுக்குக் கட்டுப்பாடு என்பதோ உணவு தானியத்திற்குக் கட்டுப்பாடு என்பதோ, நிலத்திலிருந்து சாகுபடி செய்து கொண்டு போகின்ற நெல்லுக்குக் கட்டுப்பாடு என்பதோ போன்ற இந்தச் சிக்கல்கள் எல்லாம் இல்லாமல் இருந்து இதை நடத்த வேண்டும். வியாபாரிகளிடத்திலோ, அரிசி மில் முதலாளிகளிடத்திலோ இதை வாங்குகிற அளவுக்கு அதிகப்படுத்திக் கொண்டு வரலாம். அரசாங்க கிடங்குகளுக்கு, பஃபர் ஸ்டாக் கிடங்குகளுக்கு அதிக நெல் வேண்டியிருந்தாலும் வியாபாரிகளிடத்திலோ, அரிசி ஆலை அதிபர்களிடத்திலோ வாங்கிக் கொள்ள வேண்டுமேயொழிய விவசாயிகளிடத்தில் நெல்லைக் கொள்முதல்





செய்வதோ, லெவி செய்வதோ போன்ற நிலைமைகள் இம்மாநிலத்திற்கு வராமல் பார்த்துக் கொள்ளும் என்று நான் எதிர்பார்க்கிறேன். சற்றுமுன் பின் விலைவாசி ஏற்றமிருந்தாலும் Water funds level என்றமாதிரி இந்த விலைவாசிகள் சராசரி நிலைமைக்கு வந்துவிடும் என்று கருதுகிறேன்.

அடுத்தபடியாக, வறட்சி நிவாரணத்தைப்பற்றி பல பேர்கள் பல கருத்துக்களைத் தெரிவித்தார்கள். வறட்சி நிவாரண வேலையிலேயுள்ள பெரும்பகுதி ஊராட்சி ஒன்றியங்கள் நடத்தின, அந்தப் பணம் எப்படிப் பயன்பட்டன என்று நேற்று பேசிய சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. பாலகிருஷ்ணன் அவர்களே வருத்தத்தோடு தெரிவித்துக்கொண்டார்கள். உண்மையிலேயே கோடிக்கணக்கான ரூபாய் அளவில், 11 கோடி மத்திய அரசு கடனாகவும், மானியமாகவும் கொடுத்திருக்கிறது, பிறகு நமது கஜானாவிலிருந்து மாநில அரசு 4, 5 கோடி செலவு செய்திருக்கிறது. இப்பொழுது கன்னியாகுமரி போன்ற மாவட்டத்திலே உள்ளதைப் பற்றி திரு. பாலன் அவர்கள் காட்டியதுபோல் இந்த லிஸ்டுகள் வந்துகொண்டிருந்தாலும், நிரந்தரமாக இவைகளெல்லாம் மக்களுக்குப் பயன் அளிக்கும் வகையில் இருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும்.

கோவை மாவட்டத்தில், கிணற்றுக்கு அடி வெட்டு வெட்டுவதற்கு என்று நிறையப் பணம் செலவு செய்தார்கள். ஆனால் கிணற்றிலே குடிதண்ணீர் வரவில்லை. பிறகு அது பயனில்லாமல் போய்விட்டது. ஆனால், கடைசியாக என்ன நிலைமை ஏற்பட்டது என்றால், ஏதோ கணக்குகள், புள்ளி விவரங்களில் செலவு அதிகமாகிக்கொண்டே போய்விட்டது. அதைவிட்டு, எத்தனையோ பேசுகின்ற நாம், குடிதண்ணீர் பிரச்னையைக் கவனிக்க வேண்டியது மிக முக்கியம். சென்னை மாநகருக்குக் குடிதண்ணீர் வர, வீராணம் ஏரியிலிருந்து வரும்பொழுது, வருகின்ற வழியிலேயுள்ள கிராமங்கள் தோறும் இந்தப் பாதுகாப்புக் குடிநீர் கிடைக்க வேண்டுமென்று நாம் எப்படி ஒரு திட்டம் போட்டு இருக்கிறோமோ அப்படிப்பட்ட ஒரு திட்டத்தை 30 ஆண்டுகளுக்கு முன்னால் நமது மாநிலத்தில் ஒரு தனிப் பெரும் தலைவர் திரு. இராஜாஜி அவர்கள் கொண்டு வந்தார்கள். ஆனால் இப்பொழுது சரியாக அமல் செய்யப்படுவது இல்லை. அது சிகப்பு நாடாவோ என்னவோ, அது என்ன நிறமாக இருந்தாலும் சரி, பச்சை நிறமாக வேண்டுமானாலும் மாற்றிக் கொள்ளலாம், ஆனால் சரியாக அமல் செய்யப்படுவதில்லை. நடைமுறைக் கொள்கைகள் நடைப்பட்டு வருகின்றன. குடிதண்ணீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்க வேண்டுமென்றால் அதற்கு பாதுகாப்பு குடிநீர் திட்டங்களை, பல பஞ்சாயத்துக்களை ஒன்றாகச் சேர்ப்பது, பெரும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு, நகராட்சிகளுக்குக் கொண்டு வரும் வழியிலே உள்ள ஊர்கள், கிராமங்களுக்கு, பாதுகாப்பு குடிநீரை, ஆற்று நீரைக் கொடுத்து அதைத் தீர்க்கலாம். கிணற்றை ஆழப்படுத்திக்

கொண்டு போவதால் மட்டும் அந்தப் பிரச்னை தீர்ந்து விடாது என்பதைக் கண்கூடாகக் கண்டு கொண்டிருக்கிறோம். உதாரணத்திற்கு, சென்ற ஆண்டு வறட்சி நிவாரண வேலை எப்படி நடந்தது என்பதற்கு இரண்டு உதாரணங்களைச் சொல்ல ஆசைப் படுகிறேன். என்னுடைய தொகுதியிலே செட்டிச்சியர் பஞ்சாயத்து எல்லையிலே இரண்டு ஃபாண்ட் ஸ்கீம் பி.டபிள்யூடி அதிகாரிகள் கட்ட ஆரம்பித்தார்கள். அவர்களுக்குப் பல முறை சொல்லியும், 120-ஆம் காலிலிருந்து ஒரு கால் தள்ளி 121-ஆம் காலில் போடுங்கள் என்று சொன்னாலும் அவர்கள் போகத் தயாராக இல்லை. ஊர்மக்களெல்லாம் ஒன்றாகக் கூடி சர்க்காருக்கு என்ன சொல்லியும் கேட்கவில்லை. அதிகாரிகளுக்கு. ஜில்லா கலெக் டருக்கு, எக்ஸிகியூட்டிவ் என்ஜினியருக்கு வக்கீல் நோட்டீஸ் கொடுத்த பிறகு 4,000, 5,000 ரூபாய் செலவு செய்த பிறகு, குட்டை கட்டாமல் விடப்பட்டது.

இன்னொரு இடத்தில், அதே பஞ்சாயத்தில் சிறு குட்டை போடு வதற்கு 30,000 ரூபாய் செலவு செய்ய வேண்டியிருக்கிறது, மேலும் செலவு செய்ய வறட்சி நிவாரண நிதியிலிருந்து கொடுக்க வேண்டு மென்று சீஃப் எஞ்சினியர், சென்னைக்கு அனுப்பியும், பாண்ட்ஸ்கீம் எடுத்துக்கொள்ளலாம் என்று கூறியும், வறட்சி நிவாரண நிதி யிலிருந்து கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள். இப்படி இன்னும் தங்கு தடங்கல்கள் நிறைய இருக்கின்றன. இவை களை நாம் எப்படி ஓரளவுக்காவது குறைக்க முடியும், நம்முடைய பொன்னான காலத்தை, வெறும் கடிதப்போக்குவரத்தில் செலவிடா மல் எப்படிப் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று உன்னிப்பாகக் கவனிக்கவேண்டும். இந்த அளவிலே நாம் செய்தால் பசுமைப் புரட்சியைக் காண முடியும், உணவுப் பொருள்களுக்குக் கட்டுப் பாடு என்பது கனவாகப் போய்விடும். உணவுக் கட்டுப்பாடு நம் மாநிலத்திலே இருக்காது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படு கிறேன்.

அடுத்தபடியாக, தமிழக அரசு பரிசுச் சீட்டு மிக நல்ல முறையில் விற்பனையாகிறது. இது தாராளமாக விற்றுக் கொண்டிருக்கிறது. இதற்காக அதிகத் தொகை கொடுத்து வாங்குகிறார்கள் என்று பெருமையோடு எனக்கு முன்னால் பேசிய சட்டமன்ற உறுப்பினர் திரு. எம். எஸ். மணி அவர்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அது எவ்வளவு விற்றாலும் கூட, உழைத்துத் தான் ஒருவன் உயர்வு பெற வேண்டும், உழைப்பே உயர்வு தரும் என்ற கொள்கைக்கு, சமதர்மக் கொள்கைக்கு, பொதுவுடைமைக் கொள்கைக்கு முற்றிலும் மாறுபட்டது. இப்படிப்பட்ட சீட்டு விற்பனை முறையிலே பணம் சம்பாதிக்க வேண்டுமா என்று வருத் தத்தோடு எங்கள் தலைவர்களும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால், இதை நாம் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும்.



எல்லோரும் சொன்னதைப்போல், காந்தி நூற்றாண்டு விழா, அண்ணா மணிவிழா நடக்கும் இந்த ஆண்டிலே நாம் முக்கியமாக இந்த உணவுப் பிரச்சினைக்கு ஒரு நல்ல தீர்வு காண்பதற்கு, நல்ல முறையிலே செயல் படுத்துவதற்கு பெருமுயற்சி கண்டு வந்திருக் கிறோம்,

வேலையில்லாத் திண்டாட்டம் நம் மத்தியிலே பரவலாக இருக் கிறது. மாணவர்கள் கிளர்ச்சி பற்றி சொல்லவே வேண்டாம். மாணவர்கள் படிக்கும்பொழுது எக்காரணத்தினாலும் பெரும் கிளர்ச்சிகளிலே ஈடுபட்டு, படிப்பைக் கெடுத்துக் கொண்டிருக்கக் கூடாது. இது மாணவர்கள் சர்க்கார், ஆகவே அதிக சலுகை கொடுக்கும் என்ற எண்ணத்திலே இன்னும் தங்கள் கல்வியிலே, முன்னேற்றத்திலே கண்ணும் கருத்துமாக இருப்பதாகத் தெரிய வில்லை. இதையெல்லாம் போக்குவதற்கு, உண்மையிலேயே எப்படி ஆலைகளில் தொழிலாளர்களையும் பங்கு கொண்டு நடத்து கிறோமோ அதைப்போல், பள்ளிக் கூடங்களிலும் மாணவர்களையும் பங்கு கொண்டு நடத்த வேண்டும். அவர்களை நிர்வாகத்திலே சேர்த்து நடத்த அதற்கான நல்ல முறைகளைக் கண்டு ஆவன செய்து விரைவிலே இந்த மாதிரி கிளர்ச்சிகள் ஒன்றுமே இல்லாது, நாட்டிலே அமைதியும், முன்னேற்றமும் இருந்து வர நாம் முனைந்து பாடுபடவேண்டும். அதற்கு வேண்டிய நல்ல திட்டங்களை யெல்லாம் வகுத்து இந்த அரசு ஆவன செய்யும் என்று நம்பி கவர்னர் உரைக்கு நான் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. ஆ. துரையரசன்:** சட்டமன்றத் துணைத் தலைவர் அவர் களே, ஆளுநர் அவர்கள் உரைமீது பேச வாய்ப்பு அளித்தமைக்கு என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக நன்றி செலுத்த கடமைப் பட்டிருக்கிறேன். கடந்த ஒரு ஆண்டு காலமாக தமிழகத்திலே எத்துணை கடுமையான வறட்சி தாண்டவமாடிற்று என்பதை நாடு நன்கு அறியும். என்னுடைய தலைவர் பேரறிஞர் அண்ணா அவர் களுடைய மறைவுக்குப் பிறகு முதல் அமைச்சர் பொறுப் பேற்றிருக்கிற என்னுடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலே இந்த அரசு கடந்த ஓர் ஆண்டு காலமாக மத்திய சர்க்காரோடு போராடி, வாதாடி பல கோடிக்கணக்கான ரூபாயை தமிழகத்திற்குப் பெற்று எத்தனையோ பல நூற்றாண்டு காலமாக வெட்டப்படாத செங்கற்பட்டு, மதுராந்தகம் போன்ற ஏரிகளையும் வெட்டி, எத்தனையோ கால்வாய்களை வெட்டியும் புதுப்பித்தும் எத்தனையோ புதிய சமுதாயக் கிணறுகளைத் தோண்டியும், நூற்றுக்கணக்கான சாலைகளைப் போட்டும் வந்திருக்கிறது, கடந்த சில மாதங்களாக இப்படிப்பட்ட அபிவிருத்தி வேலைகளை நம் முடைய அரசு செய்து முடித்திருக்கிறது என்பதை நாடு அறியும், நாட்டிலுள்ள நல்லவர்கள் பாராட்டுகிறார்கள். ஆனால், எதிர் தரப்பிலே இருக்கிற நம்முடைய அருமை நண்பர்கள் கவர்னர் அவர்களுடைய உரை காகிதப் பூ போன்றது என்றும், வறட்சி

நிவாரண வேலைகளில் ஊழல்கள் ஏராளமாக நடைபெற்றன என்றும் ஆதாரம் இல்லாத பல குற்றச்சாட்டுகளை இந்த மன்றத்திலே எடுத்து வைத்திருக்கிறார்கள். சற்று முன்னாலே பேசிய திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் தொடர்ந்து இந்த மன்றத்திலே இருந்துகொண்டிருக்கிறார், சட்ட மன்ற உறுப்பினர் மட்டுமல்ல, கூட்டுமன்ற தலைவராகவும் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒருவர் ஆதாரமில்லாத குற்றச்சாட்டுகளை எடுத்துக் கூறக் கூடாது. வறட்சி நிவாரண நிதிக்காக மாவட்டவாரியாக ஒதுக்கப்பட்ட தொகையை வைத்துக் கொண்டு அந்தந்த மாவட்ட ஆட்சி தலைவர்கள், கோட்டாட்சித் தலைவர்கள், மாவட்ட வளர்ச்சி அதிகாரிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கூட்டுமன்றத் தலைவர்கள் ஆகியோரை அழைத்து வைத்து எந்தெந்தப் பணியை எங்கே எடுத்துக்கொள்ளவேண்டும், எவை எவைக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்ற பிரச்னைகளெல்லாம் விவாதிக்கப்பட்டு, அதற்குப் பிறகு கூட்டு மன்றத் தலைவர்கள் அந்தந்தப் பகுதி கிராமப்புற பஞ்சாயத்து தலைவர்களை கலந்துகொண்டுதான் நாடு பூராவும் இந்த நல்ல வேலைகள் ஓராண்டு காலத்தில் செய்து முடிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு இயற்கைவசமாக நல்ல மழைபெய்திருக்கிறது. இந்திய துணைக் கண்டமே பாராட்டுகின்ற அளவுக்கு நம்முடைய முதல் அமைச்சர் அவர்களும், உணவு அமைச்சர் அவர்களும், தமிழகத்தில் உணவுப் பொருள் கட்டுப்பாட்டை ரத்து செய்திருக்கிறார்கள். பொங்கல் திருநாளுக்கு முன்னதாக, 8-ம் நாள் கூடிய நம்முடைய அமைச்சரவை உணவுப் பொருள் கட்டுப்பாட்டை ரத்து செய்வது என்று முடிவெடுத்தது. இந்த முடிவை வரவேற்று, தமிழகத்திலுள்ள 100-க்கு 80 சதவீதம் விவசாயிகள் வாழ்கின்ற நம்முடைய மாநிலத்திலுள்ள மக்கள் எந்த அளவுக்கு நம்முடைய கழக அரசை பாராட்டுகிறார்கள் என்பதை ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று நான் இந்த சந்தர்ப்பத்தில் எதிர்க்கட்சி நண்பர்களைக் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, நேற்றையதினம் இந்த மன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருக்கும் நண்பர் திரு. ராமச்சந்திர துரை அவர்கள் பேசுகிற பொழுது தஞ்சை மாவட்டத்தில் ஏதோ அவர்களுடைய தொகுதியிலே பட்டாக்கள் வழங்கப்பட்டன, கழகத்தின் சார்பாக துண்டுப் பிரசுரங்கள் போடப்பட்டு, அதற்கு அதிகாரிகள் தலைமை தாங்கி, அதிகாரிகள் பட்டா வழங்கினார்கள். அதிலே கழகத்தைச் சேர்ந்தவர்கள் கலந்துகொண்டார்கள் என்ற ஆதாரமில்லாத குற்றச்சாட்டை சாட்டினார்கள். எனக்கு அதனுடைய முழு விவரமும் தெரியும் என்ற காரணத்தினால் இந்த மன்றத்தில் அது சம்பந்தப்பட்ட விவரங்களை எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். உண்மையில் நடைபெற்றது என்னவென்றால், தொடர்புடைய அதிகாரிகள் இந்த நாளன்று இந்த இடத்தில் ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர் அவர்கள் தலைமையிலே மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி அவர்கள் ஏழை மக்களுக்கு இலவச





பட்டா வழங்குவார்கள் என்று அதிகாரபூர்வமாக அச்சிடப்பட்ட அழைப்புகள் எல்லா அரசியல் கட்சிகளுக்கும் தரப்பட்டிருக்கிறது. அந்த கிராமங்களில் வசிக்கின்ற ஆளும் கட்சியை—தி.மு.க.-வைச சார்ந்தவர்கள் தங்களுடைய விருப்பத்துக்கு துண்டு பிரசுரத்தைப் போட்டார்கள். ஆளுகின்ற நம்முடைய கட்சியின் ஆட்சி காலத்தில் தான் இந்த நாட்டிலே உள்ள இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள், தரிசாகக் கிடந்த நிலங்கள், ஏழை மக்களுக்கு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது, இத்தனை ஆண்டு காலமாக இம்மாதிரி செய்ய வக்கற்ற நிலைமையிலே ஆட்சி செய்துகொண்டிருந்தார்கள் காங்கிரஸ்காரர்கள், அதற்கு மாறாக இன்றைக்கு ஏழைகளுக்கு கழகத்தின் அரசு சார்பாக நிலம் தரப்படுகிறது, இந்த அதிகாரி தலைமை தாங்குகிறார், இந்த அதிகாரி பட்டா வழங்குகிறார் என்று எப்படி தங்களுடைய கட்சி பொது மக்களின் நன்மைக்காக தங்களுடைய லட்சியத்தை நிறைவேற்றிக்கொண்டு வருகிறது என்று அறிவிக்க துண்டு பிரசுரங்களைப் போட்டிருந்தார்கள். அரசாங்க அதிகாரிகளினால் அத்தகைய துண்டு பிரசுரங்கள் வெளியிடப்படவில்லை.

மேலும், கழகத்தின் வளர்ச்சிக்காகவும், கழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு நிதி வசூலிப்பதில் அரசாங்க சாதனங்களை பயன்படுத்திக் கொள்கிறார்கள், அரசாங்க அதிகாரிகளிடம் டிக்கெட்டுகள் கொடுக்கப்பட்டு விற்கப்படுகின்றன என்ற குற்றச்சாட்டையும் அதே உறுப்பினர் மாண்புமிகு திரு. ராமச்சந்திர துரை அவர்கள் சட்ட மன்றத்தில் எடுத்துக் கூறினார்கள். பொறுப்புள்ள அங்கத்தினர், பொறுப்புள்ள எதிர்க்கட்சியில் இருப்பவர் ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டுகளை இந்த மன்றத்தில் எடுத்து வைக்கக்கூடாது என்பதை இந்த நேரத்தில் நான் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தஞ்சை மாவட்டம் தமிழகத்திற்கே நெற்களஞ்சியம். தஞ்சை மாவட்டத்தில் வாழும் விவசாயிகளுக்கு அத்தனை நல்ல பல சிறப்பான உதவிகளை நம்முடைய முதல் அமைச்சர் அவர்களும், உணவு அமைச்சர் அவர்களும், மற்ற அமைச்சர்களும் செய்திருக்கிறார்கள் என்பதை நாடு நன்கு அறியும். கடந்த மூன்று ஆண்டு காலத்தில் எத்தனை முறை விவசாயக் கருத்தரங்குகளை நடத்தி, பொதுப் பணி இலாகாவினரைக் கூட்டி, கட்சி பாகுபாடு இல்லாமல் நாடு பூராவிலும் உள்ள அரசியல் கட்சித் தலைவர்களைக் கூட்டிவைத்து, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களை அழைத்து, விவாதித்து, விவசாயத் துறையில் பல நன்மைகளைச் செய்திருக்கிறோம் என்பதை ஒரு கணம் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

தஞ்சை மாவட்டம் விவசாய முக்கியத்துவம் வாய்ந்த மாவட்டம் மட்டும் அல்ல. தமிழகத்திற்கே உணவு அளிக்கின்ற நெற்களஞ்சியமாக இருக்கிற காரணத்தினாலே, அந்த மாவட்டத்திலுள்ள

மக்கள் நீண்ட காலமாக கோரியிருக்கிற ஒரு திட்டமாகிய விவசாயக் கல்லூரியை தஞ்சையிலே நிறுவவேண்டும் என்று சொல்லி நம்முடைய முதல் அமைச்சர் அவர்களையும், தொடர்புடைய அமைச்சர் அவர்களையும் நான் இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், என்னுடைய வட்டாரத்தில், என்னுடைய தொகுதியில் இருக்கிற சில வேலைகளை துரிதப்படுத்தவேண்டும் என்று நான் இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அறந்தாங்கி-புதுக்கோட்டை சாலைக்கு அருகாமையில் சுமார் 400 ஏக்கர் புஞ்சை அரசாங்கத்திற்குச் சொந்தமாக இருக்கிறது. மறைந்த முன்னாள் விவசாய அமைச்சர் திரு. கோவிந்தசாமி அவர்கள் அந்த இடத்தை தொடர்புடைய அதிகாரிகளோடு பார்வையிட்டு, அங்கே ஒரு கால்நடைப்பண்ணை துவக்குவதற்கான ஒரு திட்டத்தை தயாரித்து அரசுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். எனவே, நம்முடைய உணவு அமைச்சர் அவர்கள் அதிலே கவ்னம் செலுத்தி, அந்த 400 ஏக்கரா நிலப் பரப்பில் ஒரு கால்நடைப் பண்ணையை துவக்க வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

வருகின்ற கல்வி ஆண்டில் துவக்கப்பட இருக்கிற கலைக் கல்லூரிகளில் ஒன்று அறந்தாங்கியில் துவங்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காலஞ்சென்ற அண்ணா அவர்கள் பொறுப் பேற்றுக்கொண்ட பிறகு என்தொகுதியில் பொன்பேத்திக் கால்வாய் வெட்டுவதற்கு உத்தரவிட்டார்கள். இந்த அரசு அதைப் பரிசீலனைசெய்து கால்வாயை வெட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தக் கால்வாயில் 60-65-க்கு மேற்பட்ட கிராமங்கள் சேர்க்கப்படவில்லை என்று தொகுதி மக்களில் ஒரு சாரார் குறைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதை மறுபரிசீலனை செய்து விடப்பட்ட கிராமங்களையும் அதில் சேர்த்து, அந்தக் கால்வாயை வெட்டி, புதிய கால்வாய்களையும் வெட்டி, பாசன வசதிக்கு ஏற்பாடு செய்துகொடுக்கவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மணி அடிக்கப்பட்டது).

**திரு. ஆ. கு. சுப்பையா :** மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் ஆளுநர் அவர்கள் சபையில் ஆற்றிய உரையின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு விரும்புகிறேன். ஆளுநர் அவர்கள் அரசாங்கத்தினுடைய கொள்கை அறிக்கையை மன்றத்தில் வைத்திருக்கிறார்கள். நம்முடைய தமிழக அரசு மூன்று ஆண்டுகள் முடிந்து, நான்காவது ஆண்டை அடி எடுத்துவைக்கிற இந்த சந்தர்ப்பத்தில் ஆளுநர் அவர்கள் எதிர் காலத்தில் செய்யவேண்டிய காரியங்களைப் பற்றியும் சிலவற்றைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்றைய தினம், நாட்டில் ஒரு [illegible] வருவாயில்கொண்டிருக்கிறது. மத்திய அரசின்





கொள்கை போராட்டத்தின் மூலமாக இன்றையதினம் சில நல்ல காரியங்களைச் செய்யவேண்டும் என்ற நோக்கத்தில் பாங்குகளை தேசியமயமாக்கியிருக்கிறார்கள். இதன் மூலம் நல்ல பல பி.ப.
காரியங்களைச் செய்யவேண்டும் என்று சோதனைகளைச் செய்து 1-00
கொண்டு வருகிறார்கள். இன்றையதினம், நம்முடைய அரசு, நம்முடைய நாட்டில் என்னென்ன வேலைகளைத் தீவிரமாகச் செய்கிறார்கள் என்று பார்த்தால், ஆளுநர் அறிக்கையில் அதுபற்றி ஒன்றும் குறிப்பிடப்படவில்லை என்பதை நாம் நன்றாகப் பார்க்கிறோம். அதே சமயத்தில், உணவுக் கட்டுப்பாட்டைப் பற்றி பல விதமாகப் பேசப்படுகிறது. உணவுக் கட்டுப்பாட்டை நீக்கியதன் விளைவாக இரண்டு பாலரும் பாதிக்கப்படுவார்கள் என்பதுதான் என்னுடைய கருத்து. காரணம் என்னவென்றால். நம்முடைய மாநிலம் பற்றாக்குறை மாநிலம். எவ்வளவு உற்பத்தி பெருகினாலும், தேவைக்குத் தக்க அளவில் உற்பத்தி ஆகவில்லை என்பதைத் தான் காண்கிறோம்.

(திரு. ந. தருமலிங்கம் தலைமை)

ஆகவே, கொள்முதல் செய்யவேண்டிய அவசியம் இருக்கிறது என்பதை இந்த சந்தர்ப்பத்தில் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். கொள்முதல் செய்வதை தனியாரிடம் மில் முதலாளிகளிடம் விட்டிருப்பதன் காரணமாக, 20 ஆண்டுகளாக அந்த வழியில் பழக்கப்பட்டுப் போனவர்களுக்கு மறுபடியும் ஒரு சந்தர்ப்பத்தை தான் கொடுத்திருக்கிறோம். அவர்கள் கொள்ளை லாபம் அடித்தவர்கள், கோடிக்கணக்கில் வருவாய் திரட்டியவர்கள். ஆய்வு செய்து பார்த்தால், வியாபாரியாக இருந்தவர்கள் பெரும் பணக்காரர்களாக இருப்பதைப் பார்க்கலாம். நெல், அரிசி வியாபாரத்தில் பணக்காரர்களாகியிருக்கிறார்கள். ஏழை மக்களிடமிருந்து, விவசாயிகளிடமிருந்து கொள்ளை லாபம் அடித்து அந்த வகையில் தான் பெரும் பணக்காரர்களாகி இருக்கிறார்கள். ஆகவே, விவசாயிகள் உற்பத்தி செய்யும் தானியம் கொள்முதல் செய்வது அரசாங்கத்திடம்தான் இருக்கவேண்டும். விநியோகம் செய்வதும் அரசாங்கத்திடம்தான் இருக்க வேண்டும். இன்றைக்கு தஞ்சாவூரில் சர்க்காருக்கு ஐந்து லட்சம் டன் கொள்முதல் செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது. வியாபாரிகள் 2.5 லட்சம் டன் தான் நியாய விலையில் கொடுக்கிறார்கள். பாக்கி 2.5 லட்சம் டன் தானியத்தை தங்கள் இஷ்டத்திற்கு வெளியே கொள்ளை லாபத்திற்கு விற்கலாம் என்று அனுமதி கொடுக்கப் பட்டிருக்கிறது. இது விவசாயிகளைப் பாதிக்கும். விவசாயிகள் தாங்கள் வாங்கியிருக்கும் கடன்களுக்கும், வரி வாய்தாவிற்கும் கொடுக்கும் சந்தர்ப்பம் இப்பொழுதுதான். இந்த சமயத்தில் வியாபாரிகள் கட்டுப்பாடாக இருந்தால், நெல் வாங்காமல் இருந்துவிடலாம். அப்படித்தான் நெல் வாங்கமுடியாது என்று மறுக்கிறார்கள். வேறு யாரும் கொள்முதல் செய்யவும், சர்க்காரும் தயாராக இல்லை. வியாபாரிகள் கொள்முதல் செய்வார்கள் என்கிற உத்தரவாதம் கொடுக்கப்

பட்டிருக்கிறது. அதே சமயத்தில், தேவையான மக்களுக்கு விநியோகம் செய்யவும் வியாபாரிகளுக்கு பொறுப்புக் கொடுக்கப் பட்டிருக்கிறது. உற்பத்தியாளரும், உண்போரும் வியாபாரிகளின் பிடியில் வருவார்கள். அதனால் அவர்கள் பாதிக்கப்படுவார்கள்.

கவர்னர் உரையில் நிலச் சீர்திருத்தம் பற்றி ஒன்றும் குறிப்பிடப் படவில்லை. நிலச் சீர்திருத்தம் சர்க்கார் கொண்டு வரப் போகிறார்களா இல்லையா என்கிற சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. நிலச் சீர்திருத்தம் என்று சொன்னால், மறைந்த அண்ணா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், யார் உழுகிறானோ, அவனுக்குத் தான் நிலம் சொந்தம் என்று. இந்த மன்றத்திலும், வெளியிலும் அப்படிச் சொல்லியிருக்கிறார்கள். மத்திய சர்க்காரும், எல்லா மாநிலங்களும் நிலச் சீர்திருத்தம் கொண்டுவரவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். நில உச்ச வரம்பு சட்டம் செய்த போது, பலர் மோசடி செய்திருக்கிறார்கள். அப்படிச் செய்த மாநிலங்களில் சென்னை மாநிலமும் ஒன்று. ஆகவே, அந்தச் சட்டத்தை முறையாகத் திருத்தி, உழுகிறவனுக்கு நிலம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் உழுகிறவனுக்கு நிலம் கிடைக்க வாய்ப்பு வசதி ஏற்படும். அப்பொழுது அவர்கள் தீவிரமாக உற்பத்தியில் ஈடுபடுவார்கள். அந்த முறையில் நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டு வரவேண்டும். உச்ச வரம்பு சட்டத்தில் 30 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்று இருப்பதை 15 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்று செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் பல லட்சக்கணக்கான ஏக்கர்கள் ஏழை விவசாயிகளுக்குக் கிடைக்கும். அந்தச் சட்டத்தில் பல விதிவிலக்குகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் ரத்துசெய்ய வேண்டும். அப்படிச் செய்தால் கிராமப் புறங்களில் பெருத்த மாற்றம் ஏற்படும். பொருளாதாரத்தில் ஒரு திருப்பம் ஏற்படும்.

நம்முடைய மாநிலத்தில் படித்தவர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்கள் பல கிளர்ச்சிகளைச் செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க எந்தவிதமான திட்டங்களையும் இந்த உரையில் பார்க்க முடியவில்லை. அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும். அதற்கான திட்டங்களை அரசாங்கம் தீவிரமாகக் கொண்டுவர முயற்சிகள் செய்ய வேண்டும்.

நான்காவது திட்டத்திற்கு நம்முடைய அரசு கோரிய தொகை ரூ. 575 கோடி. மத்திய சர்க்கார் நமக்கு அனுமதித்துள்ள தொகை ரூ. 502 கோடிதான். இப்படி மிகப் பெரிய அளவில் குறைந்திருக்கிறது. நாம் கோரிய தொகையைப் பெற்றே ஆக வேண்டும். கோரியதே மிகக் குறைவு. அதைப் பெற நாம் கிளர்ச்சி செய்தே ஆகவேண்டும். முன்னால் நாம் 'எழுச்சி தினம்' என்று கிளர்ச்சி செய்தோம். அதற்குப் பிறகு தான் சேலம் இரும்பாலையும், தூத்துக்குடி திட்டமும் அமுல் செய்ய பணம் ஒதுக்க ஒப்புக் கொண்டார்கள். ஆகவே, மத்திய சர்க்காருடைய போக்கை மாற்றி, நாம் கோரியதைப் பெற கிளர்ச்சி





நடத்தியாக வேண்டும். அதில் எல்லாக் கட்சிகளும் ஒத்துழைப்பார்கள். தமிழ் நாட்டின் நன்மைக்கு என்று சொல்லும்போது, எல்லாக் கட்சிகளும் சேர்ந்து ஒத்துழைப்பார்கள். ஆகவே, எல்லாக் கட்சிகளின் ஒத்துழைப்பையும் பெற்று, கிளர்ச்சியை நடத்தி, நாம் கோரியிருக்கும் ரூ. 575 கோடியை நாம் பெற வாய்ப்பு ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். பணம் இல்லை என்றால் எந்த வேலையும் செய்ய முடியாது. பற்றாக்குறை காரணமாக எவ்வளவோ நல்ல காரியங்களைச் செய்ய முடியாத நிலையில் இருக்கிறோம்; அதனால் மக்களுக்கு அதிருப்தி வளர்ந்து கொண்டிருக்கிறது. அதை மனதில் கொண்டு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நம்முடைய தமிழகத்தில், ராமநாதபுரம் ஜில்லா, பின் தங்கிய ஜில்லா. அந்த மாவட்ட சட்ட மன்ற உறுப்பினர் சொன்னார்கள், அங்கு பஞ்சம் ஆரம்பமாகியிருக்கிறது என்று. எல்லா இடத்திலும் மழை பெய்தாலும், ராமநாதபுரத்தில் மழை இல்லை. திருநெல்வேலியிலும் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. புதுக்கோட்டை, தஞ்சாவூரில் அறந்தாங்கி தாலுகா இவையும் பஞ்சப் பிரதேசம் தான். ஆகவே இதுவும் ராமநாதபுரம் போல் தான் காட்சி அளிக்கும். ஆகவே, எந்த எந்த பிரதேசங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனவோ அவற்றை பஞ்சப் பிரதேசம் என்று பிரகடனம் செய்து, மத்திய சர்க்காரிடமிருந்து வேண்டிய பணம் பெற்று பஞ்ச நிவாரண வேலை ஆரம்பித்து, அபிவிருத்தி வேலைகளைச் செய்து முடிக்க வேண்டும். அந்த வகையில் தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

பாங்கிகள் கொடுக்கும் கடன்கள் கிராமப் புறங்களில் தொழில் வைத்திருப்பவர்களுக்கு, புதுத் தொழில் வைக்க இருப்பவர்களுக்கு, விவசாயிகளுக்குக் கிடைக்கச் செய்யவேண்டும். அதற்கான நடவடிக்கைகளை முதல் அமைச்சர் எடுக்க வேண்டும்.

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்குரிய முறையில் நாம் திட்டங்களைத் தயாரித்தாக வேண்டும். திட்டங்களைத் தயாரிப்பதிலே அதிக அக்கறை காண்பித்து, தொழில்கள் வளரச் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், சேலம் உருக்காலையைப்பற்றிக் கவர்னர் உரையில் குறிப்பிட்டிருப்பதைப் பார்த்தால், அது முழுவதுமாக வெற்றிபெறுமா என்ற சந்தேகம் இருக்கிறது. இரும்பாலைத் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுத்தாக வேண்டும். ஏதோ சொல்வார்களே, 'கழுதை தேய்ந்து கட்டெறும்பான' கதைபோல ஆகிவிடக்கூடாது.

அடுத்தபடியாக, தண்ணீரைப் பொறுத்தவரையில் நம் மாநிலம் எப்போதும் பற்றாக்குறைதான், கேரளாவிலிருந்தும், மைசூரிலிருந்தும் தண்ணீர் வாங்கக்கூடிய நிலையில் நாம் இருக்கிறோம்.

[திரு. ஆ. கு. சுப்பையா] [1970 சனவரி 23

இந்தப் பற்றாக்குறையைப் போக்க அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும். அண்டை மாநிலங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி நல்ல உடன்பாடு கொண்டு, நமக்கு வேண்டிய தண்ணீரைப் பெறுவதில் நாம் அதிக அக்கறை காட்ட வேண்டும். காவேரித் தண்ணீரை சென்னை நகருக்குக் கொண்டு வருவது ஒருபுறமிருந்தாலும், கிருஷ்ணா நதியிலிருந்து நீரை சென்னைக்குக் கொண்டுவருவதற்காக ஒரு கமிஷனை அமைத்தோம். அந்தக் கமிஷனும் அறிக்கையை அரசின்முன் வைத்திருக்கிறார்கள். கிருஷ்ணா நதியின் நீரை சென்னைக்குக் கொண்டுவருவதனால் வடக்கில் இருக்கும் மாவட்டங்களுக்கு வசதியாக இருக்கும். கேரள மாநிலம், மைசூர் மாநிலம், ஆந்திர மாநிலம் ஆகியவற்றுடன் நம்முடைய அரசு கலந்தாலோசித்து, பேச்சுவார்த்தை நடத்தி, எந்த நாளிலும் நமக்குத் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படாத வகையில் வழிவகைகள் காண வேண்டும். நமக்கு ஒவ்வோர் ஆண்டும் தண்ணீர்த் தட்டுப்பாடு இருக்கிறது என்பதை மனதில் கொண்டு பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தொடர்ந்து இரண்டு மூன்று கல்லூரிகள் மூடப்பட்டிருக்கின்றன. அவைகளைத் திறந்து நடத்த என்ன ஆலோசனைகளை எடுக்கப் போகிறார்கள் என்று தெரியவில்லை. அரசாங்கம் இதற்குத் தீவிரமான முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

■ திரு. கே. என். குமாரசாமி : மாற்றுத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களுடைய உரையின்பேரில் பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்ததற்காக முதலிலே நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கவர்னர் உரையில், தமிழகத்தில் ஏற்பட்ட வறட்சி நிலையைப்பற்றியும், தமிழக அரசு எடுத்த விரிவான ஏற்பாடுகளைப்பற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மூன்று ஆண்டுகளாக மழை இல்லாத காரணத்தால் ஏற்பட்ட துயர்தணிப்பு நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டதை யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது. எங்கள் ஜில்லாவில் கடும் வறட்சிநிலை இருந்த போது, எடுக்கப்பட்ட பஞ்ச நிவாரண வேலைகள் பயனுள்ள முறையில் இருந்தன என்பதை யாரும் மறுக்க முடியாது. பஞ்ச நிவாரண வேலைகள் பூரணமாக எல்லா மக்களுக்கும் பயன்படவில்லையென்றாலும்கூட வறட்சிப் பகுதிகளில் உள்ளவர்களுக்கு மிகுந்த பயனைக் கொடுத்தது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்த முயற்சிகளுக்காக நாம் அரசாங்கத்தைப் பாராட்ட வேண்டும். பற்பல மெம்பர்கள் பல குறைகளைச் சொன்னார்கள். சில இடங்களில் பஞ்ச நிவாரண வேலைகள் குறைவாகச் செய்யப்பட்டன என்று குறிப்பிட்டார்கள். எல்லா பக்கங்களிலும் குறைவு இருக்கத்தான் செய்யும். பஞ்ச நிவாரண வேலைகளினால் விவசாயிகளுக்கும், குறிப்பாக ஏழை எளியவர்களுக்கும் நல்ல பலன் [illegible] என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.



1970 சனவரி 23] [திரு. கே. என். குமாரசாமி]

இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன். விவசாயத் துறையில் இன்றையதினம் நிலைமை மாறிக்கொண்டிருக்கிறது. பம்ப் செட்டுகள் மூலமாகவோ, கிணறுகளை ஆழப்படுத்தியோ, அதிகமான அளவில் உற்பத்தியைச் செய்துவிட முடியாது. நாம் கேரள மாநிலத்தோடு நமக்கு உரிமையுள்ள நீர் பகுதிகளைப்பற்றி பேசி உடன்பாடு காணவேண்டும். ஏற்கெனவே செய்யப்பட்ட ஒப்பந்தம் முடிவு பெறாமல் காலதாமதமாகிறது. இந்த ஒப்பந்தம் விவசாயிகளின் மத்தியில் ஏமாற்றம் அளிக்கும் பிரச்சனையாகவே இருந்து வருகிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கேரள மாநில அமைச்சர்களுடன் பேசி முடிவு காணவேண்டும். அதையும் விரைவாகச் செய்து, அமல்படுத்தவேண்டும். இன்னும் காலத்தை எந்தவகையிலும் நீட்டிக்கக்கூடாது. காலத்தை நீட்டுவதன் மூலம் பெரும் பிரச்சினைகள் கூட சிக்கல்களை உண்டாக்கி தீர்க்கப்படாமலே இருந்து விடுகின்றன. இவைகளை அரசு சீக்கிரத்தில் செய்யவேண்டும்.

அடுத்தபடியாக மின்சாரக் கட்டண விஷயத்தில் இதுவரையில் பம்பு செட்டுக்கு 8¼ பைசாவாக இருந்ததை பத்து பைசா என்ற அளவில் உயர்த்தியிருக்கிறார்கள். 'மின்சாரக் கட்டணம் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் இந்த மாநிலத்தில்தான் பம்பு செட்டுக்கு மிகக் குறைவு' என்று இந்த மன்றத்தில் கூறிவந்தார்கள். யூனிட் ஒன்றுக்கு 8¼ பைசாவாக இருந்ததை பத்து பைசாவாக உயர்த்தப்படுவது விவசாயிகளுக்கு பாதகத்தைத்தான் தரும். கோவைப் பகுதியில் தண்ணீர் 150 அடி ஆழத்தில் இருக்கிறது. இரண்டு மோட்டார் பம்ப் செட்டுகளை வைத்துத்தான் இறைக்க வேண்டியிருக்கிறது. இதனால் மின்சாரக் கட்டணம் அதிகமாகப் போகிறது. எந்த ஜில்லாவில் கிணறுகள் ஆழமாக இருக்கின்றனவோ, அந்த இடத்தில் உள்ள பம்ப் செட்களைப் பரிசீலனை செய்து கட்டணத்தைக் குறைத்து விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

குடித் தண்ணீர் பிரச்சினையைத் தீர்ப்பதிலே அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். அதற்கான போர்டு அமைக்கப்பட்டு ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. தமிழகத்தில் கடந்த இருபது ஆண்டுகளாக குடிதண்ணீர்ப் பிரச்சினை நீடித்துக்கொண்டே போவது சரியானது அல்ல. அரசாங்கம் இதைச் சீக்கிரமான அளவில் தீர்க்க வேண்டும்.

அடுத்தபடியாக சீரமைப்பு நிறுவனங்கள் மூலம் மூடப்பட்ட பஞ்சாலையை அரசு எடுத்ததுபற்றி பாராட்ட வேண்டும். அதை நாம் பாராட்ட முனையும்போது இன்னொரு சங்கடம் இருக்கிறது. தொழிலாளர்களுக்கு ஏற்கெனவே பாதுகாப்பு இருந்தும்கூட சீரமைப்பு நிறுவனம் தொழிலாளர்களுடைய பஞ்சப்படியை வெட்டுசெய்திருக்கிறது. பஞ்சப்படியைக் குறைத்துக்கொண்டு

வேலைசெய்யக்கூடிய நிலையில் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இது சங்கடமான நிலைமைதான். காரணம் என்னவென்று சொன்னால் அதைச் சுட்டிக்காட்டி அவன் சம்பளத்தைக் குறைக்கக் கூடாது என்று மற்றவர்கள் கேட்கிறார்கள். அதற்கும நாங்கள் பதில் சொல்கிறோம். அப்படி இன்றைக்கு சீரமைப்பு நிர்வாகம் ஏற்று நடத்துகிற மில்களில் தொழிற்சங்கத் தலைவர்களைக் கலந்து கொள்ளாமலேயே அவர்களது டெக்னிகல் சைடை வைத்துக் கொண்டு சம்பளத்தைக் குறைத்து வைத்திருக்கிறார்கள். நாம் மூடப்பட்ட மில்களைத் திறக்கிறபோது முன்பு இருந்த சம்பள அடிப்படையிலேயே எடுத்து நடத்துவது, நஷ்டம் வந்தால் சம்பளத்தைக் கொஞ்சம் குறைத்துக்கொள்வது என்று செய்திருக் கலாம். அப்படியின்றி மசோதா வரும்போதே இதனால் ஏற்படும் சங்கடத்தைச் சுட்டிக்காட்டியபோது தொழிற்சங்கத் தலைவர் களைக் கலந்துகொண்டே சீர் அமைப்பு நிர்வாகம் காரியங்களைச் செய்யும் என்ற வாக்குறுதியைக் கொடுத்தார்கள். அது நிறை வேற்றப்படவில்லை. தொழிற்சங்கங்களைக் கலந்துகொள்ளாமல் அவர்கள் நிர்ணயித்துள்ள சம்பளம் சரியானது அல்ல என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதற்கடுத்தபடியான நிலச்சீர்திருத்தம்பற்றி நாம் பேசு கின்றோம். நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் மிகப் பயங்கர மாக இருக்கிறது. ஐந்து பேர், பத்துப் பேர்களின் இடத்திற்கு இருபது, இருபத்தைந்து பேர் போட்டியிடக்கூடிய நிலைமை இருக் கிறது. அதைப்பற்றி கவர்னர் அறிக்கையில் எதுவும் இல்லை. பல்வேறு சிறு தொழில்கள், நில சீர்திருத்தத் திட்டங்கள் ஆகிய பலவற்றின்மூலம் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கச் சொன்னோம். ஒரு சிலரிடம் ஆலைத் தொழில்கள், பூமிகள் எல்லாம் இருக்கின்றன. அதனால் அவர்கள் இஷ்டத்திற்குத்தான் உற்பத்தி நடக்கிறது. பணம் இருப்பதாலேயே நிலங்களையும் நிறைய வாங்கிப் போட்டுக் கொண்டு விவசாயத் துறையிலும் நுழைந்து கொண்டு ஏகபோக உரிமைகளுக்கு இடம் இருக்கக் கூடாது. நிலத்தில் உழைப்பவர்களுக்கே நிலம் உரிமையாக்கப் படவேண்டும். அப்போதுதான் தொழில்துறை வளரும், விவசாய உற்பத்தியும் பெருகும். நிலச் சீர்திருத்தம் செய்ய அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டும். மக்கள் இப்படி தீவிர மான பல காரியங்களை, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கும் செயல்திட்டங்களை நாம் உருவாக்கித் தருவோம் என்றே எதிர்பார்க்கிறார்கள். ஆகவே இதுபற்றியும் சிந்திக்கவேண்டும்.

உணவுக் கட்டுப்பாட்டை எடுத்தது பற்றி விவசாயிகள் வரவேற் கிறார்கள். வியாபாரிகள் வரவேற்கிறார்கள். கெட்ட அரிசி வாங்கிச் சாப்பிடுகிறவர்கள் கூட பரவாயில்லை என்கிறார்கள். விலை வாசி ஏறாமல் இருக்கவேண்டும் என்று எச்சரிக்கை விட்டுவிட்டால் மட்டும் போதாது. ஏறாமல் இராது. உடனடியாக இல்லா [illegible]ளும் மூன்று நான்கு மாதங்கள் கழிந்தவுடன் ஏறிவிடும்.





விலைவாசி ஏறாமல் இருக்க வேண்டுமென்றால் சர்க்காரே கொள்முதல் செய்யவேண்டும். தொழிலாளர்கள், குறைந்த வருமானம் உள்ள வர்கள் ஆகியோர்கள் உள்ள இடங்களில் அரசாங்கம் நியாயவிலைக் கடைகளின் மூலமாக அரிசி நியாயவிலையில் சப்ளை செய்ய வேண்டும். அப்போதுதான் விலையேறாமல் பாதுகாக்க முடியும், இல்லையென்றால் விலை ஏறிவிடும். தமிழகம் முழுவதும் 2 கோடி பேர்களுக்கு நியாய விலைக்கடையின் மூலம் அரிசி விநியோகித்தால் விலை ஏறாமல் இருக்கும். அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று சொல்லி எனக்குப் பேச சந்தர்ப்பம் கொடுத்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. சு. துரைசாமி** : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையை வரவேற்று எனது கருத்தைத் தெரிவிக்கலாம் என்று நினைக்கிறேன். இந்த மன்றத்தில் கடந்த ஆண்டு பேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் பொறுப்புக்கு வந்த பின்னால் ஏராளமான பஞ்சாலைகள் மூடப்பட்டுவிட்டன. அதனால் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள் என்பதாகக் குற்றஞ்சாட்டிப் பேசினார்கள். ஆனால் நமது திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் சென்ற ஆண்டு இதற்கென்று ஒரு கார்ப்பரேஷனை நிறுவி மூடியிருந்த பஞ்சாலைகளைத் திறந்து நடத்த நடவடிக்கை எடுத்திருக்கிறார்களே, அதன் காரணமாக 16 மில்கள் திறக்கப்பட்டு ஓடுகின்றனவே, அதற்காக இந்த ஆண்டு யாராவது ஒருவர் நன்றியைத் தெரிவிப்பார் என்று நினைத்தேன். ஒருவர் கூட அதைப்பற்றிச் சொல்லவில்லை.

பேரவைத் தலைவர் அவர்களே, நான் அந்த விவரங்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். பெரும்பாலான மில்கள் காங்கிரஸ் காரர்கள் ஆண்ட காலத்திலேயே மூடப்பட்டன. உதாரணமாக வி.எஸ்.டபிள்யூ. மில் மூடப்பட்டது 28—9—1966-இல். கம்போடியா மில் மூடப்பட்டது 26—9—1966-இல். திரிமூர்த்தி மில் மூடப்பட்டது 20—6—1966-இல் சீதாலட்சுமி மில் 14—2—1966-இல் மூடப்பட்டது. இப்படி காங்கிரசார் ஆண்ட காலத்தில்தான் பெரும்பாலான மில் கள் மூடப்பட்டிருக்கின்றன.

இன்று நமது தமிழக சர்க்கார் மூடப்பட்ட மில்களில் 16 மில்களைத் திரும்பவும் ஓடச் செய்திருக்கிறார்கள். குறிப்பாக காங்கிரஸ்காரர்கள் காலத்திலேயே மூடப்பட்ட கோயம்புத்தூர் வி. எஸ். டபிள்யூ. மில்லை 12—12—1968-இல் திறந்திருக்கிறார்கள். திரிமூர்த்தி மில்லை 7—2—1969-இல் திறந்திருக்கிறார்கள். இப்படி 16 மில்களைத் திறந்து ஓடச் செய்திருப்பதன் காரணமாக வேலை யற்றிருந்த தொழிலாளர்களுக்கு வேலை கிடைத்திருக்கிறது. அதன் காரணமாக ஆளுநர் உரையை வரவேற்க நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

[திரு. சு. துரைசாமி] [1970 சனவரி 23

அடுத்து, ஆளுநர் உரையிலே தமிழ்நாட்டுக்கு வரவேண்டிய, கிடைக்கவேண்டிய நியாயமான உரிமைகள் கிடைக்காமல் போய் இருப்பதுபற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த நாட்டை ஏற்கனவே ஆண்டவர்கள் இந்த மன்றத்திலும் சரி, வெளியிலும் சரி அந்த உண்மையைத் தெரிவிக்கவில்லை. வெளியிலேயும் தெரிவிக்கத் தவறிப்போய் விட்டார்கள். பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக நான் பேரவையின் கவனத்திற்கு ஒரு விஷயத்தைக் கொண்டுவர விரும்புகிறேன். சென்டரல் அசிஸ்டென்ஸ் டு ஸ்டேட்ஸ் என்கிற கணக்கில் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 332 கோடி மத்திய அரசு ஒதுக்கினார்கள். அதில் தமிழ்நாட்டுக்குக் கிடைத்தது 36 கோடி, அதாவது 10.8 சதவிகிதம்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை எடுத்துக்கொண்டால் 1,058 கோடியில் தமிழ்நாட்டுக்குக் கிடைத்தது 9 சதவிகிதம் தான். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழ்நாட்டுக்கு ஒதுக்கப்பட்டது 7.4 சதவிகிதம் தான். நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் 3,500 கோடியில் தமிழ்நாட்டுக்கு 5.7 சதவிகிதம் தான். இப்படி தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 10.7 சதவிகிதம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 9 சதவிகிதம், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 7.4 சதவிகிதம், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 5.7 சதவிகிதம் என்று படிப்படியாகக் குறைத்துக்கொண்டே வந்திருக்கிறார்கள். தமிழ்நாடு இப்படி புறக்கணிக்கப்பட்டே வந்திருக்கிறது. இதை அங்கே இருந்தவர்கள் யாரும் சொல்லவில்லை.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். ஐந்தாவது நிதிக் கமிஷனிலும் தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. பீகார் உபரி 199.46 கோடி ரூபாய். குஜராத் உபரி 158.99 கோடி ரூபாய். ஹரியானா 79.88 கோடி. மகாராஷ்டிரா 419.29 கோடி. பஞ்சாப் 117.22 கோடி. உ.பி. 280.87 கோடி. இப்படி வடக்கே பல மாநிலங்கள் உபரியாக இருக்கின்றன. ஆனால் தமிழ்நாடு பற்றாக்குறையானது. நம்முடைய பற்றாக்குறை 22.82 கோடி. இதையும் எண்ணிப்பார்க்கவேண்டும். இன்னொரு கருத்தைக் கூற விரும்புகிறேன்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் திட்டமிட்டதிலிருந்து தமிழ் நாட்டுக்கு 19.2 சதவிகிதம் குறைக்கப்பட்டிருக்கிறது. மைசூருக்கு 22.1 சதவிகிதம் குறைக்கப்பட்டிருக்கிறது. ஆந்திரத்திற்கு 14.3 சதவிகிதம் குறைக்கப்பட்டிருக்கிறது. கேரளத்திற்கும் குறைவாகவே கொடுத்திருக்கிறார்கள். அதே நேரத்தில் உத்தரபிரதேசத்திற்கு 6.2 சதவிகிதம் அதிகமாக்கியிருக்கிறார்கள். பஞ்சாபிற்கு 6.3 சதவிகிதம் அதிகமாக்கியிருக்கிறார்கள். ஒரிசாவிற்கு 6.6 சதவிகிதம் அதிகமாக்கியிருக்கிறார்கள். ஜம்மு-காஷ்மீருக்கு 15.1 சதவிகிதம் அதிகமாக்கியிருக்கிறார்கள், பீகாருக்கு 15.7 சதவிகிதம் அதிகமாக்கியிருக்கிறார்கள்.



1970 சனவரி 23] [திரு. சு. துரைசாமி]

அஸ்ஸாமிற்கு 25 சதவிகிதம் அதிகம். நாகாலாந்துக்கு 29.6 சதவிகிதம் அதிகமாக்கியிருக்கிறார்கள். தலைவர் அவர்களே, நான் உங்கள் வாயிலாக மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன், தமிழ்நாட்டிலே மிகப் பெரிய தலைவராக இருக்கக்கூடியவரும் முன்னாள் இங்கே முதலமைச்சராக இருந்தவருமான திரு. காமராஜ் அவர்கள் வெளியிலே பேசினார்கள், பஞ்ச நிவாரண நிதி தமிழ் நாட்டிற்கு அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும் உத்திரப் பிரதேசத்திற்குக் குறைவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும் குற்றஞ்சாட்டிப் பேசியிருக்கிறார்கள். நம்முடைய தமிழ் நாடு கடந்த இருபது ஆண்டுகாலமாகப் புறக்கணிக்கப்பட்டு வந்து இருக்கிறது. ஐந்தாவது நிதிக் குழு அறிக்கையின் மூலமும் நம்முடைய தமிழ்நாட்டிற்குக் கிடைக்கவேண்டிய பல நியாயங்கள் கிடைக்கவில்லை. உண்மை இப்படியிருக்க என் அந்தப் பெரிய தலைவர் அதைப்பற்றி ஒரு வார்த்தைகூடச் சொல்லத் தவறி விட்டார். . . - (மணியடிக்கப்பட்டது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவோடு முடிவடைந்து நாளைக் காலை 9 மணியளவில் பேரவை மீண்டும் கூடும். இப்பொழுது பேசிய உறுப்பினர் திரு. துரைசாமி அவர்கள் நாளை தொடர்ந்து பேசுவார்கள்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது. பி.ப. 1-31

### (10) பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்

### A. *Statutory Rules and Orders.*

132. Notification issued with G.O. Ms. No. 592, Social Welfare, dated the 6th August 1969 in regard to an amendment to the Tamil Nadu Cinemas Regulation) Rules, 1957, published at pages 79 to 104 of the Rules Supplement to Part I of the *Fort St. George Gazette*, dated the 30th January 1957. [*Laid on the Table of the House under section 10 (3) of the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955).*]

*B. Reports, Notifications and other papers.*

**Nil.**

(75-ம் பக்கத்தில் 29-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்கான விடையைக்காண்க.)

*Extract of the report of the Study Group on Industrial Relations (Southern Region) appointed by the National Commission on Labour.*

## MADRAS.

*Trade Unions.*—In industries such as textiles in Coimbatore area and plantations, unions are organised on an industry-wise basis. In other areas generally, unit-wise trade unions are functioning. The number of registered unions on 31st December 1966 was 1,336. Several unions were not affiliated to Central Trade Union Organisations.

Many unions have an "outsider" leader, i.e., one who was not employed by the concerned company, there are also unions with leaders chosen from among the employees. In the former politics generally plays an important role in union activities. This is not normally the case in unions which had no "outside" Leadership.

The Madras Government's Report on Labour for 1966-67 states that 1,185 trade unions and 260 managements had accepted the Code of Discipline, although the code of discipline had been accepted by a large number of unions and the acceptance had been incorporated in settlements in several cases, the attitude of unions towards the Code was generally one of indifference.

Unions have been recognised by several managements under the terms of the Code of Discipline.

As in the case of other States, union rivalries continue to plague the trade union movement in Madras also. Trade Union activities do not generally extend beyond dealing with employers.

*Employer organisations.*—There are industry-wise associations as also federations with members belonging to various industries. A number of these associations/federations advise members on matters affecting industrial relations.

*Industrial relations.*—Government reports show that during 1966 the number of industrial disputes lose to 7,880 from 6,839 in the previous year. The main reason is the increase in industrial disputes raised under section 2-A of the Industrial Disputes Act. The number of strikes and lock-outs was 176 in 1966 causing a loss of 7,54,612 man-days) the corresponding figures for 1965 were 135 and 4.54,401 respectively. Textile industry accounted for the largest number of strikes in 1966 followed by Tannery and Engineering industries.



Out of 7,880 disputes, 1,208 were settled by conciliation, 815 were referred to adjudication and 64 for informal arbitration.

It is worth nothing that of the 176 strikes/lockouts, 78 were terminated by the efforts of the Labour Department and as many as 75 by means of voluntary resumption of work: 16 cases were settled by direct negotiation and only 3 were referred to adjudication. Reason for work stoppages varied from wages and retrenchment to selection of an outsider by a management for job in the technical department.

Bonus in Plantations was settled on an industry-wise basis under section 34 (3) of the Payment of Bonus Act.

Informal arbitration was resorted to in disputes relating to dismissals/discharges and in some cases in disputes relating to wages, bonus, etc.

The State has one Industrial Tribunal and four Labour Courts. In 1966, 333 disputes were referred for adjudication in the Labour Courts and the Tribunal as against 229 in 1965. There were also two special Industrial Tribunals functioning in the State in 1966.

Works Committees exist in a number of industrial establishments but the usefulness of this Committee is in doubt. A grievance procedure exists in almost all establishments though not a formal one.

The recent trend is in favour of settlements by direct negotiation or by conciliation. Most trade unions exert their influence on workers (of course only up to a point for fear of losing membership to rival unions) in resolving disputes. Employers' organisations also try to persuade their members to settle disputes without recourse to Courts. Personnel/Welfare Officers are playing an important role in maintaining good industrial relations in several establishments.

Joint Management Councils have been set up in 18 units but there is no sign of their usefulness.

During the past eight months, industrial relations in the Madras State took a new turn. From about May 1967, violence and gross indiscipline began to occur in factories in the Madras State. Although in the past there were work stoppages in factories, a significant feature in Madras was that very rarely the strikes involved violence or other forms of physical black-mail of managerial staff. From May 1967 onwards assault on managerial staff, damage to company's property, go-slow and other acts of indiscipline and coercion increased in frequency and intensity. As a result of the failure on the part of police effectively to intervene and put down acts of violence certain political elements were encouraged to incite workers to intensify acts of violence. It was unfortunate that even in glaring cases of violence, Government did not issue a directive to the police effectively to put down such acts.

In cases where factories had closed and the managerial staff were being harassed, either by Gherao or by acts of violence, Government instead of adopting a firm line, was bringing pressure on managements to yield to coercive tactics adopted by labour. Such pressure was being brought about at the ministerial level, and when it was apparent to everybody that there was no effort at the ministerial level to put down violence and to give adequate protection against violence, there was nothing to deter certain political parties, who had no regard for industrial peace or the rule of law from taking advantage of the situation to create confusion and chaos in industry.

Several representations were made to Government pointing out the dangerous trend in industrial relations in the State. But very little was achieved by these representations It was clear that normal conciliation machinery was being by-passed and that conciliation was taking place at the ministerial level. Frequent pronouncements in newspapers by Ministers highlighting their alleged bias towards Labour without any noticeable action to put down indiscipline, ruined normal industrial relations in several factories. Apart from indulging in acts of indiscipline in factories, there were instances where workers were extending their illegal activities to the residence of some prominent employers and managerial staff. During all these troubles the general impression was that police were silent spectators and that they were not prepared to make any effort to arrest lawlessness and unpleasent scenes.

Acts of violence led to a situation in which even when the police attempted to give protection to the managerial staff to enter a factory during a strike, the workers defied the police and attacked them and the managerial staff. Ultimately this lawless situation was brought under control by police resorting to open fire outside this factory.

In another case where the striking workers in a factory indulged in causing extensive damage to factory property and physical injury to the managerial staff, the police arrived on the scene only after grave acts of hooliganism had been perpetrated. Even in this case, considerable pressure was brought on the management at the ministerial level to re-employ even those against whom there was ample evidence of having participated in the destruction of company's property and assault on managerial staff and against whom criminal proceeding were pending in court. What is more, pressure was brought upon the management not only to reinstate some of those men but also to give a good conduct certificate to such of those who were prepared to resign from the Company's seivrce. The culmination of the events in this factory was its closure on account of the management's inability to secure an assurance from Government that protection would be given in case the factory was reopened by discontinuing the service of these who had been found guilty of violence.



The main features of Government policy which have contributed to this unfortunate state of industrial relations are—

(1) Failure of police effectively to put down acts of violence and harassment of managerial staff.

(2) Constant and continuous interference at the ministerial level in labour disputes.

(3) Refusal promptly to pass orders on conciliation reports.

(4) Ministerial pressure on management to reinstate dismissed workers without even examining the merits of the case.

(5) Suggestions that workers should not be dismissed even in cases of gross indiscipline and that Government has no belief in the punishment of dismissal.

(6) Reopening of closed cases on which orders were passed long ago and referring them to adjudication.

(7) Government's support to union leaders who had openly and flagrantly violated the Code of Discipline.

At one stage, illegal occupation of the factory by workers even after working hours was not dealt with by Government and there were instances where, notwithstanding the grave danger involved by such illegal occupation police were refusing to take steps to get the factory premises cleared. This led to a company applying to the High Court for an appropriate writ and finally the High Court made an order indicating that it was the duty of the police to remove the workers from the factory if they were occupying the factory after working hours. It was only then that the workers from the factory were removed and this resulted after a few days in an assault on the factory causing considerable damage to property and injury to managerial staff. This factory has since closed as stated earlier.

**தொழிலாளர் குறித்த தேசிய ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட தொழில் உறவு குறித்த ஆய்வுக் குழுவின் (தென் பகுதி) அறிக்கையிலிருந்து சில பகுதிகள்.**

**தமிழ் நாடு.**

**தொழிற் சங்கம்.**—கோயம்பத்தூர் பகுதியில் உள்ள நெசவு தொழில், தோட்டங்கள் போன்ற தொழில்களில் தொழில் அடிப்படையில் தொழிற் சங்கங்கள் அமைக்கப்படுகின்றன. பிற பகுதிகளில் பொதுவாக பகுதிவாரியாக தொழிற் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. 1966-ம் வருடம் டிசம்பர் மாதம் 31-ம் தேதியில் பதிவு செய்யப்பட்டுள்ள சங்கங்கள் 1,336 ஆகும். பல சங்கங்கள் மத்திய தொழிற்சங்க அமைப்புடன் இணைக்கப்படவில்லை.

பல சங்கங்கள் "வெளியாரை" அதாவது சம்பந்தப்பட்ட கம்பெனியில் வேலைக்கு அமர்த்தப்படாதவரைத் தலைவராகக் கொண்டுள்ளன. தொழிலாளர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களைக்கொண்ட சங்கங்களும் உள. முன்பு சொல்லப்பட்ட தொழிற் சங்கங்களில் தொழில் அரசியல் சங்க நடவடிக்கைகளில் முக்கிய பங்கு வகிக்கிறது. இது வெளியாட்களை தலைவராக கொண்டிராத சங்கங்களின் இயல்பாக இல்லை.

தமிழ்நாட்டு அரசின் 1966-67-ம் ஆண்டுக்கான தொழிலாளர் அறிக்கையில் 1,185 தொழிற் சங்கங்களும், 200 நிர்வாகத்தினரும் ஒழுங்குமுறைக் கோட்பாட்டை ஏற்றுக் கொண்டுள்ளதாகக் கூறுகிறது. ஒழுங்குமுறை கோட்பாட்டை ஏராளமான தொழிற் சங்கங்கள் ஏற்றுக் கொண்டிருப்பினும் இதற்கான ஒப்புதல் பல நேர்வுகளில் பதிவு செய்யப்பட்டிருப்பினும் கோட்பாடு குறித்து பொதுவாகத் தொழிற் சங்கங்களின் போக்கு அலட்சியமாகவே இருந்தது.

ஒழுங்குமுறைக் கோட்பாட்டின் கீழ் தொழிற் சங்கங்கள் பல நிர்வாகத்தினரால் ஏற்பளிக்கப்பட்டுள்ளன.

பிற மாநிலங்களைப்போல இம்மாநிலத்திலும் தொழிற் சங்கங்களில் போட்டி மனப்பான்மை தொழிற்சங்க இயக்கத்தைப் பாதித்துள்ளது. தொழிற்சங்க நடவடிக்கைகள் பொதுவாகத் தொழில் அதிபர்களுடன் தொடர்பு கொள்வதுடன் நின்று விடுகின்றன.

**தொழிலதிபர் நிறுவனங்கள்.**—தொழில் அடிப்படையில் சங்கங்களும், பல தொழில்களைச் சேர்ந்தவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட, கூட்டு அமைப்புகளும் உள்ளன. இச்சங்கங்கள் கூட்டு அமைப்புகள் உறுப்பினர்களுக்கு தொழிலுறவைப் பாதிக்கும் நேர்வுகளில் ஆலோசனை கூறுகின்றன.

**தொழில் உறவுகள்.**—1965-ம் ஆண்டில் தொழில் தகராறுகளின் எண்ணிக்கை 6,839. இது 1966-ல் 7,880 ஆக அதிகரித்திருப்பதாக அரசு அறிக்கைகள் ஒப்புக்கொள்கின்றன. அதிகரித்திருப்பதற்கு முக்கிய காரணம் தொழில் தகராறு சட்டத்தின் 2-எ பகுதியின் கீழ் எழுந்த தொழில் தகராறுகள்தான். 1966-ல் வேலை நிறுத்தம், கதவடைப்பு இவற்றின் எண்ணிக்கை 170. இதனால் ஏற்பட்ட இழப்பு 7,54,612 ஆள் நாட்களும் ஆகும். 1965-ல் வேலை நிறுத்தம், கதவடைப்பு இவற்றின் எண்ணிக்கை முறையே 135, 4,54,501 ஆகும். 1966-ம் ஆண்டில் துணி ஆலைகளில்தான் மிக அதிகப்படியான வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டன. தோல் பதனிடுதல், பொறியியல் தொழில்களில் அதற்கு அடுத்தபடியாக அதிக அளவு வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டன.

ஏழாயிரத்து எண்ணூற்று எண்பது தகராறுகளில் 1,208 சமரசம் செய்யப்பட்டன. 315 தீர்ப்புக்கும், 64 நடுவர் தீர்ப்புக்கும் அனுப்பப்பட்டன.



நூற்று எழுபத்தாறு வேலை நிறுத்தங்கள்/கதவடைப்புகளில் 78 தொழிலாளர் இலாகாவின் முயற்சியால் முடிவடைந்தன.

75 நேர்வுகளில் தொழிலாளர் தாமாக வேலைக்குத் திரும்பினர், 16 நேர்வுகளில் 16 நேரடி பேச்சு வார்த்தைகள் மூலமாகவும் முடிவடைந்தன. மூன்று நேர்வுகள் மட்டும் நடுவர் தீர்ப்புக்கு அனுப்பப்பட்டன.

ஊதியம், ஆட்குறைப்பு, நிர்வாகிகள் தொழில் நுட்பப் பணிக்காக வெளியாரைத் தேர்ந்தெடுத்தது போன்ற பல்வேறு காரணங்களினால் வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டன.

மலைத்தோட்டங்களில் பூரிப்பு ஊதியம், தொழில் அடிப்படையில் பூரிப்பு ஊதியம் கொடுத்தல் சட்டத்தின் 34 (3) பிரிவின்கீழ் முடிவு செய்யப்பட்டது.

வேலை நீக்கம்/வேலையிலிருந்து எடுத்து விடுதல் முதலிய நேர்வுகளிலும் சில நேர்வுகளில் ஊதியம், கொடை ஊதியம் முதலிய தகராறுகளும் நடுவர் தீர்ப்புக்கு விடப்பட்டன.

இம் மாநிலத்தில் தொழில் நடுவர் மன்றம் ஒன்றும் தொழிலாளர் நீதிமன்றங்கள் நான்கும் செயல்பட்டு வருகின்றன. 1965-ம் ஆண்டில் 229 தகராறுகளை சமரசத்திற்கும் நடுவர் மன்றத்திற்கும் அனுப்பப்பட்டிருக்க, 1966-ம் ஆண்டில் 333 தகராறுகள் தொழிலாளர் சமரச மன்றங்களுக்கும் நடுவர் மன்றத்தீர்ப்புக்கும் அனுப்பப்பட்டன. 1966-ல் இம்மாநிலத்தில் தனி நடுவர் தீர்ப்பு மன்றங்களும் செயல்பட்டுக் கொண்டிருந்தன.

இம் மாநிலத்தில் பணிக்குழுக்கள் பல நிறுவனங்களில் செயல்பட்டு வருகின்றன. ஆயினும் இக்குழுக்கள் எந்த அளவுக்குப் பயனுறு வகையில் பணிபுரிந்து வருகிறது என்பது ஐயத்திற்கிடமே. எல்லா நிறுவனங்களிலும் குறைதீர்ப்பு நடைமுறை ஒன்று செயலில் உள்ளது. இது எல்லா நிறுவனங்களிலும் ஒரே மாதிரியாக இல்லாமலிருக்கலாம்.

சமீப காலத்தில் நேரடிப் பேச்சு வார்த்தை அல்லது சமரசம் மூலம் தீர்வு காண்பதற்கு அதிக ஆதரவு உள்ளது. தகராறுகளைத் தீர்ப்பதில் பெரும்பாலான தொழில் சங்கங்கள் தங்கள் உறுப்பினர்கள் மீது தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்துகின்றன. இச்செல்வாக்கு ஓரளவுக்குத்தான் பயன்படுத்தப்படுகிறது. ஏனெனில் அங்கு உறுப்பினர்கள் போட்டிச் சங்கங்களின் உறுப்பினர்களாகிவிடுவர் என்ற அச்சம் அத்தொழிற் சங்கங்களுக்கு உண்டு. தொழில் அதிபர்கள் நிறுவனங்களும் தமது உறுப்பினர்களை நீதி மன்றங்களுக்குப் போகாமல் தகராறுகளுக்குத் தீர்வுக்கான முயற்சி செய்கின்றன. பணியாளர் அதிகாரிகள் தொழிலாளர் நல அதிகாரிகள் பல தொழில் நிறுவனங்களில் நல்ல தொழிலுறவு நீடிப்பதில் முக்கிய பங்கு கொள்கின்றனர்.

(4) வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களைக் குறித்த வழக்குகளைப் பரிசீலனை கூடச் செய்யாமல் அவர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ளும்படி அமைச்சர்கள் நிர்வாகத்தினரை வற்புறுத்தல்.

(5) கடுமையான ஒழுங்கின நடவடிக்கைகளில் ஈடுபட்ட தொழிலாளர்களையும் வேலை நீக்கம் செய்யக்கூடாது என்றும் வேலை நீக்கத் தண்டனையில் அரசுக்கு நம்பிக்கையில்லை என்றும் கருத்து தெரிவித்தல்.

(6) நீண்ட காலத்திற்கு முன்பே உத்தரவு பிறப்பிக்கப்பட்டு முடிந்து போன வழக்குகளை மீண்டும் பரிசீலனைக்கு எடுத்து நடுவர் தீர்ப்புக்கு அனுப்புதல்.

(7) ஒழுங்கு முறைக் கோட்பாடுகளை வெளிப்படையாக வேண்டுமென்று மீறும் தொழிலாளர் தலைவர்களுக்கு அரசு ஆதரவளிப்பது.

ஒரு நிலையில் வேலை நேரங்களுக்குப் பிறகும், தொழிலாளர்கள் தொழிற்சாலைக்குள் சட்ட விரோதமாக இருப்பது குறித்து அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. அவ்வாறு சட்ட விரோதமாக இருப்பதில் பெரிய அபாயம் இருந்தபோதிலும் தொழிற்சாலை எல்லைகளிலிருந்து தொழிலாளரை வெளியேற்ற காவலர் மறுத்து வந்தனர். இதன் விளைவாக, ஒரு நிறுவனம் உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு ஒன்றைப் பதிவு செய்தது. இறுதியாக வேலை நேரங்களுக்குப் பிறகு தொழிலாளர்கள் தொழிற்சாலைக்குள்ளேயே இருந்து வந்தால் அவர்களை அகற்றுவது காவலர்களின் கடமையாகுமென்று உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்தது. அதன் பின்னர் தான் தொழிலாளர்கள் தொழிற்சாலையிலிருந்து அகற்றப்பட்டனர். அதன் விளைவாக, ஒரு சில தினங்களுக்குப் பிறகு தொழிற்சாலை தாக்கப்பட்டு உடைமைகள் பெருமளவிற்குச் சேதப்படுத்தப் பட்டன. நிர்வாகப் பணியாளர்களும் தாக்கப்பட்டு காயமுற்றனர். முன்னர் கூறியுள்ளபடி இத் தொழிற்சாலை மூடப்பட்டுவிட்டது.

## தமிழ்நாடு சட்டப் பேரவை

சனிக்கிழமை, 1970 ஜனவரி 24

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

*Market at Mylapore*

* 65. Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Commissioner of Police, Madras has received representations that the market at Bazaar Street, Mylapore is unsafe from public point of view about the 3rd March, 1969; and

(b) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) "கடைவீதித் தெரு" முழுவதிலும் அதனை அடுத்துள்ள தெருக்களிலும் காவலர்கள் முறையாகச் சுற்றி வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டதன் மூலம் "கடைவீதித் தெருவிலும்" அதனை அடுத்துள்ள தெருக்களிலும் தமிழ்நாடு போக்குவரத்து விதிகளைச் சேர்ந்த "ஒருவழிப்" போக்குவரத்து விதியும் பிற விதிகளும் மீறப்படுவதைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

THIRU T. MARTIN: In Mylapore, just opposite the tank, on the southern side, we find the vegetable vendors are selling vegetables in the evening. May I request the Hon. Minister to state whether these vegetable vendors will be given places in Thannithurai market for doing their business in evening time?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அதுசம்பந்தமாக அடிக்கடி புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. காவல் துறையினர் தக்க கவனம் எடுத்துக் கொள்ளுவார்கள்.

*Railway Accidents Inquiry Committee*

* 66 Q.—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Chief Minister be pleased to state whether the views of the State Government had been sought for by the Railway Accidents Inquiry Committee that visited the State capital about the 10th December, 1968?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஆம்.

[1970 ஜனவரி 24

**திரு. என். எஸ். வி. சித்தன் :** இந்த அரசாங்கத்தின் சார்பில் அந்த விசாரணைக் குழுவிடம் கொடுக்கப்பட்ட கருத்துக்கள் என்ன ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கலந்து அவர்களுடைய கருத்துக்களையும் பெற்று குழுவிடம், சிக்னல் பாயின்ட்களில் பழுது ஏற்படாமல் அடிக்கடி கவனம் செலுத்த வேண்டும் எனவும், தவறு செய்யும் ஊழியர்கள் கண்டிப்பாகத் தண்டனைக்கு உள்ளாக வேண்டுமெனவும், ரயில்வே நிலைய வாம்புகளில் வேகக் கட்டுப்பாடு நிச்சயமாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும் எனவும், எஞ்சின் சீராக உள்ளது என்று அதிகாரிகள் அங்கீகரித்த பிறகே வண்டிகள் எடுக்கப்பட வேண்டுமென்பதும், ஊழியர்கள் வேலை நேரம் குறைக்கப்பட வேண்டுமென்பதும் நாம் அளித்த கருத்துக்களாகும்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** ரயில்வே தடங்களில் ஆட்கள் இல்லாத கேட்டுகள் (அன்மேன்டு கேட்ஸ்) இருப்பதால் சிலபல விபத்துக்கள் ஏற்படுகின்றன. இது சம்பந்தமாக அரசாங்கம் அந்தக் குழுவிடம் எடுத்துக் கூறியதா ? ரயில்வே இலாகாவில் இருந்து அந்த இடங்களில் ஆட்களைப் போடாவிட்டாலும் இந்த அரசாங்கம் அந்தப் பகுதிகளில் ஆட்களைப் போட முன் வருமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அரசாங்கம் அதைப்பற்றி ஏற்கனவே சொல்லாமல் இருந்தாலும் இந்தக் கேள்வியின் மூலமாக ரயில்வே இலாகாவின் கவனத்திற்குக் கொண்டுவரப்படும் என்று கருதுகிறேன்.

**திரு. கே. விநாயகம் :** இந்தச் சர்க்காரின் அனுபவத்தை யொட்டி செய்யப்பட்ட சிபாரிசுகளில் எந்தெந்தச் சிபாரிசுகள் அமலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன ? இப்போது அதிலே திருப்திகரமான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று அமைச்சரவை கருதுகிறதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நம்முடைய கருத்துக்களைச் சொல்லி இருக்கிறோம். அவற்றில் எவற்றை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள் என்று வகைப்படுத்திச் சொல்லாவிட்டாலும் அவைகளில் கவனம் செலுத்துவார்கள் என்று நம்புகிறோம்.

மதுராந்தகம் சப்-மாஜிஸ்ட்ரேட்

* 67 வினா—திரு. கரு. சிவைச்சாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகத்தில் 22—3—1969-ம் தேதி மதுராந்தகம் சப்-மாஜிஸ்ட்ரேட் பட்டப்பகலில் தாக்கப்பட்டது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன்மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?



1970 ஜனவரி 24]

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) & (இ)—துணை மாஜிஸ்ட்ரேட் திரு. பாலசுப்பிரமணியம் அவர்களைத் தாக்கியதாகச் சொல்லப்படும் சுந்தரம் மீது மதுராந்தகம் காவல் நிலையத்தில் குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவை 110 (e) & (f) பிரிவின் கீழ் 222/1969-ம் எண் குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது. பின்னர் குற்றவாளி 13—8—1969 அன்று எம்.சி. 128/1969-ம் எண்ணில் மாவட்ட மாஜிஸ்ட்ரேட்டால் குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் 119-வது பிரிவின் கீழ் விடுதலை செய்யப்பட்டார்.

**திரு. கே. விநாயகம் :** இந்தக் குறிப்பிட்ட மாஜிஸ்ட்ரேட் எந்தக் காரணத்திற்காக இது மாதிரித் தாக்கப்பட்டார் ? இது முக்கியமாகக் கவனம் செலுத்தப்படவேண்டிய பிரச்னை. மாஜிஸ்ட்ரேட்டுகளையும், ஜட்ஜுகளையும் தாக்குவது என்ற நிலைமையை இப்படியே விட்டு வந்தால் நாட்டில் நீதி நிலைமை இருக்காது. ஆகவே, எதிர்காலத்தில் இந்த மாதிரி நிலைமை ஏற்படாமல் இருக்க என்ன பாதுகாப்பை மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கும் ஜட்ஜுகளுக்கும் அரசாங்கம் தர முயற்சிக்கிறது ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்தியாவினுடைய பெரிய நீதிபதியையே கூட ஆபத்து அணுகியது என்பதை மறந்து விடுவதற்கில்லை. சுந்தரம் என்பவர் பல மதுவிலக்கு வழக்குகளில் தண்டனை பெற்றவர். மாஜிஸ்ட்ரேட்டைத் தாக்கியதற்கு அது காரணமாக இருக்கலாம். அவர் மீது உடனடியாக வழக்குத் தொடரப்பட்டது. இன்னொரு கோர்ட்டிலே அந்தக் குற்றவாளி விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்.

THIRU T. MARTIN : May I request the Hon. Minister to state whether after this incident, Government have given Police protection to Magistrates and Judges, and if so, the particulars thereof?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்படியே சென்று கொண்டிருந்தால் பிறகு வக்கில்களுக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு விடும்.

*Complaints of amplifier nuisances*

* 68 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Control Room in the Office of the Commissioner of Police, Madras City has been directed to deal with complaints of amplifier nuisances?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஆம். ஒலிபெருக்கிப் புகார்கள் வந்தால் உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டுமென்று கட்டளை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

கூட்டு நிர்வாகக் குழுக்கள் 18 பிரிவுகளில் ஏற்படுத்தப் பட்டுள்ளன. ஆயினும் அவை எந்த அளவுக்குப் பயன்படுகின்றன என்பது ஐயப்பாட்டிற்குரியது.

கடந்த எட்டு மாதங்களில் தமிழ் நாட்டின் தொழில் உறவில் புதியதொரு திருப்பம் ஏற்பட்டது. தமிழ் நாட்டில் 1967 மே திங்கள் முதல், வன்முறையும், பெரு ஒழுங்கீனமும் தொழிற்சாலைகளில் ஏற்படத் தொடங்கின. தொழிற்சாலைகளில் வேலை நிறுத்தங்கள் கடந்த காலங்களில் ஏற்பட்டிருப்பினும் தமிழ் நாட்டின் ஒரு சிறப்பு என்னவென்றால் வன்முறையிலும் மற்றும் நிர்வாக உறுப்பினரை பயமுறுத்தல் முதலிய செயல்கள் அநேகமாக இல்லை. 1967 மே திங்களிலிருந்து நிர்வாக உறுப்பினரைத் தாக்குதல், கம்பெனி சொத்துக்குச் சேதம் விளைவித்தல், வேலையை மெதுவாகச் செய்தல் மற்றுமுள்ள ஒழுங்கீன செயல்கள் முதலியன எண்ணிக்கையிலும், தன்மையிலும் அதிகரிக்கத் தொடங்கின. காவல்படை சரியான முறையில் தலையிட்டு வன்முறை செயல்களை அடக்க முடியாததன் விளைவாக தொழிலாளர்களை வன்முறை செயல்களில் ஈடுபடுமாறு தூண்டுவதற்கு குறிப்பிட்ட அரசியல் வாதிகளுக்கு ஊக்கம் அளிக்கும் சூழ்நிலை ஏற்பட்டது. வெளிப் படையான வன்முறை செயல் நடந்த நேர்வுகளிலும், அத்தகைய வன்முறைச் செயல்களைக் கண்டிப்பாக ஒடுக்குமாறு காவலருக்கு அரசு கட்டளை பிறப்பிக்காதது அவகேடுதான்.

தொழிற்சாலைகள் மூடப்பட்டு நிர்வாக உறுப்பினர் முற்றுகை அல்லது வன்முறை செயல்களால் துன்புறுத்தப்படும் பொழுதுகூட அரசினர் கடும் நடவடிக்கை எடுக்காததுடன் தொழிலாளரின் கட்டாயப்படுத்தும் நடவடிக்கைகளுக்குப் பணிந்து போகும்படி நிர்வாகிகளை வற்புறுத்தியது. அமைச்சர்கள் நிலையிலிருந்து இத்தகைய வற்புறுத்தல் வந்ததுடன் வன்முறையை அடக்கவும், வன்முறைக்கு எதிராக போதுமான பாதுகாப்பு கொடுக்கவும், அமைச்சர்கள் முயலாதது எல்லோருக்கும் வெளிப்படையாக தெரிந்தபொழுது தொழில் அமைதியிலும் சட்டம்-அமைதி காப்பதிலும் ஒரு சிறிதும் நாட்டமில்லாத சில அரசியல் கட்சிகள் இச் சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொண்டு தொழிலில் குழப்பம் ஏற்படுத்தின.

இம் மாநிலத்தில் நிலவிவரும் அச்சம் தரத்தக்க தொழிலுறவின் போக்கை எடுத்துக்காட்டி அரசுக்குப் பல முறையீடுகள் செய்து கொள்ளப்பட்டும் அவற்றால் பயன் எதுவும் ஏற்படவில்லை. இம் மாநிலத்தில் உள்ள இயல்பான சமரச அமைப்பு புறக்கணிக்கப் பட்டு வருவதும் அமைச்சர்கள் நிலையில் சமரசம் நடந்தது தெளிவாயிற்று. தொழிலாளர்களுக்குச் சாதகமாக அமைச்சர்கள் செய்தித் தாள்களின் வாயிலாக வெளியிடும் அறிக்கைகளின் காரணமாகவும் தொழிலாளர்கள் ஒழுங்கீனத்தை அடக்க அவர்கள் முயற்சி செய்யாமையும் பல தொழிற்சாலைகளில் தொழில் உறவு சீர்குலைந்தது. தொழிற்சாலைகளில் ஒழுங்கீனமாக



செயல்களில் ஈடுபடுவதுடன் மட்டுமல்லாமல் சில முக்கிய தொழில் அதிபர்கள், நிர்வாகப் பணியாளர் இல்லங்களிலும் தொழிலாளர் சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கைகளைச் சில நேர்வுகளில் நடத்தினர். இத்தகைய தொல்லைகளில் காவலர்கள் வெளிவிருக்கும் பார்வையாளர் போலும், சட்டம் மீறப்படுவதையும் விரும்பத் தகாத செயல்களையும் தடுக்கச் சிறிதளவு முயற்சிகூட எடுக்கத் தயாராக இல்லாதது போன்ற கருத்து ஏற்படும் சூழ்நிலை நிலவியது.

வேலை நிறுத்தத்தில் வன்முறை உருவான ஒரு சூழ்நிலையில் நிர்வாகிகள் தொழிற்சாலைக்குள் நுழைய காவலர் பாதுகாப்பு அளித்தபொழுது தொழிலாளர்கள் காவலரையும் மீறி அவர்களையும் நிர்வாகிகளையும் தாக்கினர். முடிவாக தொழிற்சாலைக்கு வெளியே துப்பாக்கிச் சூடல் செய்து காவலர் நிலையைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

வேறு ஒரு நேர்வில் ஒரு தொழிற்சாலையில் வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்கள் தொழிற்சாலைச் சொத்திற்கு அதிக அளவு சேதமும் நிர்வாகிகளுக்கு காயங்களும் விளைவித்தபோது காவலர்கள் காலிகளின் வெறியாட்டம் நடந்து முடிந்த பின்னரே வந்தனர். இந்த நேர்வில் நிர்வாகிகளைத் தாக்கியதற்கும், தொழிற் சாலைக்குச் சேதம் விளைவித்ததால் நீதி மன்றங்களில் அவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டிருந்த போதிலும்கூட அவர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளும்படி அமைச்சர்கள் நிர்வாகிகளை வற்புறுத்தினர். இம்மாதிரியான ஆட்களை வேலையில் மீண்டும் அமர்த்திக்கொள்ளும்படி நிர்வாகிகள் வற்புறுத்தப் பட்டதுமின்றி, அவர்களில் நிறுவன ஊழியத்திலிருந்து விலகத் தயாராகவுள்ளவருக்கு நன்னடத்தைச் சான்றிதழ் வழங்கும் படியும் நிர்வாகிகள் வற்புறுத்தப்பட்டனர். இதன் விளைவாக வன்முறையில் ஈடுபட்டோரை நீக்கி தொழிற்சாலையை மீண்டும் நடத்தினால் போதுமான பாதுகாப்பு அளிக்கப்படும் என்ற உறுதியை அரசினரிடமிருந்து நிர்வாகிகள் பெறுததால் இத் தொழிற்சாலை மூடப்பட்டது.

தொழில் உறவில் இத்தகைய அவலநிலை ஏற்படக்காரணமாக இருந்த அரசு கொள்கைகளின் முக்கியக் கூறுகளாயிருந்தவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

(1) நிர்வாகிகளைத் துன்புறுத்தலையும் வன்முறையையும் அடக்கக் காவலர் போதிய நடவடிக்கை எடுக்காதது.

(2) தொழிலாளர்களின் தகராறுகளில் அமைச்சர்கள் அடிக்கடியும் இடைவிடாமலும் தலையிடுதல்.

(3) சமரச அறிக்கைகளின் மேல் உடனுக்குடன் உத்தரவுகள் பிறப்பிக்க மறுத்தல்.

**திரு. ஆர். கருப்பையா :** ஒலிபெருக்கி அமைத்துக் கொள்ளுவதற்கு அனுமதியைச் சென்னையில் இருந்து பெறவேண்டுமென்ற நிலை இருக்கிறது. இந்தப் பொறுப்பு மாவட்ட கலெக்டர் அவர்களிடத்தில் ஒப்படைக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அந்தந்த மாவட்ட நீதியிலும் வழங்க ஏற்பாடு இருக்கிறது.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :** இந்தமாதிரி ஒலிபெருக்கி பற்றிய கம்ப்ளெயின்ட்ஸ் எவ்வளவு விசாரிக்கப்பட்டுள்ளன ? அதனுடைய தொந்தரவு, விசாரணைக்குப் பிறகு குறைந்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** புகார்களுடைய எண்ணிக்கையின் விவரம் இல்லை. புகார்கள் வந்தால் உடனடியாகத் தகவல் தெரிவிக்கப்பட்ட இடத்திற்குச் சென்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**திரு. எம். எஸ். மணி :** தலைவர் அவர்களே, மார்கழி மாதத்தில் கோவில்களிலே ஒலிபெருக்கி வைத்துக்கொள்ள இலவச அனுமதி கொடுத்திருக்கிறார்கள். ஒரு பர்லாங் தூரத்திற்குள் இரண்டு மூன்று கோவில்கள் இருந்தால் இரண்டு மூன்றிலும் ஒலிபெருக்கி வைத்திருப்பதால் பொதுமக்களுக்கு இடைஞ்சலாக இருக்கிறது. ஆகவே, குறிப்பிட்ட நேரத்தில்தான் வைக்கவேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிடுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** என்னுடைய வீட்டு வாசலில் ஒரு கோவில் இருக்கிறது. மார்கழி மாதத்தில் இப்படிப்பட்ட நிகழ்ச்சி நடைபெறுகிறது. அது என்னைக் காலையில் விரைவில் எழுப்ப உதவியாக இருக்கிறது.

**திரு. கே. விநாயகம் :** ஒலிபெருக்கியை திருமணம், பொதுக் கூட்டம் போன்ற விசேஷங்களில் வைக்க வேண்டியதுதான். ஆனால் விளம்பரத்திற்காக ஒலிபெருக்கி பயன்படுத்தப்படுகிறது. முதலமைச்சர் அவர்களுடைய தொகுதியில் வடபழனியில் திருவிழாக் காலங்களில் ஒலிபெருக்கி வைத்து இந்த சோப்பை வாங்குங்கள், இந்த எண்ணெயைக் குடியுங்கள், இந்த மாத்திரையைச் சாப்பிடுங்கள் என்று விளம்பரம் நடப்பது தெரியுமா ? அவர்கள் லைசென்ஸ் வாங்கிக் கொண்டு நடத்துகிறார்களா? உங்கள் கட்சிக்காரர்கள் நடத்துவதாகக் கேள்வி, அதையும் விசாரிக்க முடியுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அவர்கள் கட்சிக்காரர்களைப் பற்றி நாங்கள் சொன்னால் திரு. விநாயகம் அவர்களுக்கு ஆத்திரம் கொப்பளிக்கிறது. உடனே, அப்படிச் சொல்லக்கூடாது என்று கூறுகிறார்கள். அவர்கள் சொல்லுவதைப் பற்றி நான் அவ்வளவாக வருத்தப்படவில்லை. வடபழனி திருவிழாவில் அப்படி நடந்திருந்





தால் அதைத் தடுப்பதற்கு நிச்சயமாகக் கவனிக்கப்படும். தி.மு.க. ஆட்சியில் திருவிழாவில் ஒலிபெருக்கிக்கும் தடையா? என்றெல்லாம் சொல்லாமல் இருந்தால் போதும்.

### *Fire accidents in Thanjavur district*

*69 *Q.*—THIRU N. KASIRAMAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of persons taken into custody in connection with the mysterious fire accidents that have taken place in Kumbakonam, Thanjavur, Mayuram and other surrounding areas of Thanjavur district in the course of the third week of July 1968 and in the first half of August 1968;

(b) whether some chemicals are being used by the miscreants to create fire in the above said places; and

(*c*) whether the Government have appointed any special police official to help the investigation by the local police?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) 451 பேர் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

(இ) இல்லை.

(உ) இல்லை.

THIRU T. MARTIN : May I know from the Hon. Minister whether these fire accidents were intentional or accidental?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்த விபத்துக்கள் எல்லாம் விபத்துக்கள்.

### ஹையர் கிரேடு ஆசிரியர் பதவிகள்

*70 வினா—**திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஹையர் கிரேடு ஆசிரியர்களின் பதவிகளை செகண்டரி கிரேடாக மாற்றும் உத்தேசம் தமிழக அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்படி எத்தனை ஹையர் கிரேடு ஆசிரியர்கள் செகண்டரி கிரேடு ஆசிரியர்களாவார்கள் ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) உயர் துவக்கத்தரப் பதவிகளில் (High Grade Posts) பணிபுரிந்து வரும் இடைநிலைத் தர ஆசிரியர்கள் (Secondary Grade Posts) அனைவரும் இடைநிலைத் தரப் பதவிகளில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

இரண்டாம் நிலை ஆசிரியர்களாகப் பணி புரிகிறார்கள். ஆகவே மேற்சொன்னதன் அடிப்படையில் இவர்களுக்கும் முதல்நிலைத் தமிழ் ஆசிரியர்களின் சம்பளம் தரப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: ஹையர் கிரேட்களை எல்லாம் செகண்டரி கிரேடாக மாற்றிவரும் முயற்சியின் அடிப் படையில்தான் அங்கு பணி புரியும் செகண்டரி கிரேட் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு செகண்டரி கிரேட் சம்பளம் தரப்படு கிறது. ஆனால் இங்கு இதில் இரண்டாம் நிலையை முதல் நிலையாக மாற்றும் உத்தேசம் இல்லை. இதில் இரண்டாம் நிலைப் பதவிகளும், முதல் நிலைப் பதவிகளும் இருக்கும். பதவி உயர்வு வருகிறபோது முதல் நிலை ஆசிரியர்களுக்கான இடம் காலியாகும்போது அதில் அவர்கள் நியமிக்கப்படும்போது அவர்கள் முதல்நிலை ஆசிரியர் களுக்கான சம்பளத்தைப் பெறுவார்கள்.

திரு. ஆர். கருப்பையா: தனியார் உயர்நிலைப் பள்ளிகளில் ஆறு, ஏழு வகுப்பு மாணவர்களுக்குக்கூட தமிழ் ஆசிரியர்களே தமிழ் சொல்லிக்கொடுக்கிறார்கள். ஆனால் அரசாங்க உயர்நிலைப் பள்ளி களில் எட்டாவது வகுப்பிற்கு மேல்தான் தமிழ் ஆசிரியர்கள் இருக்கிறார்கள். ஆகவே, ஆறாவது வகுப்பிற்கு வந்தவுடன் தமிழ் ஆசிரியர்கள்தான் தமிழைப் போதிக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பல பள்ளிகளில் 6, 7, 8-ம் வகுப்புகளில் தமிழ் ஆசிரியர்களே தமிழ் சொல்லிக் கொடுத்து வருகிறார்கள். சில பள்ளிகளில் அது இல்லாமல் இருக்க லாம். தேவையின் அடிப்படையில் அந்த முயற்சிகளில் ஈடுபட லாம். எட்டாவது வகுப்பு வரையில் இரண்டாம் நிலை ஆசிரியர்கள் பல பள்ளிகளில் இருந்து வருகிறார்கள்.

புலவர் பொ. பொன்னம்பலம்: இருபத்து நான்கு பீரியடுகள் எடுக்கக்கூடிய தமிழ் ஆசிரியர்கள் முதல்நிலை ஆசிரியர்கள் என்றும், அப்படி 24 பீரியடுகள் இல்லை என்றால் அவர்கள் இரண்டாம்நிலை ஆசிரியர்கள் என்றும் பாட நேரங்களை அடிப் படையாக வைத்துப் பகுத்திருக்கிறார்கள். படிப்புத் தகுதியை வைத்துப் பகுக்கவில்லை. ஆகவே அதை மாற்றியமைத்து படிப்புத் தகுதியை வைத்து 24 பீரியடுகள் இல்லாமலிருந்தாலும் ஒரே நிலையாக ஆக்க அரசு முற்படுமா என்று அறிய விழைகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அப்படி இல்லை. Degree in the Language plus S.S.L.C., B.T. or B.Ed. இப்படி இருப்பவர்களும், பீ.ஓ.எல். படித்தவர்கள், எஸ்.எஸ்.எல்.சி. முடித் துவிட்டு, எல்.டி., பி.டி., படித்திருந்தால், எஸ்.எஸ்.எல்.சி. படித்து ஓரியண்டல் டைட்டில் அல்லது பண்டிட் பயிற்சி பெற்றிருந்தாலும் இவர்கள் தகுதி அடிப்படையில் முதல் நிலை ஆசிரியர்களாக கருதப் படுகிறார்கள். ஓரியண்டல் டைடில், வித்துவான், புலவர் பரீட்சை படித்துவிட்டு செகண்டரி கிரேட் ட்ரெயினிங் பெற்றவர்கள்





எஸ்.எஸ்.எல்.சி. வரை படிக்காமல் அதற்குக் குறைவாகப் படித்த வர்கள் இரண்டாம் நிலை ஆசிரியர்களாகத் தகுதியைப் பொறுத்த வரையில் கருதப்படுகிறார்கள்.

*Underground drainage system in Vellore*

* 72Q.—THIRU M. P. SARATHI: Will the Hon. the Minister for Education and Health be pleased to state the present stage of the scheme for the provision of under ground drainage system in Vellore Municipality?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: வேலூர் நகராட் சிக்கு பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. மா. பா. சாரதி: வேலூர் நகராட்சி, சாதாரண சிறு சிறு டிச்சஸ் கட்டுவதற்குக் கூட அனுமதிக்கப்படுவதில்லை. அதை உத்தேசித்து அங்கு பாதாளச் சாக்கடைத் திட்டத்தை உடனடி யாக, அது பெரிய நகராக இருக்கும் காரணத்தால், எடுத்துக் கொள்ளும் உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இப்போது உத்தேச மில்லை என்று சொன்னேன். நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 12½ கோடி ரூபாய் தான் நீர் வழங்கும் திட்டத்திற்கும், பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதில் ஏற்கனவே செய்து கொண்டு வருகிற பகுதிகளையும் எடுத்துக்கொள்ளவேண்டும். புதிதாகவும் எடுத்துக் கொள்ள வேண்டும். நான்காவது திட்டக் காலத்தில் குறிப்பிட்ட சில நகரங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. அத்திட்டத்தில் வேலூர் நகரம் வரவில்லை. பிறகுதான் அது கவனிக்கப்பட வேண்டும்.

திரு. நா. வீராசாமி: வேலூர் நகரம் வட ஆர்க்காடு மாவட்டத் தின் தலைநகராக இருக்கிறது. அங்கு சி.எம்.சி. ஹாஸ்பிட்டல் இருக்கிறது. அகில இந்தியாவிலிருந்தும் அங்கு நோயாளிகள் வரு கிறார்கள். அதில்லாமல், மத்திய அமைச்சர்கள், மாநில அமைச்சர் கள் போன்ற முக்கியஸ்தர்கள் எல்லாம் அடிக்கடி அங்கு வந்து கொண்டிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட நகரத்தில் பாதாளச் சாக்கடை இல்லாமல் அதன் சுகாதாரம் கெட்டுப் போகிறது. ஆகவே அரசு இதைத் தனியாகப் பரிசீலனை செய்து உடனடியாக நடவடிக்கைகள் எடுப்பதற்கு வழி செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: நான்காவது திட்டத் தில் திருச்சி, திருநெல்வேலி, கடலூர், காஞ்சிபுரம், சேலம் போன்ற பெரிய நகரங்கள்தான் இருக்கின்றன. நிதி வசதி ஏற்படும்போது வேலூர் கவனிக்கப்படும்.

திரு. ஏ. சி. நரசிம்மன்: பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு அனுமதி தராவிட்டாலும் அவ்வப்போது பெரிய, பெரிய மேஜனரி டிச்சஸ் கட்டுவதற்கு உடனடியாக அனுமதி வழங்குவதற்கு

[1970 ஜனவரி 24

**திரு. வை. சுவாமிநாதன் : இப்போது இந்த ஹையர் கிரேட் ஆசிரியர் பயிற்சித் திட்டத்தை எடுத்து விடும் உத்தேசமுண்டா ?**

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இப்போது ஹையர் கிரேட் பதவிகளில் பணி புரிந்து வரும் செகன்டரி கிரேட் ஆசிரியர்களுக்குப் படிப்படியாக செகன்டரி கிரேட் ஊதியம் தருவது என்ற முறையில் அளிக்கப்பட்டு வருகிறது. இனி ஹையர் கிரேட் போஸ்ட் வைப்பதில்லை. அது மெல்ல, மெல்ல மாற்றப்பட்டு வருகிறது.

**திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** செகன்டரி கிரேட் பாஸ் செய்துவிட்டு இடம் இல்லாத காரணத்தினால் ஹையர் கிரேட் போஸ்டில் ஆசிரியர்கள் பலர் வேலை செய்து வருகிறார்கள். அவர்கள் மிகவும் மன வேதனையோடு அதில் வேலை செய்யவேண்டியிருப்பதால் இடம் இல்லாவிட்டாலும் அவர்களுக்கு செகன்டரி கிரேட் சம்பளமாவது கொடுத்து உதவ அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அந்த முயற்சிதான் 1967-68-ல் எடுக்கப்பட்டது. அப்போது 14,000 செகன்டரி கிரேட் ஆசிரியர்கள் ஹையர் கிரேட் பதவிகளில் வேலை புரிந்து வந்தார்கள். இதுவரையில் படிப்படியாகக் கொடுக்கப்பட்ட வகையில் 11,000 ஆசிரியர்கள் செகன்டரி கிரேடு ஊதியம் பெறுகிறார்கள். 1970–71-ல் 2,000-த்திலிருந்து 3,000 ஆசிரியர்கள் வரையில் எடுத்துக்கொள்ளப்படுகிற நிலைமையிருக்கிறது.

**புலவர் பொ. பொன்னம்பலம் :** ஹையர் கிரேட் ஆசிரியர்கள் பதவிகளை எந்த எந்த அடிப்படையில் செகன்டரி கிரேடாக மாற்ற அரசு கருதியுள்ளது என்று அறிய விழைகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஹையர் கிரேட் பதவிகளில் இப்போது செகன்டரி கிரேட் ஆசிரியர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்தப் பதவிகளில் செகன்டரி கிரேட் ஆசிரியர்கள் பணியாற்றி வருவதால் அவர்களுக்கு செகன்டரி கிரேட் சம்பளம் தரவேண்டுமென்ற கோரிக்கை வந்ததன் அடிப்படையில் தான் அவர்களுக்கு அந்தச் சம்பளம் தருவது என்ற முடிவு எடுத்து 11,000 ஆசிரியர்களுக்குத் தரப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 2,000-ல் இருந்து 3,000 வரையில் அந்த ஆசிரியர்கள் அதில் எடுத்துக்கொள்ளப்படுவார்கள். ஹையர் கிரேட் பயிற்சி, ஹையர் கிரேட் ட்ரெயினிங் இப்போது நிறுத்தப்பட்டு விட்டது. இனி ஹையர் கிரேட் போஸ்ட்கள் இருக்காது. இப்போது ஹையர் கிரேடில் உள்ள ஆசிரியர்கள், அவர்கள் காலம் முடிகிற வரையில் ஹையர் கிரேடில் இருப்பார்கள்.



1970 ஜனவரி 24]

**முன்னாள் மாவட்டக்கழக உயர்நிலைப்பள்ளி தமிழாசிரியர்கள்**

* 71 வினா—புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடை அளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் முழுத் தகுதி பெற்ற தமிழாசிரியருள் பெரும்பான்மையோர் முதனிலைத் தகுதி கொடுக்கப் பெறுமலிருப்பது அரசுக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஆம்.

**புலவர் பொ. பொன்னம்பலம் :** பாட நேரங்களை, அதாவது பீரியட்களை அடிப்படையாகக் கொண்டு முதல்நிலை அல்லது இரண்டாம் நிலை என்றிருக்கும் பாகுபாட்டை நீக்கி, தகுதி பெற்ற அனைவரையும் முதல்நிலையாக்க அரசு முற்படுமா என்று அறிய விழைகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவர்களின் படிப்பின் தகுதி அடிப்படையில்தான் முதல்நிலை, இரண்டாம்நிலை என்று வைக்கப்பட்டிருக்கிறது. முதல்நிலை ஆசிரியர்கள் உயர்நிலைப் பள்ளிகளில் பாடம் சொல்லிக் கொடுக்கிறார்கள். இரண்டாம் நிலை ஆசிரியர்கள் எட்டாவது வகுப்பு வரையில் உள்ள வகுப்புகளுக்கு பாடம் சொல்லிக் கொடுக்கிறார்கள். திருச்சி மாவட்டதைப் பொறுத்தவரையில் 40,000 முதல்நிலை ஆசிரியர்கள் முதல் நிலைக்கான தகுதி பெற்றிருந்தும்கூட முதல்நிலையில் சேர்க்கப்படாததற்குக் காரணம், இடம் காலி ஏற்படுவது இல்லை. இடங்கள் காலியாகும்போது சீனியாரிட்டி அடிப்படையில் அவர்கள் முதல் நிலை ஆசிரியர்களாக மாற்றப்படுவார்கள்.

**திரு. நா. சௌந்தரபாண்டியன் :** கன்னியாகுமரி மாவட்டத்தில் பல முதல்நிலைத் தமிழ் ஆசிரியர்களின் பதவிகள் நிரந்தரமாக்கப்படவில்லை. அப்பிரச்சினை கடந்த ஆறு ஆண்டுகளாக இருந்து வருகிறது. இதை உடனடியாகத் தீர்க்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இந்தக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை. கன்னியாகுமரி மாவட்ட ஆசிரியர்களின் பிரச்னைகள் பரிசீலிக்கப்பட்டு அவ்வப்போது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இது பற்றித் தனியாகக் கேள்வி போட்டால் பதில் அளிக்கலாம்.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம் :** செகன்டரி கிரேட் படித்து விட்டு ஹையர் கிரேடில் வேலை செய்துவரும் ஆசிரியர்களுக்கு செகன்டரி கிரேட் சம்பளம் தரப்படுவதாகச் சொன்னார்கள். அதேபோல், முதல்நிலைத் தமிழ் ஆசிரியர்கள் பதவிகள் காலியாக இல்லை என்பதால் முதல்நிலை ஆசிரியர்கள் தகுதி பெற்றவர்கள்

[1970 ஜனவரி 24

ஏற்பாடு செய்யப்படுமா? ஒவ்வொன்றுக்கும் சென்னைக்கு வந்து ஸானிட்டரி என்ஜினியர் அவர்களிடம் உத்தரவுகள் பெற வேண்டியிருப்பதால் பல சிரமங்கள் ஏற்படுகின்றன. ஆகவே வேலூர் நகராட்சியைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு மேஸனரி டிச்சஸ் கட்டிக் கொள்வதற்கு அனுமதி வழங்கப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** வேலூர் நகரத்தைப் பொறுத்தவரையில் 68-ம் ஆண்டில் ஆணையர் ஒரு திட்டத்தை அனுப்பி பாதாளச் சாக்கடை கட்டுவதற்கான திட்டத்தை ஆராயும்படி தலைமைப் பொறியாளர் அவர்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறார். பொறியாளர் அவர்கள் அதைப் பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். வேறு வகையில் திட்டங்களை மேற்கொள்ள வேண்டுமென்றால் வேலூர் நகராட்சி, முறைப்படி விண்ணப்பித்துக் கொள்ளுமானால் அதைப் பரிசீலித்து, செய்யக்கூடியதைச் செய்ய முயலலாம்.

## Science Laboratories for evening College students

* 73 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) whether the Government propose to utilise the Presidency College Science Laboratories for evening College students;

(b) whether the Government have received any petition of grievences from the students of the Evening College; and

(c) if so, the details thereof and the action taken thereon?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ) இல்லை.

(ஆ) & (இ) சென்னை, அரசினர் கலைக்கல்லூரியிலாவது அல்லது சென்னை மாநிலக் கல்லூரியிலாவது, இரசாயனம், பௌதிகம் ஆகிய பாடங்களை முக்கிய பாடமாகக் கொண்ட பி.எஸ்.சி. பட்டப்பாட முறையைத் துவக்குமாறு வேண்டி, சென்னை கலைக் கல்லூரியுடன் இணைக்கப்பட்டுள்ள மாலை நேர வகுப்புகளில் பயிலும் 3 மாணவர்களிடமிருந்து 1968 ஜூன் திங்களில் மனு ஒன்று பெறப்பட்டது. சென்னை, அரசினர் கலைக் கல்லூரியில் நடைபெறும் மாலை நேர வகுப்புகளில் பௌதிகத்தை முக்கிய பாடமாகக் கொண்ட பி.எஸ்.சி. பட்டப் பாட முறை 1969–70-ம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டுள்ளது.

**திரு. டி. மார்டின்:** ஸ்பீக்கர் சார், மாலை நேரக் கல்லூரிகள் சென்னையில் மட்டும் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக கூறுகிறேன். இந்த ஏற்பாட்டை, நெல்லை, மற்றும் மதுரை போன்ற முக்கிய மாவட்டத் தலைநகரங்களில் செய்ய அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, சென்னையிலே ஏற்பாடு செய்திருப்பது போன்று, முக்கியமான மாவட்டங்களின் தலைநகரங்களில் ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. அரசு இதுபற்றி பல்கலைக் கழகத்



1970 ஜனவரி 24]

துணைவேந்தரிடம் சொல்லியிருக்கிறது. ஆங்காங்கு வசதியுள்ள இடங்களில் மாலை நேரக் கல்லூரிகளுக்கு மற்றவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்ற திட்டத்தின் அடிப்படையில் பல்கலைக் கழகத் துணைவேந்தர் ஈடுபட்டிருக்கிறார்.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம்:** தலைவரவர்களே, பிசிக்ஸ் இரசாயனம் படிக்கக் கூடியவர்களில் சிலர் ஏப்ரல் மாதத்திலே ஃபெயில் ஆகிவிடுகிறார்கள். அவர்கள் அக்டோபர் பரீட்சைக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட மாணவர்களுக்கும், மாலை நேரக் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்கும், அரசாங்கத்தின் ஆளுகையில் இருக்கும் இரசாயனக் கூடங்களைப் பயன்படுத்த வாய்ப்பளிக்க அரசாங்கம் உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, அப்படிப்பட்ட வகையிலேதான் சென்னையிலே இந்த ஆண்டு பி.எஸ்.சி. (பிசிக்ஸ்) படிக்கும் 30 மாணவர்களுக்கு மட்டும் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாலைக் கல்லூரி 2½ மணிநேரம்தான் நடைபெறுகிறது. பி.யூ.சி.யிலே உள்ளவர்கள் அந்த ஆய்வுக் கூடத்தைப் பயன்படுத்த வேண்டும், பி.எஸ்.சி. படிப்பவர்களும் பயன்படுத்த வேண்டும். பகல் நேரத்தில் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. எனவே, குறைந்த அளவு மாணவர்களே பயன்படுத்த வாய்ப்பிருப்பதால், பி.எஸ்.சி. (பிசிக்ஸ்) படிக்கும் 30 மாணவர்கள் எடுக்கப்பட்டிருக்கிறார்கள். இதற்குமேல் எடுக்கக்கூடிய வாய்ப்பு கலைக் கல்லூரியில் இல்லை.

DR. H. V. HANDE: Sir, this is a long-standing problem which was taken up last year even by the Vice-Chancellor. Are the Government aware of the fact that in the Arts College those students who have taken up science subjects like Chemistry and Physics in the P.U.C. are not able to prosecute their studies further because for the degree courses there is only Mathematics or some Economics subject. These students have made a number of representations to the Ministry and the Ministry has also promised to consider their grievances sympathetically. In view of this, will the Hon. Minister come forward with a categorical answer that they will introduce science subjects for degree courses in the Government Arts College itself. If it is not possible to do it immediately, will it be possible for the students of the Arts College to study science subjects in the Presidency College?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, நான் முதலிலே சொல்லியபடி, மாலை நேரக் கல்லூரி 2½ மணி நேரம்தான் நடைபெறுகிறது. பி.யூ.சி. வகுப்பிலே நேச்சுரல் சயன்ஸ், பிசிக்ஸ், கெமிஸ்டிரி; மாத்தமடிக்ஸ் ஆகிய பாடங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அவர்களும் அந்த அளவுக்குப் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. பி.எஸ்.சி.-க்கு அதிக இடங்கள் ஒதுக்கப்படாமல் 30 மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. பி.எஸ்.சி., பி.ஏ. மாநிலக் கல்லூரியில் இருக்கிறது. கலைக் கல்லூரி

யில் பி.எஸ்.சி., பி.யு.சி. இருக்கிறது. கலைக் கல்லூரியில் 30 பேர் எடுக்கப்பட்டிருக்கிறார்கள் மாநிலக் கல்லூரியில் மாலை நேரக் கல்லூரி ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு பரிசீலிக்கப்பட வேண்டியிருக்கிறது. பல்கலைக் கழகத் துணை வேந்தர் ஆய்வு செய்து வருகிறார்.

DR. H. V. HANDE : Sir, in private colleges like Theagaraya College and the New College for degree courses science subjects have been introduced. Last year even a Call Attention Notice was also given and the Hon. Minister promised to look into the matter. So, now will it not be possible to give some assurance for these students who will come to a dead end after finishing the P.U.C. as there would be no science subjects for the degree course. In view of this, will the Government make some arrangement to see that these students are taken in some other colleges to the city if it is not possible to absorb them in the Government College?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுகின்ற கருத்து பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று. பல்கலைக் கழகத் துணைவேந்தர், வாய்ப்பிருந்தால் கவனிப்பார். சாதாரணமாகப் பள்ளியிலே படிப்பவர்கள் புகுமுக வகுப்பிற்கு வருவதற்கும், மேலே வருவதற்கும் வாய்ப்புள்ளது. ஆனால், அதேபோல் வேலையிலே இருப்பவர்களுக்கும், பி.ஏ., பி.எஸ்.சி. படிப்பதற்கு வாய்ப்பு தந்து, போஸ்ட் கிராஜுவேட்டுகளாக ஆக்குவதற்கு வாய்ப்பு ஏற்படுத்துவது என்பது இயலாத ஒன்று. கூடுமான வரையில், அதற்கான வாய்ப்பு இருந்தால் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கலாம்.

*Mobile Postal Savings Bank*

* 74 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether any mobile postal savings Bank under the auspices of the Small Savings programme has been introduced in Madras City; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) ஆம்.

(இ) வலம் வரும் அஞ்சல் சேமிப்பு வங்கி ஒன்று 22—7—1969 முதல் சென்னை மாநகரில் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த வண்டியை நிலையான அடிப்படையில் நாள் முழுவதும் ஓட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது; சேமிப்புத் திட்டத்தின் கீழ் முதலீடுகளைப் பெறுவதற்காக நிகழ்ச்சி முறைப்படி, நிறுவனங்கள் தொழிற்சாலைகள், பள்ளிகள், கல்லூரிகள் ஆகிய இடங்களுக்கு இந்த வண்டி எடுத்துச் செல்லப்படும்.

**திரு. க. கோமதிசங்கரதீட்சிதர் :** சிறு சேமிப்புத் திட்டத்தின் கீழ் 'மொபைல் போஸ்டல் சேவிங்ஸ் பேங்க்' ஏற்படுத்தியதன் மூலமாக, அந்தத் திட்டம் முன்னேறி இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இந்தத் திட்டத்தினுடைய முக்கியமான நோக்கமே, இந்தச் சிறு சேமிப்புத் திட்டத்தின் முக்கியமான நோக்கமே, மிக அதிக அளவுக்குப் பணத்தைப் பெற வேண்டும், நிரம்பவும், ஏராளமாக, சமுதாயத்தின் எல்லாத் தரப்பினரிடத்திலிருந்தும் பெற வேண்டும், அபிவிருத்தி வேலைக்குக்காக சகலருடைய பங்கும் அதில் பிரதிபலிக்க வேண்டுமென்பது அடிப்படை. ஆகவே, பள்ளிக்கூடங்கள், நிறுவனங்கள், வேறு வகையான இடங்களுக்கு நாள் முழுவதும் எடுத்துச் செல்லப்படுகிறது.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** பேரவைத் தலைவரவர்களே, மக்கள் இருக்கின்ற இடத்திற்குச் சுற்றி வந்து, சேமிப்பதற்குத் தொண்டு புரியும் இந்த நடமாடுகின்ற வங்கிகளை மாவட்டங்களின் தலைநகரந்தோறும் ஏற்படுத்த அரசு முயற்சிக்குமா? அதன்மூலம் மாவட்டத் தலைநகரங்களில் உள்ள மாணவர்கள் சேமிப்பதால் அவர்களுக்கும் நன்மை, நாட்டிற்கும் நன்மை என்பதை அரசு அறியுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இந்தத் திட்டம் இந்தியாவிலேயே முதன்முதலிலே நம்முடைய மாநிலத்திலேதான் கொண்டு வரப்பட்டது. சிறுசேமிப்பு துணைத் தலைவர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களின் கருத்துரைப்படி துவக்கப்பட்டது. இந்தியாவினுடைய சிறுசேமிப்பு இயக்கத்தின் தலைவர் திரு. ஓமி சலையர்கான் அவர்கள் இதை மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாகச் சொல்லலாம் என்று பாராட்டு வழங்கினார்கள். இதிலே நல்ல பலன் வருகிறது. ஆனால் இதற்காக ஆகும் செலவுகளைக் கொஞ்சம் பார்க்க வேண்டி இருக்கிறது. 30,000 ரூபாய்க்குச் செலவிருக்கிறது. இருந்தாலும் இயக்கத்தை வளர்ப்பதற்குரிய நேரம் வரும்போது மாண்புமிகு உறுப்பினரவர்களின் யோசனையைக் கவனிக்கலாம்.

**திரு. வை. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, இந்தச் சிறு சேமிப்பு வங்கி சுற்றி வந்ததன் மூலம் எவ்வளவு ரூபாய் கிடைத்தது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அதைப்பற்றிய விவரம் இப்போது என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி கேட்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

*Discount rate for Stamp Vendors*

* 75 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state whether the attention of the Government has been drawn to the judgment of the Madras High Court on the question of discount rate reduction to be allowed to stamp vendors?

The Hon. Thiru K. A. Mathialagan: Yes. The Government have filed appeals against the decision of the High Court.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முத்திரைத்தாள் விற்பனைக்காக முதலிலே கொடுக்கப்பட்டு வந்த தள்ளுபடி விகிதம் எவ்வளவு? பிறகு எவ்வளவு தொகை குறைக்கப்பட்டது? அதற்கான காரணம் என்ன? தீர்ப்புக்குப் பின்னர் அரசு எடுத்துக் கொண்ட முடிவு என்ன?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** எந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டுமென்று சொல்லிவிட்டால் நலமாக இருக்கும். முத்திரைத் தாள்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த 'டிஸ்கவுண்டில்' மாறுதல் செய்யப்பட்டது. அதனால் பாதிக்கப்பட்டதாகக் கருதப்படும் சிலர் ஹைகோர்ட்டில் தாவா பண்ணினார்கள். அவர்களின் ஆட்சேபனை என்னவென்றால், இதைச் சட்டமன்றத்திலே விதிமுறைகளை வைக்கவில்லை, இது எங்கள் தொழிலைப் பாதிக்கிறது. அதனால் இதில் ஒரு முறைகேடு நடந்திருக்கிறது என்ற முறையிலே அவர்கள் தாவாவுக்குச் சென்றார்கள். அந்தத் தாவாவை ஹைகோர்ட் அனுமதித்தது. இருந்தாலும், சட்டமன்றத்திலே விதிமுறைகளை வைக்க வேண்டியது நியாயம்தான், இருந்தாலும் வைத்துவிட்டுத்தான் இந்தச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று விதிமுறைகள் எந்த இடத்திலும் சொல்லாததற்கான ஆதாரம் இருக்கிறது என்று நம்முடைய அரசாங்கத்தின் சார்பிலே, அதற்காக அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** ஏற்கனவே ஸ்டாம்பு வெண்டர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த தள்ளுபடி குறைக்கப்பட்ட காரணத்தினால், அவர்கள் கோர்ட்டிற்குப் போகக்கூடிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அது சரியல்ல, அவர்களுக்கு ஏற்கனவே கொடுத்தது போலக் கொடுக்கப்படவேண்டும் என்கின்ற அளவிற்குத் தீர்ப்பு வந்திருக்கிறது. அதன் பேரில் நமது அரசு அப்பீல் செய்திருக்கிறது. ஏற்கனவே இருந்ததைப் போலவே கொடுப்பதற்கு அரசாங்கம் உத்தேசிக்குமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மூலக்கேள்விக்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** முன்னால் கொடுத்து வந்த தள்ளுபடி விகிதம் எவ்வளவு? அது எவ்வளவாகக் குறைக்கப்பட்டது என்று முந்தியே கேட்டேன். அதற்குப் பதில் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இந்தக் கேள்வி உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பு பற்றியது. ஸ்டாம்புவெண்டர்களைப் பற்றிய பொது விவாதம் அல்ல.





*Currency chests in Sub-Treasuries*

*76 Q.—Thiru N. S. V. Chithan: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the State Sub-Treasuries have opened currency chests in this State to meet the difficulties created by the staff of the State Bank of India in June 1969;

(b) whether the State Government has received any such requests for opening these currency chests; and

(c) if so, the details thereof?

The Hon. Thiru K. A. Mathialagan:

(a) Yes Sir.

(b) No specific requests were received for opening of currency chests.

(c) Does not arise.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** இந்தப் பணப்பேழைகளின் சிறப்பான அம்சங்கள் என்ன என்பதை அறியலாமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஸ்டேட் பாங்கைச் சேர்ந்த ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். நம்முடைய அரசின் அலுவல்களுக்காகப் பணம் வாங்குவதும், அரசுக்குப் பணம் கொடுப்பதும் ஸ்டேட் பாங்கின் மூலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஸ்டேட் பாங்கு ஊழியர்களின் வேலை நிறுத்தம் காரணமாக அரசாங்க அலுவல்கள் சரியாக நடைபெற முடியாத ஒரு நெருக்கடி ஏற்பட்டது. அரசாங்க அலுவல்களுக்காகப் பணம் வாங்குவதிலும், அரசாங்கத்திற்குச் சேரவேண்டிய பணத்தைப் போய் கட்டுவதிலும் சிரமங்கள் ஏற்பட்ட காரணத்தினால், அரசாங்க அலுவல்கள் தடைப்படாமல் இருப்பதற்காக, தமிழ் நாட்டில் இருக்கிற 100 இடங்களில் இம்மாதிரியாகப் பணப் பேழைகளை டிஸ்ட்ரிக்ட் ட்ரெஷரி, சப் டிரெஷரிகள் ஏற்படுத்தின.

**அரசு விவசாயப் பண்ணைகள்**

*29 வினா.—திரு. கொளத்தூர் கோதண்டம்: மாண்புமிகு வேளாண்மை அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசினர் விவசாயப் பண்ணைகள் இலாபத்தில் வேலை செய்கின்றனவா?

(இ) இல்லையெனில், அதற்குரிய காரணங்கள் யாவை?

(உ) இந்த நஷ்டத்தைத் தவிர்க்க எடுத்துக் கொண்ட நடவடிக்கை யாது?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** (அ) 1967–68-ல், 64 அரசு விதைப்பண்ணைகளில், 33 விதைப் பண்ணைகள் ஆதாயத்துடன் செயல்பட்டன. மொத்தத்தில் நிகர லாபம் ரூ. 4.25 லட்சமாகும்.

(இ) விரயம் ஏற்பட்ட பண்ணைகள் பல சொற்ப வளம் கொண்ட அரசு புறம்போக்கு நிலங்களில் உள்ளன. பருவ மழை தவறியதாலும், பாசன வசதிக் குறைவாலும், இப்பண்ணைகளில் விரயம் ஏற்பட்டது.

(உ) பாசன வசதிகளை மேம்படுத்துவதற்காக தரை மட்டக் கிணறுகளை வெட்டுவதற்கும், குழாய்க்கிணறுகளை இறக்குவதற்கும் வண்டல் அடித்து மண்ணை வளப்படுத்துவதற்குமான நில வரை படங்களில் கண்டுள்ள அடங்கல் திட்டத்தைச் செயல்படுத்து வதன் மூலம், நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**திரு. கொளத்தூர் கோதண்டம்:** தலைவர் அவர்களே, இந்த விவசாயப் பண்ணைகளில் எந்த எந்தப் பயிர்களுக்கு எந்தெந்த அளவுக்கு ஒரு ஏக்கருக்கு சராசரி லாபம் கிடைத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு நஷ்டம் ஏற்பட்டிருக்கிற பண்ணைகளை அந்தப் பகுதியிலிருக்கிற நல்ல விவசாயிகளிடம் கொடுத்து, அதை லாபகரமாக ஆக்கச் செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** எந்தப் பண்ணைகளில் எவ்வளவு லாபம், எவ்வளவு நஷ்டம் என்பதைப் பற்றிய தனிக் குறிப்பு ஒன்றும் இப்பொழுது என்னிடம் இல்லை. அரசாங்கப் புறம்போக்கு நிலங்களிலுள்ள பண்ணைகளில்தான் நஷ்டம் ஏற்பட்டது. தனியார் வசம் உள்ள பண்ணைகளில் நஷ்டம் ஏற்படவில்லை. அரசாங்கப் புறம்போக்கு நிலங்களிலுள்ள பண்ணைகளைத் தனியார் வசம் கொடுப்பதற்கான செயற்குறிப்பு எதுவும் என்னிடம் தற்பொழுது இல்லை.

Thiru B. VENKATASWAMY: May I know from the Hon. Minister for Agriculture the number of agricultural farms is our State and the farms which are running at a loss?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** 1967-68 வரையிலும் 64 அரசு விதைப் பண்ணைகள் இருந்தன. அதற்குப் பிறகு இருக்கிற பண்ணைகளைப் பற்றிய செயற்குறிப்பு இப்பொழுது இல்லை.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவர் அவர்களே, இப்பொழுது விவசாயிகளுக்கு வழங்கப்படுகிற பொறுக்கு விதைகள், வீரிய கம்பு, வீரிய சோளம் போன்ற விதைகள் தனியார் பண்ணைகளிலிருந்து வாங்கப்பட்டு வருவதால், கிலோ ரூ. 10 என்ற நிலைக்கு அதிக விலை ஆகிறது. ஆகவே, தனியார் பண்ணைகளிலிருந்து வாங்காமல், அரசாங்கப் பண்ணைகளிலேயே பொறுக்கு விதைகளை தயாரித்து மலிவான விலையில் கொடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** அரசாங்க விதைப் பண்ணைகள் செயல்படும் முறையைப்பற்றியது



இந்தக் கேள்வி. பொறுக்கு விதைகள் எப்படித் தரப்படுகிறது என்பது பற்றிய குறிப்பு இப்பொழுது இல்லை. அதுபற்றித் தனிக் கேள்வி போட்டால், உரிய பதில் தரப்படும்.

Thiru K. S. KOTHANDARAMIAH: There is a small agricultural farm in Hosur cattle farm. May I know from the Hon. Minister for Agriculture and Harijan Welfare whether that farm is profitable or ornamental?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** தனிக் கேள்வி போடவேண்டும்.

## தஞ்சாவூர் மாவட்டத்தில் எலித்தொல்லை

*30 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

**தஞ்சை மாவட்டத்தில் எலித்தொல்லையை ஒழிக்க அரசு எந்த வகையில் உதவ உத்தேசித்துள்ளது?**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** தஞ்சாவூர் வட்டாரத்தில், மத்திய அரசுத் திட்டங்களின் கீழ், ஏக்கர் ஒன்றுக்கு 50 காசு மதிப்பிற்கு, துத்தநாக பாஸ்பைடு என்ற எலி கொல்லி மருந்தினை, உழவர்களுக்கு இலவசமாக வழங்குவதற்கென்று 1968-69ம் ஆண்டில் தனியாக ரூ 1.50 லட்சம் ஒதுக்கப்பட்டது. இது குறித்து இந்த ஆண்டில் ஏற்பட்ட செலவு ரூ. 1,49,978.70 ஆகும். இச் சிறப்புத் திட்டம் நிறுத்தப்பட்டுள்ளது. தற்போது உழவர்கள் தங்களுக்குத் தேவைப்படும் துத்தநாக பாஸ்பைடை அதன் 70 சதவீத விலையில் வேளாண்மை விற்பனை நிலையங்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். எஞ்சிய 30 சதவீதம் உதவித் தொகையாகக் கருதப்படும்.

**திரு. பெ. மலைச்சாமி:** தலைவர் அவர்களே, எலிகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு மேல்நாடுகளில் எலிகளுக்கு குடும்பக் கட்டுப்பாடு திட்டம் கையாளப்பட்டு வருகிறது. ஆகவே அது போல இந்த அரசும் கையாளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** இன்னும் மனிதர்களிடையேதான் நாம் குடும்பக்கட்டுப்பாடுத் திட்டத்தை நிறைவேற்றிக்கொண்டிருக்கிறோம். எலிகளுக்கு குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம் கையாளப்படவில்லை. இருந்தாலும், எலிகளை கொல்லும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டு, அதற்கான பணத்தைச் செலவழித்துக்கொண்டு வருகிறது.

**திரு. ஆர். கருப்பையா:** நஞ்சைப் பயிர்களுக்கு எலித்தொல்லை இருப்பதுபோல், அரியலூரில் புஞ்சைப் பயிர்களுக்கு, கம்பு; சோளம் போன்ற பயிர்களுக்குக் குருவி போன்ற பறவைகளினால் மிகுந்த தொல்லை ஏற்படுகிறது. கதிர் வரும்பொழுது அரித்து

விடுகிறது. அதைப்போன்று தொல்லைகள் வராமல் இருக்க அரசாங்கம் பாதுகாப்புக் கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** நான் குறிப்பிட்டிருக்கிறபடி ரூ. 2½ லட்சம் இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. ரூ. 1½ லட்சம் நஞ்சைப் பயிர்களைப் பாதுகாப்பதற்காக செலவழிக்கப்படுகிறது. புஞ்சைப் பயிர்களைப் பாதுகாப்பதற்காக மிச்சப் பணம் செலவழிக்கப்படுகிறது.

**திரு. ந. தருமலிங்கம்:** தஞ்சை மாவட்டத்தில் தொல்லை விளைவிக்கின்ற எலிகளை ஒழிப்பதற்காக நீர்ப் பாம்புகளை வளர்ப்பது என்று தஞ்சையில் நடந்த இருபோக விவசாயக் கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்ட யோசனை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** பாம்புகளை வளர்ப்பதில் அரசாங்கம் எந்தவிதமான அக்கறையும் கொள்ள முடியாது. விவசாயிகளுக்கு எலிகளைக் கொல்லவேண்டும் என்று எச்சரிக்கை தருகிற வகையில் அறிய விளம்பரங்களைச் செய்யும் முறையில் புத்தகங்கள், வெளியீடுகள் தரப்படுகின்றன.

'விவசாயிகளே, அரிய சந்தர்ப்பம் எலிகளைக் கொல்ல'

'நமது முதல் விரோதி'

'எலியைக் கொல்லுங்கள்'

'உங்கள் எதிரியின் கொம்மாளப் பேச்சு'

'கோடையிலும் எலியைக் கொல்லுங்கள்'

'எலி ஒழிப்பு'

என்று இப்படிப்பட்ட பிரசார ஏடுகள், அறிக்கைகளைக் கொடுத்துக் கொண்டு வருகிறோம். மேலும், இந்த மாநிலத்திலுள்ள விவசாயிகளுக்கு இலவசமாக எலிக் கொல்லி மருந்தையும் கொடுத்துக் கொண்டு வருகிறோம். விவசாயிகளும் அதில் அக்கறை காட்டி அந்த மருந்துகளை வாங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

### *Pre-school feeding programme*

* 31 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state whether a pre-school feeding programme designed to meet the needs of the pregnant and nursing mothers and children below four years is to be introduced in Tamil Nadu with CARE assistance?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** இக் கோரிக்கை அரசாங்கத்தின் பரிசீலனையிலுள்ளது.



**திரு. கே. விநாயகம்:** இந்த கேர் நிறுவனம் எவ்வளவு பணத்தை இதற்காக ஒதுக்கீடு செய்து சர்க்காருக்குத் தருகிறது என்று சொல்ல முடியுமா? எந்தெந்த இடத்தில் வைப்பதற்கு வேண்டிய சூழ்நிலை இப்பொழுது இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** மொத்தத்தில் ரூ. 155.875 லட்சம் அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். பீடிங் ப்ரொகிராமுக்கு ரூ. 87.500 லட்சமும், கன்ஸ்ட்ரக்ஷன் ஆஃப் பால்வாடீஸ்—க்கு ரூ. 65.000 லட்சமும், கன்ஸ்ட்ரக்ஷன் ஆஃப் கிச்சன் ஆஸ் அனெக்ஸீடு மகளிர் மன்றம் என்பதற்காக ரூ. 3.375 லட்சமும் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிலே அரசாங்கத்தின் பங்காக ரூ. 18.840 லட்சமும், பப்ளிக் காண்டிரிப்யூஷன், அதாவது மக்களிடமிருந்து வசூலிப்பது ரூ. 15,860 லட்சமும் செலவழிப்பதாக உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. முதல் கட்டத்தில், ரூ. 21.850 லட்சம் 'கேர்' நிறுவனம் தந்திருக்கிறது. ரூ. 4.705 லட்சம் அரசாங்கத்தின் சார்பிலும் ரூ. 2.715 லட்சம் மக்கள் பணத்திலிருந்தும் செலவழிப்பதாகத் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது.

**ஹாஜி ம. மு. பீர். முகம்மது:** பேரவைத் தலைவர் அவர்களே, ஊட்டச் சத்து குறைவான நிலையில், நெசவாளர்கள் நலிந்திருக்கும் காரணத்தால் அதன் காரணமாக அதிகமாக வியாதிகள் இருப்பதால், அந்தப் பகுதியில் 'கேர்' ஸ்தாபனத்தாரின் உதவியைப் பயன்படுத்த அரசு விரைவில் முயற்சி செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** நெசவாளர்களுக்கு மட்டிலும் அன்றி, வேறு பொதுவாகவே மாநிலம் பூராவிலும் இருக்கும் குழந்தைகளுக்கும், சிறு வயதுக் குழந்தைகளுக்கும் சத்துள்ள உணவு கொடுக்கத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இப்பொழுது 1,037 குழந்தைகளுக்குக் கொடுக்கப் பரிசீலனை செய்து வருகிறார்கள். சர்க்காரும் உதவியளிக்கிறது.

**திரு. எம். பூபதி:** தலைவர் அவர்களே, இந்த 'கேர்' நிறுவனத்தின் உதவியால், சுமார் எத்தனை கர்ப்பிணிப் பெண்கள் பயன் பெறுகிறார்கள்? நான்கு வயதிற்குட்பட்ட குழந்தைகள் எத்தனை பேர்கள் பயன் அடைகிறார்கள் என்று சுமாராக கணக்குக் கொடுக்க முடியுமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** இப்பொழுது ஒவ்வொரு பள்ளியிலும் 3-முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகள் 40 பேர்கள், வெளியிலே உள்ள குழந்தைகள் 40 பேர், கர்ப்பிணிப் பெண்கள் 40 பேர் ஆக 120 பேர்களுக்கு உதவியளிக்கப்பட்டு வருகிறது.

## பயிர் பாதுகாப்புக் கருவிகள் பழுதுபார்க்கும் நிலையங்கள்

* 32 வினா.—**திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு வேளாண்மை அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மாவட்டத்திற்கு ஒரு பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள் பழுது பார்க்கும் தொழிற்சாலை அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

**மாண்புமிகு (திருமதி) டாக்டர் சத்தியவாணிமுத்து :** பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள் உட்பட எல்லாவகையான வேளாண்மைக் கருவிகளையும் பழுதுபார்க்கும் பணிகளை மேற்கொள்வதற்கான வசதிகள், சென்னை உள்ளிட்ட எல்லா மாவட்டங்களிலும் உள்ள தொழிற்பயிற்சி நிலையங்களிலும், பட்டுக்கோட்டை, பவானிசாகர், கிருஷ்ணகிரி, டி. கல்லுப்பட்டி, சத்திய விஜய நகரம் ஆகியவற்றில் உள்ள கிராமவளர்ச்சிப் பயிற்சி நிலையங்களுடன் இணைக்கப் பட்டுள்ள பணிக்களரிகளிலும், திருவாரூர், கோயம்புத்தூர், சென்னை ஆகிய இடங்களிலும் வேளாண்மைத் துறைப் பணிக்களங் களிலும் கிடைக்கின்றன. பயிர்ப்பாதுகாப்புக் கருவிகளை பழுது பார்ப்பதற்காக வென்றே மாவட்டம் ஒவ்வொன்றிற்கும் பணிக்களரி ஒன்றைத் தொடங்கும் செயற்குறிப்பு எதும் தற்போது இல்லை.

**திரு. வை. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, இப்பொழுது விவசாயத்திலே பூச்சி உபத்திரவம் அதிகமாக இருக்கிறது. தினசரி தொந்தரவு அதிகமாகிவருகிறது. இந்தத் தொழில் பேட்டையில் பழுதுபார்க்க, காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே விவசாயி களுடைய சௌகரியத்தை உத்தேசித்து, பவர் ஸ்ப்ரேயர் போன்றவற்றைத் தொழில் பேட்டையில் செய்ய, விவசாய அபிவிருத்தியை முன்னிட்டு, அப்படி ஒரு தனி பயிர்ப் பாதுகாப்பு நிலையத்தை ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** இப் பொழுது மாவட்டத்திற்கு ஒரு தொழிற்சாலை வேண்டும் என்று கேட்கிறார்கள். இப்பொழுது எல்லா மாவட்டங்களிலும் பழுது பார்க்க வசதி இருக்கிறது. புதிய கருவிகளை உற்பத்தி செய்வது பற்றி இப்பொழுது அப்படிப்பட்ட யோசனை இல்லை.

**திரு. தி. பொன்னுமலை :** தலைவர் அவர்களே, தற்போது, மருந்து தெளிக்கும் கருவிகள் ஒரு சில நேரங்களில்தான் தேவைப் படுகிறது. குறிப்பாக, சம்பா நடவு நட்டவுடன் ஒரு மாதத் திற்குள்ளாகவும் தேவைப்படுகின்றன. அந்த நேரத்தில் உடனுக்குடன் அத்தக் கருவிகளைப் பழுது பார்க்கவேண்டிய ஏற்பாடுகளை செய்ய சர்க்கார் முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** உரிய காலத்தில் பழுது பார்க்க அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது. தனியாக சிறு சிறு தெளிப்பான்கள் மூலம் கையினால் மருந்து தெளிப்பதோடு, விமானத்தின் மூலம் தெளிக்கவும், பயிர்களைப் பாதுகாக்கவும் அரசாங்கம் தீவிர போக்கை செய்துவருகிறது. இந்த ஆண்டு அதிக அக்கறை காட்டுகிறது.



## வேளாண்மைக் கல்லூரிகளில் முறைவகுப்பு ஏற்பாடு

* 52—வினா **திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு வேளாண்மை அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் விவசாயக் கல்லூரிகளில் இட நெருக்கடியைப் போக்கும் முறையில் ஷிப்ட் (shift) முறையைப் புகுத்தும் நோக்கம் அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** இம் மாநிலத்தில் உள்ள வேளாண்மைக் கல்லூரிகளில் முறை வகுப்பு ஏற்பாட்டைச் ( shift system ) செயலுக்கு கொண்டு வரும் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தில் வேளாண்மைக் கல்லூரியில் சேரவேண்டும் என்றும், உணவு உற்பத்தியில் நல்ல பங்கு கொள்ள வேண்டும் என்றும் மாணவர்கள் விரும்புவதால், வேளாண்மைக் கல்லூரியில் மாணவர்களை இரட்டிப்பு முறையில் அதிகரிக்கச் செய்வது அவசியம் என்பதால், அதைச் சர்க்கார் பரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இப் பொழுது இருக்கும் வேளாண்மைக் கல்லூரியில் இட நெருக்கடி ஏற்பட்டு, மாணவர்களுக்கு இடம் இல்லை என்ற பிரச்சினை இல்லை. போதுமான இடம் இருக்கிறது, போதுமான லெக்சர் ஹால்கள், லாபரட்டரி வசதிகள் இருப்பதால், மேலும் அதிகமாக இடம் வைக்க அவசியம் இப்போது எழவில்லை.

DR. H. V. HANDE : Is the Minister aware of the fact that before contemplating the shift system, the present system itself has to be rectified and a number of Lecturers who ought to be qualified in particular branches of agriculture—for instance Agronomy, Agricultural Chemistry, Agricultural Botany, Agricultural Zoology, Agricultural Engineering—are not there, a few students are terribly dissatisfied and a crisis is going on? Will the Minister for Agriculture or the Chief Minister tell us as to what exactly the stage is at which the matter rests, whether the students have come and represented to the Minister concerned their grievances and whethre the Ministry has appreciated those grievances?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** கொடுக்கப்பட்டிருக்கும் மூலக்கேள்வி, முறை வகுப்பு, ஷிப்ட் சிஸ்டம் வைக்க உத்தேசம் உண்டா என்பது. ஆனால் இப்பொழுது எழுந்திருக்கும் பிரச்சினை மாணவர்கள் தங்களுக்கு இடம் இல்லை, நெருக்கடி இருக்கிறது என்று ஆர்ப்பாட்டம், போராட்டம் நடத்தவில்லை என்பதுதான். மாண்புமிகு உறுப்பினர் கூறியது போல லெக்சரர்கள், பேராசிரியர்கள் போதவில்லை என்றால், அதைப் பற்றியும் அவர்கள் கேட்க முன்வரவில்லை. அரசாங்கம் எந்த முடிவு எடுத்தாலும், அதற்கு உடன்பட்டுச் செல்லுகிறோம் என்று

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** பேரவைத் தலைவர் அவர்களே, அப்படித்தான் அரசாங்கம் பரிசீலனை செய்தது. 63 ஹாஸ்டல்களையும் உடனடியாக அரசு இந்த ஆண்டே ஏற்று நடத்துவதற்கான பொருளாதார நிலைமை இல்லை. ஆகவேதான் இந்த ஆண்டு 20 ஹாஸ்டல்களை எடுத்துக்கொள்வது என்று முடிவு செய்திருக்கிறோம்.

* 54 வினா.—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு வேளாண்மை அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மாயூரம் தாலுக்கா மணல்மேட்டில் ஹரிசன நல ஹாஸ்டல் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு (டாக்டர்) திருமதி சத்தியவாணிமுத்து:** அம்மாதிரி செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசிடம் இல்லை.

### அரசு பெண் ஊழியர்களின் குழந்தைகள்

* 55 வினா—**திருமதி வி. ப. பழனியம்மாள்:** மாண்புமிகு வேளாண்மை அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசாங்க அலுவலகங்களில் பணிபுரியும் பெண்களின் குழந்தைகளை அலுவலக நேரங்களில் கவனித்துக் கொள்ளத் தேவையான ஆட்களை நியமித்துப் பாராமரிக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** மாதர் நலத் துறையினரால் இதுவரை இம்மாதிரி திட்டங்கள் வகுக்கப்படவில்லை.

**திருமதி வி. ப. பழனியம்மாள்:** பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையிலும் இந்தமாதிரியான திட்டங்களை எடுத்துக்கொள்ளா விட்டாலும், இது அவசியமாக இருப்பதால், இனிமேலாவது பெண்கள் நல இலாகாவின் மூலம் இது போன்ற திட்டத்தை எடுத்துக் கொள்ள அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** தலைவர் அவர்களே, அரசாங்க அலுவலகங்களில் பணிபுரிபவர்கள் அதிகமான வருமானம் பெறக்கூடியவர்களாக இருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை இப்போது எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற அவசியம் இல்லை. அப்படி அவசியம் ஏற்பட்டால், அந்தத் திட்டத்தை அரசு எடுத்துக்கொள்ளும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

### மாநில உணவு அமைச்சர்கள் மாநாடு

* 77 வினா—**திரு. கொளத்தூர் கோதண்டம்:** மாண்புமிகு உணவு, வணிக வரித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

1968-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் நடைபெற்ற இராஜ்ய உணவு அமைச்சர்கள் மாநாட்டில் நம் அரசு உணவுக் கட்டுப்பாட்டு முறை நீடிக்க வேண்டுமென்று வற்புறுத்தியதா?



**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இப் பிரச்சினை விவாதத்திற்கு வரவில்லை.

**திரு. கொளத்தூர் கோதண்டம்:** பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கரைக் கட்டுப்பாட்டு முறை நீடிக்க வேண்டுமென்று, உணவு அமைச்சர்கள் மாநாட்டிலே, நம்முடைய மாநிலத்தின் உணவு அமைச்சர் வற்புறுத்தினாரா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, உணவு அமைச்சர்கள் மாநாட்டில், சர்க்கரைக் கட்டுப்பாட்டை நீக்க வேண்டுமென்று தமிழகத்தின் சார்பில் நாம் மட்டுமே வற்புறுத்தினோம். மற்றவர்கள் கட்டுப்பாடு நீடிக்க வேண்டுமென்று சொன்னார்கள்.

### தொழிலாளர் நல சபைகள்

* 78 வினா—**திரு. கரு. சீமைச்சாமி:** மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசாங்கத் துறைத் தொழிற்சாலைகளில் முற்றிலும் தொழிலாளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட "தொழிலாளர் நல சபைகளை" ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா?

(இ) ஆம் என்றால், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்:** பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை. ஆனால் தொழிலாளர் பிரதிநிதிகள் பங்கேற்கும் பணிக் குழுக்கள் செயலாற்றி வருகின்றன.

DR. H. V. HANDE: Sir, May I know from the Hon. Minister the concrete steps that this Ministry has taken with regard to pursuing the policy of seeing to it that every trade union has leadership drawn from the rank and file of the workers themselves?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்:** பேரவைத் தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட குறிக்கோளுடன்தான் தொழிற் சட்டத்தின் மூன்றாவது பிரிவின்கீழ் பணிக் குழுக்கள் இயங்கி வருகின்றன. எல்லாப் பிரிவுகளின் கீழ் உள்ள தொழிலாளர்களும் அந்தப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட பணிக்குழுக்கள்தான் செயல்பட்டு வருகின்றன.

THIRU K. VINAYAKAM: Sir, while constituting the Labour Welfare Boards, what steps do the Government propose to take to prevent political parties influencing the labourers working in factories in electing members to these Boards?

[1970 ஜனவரி 24

எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். அரசாங்கத்தின் முடிவை ஏற்றுக் கொள்கிறோம், ஆர்ப்பாட்டம் செய்யவில்லை என்று முறையாக மதுரை, கோயம்புத்தூர், அண்ணாமலை யுனிவர்சிடி இவற்றை சேர்ந்த எல்லா கல்லூரி மாணவர்களும் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். அந்த நிலையில் இன்றைக்கு கல்லூரிகள் திறந்து, மாணவர்கள் அரசாங்கத்தின் முடிவை ஏற்றுக்கொள்ளுவது என்ற முடிவு வந்திருக்கிறது.

**திருமதி வி. ப. பழனியம்மாள் :** தலைவர் அவர்களே, உயர் நிலைப்பள்ளிகளில், எஞ்சினியரிங், புக்-கீ-பிங் என்று இஷ்டபாடங்கள் இருப்பது போல், வேளாண்மைப் பிரிவையும் ஒரு பாடமாக வைக்கத் திட்டம் போட்டு செயல்பட்டால், பி.எஸ்.ஸி. (அக்ரிகல்சர்) பட்டதாரிகள் உயர்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர்கள் வேலை பார்க்க வாய்ப்பு இருப்பதால், உடனடியாக அம்மாதிரிச் செய்ய அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** அந்தப் பிரச்சினை இப்பொழுது எழவில்லை.

## அரிசன மாணவ விடுதிகள்

* 53 வினா.—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு வேளாண்மை அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசாங்கத்தின் உதவி பெற்று 'தனியார்களால்' நடத்தப்படும் 'ஹரிசன் வெல்பேர் ஹாஸ்டல்களை' அரசாங்கமே ஏற்று நடத்தும் உத்தேசம் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** அரசு உதவித் தொகை பெற்று செயல்பட்டு வரும் எல்லா விடுதிகளையும் நாளடைவில் தாமே எடுத்துக் கொண்டு, அரிசன நலத்துறையின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் நடத்தி வருவதென 1956-ம் ஆண்டிலேயே கொள்கையளவில் அரசு தீர்மானித்தது. இதன்படி, படிப்படியாக நிறைவேற்றும் திட்டத்தின் கீழ்த் தனியார் விடுதிகளை அரசு தனது ஆளுகையின் கீழ்க் கொண்டு வருகிறது.

**திரு. கே. போஜன்:** தலைவர் அவர்களே. தற்சமயம் தனியார் துறையில் அரிசன ஹாஸ்டல்கள் எத்தனை? ஹாஸ்டலில் உள்ள மாணவர்களுக்கு உதவித் தொகை எவ்வளவு கொடுக்கப்படுகிறது?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** இப்பொழுது 63 ஹாஸ்டல்கள் தனியார் துறையில் இருக்கின்றன. இவற்றில் மாணவர் ஒருவருக்கு ரூ. 20 விதம் கொடுக்கப்படுகிறது. 20 ஹாஸ்டல்களை சர்க்கார் எடுத்துக் கொள்ள இந்த ஆண்டு தீர்மானித்திருக்கிறது.



1970 ஜனவரி 24]

**திரு. ஆ. கு. சுப்பையா :** பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களின் உணவுக்காக உதவித் தொகையாக 20 ரூபாய் கொடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். தற்சமயம் ஏற்பட்டிருக்கும் விலைவாசி உயர்வினால அந்தத் தொகை போதவில்லை. ஆகவே, இதை உத்தேசித்து அந்த உதவித் தொகையை உயர்த்திக் கொடுக்க அரசாங்கம் ஆலோசனை செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** பேரவைத் தலைவர் அவர்களே, பல ஆண்டுக் காலமாக 18 ரூபாய் தான் உதவித் தொகையாகக் கொடுக்கப்பட்டு வந்தது. திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்றவுடன், 18 ரூபாய் ஆக இருந்ததை 20 ரூபாயாக உயர்த்திக் கொடுத்திருக்கிறது. மேலும், ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் என்று உயர்த்தினாலும் அதற்கே சில லட்சங்கள் தேவைப்படும். அப்படி உயர்த்தினாலும் அந்த ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் அதிகத்தினால் அவர்களுக்கும் எந்தவிதமான லாபமும் ஏற்படாது என்று எண்ண வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு அதிகமான தொகையை ஒதுக்கித் தர வேண்டிய நிலை ஏற்படும்போது, நிதிநிலைமை சரியாக இருக்கும்போது தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. தா. விஜயராஜ் :** பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் பேரளத்தில் தனியார் துறையிலுள்ள ஹாஸ்டலை அரசாங்கம் எடுத்துக்கொள்ள சம்மதித்து, அதற்காகக் கட்டிடம் வேண்டும் என்று பார்க்கப்பட்டு, மாணவர்கள் எல்லாம் அப்ளிகேஷன் போட்ட பின்னர், திடீரென்று நிறுத்தப்பட்டிருக்கிறதே, காரணம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** தலைவர் அவர்களே, பேரளத்திலே உள்ள ஹாஸ்டலை அரசாங்கம் எடுத்துக் கொள்ள முடிவு செய்திருக்கிறது. அதற்கான தாக்கீது அவர்களுக்குக் கொஞ்சம் காலதாமதமாகக் கிடைத்திருக்கிறது. அதற்குள்ளே மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். இந்த ஆண்டு முதல் அரசு எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. ச. சிவசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு ஏற்று நடத்தவிருக்கும் 20 ஹாஸ்டல்கள் எந்தெந்த ஊரில் இருக்கின்றன என்ற விவரத்தை அறிவிக்க முடியுமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** பேரவைத் தலைவர் அவர்களே, 20 ஹாஸ்டல்களை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சமீபத்தில் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. எந்தெந்த ஊரில் என்பதை அரசு தீர்மானித்த பிறகுதான் சொல்ல முடியும்.

**திரு. சி. வீரமணி :** பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் நடத்தும் ஹாஸ்டல்களில் மாணவர்களுக்குப் போதுமான பாதுகாப்பும், கல்வியில் கவனமும் இல்லாமல் இருக்கிறது. ஆகவே, தனியார் துறையில் உள்ள ஹாஸ்டல்களை அரசு உடனடியாக ஏற்று நடத்த முன்வருமா?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்:** பேரவைத் தலைவர் அவர்களே, லேபர் வெல்பேர் போர்டு ஒன்று அமைப்பதாக உத்தேசம் இல்லை என்று என்னுடைய பதிலில் சொல்லியிருக்கிறேன். அமைக்கப்பட்டிருக்கிற ஓர்க்கிங் கமிட்டியில் தொழிலாளர் உறுப்பினர்களே தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கிறார்கள். வாக்கெடுப்பு முறையில் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதில் எந்தவிதமான அரசியல் காரணமும் இடம்பெறவில்லை.

**திரு. எ. பாலசுப்பிரமணியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஓர்க்கிங் கமிட்டி தேர்தல்பற்றி அமைச்சர் அவாகள் குறிப்பிட்டார்கள். ஓர்க்கிங் கமிட்டியைத் தொழிலாளர்களே தேர்ந்தெடுப்பது, அது வெல்பேர் போர்டு அல்ல. எல்லாத் தொழிலாளர்களும் ஓட்டுப் போட்டு, பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதில், எந்தத் தொழிற் சங்கத்திற்கு மெஜாரிட்டி இருக்கிறதோ, அந்தத் தொழிற் சங்கம்தான் அங்கீகாரம் பெறவேண்டும். மற்றச் சங்கங்களுக்கு அங்கீகாரம் அளிப்பது பொருத்தமாக இருக்காது என்பதை அரசு உணர்ந்து செயல்பட வேண்டும். அரசு இதை அமல் நடத்துமா?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பணிக் குழுக்கள் வேறு, சங்கத்திற்கு அங்கீகாரம் பெறுவது வேறு. சங்கத்திற்கு அங்கீகாரம் அளிப்பதற்கென்று சில விதிமுறைகள் இருக்கின்றன. அதற்கென தனிக் குழு இருக்கிறது. எந்த எந்தத் தொழிற் சங்கத்திற்கு அங்கீகாரம் வழங்க வேண்டுமோ அதற்கு அக் குழு அங்கீகாரம் வழங்குகிறது. பல்வேறு பிரதிநிதிகளைக் கொண்டு அந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. கே. என். குமாரசாமி:** பேரவைத் தலைவரவர்களே, இந்த ஓர்க்கிங் கமிட்டியைத் தொழிலாளர்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அடங்கியதாக அமைக்கிறோம். தனியார்த் துறையிலும் இப்போது அமைக்கப்படுகிறது. இந்தக் கமிட்டி அமைக்கப்படுவதோடு நின்று விடுகிறது. அது நன்றாகச் செயல்படுவதாகக் காணோம். இந்தக் கமிட்டி அமைப்பதைக் காட்டிலும், தொழிலாளர் பிரதிநிதிகளுக்கு பிரச்சினைகளைத் தீர்க்க அதிகாரம் கொடுக்கலாம். ஏதோ சட்டத்திற்காக ஓர்க்கிங் கமிட்டியை அமைக்கிறோமே தவிர, அது நன்றாகச் செம்மையான முறையில் செயல்படுவதில்லை. அந்தக் கமிட்டி நன்றாகச் செயல்பட, அதற்கு அதிகாரம் கொடுக்கும் முறையில் செய்ய அரசு முயற்சி செய்யுமா? அதிகாரம் உள்ள கமிட்டியை அமைக்க அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்:** தலைவர் அவர்களே, இந்தப் பணிக் குழுக்கள் நல்ல முறையில் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாக்க வேண்டுமென்ற குறிக்கோளுடன்தான் செயல்பட்டு வருகின்றன. தொழிலாளர்கள் எழுதித் தந்து பணிக் குழுக்களைக் கூட்ட வேண்டுமென்று விரும்பினால் கூட்டப்



படுகின்றன. இது சிறந்த முறையில் செயல்பட வேண்டுமென்று அரசாங்கம் நினைக்கிறது. எந்த எந்தக் குழுக்கள் நல்ல முறையில் பணியாற்றவில்லை என்ற குறைபாடுகளைக் கூறினால், தொழிலாளர் நல ஆணையர் மூலமாக நாங்கள் அந்தக் குழுக்களைக் கூட்ட முடியும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

**DR. H. V. HANDE:** Sir, there is general grievance that whenever a particular Union is headed by a non-political person working in the factory itself—whether it is a public sector or private sector—that trade union is not respected and is not properly tackled and also is not given proper treatment by the management. So, at least with regard to the public sector, will the Government come forward and give us a categorical assurance that even though a particular union is headed by the worker himself and not an M.L.A. or M.P., he will be given all respect and will not be asked to come half a dozen times by the management and treated with scant respect. If such an assurance is given it will go a long way to see that the trade union is headed by a non-party person. Will the Government give such an assurance?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பொதுத் துறையில் இருக்கிற தொழிலகங்களில் ஏராளமான ஆலோசனைகள் இருக்கின்றன. அவர்கள் தருகின்ற கோரிக்கைகள் மீது கவனித்து, நடவடிக்கைகள் எடுக்கவும் விதிமுறைகள் இருக்கின்றன. ஆகவே, எந்தத் தனிப்பட்ட தொழிலகத்தில் தொழிற் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் கோரிக்கை கொடுத்திருக்கிறார்கள், அது கவனிக்கப்படவில்லை என்பதைக் கனம் உறுப்பினர் அவர்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

(அ) கச்சிராப்பாளையம், அக்கரபாளையம் என்ற சிற்றூர்களிலே நடந்த கலவரமும் அதன் விளைவுகளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சித்தன் அவர்களும், திரு. இராமமூர்த்தி அவர்களும், திரு. மார்டின் அவர்களும் கள்ளக்குறிச்சிக்கு அருகாமையில் கச்சிப்பாளையம் மோதல்பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு எப்படி உரியதாகும் என்பதைச் சுருக்கமாக விளக்குமாறு திரு. சித்தன் அவர்களை அழைக்கிறேன்.

THIRU N. S. V. CHITHAN : Sir, under Rule 42 of the Tamil Nadu Legislative Assembly Rules, I have given notice of the following adjournment motion to discuss a matter of urgent public importance, viz., the communal clashes in Kallakurichi in South Arcot district resulting in the death of a number of people and the failure of Government to maintain law and order.

பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் கள்ளக்குரிச்சியில் ஏற்பட்ட சம்பவம் அதிர்ச்சி தரக்கூடியதாகும். கீழ்வெண்மணியில் நடைபெற்ற சம்பவம்போல் வேறு எதுவுமே நடைபெறக் கூடாது என்று நல்ல உள்ளங்கள் எல்லாம் நினைத்துக்கொண்டிருந்த நேரத்தில், கள்ளக்குறிச்சியில் உயிரோடு மக்களைக் கொளுத்தியிருக்கின்ற வேதனை தரக்கூடிய நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது. அரிசனங்களுக்கும், அரிசனங்கள் அல்லாதவர்களுக்குமிடையே மோதலே ஏற்பட்டு, பெருத்த சேதம் ஏற்பட்டிருக்கிறது. இதன் காரணமாகப் போலீஸ் மீதும் மக்கள் நம்பிக்கை இழந்து விட்டார்கள். இதுபோல் இனி நடக்காது என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லாத காரணத்தினால் மக்கள் பீதி அடைந்திருக்கிறார்கள். ஆரம்பத்திலேயே, மோதல் உண்டாகக் கூடிய பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டபோதே போலீஸ் அதைத் தடுத்திருக்க வேண்டும். அந்தப் பகுதியில், இன்று நேற்று அல்ல, கடந்த இரண்டாண்டு காலங்களாகவே அரிசனங்களுக்கும், அரிசனங்கள் அல்லாதவர்களுக்கும் இடையே தகராறுகள் இருந்து வந்திருக்கின்றன. போலீஸ் ஸ்டேஷனுக்கு வெகு அருகாமையில் உள்ள 33 வீடுகள் கொளுத்தப்பட்டிருக்கின்றன. குழந்தைகளும் பெண்களும் தீயில் இறந்திருக்கிறார்கள். கொள்ளை அடிக்கப்பட்ட நிகழ்ச்சி, மானபங்கப்படுத்தப்பட்ட நிகழ்ச்சி எல்லாம் ஏற்பட்டிருக்கின்றன. கொந்தளிப்பான பரபரப்பான நிகழ்ச்சி ஏற்பட்டவுடன் இவ்வளவு பெரிய சேதம் ஏற்படாதவாறு போலீஸ் தடுத்திருக்கலாம். தடுக்கத் தவறிவிட்டார்கள். இது ஒரு முக்கியமான, அவசரமான பிரச்சினை ஆதலால், இது குறித்து விவாதிப்பதற்கு என்னுடைய ஒத்திவைப்புத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

THIRU K. VINAYAKAM : On a point of order. Sir, three Members have given notice of the adjournment motion. Our rules clearly say that every Member has got to be given a chance to make out his case. It may be they belong to the same party. It may be the subject is the same; but every Member may have new facts to let in to convince the Chair to adjourn the House. The Chair has got to give opportunity to the concerned Members. They may belong to my party and may be the subject is the same. But the rules do not prevent the Chair from giving opportunity to each Member to give out his views before the Hon. Chief Minister. [illegible]



மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீர்மானத்தை அனுமதிப்பதா கூடாதா என்பதுபற்றிப் பேரவைத் தலைவர் ஒரு முடிவுக்கு வருவதற்கு உதவியாகத்தான் சுருக்கமாக விளக்கம் அளிக்க அவர் கோரலாம் என்கிற உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுவும் ஒரே கட்சியில் இருந்து இந்த விஷயம் பற்றி மூன்று பேர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். எதிர்க் கட்சித் தலைவரையும் கலந்து கொண்டுதான் யாராவது ஒருவரை விளக்கம் அளிக்கச் சொன்னால் போதும் என்ற முடிவுக்கும் வந்தோம். திரு. சித்தன் அவர்கள் எடுத்துக் கூறுவார்கள் என்றும் எதிர்க் கட்சித் தலைவர்தான் சொன்னார் ஆகவே இது பற்றிக் குறுக்கீடு வேண்டாம்.

THIRU K. VINAYAKAM : On a point of clarification, Sir, Yesterday there was an adjournment motion on some other subject and you were pleased to call everybody who had given notice of adjournment motions to explain. They belonged to the same party. You were pleased to call all the Members. You, Sir, cannot use your discretionary powers against our interest. Please revise your decision and allow all the three of our Members who had given notice of the adjournment motion to bring out their intention. I have made myself clear. It is now left to you, Sir, to decide.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, எதிர்க் கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்களும், மேலும் இரண்டு உறுப்பினர்களும் தந்துள்ள இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் தென் ஆற்காடு மாவட்டத்திலே, கள்ளக்குரிச்சிக்கு அருகாமையில் உள்ள கச்சிரா பாளையம், அக்கர பாளையம் என்கிற இரண்டு சிற்றூர்களிலே நடைபெற்ற கலவரம், அதன் காரணமாக விழுந்த கொலை, அதனையொட்டி ஏற்பட்ட தீயிடல் நிகழ்ச்சி இவற்றைப் பற்றியது ஆகும்.

இதிலே காவல் துறையினர் சட்டம், ஒழுங்கு, அமைதியைக் காக்கத் தவறி விட்டார்கள் என்றும், இதை எதிர்பார்த்து காவல் துறை முன்னெச்சரிக்கையாக இருக்கவில்லை என்றும் ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொடுத்த மூவருள் ஒருவரான திரு. சித்தன் அவர்களுடைய குற்றச்சாட்டாக இருக்கிறது. தமிழகத்தில் காவல் துறையினர் கண்காணிப்போடு இருக்கிறார்கள் என்றாலும் ஒவ்வொரு சிற்றூரிலும் 20 காவலர், 30 காவலர் என்று இருக்கக் கூடிய அளவுக்கு நமது போலீஸ் ஸ்டேஷன் விரிவுபடுத்தப்படவில்லை. ஆங்காங்கு ஒரு சப் இன்ஸ்பெக்டர் அளவிலும் நான்கைந்து காவலர் என்ற அளவிலும்தான் நம் பலம் இருந்து வருகிறது. அதை நாம் இன்னும் பெரும் அளவுக்குப் பெருக்குவது என்றாலும் தமிழ்நாட்டினுடைய எல்லாச் சிற்றூர்களிலும் அந்தத் தேவையை நாம் நிறைவு செய்ய முடியாது என்பதை அனுபவ பூர்வமாக ஓரளவு அனைவரும் உணர்வார்கள். சம்பவம் நடைபெற்றவுடன் அங்கு செல்ல வேண்டிய அளவு காவல் துறையினர்

சென்றிருக்கிறார்கள். உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. சம்பவங்கள் அங்கு மின்னல் போல நடந்துவிட்டிருக்கின்றன. உடனடியாக நிலைமையைக் கட்டுக்கு அடங்கச் செய்து அமைதியை ஏற்படுத்துவதில் காவல்துறை தன்னால் இயன்ற அளவுக்குக் கடமையுணர்ச்சியோடு செயல்பட்டிருக்கிறது.

ஜனவரி 16-ஆம் தேதி பொங்கலையொட்டி ஆண்டுதோறும் நடைபெறுகிற நிகழ்ச்சியின் அடிப்படையில்தான் அன்றைக்கும் அரிசன மக்கள் தாங்கள் அங்கு வசிக்கின்ற குடியானவர்களிடம் பொங்கலுக்குப் பரிசைப் பெறச் சென்றார்கள் என்றாலும் அதில் இரண்டு கோஷ்டிகள் ஏற்பட்டிருக்கின்றன. திரு. சித்தன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல இது வகுப்புக் கலவரம் அல்ல. வகுப்புக் கலவரம் என்று சொல்வதன் மூலம் தென்னாற்காடு போன்ற பெரிய மாவட்டங்களில் எங்கு பார்த்தாலும் நம்மை நாமே அறியாமல் வகுப்புக் கலவரத் தீயை வைக்க உடன்பட்டவர்களாவோம். இது வகுப்புக் கலவரமே அல்ல. இரண்டு கோஷ்டித் தகராறு. இந்த வகுப்பில் உள்ளவர்கள் அந்தக் கோஷ்டியில் இருக்கலாம். அந்த வகுப்பில் உள்ளவர்கள் இந்தக் கோஷ்டியில் இருக்கலாம். இது இரண்டு கோஷ்டிகளுக்கிடையே ஏற்பட்ட தகராறுதான். (திரு. கே. விநாயகம் : அரசியல் இருக்கலாம்).

அரசியல் இருக்கிறதோ இல்லையோ தெரியாது. போகப் போக புலன் விசாரணைக்குப் பிறகு தெரியலாம். இந்தத் தகராறில் ஒருவர் தன்னைத் தாக்க வந்தார் என்றும், தன்னைப் பாதுகாத்துக் கொள்ளத் துப்பாக்கியால் சுட்டிருக்கிறார் என்றும் தெரிகிறது. துப்பாக்கி வைத்துக்கொள்ள இவர் உரிமை பெற்றிருக்கிறார் என்றும் சொல்லப்படுகிறது. இவர் சுட்டதினால் ஒருவருக்கு முழங்காலில் காயம் ஏற்பட்டது. உடனே பலர் சூழ்ந்து கொண்டு இவரைக் கொலை செய்துவிட்டார்கள். அதைத் தொடர்ந்து அந்த கோஷ்டியில் ஒருவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். போலீசார் அந்த இடத்திற்கு விரைந்து வருவதற்குள்ளாக அங்குள்ள சாதி இந்துக்களின் 33 வீடுகளைக் கொளுத்திவிட்டிருக்கிறார்கள். அந்த வீடுகளில் இருந்த பலரும் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள வெளியேறிவிட்டார்கள் என்றாலும் இரண்டு குழந்தைகளைத் தூக்கிச் செல்வதற்காக முயன்ற தாய் குழந்தைகளுடன் தீயில் அகப்பட்டுக்கொண்டுவிட்டார். சோதி என்கிற 7 வயது குழந்தை, உமா என்கிற 4 வயதுக் குழந்தை, அந்தத் தாய் ஆக இரண்டு குழந்தைகளும் அந்தத் தாயும் நெருப்புக்குள் சிக்கி இறந்துவிட்டார்கள். அதற்குப் பிறகு ராஜாக்கண்ணு என்பவர் மருத்துவமனையில் காலமானார் என்ற செய்தி வந்தது. உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வீடு இழந்தவர்களுக்கு எல்லாம் 250 ரூபாய் வீதம் பணம் கொடுத்திருக்கிறார். முதல் அமைச்சர் அவர்களுடைய நிதியில் இருந்து இறந்தோர்களுடைய குடும்பங்களுக்கு, குடும்பம் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் வீதம் பணம் தரப்பட்டிருக்கிறது. காவல் துறையினர், நடை



பெற்ற சம்பவங்களைப் புலன் விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த அக்கிரம சேட்டைகளுக்கு யார் தலைமை வகித்தார்கள், இதில் யார் யார் இறங்கினார்கள், யார் உடந்தையாக இருந்தார்கள் என்பதைக் கண்டு, தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். ஆகவே இது அரசின் அன்றாட நிர்வாகத்தில் வருகிறதாதலால் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு ஏற்றதல்ல என்கிற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இதில் நான் குறுக்கிட விரும்பவில்லை. ஆயினும் சமீபத்தில் தான் நான் அந்த இடத்திற்குப் போய் இருந்தேன். எங்கள் கட்சிக்கும் சில தகவல்கள் கிடைத்தன. ஆகவேதான், நான் கூறிக்கொள்வது என்னவென்றால், இந்தச் சம்பவத்திற்குக் காரணம் யாராக இருந்தாலும், எந்த நோக்கமாக இருந்தாலும், அவர்கள் மீது தீவிர நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்கிற உறுதியை முதல் அமைச்சர் அவர்கள் அளிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதுதான் காவல் துறையினரிடம் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட சம்பவத்திற்குக் காரணமானவர்கள் மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று நான் உறுதி அளிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த நிகழ்ச்சி அரசின் அன்றாட அலுவல்கட்குட்பட்டிருக்கின்ற காரணத்தினாலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்திருக்கின்ற விளக்கத்தினையொட்டியும் இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து இதனை விவாதிக்கத் தேவையில்லை என்ற காரணத்தினாலே இதற்கு அனுமதிதர மறுக்கிறேன்.

## (ஆ) மைசூர் சட்டப்பேரவை உறுப்பினர் திரு. வட்டல் நாகராஜ் தமிழ் நாடு முதலமைச்சரைப்பற்றிப் பேசிய பேச்சு

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, ஹாஜி. ம. மு. பீர் முஹம்மது அவர்கள் கீழ்க்கண்ட ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள் :

"மைசூர் மாநில சட்டப் பேரவையின் உறுப்பினர் திரு. வட்டல் நாகராஜ், தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களைப்பற்றி பாராளுமன்ற மரபுகளுக்கு முரணான, கண்ணியக் குறைவான வார்த்தைகளை அம் மாநிலப் பேரவையில் பேசியிருப்பதுபற்றி விவாதிக்க வேண்டும்".

இது எப்படி இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்கக்கூடிய முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைச் சுருக்கமாகக் கூறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**ஹாஜி. ம. மு. பீர் முஹம்மது:** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதிகளின் 42-வது விதிப்படி கீழ்க்கண்ட ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்குத் தங்களுடைய அனுமதியைக் கோருகிறேன்.

"மைசூர் மாநில சட்டப் பேரவையில் அப் பேரவையின் உறுப்பினர் திரு. வட்டல் நாகராஜ், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைப்பற்றி பாராளுமன்ற மரபுகளுக்கு முரணான, கண்ணியக் குறைவான வார்த்தைகளை அம் மாநிலப் பேரவையில் பேசியிருப்பது பற்றி விவாதிக்க வேண்டும்".

இதை விவாதிப்பதற்காக இந்தச் சபையில் மற்ற நடவடிக்கைகளை ஏன் ஒத்திவைக்க வேண்டுமென்பதற்கு ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாடு சட்டமன்றத்தில் முக்கிய எதிர்க்கட்சியின் தலைவராக இருக்கக்கூடிய திரு. கருத்திருமன் அவர்கள் தாளவாடிப் பிரச்சினையின் மீது ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்த நேரத்தில் மதிப்பிற்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தாளவாடிப் பிரச்சனைபற்றி அண்டை மாநில மக்களுடைய நட்புறவையும் நேரத்தினையும் பாராட்டும் வகையில் நம்முடைய சட்டப் பேரவையிலே பேசியிருக்கிறார்கள். அந்தப் பாராளுமன்ற மரபுக்கும் இந்திய தேசிய ஒருமைப்பாட்டு உணர்வுக்கும் அண்டை மாநில மக்களின் நேச நிலைமைக்கும் மாறான வகையில் தரக்குறைவான வார்த்தைகளைப் பிரயோகித்து மைசூர் மாநிலச் சட்ட மன்ற உறுப்பினர் நான்கு கோடித் தமிழ் மக்களின் ஆட்சித்துறை நாயகரைப்பற்றித் தாக்குறைவாகப் பேசி இருப்பது தமிழ்நாட்டு மக்களுடைய மிகப் பெரிய மானப் பிரச்சினை. இந்தப் பிரச்சினையை நம்முடைய சட்ட மன்றத்திலே மற்ற நடவடிக்கைகளை ஒத்திவைத்து விவாதிப்பதின் மூலம் அந்த மானம் காப்பாற்றப்பட வேண்டும் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** இந்த ஒற்றிவைப்புப் பிரேரணையைக் கொண்டுவந்தவர்கள் என்னுடைய பெயரைச் சொன்ன காரணத்தினாலும் நான் இதைப்பற்றி முன்பு ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்த காரணத்தினாலும் நான் சில வார்த்தைகளைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பாராளுமன்ற முறைப்படி ஒரு சபையில் யாரும் இன்னொரு சபையிலே பேசியதைப்பற்றிக் குறிப்பிடக் கூடாது. அங்கே அப்படி பேசும்பொழுது சபாநாயகர் அவர்கள் தடுத்து இருக்கிறார்கள். அங்கே என்ன நடந்தது என்று தெரியவில்லை; பத்திரிகையிலே வந்ததைப் பார்த்து நாம் பேசுகிறோம். ஒரு சபையிலே இருக்கக்கூடிய நிலைமையைப்பற்றி இன்னொரு சபையிலே மீண்டும் விவாதிக்கக்கூடிய நிலைமையெல்லாம் வந்துவிடும். இதிலே முதலமைச்சர் மட்டுமல்ல, நானும் சம்பந்தப்பட்டிருக்கிறேன். எனவே எங்களை அவமானப்படுத்தக்கூடியதாக இருக்குமே என்பதால் இதற்குத் தக்க தீர்ப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



***மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ்நாட்டு சட்டப் பேரவை விதிகளிலே 67-வது பிரிவு மூன்றாவது உட்பிரிவில் "இந்திய நாடாளுமன்றம், பிற மாநிலங்களின் சட்டமன்றம், சட்ட மேலவை. இவற்றின் நடத்தை அல்லது நடவடிக்கைகள் குறித்துத் தாக்கிப் பேசக் கூடாது." என்று விதி இருக்கிறது. ஆனாலும் மைசூர் மாநிலத்தினுடைய சட்ட மன்றத்தில் தமிழ் நாட்டின் முதலமைச்சரைப்பற்றிப் பேசிய கடுமையான வார்த்தைகளை உடனடியாக அந்தப் பேரவைத் தலைவர் அவர்கள் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள். அவர்கள் அப்படித் தடுத்து நிறுத்தியிருப்பதிலிருந்து அந்த வார்த்தைகளைப் பேசக் கூடாது என்பதும் இன்னொரு மாநிலச் சட்ட மன்றத்தைப் பற்றியோ அல்லது முதலமைச்சரைப்பற்றியோ விவாதிப்பது சட்ட மன்ற மரபுக்கு ஏற்றதல்ல என்பதும் தெரிகிறது. மைசூர் மாநிலச் சட்ட மன்றமும் அதை ஏற்றுக்கொண்டு இருப்பதாக நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. எனவே, இது அலட்சியப்படுத்தப்படக்கூடிய ஒன்று. பேறிஞர் அண்ணா அவர்கள் வழியிலே நடந்து வருகின்ற இந்த அரசு, தாக்குதலைத் தாங்கித் தாங்கிப் பழக்கப்பட்டதாகும். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், ஒத்திவைப்புப் பிரேரணையைக் கொடுத்த பீர் முஹம்மது அவர்களும் இது இந்தச் சபையின் மானப் பிரச்சினை என்று குறிப்பிட்ட அந்த உணர்ச்சியை நான் பாராட்டுகிறேன். அந்த உணர்ச்சியை நம்மிடத்திலே பெற்றிருக்கிறோம், அந்த உணர்ச்சி நம்முடைய மனத்திலே பிரதிபலிக்கிறது என்ற மனநிறைவோடு இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நம்முடைய விதிகளிலே இருந்து நிலைமையை எடுத்துக் காட்டி இருக்கிறார்கள்.

A Member, while speaking, must not use offensive expression about the conduct or proceedings of the Parliament or any State Legislature or of the other House, என்று தெளிவாக நம்முடைய விதிமுறைகள் கூறுகின்றன. மதிப்பிற்குரிய திரு. அனந்தசயனம் அய்யங்கார் 1959-இல் அளித்த தீர்ப்பில்--

No House will cast any aspersion and no member will cast any aspersion on any member of the other House or any other House in this way. I do not give my consent to this. I will treat it as closed. என்று தீர்ப்பளித்திருக்கிறார்கள். இந்த மரபுகளை மனதிலே வைத்து மைசூர் மாநிலச் சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் அந்தப் பேச்சை எழுப்புவதற்கு அனுமதி மறுத்திருக்கிறார்கள். அந்தப் பேரவைத் தலைவரின் செயலைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். நாமும் இது பற்றி இங்கே பேசாமல் இருப்பது நல்லது என்பதால் இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கிறேன்.

### 3. கவன ஈர்ப்பு.

**வேதாரண்யம் முதலிய பகுதிகளில் அதிக மழையினால் பயிர்களுக்கு ஏற்பட்ட சேதமும், எடுக்கப்பட்ட நிவாரண நடவடிக்கைகளும்**

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* அடுத்து, 41-வது விதியின் கீழ் டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்கள் மாண்புமிகு வேளாண்மை அரிசன நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவருவார்கள்.

DR. H. V. HANDE : Sir, I call the attention of the Hon. Minister for Agriculture and Harijan Welfare to a matter of urgent public importance, namely, the damage to crops due to excessive rain in Vedaranyam and other parts of East Thanjavur District and the need for immediate, necessary relief measures to save the crops.

THE HON. DR. (THIRUMATHI) SATYAVANIMUTHU : Sir, Thanjavur district received heavy rains during the last week of December 1969. As a result, about 20,000 acres in the low-lying areas in Tiruthuraipoondi, Vedaranyam, Nagapattinam and Sembanarkoil blocks were flooded. These flood-affected areas were inspected by the Director of Agriculture along with the Agricultural Officers of the district. He found about 6,000 acres still under water on 4th January 1970. According to an on-the-spot assessment of the damage by the Director of Agriculture—

(a) in an area of 13,000 to 14,000 acres, there would be about 5 to 10 per cent reduction in yield in early-planted Samba like ADT 8,

(b) in an area of about 3,000 acres where there was still water, the yield might go down by 30 to 50 per cent, and

(c) the loss in the remaining area of 3,000 acres might be heavier due to late planting.

On the whole, considering the fact that the total areas under Samba and Thaladi is 11.55 acres, the reduction feared in production because of the floods is very negligible.

Since the crops were in an advanced stage of growth there was no question of carrying out any relief measures by the Agriculture Department to save the crops.

DR. H. V. HANDE : Road traffic from Tiruthuraipoondi to Vedaranyam has been practically stopped because of breaches. Will the Hon. Minister be pleased to tell us whether any programme to remove the water in these parts has been taken up. In the case of fire accidents, some help is given to the victims and may I know whethe similarly any concrete help is going to be given by the Ministry to the victims of the flood?



THE HON. DR. (THIRUMATHI) SATYAVANIMUTHU : The Collector has submitted a proposal for the sanction of Rs. 70,000 as an additional allotment to complete the relief work of granting cash to victims of flood to enable them to reconstruct or repair their damaged houses in his district. The Collector's proposal is under consideration.

### 4. அறிவிப்பு.

**தமிழ்நாடு 1970-ம் ஆண்டு மோட்டார் எரிபொருள் (ஸ்பிரிட்) விற்பனை வரி விதிப்பு (திருத்த) மசோதா.**

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* இந்தப் பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு மோட்டார் எரிபொருள் (ஸ்பிரிட்) விற்பனை வரி விதிப்பு (திருத்த) மசோதாவை அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தம்முடைய இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### 5. அரசினர் மசோதா.

**தமிழ்நாடு 1970-ம் ஆண்டு மோட்டார் எரிபொருள் (ஸ்பிரிட்) விற்பனை வரி விதிப்பு (திருத்த) மசோதா.**

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* அடுத்து, அரசினர் மசோதா. மாண்புமிகு உணவு, வணிகவரித் துறை அமைச்சர் அவர்கள், தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு மோட்டார் எரிபொருள் (ஸ்பிரிட்) விற்பனை வரி விதிப்பு (திருத்த) மசோதாவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :* தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு மோட்டார் எரிபொருள் (ஸ்பிரிட்) விற்பனை வரி விதிப்பு (திருத்த) மசோதாவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

*மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் :* தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு மோட்டார் எரிபொருள் (ஸ்பிரிட்) விற்பனை வரி விதிப்பு (திருத்த) மசோதாவை அறிமுகம் செய்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* இம்மசோதா அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

## 6. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* : அடுத்து, ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கான திருத்தங்களை உறுப்பினர்கள் இப்பொழுது முன்மொழியலாம்.

THIRU R. PONNAPPA NADAR: Sir, I move the following amendment standing in my name—

*Add* at the end, the following :—

'but regret to note that no mention is made about the labour policy and the steps taken to arrest the mounting unemployment and the growing student unrest in Tamil Nadu.'

THIRU K. VINAYAKAM : I second the amendment.

*திரு. என். சங்கரய்யா* : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன் :

இறுதியில் கீழ்க்காணும் திருத்தத்தை சேர்த்துக் கொள்ள வேண்டும்.

'ஆயினும் நிலவுடைமைக்கு உச்சவரம்பாக இன்று நபர் ஒருவருக்கு 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்றிருப்பதை, ஒரு குடும்பத்திற்கு 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று குறைத்தும், அமுலில் உள்ள நிலவுடைமைக்கு வரம்பு கட்டும் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள விதி விலக்குகளை ரத்து செய்தும், உழைக்கும் விவசாயிகளுக்குப் பயனளிக்கக் கூடிய விரிவானதொரு நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டுவரப்படுமென்று குறிப்பிடப்படாததைக் கண்டு இப்பேரவை வருந்துகிறது."

திருத்தம் வழிமொழியப்பட்டது.

DR. H. V. HANDE : Sir, I move—

*Add* at the end the following :—

'but regret to note that the Governor's Address makes no mention at all of the positive steps this Government proposes to take to solve the serious problem of unemployment and under-employment that has overtaken this State.'

The amendment was duly seconded.

THIRU T. MARTIN : Sir, I move the following amendment—

"*Add* at the end, the following :—

'but regret to note that no mention is made about the educated unemployment, students' unrest, the Burma and Ceylon repatriates, steps to bring down the increase in prices of essential food commodities, time-limit for submission of Second Pay Commission Report and the breakdown of law and order situation in the State'."





The amendment was duly seconded.

THIRU N. S. V. CHITHAN : Sir, I move the following amendment—

"*Add* at the end, the following :—

'but regret to note—

(i) that no mention is made of the distress of people of Tamil Nadu due to the steep rise in prices of all essential articles of life.

(ii) that the Governor has not been properly advised by his Council of Ministers in regard to taking effective steps on the unemployment problem '."

The amendment was duly seconded.

THIRU V. GEORGE : Sir, I move the following amendment—

"*Add* at the end, the following :—

'but regret to note that the Address has failed to refer to any schemes to solve the intensively explosive problem of unemployment; to arrest the ever spiralling cost of living; the tardy and undemocratic execution of the drought relief schemes and suppression of real democratic process in the matter of bifurcation of Panchayats in Kanyakumari district '."

The amendment was duly seconded.

THIRU K. RAMAMOORTHY : Sir, I move the following amendment—

"*Add* at the end, the following :—

'but regret that there is no mention in the Address about—

(1) the growing restlessness among the student community resulting in the indefinite closure of several educational institutions in all parts of the State for a number of days during the current educational year,

(2) the problem of the educated unemployed in our State whose numerical number is increasing by metes and bounds day by day due to the failure of the Government to follow a far sighted economic and industrial policy,

(3) the Government's failure to make any headway towards State Trading in foodgrains to which the late Chief Minister Thiru C. N. Annadurai committed himself,

(4) the failure of the Government to attend to the grievances and needs of the N.G.G.O's., the teaching staff and the pensioners in our State,

(5) the failure of the Government to arrest and check the rise in the price of groceries and vegetables which has resulted in the untold misery and suffering of the middle-class people,

[Thiru K. Ramamoorthi]

(6) the growing concern regarding the Law and Order situation in the State evidenced by robberies, burglaries, communal and class-fights resulting in the loss of property and life of individuals and the State,

(7) the Government's inability to make any progress in the direction of Nationalisation of Road Transport as also to put an end to the tourist bus services which have actually though illegally transformed themselves into regular transport services,

(8) the inability of the Government to act immediately and effectively against the persons involved in the mis-management of co-operative institutions,

(9) the failure to announce the scrapping of land-tax on wet lands as also the policy regarding land ceiling, minimum wages for agricultural labour and protection of landless cultivating tenants,

(10) the failure of this Government to safeguard the interests of the agriculturists by allowing the increase in the power tariff from 8.25 paise per unit to 10 paise for consumption of electrical power,

(11) the inability of the Government to start major industries in the public sector, and

(12) the failure of the Government to provide for the required loan to the Agro-Industries Corporation so as to encouage its measures to help the agriculturists of our State and compete with the other financing agencies for the pump-sets."

The amendment was duly seconded.

THIRU J. JAMES : Sir, I move the following amendment—

Add at the end the following :—

" but regret to note that the Government have given up the accepted policy of the Tamil Nadu Government such as 'One Rupee a Measure' schemes and caused disappointment in the minds of the people of this State and also has omitted to refer whether this Government has any scheme to remove unemployment especially among the educated."

The amendment was duly seconded.

**திரு. வை. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்:

இறுதியில் கீழ்க்காணும் திருத்தத்தைச் சேர்த்துக் கொள்ளவும்:

"(1) பின்தங்கிய பகுதிகளில் சாலை வளர்ச்சி பற்றியும் குறிப்பாக அந்தப் பகுதிகளுக்கு நீர்ப்பாசன வசதி செய்வது பற்றியும் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.



(2) இன்றைய நிலையில் விலைவாசிகள் குறிப்பாக தேங்காய் மிளகாய், எண்ணெய் வகைகள் விலை ஏறுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்காதது வருந்தத் தக்கது.

(3) படித்தவர்கட்கும் பட்டம் பெற்றவர்களுக்கும், தொழிற்கல்வி பயின்றோர்களுக்கும் வேலை வாய்ப்பு அறவே இல்லை. இது குறித்து எந்த விதமான குறிப்பும் கொடுக்காதது வருந்தத் தக்கது.

(4) கிருத்துவ சமயத்தில் சார்ந்துள்ள பின்தங்கிய இனத் தவர்களுக்கு பின்தங்கிய மக்களுக்குக் கொடுக்கும் சலுகைகள் கிடைக்க வழிவகை செய்யும்படி குறிப்பிடாதது வருந்தத் தக்கது.

(5) நவீன விவசாய வளர்ச்சி, மற்றும் பயிர்ப் பாதுகாப்பு முறையும், கால்நடைப் பாதுகாப்பு முறையும் தமிழ் நாட்டில் கொண்டு வருவது குறித்து குறிப்பிடாதது வருந்தத் தக்கது.

(6) கிராம முன்சீப், அரசாங்க ஊழியர்கள், ஆசிரியர்கள் இவர்களது சம்பள உயர்வு குறித்து குறிப்பிடாதது வருந்தத் தக்கது."

திருத்தம் வழிமொழியப்பட்டது.

**திரு. ஏ. அ. சுப்பராஜா :** தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்:

இறுதியில் கீழ்க்காணும் திருத்தத்தைச் சேர்த்துக் கொள்ளவும்:

"இருப்பினும் தற்போது நமது மாநிலத்தில் பஞ்ச நிவாரண வேலைகளுக்காக மத்திய அரசிடமிருந்து பெற்ற பணம் முழுவதும் செலவழித்து விட்ட நிலையில் பருவ மழை தவறிய இடங்களில் முடிவு பெறாத வேலைகளை இன்னும் தொடர்ச்சியாகச் செய்ய மாநில அரசு எடுக்கப் போகும் நடவடிக்கைகளைக் குறிப்பிடாதது வருந்தத்தக்கது".

திருத்தம் வழிமொழியப்பட்டது.

***திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் நேற்றைய பேச்சைத் தொடர்ந்து பேசலாம் என்று கருதுகிறேன். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நமக்கு 7.2 என்ற விகிதத்திலே மத்திய அரசாங்கத்தில் இருந்து பணம் கொடுத்தார்கள். நான்காவது திட்டத்தில் 4266 கோடி ரூபாயில் 6.9 என்ற அளவில்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ 14 கோடி ரூபாய் குறைவு ஏற்படுகிறது. அதே போல் 1960-ம் ஆண்டில் பே கமிஷன் ரிப்போர்ட் கொடுக்கப்பட்ட நேரத்தில் நமக்கு ஆண்டு ஒன்றுக்கு 7 கோடி ரூபாய் செலவு வரக்கூடிய நிலைமை ஏற்பட்டது. இப்போது இரண்டாவது பே கமிஷன் ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற நிலையில் வருகிற ஆண்டுகளில் ஆண்டு ஒன்றுக்கு 8 கோடி ரூபாய் வீதம் நான்கு ஆண்டுகளுக்கு 32 கோடி ரூபாய் அதிகச் செலவு

[1970 ஜனவரி 24

[Thiru K. Ramamoorthi]

(6) the growing concern regarding the Law and Order situation in the State evidenced by robberies, burglaries, communal and class-fights resulting in the loss of property and life of individuals and the State,

(7) the Government's inability to make any progress in the direction of Nationalisation of Road Transport as also to put an end to the tourist bus services which have actually though illegally transformed themselves into regular transport services,

(8) the inability of the Government to act immediately and effectively against the persons involved in the mis-management of co-operative institutions,

(9) the failure to announce the scrapping of land-tax on wet lands as also the policy regarding land ceiling, minimum wages for agricultural labour and protection of landless cultivating tenants,

(10) the failure of this Government to safeguard the interests of the agriculturists by allowing the increase in the power tariff from 8.25 paise per unit to 10 paise for consumption of electrical power,

(11) the inability of the Government to start major industries in the public sector, and

(12) the failure of the Government to provide for the required loan to the Agro-Industries Corporation so as to encouage its measures to help the agriculturists of our State and compete with the other financing agencies for the pump-sets."

The amendment was duly seconded.

THIRU J. JAMES: Sir, I move the following amendment—

*Add* at the end the following :—

"but regret to note that the Government have given up the accepted policy of the Tamil Nadu Government such as 'One Rupee a Measure' schemes and caused disappointment in the minds of the people of this State and also has omitted to refer whether this Government has any scheme to remove unemployment especially among the educated."

The amendment was duly seconded.

**திரு. வை. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்:

இறுதியில் கீழ்க்காணும் திருத்தத்தைச் சேர்த்துக் கொள்ளவும்:

"(1) பின்தங்கிய பகுதிகளில் சாலை வளர்ச்சி பற்றியும் குறிப்பாக அந்தப் பகுதிகளுக்கு நீர்ப்பாசன வசதி செய்வது பற்றியும் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.



1970 ஜனவரி 24] [திரு. வை. சுவாமிநாதன்]

(2) இன்றைய நிலையில் விலைவாசிகள் குறிப்பாக தேங்காய் மிளகாய், எண்ணெய் வகைகள் விலை ஏறுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்காதது வருந்தத்தக்கது.

(3) படித்தவர்கட்கும் பட்டம் பெற்றவர்களுக்கும், தொழிற்கல்வி பயின்றோர்களுக்கும் வேலை வாய்ப்பு அறவே இல்லை. இது குறித்து எந்த விதமான குறிப்பும் கொடுக்காதது வருந்தத்தக்கது.

(4) இருத்துவ சமயத்தில் சார்ந்துள்ள பின்தங்கிய இனத்தவர்களுக்கு பின்தங்கிய மக்களுக்குக் கொடுக்கும் சலுகைகள் கிடைக்க வழிவகை செய்யும்படி குறிப்பிடாதது வருந்தத்தக்கது.

(5) நவீன விவசாய வளர்ச்சி, மற்றும் பயிர்ப் பாதுகாப்பு முறையும், கால்நடைப் பாதுகாப்பு முறையும் தமிழ் நாட்டில் கொண்டு வருவது குறித்து குறிப்பிடாதது வருந்தத்தக்கது.

(6) கிராம முன்சீப், அரசாங்க ஊழியர்கள், ஆசிரியர்கள் இவர்களது சம்பள உயர்வு குறித்து குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

திருத்தம் வழிமொழியப்பட்டது.

**திரு. ஏ. அ. சுப்பராஜா:** தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்:

இறுதியில் கீழ்க்காணும் திருத்தத்தைச் சேர்த்துக் கொள்ளவும்:

"இருப்பினும் தற்போது நமது மாநிலத்தில் பஞ்ச நிவாரண வேலைகளுக்காக மத்திய அரசிடமிருந்து பெற்ற பணம் முழுவதும் செலவழித்து விட்ட நிலையில் பருவ மழை தவறிய இடங்களில் முடிவு பெறாத வேலைகளை இன்னும் தொடர்ச்சியாகச் செய்ய மாநில அரசு எடுக்கப் போகும் நடவடிக்கைகளைக் குறிப்பிடாதது வருந்தத்தக்கது".

திருத்தம் வழிமொழியப்பட்டது.

***திரு. சு. துரைசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் நேற்றைய பேச்சைத் தொடர்ந்து பேசலாம் என்று கருதுகிறேன். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நமக்கு 7.2 என்ற விகிதத்திலே மத்திய அரசாங்கத்தில் இருந்து பணம் கொடுத்தார்கள். நான்காவது திட்டத்தில் 4266 கோடி ரூபாயில் 6.9 என்ற அளவில்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ 14 கோடி ரூபாய் குறைவு ஏற்படுகிறது. அதே போல் 1960-ம் ஆண்டில் பே கமிஷன் ரிப்போர்ட் கொடுக்கப்பட்ட நேரத்தில் நமக்கு ஆண்டு ஒன்றுக்கு 7 கோடி ரூபாய் செலவு வரக்கூடிய நிலைமை ஏற்பட்டது. இப்போது இரண்டாவது பே கமிஷன் ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற நிலையில் வருகிற ஆண்டுகளில் ஆண்டு ஒன்றுக்கு 8 கோடி ரூபாய் வீதம் நான்கு ஆண்டுகளுக்கு 32 கோடி ரூபாய் அதிகச் செலவு

[திரு. சு. துரைசாமி] [1970 ஜனவரி 24

ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. நிதிக்கமிஷன் இதைப்பற்றி கொஞ்சம்கூடச் சிந்திக்காமல் நமக்குத் தர வேண்டிய பணத்தைத் தைத் தராமல் விட்டுவிட்டார்கள். ஆனால் மகாராஷ்டிரம், குஜராத், தராமல் விட்டுவிட்டார்கள். ஆனால் மகாராஷ்டிரம், குஜராத், ஆந்திரப் பிரதேசம், மைசூர், உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கு மானியம் கொடுத்திருக்கிறார்கள்.

தமிழகத்தில் இருக்கிற கல்பாக்கம் மின்திட்டத்தின் காரணமாக 200 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யககூடிய நிலைமை இருக்கிறது. அதை 400 மெகாவாட் ஆக உயர்த்த வேண்டும். நெய்வேலியில் 400 மெகா வாட் மின் உற்பத்தியை 800 மெகா வாட் ஆக உயர்த்த முடியும். அப்படி உயர்த்துவதன்மூலம் தமிழகத்திற்குத் தேவையான மின்சாரத்தைப் பெற வாய்ப்பு இருக்கிறது. தமிழகத்தில் இன்றைக்குள்ள திட்டத்தின் அடிப்படையில் மின் இணைப்புகளுக்காக 15 கோடி ரூபாயைச் செலவழிக்ககூடிய முறையில் திட்டத்தைத் தயாரித்திருக்கிறார்கள். சேலம் திட்டத்திற்கும் தமிழகத்தின் நிதியில் இருந்து 15 கோடி ரூபாயைச் செலவழிக்கத் திட்டத்தைத் தயாரித்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, நியாயமாக நமக்குச் சேரவேண்டிய பங்குத் தொகையை டெல்லி அரசாங்கத்தில் இருந்து கேட்கவேண்டும். தமிழக அரசாங்கம் எடுத்திருக்கிற கொள்கை அடிப்படையில் தமிழக மக்கள் எல்லோருக்கும் 1972-ம் ஆண்டுக்குள் மின்சாரத்தையும், குடிநீர்த் திட்டத்தையும் நிறைவேற்றிக் கொடுக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. அந்தப் பணத்தைச் செலவழிப்பதன்மூலம் இந்தத் திட்டத்தை மிகத் துரிதமாக நிறைவேற்றமுடியும். ஆண்டு ஒன்றுக்கு 12½ கோடி ரூபாய் செலவழித்து 50,000 பம்ப் செட்டுகளை அமைக்கும் நிலை இருக்கிறது. 75 கோடி ரூபாய் மத்திய அரசாங்கம் தரும் நிலைமை இருக்கிறது. அந்தப் பணம் கிடைத்தால் அதிகமான மின் இணைப்புக் கொடுப்பதன்மூலம் இந்த நாட்டின் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும். 12½ கோடி ரூபாயை பம்ப் செட்டுக்கு மின் இணைப்புக்காகக் கொடுத்தால் இந்த நாட்டில் உணவு உற்பத்தியை 1¼ லட்சம் டன் அளவு பெருக்க முடியும். அப்படிப்பட்ட ஒரு திட்டத்தைச் செய்வதற்கு மத்திய அரசாங்கத்தில் இருந்து தேவையான நிதியைப் பெறுவதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பாங்குகள் எல்லாம் தேசிய மயமாக்கப்பட்டிருக்கின்றன அப்படி ஆக்கப்பட்டும் தமிழகத்திற்கு அதிலே நியாயமான பங்கு இல்லாததால் நமக்குத் தேவையானவற்றைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. அது தற்போது மத்திய அரசாங்கத்தின் நேரடித் தொடர்பில் இருக்கிறது. அதைத் தனிக் கார்ப்பரேஷனை அமைத்து அந்தக் கார்ப்பரேஷனிலே மாநில அரசாங்கங்களுக்கும் பங்கு இருக்கும் முறையில் கொள்கையை உருவாக்கினால்தான் பலன் ஏற்பட முடியும். உலக பாங்கில் பல்வேறு நாடுகள் முதலீடு செய்கின்றன. அந்த உலக பாங்கு யாருக்குப் பணம் கொடுத்தால்



1970 ஜனவரி 24] [திரு. சு. துரைசாமி]

திரும்பிவரும், லாபகரமான திட்டமாக இருக்கிறதா என்று பார்த்துப் பணம் கொடுக்கிறார்கள். ஆகவே அதே போன்று நம்முடைய நாட்டுப் பாங்குகளையும் ஒரு கார்ப்பரேஷன்கீழ் கொண்டு வந்து தமிழகத்திற்கு உரிய பங்கைப் பெற முயற்சிக்க வேண்டும். திட்டக்குழுவை எடுத்துக் கொண்டாலும் அதுவும் மத்திய அரசாங்கத்தின் நேரடித் தொடர்பில்தான் இருக்கிறது. திட்டக்குழுவும் மாநில அரசாங்கப் பங்குபெறும் வகையில் தனியாடி ஆக இயங்கும் வகையில் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்:

நம்முடைய நாட்டில் சமதர்மத் திட்டத்தைப்பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அதை நடைமுறைப்படுத்தும் வகையில் நம்முடைய நாட்டிலும் நடவடிக்கை எடுக்கவேண்டும். நகரத்தில் 6 லட்சம் ரூபாய், 10 லட்சம் ரூபாய் என்று செலவழித்துப் பெரிய பங்களாக்களைக் கட்டுகிறார்கள். அந்தப் பெரிய பங்களாக்களுக்குப் பக்கத்தில் குடிசைகளைப் பார்க்கிறோம். இன்று சோஷலிசம் என்ற பெயரில் பாங்குகளை நாட்டுடைமையாக்கும் நிலையில் ஒரு லட்சம் ரூபாய்க்கு அதிகமாகச் செலவழித்து யாரும் வீடு கட்டக்கூடாது என்ற சட்டத்தைக் கொண்டுவரும் முயற்சியை அரசாங்கம் எடுக்க வேண்டும். ஒரு லட்சம் ரூபாய்க்கு அதிகமாக 4 லட்சம் ரூபாய், 6 லட்சம் ரூபாய் என்று போட்டு வீடுகளைக் கட்டுவதன் காரணமாக நாட்டினுடைய பணம் முடங்கி விடுகிறது. இப்படி அதிகமாகச் செலவழித்து அதிலே நான்கு பேர் வசிக்கின்ற நிலை இருக்கக்கூடாது. இதற்குக் கட்டுப்பாட்டைக் கொண்டு வர வேண்டும். அதைக் கட்டுப்படுத்தவேண்டுமென்றால் ஒரு லட்சத்திற்கு அதிகமாகவுள்ள வீட்டை யாரும் கட்டக்கூடாது. அதற்குத் தேவையான அனுமதியைக் கொடுப்பதைத் தடுக்கும் முறையில் ஆவன செய்யவேண்டும்.

அதேபோல் நம் வருமானத்தைப் பெருக்கியாக வேண்டும். இந்த மன்றத்தைச் சார்ந்த எல்லாக் கட்சியினரும் மேட்டூர் அலுமினியத் தொழிற்சாலைக்கான மின்சாரக் கட்டணத்தை உயர்த்த வேண்டுமென்ற கருத்தை ஒப்புக் கொண்டுள்ளார்கள். அதுபற்றி அண்ணா அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். எல்லோரும் அதன் மீதான மின்சாரக் கட்டணத்தை உயர்த்தவேண்டும் என்று சொல்கிறீர்கள். ஆனால் அப்படி அதை ஏற்றக் கூடிய காலத்தில் யாரும் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவேண்டாம் என்ற கருத்தைத் தெளிவுபடுத்தினார்கள். இன்றைக்கு மேட்டூர் அலுமினியத் தொழிற்சாலைக்கு மின்சாரத்தை மிகக் குறைந்த கட்டணத்தில் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். ஏற்கனவே ஒரு ஒப்பந்தம் உள்ளது என்று கூறலாம். அதை மாற்றியமைத்து அந்தக் கட்டணத்தை உயர்த்தும் வகையில் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டும்.

அடுத்து, அண்மையில் தமிழகத்தில் உள்ள ஹோசூர் பகுதியில் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலையை அங்குள்ள வெறி பிடித்த சிலர் அவமானப்படுத்தியிருக்கிறார்கள். சிலர்

அண்ணா அவர்களின் திருவுருவச் சிலை மீது ஏறி நின்று—இன்னும் சொல்லப்போனால் ஒரு சட்டமன்ற உறுப்பினரின் மகன் கூட காலில் செருப்பு அணிந்துகொண்டு பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலை மேல் ஏறிக் கொண்டு—அதை உதைத்துச் சிலையை சித்திரவதைப்படுத்தியிருக்கிறார்கள். அவமானப்படுத்தியிருக்கிறார்கள். கேட்டால் நெஞ்சம் பதறும் அந்தச் செயல் நடைபெற்றிருக்கிறது. அங்குள்ள மாவட்ட அதிகாரி அவர்களும் போலீஸ் அதிகாரிகளும் அதைத் தடுப்பதற்கு உரிய நேரத்தில் நடவடிக்கைகள் எடுக்கத் தவறியிருக்கிறார்கள். அப்படித் தவறு செய்தவர்கள் நம் முதல் அமைச்சர் அவர்களைச் சந்தித்து, நீங்கள் எங்களை மன்னிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் முதல் அமைச்சர் அவர்கள் பெருமனது வைத்து மன்னித்திருக்கிறார்கள். நம் நாட்டில் செல்வாக்குப் பெற்ற ஒரு அரசியல்வாதி, ஒரு கட்சியைச் சார்ந்தவர் முதல் அமைச்சர் அவர்களைச் சந்தித்துக் கேட்டுக்கொண்டதன்பேரில் அவர்கள் மன்னிப்பு வழங்கினார்கள். மீண்டும் கேள்விப்படுகிறோம், பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலை அமைக்கப்படுமானால் அதற்கு ஊறு விளைவிக்கச் சிலர் முயற்சிப்பதாக. அப்படிப்பட்ட சம்பவங்கள் எதுவும் நடக்காமல் அதற்குரிய பாதுகாப்புத் தரப்படவேண்டும்.

ஒன்றைமட்டும் கூறிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். இன்று நம் நாட்டில் குடி தண்ணீர்ப் பற்றாக்குறையைத் தீர்க்க நம் அரசு துரித நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 20 லட்சம் மக்களுக்குப் பயன் அளிக்கக்கூடிய முறையில் ஒரு திட்டத்தை நம் அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. குந்தா ஆற்றில் இருந்து பெகுபெல்லா அணையில் இருந்து தண்ணீர் எடுத்தால் திருப்பூர், சிங்கநல்லூர், கணபதி என்.ஜி.ஓ. காலனி, துடியலூர், காரமடை; அன்னூர்; அவனாசி; சோமனூர், பல்லடம், புஞ்சைப்புளியம்பட்டி போன்ற பகுதிகளில் உள்ள மக்களுக்குத் தண்ணீர் வழங்க முடியும். இதற்கு 12½ கோடி ரூபாய் செலவு ஏற்பட்டாலும் இத்திட்டத்தினால் 20 லட்சம் மக்கள் பயன் பெற முடியும். இத்திட்டத்தை நிறைவேற்றித் தருவதற்கு அரசு முழு முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனக்கு இந்த வாய்ப்பளித்தமைக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

***திரு. ம. பொ. சிவஞானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவித்து இந்த அவையின்முன் வைக்கப்பட்டுள்ள தீர்மானத்தைத் தமிழரசு கழகத்தின் சார்பாக மனநிறைவோடு ஆதரித்துச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

ஆளுநர் அவர்கள் தமது உரையை மிகத் திறம்படத் தயாரித்துப் பெருமளவிற்கு நாம் நிறைவு பெருமளவிற்கு—இங்கு சமர்ப்பித்திருந்தாலும் நாம் தமிழ் மொழியை ஆட்சிமொழியாக்கி, அது நடைமுறையில் நாளுக்குநாள் வந்து கொண்டிருக்கும் காலத்தில், ஆளுநர் அவர்கள் தமது உரையை ஆங்கிலத்தில் நிகழ்த்துவது—





அதன் மொழிபெயர்ப்பைத் தமிழில் கொடுப்பது என்பது, தாற்காலிகமானது என்று எனக்குத் தோன்றவில்லை. அது தாற்காலிகமானது என்றால், அதைப்பற்றிக் குறிப்பிடாமல் விட்டு விட்டிருக்கலாம். மத்திய ஆட்சியின் மனப்போக்கால், ஒரு மொழி மாநிலத்தில் அம்மொழியினரல்லாத இன்னொரு மொழியினரை ஆளுநராக நியமிப்பது என்ற முறை கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக நடந்து வருகிறது. தமிழகத்தின் ஆட்சி மொழி தமிழ், எங்கும் எதிலும் தமிழ் என்று ஏற்பட்டதற்குப் பின்னால், தமிழர் அல்லாத ஒருவர், தமிழே அறியாத ஒருவர் ஆளுநராக வரக்கூடிய நிலை நீடிக்கும் காரணத்தினால்தான் இதைச் சொல்கிறேன். காந்தி அடிகள், நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் தமது 'ஹரிஜன்' பத்திரிகையில் கவர்னர் நியமனம்பற்றி எழுதினார். ஒரு மாநிலத்தின் கவர்னர் அந்த மாநிலத்தைச் சேர்ந்தவராக இருக்கவேண்டாம் என்று சிபாரிசு செய்யப்பட்டபோது, கவர்னர் தாம் பதவி வகிக்கும் மாநிலத்தைச் சேர்ந்தவராக இல்லாவிட்டாலும், அந்த மாநிலத்தின் மொழியை அறிந்தவராக இருக்கவேண்டும் என்று எழுதியுள்ளார். அதை நான் இங்கு நினைவூட்டுகிறேன். அந்தக் குறை அகல அரசு என்ன செய்யலாம் என்று யோசிக்க வேண்டும். ஆளும் கட்சி தமது தேர்தல் பிரகடனத்தில், நம் மாநிலத்தில் தமிழ் அறிந்தவர் தமிழர்தான் ஆளுநராக வர ஏற்பாடுகள் செய்வோம் என்று வாக்குறுதி கொடுத்திருந்ததை, எந்தக் காலத்தில் நிறைவேற்ற முடியும் என்பதை நினைவுபடுத்துவதோடு நிறுத்திக்கொள்கிறேன்.

ஆளுநர் அவர்கள் உரையில், "கடந்த ஆண்டின் கடும் வறட்சியைத் தொடர்ந்து, பெய்யா வானம் மீண்டும் பொய்த்திருந்தால் நாம் கொடிய துன்பத்தில் சிக்குண்டிருப்போம். நற்பேற்றின் விளைவால் பருவமழை போதிய அளவிற்கு நன்கு பெய்தது." என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். "நற்பேற்றின் விளைவால்" என்றிருப்பதைத் "தெய்வத் திருவருளால்" என்று சேர்ந்திருந்தால் நன்றாகயிருந்திருக்கும். ஆளும் கட்சிக்குத் தெய்வத்தின்மீது நம்பிக்கை உள்ளது என்பதில் எனக்கு ஐயப்பாடு இல்லை, காங்கிரஸ் தரப்பில் உள்ளவர்களுக்கு ஐயப்பாடு இருந்தாலும்கூட. நற்பேறு என்பதற்கும் தெய்வத் திருவருள் என்பதற்கும் மாறுதல் அதிகம் இல்லை. அந்த வாசகத்தைச் சேர்த்திருந்தால் நம் நாட்டின் பண்பாடு பிரதிபலிக்கும் ஒரு முறை இருந்திருக்கும் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

அடுத்து, ஆளுநர் அவர்கள் தமது உரையில் வறட்சிக் காலத்தில் ஆட்சியினர் மேற்கொண்ட பணிகளைத் தொகுத்துக் கூறி நமக்கு மனநிறைவைத் தந்திருக்கிறார்கள். அதற்காக ஆட்சியினருக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வறட்சிக் காலத்தில் நாடு என்னவாகுமோ என்று நாம் நடுக்கத்தில் இருந்தபோது, அரசு காமதம் என்ற படுகுழியில் விழாமல் சுறுசுறுப்பாகச் செயலாற்றியது. குறிப்பாக, சென்னை நகர் குடிநீர்ப் பிரச்சினையை தீர்த்தது. மாநகராட்சி இருந்தும்கூட, அவர்கள் தங்களிடம்

பொறுப்பு தரப்படவில்லையே என்று குறைபட்டுக்கொள்ளும் அளவிற்கு, அரசே பொறுப்பேற்றது பாராட்டத்தக்க ஒரு செயலாகும்.

அடுத்து, உணவுக் கட்டுப்பாடு நீக்கம்பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அரசு கொடுத்துள்ள உறுதிமொழி காரணமாக, கட்டுப்பாடு நீக்கப்பட்டிருப்பதுகுறித்து அரசுக்கு என் பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறேன். தவறு இழைக்கப்பட்டால் மீண்டும் கட்டுப்பாடு கொண்டுவரப்படும் என்ற உறுதிமொழி அளிக்கப்பட்டுள்ளது. அதற்காக உணவு அமைச்சர் அவர்களுக்கு என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் ஒன்று கூற விரும்புகிறேன். உற்பத்தியான நெல்லை நெல் மூட்டைகளைக் கிடங்குகளில் அடைத்து ஸீல் வைத்து, அதற்கு ஈடாகப் பணத்தை பாங்கியிருந்து பெற்றுக்கொண்டு, நெல்லின் விலை ஏறும்போது வெளியே கொண்டுவந்து பஞ்சத்தை இயற்கையாகத் தோற்றுவிக்கும் தவறுகள் நடப்பதைத் தடுக்கவேண்டும். அந்தமாதிரிக் கிடங்குகளில் வைத்துப் பாங்குகளின் பணம் பெறுவதைத் தடுக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்து, விசைத்தறியைப்பற்றி ஆளுநர் அவர்கள் தம் உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். நம் மாநிலத்தில் 12,500 விசைத் தறிகளைப் புகுத்துவதற்கு முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதுகுறித்து, காந்தீயவாதி என்ற முறையில் எனக்குச் சில ஐயப்பாடுகள் எழுகின்றன. இன்றையக் காலப்போக்கில்—இன்று காந்தி அடிகள் இருந்திருந்தால் அவர்கள் கூட—சில மாறுதல்களை ஏற்பார்கள். ஆயினும், இதில் ஒரு தெளிவு வேண்டும். வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வரும் இந்நாளில் இது மேலும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பெருக்காதா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். கைத்தறித் துறையில், ஆயிரம் ஆயிரம் ஆண்டுக் காலமாகக் குறிப்பிட்ட ஒன்றிரண்டு ஜாதியினரே—அதில் நஷ்டம் ஏற்பட்டாலும், பஞ்சம் ஏற்பட்டாலும்—கைத்தறித் தொழிலில் ஈடுபட்டு வந்தார்கள். நவீன முறை இயந்திரங்கள் வந்ததற்குப் பின்னால், வேறு இனத்தவர்களும் இதில் பயிற்சி பெற்று, இத்துறையில் ஈடுபட்டு வந்த சமூகத்தினர் பாதிக்கப்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இன்று பொற்கொல்லர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். கள் இறக்கக்கூடிய தொழிலாளர்கள் சமுதாயம் பாதிக்கப்பட்டிருக்கிற நிலைமை இருக்கிறது. அந்தக் கதி இந்த கைத்தறித்துறையில் ஈடுபட்டுள்ள ஜாதியினருக்கும் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். கடந்த ஆண்டுகளில் சாதி தவற்றைத் தொகுத்துக் கொடுத்திருக்கிறார்கள்.

தொழில் துறை, உணவுத் துறைபோன்ற துறைகளில் சாதித்துள்ளவைபற்றிச் சொல்லியிருக்கிறார்கள். மொழித்துறையில் இந்த ஆட்சி சாதித்தது பல உண்டு, கடந்த ஆண்டு காலத்தில்





வருகிற ஆண்டுகளிலேயும் சாதிக்க வேண்டியவை உண்டு. நூறு நூறாக சாதிக்கக் கூடியவை மொழித் துறையிலேதான் இருக்கின்றன. கடந்த ஆண்டிலே மொழித் துறையில் சாதித்தவற்றைத் தொகுத்துக் கொடுக்கக் கூடிய அளவுக்கு அத்துறை முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல என்ற எண்ணம் ஆட்சிக்கு இருக்காது என்று எண்ணுகிறேன். இனிமேலாவது அப்படித் தொகுத்து வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்தந்த ஆண்டுகளில் மொழித் துறையில், கல்வித் துறையில் எடுத்த—சாதித்த நடவடிக்கைகளைத் தொகுத்துக் கூறும் வழக்கம் நடைமுறைக்கு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

சில கமிஷன்கள் நியமித்திருப்பதைப்பற்றி ஆளுநர் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. போலீஸ் கமிஷன், மாநில சுயாட்சிக் கமிஷன் நியமிக்கப்பட்டிருப்பதைப்பற்றி ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். மாநில சுயாட்சிக் கமிஷனில் யார் யார் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அவர்களின் பெயர்ப் பட்டியலைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், போலீஸ் கமிஷனில் யார் யார் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அவர்களின் பெயர்ப் பட்டியலைச் சொல்லவில்லை. இதை நான் அந்தக் கமிஷனிலே இருக்கிறேன் என்பதற்காகச் சொல்லவில்லை. அதில் சம்பந்தப்பட்டவர்கள் பெயர்கள் எடுத்துக்காட்டப்படவேண்டியது இயற்கை என்ற காரணத்தினால் சொல்லுகிறேன். அந்தக் குழுவிலே கௌரவஸ்தர்கள் பலர் அங்கம் வகிக்கிறார்கள். மீதிக் குழுவில் இருப்பவர்களின் பெயர்களைச் சொல்லியிருக்கும்பொழுது, இந்தக் குழுவில் உள்ளவர்களின் பெயர்களை மட்டும் ஏன் சொல்லாமல் விட்டார்கள் என்பதை என்னால் விளங்கிக் கொள்ள முடியவில்லை.

சென்னையிலே—புற நகரிலே அரசாங்கம் ஒரு காலனியைக் கட்டுகிறது. போக்குவரத்து வசதி இல்லாத இடங்களில் காலனிகளைக் கட்டுகிறது. அப்படிப்பட்ட இடங்களுக்கு போக்குவரத்து வசதி செய்து தர ஆட்சி கடமைப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட காலனிகளில் உள்ள இடங்களில் ஒன்றாகிய இந்திரா நகரில் நான்கு மார்க்கங்களில் சென்று கொண்டிருந்த பேருந்து வண்டிகளை திடீரென்று நிறுத்திவைத்துவிட்டார்கள். உண்மையிலேயே சொல்கிறேன், நம்முடைய பேருந்துத் துறை அமைச்சரவர்களும், முதலமைச்சர் அவர்களும் அந்தப் பகுதிக்குப் போய்ப் பார்த்தால், அங்குள்ள மக்கள் எவ்வளவு அவதிப்படுகிறார்கள் என்பது தெரியும். அங்கே போக்குவரத்து வசதி இல்லை. குடிதண்ணீர் வசதி இல்லை. இப்படி வசதிகளே இல்லாத இடத்தில் காலனிகளைக் கட்டினால், அவர்களுக்கு வேண்டிய வசதிகளைத் திரட்டிக் கொடுத்தால்தான் அந்தக் காலனிகளில் குடியேற மக்கள் உற்சாகம் காட்டுவார்கள். அப்படியிருக்கும்பொழுது, ஏற்கெனவே செய்துகொடுத்திருக்கும் வசதிகளை எடுப்பது சரியல்ல. எனவே தாமதம் இல்லாமல் உடனடியாக பேருந்துப் போக்குவரத்திற்கான வசதிகளைச் செய்து தருமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இங்கு பேசிய உறுப்பினர்களில் சிலர் தாளவாடி பிர்க்காவைப் பற்றியும், ஹோசூர் சம்பவம் பற்றியும் சொன்னார்கள். நான் தமிழன் என்ற காரணத்தினாலே, தமிழனுக்காகவோ, தமிழ்நாட்டிற்காகவோ பரிந்து கொண்டு பேசுவதாக எண்ணவேண்டாம், மற்ற மொழி பேசும் மக்களை எதிர்ப்பவன் என்றும் எண்ண வேண்டாம். தாளவாடி பிர்க்கா இந்தப் புறமா, அந்தப் புறமா என்று எழுப்பப்படும் பிரச்சினை, இந்த மாநிலத்தில் மட்டுமல்லாது, இமயம் முதல் குமரி வரை பரவி, நூறு நூறு எல்லைத் தகராறுகளைத் தோற்றுவித்துவிடுமென்று கூற விரும்புகிறேன். இது முடிந்து போன விஷயம். தாளவாடியை மைசூர் கேட்குமானால், நாமும் கோலார் தங்கச் சுரங்கத்தைக் கேட்பதற்கு நியாயம் இருக்கிறது. அவர்கள் இதைக் கேட்டு வந்தால், நாமும் அதைக் கேட்பதற்கான முழு நியாயத்தையும் வைக்க வேண்டியிருக்கும் என்று சொல்லிக் கொள்ளுகிறேன். எல்லைச் சிக்கல் தீர்க்கப்பட்டு விட்டது என்பதில் இந்த மன்றத்திலே இருப்பவர்களுக்காவது ஐயப்பாடு இருக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதில் அவர்கள் உறுதியாக இருக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஹோசூரைப் பொறுத்தவரையில், அந்தப் பிரச்சினை குறித்துப் பேசிய உறுப்பினர்களில் சிலர் மிகவும் ஆத்திரத்துடன் பேசினார்கள். அவர்கள் சுதந்திராக் கட்சி உறுப்பினர்கள் என்ற முறையிலே பேசினார்களா, அந்தத் தொகுதியைச் சார்ந்த உறுப்பினர்கள் என்ற வகையிலே பேசினார்களா அல்லது தாங்கள் தெலுங்கர்கள் என்ற முறையிலே பேசினார்களா என்று தெரியவில்லை. ஆனால், நான் ஒன்று சொல்லிக்கொள்வேன், தமிழகத்தின் ஆட்சியிலே இருப்பவர்கள், நேற்றிருந்த காங்கிரஸ் ஆட்சியானாலும் சரி, இன்றிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களானாலும் சரி, இம்மாநிலத்திலுள்ள தெலுங்கர்களுக்கோ, அன்றி கன்னடர்களுக்கோ அல்லது மலையாளிகளுக்கோ எந்த ஒரு தீங்கும் செய்தது இல்லை. எங்கேனும் அதிகாரிகளில் யாராவது செய்திருந்தால், அதை நினைப்பூட்டினால் நிச்சயமாக அது நீக்கப்படும். ஹோசூரிலே ஒரு சம்பவம் நடைபெற்றது. அதில் போலீசார் அக்கிரமாக நடந்து கொண்டார்கள் என்று சொல்லப்படுகிறது. இந்தமாதிரியான குற்றச்சாட்டு, கலவரத்தை அடக்க போலீசார் நடவடிக்கை எடுக்கும் எந்த ஒரு இடத்திலும்—எந்த சந்தர்ப்பத்திலும்—சொல்லப்படுவது வழக்கம். கம்யூனிஸ்டுகளுக்கு எதிராக போலீசார் நடவடிக்கைகள் எடுத்த இடங்களிலும் இப்படி போலீசார் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. எனவே இதுபோன்ற நிகழ்ச்சிகளில், "தெலுங்கர்களுக்கு எதிராக தமிழர்கள் நடவடிக்கை எடுத்தார்கள்" என்பது போன்ற இனச் சாயத்தைப் பூச வேண்டாமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஹோசூரில் என்ன செய்திருக்கிறார்கள்? அண்ணா அவர்களின் சிலையை, இந்த மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தவரின் சிலையை உடைத்திருக்கிறார்கள். அந்த நிகழ்ச்சியைப் பற்றி இங்கு பேசிய அந்த ஊர்ப் பிரதிநிதிகள் கொஞ்சமும் வருத்தம் தெரிவிக்காதது கண்டு என் மனம் புண்படுகிறது. இன்னொன்றை





யும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். திரு. பிரகாசம் பந்துலு அவர்கள் மதறாஸ் மனதே என்று சொல்லியிருந்தாலும், அவர்கள் கடைசிவரை சென்னையைப்பறிக்க முயன்றிருந்தாலும்கூட, அவருடைய தேசபக்தியைப் பாராட்டும் வகையில், சென்னை நகராட்சியார், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்த பிறகு அவருக்குச் சிலை வைத்தார்கள். ஆனால், அந்தத் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த, இந்த மாநிலத்தின் முதல்வராக இருந்த, அண்ணா அவர்களின் சிலையை உடைத்திருக்கிறார்கள் என்றால், இனிமேல் இங்கு அமைக்கப்பட்டிருக்கும் திரு. பிரகாசம் சிலைக்கும் பாதுகாப்பு தேட வேண்டியதாயிருக்கும் என்பதை, அமைதியான முறையிலே சொல்லிக்கொள்ள வேண்டியது என்னுடைய கடமையாக இருக்கிறது. வேறு தவறான எண்ணத்திலே நான் சொல்லவில்லை. ஒருவருக்கொருவர் பாதுகாப்பு என்பது, கொடுத்து வாங்குவதுதானே தவிர வேறில்லை. தாளவாடியிலே உள்ள கன்னடர்களானாலும் சரி, ஹோசூரிலே உள்ள தெலுங்கர்களானாலும் சரி, தமிழ்நாட்டிலே அவர்களுக்குள்ள குறைகளை நீக்கிக்கொள்ளட்டும். ஆனால் தமிழர் மீது குற்றம் காண முயல வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

கடைசியாக ஒன்றைச் சொல்லிக்கொள்ளுகின்றேன். ஆளுநர் அவர்களின் உரையிலே மாநில சுயாட்சியைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். பாங்குகள் தேசியமயமாக்கப்பட்டிருப்பதையும் குறிப்பிட்டு இருக்கிறார்கள். நான் தெளிவாகச் சொல்லுகிறேன், பாங்குகள் தேசியமயமானதை நானும், என்னுடைய கழகமும் மன நிறைவோடு வரவேற்கிறோம். (சோஷலிச நடவடிக்கைகளை மனநிறைவோடு வரவேற்கிறேன். அது துரிதப்பட வேண்டுமென்றும் நாங்கள் விரும்புகிறோம். ஆனால் அதே நேரத்திலே இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். மத்திய அரசிலுள்ள அதிகாரங்கள் மாநிலங்களுக்கு மாற்றப்பட வேண்டுமென்று கேட்கப்படும் நேரத்திலே, 'சோஷலிசம்' என்ற பெயரால் அதிகாரங்கள் மேலும் மத்திய அரசிடம் குவிகிற நிலை ஏற்படுகிறது. நேரத்தை அதிகமாக எடுத்துக்கொள்ளாமல் சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன். 'சோஷலிசப் பிரச்சினை' என்று சொல்லும்பொழுது மாநிலங்களுக்கு அதிகாரங்களைப் பிரித்துக்கொடுப்பதை, ஒழுங்காக, செம்மையாகச் செய்து, அதற்குப்பிறகு சோஷலிச நடவடிக்கைகளை எடுத்திருந்தால் சிக்கல் இருக்காது) மத்திய அரசிலே உள்ள கட்சியினர் பம்பாயில் கூடினார்கள். சோஷலிசத் திட்டங்களைக் கொடுத்தார்கள்; தீர்மானங்கள் நிறைவேற்றினார்கள். அந்தக் கட்சியின் தீர்மானங்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டியவர் இந்த மாநிலத்தில் ஆட்சியிலேயிருப்பவர்கள் ஆவர். அது சாத்தியமா? மாநிலங்களுக்கு கூடுதலான அதிகாரத்தைக் கொடுத்து, கூட்டுப்பட்டியல் எடுபட்டால் ஒழிய, இன்றிருக்கும் முறையில் சோஷலிசப் பாதையில் முன்னேற்றம் அடைய முடியாது. இந்தத் தமிழக அரசு, பாங்குகளைத் தேசியமயமாக்கியிருப்பதை ஆதரிக்கிற அதேநேரத்தில், அதனால் இந்த மாநிலத்

தின் பண வசதி குறைந்துவிடாமல் பார்த்துக்கொள்ளவேண்டுமென்று எழுதியிருப்பதற்காக முதல்வர் அவர்களைப் பாராட்டுகிறேன். அதற்கு பிரதமர் அவர்கள் உறுதி கூறினார்கள். ஆனால் அத்தகைய உறுதிமொழிகள் மட்டும் போதாது. உறுதிமொழிகள் தேவையில்லை. அதற்கான உத்தரவாதம் அரசியல் சட்டத்திலேயே இருக்கவேண்டும். எடுக்கப்படும் சோஷலிச நடவடிக்கைகளினால் மாநிலங்கள் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும் மாநில சுயாட்சிக் கமிஷன் தயாரிக்கிற அறிக்கைகளில் இதுபற்றி விளக்கம் இருக்கவேண்டும். இந்த விளக்கத்தைக்கோரி தமிழக அரசு அந்தக் கமிஷனுக்கு ஆணை அனுப்பிவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேச வாய்ப்பளித்த தலைவரவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** துணைச் சபாநாயகரவர்களே, கவர்னர் உரையின் மீது ஒரு சில வார்த்தைகள் கூற நான் ஆசைப்படுகிறேன். கவர்னர் உரையின்மீது பேசும்பொழுது காங்கிரஸ் கட்சியின் சார்பிலே பேசியவர்கள் கவர்னர் உரையில் ஒன்றுமே இல்லை என்று பலரும் பேசுகிறார்கள் என்று ஆளும் கட்சியிலே உள்ளவர்கள் சொன்னார்கள். நானும் சொல்லுகிறேன், அதில் என்னதான் இருக்கிறது என்று எனக்கே புரியவில்லை. நான் ஒன்று கூறுகிறேன். நான் என்னுடைய தொகுதியிலே ரிசர்வ் ஸ்தானத்தின் சார்பிலே வந்திருக்கிறேன். கவர்னர் உரையிலே, ஹரிஜன முன்னேற்றம் பற்றியோ அல்லது தீண்டாமை ஒழிப்பு பற்றியோ அல்லது ஹரிஜனங்களின் படிப்பு, கல்லூரி விஷயம் பற்றியோ ஏதேனும் சொல்லப்பட்டிருக்கிறதா என்றால், இல்லை. அதுதானே எனக்கு முக்கியம். அதைவிட்டு, அது இல்லை இது இல்லை என்று குறை சொல்கிறார்களே என்று சொல்வதில் என்ன பிரயோஜனம்? இப்படிப்பட்ட பலகாரியங்கள் இதில் இல்லை. போன வருஷமும் இதையே பேசினோம் கவர்னர் உரையிலே. இந்த வருஷம் ஏதேனும் புதிதாக இருக்கிறதா என்றால் இல்லை. தீண்டாமை ஒழிப்பு, ஹரிஜன் முன்னேற்றம் பற்றி இல்லை. அப்படி இருக்கும்பொழுது அதை நாங்கள் எப்படிப் பாராட்ட முடியும்? அதை எப்படி வரவேற்க முடியும்? இதைச் சொன்னால் காங்கிரஸ்காரர்கள் இப்படிச் சொல்கிறார்களே என்று வருத்தப்படுவதில் பிரயோஜனம் இல்லை.

அதுதான் போகட்டும். விவசாயத் தொழிலாளர்கள் விஷயத்திலோ அல்லது ஏழைகள் விஷயத்திலோ அல்லது கூலி விஷயத்திலோ அல்லது பாட்டாளிவர்க்கத்தின் விஷயத்திலோ ஏதேனும் சொல்லியிருக்கிறார்களா என்று பார்த்தால் அதுவும் இல்லை. அது தான் எங்கள் தாலுக்காவிலே அதிகமாக இருக்கிறது. அதைச் சொல்லியிருந்தால் நான் பாராட்டி இருப்பேன். ஆகவே, அப்படிச் சொல்வதால் வருத்தப்படுவதில் பிரயோஜனம் இல்லை. ஒருகால் அடுத்த வருஷத்தில் நல்ல உரையைக் கொடுப்பார் என்று நினைக்கிறேன்.



முக்கியமாக ஒரேயொரு விஷயத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மற்றுமொரு கீழ்வெண்மணி சம்பவம் தென் ஆற்காடு ஜில்லாவிலே, கள்ளக்குறிச்சி தாலுகாவிலே நடந்திருக்கிறது. நம்முடைய உணவு அமைச்சரவர்கள்கூட போய்வந்திருக்கிறார்கள். நானும் போய் பார்த்து வந்தேன். நான், இந்த நிலையை அப்படியே சொல்லுகிறேன், இதிலே கட்சியோ ஜாதியோ உள்ளது என்று யாரும் நினைத்துவிடக்கூடாது. நடந்தது என்ன? அது அன்றைக்கு மாத்திரம்தான் நடந்ததா? அது அன்றைக்கு ஆரம்பித்ததுதானா இல்லவே இல்லை. இது தொடர்ந்து நடந்துவருகிறது. அதையெல்லாம் சொல்ல நான் ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அங்கு நடைபெற்ற சம்பவம் வழக்கு விசாரணையிலே இருக்கிறது. அந்த வழக்குக்குக் குந்தகம் விளைவிக்காத வகையிலே அங்கத்தினருடைய பேச்சு அமைய வேண்டும், வழக்கு பாதிக்கப்படக்கூடிய வகையிலே இருக்கக் கூடாது என்று அங்கத்தினர் அவர்களிடம் தாழ்மையோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. எஸ். சிவசுப்ரமணியன் :** தென் ஆற்காடு ஜில்லாவைப் பொறுத்தவரையில் மாடு விரட்டுவது என்ற வழக்கம் உண்டு. பொங்கல் விழாவில் கரிநாளில் மாடு விரட்டுவது உண்டு. எங்கள் பக்கத்தில் மாட்டுப்பொங்கலன்று மாடு விரட்டுவார்கள். அரிஜனங்கள் ஜாதி இந்துக்கள் பகுதிகளுக்குச் சென்று மாடுகளை விரட்டி காசு வாங்குவது வழக்கம். அதன் பிரகாரம் அவர்கள் சென்றிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சம்பவத்தினுடைய நிகழ்ச்சிகளைப்பற்றி, பாக்ட்ஸ் ஆஃப் தி கேஸ் பற்றிச் சொல்கிறீர்களா? பாக்ட்ஸ் ஆஃப் தி கேஸ் பற்றிச் சொல்லக்கூடாது.

**திரு. எஸ். சிவசுப்ரமணியன் :** வழக்கைப் பாதிக்காத முறையில் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பாக்ட்ஸ் ஆஃப் தி கேஸ் பற்றிச் சொல்லக்கூடாது. அது ஸப்ஜூடிஸ்.

**திரு. எஸ். சிவசுப்ரமணியன் :** வழக்கிற்குக் குந்தகம் இல்லாதபடி நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** முதலில் தலைவர் எழுந்தவுடன் உறுப்பினர் அவர்கள் உட்காரவேண்டும். சம்பவம் பற்றிய வழக்கு நீதிமன்றத்தில் விசாரணையில் இருக்கிறது என்று மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நிகழ்ச்சி நீதிமன்றத்தின் விசாரணையில் இருக்கும்பொழுது, சம்பவத்தைப்பற்றி உறுப்பினர் அவர்கள் பேசுவது, இது சம்பந்தப்பட்ட நிகழ்ச்சி ஸப்ஜூடிஸ் ஆக இருப்பதால், சரியல்ல; அங்கு நடந்தது என்ன என்பது குறித்து, அதாவது ஃபாக்ட்ஸ் ஆஃப் தி கேஸைப் பற்றிச் சொல்லக்கூடாது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : கேஸ் கோர்ட் விசாரணையில் இருக்கிறது, ஸப் ஜூடிஸ் ஆக இருக்கிறது, ஆதலால் பாக்ட்ஸைப் பற்றி எந்தவிதமான தகவலும் சொல்லக்கூடாது என்று சொல்வது அவ்வளவு சரியல்ல. அதாவது கோர்ட்டு என்ன தீர்ப்பு வழங்கப்போகிறார்களோ அதைப் பாதிக்கக்கூடாது, அந்த அளவில் சொல்லக்கூடாதே தவிர . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நம்முடைய சட்டமன்ற விதிமுறைகளில் தலைவர் ஒரு தீர்ப்புக் கொடுத்துவிட்டால், அந்தத் தீர்ப்பை ஓவர்ரூல் பண்ணக்கூடிய அதிகாரம் உறுப்பினர்களுக்குக் கிடையாது. தலைவர் ஒரு தீர்ப்புக் கொடுத்துவிட்டால், அந்தத் தீர்ப்பை ஏற்றுக்கொள்ள வேண்டிய பொறுப்பு இந்த மன்றத்திற்கு இருக்கிறதே தவிர, தலைவர் தீர்ப்பு தவறு என்று சொல்வதற்கு யாருக்கும் உரிமை கிடையாது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் தீர்ப்பு தவறு என்று நான் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தலைவர் தீர்ப்பு சரியில்லை என்று சொன்னால், தலைவர் சொன்ன தீர்ப்பை ஏற்றுக் கொள்ளவில்லை என்றுதானே பொருள்படும்?

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : பாக்டஸைப் பற்றிச் சொல்லக் கூடாது என்று சொன்னது சரியல்ல என்று தான் சொன்னேன். தலைவர் தீர்ப்பு சரியில்லை என்று நான் சொல்லவில்லை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வழக்கு நீதி மன்றத்தில் இருக்கிறது. அந்த நிகழ்ச்சி சம்பந்தமான பாக்ட்ஸ் ஆப் தி கேஸைப் பற்றிச் சொல்லப் போனால், அரசாங்கத்தின் சார்பாக இயங்கக் கூடிய போலீஸார் பாக்ட்ஸ் ஆப் தி கேஸைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது உறுப்பினர் அவர்களும் அந்தச் சம்பவத்தைப் பற்றிச் சொன்னால், அதற்கு மாறுபட்டதாக இருக்கலாம். அப்படியிருந்தால் அது நிச்சயம் ஸப் ஜூடிஸ் ஆக இருக்கும் நிகழ்ச்சியைப்பற்றிக் கூறுவதாகத்தான் ஆகும்.

THIRU R. PONNAPPA NADAR : With due respect to the Chair let me say that it should not affect the merits of the case. That does not follow that the facts of the case should not be stated by the Member.

MR. DEPUTY SPEAKER : It will definitely affect the merits of the case. The member may give some facts which may be contractory the facts already submitted before the Court.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசத்தொடங்குகிறபொழுது அங்கு உண்மையில் என்ன நடந்தது என்று தெரியுமா என்று ஆரம்பித்த காரணத்தினால், அங்கு என்ன நடந்தது என்று சம்பவத்தைப் பற்றிய நிகழ்ச்சியைச் சொல்லப்போனால், உண்மையில்





நடந்தது என்ன என்று விசாரணை செய்து தீர்ப்புக் கொடுப்பதற்குத் தான் நீதி மன்றத்தில் வழக்கு நடந்துகொண்டிருக்கிறது. எனவே, அந்தப் பகுதியிலுள்ள சூழ்நிலையைப் பற்றிச் சொல்லலாம், தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள சூழ்நிலையைப் பற்றிச் சொல்லலாம். ஆனால், குறிப்பிட்ட நிகழ்ச்சியைப்பற்றி முழு விவரம், அங்கு என்ன நடந்தது என்பதைப்பற்றிய விவரங்களைத் தெரிவிக்கக்கூடாது.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : நான் பேச ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே 10 நிமிஷம் ஆகிவிட்டது. தலைவர் அவர்கள் டைம் ஆகிவிட்டது, உட்காருங்கள் என்று சொல்லிவிடுவார். நான் அந்த ஜில்லாவில் பிறந்தவன். நான் அங்கு அந்தச் சமுதாயம் பட்ட பாட்டைப்பற்றி எப்படிச் சொல்லாமல் இருப்பது? அங்கு போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது, அரசாங்கம் இருக்கிறது. இருந்தும், அங்கு ஒருதலைபட்சமாக கேஸ் நடந்துகொண்டிருக்கிறது. அரிஜன மக்களைப் போலீஸ் ஸ்டேஷனில் வைத்து அடித்துக் கொண்டிருக்கிறார்கள். போலீஸ்காரர்கள் பல கிராம அரிஜன தெருக்களில் புகுந்து அரிஜனங்களைக் கண்டபடி அடித்துக் கொண்டிருக்கிறார்கள். நான் எப்படி இதைப்பற்றிச் சொல்லாமல் இருக்கமுடியும்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் இப்போது சொன்னதை நான் அனுமதித்திருக்கிறேன். நான் நினைத்தால் தடுத்து நிறுத்தியிருப்பேன். சம்பவம் சம்பந்தமான வழக்கு நீதிமன்ற விசாரணையில் இருக்கிற காரணத்தினால், அந்த நிகழ்ச்சியைப்பற்றி நடந்தது என்ன என்று பேசுவது, ஸப் ஜூடிஸ் ஆக இருக்கும் நிகழ்ச்சியைக் குறிப்பதாகத்தான் ஆகும் என்றுதான் குறிப்பிட்டேன். அங்கே என்ன கஷ்டங்கள் இருக்கின்றன, பொதுமக்களுக்கு என்ன இழப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று கூற எந்த உறுப்பினருக்கும் அனுமதி இல்லை என்று சொல்வதற்கு எனக்கு அதிகாரம் இல்லை.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : நீதிமன்றத்தில் இருக்கிற கேஸைப் பாதிக்கின்ற அளவுக்கு நிச்சயம் ஒன்றும் சொல்லவில்லை என்று சபாநாயகர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாடு விரட்டுகிற விஷயத்தைப் பற்றித் தான் ஞாபகப்படுத்துகிறேன். அமைச்சர் அவர்கள் அங்கு சென்று வந்திருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் விரோதமாகச் செய்திருப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை. நடக்காத விஷயம் ஏதேனும் நடந்ததாக அரசாங்கத்திற்குத் தகவல் வந்திருந்தால் என்ன நடந்தது என்று சொல்வதற்குத்தான் ஆசைப்படுகிறேன். மாடு விரட்டுகிற சம்பவம் அங்கு நடந்திருக்கிறது. மாடு விரட்டிக்கொண்டு தெருவில் வந்திருக்கிறார்கள். இரண்டு பக்கமும் கேஸ் இருக்கிறது, இரண்டு பக்கமும் சொல்லப்பட்டிருக்கிறார்கள். அது எனக்குத் தெரியும். அங்கே சுமார் 30 வீடுகள் கொளுத்தப்பட்டிருக்கின்றன. கொளுத்தியது யார் என்பது நிச்சயமாகப் புரியவில்லை. அதைப்பற்றி போலீஸ் நடவடிக்கை எடுக்கவில்லை. போலீஸ் ஸ்டேஷன் பக்கத்

தில் இருக்கிறது. வீடு பற்றிக்கொண்டு இருக்கிறது. போலீஸ் ஸ்டேஷன் பக்கத்தில் நடந்து இருக்கிறது. ஒரு பெண்மணியும், குழந்தைகளும் இறந்திருக்கிறார்கள். போலீஸ் ஸ்டேஷனில் போலீஸ்காரர்கள் இல்லையா? சப் இன்ஸ்பெக்டர் இல்லையா? அமைச்சர் அவர்கள் அங்கு சென்று பார்த்திருக்கிறார்கள்.

அங்கு மூன்று மாதங்களுக்கு முன்னால் நடந்தது என்ன என்பதைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். மூன்று மாதங்களுக்கு முன்பு கச்சரபாளையத்தில் கூலித் தகராறு நடந்திருக்கிறது. அது நேற்று நடந்தது அல்ல. மூன்று மாதங்களுக்கு முன்பு கூலித் தகராறு நடந்திருக்கிறது. கூலி அதிகமாகக் கேட்டிருக்கிறார்கள். கூலித் தகராறு எங்கு பார்த்தாலும் இருக்கிறது. அதிகக் கூலி கேட்டதற்கு அவர்கள் கூலி கொடுக்கவில்லை அவர்களுக்கு வேலையும் கொடுக்கவில்லை. அவர்கள் வேலையில்லாமல் சும்மா இருக்கிறார்கள். அரிசனங்களுக்கு வேலை கொடுக்கக்கூடாது என்று சொல்லிவிட்டார்கள். அவர்களுக்கு வேலை இல்லை. வேலையில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த நேரத்தில் அங்கு இருக்கிற ஜாதி இந்துக்கள் இவர்களை எப்படியாவது ஊரைவிட்டுக் கிளப்பிவிடவேண்டும் என்று ரிஷிவந்தியம் பாரெஸ்டில் 5 ஏக்கரா நிலம் கொடுக்கிறோம், எல்லோரும் அங்கு சென்றுவிடுங்கள், இங்கு இருக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். அரிசன மக்கள் அதை ஒத்துக்கொள்ளவில்லை. நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் இப்பொழுது சபைக்கு வந்துவிட்டார்கள். கீழ்வெண்மணியில் நடந்தது இங்கேயும் நடக்கக்கூடாது என்பதற்காகத் தான் நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். முதல் அமைச்சர் அவர்கள் சபையில் இல்லாமல் இருந்தது எனக்கு வருத்தமாக இருந்தது. இப்பொழுது வந்துவிட்டார்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** கீழ்வெண்மணியில் நடந்தது அரிசனங்களின் வீடுகள் கொளுத்தப்பட்டன. இங்கே அரிசனங்கள் அல்லாதவர்களின் வீடுகள் கொளுத்தப்பட்டிருக்கின்றன.

**திரு. எஸ். சிவசுப்பிரமணியன்:** நான் அதைத் தவறு என்று ஏற்றுக்கொள்கிறேன். யார் கொளுத்தினார்கள் என்பது தான் பிரச்சினை. அரிசனங்கள் இறந்துபோனவரின் பிணத்தை போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு செல்வதை ஜாதி இந்துக்கள் தடுத்தார்கள். பிணத்தைத் தெருவழியாக போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு செல்வதைத் தடுத்தார்கள். அரிசனங்களின் வீடுகள் இரண்டு, மூன்று வீடுகளும் கொளுத்தப்பட்டிருக்கின்றன

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** முதல் அமைச்சர் அவர்களின் உத்திரவிற்கிணங்க நான் நேரிடையாகச் சென்று பார்வையிட்டேன். வழக்கு இப்பொழுது நீதிமன்ற விசாரணையில் இருக்கிறது என்று குறிப்பிட்டேன். 33 வீடுகள் கொளுத்தப்பட்டிருக்கின்றன. 35 வீடுகளையும் நான் நேரிடையாகப் பார்த்தேன். யார் கொளுத்தினார்கள் என்பதைப்பற்றி நான் உள்புகவில்லை. கொளுத்தப்பட்ட வீடுகள் அத்தனையும் ஜாதி இந்துக்கள் வீடுகள் தான்.



தாழ்த்தப்பட்ட மக்களின் வீடுகள் அல்ல. அவர்கள் சொல்வது தவறான தகவல். போலீஸ்காரர்கள் அடிக்கிறார்கள், துன்புறுத்துகிறார்கள் என்று சொன்னார்கள். முதல் அமைச்சர் அவர்களிடம் சொல்லியிருந்தால் கூட அவர்கள் அதைப்பற்றி விசாரணை செய்திருப்பார்கள். அப்படி எதுவும் நடைபெறவில்லை என்பதைத் தான் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். போலீஸ் ஸ்டேஷன் பக்கத்தில் இருக்கிறது, வீடுகள் கொளுத்தப்பட்டிருக்கின்றன என்பது உண்மை தான். நான் பார்த்து விட்டு வந்திருக்கிறேன். அங்கு இருக்கிற போலீசார்களைப் பல கிராமங்களுக்கு அனுப்பிவிட்டிருந்தார்கள். அங்கே எஸ்.ஐ. ஒருவரும், இரண்டு கான்ஸ்டேபிள்களும் தான் இருந்தார்கள். அவர்கள் அங்கு செல்வதற்குள் தீ வைத்திருக்கிறார்கள். தீ பிடித்துக்கொண்டு வீடுகள் எரிந்துவிட்டன. அவர்கள் அணைப்பதற்கு முயற்சி செய்திருக்கிறார்கள். ஃபைர் என்ஜின் வரவில்லை. அதற்குள் வீடுகள் எரிந்து விட்டன. இது தான் நடந்த விவரம். மேற்கொண்டு விவரத்திற்குப் போனால் வழக்கைப் பாதிக்கும். கேஸைப்பற்றி, யார் பக்கம் ஜெயிக்கும் என்பதைப்பற்றி அரசாங்கத்திற்குக் கவலை இல்லை. ஆனால், நீதி வழங்கப்படவேண்டும், பொது மக்களிடையே ஏற்பட்ட பீதி அடங்கவேண்டும். ஆகவே, இதைப்பற்றி மேலும் தொடர்ந்து பேசிக்கொண்டு இருக்கவேண்டாம் என்று உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எஸ். சிவசுப்ரமணியன்:** கனம் முதல் அமைச்சர் அவர்களே, அமைச்சரவர்கள் ஒத்துக்கொண்டார்கள், வீடுகள் கொளுத்தப்பட்டிருக்கின்றன என்பதை. யார் கொளுத்தினார்கள் என்று தெரியாது என்றும் அமைச்சர் சொல்லுகிறார்கள். நிச்சயமாக அதைப்பற்றி அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும், அதை விசாரிக்க வேண்டும், வீடு கொளுத்தியது அரிஜனங்களா, சாதி இந்துக்களா என்று. அவற்றில், 33 வீடுகளில் மூன்று வீடுகள் அரிஜன் வீடுகள் என்பதை மட்டும், சபாநாயகர் அவர்கள் மூலம் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர் ஜாதி இந்துக்கள் வீடுகள் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு, அங்கத்தினர் மூன்று வீடுகள் அரிசனங்கள் வீடுகள் என்பது சரியாகாது.

**திரு. எஸ். சிவசுப்பிரமணியன்:** அமைச்சருக்குத் தெரியாது என்று சொல்லவில்லை. மூன்று வீடுகள் அரிஜன வீடுகள் என்பது எனக்குத் தெரியும் என்று சொல்ல வந்தேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அப்பொழுதே, ஒத்திவைப்புத் தீர்மானம் வந்தபோதே, வேண்டிக்கொண்டேன். மன்றத்திலுள்ள உறுப்பினர்களை வகுப்புக் கலவரம் என்று மறுபடியும் அந்தத் தீயை மூட்டிவிட வேண்டாம்; தவறியும் அப்படி இதை அழைக்க வேண்டாம்; இது ஒரு கோஷ்டித் தகராறு என்று எடுத்துக் கொள்ள வேண்டும்; வகுப்புக் கலவரம் என்று சொல்வதால், இரண்டு வகுப்பாருக்கும் தீமை வரும், அவர்களுக்கு நல்லது செய்

தவர்களாக ஆகமாட்டோம். ஆகவே நான் ஒழுங்கிருப்பதைப் பேச வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். சிவசுப்ரமணியன் : முதல் அமைச்சருடைய கோரிக்கை நல்ல முடிவு. மறுபடியும் வளரக்கூடாது என்பதற்காகத்தான். சபாநாயகர் அவர்கள் முலமாக எடுத்துச் சொல்லுகிறேன். அந்தப் பகுதி அரிசன மக்கள் தங்களின் தலைவராக மாஜி எம்.எல்.ஏ. ஆனந்தன் என்பவரை ஆதரிக்கிறார்கள். தங்கள் தலைவனாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். என்பதை முதல் அமைச்சருக்குத் தெரிவிக்கிறேன். வெறுப்புக் கலவரம், ஜாதிச் சண்டை முன்னாலே நடந்திருக்கிறது. இப்பொழுது, இவர்கள் தலைமையில் நடக்கக் கூடாது என்று தான் இதையெல்லாம் சொல்லுகிறேன். வேறொன்றும் இல்லை. அந்தப் பகுதியில் அரிசன மக்களை அடக்கு வதாகச் சொல்லுகிறார்கள். ஆனந்தனுக்கு ஆபத்து வருமோ என்று பயம் ஏற்பட்டிருக்கிறது. ஜாதி இந்துக்கள் மூலமாக ஆபத்து வரும் என்று பயப்படவேண்டியதாக இருக்கிறது. இதை மட்டும் முதல் அமைச்சர் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். ஜாதி இந்துக்கள் ஏராளமாகப் பணம் வசூல் செய்கிறார்கள் என்பதாகக் கேள்விப்படுகிறேன். ஆனந்தனுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும் என்றும் தக்க வகையில் நல்ல பாதுகாப்புக் காரியங்கள் செய்ய வேண்டும் என்றும் தங்கள் மூலம் கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு அன்பர் காமராஜை சிறையில் போடவேண்டும், கலவரத்தை மூட்டுகிறார் என்றும் சொன்னார்கள். அப்பொழுது நம்முடைய முதல் அமைச்சர் இல்லை, அந்த நேரத்தில். அவர் சொன்னார் முதுகுளத்தூர் தகராறு பற்றி. நிச்சயமாக அவர்கள் காமராஜர் முதல் அமைச்சராக இருந்தபோது, நியாயமாக, நேர்மையாக அதை அடக்கினார். அடக்குவதில் தப்புக் கிடையாது. அதை வைத்து இன்றைக்கு இப்படிச் சொன்னால், இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருக்கும் போது, இந்த சமயத்தில். அதுவும் நம்முடைய முதல் அமைச்சர் காலத்தில் இப்படி நடக்காது என்று சொல்லிக் கொண்டு துணிச்சலாக, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அண்ணாவைச் சிறையில் போடு என்று சொன்னால் ஒத்துக்கொள்ள முடியாது. அதே போல காமராஜை இன்றைக்குச் சிறையில்போடு என்று சொன்னால், அந்த வார்த்தையை அவர் நிச்சயமாக வாபஸ் பெறவேண்டும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பேசியது சுதந்திராக் கட்சி உறுப்பினர். அண்ணாவை ஏன் சொல்லுகிறீர்கள்? அவர்களுக்கும் தலைவர்கள் இருக்கிறார்கள் (சிரிப்பு).

திரு. எஸ். சிவசுப்ரமணியன் : அதே போன்று இந்தக் கள்ளக் குறிச்சி விஷயத்தில் முறையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு.





திரு. பி. ஜி. கருத்திருமன் : குறுக்கீட்டுக்கு மன்னிக்கவேண்டும். தைரியமிருந்தால் சிறையில்போடட்டும்; தயாராக இருக்கிறோம். அதைப் பற்றி அங்கத்தினர் கவலைப்பட வேண்டாம்.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : துணைச் சபாநாயகர் அவர்கள், நடந்தவைகளை நேரிடையாகப் பார்வையிட்டு, அறிந்து கொண்டு, மேலும் கலவரம் நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். எங்கள் தலைவர் ஆனந்தனுக்கு ஆபத்து வரும் என்று அச்சப்படுகிறோம். எங்கள் நண்பர் ஜெயராஜ் எம்.எல்.ஏ. கதி ஆனந்தனுக்கும் வருமோ என்ற பயம் ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தங்கள் மூலம் முதல் அமைச்சருக்குத் தெரிவித்துக் கொண்டு, என் உரையை முடிக்கிறேன், வணக்கம்.

திரு. எஸ். இராமச்சந்திரன் : பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை கூற விழைகிறேன். ஆளுநர் உரையில் தமிழக அரசின் நிதி நிலைமை ஆராய்ந்து இன்னும், நிதி வசதிகளைப் பெருக்க வேண்டும் என்று அவர்கள் தெரிவித்திருக்கும் பகுதி மிகவும் முக்கியம் வாய்ந்த பகுதி. அதே சமயத்தில், நான் கண்ட புதிய உலகத்தைப் பற்றியும், புதிய ஏழைகளைப் பற்றியும், இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய கடமை என்று நினைக்கிறேன். நான் கண்ட புதிய உலகம் இதுதான், நம்முடைய குதிரைப் பந்தயம், பந்தயம் நடக்கும் இடம். இந்தப் பந்தயத்தை நடத்தும் புதிய ஏழைகள் உங்களுக்கு ஏற்கனவே அறிமுகமானவர்கள் தான், தொழில் அதிபர்கள். குதிரைப் பந்தயத்தை நடத்தும் நிர்வாகிகள் இவர்கள் தான். இதில் பொது மக்களின் பணம் ஏராளமாகப் போடப்படுகிறது. அந்தப் பணத்தில் தவறான நிர்வாகத்தால் ஊழல்கள் மலிந்து கிடைக்கின்றன என்பதைப் பார்க்கும் போது, இதை இன்னும் விட்டு வைக்கலாமா என்பதைப் பற்றி அரசு ஆலோசிக்க வேண்டிய கட்டத்தில் இருக்கிறது. இப்படி நிர்வாகத்தை நடத்துபவர்கள், இந்தப் புதிய ஏழைகள், எம். ஏ. சிதம்பரம், ராஜா சர் முத்தையா செட்டியாரின் திருக்குமாரர், எம். ஏ. எம். முத்தையா செட்டியார், தாரப்பூர் கம்பெனி லோகநாத முதலியார், தாமஸ் கம்பெனியைச் சேர்ந்த ஜே. தாமஸ், பிலிம் ப்ரொட்யூசர் சுந்தர்லால் நகாதா, இவர்களின் ஆதிக்கத்தின்கீழ் இது நடக்கிறது. குதிரையின் சொந்தக்காரர்களாகவும் இருக்கிறார்கள். புல் வாங்கக் கூட அவர்களிடம் காசு இல்லாமல், பொது மக்கள் கட்டும் பணத்தில், மலிவு விலையில் புல் வாங்கிக் குதிரைக்குப் போடுகிறார்கள். படி அரிசியைப் பற்றிக் கிண்டலும் கேலியுமாகப் பேசுகிறவர்கள். குதிரைக்கு 60 ரூபாய்க்கு புல் வாங்குவதை கட்டாமல், 30 ரூபாய்க்கு என்று மலிவாக வாங்க உத்தரவு பெற்றிருக்கிறார்கள். இந்தக் கணக்கு விவரம் தெரிவிக்க விரும்புகிறேன். 1965-66-ல் குதிரைகளுக்கு புல் வாங்குவதில் நஷ்டம் ரூ. 11,000; 1968-69-ல் ஏற்பட்ட நஷ்டம் ரூ. 1,64,000. இது குதிரைகளுக்கு புல் வாங்கியதில் மட்டும், மெட்ராஸ் ரேஸ் கிளப்பில் ஏற்பட்டிருக்கும் நஷ்டம். ஏராளமாகப் பணம் வருகிறது. இப்படிக்

கணக்கு எழுதி வைத்திருக்கிறார்கள். முன்பு குதிரைகள் பேரில் பணம் கட்டுவது குதிரைகளின் சொந்தக்காரர்கள் தான். இப்பொழுது நிலைமை, குதிரைகள் ஓடுவதற்கு மெட்ராஸ் ரேஸ் கிளப் பணம் தருகிறது. குதிரைகள் என்றால் ஓடும் என்று பொருள். வேறு மிருகங்கள் ஓட்டுவதற்கு பணம் கொடுப்பார்கள். இந்த வகையில் 1965-66-ல் ரூ. 1,25,000 என்று இருந்தது. இப்பொழுது ரூ. 9,72,000, கிட்டத்தட்ட ஒன்பது மடங்கு அதிகமாகியிருக்கிறது. குதிரைகளின் எண்ணிக்கை எவ்வளவு? முன்பு 1966-ல் 239, இப்பொழுது 305 ஆக உயர்ந்திருக்கிறது. பாதிதான்; இந்த வகையில் பொதுமக்களின் பணம் பாழ்படுத்தப்படுகிறது என்பதை மட்டும் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

(திரு. ந. தருமலிங்கம் தலைமை)

பரிசுத் தொகையைப்பற்றிச் சொல்லும்போது, வெற்றி பெற்றால் பரிசு பன் மடங்கு. 1965-66-ல் இது 21 லட்சமாக இருந்தது. இன்றையதினம் 32 லட்சமாக உயர்ந்திருக்கிறது. அது போலவே, குதிரைகள் வாங்க இந்த ஏழைகளுக்குப் பணம் கிடையாது. ஏழை அரிசனங்களுக்கு வீடு இல்லை என்று வீடு கட்ட கடன் தருகிறோமே, ரூ. 150 என்று. அதே போல, ரூ. 30 லட்சம் வட்டியில்லாமல் கடனாக கொடுத்திருக்கிறார்கள் இந்த மெட்ராஸ் ரேஸ் கிளப்பிற்கு. வட்டியில்லாக் கடன் ரூ. 30 லட்சம். இது நியாயம் தானா என்று அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

நிர்வாகத்தை எடுத்துக்கொண்டால், அங்கே இருக்கும் தொழிலாளர்களுடைய நிலைமை மிகப் பரிதாபகரமானது. அவர்களுக்காகச் செலவழிக்கும் தொகை ரூ. 5 லட்சம். அங்கே இருக்கும் தொழிலாளர்கள் 130 பேர்கள், அலுவலகத்தில் இருப்பவர்களையும் சேர்த்து. அங்கே பணிபுரியும் அதிகாரிகள் 13 பேர்கள். அவர்களுக்காகச் செலவழிக்கும் பணம் என்னவென்றால், ரூ. 5 லட்சம். அது மட்டுமல்ல, அங்கே ஒரு செக்ரடரி என்று ஒருவர் இருக்கிறார். அவருடைய சம்பளம் என்ன தெரியுமா? ரூ. 7,200, மாதம் ஒன்றுக்கு. நம்முடைய சீப் செக்ரடரிக்கு ரூ. 3,750; நம்முடைய கவர்னருக்கு ரூ. 5,500; ஆனால் இவருக்கு ரூ. 7,200 சம்பளமாகக் கொடுக்கிறார்கள். அதுமட்டுமல்ல, அவருக்கு ஏர்-கண்டிஷன்ட் பங்களா, கார், ட்ரைவர் பட்லர் என்று இம்மாதிரி ப்ரின்ஸ்லி லைப் என்று சொல்வார்களே அப்படி. ராஜாக்களைப் போல் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கே நடக்கின்ற நிகழ்ச்சிகளைப்பற்றி, இந்தப் பேரவை கொஞ்சமும் கவலைப்படாமல் இருக்கிறது. அங்கே ஒரு உலகம் இருக்கிறது என்பதற்காகத்தான் அதை புதிய உலகம் என்று நான் குறிப்பிடுகிறேன். அங்கே இருக்கும் புதிய ஏழைகள் ஏதாவது இதற்காக முதல் போட்டிருக்கிறார்களா என்றால் இல்லை. பொதுமக்களுடைய பணத்தில் 22½ சதவிகிதத்தை இவர்கள் எடுத்துக் கொள்கிறார்கள். இவர்கள் அரசாங்கத்திற்குத் தருவது 15 சதவிகிதம்தான். அந்த ரேஸ் கிளப்பிற்கு ஒரு செகரடரி போட்டிருக்கிறார்கள். அவர் தமிழ் நாட்டினர் கூட அல்ல. தமிழ்நாட்டில் இருப்பவரைத்தான் போடவில்லை. அண்டை மாநிலங்களான—திராவிட மாநிலங்களில் உள்ளவர்களைப்போட்டாலும் அவர் பிழைத்துக்



கொண்டால் பரவாயில்லை என்று இருக்கலாம். அதுவும் வட மாநிலங்களில் உள்ளவர்களைத்தான் செகரடரியாக போடுகிறார்கள். அதற்கான காரணம் என்னவென்று நமக்குத் தெரியவில்லை. அவர்களுடைய பெயர்கள் கூட நம்முடைய நினைவில் இருப்பதில்லை. ஏதோ, டோக்ரா என்கிறார்கள். சேத் என்கிறார்கள். பெயர்களே புரியவில்லை. அவர்களுடைய சம்பளம் மாதம் ஒன்றுக்கு 3,200, 3,800 4,000 ரூபாய் என்ற அளவில் இருக்கிறது. ஒரு வருடத்தில் குதிரை பந்தயம் நடக்கும் நாட்கள் 29 தான். ஆனால் செகரடரியின் சம்பளம் 1965-66-ல் 48 ஆயிரமாக இருந்தது. இன்றைக்கு 90 ஆயிரமாக ஆகியிருக்கிறது. தொழிலாளர்களுடைய சம்பளம் உயரவே இல்லை. விலைவாசிகள் எல்லாம் உயர்ந்துவிட்டதல்லவா? 1965-66-ல் 48 ஆயிரம் ஆக இருந்தது, 1968-69-ல் 90 ஆயிரம் என்ற அளவில் பெறுகிறார்கள்.

அதேபோல் புதிய ஏழைகளுக்கு டீ கொடுப்பது, ரெஃப்ரெஷ்மென்ட் செலவுக்கு மட்டும். அதாவது ரேஸ் நடக்கும் 29 நாட்களுக்கு மட்டும் ஆகும் செலவு 80,213 ரூபாய். இது இலவசமாக அளிக்கப்படுகிறது. இன்னும் டிராவலிங் அலவன்ஸை எடுத்துக் கொண்டால், நிர்வாகம் தங்கள் கையில் இருக்கிறதே என்ற எண்ணத்தினால் வீண் செலவுகளைச் செய்கிறார்கள். இப்படியெல்லாம் வீண் விரயச் செலவுகளையெல்லாம் எழுதிக் கணக்கு காட்டுகிறார்கள். 30 லட்சம் ரூபாய் வருமான வரியாக அரசாங்கத்திற்குக் கட்டுகிறார்கள். இதனுடைய நிகர லாபமாக 23 லட்சம் ரூபாயாக சேமிப்பு நிதியாக வைத்து 90 லட்சம் ரூபாய் அளவில் இன்றைய தினம் இருந்து வருகிறது. ரேஸ்கள் ஒழுங்காக நடக்கின்றனவா என்றால் இல்லை. இதைப்பற்றி ரேஸுக்குப் போகிறவர்களைக் கேட்டால், பொதுமக்களைக் கேட்டால் கதை கதையாகச் சொல்வார்கள்.

நான் ரேஸுக்குப் போனதில்லை. ஆனால் அந்தச் சங்கத்தின் தலைவராக இருந்துக்கொண்டிருக்கிறேன். குதிரைப் பந்தியத்தைப் பொறுத்தவரையில் ஏராளமான மானுபுலேஷன் நடக்கிறது. பணம் விரயமாக்கப்படுகிறது. எந்தக் குதிரை முதலில் வர வேண்டுமென்று திட்டமிடுகிறார்களோ, அதை முதலில் கொண்டுவரக்கூடிய எல்லா சாத்தியக்கூறுகளும் இருக்கின்றன. ஒரு குதிரையை முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமென்றால், கொஞ்சம் வேகமாக வரக்கூடிய குதிரையின் ஜாக்கி, கொஞ்சம் இழுத்துவிட்டால்போதும், வேறு ஒரு குதிரை முதலில் வந்துவிடும். அப்படி ஒரு குறிப்பிட்ட குதிரை முதலில் வருவதற்கு, வேகமாக வரக்கூடிய குதிரையின் ஜாக்கிக்குப் பணம் 5 ஆயிரம் ரூபாய் என்ற அளவில் கிடைக்கும். லட்சம் லட்சமாக உள்ள இடத்தில் ஐந்தாயிரம் ரூபாய் கொடுத்தால் எதுவும் கெட்டுப் போய் விடாது என்று அவர்களுக்கு எண்ணம்.

இதில் பொதுமக்கள்தான் ஏமாற்றப்படுகிறார்கள். பொதுமக்கள் கிட்டத்தட்ட 10 கோடி ரூபாய் பணம் கொடுக்கிறார்கள். ஆனால் அரசாங்கத்திற்கு வரியாகக் கட்டுவது 1-1/4 கோடி ரூபாய்தான். நமக்கு 15 சதவிகிதம் தான் கட்டுகிறார்கள். மற்றவற்றிக்கு கணக்கு எழுதிக் காண்பித்து விடுகிறார்கள். பொதுமக்களுடைய ஏராளமான பணத்தை ரேஸ் கிளப் நிர்வாகத்தினர் வைத்துக்கொண்டு, ஊதாரித்தனமாகவும், ஆடம்பரமாகவும் செலவுசெய்து கொண்டு வருகிறார்கள். இதை அரசாங்கம் அனுமதித்துக் கொண்டிருக்கலாமா?

மேலும் ரேஸ் நடத்துவதற்காக லைசென்ஸ் 1969 மார்ச்சுடன் காலக்கெடு முடிவடைகிறது. அதற்கு மேலும் லைசென்ஸ் நீட்டித்தா வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அங்கத்தினர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துங்கள் என்று நாம் சொன்னபோது அவர்கள் கேட்கவில்லை. ஆனால் ரேஸ் கிளப் நிர்வாகத்தினருக்கு 13 லட்சம் ரூபாய் அளவிலே குளிர்ப்பதன அறை கொண்ட கட்டிடம், மொசைக் போட்ட பாளிங்குத் தரை, மெம்பர்ஸ் ஹால், வி.ஐ.பி. ஹால் இப்படிப் பலவகையான ஆடம்பரச் செலவுகளைச் செய்து கொண்டு வருகிறார்கள். அரசாங்கத்தைப்பற்றிக் கொஞ்சமும் கவலைப்படுவதில்லை. மேலும் அங்கு வேலைசெய்யும் தொழிலாளர்களைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. அந்த நிர்வாகத்தினர்மேல் பொது மக்களுக்காவது நம்பிக்கை இருக்கிறதா என்றால் அதுவும் இல்லை. ரேஸ்கள் ஒழுங்காக நடத்தப்படுவதில்லை. ரேஸ்கள் ஒழுங்காக நடந்தால்தான் பொதுமக்கள் நம்பிக்கையோடு இருப்பார்கள். அதனால் தான் இதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். நாம் இதை எடுத்து நடத்துவதில் எந்தவிதமான சிரமமும் இல்லை. ஆண்டு ஒன்றுக்கு 29 நாட்கள்தான் ரேஸ் நடைபெறுகிறது. ஒரு தொழிற்சாலையை நடத்த வேண்டுமென்றால் அதற்குண்டான கச்சா பொருள்கள் தேவை போன்ற நிலைமைகள், இடைஞ்சல்கள் இதற்கு இல்லை.

அடுத்தபடியாக, ரேஸ் பந்தயத்திற்குப் போகிறவர்களுக்கு ஏதாவது சௌகரியம் இருக்கிறதா என்றால் எந்தவிதமான சௌகரியமும் செய்துகொடுக்கப்படவில்லை. அவர்கள் வெயிலிலேதான் நிற்கவேண்டும். மக்கள் குடிப்பதற்குத் தேவையான குடிதண்ணீர் வசதிகூட இல்லை. காபி வேண்டுமென்றால் நல்ல காபி கிடைக்காது. ஆக்ஷன் முறையில் காண்டீனை எடுத்து நடத்துகிறவர் காபி என்ற பெயரில் கொடுப்பதைத்தான் குடிக்க வேண்டும். அந்தக் காப்பியும் 50 பைசா, 75 பைசா என்ற விலையில்தான் கிடைக்கும். அதுவும் கிடைக்கவில்லையென்றால், அங்கு கிடைக்கும் வேர்க்கடலையைத் தின்றுவிட்டு மக்கள் வந்துகொண்டிருக்கிறார்கள். நிர்வாகத்தினர் பொதுமக்களுக்கு ஏன் நல்ல வசதிகளை செய்துகொடுக்கக்கூடாது? நிர்வாகம் சரியான முறையில் நடக்கவில்லை, ஊழலும் ஊதாரித்தனமும் நிறைந்த நிர்வாகமாக இருக்கிறது. அங்கத்தினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டுமென்று சொன்னதையும் ஏற்கவில்லை. வருகின்ற வருமானத்தைச் செக் செய்வதற்கும், கணக்கு வழக்குகளை ஆடிட் செய்வதற்கும் வசதி இல்லை. இதை அரசாங்கம்





ஏற்று நடத்துவதில் எந்தவிதமான சிரமமும் இல்லை. ரேஸை நடத்துகின்ற ஸ்டூவர்ட்கள்—குதிரைச் சொந்தக்காரர்கள், தங்கள் குதிரை தான் ஜெயிக்க வேண்டுமென்று எண்ணுகிறார்கள். பொது மக்கள் போடும் எல்லா பணமும் தங்களுக்கே வரவேண்டும் என்று நினைக்கிறார்கள். ரேஸ் பந்தயத்தின்போது முப்பது லட்சம் ரூபாய்க்கு கலெக்ஷன் ஆகிறது. இது ஒரு காமதேனுவாக இருக்கிறது ஆகவே அரசு இதை இன்னும் விட்டுவைக்க வேண்டிய தேவையில்லை.

ரேஸ் பந்தயத்தை அடியோடு ஒழித்துவிட வேண்டுமென்று நான் சொல்லவில்லை. நிர்வாகத்தை நல்லவிதமாக, ஒழுங்காக நாம் நடத்த வேண்டும். ரேஸ் ஒழுங்காக நடக்கிறது என்ற எண்ணம் பொது மக்களிடத்திலே பரவினால் இன்னும் அதிகமான பணம் கிடைக்கும். நமது அரசின் வருவாயைப் பெருக்க வசதியாக இருக்கும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்த்து இதைப் பற்றி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி வருகிற வருமானம் நம்முடைய நிதிநிலைமையைப் பெருக்க உதவும் என்று கூறிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**Dr. H. V. HANDE**: Sir, on behalf of the Swatantra Party I wish to participate in the discussion and offer a few remarks on the Governor's Address. On behalf of the party I have moved an amendment to the motion of thanks bringing home to this House the seriousness of the unemployment and underemployment problem. I wish to stress in this context that there is no use trying to blame the Centre or blame ourselves. The real fact is that the policies of the Centre will never be helpful to the State. Sir, I will be happy if the Government can point out a single instance where the Central Government has evolved a policy which is employment oriented or which will improve job opportunities in any State. There in the Centre we have the terrible spectacle of a Lady Prime Minister sitting there and a coterie of Ministers surrounding her day in and day out. There is nothing but simple anarchy, there is nothing but show of power and there is an attempt made every day to topple some State Government or other and to bag as many members as possible. That is the only spectacle we see in the Centre. When this is the spectacle in New Delhi, in the Governor's Address something has been mentioned about the Finance Commission, etc. I feel it is absolutely irrelevant. What do you expect from this Government of distinguished Indira Gandhi and her coterie, when their entire attempt has been to strengthen their position, rig up the entire election machinery and also rig up the voters list which has been sent in haste. Tomorrow I have to meet the Commissioner of the Corporation of Madras to give my views about polling booths, etc., in the Park Town Constituency. They have got a list for the 28th and 29th Divisions, something like the one which was there for the previous

[Dr. H. V. Hande] [1970 ஜனவரி 24

election. Now Madras City has been divided into 120 divisions and the numbers of the divisions have also changed. I only wish to point out to this House the hasty manner in which the election campaign is operating.

The entire Central Government are unconcerned about the recommendations of the Finance Commission and about the requests that we have placed before them. They are only interested in strengthening their particular position. That is the terrible spectacle that we are facing to-day in the country. What I do suggest to this State Government is, 'completely dissociate yourself with the disgusted Central Government and do not have any truck with them'. Let them issue instructions to their Members in the Parliament to make a clear-cut statement that we have nothing to do with the Central Government because we cannot get anything from the Central Government. This Government must take an independent stand and not try to trail along with the unfortunate Central Government. This is my suggestion and I have made many such suggestions in this House before and many of them have been accepted. Actually, they are not my suggestions. They have come from our top leadership. Invariably we find that whatever Rajaji says to-day, happens to be a fact tomorrow. I am not such a big person to give such advice.

Now I come to one important point. How do we expect the Fourth Five-Year Plan to be implemented? Where is the Fourth Five-Year Plan? We suggested years ago planned plan holiday. But what is the position today? There is nothing but unplanned and anarchic plan. The entire Fourth Plan is completely put in the cold storage and so nothing can be expected out of it. So far as the Centre-State relationship is concerned, I have given my views.

Sir, no single policy of the Central Government is helpful to us. Whenever our Government bring forward a fine and beautiful policy like the removal of control on food, what is happening? The Union Minister of State for Food, Shri Shinde, issued a statement, 'Why controls on food have been removed without consulting the Union Government?'. Who is he to issue such a statement?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: திரு. ஹாண்டே அவர்கள் மத்திய உணவு அமைச்சர் நாம் கண்ட்ரோலை நீக்கியதை விரும்பாது, ஏன் நீக்கினீர்கள்? எங்கள் அனுமதியைப் பெருது ஏன் நீக்கினீர்கள்? என்று கேட்டதாகச் சொன்னார்கள். அது சரியல்ல. அப்போது அவர்கள் இங்கே வந்திருந்தார்கள். கண்ட்ரோலை நீக்கியிருக்கிறோம். இதற்கு மத்திய சர்க்கார் ஒப்புதல் அளிக்க வேண்டும் என்று நாங்கள் கேட்டபோது, கண்ட்ரோலை எடுத்ததை ஆதரித்தார்கள், அதோடு இங்கிருந்தே டெல்லிக்கு டெலிபோன் செய்து இவர் டெல்லி போவதற்குள்ளாகவே எங்களுக்கு மத்திய சர்க்கார் ஒப்புதலைக் கிடைக்க செய்யவும் [illegible]ர்கள். மத்திய சர்க்காரின் ஒப்புதலும் எங்களுக்குக்



1970 சனவரி 24] [திரு. ப. உ. சண்முகம்]

கிடைத்துவிட்டது. நாம் கண்ட்ரோலை எடுத்ததை அவர்கள் ஆதரித்தார்கள். ஏன் எடுத்தீர்கள் என்று இந்த அரசாங்கத்தைக் கேட்கவில்லை.

Dr. H. V. HANDE: I am very grateful to the Hon. Minister for revealing this secret. As far as I am concerned, it had been a secret. I have to depend on the report published in the front page of '*The Hindu*' to the effect that Shri Shinde opposed the removal of control on food. But now the Hon. Minister has stated that Shri Shinde has been helpful. Whatever it is, I leave the matter at that stage.

Now, I come to the problem of N.G.Os. This problem has been there for a number of years. Really this Government have applied their mind. But I would like to bring to the attention of the Hon. Chief Minister the feeling of dissatisfaction among the N.G.O's. that the Pay Commission has been thrust upon them just to shelve or postpone the whole problem. I understand the N.G.O's. representatives met the Hon. Chief Minister recently and if only we dispel the fears entertained by them, it would be a good thing. There is a feeling among them they have been summarily disposed of by the Hon. Chief Minister by saying, 'Look here,' there are so many other people who are suffering more'. In fact there is a circular in that regard and I am prepared to pass it on to the Hon. Chief Minister for necessary action. Now the N.G.O.s are in a frustrated mood as they were during the Ministry of Thiru Bhaktavatsalam. They may be a nucleus in the Secretariat and in the districts but they are a powerful nucleus who can influence the public at large. If they are dissatisfied, it would do no good to the State and so I would request the Hon. Chief Minister to appreciate their feelings and give serious attention to their problems.

Regarding statues, with all respect I would tell one thing. I have personally a high regard for our late revered Anna. In fact I had the good fortune of moving with him very closely. He stood for certain excellent principles. He stood for self-respect. He stood for the freedom of man. He stood for democracy. He had sacrificed his life for those principles and in his last days he had not bothered about anything else. That was the personality that we miss to-day. In this connection, I would request the Ministry not to exploit his name. Some years ago some people tried to exploit the name of our revered Mahatma Gandhi but what was the result? Lakhs of statues were built for Mahatma Gandhi all over the country and in all the States. But what is the spectacle that we have seen in the Gandhi Centenary Year. In Ahmedabad we saw the tragic spectacle of thousands of Hindus and Muslims being physically manhandled and butchered. If Gandhiji had been alive, what would be have said or done. Similarly, we must ponder over the principles enunciated by Anna, and we must not exploit his name for other purposes. That is the most important point that I would like to mention.

election. Now Madras City has been divided into 120 divisions and the numbers of the divisions have also changed. I only wish to point out to this House the hasty manner in which the election campaign is operating.

The entire Central Government are unconcerned about the recommendations of the Finance Commission and about the requests that we have placed before them. They are only interested in strengthening their particular position. That is the terrible spectacle that we are facing to-day in the country. What I do suggest to this State Government is, 'completely dissociate yourself with the disgusted Central Government and do not have any truck with them'. Let them issue instructions to their Members in the Parliament to make a clear-cut statement that we have nothing to do with the Central Government because we cannot get anything from the Central Government. This Government must take an independent stand and not try to trail along with the unfortunate Central Government. This is my suggestion and I have made many such suggestions in this House before and many of them have been accepted. Actually, they are not my suggestions. They have come from our top leadership. Invariably we find that whatever Rajaji says to-day, happens to be a fact tomorrow. I am not such a big person to give such advice.

Now I come to one important point. How do we expect the Fourth Five-Year Plan to be implemented? Where is the Fourth Five-Year Plan? We suggested years ago planned plan holiday. But what is the position today? There is nothing but unplanned and anarchic plan. The entire Fourth Plan is completely put in the cold storage and so nothing can be expected out of it. So far as the Centre-State relationship is concerned, I have given my views.

Sir, no single policy of the Central Government is helpful to us. Whenever our Government bring forward a fine and beautiful policy like the removal of control on food, what is happening? The Union Minister of State for Food, Shri Shinde, issued a statement, 'Why controls on food have been removed without consulting the Union Government?'. Who is he to issue such a statement?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: திரு. ஹாண்டே அவர்கள் மத்திய உணவு அமைச்சர் நாம் கண்ட்ரோலை நீக்கியதை விரும்பாது, ஏன் நீக்கினீர்கள்? எங்கள் அனுமதியைப் பெறாது ஏன் நீக்கினீர்கள்? என்று கேட்டதாகச் சொன்னார்கள். அது சரியல்ல. அப்போது அவர்கள் இங்கே வந்திருந்தார்கள். கண்ட்ரோலை நீக்கியிருக்கிறோம். இதற்கு மத்திய சர்க்கார் ஒப்புதல் அளிக்க வேண்டும் என்று நாங்கள் கேட்டபோது, கண்ட்ரோலை எடுத்ததை ஆதரித்தார்கள், அதோடு இங்கிருந்தே டெல்லிக்கு டெலிபோன் செய்து இவர் டெல்லி போவதற்குள்ளாகவே எங்களுக்கு மத்திய சர்க்கார் ஒப்புதலைக் கிடைக்கச் செய்யவும் உதவினார்கள். மத்திய சர்க்காரின் ஒப்புதலும் எங்களுக்குக்





கிடைத்துவிட்டது. நாம் கண்ட்ரோலை எடுத்ததை அவர்கள் ஆதரித்தார்கள். ஏன் எடுத்தீர்கள் என்று இந்த அரசாங்கத்தைக் கேட்கவில்லை.

DR. H. V. HANDE: I am very grateful to the Hon. Minister for revealing this secret. As far as I am concerned, it had been a secret. I have to depend on the report published in the front page of '*The Hindu*' to the effect that Shri Shinde opposed the removal of control on food. But now the Hon. Minister has stated that Shri Shinde has been helpful. Whatever it is, I leave the matter at that stage.

Now, I come to the problem of N.G.Os. This problem has been there for a number of years. Really this Government have applied their mind. But I would like to bring to the attention of the Hon. Chief Minister the feeling of dissatisfaction among the N.G.O's. that the Pay Commission has been thrust upon them just to shelve or postpone the whole problem. I understand the N.G.O's. representatives met the Hon. Chief Minister recently and if only we dispel the fears entertained by them, it would be a good thing. There is a feeling among them they have been summarily disposed of by the Hon. Chief Minister by saying, 'Look here,' there are so many other people who are suffering more'. In fact there is a circular in that regard and I am prepared to pass it on to the Hon. Chief Minister for necessary action. Now the N.G.O.s are in a frustrated mood as they were during the Ministry of Thiru Bhaktavatsalam. They may be a nucleus in the Secretariat and in the districts but they are a powerful nucleus who can influence the public at large. If they are dissatisfied, it would do no good to the State and so I would request the Hon. Chief Minister to appreciate their feelings and give serious attention to their problems.

Regarding statues, with all respect I would tell one thing. I have personally a high regard for our late revered Anna. In fact I had the good fortune of moving with him very closely. He stood for certain excellent principles. He stood for self-respect. He stood for the freedom of man. He stood for democracy. He had sacrificed his life for those principles and in his last days he had not bothered about anything else. That was the personality that we miss to-day. In this connection, I would request the Ministry not to exploit his name. Some years ago some people tried to exploit the name of our revered Mahatma Gandhi but what was the result? Lakhs of statues were built for Mahatma Gandhi all over the country and in all the States. But what is the spectacle that we have seen in the Gandhi Centenary Year. In Ahmedabad we saw the tragic spectacle of thousands of Hindus and Muslims being physically manhandled and butchered. If Gandhiji had been alive, what would be have said or done. Similarly, we must ponder over the principles enunciated by Anna, and we must not exploit his name for other purposes. That is the most important point that I would like to mention.

We conduct birthday functions and we spend lavishly and people talk about that. We also spend lavishly on the publication of booklets connected with the birthday of leaders. Some people collect large sums of money in the name of birthday functions and I know Hon. Ministers are against it. But ultimately what happens is that they try to exploit persons like small merchants and others and demand 'nankodai' and if they do not give it, they threaten to take action against them. All these things take place. That is why even Rajaji has told us not to bring out a souvenir and if anyone does against his advice, he will take him to task. That is why I request the Ministry not to exploit the name of Anna. They must act on the lines of what late Kennedy said: 'I am watching persons who went to the Moon'. So, also Anna is waching every movement. (Thiru K. Vinayakam: What is the point) The point is, let us not try to have statues indiscriminetely here and there. If we really want to perpetuate the memory of our revered Anna, there is a method. Cancer Institute has been set up in Conjeevaram and that is a very good thing. A college is also proposed to be named after him and that is a very brilliant idea. But this country cannot afford to have costly marriages or costly functions. This country is a poor country. That is the only point that we have to bear in mind.

Now I come to the last point with regard to Hosur.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: சிலைகளைப்பற்றி டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். கொள்கைகளை மாத்திரம் கடைப்பிடித்தால் போதும், சிலைகள் தேவையில்லை என்று சொன்னார்கள். அதே அளவிலே கோயில்களிலே சிலைகள் தேவையில்லாமல் புராதன கொள்கைகளை மட்டும் கடைப்பிடித்தால் போதும் என்று சுதந்திராக் கட்சியினர் கருதுகிறார்களா?

Dr. H. V. HANDE: I am very grateful to the Hon. Chief Minister. He has indirectly told what I missed to tell. Let us not deify a person. If Anna were alive, he would not have asked me to deify anybody. Let us follow his principles. Let us not convert him into God. Let us not convert Rajaji or even Gandhiji into God. I am thankful to the Hon. Chief Minister for understanding that Let us not deify anybody.

I want to act as a sort of 'conveyor belt' to the Hon. Chief Minister. I may tell him about Mr. Bhaktavatsalam's statement in the House regading police excesses during student-unrest days; What did he tell? He said this: "Don't rake up old facts. Facts which I am reading are correct." Then the Leader of the Opposition and the Deputy Leader of the Opposition did not agree in the Assembly. I did not agree. Mr. Anbazhagan did not agree. We succeeded in getting an Adjournment Motion in the Council. What I say is, it is inherent in Police blood. Tomorrow anybody can come to that position. Right from Jalianwala Bagh and then during British days, they are doing this sort of thing. They are used to this. During present days also it is going on. But now, in a democracy, there is the threat of M.L.A. who can come out





and find out facts. In fact it is not possible for Mr. Venkatasamy to go in the streets. People say: "We voted for you. We listened to your views. What is the result? People have been mercilessly beaten." It is being exploited on certain other sides. When I had gone there to examine some witnesses, one began a speech and myself and Mr. C. R. Narasimhan told him that we had not come there to listen to his speeches but that we wanted to meet witnesses and find out whether people had been beaten. There are two aspects of the case. The self-respect of the people has been completely nullified. It is a crime to destroy or disturb a statue. What happens when a statue is disturbed or when an attempt is made to destroy it, is a force is unleashed afterwards on all sides. In Salem also it happened. I have got the instance. A statue of Anna was destroyed and under Sections 297 and 427, a few persons were arrested. Yesterday the Hon. Chief Minister was talking. I request him not to threaten M.L.As. We are not bothered about "M.L.A. ship". I am not bothered much. If I am not elected as M.L.A. next time, I won't be bothered. I will mind my work. The Hon. Chief Minister mentioned to the Hon. Member Thiru Kothandaramiah that he would bring out all facts. What has the Member got to fear? May be his relations are involved. It may be true. What I say is, bring a charge against the concerned. I have nothing to hide. I have given all facts. But I can tell you this. The Police feel that Mr. Kothandaramiah's son is involved.

* மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஒரு சிலையை யாருக்கும் தெரியாமல் இரவோடு இரவாகச் சேதப்படுத்தி—ஒருவர் இருவராக இருந்தால் பரவாயில்லை—இதற்கும் கூட்டமாகச் சேர்ந்து திட்டமிட்டு—இருக்கிறார்கள். இன்னொரு கருத்தை அவர்கள் சொன்னார்கள். சுதந்திராக் கட்சியின் கருத்தைச் சொல்கிறார்களா என்று நினைத்தேன், சிலை வைப்பது கூடாது என்ற கருத்தைச் சொன்னார்கள். சுதந்திராக் கட்சியின் கருத்தைச் சொல்கிறார்களா என்னவோ தெரியவில்லை. நான் முழுவதும் சொன்னால் கழகத் தோழர்கள் கொதிப்படைவார்கள் என்பதால் சொல்லவில்லை. அங்கே அண்ணா அவர்களின் சிலையைச் சேதப்படுத்தியவர்கள் தலையை இரண்டாக உடைத்திருக்கிறார்கள், உடல் வேறு தலை வேறு என்ற அளவுக்கு இரண்டாகியிருக்கிறார்கள். இதற்கும் பிறகு நான் முதலமைச்சர் ஆக இருக்கிறேன் என்ற காரணத்தினாலும் நாட்டிலே அமைதி நிலவ வேண்டுமென்பதினாலும் தெலுங்கர்கள்—தமிழர்கள் சச்சரவு ஏற்படக் கூடாது என்ற காரணத்தினாலும் நானும் மற்ற அமைச்சர்களும் இதைத் தாங்கிக் கொண்டிருக்கிறோமே தவிர வேறு ஒன்றுமில்லை. இவ்வளவு கொடுமை இழைக்கப்பட்டிருக்கின்ற நிலையில் போலீஸார், வன்முறையில் ஈடுபட்டவர்களைக் கைது செய்திருக்கிறார்கள். இதுவே கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள் செய்திருந்தால் டாக்டர் ஹாண்டே அவர்கள் இவ்வாறு பேசுவார்களா என்பது தெரியவில்லை. தன்னுடைய கட்சிக்காரர்கள் எம்.எல்.ஏ.-க்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்ற காரணத்தினாலேதான் இப்படிப் பேசுகிறார்களோ

என்னவோ தெரியவில்லை. நான் எம்.எல்.ஏ.-க்களை மிரட்டுவதாகச் சொன்னார்கள், நான் மிரட்டவில்லை. இதிலே யார் யார் சம்பந்தப் பட்டவர்கள் என்பதை எம்.எல்.ஏ.-க்கள்தான் என்னிடத்திலே வந்து சொன்னார்கள், அப்போதுதான் என்னுடைய மகனும் சம்பந்தப்பட்டு இருக்கிறான் என்று சொன்னார்களே தவிர நான் மிரட்டவில்லை. புயல் அடங்கி அமைதியை ஏற்படுத்த நானும் ராஜாஜி அவர்களும் முயற்சி செய்து சமரஸத்தை ஏற்படுத்தி யிருக்கிறோம். அதைத் தொடர்ந்துதான் கைதுசெய்யப்பட்ட வர்கள் சமரஸத்திற்குப் பின் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். இதற்குப் பிறகு கற்பனை செய்துகொண்டு அமைதியில்லாத சூழ் நிலை இருப்பதைப்போலப் பேசுவது, முயற்சிகளை மேற்கொண்டு சமரஸத்தை ஏற்படுத்தியிருக்கின்றவர்களின் செயல்களை நினைவில் கொள்ளாது பேசுவது, அழகல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Dr. H. V. HANDE : For the past three days this House and people outside have been hearing the Government's point of view. I would request hon. Members to listen to me patiently for three or four minutes and after that I shall answer all questions.

My submission is that persons who are responsible for the breaking of the statue are at fault. I have told that. In Salem also a similar thing happened. What is the information Government got from the Police? Government can send one of their own members to find out the actual facts. What I want is an enquiry of impartial nature. If that is done, you will find out that the Police have tried to mislead the Government. The Police had advised the Ministry wrongly. It would have been better if an impartial enquiry had been ordered. No doubt breaking the statue of a leader will create passion. But let us see what actually happened in a calm manner. Before the breaking of the statue, certain things had taken place. When the Headmaster of the school was in the act of pacifying the students and trying to explain the meaninglessness of their emotional outburst, police had come in. We condemn that the breaking of the statue was wrong. Whether it is done by this or that party, we condemn it. Let us not forget one thing, namely, that the people who had been beaten were the students. முதலமைச்சர் அவர்கள் கொதிப் படையாமல் இருக்கவேண்டுமென்று சொன்னார்கள். நான் இங்கே கொதிப்படையாமல் இருந்தாலும் வெளியிலே மக்கள் கொதிப் படையாமல் இருக்கிறார்களா என்று பார்க்கவேண்டும். I have got proofs. I have got the figures. Let there be a public enquiry. I will place all facts.

What I want to say is that the Collector and Deputy Superintendent of Police have given wrong advice. They have said that somebody has broken the statue. Actually Sri Kothandaramiah's son is not concerned with it. Three or four of his relatives had been rounded up. The Police were trying to mislead the Government. That is the common phenomenon with any police official [illegible] given unlimited powers. My request to the Hon. Chief



Minister is this. 'Please appoint a Commission of Enquiry'. If the Ministry feels that by this their self-respect would be affected, you can ask anyone from your party, any of your party Members, Sri Rajaram, to come and investigate. I am only trying to help the Ministry. I am not trying to cast aspersion on anybody. If an impartial investigation is made, you will know what had been done by the Superintendent of Police and the Collector. The self-respect of the people of the locality is involved here.

No doubt when a statue of a leader is broken, passions will be roused. I know the feelings of the Hon. Chief Minister. If a leader's statue is broken, there will be feeling. I will feel the same thing if Rajaji's statue is broken. But let us analyse the facts here. Let the people who had done the wrong be punished. Let us know what the Police had done. Anna has asked people to fight for the self-respect. What has happened is that the self-respect of the people of Hosur is affected. That is my point. Let us consider the effect of the statement of the Hon. Chief Minister yesterday, on the people of Hosur.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் பொறுமையோடு இருக்க வேண்டுமென்று கூறியதன் பேரில் இவ்வளவு நேரம் நான் பொறுமையோடு இருந்தேன். இப்போது நிலைமையை விளக்க வேண்டுமென்று முன் வந்திருக்கிறேன். அடிக்கப்படுகின்றவர்கள் தெலுங்கர்களா தமிழர்களா என்ற பிரச்சினையை விளக்கியாக வேண்டும். ஹோசூரில் நான்தான் அண்ணாவின் சிலையைத் திறந்து வைத்தேன். சிலையைத் திறந்த பிறகு கூட பல முறை ஹோசூருக்குச் சென்றிருக்கிறேன். ஹோசூர் திரைப்பட அரங்கில் தமிழ்ப்படம் காட்டினால் கூட தமிழ்ப் படத்தைப் பார்த்துவிட்டு வருகின்ற தமிழர்களை அடிக்கின்றவர்கள் தெலுங்கர்கள். ஹோசூரைப் பொறுத்தமட்டில் அண்ணாவின் சிலையை உடைத்தெறிந்தான பிறகு சமாசம் ஏற்பட்டுவிட்டது. முதலமைச்சர் அவர்கள் பெருந் தன்மையோடு பொறுத்துக் கொண்டார்கள். அங்கு இருக்கின்ற தமிழர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களுக்குத் திருக்கோயிலூரில் இருந்து கேட்டுக் கொண்டேன். அதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று அவர்கள் சொன்னார்கள். அங்கு இருக்கின்ற போலீசார் தக்க நடவடிக்கை எடுத்திருந்தால் சிலையை உடைத்திருக்க முடியாது. போலீசார் நடவடிக்கை எடுக்கத் தவறி விட்டார்கள் என்று எங்கள் தரப்பில் பேசப்பட்டது. அங்குள்ள மக்கள் அடிக்கப் படுகிறார்கள் என்று சொல்லுவது சரியல்ல. இப்போது சமாசம் ஏற்பட்டு ஒரு அமைதியான சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. அதைக் கெடுக்கும் வகையில் மீண்டும் வேண்டுமானால் வழக்குத் தொடரட்டும் என்றெல்லாம் பேசிக் கொண்டிருப்பது அங்கத்தினர் அவர்களுக்குச் சரியாகாது. திரு. ராஜாஜி போன்ற தலைவர்கள் தலையிட்ட காரணத்தால்தான் முதலமைச்சர் அவர்கள் ஒத்துக் கொண்டார்கள். குறிப்பிட்ட சட்டமன்ற உறுப்பினருடைய பிள்ளை

செருப்புக்காலோடு அண்ணு சிலையை எட்டி மிதித்து உடைத்திருக்கிருர். அண்ணு சிலையைச் செருப்புக் காலோடு எட்டி உதைத்து உடைத்ததைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமென்று அங்கத்தினர் கருதுகிருரா? அண்ணுவின் சிலையைச் செருப்புக் காலோடு எட்டி உதைத்து உடைத்த பிறகும் கூட நாங்கள் காட்டி வரும் பொறுமையையும், முதலமைச்சர் அவர்கள் காட்டி வரும் பெருந்தன்மையையும் நினைத்துப் பார்க்காமல் தவருன தகவல்களை வைத்துக் கொண்டு அங்கத்தினர் அவர்கள் பேச வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

Dr. H. V. HANDE : Sir, I request you to give me a few minutes in view of what the Food Minister has said. Let us have an investigation. If it is a fact, if somebody has done like that, definitely let him be booked. Let us not get excited. Under the chairmanship of Mr. B. Venkataswamy the statue was unveiled. That is point No. 1. Point No. 2 is that they have apologised. With the permission of the Speaker, I will read the apology.

"Assurance given to the Collector on 12th December 1969 at 7 p.m. the parents and elite of Hosur Town and the Members of the Legislative Assembly of both constituencies assembled at the Taluk Office and have given the solemn undertaking as follows :—

We the undersigned people of Hosur solemnly feel and regret very much the unpleasant incident that has happened to the statue of 'Anna'." Suppose the statue of Mahatma Gandhi in Mylapore is defamed and we insist on an apology from the Member representing Mylapore. How ridiculous it would be!

"We beg pardon and pray that those taken into custody and arrested and remanded may be released and the action in class may be dropped."
People including two M.L.As. were made to sign the apology under duress. The citizens were told that unless a letter of apology was given, those kept in the lock-up would not be let off.

"We further assure that there will not be any such incident hereafter and we assure to erect the statue by collecting donations from the public. We all pray that this undertaking may be accepted. We also regret all the unpleasant happenings on that day." Suppose in my constituency something happens without my knowledge or motivation, How can I be asked to give an apology? That is why I request the Hon. Minister to understand the feelings of the people in the entire area. I only say that we will solve this particular point without getting excited. We are very proud of the fact that Rajaji came forward with a donation. What does it show? It shows the mahatma in him. It shows that there is an attempt at the highest level. The feelings of the people must be assuaged. The Chief Minister can put confidence and faith in me. I have never let down the Chief Minister. I, Sir, am talking very honestly. You can send even one of the members of your own party. I am not specifying who he should [illegible], will know that the Collector and the Deputy Superin-





tendent of Police there are trying to ruin the D.M.K. Government just as some I.A.S. officers tried to ruin the Bhaktavatsalam Government by adopting a wrong policy.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, I heard the statement of the Hon. Minister for Food. I have already said that the information given to the Hon. Chief Minister is not correct, it is twisted, coloured and misleading. He has the reports of the Collector and the Police Officers. I wish to say that the information given to the Hon. Minister is a deliberate lie.

THIRU R. PONNAPPA NADAR : Deliberate lie may be expunged.

THIRU K. S. KOTHANDARAMIAH : I said also 'incorrect'.

Dr. H. V. HANDE : It may be treated as saying 'different from what we know'.

THIRU K. S. KOTHANDARAMIAH : Try to understand the position by sending somebody. Even on the 9th I sent a telegram to the Chief Minister to find out the truth. Only after knowing the truth, we can come to correct conclusions. The information supplied by the officers is not correct. I request the Hon. Chief Minister to arrange for finding out the truth.

மாண்புமிகு திரு. மு. கருணநிதி: ஹொசூர் சம்பந்தமாகப் பேசப்படுகின்ற பேச்சுக்கு சுருக்கமாக நான் கொள்ளுகின்ற பொருள் 'தப்பித்துக் கொண்ட பிறகு இங்கு வீரப் பிரதாபம் காட்டப்படுகிறது' என்பதுதான்.

THIRU B. VENKATASWAMY : Sir, on a point of personal explanation. I would like to express a few ideas regarding the damage to the statue. We regret and we also feel for it. Our Hon. Chief Minister and our Hon. Minister for Food seem to think otherwise. The people there have got great respect towards 'Anna'. Only because of the great respect for him, I presided over the function and unveiled his statue.

(Mr. Chairman, Thiru N. Dharmalingam rang the time bell), I will finish soon. The statue was damaged only due to police interference in the Training School, when the boys were being advised by the Headmaster. The boys got lathi charge and only afterwards this thing happened. Only after this humiliation the boys went in a procession and some anti-social elements also joined them. I request the Hon. Chief Minister to take our views also. Whenever we approach him, he says 'I am not prepared to take your views. This is not democracy. Let him take our views also. Some people are misleading him. Let him take the views of both sides and then judge.

* திரு. ஆ. கருப்பையா: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் தம் உரையை ஆரம்பிக்கும்போது நமது இதய தெய்வம் அண்ணு அவர்களுக்கும், மறைந்த தலைவர்களுக்கும் தம்

அஞ்சலியைச் செலுத்திக் கொண்டு ஆரம்பித்திருக்கிறார்கள். அதேபோல் நானும் என் அஞ்சலியை அவர்களுக்குச் செலுத்திக் கொண்டு பேசுவதற்கு முற்படுகிறேன்.

ஆளுநர் அவர்கள் தம் உரையில், இந்த ஆண்டு நம் நாடு எவ்வளவு பெரியதொரு நெருக்கடியான கட்டத்தைத் தாண்டியிருக்கிறது என்பதைச் சொல்லியிருக்கிறார்கள். இந்நேரத்தில் எதிர்க் கட்சியில் இருக்கும் காங்கிரஸ் உறுப்பினர்கள் ஒன்றுமே இங்கு நடக்கவில்லை என்ற முறையில் பேசியதோடு மட்டுமல்லாமல் நம் நாட்டு நெருக்கடியான நிலைமையைச் சமாளிப்பதற்காக வடக்கில் உள்ள பேரரசிடம் பணம்பெற்று இங்குள்ள மக்களுக்கு நன்மை செய்ய முற்பட்டபோது அதைத் தடுக்கும் விதத்தில் பணம் கொடுக்க வேண்டாம், இங்கு நல்ல விளைச்சல் இருக்கிறது என்று திரு. காமராஜ் அவர்கள் சொன்னார்கள். யு.பி. போன்ற இடங்களுக்குச் சென்று தமிழ்நாட்டிற்கு எவ்வளவு பணம் கொடுத்திருக்கிறார்கள், பார்த்தீர்களா, இதை ஏன் நீங்கள் கண்டிக்கவில்லை என்று ஸிண்டிகேட் என்ற முறையில் சீண்டி முடிந்து விட்டார்கள். அவற்றை ஒன்றும் பொருட்படுத்தாமல் மத்திய அரசு நமக்கு நிதி வழங்கியுள்ளது. அதற்காக இந்த மன்றத்தின் சார்பாக அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிப் பணம் கொடுக்க வேண்டாம் என்று சொன்னதோடு மட்டுமல்லாமல் இங்கு ஏற்பட்ட பஞ்சம் தொடர்ந்து ஒரு ஆண்டு அல்லது ஆறு மாத காலம் மேலும் நீடித்திருக்காதா என்று மேடைதோறும் முழங்கி வந்தது கிராமங்களில் உள்ள மக்களுக்குத் தெரியும். அதன் பிரதிபலனை டெல்லிக்குச் சென்று தமிழ்நாட்டிற்கு உதவி கொடுக்க வேண்டாம் என்று சொன்னார்கள். புராண காலத்தில் மழை பெய்விக்கும் சக்தி இந்திரன் கையில் இருந்ததாம். அதேபோல் இப்போது மழை பெய்யும் சக்தி டெல்லியின் கையில் இருந்திருந்தால் இவர்கள் ஒரு போராட்டமே நடத்தி தமிழ் நாட்டில் மேலும் 6 மாத காலம் மழையே தலைகாட்டாத அளவுக்கு விலங்கு போட்டு இருந்திருப்பார்கள்.

இச்சமயத்தில் எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது. சிவ பக்தன் விஷ்ணு பக்தன் என்று இருவர் இருந்தார்கள். அதில் விஷ்ணு பக்தன் வாழ்க்கையில் வெற்றி பெற்று சந்தோஷமாக வாழ்ந்து கொண்டிருந்தான். சிவ பக்தன் அதைக் கண்டு பொறுக்காது, சிவபெருமானிடம் சென்று உங்களது நெற்றிக் கண்ணைத் திறந்து உலகை அழிக்கும் சக்தி இருந்தும் நான் வாழ்க்கையில் முன்னேற்றம் காணமுடியவில்லை, ஆனால் விஷ்ணு பக்தன் முன்னேற்றம் காண்கிறானே என்றானாம். அதற்கு சிவபெருமான், இந்த வருடம் அவனை நான் பார்த்துக் கொள்கிறேன், நீ கவலைப்படாதே என்றாராம். இந்த ஆண்டு நான் மழை இல்லாமல் செய்து விடுகிறேன், அவன் நிலமெல்லாம் அதனால் பாழாகிவிடும் என்றாராம். சொல்லியபடி அந்த ஆண்டு மழை இல்லாமல் செய்து விட்டார். அதைக் கண்ட விஷ்ணு பக்தன் விஷ்ணுவிடம் சென்று முறையிட்டானும், அதற்கு விஷ்ணு, நீ கவலைப்படாதே, அடுத்த ஆண்டு மழை பெய்யும், ஆகவே நீ விதைகளை அழித்து விடாதே, அதோடு இந்த ஆண்டு கிணறு, வடிகால்கள் இவற்றை சீர்செய்து வைத்துக்கொள் என்றாராம். அப்படியே அவன் செய்தான். அடுத்த ஆண்டு மழை பெய்தது, சிவபெருமானின் பக்தன் விதைகளை அழித்துவிட்டார், விஷ்ணு பக்தன் அவற்றை அழிக்காமல் வைத்திருந்ததால் அடுத்த ஆண்டு அவன் அவற்றை விதைத்து நல்ல லாபம் பெற்றான். அதைக் கண்டு மறுபடியும் சிவபக்தன் சிவபெருமானிடம் சென்று முறையிட்டானும். அதற்கு அவர், ஒரு களத்தில் போட்டு ஆறு ஏக்கர்களில் விளைந்ததைக் கொண்டு அடித்தாலும் ஒரு மூட்டைக்குமேல் போகாமல் நான் பார்த்துக்கொள்கிறேன் என்றாராம். அதுபற்றி விஷ்ணுவிடம் சென்று அவர் பக்தன் சொன்னபோது, பரவாயில்லை ஒவ்வொரு கட்டாகப் போட்டு களத்தில் அடி என்றாராம். அதன்படி செய்ததில் அவனுக்கு நல்ல மகசூல் கிடைத்ததாம். அதேபோன்று வரட்சிநிலை இன்னும் ஆறு மாதங்கள் நீடிக்காதா என்று காங்கிரஸ்காரர்கள் கனவு கண்டார்கள். அதே நேரத்தில் எங்கள் முதல்வர் அவர்கள், இந்த வருடம் மழை இல்லை, ஆகவே செய்யவேண்டியதைச் செய்துவிடுங்கள் என்று கூற ஏரிகள் பழுது பார்க்கப்பட்டு, தூர்வாரப்பட்டு, கிணறுகள், ஏரிகள் ஆழப்படுத்தப்பட்டன. கரைகள் செப்பனிடப்பட்டன. மழையும் பெய்தது. இப்போது அதன் விளைவாக எங்கு பார்த்தாலும் பச்சைப் பசேல் என்று தோன்றுகிறது. அதைக் கண்டு பொறாமைப்பட்டு உங்களை அழித்தே தீருவோம் என்கிறார்கள்.

அவர்கள் பேசுவதைப்பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. உங்கள் பேச்சு தரக்குறைவான பேச்சு என்பது அகில இந்தியாவிலேயே நினைக்கக்கூடிய அளவிற்கு வந்துவிட்டது. மதிப்பிற்குரிய உங்கள் பெரும் தலைவர் காமராஜ் மாநாட்டில் ஒரு பேச்சு பேசியிருக்கிறார்கள். இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கு ஏனோ மனநிலை மாறி மாறி வருகிறது, அதுவும் நடுநிசியில் என்று பேசியிருக்கிறார்கள். இது கிராமங்களில் உள்ள மக்களுக்குத் தெரியாது என்று அவர்கள் நினைக்கிறார்கள். இது கிராமங்களில் உள்ள தாய்க்குலத்திற்குத் தெரியும். தாய்க்குல மக்கள் பொங்கி எழும் காலம் வரத்தான் போகின்றது. அவர்கள் அதற்குத் தயாராக இருக்கிறார்கள். எங்களைச் சந்திப்போம் என்று கூறுகிறார்கள். தாய்க்குலம் உங்களைச் சந்திக்கக் காத்துக்கொண்டிருக்கிறது.

அடுத்து என் தொகுதிபற்றி ஒரு சில வார்த்தைகள் கூறிக் கொள்ள விரும்புகிறேன். மழை பெய்திருந்தாலும் எங்கள் மாவட்டத்தில் ஒரு சில இடங்களில் பழைய நிலைமையே நீடித்திருக்கிறது. எங்கள் குறைகளை எங்கள் பக்கத்திற்கு வந்திருந்தபோது முதல் அமைச்சர் அவர்கள் மிக ஆழ்ந்த அக்கறையோடு கேட்டார்கள். நான் அதிகமாகச் சொல்ல வேண்டாம். அவர்கள் என் தொகுதிக்குப் பல நல்ல காரியங்களைச் செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

தாம்பரவர்ணி ஆற்றின் மேற்கே சிந்துபூந்துறையில் ஒரு பாலமும், ஒன்பது மைல்களுக்கு அப்பால் முரப்பநாட்டில் ஒரு பாலமும் இருக்கிறது. ஆகவே இடையில் மக்கள் போக்குவரத்துக்குக் கஷ்டமாக இருக்கிறது. விவசாயிகள் தங்கள் விளைபொருள்களை எடுத்துச் செல்ல பத்து மைல் சுற்றி திருநெல்வேலிக்கு வர வேண்டியிருக்கிறது. ஆகவே அரவங்குளத்திற்கும் திருவண்ணாதபுரத்திற்கும் இடையில் ஒரு பாலம் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்தச் சந்தர்ப்பம் கொடுத்ததற்காக என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. என். துரைபாண்டியன்** : தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்கள் உரையைப் பற்றிச் சிந்திக்கும்போது உண்மையிலேயே ஆளும் கட்சிக்கு சப்பைக் கட்டு கட்டுவதுபோல்தான் இந்த உரை இருக்கிறதே தவிர புதிய திட்டங்கள் ஏதாவது இருக்கிறதா என்றால் அப்படி ஒன்றும் இருப்பதாகக் காணவில்லை. இதை ஆளும் கட்சி அங்கத்தினர்களும், எதிர்க் கட்சி அங்கத்தினர்களும் ஒப்புக்கொள்வார்கள். எனக்கு முன் பேசிய திருநெல்வேலி மாவட்ட உறுப்பினர் அவர்கள் மழை அதிகம் பெய்தாலும் என் தொகுதியில் ஒருசில இடங்களில் பழைய நிலைதான் இருக்கிறது என்று சொல்லி அதை அப்படியே விட்டு விட்டார்கள். திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள சர்க்கார் சிப்பந்திகள், விவசாயிகள், மற்றுமுள்ள பொது மக்கள் ஆகியோர் கண் கலங்கி இந்த ஆண்டு என்ன செய்யப் போகிறோம் என்று நினைத்து அரசை நோக்கி எவ்வளவு தான் சப்தம் போட்டாலும் ஒரு பயனும் இல்லை. வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்று சொல்லி வந்தார்கள். அதே போல் தென் திசையில் உள்ள எங்கள் மாவட்டம் பாரபட்சமாக நடத்தப்பட்டு வருகிறது என்பதைச் சொல்லாமல் இருக்க முடியாது.

அறிஞர் மாண்புமிகு அண்ணா அவர்களுக்கு ஊர்தோறும் சிலைகள் எழுப்புகிறார்கள். அதில் யாருக்கும் வருத்தம் கிடையாது. அண்ணா அவர்கள் இந்த நாட்டில் பிறந்தார் என்றும் அவர்கள் இங்குதான் இருந்தார் என்பதையும் நினைவுபடுத்தும் வகையில் அவை இருக்கின்றன. பல சரித்திர நிகழ்ச்சிகளை நினைவில் கொள்ள கல்வெட்டுகள் வெட்டப்படுகின்றன.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

நண் பகல் 2-00 அதேமாதிரியாக நல்லவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்குச் சிலை எழுப்ப வேண்டும். ஆனால் அவர் என்ன சொன்னார் என்றால், 1967-க்கு முன்னாலே நாடு முழுவதும் ஒரு படி அரிசி போடப்படும் என்று சொன்னாரே தவிர, சென்னைக்கும் கோவைக்கும் மட்டும் தான் என்று அவர் எந்தக் கூட்டத்திலும் சொல்லவில்லை என்பதை நாம் நன்றாக அறிவோம். பிறகு, இந்த மன்றத்திலே பேசும் பொழுது, படியரிசி நிச்சயம், 3 படி அரிசி எங்கள் லட்சியம், அதிலிருந்து ஏதேனும் நழுவினால் இந்த அரசை விட்டே அகன்று விடுவோம் என்று பல அங்கத்தினர்கள் பேசினார்கள். அது குறிப்பிடத்தக்கது. அண்ணா மறைந்து விட்டார்கள். இன்று





நம் மதிப்பிற்குரிய முதலமைச்சரவர்களைக் கல்லக்குடிகொண்டான் என்று சொல்லி பெருமைப்படுகிறோம். ஏனென்றால் அவர் அன்றைக்குக் கல்லக்குடி போராட்டம் நடத்தினார், அவருக்கு அந்த வாய்ப்பு வந்தவுடனே அவர் அதைச் செய்து கொடுக்கிறார். அதுதான் மனிதனுடைய தன்மையாக இருக்க வேண்டும். நாம் எதை நினைக்கிறோமோ அந்த லட்சியத்தை வாழ்நாளிலே நிறைவேற்ற வேண்டும். அதேபோல, இன்று மதிப்பிற்குரிய அமைச்சராக இருக்கும் திரு. மதியழகன் அவர்கள் அப்பொழுது, எதிர்க் கட்சியிலே இருந்தபொழுது சின்ன இட்டிலியைக் கொண்டு வந்து இந்த மன்றத்திலே காட்டினார்கள். அவர் உணவுத்துறை அமைச்சராக வந்தவுடன் பெரிய இட்டிலியைக் கொடுத்திருந்தால் அவரையும் நாம் பாராட்டலாம். ஆனால் நல்லவேளையாக, அது நம்மால் செய்ய முடியாது என்று அவர் தானாக அகன்றுவிட்டார்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** உங்களுக்கு இட்டிலி கொடுத்துக் கட்டாது என்றுதான் அவர் அகன்றுவிட்டார்.

**திரு. என். துரைபாண்டியன்**. இட்டிலி வேண்டுமென்பதற்காகத்தான், 3 படி அரிசி கிடைக்கும் என்ற ஒரே நோக்கத்திற்காகத் தான் மக்கள் உங்களுக்கு ஓட்டளித்தார்கள் என்பதை நீங்களும் மறுக்க முடியாது, நாங்களும் மறுக்க முடியாது.

இதற்குப்பின் நம்முடைய மதிப்பிற்குரிய ப. உ. சண்முகம் அவர்கள் உணவு அமைச்சராக வந்திருக்கிறார்கள். மிகவும் வேகமாக வேலை செய்தார்கள் என்பதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. உண்மையிலேயே அண்ணா அவர்கள் கொடுத்திருந்த அந்த வாக்குறுதியை மறந்து, எந்த லட்சியத்தை அவர் அன்று சொன்னாரோ அந்த லட்சியத்தை விட்டு, ரேஷனை எடுத்துவிட்டார்கள். ஆகவே, இந்த நிலையிலே உங்கள் கொள்கை என்ன என்பதை நாட்டு மக்கள் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். முன்னோர்கள் தங்கள் பிள்ளைகளுக்காக ஒரு வீட்டைக் கட்டுகிறார்கள், பின்னால் வந்த பிள்ளைகள் வீட்டைச் செப்பனிடுகிறார்கள். அந்த வீட்டைக் கட்ட பல லட்சம் ரூபாய் தேவைப்பட்டிருக்கலாம். ஒருசில ரூபாய்களில் அதற்கு வர்ணம் பூசலாம். அதே போல் இந்த ஆளுநர் உரையிலே என்ன இருக்கிறது? பஸ்களைத் தேசிய மயமாக்கினோம் என்று சொன்னார்கள். அதைச் செய்தது காங்கிரஸ் கட்சியா இல்லையா என்பதைப் பார்க்க வேண்டும்.

வறட்சி நிவாரணத்தை எடுத்துக்கொண்டால் அதிலும் பாரபட்சம். சில மாவட்டங்களுக்கு 3 கோடி ரூபாய்வரை கொடுத்திருக்கிறீர்கள். திருநெல்வேலி மாவட்டத்திற்கு மொத்தம் 78 லட்சம் ரூபாய்தான். அதிலும் நமது நண்பர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் பேசும்பொழுது அவருடைய தொகுதியில் 20 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டதாகச் சொன்னார்கள். அவர் ஆளுங்கட்சியை சேர்ந்தவர் என்பதால் அங்கு அவ்வாறு கொடுத்திருப்பார்கள் என்று எண்ணுகிறேன். நாங்கள் இரண்டு பேர்கள் இருக்கிறோம். ஆனால் மொத்தம் 1 லட்சம் கூட இல்லை. இருவர்

தொகுதி; அதிலும் ஊழல் இருக்கிறது என்று சொல்லும் பொழுது, சில அங்கத்தினர்கள் கூறுகிறார்கள், காங்கிரஸ் பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள்தான் செய்தார்கள் என்று சொல்லுகிறார்கள். உண்மையிலேயே நான் கேட்கிறேன், அந்தப் பணம் பிளாக் டெவலப்மெண்ட் ஆபீசர் என்ற முறையிலே செலுத்தப்பட்டதா அல்லது பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் என்ற முறையிலே கொடுக்கப்பட்டதா என்று சொல்ல வேண்டும். பிளாக்டெவலப் மெண்ட் ஆபீசர் என்ற முறையிலே செலவழிக்கப்பட்டதா என்பதைப்பார்க்க வேண்டும். இரண்டும் ஒன்றல்ல. அதைத்தான் புரிந்துக் கொள்ள வேண்டும். பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் என்ற முறையிலே அந்தப் பஞ்சாயத்துக்களுக்கு அவர்மேல் அதிகாரம்வருகிறது.

அதேபோல், எங்கள் ஜில்லாவிலே, அம்பாசமுத்திரம் தாலுக்காவிலே ஒரு ஊழல். அங்கே கிணறு வெட்டுவதாகச் சொல்லி கிணறு வெட்டாமலேயே பி.டீ.ஓ. அவர்கள் அந்தப் பணம் ரூ. 3000-ஐக் கையாடல் செய்து சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார். அதுதான் ஊழல்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அவர் செய்த தவறு ஊழலா? அல்லது அவரை சஸ்பெண்ட் செய்தது, குற்றத்தைக் கண்டுபிடித்திருக்கிறது ஊழலா?

**திரு. என். துரைபாண்டியன்:** அவர் செய்தது ஊழல். சில அங்கத்தினர்கள், காங்கிரஸ்காரர்கள் பஞ்சாயத்து யூனியன் தலைவர்களாக இருந்தார்கள், அதனால் பணம் ஊழலாகியிருக்கலாம் என்று சொன்னதால் நான் இதைச் சுட்டிக் காட்டுகிறேன். அதேபோல் எல்லா இடங்களிலும் கண்டு பிடித்தால் என்ன என்பதைக் கேட்க விரும்புகிறேன். சென்னை மாநகரத்தில் 10,800 குழாய்களைப் புதிதாகப் போட்டார்கள். அதுபற்றி நல்லபடியாக, விமரிசையாக தினத்தந்தி, மாலைமுரசு போன்ற பத்திரிகைகளிலே கொட்டை எழுத்துக்களிலே வருகின்றது. அந்தக் காரியங்கள் வரவேற்கத் தக்கவை. ஆனால் அந்தக் குழாய்கள் எப்பொழுது போடப்பட்டன? எப்பொழுதும் கள்ளத்தனம், திருட்டுத்தனம் நடப்பதெல்லாம் இருட்டிலேதான். அந்தக் குழாய்கள் இரவோடு இரவாகப் புதைக்கப்பட்டன. 25 அடிக்குக் கீழே போட வேண்டுமென்றால் உண்மையிலேயே 25 அடிகளுக்குக் கீழேயா போடப்பட்டன என்பதை நீங்கள் யோசித்து கணக்குப் பார்த்தால் தெரியும். அப்படி போடப்பட்ட குழாய்கள் இன்று ஒழுங்காக வேலை செய்கின்றனவா என்று பார்க்கவேண்டும். ஆகவே, இதை நாங்கள் ஊழல் என்று சொல்லாமல் என்ன சொல்வது?

இன்ஜினீயரிங் படித்தவர்களுக்கு மத்திய சர்க்காரின் மூலமாக, அவர்கள் வேலையில்லாமல் இருந்தாலும் அவர்களுக்கு மாதம் 250 ரூபாய் கொடுக்கிறார்கள். அதேபோல ஆர்ட்ஸ் கல்லூரியில் படித்த பி.ஏ. பட்டதாரிகள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்கள் முதலமைச்சரவர்களைச் சந்திக்க வேண்டுமென்று வந்தார்கள். ஆனால் அவர்களைச் சந்திக்க இடம்





கொடுக்கவில்லை. அவர்கள் மாதாமாதம் 50 ரூபாய் ஸ்டைஃபெண்ட் வேண்டுமென்று கேட்கிறார்கள். அதையும் இந்தச் சர்க்கார் வழங்க வேண்டும். ஆகவே, இந்தச் சர்க்காரில் வேலையில்லாத் திண்டாட்டத்தை எந்த முறையிலே ஒழிக்கிறார்கள் என்பதைப் பற்றி ஆளுநர் உரையில் சொல்லவில்லை.

அடுத்தபடியாக ஆரம்பப் பள்ளியிலே வேலைபார்க்கும் ஆசிரியர்கள். அவர்களும் உங்களுக்கு இந்த அரசைக் கொடுத்தார்கள் என்பதில் எந்தவிதமான ஐயப்பாடும் கிடையாது. அப்படிப்பட்ட ஆசிரியர்கள் கன்னியாகுமரியிலேயிருந்து, 450 மைல்களைக் கடந்து, எத்தனையோ ஆயிரக்கணக்கான உபாத்தியாயர்கள் இங்கு வந்தார்கள். அவர்கள் 7, 8 கோரிக்கைகளைச் சொன்னார்கள். அதிலுள்ள முக்கியமான கோரிக்கை ஒன்றே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தனியார் பள்ளிகளிலே வேலை பார்க்கும்பொழுது, அந்த மானேஜ்மெண்டார் அவர்களை நீக்கி விட்டால் அவர்கள் சர்க்காருக்கு அப்பீல் செய்தால் இலாக்கா மூலமாக, அந்த உபாத்தியாயர்களுக்கு மீண்டும் வேலை கொடுக்க வேண்டுமென்று உத்தரவு போட்டாலும், மேனேஜ்மெண்டார் அந்த உத்தரவுக்குப் படியாமல் இருக்கிறார்கள். அந்த உபாத்தியாயர்களுக்கு இடம் கொடுப்பது இல்லை. அப்படிப்பட்ட மேனேஜ்மெண்டார் மீது நடவடிக்கை எடுப்பதற்கு இதுவரையிலே இந்தச் சர்க்காரிலே எந்தவிதமான சட்டமும் கிடையாது. அதற்கான வழிவகைகளைச் செய்திருக்கிறார்களா என்று பார்த்தால் தெரியவில்லை. அவர்களே சொன்னார்கள், ஜால் வைத்துப் பேசுகிறார்களே தவிர காரியத்தில் ஒன்றுமில்லை என்று.

அடுத்து, இந்தப் பட்டா வழங்குவதைப்பற்றி பெருமையாகச் சொல்லுகிறார்கள். அதற்குப் பத்திரிகை பலம் இருக்கிறது. அது இந்த அரசு வந்துதான் செய்ததா அல்லது இதற்கு முன்னாலேயும் செய்ததா? இதை அன்றே செய்தோம். அன்றைக்கும் ஆளுங் கட்சியாக இருக்கும்பொழுது நானும் பேசியிருக்கிறேன், இதுவரை மாற்றத்தைக் காணோம். நிலம் இல்லாதவர்களுக்கு 5 ஏக்கர் நிலம் பட்டா கொடுக்கிறீர்கள். அந்தப் பட்டாவிற்குப் பின்னாலே, அதில் ஐந்து வருஷத்திற்குள் விவசாயம் செய்யாவிட்டால் இந்த நிலத்தைப் பறித்துக் கொள்வோம் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள், உண்மையாகவே நிலம் இல்லாமலிருந்த காரணத்தால்தான் அந்த நிலத்தைக் கொடுக்கிறீர்கள். ஆனால், அதில் கிணறு அடிப்பதற்குப் பணம் கிடைக்க இந்தச் சர்க்காரில் எந்தவிதமான சட்டமும் இல்லை. ஐந்து ஏக்கரா நிலத்தில் கிணறு அடிக்க வேண்டுமென்றால் அதற்குப் பேங்கிலே பணம் கொடுப்பதில்லை. பிளாக் டெவலப்மெண்ட் ஆபீசிலும் பணம் கொடுப்பதில்லை. அதற்கு ஜாமீன் நிலம் வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அவர்களுக்கு ஜாமீன் நிலம் கிடைப்பதில்லை. அவர்களுக்கு நிலமே கிடையாது. எனவே, நான் உங்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேன், அந்த நிலத்தையே ஜாமீனாக வைத்துக் கொண்டு கிணறு அடிக்க நீங்கள் பணம் வழங்க வேண்டும், அப்படி இல்லையென்றால் இந்தச் சர்க்காரே அங்கே அடித்துக் கொடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக, நிலவள வங்கி என்று அமைச்சர் ஆதித்தனார் அவர்கள் வருகின்ற நேரத்தில் ஊர் ஊராகச் சென்று அதைச் சொல்லுகிறார்கள். அப்படிச் சொல்வதையும் ஒழுங்காகச் சொல்லவில்லை. ஐந்து பைசா போஸ்ட் கார்டில் எழுதிவிடுங்கள் என்றார்கள். இப்பொழுது போஸ்ட் கார்டின் விலை 10 பைசா. ஆனால் அந்த வங்கிகளைப் போய்ப் பார்த்தால் அது நிலவள வங்கியாக இல்லாமல் வழவழ வங்கியாகத்தான் தெரிகிறது. இப்படிப்பட்ட ஒரு நிலையை நாம் இன்றும் பார்க்கிறோம். குறிப்பாக நமது அமைச்சரவர்கள் எங்கள் நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த அங்கத்தினர்களைத் தனித்தனியாகச் சந்தித்துக் கேட்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன். அவர்கள் மன்றத்திலே பேசமாட்டார்கள், ஏனெனில் ஆளும் கட்சியைச் சேர்ந்திருப்பதனால்.

தாமிரபரணி ஆற்றிலே தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். மழையும் இல்லை. அதனால் ராதாபுரம், விஜயநாராயணபுரம், நாங்குநேரி போன்ற இடங்களிலே இதுவரையிலும் கஷ்டம். இன்றும் குடிநீருக்கும், விவசாயத்திற்கும் என்ன செய்வார்கள்? எனவே, அவர்களுடைய கடனை ஒற்றிவைக்க வேண்டும். வரிகளை வஜா செய்ய வேண்டும். அந்தப் பகுதியைப் பஞ்ச நிவாரணப் பகுதியாக ஆக்கவில்லை. மற்ற மாவட்டங்களிலேயெல்லாம் செய்ததைப்போல், வறட்சி நிவாரணம் செய்ய வேண்டிய காலத்திலே திருநெல்வேலி மாவட்டத்திலே பஞ்ச நிவாரணம் செய்யப்படவில்லை. சர்க்கார் எங்கள் மாவட்டத்திற்கு ஒரு கோடி கொடுக்க வேண்டுமென்று கேட்டோம். ஆனால் எங்கள் மாவட்டக் கலெக்டர் பரிந்துரை செய்யவில்லை. ஆகவே, இந்த அளவிலே அங்கிருக்கும் சூழ்நிலை பெரிய மோசடி செய்யும்படியான அளவில் இருக்கிறது. அந்த மக்கள் ஊரைவிட்டுச் சென்னைக்கே வந்திருக்கிறார்கள். இது உண்மையிலேயே விவசாய சர்க்காராக இருக்குமேயானால், கடற்கரையிலே வெட்டிக் குவிக்கச் செலவழிக்கக் கூடியதிலே, ஒரு பகுதியை அந்தப் பகுதிக்கு ஒதுக்கினால் போதும். இங்கு பேசிய ஒரு அங்கத்தினர் குறிப்பிட்டதைப்போல் யானை கீழே சிந்திய ஒரு கவளம், அதற்கு அது பெரிதாகத் தோன்றாவிட்டாலும், அது ஆயிரக்கணக்கான எறும்புகளுக்குப் பயன்படுவதுபோல், அந்த மாவட்டத்து மக்களும் உங்களை வாழ்த்துவார்கள். அமைச்சர் ஊருக்கு வருகிறார். எனக்கு திருநெல்வேலி மாவட்டத்திற்கு இந்த நாளில் வருகிறார் என்று ப்ரோகிராம் வருகிறது. அதற்குப் பின்னால் மாவட்டச் செயலாளர்களினால் ப்ரோகிராம் நடத்தப்படுகிறது. தஞ்சாவூரில் நெல்பயிரை எலிகள் சாடுகின்றன என்றால், எனது மாவட்டத்தில் வட்டச் செயலாளர்களும், குட்டிச் செயலாளர்களும் அட்மினிஸ்டிரேஷனுக்கு உள்ளே புகுந்து சாடுகிறார்கள். அவர்கள் போட்ட ப்ரோகிராமைத் தான் பி.டி.ஓ. போடுகிறார். போனிலேயே சொல்கிறார்கள். அதன்படி நடக்கிறது. எங்கள் ஊருக்கு அமைச்சர் அவர்கள் வருகிறபொழுது எனக்குத் தெரியாமலே வருகிறார். நாங்கள் புறக்கணிக்கப்பட்டவர்களா? நாங்கள் இந்த நாட்டில் தமிழர்கள் இல்லையா? நாங்கள் சட்டமன்ற உறுப்பினர்கள்





இல்லையா? இந்தக் குற்றச்சாட்டை உதவி சபாநாயகர் மூலம் சபை முன்பு எடுத்து வைக்க விரும்புகிறேன். அமைச்சர்கள் எங்கள் தொகுதிக்கு வருகிறார்கள் என்றால், நாங்கள் அங்குள்ள தேவைகளைப் பற்றிச் சொல்லத் தயாராக இருக்கிறோம். குறைகளை எடுத்துச் சொல்லத் தயாராக இருக்கிறோம் என்று சொல்லி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, ஒரே ஒரு சிறு விளக்கம் மட்டும் அங்கத்தினர் அவர்களிடத்திலிருந்து எதிர்பார்க்கிறேன். அமைச்சர் அவர்கள் அவருடைய தொகுதிக்கு வருகிறபொழுது அங்கிருக்கிற வட்டச் செயலாளரையும், குட்டிச் செயலாளர்களையும் கேட்டுக் கொண்டு வருகிறார் என்று சொன்னார்கள். அங்கத்தினர் எப்பொழுதாவது அழைத்து அமைச்சர் வரவில்லையா? எப்பொழுதாவது அமைச்சரை அழைத்திருக்கிறார்களா? அல்லது வரலாமா, எப்பொழுது வரலாம், என்ன வேலை வைத்துக் கொள்ளலாம் என்று அமைச்சர் கேட்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்களா?

**திரு. என். துரைபாண்டியன்:** அமைச்சர் அவர்கள் வரும்பொழுது சட்டசபை மெம்பர்களுக்கு ப்ரோகிராம் அனுப்புகிறார்கள். அந்தப் ப்ரோகிராமில் எங்கள் ஊருக்கு வருகிறார் அல்லது பக்கத்து ஊருக்கு வருகிறார், ஒரு பள்ளி திறக்கிறார் என்று ப்ரோகிராம் வருகிறது. அந்த ப்ரோகிராமில் அப்படி எழுதப்பட்டிருக்கிறது. வட்டச்செயலாளர் சொல்லி வர வேண்டாம் என்று சொல்லவில்லை. அதே சமயத்தில் எங்கள் ஊரைச் சார்ந்த ஒரு அரசாங்கப் பள்ளி, பஞ்சாயத்து யூனியன் பள்ளி எனது தொகுதியில் திறக்கிறார் என்றால், அடுத்த தொகுதியில் திறக்கிறார் என்றால், ராதாபுரம் தொகுதியில் பள்ளி திறக்கிறார் என்றால், அந்தப் பள்ளித் திறப்பு விழாவிற்கு ஒரு சட்டசபை மெம்பர் கிடையாது. எனது தொகுதி பஞ்சாயத்து யூனியன் தலைவர் கிடையாது. குறிப்பாக எனது வேண்டுகோள் என்னவென்றால், அமைச்சர்கள் தனியார் வீடுகளில் சாப்பிடக் கூடாது. அப்படிச் சாப்பிடுவதன் காரணமாகத்தான் அரசாங்கத்தில் ஊழல்கள் நடைபெறுகின்றன. ரூ. 3,000 கொள்ளை அடித்த பி.டி.ஓ. அப்படிப்பட்டவர்களின் வீடுகளில் சாப்பிடுவதால், அவர் கலெக்டருக்குப் பயம் காட்டுகிறார், ஆபீசர்களுக்குப் பயம் காட்டுகிறார். எந்த அரசாங்கமாக இருந்தாலும் சரி, ஒரு அமைச்சர் வருகிறபோது தனியார் வீடுகளில் விருந்துண்ணக் கூடாது. சாப்பிடக் கூடாது அப்படிச் செய்வதனால் அவர்களுக்கு வேண்டியவர்கள் என்று சொல்லி அதைப் பயன்படுத்திக்கொண்டு ஊரை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்று நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தயவுசெய்து அங்கத்தினர் பேசிய கடைசி வார்த்தைகளைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 'ஊரை ஏமாற்றுகிறார்கள்' என்ற வார்த்தைகளைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

[1970 ஜனவரி 24

**திரு. என். துரைபாண்டியன் :** நான் சொன்னதை அமைச்சர் அவர்கள் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்று நினைக்கிறேன். ஆபீசர்களும் மற்றவர்களும், அதாவது அமைச்சர்கள் யார் வீட்டில் தங்குகிறார்களோ, அவர்களும் ஊரை ஏமாற்றுகிறார்கள் என்றுதான் சொன்னேனே தவிர, மந்திரிகள் ஊரை ஏமாற்றுகிறார்கள் என்று சொல்லவில்லை.

*** திரு. என். சங்கரய்யா :** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரையின் மீது மார்க்சிஸ்டு-கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக என்னுடைய பல தோழர்கள் ஏற்கனவே பேசியிருக்கிறார்கள். இறுதியாக மார்க்சிஸ்டு-கம்யூனிஸ்டுக் கட்சியின் சார்பிலே இந்தக் கவர்னர் அவர்களின் உரையைப் பற்றி பின்வரும் கருத்துக்களை இன்று இந்தச் சட்டப் பேரவையிலே சமர்ப்பிக்க நான் முன் நிற்கிறேன்.

ஆளுநர் அவர்களுடைய உரையிலே மத்திய அரசாங்கத்திடமிருந்து மாநில அரசாங்கத்திற்கு அதிகப்படியான அதிகாரங்கள் வேண்டும் என்ற கோரிக்கையிலும், அதிகப்படியான நிதி வசதி தேவைப்படுகிறது என்ற கோரிக்கையிலும் நாங்கள் பூரணமாக ஒன்றுபட்டிருக்கிறோம். அவ்வாறு அந்தக் கோரிக்கைகளைப் பெறுவதற்காக ஆளுநர் உரையிலே இதற்காகச் சில ஓய்வுபெற்ற நீதிபதிகளைக் கொண்ட ஒரு கமிஷன் போடப்பட்டிருப்பது பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைப் பொறுத்த வரையில், மத்திய அரசாங்கத்திற்கும், மாநில அரசாங்கங்களுக்கும் இடையிலே அதிகாரப் பிரிவினை செய்வதிலே, நிதி விவகாரங்களைப் பிரிவினை செய்வதிலே ஒரு சட்ட நுணுக்கப் பிரச்சினை இருப்பதாக நாங்கள் கருதவில்லை. இது ஒரு அரசியல் பிரச்சினை. ஜனநாயகத்தின் சார்பிலே இன்றைக்கு இந்த நாட்டில் எப்படிப்பட்ட கூட்டாட்சி தேவைப்படுகிறது, இது அரசியல் பிரச்சினை, இந்த அரசியல் பிரச்சினையைப் பற்றிப் பரிசீலிப்பதற்கு அரசியல் கட்சிகள் சம்பந்தப்பட்ட பிரபலஸ்தர்களைக் கொண்டு ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டிருந்தால், மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

தமிழகத்திலே இருக்கக்கூடிய அரசாங்கத்தின் பொருளாதார, சமுதாய நிர்ணயிப்புகளைப்பற்றி இந்த ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருப்பதிலே சில அடிப்படைக் கருத்து வேறுபாடுகள் எங்களுக்கு இருக்கின்றன என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக நம் அனைவருக்கும் நன்கு தெரியும். இந்திய நாடு ஒரு ஏழை நாடு. தமிழகம் அப்படிப்பட்ட ஏழை நாட்டின் ஒரு பகுதியாக இருக்கிற நேரத்தில், தொழில் துறை வளர்ச்சி ஏற்பட வேண்டும் என்று ஏற்கனவே தேசத்தின் விடுதலைப் போராட்டத்தில் நாம் போராடியபொழுது, அயல் நாட்டு பெரும் முதலாளிகளின் ஆதிக்கத்தை இந்திய தேசத்தினுடைய பொருளாதாரத்திலிருந்து வெளியேற்றுவதன் மூலம், சுதேசித் தொழில்கள் வளர்வதன் மூலம்தான் உண்மையிலேயே



1970 ஜனவரி 24] [திரு. என். சங்கரய்யா]

தொழில்வளர்ச்சி ஏற்படமுடியும் என்று நாம் நம்பிக்கை கொண்டிருந்தோம். இன்று தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சி என்ற பெயரால் ஏற்பட்டு வரக்கூடிய சில சம்பவங்கள் வேதனைப் படத்தக்கவைகளாக இருக்கின்றன. அயல் நாட்டு தொழில் முதலாளிகளை நம்முடைய தமிழகத்தின் தொழில் வளர்ச்சியில் மேலும் மேலும் அதிகமாகச் சம்பந்தப்படுத்துவதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டுக் கொண்டு வருகின்றன என்பதை நான் மிகவும் வருத்தத்தோடு குறிப்பிட விரும்புகிறேன். உதாரணமாக, சேலம் உருக்காலை முழுதும் இணைக்கப்பட்ட ஒரு தொழிலாக ஏற்படுத்தப்பட வேண்டும் என்று விரும்புகிறோம். ஆனால், '1968-69-ம் ஆண்டினுடைய தமிழகத்தில் தொழில் வளர்ச்சி, அதைப்பற்றி ஒரு பரிசீலனை' என்று தமிழ்நாடு அரசாங்கத் தொழில் இலாக்கா வெளியிட்டிருக்கக்கூடிய அறிக்கையிலே 13-ம் பக்கத்தில் அவர்கள் என்ன குறிப்பிட்டிருக்கிறார்கள் என்றால்,

'A Japanese Company Marubeni Lida Company Limited, is interested in securing a contract for the export of about one million tonnes of pellets a year to the Steel Industry in Japan. The discussions with the Company are in an exploratory stage and a final decision on the proposal would have to be taken with the approval of the Central Government.'

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதாவது சேலம் உருக்காலையில் இன்றைக்கு அதில் கிடைக்கக்கூடிய இரும்புக் கனியை உருளைகளாக (பெல்லெட்ஸ்) உருட்டி, அந்த உருளைகளை ஜப்பானில் இருக்கிற ஒரு கம்பெனி மூலப் பொருளாக பயன்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. சேலம் உருக்காலையில் கிடைக்கக்கூடிய உருளைகளை, நம்முடைய நாட்டில் கிடைக்கக்கூடிய மூலப் பொருளை, பிற நாட்டுத் தொழிலுக்காக அந்த நாடு இறக்குமதி செய்வதற்கு நாம் அனுமதிக்கக் கூடாது. தமிழகத்திலேயே ஒன்றுபட்ட உருக்குத் தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கு இந்த மூலப் பொருள் உதவ வேண்டும். இப்படிப்பட்ட யோசனை ஒன்று அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது என்று கூறுவதே மிகவும் வருத்தப்படக்கூடிய விஷயம். அப்படிப்பட்ட யோசனைகளைக் கைவிட்டு விட்டு, தமிழகத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கிற உருக்கு ஆலை தமிழகத்திலேயே எல்லாவிதமான உருக்குத் தொழிலையும் நிறைவேற்றக்கூடியதாக அமைய வேண்டும் என்பதை நான் வற்புறுத்தி கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

ஃபெர்டிலைசர் கம்பெனியைப் பொறுத்து வரையில், கவர்னர் உரையில் குறிப்பிட்டிருக்கிறது. தூத்துக்குடியில் ஆரம்பித்திருக்கும் உரத் தொழிற்சாலை சம்பந்தப்பட்டவர்கள், திரு. சௌத் இந்தியா ஏஜன்ஸில் ப்ரைவேட் லிமிடெட் என்ற கம்பெனி ஒன்று உரத் தொழிற்சாலையை நடத்த முன் வந்திருப்பதாகவும், தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தோடு சேர்ந்து, தனியார் ஒருவர் கோ-ஸ்பான்ஸராக மத்திய சர்க்காரில் லைசென்ஸ் கேட்டு இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. தமிழ் நாடு தொழில் அமைச்சர்

அடிக்கடி கூட்டுத் துறை என்று சொல்கிறார்கள். நாங்கள் கூறுவது பெரு முதலாளிகள் ஆதிக்கத்திலிருந்து நாம் விடுபட வேண்டும். முக்கியமாக கேந்திரமான தொழில்களில், 45 கோடி ரூபாயில் நடக்கவிருக்கும் தொழிற்சாலையை, சிரமப்பட்டு ஆரம்பிக்கவிருக்கும் தொழிற்சாலையை தனிப்பட்ட முதலாளிகளுடைய பங்கீட்டோடு நடத்தினால், அது முதலாளிகளின் லாபத்தைத்தான் பெருக்கும். இதை மாநில அரசே தன் வசத்தில் நடத்த வேண்டும் என்பதுதான் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் கேட்பது.

தொழில் வளர்ச்சி என்று சொல்லும்போது, பெரும் முதலாளிகளை வளர்க்க வேண்டாம். தொழில் வளர்ச்சிக்கு பெரு முதலாளிகள் அவசியம் இல்லை என்பதற்கு மற்றொரு உதாரணமும் கொடுக்க விரும்புகிறேன். உங்கள் அனைவருக்கும் தெரியும், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. துரைசாமி கூடக் குறிப்பிட்டார்கள். 1969, ஆகஸ்ட் மாதத்தில், மின்சார அமைச்சர் இந்த மன்றத்திற்கு அளித்திருக்கும் அறிக்கையில்,

Considering that the Electricity Board is obliged to subsidise agriculture to the extent of Rs. 9 crores annually and the aluminium industry to the extent of about Rs. 1 crore, this must be considered as a good performance. என்று பக்கம் 2 இல் இரண்டாவது பாராவாக இருக்கிறது. இப்பொழுது தமிழ்நாடு அரசாங்கம், விவசாயிகளுக்கு மின்சாரக் கட்டணத்தை 8.25 பைசாவிலிருந்து 10 பைசாவாக உயர்த்தி விட்டது. ஆகவே, விவசாயத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் மானியம் குறைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இங்கே குறிப்பிட்டிருக்கும் அலுமினியம் இன்டஸ்ட்ரிக்கு ஒரு கோடி ரூபாய் அளவிற்கு மின்சார வாரியம் சப்சிடி, மானியம் கொடுக்கிறது என்றால், அந்தத் தொழிலை யார் நடத்துகிறார்கள்? தமிழகத்தில் ஒரு பிரபல முதலாளி நடத்துகிறார். அலுமினியத்திற்கு அதிகமான மின்சாரம் தேவைப்படுகிறது. உண்மைதான். ஆனால், அதில் கிடைக்கும் லாபத்தில் தமிழக அரசாங்கத்திற்குப் பங்கு கிடைக்கிறதா? மின்சாரத்தில் ஒரு கோடி ரூபாய் மானியம் கொடுக்கிறதே, இப்பொழுது போல இன்னும் 10, 15 ஆண்டுகளுக்குக் கொடுத்தால், அந்தத் தொழிற்சாலையையே இந்த மாநில அரசாங்கம் வாங்கக் கூடிய தொகை வந்துவிடும். அப்படி அரசாங்கமே நடத்துவதனால், ஒரு கோடி அல்ல ஒன்றரைக் கோடி என்றாலும் பரவாயில்லை, கொடுக்கலாம். அதிலிருந்து கிடைக்கும் லாபம் தமிழக அரசைச் சேரும். அந்தத் தொழிற்சாலையிலிருந்து பெறும் வருமானத்திலிருந்து, இந்த மானியம் கொடுப்பதற்குப் பதிலாக லாபத்திலே அரசாங்கத்திற்கு ஏதாவது பங்கு கிடைக்கிறதா? இன்றைக்குத் தொழில் வளர்ச்சி என்ற பெயரில் நாம் முதலாளிகளைப் பெருக்க வழி கோலக் கூடாது. இன்றைக்கு ஒரு தனியார் துறை இந்த மின்சார வாரியத்தை நடத்திக் கொண்டிருந்தால், தன்னுடைய மின்சாரத்தை ஒரு கோடி ரூபாய் அளவிற்கு மானியமாகக் கொடுப்பார்களா?





இன்றைக்கு அரசாங்கத்தின் கொள்கையைப் பற்றி ஆழமாகப் பரிசீலிக்க வேண்டும். இந்த ஆர். கே. வெங்கடசாமி நாயுடு என்பவர்தான் லக்ஷ்மி மில்சின் சொந்தக்காரர். சிறுமுகையில், சௌத் இந்தியா விஸ்கோஸ் கம்பெனி நடத்துகிறார். இந்த விஸ்கோஸ் கம்பெனிக்குத் துணைத் தொழிலாக, பல்ப் பளாண்ட், மரக் குழம்பு தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. பத்திரிக்கையில் வந்ததைப் பார்த்துச் சொல்லுகிறேன், இந்தச் தொழிற்சாலைக்கு மூலப் பொருள், நம்முடைய தமிழ் நாடு அரசாங்கம் தன்னுடைய காட்டிலாகாவிலிருந்து, இந்த மரக்கூழ் தயாரிக்க, ஒரு லட்சம் டன் ப்ளூகம் மரப்பட்டை கொடுக்கவும், 50,000 டன் வாட்டில் பார்க் மரம் கொடுக்கவும் ஏற்பாடு செய்திருக்கிறது. இது என்ன விலையில்? மார்க்கெட்டில் அப்படிப்பட்ட பொருள் என்ன விலையில் விற்கப்படுகிறதோ, அந்த விலைக்கா, அல்லது மலிவான விலையிலா? விவரம் இல்லை. அமைச்சரவர்கள் அதைப்பற்றிக் கூறினால் மிகவும் சந்தோஷம் அடைவேன். இந்தத் தொழ்ற்சாலை மத்திய சர்க்காருடைய ஃபைனான்ஸ் இன்ஸ்டிட்யூஷனிலிருந்தும், மற்ற நிறுவனங்களிலிருந்தும், தொகைகள் பெறப்பெற்று மூலதனம் போடப்பட்டிருக்கிறது. இதை நடத்தி பெரிய முதலாளிகளாகப் போகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய தேர்தல் அறிக்கையில் சொல்லாத ஒன்றை இன்றைக்குத் தொழில் அமைச்சர் திரு. மாதவன் கல்கத்தாவில் ஒரு மன்றத்தில் பேசும்போது சொல்லியிருக்கிறார். ஜனவரி 23-ம் தேதி பத்திரிகையில் வந்த செய்திப்படி

He said that Government was not bound by any ideologies but wanted to adopt a pragmatic approach to industrial development.

அதாவது, தன்னுடைய அரசாங்கத்திற்கு எந்தவிதமான சித்தாந்தக் கொள்கையும் இல்லை என்றும், எந்த நேரத்தில் எது அவசியமோ, அப்படி முடிவு எடுப்போம் என்பது. நான் மந்திரி சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது என்னவென்றால் தேர்தல் நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் அதிகார பூர்வமான அறிக்கையை, அண்ணாதுரை அவர்களின் தலைமையில் வெளியிட்டிருக்கிறார்கள். அதில் தொழில் வளர்ச்சி பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தக் கொள்கைக்கும், இப்பொழுது தொழில் அமைச்சர் சொல்லிக் கொண்டு வரும் சித்தாந்தம் அற்ற அரசு என்பதற்கும் பெரும் வேறுபாடு இருக்கிறது. ஆகவே, அரசாங்கம் எந்த நிலையில் இருக்கிறது என்பதை விளக்க வேண்டும். தொழில் துறை பற்றித் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டிருப்பது.

"தொழில் துறையைப் பொறுத்தமட்டில் சோஷலிசம் பேசும் காங்கிரசு, பெரிய முதலாளிகளிடமே தொழில் துறையை ஒப்படைத்து விட்டதால், ஏழை பணக்காரன் பேதம் வளர்ந்து விட்டதுடன், அரசியலை ஆட்டிப் படைக்கவும், ஆட்சியை அடிமை கொள்ளவுமான வலிவும் ஆதிக்க உணர்வும் முதலாளிகளுக்குத் தடித்தும் போய் விட்டதுடன், பாசிஸம் உருவெடுக்கும் நிலை ஏற்

[திரு. என். சங்கரய்யா] [1970 ஜனவரி 24

பட்டிருப்பது கண்டு கழகம் வருந்துகிறது. இந்த முதலாளித்துவ பிடியைப் போக்கிடும் முறையில் தொழில் துறையைத் திருத்தி அமைக்கும் திட்டத்தை மேற்கொள்ள கழகம் பொதுமக்கள் ஆதரவையும், ஆணையையும் எதிர் பார்த்து நிற்கிறது."

நான் என்ன கேட்க விரும்புகிறேன் என்றால், இந்த அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதுபோல், திராவிட முன்னேற்றக் கழக அரசு தமிழகத்தில் முதலாளிகளின் பிடியைப் போக்க நடவடிக்கை எடுக்கிறதா? அல்லது தொழில் அமைச்சர் சொல்லுவதுபோல—வேறு இடங்களிலும் அவர் அப்படிச் சொல்லி வருகிறார்—எப்படியாவது தொழில் ஏற்பட்டால் போதும் என்று சொல்கிறார். அந்தக் கொள்கையைப் பின்பற்றப் போகிறதா? கடந்த காலத்தில் ஆட்சியாளர்களும் இதையேதான் சொல்லி வந்தார்கள். இன்றைக்கு இவர் கூறுகிறார். சோஷலிச கொள்கைக்குத் திராவிட முன்னேற்றக் கழகமும் உட்பட்டுத்தான் கடந்த பல ஆண்டுகளாகச் செயல்பட்டு வந்திருக்கிறது. அப்படி சோஷலிசக் கொள்கையை அமுல் படுத்தும் வகையில் செயல்பட வேண்டும். சாதாரணமாக சிறு சிறு தொழில்கள், நடுத்தரத் தொழில்கள் இவற்றைத் தனியார் துறைக்குக் கொடுக்கலாம் என்றாலும், கேந்திரமான தொழில்களைத் தொழில் அதிபர்களை வளர்க்கப் பயன்படுத்தக் கூடாது என்பது தான் எங்கள் கட்சியின் வாதம்.

இன்றைக்கு இம்பீரியல் கெமிகல்ஸ் தொழிற்சாலைக்கு எண்ணூரில் தொழில் ஏற்படுத்த உதவி செய்கிறோம். அதேபோல, சென்னைக்கருகில் மணலியில் எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை சம்மந்தமாக, எஞ்சினியர்ஸ் இந்தியா என்பவர்கள் கொடுத்திருக்கும் ப்ராஜக்ட் ரிபோர்டின் படி ரூ. 200 கோடி தேவைப்படும் என்கிற திட்டத்தை தமிழக அரசு ஆராய்ந்து வருவதைப் பற்றி மகிழ்ச்சி. ஆனால் அதிலிருக்கும் பிரச்சினை என்னவென்றால், மேற்கு ஜெர்மனி தொழில், பாங்கர் தாது கோஷ்டி அரசின் சார்பில் பேச்சு வார்த்தை நடத்தி, நாப்தா வெடித் தொழிற்சாலையில் மேற்கு ஜெர்மெனி பங்கு போடத் தயாராக இருப்பதாகவும், அப்படி உதவி செய்யத் தயாராக இருப்பதாகவும் தெரிகிறது. மேற்கு ஜெர்மன் முதலாளிகளோ, ஜப்பன் முதலாளிளோ அமெரிக்கா முதலாளிகளோ அல்லது இந்தியாவிலேயே இருக்கும் பெரிய முதலாளிகளோ அவசியம் இல்லை. தொழில் வளர்ச்சிக்குக் கஷ்டப்படும் சமயத்தில் இத் தொழிலில் முக்கியமாகக் கூட்டுத் துறை அவசியம் இல்லை, மாநில அரசின் பொறுப்பிலேயே எடுத்து நடத்த வேண்டும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல, விவசாயக் கொள்கையை எடுத்துக் கொண்டால்,

நண்பகல் 1–30 மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : ஒன்று சொல்ல விரும்புகிறேன் திரு. சங்கரய்ய 'தொழில் அமைச்சர் ஏதோ சொன்னார்கள், அது திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் பிரகடனத்திற்கு மாறுபட்டது' என்றார்கள். 'ப்ராக்மாடிக்' என்றால், எந்த எந்த நேரத்தில் எப்படியெல்லாம் அவசியமோ அப்படி என்றால், அது



1970 ஜனவரி 24] [திரு. கே. ஏ. மதியழகன்]

தவறு. நம்முடைய தொழில் அமைச்சர், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொழில் கொள்கையைத்தான் சொல்லி இருக்கிறார். அந்தத்தொழில் கொள்கைதான் பின்பற்றப் படுகிறது. 'ப்ராக்மடிக்' என்றால் பிரத்தியட்சமாக, செய்யக்கூடிய அளவில் செய்வது என்று தான் பொருள். எந்த எந்த நேரத்தில் எப்படி எப்படிச் செய்யலாமோ, அப்படிச் செய்வது என்று சொல்வது சரியில்லை. இன்னொன்று, சித்தாந்தம் கிடையாது என்று சொன்னதாகச் சொன்னார்கள். அப்படிச் சொல்லவில்லை. அது சரியில்லை. சித்தாந்தம் இருக்கிறது. கேரளத்தில் நம்பூத்திரிபாட் அரசில் முதலாளிகள் இல்லையா? முதலாளிகள் இருப்பது சரியில்லை என்பதால், அவர்களை ஒன்றும் செய்துவிடவில்லை என்பதும் தெரியும். ஆகவே, எங்களுக்கும் சித்தாந்தத்திலே நம்பிக்கை இருக்கிறது. ஆனால், நடக்கிற காரியங்கள், விஷயங்கள் இவைகளினால் இம்மாதிரியான கருத்துக்கள் இருக்கின்றன.

நாம் இன்றைக்கு ஒரு பொருளாதாரத் துறையிலே மாட்டிக் கொண்டிருக்கிறோம். டெல்லியின் பொருளாதாரத் துறையில் இருந்து வருகிறோம். தனியார் துறை, பொதுத் துறை இரண்டும் வளருவதற்காக நாம் பாடுபடுகிறோம். உதாரணமாக அலுமினியம் பாக்டரியைப் பற்றிச் சொன்னார்கள். அந்தத் தொழிற்சாலை தனியார் துறையிலே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னாலும், நாமும் ஒரு பங்குதாரராக இருக்கிறோம். ஒரு கோடி ரூபாய் அளவில் நாம் பங்கு போட்டிருக்கிறோம். அலுமினியம் தொழிற்சாலை தனியார் துறைக்குப் போனது இந்த அரசாங்கத்தின் குற்றமல்ல. அதற்கு இந்த அரசாங்கம் பொறுப்பு அல்ல. மின்சாரத் தேவைகளுக்கு அலுமினியம் உபயோகப்படுகிறது. ஆகவே, உற்பத்திச் செலவுக்கும் கேந்திரத் தொழிலுக்கும் வகை செய்ய வேண்டியது அவசியம். 300, 400 என்ஜினியர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. விற்பனை வரியின் மூலமாக நமக்குக் கிடைக்கும் நன்மைகள் போன்றவைகளைக் கருத்தில் கொண்டுதான், தொழில்கள் மூலமாகக் கிடைக்கிற நன்மைகளையும் சேர்த்துத்தான் எந்தத் துறையில் எவ்வளவு முதலீடு போடலாம் என்று பார்க்கிறோம். அதேபோல உரத் தொழிற்சாலைக்கு 50 கோடி ரூபாய் போடிருக்கிறது. (குறுக்கிடு அமைச்சர் அவர்கள் தவறாகச் சொல்லிவிட்டார்கள் என்று கூறியதற்கு நான் விளக்கம் அளிக்கவேண்டும். அரசாங்கத்துறை தனியார் துறை என்று இருக்கிறது. எங்களுக்கும் இந் நாட்டுத் தொழில் வளத்தில் நிரம்ப ஆசையிருக்கிறது. 50 கோடி ரூபாய் போட்டு இன்னும் பத்து வருடங்களில் தொழில் அபிவிருத்தி ஏன் ஏற்படவில்லையென்று சொல்வார்கள். டெக்ஸ்டைல் கார்ப்பரேஷனிலேகூட ஒரு இடத்தைப் பெற்றிருக்கிறோம். கோயம்புத்தூரிலே இருக்கும் திரு. மகாலிங்கம் அவர்களுடைய சக்தி பைப் தொழிற்சாலையிலே சர்க்கார் பணம் இருக்கிறது. இந்தத் தொழிற்சாலைகளை முதலாளிகள் நிறுத்தி விட்டாலும் நாம் பங்குதாரர்கள் என்ற முறையில் அத் தொழிற்சாலைகளை நடத்த முடியும். தொழில் கொள்கையில் நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் சொன்ன

கருத்துக்கள் முற்றிலும் இந்த அரசாங்கத்தின் கருத்துக்கள் தான் ஏதோ அன்றன்றைக்குச் சொல்லப்படுகின்ற கருத்துக்கள் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. என். சங்கரய்யா :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய குறுக்கீட்டினால் என்னுடைய நேரம் பாதிக்கப்பட்டது. கேரளாவிலே திரு. நம்பூதிரிபாட் அவர்களுடைய அரசாங்கத்திலே ஏதாவது அந்நிய முதலாளிகளுக்கும், இந்தியப் பெருமுதலாளிகளுக்கும் லைசென்ஸ் வழங்கப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** தனி முதலாளிகளுக்கு லைசென்ஸ் வழங்கப்படவில்லை. எல்லாம் இடதுசாரிக் கட்சியின் மெம்பர்களுக்குச் செய்து வந்திருக்கிறது.

**திரு. என். சங்கரய்யா :** இல்லையென்று சொல்கிறேன். வலதுசாரிக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் திரு. டி. வி. தாமஸ் என்பவர், ஜப்பானுக்குச் சென்று இருந்த நேரத்தில் கேரளாவில் ஒரு தொழில் ஸ்தாபனத்தை ஆரம்பிக்கத் தனிப்பட்ட கம்பெனிக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதியை ஆட்சேபித்துத்தான் திரு. நம்பூதிரிபாட், தனியார் துறையில் தொழில்கள் வேண்டாம் என்று கூறிவிட்டார். ரசாயனம் உருக்கு போன்ற முக்கியமான தொழில்கள் அரசுத் தரப்பில் இருக்க வேண்டுமென்று சொல்கிறோம். இத்தகைய எல்லாத் தொழில்களும் அரசாங்கத்திற்குச் சொந்தமாக இருக்க வேண்டும்.

தமிழ்நாடு அரசாங்கம் அலுமினியத் தொழிற்சாலைக்கு 1 அல்லது 1½ கோடி ரூபாய் மானியமாகக் கொடுத்தால் பரவாயில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இன்றைக்குத் தமிழக அரசாங்கம் நடத்துகின்ற கட்சி தேர்தலிலே கூறிய, 'முதலாளித்துவப் பிடியைப் போக்கிடும் முறையில், தொழில் துறையைத் திருத்தி அமைக்கும் திட்டத்தை மேற்கொள்ள வேண்டும்' என்ற கொள்கையை கடைப் பிடிக்கிறதா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** சிலபேருக்குக் கொடுக்கப் பட்டிருக்கலாம். ரஷ்யாவில் இல்லையா ?

**திரு. என். சங்கரய்யா :** அயல்நாடுகளிலுள்ள தனிப்பட்ட முதலாளிகளில் எங்களுக்கு நண்பர்கள் என்று கிடையாது. முதலாளிகள் சோவியத் நாட்டிலும் இல்லை, சீனாவிலும் இல்லை. அரசாங்கத்திற்குப் பொருளாதார உதவி தேவை யென்றால், அரசாங்க மட்டத்தில் உடன்பாடு ஏற்படுகிறது. அதற்கான உடன்பாட்டை நீங்களும் செய்து கொள்ளலாம். ஆனால் அயல்நாடுகளிலுள்ள முதலாளிகள் ஊடுருவதற்கு இடம் தரக் கூடாது. தொழில் கொள்கையை இந்த அரசு நன்றாக அமைத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன். தமிழ் நாடு அரசு போக்குவரத்து என்பதை நாம் உற்சாகத்தோடு எடுத்துக் கொண்டோம். பஸ் போக்குவரத்தையாவது பூரணமாக





மாநில அரசாங்கத்தின் சொத்தாக மாற்றுவதற்கு என்ன இடைஞ்சல் வந்தாலும் ஏற்று நடத்த வேண்டும். கொஞ்ச நஞ்சம் இருக்கிற கம்பெனிகளை எடுத்துக் கொண்டோம். ஆனால் பெரு லாபம் வரக்கூடிய, பெரிய கம்பெனிகளான டி.வி.எஸ்., எஸ்.ஆர்.வி.எஸ்., ஏ.பி.டி; போன்ற அதிக பஸ்களைக் கொண்ட நிறுவனங்களை எடுத்துக் கொண்டால் இன்னும் திறமையாகச் செயலாற்ற முடியும். அப்போதுதான் தேசிய உடமையாக்கும் திட்டம் முழுவதுமாக நிறைவேறும். உடனடியாக அரசு தீவிரமாக முயற்சி எடுக்க வேண்டும்.

இன்றைக்குத் தமிழ் நாட்டிலே உள்ள மக்கள் நம்பியிருப்பது விவசாயத் துறையைத்தான். இன்றைக்கு மாநில அரசாங்கம் இத் துறையில் பின்பற்றக்கூடிய இந்தக் கொள்கையை மாற்ற வேண்டும் என்று இந்த நேரத்தில் வற்புறுத்த விரும்புகிறேன். அவ்வாறு நான் சொல்லும்போது எங்கள் கட்சியினுடைய கொள்கையை நிறைவேற்றுங்கள் என்று சொல்லவில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய தேர்தல் அறிக்கையில் என்ன கூறியிருக்கிறார்களோ அவற்றையேதான் செயல்படுத்துங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். 1967-ம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய தேர்தல் அறிக்கையிலே கூறியிருப்பது இது தான்.

"காங்கிரஸ் அமைப்பு ஏழைகளுக்குக் கேடு செய்திடுவதாகவே இருப்பதனால்தான் முற்போக்கான திட்டம் என்று விளம்பரம் பெற்ற நிலச் சீர்திருத்தச் சட்டம் சத்தற்றதாகிவிட்டது. காங்கிரசைக்கைப்பற்றி ஆட்டிப் படைக்கும் நிலச் சுவான்தார்கள் நில உச்சவரம்புச் சட்டத்தையே உருக்குலைத்துவிட்டனர். அவர்களைத் தடுத்திடும் ஆற்றல் இன்றைய காங்கிரஸ் கட்சிக்கு இல்லை.

"தி.மு. கழகம் இந்தச் சட்டத்தில் உள்ள ஓட்டைகளை அடைத்து, இந்தச் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பித்துக்கொள்ள நிலச்சுவான்தாரர்கள் செய்துகொண்ட ஏற்பாடுகளின் போலித் தன்மையைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்கத் திட்டமிடுகிறது."

"உழுபவனுக்கே நிலம் என்ற திட்டத்தை அமுலாக்கக் கழகம் உறுதி கொண்டிருக்கிறது."

"நிலமற்றவர்களுக்கு நிலம் தருவதுடன் அவர்கள் நல்ல முறையில் விவசாயம் செய்திடத் தேவைப்படும் வசதிகளை தந்திடமுனையும்".

என்பதாக மிகவும் முக்கியமான வாக்குறுதிகள் அளிக்கப்பட்டிருக்கிறது. மேற்கண்ட நிலச் சீர்திருத்தத்திற்கு திருத்தம் வேண்டுமென்பதில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுக் கட்சியோ அன்று ஒன்றுபட்டிருந்த கம்யூனிஸ்டுக் கட்சியோ, திராவிட முன்னேற்றக் கழகமோ எவ்விதக் கருத்து வேற்றுமையும் கொண்டிருக்கவில்லை. நில உச்சவரம்பை 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று குறைக்க வேண்டும். இருக்கக்கூடிய நிலச் சீர்திருத்தச் சட்டத்தில் உள்ள ஓட்டைகளை

அடைக்க வேண்டும் என்பதற்காக அன்றைக்கே அண்ணா அவர்களது தலைமையில் பேரணி ஒன்றை திரு. பக்தவத்சலம் அவர்களுக்கு எதிராக நடத்தியிருக்கிறீர்கள். சமீபத்தில் டெல்லியில் முதல் அமைச்சர்கள் மகாநாடு நடந்திருக்கிறது. அங்கு மத்திய உள்துறை ஆட்சி "பசுமைப் புரட்சி என்று சொல்வது எல்லாம் ஒரு சிலருக்கு பசுமையாக இருக்கலாம். உழுகின்ற விவசாயிகளுக்கு, குத்தகை, வாரக்காரர்களுக்கு பசுமை இல்லை" என்று சொன்னார்கள். நிலச் சீர்திருத்தச் சட்டத்தை தீவிரப்படுத்த வேண்டுமென்று அந்த மகாநாட்டில் கூறப்பட்டிருக்கிறது. நமது முதல் அமைச்சர் அவர்கள் சென்னைக்கு வந்தவுடன் பத்திரிகை நிருபர்கள் அவரைச் சந்தித்து தமிழ்நாட்டில் 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்பதை 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று குறைக்கப் போகிறீர்களா என்று கேட்டபோது இப்போது அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை என்று கூறியிருக்கிறார்கள். அதனைக் கேட்டு தமிழக விவசாயிகளுடைய உள்ளம் வேதனை அடைந்திருக்கிறது.

நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் அடிப்படையை திட்டக் கமிஷன் ஏற்றுக்கொண்டிருக்கிறது. குத்தகை விவசாயிகள் நிலக்காரருக்குக் கால் பங்கைக் கொடுத்தால் போதும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

கேரளாவில் நிறைவேற்றப்பட்ட நிலச் சீர்திருத்தச் சட்டத்தை எடுத்துக்கொண்டால் உச்சவரம்பு 12 ஸ்டாண்டர்ட் ஏக்கராக வைக்கப்பட்டிருக்கிறது. மடாலயங்களுக்குச் சொந்தமான நிலங்களை ஏழைகளுக்கு விநியோகம் செய்வதற்காக மேற்கொள்ளப்படுகிறது. அரசாங்கமே அவைகளுக்கு ஆண்டுதோறும் ரொக்க உதவி அளிப்பதாக ஏற்றுக்கொண்டிருக்கிறது. நிலமற்ற விவசாயிகளுக்கும், வீடு இல்லாதவர்களுக்கும் 10 சென்ட் நிலம் மனைக் கட்டிற்காக அளிக்கும் திட்டமும் வகுக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய பொருளாதாரத்தின் தன்மையை எடுத்துப் பார்த்தால் 80 சதவிகிதம் வருமானம் விவசாயத்தில் இருந்து வருகிறது. கணபதியா பிள்ளை கமிஷன் ரிப்போர்ட்டை எடுத்துப் பார்த்தால் தஞ்சை மாவட்டத்து விவசாய உழவர்களுக்கு வருடத்தில் 7 மாதம் வேலை கிடையாது. இப்படி இருக்க அடிப்படையாக விவசாய நிலச் சீர்திருத்தத்தைக் கொண்டு வராவிட்டால் எப்படி வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்க முடியும்? பசுமைப் புரட்சி என்பது பெரிய பெரிய மிட்டாதார்களுக்கு, மிராசுதார்களுக்கு பசுமையை உண்டாக்கக் கூடியதாக வேண்டுமானால் இருக்குமே தவிர ஏழை விவசாயி, குத்தகை விவசாயிக்கு எவ்வித நன்மையும் கிடைக்காது. காரணம் இவர்கள் நிலத்திற்கு சொந்தக்காரர்கள் அல்ல. உழுபவனுக்கே நிலம் தருவோம் என்று தேர்தல் நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் மக்களுக்கு அளித்த அடிப்படை வாக்குறுதியை ஆட்சிக்கு வந்து 3 ஆண்டுகள் கழித்த பிறகும் கவர்னர் உரையில் சூசகமாகக் கூட இந்தச்சர்க்கார் நிறைவேற்றி வைக்கும் என்று கூற முன் [illegible] வருந்துகிறேன் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.





இப்போது நிதி அமைச்சராக இருப்பவர்—முன்பு ரெவின்யூ அமைச்சராக இருந்தபோது எத்தனையோ முறை காம்பிரிஹென்சிவ் லாண்டு லெஜிஸ்லேஷன் வரும் என்பதாக பல முறை உறுதி அளித்திருக்கிறார்கள். காலஞ்சென்ற அண்ணாதுரை அவர்கள் விவசாயிகளுக்குபோதுமான பாதுகாப்புகள் அளிக்க இருக்கிறோம் என்று உறுதி கூறியிருக்கிறார்கள். ஆட்சிக்கு வந்து 3 வருடங்கள் ஆகியும் கவர்னர் உரையில் அதைப் பற்றி ஒரு குறிப்பும் இல்லாதது வருந்த தக்கதாகும்.

அதோடு திராவிட முன்னேற்றக் கழகம் தனது தேர்தல் அறிக்கையில் "குறிப்பாக உழவர் மீதுள்ள கடன் சுமை அதிகமாகிக் கொண்டே போவதால், அதைத் தடுத்து நிறுத்தி (குறிப்பிட்ட கால அளவுக்காவது) கடன் தொல்லையில் இருந்து மீள, கடன் நிவாரண மசோதாவைக் கொண்டுவர கழகம் விரும்புகிறது" என்று கொள்கைப் பிரகடனம் செய்திருக்கிறார்கள். அத்தகைய கடன் நிவாரண மசோதாவும் கொண்டுவரப்படவில்லை. 1937-ல் தான் கொண்டுவரப்பட்டது. இன்றைக்கு பல கிராமங்களிலே விவசாயிகள் ஈட்டு வட்டி, கந்து வட்டி என்று வாங்கி தவித்துக் கொண்டிருக்கிறார்கள். லேவாதேவிக்காரர்கள் கிராம மக்களின் பொருளாதாரத்தையே உறிஞ்சிக்கொண்டிருக்கிறார்கள். அரசு கடன் நிவாரணச் சட்டத்தைக் கொண்டுவரவில்லையானால் விவசாய பெருங்குடி மக்களை பாதுகாக்க முடியாமலேயே போய்விடும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

இன்றைக்குச் சுதந்திராக் கட்சி மெம்பர் இங்கே பேசும் நேரத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுக் கட்சியைத் தாக்கி விமரிசனம் செய்தார்கள். 1970 சனவரி 18-ம் தேதி கல்கி பொங்கல் மலரில் என்ன சொல்லியிருக்கிறார்கள்? "சுதந்திராக் கட்சியின் முக்கிய நோக்கங்களில் ஒன்று உணவுக் கட்டுப்பாட்டை நீக்குவது என்பது. தி.மு.க.வுக்கு ஆதரவளித்த சுதந்திரக் கட்சி அன்பர்கள் இதுகாறும் தி.மு.க. உணவுக் கட்டுப்பாட்டைத் தொடர்ந்து நடத்தி வந்ததில் மிகவும் அதிருப்தியும், மனத்தாங்கலும் உற்று வந்தனர். இப்பொழுது அவர்கள் உள்ளம் குளிரும். தி.மு.க. அரசு பிரத்தியட்ச நிலையை உணர்ந்து சுதந்திராக் கட்சியின் முக்கியக் கொள்கைகளை அமுலுக்குக் கொண்டுவரத் தயங்காது என்று நிரூபித்திருக்கிறது" என்று எழுதியிருக்கிறார்கள். நிச்சயமாக எனக்குத் தெரியும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் சுதந்திராக் கட்சிக்கும் பொருளாதாரத் திட்டத்தில் மலைக்கும், மடுவுக்கும் உள்ள வித்தியாசம் இருக்கிறது. அவர்களுக்கு தி.மு.க. தங்கள் கொள்கைகளை அமுலுக்குக் கொண்டுவரும் என்கிற எண்ணம் எப்படி இன்றைக்கு ஏற்படுகிறது.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தங்களைப் பாராட்டிக் கொள்ள எழுதியிருக்கலாம். அதைத் தவிர சுதந்திராக் கட்சி கட்டுப்பாட்டை நீக்கவேண்டும் என்பதற்காக இந்த அரசு நீக்கவில்லை. நாட்டில் இன்றுள்ள நிலையை கவனத்தில் கொண்டு இப்போது கட்டுப்பாடு தேவையில்லை என்று கருதியதால்தான்

நீக்க முன் வந்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு என்று தனிக் கொள்கைகள் இருக்கின்றன. லட்சியங்கள் இருக்கின்றன.

**திரு. என். சங்கரய்யா :** சுதந்திராக் கட்சிக்கும் தங்களுக்கும் கொள்கை வேறுபாடு இருக்கிறது என்று கூறியதற்கு நன்றி. இன்று இங்கே பேசிய சுதந்திராக் கட்சி உறுப்பினர் திரு. ஹாண்டே அவர்கள் "இன்று நாங்கள் கூறுவதுதான் நாளை நிறைவேறி வருகிறது" என்று குறிப்பிட்டார்கள். அப்படி தி.மு. கழகத்தின் கொள்கை மாறி வருவதைப்போலத் தோன்றுகிறது. தேர்தல் காலத்தில் ஜனநாயக அடிப்படையில் இவர்கள் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை ஆண்டு 3 ஆகியும் நிறைவேற்றி வைக்க கொஞ்சம்கூட முன்வராத காரணத்தினால்தான் அடிப்படையிலேயே சந்தேகம் எழுந்திருக்கிறது.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** மார்க்சிஸ்டுகளிடம் நல்ல கொள்கை இருந்தால் அதை நிறைவேற்றினால் அதற்காக நாங்கள் அவர்களாகவே ஆகிவிட்டோம் என்பதும் சரியல்ல. அது அவர்களுடைய கொள்கையாதலாலே தமிழ்நாட்டுக்கு அது மேன்மை அளிக்கக்கூடியது என்றாலும் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று மறுக்கிற வைதிக மனப்பான்மையும் கிடையாது. நாங்கள் பதவிக்கு வந்தவுடன் இருந்த நிலைமையைப் பரிசீலித்தோம். கட்டுப்பாடு அப்போது தேவை என்பதனால் தொடர்ந்து அமுல் படுத்தினோம். 1970-ல் நிலைமை மாறி வந்திருப்பதனால் கட்டுப்பாடு தேவையில்லை என்று நினைத்தோம். எடுத்திருக்கிறோம். உண்மைக்கு மாறாக இதில் பொருள் காண்பது சரியானது அல்ல.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, கட்டுப்பாடு நீக்கத்தைப்பற்றி ஒரு வார்த்தை சொல்லலாம் என்று நினைக்கிறேன். யாருடைய விருப்பத்திற்காகவும் கட்டுப்பாட்டை நீக்கவில்லை. கட்டுப்பாடு தேவையில்லை என்று உணர்ந்ததனால் எடுத்தோம். மீண்டும் தேவைப்பட்டால் யாருக்காகவும் பயப்பட மாட்டோம். கொண்டு வருவோம். யாருடைய விருப்பத்திற்காகவும் நீக்கவில்லை. யாருக்குப் பயந்தும் கொண்டுவரப் போவதில்லை. இப்போது இருக்கின்ற நிலைமையில் எடுத்திருக்கிறார்கள். தேவைப்பட்டால் அரசு கட்டுப்பாட்டை கொண்டுவரத் தயங்காது என்றுதான் முதல் அமைச்சர் அவர்கள் தம் அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை தங்கள் தங்களுக்குச் சாதகமாக பொருள் கொள்வதில் பயன் இல்லை.

**திரு. என். சங்கரய்யா :** தலைவர் அவர்களே, யாருடைய நிர்ப்பந்தத்திற்கும் கொண்டுவர வேண்டுமென்றோ அல்லது நீக்கிவிட வேண்டுமென்றோ சொல்லுகின்ற நிர்ப்பந்தத்திற்கும் ஏற்பச் செய்கிறார்கள் என்று யாரும் சொல்லமாட்டார்கள். ஆனால் தமிழகத்திலே யதார்த்தமாகப் பார்த்தால் 1 படி அரிசி போடுவோம் என்று அவர்கள் சொன்ன நேரத்திலே எங்கள் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுக் கட்சியானது அதை வற்புறுத்தவில்லை, காரணம் அது பொருளா



தார சாத்தியம் இல்லை என்று சொன்னோம். அவர்கள் ஒரு படி அரிசி என்ற முறையிலே வாக்குறுதி மக்கள் மத்தியிலே கொடுத்தார்கள். இன்றைக்கு நிலைமை என்ன? நியாய விலைக்கடைகளில் ரூ. 1.36 பைசாவுக்குக் கிடைத்த படி அரிசி இன்றைக்கு கண்ட்ரோல் நீக்கப்பட்டிருப்பதன் காரணத்தினால் 1.80 பைசாவுக்குக் குறைந்து வாங்க முடியவில்லை. இதன் காரணமாக சாதாரண மக்கள், நடுத்தர மக்கள் பூராவும் நிச்சயமாகப் பாதிக்கப்பட்டு ஒரு படிக்கு 50 பைசா அல்லது 60 பைசாக் கூடுதலாகக் கொடுக்க வேண்டியிருக்கிறது. இதை யாரும் மறுக்க முடியாது. இப்படிப்பட்ட நிலைமை சாதாரண மக்களைப் பாதிக்கிறதா இல்லையா என்பதைச் சிந்திக்க வேண்டும். சென்னை கோயம்புத்தூர் இந்த இரண்டு இடங்களில் மாத்திரம் 200 ரூபாய்க்குக் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்குச் சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைத் தமிழ்நாட்டில் உள்ள எல்லா இடங்களுக்கும் ஏற்பாடு செய்ய வேண்டாமா? அரிசி கிடைக்கிறதா இல்லையா என்பது பிரச்சினையல்ல. என்ன விலைக்கு விற்கிறது என்பதையும் பார்க்க வேண்டும். விலைகள் உயர்ந்தால் மீண்டும் கட்டுப்பாட்டை கொண்டுவருவோம் என்று சொல்வது பொருத்தமாக இருக்காது. சாதாரண மக்களுக்கு நியாயமான விலையில் தமிழகம் பூராவும் அரிசி கிடைக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகம் மக்கள் மத்தியிலே விவசாயத் துறையிலே, தொழில் துறையிலே, தொழிலாளர் துறையிலே ஜனநாயக முற்போக்குச் சக்திகளை வளர்க்கக்கூடிய முறையிலே மக்களிடையே மாபெரும் மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய முறையிலே கொள்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE : I rise because the hon. Memeber referred to my speech. மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்கள் சொல்லும் பொழுது . . .

MR. DEPUTY SPEAKER : Mr. Venkataswamy is going to speak from your Party. He can make his representation. If everyone were to make his representation, how can I carry on the business?

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** ராஜாஜி அவர்கள் இன்று சொல்வது நாளைக்கு உண்மையாகும் என்றுதான் சொன்னேன். கம்யூனிஸ்ட் கட்சி அதை ஏற்றுக்கொண்டாலும் திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக்கொண்டாலும் இருக்கிற விஷயத்தைத்தான் சொன்னேன்.

***ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரையின் மீது இந்திய யூனியன் முஸ்லீம் லீக் சார்பில் நன்றி தெரிவித்துப் பேச வாய்ப்பளித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்று சொல்வார்கள், மணத்திற்காக மனம் ஏங்கிக்கொண்டு இருக்கும் மங்கையர்கள் நம் நாட்டில் இத் தை பிறந்ததும் தமிழ்நாடு அரசின் உணவுக் கட்டுப்பாட்டு நீக்கத்தினால்—செந்நெல் அரிசியுடன் செங்கரும்பு வெல்லத்துடன் பொங்கலிட்டு—வச்ச நறுநெய்யுருக்கி தன் வாழ்க்கை துணை நல்லாருக்கு மங்கையர் படைத்து மகிழும் வேளையில் உணவுக் கட்டுப்பாட்டை நீக்கிய அமைச்சரவையை வாழ்த்துவது மூலம் என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்—உணவுக் கட்டுப்பாடு நீக்கத்தைப் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன்.

உணவுக் கட்டுப்பாடு நீக்கப்பட்டிருப்பதைப் பாராட்டி வாழ்த்துகின்ற நேரத்திலே—இறைவன் அவனுடைய அருளால் காப்பாற்ற வேண்டும்—ஒரு வேளை மழையின்மையால் திடீரென்று நெருக்கடி நிலைமை ஏற்பட்டு பாதிப்பு ஏற்படுமானால் அந்த நிலைமையிலே தமிழ்நாட்டு விவசாயத் துறையைப் பாதுகாக்கும் வகையில் விரைவில் ஆங்காங்கு குழாய்க் கிணறுகளை அமைத்து பசுமைப் புரட்சித் திட்டத்திற்கு அனுசரணையாக ஏற்பாடுகளைச் செய்ய முயற்சிகள் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தட்டுப்பாடின்றி உணவுப் பொருள் எங்கும் கிடைக்கிறது என்றாலும் கட்டுப்பாட்டு விலையைவிட ஓரளவுக்கு விலை கூடியிருக்கிற பிரத்தியட்சமான உண்மையை நாம் உணர்வோம். விலையேற்றம் இன்னும் ஏற்படாமல் அரசு கவனம் செலுத்த வேண்டுகிறேன்.

நம்முடைய தமிழ்நாட்டில் வறட்சி ஏற்பட்ட நேரத்தில் நிலைமை வறண்டுவிடாது துள்ளியெழுந்து மத்திய சர்க்காரை அணுகி நம்முடைய பிரதம அமைச்சரை அழைத்துவந்து தமிழ்நாட்டு வறட்சி நிலைமைகளை எடுத்துக்காட்டி ஏறக் குறைய பதினைந்து கோடி ரூபாய் வரையிலும் வாங்கியிருப்பது இதற்கு முன்னர் ஆட்சியிலிருந்தவர்களிடம் காணாத புதுமை. சிறிய உள்ளம் படைத்த பெரிய மனிதரெல்லாம், மத்திய அரசிடமிருந்து உதவித் தொகை கிடைக்கப்பெற்று இந்த ஆட்சிக்கு நல்ல பெயர் ஏற்பட்டுவிடுமே என்ற எண்ணத்தில், அது கிடைப்பதற்கு எதிரிடையாக முயற்சிகளில் ஈடுபட்டிருந்தாலும் அவர்களுடைய முயற்சிகளை எல்லாம் முறியடிக்கும் வகையில் நம்முடைய அரசு மத்திய அரசிடமிருந்து அதிகமாக நிதி பெற்றிருப்பது மனமாரப் பாராட்டத் தக்கதாகும்.

பெறப்பட்ட நிதி தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கு மத்தியில் ஒதுக்கப்பட்டிருந்தாலும், அப்படி ஒதுக்குவதில் ஏற்றத் தாழ்வு இருந்தாலும், திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் குறைந்த அளவு நிதிதான் கிடைத்திருக்கிறது என்பதை மிக வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்த வறட்சி நிதி பயன்படுத்தப்பட்ட நிலை ஊழல் நிறைந்தது என்று சிலர் கூறினார்கள் உண்மையிலேயே ஊழல் நிலை இல்லை. துயர் துடைப்புப் பணிகள் மிகச் சிறப்பாகச் செய்யப்பட்டு நல்ல முறையிலே பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





நம்முடைய நாடெங்கிலும் பரவலாக நல்ல மழை பெய்திருந்தாலும் எங்களது திருநெல்வேலி மாவட்டத்தில் சில பகுதிகளில் போதிய அளவு மழை பெய்யாத காரணத்தினால் மானுமாரிக் குளங்களில் தண்ணீர் நிறையவில்லை; அப்பகுதிகளில் துயர் துடைப்புப் பணி வேலைகளை மேலும் தொடர்ந்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1968-69-ஆம் ஆண்டுகளில் மட்டும் ஏழு முஸ்லீம் மாவட்ட நீதிபதிகள் ஓய்வு பெற்றுள்ளனர். இதனைக் கருத்தில் கொண்டு புதிய மாவட்ட நீதிபதிகள் நியமனத்தில் முஸ்லீம்களுக்குப் போதிய அளவு தரவேண்டுமென்று நினைவுபடுத்துகிறேன்.

தமிழ்நாடு அரசு அலுவலர் தேர்வுக் குழுவில்—பேரறிஞர் அண்ணா அவர்களது ஆட்சிக்கு முன்னவரும்—அவர்கள்தம் பொற்கால ஆட்சியிலும் முஸ்லீம்கள் பிரதிநிதிகள் இடம் பெற்றிருந்ததை நினைவுபடுத்திக்கொண்டு அந்த நிலைமை இப்பொழுது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த நல் மரபைக் காக்கும் வகையில் சர்வீஸ் கமிஷன் தேர்வுக் குழுவில் முஸ்லீம்களுக்கு பிரதிநிதித்துவம் கிடைப்பதற்கு நமது முதல்வர் அவர்கள் ஆவன செய்யவேண்டுகிறேன்.

நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 12,500 விசைத் தறிகளை நம்முடைய அரசு கொண்டுவர முயற்சிக்கிறது. இதை நான் மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன் அப்படிப் பாராட்டுகின்ற நேரத்திலே, விசைத்தறிகளைக் கொண்டுவருவதன் மூலம் பஞ்சு ஆலை தொழிலில் ஈடுபட்டிருக்கின்றவர்களுக்கு வேலை வாய்ப்பு அதிகரிக்கும் என்றாலும், வெளி மாநிலங்களில் விசைத்தறியில் உற்பத்தியாகும் துணிகளுக்கு நம்முடைய தமிழகம் சந்தையாக மாறுகின்ற நிலைமை மாறும் என்பதை ஏற்றுக்கொண்டாலும் விசைத்தறிகள் வருவதன்மூலம் கைத்தறித் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்றவர்களின் நெருக்கடி நிலைமையைப் பார்த்து அவர்களைக் காப்பாற்றுவதற்காக அரசு சில திட்டங்களைத் தீட்டியிருக்கிறது. தரிசு நிலங்களை ஒப்படைப்பதில் நெசவாளர்களுக்கு முதலிடம் கொடுப்பது மறுபயிற்சி அளிப்பதற்குச் சிறப்புத் திட்டங்களை வகுப்பது போன்ற திட்டங்களை அரசு விரைவிலே செயல்படுத்த முயற்சித்தாலும் விசைத்தறிகளின் வருகையால் பாதிக்கப்படுகின்ற கைத்தறியாளர்களுக்கு இந்த நிலைமை பரிபூரண நிவாரணத்திற்குரியதாக ஆகிவிடாது. எனவே கைத்தறி நெசவாளர்கள் நிறைந்திருக்கின்ற இடங்களில் அரசு ஆரம்பிக்கும் தொழில் திட்டங்களை ஆரம்பிக்கும்பொழுது கைத்தறி நெசவாளர்களின் பிள்ளைகளுக்கும் அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்றவர்களுக்கும் அரசு முதலிடம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து முஸ்லீம்களையும் பிற்பட்டவர்களாகப் பிரகடனப்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மிகக் குறைந்த சதவிகிதமே உள்ள உருது மொழிபேசும் முஸ்லீம்கள், உருது மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்

கள் அவர்களையும் பிற்பட்டவர்களாக இப்பொழுது இருக்கிற சட்டம் ஏற்றுக்கொள்வதில்லை. அவர்கள் பொருளாதாரத் துறையில் மிகவும் பிற்பட்டவர்களாக இருக்கிறார்கள். எனவே; அவர்களுக்கும் அந்தச் சலுகைகளை கொடுக்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

அரிசன மக்கள் கிருத்தவ சமயத்திற்கும், பிற சமயங்களுக்கும் மாறி . இருப்பதன் காரணமாக அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய சலுகைகள் கிடைப்பதில்லை. அவர்கள் மதம் மாறியிருந்தாலும் பொருளாதார நிலையைப் பொருத்தவரையிலும் அவர்கள் பழைய அரிசன நிலையிலேயேதான் இருக்கிறார்கள். அந்த நிலையை உத்தேசித்து மதம் மாறிய கிருத்தவ அரிசனப் பெருமக்களுக்கு அரிசனங்களுக்குக் கொடுக்கின்ற சலுகையைக் கொடுப்பதற்கு இந்த அரசு ஆவன செய்யக் கோருகிறேன்.

பர்மாவில் இருந்தும் இலங்கையில் · இருந்தும் வந்திருக்கின்ற அகதிகள் வியாபாரம் செய்வதற்காக கடன் கொடுக்கின்ற கடன் உதவியை காலதாமதமின்றி செய்யப்படுமானால் அகதிகளாக தொல்லைக்கு ஆளாகி வந்த அவர்களுக்கு உறுதுணையாக இருக்கும். அதோடு மாத்திரமன்று. தற்போது 3,000 ரூபாய்தான் கொடுக்கிறார்கள். குறைந்தபட்சம் 5,000 ரூபாய் இரண்டு தவணைகளில் விரைவாக கிடைக்கக் கூடிய அளவுக்கு நம்முடைய அரசு செயல்பட வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்நிய ஏகாதிபத்திய ஆட்சிக் காலத்திலும், காங்கிரஸ் ஏகாதிபத்திய ஆட்சிக் காலத்திலும் பாண்டிய நாட்டில் உள்ள மறவர் குல மக்கள் அடக்கி ஒடுக்கப்பட்டார்கள். அவர்கள்
ப. வாழும் பகுதிகள் எல்லாம் வளத்திற்கும், நலத்திற்கும் உரிய பகுதிகளாக இல்லாமல் இருக்கிறது. அவர்கள் பழி வாங்கப் பட்டிருக்கிறார்கள். பாண்டிய மண்டலத்திலுள்ள திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் பரவலாக உள்ள அவர்கள் காங்கிரஸ் ஏகாதிபத்திய ஆட்சிக் காலத்தில் அடக்கி ஒடுக்கப்பட்டு பிற்படுத்தப்பட்ட நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த மறவர்குல மக்கள் நிறைந்து வாழ்கின்ற அந்தப் பகுதிகளுக்கெல்லாம் சிறப்புப் பணியாகத் திட்டம் தீட்டி பிற வகுப்பினரைப் போன்று அவர்களும் முன்னேறுவதற்கான முறையிலே இந்த அரசு செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மைனாரிட்டி மக்களை மதிக்கின்ற வகையில் திரு. ராயப்பா அவர்களை தலைமைச் செயலாளராகவும், பிற்பட்டோர் நலக் குழுவில் கிருத்துவ சமயத்தில் பிரதிநிதியையும், இஸ்லாமிய சமயப் பிரதிநிதியையும் இடம் பெறச் செய்திருப்பதை நன்றியுடன் பாராட்டுகிறேன். இந்த நாட்டைப் பொருத்தவரையில் கடந்த 22 ஆண்டு காலமாக ஆட்சி புரிந்தவர்கள் கிருத்துவ, முஸ்லிம் மைனாரிட்டி எந்த வகையில் எல்லாம் பிற்பட்டவர்களாக ஆக்க வேண்டுமோ எந்த வகையில் எல்லாம் ஆக்கியிருக்கிறார்கள். அவர்களுக்குத்





தனிச் சலுகை செய்வதன் மூலம் முற்பட்ட இன மக்களோடு முன்னேறும் வாய்ப்பை தனி அக்கறையோடு இந்த அரசு எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அண்ணாவின் ஆட்சி ஏற்பட்ட காலத்தில் முஸ்லீம் வக்ஃப் போர்டு கலைக்கப்பட்டு இரண்டு ஆண்டு கழிந்தும்கூட மீண்டும் முஸ்லிம் வக்ஃப் போர்டு அமைக்கப்படவில்லை. இது முஸ்லீம் சமூக மக்கள் மத்தியில் வேதனையான சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறது. முஸ்லீம் சமூகத்தின் உண்மையான பிரதிநிதிகளைக் கொண்டு வக்ஃப் போர்டை அமைப்பதற்கு நம்முடைய அரசு விரைவில் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தவறான நினைவு காரணமாக காவல் துறையில் முஸ்லீம் மைனாரிட்டிகள் இடம் பெற இயலாத நிலை தொடர்ந்து இருந்து வந்திருக்கிறது. சப்-இன்ஸ்பெக்டர்களாகவும், சர்க்கிள் இன்ஸ்பெக்டர்களாகவும், டி.எஸ்.பி-க்களாகவும் நியமிக்கப்படாத நிலை தொடர்ந்து இந்த நாட்டில் இருந்து வந்திருக்கிறது. அந்த நிலையில் இருந்து மாறுதல் செய்கிற முறையில் புதிதாக காவல்துறை அதிகாரிகளாக நேரடி நியமனம் செய்கின்ற நேரத்தில் முஸ்லிம்களுக்குத் தனிச் சலுகை தரவேண்டுமென்று இந்த அரசை கேட்டுக் கொள்கிறேன்.

அண்ணாவுக்குப் பின் தமிழ்நாட்டில் என்ன என்று அறிஞர்கள் கேட்டார்கள்; அரசியல் தெரிந்தவர்கள் கேட்டார்கள்; உள்நாட்டில் கேட்டார்கள், வெளி நாட்டில் கேட்டார்கள், என்ன, என்ன என்று கேட்டார்கள்.

பொன்னார் தமிழகமே! புகழிருந்த பேட்டகமே
உன்னைச் சிறப்பாக்கி ஊருலகம் மதிக்க வைத்த
அண்ணாவை இழந்து விட்டாய்; அடுத்துநீ வாழ்வாயோ
என்னாவாய்? என்னாவாய்? ஏது செய்வாய்- என்றார்கள்;
பொன்னிருந்த இடத்தினிலே பூவிருக்கும் காட்சியதாய்
கண்ணிழந்த காலத்தில் கையூன்று கோலதுவாய்:
அண்ணனில்லை நானுண்டு அவ்விதயம் எனக்குண்டு
பொன்னாட்டை ஆளுதற்கும் போதித்த வழி நின்று
ஆளுகின்ற கலைஞரே! அருமைமிகு முதலமைச்சே
நாளுமுங்கள் பணிகண்டே நாட்டவர்கள் போற்றுகின்றார்
மேலுமுங்கள் பணிசிறக்க மேன்மக்கள் வாழ்த்துகின்றார்
வறட்சிமிக வந்ததுண்டு; வடக்கிருக்கும் பேரரசை
சுரக்கச் செய்ததல்லாம் சுட்டதில்லை தமிழகத்தை;
புரட்சிப் பசுமையிலே பூமகள் செழித்திருக்க
உருவான வங்கிகளே உழவர்க்குத் தங்கக் களம்;
சிறுபான்மை முஸ்லீம்களைத் தீர்த்துக் கட்டத் திட்டமிடும்
அறவற்ற பிற்போக்கை அடக்கி ஒடுக்குவதில்
ஜனசங்கப் பிற்போக்கை, சிண்டிகேட் பிற்போக்கை . . .

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். இந்த மாதிரி சபையிலே படிப்பதே நியாயம் இல்லை. அதிலும் சிண்டிகேட் பிற்போக்கு என்றெல்லாம் படிப்பது விரும்பத்தக்கதன்று. அவர் என்ன முற்போக்கா? இந்திய முஸ்லீம் லீக் கட்சி முற்போக்குக் கட்சியா? அவர் கூறியதை எக்ஸ்பஞ்ச் பண்ணவேண்டும்.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** முஸ்லீக் லீக் முற்போக்குக் கட்சியா அல்லது சிண்டிகேட் முற்போக்குக் கட்சியா என்பதை இந்த நாடு அறியும். இந்த நாட்டில் வாழ்கிற நல்லவர்கள் அறிவார்கள். நாலாயிரம் கோடி ரூபாய் மூலதனமாகக் கொண்ட வங்கிகளை தேசிய மயமாக்கியதன் மூலம் ஏழை எளியவர்கள் சீரிய ஏற்றம் பெறுகின்ற காரியத்திற்குத் துணை நிற்காத சிண்டிகேட் கட்சி இந்த நாட்டினுடைய முற்போக்குக் கட்சியா?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சிண்டிகேட் பற்றி இவருக்கு என்ன தெரியும். இவர் பாகிஸ்தான் கட்சி.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** பேரவைத் தலைவர் அவர்களே, முற்போக்கு எது, பிற்போக்கு எது என்பதைப் பற்றி நம்முடைய பிரதான எதிர்க்கட்சியின் தலைவர் கருத்திருமன் அவர்கள் சட்ட மன்றத்தில் விவாதிப்பதாக இருந்தால் அதை நான் மிக மகிழ்வோடு ஏற்றுக் கொள்ளுகிறேன். சட்டமன்றம் அதற்கு உரித்தான இடம் அல்ல என்று கருதினால் யாரிடத்தில் முற்போக்கு இருக்கிறது. யாரிடத்தில் பிற்போக்கு இருக்கிறது என்ற ஒன்றை மக்கள் மன்றத்தில் விவாதிப்பதற்கும் நான் ஒப்புக் கொள்ளுகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** எதற்கும் தயாராக இருக்கிறேன்.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** அதற்கு அவர்களே ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

சிறுபான்மை முஸ்லீம்களைத் தீர்த்துக் கட்டத் திட்டமிடும்
அறவற்ற பிற்போக்கை அடக்கி ஒடுக்குவதில்
திறன்காட்டி இவ்வரசு செழித்திருக்க வேண்டுமென்றே
இதயத்தால் வேண்டுகின்றேன் என் நன்றி கூறுகின்றேன்.

* **திரு. பு. செ. முத்துச்செல்வன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தையொட்டி எனது கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பளித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆளுநர் அவர்களுடைய உரையின் ஆரம்பக் கட்டத்திலே அவர்களுக்கு உரிய பெருந்தன்மையோடு இந்த நாட்டினுடைய ஏழை எளியவர்களுடைய இதயங்களில் எல்லாம் குடிகொண்டிருக்கிற பேரறிஞர் அண்ணா அவர்களின் மறைவு குறித்தும், அந்த மறைவால் தமிழகம் பட்ட பாட்டையும் கூறினார்கள். அதைத் தொடர்ந்து நம்முடைய





மதிப்பிற்குரிய குடியரசுத் தலைவர் ஜாகிர் ஹூசேன் அவர்களுடைய மறைவு குறித்தும் கூறியிருக்கின்றார்கள். அதைத் தொடர்ந்து திறமைமிக்க அமைச்சர் கோவிந்தசாமி அவர்கள் மறைவு குறித்தும் குறிப்பிட்டிருக்கிறார்கள். சென்ற ஆண்டில் நிகழ்ந்த இழப்புகளுக்கெல்லாம் கவர்னர் பெருமான் அவர்கள் அனுதாபம் தெரிவித்திருப்பதோடு நானும் இணைந்து என்னுடைய அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மேலும், நம்முடைய நாட்டில் ஏற்பட்ட கடுமையான வறட்சி நிலைமையை எப்படிச் சமாளித்தோம் என்பதை பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். வறட்சி என்பது பஞ்சம் ஏற்படுவதற்கு முன்பு வரக்கூடிய ஒன்று. வறட்சி ஏற்பட்டவுடனேயே தக்க நேரத்தில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மிகவும் திறமையோடு சமாளிக்கும் வகையில் டெல்லியில் இருந்து ஏறத்தாழ 15 கோடி 50 லட்சம் ரூபாய் அளவுக்குப் பெற்று அந்த நிலையைப் போக்கினார்கள். இதற்கு முன்பு இருந்த அரசாங்கமானால் பஞ்சம் ஏற்பட்ட பிறகுதான் பஞ்ச நிவாரணத்திற்கு வேண்டிய வேலைகளைச் செய்திருப்பார்கள். ஆனால் நம் கழகம் அரசு ஏழை எளியவர்களிடம் அன்றாடம் பழகிக் கொண்டு இருப்பதன் காரணத்தினால், நாட்டுப்புற மக்களின் நிலைமையை கழக அரசு நன்கு உணர்ந்திருப்பதால், பொது மக்களையே நாம் அடிக்கடி சுற்றிச் சுற்றி வருவதால் நம் அமைச்சரவை, குறிப்பாக நம் முதல் அமைச்சர் அவர்கள் மிகத் திறமையோடு மத்திய அரசிடமிருந்து பெற வேண்டிய தொகையை பெறவேண்டிய நேரத்தில் முறையோடு பெற்று நல்ல காரியங்கள் பல செய்து அவற்றில் வெற்றி கண்டிருக்கிறார்கள். அந்த வகையில் அரசோடு ஒத்துழைத்த மாவட்ட ஆட்சியாளர்களுக்கும், அதையொட்டி கோட்டாட்சியாளர்களுக்கும், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் அரசோடு நல்லமுறையில் ஒத்துழைத்து திட்டங்கள் நல்லமுறையில் வெற்றியடைய உதவியிருக்கிறார்கள், அவர்களுக்கு நம் நன்றி.

அடுத்து, இந்த உணவுக் கட்டுப்பாடு நீக்கம்பற்றி எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் விமர்சித்தார்கள். அதனால் எப்படி 3 படி அரிசி போடுவீர்கள் என்று காங்கிரஸ் தரப்பிலிருந்து பேசப்பட்டது. மூன்று படி அரிசி என்பது தேர்தல் அறிக்கையில் வைக்காத ஒன்று, மூன்று படி அரிசி என்று சொல்லும்போது அப்போது இருந்த பொருளாதார நிலையையும், அதற்குப் பின் ஏற்பட்டுள்ள பொருளாதார நிலைமையும் எண்ணிப் பார்க்காமல் 3 படி அரிசி, 3 படி அரிசி என்று கூப்பாடு போடுகிறார்களே தவிர அதற்குரிய அரிய யோசனைகளைச் சொல்ல முடியவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கூப்பாடு போடுகிறார்கள், கூப்பாடு போடுகிறார்கள் என்று சொல்கிறார்கள். மூன்று படி அரிசி என்று கூப்பாடு போட்டவர்கள் அவர்கள்தான். நீங்கள் பெற்ற குழந்தை [illegible]

[திரு. பு. செ. முத்துச்செல்வன்] [1970 ஜனவரி 24

**திரு. பு. செ. முத்துச் செல்வன் :** எல்லோருக்கும் சமமான முறையில் அரிசி கிடைக்க வாய்ப்பளிக்கவேண்டும் என்பதற்காக இந்தக் கட்டுப்பாடு நீக்கம் செய்யப்பட்டிருக்கிறது. உணவு உற்பத்தி செய்கிற விவசாயிகள், வாங்கி உண்ணுகிற ஏழை எளிய வர்கள் இவர்கள் பயன் பெறவும், அரசாங்கத்தின் செலவை மீதப் படுத்தவேண்டும் என்பதினாலும் நம் உணவு அமைச்சர் அவர்கள் துணிச்சலோடு இந்த உணவுக் கட்டுப்பாடு நீக்கத்தைக் கொண்டு வந்துள்ளார்கள். அப்படி உணவுக் கட்டுப்பாட்டை நீக்கியதற்காக பாராட்டு தெரிவிக்காவிட்டாலும் கூட அதைக் குறைத்து மதிப்பிட வேண்டிய அவசியமில்லை.

அடுத்து, சீரணிபற்றி கவர்னர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். சீரணியை தமிழகத்திற்குத் தந்தது பேரறிஞர் அண்ணா அவர்களா வார்கள். அதற்கு முன்பெல்லாம் கிராமப் படை என்ற பெயரில் கிராமங்களில் இருந்ததுண்டு. அந்தக் கிராமப் படைகள் எல்லாம் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் எப்படி இயங்கின, எப்படி அவை பொது மக்களிடம் சென்று பணியாற்றின என்பதை அனைவரும் உணர்வர். அவை பெயருக்குத்தான் இருந்தன. அவை சீரணி செய்து வருவதைப் போன்று எந்த ஒரு காரியத்தையும் விரை வாகச் செய்தது கிடையாது. சீரணி வாயிலாக, அண்ணா அவர் களின் நினைவாக 374 ஊராட்சி ஒன்றியங்களில் 374 ஒன்றியப் பள்ளிகள் நிறுவ ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்காக சீரணிப் படைக்கு செலவு செய்யப்படுகிற தொகை மூன்றில் ஒரு பங்குதான், ஒவ்வொரு பள்ளிக்கும் ரூ. 5,000 வரையில்தான் செல வாகிறது. மூன்றில் இரண்டு பங்கை பொது மக்கள் உழைப்பின் வாயிலாகவும், நன்கொடை வாயிலாகவும் கொடுக்கிறார்கள். கபார் கான் அவர்கள் இங்கு வந்திருந்தபோது சீரணிபுரம் என்ற ஒரு ஊரே உருவாகியது. அதைப் பற்றி எதிர்த்தரப்பிலுள்ள காங்கிரஸ் காரர்கள் ஒரு வார்த்தை கூட பாராட்டவில்லை. ஏனோ அவர்களுக்கு அப்படிப் பாராட்ட மனம் வரவில்லை. நாம் கல்வித் துறையில், தொழில் துறையில், விவசாயத் துறையில், கடன் வழங்கும் துறை யில் இப்படி பல துறைகளில் முன்னேற்றம் கண்டிருக்கிறோம். அப்படியிருந்தும் அவற்றைப் பாராட்ட அவர்களுக்கு ஏனோ மனம் வரவில்லை.

அடுத்தபடியாக, ஆளுநர் அவர்கள் தமது உரையில் மத்திய மாநில உறவு பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒரு கவர்னர் மத்திய மாநில உறவு பற்றிக் குறிப்பிடுகிற அளவிற்கு ஒரு அரசை உருவாக்கிய பெருமை அண்ணா அவர்களையும், தற்சமயம் முதல் அமைச்சராக இருக்கிற மாண்புமிகு கலைஞர் அவர்களையும் அவரது அமைச்சரவையும் சாரும். மத்திய மாநில அரசுகளின் உறவு முறை சுமுகமாக அமையவேண்டும் என்பதாலும், மாநிலங்களுக்கு பரவலான முறையில் அதிகப்படியான அதிகாரங்கள் அளிக்கப்பட வேண்டும், மாநிலங்களுக்கு அதிகப்படியான வருவாய் கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் அந்தக் குழு அமைக்கப்பட்டிருக் கிறது. இப்போதுள்ள நோக்கைப் பயன்படுத்திக்கொண்டு



1970 ஜனவரி 24] [திரு. பு. செ. முத்துச்செல்வன்]

அதிகப்படியான அதிகாரங்களை மாநில அரசு மத்திய அரசிட மிருந்து பெறவேண்டும். அப்படி மாநில சுயாட்சி பெறவேண்டிய ஒரு சூழ்நிலையை உருவாக்கத்தான் அக்குழு அமைக்கப்பட்டிருக் கிறது. அக்குழுவிற்கு முன்னாள் தலைமை நீதிபதி திரு. ராஜ மன்னார் அவர்களையும், திரு. லட்சமணசுவாமி முதலியார் அவர் களையும், திரு. சந்திரா ரெட்டி அவர்களையும் நியமித்திருக்கிறோம். அவர்கள் அறிக்கையை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக் கிறோம் என்றெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தளவிற்கு மாநில சுயாட்சி பற்றி வலியுறுத்திக் கூறியிருப்பதற்காக என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இந்த அளவோடு நிறுத்திக் கொள்கிறேன். வணக்கம்.

*** திரு. வை. சுவாமிநாதன் :** துணைத் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் உரைமீது உரையாற்ற எனக்கு வாய்ப்பளித் தமைக்கு நான் மகிழ்ச்சி அடைகிறேன். சென்ற ஆண்டு உரை நிகழ்த்தியதற்குப் பின்னால் இந்த ஒரு வருடத்தில் தமிழ்நாட்டில் விலைவாசிகள் எல்லாம் ஏறியிருக்கின்றன. எங்கு பார்த்தாலும் இரவு விடுதிகள் அதிகரித்திருக்கின்றன. குறிப்பாக, கிராமப்புறங் களில் பரிசுச் சீட்டு விற்பது அதிகரித்திருக்கிறது. கிட் பண்ட்கள் அதிகரித்திருக்கின்றன. குதிரை ரேசைக் கூட எடுக்கப்போ வதில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருப்பதால் ஜாக் பாட் போய் சில்வர் பாட் ஏற்படும் வாய்ப்பு இருக்கிறது. ரெயில் கொள்ளை, கார்களை மறித்து கொள்ளையடிப்பது போன்ற நிகழ்ச்சி கள் அதிகரித்து வருவதைப் பார்க்கிறோம். வள்ளுவரின் இரண் டாயிரம் ஆண்டு விழா கொண்டாடுகிறோம், காந்திஜியின் நூற்றாண்டு விழா கொண்டாடுகிறோம்.

> "சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
> உழந்தும் உழவே தலை."

என்று வள்ளுவர் பெருமான் கூறியிருக்கிறார்கள். கிராம சுயாட்சி ஏற்பட வேண்டுமென்று அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள். நாட்டின் உயிர்நாடி, நாட்டின் முதுகெலும்பு என்று கிராமங்களை அவர்கள் வர்ணித்திருக்கிறார்கள். கிராமங்களில் படிக்க நல்ல தொரு பள்ளி, நடக்க நல்லதொரு பாதை வேண்டும் என்றெல்லாம் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் கவர்னர் அவர்களது உரையில் கிராமங்கள் சுயாட்சி பெறுவது குறித்து ஏதாவது சொல்லியிருக்கிறார்களா என்றால் இல்லை. கிராமங்களுக்கு அதிகப் படியான அதிகாரங்கள் கிடைக்க வாய்ப்பிருக்கிறதா என்றால் இல்லை. கிராமங்களின் பொருளாதார நிலை பின்னோக்கித்தான் சென்று கொண்டிருக்கிறது. கிராமங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி குறைவாக இருக்கிறது என்பதைக் காண்கிறோம். அடுத்த படியாக, பஞ்சாயத்து யூனியன்களில் பல டிஸ்பென்சரிகள் இருக் கின்றன. ஆனால் ஆஸ்பத்திரிகள் இருந்தால் டாக்டர் கிடையாது. டாக்டர் இருந்தால் மருந்து இல்லை என்ற நிலைதான் இருக்கிறது. நூறு ரூபாய் சம்பளம் கொடுத்து ஒரு டாக்டரைப் போட்டு

நடத்துவதால் அங்கு வைத்திய வசதி போதுமான அளவிற்கு இல்லை. ஆகவே பஞ்சாயத்து யூனியன் டிஸ்பென்ஸரிகளை எல்லாம் சர்க்காரே எடுத்து நடத்தவேண்டும்.

அடுத்தபடியாக, எங்கள் பகுதியில் உய்யகொண்டான் கால்வாய் கழிவு நீர் விடுவதுபற்றி சட்டமன்றத்தில் கூறியிருக்கிறோம். முதல் அமைச்சர் அவர்களைச் சந்தித்துக் கூறியிருக்கிறோம். திருச்சி வட்டார வளர்ச்சிக் கூட்டத்திலும், பஞ்சாயத்துக்களிலும் கூறியிருக்கிறோம். ஏன், திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்களில் கூட அங்குள்ள மாவட்ட செயலாளர் போன்றவர்கள் கூறியிருக்கிறார்கள். எவ்வளவு கூறியும் அந்தக் கழிவு நீர்ப் பிரச்னை தீர்ந்தபாடில்லை. அதனால் அங்குள்ள மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். பசுமைப் புரட்சி, பசுமைப் புரட்சி என்றெல்லாம் பேசுகிறோம். 30,000 ஏக்கராக்கள் பாழாகிக் கிடக்கின்றன. அதனால் பூச்சித் தொல்லை ஏற்படுகிறது. சமீபத்தில் பத்திரிகைகளில் படித்தோம் விமானம் மூலம் மருந்து அடித்தும் அவை சாகுபடிக்கு லாயக்கற்றவையாக இருக்கின்றனவென்று. இதை அரசாங்கம் இனியும் தடுக்காவிட்டால் சட்டமன்றத்தின் முன்னால் உண்ணாவிரதம் இருப்பதைத் தவிர வேறு வழி இல்லை என்பதை இந்தத் தருணத்தில் கூறிக் கொள்ளுகின்றேன். எனவே, இதற்குக் கூடிய விரைவில் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, எங்கள் பகுதியில் பாய்லர் தொழிற்சாலை இருக்கிறது. இதற்கு வரி போட வேண்டுமென்று பலமுறை எடுத்துச் சொன்னோம். ஆனால் அரசாங்கம் அதற்கு ஸ்டே வாங்கியிருக்கிறது. பஞ்சாயத்து யூனியனுக்கு நிதி கொடுக்காவிட்டாலும், நாங்கள் வரி போடக்கூடியதற்கும் ஸ்டே கொடுத்திருக்கிறது. இதைப் பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அதேபோல் பொன்மலை நகரத்தில் உள்ள சினிமாக்கொட்டகைக்கு என்டர்டெயின்மெண்ட் டாக்ஸ் போட வேண்டுமென்று நிதியமைச்சரவர்களிடத்திலே சொன்னேன். அவர்களும் உடனடியாக நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார்கள். ஆனால் இன்னும் அந்த சினிமாக் கொட்டகைக்கு வரி போடவில்லை. இம்மாதிரியாக பஞ்சாயத்து யூனியனுக்கு வரக்கூடிய வரிப்பணம் வராததால் நிதி பற்றாக் குறையாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

தண்ணீர்ப் பிரச்னையை எடுத்துக் கொண்டால், தஞ்சாவூரிலே வெள்ளம் வருகிறது என்று சொன்னால் அதைத் தடுக்க வேண்டியது அவசியம்தான். ஆனால் அதற்காக, தஞ்சாவூரிலே வெள்ளம் வருகிறது என்பதற்காகத் திருச்சியிலே இருக்கும் நிலங்கள் பாதிக்கப்பட வேண்டுமா? காவிரியாற்று நீர் வராததால் இன்று லால்குடி, புள்ளம்பாடி, திருவெறும்பூர் போன்ற இடங்களில் விளைச்சல் பாதிக்கப்பட்டிருக்கிறது. இதேபோல் கீழத் தஞ்சையில் மழை பெய்கிறது என்றால், மேற்குத் தஞ்சை பாதிக்கப்படு



கிறது. எனவே, இது சம்பந்தமாக அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். தஞ்சாவூரில் மழை பெய்தால் திருச்சியில் பெய்யாது, இதேபோல் திருச்சியில் மழை பெய்தால் தஞ்சாவூரில் மழை பெய்யாது. எனவே, அரசாங்கம் இதுபற்றி திட்டவட்டமாக நடவடிக்கை எடுத்து, திருச்சி ஜில்லாவிலே அணை கட்ட முடியுமா என்பதைப் பார்த்து, தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

எங்கள் பகுதியிலே எப்பொழுதுமே கோடைக் குறுவை சாகுபடி செய்வதற்குத் தண்ணீர் விடுவது 20 வருஷ காலமாக நடந்து கொண்டிருக்கிறது. சென்ற ஆண்டு மழை இல்லாத காரணமாகத் தண்ணீர் விடவில்லை. இந்த ஆண்டு போதிய தண்ணீர் மேட்டூரில் இருக்கிறது. அதிலும் ஐ. ஆர். 8 சாகுபடி செய்யவேண்டும். எனவே, கோடை குறுவைக்காக உய்யக்கொண்டான் ஆற்றிலே தண்ணீர் விட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அடுத்து காவிரி ஆற்றில் தண்ணீர் இல்லாமல் போவதற்குக் காரணம், மணல் மேடிட்டுக் கொண்டிருப்பதால் தண்ணீர் சரியாக ஓடவில்லை. எனவே, காவிரியாற்றில் இருக்கும் மணலை தூர் எடுத்து ஆற்றை ஆழப் படுத்த வேண்டும். அப்பொழுது அங்கே தண்ணீர் தேங்கி நிற்பதற்கு வாய்ப்பாக இருக்கும்.

ஏழைகள், பஞ்சாயத்து யூனியன்கள் பற்றி கவர்னர் உரையில் இல்லை. நிலமில்லாத ஏழைகளுக்கு நிலம் கொடுப்பதைப் பற்றி கவர்னர் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. அது வரவேற்கத் தக்கது தான். ஆனால் நடப்பது என்ன? எந்த ஊரிலே நிலமிருக்கிறதோ அந்த ஊரிலேயுள்ள மக்களுக்கு நிலத்தைக் கொடுப்பதில்லை. ஏதோ நகரத்திலுள்ளவர்கள், வசதியுள்ளவர்களுக்கு அந்த நிலம் கிடைக்கிறதே தவிர எந்த ஊரிலே புறம்போக்கு நிலம் இருக்கிறதோ அந்த கிராம மக்களுக்கு கிடைப்பதற்கு வாய்ப்பில்லாமல் இருக்கிறது. எனவே, அம்மாதிரி பட்டாக்கள் கொடுக்கும்பொழுது நிலமில்லாமல் அந்தக் கிராமத்திலேயே இருப்பவர்களுக்குக் கொடுப்பதற்கான வழிவகைகளை செய்ய வேண்டும்.

அடுத்து, திருச்சியைப் பொறுத்தவரையில் அங்கு பல கல்லூரிகள் இருக்கின்றன. இந்த ஆண்டு இன்னும் 3 கல்லூரிகள் ஏற்பட இருக்கிறது. எனவே, திருச்சியில் பல்கலைக் கழகம் ஒன்று அமைப்பது சிறந்ததாக இருக்கும். அதற்குரிய ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நிதியமைச்சரவர்கள் கேள்வி நேரத்தின்போது சொன்னார்கள். கிராம முன்சீப்புகளைக் கௌரவம் உடையவர்களாகச் சொல்லியிருக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் நான் பார்க்கிறேன். அவர்கள், கலெக்டருக்குப் பிடிக்கவில்லை என்றால் சஸ்பெண்ட் செய்யப்படுகிறார்கள். ஆர். டி. ஓ. வுக்குப் பிடிக்கவில்லை என்றால் சஸ்பெண்ட் செய்யப்படுகிறார்கள், தாசில்தாருக்குப் பிடிக்கவில்லையென்றால்

சஸ்பெண்ட் செய்யப்படுகிறார்கள். தற்காலிகமாகத் தொங்கலில் வைக்கப்படுகிறீர்கள் என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறார்கள். கௌரவ உத்தியோகஸ்தர்கள் என்று சொல்லும் கிராம உத்தியோகஸ்தர்களுக்கு அது எவ்வளவு கௌரவக் குறைச்சலாக இருக்கும் என்பதைப் பார்க்க வேண்டும். திருச்சி மாநாட்டில் சொன்னார்கள், சஸ்பெண்ட் செய்வது நடக்காது என்று. ஆனால் நடப்பது என்ன? ஏராளமான பேர்கள் சஸ்பெண்ட் செய்யப்படும் காட்சியைத்தான் பார்க்கிறோம்.

கொள்முதலை எடுத்தாகிவிட்டது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். பதுக்கல் செய்பவர்களைத் தண்டிக்கப் போகிறோம் என்று சொன்னார்கள். ஆனால் பதுக்கல் செய்கிறவர்கள் என்றால் யார் என்பதை விளக்க வேண்டும். ஏனென்றால் இதனால் அதிகாரிகள், ஏழை விவசாயிகளைத் துன்புறுத்த வாய்ப்பிருக்கிறது. பத்து மூட்டை, 20 மூட்டை வைத்திருப்பவர்களிடம் போய் மிரட்டுகிறார்கள் அதிகாரிகள். அம்மாதிரி இருக்கக்கூடாது. ஏனென்றால், அந்த ஏழை விவசாயி பத்து மூட்டை நெல் வைத்திருந்தால் பின்னால் நல்லது. இப்பொழுது அந்த நெல்லைப் போட்டுவிட்டால் கையிலிருக்கும் பணத்தைச் செலவழித்து விடுவான். நடவு சமயத்தில் பணம் இருக்காது. நெல்லாக இருந்தாலும் அந்தச் சமயத்தில் போட்டு வாங்கிக்கொள்ளலாம். எனவே, அதையும் எடுத்துக்கொண்டால் பிறகு அவன் கடன் வாங்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவிடும். ஆகவே, நீங்கள் விவசாயிகளை அம்மாதிரியாகத் துன்புறுத்த வேண்டாமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகின்றேன்.

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். தலைவரவர்களே, இந்த மன்றத்தின் விதியின்படி, ஒரு அங்கத்தினர் பேசிக்கொண்டிருக்கும்பொழுது இன்னொரு அங்கத்தினர், சபாநாயகர் குறுக்கிடுகிற அளவுக்குப் போகக் கூடாது என்று இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. மார்டின் அவர்கள் அங்கத்தினர் பேசிக்கொண்டிருக்கும்பொழுது சர்வ சாதாரணமாகப் போய்கொண்டிருந்தார்கள். இது முறையா என்று கேட்க விரும்புகிறேன்.

* THIRU B. VENKATASWAMY : Sir, I am reading my prepared speech in English to-day instead of Telugu because I want to make this House understand my speech on some important matters. I request you to permit me to do this.

I thank you for giving me an opportunity to speak a few words, welcoming the address delivered by His Excellency the Governor of Tamil Nadu. It is the duty of every real politician to appreciate the good things done by this Government and I cannot keep quiet without appreciating this Government for the steps taken by them to give relief to the drought-stricken people of our State.

The bold step taken to electrify all the villages within 1971, decontrol of foodgrains, introduction of high yielding varieties of seeds like I.R. 8, the introduction of the 'Manunithi' scheme and





the appointment of the Pay Commission for the N.G.Os. are all things which have to be appreciated. At the same time I extremely regret to note that the police excesses in our state have not been mentioned in the Governor's Address. With regard to the statement made by the Hon. Chief Minister yesterday on my 'Call Attention Notice', I regret to say that incorrect information has been furnished to this House.

MR. DEPUTY SPEAKER : You have given your prepared statement in Telugu. Now you cannot read it in English.

THIRU B. VENKATASWAMY : Sir, with your permission only I am speaking in English. Otherwise, I can speak in Telugu.

MR. DEPUTY SPEAKER : The hon. Member can speak in English without reading his speech.

THIRU B. VENKATASWAMY : Sir, I would like to give an exact account of the unhappy situation which prevailed at Hosur from 9th December to 16th December 1969. The trouble began with the teasing of a Telugu girl by Tamil students and also due to the obscene slogans written on the walls against the Telugu language and Telugu Pandits. Being highly humiliated by this, the Telugu students of the High School came out and were approaching the Telugu Training School. Meanwhile the Headmaster of that School and the Headmaster of the High School met them and advised them to go back to their classes. Obeying their advice the boys were about to return but meanwhile the Reserve Police Constables rushed to the Training School premises. Without the permission or the knowledge of the Headmaster. They began to lathi-charge, kick and abuse the Telugu students very severely. About 25 students were injured and two constables were also hurt. The humiliated students marched together towards the Sub-Collector's Office to represent their grievances. Some anti-social elements had also joined them there and they might have disfigured the statue of our late revered Anna. In this connection, I wish to state that unnecessary rushing of the police to the Training School and lathi-charging of the boys was the sole reason for the further unhappy incident. This could have been averted if the local officers had acted wisely and cautiously. Then we, the M.L.As. and elders of Hosur deeply regretted for the incident and promised re-erection of the statue of Anna. Our people have got great respect for our late revered Anna.

But the Collector and Superintendent of Police on the spot took the law in their own hands and began to arrest Telugu teachers, Telugu and Kannada students, Muslims and innocent public who were moving in the streets who had no connection at all in this incident. In the Police custody they were beaten
severely and kicked with boot-leg without any mercy poured ice பி.ப. 1.30
water and latrine water on them. The Police were put to action to beat them batch after batch throughout in the Police custody. They were compelled to say "Telugu down", etc. The inhuman treatment and the foul language spoken by the Police was beyond expression to put them in black and white.

Under the name of Criminal Procedure Code 144 the Police began to beat women, children and innocent public who were moving singly for three days. I saw such incident with my own eyes.

THIRU T. MARTIN : On a point of Order, Sir. Under Rule 61 of our Rules, the business of the House shall be transacted in English or in Tamil provided. . . . . .

THE HON. THIRU K. A. MATHIALAGAN : I want to raise a point of Order. The hon. Member Thiru T. Martin has now risen. It is now 1.30 p.m. The House is scheduled to adjourn at 1-30 p.m. and it can sit beyond that time only with the permission of the House. . . . .

THIRU T. MARTIN : Let me complete my point of Order.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : I am only trying to point out that we cannot sit beyond 1-30 p.m. without the permission of the House.

THIRU T. MARTIN : I must be allowed to complete my point of Order. Rule 61 states thus :—

The business of the Assembly shall be transacted in English or in Tamil, provided that any member may address the Assembly in any recognised language of the State or in Hindi, and provided further that the speaker may permit any member who cannot adequately express himself in any of the aforesaid languages to address the Assembly in his mother-tongue.

*Explanation.*—For purposes of this rule, "recognised language" shall mean any one of the following languages, namely, Telugu, Malayalam, Kannada or Hindustani.

In this case, the hon. Member Thiru Venkatasamy's mother-tongue is Telugu. He made a request to address the House in Telugu. But unfortunately he was not given that permission to address in Telugu. That is wrong.

MR. DEPUTY SPEAKER : That is not correct. The hon. Member Thiru Venkataswamy did not request permission to speak in Telugu. He requested my permission to speak in English and to read his prepared English speech. Since he wanted to make some facts clear and authentic, he wanted permission to read his speech in English, which he has prepared. That permission was given. So I would request hon. Member Thiru T. Martin not to misrepresent what had happened.

Now I want to know from the hon. Member Thiru Venkataswamy how long he would take to finish reading his speech?

THIRU B. VENKATASWAMY : In two minutes. Innocent people had been beaten in Hosur. . . .





மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, மீண்டும் மீண்டும் ஒவ்வொரு உறுப்பினரும் எழுந்து ஹோசூர் பிரச்னையை கிளப்பிக் கொண்டு, பேசிக் கொண்டிருப்பது சரியல்ல. எத்தனை முறை சொன்னாலும் கலெக்டர் அவர்கள் சட்டத்தைக் கையில் எடுத்துக் கொண்டுவிட்டார். எஸ்.பி. எடுத்துக்கொண்டுவிட்டார்கள் என்று சொன்னாலும், கலெக்டரிடமும், எஸ்.பி.-யிடமும் தான் சட்டம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் கையில் எடுத்துக் கொண்டு அவர்கள் கைது செய்தார்கள் என்று சொன்னால், அவர்கள் தான் கைது செய்வார்கள், இவர்கள் போய் கைது செய்ய முடியாது. ஆகவே, அதையே மீண்டும் மீண்டும் திருப்பிச் சொல்லிக் கொண்டிருப்பதில் புண்ணியம் இல்லை. முழு விவரமும் கொடுத்தாகி விட்டது. தயவுசெய்து அந்தப் பிரச்னைக்கு மறுபடியும் போக வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

THIRU B. VENKATASWAMY : People who had been arrested had nothing to do with the incident. That is what I want to stress.

The law of jungle prevailed at Hosur for three days. The entire Hosur taluk was terrified by the Police action. I have represented the matter to the Superintendent of Police and the Collector in person as well as in writing but the same kind of treatment continued. It is a very sorry state of affairs that I feel in this democratic country.

Now we, being a linguistic minorities in this State especially at Hosur taluk, are in a state of insecurity and terror. Despite the express provisions in the Constitution of India for protection of minorities the recent incidents believe our hopes. The police action appeared inhuman and barbarous in the name of maintaining law and order. Number of teachers and innocent public were beaten. Hon'ble members like Dr. H. V. Hande and Sri. C. R. Narasimhan, ex-M.P. met some affected people and public of Hosur on 15th of this month. I hope the Hon. Chief Minister might have received the report from them.

Under the circumstances I request the Hon. Chief Minister to have an impartial enquiry in this matter to maintain peace and harmony among the people of Hosur taluk.

The Hon. Chief Minister is telling that we have become heroes after the cases were withdrawn. We have not become heroes but we humbly request this Government to understand things properly without any haste. This is all I want to impress on this Government for the peace and harmony amoung the Tamil, Telugu and Kannada speaking people.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் பி.ப. 1-37
இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவடைகின்றன. பேரவை மீண்டும் 27—1—1970 செவ்வாய்க் கிழமையன்று காலை 9 மணிக்குக் கூடும்.

(7) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

*A. Statutory Rules and Orders.*

'Nil'

*B. Reports, Notifications and other papers.*

@31. Demands for Grants for Further Expenditure and Detailed Supplementary Estimates thereof for the year 1969–70 (English and Tamil).

@32. Notice of Demands for Grants for Further Expenditure year 1969–70 (English and Tamil).

@33. Speech of Hon. Thiru K. A. Mathialagan, Minister for Finance, presenting the Second Supplementary Estimates for the year 1969–70 (English and Tamil).

* Placed on the Table of the House on 23rd January 1970.

## தமிழ் நாடு சட்டப் பேரவை

---

**செவ்வாய்க்கிழமை, 1970 ஜனவரி 27.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**1. வினாக்கள்-விடைகள்**

**வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்**

*Disbursement of salary to teachers*

* 79 Q.—THIRU N. KASIRAMAN: Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether the Managements of Schools in our State (both private, Local Body, etc.) are being insisted upon to pay the salaries of teachers and other staff on the 1st of every month; and

(*b*) whether the grants payable to the respective schools by the Government is being made available to them on or before the 1st of every month to disburse the salaries of teachers as well as other staff?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ) & (இ) ஒரு விவர அறிக்கை* சட்டப் பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவர் அவர்களே, பஞ்சாயத்து யூனியன்களிலுள்ள பொது நிதியில் சில நேரங்களில் பற்றுக்குறை ஏற்பட்டு, அதன் காரணமாக ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்குவதற்குத் தாமதம் ஏற்படுகிறது. தனியாகக் கணக்கு வைத்திருக்க வேண்டும் என்று சொல்லியும்கூட, நெல்லை மாவட்டம், கயத்தார் பஞ்சாயத்து யூனியனில் இப்பொழுது இரண்டு மாதச் சம்பளம் போடப்படாமல் இருப்பதுபற்றி அரசுக்குப் புகார் வந்துள்ளதா? அங்குள்ள ஆசிரியர்களுக்கு உடனடியாகச் சம்பளம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியப் பள்ளியாசிரியர்களுக்கு அந்தந்தத் திங்களுடைய முதல் தேதியிலேயே சம்பளம் வழங்கப்படவேண்டும். எப்படியும் மூன்றாம் தேதிக்குள் வழங்கப்பட்டுவிடவேண்டும் என்ற முயற்சியின் அடிப்படையில்தான் கொடுக்கப்பட்டு வருகிறது. ஊராட்சி ஒன்றியத்தினுடைய பள்ளிகளுக்குச் சம்பளம் வழங்கும் பொறுப்பை ஒன்றியங்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்றன. அதற்குரிய மானியத் தொகையைத் தந்துகொண்டு வருகிறார்கள்.

---

* 546-ம் பக்கத்தில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

1970 சனவரி 27]

பொது நிதியில் போதுமான தொகை இல்லாத இடத்தில் அவர்கள் விண்ணப்பிப்பார்களானால் முன்பணம் கொடுக்க சில ஏற்பாடுகளை அரசு மேற்கொண்டிருக்கிறது. ஆனால், கயத்தார் நிலையைப் பற்றிய தகவல் இல்லை. தனிக் கேள்வி போட்டால் அந்த விவரம் அறிந்து சொல்லலாம்.

**திரு. பூபதி:** தலைவர் அவர்வகளே, நாம் மாநிலத்தில் தனியார் பள்ளிகளில் பணிபுரியும் இருபால் ஆசிரியர்களுக்கும் பணியாளர்களுக்கும் தற்சமயம் ஏற்பட்டுவரும் சம்பளக் குறைப்பு, அடிமை வாழ்வு போன்ற பல்வேறு கஷ்டங்களிலிருந்து அவர்களைக் காப்பாற்ற, சர்க்காரின் பழைய உத்தரவின்படி, மணியார்டர் கமிஷன் செலவை அரசே ஏற்றுக்கொண்டு ஆசிரியர்களுக்குச் சம்பளம் அளிக்க ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, நான் முதலில் கூறியபடி, ஒவ்வொரு திங்களின் முதல் தேதியிலேயே சம்பளம் சேரத் தக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று முறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. தனியார் பள்ளிக்கூடங்கள் 22-ந் தேதிக்குள்ளாக விவரங்கள் அனுப்பவேண்டும். உரிய அதிகாரி 25-ந் தேதிக்குள் பரிசீலனை செய்து அந்தத் திங்கள் இறுதிக்குள் கமிஷனருக்கு அனுப்புவார்கள். அவர்கள் மூலமாகப் போய், சம்பளம் பட்டுவாடா செய்யும் முயற்சி இருக்கிறது. இதில் சீர்திருத்தங்கள் செய்வதுபற்றிப் பள்ளிச் சீர்திருத்தக் குழு ஆராய்ந்துகொண்டு வருகிறது. அவர்கள் விவர அறிக்கையில் இதிலிருக்கும் குறைபாடுகளை நீக்கவும், நல்ல நிறைபாடுகளைச் செய்வதற்கும் ஏற்ற வழிமுறைகளைக் கூறுவார்களானால் அந்த அறிக்கையின்படி தக்க நடவடிக்கை எடுக்க அரசு முயலும்.

**திரு. வ. ஜார்ஜ்:** தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளில் மாதம் முதல் தேதியன்றே சம்பளம் பட்டுவாடா செய்யப்படுவதற்கு விதிமுறை இருந்தபோதிலும், அதற்காக 20-ந் தேதி முதல் 30-ந் தேதி வரையுள்ள பத்து நாள் சம்பளத்தை நிறுத்திவைத்து விடுகிறார்கள். தனியார் பள்ளிகளிலும் சம்பளம் கொடுப்பதற்கு எப்படியும் பத்தாந்தேதி வரையிலும் ஆகின்றது. எனவே, அரசாங்கம் இதைச் சீர்படுத்தி தீவிரமாக அமல்படுத்த முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, பொதுவாக 1-ந் தேதியன்று சம்பளம் கொடுக்கப்படுகிற முறை கையாளப்பட்டு வருகிறது. எந்தத் தனியார் பள்ளிகளிலாவது குறைபாடு இருக்குமானால், அது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுமானால், ஆராய்ந்து தக்க முடிவுகள் எடுக்கலாம்.

THIRU T. MARTIN: In Tirunelveli district, panchayat unions like Sattankulam, Uthangudi and Radhapuram Panchayat Unions are not able to pay their teachers according to Government instructions every month. Therefore the Government announced sometime back that they would appoint a Commission and I understand that they have appointed a Commission to make a report to the Government regarding the panchayat unions which are in the sick list, that is, panchayat unions which are not able to pay the teachers. May I know from the Hon. Minister whether the report has been submitted by the Commission and, if so, wheher the Government will take early steps to implement the recommendations?



1970 சனவரி 27]

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோன்று பள்ளிகளில் இருக்கும் குறைபாடுகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்படியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதுபற்றிய விவரங்கள் இப்பொழுது என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் விவரங்கள் சேகரித்துத் தரலாம்.

**திருமதி கே. பி. ஜானகியம்மாள்:** தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளில் மாதாந்திரச் சம்பளம் கொடுக்கக்கூடிய நேரத்தில் அந்தத் தனியார், மானேஜ்மெண்டார் மாதம் பத்து ரூபாய் முதல் இருபது ரூபாய் வரையிலும் அந்தச் சம்பளத் தொகையில் பிடித்துக்கொண்டு, மீதித் தொகையைத்தான் ஆசிரியர்களுக்குக் கொடுக்கிறார்கள். அப்படிப்பட்ட தனியார் பள்ளிகளில் அரசாங்கமே நேரடியாக ஆசிரியர்களுக்குச் சம்பளம் பட்டுவாடா செய்ய முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, சட்ட முறைப்படி அவர்கள் பத்து, இருபது ரூபாய் பிடித்துக் கொண்டு தரக்கூடாது. அப்படிச் சம்பளத்திலிருந்து பிடித்துக் கொள்ளப்படுவதற்கு ஆசிரியர்கள் இடம் அளிக்கவும் கூடாது. அப்படி மீறி மானேஜ்மெண்டார் ஏதாவது செய்தால் அதுபற்றிக் கவனத்திற்குக் கொண்டுவரப்படுமானால், ஒழுங்கை மீறுகிறது என்று அரசாங்கம் கருதுமானால், மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிற அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

THIRU K. VINAYAKAM: Sir, in spite of the Government order for the disbursement of salaries on the first of every month, is the Minister aware of the fact that, because the acquittance roll is sent on the 22nd and the educational authorities have to return it on the 25th, they take their own time to prepare the bill, sanction it and send it to the managements? Managements have to present the bill to the Pay and Accounts Office, draw the cheque, go to the Reserve Bank and cash it. This process involves at least fifteen days from the date of the acquittance roll. Will the Government reconsider and instruct that the acquittance roll be sent even by the 10th so that there may be enough time to draw the salary and pay it by the first of next month?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இப்பொழுது 22-ந் தேதிக்குள்ளாக விவரங்கள் அனுப்பப்பட வேண்டும். 25-ந்தேதிக்குள்ளாக அதிகாரியால் பரிசீலனை செய்யப்

பல கல்லூரிகளிலும் கட்டணம் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை என்ற நிலைதான் தமிழ்க் கல்லூரிகளைப் பொறுத்தவரை இருக்கிறது. இடையில் புலவர் படிப்புக்கு மாணவிகளைமட்டும் சேர்ப்பது என்று 1965-66-ல் ஒரு முடிவு எடுத்தார்கள். அப்பொழுது மாணவர்களைச் சேர்க்கவில்லை. அதன் பிறகு 1967-68-ல் 50:50 என்ற அளவில், மாணவர்கள் பாதி, மாணவிகள் பாதி என்ற அளவில் சேர்க்க வேண்டும் என்ற அடிப்படையில் முடிவு எடுத்து அப்படிச் சேர்க்கப்படுகிறார்கள்.

**புலவர் பொ. பொன்னம்பலம் :** மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்க் கல்லூரியில் சித்த, ஆயுர்வேத முறை மருத்துவத்தையும் பாடமாக அமைத்துக் கொடுக்க அரசாங்கம் முற்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அந்தக் காலத்தில் தமிழ்ப் புலவர்கள் வைத்தியர்களாகவும் இருந்தார்கள். புலவர் பாடத்தோடு, மருத்துவத்தையும் படித்தார்கள். இப்பொழுது, தமிழ்ப் புலவர்களுடைய பணி தனியாக இருக்கிறது. சித்த, ஆயுர்வேத மருத்துவத்தைப் படிக்க தனியாக கல்லூரி இருக்கிறது. ஆகவே, புலவர் பாடத்தோடு மருத்துவத்தையும் இணைப்பது பொருத்தமானது அல்ல.

*School in Therikudiyiruppu*

*81 Q.—Thiru T. MARTIN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) whether any school is functioning at present with the consent of the Tiruchendur Panchayat Union in Therikudiyiruppu village of Tiruchendur taluk in Tirunelveli district; and

(b) if so, the reasons for the Government not recognising it?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) அந்தப் பள்ளிக்கு 1-6-1968 முதல் 31-5-1970 வரை தாற்காலிக ஏற்பு ஏற்கனவே அளிக்கப்பட்டுள்ளது.

**திரு. டி. மார்டின் :** மிஸ்டர் ஸ்பீக்கர் சார், இதேபோன்று ராதாபுரம் பஞ்சாயத்து யூனியனிலுள்ள பள்ளிக்கூடங்கள் சம்பந்தமாக திறக்கப்பட்ட பின்னர் அனுமதி வேண்டும் என்று கோரி அரசாங்கத்திற்கு மனுச் செய்திருக்கிறார்கள். அதன்மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆதலால், அமைச்சரவர்கள் அதைக் கவனித்து நடவடிக்கை எடுப்பார்களா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இரண்டு மூன்று ஆண்டு காலத்திற்கு முன்பு ஊராட்சி ஒன்றியங்கள் பள்ளிக்கூடங்களைத் துவக்கி, நிபந்தனை அடிப்படையில் இல்லாமல், அவற்றை ஏற்பதா, இல்லையா என்ற பிரச்சினை எழுந்தது. பல பள்ளிக்



கூடங்கள் அப்படி அனுமதி இல்லாமல் நடத்தப்பட்டு வந்தன. அதிலே, 30 மாணவர்கள் குறைந்த அளவில் இருந்தால், அப்படிப் பட்ட பள்ளிக்கூடங்களை அனுமதிக்கலாம் என்று உத்தரவு பிறப்பிக்கப் பட்டது. அந்த அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடும் பள்ளிகள் சம்பந்தமாக அனுமதி வழங்கப்பட்டதா என்கிற தகவல் இப்பொழுது என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால், விவரம் கொடுக்கலாம். இனிமேல் ஊராட்சி ஒன்றியங்கள் அரசாங்கத்தின் உத்தரவு இல்லாமல் துவக்கக்கூடாது என்ற கண்டிப்பான உத்தரவு இடப்பட்டிருக்கிறது.

*Collections for State Loans*

*82 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the Vigilance Commission has been appraised of by Thiru R. K. Balasubramanian, Advocate, Mylapore, about the coercive methods adopted by the Revenue Officials while collecting subscription to the State Loans and

(b) if so, the action taken thereon?

The Hon. Thiru K. A. MATHIALAGAN : (a) Yes.

(b) The Government are satisfied that there was no coercion on the part of the officials concerned.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த்துறை அதிகாரிகள் பலவந்த முறையைக் கையாண்டால் தான் நிச்சயம் வசூல் செய்யலாம் என்று செய்கிறார்கள். இனி மேலாவது வேறு முறைகளைக் கையாள்வது பொறுத்து அரசாங்கம் நாட்டம் செலுத்துமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு உறுப்பினர் எப்பொழுதும் கற்பனையிலேயே இருக்கிறார்கள். இந்த மாநிலக் கடன்கள் திரட்டும் முறையில் கொள்கை மாற்றம் செய்திருக்கிறது. எந்தவிதமான பலவந்தமும் இன்றியே ரூ. 20 கோடி கடன் எழுப்பியுள்ளோம். தமிழகத்தில், மாண்புமிகு உறுப்பினர் போன்ற சில பேரைத் தவிர, எந்தவிதமான நன்மையாக இருந்தாலும் அதைப்பாராட்டக் கூடாது என்று இருப்பவர்கள் தவிர, அப்படிப்பட்ட பிடிவாதம் பிடிப்பவர்களைத் தவிர, மற்றவர்கள் பாராட்டும் அளவில், மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்கும் வகையில், நடந்திருப்பதைப் பல பத்திரிகைகள் கூட தலையங்கமெல்லாம் எழுதியிருக்கிறார்கள் என்பதை மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

Thiru K. S. KOTHANDARAMIAH : Sir, the practice of collecting subscriptions to the State loans has almost become universal. Even in our taluk we get a number of complaints. People have to go to the Revenue officials for so many purposes.

Whenever they go there, the first thing that they demand is subscription to the State loan. Moreover, they do not have any time-limit for this purpose. Throughout the year they would be collecting it. So, considering all these things, will the Hon. Minister for Finance issue strict orders that they should not adopt those methods?

THE HON. THIRU K. A. MATHIALAGAN: The allegation of the hon. Member is baseless. The Government have clearly instructed the Collectors not to involve the administrative machinery for this purpose.

THIRU K. VINAYAKAM: Sir, with regard to the collections for the State loans, what were the allegations made by the concerned person, Thiru R. K. Balasubramanian and what were the allegations which were found to be baseless. Also, was any enquiry instituted into the allegations and also were the Vigilance Commission and the Government convinced that the allegations were baseless?

THE HON. THIRU K. A. MATHIALAGAN: This is a flimsy matter. Thiru Balasubramanian had sent a press cutting from 'The Indian Express' to the Vigilance Commission for examination and the Vigilance Commission has transferred that cutting to the Finance Department. The press cutting reported the closure of shops by pawnbrokers and dealers of Vellore on 31st August 1968 protesting against the alleged pressure and canvasing for the subscriptions to the State loan. The Collector has stated, in his report, that the pawnbrokers of Vellore town have decided not to subcribe to the State loan due to various long standing reasons. Usually they do not want to subscribe to it and they have been dissatisfied ever since the Gold Control Order was introduced. The President and the Secretary of the Pawnbrokers Association of Vellore have played a mischievous part in inducing the members under pressure and threat to close their shops as a mark of protest against this thing. Thus, the Collector's report clearly indicates that there is no coercion on the part of the officials.

திரு. ரா. ராமச்சந்திர துரை: தலைவர் அவர்களே, ரெவின்யூ அதிகாரிகள், சிறு கடைக்காரர்களிடம் கடன்களை வசூல் செய்யும் போது, கணக்குப் புத்தகம் முதலியவற்றை எடுத்துக் கொண்டும், லைசென்சை கான்சல் செய்வோம் என்று பயமுறுத்தியும் நடந்து கொள்ளும் நிகழ்ச்சிகள் நடக்கின்றன. இவை அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கின்றனவா? வந்திருந்தால் அவற்றின் பேரில் நடவடிக்கை எடுக்க அமைச்சர் முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இவைகளெல்லாம் பழங் காலக் கதைகளாக இருக்கலாம். தற்போது கொள்கை மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. அதில் அனுபவம் பெற்று வருகிறோம். இந்த மாதிரி கொள்கை மாற்றத்திற்குப் பிறகு, வலுக் கட்டாயம் இல்லை என்பதுதான் தற்போதைய நிலைமை.



DR. H. V. HANDE: We all agree that this is a long-standing grievance. It is a legacy that has been given to us from the old Congress Government. At that time, the Leader of the Opposition (DMK) had been describing how coercive measures were taking place. We have been hearing large number of complaints about these coercive measures; even stopping of electricity connection, while it concerns Electricity Board; Will the Hon. Minister give a categorical assurance that he will pass orders to all revenue officials that they should strictly obey government orders and that no coercive measures should be brought hereafter and that if any one brings any coercive measure on anybody, government will take stringent action against that particular official?

THE HON. THIRU K. A. MATHIALAGAN: I have categorically stated even without the Member offering any suggestion, that very clear instructions had been given to all Collectors. If the Member has got any complaint, he can bring forth the specific instance to the notice of Government.

திரு. ப. மகாதேவன்: பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் பெருமான் அவர்கள், 'அதிகாரத்தில் இருப்பவர்கள் நன்கொடை வசூலிப்பது, இந்த வரி கொடு, அந்த வரி கொடு என்று கூறுவதெல்லாம் வேல்கொண்டு வழிப்பறி நடத்துவதைப் போலக் கருதப்படும்' என்ற ஒரு கருத்தைக் கூறியிருக்கிறார். அரசு அதிகாரத்தில் இருக்கும்போது நன்கொடை வசூலிப்பது, ஸ்டேட் லோன் போன்ற கடன்கள் வசூலிப்பது போன்றவைகளை நிறுத்தி வைக்க வழி செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தலைவர் அவர்களே, அதே வள்ளுவர் அவர்கள் வரி வசூல் செய்ய வேண்டும், நாட்டைக் காக்க வேண்டும், நாட்டு மக்களைக் காப்பது அரசாங்கத்தினுடைய கடமை என்பதையெல்லாம் சொல்லியிருக்கிறார்.

### *Ramanathapuram district Handloom Weavers Association Meeting*

* 83 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) Whether the Government have received a copy of the resolutions passed by the Ramanathapuram District Handloom Weavers Association meeting at Rajapalayam on 6th and 7th of July 1968; and

(b) if so, the details thereof and the action take thereon?

THE HON. THIRU S. MADHAVAN: (a) Yes.

(b) The details are furnished in the statement * placed on the Table of the House.

DR. H. V. HANDE: According to the statement placed on the table many of the demands have been negatived due to a variety of reasons. In reply to request No. I, Government say

* 547-552-ம் பக்கங்களில் இரண்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

that they have been showing utmost sympathy towards handloom sector. Will the Hon. Minister enlighten us with details of any proposals he may have to redress the grievances of handloom weavers in a concrete manner? Lakhs of handloom weavers would be very happy to hear the answer of the Hon. Minister.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்கள் பிரச்னை ஏராளம். அத்தனை பிரச்னைகளையும் ஒரு மொத்தமாக அங்கத்தினர் கேட்டால் அவற்றிற்குப் பதில் கூற தலைவர் அவர்கள் அனுமதிக்க மாட்டார், அவ்வளவு நேரமாகும். கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு ஒரு பிரச்சினையைப்பற்றி கேட்டால் பதில் சொல்கிறேன்.

**திரு. வி. எஸ். எஸ். மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறிகளுக்குப் பதிலாக விசைத் தறிகளைப் புகுத்தலாம் என்ற கொள்கை இந்த அரசுக்கு உண்டாகியிருப்பதாகத் தெரிகிறது. தனிப்பட்ட ஒரு நெசவாளிக்கு விசைத்தறி வைத்துக் கொள்வதற்கு அனுமதி கொடுப்பது என்ற கொள்கையை அரசு ஏற்றுக் கொள்கிறது என்று சொல்லலாம். இதுவரை எத்தனை மனுக்கள் அப்படிப்பட்ட அனுமதி கோரி வந்திருக்கின்றன? தனிப்பட்ட ஒரு நெசவாளி விசைத் தறி வைத்துக்கொள்ள வேண்டிய பண வசதிகளை அரசு செய்து தருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, விசைத் தறியை புகுத்துவது என்ற வார்த்தையை ஏற்றுக் கொள்ளவில்லை. யாராவது விசைத்தறி வேண்டுமென்று கேட்டால் அதற்கான அனுமதியைக் கொடுக்கலாம் என்ற முடிவுக்கு இந்த அரசு வந்திருக்கிறது. மொத்தம் 12,500 விசைத் தறிகள் ஒதுக்கப்பட்டன. முதல் கட்டமாக, கைத்தறி நெசவாளர்கள் பாதிக்கப்பட்டவர்களாக இருந்தால், அவர்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்று அரசு முடிவு செய்திருக்கிறது. கனம் அங்கத்தினர் அவர்கள் கூறுவதைப்போல் இதில் சில கஷ்டங்கள் இருக்கலாம். விசைத் தறி வாங்க பணம் வேண்டும், கூட்டுறவுச் சங்கம் ஒன்றை ஏற்படுத்தி அதன் மூலமாக அவர்களுக்குப் பணம் தருவது என்ற முடிவு செய்திருக்கிறோம். இப்போது கைத்தறி நெசவாளர்களுக்குச் செய்து கொடுக்கும் உதவிபோல, விசைத்தறி நெசவாளர்களுக்கும் உதவிகள் செய்து கொடுக்க முடிவு செய்திருக்கிறோம்.

THIRU K. VINAYAKAM : Are the Government aware of the fact that introduction of powerlooms in this industry has caused a great deal of unemployment among untrained ordinary weavers who were engaged in this industry?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இயந்திர சாதனங்களின் மூலம்தான் எந்த நாட்டிலும் வேலையில்லாத் திண்டாட்டம் உடனடியாகத் தீரும் என்ற கருத்துப் போராட்டம் இருநூறு ஆண்டுகளாக இருந்து வருகிறது.



**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு அடிப்படையிலே நடக்கின்ற நூற்பாலைகளையும், விசைத் தறிகளையும் கொண்டு ஒரு காம்போசிட் மில்லாக உண்டாக்குவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா? அப்படிச் செய்தால் லாபகரமாக இருக்கும் என்று அரசாங்கம் கருதுகிறதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, ஆட்டோமேஷன் காம்போசிட் மில் இவை இந்த நாட்டிலே வர வேண்டுமென்று காங்கிரஸ் கட்சியின் உதவித் தலைவர் கூறியது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. அதேபோல் விசைத்தறியும் வேண்டுமென்பது மகிழ்ச்சியைத் தருகிறது. காம்போசிட் மில் ஏற்படுத்துவதற்கு முதல் கட்டமாக இப்போது விசைத் தறிகளை யார் யார் வேண்டுமென்று கேட்கிறார்களோ, அவர்களுக்கு அனுமதி வழங்கி அதற்குப் பிறகு காம்போசிட் மில் எப்படி உருவாக்குவது என்பதைப்பற்றி யோசிக்கலாம் என்றிருக்கிறோம்.

DR. H. V. HANDE : At least will the Hon. Minister clarify one or two points for which the answers will be brief. What is the solution that this Government has envisaged for solving the housing problem? This problem has been escaping and eluding solution. Have the Government any concrete proposals to solve the housing problem? For item (a) the answer is that weavers may register their names in the nearest employment exchanges for securing alternative employment. That is there everywhere. What I want to know is whether any preferential treatment is given for employees to improve sales, whether 'veshtis with borders' will be earmarked for handloom weavers and whether any decision has been taken for giving these employees preferential treatment with regard to housing also?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரே நேரத்தில் எத்தனை கேள்விகள் கேட்பது?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, ஒரே சமயத்தில் மூன்று வினாக்களைக் கேட்டிருக்கிறார்கள். வீட்டுப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் இரண்டாயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. வீடு இல்லாத பிரச்சினை நாடு முழுவதும் இருக்கிறது. இது கைத்தறி நெசவாளர்களுக்கு மட்டும் உள்ள பிரச்சினை அல்ல. மேலும் வட்டி குறைக்க வேண்டும், அதற்காக வசூலிக்கப்படும் பீனல் இன்ட்ரஸ்ட்டை குறைக்கவேண்டுமென்றும் சொல்கிறார்கள். இதை அரசாங்கம் பரிசீலித்து வருகிறது. வேலையில்லாத் திண்டாட்டம் நாடு முழுவதும் இருக்கிறது. கூட்டுறவு நூற்பாலைகளிலே கைத்தறி நெசவாளர்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறோம். அவர்களும் அதைச் செய்து வருகிறார்கள். நாம் அவ்வப்பொழுது கைத்தறி நெசவாளர்களுக்கு எந்த அளவிற்கு உதவி செய்ய முடியுமோ அந்த அளவிற்குச் செய்து வருகிறோம். கைத்தறி நெசவாளர்களுக்கென்று ஒரு சில ரகங்களை ஒதுக்கித் தர வேண்டுமென்று நீண்ட நாட்களாக நாம் கோரிக்கை விடுத்து வந்திருக்கிறோம்.

இதை மத்திய அரசுதான் செய்ய வேண்டும். இந்த இந்த அளவிற்கு பார்டர் கரையுள்ள துணிகளை கைத்தறி நெசவாளர்களுக்கு தான் ஒதுக்கித் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை எப்படி அமல்படுத்துவது என்பதைப்பற்றி யோசனை செய்யப்பட்டு வருகிறது. மராட்டிய, குஜராத் மாநிலங்களில் விசைத் தறிகள் ஏராளமாக இருக்கிற காரணத்தால் அவர்கள் கவலைப்படவில்லை. விசைத்தறிகள் இல்லாத காரணத்தால் விசைத்தறிகளைப்பற்றி நாம் கவலைப்படவில்லை. நம்முடைய நாட்டிலேயுள்ள கைத்தறி நெசவாளர்களுக்குப் பாதகம் ஏற்படக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவேதான் அந்த உத்தரவு நம் நாட்டைப் பொறுத்தவரையில் செயல்படாமல் இருக்கிறது. எந்த அளவிற்கு இந்த உத்தரவை நம் கைத்தறி நெசவாளர்களுக்குப் பாதகம் இல்லாமல் அமல் நடத்த முடியுமோ, அந்த அளவிற்கு நடத்த வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறோம்.

## திருச்சிராப்பள்ளி மத்திய சிறையிலுள்ள நூலகம்

*** வினா 84—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு தொழிலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மத்திய சிறையில் உள்ள நூலகம் சிறைக் கைதிகளுக்குப் பயன்படும் வகையில் செயல்படுத்தப்படுகிறதா?

(இ) ஆம் எனில், சிறையில் உள்ள கைதிகள் எவ்வெப்பொழுது நூல்களைப் படிக்க அனுமதிக்கப்படுகிறார்கள்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) ஆம்.

(இ) திருச்சிராப்பள்ளி மத்திய சிறைச்சாலையிலுள்ள கைதிகளின் பயனுக்காக அச் சிறைச்சாலையிலுள்ள நூலகம் பேணிவரப்படுகிறது. கைதிகள், தங்கள் ஓய்வு நேரங்களிலும், இரவில் தங்குமிடங்களில் மாலை 6 மணி முதல் இரவு 9 மணி வரையிலும் விடுமுறை நாட்களிலும் புத்தகங்கள் படிப்பதற்கு அனுமதியளிக்கப்படுகிறது. சிறைச்சாலைப் பள்ளி செயல்படும் நேரங்களில், அதாவது காலை 8 மணி முதல் 11-30 மணி வரையிலும் பிற்பகல் 2 மணி முதல் மாலை 4-30 மணி வரையிலும் சிறைச்சாலை நூலகத்திலிருந்து புத்தகங்கள் எடுத்துச் செல்லவும் அவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.

**திரு. ஆர். நாகசுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே, நூலக ஆணைக் குழுவின் கிளை ஒன்றை மத்திய சிறைச்சாலையில் நிறுவி அங்கு கைதிகளுக்கு எல்லாவிதமான புத்தகங்களும் கிடைக்க வழி செய்ய முன் வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, இப்போது நாமே செய்து வருகிறோம்.

**திரு. என். கிட்டப்பா:** பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய சிறைச்சாலையில் உள்ளதைப்போல கிளைச் சிறைச்சாலைகளிலும் நூலகம் துவக்க அரசு முன்வருமா?



**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, அந்த விவரங்கள் தற்போது என்னிடத்தில் இல்லை.

**திரு. எஸ். ஜே. ராமசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சிறையில் மட்டுமல்ல, எல்லாச் சிறைச்சாலைகளிலும் இருக்கிற புத்தகங்கள் பழைய கால புத்தகங்களாக இருக்கின்றன. இந்த காலத்திற்கேற்ற கருத்துக்கள் அடங்கிய புத்தகங்களை வைப்பார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, புத்தகங்களை அவ்வப்பொழுது தேவையை உத்தேசித்து வாங்கிக் கொடுக்கிறோம். சிலவற்றை மாவட்ட நூலகத்திலேயிருந்து பெற்று நாம் கொடுத்து வருகிறோம்.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது பகல் நேரத்தில் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. மாலை ஆறு மணிக்குப் பிறகு இரவு நேரத்தைப் பயனுள்ள முறையில் கழிக்க, இரவு நேரங்களில் புத்தகங்கள் கொடுப்பதற்கு வசதிகள் செய்து தரப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, பகல் நேரத்தில் வாங்குகிற புத்தகங்களையே இரவு நேரங்களில் வைத்துக் கொள்ளலாம்.

**THIRU T. MARTIN:** Sir, the prisoners in this State are classified as A, B and C class prisoners. May I request the Hon. Minister to state whether prisoners belonging to 'C' class are allowed to have access to these libraries?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** புத்தகங்கள் கொடுப்பதைப் பொறுத்த அளவுக்கு பாகுபாடு இருப்பதாக நான் கருதவில்லை. எனக்குத் தெரிந்தவரையில் சி கிளாஸ் கைதிகளில் சிலர் படித்துப் பட்டம் பெறக்கூடிய அளவுக்கு முன்னேறி வருகிறார்கள் என்கிற தகவல் என்னிடத்தில் இருக்கிறது.

**திரு. எம். எஸ். மணி:** திருச்சி மத்திய சிறையில் இருக்கிற நூலகத்தில் இராமாயணம், மகாபாரதம் போன்ற புத்தகங்கள் இருக்கிறதே தவிர அரசியல் கருத்துப் புத்தகங்கள் அல்லது அரசியல் தலைவர்கள் எழுதிய இலக்கிய புத்தகங்கள் இல்லை. இவற்றை வாங்கி வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** எனக்குத் தெரிந்த வரையில் வித்வான் பட்டம் பெறக்கூடிய அளவுக்கு படிக்கத்தக்க புத்தகங்கள் கிடைக்கின்றன. கனம் அங்கத்தினர் மேலும் என்ன என்ன புத்தகங்கள் தேவை என்று எழுதுவார்களானால் அதையும் வாங்க ஏற்பாடு செய்யலாம்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை:** தினசரிப் பத்திரிகைகள் கொடுக்கும்போது சில செய்திகளை கறுப்பு மையினால் தடவி அனுப்புகிறார்கள். மாலையில் போகிறவர்கள் அந்தச் செய்தியை உள்ளே இருப்பவர்களிடம் சொல்லி விடுகிறார்களே, ஆகவே இனி மேலே மை பூசாமல் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா?

படவேண்டும். எப்படியும் அந்த மாத இறுதிக்குள் காசோலையை அந்தந்தப் பள்ளி மேலாளருக்கு ஒன்றியக் குழுவின் ஆணையாளர் அனுப்பி வைக்கவேண்டும் என்று இருக்கிறது. காலத்தாழ்வு ஏற்பட்டால் உடனடியாக நடவடிக்கை எடுத்து, மாத இறுதிக்குள்ளாகக் காசோலை அனுப்பி வைக்கப்படுவதற்கான எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. ஒன்று முதல் மூன்று தேதிக்குள்ளாக ஆசிரியர்கள் சம்பளங்களைப் பெறவேண்டும் என்ற முயற்சியின் அடிப்படைதான் இருக்கிறது. ஆகவே, இப்படிப் பட்ட குறைபாடுகள் அதிகமாகக் கவனத்திற்கு வரவில்லை. அதிகமாக வருமானால் மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற யோசனையைப் பரிசீலிக்கலாம்.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்கள் அமைக்கப்பட்ட காலத்தில் எத்தனை பள்ளிகள் இருந்தனவோ, அந்தப் பள்ளிகளில் எத்தனை ஆசிரியர்கள் இருந்தார்களோ, அந்த ஆசிரியர்களின் எண்ணிக்கை அடிப்படையில்தான் இப்பொழுதும் நிதி ஒதுக்கீடு செய்கிறார்கள். அதன்பிறகு புதிதாக ஆசிரியர்கள் நியமித்திருக்கின்ற அந்தப் பட்டியல் அளவுக்கு நிதி ஒதுக்கீடு இல்லாத காரணத்தால் ஒவ்வொரு மாதமும் முதல் தேதி சம்பளம் போட முடியாத நிலைமை இருக்கிறது என்பதை அரசு ஆலோசிக்குமா? புதிதாகப் புள்ளி விவரம் சேகரித்து ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும் புதிய ஆசிரியர்கள் போட்டிருப்பதை அடிப்படையாக வைத்து நிதி ஒதுக்கீடு செய்வார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோன்று, இதை ஒன்றியங்கள் ஏற்பட்ட காலத்தில் இருந்த எண்ணிக்கையை வைத்துப் போடவில்லை. அவ்வப்போது சேர்க்கப்பட்டிருக்கிற ஆசிரியர்களைக் கணக்கெடுத்து, அவர்களையும் சேர்த்துத்தான் சம்பளம் கொடுக்கப்படுகிறது. அப்படிக் கொடுக்காவிட்டால், அவர்களே கிளர்ச்சி செய்து சம்பளத்தைப் பெறத்தான் செய்வார்கள். கொடுக்கப்படாமலிருக்கும் சூழ்நிலை ஏற்படாது. 1 முதல் 3-ந் தேதிக்குள் கட்டாயம் கிடைக்கவேண்டும் என்ற முறைதான் இருக்கிறது. விவரங்கள் மாத இறுதிக்குள்ளாக அனுப்பப்பட வேண்டும் என்று கண்டிப்பான உத்தரவு அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

## திருவையாறு தமிழ்க் கல்லூரி

* 80 வினா—திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவையாற்றில் உள்ள தமிழ்க் கல்லூரியை விரிவுபடுத்தி அதிக மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.





**திரு. வை. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, தமிழ் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் நாட்டிலே பெருகிவருகிறது. திருவையாறு தமிழ்க் கல்லூரியில் சேர்ந்து படிக்கவேண்டும் என்று ஏராளமான பேர் 'அப்ளை' செய்திருந்தபோதிலும், பெரும்பாலானவர்களுக்கு அதில் இடம் கிடைக்கவில்லை. அடுத்த ஆண்டில் அதிகப்படியான இடங்கள் ஒதுக்க உத்தேசம் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, திருவையாறு தமிழ்க் கல்லூரியில் இப்பொழுது அங்கிருக்கும் இடவசதி, விடுதி வசதி ஆகியவற்றைப் பொறுத்துத்தான் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். 1968-69-ம் ஆண்டில் 359 மாணவ மாணவியர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அங்கிருக்கும் இட வசதி போதாமல் இப்போதே இட நெருக்கடி இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, இவ்வளவுதான் அங்கே முடியும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் கூறுகிற நேரத்தில் மேலும் அதை விரிவுபடுத்துவதற்கோ, மேலும் மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளுவதற்கோ இல்லை. தஞ்சை மாவட்டத்தில் வேறு பல தமிழ்க் கல்லூரிகள் இருக்கின்றன. காந்தை, திருப்பனந்தாள் ஆகிய இடங்களிலுள்ள கல்லூரிகளும் பகிர்ந்து கொள்ளும் அளவுக்குத்தான் மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள்.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, திருவையாற்றில் இருக்கும் தமிழ்க் கல்லூரிபோல மேலும் அதிகமாகத் தமிழ்க் கல்லூரிகள் ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா.நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இதிலே படித்து வெளிவருகிற தமிழ் புலவர்களையே வேலைக்குச் சேர்த்துக்கொள்ள வாய்ப்புக் குறைவாக இருக்கிறது. வெளி வருகிற ஆசிரியர்களை போதுமான அளவிற்கு வேலையில் அமர்த்தக் கூடிய நிலையைப் பொறுத்துத்தான் புதிய கல்லூரிகள் அமைப்பதை ஆலோசிக்க வேண்டும். அப்படி இப்பொழுது அமைக்க அவசியம் இல்லை. நாட்டின் தேவையை நிறைவேற்றும் வகையில் இருக்கும் தமிழ்க் கல்லூரிகளில் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**திரு. ஆர். கருப்பையா :** தலைவர் அவர்களே, திருவையாறு தமிழ்க் கல்லூரியில்தான் இலவசமாக (ஃப்ரீ போர்டிங்) சாப்பாடு போடப்படும் வாய்ப்பு இருக்கிறது. அது போன்று அந்தக் கல்லூரியில் அதிகமாக மாணவர்களைச் சேர்த்தால் ஏழைகளுக்கு உதவியாக இருக்கும். ஆனால், அதிகமாக மாணவிகளைத்தான் சேர்க்கிறார்கள் என்ற குறைபாடு இருக்கிறது. ஆகவே, அங்கே அதிகமாக மாணவர்களைச் சேர்க்கும் வாய்ப்பினை ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** திருவையாற்றுக் கல்லூரி சத்தரம் நிர்வாகத்தின்கீழ் இருப்பதால் அங்கே இலவசமாக உணவு அளிக்க வேண்டும் என்ற முறையிருக்கிறது. வேறு

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சிறையில் இருக்கும்போது எனக்குத் தரப்பட்ட பத்திரிகைகளில்கூட அப்படி மை அடித்துத் தந்தார்கள். வெளியில் நடக்கும் அரசியல் நிகழ்ச்சிகள் அரசியல் கைதிகளுக்குத் தெரியக்கூடாது என்பதற்காகவே அப்படித் தருவதாகச் சொன்னார்கள். பொதுவாக சிறைக்குள் சட்டம், அமைதி, ஒழுங்கைக் குலைக்கக்கூடிய செய்திகள் எதுவும் சிறையினுள் இருப்பவர்களுக்குத் தெரியாது இருக்கவேண்டும் என்பதற்காக அந்த ஏற்பாடு.

**திரு. மு. ச. சிவசாமி :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பகலில் வாங்கிய புத்தகத்தை இரவில் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். நான் சிறையில் இருந்தபோது 8 மணிக்கெல்லாம் விளக்கை அணைத்துவிடும்படியாகச் சொன்னார்கள். அது போலத்தான் இப்போதும் 8 மணிக்கெல்லாம் விளக்கை அணைக்க கட்டாயப்படுத்தப்படுகிறார்களா? எல்லா நேரமும் விளக்கை அனுமதிக்கிறார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நிச்சயம் படித்து முன்னேற வேண்டுமென்று கருதுகிறவர்களுக்கு விளக்கு வசதி கொடுக்கப்படும் என்று உறுதி கூறுகிறேன்.

**திரு. கே. விநாயகம் :** சிறையில் இருக்கிற கைதிகளுக்கு வெளியில் நடக்கிற நிகழ்ச்சிகள் தெரியக்கூடாது என்று கறுப்பு மை அடித்துப் பத்திரிகைகளைக் கொடுக்கலாம். ஆனால் மாலையில் ஆல் இந்தியா ரேடியோ செய்திகளைச் சொல்லி விடுகிறதே, அதையும் தடுத்துவிடுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கனம் அங்கத்தினர் கேட்ட கேள்விக்கு பழைய கருத்தைச் சொன்னேன். அரசியல் கைதிகளுக்கு இதுபோல வெளி நிகழ்ச்சிகள் தெரிந்தால் கெடுதி ஏற்படும் என்று இந்த அரசாங்கம் பயப்படவில்லை.

**திரு. என். கிட்டப்பா :** 1967-க்கு முன்னால் சிறைச்சாலையில் 'முரசொலி', 'மன்றம்', 'நம் நாடு' போன்ற பத்திரிகைகள் தரப்படுவதில்லை. அவற்றை வாங்கித் தருவதற்கான ஏற்பாட்டைச் செய்ய முடியுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அப்படிப்பட்ட கட்டுப்பாடு முதலில் இருந்தது. நாங்கள் பொறுப்பேற்றவுடன் அந்தக் கட்டுப்பாடுகளை எல்லாம் எடுத்து விட்டோம். மேலும் குறிப்பிட்ட வேறு சில பத்திரிகைகள் வேண்டுமென்றாலும் அவற்றை கைதிகளுடைய செலவிலேயே வாங்கிக் கொடுக்க முடிவு செய்திருக்கிறோம்.



## தேவக்கோட்டையிலுள்ள கிரிமினல் கோர்ட்டுகள் மாற்றம்

* வினா 85. **திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு தொழிலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தேவக்கோட்டையிலுள்ள கிரிமினல் கோர்ட்டுகளைச் சிவகங்கைக்கு மாற்ற அரசு எண்ணியுள்ளதா?-

(இ) இதனை ஆட்சேபித்து சட்டப் பேரவை உறுப்பினர்கள் அரசுக்கு எழுதியுள்ளனரா?

(உ) ஆம் எனில், அதன்மீது அரசு கொண்டுள்ள முடிவு என்ன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) இல்லை.

(இ) & (உ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.

**திரு. டி. மார்டின் :** பொதுவாக அநேக இடங்களில் கிரிமினல் கோர்ட் ஒரு பக்கமும், சிவில் கோர்ட் ஒரு பக்கமும் இருக்கிறது. நெல்லை மாவட்டத்தில் அப்படி இருக்கிறது என்பதை "பார் அசோசியேஷன்" தெரியப்படுத்தி ஒரே காம்பவுண்டுக்குள் சிவில் கோர்ட்டையும், கிரிமினல் கோர்ட்டையும் ஏற்படுத்த வேண்டுமென்று கோரியிருக்கிறது. இதைக் கவனித்துப் பரிசீலனை செய்து ஆவன செய்வார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஒரு ஊரிலுள்ள கோர்ட்டை இன்னொரு ஊருக்கு மாற்றுவது பற்றிய கேள்வி இது. கனம் உறுப்பினர் கேட்பது ஒரே ஊரில் இடவசதி ஏற்படுத்தித் தருவது பற்றியது. வசதியுள்ள இடங்களில் அப்படித்தான் இருந்து வருகின்றன.

**திரு. பெ. மலைச்சாமி :** முகவை மாவட்டத்தில் நீதிமன்றங்கள் சிதறிக் கிடப்பதற்குக் காரணம், அம்மாவட்டத்திற்குத் தலைநகரும், தலைமையிடமும் இல்லாததுதான் என்று கூறப்படுகிறதே, அதற்காகத் தலைமையிடத்தையும், தலைநகரையும் அரசு தேர்ந்தெடுக்குமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ரெவின்யூத் துறை அதை முடிவு செய்யவேண்டும்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** ஓரிடத்தில் முன்சீப் கோர்ட் இருக்கும். இன்னொரு இடத்தில் சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட் இருக்கும். சோளிங்கபுரத்தில் முன்சீப் கோர்ட் இருக்கிறது. அரக்கோணத்தில் சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட் இருக்கிறது. அமைச்சர் அவர்களுடைய தொகுதியில் கூட அப்படி இருப்பதாகச் சொன்ன ஞாபகம். எல்லாவற்றையும் ஓரிடத்திற்குக் கொண்டுவர பரிசீலனை செய்யப்படும் என்று முன்பு சொன்னார்கள். இப்போது அப்படி மாறுதல் செய்ய உத்தேசம் உண்டா?

[1970 ஜனவரி 27

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கிரிமினல், சிவில் வழக்குகள் எந்த எந்தப் பகுதிகளில் அதிகம் வருகின்றன என்று பார்த்தே உயர் நீதிமன்றம் கோர்ட்டுகளை அந்த அந்தப் பகுதியில் திறக்கின்றன. வெள்ளைக்காரர்கள் காலத்தில என்ன நோக்கத்தில் அது ஓரிடம், இது ஓரிடம் என்று அமைந்தார்கள் என்பது தெரியாது. நாம் பொறுப்பேற்றவுடன் இதுபற்றி ஒரு முடிவு எடுத்து உயர்நீதி மன்றத்திற்குச் சொல்லியிருக்கிறோம். அவர்களும் பெரிய அதிகாரி ஒருவரை நியமித்து எப்படி எப்படி நீதிமன்றங்களை மாற்றி அமைக்கலாம் என்பதைப் பரிசீலனை செய்கிறார்கள். அவர்களது முடிவு தெரிந்த பிறகு நாம் ஒரு முடிவு செய்யலாம்.

தாலுக்காவுக்கு ஒரு வேலை வாய்ப்பகம்

* **வினு. 86.—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு தொழிலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா—

தாலுக்காக்கள் தோறும் வேலை தேடித்தரும் நிலையங்கள் (Employment Exchanges) அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இல்லை.

**திரு. பெ. மலைச்சாமி :** தாலுக்காக்கள் அளவில் இல்லாவிட்டாலும் அங்கங்கே பஞ்சாயத்து யூனியன்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய யூனியன் அளவிலாவது ஏற்படுத்த முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** வேலை தேடித்தரும் நிலையங்கள் மாவட்ட அளவில் பணியாற்றி வருகின்றன. ஊராட்சி மன்றங்கள் தங்களுக்குத் தேவையான ஆட்களை இவர்களிடம் கேட்கிறார்கள். இவர்கள் அனுப்பி வருகிறார்கள். வேலை தேடித்தரும் நிலையங்களை விரிவுபடுத்துவதற்குப் பதிலாக வேலை வாய்ப்புகளைத் தோற்றுவித்தால் நம் பிரச்சினை தீர்க்கப்பட்டுவிடும்.

**திரு. ஆர். நாகசுந்தரம் :** வேலை தேடித்தரும் நிலையங்கள் ஒரு வேலைக்கு ஆட்களை அனுப்புகிறார்கள். அவர்கள் போய் வேலையை அந்த இடத்தில் ஏற்றுக்கொள்கிறார்கள். ஒரு மாதத்தில் அந்த தற்காலிக வேலை முடிவு அடைகிறது. திரும்பவும் இவர்கள் வேலை தேடித்தரும் ஸ்தாபனத்தில் பதிவு செய்துகொள்கிறார்கள். இதே இடத்தில் மீண்டும் வேலை காலி ஏற்பட்டால் புதியதாக ஆளை எடுக்கிறார்களே தவிர முன்பு வேலை செய்தவர்களை அழைப்பது கிடையாது. தற்காலிகமாக ஒருவர் நியமிக்கப்பட்டால் அவருக்கு நிரந்தர வேலை கிடைக்கிற வரை தற்காலிக வேலை காலி ஏற்படுகிற போதெல்லாம் அவரையே அழைக்கவேண்டும் என்று ஏற்பாடு செய்வார்களா ?



1970 ஜனவரி 27]

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நல்ல யோசனை. தற்காலிகமாக வேலைக்கு வருகிறவர்களை நிரந்தர வேலையே கிடைக்கக் கூடாது என்றல்ல. நிரந்தர வேலை கிடைக்கும்வரை முன்பு வேலை செய்தவர்களையே நியமிக்க வேண்டுமென்ற யோசனையை பரிசீலிக்கலாம்.

**திரு. கே. போஜன் :** தற்சமயம் மாவட்ட தலைநகரில்தான் வேலை தேடித்தரும் ஸ்தாபனம் இருக்கிறது. வேலையில்லாதவர்கள் மூன்று மாதத்திற்கு ஒரு முறை அங்கே சென்று பதிவு செய்து வருவது என்பது சிரமமாக இருப்பதனால் ஒவ்வொரு தாலுக்கா அளவிலாவது ஏற்படுத்த யோசனை செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அந்த அளவுக்கு செலவை விரிவுபடுத்துவதைவிட வேலை வாய்ப்பை ஏற்படுத்தினால் பிரச்சினை தீரும்.

**திரு. ந. வீராசாமி :** தாலுக்காதோறும் வேலை தேடித்தரும் அலுவலகம் இப்போது இல்லை என்று சொன்னார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் வேலை தேடித்தரும் அலுவலகம் இருந்தாலும் அதை டெக்னிகல் சைட், அட்மினிஸ்ட்ரேடிவ் சைட் என்று தனியாக வைப்பதற்கு யோசனை இருக்கிறதா? தனியார் கம்பெனிகளில் இன்றையதினம் அவர்களே ஆட்களை நியமித்துக் கொள்கிறார்கள். அப்படியின்றி இந்த அலுவலகம் மூலமாகத்தான் ஆட்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கட்டாயப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தனியார் கம்பெனிகளை கட்டாயப்படுத்த சட்டம் இடம் தராது. இப்போதே வேலை வாய்ப்பு விவரங்கள் தரப்பட வேண்டும் என்று அவர்கள் கேட்கப் படுகிறார்கள்.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம் :** இன்றுள்ள விதிமுறைப்படி ஒரு இடத்திற்கு 6 பேர்களை இந்த வேலை தேடித்தரும் அலுவலகம் அனுப்பி வைக்கிறது. சிலருக்கு வேலை கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது. ஆனால் அந்தப் பெயர்களை அனுப்புவது இல்லை. ஆகவே ஓரிடத்திற்கு அத்தனை பேர்களையும் அனுப்ப ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஏராளமானபேர் பட்டியலில் இருக்கிற காரணத்தினால் வரிசைக் கிரமமாக அனுப்புகிறோம். எந்தெந்த வேலைக்கு தகுதியானவர்கள் என்பது பதிவு செய்யப் படுகிறது அந்தந்த வேலைக்குத் தகுதியாக வரிசைக் கிரமமாக அனுப்புவதால் முதலில் பதிந்து கொண்டவர்களுக்கு முதலில் வேலை கிடைக்க வாய்ப்பு இருக்கிறது.

**திரு. அ. மாரிமுத்து :** தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் வேலை தேடித் தரும் நிலையத்திற்குப் படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள் நிறையப் பேர்கள் பதிவுசெய்வதற்காகச் செல்கிற

நோத்திலே அவர்களுக்கு காலை முதல் மாலைவரை நேரம் பிடிக்கிற காரணத்தினாலே, மழையாலும், வெயிலினாலும் பாதிக்கப்படுகிறார்கள். எனவே அந்த நிலையத்தின் காம்பவுண்டுக்குள் ஒரு கொட்டகை அமைத்துக் கொடுக்க உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தனியாகக் கேள்வி கேட்டால் அந்த ஊரிலே கொட்டகை இருக்கிறதா, வேண்டுமா என்பதைப் பற்றியெல்லாம் பரிசீலிக்கலாம்.

### மதுரை மாவட்டத்தில் சுண்ணாம்புக்கல்

* வினா 87.—**திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** மாண்புமிகு தொழிலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் வலையங்குளம் முதல் பாரப்பத்தி வரையில் சுண்ணாம்புக்கல் கிடைப்பது பற்றி தகவல் ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில் அங்கு ஆராய்ந்தறிய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) & (இ) ஆம். (வலையங் குளத்திற்கும் பாறைப்பட்டிக்கும் இடையில்) இளையார்ப்பட்டிக்கு அருகில் காணப்படும் சுண்ணாம்புப் படிங்குகள் பற்றி தொழில் துறையைச் சேர்ந்த மாநிலப் புவியியல் பிரிவு ஏற்கெனவே ஆய்வு நடத்தியுள்ளது. இந்தச் சுண்ணாம்புக்கல் வெள்ளை, வெளிறிய வெள்ளை ஆகிய நிறங்களையுடையதாகவும், இடைப்பட்ட அளவு பொடி செய்யப்பட்டதாகவும் தரம் குன்றியதாகவும் ஆனால் நல்ல தரமான சுண்ணாம்புக் கற்கள் இடையிடையே கலந்ததாகவும் காணப்படுகிறது. இப்பகுதியில் சுமார் 30,000 டன் தரமான சுண்ணாம்புக்கல் இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

**திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே உள்ள விவசாயிகள் தங்கள் நிலங்களில் சுண்ணாம்புக் கல் இருப்பதால் விவசாயம் செய்ய முடியாது பாதிக்கப்படுவதாகச் சொல்கிறார்கள். அவர்கள் எல்லாம் சுண்ணாம்புக் கல்லை விற்றுத்தான் கஷ்ட ஜீவனம் செய்து வருகிறார்கள். அந்தக் கல்லை உபயோகப்படுத்தி ஒரு தொழிற்சாலையை ஏற்பாடு செய்து அவர்களுக்கு உதவி செய்ய அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சுண்ணாம்புக்கல் மூலமாக எந்த அளவுக்கு ஒரு புதிய தொழிற்சாலையை உருவாக்க முடியும் என்பது பரிசீலித்ததற்குப் பின்னால்தான் சொல்ல முடியும். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் சுண்ணாம்புக்கல் ஏராளமாகப் பயன்படுத்தப்படுகிற நிலையில் சிமிண்ட் தொழிற்சாலை மேலும் தொடங்கினால் எந்த அளவுக்கு அது பயனுள்ளதாக இருக்கும் என்பது சந்தேகத்திற்குரிய நிலையாக இருக்கிறது. காரணம் ப்ரொடக்‌ஷன் சர்ப்ளஸ் ஆக இருப்பதுதான். என்றாலும் இது பற்றியும் புவியியல் துறையினர் ஆராய்ந்து வருகிறார்கள்.



**திரு. என். எஸ். வி. சித்தன் :** மதுரை மாவட்டத்தில் சுண்ணாம்புக்கல் பரவலாகக் கிடைக்கிறது என்று சொல்லப்படுகிறது. இதுபற்றி அரசாங்கம் ஆராய்ச்சி செய்ய இனிமேலாவது முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** எந்த எந்த இடங்களில் சுண்ணாம்புக்கல் கிடைக்கிறதோ அதையெல்லாம் ஆராய்கிறோம். ஆனால், தொழிற்சாலை ஆரம்பிப்பதற்குப் போதுமான அளவுக்குக் கிடைக்குமா என்பதையும் ஆராயவேண்டும். சுண்ணாம்புக்கல்லைப் பொறுத்தவரையில் ஏராளமாகக் கிடைக்கின்ற காரணத்தினால் சிமிண்ட் தொழிற்சாலை போதுமான அளவுக்கு இருக்கிறது என்பது நமக்குத் தெரியும். சுண்ணாம்புக்கல்லைப் பயன்படுத்தி கெமிக்கல் தொழிற்சாலை ஆரம்பிக்கலாம் என்ற கருத்தும் அரசாங்கத்தினிடத்திலே இருந்து வருகிறது.

**திரு. பெ. மலைச்சாமி :** தலைவர் அவர்களே, மேலூர் வட்டத்திலே சுண்ணாம்பூர், சுக்காம்பட்டி, சிறுகுடி போன்ற இடங்களில் சுண்ணாம்புக்கல் கிடைப்பதினால் பெரிய தொழிற்சாலை இல்லாவிட்டாலும் சிறிய அளவிலாவது தொழிற்சாலையை மேலூர் வட்டத்திலே ஆரம்பிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தமிழ்நாட்டிலே உபயோகப் படுத்தியிருக்கிற அளவுக்கு எப்படி விற்பது என்பதுதான் இப்பொழுது பிரச்னையாக இருக்கிறது. இதைப்பற்றி மத்திய அரசுடன் பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. எனவே இப்போதைக்கு ஒரு தொழிற்சாலை ஆரம்பிப்பது உகந்ததாக இருக்காது என்பது அரசாங்கத்தின் கருத்தாக இருக்கிறது.

**திரு. மு. ச. சிவசாமி :** தனியார்கள் சுண்ணாம்புக்கல், பாக்ஸைட் போன்றவை எங்கு கிடைக்கிறது என்பதைத் தேடிப்பார்த்து மைனிங் லைசென்ஸ் வேண்டுமென்று மனுச் செய்தால் கலெக்டர் அலுவலகத்திலோ அல்லது தாலுகா அலுவலகத்திலோ வருடக் கணக்கில்ல தேங்கிவிடுகிறது. அதைத் துரிதப்படுத்தி உத்தரவிட அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்பொழுதுகூட மனுச் செய்தால் ஒரு ஆண்டுக்குள் அனுமதியோ மறுப்போ தெரிவிக்கப்பட வேண்டுமென்று விதி இருக்கிறது.

### காட்டுப் புறம்போக்கு நிலங்கள்

* வினா 88.—**புலவர் பொ. பொன்னம்பலம் :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுப் புறம்போக்கு நிலங்களை விவசாயத்திற்குக் கொண்டுவர அரசுக்கு உத்தேசமுண்டா?

(இ) ஆம் எனில், எப்பொழுது?

[1970 ஜனவரி 27

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** (அ) &(இ) காட்டுப்புறம்போக்கு நிலங்களை விவசாயத்திற்குக் கொண்டுவர அரசுக்குத் தற்போது உத்தேசம் இல்லை. இருந்தபோதிலும் சேலம் மாவட்டத்தில் உள்ள வனவாசி, பக்கநாடு ஒதுக்கக் காட்டுப் பகுதியிலும், மதுரை மாவட்டத்தில் உள்ள சுண்டமநாய்க்கனூர் காட்டுப் பகுதியிலும், தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள ரிஷிவந்தியம் ஒதுக்கக் காட்டுப் பகுதியிலும் உள்ள காட்டு நிலங்களை நிலமில்லாத ஏழை மக்களுக்கு நீண்டகால குத்தகைக்கு விட அரசாங்கம் உத்திரவு இட்டுள்ளது.

**புலவர் பொ. பொன்னம்பலம்:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, முன்பு வருவாய்த் துறையோடு இந்த காட்டு வளத் துறை இணைந்திருந்த நேரத்திலே புதுக்கோட்டையிலே வெட்டவெளிப் பகுதிகளாக இருந்த இடங்களிலே விவசாயம் செய்து வந்தவர்களில் ஒரு சிலர், அடமானம் செய்து கொண்டுள்ளனர்; ஆனால், இப்பொழுது காட்டு வளத்துறை தனியாகப் பிரிந்த காரணத்தினால் நெடுங்காலந்தொட்டு விவசாயம் செய்தோரில் பெரும்பாலோர் பெரும் தொல்லைக்கு ஆளாகியிருக்கிறார்கள். எனவே, நம்முடைய அரசு அவர்களுக்கு ஏற்கனவே விவசாயம் செய்து வந்தவர்களுக்கு அடமானம் செய்து கொடுக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** சட்டப்படி அனுமதியில்லாமல் ஆக்கிரமிப்புச் செய்தால் அதை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கிறோம். சில இடங்களில் விவசாயத்திற்காக என்று குமரிச் சாகுபடிக்கு விடக்கூடிய முறையை அரசாங்கம் கையாள்கிறது. அதை மாற்றி பட்டாக் கொடுக்கும் முறையை நாம் ஒப்புக்கொள்ளவில்லை. அதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. காட்டுப் பகுதிகள் தமிழ் நாட்டிலே ஏனைய மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது காடுகள் மிகவும் குறைவாக இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. புள்ளிவிவரங்களும் அப்படித்தான் இருக்கின்றன. எனவே, காட்டுப் பகுதியைப் பாதுகாப்பதிலும் விவசாயத்தை வளர்ப்பதற்காகவும், நீர்நிலைகளை பாதுகாக்கவும் அவை பயன்படுகின்ற காரணத்தினால் கவனஞ் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். எனவேதான் பட்டா கொடுக்க முடியாது என்று சொன்னேன். சில இடங்களிலே வேண்டுமானால் குமரிச் சாகுபடிக்காக அனுமதித்து வருகிறோம்.

**திரு. வ. க. இராமசாசன்:** கோபி தாலுகாவில் தாளவாடி, உத்தியாலத்தூர் பகுதிகளில் ரெவின்யூ பூமிக்குள் பாரஸ்ட்கள், பொட்டல்காடுகள் இருக்கின்றன, அவற்றையும் லீஸுக்குக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** சில இடங்களில் குமரிச் சாகுபடிக்கு மரங்களுக்குச் சேதம் விளைவிக்காமல் அனுமதிக்கிறோம். அப்படி வேண்டுமானால் செய்வதற்குப் பரிசீலிக்கலாம்.



1970 ஜனவரி 27]

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** காட்டு நிலங்களுக்கு அருகாமையிலே உள்ள எஸ்டேட் உடைமையாளர்கள் அவற்றை ஆக்கிரமித்து வருகிறார்கள், கன்னியாகுமரி ஜில்லாவிலே. அவர்களிடமிருந்து அவற்றைக் கையகப்படுத்தி ஏழைகளுக்குக் கொடுக்க அரசாங்கம் வழிவகைகளைச் செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** நான் ஏற்கனவே சொன்னேன் யார் ஆக்கிரமிப்புச் செய்தாலும் வெளியேற்றத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். பட்டா கொடுக்கின்ற முறையிலே சில மாறுதலான முறைகளை அரசாங்கம் வைத்துக் கொண்டிருக்கிறது. குமரிச் சாகுப்படிக்குச் சில இடங்களைக் கொடுக்கிறோம். ஆக்கிரமிப்பு யார் செய்தாலும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**திரு. எம். சுரேந்திரன்:** காட்டுப் பகுதிகளிலே பாரஸ்ட் நிலம் என்று எல்லை வகுக்கப்பட்டுப் பல நிலங்கள் இருக்கின்றன. செடி, கொடி இல்லாமல் உபயோகமற்று இருக்கின்றன. அவற்றை விவசாயத்திற்குப் பயன்படுத்தினால் உணவு உற்பத்திக்கும், வேலை வாய்ப்புக் கொடுப்பதற்கும் ஏற்றதாக இருக்கும். எனவே அங்கே இருக்கிற நிலத்தை அப்படிக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற இடத்தினைப்பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். மேட்டூர் டாம் பகுதியில் உள்ளதைப்பற்றிக் குறிப்பிடுகிறார் என்று கருதுகிறேன். மரம் செடி இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, நீர் நிலைகளைப் பாதுகாப்பதற்கு அவை இருக்க வேண்டுமென்று அரசு கருதுகிறது. எனவே, அந்த நிலங்களை விடுவிப்பதற்கு இப்போதைக்கு அரசுக்கு உத்தேசம் இல்லை.

**திரு. தி. பொன்னுமலை:** தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலேகூட காட்டு இலாகாவிலிருந்து பல இடங்களை மறைந்த மாண்புமிகு அமைச்சர் கோவிந்தசாமி அவர்கள் நேரிடையாக வந்து பார்வையிட்டு அவற்றை வழங்கும்படியாகச் சொன்னார்கள். அதற்குப் பிறகு இப்பொழுது குமரி சாகுபடிக்குக் கொடுப்போம் என்று கொண்டு வந்திருக்கிறார்கள். மறுபடியும் அந்த இடத்தை வந்து பார்வையிட்டு விவசாயிகளுக்கு அவற்றை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இலட்சக் கணக்கான ஏக்கர் நிலங்கள் பாரஸ்டிலே மறைந்து கிடக்கின்றன. அதற்காக ஒரு கமிட்டி போட்டு பார்வையிட்டு எல்லாவற்றையும் விவசாயிகளுக்குப் பகிர்ந்து கொடுத்தால் உபயோகமாக இருக்கும். அதோடு அப்படிக் கொடுத்தால் பசுமை போய்விடும், வனங்கள் அழிந்து விடும் என்று சொல்கிறார்கள் (மணியடிக்கப்பட்டது). அங்கே மரம் செடி கிடையாது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியைப் போடுங்கள்.

**திரு. தி. பொன்னுமலை:** தென்னைமரமும் மாமரமும் வளரும். பசுமைப் புரட்சி ஏற்படும். அந்தக் காடுகளை விவசாயிகளுக்குக் கொடுக்க அரசுக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** நான் ஏற்கனவே சொன்னது போல குமரிச் சாகுபடிக்காகச் சில இடங்களில் கொடுக்கிறோம். அதுவும் விவசாய அபிவிருத்திக்காகத்தான் கொடுக்கப்படுகிறது. சில இடங்களில் விவசாயத்திற்காக இதுபோன்ற நிலங்களைக் கொண்டுவர வேண்டுமென்று பாரஸ்ட் அட்வைசரி கமிட்டி விவாதித்து இருக்கிறது. இதை இன்னும் ஆராய்வு செய்ய வேண்டும். சில இடங்களிலே குமரிச் சாகுபடிக்காகக் கொடுக்கலாம். பட்டாக் கொடுப்பது முடியாது என்பதை ஏற்கனவே நான் சொல்லியிருக்கிறேன்.

**திரு. மு. கந்தசாமி படையாச்சி:** தென்னாற்காடு மாவட்டத்தில் உளுந்தூர் பேட்டை ஃபாரஸ்ட் பகுதி நெய்வேலிக்கு ஒப்படைக்கப்பட்டு மறுபடியும் பாரஸ்ட் டிப்பார்ட்மெண்டாராலேயே எடுத்துக் கொள்ளப்பட்டது. ஏழை விவசாயிகளுக்கு உதவி செய்யும் வகையில் அந்த நிலங்களை விவசாயத்திற்காகப் பிரித்துக் கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிற இடத்தைப் பற்றிய விவரம் என்னிடம் இல்லை.

**திரு. இரா. மாணிக்கவாசகம்:** கோவை மாவட்டத்தில் தெங்குமராட்டா பக்கத்தில் 1,500 ஏக்கருக்கு மேற்பட்ட ஏக்கர் நிலத்திற்குப் பட்டா இதுவரை வழங்கப்பட வேண்டுமென்று விண்ணப்பங்கள் வந்திருக்கின்றனவா? அரசு தீவிரமாகப் பரிசீலித்து குமரிச் சாகுபடி அடிப்படையில் குத்தகைக்கு விட அரசு முன் வருமா? அப்படி விடுகிறபோது அதிகத் தொகை கொடுக்கின்றவர்களுக்கு விடாது குறைந்த தொகை அடிப்படையில் ஏழைகளுக்குப் பங்கீடு செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியபடி நிறைய விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. குமரிச் சாகுபடிக்கு விடும்போது சுமாரான தொகைக்கு ஏழைகளுக்காகத்தான் விடப்படுகிறது. விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து எவ்வளவு தூரம் குமரிச் சாகுபடிக்குக் கொடுக்க முடியுமோ அந்த அளவுக்கும் கொடுக்கப்படுகிறது.

**திரு. கே. சகாதேவக் கவுண்டர்:** செங்கம் தாலுக்காவில் பூமலைக் குப்பம் காட்டுப் பகுதியில் மெயின் வாய்க்கால் செல்லுவதால் தண்ணீர் ஊற்று 500 ஏக்கர் நிலங்களுக்குப் பயிர் செய்யும் வகையில் இருக்கிறது. அங்கு இருந்த மரம் செடிகள் எல்லாம் [illegible] விட்டன. அது நஞ்சைத் சாகுபடிக்கு லாயக்காக இருப்ப





தாலும், வன இலாகாவில் இருந்து குமரி சாகுபடிக்கு எடுத்துக் கொள்ளும்படி அனுமதி அளிக்கப்பட்டிருப்பதாலும் அந்த நிலங்கள் ஏழைகளுக்குப் பிரித்துக் கொடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** விவரம் இல்லை.

**திரு. கொளத்தூர் கோதண்டம்:** சாகுபடிக்கு லாயக்கில்லாத நிலங்களை குறிப்பிட்ட மக்கள் குடியிருக்க விரும்பினால் அவர்களுக்கு வீட்டு மனையாகக் கொடுக்க அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** கொடைக்கானல், ஊட்டி போன்ற மலைப் பகுதிகளில் மலைவாசிகள் தாழ்த்தப்பட்ட மக்கள் குடியிருக்க வீடு இல்லாமல் வீட்டு மனை கேட்டவர்களுக்கு சில இடங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஏழைகளுக்கு வீட்டு மனை அவசியம் என்று கோரினால் பரிசீலித்துக் கொடுக்கப்படும்.

THIRU B. VENKATASAMY: In certain areas it is classified as well-wooded area but there is no wood at all. Will the Government assign these lands to persons who had been cultivating them since twenty years?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** ஏற்கெனவே சொல்லியிருக்கின்றேன். இருபது ஆண்டுகள் விவசாயம் செய்திருந்தாலும் சரி, 30 ஆண்டுகள் விவசாயம் செய்திருந்தாலும் சரி அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலத்தை அனுமதியில்லாமல் எடுத்துக் கொண்டால் ஆக்கிரமிப்பு என்றுதான் கருதப்படும்.

**திரு. அ. ஆறுமுகம்:** காட்டு நிலங்களில் கிணறு தோண்டவும் நிலங்களைச் சீர்திருத்தவும் அரசாங்கம் கடன் வழங்குமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** அப்படி ஒன்றும் உத்தேசம் இல்லை.

**திரு. ஏ. சி. நரசிம்மன்:** வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள காடுகளில் பெரும் பகுதி பொட்டல் காடுகள். ஆரணித் தாலுகாவில் பூச்சிமலைக்குப்பம் போன்ற பகுதிகளிலும் வந்தவாசி தாலுகாவில் செங்கம் போன்ற பகுதிகளிலும் உள்ள காடுகளில் யூக்கலிப்டஸ் மரங்கள் வைக்கப்படுகின்றன. அது மிகவும் உஷ்ணமான மரம் என்றும் பூமியிலுள்ள நீரை உறிஞ்சி விடுகிறது என்றும் கூறுகிறார்கள். அதனால் பக்கத்திலுள்ள ஊற்று நீர் வற்றி விடுகிறது. அப்படிப்பட்ட யூக்கலிப்டஸ் மரங்களை வைப்பதற்குப் பதிலாக விவசாயத்திற்குப் பயன் படுத்துவதன் மூலம் உணவு உற்பத்தி பெருக்க முடியும். இதுபற்றி அரசு கவனம் செலுத்துமா?

**மண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** யூக்கலிப்டஸ் மரங்கள் ஊற்று நீரை உறிஞ்சி விடுகிறதென்பது ஓரளவுக்கு உண்மை. அதனால் யூக்கலிப்டஸ் மரங்களை அதிகமாக வளர்க்க வேண்டாம் என்று அர

சாங்கத்தில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அந்த நிலங்களை குத்தகைக்குக் கொடுத்துச் சாகுபடி செய்ய வேண்டுமென்பது முறைப்படி கவனிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி * இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்]

**2. நடை முறைக் கேள்விகள்.**—(அ) முதலமைச்சரின் உடல் நிலை.

THIRU K. VINAYAKAM : On a point of Order, Sir, Yesterday we read in the papers that our beloved Chief Minister is suffering from diarrohoea and that he has cancelled his engagements even to participate in Republic Day celebrations and to my horror I find that he is not here today in this House. May I know what is his present condition? I am interested in the Chief Minister. Will the Hon. Leader of the House make a statement regarding Chief Minister's health, whether he will come here tomorrow or not, because Governor's Address is being discussed here and it is he who has got to reply to the discussion on the Governor's Address.

DR. H. V. HANDE : I object to the word "horror" used by the hon. Member Thiru K. Vinayakam.

THIRU K. VINAYAKAM : Sir, the Hon. Chief Minister is always punctual. His presence is taken for granted. There is not even one day when he has not been present in this House. He has not come today. I am upset. "நான் திடுக்கிடுகிறேன்" The word is not offensive. The word "horror" is not an unaccepted word.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உடல் நிலை பற்றிய செய்திகள் நேற்றைய செய்தித் தாள்களில் வந்தன. நேற்றைக்கு முன் தினம் டயரியாவால் பாதிக்கப்பட்ட பலஹீனத்துடன் இருந்தார்கள். மருத்துவர்கள் தக்க நேரத்தில் வந்து தக்க மருத்துவ சிகிச்சை அளித்ததன் காரணமாக உடல் நிலை தேறி இன்று ஓய்வு பெற்று வருகிறார்கள். நாளை மன்றத்திற்கு வரலாமென்ற நிலையில் இருக்கிறார்கள். இப்போது ஓய்வு எடுத்துக்கொண்டு வருகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: சட்டப் பேரவை விதி 41 (3)ஐ தளர்த்த வேண்டுமென்ற ஒரு தீர்மானத்தை அவை முன்னவர் அவர்கள் கொண்டுவருவார்கள்.



**(ஆ) ஒற்றிவைப்புத் தீர்மானம் மீதான முடிவு குறித்து**

DR. H. V. HANDE : On a point of order, Sir; there are a large number of cycle-rickshaws outside about which I have given an adjournment motion. May I know what is the dis-disposal.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன என்று முதலிலே சொல்லுங்கள். அதற்குப் பிறகு செய்திக்குப் போகலாம். அட்ஜார்ன்மெண்ட் மோஷன் கொடுத்ததாகச் சொன்னீர்கள். இதுவரை என்னிடம் ஒன்றும் வரவில்லை. அட்ஜார்ன்மெண்ட் மோஷன் வராததற்குப் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்புவது கூடாது. இதற்கு விளக்கம் கொடுக்கும் முறை கிடையாது.

DR. H. V. HANDE : This is an emergency. Will you take it has not yet reached you, Sir.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : நான் காலை எட்டரை மணிக்கு வந்து என்னுடைய அறையில் உட்காருகிறேன். ஒன்பது மணி வரையில் அறையிலேயே தானிருந்தேன். உங்களுடைய அட்ஜார்ன்மெண்ட் மோஷன் அதுவரை வரவில்லை.

DR H. V. HANDE : I have given it to the Secretary but up the matter with the Secretary as to why it has not yet been given to you?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அது வேறு விஷயம்.

**3. அரசினர் தீர்மானங்கள்**

**(அ) விதி 41 (3) ஐ தளர்த்தல்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இப்போது மாண்புமிகு அவை முதல்வர் அவர்கள் விதி 41 (3) ஐ தளர்த்த வேண்டுமென்ற தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு சட்டப் பேரவை விதி 41 (3)-ன் கீழ் ஒரு கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டு வரக் கூடாது என்கிற விதியைத் தளர்த்த வேண்டுமென்று முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

**4. கவன ஈர்ப்பு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அடுத்து, முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு திரு. கரு. சிமைச்சாமி அவர்கள் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள். அவர்கள் சபைக்கு வரவில்லை. அடுத்து, புலவர் பொ. பொன்னம்பலம் அவர்கள் நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள்.

பெற்றுக்கொள்வது குறித்து வட்டார வருங்காலச் சேமநிதி ஆணையருடன் தாம் பேசுவதற்கு இயலும் என்று தொழிலாளர் ஆணையர் அவரிடம் தெரிவித்தார். வேலை தொடங்குவதற்கான விருப்பத்தைத் தொழிலாளர் சங்கங்கள் எழுத்து மூலம் இப்போது தெரிவித்து உள்ளன. இது குறித்து வருங்காலச் சேமிப்பு நிதி ஆணையர் நடவடிக்கை எடுத்து வருகிறார். நானும் மேற்கண்ட தொழிலாளர் வருங்காலச் சேமிப்பு முன்தொகை விரைவில் கிடைக்க ஆவன செய்யக் கூறியுள்ளேன்.

நிர்வாகத்தின் பிரதிநிதிகளுடன், சங்கங்களின் பிரதிநிதிகளுடனும் இந்த மன்றத்தில் உள்ள மூன்று சட்டமன்ற உறுப்பினர்களை வைத்துக் கொண்டு இரு நாட்கள் நான் விவாதம் நடத்தினேன். ஆலைகளைத் திறக்குமாறு ஆலை நிர்வாகப் பிரதிநிதிகளுக்கு அறிவுரை கூறப்பட்டது. நிர்வாகத்தினருடன் முழு அளவிற்கு ஒத்துழைக்குமாறு சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் அறிவுரை கூறப்பட்டது.

நல்ல முடிவை நாம் அனைவரும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

**திரு. சு. துரைசாமி :** அமைச்சர் அவர்களது அறிக்கையில் இருந்து அந்த மில்லில் சம்பளக் குறைப்பும் வேலைப் பளு அதிகரிப்பும் ஏற்படும் நிலை இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, தமிழக அரசு கார்ப்பரேஷன் மூலம் அதை ஏற்று நடத்தினால் அது லாபகரமான முறையில் நடப்பதற்கு வாய்ப்பிருப்பதாக அதிகாரிகள் தெரிவிப்பதன் காரணமாக அதை கார்ப்பரேஷன் மூலமாக ஏற்று எடுத்து நடத்த அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** மில்லைத் திறந்து நடத்துவதற்குரிய விதத்தில் இன்னும் ஏதாவது சாதகங்கள் கிடைக்குமா என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் உறுப்பினர் அவர்கள் சொல்கிற யோசனைப்படிதான் இறுதி முடிவு எடுக்க வேண்டுமென்றால் தொழில் துறையுடன் கலந்து வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க ஆவன செய்யப்படும்.

**திரு. சு. துரைசாமி :** அந்த ஆலை நிர்வாகத்தினர் கால தாமதம் செய்து வருகிற நிலை இருப்பதால் பேச்சு வார்த்தைகள் நடத்துவது என்றால் அதையும் நடத்திக் கொள்ளலாம். வேலைகளைத் துரிதப்படுத்துகிற வகையில் கார்ப்பரேஷன் எடுப்பதற்கு வேண்டிய முன் நடவடிக்கைகளை எடுத்தால் அது மில்லைத் திறப்பதற்கு உதவிகரமாக இருக்கும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டு பேச்சு வார்த்தையும் நடைபெறச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்துள்ள உறுப்பினர் திரு. துரைசாமி அவர்களையும் வைத்துக்கொண்டுதான் கடந்த இரண்டு நாட்களாக



பேச்சு வார்த்தைகள் நடத்தியிருக்கிறோம். அவர்களுக்கு அதன் முழு விளக்கங்களும் தெரியும். எப்படியாவது மில் திறக்கப்பட வேண்டுமென்றும், தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்றும் அரசு முனைந்து கொண்டிருக்கிறது. மேற்கொண்டு தீவிர நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்றால் உறுப்பினர் அவர்களுடன் இணைந்து அவர்கள் சொல்கிற அளவில் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள முயலலாம்.

## 5. அமைச்சர் அறிக்கை

**கால்நடை மருத்துவப் பட்டப் படிப்பு குறித்து, மானியக் கோரிக்கை விவாதத்தில் அளித்த பதிலுக்கு வேளாண்மை, அரிசன நலத்துறை அமைச்சர் அளித்திருந்த அறிக்கை**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** தலைவர் அவர்களே, தமிழ்நாட்டுச் சட்டமன்றப் பேரவையில் 21-3-1969 அன்று, மருத்துவம், பொதுச் சுகாதாரம், பொதுச் சுகாதாரம் குறித்த மூலதனச் செலவு ஆகியவற்றின் மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்திற்குப் பதிலளிக்கையில், முன்பு சுகாதாரத் துறையின் பொறுப்பு வகித்து வந்த வேளாண்மை-அரிசன நல அமைச்சர், இந்திய மருத்துவ முறைப் பட்டப் படிப்பும் ( (B.I M.) கால்நடை மருத்துவப் பட்டப் படிப்பும் ( B.V.Sc. ) நான்கு ஆண்டுக்கால அளவைக் கொண்டுள்ளதால், கால்நடை மருத்துவப் பட்டதாரிகளுக்கு வழங்கப்படுகிற அதே சம்பள விகிதங்கள் இந்திய மருத்துவ முறை பட்டதாரிகளுக்கும் வழங்கப்படும் என்று பேரவையில் தெரிவித்தார். கால்நடை மருத்துவப் பட்டப்படிப்பு குறித்த உண்மையான நிலை கீழ்க்கண்டவாறு உள்ளது :

"கால்நடை மருத்துவ கால்நடை வளர்ப்பு குறித்த கால்நடை மருத்துவ பட்ட பாட முறை 6½ திங்கள் செயற்முறைப்பண்ணைப் பயிற்சி உட்பட 6 கல்வி ஆண்டுகளைக் கொண்டதாகும்".

இவ்வாறு பார்க்கையில் கால்நடை மருத்துவப் பட்டப் பாட முறை 6 ஆண்டு என்ற நீண்ட கால அளவைக் கொண்டதாகையால் இந்திய மருத்துவ முறைப் பட்டப் படிப்பும், கால்நடை மருத்துவ பட்டப் படிப்பு எல்லாக் கூறுகளிலும் ஒப்பானவையெனக் கருத இயலாது.

3. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஆ) பேரவை அலுவலுடன் வரிசையில் மாற்றம்.

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN : Sir, in lieu of the motion already circulated, I move—

"That, under sub-rule (3) of Rule 21 of the Tamil Nadu Legislative Assembly Rules, Item IV—Second Supplementary Statement of Expenditure for the year 1969-70, and Item V—Government Bill—be taken up before Item III—Discussion on Governor's Address."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

**(அ) திருமயம் பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் மழையின்மையும் வரித் தள்ளுபடியும், கடன் வசூல் ஒத்தி வைப்பும்.**

**புலவர் பொ. பொன்னம்பலம் :** பேரவைத் தலைவர் அவர்களே, "திருமயம் தொகுதியில் அமைந்த பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியப் பகுதி முழுவதும், திருமயம் ஊராட்சி ஒன்றிய பகுதியில் விருவயல், வீரணுவயல், கோயிலாம்வயல், கணக்கன்வயல், அரு மந்தாவயல் பிரிவுகளும் மழையின்மையால் பெரிதும் பாதிக்கப்
மு. ப. 10-00 பட்டுள்ளதால் வரியைத் தள்ளுபடி செய்யவும், கடன் தொகைப் பங்கைக் கட்டாயப்படுத்தாமல் இருப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டியது பற்றிய" அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** வறட்சி நிலைமை மிகக் கடுமையாக இருந்தபோது, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் வறட்சியால் பீடிக்கப்பட்ட வட்டங்களில் திருமயம் வட்டமும் ஒன்றென 1969 ஏப்ரலில் அறிவிக்கப்பட்டது. வறண்ட பகுதிகளில் நிலவரி நிலுவைகள், அரசுக்கடன் தவணைகள் முதலியவற்றை வசூலிப்பதைத் தள்ளிப் போடுதல் உட்பட துயர் துடைப்பு நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் உடனடியாக மேற்கொண்டார். அரசு நிலுவைகளைப் "பைய" வசூலிக்கும் பொதுவான கொள்கை 1970-ஆம் ஆண்டில் தொடக்கப் பகுதி வரையில் பின்பற்றப்பட்டு வந்தது.

பெரும்பாலும் மாநிலத்தின் எல்லாப் பகுதிகளிலும் பருவ நிலைமை மேம்பாடடைந்து, அக்டோபர், டிசம்பர் திங்களில் நல்ல மழை பெய்ததால் தள்ளிப் போடப்பட்ட நிலுவைகள் வசூலிப்புச் சலுகையை நிறுத்த வேண்டுமென்று வருவாய்த்துறை வாரியம் அரசிற்குப் பரிந்துரைத்தது. இது குறித்துத் திருத்த ஆணைகள் பிறப்பிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டது. மாநிலத்தின் தற்போதைய நிதி நிலையை விழிப்புடன் ஆராய்ந்த பின்னர், வறட்சியின் விளைவாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த, அரசு நிலுவைகள் அனைத்தையும் வசூலிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு 1970 ஜனவரி இரண்டாம் வாரத்தில் அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

எனினும், உண்மையும் இடர்ப்பாடும் உள்ள நேர்வுகளில் அரசு நிலுவைகள் வசூலிக்கப்படுவதை ஒத்திப்போட வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர் விரும்பினால், அவ்வாறு அவர் செய்வதை இவ்வாணைகள் தடுக்கா. வாரிய நிலை ஆணைகளுக்கிணங்க, பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிலவரித் தள்ளுபடி வழங்குவது குறித்து, வருவாய்த்துறை அதிகாரிகள் உறுதியாக ஆய்வு செய்வர்.



**(ஆ) திருப்பூர் ஸ்ரீ ராமலிங்க சூடாம்பிகை மில் மூடப்பட்டதால் ஏற்பட்டுள்ள தொழிலாளரின் அவதியுறும் நிலை**

**திரு. சு. துரைசாமி :** தலைவர் அவர்களே, "திருப்பூரில் உள்ள ஸ்ரீ ராமலிங்க சூடாம்பிகை மில் கடந்த 1-11-1969-ம் தேதி முதல் நிர்வாகத்தின் போக்கு காரணமாக மூடப்பட்டு தொழிலாளர்கள் அவதியுறும் நிலை பற்றிய" அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, திருப்பூர், ஸ்ரீராமலிங்க சூடாம்பிகை ஆலை நிர்வாகத்தினர், தங்கள் ஆலைத் தொழிலாளர்கள் 21-10-1969 முதல் அறிவிப்பின்றி உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்வதாக 1-11-1969-ல் தொழிலாளர் ஆணையருக்குத் தெரிவித்தனர். ஆலை நிர்வாகத்தினர் தொழிலாளருடன் செய்து கொண்ட ஒப்பந்தப்படி 1968-ம் ஆண்டுக்கான பூரிப் பூதியத்தை நிர்வாகத்தினர் அளிக்கத் தவறியதனால் இந்த வேலை நிறுத்தம் ஏற்பட்டதாகத் தெரிகிறது. இவ் வேலை நிறுத்தத்தை யடுத்து 2-11-1969 முதல் கதவடைப்புச் செய்ததாக நிர்வாகத்தினர் அறிவித்ததனர். இதில் 1,050 தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

கோயம்புத்தூர், தொழிலாளர் துணை ஆணையர் உரையாடல் நிகழ்த்தினார். ஆனால் எத்தீர்வும் ஏற்பட முடியவில்லை.

தொழிலாளர் ஆணையர், தொடர்புடைய தரப்பினருடன் சென்னையில் 8-1-1970-ல் இது குறித்து விவாதித்தார். ஆலையை மீண்டும் திறந்து வேலையைத் தொடங்க வேண்டுமென்று சங்கங்கள் விரும்பியபோது தங்களுடைய நிதி இடர்ப்பாடுகளின் காரணமாக ஊதியங்களும் வேலைச் சுமை அளவுகளும் தக்கவாறு திருத்தியமைக்கப்பட்டு ஒவ்வொருவருக்கும் ரூ. 40 ஊதிய வெட்டு ஒப்புக்கொள்ளப்பட்டால் அன்றி, ஆலைகளை மீண்டும் திறந்து ஆதாயமாக நடத்துவது இயலாதென்று நிர்வாகத்தினர் தெரிவித்தனர். நிர்வாகத்தினர் ஆலையைத் திறந்து, தொழிலாளர்களுடன் அவர்களின் இடர்ப்பாடுகளைக் கலந்து பேசலாமென்று தொழிலாளர் ஆணையர் நிர்வாகத்தினரிடம் கருத்தறிவித்தார். மேலும் இழப்பு ஏற்படாதவாறு ஆலையை நடத்துவதற்கு இயலும் வகையில் ஏதேனுமொரு ஏற்பாடு செய்யப்படுகிற வரையில் ஆலையைத் திறக்க இயலாத நிலையில் இருப்பதாக நிர்வாகத்தினர் தெரிவித்தனர். தொழிலாளரின் துயரைத் தணிக்கும் வகையில் தொழிலாளர் வருங்கால்ச் சேமிப்பு சேர்மானத் தொகையிலிருந்து பணம் பெற்றுக் கொள்வதற்காவது தொழிலாளர்களுக்கு வசதி செய்ய வேண்டுமென்று கோயம்புத்தூர் மாவட்ட திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் பிரதிநிதியான திரு. எல். துரைசாமி விரும்பினார். தொழிலாளர்கள் வேலை தொடங்குவதற்கு விரும்பினால், அந்த விருப்பத்தை எழுத்து மூலம் தெரிவித்தால், அவர்களின் வருங்காலச் சேமிப்பு நிதிச் சேர்மானத் தொகையிலிருந்து பணம்

## 1969-70-ம் ஆண்டிற்கான கூடுதல் செலவுக்கான இரண்டாம் துணை நிதிக் கோரிக்கைகள் மீது பொது விவாதம்.

***திரு. அ. மாரிமுத்து:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களை இந்த அவையிலே கூற நான் ஆசைப்படுகிறேன்.

ஆண்டுதோறும், ஆளுநர் உரையும், வருஷத்திற்குப் பலமுறை திட்டமிடுதலும், துணை மானியக் கோரிக்கையும் வருகிறதே தவிர, இந்த நாட்டு மக்களுக்கு ஏதாவது ஒரு நலன் இருக்கிறதா என்று எண்ணிப் பார்க்கும்பொழுது அது நல்ல முறையிலே அமையவில்லை என்பதை நான் வருத்தத்தோடு இந்த அவையிலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்திலே, இந்தத் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பிறகு இந்த மூன்று ஆண்டுக் காலத்திற்குள்ளாக எத்தனையோ பல கோடிக் கணக்கான ரூபாய்களுக்குத் திட்டமிட்டபோதிலும் அங்குள்ள ஏழை எளிய விவசாயிகள் ஏதாவது ஒரு நலன் அடைந்திருக்கிறார்களா என்றால் நிச்சயமாக இல்லை. குறிப்பாக வடிகால் வசதிகளைப் பற்றி, தஞ்சை மாவட்டத்திலுள்ள ஆடுதுறை தொகுதியைப் பொறுத்தவரையில் சொல்ல வேண்டுமென்றால் அதற்காக ஒரு நாளையே ஒதுக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அரசு மானியக் கோரிக்கைகளிலே இந்த நாட்டிலுள்ள அத்தனை மக்களுக்கும் ஒரு நலன் இருக்கக்கூடிய வகையிலே நல்ல திட்டங்களை நாம் தீட்ட வேண்டும். ஏதோ திட்டமிடுவதில் பஞ்சமில்லை, ஆனால் அதை நம்பியிருக்கும் அத்தனை மக்களுக்கும் சுத்தமாக எந்த ஒரு நலனும் இல்லை என்பதை நாம் அறிய வேண்டும். வடிகாலைப் பொறுத்தவரையில் தஞ்சை மாவட்டத்திலே, எனது தொகுதியாகிய ஆடுதுறை தொகுதியிலே உள்ள மன்னிப்பழவாறு பற்றி இந்த அவையிலே பல முறை எழுப்பப்பட்டிருக்கிறது. அந்த குறையை, இன்றைய தினம் முதலமைச்சராக இருக்கும் மாண்புமிகு திரு. கருணாநிதி அவர்கள் அன்று பி.டபிள்யூ.டி. மந்திரியாக இருந்தபொழுது, குடந்தையிலே, விவசாயிகள் அத்தனை பேர்களையும் கூட்டி, அங்குள்ள குறைகளை நிறையக் கேட்டு வந்திருக்கிறார்கள். அன்று மந்திரியவர்கள் அத்தனை பேர்களுக்கும் முன்னாலே இறுதியிலே வாக்குறுதி அளித்தது என்ன என்பதை இந்த அவையிலே கூற ஆசைப்படுகிறேன். இன்று இந்தக் குடந்தையிலே கூடியுள்ள இந்த மாவட்டத்திலுள்ள அத்தனை விவசாய மக்களுடைய பாசன வடிகால் வசதிகளைப் பற்றிக் கேட்டபோது, 'மன்னிப பழவாறு என்ற பிரச்சினை அதிகமாக எழும்பியது. அந்தக் குறையை நான் சென்னை சென்றதும் துரிதமாகச் செயல்படுத்துகிறேன்' என்று வாக்குறுதி தந்துவந்துள்ளார்கள். அன்று வாக்குறுதி தந்த அன்றையப் பொதுப் பணித்துறை அமைச்சரவர்கள் இன்று பொறுப்புள்ள முதலமைச்சராக இருந்தும்கூட அந்த வாக்கு செயல்படவில்லை என்பதை இந்த நேரத்தில் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளுகின்றேன்



[திரு. அ. மாரிமுத்து]

அடுத்தபடியாக, உங்களுக்கெல்லாம் நன்கு தெரியும், தஞ்சை மாவட்டத்திலே எத்தனையோ பிரச்சினைகள் எழும்பிக் கொண்டிருக்கின்றன. சென்ற ஆண்டிலே அந்த வெண்மணி விபரீதம் நடந்தது. இந்த அவையிலே உள்ள அத்தனை பேர்களும் உள்ளபடியே கண்ணீர் வடித்துள்ளனர். அந்தக் குறையை இங்கும் கூறியிருக்கிறார்கள். அத்தகைய மக்களின் நலன்களை இன்று நல்ல முறையிலே கவனித்திருக்கிறதா என்று பார்த்தால் நிச்சயமாக இல்லவே இல்லை. குறிப்பாக நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். தஞ்சை மாவட்டத்திலே கூலிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக சில ஆய்வுக் குழுக்களை அனுப்பி அமைச்சர்கள் முதல் அத்தனைபேர்களும், அரசு அலுவலாளர்களும் கூலியை நிர்ணயம் செய்தார்கள். அதனால் ஏற்பட்ட விபரீதத்தைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். குறிப்பாகக் கீழத் தஞ்சையிலே இருக்கக்கூடியவர்களுக்கு மட்டும் கூலியை நிர்ணயம் செய்தார்கள். ஆனால் மேலத் தஞ்சையிலேயும் நிறைய விவசாயிகள் இருக்கிறார்கள். குறிப்பாக, எனது தொகுதியாகிய ஆடுதுறை தொகுதியும் அந்த மேலத் தஞ்சையிலேதான் உள்ளது. கீழத் தஞ்சையிலே அறுவடைக் கூலியை அதிகமாக நிர்ணயித்தும், மேலத் தஞ்சையிலே பழைய காலங்களிலே நிர்ணயிக்கப்பட்டதையே வாங்கும்படியும் சொன்னார்கள். எங்கள் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த முதலமைச்சரவர்கள் கீழத் தஞ்சையிலே வி[illegible] அத்தனை ஏழை எ[illegible]க்கூடியவர்களுக்கு அதிகக் கூலி கிடைக்கும் வ[illegible] கில் தரக்கூடிய [illegible]ட்டினார்கள். ஆனால் மேலத் தஞ்சையிலே அந்த [illegible] டைய [illegible] எந்தவிதமான பயனும் இல்லாமல் போகிறது. அந்த மூ[illegible] காரணத்தினாலே, சென்ற ஐப்பசி மாதத்திலே குறுவை அறுவடையின்போது நடந்ததைப் பற்றி அங்குள்ள ஆட்சித் தலைவர் பொறுப்புள்ள அதிகாரியான சூப்பிரண்டெண்ட் ஆஃப் போலீசைக் கேட்டால் அவர்கள் என்னைவிட நன்றாக விளக்கம் சொல்வார்கள். தினம் தினம் மேலத் தஞ்சை பார்டரிலே உள்ள விவசாயக் கூலிகட்கும் மிராசுதார்களும் உள்ள குறைகளைத் தீர்க்கவே அங்கு பொறுப்புள்ள மாவட்ட அதிகாரிகளுக்கு நேரம் இருந்ததே தவிர, மற்ற எந்த நல்ல காரியத்தையும் கவனிக்க முடியாத நிலை ஏற்பட்டது. குறிப்பாக, ஒரு காரியத்தை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். முன்னாலேயிருந்த, நான் சார்ந்துள்ள கட்சி ஆட்சி புரிந்தபொழுது சட்டம் வந்தது உங்களுக்கு நன்றாகத் தெரியும். விவசாயிகளுக்கும், உழவிலே ஈடுபட்ட அத்தனைபேர்களுக்கும் 60-40 என்ற விதத்தில் சட்டத்தைத் தீட்டினார்கள். அப்போது முக்கிய வாரச் சட்டம், தஞ்சாவூர் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் என்று அமைந்தது. அது, ஒரு மாவட்டத்தைப் பல கூறாக்கி, கீழத் தஞ்சைக்கு இவ்வளவு கூலி, மேலத் தஞ்சைக்கு இவ்வளவு கூலி என்று இன்று முதலமைச்சரவர்கள் செய்ததுபோல் இல்லை. நாங்களெல்லாம் நம்பிக்கொண்டிருந்தோம். தஞ்சை மாவட்டத்தை சார்ந்தவர்கள் முதலமைச்சராக ஆகியிருக்கிறார்கள். நல்லதொரு

முறையிலே கூலிப் பிரச்சனை தீரும் என்று தஞ்சை மாவட்டத்திலுள்ள நாங்கள் நம்பிக்கொண்டு இருந்தோம். அப்படிப்பட்ட நிலையில் எங்களைக் கேளாமலே அமைச்சர்மு முதல் அத்தனை பேர்களும் மாவட்ட ஆட்சித் தலைவரை கேட்டுத் தெரிந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

அது மட்டுமல்ல, நீண்ட காலமாக இந்த தானியக் கட்டுப்பாடு தமிழகத்திலே நிலவியிருந்தது தெரியும். முதலமைச்சரவர்கள் நீக்கிவிட்டதாக அறிக்கையின் மூலம் படித்திருப்பீர்கள். ஆனால் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அந்தத் தடை ஏனோ நீங்காமல் இருப்பதைக் கண்டு, தஞ்சை மாவட்டத்திலேயுள்ள அத்தனை விவசாயிகளும், அவர்கள் உழைப்பிலே, உணவு தானியப் பெருக்கிலே அக்கறை அற்றவர்களாக இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஏதோ ஒரு பத்திரிகையில் நான் படித்தபோது இந்தக் கட்டுப்பாட்டை நீக்கியது குறித்து ஒரு கருத்துப்படம் போட்டிருப்பதைப் பார்த்தேன். அதில், கையிலே துப்பாக்கியை எடுத்து நமது முதல் அமைச்சர் தோளிலே தாங்கிக்கொண்டு ஒரு வீரரைப்போல் புலியைச் சுட்டு, அதைச் சங்கிலி[illegible] இழுத்துக் கொண்டு வருவதைப்போல் அந்தக் [illegible]ரிக்கைகளிலே [illegible]டப்பட்டிருந்தது. உண்மையிலேயே முதலமை[illegible] நலன் இருக்[illegible]ஒரு வேட்டையாடி இந்தப் புலியைக் கொண்[illegible] வேண்[illegible]ருக்கிறார்கள். அவர் சுட்ட புலியை கட்டித் தூக்கிச் செல்லவேண்டும். ஆனால், அவர் சங்கிலியால் கட்டி இழுத்துச் செல்கிறார்கள், எனவே நாங்கள், அவர் வேட்டையாடிச் சுட்டதிலே புலி நன்றாகச் சுடப்படவில்லை, உயிர் போகவில்லை என்று எண்ணிக்கொண்டிருந்தோம். அப்படிப்பட்ட வீரர் பயிற்சியைப் பெற்ற அவர்கள், தஞ்சை மாவட்டத்திலேயுள்ள கட்டுப்பாடு என்ற புலியைச் சுடாமலே வைத்திருக்கிறார்கள். ஏதோ காரணத்தால், குறிப்பாக ஆடுதுறை தொகுதிக்கு அப்பால் உள்ள அணைக்கரை பகுதி, கொள்ளிடத்திற்கு அப்பால் திருச்சி மாவட்டம் என்று ஒன்று இருக்கிறது, அதைச் சேர்ந்த பல கிராமங்களில் எங்களைப்போல் விவசாயிகள் இருக்கிறார்கள். அங்கு விவசாயம் செய்யும் அத்தனைபேரும் ஒரு மூட்டை நெல்லை 40 முதல் 60 வரை விற்கக் கூடிய ஒரு நிலை அங்கு ஏற்படுகிறது. அப்படிப்பட்ட ஒரு நிலை அங்கு அவர்களுக்கு எப்படி ஏற்பட்டது என்பதைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆறு கூறுக்கே இருந்த பாவத்தின் காரணத்தினால், தஞ்சை மாவட்டத்திலுள்ள நாங்கள் எல்லாம் அதி தீவிர சாகுபடித் திட்டத்தை, அதிலே அக்கறையை எடுத்துக் கொண்டு உற்பத்தியைப் பெருக்குவதனால் செலவினங்கள்தான் கூடியிருக்கிறதே தவிர உற்பத்திப் பெருக்கத் தானியத்திற்கு அரசு நிர்ணயித்துள்ள விலைக்கு விற்கும் நிலை ஏற்பட்டு விடுகிறது. இந்த ஆண்டிலே அதிகமாக மழை பெய்து அதிக உற்பத்தியைப் பண்ணியிருந்தாலும்கூட வியாபாரத்திற்குக் கொள்முதலுக்குக் கொடுக்கும்



பொழுது நாங்கள் பாதிக்கபட்டிருக்கிறோம் என்பதை இந்த அவையிலே உள்ளவர்கள் நன்கு அறிவீர்கள், அமைச்சர்கள் அறிவார்கள் என்று கூறிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்தத் துணை மானியக் கோரிக்கையைப் பார்க்கும்பொழுது நாலே முக்கால் கோடி ரூபாய்க்குச் செய்திருக்கிறார்கள். இப்படிப் பல மானியக் கோரிக்கைகள் அதிகரித்து வருகின்றனவே தவிர, திட்டங்கள் அதிகரித்து வருகின்றனவே தவிர, அவற்றால் பயன் எதுவுமில்லை என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எனது தொகுதியைச் சேர்ந்த திருப்பனந்தாள் வட்டாரம் இருக்கிறது. அங்கு 45 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. ஏதோ ஒரு சில ரோடு வசதிகள், பஞ்சாயத்து யூனியனுக்குச் சொந்தமாக உள்ள ரோடுகள், பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலும் கூடி தீர்மானத்தைத் தீட்டி நல்ல முறையில் செயல்படுத்தக்கூடிய அளவில் அங்கு இருக்கிறது. ஆனால் அதற்கு அப்பால், பஞ்சாயத்திற்குச் சொந்தமான நடைபாதைகள், பஞ்சாயத்திற்கு நிதி வசதி இல்லாத காரணத்தினால் அன்று முதல் இன்று வரை, கிட்டத்தட்ட 3, 4 ஆண்டுகளாகப் பாதிக்கப்பட்டு இருக்கிறது என்பதை அங்கு விஜயம் செய்யும் அமைச்சர்கள் முதல் அத்தனை பேர்களும் நன்கு அறிவார்கள் என்று நான் கருதுகிறேன்.

குறிப்பாக, அங்குள்ள அத்தனை ஏழை எளிய கிராமப்புற மக்களெல்லாம் அமைச்சர்களிடத்தில் தரக்கூடிய கோரிக்கைகளெல்லாம் 'மழை காலத்தில் நடப்பதற்குக்கூட நடைபாதை இல்லாத நிலையில் நாங்கள் இருக்கிறோம்' என்பதுதான். அதை பஞ்சாயத்துகள் தான் செய்யவேண்டும். பஞ்சாயத்து யூனியன்கள் செய்யக் கூடாது என்ற முறையில் பஞ்சாயத்து யூனியன்களுக்கு அரசாங்கம் தாக்கீது அனுப்பியிருக்கிறது. இந்த முறை மாற்றப்பட்டு, குறிப்பாக தஞ்சை மாவட்டத்திற்கு மட்டும் தனியாக ஒரு சலுகையைக் காட்டி, அங்குள்ள விவசாயிகள் அத்தனை பேர்களுக்கும், நடைபாதை வசதியற்றவர்களாக இருக்கிறார்கள் என்பதை உணர்ந்து, தனிச் சலுகை காட்டி, நல்ல முறையில் நடைபாதைகளைச் செப்பனிட்டுக் கொடுப்பதற்கு பஞ்சாயத்து யூனியன்கள் ஏற்பாடு செய்யவேண்டும் என்று அரசு உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக, திருப்பனந்தாள் பஞ்சாயத்து யூனியன் கிராமங்களிலுள்ள அத்தனை நிலங்களுக்கும் நாங்கள் சர்ஜார்ஜ் கொடுத்து வந்திருக்கிறோம். வரியை விதித்தும், அந்தப் பகுதி மக்களுக்கு இப்படிப்பட்ட வசதியை நல்ல முறையில் கொடுப்பதற்கு வசதியற்றவர்களாகவும், தகுதியற்றவர்களாகவும் இருக்கிறோம். நான்கு ஆண்டுகளுக்கு முன்பு காங்கிரஸ் கட்சி ஆட்சிபீடத்தில் இருந்த பொழுது எங்களுக்கெல்லாம் ஒரு உத்தரவு வந்தது. அதிதீவிர சாகுபடி திட்டம் அமலாகும் பிரதேசத்திலுள்ள விவசாயிகள் நிறைந்த எல்லா கிராமங்களுக்கும் எத்தனை லட்ச ரூபாய் செல

வழித்தால் நல்லதொரு முறையில் நடைபாதைகள் அமைத்துத் தரமுடியும் என்று பஞ்சாயத்து யூனியன்களைக் கேட்டிருந்தார்கள். நாங்களும் அந்தக் கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள ரோடுகள் எத்தனை மைல்கள் நீளம் இருக்கின்றன. இத்தனை மைல்கள் விஸ்தீரணமுள்ள ரோடுகளுக்கு இத்தனை லட்சம் ரூபாய் செலவழிக்கவேண்டும் என்று திட்டம்போட்டு, கணக்கெடுத்து, அப்பொழுதே அரசுக்கு அனுப்பி வைத்திருக்கிறோம். அன்று முதல் பலதரப்பட்ட இடங்களிலும், கவுன்சிலின் கூட்டங்கள் கூடுகிற நேரங்களிலும் நாங்களும் இந்தக் குறையைப் பற்றி சொல்லியிருக்கிறோம். தஞ்சை மாவட்டத்தில் ரோடு வசதிகள் இல்லாத காரணத்தினால் எரு, தழைகளை இட முடியாத நிலையில் இருக்கிறோம். ஆகவே, எங்களுக்கு வேண்டிய ரோடு வசதிகளை அமைத்துத் தருவது சாலச் சிறந்ததாக இருக்கும் என்று கூறி, எனக்குப் பேசுவதற்கு அனுமதி தந்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, உரையை முடிக்கிறேன். வணக்கம்.

திருமதி. கே. பி. ஜானகியம்மாள்: தலைவர் அவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். தமிழகத்தில் சமீபத்தில் உயர் திரு. கான் அப்துல் கபார்கான் அவர்கள் சுற்றுப்பிரயாணம் செய்யக்கூடிய காலத்தில், பழம்பெரும் தேசத் தலைவராகிய அவர் ஒரு உண்மையை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அந்த உண்மை என்னவென்றால், சுதந்திரம் கிடைத்து 25 ஆண்டுகளுக்குப் பிறகும், நான் சுற்றுப் பிரயாணம் செய்துவரக்கூடிய எல்லா இடங்களிலும் ஏழைகள் ஏழைகளாகவே இருக்கிறார்கள். பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாக ஆகியிருக்கிறார்கள் என்ற நிலைமையைத்தான் பார்த்து வருவதாகக் கூறியிருக்கிறார். இது மிகவும் உண்மை என்பதை யாரும் மறுக்க முடியாது. இன்றைக்கு தமிழகத்தில் குறிப்பாக பலவித முன்னேற்றகரமான திட்டங்களை நிறைவேற்றி வரக்கூடிய காலத்திலும், ஏழை மக்கள் இன்னும் துன்பத்தில்தான் இருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. விவசாயத் தொழிலாளிகளுக்கு 5 மாதங்களுக்குத்தான் வேலை இருக்கிறது, 7 மாதங்களுக்கு வேலை இல்லை என்ற நிலைமை நீடித்துக் கொண்டிருக்கிறது. அப்படி வேலை கிடைக்கக்கூடிய காலத்திலும்கூட, புஞ்சை பிரதேசத்தில் வேலை செய்யக்கூடிய மக்களுக்கு, 75 பைசா, ஒரு ரூபாய் அல்லது ரூ. 1¼ என்ற முறையில் அவர்கள் குறைந்த கூலிக்குக்கூட வேலை செய்யவேண்டிய நிர்ப்பந்தம் சில மாவட்டங்களில் சில வட்டங்களில் இருக்கிறது என்பதைப் பார்க்கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இப்படிப்பட்ட நிலைமையில் பெருவாரியாக இருக்கும் விவசாயத் தொழிலாளிகளின் வாழ்க்கை மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அந்த நிலைமையை மாற்றுவதற்கு ஏதாவது நடவடிக்கை எடுத்தால் தான். ஏழை மக்கள் வாழ்க்கையில் முன்னேற முடியும். தமிழ்நாடு பூராவிலும் உள்ள விவசாயத் தொழிலாளிகளுக்கு குறைந்தபட்சம், பெண்களுக்கு ரூ. 3, ஆண்களுக்கு ரூ. 4 என்று கூலி



கிடைக்கக்கூடிய ஒரு சட்டத்தை அரசு நிறைவேற்றவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நஞ்சைப் பிரதேசத்தில் வேலை செய்யக்கூடிய விவசாயத் தொழிலாளர்களுக்கு தஞ்சை ஜில்லாவில் ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறதே, அந்தச் சட்டம் தஞ்சை ஜில்லாவிற்கு மட்டு மல்லாமல், தமிழ் நாட்டில் நஞ்சை பிரதேசத்தில் வாழக்கூடிய சகல விவசாயத் தொழிலாளர்களுக்கும் பொருந்தக்கூடிய முறையில் தமிழ்நாடு பூராவுக்கும் அந்த சட்டத்தை விஸ்தரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் நாட்டில் கிராமங்களில் வேலை செய்யக்கூடிய, வெட்டியான்கள் என்ற கிராம தலையாரிகளை—தாழ்த்தபட்ட மக்கள்தான் அதிகமாக 'வெட்டியான்கள்' என்ற வேலையில் இருப்பவர்கள்—சிக்கனத்தைக் கருதி, இவர்களை வேலையிலிருந்து நீக்கியிருக்கிறார்கள். இவர்கள் இன்றைக்கு வேலையை இழந்து நிற்கிறார்கள். மீண்டும் இவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்வதற்கு வேண்டிய உத்தரவை அரசு உடனே பிறப்பிக்க வேண்டும். குறைந்தபட்ச சம்பளத்தில் வேலை செய்யக்கூடிய இவர்களை வேலையிலிருந்து நீக்கிய உத்தரவை ரத்து செய்து, மீண்டும் அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தில் பல தனியார், கல்லூரிகள் இருக்கின்றன. அந்தக் கல்லூரிகளில் வேலை செய்யக்கூடியவர்கள், அதாவது சமையல் பகுதியிலே வேலை செய்பவர்கள், வாட்ச்மேன், ஸ்வீப்பர்கள், ஆயாக்கள் போன்ற வேலைகளில் ஈடுபட்டவர்கள் ஆகியோர்களுக்குக் குறைந்தபட்ச சம்பளம் கிடையாது. அவர்கள் வேலைக்கும் உத்திரவாதம் கிடையாது. இவர்களை எல்லாம் இப்பொழுது தனியார் கல்லூரி நிர்வாகிகள் தங்கள் இஷ்டம்போல் எப்பொழுது வேண்டுமானாலும் வேலையை விட்டு நீக்கலாம். எப்பொழுது வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம் என்ற நிலைமை இருக்கின்றது. இப்படிப் பட்ட கல்லூரிகளிலே வேலை செய்யக்கூடிய கீழ்த்தர சிப்பந்திகளுக்கு குறைந்தபட்ச சம்பளமும் வேலைக்கு உத்திரவாதமும் கொடுக்கக் கூடிய ஒரு சட்டத்தை அரசு நிறைவேற்ற முன்வர வேண்டும் என்று கேட்டுகொள்கிறேன்.

அதே நேரத்தில் தமிழகத்தில் பாலிடெக்னிக்ஸ், தொழில் பள்ளிகள் சில இருக்கின்றன. அங்கே வேலை செய்யக்கூடிய ஆசிரியர்களுக்கு வேலைக்கு உத்தரவாதம் கிடையாது. 30—4—1968-ல், வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கக்கூடிய இந்தக் காலத்தில், தொழில் பள்ளிகளில் பணியாற்றிவரும் ஆசிரியர்களை வேலையிலிருந்து நீக்கக்கூடாது என்று தொழில் கல்வி இயக்குனர் சுற்றறிக்கை விட்டிருந்ததாக அறிகிறேன். என்றாலும், அதையும் மீறி ஆசிரியர்கள் பல பேர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டு இன்று வேலை இழந்து நிற்கிறார்கள். இந்த ஆசிரியர்களுக்கு மீண்டும் வேலை கொடுக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இம்மாதிரி ஊழல்கள் நடக்கக் கூடிய தொழில் பள்ளிகளை அரசே ஏற்று நடத்துவது என்பது பொருத்தமாக இருக்கும். ஒரு

[திருமதி. கே. பி. ஜானகியம்மாள்] [1970 ஜனவரி 27

சில இடங்களில்தான் இம்மாதிரி தொழில் பள்ளிகள் நடக்கின்றன. அந்தத் தொழில் பள்ளிகள் வியாபாரக் கூடங்களாக இயங்குவதற்கு நாம் அனுமதிக்கக்கூடாது. ஆகவே, அவைகளை அரசே ஏற்று நடத்துவதற்கு முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தில் 84 நகரசபைகள் இருக்கின்றன. அவைகளில் பணியாற்றி நீண்ட காலமாக வேலையிலிருந்து ஓய்வு பெற்ற ஊழியர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கு பென்ஷன் கொடுக்கப்பட்டு வருகிறது. அந்தக் காலத்திலிருந்த சம்பளத்தை ஒட்டி அவர்களுக்கு பென்ஷன் கொடுக்கப்பட்டு வருகிறது. அவர்கள் தங்களுடைய பென்ஷனை அதிகமாக்க வேண்டுமென்ற கோரிக்கையை சமீபத்தில் அரசுக்கு விண்ணப்பமாக அனுப்பியிருக்கிறார்கள் என்று அறிகிறேன். அந்தக் கோரிக்கையை பரிசீலனை செய்து, அப்படிப்பட்டவர்கள் தமிழகத்தில் சில ஆயிரக்கணக்கான பேர்கள்தான் இருக்கிறார்கள். அவர்களுக்கு பென்ஷனை அதிகரிப்பதற்கு அதிகமாக தொகை ஆகாது. சில லட்சம் ரூபாய் போதும்; அனுதாபத்தோடு கவனித்து அவர்களுக்கு பென்ஷன் தொகையை உயர்த்திக் கொடுக்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வரட்சிப் பணிகள் தமிழகத்தில் தீர்ந்துவிட்டன என்று கருதக் கூடாது. இன்னும் அநேக இடங்களில் அரிசன மக்கள் குடிநீர் இல்லாத நிலையில் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டி, திருமங்கலம், ஆண்டிப்பட்டி, சேடம்படிட்டி போன்ற பகுதிகளில் அரிசன மக்களுக்குக் குடி நீருக்காக கிணறுகள் வெட்டப்பட்டபொழுது, சில ஊழல்கள் நடந்துள்ளதால் அந்தப் பணிகள் சரியான முறையில் நடைபெற வில்லை. மீண்டும், அந்த இடங்களில் நல்ல முறையில் குடி நீர்க் கிணறுகளை வெட்டித் தருவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, வேலையில்லாத நாட்களில் பொதுப் பணித்துறை மூலம் நடைபெறும் ரோடு போடுதல், கிணறு வெட்டுதல் போன்ற வேலைகளைக் கொடுத்து சிறு ஊதியம் கிடைக்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்தி அந்தத் தொழிலாளர்களைப் பாதுகாக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அரிசனங்கள் மயானத்திற்கு பிரேதங்களைக் கொண்டு செல்வதற்கு ரோடு வசதி இல்லாமல் பல இடங்களில் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட இடங்களில் ரோடு வசதி செய்ய ஏற்பாடு செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பிரதானமாக குடிநீர்க் கிணறுகளைப் பஞ்சாயத்து போர்டுகளால் வெட்டிக் கொடுக்க முடியாது என்றாலும் கூட, அரசாங்கமே அதற்கான தொகைகளை, வறட்சிப் பணியின் மூலம் நிறைவேற்றிக் கொடுக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.



1970 ஜனவரி 27]

கடைசியாக, சென்ற பட்ஜெட் கூட்டத்தின்போது, அரசாங்கம் இரண்டு முக்கியமான விஷயங்களைப் பற்றி குறிப்பிட்டிருந்தார்கள். ஒன்று ஜமாபந்தியை ஒழிப்பது. இரண்டு ரெவின்யூ போர்டை எடுத்துவிடுவது. இவை எந்த அளவிற்கு நிறைவேறியிருக்கின்றன. இப்பொழுது இருக்கும் நிலை என்னவென்று பார்த்தால், ஜமாபந்தியை ஒழிப்பது, ஒரு மாவட்டத்தில், அதிலும் ஒரு வட்டத்தில் பரீட்சார்த்தமாகத்தான் அமுலாக்கப்படவுள்ளதாக அறிகிறேன். ஏன் எல்லா இடத்திற்கும் விஸ்தரிக்க முடியவில்லை என்று அறிய விரும்புகிறேன். அதற்கான காரணங்கள் என்ன என்பதைப் பற்றி அமைச்சரவர்கள் கூறவேண்டும். மேலே இருக்கும் ரெவின்யூ போர்டு அவசியமற்றது. செல்வந்தர்கள் தங்களுக்கு ஏதாவது காரியம் கீழே உள்ள அதிகாரிகளிடம் ஆக வில்லை என்றால், மேலே ரெவின்யூ போர்டில் வந்து சாதித்துக் கொள்ளும் நிலைதான் இன்று இருக்கிறது. ஆகவே, சர்க்கார் கொண்டு வந்த இரண்டு திட்டங்களையும் அமுலாக்க வேண்டிய நடவடிக்கைகள் அரசு உடனடியாகச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அளவில் பேச சந்தர்ப்பம் கொடுத்த தலைவருக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

* **திரு. ந. தருமலிங்கம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1969-70-ம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கைகளை ஆதரித்து சிலவற்றைக் கூற விரும்புகிறேன். ரூ. 4.75 லட்சம் அளவிற்கு துணை மானியங்கள் கோரியிருப்பதை ஆதரிப்பது நம்முடைய இன்றியமையாத கடமையாகும். சென்ற ஒரு ஆண்டு காலத்தில் நம் மாநிலத்தில் நடைபெற்றிருக்கும் பணிகளைப் பொறுத்தும், விடுபட்டுப்போன பணிகளுக்காகவும் சட்ட மன்றத்தின் அனுமதியைக் கோரி இந்தத் தொகையைக் கேட்டிருக்கிறார்கள். இவை நியாயமானவை என்பதால் நாம் இவற்றை ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

முக்கியமாக சாலை மானியம் பற்றி ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளப் பூர்வமாக வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறார்கள். முன்பெல்லாம் சாலைகளுக்குத் தமிழ் நாட்டு அரசு வழங்கும் மானியம் மக்கள் அடிப்படையில் கொடுக்கப்பட்டது. அது தீங்கானது என்று கருதப்பட்டு வந்தது. புதிய கருத்தை அமுலாக்கும் முறையில் இன்றைக்கு சாலைகளின் முக்கியத்துவம், அவற்றின் நீளம் இந்த அடிப்படையில், நீண்டகாலமாக இருந்து, குறைபாட்டைப் போக்கும் அளவில் அது அமைந்திருக்கிறது. முன்னாலே இருந்தது போல இல்லாமல், இனிமேல் இந்தப் புது முறையில், இந்த அடிப்படையில் சாலைகளுக்குத் தொகைகள் வழங்கப்படும் என்பதை யாரும் வரவேற்கத் தயங்க மாட்டார்கள். இதிலேயும் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அது பள்ளத்தாக்காக இருக்கும் பகுதி. வயலோடு வயலாக அமைந்திருக்கும் சாலைகள். வேறு வேறு மாவட்டங்களில் போல் இல்லை. இங்கெல்லாம் முழுமையான

[திரு. ந. தர்மலிங்கம்] [1970 ஜனவரி 27

சாலைகள் போடுவது என்பது இயலாத காரியம். சென்ற ஆண்டு தஞ்சையில் சரஸ்வதி மகாலில் நடந்த இருபோக சாகுபடி கருத்தரங்கில் கூட இந்தச் சாலை மானியத்தைப் பற்றி கோரப்பட்டது. அதில் இப்பொழுது மாற்றம் செய்திருப்பது மக்களால் வரவேற்கப்படும்.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் பாசனத்திற்குத் தண்ணீர் போதாது என்கிற குறை ஒரு பகுதியில் இருந்தாலும், வெள்ளக் காலங்களில், வடிகால் பிரச்சினைதான் முக்கியமானது. அதிலும் முக்கியமாக கீழ்த்தஞ்சையில் நாகப்பட்டினம், திருத்துறைப்பூண்டி, பட்டுக்கோட்டை முதலிய பகுதிகளில், மழை காலங்களில் எங்கேயோ 10, 20 மைல்களுக்கு அப்பால் பெய்யும் மழையின் காரணமாக பல்வேறு ஆறுகளில் வெள்ளம் வந்து, அது கடலுக்குப் போக வேண்டி இருப்பதால், எங்கும் ஒரு வெள்ளக் காடு போல் ஆகிவிடுகிறது. இதைப்பற்றி கூர்ந்து கவனித்து, இப்பொழுது ஒரு திட்டத்தை நிறைவேற்றி திருத்துறைப்பூண்டி, பட்டுக்கோட்டை, மன்னார்குடி முதலிய பகுதிகளில், பெரும் தீங்காக இருக்கும் பாமணியாறு வெள்ளத்தை கடலில் கொண்டு விட வெள்ள காலத்திலும் பாதகம் வராமல் தடுக்கத் தக்க வகையில் பணி புரிந்து வருகிறார்கள். நீண்ட காலமாக இருந்து வந்திருக்கும் குறையை நீக்க வகை செய்திருக்கிறார்கள். 12.20 லட்சம் ரூபாய் அளவில் திட்டம் போட்டு வேலை செய்து கொண்டிருப்பதால் அது அந்தப் பகுதி மக்களால் பெரிதும் வரவேற்கப்படுகிறது. எங்கள் பகுதியில் பாமணியாறு திட்டம் ஒரு 'ஸ்ட்ரெயிட் கட்' திட்டம். அதே போல இன்னும் இரண்டு திட்டங்கள் இருக்கின்றன. அவற்றையும் எடுத்து அரசாங்கம் செயல்பட்டால், எங்கள் பகுதிக்கு நல்ல நன்மையைச் செய்ததாக இருக்கும். அவை வளவனாறு ஸ்ட்ரெயிட் கட் திட்டம் ஒன்று. இன்னொன்று கிளை தாங்கி வடிகால் திட்டம் அந்தத் திட்டங்கள் இரண்டையும் நிறைவேற்றிவிட்டால் எந்தக் காலத்திலும் எப்படி வெள்ளம் வந்தாலும், வானமே பொத்துக்கொண்டு பொழிந்தாலும், வெள்ளம் வந்து பாதகம் ஏற்படும் என்கிற நிலையே இருக்காது.

இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். நீதித்துறை அலுவலர்களுக்கு வீடு கட்ட தனி மானியம் ஒதுக்கியிருப்பது. 'குடியாட்சி வெற்றியுடன் செயல்பட வேண்டுமெனில், நீதித் துறைக்குத் தனி உரிமை அளிக்க வேண்டுவது முதல் தேவையாகும். இத்தேவையை நிறைவேற்ற, நீதித் துறை அலுவலர்கள் அச்சம், அவாவின்றித் தங்கள் கடமைகளை ஆற்றுவதற்காக அவர்களுக்குச் சிறப்பான இட வசதிகளை நல்க வேண்டியுள்ளது. அவர்களுக்கு வீட்டு வசதி செய்து தர வேண்டியது அத்தகைய தேவைகளில் ஒன்றாகும். இதை ஏற்றுக்கொண்டு, நமது மாநில நீதித் துறை அலுவலர்களுக்கு மொத்தம் ரூ. 80 லட்சம் செலவில் வீடுகள் கட்டித் தர நாம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளோம். நீண்ட காலத்திற்கு முன்னதாகவே ஒப்பளிப்பு வழங்கியிருக்க வேண்டிய இத் திட்டத்திற்கு, மானியம் 47-ன் கீழ் சட்ட மன்றத்தின் இசைவு வேண்டப்பட்டுள்ளது' என்று நிதியமைச்சர் கூறியிருக்கிறார்கள். அச்சத்திற்கு இடம் இல்லாமல், ஆசைக்கு இடம் கொடுக்காமல், எப்பொழுதும் சிலரால் பணியாற்ற முடியாது. இதை முழுதாக உணர்ந்து, நம் அரசு ரூ. 80 லட்சம் அளவில் வசதி செய்து கொடுக்க முற்பட்டிருப்பதை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. எனக்கு முன் பேசிய சட்டமன்ற உறுப்பினர் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவர், எதுவுமே செய்யவில்லை என்று குறிப்பிட்டார்கள். நியாயமாகச் செய்ய வேண்டியதைச் செய்திருப்பதைப் பாராட்ட வேண்டும் என்று கூற விரும்புகிறேன் என்ன காரணத்தால் அப்படிப் பாராட்ட முடியவில்லையோ தெரியவில்லை. அவரும் ஒரு ஊராட்சி ஒன்றியத் தலைவர். அவரே சென்ற ஆண்டு சாலை மானிய குறைவு பற்றிக் குறிப்பிட்டார்கள். அவர்களுக்குத் திருப்தி ஏற்படும் வகையில் இதுவும் இப்பொழுது இருப்பதால், இதையாவது பாராட்டியிருக்கலாம்.



1970 ஜனவரி 27] [திரு. ந. தர்மலிங்கம்]

இந்த அளவோடு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

**திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்** : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தின் முன்னால் கொடுக்கப்பட்டிருக்கும், துணை மானியக் கோரிக்கைகள் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

பின் தங்கிய மக்கள் நலனுக்கு என்று ஒரு குழுவை அரசாங்கம் அமைத்திருப்பதை நான் பாராட்டுகிறேன். அந்தக் குழுவும் ஏட்டளவில் இல்லாமல், மக்களுக்கு உண்மையிலேயே நன்மை பயக்கும் அளவில், செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அது ஒரு வருஷத்தில் தன் பணியை முடிக்கும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதேபோல ஒரு வருஷத்திற்குள்ளாவது அது தன்னுடைய பணியை முடித்து, பின்தங்கிய மக்கள் நலனை நல்ல முறையில் நிறைவேற்ற கவனம் செலுத்தும் அளவில் காரியங்கள் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிே;ன்.

குடிநீர் பிரச்சினைக்காக இந்தத் துணை மானியத்தில் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கிராமங்களில், குடிநீர் கஷ்டம் மிகவும் அதிகமாக இருக்கிறது. சென்ற வருஷத்தில் ஏற்பட்ட பஞ்சத்தால், மக்கள் எவ்வளவு கஷ்டப்பட்டார்கள் என்பது அரசுக்கு நன்கு தெரியும். ஆகவே, இந்தக் குடிநீர்ப் பிரச்சினைக்கு என்று ஒரு தனி போர்டை அமைத்து இருப்பது பாராட்டத்தக்கது. இந்த போர்டின் மூலம் குடிர்நீப் பிரச்சினையை பாவலாகத் தீர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஜில்லாவாரியாக, தாலுகாவாரியாக ஒவ்வொரு பகுதிக்கும் குடிதண்ணீருக்காக திட்டமிட்டு அதற்கான பணத்தை ஒதுக்கித் தந்து மக்கள் எல்லோருக்கும் குடி தண்ணீர் வசதியை நல்ல முறையில் செய்துதர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்] [1970 ஜனவரி 27

அடுத்தபடியாக, பத்திரப் பதிவு முறையை எடுத்துக் கொண்டால், முன்பிருந்த நிலைக்கும் இப்பொழுதுள்ள நிலைக்கும் மாறுபாடு அதிகமாக உள்ளது. ஏழை எளிய விவசாயிகள் நிலம் வாங்க முடியாத கஷ்டமான நிலை இருக்கிறது. இப்பொழுது ஒரு புதிய ரேட்டை ஃபிக்ஸ் பண்ணியிருக்கிறார்கள். இந்த ரேட்டின்படி பார்த்தால் நிலம் மூவாயிரம் ரூபாய்க்கு மேல்தான் இருக்கிறது. மூவாயிரம் ரூபாய் மதிப்புக்கு உள்ள ஸ்டாம்ப் ஒட்ட வேண்டியிருக்கிறது. யாராவது இரண்டாயிரம் ரூபாய்க்கு ஒரு நிலத்தை வாங்கினாலும் அந்த ஏழை விவசாயியும் அந்தப் பத்திரத்திற்கு இரண்டாயிரம் ரூபாய் மதிப்புள்ள ஸ்டாம்புடன் மேற்கொண்டு ஸ்டாம்ப் ஒட்ட வேண்டியிருக்கிறது. அதாவது, மூவாயிரம் ரூபாய் மதிப்புள்ள நிலத்திற்குண்டான ஸ்டாம்ப் ஒட்டவேண்டியிருக்கிறது. இதனால் ஏழை விவசாய மக்கள்தான் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இரண்டாயிரத்திற்கு ஸ்டாம்ப் ஒட்டினால் இன்னும் ஓராயிரத்திற்கு ஸ்டாம்ப் அதிகமாகக் கட்ட வேண்டிய நிலை இருக்கிறது. இதனால் ஏழை விவசாயிகளுக்கு நிலம் வாங்குவதற்கு முடியாமல் அதிகக் கஷ்டப்படுகிறார்கள். ஒரு சில இடங்களில் மோசமான நிலங்கள் இருக்கின்றன. அதற்கும் அந்த ரேட்டின்படிதான் அதாவது மூவாயிரத்திற்கு உண்டான ஸ்டாம்ப்பை ஒட்ட வேண்டுமென்று சொன்னால் எப்படிப் பொருந்தும்? உயர்ந்த நிலங்களுக்கு வேண்டுமானால், இது சரியானதாக இருக்கலாம். மோசமான நிலங்களுக்கு ஸ்டாம்ப் கட்டணத்தைக் குறைத்துக் கட்டுவதை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆகவே, அரசு பத்திரப் பதிவுத் துறையிலுள்ள இந்த கஷ்டத்தை நல்லபடியாக கவனித்துப் போக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மாவட்ட நிர்வாகத்தை எடுத்துக் கொண்டால், 'இங்கிருந்து சில பேப்பர்கள் அங்கே போகின்றன, அங்கேயிருந்து சில பேப்பர்கள் இங்கே வருகின்றன' என்ற அளவில் பேப்பர்கள் திரும்பத் திரும்ப சென்றுகொண்டிருக்கின்றனவே தவிர, காரியம் நடைபெறுவதில்லை. ஒரு இடத்திலேயிருந்து வந்த பேப்பரில் ஒரு கேள்விக் குறியைப் போட்டுத் திருப்பி அனுப்புகிறார்கள். இதனால் காலதாமதம்தான் அதிகமாகிறது. ஆகவே, காலதாமதத்தை தவிர்த்து, மாவட்ட நிர்வாகம் நல்ல முறையில் இயங்குவதற்கு வேண்டிய வழி வகைகளை அரசு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒவ்வொரு இடத்திலும் பைல்களின் குறிப்பைப் பரிசீலித்து தக்க நடவடிக்கைகளை உடனடியாக எடுக்குமாறு அரசாங்கம் கவனித்துக் கொள்ள வேண்டும்.

மாவட்ட நிர்வாகங்களைப் பொறுத்தவரைக்கும் எங்கும் லஞ்ச ஊழல் அதிகமாக இருக்கிறது. என் தொகுதியில் மட்டுமல்ல, பொதுவாக எல்லா இடங்களிலும் அதிகமாக இருக்கிறது. எந்த வேலைக்கும் லஞ்சம் கொடுத்தால்தான் காரியம் நடக்கும் என்ற நிலைமை இருக்கிறது. இந்த நிலைமை வளருவது நாட்டிற்கு நல்லதல்ல. இது மிகவும் மோசமான நிலையை உண்டாக்கக் கூடியது. ஆகவே, அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து, லஞ்ச ஊழலை அடியோடு ஒழிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1970 ஜனவரி 27]

அடுத்தபடியாக, மருத்துவத்தைப் பொறுத்தவரையில், கிராமப்புற பகுதிகளில் மருத்துவ வசதி குறைவாக இருக்கிறது. ஆங்காங்கே பஞ்சாயத்து யூனியன்களில் ஆஸ்பத்திரி என்று ஒன்று இருக்கிறதே தவிர, அங்கும் சரியான வசதிகள் இல்லை. ஜனத்தொகை அடிப்படையில் எல்லா இடங்களி[illegible] ஆஸ்பத்திரி ஏற்படுத்தப்பட வேண்டும். அந்[illegible]துவம் நல்ல முறையில் நடத்துவதற்கு [illegible] செய்ய வே[illegible] ஜனத்தொகை அடிப்படையில் ஆஸ்பத்[illegible]களை அமைத்து, கிரா[illegible] மக்களுக்கு வசதி செய்து கொடுக்க வே[illegible]மென்று கேட்டுக்கொ[illegible]கிறேன்.

பாசன வசதிகளைப் பொறுத்தவரை[illegible] கிழக்கு இராம[illegible]புரம் பகுதி மிகவும் பின்தங்கிய நிலை[illegible]தான் இருக்கிற[illegible] கிழக்கு இராமநாதபுரம் பகுதி எப்போது[illegible]தான் இருக்கிறது. ஒரு தண்ணீர் பாய்ச்ச[illegible] இரண்டு தண்ணீர் பாய்ச்சல் முறைகளிலேதான் இங்குள்ள பயிர்கள் சாவியாகப் போகக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. அதைத் தடுப்பதற்கு அரசு வழிவகை செய்யவேண்டும். வைகை ஆற்றில் தண்ணீர் அதிகமாக வரும்போது, தண்ணீரைத் தேக்கி வைத்துக்கொள்ள வழி செய்ய வேண்டும். கிழக்கு இராமநாதபுரம் பகுதிக்குத் தண்ணீர் கொடுக்க திருப்பத்தூர், திருவாடனை தாலுகாவிற்குச் சமீபத்தில் ஊளவளவு என்ற கால்வாயை இரண்டு மைல் தூரம் அளவிற்கு வெட்டி ஏரியூர் கண்மாய் வழியாக உப்பாற்றில் சேர்த்தால் அப்பகுதிகளுக்கு வசதியாக இருக்கும். ஆகவே, அந்த இரண்டு மைல் கால்வாயை வெட்டி தண்ணீர் வசதியைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தண்ணீர்ப் பிரச்சினை தீர வேண்டுமென்றால், நாட்டிலே உள்ள எல்லா ஜீவ நதிகளையும் தேசிய மயமாக்க வேண்டும். சில ஜீவ நதிகள் மைசூருக்குச் சொந்தம், சில ஜீவ நதிகள் ஆந்திராவுக்குச் சொந்தம், சில நதிகள் கேரளாவிற்குச் சொந்தம் என்ற நிலைமை இருக்கிறது. இதனால்தான் தண்ணீர்ப் பாசனம் நல்ல முறையில் செய்ய முடியாமல் இருக்கிறது. ஆகவே, எல்லா ஜீவ நதிகளையும் தேசிய மயமாக்கி, நாடு பூராவிலும் தண்ணீர்ப் பாசனம் நல்ல முறையில் நடைபெற வழிவகை செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, கடல் ஓரச் சாலைகள். தொண்டியிலிருந்து கடலையொட்டி செல்லும் பாதை மிக மோசமான நிலையில் இருக்கிறது. நல்ல பாலங்களை அமைத்துத் தர வேண்டும். மழைக் காலத்தில் அந்தப் பகுதி மக்கள் போக்குவரத்திற்கு மிக்க கஷ்டப்படுகிறார்கள். அந்தச் சாலை மிகப் பழமையானதாக இருப்பதால் அதைச் செப்பனிட்டுத் தர வேண்டும். மத்திய அரசாங்கத்திற்கு எடுத்துக் கூறி செப்பனிட்டுத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தஞ்சாவூர், திருச்சி ஜில்லாக்களை என்னுடைய ஜில்லாவுடன் இணைக்கக்கூடிய சாலைகள் இருக்கின்றன. குறுக்கே செல்லும் ஆறுகளில் பாலங்கள் இல்லாததால் போக்கு

வரத்து தடைப்படுகிறது. ஆகவே, நல்ல பாலங்களை அமைத்து இரண்டு ஜில்லாக்களையும் இணைத்துத் தரவேண்டும். பொதுமக்களுக்கும் இந்தச் சாலைகள் அவசியமானது என்ற முறையில் அரசினர் தனிக் கவனம் செலுத்தி நல்ல வசதிகளைச் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. க. ர. நல்லசிவன் :** மதிப்பிற்குரிய உதவித் தலைவர் அவர்களே, இப்போது உணவு தானியத்தின் மீதுள்ள கட்டுப்பாட்டை இந்த அரசாங்கம் நீக்கியிருக்கிறது. அதன்மீது இந்த மன்றத்தில் பல கருத்துக்கள் சொல்லப்படுகின்றன. உணவு தானியக் கட்டுப்பாடு நீக்கப்பட்டதன் காரணமாக எதிர்காலத்திலே விலைவாசிகள் ஏற்றம் பெற்று, அதனால் ஜனங்கள் பெரும் தொல்லைகளுக்காளாவார்கள் என்று சொல்லப்படுகிறது. மற்றொரு பக்கத்தில், இந்தக் கட்டுப்பாடு வந்த காரணத்தினால் விலைவாசிகள் குறைந்து, விவசாயிகள் உணவு தானியத்தை உற்பத்தி செய்ய முடியாத சூழ்நிலை வரலாம் என்று சொல்லப்படுகிறது. என்னைப் பொறுத்தவரையில் நான் சொல்லிக்கொள்ள விரும்புவதெல்லாம், நூற்றுக்கு அறுபது சதவிகித மக்கள், அதாவது உற்பத்தி செய்பவர்களும், வாங்கிச் சாப்பிடுபவர்களும் இந்தக் கட்டுப்பாட்டை விரும்பவில்லையென்பதே. இதை யாரும் மறுக்க முடியாது. கட்டுப்பாட்டின் மூலமாகக் கிடைக்க வேண்டிய வசதிகள் ஒரு சிலருக்குத்தான் கிடைக்கிறது. அதாவது, நகரங்களிலே இருப்பவர்களுக்குத்தான் கட்டுப்பாட்டின் மூலம் நியாயமான விலையில் உணவுத் தானியம் கிடைக்கிறது. ஆனால் கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய ஏழை எளிய மக்களுக்கு அந்தவிதமான வசதிகள் கட்டுப்பாட்டின் மூலமாகக் கிடைப்பதில்லை. ஆகவே, அரசாங்கம் கட்டுப்பாட்டை நீக்கியதைப்பற்றி அஞ்ச வேண்டியதில்லை, சபிக்கவேண்டியதில்லை. இதனுடைய விளைவுகளை ஒருமாத காலம் பொறுத்திருந்து பார்க்கலாம். கட்டுப்பாட்டை கொண்டுவரக்கூடிய சர்க்காரே கட்டுப்பாட்டை நீக்கக்கூடிய சர்க்காராகவும் இருக்க வேண்டும். இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில் இது பாராட்டத்தக்க ஒரு சாதனை. மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இந்த முடிவு எடுத்ததற்காக அவர்களைப் பாராட்டுகிறேன். கட்டுப்பாட்டை வைத்திருப்பதா, நீக்கிவிடுவதா என்பதெல்லாம் ஒரு பெரிய விவாதத்திற்குரிய விஷயம். நூற்றுக்கு 60 சத விகித மக்கள், பத்து பைசா அதிகமாகக் கொடுத்து உணவுப் பொருள்களை வாங்கினாலும், நல்ல அரிசியை சாப்பிட வேண்டுமென்று நினைக்கிறார்கள். சமீபத்தில் ஒரு சம்பவம் நடந்தது. கோவையிலுள்ள நியாய விலைக் கடைகளிலிருந்து ஒரு சிறிது அரிசியை எடுத்துவந்து என்னிடம் காட்டினார்கள். அதை நான் முதலிலே கல் என்றுதான் நினைத்தேன். ஏனெனில் அவ்வளவு சிவப்பாக இருந்தது. வாயில் போட்டுப் பார்த்தவுடன் தான் அது அரிசி என்று தெரியவந்தது. அவ்வளவு பழுப்பு நிறம் போன்ற அரிசி. ஆனால் இப்பொழுது தாங்கள் விரும்பும் அரிசியை



வெளிச் சந்தைகளில் வாங்கி உண்ண முடிகிறது. நாம் ஒரு துறையிலே கட்டுப்பாட்டைக் கொண்டுவரும்போது, பல்வேறு துறைகளிலும் கட்டுப்பாடு இருந்தால்தான், அதாவது சொத்து, வருமானம், சம்பளம், லாபம் போன்ற எல்லாத் துறைகளிலும் கட்டுப்பாடு இருந்தால்தான் உணவுத் துறையிலும் சரியாக இது இயங்க முடியும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே நான் வேண்டிக்கொள்வது எல்லாம் 6 மாதம், ஒரு வருடம் பொறுத்திருந்து கவனமாகப் பார்த்து வரவேண்டும்.

அடுத்தபடியாக, படி அரிசித் திட்டம் ஆரம்பத்தில் இருந்தே சொல்லிக் கொண்டிருக்கிறேன். தயவுசெய்து அதைக் கண்டிப்பாக எடுத்துவிடவேண்டும். 4 கோடி மக்களில் 40 லட்சம் மக்களுக்கு படி அரிசி கொடுக்கிறோம் என்று சொல்லும்போது அதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. 40 லட்சம் மக்களுக்கு படி அரிசி போட்டதனாலேயே 8 கோடி ரூபாய் அரசாங்கத்துக்கு நட்டம் என்றால் 4 கோடி மக்களுக்கு படி அரிசி போடுவதானால் எத்தனையோ கோடி நட்டப்பட வேண்டியதாக இருக்கும். அதுவும் இயலாத காரியம். ஆகவே படி அரிசித் திட்டத்தையே ஒழித்துக் கட்டவேண்டுமென்று விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகளைப் பொறுத்தவரையில் ஒரு விஷயம். இப்போது விலைவாசிகள் இறங்கிக் கொண்டிருக்கின்றன. ஒரு அளவான விலைக்கு வந்து நின்றுவிடும் என்று கருதுகிறேன். வாங்கி உபயோகிப்போர்களுக்கும் அது நியாயமான விலையாகவும் அமையக்கூடும். ஆயினும் ஒரேயடியாக விலை வீழ்ந்து போகாதவாறு அரசு கவனித்து வரவேண்டும். வேறு சில மாநிலங்களில் கண்டிரோல் இல்லாது விவசாயிகளுக்கும், வாங்கி உபயோகிப்போர்களுக்கும் நடுவில் அரசு இருந்து இரண்டு பேர்களுக்கும் விலை நியாயமானதாக இருக்க எப்படி கண்காணித்து வருகிறதோ அது போல தேவை ஏற்பட்டால் நம் அரசும் எல்லா நடவடிக்கையையும் எடுத்தாகவேண்டும். தேவையானால் மீண்டும் கட்டுப்பாட்டைக் கொண்டுவரத் தயங்கக் கூடாது.

திராவிட முன்னேற்றக் கழகம் பதவிக்கு வந்து 3 ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்னும் ஒரு ஆண்டுதான் இருக்கிறது. அடுத்த ஆண்டு தேர்தலைப்பற்றித்தான் நீங்களும் சரி, எல்லாக் கட்சிகளும் சரி கவனம் செலுத்த நேரம் இருக்கும். கடந்த 3 ஆண்டுகளாக நிலச் சீர்திருத்தத்தைப்பற்றி ஒன்றுமே கவனிக்கவில்லை. முன்பு அதைப்பற்றிக் குறிப்பிட்டபோது கூட அண்ணா அவர்கள் நாம் இதைப்பற்றி அதிகமாகப் பேசக் கூடாது. பேசினால் நிலக்காரர்கள் உஷார் ஆகிவிடுவார்கள் என்றார். உடனடியாக ஏதாவது செய்யப்படும் என்று நினைத்தோம். ஒன்றும் நடக்கவில்லை. கண்டிப்பாக உச்சவரம்பை 15 ஸ்டாண்டர்ட் எக்காராகக் குறைக்க வேண்டும். கயக்கம் காட்டக் கூடாது. அப்போதுதான் நிலம் இல்லாத ஏழை விவசாயிகளுக்கு நிலம் கிடைக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. க. ர. நல்லசிவன்] [1970 ஜனவரி 27

இங்கே 20 லட்சம் மக்கள் இருக்கிறார்கள் என்றால் அவர்களில் 5 லட்சம் மக்களுக்கு வீடு கிடையாது. வீடு இல்லாதவர்களுக்கு இப்போது நிதியமைச்சராக இருக்கக்கூடியவர்கள் முன்பு இருபதாயிரம், முப்பதாயிரம் பேருக்கு வீட்டு மனை வழங்கப்படும் என்று பத்திரிகையில் சொன்னதைப் பார்த்தேன். உடனே அதற்கு மறுப்பு வெளியிடப்பட்டதையும் பார்த்தேன். எதற்காக இந்தக் குளறுபடி? வீடு இல்லாதவர்களுக்கு 2 சென்ட் நிலம் கொடுக்கக்கூடாதா? குடியிருக்க 2 சென்ட் நிலமில்லாதபோது இந்த நாட்டு குடிமகன் என்ன குடிமகன்? வீடு இல்லாதவர்களுக்கு வீட்டு மனை வழங்க இந்த அரசு திட்டவட்டமாக நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும்.

அடுத்தபடியாக, புதிய கல்லூரிகளைத் திறப்பதற்கே பிரேக் போடவேண்டும். எம்.ஏ., எம்.எஸ்.ஸி. படித்தவர்கள் எத்தனை பேர்கள் வேலையில்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள்? இது என்ன பாடத் திட்டம்? இராமன் கல்லூரி, இலக்குமணன் கல்லூரி என்று தொகுதிக்கு ஒன்றிரண்டை திட்டமில்லாது திறந்து கொண்டு போவதில் பயன் இல்லை. பாடத் திட்டங்களையே மாற்றுங்கள். என்னவோ நான் படிக்காதவன், அதனால் சொல்கிறேன் என்று எண்ணக்கூடாது. இன்று காலை, ஒரு எம்.ஏ. படித்தவன் வேலை கிடைக்கவில்லை, நீங்கள்தான் வேலை தேடித்தர வேண்டும் என்று என் காலில் விழுந்தபோது நான் வெட்கப்பட்டேன். வேதனையாக இருக்கிறது. நிச்சயமாக ஒருவருக்கு வேலை வாங்கித் தரக்கூடிய சக்தி என்னிடத்தில் இல்லை. இந்த நாளில் நாளைக்கொரு புதுக் கல்லூரி திறந்துகொண்டு போவது ஒரு மேனியாவாக இருக்கிறது, நாடகமாக இருக்கிறது. கல்வி அமைச்சர் இங்கிருப்பதினால் சொல்கிறேன். இதற்கொரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்.

அடுத்தபடியாக, சர்க்கார் ஊழியர்கள், பள்ளி ஆசிரியர்கள் இவர்கள் இருக்கிறார்களே—இவர்களுடைய ஆதரவு எங்களுக்குக் கிடைத்தது என்று நீங்களே சொல்லியிருக்கிறீர்கள். இன்றைக்கு அவர்களிடையே பெரும் அதிருப்தி நிலவி வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாக முன்பு ஒரு ஏக்கருக்கு 30, 20 கியூசெக்ஸ் நீர் பாய்ச்சியது போக இப்போது ஒரு க்யூசெக்ஸில் நிறைய ஏக்கர் சாகுபடி செய்ய முடியும் என்பதைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இப்படி சிக்கனமாகப் பாசனம் செய்து அதிகம் விளைவிக்கக்கூடிய திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

■திரு. ஆர். நாகசுந்தரம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. துணை மானியக் கோரிக்கை மீது ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். பள்ளிக்கூட பாட திட்ட புத்தகங்களை அரசாங்கமே ஏற்று வெளியிடுவது என்கிற கொள்கையை இதற்கு முன்னால்



1970 ஜனவரி 27] [திரு. ஆர். நாகசுந்தரம்]

இருந்த ஆட்சியாளர்கள் சொல்லிக்கொண்டு வந்தார்களே தவிர நம்முடைய ஆட்சியில்தான் அதைச் செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதற்காக ஒரு குழுவையே நியமித்து தனி அதிகாரியை நியமித்து ஏற்பாடு செய்திருக்கிறோம். அதற்காக இந்தத் துணை மானிய ஒதுக்கீட்டில் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள்.

அடுத்து பர்மா அகதிகளுக்கு தனி கூட்டுறவு பாங்க் ஏற்படுத்தி வசதிகளை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

வறட்சி ஏற்பட்ட காலத்தில் பல இடங்களில் தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டது. முன்பெல்லாம் சென்னையில் குடி தண்ணீர் கஷ்டம் என்றால் மக்களை நகரத்தைவிட்டு வெளியேற்றுவதிலேயே அக்கறை காட்டி வந்தார்கள். ஆனால் நம் அரசு அவசரம் அவசரமாக 12 ஆயிரம் வடிமுனைக் குழாய்களை அமைத்து சென்னை நகர மக்களின் தண்ணீர்ப் பஞ்சத்தை வெற்றிகரமாகச் சமாளித்திருக்கிறது. அதற்காக இந்த துணைமானியக் கோரிக்கையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதைப் பார்க்கலாம்.

வீராணம் திட்டம், கூவம், பக்கிங்ஹாம் கால்வாய் திட்டம் ஆகியவற்றுக்காக மற்றவர்கள் சொல்லி வந்ததை நம் அரசு செயல்படுத்தும் பணியில் தீவிரமாக ஈடுபட்டிருப்பதோடு துணைமானியக் கோரிக்கையில் நிதி ஒதுக்கீடு கோரப்பட்டிருக்கிறது.

அதுமட்டும் அல்ல, இதற்குமுன்னால் காங்கிரஸ்காரர்களே செய்யாத காரியத்தை, அதாவது ஐந்தாயிரம் தியாகிகளுக்கு நம் அரசு அவர்கள் வாழ்நாளிலே செய்யக் கொள்ளார் தனது வாழ்நாளில் கஷ்டப்பட்டதுபோல கஷ்டப்படக்கூடாது என்பதற்காக, தியாகி மானியம் என்று வழங்கியிருக்கிறது. காந்தியார் நூற்றாண்டு விழாவில் காந்தியாரோடு சிறைசென்ற தியாகி தில்லையாடி வள்ளியம்மாள் நினைவாக ஒரு காலனியை தில்லையாடியில் நம் அரசு ஏற்படுத்தியிருக்கிறது. சுதந்திர விழாவை இந்த நாட்டிலே உள்ள அனைவருக்கும் சொந்தம் என்று கருதி கோட்டையிலே அத்தனை அரசியல் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசச் செய்ததையும், காங்கிரசார் பாராட்டியிருப்பார்கள் என்று நினைத்தேன்.

கடந்த ஒரு வார காலமாக பொதுப்பணித்துறை அமைச்சர் எல்லா எம். எல். ஏ, எம். பிக்களையும் அழைத்து எஸ். இ. இ. இ., ஆகியோரையும் அழைத்து அந்தந்த மாவட்டத்தில் என்ன என்ன வேலைகள் நடந்துள்ளன, இனி நடக்க இருப்பவை எவை எவை என்றெல்லாம் விவாதித்தார். செய்யாத வேலைகளை உடனடியாக முடிக்கக் கேட்டுக்கொண்டார். அதிலே நான் அதிகமாகப் பார்த்தேன், காங்கிரஸ் உறுப்பினர்களை, அவர்கள் மிகவும் அக்கறை காட்டினார்கள். என்னுடைய தொகுதியில் அது செய்யவில்லை, இது செய்யவில்லை என்றும், விரைவிலே செய்ய வேண்டுமென்றும் சொன்னார்கள். இங்கே அவர்களில் யாராவது ஒருவர் இந்த மன்றத்திலே அதைப் பாராட்டியிருப்பார் என்று எதிர்பார்த்தேன். ஒருவர்கூடப் பாராட்டவில்லை. அவர்களுக்கு அந்தப் பண்பும் வரவே வராது.

[திரு. ஆர். நாகசுந்தரம்] [1970 ஜனவரி 27

உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் "ஒரு ஆண்டுத் திட்டம்" என்ற திட்டத்தை நகராட்சிகளிலும், பஞ்சாயத்துக்களிலும் கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறார்கள். அதைப் பற்றியெல்லாம் காங்கிரஸ் நண்பர் ஒருவராவது பாராட்டுவார் என்று பார்த்தேன், பாராட்டவில்லை.

வறட்சி நிவாரண வேலைகளையெல்லாம் அரசாங்கம் செய்தது பஞ்சாயத்து ஒன்றியங்களின் மூலமாகத்தான். இங்கே எத்தனையோ பஞ்சாயத்து ஒன்றியங்களைச் சேர்ந்த தலைவர்கள் சட்ட மன்ற உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அவர்கள் மூலமாகத்தான் உண்மையாகவே செலவு செய்யப்பட்டது என்று ஒருவர் கூடச் சொல்லக் காணோம். அவர்களும் தவறாகச் செலவு செய்யப்பட்டது என்றுதான் சொல்கிறார்கள். அப்படியானால் குற்றவாளிகள் அந்தக் காங்கிரஸ் ஒன்றியங்களின் தலைவர்கள் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதனால்தான் அவர்கள் அதைப் பற்றி ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை.

கம்யூனிஸ்ட்களின் எதிர்ப்பு வந்தாலும் சரி என்று தீவிரமாக உணவு ரேஷனை ரத்து செய்வோம் என்று நம்முடைய அரசு ரத்து செய்து இருக்கிறது. அதற்காகவாவது ஒரு பாராட்டு யாரிடமிருந்தாவது வரும் என்று எதிர்பார்த்தேன். ஒரு பாராட்டுகூட வரவில்லை. எதிர்க்கட்சித் தலைவராக நம்முடைய நாவலர் அவர்கள் இருந்தபொழுது எந்த ஒரு நிகழ்ச்சியிலேயும் முன்னால் இருந்த அரசாங்கம் அவரைக் கலந்துகொள்ளுமாறு செய்யவில்லை. இப்பொழுது நம்முடைய அரசு எதிர்க்கட்சி வேறுபாடு இல்லாது அந்த அந்தச் சட்ட மன்ற உறுப்பினர்களை எல்லா நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ளச் செய்வதை நீங்கள் எல்லாம் அறிவீர்கள். ஏதோ ராமச்சந்திர துரை அவர்களும் சுரேந்திரன் அவர்களும் குறை கூறினார்கள். அங்கேயுள்ள அதிகாரிகளுடைய குறையாக அவை இருக்கலாம். திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினரோ அல்லது புதுக்கோட்டை தொண்டைமானோ யாராவது அதைப் பாராட்டுவார்கள் என்று எதிர்பார்த்தேன்; பாராட்டவில்லை. திரு. ராமலிங்கம் அவர்கள்கூட குறை சொல்ல மாட்டார்கள். ஒரு சில அதிகாரிகள் தவறு செய்திருந்தால் அதற்காக இந்த அரசு பொறுப்பல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்ற ஆண்டு திருச்சிக்கு புதை சாக்கடைத் திட்டம் வேண்டுமென்று நானும் நண்பர் திரு. எம். எஸ். மணி அவர்களும் கேட்டோம். மேம்பாலம் கட்டவேண்டுமென்றும் கேட்டோம். திருவறும்பூர் திரு. சுவாமிநாதன் அவர்களும் 2 மேம்பாலங்கள் வேண்டுமென்று கேட்டார்கள். அதையெல்லாம் நம்முடைய அரசு ஏற்றுக்கொண்டு இன்றைக்குச் செயல்படத் துவங்கியதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டு ஜூலைத் திங்கள் நம்முடைய சட்ட மன்றத்தின் உறுப்பினராக இருந்த திரு. சண்முகசுந்தரம் அவர்கள் ஒருநாள் தான் கையெழுத்திட்டார்கள். அன்று ஒரு நிகழ்ச்சியிலே கலந்து



1970 ஜனவரி 27] [திரு. ஆர். நாகசுந்தரம்]

கொண்டுவிட்டு திரும்பி வந்துகொண்டு இருக்கின்ற நேரத்திலே தாம்பரம் அருகிலே லாரியிலே வரும்பொழுது பாலத்தில் மோதுண்டு அகால மரணமடைந்தது உங்களுக்கெல்லாம் தெரியும். எஞ்சினியரிங் கலை, பொறியியல் கலை முன்னேற்றம் அடைந்திருக்கின்ற இந்த நாளிலே யார் திட்டம் தயாரித்ததோ தெரியவில்லை, மிகப் பெரிய சுவரை குறுக்கே கட்டியிருக்கிறார்கள். அதன் காரணமாக இன்னும்கூடப் பல பெரிய விபத்துக்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இன்னும் கட்டு வேலையிலேதான் அந்தப் பாலம் இருந்துகொண்டிருக்கிறது. இடையிலே உள்ள அந்தச் சுவரை உடனடியாக அப்புறப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சலவையாளர்களுக்கு சலவைத்துறைகள் கட்ட மாநகராட்சிக்கு, 120 வட்டங்கள் இருக்கின்றன இந்த மாநகராட்சிக்கு, ஒதுக்கப்பட்டிருக்கின்ற தொகை ஒரு லட்சம் மிகவும் குறைவான தொகையாகும். அது போதாது, எனவே அதை இன்னும் அதிகமாக ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். டோபி கானா கட்ட நிலத்தை ஒதுக்கி நம்முடைய அரசு உத்திரவிட்டிருக்கிறது. அதற்காக நம்முடைய அரசை நான் பாராட்டுகிறேன்.

முன்னாள் ராணுவத்தினருடைய நிலைமை மிகவும் பரிதாபமாக உள்ளது. நாட்டிற்காக தலையைக் கொடுத்தவர்கள் அவர்கள். கூர்க்காக்கள் பதவியில் முன்னாள் இராணுவத்தினரை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் நலம் பேண ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு தனி அதிகாரி நியமிக்கப் பட்டதற்காக நான் அரசைப் பாராட்டுகிறேன்.

திருச்சியிலே மண்டலப் பொறியியல் கல்லூரி மத்திய அரசினாலும் மாநில அரசினாலும் சேர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. அங்கே முதல்வரை நியமித்துள்ள முறை சரியான முறையல்ல. தகுதியும் திறமையும் நீண்ட அனுபவமும் மிக்க பேராசிரியர்களும் முதல்வர்களும் பலர் தமிழக அரசு பொறியியற் கல்லூரிகளில் இருக்க, வயதில் குறைந்தவரும் அனுபவமில்லாதவரும் இக்கல்லூரியின் சாதாரண துணை விரிவுரையாளருக்குக்கூட இருக்க வேண்டிய எம்.எஸ்சி. பட்டம்கூட இல்லாத திரு. பி.எஸ். மணிசுந்தரம் அவர்கள் பழைய முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்களுக்கு வேண்டியவர் என்ற ஒரே காரணத்தால் முதல் முதல்வராக நியமிக்கப்பட்டார். இவரது திறமைக்குறைவு காரணமாகவும், எதேச்சதிகாரப்போக்கினாலும், நிர்வாகச் சீர்கேடுகளாலும் அவதியுற்ற ஆசிரியப் பெருமக்களும் ஏனைய ஊழியர்களும் கல்லூரி நிர்வாகக் குழுவின் உறுப்பினர்களையும், தலைவரையும், முன்னாள் முதலமைச்சர் அவர்களையும், மற்ற அமைச்சர்களையும் சந்தித்துவிட்டு வேறு வழியின்றி சென்ற ஆண்டு இக்கல்லூரியில் ஒரு வேலைநிறுத்தம் செய்தார்கள். கல்லூரி நிர்வாகக் குழுவின் அந்நாளைய தலைவர் டாக்டர் மணவாளராமானுஜம் நமது

மாண்புமிகு கல்வியமைச்சரின் விருப்பிற்கிணங்க அளித்த வாக்குறுதியை ஒட்டி வேலைநிறுத்தம் நின்றது. ஆனால் இதுநாள் வரை நிலைமையில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

திரு. மணிசுந்தரம் அவர்கள், கல்லூரி நிர்வாகக் குழுவின் தலைவர், நிர்வாகக் குழு இட்ட கட்டளைகளை நிறைவேற்றாது புறக்கணித்தார் என்றும், ஒரு கல்லூரி முதல்வர் நடந்துகொள்ளத் தகாத முறையில் செயலாற்றி வருகிறார் எனவும், கல்லூரியின் நன்மைக்குப் புறம்பான முறைகளைக் கையாண்டு வருகிறார் எனவும், ஏதேச்சாதிகாரப் போக்குடன் செயலாற்றுகிறார் எனவும், நிதியைப் பயன்படுத்துவதிலும் முறையற்று நடந்துகொள்கிறார் என்பதனையும் பலப்பல எடுத்துக்காட்டுக்களுடன் கல்லூரி நிர்வாகக் குழுவின் முன்னாள் தலைவர் மணவாளராமானுஜம் அவர்கள் நமது அரசிற்கு முதல்வர்மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென தான் எழுதிய குற்றப் பத்திரிகையில் வேண்டியுள்ளார். ஆனால் இது நாள்வரை அதுபற்றி எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை என்பதனை நமது அரசின் கவனத்திற்கு மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

முன்னாள் கல்வியமைச்சர் திரு. மாதவன் அவர்கள் இக் குற்றச்சாட்டுக்களை விசாரிக்க என்குயரி கமிட்டி ஒன்று நிறுவினர். அது கடந்த நவம்பர் இறுதியில் ரிவ்யூ கமிட்டி என்ற பெயராக மாறி ஒரு குழு கல்லூரிக்கு வந்தது. கல்லூரியில் அரையாண்டு விடுமுறையின்போது பெரும்பாலானோர் ஊரில் இல்லாத நேரத்தில் முன் அறிவிப்பு இல்லாமலேயே கமிட்டியின் வருகைபற்றிய அறிவிப்பும் மிகத் தாமதமாக ஆசிரியர்களுக்கு அனுப்பப் பெற்றது. ஊழியர்களின் குறைகளை முழுவதுமாகக் கேட்க முடியாது போயிற்று. அவர்கள் முன்னறிவிப்புக் கொடுக்காமல் வந்ததால் ஒரு சிலர் மட்டும்தான் சாட்சியம் கொடுத்திருக்கிறார்கள். கண் துடைப்புக்காக வந்துபோன ரிவ்யூ கமிட்டியும் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் தெரியவில்லை. எதற்காக அந்த முதல்வருக்கு மட்டும் இவ்வளவு பரிவு காட்டப்படுகிறது என்பது எனக்குப் புரியவில்லை. இவைகளை உடனடியாக விசாரித்து கல்லூரியை நல்லவிதத்தில் நடத்துமாறு கேட்டுக்கொள்கிறேன். அட்டெண்டன்ஸ் என்பதே கல்லூரியில் கிடையாது. மாணவர்கள் ஒரு மாத இதழ் நடத்தி வருகிறார்கள். அதில் போதுமான ஆசிரியர்களும் சரியான புத்தகங்களும் இல்லாத குறையை சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். மெட்டலர்ஜி டிபார்ட்மெண்டில் Heat transfes, Fuels and Furnace Technology என்ற பாடத்திற்கான ஆய்வுக்கூடம் இல்லை. இத்துறைக்குப் பேராசிரியரும் இதுவரை நியமிக்கப்படவில்லை.

மத்திய அரசிடமிருந்து அனுமதி பெற்றே எந்த ஒரு புதுத் துறையும் துவங்கவேண்டும் என்ற நியதியிருக்க, எலக்ட்ரானிக்ஸ் கம்யூனிகேஷன் என்ற துறையை பேப்பர் சாங்ஷன் கூட இல்லாமல் துவக்கி, அதற்காக ஏறத்தாழ 2 இலட்சம் ரூபாய்க்கு மேல் செலவழித்திருப்பதாகத் தெரிகிறது.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுக்கு ஏழு நிமிடங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நீங்கள் 9 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள்.

**திரு. ஆர். நாகசுந்தரம்:** அந்தக் கல்லூரியில் நிலவிவரும் சீர்கேடுகளைப் போக்க உடனடியாக நம் அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. சோ. அழகர்சாமி:** உதவி சபாநாயகர் அவர்களே, துணை மானியக் கோரிக்கைகளின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வறட்சி நிவாரண வேலைகளுக்காக ஏறத்தாழ 20 கோடி ரூபாய் செலவுசெய்யப்பட்டிருக்கிறது. இன்னும் பல இடங்களில் குடிதண்ணீர் கஷ்டங்களும் மற்ற கஷ்டங்களும் தொடர்ந்து இருக்கின்றன. எனவே, அந்த இடங்களிலே பணிகளைத் தொடர்ந்து செய்ய ஏற்பாடு செய்யவேண்டும். இராஜபாளையம் சத்திரப்பட்டி ஏரியாவில் 20 கிராமங்களில் குடிநீர் வசதியில்லாமல் அறவே தண்ணீர் இல்லாமல் மக்கள் ...திக்கப்பட்டிருக்கிறார்கள். அங்கே வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கொடுக்க

அடுத்தபடியாக, விவசாயிகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் அளிப்பதற்காக கடன் வசூல்கள் ஏனைய ஒரு ஊரில் நிறுத்திவைக்கப்படுகின்றன. ஆனால் அடுத்த ஆண்டு வசூல்செய்யும்பொழுது அந்த ஆண்டுக்குரிய தவணையோடு நிறுத்திவைக்கப்பட்ட தவணையையும் சேர்த்துக் கட்டவேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். ஒரு ஆண்டுக்குரிய தவணையே செலுத்தமுடியாமல் இருக்கின்ற நிலைமை இருக்கும்பொழுது இரண்டு தவணைகள் செலுத்த வேண்டுமென்று சொல்வது மிகவும் பாதிக்கிறது. பத்து வருஷம் தவணை என்றால் பத்தாவது தவணையை 11-வது வருஷம் கட்டவேண்டுமென்று சொல்லவேண்டும். இப்பொழுது அரசாங்கம் வைத்துள்ள முறையை அறவே மாற்ற வேண்டும். இரண்டு தவணைகளையும் சேர்த்து வசூலித்தால் அவர்களுக்கு மிகவும் கஷ்டம். வரக்கூடிய தவணைகளை ஈவு செய்து வசூல் செய்யக்கூடிய முறையைக் கையாள்வதற்கு அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு நாள் தவணை கடந்தாலும் கூட அபராத வட்டியாக ஒரு வருஷ வட்டி வசூல் செய்யப்படவேண்டுமென்று இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னால் ரெவின்யூ போர்டிலிருந்து உத்தரவு வந்ததாகச் சொல்லி வசூல் செய்கிறார்கள். இந்த அபராத வட்டி அநியாய வட்டி. ஒருநாள் கடந்தால் ஒருநாள் வட்டிதான் வசூல் செய்யவேண்டும். ஒரு வருஷவட்டி வசூல் செய்வதை உடனடியாக நிறுத்தவேண்டும்.

விவசாயத்திற்கு அத்தியாவசியமாகத் தேவைப்படுகிற மின் வசதியை 1972-ம் ஆண்டுக்குள்ளாக எல்லா கிராமங்களுக்கும் விதரிக்க வேண்டுமென்ற அரசினரின் முயற்சியை நான் மிக மிகப் பாராட்டுகிறேன். ஆனால் மின் கட்டணத்தை ஏட்டரை பைசா

விலிருந்து பத்து பைசாவாக உயர்த்தி இருப்பது விவசாய உற்பத்திக்கு உதவியாக இருக்காது. அலுமினியம் தொழிற்சாலைக்கு மின்சாரம் கொடுப்பதில் வருஷம் ஒன்றுக்கு ஒரு கோடி ரூபாய்க்கு மேல் நஷ்டத்தை ஏற்றுக்கொள்ளும்போது விவசாயிகளுக்கு பத்து பைசாவாக உயர்த்தி இருப்பது நியாயமாகாது. ஆகவே, இந்த மின் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விலைவாசிகள் தற்போது உயர்ந்து கொண்டே போகிறது. விலைவாசி உயர்வை நியாயமான கட்டுதிட்டத்திற்குள் அமைக்க வேண்டும். விவசாய விளைபொருள்களின் விலை தலை கீழாக இருக்கிறது. இன்று மிளகாய் வற்றல் விலை 1,500 ரூபாய். அதாவது ஒரு கிலோ 11 ரூபாய் விற்கிறது. அந்த விலை 400, 500 என்றிருந்தால் விவசாயிகளுக்கும் கட்டுப்படியாகக் கூடிய விலையாக இருக்கும், வாங்கிச் சாப்பிடுபவர்களுக்கும் கட்டுப்படியாகும் நிலையிருக்கும். இப்போது ஏற்பட்டு இருக்கின்ற விலை உயர்வினால் உள்ள லாபம் விவசாயிகளுக்குப் போய்ச் சேரவில்லை. உற்பத்தி செய்யக் கூடிய காலத்தில் 150, 200 ரூபாய்க்குத்தான் விவசாயிகளிடமிருந்து பெறப்பட்டது. [illegible]ாய விளை பொருள்களுக்கு கட்டுபடியாகக் கூடிய நியாயமான [illegible] உத்தரவாதம் கொடுக்க வேண்டும்.

கிராமப் பகுதிக்கு வந்தது. [illegible]ய்ப்பு மிக மிக குறைந்து வருகிறது. இரண்டு, மூன்று மாதங்கள் தவிர மற்ற மாதங்களில் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே, கிராமப் பகுதிகளிலுள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு தரும் வகையில் சிறு தொழில்களை ஆரம்பிக்க வேண்டும். குடிநீர்த் திட்டத்தைப் பற்றி துணை மானியக் கோரிக்கையில் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். பெரிய நகரங்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் எல். ஐ. சி. யில் கடன் பெற்று நிறைவேற்றப்படுகிறது. அப்படி நிறைவேற்றப் படும்போது வழியில் உள்ள கிராமங்களுக்கும் குடிநீர் வசதி செய்து கொடுக்க வழி செய்ய வேண்டும். கோயில்பட்டி நகரத்திற்கு குடிநீர்த் திட்டத்திற்காக எல். ஐ. சி. யிலிருந்து ஒரு கோடி ரூபாய் சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. வழியில் 15 மைல் சுற்றளவில் பல கிராமங்கள் இருக்கின்றன. அவற்றுக்கும் குடி தண்ணீர் வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டால் 'கடனாக வழங்குகிறோம் கடனை திருப்பிச் செலுத்த சக்தியிருக்கிறதா? என்று கேட்கிறார்கள். அவ்வாறு கடனாகக் கொடுத்தால் வருஷத்திற்கு 10,000, 15,000, என்று திருப்பித் தரவேண்டியிருக்கும். கிராமங்களின் வருமானம் இரண்டாயிரத்திலிருந்து நாலாயிரத்துக்கு மேல் போக முடியாது. நகரங்களுக்கு வேண்டுமானால் திரும்பிச் செலுத்தும் சக்தி இருக்கலாம். கிராமங்களுக்கு முழுத் தொகையையும் மானியமாக வழங்கி குடி. தண்ணீர் வசதிக்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

குடியிருப்பு மனைக்காக பல ஊர்களில் அரிசனங்கள் மனுப் போட்டு மூன்று, நான்கு ஆண்டுகளாகியும் வழங்கப்படாத நிலையிருக்கிறது. இதிலே பல ஜாதிக்காரர்கள் தொந்தரவு கொடுப்ப





தால் கஷ்டம் இருக்கிறது. எப்படி 1973-ம் ஆண்டுக்குள் எல்லாக் கிராமங்களுக்கும் மின் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று திட்டமிட்டிருக்கிறோமோ அதேபோன்று அரிசனங்களுக்கு வீட்டு மனை வழங்குவதைப்பற்றியும் ஒரு இலக்கை நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். அந்த முறையில் நடவடிக்கை எடுத்து எல்லா அரிசனங்களுக்கும் வீட்டு மனை வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற மாதம் எங்கள் பகுதியில் ஒரு தோட்டியை திடீரென்று போலீஸ் ஸ்டேஷனில் கொண்டு போய் வைத்து விட்டார்கள். அதைப் பற்றி விவரம் கேட்டால் நாங்கள் இவ்வளவு கேஸ் பிடித்தாக வேண்டுமென்ற எண்ணிக்கை இருக்கிறதென்று கூறுகிறார்கள். இதன் காரணமாக அப்பாவி மக்களைப் பிடித்துக் கொண்டு போய் கேஸ் போடும் நிலைமை இன்றும் போலீஸ் இலாகாவில் இருக்கிறது. குற்றம் செய்தவர்களைப் பிடித்துக் கொண்டுபோய் கேஸ் போடும் முறை இருக்க வேண்டுமே தவிர இத்தனை கேஸ் பிடிக்க வேண்டுமென்பதற்காக அப்பாவி மக்களை பிடித்துக் கொண்டு போகக் கூடிய நிலை இருக்கக்கூடாது.

முதியோர் பென்ஷன் எந்தவிதமான வசதியுமற்று குழந்தைகளின் ஆதரவுமில்லாதவர்களுக்கு கொடுக்க வேண்டுமென்பது திட்டம். ஆனால் அதற்கு தற்போது ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு இலக்கை நிர்ணயித்திருக்கிறார்கள். ஒரு ஊரிலிருந்து இத்தனை பேருக்குத்தான் முதியோர் பென்ஷன் கொடுக்கலாம் என்ற நிலையிருப்பதால் அந்தக் குறிப்பிட்ட ஊரிலிருந்து புதிதாக ஒருவர் பென்ஷன் வேண்டுமென்று கேட்டால் ஏற்கெனவே பென்ஷன் பெற்று வருபவர்களில் யாராவது இறந்து விட்டால்தான் கொடுக்க முடியும் என்று பதிலளிக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. இந்த நிலையை மாற்றி எந்த விதமான பாதுகாப்பும் இல்லாத முதியோர்கள் பென்ஷன் கேட்டால் எவ்வளவு பேராக இருந்தாலும் பென்ஷனைக் கொடுக்க வேண்டுமென்கிற முறையில் சட்டத்தைத் திருத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. ஆர். கருப்பையா :** தலைவர் அவர்களே, துணை மானியக் கோரிக்கைகளின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். துணை மானியக் கோரிக்கையிலே தேசியப் பொருட்காட்சி, நடத்துகிற ஒரு பிரிவுக்காகமட்டும் செலவு செய்திருக்கிற ரூபாய் ஏறக்குறைய நான்கு லட்சம். அந்தத் தொகையிலே ரூ. 2,20,000 செய்தித் துறை விளம்பரத்திற்காகச் செய்யப்பட்டிருக்கிறது. தேசியச் சுற்றுலாப் பொருட்காட்சிக்காகச் சர்க்காரால் மானியமாகக் கொடுக்கப்பட்டிருக்கிற தொகை இரண்டு லட்சம். இது தவிர தேனாம்பேட்டையில் ஒரு பொருட்காட்சி நடக்கிறது. பார்க்பேர் பொருட்காட்சி நடக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் கூட கலந்து கொண்டிருக்கிறார்கள்.

[திரு. ஆர். கருப்பையா] [1970 ஜனவரி 27

அவற்றிற்கு இல்லாத சலுகை இந்த தேசியச் சுற்றுலாப் பொருட்காட்சிக்கு மட்டும் கொடுக்கப்பட்டிருப்பது வருந்தத் தக்க ஒன்றாகும். இந்தப் பொருட்காட்சியிலே சர்க்கார் கட்சியைச் சேர்ந்தவர்கள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்பதற்காகத்தான் இந்த அளவுக்கு மானியம் வழங்கப்பட்டிருக்கிறதென்ற குற்றச் சாட்டைத் திட்டவட்டமாகக் கூற விரும்புகிறேன்.

இந்த மானியக் கோரிக்கையில் ரோடு வசதிக்காகவும், பின் தங்கிய வட்டாரங்களை வளர்ச்சி பெறச் செய்வதற்கும் எந்தவித மான ஒதுக்கீடும் செய்யப்படவில்லை. எங்கள் பகுதியில் திருமானூரிலிருந்து கொள்ளிடக் கரை வரை நல்ல ரோடு வசதி இல்லை. ரயில்வே பாதையை ஒட்டி ரோடு வசதி அவசியம். அப்படியிருந்தும் கொள்ளிடக்கரையருகில் 25 மைல் தூரத்திற்கு ரோடு வசதி செய்யப் படாதது வருந்தத்தக்கது. அங்கே ராமன்நல்லூர் என்ற ஊர் இருக்கிறது. இது கொள்ளிடத்தின் இரு கரைக்கும் நடுவே இருப்பதால் இரண்டு பக்கமும் தண்ணீர் செல்லுகின்ற நிலையில் தீவு போல் அமைந்திருக்கிறது. எனவே பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் ராமநல்லூர் பாதிக்கப்படாமல் இருக்கக் கூடிய வகையில் அந்த ஊரைச் சுற்றிலும் ஒரு தடுப்புச் சுவர் கட்ட வேண்டுமென்று குறிப்பிடுகின்றேன்.

அடுத்து, காட்டூர் சர்க்கரை ஆலையை நடத்தும் ஒரு முறை, காட்டுத் தர்பார்போல் நடந்து வருகிறது. அங்குள்ள விவசாயி களுக்கு அரசாங்கம் விதித்துள்ள விலைகூட அவர்களின் கரும்புக் கிடைப்பதில்லை. அவர்கள் தங்கள் கரும்பை விற்பதில் பல சங்க டங்களுக்கு உள்ளாகிறார்கள். அந்த சர்க்கரை ஆலை திரு. கொத் தாரியவர்களுக்குச் சொந்தமாக இருப்பதால், அவர்கள் தென் இந்திய சர்க்கரை ஆலைச் சொந்தக்காரர்கள் சங்கத்திற்குத் தலைவ ராக இருப்பதால் அவர்கள் அரசியலாரை அணுகக் கூடிய வாய்ப் பும் வசதியும் இருக்கிறது, அவர்கள் எல்லாவிதமான சலுகைகளை யும் பெற்றுக்கொள்கிறார்கள். ஆனால், கரும்பு உற்பத்தி செய்பவர் களுக்கு எந்தவிதமான சலுகையும் கொடுப்பதில்லை. அரியலூர் கோட்டாட்சிக்கு உள்பட்ட பெரம்பலூரில் கூட்டுறவு சர்க்கரை ஆலை ஒன்று ஏற்படுத்த முயற்சிகள் செய்துவருகிறார்கள். ஆனால் திரு. கோத்தாரி அவர்கள் அந்த ஆலையை அங்கு நிறுவக் கூடாது என்ற முறையில் ஒரு கருத்தை உருவாக்கி வருகிறார்கள். ஆகவே அரியலூர் கோட்டாட்சிக்கு உட்பட்ட பெரம்பலூர் அருகில் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவுவதற்கு அரசாங்கம் தக்க நடவடிக் கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சர்க்கரை ஆலை முதலாளிகளின் ஊழல்களை நீக்கவேண்டுமென்றால் சர்க்கரை ஆலைகளை எல்லாம் சர்க்காரே ஏற்றெடுத்து நடத்தவேண்டும். இல்லாவிட்டால் அவற்றைக் கூட்டுறவு முறையிலாவது மாற்றி யமைக்கவேண்டும். அப்போதுதான் விவசாயிகளுக்கும் நல்ல வருமானம் கிடைக்க வாய்ப்பாக இருக்கும். இப்போது ஆலைச் சொந்தக்காரர்கள் விவசாயிகளுக்குப் பெரும் கஷ்டங்களைக்



1970 ஜனவரி 27] [திரு. ஆர். கருப்பையா]

கொடுக்கிறார்கள். இன்ன விதக் கரும்பு போட்டால்தான் எடுத்துக் கொள்வோம் என்கிறார்கள். இப்படிப்பட்ட நிபந்தனைகளையெல் லாம் விதிக்கிறார்கள். ஆகவே, சர்க்கரை ஆலைகளைப் பொறுத்த வரையில் சர்க்காரே ஏற்றெடுத்து நடத்துவது நல்லது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, ஆசிரியர்களுக்கு இப்போது சர்க்கார் புதிய வேலை களைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. அதன் காரணமாக ஆசிரி யர்கள் மிகவும் மன வேதனை அடைகிறார்கள். லால்குடி, அரியலூர் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் குடும்பக் கட்டுபாடு திட்டத்திற்காக ஆட்களைக் கொண்டுவர வேண்டுமென்று சொல்கிறார்கள். அப்படிக் கொண்டுவராவிட்டால் அவர்களுக்குச் சம்பளம்கூட சரியாகக் கொடுப்பது இல்லை. லீவ் கொடுப்பது இல்லை, லோன் கொடுப்பதில்லை என்பதுபோன்ற புகார்கள் வருகின்றன. மற்றவர்களுக்கு வேறு எந்தவித வேலை யைக் கொடுத்தாலும், ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் அவர் களுக்குப் பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுக்கும் வேலையைத் தவிர வேறு வேலைகளைக் கொடுக்கக்கூடாது. அதிலும் குறிப்பாகத் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக் கும் வேலையைத் தவிர வேறு வேலைகள் கொடுக்கக்கூடாது.

அடுத்து, அரியலூர் இப்போது ஒரு தாலுகாவாக ஆக்கப்பட்டு இருக்கிறது. கொள்ளடத்தில் திருமானூர் விளாங்குடிக்கு இடையில் இப்போது ஒரு பாலம் கட்டப்பட்டு வருகிறது. அதைக் கட்டி முடித்து விட்டால் அரியலூர் ஒரு பெரிய வியாபார ஸ்தல மாக விளங்கக்கூடிய வாய்ப்பிருக்கிறது. அரியலூர் இப்போது குடி தண்ணீர்ப் பற்றாக்குறை இருக்கிறது. அந்தப் பற்றாக்குறை யைப் போக்குகிற அளவிற்கு கொள்ளடத்தில் இருந்து அரிய லூருக்கு குடிதண்ணீர் கொண்டுவருவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன. ஆகவே, கொள்ளடத்தில் இருந்து அரியலூருக்குக் குடி தண்ணீரைக் கொண்டுவந்து அங்குள்ள குடிநீர்ப் பற்றாக்குறை யைப் போக்கவேண்டுமென்று குறிப்பிடுகின்றேன்.

அன்று திரு. சுவாமிநாதன் அவர்கள் கூறினார்கள், தஞ்சை வெள்ளத்தால் பாதிக்கப்படுகிறது. தேவையில்லாதபோது மேட்டூர்த் தண்ணீரைத் திறந்து விடுவதால், என்று திருச்சி மாவட் டத்தில் உள்ள லால்குடி போன்ற பகுதிகள் தண்ணீர் இன்மை யினால் கஷ்டப்படுகின்றன. ஆகவே இதைப் போக்கக்கூடிய அள விற்கு அப்பர் அணைக்கட்டில் ஒரு ரெகுலேட்டரைக் கட்ட வேண்டும். அப்படிக் கட்டினால் தண்ணீரைத் தேவையானபோது விட்டுவிட்டு, தேவையில்லாதபோது தண்ணீரை ரெகுலேட்டரில் தேக்கி அந்தப் பகுதி விவசாயிகள் தண்ணீரினால் பாதிக்கப்படாமல் தடுக்கப்படலாம். பெருவளை, அய்யன் புள்ளம்பாடி வாய்க்கால் களில் தண்ணீர் அதிகமாக இருந்தும் விவசாயிகள் பாதிக்கப்பட் டார்கள். இந்த ஆண்டுகூட இரண்டு முறை வயல்கள் வெடித்து

விட்டன. ஆகவே அப்பர் அணைக்கட்டில் ஒரு ரெகுலேட்டர் கட்டி அந்தப் பகுதி விவசாயத்தை நல்ல முறையில் பாதுகாக்க வேண்டும்.

அடுத்து, திருமழப்பாடி அருகில் கண்டிராதித்தம் என்ற ஒரு ஏரி இருக்கிறது. அது 400 ஏக்கர்களுக்கு மேல் இருக்கிறது. அந்த ஏரி நல்லமுறையில் தூர் எடுக்கப்படவேண்டும். அதுபற்றி அமைச்சர் அவர்களிடமும் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த வேலையை எப்படியாவது முடித்துத் தரவேண்டும். நேற்று ஒரு நண்பர் அமைச்சர்கள் கலந்துகொள்கிற விழாக்களுக்கு அப்பகுதி எம்.எல்.ஏ க்கள் அழைக்கப்படுவதில்லை என்று குறிப்பிட்டார்கள். இது முற்றிலும் உண்மை. என் தொகுதிக்குக் கடந்த மாதம் கல்வி அமைச்சர் அவர்கள் வந்திருந்தார்கள் பட்டா வழங்க. அப்போது அதற்கு என்னை அழைக்கவும் இல்லை, எனவே நான் போகவும் இல்லை. பொதுப்பணி அமைச்சர் அவர்கள் வந்திருந்தார்கள். கடலூர் ஆஸ்பத்திரிக்கு அப்போதும் நான் அழைக்கப்படவில்லை. இப்படி பல நிகழ்ச்சிகள். அப்படி அமைச்சர்கள் வரும்போது அப்பகுதி எம். எல். ஏ. க்கள் அழைக்கப்படாததற்குக் காரணம் அதிகாரிகளா அல்லது அந்தப் பகுதிகளிலுள்ள கட்சித் தோழர்கள் காரணமா என்று தெரியவில்லை. திரு. ராமச்சந்திர துரை அவர்கள் குறிப்பிட்டது போன்று இப்படிப் பல இடங்களில் நடைபெறுகின்றன. திருச்சி திருவெறும்பூர் பகுதிக்கு அமைச்சர் அவர்கள் வந்திருந்தபோது திரு. சுவாமிநாதன் அவர்கள் அழைக்கப்பட்டிருந்தார்கள். அதற்காக நான் என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு சமயம் அமைச்சர் கோவிந்தசாமி என் பகுதிக்கு வந்திருந்தார்கள். அருகில் நான் நின்று கொண்டிருந்தேன். அவர்கள் என்னைப் பார்த்து நீங்கள் ஏன் வரவில்லை என்று கேட்டு என்னைக் கூப்பிட்டார்கள். ஆகவே, அந்தந்தப் பகுதி சட்டமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்கள் வரும்போது அழைக்கப்பட வேண்டும். அப்போதுதான் அங்குள்ள மக்களின் குறைகளை எடுத்துச்சொல்ல முடியும்.

அடுத்து ரோடு வசதிபற்றி ஒரு வார்த்தை. பஞ்சாயத்து யூனியன்களில் ரோடு வசதிகள் செய்துகொடுக்கப் போதிய அளவு நிதி வசதி இல்லை. பின்தங்கிய பகுதிகளுக்குந் தனியாக ரோடு வசதிகள் செய்துகொடுப்பதற்காக எப்படியாவது ஒரு நிதி ஏற்பாடு செய்யவேண்டும். அப்படி ஒரு நிதி ஒதுக்கப்பட்டு பின்தங்கிய பகுதிகளுக்குத் தனியாக ரோடு வசதிகளுக்கான ஏற்பாடுகள் செய்து தரப்படவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. சா. மெய்யப்பன்:** தலைவர் அவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கையின்மீது நான் ஒரு சில வார்த்தைகள் கூறிக்கொள்ள விரும்புகிறேன். சென்ற ஆண்டு நாம் பற்பல இன்னல்களுக்கு உட்பட்டோம். பேரறிஞர் அண்ணா அவர்களை இழந்தோம். ஜாகீர்ஹுசேன் அவர்களை இழந்தோம். பிறகு கோவிந்தசாமி





அவர்களை இழந்தோம். பஞ்சம் நம்மைப் பிடித்து வாட்டியது. இவ்வளவு இருந்தும் நமது தமிழக அரசு நல்ல முறையில் அந்தப் பஞ்சத்தைப் போக்குவதற்காக நல்ல தகுந்த திட்டங்களை நமக்குத் தந்தது போற்றுதற்குரியது. குடி நீர் வசதிக்காகவும் பாசன வசதிகளுக்காகவும், மற்றும் ரஸ்தா வசதிகளுக்காகவும் அரசு நமக்கு ஏராளமான மானியங்களைக் கொடுத்து உதவினார்கள். குறிப்பாக என் மாவட்டத்தில் நல்ல அபிவிருத்தி காணப்பட்டது என்று சொன்னால் அது மிகையாகாது. அதனால் மக்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்திருக்கிறார்கள். அதே நேரத்தில், போடப்பட்டுள்ள ரஸ்தாக்கள் நல்லமுறையில் பராமரிக்கப்பட வேண்டும். அப்படிப் பராமரிப்பதற்குத் தகுந்த திட்டங்களை நம் அரசு தீட்ட வேண்டுமென்று மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன். கிணறுகள் போன்றவை அதிகமாகத் தோண்டப்பட்டுக் குடி நீர்ப் பஞ்சம் ஒரு வழியாக நன்றாகத் தீர்ந்திருக்கிறது. அனுபவம் காரணமாகவோ என்னவோ தெரியவில்லை. இந்தக் கிணறுகளில் வைத்துள்ள குழாய்கள் திருடு போய்விடுகிறது. தண்ணீரும் ஓரளவிற்கு வந்தவுடன் நிறுத்திவிடுகிறார்கள். ஆகவே தண்ணீர் நன்றாக ஊறக் கூடிய அளவிற்கு அடித் தண்ணீர் மேலே வரக்கூடிய அளவிற்கு குழாய்க் கிணறுகள் போடுவதன்மூலம் தண்ணீரை வெளியே கொண்டு வரவேண்டும். இந்தக் குழாய்களையெல்லாம் பத்தவைப்பதன்மூலம் செப்பனிட்டுத் தரவேண்டிய தாக்கீதுகளை அரசு இலாகாக்களுக்குக் கொடுக்கவேண்டும்.

அடுத்து, மகிழ்ச்சிகரமானதொரு செய்தி, கண்ட்ரோல் நீக்கம். கண்ட்ரோலை நீக்கியுள்ள அதே சமயத்தில் மற்ற உணவுப் பொருள்களான மிளகாய், புளி, எண்ணெய் இவற்றின் விலைகள் ஏறியுள்ளன. சாதாரண மக்களின் அன்றாடத்தேவைப் பொருள்களான இவற்றின் விலைகளை விலைவாசி உயர்விலிருந்து கட்டுப்படுத்த தக்க வழி வகைகளைக் காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மருத்துவ வசதிகளைப் பொறுத்தவரையில் 1950-ம் வருஷத்திலே ஒரு மருத்துவ விடுதி இருந்தால் அதற்கு எத்தனை மருத்துவர்கள் இருந்தார்களோ, அத்தனை மருத்துவர்கள்தான் இப்பொழுதும் வைக்கப்பட்டிருக்கிறார்கள். அப்பொழுது எத்தனை நர்சுகள் இருந்தார்களோ அத்தனை நர்சுகள்தான் இப்பொழுதும் இருக்கிறார்கள். இப்போது சிலோனிலிருந்தும் மற்ற பகுதிகளிலிருந்தும் அகதிகள் மண்டபத்தில் வந்து இறங்கும்பொழுது அவர்களுக்குத் தகுந்த மருத்துவ வசதிகள் செய்து கொடுக்க வேண்டிய ஆட்கள் நியமிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இராமநாதபுரம் ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரியில் இருக்கின்ற மருத்துவர்கள் அகதிகள் இருக்குமிடங்களுக்கு சென்றுவிட்டால் இங்கு மருத்துவர்களே இருக்க மாட்டார்கள். எனவே, அப்படிப்பட்ட வகையில் இல்லாமல், மருத்துவர்களை அதிகமாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

பிரைமரி ஹெல்த் சென்டர்கள் இருக்கின்றன. பல கிராமங்கள் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. மருத்துவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். ஆனால் அந்த பிரைமரி ஹெல்த் சென்டர்களுக்கு இதுவரையில் ஜீப்கள் கொடுக்கப்படாமல் இருக்கின்றன. சாக்கோட்டை பிரைமரி ஹெல்த் சென்டருக்கு சென்ற இரண்டு ஆண்டுகளாக ஜீப் கொடுக்கப்படவில்லை. நான் குறிப்பிட்டு வற்புறுத்தியபோதிலும், நான் போடும் கடிதங்களுக்குப் பதில்வந்து கொண்டிருக்கிறதேதவிர இன்னும் ஜீப் கொடுக்கப்படவில்லை. காரைக்குடியிலே இருந்த மருத்துவ விடுதியில் ஆண்கள் பிரிவு காந்தி மாளிகைக்கு மாற்றப்பட்டு விட்டது. ஆனால் பெண்கள் பிரிவு இன்னும் அந்தப் பழைய கட்டடத்திலேயேதான் இருக்கிறது. அதையும் மாற்றினால்தான் எக்ஸ்ரே எடுப்பது போன்றவற்றில் மக்கள் மருத்துவ உதவி பெற முடியுமென்று அரசினருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, ஓய்வு பெற்ற ஊழியர்களைப்பற்றிக் கூற விரும்புகிறேன். இப்பொழுது அவர்களுக்குக் கிடைக்கும் பணம், அவர்களின் நிரந்தரச் சம்பள விகிதத்தில் எட்டிலே 3 பங்குதான் கிடைக்கிறது. அவர்களுக்குப் பஞ்சப்படி கிடையாது, நகர ஈட்டுப்படி கிடையாது, வீட்டு வாடகை கிடையாது. இவை இல்லாமலிருந்தால் 200 ரூபாய் சம்பளம் ஒருவர் வாங்கிக்கொண்டிருந்தாரென்றால் அதிலே எட்டிலே 3 பங்கு ஊதியத்தை வைத்துக் கொண்டு, எல்லாச் சுகபோகங்களையும் அனுபவித்தவர்கள் எப்படி அவர்கள் தள்ளாத வயதில் காலம் தள்ள முடியும் என்பதைப் பார்க்க வேண்டும். மத்திய அரசாங்கம்கூட படியை உயர்த்தியிருக்கிறார்கள். அதைப்போல ஆந்திரம், ஹிமாலயப் பிரதேசம், மைசூர், பாண்டிச்சேரி முதலியவைகளும் இதுபோல் உத்தேசங்களைத் தெரிவித்திருக்கிறார்கள். தமிழகத்திலும் 1960-க்கு முன்னாலே ஓய்வு பெற்றவர்களுக்கு ஓய்வூதியத்தை 10 ரூபாய் உயர்த்தியிருக்கிறதேதவிர, 1960-க்குப் பின்னால் ஓய்வு பெற்றவர்களுக்கு அந்த ஊதிய உயர்வு கொடுக்கவில்லை. அதற்காக அவர்கள் மனுச் செய்திருக்கிறார்கள். அதற்கு அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அவர்களுக்கு மருத்துவச் செலவுகளையும் அளிக்க வேண்டும். நகர மன்ற ஊழியர்கள் சம்பந்தமாக, திருமணச் செலவுக்கான முன் பணம் வேண்டுமென்று அவர்கள் கேட்கிறார்கள். பஞ்சாயத்து ஊழியர்களுக்கும், நகர மன்ற ஊழியர்களுக்கும், சர்க்கார் ஊழியர்களுக்குச் சரண்டர் லீவ் கொடுப்பதைப்போல் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

விற்பனை வரியைப் பொறுத்தவரையிலே வசூலாகிக்கொண்டு வருவதெல்லாம், அதிகமாக வசூல் செய்தாலும், அந்த வியாபாரிகள் நல்ல யோக்கியத் தரப்பைச் சேர்ந்தவர்கள் அல்ல என்ற முறையில் வரி விதிப்பு முறை இருக்கிறது. எனவே அதற்காக சிங்கில்—பாயிண்ட் டாக்ஸ்' செய்தால் நல்லமுறையில் இருக்கும். இந்த மல்ட்டி—பாயிண்ட் டாக்ஸ் முறையை எடுத்து விட வேண்டுமென்று வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.



காரைக்குடி நகரம் வளர்ந்து வரும் நகரமாக இருக்கிறது. அமைச்சர் திரு. மாதவன் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். அங்கு எந்தவிதமான ஒரு சபை நடத்தக்கூடிய, கூட்டம் நடத்தக் கூடிய கட்டடங்கள் எதுவுமில்லை. அதற்கு வேண்டிய ப்ராப்போசலைக் கொடுத்து எவ்வளவோ எழுதியும் அரசிலிருந்து கவனம் செலுத்தாததால் அங்கு இன்னும் ஏற்படவில்லை. எனவே, அதையும் சீக்கிரமாக முடித்துத்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மின்சார வசதியைப்பற்றிக் கூற விரும்புகிறேன். எவ்வளவுதான் வசதி செய்து தர வேண்டுமென்று நினைத்தாலும்கூட இப்பொழுது அங்கு பல்புகள் கிடைக்காமல் இருக்கிறது. அந்த நிலை நாட்டுப் புறங்களிலும், நகரப் புறங்களிலும் பொதுவாக இருக்கிறது. ஆகவே, பல்புகள் அதிகமாகக் கிடைக்கக்கூடிய சூழ்நிலைமை அங்கு ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

**கொடவாசல் திரு. சி. கிருஷ்ணமூர்த்தி:** தலைவரவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒருசில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். துணைமானியக் கோரிக்கையில் குறிப்பாக இந்தச் சாலை மானியம் வரவேற்கத் தக்கது. இதற்கு முன்பு சாலை மானியங்கள் மக்களுடைய அடிப்படையிலே இருந்ததை மாற்றி இன்று பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்களிலே எல்லாம் ரோடு வசதி இல்லாத கிராமங்களிலே ரோடு போட ஒரு நல்ல சூழ்நிலையை இந்த மானியத்திலே நடந்து அளித்திருக்கிறார்கள். இது வரவேற்கத் தக்கது என்பதைக் கூறிக்கொள்ளுகின்றேன். குறிப்பாகப் பெரிய சாலைகளையெல்லாம் சர்க்கார் தீவிரமாக யோசித்து பஸ் போக்கு வரத்துக்கான வாய்ப்புகளைச் செய்கிறார்கள். ஆனால் கிராமப் பகுதியிலே இருக்கும் இத்தகைய ரோடுகளைத் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்த பிறகு, அங்கேயிருக்கும் பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் அந்தக் கிராமத்திலே அரசியல் நோக்கத்தோடு, அரசியல் கண்ணோட்டத்தோடு, அங்கே 40,000 ரூபாயிலே ஒரு பாலம் கட்ட வேண்டுமென்று பல நாட்களாகக் கோரிக்கைகள் இருந்தாலும், அது 10,000 ரூபாயில் கட்ட முடியாது, அதற்கு ஒன்றரை லட்சம் முதல் இரண்டு லட்சம் வரை ஆகும் என்று எஞ்சினியர்களைவிட்டு அதிகப்படியாக மதிப்பீடு போடச் சொல்லி, அதைச் சர்க்காருக்கு அனுப்புகின்ற அளவில் காலதாமதம் நடந்துகொண்டு வருகிறது. என்னுடைய தொகுதியில் அம்மையப்பன் என்ற ஒரு பஞ்சாயத்தில் ஓடம்போக்கி என்ற ஆற்றுக்குறுக்கே பாலம் போட வேண்டுமென்று 10 ஆண்டுக் காலமாக அந்தப் பஞ்சாயத்துக் கிராம மக்கள் கேட்டிருக்கிறார்கள். அதைப்போல ஒரு ஹரிஜன சேரிக்கு, தாழக்குடி என்னும் கிராமத்தில் காட்டாற்றுக் குறுக்கே பாலம் கட்ட வேண்டுமென்று கேட்கிறார்கள். இந்த இரண்டு பாலங்களுக்கும் 40,000 ரூபாய் செலவில் கட்ட வேண்டுமென்று பஞ்சாயத்து யூனியன் பல ஆண்டுகளாக

[கொடவாசல் திரு. சி. கிருஷ்ணமூர்த்தி] [1970 ஜனவரி 27

யோசித்து வந்தும் செய்ய முடியவில்லை. இப்பொழுது ஓடம்போக்கி ஆற்றுக்கு 1½ லட்சம் தேவையென்றும், தாழக்குடியில் 1 லட்சம் ஆகுமென்றும் சர்க்காரிடத்திலே இந்த அபிப்பிராயங்களையெல்லாம் அனுப்பி இருக்கிறார்கள். அப்படிப்பட்ட இந்த நேரத்தில் இப்படிச் சாலை மானியம் செய்துகொடுத்தது, கிராமப் பகுதியிலுள்ள பாலங்களையெல்லாம் புதுப்பிக்கின்ற காரணத்தினால், நாம் உணவு உற்பத்தி செய்யும் பொருட்கள் ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்திற்கு எடுத்துச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகளை அதிகமாக ஏற்படுத்துவதற்கும், மேலும் உற்பத்தி அதிகமாக ஏற்படவும் ஏதுவாக இருக்கும் வகையில் மானியம் அமைந்திருக்கிறது. அதற்காக இதை வரவேற்கக் கடமைப்பட்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

எதிர்க்கட்சியிலே இருக்கும் உறுப்பினர் மாண்புமிகு திரு. மாரிமுத்து அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் மாத்திரம் அல்ல, அவர்கள் பஞ்சாயத்து யூனியன் தலைவர். ஏற்கனவே இருந்த சாலை மானியத்திற்கும் இப்பொழுது அளித்திருக்கின்ற சாலை மானியத்திற்கும் உள்ள பாகுபாடுகளைப் பார்த்து, பஞ்சாயத்துக் கூட்டுமன்றத் தலைவர் என்ற முறையில் நன்றாக உணர்ந்து, அதை வரவேற்க வேண்டியவர்கள், என்ன காரணமோ தெரியவில்லை, அதைப்பற்றி ஒன்றும் சொல்லாமல் குறைகூற ஆரம்பித்திருக்கிறார்கள்.

கிராமப் பகுதிகளிலேயெல்லாம் இந்த ஆட்சி வந்த இரண்டாண்டுக் காலத்தில் நல்ல சீர்திருத்தங்களை, நல்ல முன்னேற்றங்களைச் செய்திருக்கிறது என்பதை என்னுடைய தொகுதியிலே பார்க்கின்றேன். வருகக்குடி என்னும் கிராமத்தில் ஒரு பாலம் கட்ட வேண்டுமென்று பத்தாண்டுக் காலமாக கேட்கப்பட்டது. அந்தப் பாலத்திற்கு, அப்பொழுது பொதுப் பணித்துறை அமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள் 5 லட்சம் ரூபாயைச் செலவு செய்து அங்கு பாலத்தை அமைத்துக் கொடுத்தார்கள். அதேநேரத்தில் அங்கிருக்கும் கீர்த்திமான் என்ற ஆற்றில் தூர் எடுத்து அகலப்படுத்த 1½ லட்சம் ரூபாய் செலவு செய்தார்கள். இப்படி இந்தப் பாலத்தை கட்டி, அந்த ஆற்றுக்குத் தூர் எடுத்த காரணத்தால் இன்று அந்தப் பகுதியில் சற்றேறக்குறைய இரண்டாயிரம் ஏக்கர்கள் இருபோகச் சாகுபடியாக மாற்றப்பட்டிருக்கிறது. இப்படி நல்ல சீர்திருத்தங்களை செய்த காரணத்தால் நாம் எல்லோரும் மகிழ்ச்சியோடு இருக்கும் வகையில், இந்த மாநிலத்தில், இந்த ஆட்சியில் சென்ற ஆண்டுகளை விட 10 லட்சம் டன் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது என்பதை நாம் எல்லோரும் வரவேற்கிறோம், பாராட்டுகிறோம், சந்தோஷப்படுகிறோம். இப்படிப்பட்ட அளவுக்கு, கிராமப்புறங்களிலே, நல்ல சீர்திருத்தங்களைச் செய்கின்ற அடிப்படையில் அமைந்திருக்கின்ற காரணத்தால் இந்த மானியக் கோரிக்கையை ஆதரிக்க நாம் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம்.



1970 ஜனவரி 21] [கொடவாசல் திரு. சி. கிருஷ்ணமூர்த்தி]

கீழத் தஞ்சையிலே கூலிப் பிரச்சினை முடியவில்லை என்றுகூடப் பேசுகிறார்கள். கீழத் தஞ்சை மாவட்டத்தில் 10, 15 ஆண்டுகளாகவே, கூலிப் பிரச்னை இருந்துகொண்டிருக்கிறது. 1966-இல் ஒரு விவசாயி 4 படி கூலி வாங்கிக்கொண்டிருந்தான். ஆனால் இன்று, 1969-இல் ஒரு விவசாயி 6 படி கூலி வாங்குகிறான். ஆனால் என்ன முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது, கூலிப்பிரச்னை தீர்க்கப்படவில்லை என்றெல்லாம் எதிர்க்கட்சிக்காரர்கள் பேசுகிறார்கள். 1966-இல் 4 படி கூலி வாங்கிக்கொண்டிருந்தவன், 1969-இல் 6 படி கூலி வாங்குகின்ற அளவுக்கு நல்லதொரு நிலைமையை அண்ணா அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள். இந்தக் கூலிப் பிரச்னையில், ஓய்வு பெற்ற நீதிபதி திரு. கணபதியா பிள்ளை அவர்களை நியமித்து அவர்களின் அறிக்கையின்மீது, இப்பொழுது இருக்கின்ற முதலமைச்சர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் அதற்கான சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறோம். நான்கு படி 6 படியாக உயர்ந்திருக்கிறது என்ற பெருமை மாத்திரமல்ல. அங்கு ஒரு சுமுகமான சூழ்நிலை இந்த ஆண்டு ஏற்பட்டு, குறுவைச் சாகுபடி நல்ல நிதானமான நிலைமையில் விவசாயிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் எந்த விதமானத் தகராறும் இல்லாமல் நல்ல முறையில் அங்கு நடைபெறுகிறது என்பதை எல்லோரும் பாராட்ட வேண்டும். அந்தச் சூழ்நிலையின் காரணமாகத்தான் அந்தப்பகுதியில், குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்தில் 1966-ல் 2 லட்சம் ஏக்கர் இருபோகச் சாகுபடி நடந்தது. இந்த ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் 5 லட்சம் ஏக்கராவில் இருபோகச் சாகுபடி நடந்திருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேற்றப்பட்டபொழுது, ரூ. 10,000 கோடி விவசாயத்திற்காகச் செலவு செய்தபொழுது தஞ்சை மாவட்டத்தில் 2 லட்சம் ஏக்கராக இருந்த இருபோகச் சாகுபடி, இன்றைக்கு ஐந்தாண்டுத் திட்டம் இல்லை, அண்ணா ஆட்சி வந்தபிறகு ஐந்து ஆண்டுத் திட்டம் இல்லாமலேயே, அதே அதிகாரிகளை வைத்துக்கொண்டு, அதே தஞ்சை மாவட்டத்தில் இன்றையதினம் 5 லட்சம் ஏக்கராவை இருபோகச் சாகுபடி நிலமாக மாற்றியிருக்கிறோம். அது மாத்திரமல்ல. நல்ல விதைகளை ஏ.டி.டி. 27, ஐ. ஆர். 8 போன்ற நல்ல விதைகளைக் கண்டுபிடித்து, அதன்மூலம் மாவுக்கு 15, 20 மேனி கண்டுமுதல் கண்டகாலம் போய் இன்றையதினம் 46, 45, 50 என்ற நிலைக்கு வந்திருக்கிறது விவசாயத்துறையில் நல்ல முறையில் அக்கறை எடுத்துக்கொண்ட காரணத்தினால் நல்ல முன்னேற்றம் காணப்படுகிறது அதன் பயனாக உணவுக் கட்டுப்பாடு நீங்கியிருக்கிறது. எல்லோரும் உணவுக் கட்டுப்பாடு நீக்கத்தை வரவேற்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் மட்டும் உணவுக் கட்டுப்பாட்டை எடுக்கவில்லை என்று சொன்னால், நான் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவனாக இருந்தாலும், இந்த மாநில மக்களுடைய நலனைக் கருதி, என்னுடைய மாவட்டத்தில் உணவுக் கட்டுப்பாட்டை எடுக்காவிட்டாலுங்கூட தஞ்சை மாவட்டத்திலுள்ள உற்பத்தியாளர்களிடையே ஒரு பீதி இருக்கிறது என்று கூற விரும்புகிறேன். நெல்லை பிடிமுதல் செய்யக் கூடியதை மில்

சொந்தக்காரர்களிடம் ஒப்படைத்தால், அவர்கள் காலாகாலத்தில் நெல்லைக் கொள்முதல் செய்யாமல் இருக்கலாம், விலையைக் குறைத்துக் கொள்முதல் செய்வார்கள் என்றெல்லாம் அவர்கள் பீதியாக இருக்கிறார்கள். அதிகாரிகள் தக்கபடி நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். இரண்டு மூன்று தினங்களுக்கு முன்பு சம்பந்தப்பட்ட அதிகாரிகளெல்லாம் தஞ்சை மாவட்டத்திற்குச் சென்று நெல்லைக் கொள்முதல் செய்வது எப்படி, கூட்டுறவு நாணயச் சங்கத்தின் மூலம் எப்படிச் செய்வது என்பதைத் தீவிரமாக விவாதித்தார்கள். ஆகையினால், நான் சர்க்காரைக் கேட்டுக்கொள்வதெல்லாம், என்னுடைய மாவட்டத்தில் கட்டுப்பாட்டை எடுக்காவிட்டாலும் கூட, மாநிலத்திலுள்ள மக்களின் நலத்தைக் கருதி கட்டுப்பாட்டை நீடித்தாலும், உற்பத்தியாகிற நெல்லை உடனுக்குடன் சர்க்கார் கூட்டுறவு நாணயச் சங்கங்களின் மூலமாகக் கொள்முதல் செய்வதற்கு உடனே நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்பது தான் என்று கூறிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

***திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, துணை மானியக் கோரிக்கையை வரவேற்று அதன் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். சென்ற ஆண்டு செய்யப்பட்ட நல்ல காரியங்கள் எல்லாம் சொல்லப்பட்டிருக்கின்றன, வரவேற்கிறோம். சென்ற ஆண்டு அரசு கிட்டத்தட்ட 7 நல்ல காரியங்களைச் செய்திருக்கிறது. முக்கியமாக வறட்சியை ஓட்டக்கூடிய நிலைமையில் திட்டங்கள் வகுக்கப்பட்டு ரூ 14½ கோடிக்குத் திட்டங்கள் வகுக்கப்பட்டு வறட்சி குறைக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவதாக சென்னையில் குடிநீர்த் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் எனக்கு முன்பு பேசிய நண்பர் சொன்னதுபோல் நஞ்சை விவசாயிகள், நிலச்சுவான்தார்களிடையே நிலவி வரும் உறவுமுறை அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கிறது. எல்லா நகரங்களுக்கும் குடிநீர் வசதி அபிவிருத்தித் திட்டம் ஒன்றும் உருவாக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் உணவுக் கட்டுப்பாடு நீக்கப்பட்டிருக்கிறது. இப்படியிருந்தும் எங்கள் பகுதியில் இருக்கக்கூடிய மக்கள் எதிர்பார்க்கக்கூடிய ஒன்றிரண்டு திட்டங்களை உருவாக்கவேண்டும் என்பதற்கான கருத்துக்கள் சிலவற்றைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சென்ற ஐந்தாண்டுக் காலமாக வறட்சி நிலைமையில் நாங்கள் இருந்துகொண்டிருக்கிறோம். வறட்சி என்பதை இருவித வறட்சியாகப் பிரிக்கலாம். குடிநீர் வறட்சி, நாட்டில் உணவு உற்பத்தியில் ஏற்படக்கூடிய வறட்சி இப்படி இரண்டாகப் பிரித்துப் பரிசீலனை செய்தால், ஒன்று குடிநீர் வறட்சியை நிவர்த்தி செய்யக்கூடிய நிலைமையில் வாட்டர் சப்ளை அண்டு டிரைனேஜ் போர்டு என்ற ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறது. நீர்வழங்கல் வடிகால் வாரியம் என்ற பெயரில் ஒரு வாரியம் ஏற்படுத்தப்பட்டு, இந்தத் திட்டங்களுக்காக





பணமும் ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் அதற்கு ஆயுள் ஈட்டுக் கழகத்திலிருந்தும் பணம் வருவதாகத் தெரிகிறது. உணவு வறட்சி இருக்கக்கூடிய பகுதிகளைப்பற்றி அரசு சிந்தனை செலுத்திக் கொண்டிருந்தாலும், செயல்முறையில் திட்டங்களைக் கொண்டுவருவதற்கு ஏன் தயங்குகிறார்கள் என்பது குறித்துத்தான் எனக்கு வருத்தமாக இருக்கிறது. சென்ற 5 ஆண்டுக் காலமாக நாங்கள் கேட்டுக்கொண்டு வருகிறோம். அதற்கென்று ஒரு திட்டம் கொண்டு வாருங்கள் என்று சொல்லிக்கொண்டு வருகிறோம். நீர்ப்பாசன அபிவிருத்தி வாரியம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு நீங்கள் ஏன் யோசிக்கிறீர்கள்? இரிகேஷன் டெவலப்மெண்டு போர்டு ஒன்று வேண்டும் என்று பல முனைகளில் முறையிடப்பட்டும், நிதி அமைச்சர் அவர்கள்கூட ஓரளவுக்கு அங்கீகாரம்கூட கொடுத்து—ஆசீர்வாதம் என்று சொல்லலாம்—இருக்கிறார்கள். இன்று நாட்டில் நிதி வறட்சியாக இருந்துகொண்டிருக்கிறது. மாநிலத்தில் மட்டுமல்ல, மத்திய சர்க்காரிலும்கூட நிதி வறட்சி இருந்து கொண்டிருக்கிறது. அப்படி இருக்கும்பொழுது இரிகேஷன் டெவலப்மெண்டு போர்டு ஏற்படுத்தினால், மத்திய சர்க்காரை நாம் எதிர்பார்க்க வேண்டியதில்லை, தேசிய உடைமையாக்கப்பட்ட பாங்குகளிலிருந்து பணம் வருவதற்குத் தயாராக இருக்கிறது. அவர்கள் பணம் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். வறட்சிப் பகுதியிலுள்ள மக்களும் அதை ஆதரிக்கத் தயாராக இருக்கிறார்கள். மக்களும் தங்களால் கொடுக்கவேண்டியதைக் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை உருவாக்காமல் இருந்து கொண்டிருக்கிற நாம், வறட்சிப் பகுதிகளுக்கு அந்த மாதிரி ஒரு திட்டத்தை உருவாக்கிச் செயல்பட்டால் தான் இந்த அரசைப்பற்றிப் போற்றி புகழ்ந்து பேசக்கூடிய நிலைமை ஏற்படும். இதைச் செய்வதற்கு ஏன் தயங்குகிறார்கள் என்று கேட்கிறேன்.

அதற்கு உபமானியக் கோரிக்கையில் ஏதாவது புகலிடம் இருக்கிறதா என்று பார்த்தேன், ஒன்றுமில்லை. செய்வதைச் செவ்வனே செய்யவேண்டும். அதிகாரிகள் முயல்கிறார்கள், அமைச்சர்கள் உத்தரவு போடுகிறார்கள், ஆனாலும் காலதாமதம் ஏற்படுவது என் பகுதி மக்களுக்கு கெட்ட காலம் என்று நினைக்கிறேன். அடுத்த ஆண்டிலாவது இரிகேஷன் டெவலப்மெண்டு போர்டு ஒன்றை ஏற்படுத்தி, பைலட் ஸ்கீம் போட்டு, ஒன்றிரண்டு பாங்குகளிலிருந்து பணவசதி பெற்று, வறட்சிப் பகுதிகளில் இந்தத் திட்டத்தை உருவாக்க வழி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று வறட்சி தாண்டவமாடிக் கொண்டிருக்கும்பொழுது நாம் தொழில்களுக்காக சலுகை கொடுத்துக்கொண்டிருக்கிறோம் மின்சார வாரியத்தின் மூலமாக. ஏன் அதை அரசு மறுபடியும் நினைத்துப் பார்த்து மறுபரிசீலனை செய்யக்கூடாது? நீர்ப்பாசனத்திற்காக இறைக்கக்கூடிய பம்புசெட்களுக்கு 8½ பைசாவாக இருந்த

[திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்] [1970 ஜனவரி 21

கட்டணத்தை 10 பைசாவாக உயர்த்தியிருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டும் நாங்கள் மிகவும் வருத்தப்படுகிறோம். தொழில் ஒரு பக்கம், தொழில்களுக்கு ஊக்கம் கொடுப்பது ஒரு பக்கம் இருந்தாலும், உணவு உற்பத்திக்கு நீங்கள் சலுகை கொடுத்தாக வேண்டும். அப்படியிருக்கும்பொழுது 8½ பைசாவிலிருந்து 10 பைசாவாக ஏன் உயர்த்தினார்கள் என்று தெரியவில்லை. அதைப் பரிசீலனை செய்யவேண்டும். அடுத்த நிதியாண்டிலாவது அந்தக் கட்டணத்தைக் குறைப்பதற்கு வழி செய்யவேண்டும்.

அது போக, புதிது புதிதாக நகரசபைகள் உருவாக்கப்படுகின்றன. அதைப் பார்க்கும்பொழுது, நான் வழக்கமாய பகுதிகள் போன்ற இடங்களிலுள்ள மக்கள் படக்கூடிய அவஸ்தையை நான் பார்க்கிறேன். உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால், திடீரென்று கடையநல்லூர் நகரசபையாக ஆக்கப்பட்டது. ஆறு ரூபாய் செலுத்திக் கொண்டிருந்தவர்கள், இன்று ரூ. 20 செலுத்தக் கூடிய நிலைமை இருக்கிறது. அந்த அளவுக்கு வரிகள் உயர்த்தப்பட்டிருக்கின்றன. பின்தங்கிய பகுதி, தொழில் இல்லாத பகுதி ஆகியவைகளுக் கெல்லாம் அதிகம் யோசித்துச் செய்ய வேண்டும். அதிகாரிகள் அதிகமாக்கப்படவேண்டும் என்பதற்காக நகரசபைகள் புதிது புதிதாக ஏற்படுத்தப்படுகின்றனவோ என்ற ஐயப்பாடு எனக்கு ஏற்படுகிறது. நகரசபையாக மாற்றுவதற்கு என்ன அவசியம் ஏற்பட்டுவிட்டது? நகரசபையாக இல்லாவிட்டால், டவுன் பஞ்சாயத்தாக இருக்கும், டவுன் பஞ்சாயத்தாக இருந்தால், மாட்சிங் கிராண்டு கிடைக்கும், அபிவிருத்தி அடையலாம். நகரசபையாக மாற்றுவதன் மூலம் மக்களை நாம் வரிப்பளுவுக்கு ஆளாக்குகிறோம். இதனால் மக்கள் மிகவும் பெரிய கஷ்டத்திற்குள்ளாகிறார்கள். ஆகவே, நகரசபை புதிது புதியதாக ஏற்படுவதைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இருக்கிற நகரசபைகளைக்கூட நகர பஞ்சாயத்துக்களாக மாற்றிக் கொள்ள மக்கள் தயாராக இருக்கிறார்கள் என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அது போக, முன்னால் பேசிய நண்பர், சாலை மானியம் பற்றிக் குறிப்பிட்டார்கள். சாலைகள், ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் அபிவிருத்தி செய்ய சாலைகளின் நீளத்தின் அடிப்படையில் தொகை ஒதுக்குவது என்பதை நான் வரவேற்கிறேன். அது நல்ல போக்கு. அடுத்து வரும் நிதி ஆண்டிலாவது நான் குறிப்பிட்டது அமுதும் இரிகேஷன் டெவலப்மெண்ட் போர்டு தேவை என்பதை திருத்தமாகக் குறிப்பிட்டு, வரட்சிப் பகுதியான எங்கள் பகுதிக்கு நிறைவேற்றுபகா நதி அணைத்திட்டத்தை தாமதமின்னியில் அதிக நிதி ஒதுக்கிட கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE: Hon. Deputy Speaker, Sir, I wish to offer only a few remarks in connection with this supplementary budget. At the very outset I wish to state on behalf of my party



1970 ஜனவரி 27]

that we take very serious objection and exception to Grant 34—Stationery and Printing. In the Explanatory Note under that grant, it is stated. "The Government have sanctioned the employment of additional staff in the Government Press, Madras, in connection with the printing of State Raffle Tickets." I am not taking objection to the staff as such. The point is that the Government's trying to nurture raffle is highly objectionable. The oft-repeated argument is that there is raffle in a neighbouring State, that it is there in a State in North India and that we also have got to have it. This is the stock argument from the Treasury Benches and we have been listening to it for the past one year. We take serious objection to the conducting of a raffle and the Government entering the field of gambling. It is said that if Government itself will not do it, somebody else will do it. It is highly against Manu Dharma Sastra, against the tenets of Tiruvalluvar and Mahatma Gandhi and against all canons of morality. This is something which the Government must take serious notice of. My revered Leader Rajaji has been pointing out outside that all Governments, irrespective of their party affiliation, must give up the raffle. I have a constructive solution to offer which, I am sure, the Minister for Finance, will consider The Chief Minister's Conference is held frequently. On behalf of the Tamil Nadu Government notice may be given for inclusion of an item in the agenda of such a conference that the Tamil Nadu Government wants the raffle to be scrapped all over the country. Let the Chief Ministers come to an agreement and see that this unfortunate vice is totally wiped out from this country. If the Tamil Nadu Government gives a lead in this matter, it will be a wonderful thing. The whole world will appreciate it. This is point No. 1.

Point No. 2 is this. We have collected money from the raffle. How is the Government going to utilise the money? Is it going to be merged with the other revenues? Or will it be kept separate and, if so, on what items is it going to be used? Nothing has been mentioned about this, though I see that it is not quite relevant to mention it in this context. Now that the issue has been raised on the floor of this House, I hope the Hon. Minister for Finance will say in his reply as to what he is going to do with this money.

The next point is about colleges. I do not agree with my distinguished colleague Thiru Nallasivam. I want more colleges. Though there is educated unemployment it does not mean we should restrict the colleges. We should have more colleges. In this context it is pertinent to ask the Government as to what we are going to do with the colleges that are existing. In some colleges, there is some grievance or other. In the Agricultural College, Coimbatore, and the Law College, Madras, there are grievances. Whenever the grievances of students are pointed

out, the immediately reaction is to say that they are all politically motivated. When the Dravida Munnetra Kazhagam was in the Opposition, the Hon. Thiru M. Bhaktavatsalam was singing the same song. During the British days, we were told that we were politically motivated, and during the Congress regime also we were told that we were politically motivated. The students have been victims of circumstances. They have to come and shout. Naturally some opposition party shouts in the House. If a Communist Member takes up a grievance, it does not mean that they are all Communists; if Thiru P. G. Karuthiruman takes it up, it does not mean that they are all Congress-minded. In the Law College there is a genuine grievance. There is no literature on Torts, Hindu Law, etc. There is no departmental library. Just as in a medical college there has to be a physics laboratory or a chemistry laboratory, there is no departmentalisation. Anybody can come and lecture. It is to this distinction that they object. If a student fails in Anatomy in the vrst year in a medical college or in Pathology in the third year, he is allowed to take the next year course and prosecute his studies further in the subject in which he has failed. What is sauce for goose must be sauce for gander. I would request the Hon. Minister to look into the grievances impartially.

In the Agricultural College, Coimbatore, there is a genuine grievance. The students feel that the Principal must be fully qualified.

(Mr. Speaker in the Chair.)

I have with me a list and from it I find that the Principal and some Lecturers are not fully qualified.

Then I come to the grievances of rickshawpullers. I obey the orders of the Chair. I only request the Minister for Finance since the Chief Minister is absent, to send for two or three of their representatives and hear them. They have got minor grievances and complaints of police excesses. Owners of rickshaws are not giving them proper cooly and batta and they want an increase of fifty paise or one rupee. If the Hon. Minister for Finance redresses the grievances, rickshaw pullers will worship him.

(Interruption by the Hon. Thiru K. A. Mathialagan.)

The Hon. Minister is allergic to the word 'worship'. I wish there is some consistency about it. I request the Hon. Minister for Finance to look into their grievances and try to solve them.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மன்றத்தின் முன்னால் விவாதத்திற்கு வந்திருக்கிற துணை [illegible]க் கோரிக்கைகள் பற்றி என்னுடைய கருத்துக்களைச்



சொல்ல விரும்புகிறேன். எப்பொழுதும் போல் இருக்கும் பழங் கதையிலேயே ஆளுங் கட்சி அங்கத்தினர்கள் பேசினார்கள். அவர்களுடைய வருத்தமெல்லாம், 'ஐயையோ, இவர்கள் ஒன்றும் பாராட்டவில்லையே' என்பது. 'இத்தனை செய்தோமே' என்பது. அவர்களைப் பாராட்டத்தான் நினைத்தேன். ஆனால், அப்பொழுதே எனக்கு ஒரு கடிதம் வந்தது. உங்கள் அனுமதியோடு, அதிலிருந்து இரண்டு வரிகளைப்படிக்க விரும்புகிறேன். 'மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர், கருத்திருமன் அவர்களுக்கு, ஆசிரியர் படிப்பு படித்து விட்டு, மூன்று ஆண்டு காலமாக கூலி வேலை செய்யும் ஒருவர் எழுதுவது'. இதுதான் இவர்கள் ஆட்சிக்குக் கொடுக்கும் அத்தாட்சி. மூன்று ஆண்டு காலமாக ஒரு ஆசிரியர் பயிற்சி பெற்றவர் கூலி வேலை செய்யும் நிலையில் இருக்கிறார். அவர் அரசாங்கத்தை ஆதரிக்கிறார் என்று சொல்வார்கள்? இன்னும் எத்தனையோ கஷ்டங்கள், தொல்லைகள். எத்தனையோ இலாகாக்களில் நோட்டீஸ் கொடுக்காமலேயே 'ரீ-ஆர்கனைஸேஷன்' என்று சொல்லி, பலர் வேலையிலிருந்து எடுக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் வேலைகொடுக்கும் திட்டம் ஒன்றும் இவர்களிடம் இல்லை. எந்த விதமான பொருளாதாரத் திட்டத்தையும் போட்டு வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க, மக்களின் வாங்கும் சக்தியைப் பெருக்க வழி செய்யவில்லை. ஒரு கனம் அங்கத்தினர் சொன்னார், '5 லட்சம் டன் உற்பத்தி செய்து விட்டோம் என்று. மிகவும் கண்ணியத்துடன் கேட்கிறேன், இதெல்லாம் நீங்கள் போட்ட திட்டங்களாலா? ஏற்கனவே நாங்கள் போட்டிருந்த திட்டங்களின் பலனை இப்பொழுது நீங்கள் அனுபவிக்கிறீர்கள். நாங்கள் போட்டதின் பலன் இல்லையா என்பதை ஒரு நிபுணர் கமிட்டியைப் போட்டு ஆராய்ந்து பார்த்துச் சொல்லட்டும். அவர்கள் பார்த்து. முன்பே ஒரு திட்டமும் போட்டிருக்கவில்லை என்று சொன்னால், எந்தத் தண்டனை கொடுப்பதாக இருந்தாலும் நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். ஏற்கனவே போட்டிருந்த திட்டத்தின் விஸ்தரிப்பு நீங்கள் செய்திருப்பது. காங்கிரஸ் போட்ட மூன்றாவது திட்டத்தின் விஸ்தரிப்பால் உங்களுக்குப் பலன். நீங்கள் போட்ட திட்டங்களா? நீங்கள் போட்ட திட்டங்கள் எதுவும் கிடையாது. நீங்கள் போட்ட திட்டங்கள் என்ன என்ன என்பதைப் பற்றிப் பின்னால் சொல்லுகிறேன். ஏதாவது ஒன்று லாபமாக வந்து விட்டால், 'பாருங்கள், நாங்கள் போட்ட திட்டம், லாபமாக வந்து விட்டது' என்பீர்கள். ஏதாவது ஒன்றில் நஷ்டம் வந்துவிட்டால், 'பார்த்தீர்களா, காங்கிரஸ்காரன் செய்துவிட்டுப் போன திட்டம்' என்று சொல்லி காங்கிரஸ்காரர்கள் மேல் பழி போடுவதா? எந்தத் திட்டத்தை நீங்கள் போட்டீர்கள் என்பதைச் சொல்லுங்கள். இப்பொழுது பல மில்கள் மூடிக் கிடக்கின்றனவே, என்ன செய்கிறீர்கள். ஒன்றிரண்டு மில்களைத் திறக்கப் போகிறோம் என்றுதான் சொல்கிறீர்கள். இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இன்றையதினம் வேலையில்லாமல் இருக்கிறார்கள். 'அந்த மில்கள் திறக்கும்வரை பாதிச் சம்பளம் கொடுப்போம்' என்று மறைந்த

முதலமைச்சர் அவர்கள் உறுதிமொழி கொடுத்தார்களே, அது நிறைவேற்றப்பட்டதா? தேர்தல் காலத்தில் கையெழுத்திட்டுப் போட்ட திட்டத்தை, கொடுத்த வாக்குறுதியையாவது நிறைவேற்றினீர்களா? தாங்கள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியாத நிலையில் சர்க்கார் இருக்கிறது. இப்போது மில்கள் மூடிக் கிடக்கின்றன. அவர்கள் போட்ட திட்டத்தையாவது நியாயமாக அபிவிருத்தி செய்தால் போதும். தேர்தல் வாக்குறுதிகளையெல்லாம் கொடுத்தவர்கள் ஆட்சியில், கவர்னர் உரையிலே, உப மானியக் கோரிக்கைகளில் சொல்லப்பட்டவைகளிலே மக்களுக்கு ஏதாவது நன்மை ஏற்பட்டிருக்கிறதா என்று பார்க்க வேண்டும். அவர்கள் ஒருவிதமான திட்டத்தையும் எடுத்துச் செய்யவில்லை என்பதைச் சொல்ல விரும்புகிறேன். நீங்கள் சொன்னபடி வாக்குறுதிகளை உங்களால் நிறைவேற்ற முடியவில்லை. படி அரிசித் திட்டம், படி அரிசித் திட்டம் என்று ஜம்பம் அடித்துக் கொண்டீர்கள். படி அரிசி மூன்று ரூபாய், நான்கு ரூபாய் என்று வெளியில் விற்கும் நிலை இருக்கும்போது கட்டுப்பாட்டை எடுத்து விட்டீர்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, எந்த ஊரில் படி அரிசி நான்கு ரூபாய் விற்கிறது என்று சொன்னால் நாங்கள் தெரிந்து கொள்ள உதவியாக இருக்கும்.

**திரு. பி. ஜீ. கருத்திருமன் :** தலைவர் அவர்களே, ஊரெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். சட்டப் பேரவையில்கூட கேட்டிருக்கிறார்கள். நிச்சயமாக நீங்கள் சொல்ல முடியுமா, படி அரிசி மூன்று ரூபாய், மூன்றரை ரூபாய்க்கு விற்கவில்லையென்று?

**மாண்புமிகுதிரு. ப. உ. சண்முகம் :** தலைவவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது படி அரிசி நான்கு ரூபாய் என்று விற்கிற நேரத்திலே ரேஷனை எடுத்தார்கள் என்று சொன்னார்கள். இப்போது ரேஷன் கிடையாது. ரேஷனை எடுத்திருக்கும் இந்த நேரத்தில் எந்த இடத்தில் படி அரிசி நான்கு ரூபாய்க்கு விற்கிறது என்று சொன்னால் நாங்கள் தெரிந்து கொள்ள முடியும். நேரிடையான கேள்விக்கு நேரிடையான பதிலைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. பி. ஜீ. கருத்திருமன் :** தலைவர் அவர்களே, இப்பொழுது என்று சொன்னேன். ரேஷனை எடுத்த நேரத்தில் விற்றது என்று சொன்னேன். இப்பொழுது என்று சொல்லவில்லை. அவ்வளவு மடையன் அல்ல நான். படி அரிசி மூன்று ரூபாய், மூன்றரை ரூபாய் என்று ஒரு பத்திரிகையில்கூட போட்டிருந்தது. மூன்று ரூபாய் அளவுக்கு விலை ஏறியிருக்கிறது என்று சொன்னால், இல்லை இல்லை, படி அரிசி இரண்டு ரூபாய் தொண்ணூறு பைசாதான் இருக்கிறது என்றால் என்ன அர்த்தம்? இரண்டு பைசா, பத்து பைசா குறைவாக இருக்கிறதே என்றால் என்ன பொருள்? உணவு உற்பத்தி பெருகியிருக்கும் நேரத்தில் எடுத்தீர்கள். போன



ருஷம்கூட 'வறட்சி வறட்சி' என்ற பாட்டுப் பாடினீர்கள். அவர் ள் 'மத்தியிலே' இருந்து கொண்டு வந்து தள்ளினார்கள். படி ரிசி மூன்று ரூபாய்க்கு வாங்க முடியாத நிலையில் படி அரிசித் ட்டத்தைப் போட முடியாத, கையாலாகாத்தனத்திலே ரேஷனை, துவும் பஞ்சாயத்துத் தேர்தலிலே ஓட்டு வாங்குவதற்காக டுத்து விட்டீர்கள். பஞ்சாயத்துத் தேர்தலில் ஓட்டு வாங்கு தற்காகச் செய்த நிலைமையே தவிர வேறு ஒன்றும் இல்லை. முன்பு ாங்கிரஸ்காரர்களால் மிகவும் கஷ்டப்பட்டோம். ஒருவர்—மாஜி— ருவர் இருந்தார். அவர் தானும் கெட்டு, ஊரையும் கெடுத்து ிட்டுப் போய் விட்டார்.

(ஒரு குரல் : அவர் சிண்டிகேட்டா, இண்டிகேட்டா?)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதெல்லாம் இங்கே பேச வேண்டாம்.

**திரு. பி. ஜீ. கருத்திருமன் :** தலைவர் அவர்களே, இவர்கள் எந்தத் திட்டத்தை நீங்கள் போட்டிருக்கிறீர்கள்? அறுவடை சமயம் பார்த்து ரேஷனை எடுத்து விட்டார்கள். வேலூரில் பத்து ரூபாய் குறைந்தது, இன்னொரு இடத்தில் பதினைந்து ரூபாய் ஏறியிருக்கிறது. இவையெல்லாம் பத்திரிக்கையில் வந்திருக்கிறது. விலைவாசி ஏறவில்லையா? 1967-லிருந்ததைவிட இப்போது குறைந்திருக்கிறது. என்று சொன்னால், செகண்ட் பே கமிஷன் எதற்காக நியமிக்கப்பட்டது? விலைவாசி குறைந்திருக்கும் நேரத்தில் செகண்ட் பே கமிஷனை எதற்காக நியமித்திருக்கிறீர்கள் 1967-ல் லிவ்விங் இண்டெக்ஸ் எவ்வளவு? இப்பொழுது இருக்கும் நிலைமை என்ன? விலைவாசி குறைந்திருக்கிறது என்று சொல்ல முடியுமா? ஏதோ ஒன்றுக்கு விலை குறைந்திருக்கலாம். ஒன்றிற்கு ஏறியிருக்கலாம். அது இவர்களுடைய சாமர்த்தியத்தினால் அல்ல என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். பொருள் உற்பத்தி அதிகமானால் விலை குறையும்.

'கரும்பு போட்டால் சாவி என்னிடத்தில் இருக்கிறது, தண்ணீர் திறந்துவிட மாட்டோம்' என்று இன்றைக்கு முதலமைச்சராக இருக்கும் அன்றைய மராமத்து அமைச்சர் அன்றைக்குச் சொன்னார். அவர் சொன்னதாலேயே கரும்பு விலை குறைந்துவிட்டதா? அவருடைய கூற்றுப்படி நடந்திருந்தால் கரும்பின் விலை அதிகரித்துத்தான் இருக்கும். உற்பத்திப் பெருகியதாலேதான் விலை குறைந்தது. இயற்கையாக உற்பத்தியாகும் நெல்லுக்கு எல்லாம் காரணம் இவர்களுடைய சாமர்த்தியம்தான் என்று கூறினால் என்ன அர்த்தம்? தப்பித்தவறி உற்பத்தி குறைந்துவிட்டதென்றால் அதற்கெல்லாம் காரணம் காங்கிரஸ்காரர்கள் என்று புகார் சொல்வதா? தொடர்ந்து வரும் சர்க்கார் போட்டதாகவே இருக்கிறதே தவிர, இவர்கள் வந்து புதிதாகப் போட்டதாக ஒன்றும் காணோம். வருமானம் 200 ரூபாய்க்குக் குறைந்திருப்பவர்களுக்குத்தான் படி அரிசி என்று சொல்கிறீர்கள். சர்க்கரைக் கார்டு வாங்குவதற்காக 100 ரூபாய் வருமானத்தை 300 ரூபாய்

என்று எழுதி வாங்கிவிட்டோம் என்று மக்கள் சொல்கிறார்கள். விலைவாசி உயர்வது இயற்கை என்று சொன்னீர்கள். ஆனால் இன்றைக்கு ஒரேவிதமான கட்டுப்பாட்டுடன் ரேஷனை எடுத்து விட்டீர்கள். தினம் தினம் ஒவ்வொரு உத்தரவு வருகிறது. விவசாயிகளிடத்தில் இருக்கும் ஸ்டாக் எல்லாம் சொல்ல வேண்டும், அதற்கென்று ஒரு சட்டம் போடுவோம், பதுக்கல், கள்ள மார்க்கெட் நடவாமல் பார்த்துக் கொள்வோம் என்று நாளுக்கொரு செய்திகள் வருகின்றன. நீங்கள் விவசாயிகளுக்குக் கொடுக்கும் விலை கட்டுபடியாகாத விலையாக இருக்கிறது. விலை கட்டுபடியானால் விவசாயி ஏன் நெல்லைக் கொடுக்காமல் போகிறான்? உற்பத்தி செலவிற்கு சரியான விலை கொடுத்தால் அவன் மேலும் உற்பத்தியைப் பெருக்குவான். இதை நாம் கேட்டால் சில அமைச்சர்கள் பொதுக் கூட்டங்களில்; கருத்திருமன் நெல் விலையைக் கூட்டித் தருமாறு கூறுவார்' என்றுதான் கூறு கிறார்கள். 'நாங்கள் எல்லாம் தேங்காய் நாரிலிருந்து ரப்பர் செய்வோம், என்று சொல்கிறீர்களே, அப்படி நீங்கள் மட்டும் சொல்லலாமா? நாங்கள் இந்த மன்றத்தில் கூப்பாடு போடுவதற் காக வரவில்லை. நீங்கள் செய்யும் தவறுகளை அடித்துக் கேட் போம், கண்டித்துக் கேட்போம், உங்களுக்கு மாலை போடுவதற்காக இங்கே வரவில்லை. நல்லது செய்தால் ஆதரிப்போம். கெட்டது செய்தால் எதிர்ப்போம். நீங்கள் எதாவது புதிதாகச் சிந்தித்து நடவடிக்கை எடுத்திருக்கிறீர்களா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் 'அடித்துக் கேட்போம்' என்று சொன் னார்கள். அவருக்குக் கை நீளமாக இருந்தால் அடித்துக் கேட்கட் டும். கட்டுப்பாட்டை எடுத்ததை ஒரு சிலர் ஆதரிக்கிறார்கள். வேறு சிலர் எதிர்க்கிறார்கள். இது கூட அதற்காகத்தானே.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவர் அவர்களே, தயவுசெய்து அமைச்சர் அவர்கள் குறுக்கிட வேண்டாமென்று கேட்டுக் கொள் கிறேன். நான் முழுவதும் பேசிவிட்ட பிறகு அவர் பேசட்டும். என்னுடைய பேச்சில் குறுக்கிட வேண்டாம். அவர்மேல்தான் குற்றம் அதிகமாக இருக்கிறதோ என்னவோ, அடிக்கடி குறுக்கிடு கிறார். சிவில் சப்ளைஸ் செய்த திருவிளையாடல்கள் அதிகம். கொள் முதல் செய்வதற்காக ஒருவருக்குக் கொடுத்த பணமும் இன்னும் கிடைக்கவில்லை, நெல்லும் கொடுக்கப்படவில்லை . . . .

(மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் அவர்கள் எழுந்தார்)

Sir, I am not yielding. I will finish my speech and then only the Hon. Minister can intesvence.

என்னுடைய கருத்தை நான் சொல்லும்போது, அமைச்சர் அவர்கள் எழுந்து இடையிலே எதுவும் சொல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பதட்டமில்லாமல் பேச வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். நிதானமாகப் பேச வேண்டு



மென்று அவரைக் கேட்டுக் கொள்கிறேன். ஏதோ கொள்முத லுக்குப் பணம் கொடுத்து, அரிசியும் கிடைக்கவில்லை, பணமும் கிடைக்கவில்லை என்று கூறினார். அவர் யாரையோ மனதில் வைத் துக்கொண்டு சொல்கிறார் என்று கருதுகிறேன். சிவில் சப்ளைஸ் டிபார்ட்மென்ட் பேரில் நிறைய குற்றச்சாட்டுகள் இருக்கின்றன என்று அவர் பொதுவாகக் கூறினால் போதுமா? எந்தக் குற்றச் சாட்டு என்று குறிப்பிட்டுப் பேசினால் அதற்குப் பதில் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். அவர் யார்மீது குற்றம் சாட்டு கிறார் என்பதைச் சொல்ல வேண்டும். மதுரை மாவட்டத்தில் நடைபெற்ற செய்தியை—பத்திரிகைச் செய்தியைப்பற்றிச் சொல் கிறார் என்று நம்புகிறேன். அப்படியிருக்குமானால் இன்று நேற்று அல்ல, 1962-ம் ஆண்டிலிருந்து நடைபெற்று வருகின்ற சம்பவங்கள் முழுவதற்கும் விவரம் வேண்டுமென்று கேட்டால் தருகிறேன். அதைச் சொல்ல வேண்டாமென்று சொன்னால் சொல்லவில்லை. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குற்றம் சாட்ட வேண்டுமென்று சொன்னால், தாராளமாகக் குற்றம் சாட்டட்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** 1962-ல் இருந்து நடந்து வந்திருந் தாலும் சரி, 1967-ல் இருந்து நடந்து வந்தாலும் சரி, தப்பு தப்பு தான். அந்தத் தப்புகள் காரணமாகத்தானே நாங்கள் இங்கே வந்து உட்கார்ந்து கொண்டிருக்கிறோம். நாங்கள் என்ன என்ன குற்றங்களைச் செய்தோம் என்று எங்கள் மீது குற்றம் சாட்டினீர் களோ அந்தக் குற்றங்களையேதான் நீங்களும் செய்து வந்திருக்கி றீர்கள். நான் திண்டுக்கல் வியாபாரியைப் பற்றித்தான் சொல் கிறேன். அவர் மேல் கேஸ் இருக்கிறது. பேப்பரிலே வந்ததை வைத்துத்தானே பேச முடியும். வேண்டுமானால் ஒரு மாதம் சிவில் சப்ளைஸ் இலாக்காவில் என்னை இருக்க அனுமதியுங்கள். உங்களது ஆட்சியில் ஏற்பட்ட நூற்றுக்கணக்கான ஊழல்களை எடுத்து நான் காட்டுகிறேன். முதல் அமைச்சர் அவர்கள் அங் காடிப் பேச்சு, தெருப் பேச்சு இவற்றைக் கேட்டுத்தானே நாங்கள் பேச முடியும் என்று முன்பு சொன்னார்களே அதைத்தான் நான் சொல்கிறேன். பத்திரிகையில் வந்ததைத்தானே நான் சொல்ல முடியும் நம்பமாட்டேன் என்று எப்படிச் சொல்வது எனக்குத் தெரியும். சிவில் சப்ளைஸ் ஒரு ஒயிட் எலிஃபென்ட். அந்த வெள்ளை யானையைக் கட்டிக் கொண்டுதான் நாங்கள் அழிந்தோம். அதே யானையைக் கட்டிக்கொண்டுதான் நீங்களும் அழித்தீர்கள். இப் போது எடுத்து விட்டோம் என்று சொல்கிறீர்கள்? ஏன் எடுத்தீர் கள்? அத்தனை ஊழல்கள் நடந்திருக்கின்றன. மத்திய சர்க்கா ராக இருந்தாலும் சரி, மாநில சர்க்காராக இருந்தாலும் சரி விவ சாயிகளுக்குத் துரோகம் செய்யும்படியான நிலைமைதான் இருக் கிறது. தங்களுக்கு துரோகம் செய்பவர்களை விவசாயிகள் ஒரு போதும் மன்னிக்க மாட்டார்கள். உங்களது ஆட்சியில் ஊழல்கள் மலிந்துவிட்டன. நடந்துவிட்ட ஊழல்களை மறைப்பதற்காகவே தான் இன்றைக்கு நீங்கள் ரேஷனை எடுத்து விட்டோம் என்று சொல்லி தப்பித்துக்கொள்ளப் பார்க்கிறீர்கள். இல்லை என்று மறுக்க முடியுமா?

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1970 ஜனவரி 27

முன்பு நான் கேள்வித்தாள்களில் ஆசிரியர்கள் எப்படி எல்லாம் கேள்வி கேட்கிறார்கள் என்பதைப்பற்றி இந்த அவையிலேயே சொல்லியிருக்கிறேன். மதியழகன், கருணாநிதி இவர்கள் பெயர்களைக் குறிப்பிட்டு கூட்டு வியாபாரம் செய்கிறார்கள் என்பதாகக் கணக்கில் கொடுக்கப்பட்டிருந்ததைச் சொல்லியிருக்கிறேன். அல்ஜீப்ராவில் எ. பி. சி. என்று கொடுப்பதுதான் வழக்கம். ஆனால் டி.எம்.கே. என்று கொடுத்திருக்கிறார்களே என்றபோது ஆளும் கட்சியினர் சந்தோஷப்பட்டுக்கொண்டார்கள், டி.எம்.கே. என்கிற தங்கள் கட்சியை நினைத்து. ஆனால் என்ன ஆகிறது? அப்போதே இதுபோன்ற காரியங்களைத் தடை செய்யக் கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொண்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும். இந்த ஆண்டு 1969 டிசம்பர் அரை வருடப் பரீட்சையில் பரமக்குடி உயர்நிலைப்பள்ளி பத்தாம் வகுப்பு வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள ஒரு கேள்வியைப் பாருங்கள். அவைத் தலைவர் அனுமதியுடன் படிக்கிறேன். கேள்வி

கீழ்வரும் பத்தியில் தகுந்த நிறுத்தற் குறிகளிட்டு எழுதுக.— அதன்கீழ் கொடுக்கப்பட்ட பத்தியைப் பாருங்கள்.

" பகலும் இரவும் உழைக்கும் பாட்டாளி வர்க்கத்திற்கு உண்ண உணவில்லை. கட்டத் துணி இல்லை. இருக்க வீடில்லை. ஆனால் ஒரு கண நேரமும் வேலை செய்யாத பெருஞ் செல்வர்கள் சிலர் அடுக்கு மாளிகையிலே ஆனந்தமாக வாழ்கிறார்கள். காரிலே பாரெல்லாம் உலாவுகிறார்கள். இந்த அநியாயம் இவ்வுலகில் எவ்வளவு காலம் நீடிப்பது, தலைவர்களைப் பூஜை செய்து கொண்டிருந்தது போதும். அடி உதவுவதுபோல் அண்ணன் தம்பி உதவ மாட்டான். எடுங்கள் வாளை, தொடுங்கள் போரை, அடுத்த கணமே படைப்போம் புது உலகை ".

இது எந்த இலக்கியத்தில் வருகிறது. நக்சல்பாரிகள் அச்சிட்டு வழங்குகிறார்கள். உங்களையும் சேர்த்துத்தான் சொல்லப்படுகிறது. காரிலே பாரெல்லாம் உலாவுகிறீர்கள். சில ஆதரவு சுவரொட்டிகள் ஒட்டப்படுகின்றனவே, நடவடிக்கை எடுப்பதாகச் சொல்கிறீர்களே, இது என்னவிதமான பிரச்சாரம்? சி.ஐ.டி.-க்கு என்ன வேலை? பள்ளிக்கூட வினாத்தாளிலே " எடுங்கள் வாளை, தொடுங்கள் போரை " எப்படி இருக்கிறது புது உலகப் படைப்பு ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எந்தப் பள்ளிக்கூடத்து வினாத்தாள் ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அரசாங்க மாணவர் உயர்நிலைப் பள்ளி, பரமக்குடி. அந்த வினாத்தாளை உங்களிடமே கொடுக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த வினாத்தாளின் தலைப்பில் அது இன்ன ஊர், இன்ன பள்ளிக்கூடத்தைச் சேர்ந்தது என்று ஒன்றும் அச்சிடப்படவில்லையே? அதிகாரபூர்வமானதாக இதை எப்படிக் கருதுவது ?



1970 ஜனவரி 27] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** கவர்மெண்டு பாய்ஸ் ஹைஸ்கூல்—பரமக்குடி தாள்தான். வினாத்தாளின் தலைப்பில் பள்ளிக்கூடங்களின் பெயர்களை அச்சிடுவது வினாத்தாள் வெளியாகிவிடுவதற்குப் பயன்படுகிறதாகையால், பெயர்கள் அச்சிடப்படுவதில்லை. அதிகாரிகள் என்ன செய்கிறார்கள் ?

போலீஸ்காரர்களை எடுத்துக் கொண்டால் கோயம்புத்தூர் ஜில்லா, காங்கிரஸ் கமிட்டி காரியாலயத்திற்குள் நுழைந்து ஜில்லா காங்கிரஸ் கமிட்டி காரியாலயத்திற்குள் நுழைந்து, பிடித்து வெளியே இழுத்து வந்து கதவை இழுத்துப் பூட்டி அவர்களை அரஸ்டு செய்து வானில் கொண்டு போய் ஸ்டேஷனில் வைத்திருக்கிறார்கள்.

நான் போய் டி.எஸ்.பி. யிடம் பேசினேன். நீங்கள்தான் எதிர்க் கட்சித் தலைவர் என்று எப்படி எனக்குத் தெரியும் என்கிறார். எப்படி இருக்கிறது? நான் கோர்ட்டுக்குப் போய் நான்தான் எதிர் கட்சித் தலைவர் என்று அத்தாட்சி வாங்கி வர வேண்டும். இல்லையா ? அப்போ இவர்தான் முதல் அமைச்சர் என்று எப்படித் தெரியும் என்று யார் வேண்டுமானாலும் கேட்கலாம். கைது செய்தார்களே வாரண்டு உண்டா ? கிடையாது. வேண்டுமென்றே அவமானப்படுத்தப்பட வேண்டும் என்பதற்காக செய்யப்பட்ட காரியம் இது. 3 மணி நேரம் அடைத்து வைத்திருந்தார்கள். 3 அறைகளை சீல் வைத்திருக்கிறார்கள். ஒரு அறை நான் உபயோகப்படுத்திக்கொண்டிருந்தது. அறைகளை சீல்தான் வைத்தார்களே—ஒரு மாஜிஸ்ட்ரேட்டை அழைத்து வந்து உள்ளே என்ன என்ன சாமான்கள் இருக்கின்றன என்பதற்கு லிஸ்டு எடுத்து பிறகு சீல் வைத்தார்களா? உள்ளே வைக்கப்பட்டிருந்த சாமான்களுக்கு யார் பொறுப்பு? தஸ்தாவேஜுகளைக் காணோம். சட்டம், அமைதி, ஒழுங்குக்கு என்ன குந்தகம் ஏற்பட்டது இத்தகைய காரியங்களைச் செய்ய? வெளித் தூண்டுதல் இருந்திருக்கிறது. அதன் காரணமாகத்தான் இத்தகைய அவசரமான அராஜகமான காரியம் நடைபெற்றிருக்கிறது.

நான் ஜில்லா கலெக்டரிடம் சென்று சொன்னேன். அவர் என்ன சொல்கிறார்? டிஸ்மிஸ் செய்யப்பட்டால் கூட நான் ஆனந்தமாக ஆர்டரை வாங்கிக்கொண்டு காற்று வாங்க நான் வாக்கிங் போவேன் என்கிறார். நான் சொன்னேன். இருக்கலாம், லஞ்சம் வாங்கினால் வாக்கிங் போனால்கூட டிஸ்மிஸ் பண்ணி விடுவார்கள் என்று சொன்னேன். யாரிடத்திலே பேசுகிறோம் என்று தெரிய வேண்டும். நாங்கள் என்ன தெரியாதவர்களா ? இதை வைத்து எங்களை மிரட்ட முயற்சிக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 24-ம் தேதி ஜில்லா காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் நடந்தது, அதிலே 20 பேர்கள்தான் இல்லை. 120 பேர்கள் வந்தார்கள். அவர்கள் போலீஸ் ஸ்டேஷனிலே போய் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் இவ்வளவு நாள் உங்களை நம்பினோம், இப்பொழுது புத்தி வந்தது, உங்களை நம்பி வாழ முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள்.

ஜனநாயக முறையிலே கட்சிக்குள் உள்ள சண்டையைத் தீர்த்துக் கொள்வார்கள், இதிலே அரசியல் ஏன் குறுக்கிடவேண்டும்? அதைத்தான் நான் சொல்கிறேன். எந்த இடத்திலே அவர்கள் தலையிட வேண்டாமோ அங்கே தலையிடுகிறார்கள். எங்கே நடவடிக்கை எடுக்க வேண்டாமோ அங்கே எடுத்திருக்கிறார்கள். இதிலே காரணம் இருப்பதால் இப்படி நடக்கிறது. சர்க்காருக்கும் இதற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? இதற்கு ஒரு விசாரணை நடத்த வேண்டுமென்று சபாநாயகர் அவர்கள் மூலமாக நான் கேட்டுக் கொள்கிறேன். எங்களுடைய கட்சியை அவமானப்படுத்துவதற்காகவே செய்யும்படியான நிலையை விசாரிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். ஏன் கைது செய்தார்கள்? ஏன் பூட்டப்பட்டது? எந்த அதிகாரத்தை வைத்து அதைச் செய்தார்கள் என்பதை நிச்சயமாக தெளிவுபடுத்தியாக வேண்டும்மென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் பூட்டியே கிடந்தால் அங்கே எப்படி அரசியல் காரியங்களைச் செய்ய முடியும்? இதை உடனடியாக கவனிக்க வேண்டும் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்னும் ஐந்து நிமிடங்கள் தான் இருக்கின்றன.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஐந்து நிமிடங்களுக்குள் முடித்து விடுகிறேன். தேர்தலிலே வெற்றி மாலை சூடிக்கொண்டது பற்றிச் சொன்னார்கள். முகையூர் தேர்தலிலே காலஞ்சென்ற அமைச்சர் என்னுடைய நண்பர் திரு. கோவிந்தசாமி அவர்களுடைய மனைவி எனது சகோதரி திருமதி பத்மாவதி அம்மாள் அவர்கள் வெற்றி பெற்றதைப் பாராட்டுகிறேன். அதைப் பாராட்டுவதிலே எனக்கு வெட்கமோ அவமானமோ கிடையாது. ஆனால் அவர்கள் பேசும் பொழுது அவர்களே சொன்னார்கள். காமராஜ், கருத்திருமன் எல்லாம் பிரச்சாரம் செய்தார்கள். எங்களுக்கும் அமைச்சர்கள் எல்லாம் காரிலே வந்து பிரச்சாரம் செய்தார்கள். மின்சார வசதிகள் எல்லாம் செய்து கொடுத்து வோட்டு வாங்கிக் கொடுத்தார்கள் என்று எல்லாம் சொன்னார்கள். " Power corrupt, absolute power corrupt, absolutely ", என்று சொல்வதுபோல இருக்கிறது. 40 லட்சத்திற்குள் செலவு செய்து விஸ்தரிப்புகள் செய்யப் பட்டிருக்கின்றன. ரோடுகள் போட்டிருக்கிறார்கள். அந்த ரோடுகளை ஏன் செப்டம்பர் மாதத்தில் அல்லது ஜனவரி, பிப்ரவரி மாதத்தில் போட்டிருக்கக்கூடாதா? அப்பொழுதுதான் போடவேண்டுமா? அந்த இரண்டு மாதங்களுக்குள் 50 லட்சம் ரூபாய் செலவு செய்து 100 கார்களை உலாவ விட்டு மந்திரிகள் எல்லாம் போய் ஓட்டுக் கேட்டார்கள் . . . .

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, 1967-லே நடந்த தேர்தலிலே அந்த அமைச்சர்கள் எல்லாம் காரிலே சென்று 50 லட்சம் ரூபாய் செலவழித்தபொழுது மறைந்த அமைச்சர் திரு. கோவிந்தசாமி அவர்கள் 13,500 வாக்குகள் வித்தியாசத்தில் வென்றார்கள். அதற்குப் பிறகு நடைபெற்ற ஒவ்வொரு



இடைத் தேர்தலும் தொடர்ந்து வெற்றியின் அறிகுறி வளர்ந்துவருகின்ற நிலைமையில்தான் ஓட்டுகள் அதிகமாகி வருகின்றன. அந்த அளவிலேதான் அந்த வித்தியாசம் 23 ஆயிரம் ஆக முகையூர் தேர்தலில் அதிகரித்திருப்பது முன்பு இருந்த நிலைமையேதானே தவிர மாறுபாடான நிலைமை இல்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** முன்பு ஒன்றுமே நடக்கவில்லை, 13 ஆயிரம் வாங்கினோம், இப்பொழுது இவையெல்லாம் நடந்ததால் தான் 23 ஆயிரம் வாங்கியிருக்கிறோம் என்று அவர்களே சொல்கிறார்கள். நாங்கள் ஒன்றும் செய்யாமலே 13 ஆயிரம் வாங்கினோம் இப்பொழுது 50 லட்சம் செலவு செய்து 23 ஆயிரம் வாங்கினோம் என்று சொல்கிறார்கள் . . . .

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** நான் சொன்னது 1967 தேர்தலுக்குப் பிறகு, நடந்த ஒவ்வொரு இடைத் தேர்தலிலும் அதிகமாகத்தான் வாங்கிக்கொண்டு வருகிறோம். எங்களுடைய நிர்வாகத்தைப் பார்த்து மக்களுடைய ஆதரவு எங்களுக்குத்தான் இருக்கிறது என்பதற்கு அது ஒரு அறிகுறி என்பதாகத்தான் சொன்னேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உங்களுடைய நிர்வாகம் எனக்குத் தெரியும். தஞ்சாவூரிலே ஆபீஸ் பைலே காணோம். கடையிலே இருந்திருக்கிறது. இதைச் சொன்னால் உணவு அமைச்சர் அவர்கள் எந்த இடத்திலே எப்படி என்று எல்லாம் கேட்பார். கடைசியிலே அந்த பைலைக் கடையிலே போய் . . . .

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** சில பேர்கள் தீ வைத்தே எரித்தார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தீ வைத்ததாக வேறு சொல்கிறார்கள் . . .

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** உங்களுடைய ஆட்கள் தான்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அவர்களைப் பிடித்து தூக்கிலே போடுங்கள், யாராக இருந்தாலும் சரியே, தூக்கிலே போடுங்கள் (குறுக்கீடு) தைரியம் இருந்தால் போடுங்கள். அவர்கள் ரகசியமாகப் பேசலாம். அவர் செய்தது எல்லாம் சரி என்று நாங்கள் நம்பினோம். யுத்தத்திற்குப் பின்னாலேதான் சில ரகசியங்கள் எல்லாம் தெரிய வரும். அதுபோல ஒரு மாதத்திற்கு முன்னால்தான் எங்களுக்கு 1967-லே ஏன் தோற்றோம் என்று தெரிய வருகிறது. மாஜி முதல் அமைச்சர் அவர்களும் பேசியிருக்கிறார்கள். அவருக்கு முன்னாலே விஷக் கிருமிகளாக இருந்தது இப்பொழுது அமுதக் கிருமிகளாகப் போய்விட்டது. கர்நாடக சங்கீதம் கேட்டு சலித்துப் போய் விட்டது. அவரிடம் ஆலோசனை கேட்டு நாங்கள் செய்கிறோம் என்று சொல்கிறார்கள். இரண்டு பேர்களும் காங்

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1970 ஜனவரி 27,

கிரசை தோற்கடிப்பதற்குத் திட்டம் போட்டிருக்கிறார்கள், ரகசியமாகப் போட்டு இருக்கிறார்கள். அவர்கள் போட்ட திட்டத்தைத்தான் நிறைவேற்றி இருக்கிறார்கள். இப்படியிருந்தால் எந்தக் கட்சிதான் நிலைக்க முடியும்? அவர்கள் சொல்வது எல்லாம் எந்த நிலையோ எனக்குத் தெரியாது.

இந்த ஆட்சியிலே பொருளாதாரத் திட்டம் என்பதே கிடையாது. வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு எந்த விதமான முயற்சியும் எடுக்கப்படவில்லை. அபிவிருத்திகள் எல்லாம் ஏற்கனவே போட்ட திட்டங்களின் தொடர்ச்சியே தவிர வேறு ஒன்றும் கிடையாது. இதை நான் பலமுறைகள் சொல்லியிருக்கிறேன். ஆண்டவர்கள் தவறுகள் செய்து இருக்கலாம். அதைவிடப் பத்து மடங்குத் தவறுகளை நீங்கள் செய்திருக்கிறீர்கள். இதற்காக ஒரு விசாரணை வையுங்கள். இதற்கு முன்னால் செய்யப்பட்டதைவிட அபிவிருத்தியின் முன்னாள் வேகத்தைவிட இப்பொழுதிருக்கிற வேகம் குறைந்திருக்கிறது என்று தீர்ப்புக் கொடுத்தால் நீங்கள் தண்டனையை ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்படியில்லை என்றால் அவர்கள் கொடுக்கும்படியான தண்டனையை நான் ஏற்றுக்கொள்கிறேன். இந்தச் சர்க்கார் எந்தப் பிரச்சினையையும் தீர்க்க முடியாத சர்க்கார். அவர்கள் சொன்ன பிரச்சினையையே அவர்கள் தீர்க்க முடியவில்லை. இப்பொழுது இருக்கிற சபாநாயகர் அவர்கள் உட்பட அவர்கள் எல்லாம் கலெக்டர் ஆபீஸ் முன் விலைவாசிப் போராட்டம் நடத்தி மறியல் செய்தார்கள். இப்பொழுது கலெக்டர்கள் உங்களிடத்திலே இருக்கிறார்கள். ஏன் மிளகாய் வத்தல் விலை குறையவில்லை, ஏன் புளியின் விலையைக் குறைக்கவில்லை . . . .

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** முன்னைவிட இப்பொழுது எவ்வளவோ குறைந்திருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** எல்லாம் குறையவில்லை (குறுக்கீடு) பை எலக்ஷனை வைத்து நீங்கள் மயங்கிக் கொண்டிருக்கிறீர்கள். நாங்களும் அப்படித்தான் நினைத்துக் கொண்டிருந்தோம். அதே தீர்ப்பு உங்களுக்கும் வருகிறது என்பதைச் சுட்டிக் காட்டிக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1969-70-ஆம் ஆண்டுக்கான இரண்டாவது துணை மதிப்பீடுகளின் மீது நடைபெற்ற இந்த விவாதத்தில் மாண்புகு உறுப்பினர்கள் கலந்துகொண்டு பல யோசனைகளையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பாராட்ட மாட்டார்கள், அந்தப் பழக்கம் அவர்களுக்குக் கிடையாது . . . .



1970 ஜனவரி 27]

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** எதிர்க்கட்சித் தலைவருக்கு அந்தப் பழக்கம் கிடையாது என்று அவர்கள் எப்படிச் சொல்லலாம்? அவர்கள் அதை வாபஸ் வாங்க வேண்டும். அவர்கள் வெற்றி பெற்றதை நான் பாராட்டி இருக்கிறேன். அவர்கள் அதை வாபஸ் பெறவேண்டும்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** வாபஸ் வாங்கிக் கொள்கிறேன் ஆனால் . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நான் சொன்னதை நேரிலே இருந்தும் கேட்பதற்கு காது செவிடு என்றால் மக்கள் சொல்வது காதில் எங்கே விழப் போகிறது ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** அவர்கள் சொன்னார்கள். துணை மதிப்பீடுகளுக்குரிய மரியாதையை விரிவாக்கி எல்லா இடங்களிலும் புகுந்து, நாளைக்குப் பேசக்கூடிய பேச்சுக்கு முதற் பகுதியாகப் பேசியிருக்கிறார்கள். அந்தந்தத் தொகுதிகளுடைய நிலைமைகளையெல்லாம் நண்பர்கள் எல்லாம் எடுத்துரைத்தார்கள்.

அவர்களுக்கெல்லாம் பதில் சொல்வதானால் ஒரு மணிக்குள் முடிக்க முடியாது. நான் அதற்கெல்லாம் பதில் சொல்லாத காரணத்தால் அவர்கள் கூறிய கருத்துக்களெல்லாம் அரசாங்கத்தின் கவனத்தில் இல்லையென்று யாரும் கருதிக் கொள்ளத் தேவையில்லை. பி. ப.
அவைகளுக்கான எல்லாவித நடவடிக்கைகளும் அமுல் படுத்தப் 12-30.
படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவான கருத்துக்களுக்கு மட்டும் பதில் கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

இந்தத் துணை மதிப்பீட்டில் முக்கியமான நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு நல்ல ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. குடி தண்ணீர் திட்டத்திற்காகவும், குறிப்பாக கிராமப் பகுதிகளில் குடி தண்ணீர் திட்டங்களை அமுல் படுத்தும் காரியங்களுக்காகவும் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அரிசன மக்களுடைய காலனி பகுதிகளில் குடி தண்ணீர் திட்டத்தை கண்டிப்பாக நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். கூடுமான வரையில் எல்லாக் கிராமங்களுக்கும் குடி தண்ணீர் திட்டத்தை விஸ்தரிக்க வேண்டுமென்பது இந்த அரசாங்கத்தின் கொள்கை. குறிப்பாக அரிசன மக்கள் இருக்கும் இடங்களுக்கு குடி தண்ணீர் கொடுக்க வேண்டுமென்பதிலே கவனம் செலுத்தப்பட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் சுப்பையா அவர்கள் கூறியதும் கவனத்தில் கொள்ளப்படும். அரிசன மக்களுக்கு வீட்டு மனை கொடுப்பதிலும் இந்த அரசாங்கம் முழு கவனம் செலுத்தி வருகிறது. ஏற்கனவே அவர்கள் ஆக்கிரமித்த இடங்களைக் கூட 1960-ம் வருஷத்திற்கு முன்னதாக இருந்தால் அவர்களுக்கே பட்டா செய்து கொடுத்து விடும்படியான சட்டம் போடப்பட்டிருக்கிறது. கடந்த நான்கைந்து மாதத்திலே

ஆட்சேபணை இல்லாத வீட்டு மனைகள் —ஆங்கிலத்திலே சொல் தாளுல் 'அன் அப்ஜக்ஷனபிள் என்க்ரோச்மென்ட்' கணக்கு எடு ததில் ஒரு லட்சத்து இருபதாயிரம் வீட்டு மனைகளில் எழுபது யிரம் வீட்டு மனைகள் பட்டா செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன இந்தக் காரியத்தை நல்ல வகையில் தொடர்ந்து இந்த அரசாங்க செய்து வரும். இன்று எல்லா கிராமங்களுக்கும் மின்சார வசதி செய்து கொடுக்க திட்டமிட்டிருக்கிறேமென்றல் அது ஏதோ தே தலுக்காக செய்வதல்ல. அரசியல் நோக்கங்களுக்காக செய் தல்ல.

மதுரை உறுப்பினர் திருமதி ஜானகி அம்மாள் பேசுகிற நேரத் தில் ஜமாபந்தி முறை பற்றியும் ரெவின்யூ போர்டு ஒழிப்புப் பற் யும் சொன்னர்கள். ஜமாபந்தி முறை ஒழிப்புபற்றி முடிவு எடுக் கப்பட்டாகி விட்டது. உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன உடனடியாக எல்லா இடங்களிலும் அமுலுக்கு கொண்டு வராம ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு தாலுகா என்று எடுத்துக் கொண்டு இந்த ஆண்டில் நடைமுறைக்கு வர இருக்கிறது. போர் ஆஃப் ரெவின்யூவை ஒழிப்பதைப்பற்றிய சர்ச்சைகள் முடிந்த ஒழிப்பது என்று முடிவு செய்யப்பட்டு விட்டது.

The details for the abolition of Board of Revenue have been worked out and suitable legislation has been framed which will be shortly sent to the President for his concurrence. The Bill will provide for the exercise of statutory powers of the Board of Revenue by Heads of Departments like Commissioner of Commercial Taxes, Commissioner for Land Revenue, Commissioner for Settlement, etc.

கொள்கை அளவிலே ரெவின்யூ போர்டை ஒழிக்க வேண்டு மென்பது பற்றி முதலமைச்சர் அவர்கள் மட்டத்திலே முடிவு செய் யப்பட்டு விட்டது. அதற்காக சட்டம் இயற்றவும் வரைவுகள் தீட்டவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ரெவின்யூ போர்டு மெம்பர்களுக்கு ஸ்டாச்சுடரி பவர்ஸ் இருப்பதை எடுத்து மற்றவர்களுக்கு மாற்ற வேண்டுமென்றல் பிரசிடென்டின் அங்கீகா ரத்தைப் பெற வேண்டும். பிரசிடென்டின் அங்கீகாரம் கிடைத்த வுடன் மசோதாவைக் கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப் படும்.

தஞ்சை விவசாய தொழிலாளர் சட்டத்தை மற்ற இடங்க ளுக்கும் விஸ்தரிக்க வேண்டுமென்று சொன்னர்கள். எல்லாவற் றையும் ஒன்றுக செய்துவிட முடியாது. மாவட்டத்திற்கு மாவட் டம் வித்தியாசம் இருக்கிறது. விலையிலே கூட வித்தியாசம் இருக் கிறது. கோபிசெட்டிபாளையத்திலே ஒரு விலை என்றல் எங்கள் ஊரிலே மற்றெரு விலையிருக்கிறது. தஞ்சை மேற்கு பகுதியில் கூலி ஒரு மாதிரி இருக்கிறது. கிழக்குப் பகுதியில் வேறொரு மாதிரி இருக்கிறது. கிழக்குத் தஞ்சையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள கூலி விகிதத்தின் நடை முறையை அனுசரித்து தகுந்த மாதிரி



சட்டம் கொண்டு வரவேண்டிய நிலைமையில் இருக்கிறது. அவசிய மான நேரத்தில் நிலைமைகளுக்கு ஏற்ப இந்தக் காரியங்கள் அர சாங்கத்தால் கண்டிப்பாக நிறைவேற்றி வைக்கப்படும்.

அரியலூர் உறுப்பினர் திரு. கருப்பையா அவர்கள் தேசிய சுற்றுலா கண்காட்சியை பற்றி சொன்னதைப் பார்த்தால் பத்து பதினைந்து லட்சம் ரூபாய் வருமென்று தோன்றுகிறது. (திரு. ஆர். கருப்பையா . . . நான்கு லட்சம்) அந்தக் கண்காட்சிக்குப் பணம் கொடுப்பதிலே எந்தவிதமான தவறும் இல்லை என்பது இந்தச் சர்க்காருடைய தெளிவான, துணிவான கொள்கை. முதலில் ஒரு சந்தேகத்தை நிவர்த்திக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தேசிய சுற்றுலா கண்காட்சிக்கும் இந்த அரசாங்கத்திற்கும் கொஞ்சம்கூட சம்பந்தம் இல்லை. அது அரசாங்கத்தால் நடத்தப்படும் ஒன்று அல்ல. திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் அதற்கும் எந்த விதமான தொடர்பும் கிடையாது. பொதுவாக பொருட்காட்சிகள் பல ரகங்களில் நடைபெறுகின்றன. சில பொருட் காட்சிகள் சர்க்காரால் நடத்தப்படுகின்றன. சில பொருட்காட்சிகள் கட்சிக் காரர்களால் நடத்தப்படுகின்றன. தேனும்பேட்டையில் பல வருஷ காலமாக காங்கிரஸ் பொருட்காட்சி அந்த அரசாங்கம் முடிந்த காலத்தில் தடபுடலாக இருந்தது. இப்போது கொஞ்சம் குறை வாக இருக்கிறது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அவர்கள் கட்சிக்காரர்கள் சம்பந் தப்பட்ட பொருட்காட்சிக்கு நான்கு லட்ச ரூபாய் கொடுத்தார் கள். தேனும்பேட்டை பொருட்காட்சிக்கு எவ்வளவு ரூபாய் கொடுத்தார் என்பதைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

திரு. கே. விநாயகம் : The point for clarification is this இந்த நேஷனல் டூரிஸ்ட் எக்ஸிபிஷனிலே ஈடுபட்டவர்கள் உங்களுடைய கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற அங்கத்தினர் களாக இருப்பதால்தான் அதற்கு அதிகமாக சலுகை தருவதாக கூறப்படுகிறது. ஏற்கெனவே காங்கிரஸ் எக்ஸிபிஷனில் இதற்கு முன்பு அரசாங்கம் எந்த அளவுக்கு ஈடுபட்டிருந்ததோ அதைவிட இப்போது குறைவாக இருக்கிறது. இதிலே பாரபட்சம் காட்டுவ தாகத்தான் நாங்கள் சுட்டிக் காட்டுகிறேம். இரண்டு பொருட் காட்சிகளையும் மக்கள் பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயம் இருக்கிறது. உங்களுடைய கட்சிக்காரர்கள் சம்பந்தப் பட்டிருப்பதால்தான் நேஷனல் டூரிஸ்ட் எக்ஸிபிஷனுக்கு அதிக மான தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நான் முழுவதும் சொல் வதற்கு முன்னலேயே அவசரப்படுகிறீர்கள். கொடுத்தது நியாயம் என்றல்லவா நான் வாதாடுகிறேன். சில பொருட்காட்சிகளை தனிப்பட்டவர்கள் கூட நடத்துவதுண்டு. தனிப்பட்டவர்களென்

[திரு. கே. ஏ. மதியழகன்] [1970 ஜனவரி 27

றால் அவர்கள் காங்கிரஸ்காரர்களாகவும் இருக்கலாம், கம்யூனிஸ்ட்களாகவும் இருக்கலாம், அல்லது வேறு கட்சிக்காரர்களாகவும் இருக்கலாம். கட்சி ரீதியில் அந்த காரியங்கள் நடைபெறவில்லை.

இந்த அரசாங்கம் அந்தந்தப் பொருட்காட்சிகளின் தன்மையைப் பார்த்து, அதன் அளவைப் பார்த்து சில உதவிகள் செய்ய கடமைப்பட்டிருக்கிறது. அரசாங்கம் மக்களுடன் தொடர்பு கொள்ளவேண்டியிருக்கிறது. அரசின் சாதனைகளை விளக்கவேண்டியிருக்கிறது. சென்னை நகர கார்ப்பரேஷனும் தேனாம்பேட்டை எக்ஸிபிஷனில் கலந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் சொன்ன டூரிசம் எக்ஸ்பிஷன் பொறுத்த வரையில் எங்களுக்கு வேண்டியவர்கள் என்ற காரணத்திற்காக செய்யப்பட்டதல்ல. இரண்டு லட்சம் ரூபாய் எக்ஸ் க்ரேஷியா கிராண்டாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்றவற்றில் கடைகளாக வைக்கப்பட்டுள்ளன. இது தனியாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படிக் கொடுக்கப்பட்டிருப்பது, எந்த அமைச்சருக்காவது வேண்டியவர்கள் என்பதற்காகவோ அல்லது கட்சிக்காரர்கள் என்பதற்காகவோ அல்ல. அது டூரிஸத்திற்காக நடத்தப்படுகிற பொருட்காட்சி. சுற்றுலாவை வளர்ப்பதற்காக இந்த அரசாங்கம் எவ்வளவோ செலவு செய்கிறது. அப்படிச் செலவு செய்கிறது நியாயமா இல்லையா என்பதை இவால்யுவேட் செய்வது வேறு காரியம். இதில் மத்திய அரசின் ஆதரவோடு பல மாநிலங்கள் கலந்து கொள்கின்றன. டூரிஸத்தை வளர்ப்பதில் இந்த அரசுக்கும் மிகுந்த சிரத்தை உண்டு. அதற்காக ஏராளமான பணத்தை செலவு செய்யவேண்டியிருக்கிறது, செலவு செய்து வருகிறது. இதற்காக இரண்டு லட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்றவைகளைக் காட்டிலும் ஏராளமான மக்கள் இதற்கு வருகிறார்கள். ஆகவே வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்ற பிரச்சினையே இல்லை. எனவே, வேண்டியவர்களுக்காக கொடுக்கப்பட்டது என்று சொல்வது சரியல்ல. ஏதோ சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்கிறார்கள்.

It has been decided by Government that Tamil Nadu may participate in the National Gandhi Darshan exhibition to be held in New Delhi from 2nd October 1969 to 22nd February 1970. Thetotal cost involved in the proposal is Rs. 2 lakhs. An advance of Rs. 2 lakhs has been sanctioned to meet contingent expenditure initially.

காந்திஜியையும் எங்களது கட்சிக்காரர், அல்லது எங்கள் சொந்தக் காரர் என்று சொன்னாலும் சொல்வார்கள். டெல்லியில் அதில் கலந்து கொள்ள இரண்டு லட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதையும்கூட மனோகரன் நடத்துகிறார் அல்லது மாரிசாமி நடத்துகிறார், எங்களுக்கு வேண்டியவர்கள் நடத்துகிறார்கள் என்று சொல்வார் வார்விடவில்லை. முறைகேடான முறையில் ஒன்றும் நடந்துவிடவில்லை. முறைகேடான முறையில் ஏதாவது நடந்திருந்தால் சொல்லுங்கள். ஒன்றுமே நடந்து விடவில்லை. ஆகவே, அதைப் பெரிதாக்கிச்சொல்வது சரியல்ல.



1970 ஜனவரி 27]

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இதைக் கொடுப்பது நியாயம் என்று அவர்கள் வாதாடுகிறார்கள். காந்திஜி எக்ஸிபிஷனுக்கு இரண்டு லட்சம் ரூபாய் கொடுத்தோம் என்று சொல்கிறார்கள். அதைவிட இது பெரிது என்று இதற்காக 2.2 லட்சம் ரூபாய் கொடுக்கிறார்கள். தேனாம்பேட்டை பொருட்காட்சிக்கு எவ்வளவு தொகை கொடுத்தார்கள் என்ற கேள்விக்கு பதில் சொல்லாமல் மெல்ல நழுவி விட்டார். அதற்கு எவ்வளவு கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சந்தோஷம்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அரசாங்கத்திற்குச் சில முறைகள் உண்டு. எப்படிச் செய்யவேண்டும் என்பதை முடிவு செய்ய வேண்டியது அரசாங்கம். எதிர்க்கட்சித் தலைவர் அல்லது கருப்பையா அவர்கள் முடிவு செய்வது என்றால் அவர்கள் இங்கே உட்கார்ந்திருக்க வேண்டும். இதில் முடிவு செய்ய வேண்டியது நாங்கள், முடிவு செய்திருக்கிறோம். இதில் என்ன முறைகேடு இருக்கிறது ?

இவர்கள் கேட்கிறார்கள் என்பதற்காக அடுத்த வருடம் கொடுக்கலாம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உங்களைக் கெஞ்ச நாங்கள் தயாராயில்லை. நாங்கள் எடுத்துக் கொள்வோம். உங்களை நம்பி நாங்கள் பிழைக்க வேண்டியதில்லை.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தேனாம்பேட்டை பொருட்காட்சி நடத்தியபோது—காங்கிரஸ் ஆட்சியில் இருந்தபோது—இதுவரை அதற்கு என்டர்டெயின்மென்ட் டாக்சிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த டூரிஸ எக்ஸிபிஷனுக்கு அப்படி விதிவிலக்கு அளிக்கப்படவில்லை. இதையும் எங்கள் கட்சிக்கு காட்டும் சலுகை என்று சொல்வார்களோ என்னவோ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இதற்கு வேண்டுமானாலும் டாக்ஸ் போட்டுக் கொள்ளுங்கள். வேண்டாமென்று சொல்லவில்லை. அந்த எக்ஸிபிஷனுக்கு போட்டிருக்கிறார்கள் என்றால் ஏதோ சம்திங் இருக்கிறது. அது என்னவென்று எனக்குத் தெரியாது.

**திரு. கே. விநாயகம் :** கவர்ன்மென்ட் டிபார்ட்மென்ட்ஸ் வழக்கமாக வந்துகொண்டிருந்தது ஏன் வேண்டுமென்றே நிறுத்தப் பட்டது?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அந்த அளவிற்கு இறங்கிப் பேசுவதற்கு நான் முன்வரவில்லை. செலவு செய்யப்படுகிற பணத்திற்கு என்ன லாபம் என்று பார்க்க வேண்டும். எல்லாவற்றிற்கும் சில முறைகள் இருக்கின்றன. அந்த முறைகளின் அடிப்படையால்தான் காரியங்கள் நடைபெறுகின்றன. முறைகேடான முறையில் ஏதாவது நடந்திருக்கிறது என்றால் சொல்லலாம், பார

பட்சம் ஏதாவது இருந்தால் சொல்லலாம். டாக்டர் ஹாண்டே அவர்கள் பரிசுச் சீட்டுத் திட்டம் பற்றிச் சொன்னார்கள். காம்ப்ளிங் என்றெல்லாம் அதைப்பற்றிச் சொன்னார்கள். அவ்வளவு தூரம் சாது சன்னியாசியாகி விட முடியாது. நாம் அவ்வளவு பெரிய வேதாந்தியாகிவிடவில்லை. பெரிய சன்னியாசியாகி விடவில்லை. இது மனிதர்களால் நடத்தப்படும் அரசாங்கம். நம் மக்களின் குறைகளைத் தீர்க்க என்னென்ன செய்ய வேண்டுமோ அதை இந்த அரசாங்கம் செய்து வருகிறது. அவர்கள் விரும்புகிற உலகத்திற்குப் போக ரொம்ப நாட்களாகும். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்று காம்ப்ளிங்காகத் தோன்றலாம். சிலருக்கு மூட நம்பிக்கைகள் கூட காம்ப்ளிங்காகத் தெரிகிறது. அதை வைத்துச் சிலர் பிழைப்பு நடத்துகிறார்கள். அவர்கள் கனவு உலகத்தைக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். நாம் இப்போது செய்வது, வரி போடுவதற்குப் பதிலாக எல்லோரும் பகிர்ந்து கொள்கிறோம். பழைய காலங்களில் கூட இதுமாதிரி இருந்ததுண்டு. அவர்கள் சொன்ன இன்னொரு யோசனையை ஏற்றுக்கொள்கிறேன். மொத்தமாகக் கணக்கு போட்டிருக்கிறீர்களே என்றார்கள். ஒவ்வொன்றுக்கும் இவ்வளவு இவ்வளவு என்று ஒதுக்கீடு செய்திருக்கலாமே என்றார்கள். ஆஸ்பத்திரிக்கு இவ்வளவு அதற்கு இவ்வளவு, இதற்கு இவ்வளவு என்று சொல்லி இருக்கலாமே என்றார்கள். மத்திய சர்க்காரிடமிருந்து பெறுகிற அனுகூலங்களில் சில சிக்கல்கள் இருப்பதால் வரையறை செய்து முடிவு எடுக்க முடியவில்லை. இன்னின்ன காரணங்களுக்காக என்று போட்டுச் செய்ய வாய்ப்பிருக்கிறது. ஆகவே, இந்தப் பரிசுச் சீட்டு முறை தவறு என்று சொல்லத் தேவையில்லை. அதற்கு எவ்வளவோ பேர்கள் ஆதரவு அளிக்கிறார்கள். அவற்றைக்கொண்டு நல்ல காரியங்களைச் செய்யும்போது டாக்டர் ஹாண்டே அவர்களும் தமது ஆதரவை வழங்குவார்கள் எனக் கருதுகிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உணவுக் கொள்கை பற்றிச் சொன்னார்கள். எங்கேயோ ஆரம்பித்து என்னவோ சொன்னார்கள். உணவுக் கொள்கையில் ஆரம்பித்து கோயம்புத்தூர் காங்கிரஸ் ஆபீசுக்குப் போனார். காங்கிரஸ் ஆபீசைப்பற்றி முதல் அமைச்சர் அவர்கள் சொல்ல அவர்களுக்கு விட்டு விடுகிறேன். எங்கள் உணவுக் கொள்கை தவறு என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஒரு மாறுதல் அதில் ஏற்படும்போது ஏன் இந்த மாறுதல் என்று சொல்கிறார்கள். அவர்களின் எண்ணத்தை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஒரு சமயம் விலைவாசிகள் ஏறி விட்டன என்று சொல்கிறார்கள். இன்னொரு சமயத்தில் ஏன் பே கமிஷன் போடுகிறீர்கள் என்று கேட்கிறார்கள். விலை குறைந்தது என்றுதான் அதற்குப் பொருள். விலையே குறையவில்லை என்று சொல்லுகிறார்கள். கண்ட்ரோல் பற்றி ஒரு திட்டவட்டமான கொள்கையை வரையறுத்துக்கொள்ள வேண்டும். கண்ட்ரோல் சில நேரங்களில் வேண்டுமென்றும் சில நேரங்களில் வேண்டா



மென்றும் சில கட்சிகள் சொல்லுகின்றன. உங்களுடைய கட்சிக்கு என்ன கொள்கை? சுதந்திராக் கட்சியினர் ஒரு கொள்கையைச் சொல்லுகிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சி, சோஷலிஸ்ட் கட்சி அவர்கள் கொள்கைகளைச் சொல்லுகிறார்கள். உங்களுடைய கட்சியின் கொள்கை என்ன? உணவுக் கொள்கையில் மூன்றாண்டுக் காலமாக, தீவிரமான கொள்முதலை இந்த அரசாங்கம் செய்திருக்கிறது, திறமையான முறையில் விநியோகம் செய்திருக்கிறது. 20 லட்சம் டன்களை ஏறக்குறைய 200 கோடி ரூபாய்க்கு, மக்களிடத்திலேயிருந்து வாங்கி உணவு தாராளமாகக் கிடைக்கும் முறையில் செய்திருக்கிறது. இந்த மாநிலத்திலே இயற்கைக் கெடுதல் வந்த பிறகும், மழையில்லாமலிருந்தும், நாம் மேற்கொண்ட முயற்சிகளினால் இந்த மாநிலத்தில் இந்தக் கட்டுப்பாட்டை ரத்து செய்யும் நிலைக்கு வந்திருக்கிறது. இதை இந்த மாநிலம் முழுவதும் வரவேற்றிருக்கிறார்கள். அதிலே அவர்கள் கட்சியின் அதிகாரபூர்வமான கருத்தை இன்று சொல்லவில்லை, நாளையாவது . . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்களே, எங்கள் கட்சியின் கொள்கை என்னவென்றால், உணவு தானியத்தில் "ஸ்டேட் டிரேடிங்" வேண்டும், விவசாயிகளுக்குக் கட்டுப்படியான விலை வேண்டும், சாப்பிடுபவர்களுக்கு நியாயமான முறையில் கிடைக்க வேண்டும் என்பது. அந்த முறையிலே இல்லாமல், படியரிசி, படியரிசி என்று சொல்லிவிட்டு இப்பொழுது இரண்டும் கெட்டான் நிலையில் உள்ளது. எனவே, உங்களுக்குத்தான் தெளிவான கொள்கை இல்லையே தவிர, எங்களுக்குத் தெளிவான கொள்கை இருக்கிறது.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ரொம்ப சந்தோஷம். அவர்கள் கொள்கையை எவ்வளவு பேர்கள் ஆதரிக்கிறார்கள் என்றும் தெரியவில்லை. அவர்கள் இருபது வருஷ காலமாக இருந்தார்கள், இந்த மாதிரி வியாபாரத்தை 20 வருஷ காலமாக அவர்கள் ஏன் செய்யவில்லை என்று தெரியவில்லை. பக்தவத்சலம் இடைஞ்சலாக இருந்தாரா?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அதுதான் இடைஞ்சல்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இந்த முறையைப் பார்க்க வேண்டும். உங்களுக்கு அதைத் தவிர வேறு கிடையாது என்றால் இதை வாதத்திற்காகச் சொல்லுகிறார்களே தவிர, உணவு தானியத்தைத் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று, அல்லது அவரவர்களுக்கு விட்டுவிட வேண்டுமென்று உடன்பாடு இருக்கிறதா என்று தெரியவில்லை. தமிழ் நாட்டில் உணவுக் கொள்கையினால் விலைவாசிகள் சரிந்திருக்கின்றன. சர்க்கரை விலையில் மாறுதல் ஏற்பட்டிருக்கிறது, பருப்பு கிடைக்காத நிலைமை மாறியிருக்கிறது, கோதுமை கிடைக்காத நிலைமையில் மாறுதல் இருக்கிறது. எண்ணெய், மிளகாய் விலையில் கொஞ்சம் கொஞ்சம் இருக்கலாம், அவைகள் மேகங்கள் இருப்பதைப்போல. பொதுவாக விலைவாசிகள் குறைந்

திருக்கின்றன. பொதுவான போக்குகள், பொதுவான அம்சங்கள் நம்முடைய வாழ்க்கைத் தரங்கள் இவைகளுக்கான காரியங்களைத் தொடர்ந்தும், இடைவிடாமலும் அரசாங்கம் செய்ய வேண்டியிருக்கிறது. அரசாங்க ஊழியர்களுக்காக பே கமிஷன் நியமிக்கப்பட்டிருக்கிறது. விலைவாசி உயர்ந்தாலும், விலைவாசி உயராவிட்டாலும் போட வேண்டும், எப்படி நெல்லுக்கு அதிக விலை வேண்டுமென்று சொல்லப்படுகிறதோ அதேபோல் அரசாங்க ஊழியர்களுக்கும் அவர்களின் நிலைமை உயர வேண்டுமென்பதிலே இந்த அரசாங்கம் சிரத்தை கொண்டிருக்கிறது.

பென்ஷன் பற்றிச் சொன்னார்கள். அவர்களைப்பற்றி மட்டுமல்லாமல் நம்முடைய சர்க்கார் ஊழியர்களுக்காக இந்த அரசாங்கம் எவ்வளவோ காரியங்களை எடுத்துக் கொண்டிருக்கிறது. மூன்று ஆண்டுக் காலத்திலே கணக்குப் பார்த்தால் எவ்வளவோ பணம் செலவு செய்திருக்கிறது, என்பதை நான் சொன்னால் ஏதோ எல்லாம் செய்து விட்டோம் என்று சொல்வதாக இல்லை. பே கமிஷன் வேலை செய்து கொண்டிருக்கிறது. இந்தக் காரியங்களின் விளைவாக ஏராளமான செலவு ஆகும். அதைப்பற்றி யாராவது சொல்வார்கள் என்று பார்த்தேன். அதைப்பற்றிச் சொல்லவில்லை, கொஞ்சம் கூச்சப்படுகிறார்கள். ஐந்தாவது 'ஃபைனான்ஸ் கமிஷன்' வஞ்சித்து இருக்கிறது. பல கோடி ரூபாய் செலவு ஆகலாம். சர்க்கார் ஊழியர்களுக்கு, மற்ற மாநிலங்களில் கணக்கு எடுத்துக்கொண்டு நம்முடைய மாநிலத்தில் கணக்கு எடுத்துக்கொள்ளவில்லை. இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில், அண்ணா அரசு ஆட்சிப் பீடத்தில் ஏறிய பிறகு அகவிலைப்படியை நாம் மூன்றாண்டு காலத்தில், திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்றியிருக்கிறது. 1–11–1967 அன்றும், 1–6–1968 அன்றும் 1–1–1969 அன்றும் மூன்று தடவை டியர்னெஸ் அலவன்ஸை ஏற்றியதன் விளைவாக ஆண்டு ஒன்றுக்கு 14 கோடி ரூபாய் கூடுதல் செலவாகிறது. அதேபோல், நகர ஈட்டுப் படி கொடுத்ததன் விளைவாக ஆண்டு ஒன்றுக்கு 65 லட்சம் ரூபாய் ஆகிறது. மலைப் பிரதேசங்களில்

Sanction of winter allowance to government servants for four months in four hill stations of Kothagiri, Coonoor, Gudalur and Ootacamund.

என்றும், அதற்குப் பிறகு மற்ற மலைப் பிரதேசங்களுக்கும் விஸ்தரித்தன் விளைவாக ஏறக்குறைய 1½ லட்சம் ரூபாய் ஆகியது நகர ஈட்டுப்படி.

Extension of city compensatory allowance to government servants and teachers in aided schools in belt areas of Madras City and Madurai

ஆசிரியர்களுக்கு விஸ்தரித்ததனால் 34 லட்சம் ரூபாய் செலவாயிற்று. அதேபோல்,

Grant of leave salary to non-gazetted government servants based on pay last drawn from 1st November 1969



என்பதன் கீழ் கடைசியாக அவர்கள் வாங்கிய சம்பளத்தின் அடிப்படையில் அவர்கள் லீவ் சம்பளத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று 3 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல,

Calculation of pension on the basis of officiating pay instead of substantive pay

செய்யப்பட்டிருக்கின்றன. இன்னும்

Advance for the purpose of marriage to Government servants and their sons and daughters (amount limited to Rs. 2,000)

இதற்குப் பத்து லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டது.

Grant of Madras House Allowance to Government officres in Madras City on a pay exceeding Rs. 500.

இந்த மாதிரிப் பல காரியங்களைச் செய்துகொண்டு வந்திருக்கிறது. இனியும் செய்யலாம் என்பதற்கும் இந்த பைனான்ஸ் கமிஷன் இப்படிச் செய்து இருக்கிறது. இதைப்பற்றி இங்கு சொல்வார்கள் என்று பார்த்தால் இவர்கள் சொல்லவில்லை. தமிழ் நாட்டுக்கு அதிகமாக உதவி செய்து விட்டார்கள் என்று இவர்கள் சொன்னாலும் பரவாயில்லை, உத்திரப் பிரதேசத்திலே இருப்பவர்களும் இதையே சொல்லுகிறார்கள். பைனான்ஸ் கமிஷனின் சிபாரிசின் விளைவாக உள்ள நிலைமைக்காக திருமதி இந்திரா அம்மையாரைத் தலைமையாகக் கொண்ட அதே அரசின் மீது குற்றச்சாட்டை சாட்டுகிறேன். பைனான்ஸ் கமிஷனின் பரிந்துரையின் விளைவாக நம்முடைய மாநிலத்திலே, 5 ஆண்டுகளிலே 50, 51 கோடி பற்றுக்குறை ஏற்படுகிறது. ஆனால் இவைகளையெல்லாம் சந்திரபானு குப்தா இதையே வெளியே சொல்ல மாட்டேன் என்கிறார். பைனான்ஸ் கமிஷன் பரிந்துரையை அமல்படுத்துவதனால் பீகார் மாநிலத்திற்கு அதிகமாக வரும் பணம், சர்ப்ளஸ் உபரியான தொகை 199 கோடி ரூபாய். குஜராத் மாநிலத்திற்கு 158 கோடி ரூபாய், ஹரியானாவிற்கு 79 கோடி ரூபாய், மராட்டியத்திற்கு 419 கோடி ரூபாய், பஞ்சாப் மாநிலத்திற்கு 117 கோடி ரூபாய், உத்தரப் பிரதேச மாநிலத்திற்கு 209 கோடி ரூபாய் என்று இந்த பரிந்துரையின் விளைவாக ஏற்பட்டிருக்கிறது. இவ்வளவு நிலைமைகளுக்குப் பிறகும், நாங்கள் கூறிய நியாயமான காரியங்களைப்பற்றி இங்கிருப்பவர்களும், வெளியே இருப்பவர்களும் குறைகூறி பேசுவது ஆச்சரியமாக இருக்கிறது. அத்தனை இழப்பு இருக்கிறது. மாண்புமிகு கவர்னர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். இதற்காக நாங்கள் எடுத்த முயற்சிகளுக்குப் பேருதவி செய்யுமாறு எல்லாக் கட்சிகளையும் நான் கேட்டுக்கொண்டு இந்தத் துணை மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

THIRU K. VINAYAKAM : On a point Order, Sir. If the Finance Commission has not acceded to our request which we rightly deserved does it not amount to inefficiency of this Government for not having made out a good case? Whereas other

States were able to get substantial sums, why has this Government (which got so many crores from Centre for drought relief) failed in this?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் விளக்கம் கேட்பதாக இருக்கவேண்டுமே தவிர, மறுபடியும் நீங்கள் ஒரு குற்றம் சொல்கிறீர்கள். விவாதம் முடிவுற்றது.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு திரு. விநாயகம் அவர்களிடத்திலேயிருந்து, இந்த அரசாங்கத்திற்குத் திறமை இருக்கிறதா, திறமை இல்லையா என்று கேட்டுத் தெரிந்து கொள்ளும் அளவுக்கு அவ்வளவு திறமைக் குறைவாக தமிழ் மக்கள் யாரும் இல்லை.

பிற் பகல் 1-00 **(7) 1969-70-ம் ஆண்டில் கூடுதல் செலவுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை ஒன்று கேட்க விரும்புகிறேன். ஒவ்வொரு கோரிக்கையாக எடுத்துக்கொண்டு வாக்கெடுப்பு கோராமல், நான் எல்லாக் கோரிக்கைகளையும் படித்து விட்டு, கடைசியில் ஒரே முறையாக எல்லாக் கோரிக்கைகளையும் சேர்த்து வாக்கெடுப்புக்கு விட்டு விடலாம் என்று கருதுகிறேன்.

பேரவையின் முன்னுள்ள கேள்வி :

" கீழ்க்கண்ட மானியக் கோரிக்கைகளுக்கு எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும் ".

| கோரிக்கை எண். (1) | | கோரிக்கை. (2) | கோரிய தொகை. (3) |
|---|---|---|---|
| | | | ரூ. |
| கோரிக்கை | 1 | நிலவரித்துறை. | 25,36,800 |
| டி | 2 | மோட்டார் வண்டிகள் சட்டம்—நிர்வாகம். | 100 |
| டி | 3 | பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம். | 1,12,700 |
| டி | 5 | பத்திரப் பதிவுத் துறை. | 300 |
| டி | 6 | மாநில சட்டமன்றப் பேரவை. | 100 |
| டி | 8 | மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள். | 16,93,400 |
| டி | 8- | பால் வழங்கு திட்டங்கள். | 100 |
| டி | 9 | மாவட்ட [illegible] யும். | [illegible],100 |





| கோரிக்கை எண். (1) | | கோரிக்கை. (2) | கோரிய தொகை. (3) |
|---|---|---|---|
| | | | ரூ. |
| கோரிக்கை | 12 | காவல்துறை. | 600 |
| டி | 13 | கல்வி. | 400 |
| டி | 14. | மருத்துவம். | 31,01,000 |
| டி | 15 | பொதுச் சுகாதாரம். | 31,98,000 |
| டி | 16 | வேளாண்மை. | 2,14,100 |
| டி | 19 | கூட்டுறவு. | 30,04,800 |
| டி | 20 | தொழில்கள். | 1,45,100 |
| டி | 21 | சின்கோனா. | 1,58,100 |
| டி | 23 | சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன. | 12,86,600 |
| டி | 25 | பழங்குடி மக்கள், அரிசனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன். | 100 |
| டி | 26 | பாசனம். | 49,00,000 |
| டி | 27 | பொதுப்பணிகள்—பணிகள். | 50,23,100 |
| டி | 28 | பொதுப் பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திரச் சாதனங்களும். | 1,36,100 |
| டி | 29 | பொதுப்பணிகள்—உதவி மானியங்கள். | 20,14,000 |
| டி | 30 | சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள் | 30,00,300 |
| டி | 31 | பஞ்சத் துயர் தணிப்பு. | 100 |
| டி | 33 | பல்வகை. | 53,49,500 |
| டி | 34 | எழுதுபொருள்-அச்சுத்துறை. | 100 |
| டி | 35 | வனத்துறை. | 62,400 |
| டி | 36 | ஏனைய பல்வகை இழப்பீடுகளும், ஒப்படைகளும். | 14,10,000 |
| டி | 40 | தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு. | 1,400 |
| டி | 41 | பாசன மூலதனச் செலவு. | 71,00,700 |
| டி | 42 | பொதுப் பணிகள் மூலதனச் செலவு. | 9,52,200 |
| டி | 44 | காட்டு வள மூலதனச் செலவு. | 4,05,100 |
| டி | 46 | அரசு வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு. | 200 |
| டி | 47 | மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும். | 1,100 |

மேற்கண்ட நிதிக் கோரிக்கைகள் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு கோரிய தொகைகள் வழங்கப்பட்டன.

## 8. அறிவிப்பு

### தமிழ்நாடு, 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதா

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ் நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதாவை இப்பேரவைக்கு அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுப்பதற்கும் ஆளுநர் அவர்கள் தனது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 9. அரசினர் மசோதாக்கள்

### தமிழ்நாடு, 1970 ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதா.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, I move—
" That leave be granted for the introduction of the Tamil Nadu Appropriation Bill, 1970 ".

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : I introduce the Bill.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ் நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதா அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

இத்துடன் பேரவையினுடைய இன்றைய நிகழ்ச்சிகள் முடி
பி, ப. 1-04 வுற்றன. பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை ஒற்றி வைக்கப்பட்டது.

## (10) பேரன்வயின் முன்வைக்கப்பட்ட ஏடுகள் ஏதுமில்லை.

## இணைப்பு—I

[461-ம் பக்கத்திலுள்ள 79-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்கான விடையைக் காண்க]

(அ) மானியம் பெறும் தனியார் பள்ளிகளுக்கு மட்டுமே பள்ளிக் கல்வி இயக்குநர் கட்டளைகள் பிறப்பித்துள்ளார்.

(இ) மானியம் பெறும் உயர்நிலைப்பள்ளிகளைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு மாதமும் முதல் தேதியன்று சம்பளங்கள் கொடுக்க வகை செய்யும்பொருட்டு பணியாளர் மானியம் (staff grant) போதுமான அளவு முன்னதாகவே வழங்கப்படுகிறது. நகராட்சி தொடக்க, உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் பணியாளர்களுக்குச் சம்பளம் நகராட்சி நிதியிலிருந்தே





கொடுக்கப்படுகின்றது. இதற்கான மானியம் ஆண்டுதோறும் கணக்குகளைத் தணிக்கை செய்த பிறகே வழங்கப்படுகிறது. நகராட்சி மன்றங்கள் அவைகளுடைய பணியாளர்களுக்கு மாத முதல் தேதியன்று ஊதியம் கொடுக்க வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஊராட்சிப் பள்ளிகளைப் பொறுத்தவரையில், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை ஒரு மொத்தத் தொகையாகப் பெறும் விகிதத்தில் மானியங்களைக் கல்வித்துறை வழங்குகின்றது. ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் மாதத்தில் முதல் மூன்று வேலை நாட்களுக்குள் ஊதியங்களைக் கொடுக்க வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலுள்ள மானியம் பெறும் தொடக்க நிலைப் பள்ளிகளைப் பொறுத்த வரையில் மாவட்டக் கல்வி அதிகாரி ஒவ்வொரு மாதமும் ஆசிரிய மானியத்தைச் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியக் குழுவின் ஆணையாளருக்கு அனுமதிக்கிறார். அந்த ஆணையாளர் மாத இறுதிக்குள் காசோலையை வழங்குகிறார். பள்ளி மேலாளர் அந்தக் காசோலையை மாத முதல் தேதியன்று பணமாக மாற்றி ஆசிரியர்களுக்குச் சம்பளங்களைக் கொடுக்கின்றார்.

(a) Instructions have been issued by the Director of School Education only in the case of private aided schools.

(b) In the case of aided secondary schools, staff grant is released sufficiently early to enable the disbursement of salaries on the 1st of every month. In the case of municipal elementary and secondary schools, payment of salaries to the staff is made from municipal funds and grant released annually after audit of the accounts. Municipal councils are expected to pay to their staff on the 1st of the month. In the case of panchayat schools, grants are so disbursed by the Education Department that the panchayat union councils get lump-sum amounts once in three months. The panchayat union councils are expected to make payments within the first three working days of the month. For the aided primary schools lying in panchayat union areas the District Educational Officer sanctions the teaching grant every month to the Commissioner of the panchayat union council concerned and he issues the cheques by the end of the month. The manager of the school encashes the cheque on the 1st day of the month and disburses the salaries to the teachers.

## இணைப்பு II.

[469-ம் பக்கத்திலுள்ள 83-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்கான விடையைக் காண்க.]

| *Resolutions.* | *Action taken.* |
|---|---|
| 1. **General:** Requesting the Government to sympathise with the lot of weavers and agree to their demands. | The Government have been showing utmost sympathy towards the Handloom Sector. |

| *Resolution.* | *Action taken.* |
|---|---|
| 2 and 3. Fixation of minimum wages to workers engaged in the Handloom industry and giving the weavers under master-weavers, the benefits of labour and social security enactments. | The question of fixing minimum wages to Handloom weavers was examined carefully and it was decided not to enforce the Minimum Wages Act to weavers, in view of the highly decentralised nature of the Handloom Industry. |
| 4. Revision of the condition of the Reserve Bank of India for grant of cash credit accommodation. | The Reserve Bank of India, who was approached in the matter, is not for changing the present production-oriented pattern of financing. |
| 5. The State Government should purchase the handloom goods produced by the primaries and arrange to market them. | The request cannot be complied with as the policy of the Government is not to engage in direct procurement of handloom cloth on Government account. |
| 6. Co-operative societies should be supplied with yarn at concessional rates. | Government have constituted a sub-committee for fixing the prices of yarn produced by the Co-operative Spinning Mills for purchase by the State Handloom Society. Usually, the price fixed is lower by 25 paise to rupee one, as compared to the market rates. |
| 7. The Central Government should be requested to exempt the yarn used in the Handloom industry from the excise duty and the sales of yarn should also be exempted from the Madras State General Sales Tax. | The State Government have recently abolished the collection of sales-tax on the sale of yarn by mills to the registered exporters.<br><br>Government of India have effected certain reductions in the levy of excise duty on certain counts of yarn during this financial year. |
| 8. The existing Provident Fund Scheme should be modified and the Government should make the contribution including the societies' share of 2 paise in the rupee. | The societies are now contributing 2 paise per rupee of the wages earned by the members, with a view to make the societies evince keen interest in administering the scheme and to serve as an incentive for more eligible members to come under the scheme. The request for meeting the societies contribution also by the Government, cannot be accepted. |



| *Resolutions.* | *Action taken.* |
|---|---|
| 9. Members of the family of handloom weavers should be assured alternative employment facilities. | The weavers may register their names in the nearest Distric Employment Office for securing alternative employments. |
| 10. The handloom weavers who are unable to pay their instalments of loan towards the housing colonies, should be shown the following concessions :—<br>(1) postponement of recovery ;<br>(2) exemption from penal interest ;<br>(3) suspension of orders to attachment and eviction. | The requests were found unacceptable. |
| 11. Grant of house-sites with a subsidy of Rs. 1,000 should be given to each handloom weaver. | Sanction of new weavers' housing scheme has been deferred by the Government. The scheme will be taken up for implementation as soon as sufficient funds are available. |
| 12. Permission to draw honorarium by the office-bearers of the societies. | The Board of Directors of Societies have been permitted to receive honorarium from the societies, subject to the provisions in the byelaws of the societies concerned. |
| 13. Yarn should be supplied direct from the Co-operative Spinning Mills in the districts instead of through the State Society. | The Tamil Nadu Handloom Weavers' Co-operative Society has been established mainly to help and assist the primary weavers' co-operative societies and the primaries will have to purchase the yarn only through the depots of the State Society. Wherever the required yarn is not available with the society, the societies are being permitted to purchase it directly from mills. |
| 14. Grant should be given to weavers' societies to construct workshеds. | According to the general principles of All India Handloom Board, financial assistance for the construction of worksheds could be given as 100 per cent loan. The Government of India have informed the State Government that the request for giving grant for this purpose could not be complied with. |
| 15. Powerlooms should not be introduced. | The matter is under the consideration of the Government. |

| தீர்மானங்கள். | எடுக்கப்பட்ட நடவடிக்கை. |
|---|---|
| 1. பொது : நெசவாளர்கள் மீது இரக்கம் கொள்ளும்படியும் அவர்களது கோரிக்கைகளை ஏற்கும்படியும் அரசை வேண்டிக்கொள்ளுதல். | அரசு கைத்தறித் துறைக்குத் தன்னால் இயன்ற அளவு இரக்கம் காட்டி வருகிறது. |
| 2–3. கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ள பணியாளர்களுக்கு குறைந்த அளவு ஊதியங்கள் முடிவு செய்யும்படியும், நெசவாளர் உடையார்களின் கீழ்ப் (Master eaver) பணியாற்றி வரும் நெசவாளர்களுக்கு தொழிலாளர் தொடர்பான சமூகப் பாதுகாப்பு சட்டங்களின் பயனை அளிக்குபடியும் வேண்டுதல். | கைத்தறி நெசவுத் தொழிலாளிகளுக்குக் குறைந்த அளவு ஊதியங்களை முடிவு செய்வது பற்றி கவனமாக ஆய்வுசெய்யப்பட்டது. கைத்தறித் தொழிலின் மிகுந்த பரவலான தன்மை காரணமாக நெசவாளர்களுக்குக் குறைந்த அளவு ஊதியக் சட்டத்தைச் செயலுக்குக் கொண்டு வருவதில்லையென்று முடிவு செய்யப்பட்டது. |
| 4. ரொக்கம்-கடன் வசதியை அளிப்பதற்கான இந்திய ரிசர்வ் வங்கியின் நிபந்தனையை மாற்றியமைக்க வேண்டுதல். | இது குறித்து இந்திய ரிசர்வ் வங்கியை அணுகிய போது உற்பத்தியை கருத்தாகக்கொண்ட வேலைத் திட்டங்களுக்கு நிதி வழங்கும் தற்போதைய முறையை மாற்றியமைப்பதை அது விரும்பவில்லையென்பது தெரிய வந்தது. |
| 5. தொடக்க நெசவாளர் சங்கங்களால் உற்பத்தி செய்யப்பட்ட கைத்தறித் துணிகளை அரசு வாங்கி அவைகளை விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று வேண்டுதல். | அரசுக் கணக்கில் கைத்தறித் துணிகளை நேரடியாகக் கொள்முதல் செய்வதில் ஈடுபடுவதில்லை என்பது அரசின் கொள்கையாதலால், இந்த வேண்டுகோள் ஏற்றுக்கொள்ள இயலாததாகும். |
| 6. கூட்டுறவுச் சங்கங்களுக்கு நூலைச் சலுகை வீதங்களில் வழங்கவேண்டுமென்று வேண்டுதல். | கூட்டுறவு நூற்பாலைகளால் உற்பத்தி செய்யப்படும் நூலினை மாநிலக் கைத்தறிச் சங்கம் வாங்கும் பொருட்டு நூலின் விலைகளை முடிவு செய்வதற்காக அரசு துணைக் குழு ஒன்றை அமைத்தது. சாதாரணமாக நிலவர விலைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் ரூபாய்க்கு 25 காசு குறைவாக விலை முடிவு செய்யப்படுகிறது. |
| 7. கைத்தறித் தொழிலில் பயன்படுத்தப்படும் நூலுக்கு ஆயத் தீர்வையிலிருந்து விலக்களிக்கும்படியும், நூல் விற்பனைக்கு தமிழ்நாடு பொது விற்பனை வரியினின்று விலக்கு அளிக்குமாறும் மத்திய [illegible] வேண்டுதல். | பதிவு செய்யப்பட்ட ஏற்றுமதியாளர்களுக்கு ஆலைகளால் விற்கப்படும் நூலின் மீது விற்பனை வரி வசூலிப்பதை மாநில அரசு அண்மையில் நீக்கியுள்ளது. சில எண் நூல்கள் மீதான ஆயத் தீர்வை வீதங்களை நடப்பு நிதியாண்டில் இந்திய அரசு குறைத்துள்ளது. |



| தீர்மானங்கள். | எடுக்கப்பட்ட நடவடிக்கை. |
|---|---|
| 8. தற்போதுள்ள வருங்கால வைப்பீட்டு நிதித் திட்டத்தை மாற்றியமைக்க வேண்டுமென்றும், சங்கத்தின் பங்காகிய ரூபாய்க்கு 2 காசு வீதம் பங்கு உட்பட, அரசு பங்குத் தொகையை அளிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுதல். | உறுப்பினர்களால் பெறப்படும் ஊதியங்களில் ரூபாய் ஒன்றுக்கு 2 காசு என்ற வீதத்தில் தற்போது சங்கங்கள் பங்குத் தொகையாக அளித்து வருகின்றன. திட்டத்தை நிர்வகிப்பதில் சங்கங்கள் விருப்பம் கொள்ளும் பொருட்டு அவ்வாறு வகை செய்யப்படுகிறது. அவ்வாறு செய்வதன் மூலம் இத் திட்டத்தின்கீழ் இன்றுத் தகுதியான உறுப்பினர்களைக் கொண்டுவர இயலும். சங்கங்களின் பங்குத் தொகையையும் அரசே ஏற்கவேண்டும் என்ற வேண்டுகோளை ஏற்றுக்கொள்ள இயலாது. |
| 9. கைத்தறி நெசவாளர் குடும்பங்களின் உறுப்பினர்களுக்கு மாற்று வேலை வாய்ப்பு வசதிகளுக்கு உறுதியளிக்குமாறு கேட்டுக்கொள்ளுதல். | நெசவாளர்கள் மாற்று வேலை வாய்ப்புகளை பெறுவதற்காக அருகிலுள்ள மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் தங்கள் பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம். |
| 10. கைத்தறி நெசவாளர்கள், வீட்டு வசதிக்கு குடியிருப்புகளுக்கான தங்களது கடன் தவணைகளை செலுத்துவதற்கு இயலாததால் கீழ்க்கண்ட சலுகைகளை அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுதல் :<br>(1) வசூலிப்பதை ஒத்திப் போடுதல்.<br>(2) அபராத வட்டியிலிருந்து விலக்கு அளித்தல்.<br>(3) கைப்பற்றுதல், வெளியேற்றுதல் குறித்த ஆணைகளை நிறுத்தி வைத்தல். | இந்த வேண்டுகோள்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியனவாக இல்லை. |
| 11. கைத்தறி நெசவாளர் ஒவ்வொருவருக்கும் ரூ. 1,000 உதவித்தொகையுடன் வீட்டு மனைகள் வழங்கப்பட வேண்டும். | புதிதாக நெசவாளர்களுக்கு வீட்டு வசதித் திட்டத்திற்கான ஒப்பளிப்பு வழங்குதல் அரசினால் தள்ளிப் போடப்பட்டுள்ளது. போதிய நிதி கிடைத்தவுடன் இத்திட்டம் செயல்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும். |
| 12. சங்கங்களின் நிர்வாக உறுப்பினர்கள் மதிப்பூதியம் பெறுவதற்கு அனுமதி அளிக்குமாறு கேட்டுக்கொள்ளுதல். | சம்பந்தப்பட்ட சங்கங்களின் துணை விதிகளிலுள்ள விதித் துறைகளுக்கேற்ப சங்கங்களிடமிருந்து மதிப்பூதியம் பெறுவதற்கு சங்கங்களின் வாரிய இயக்குநர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. |

| தீர்மானங்கள். | எடுக்கப்பட்ட நடவடிக்கை. |
| --- | --- |
| 13. மாநிலச் சங்க மூலமாக வழங்கப்படுவதற்குப் பதிலாக மாவட்டங்களில் உள்ள கூட்டுறவு நூற்பாலைகளிலிருந்து நூல் நேரடியாக வழங்கப்பட வேண்டும். | முக்கியமாக தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், தொடக்க நெசவாளர்களுக்கும் உதவுவதற்காகவே தமிழ் நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்தப் பட்டுள்ளது. தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும், தொடக்க நெசவாளர்களும், மாநிலச் சங்கத்தின் விற்பனை நிலையங்கள் மூலமாக மட்டுமே நூலை வாங்க வேண்டும். மாநிலச் சங்கத்திடம் தேவையான அளவிற்கு நூல் கிடைக்காத போதெல்லாம் சங்கங்கள் ஆலைகளிடமிருந்து நூலை நேரடியாக வாங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டு வருகிறது. |
| 14. பணிக் கொட்டகைகள் கட்டும் பொருட்டு நெசவாளர் சங்கங்களுக்கு மானியம் வழங்கப்பட வேண்டும். | அனைத்து இந்திய கைத்தறி வாரியத்தின் பொதுவான கொள்கைகளுக்கேற்ப, பணிக் கொட்டகைகள் கட்டுவதற்கான நிதி உதவி முழுக் கடனாக கொடுக்கப்பட வேண்டும். இது காரியத்திற்காக மானியம் வழங்குவதற்கான வேண்டுகோளை ஏற்றுக்கொள்ள இயலாது என மாநில அரசுக்கு இந்திய அரசு தெரிவித்துள்ளது. |
| 15. விசைத் தறிகளைச் செயலுக்குக் கொண்டுவரக்கூடாது. | இது குறித்து அரசு ஆலோசித்து வருகிறது. |

# தமிழ் நாடு சட்டப் பேரவை

புதன்கிழமை, 1970 ஜனவரி 28

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்.

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

### கர்நாடக சங்கீதக் கல்லூரி முதல்வர்.

89 வினா—திரு. டி. மார்டின்: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலுள்ள கர்நாடக சங்கீதக் கலைக்கல்லூரிக்கு தற்போது முதல்வராக ( Principal ) பணியாற்றி வருபவர் எப்போது நியமனம் செய்யப்பட்டார்?

(இ) முதல்வரின் ( Principal ) ஊதிய விபரம் யாது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) திரு. எஸ். சீனிவாச ராவ் 16—5—1965 அன்று கர்நாடக இசை மத்தியக் கல்லூரியின் முதல்வராக நியமிக்கப்பட்டார்.

(இ) விதிகளின் கீழ் அனுமதிக்கப்படத்தக்க வழக்கமான படிகளுடன் அவருடைய சம்பள விகிதம் ரூ. 600—30—900 ஆகும்.

திரு. டி. மார்டின்: ஸ்பீக்கர் சார், தற்சமயம் யார் அந்தக் கல்லூரியின் முதல்வராக இருக்கிறார்? திரு. டி. எஸ். ஜெயராமன் அவர்கள் கல்லூரி முதல்வராக இருக்கிறார்களே அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய சம்பளம் எவ்வளவு? அவருக்கு முன்பு இருந்த முதல்வருக்குக் கொடுத்த சம்பளம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தற்போது கல்லூரியின் பிரின்சிபால் என்ற முறையில் திரு. சீனிவாச ராவ் தான் இருந்து கொண்டிருக்கிறார். கர்நாடக சங்கீதத்தின் தலைவர் என்ற முறையில் ஆனரரி போஸ்ட் ஒன்று இருந்தது. அதிலே திரு. சி. எஸ். ஜெயராமன் அவர்கள் இருந்துகொண்டு வருகிறார். அவருக்கு ரூ. 500 ஆனரேரியம் என்று கொடுத்துக் கொண்டு வருகிறார்கள்.

திரு. ஆர். கருப்பையா: இந்தக் கர்நாடக இசைக் கல்லூரியில் எத்தனை மாணவ, மாணவியர்கள் பயிலுகிறார்கள் என்று அறிவிக்க முடியுமா?

[1970 ஜனவரி 28

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அ[illegible]ளே அதுபற்றி விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

**திரு. டி. மார்டின் :** ஸ்பீக்கர் சார், இதற்கு முன்னால் தலைவராக இருந்த பாடகருக்கு என்ன சம்பளம் கொடுக்கப்பட்டது? ரூ. 500 மாதத்திற்கா அல்லது வாரத்திற்கா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரக் குறிப்பு இல்லை. ஆனரேரியம் கொடுத்தார்களா என்ற தகவல் தற்போது இல்லை. ஆனரேரியம் கொடுப்பதும் கொடுக்காமல் இருப்பதும அரசாங்கத்தினுடைய டிஸ்க்ரிஷனைப் பொருத்தது. 400 ரூபாயா, 500 ரூபாயா என்பது தெளிவாக இல்லை. அதுபற்றி விவரம் இல்லாத காரணத்தால், அதற்கு முன்னால் இருந்தவருக்கு எவ்வளவு கொடுக்கப்பட்டது என்று தெரிவிப்பதற்கு இல்லை.

**திரு. கே. விநாயகம் :** இப்பொழுது கொடுக்கிற ஆனரேரியம் இந்த பிரின்சிபாலுக்கு இதுதான் முதல் தடவையா ? இதற்கு முன்னால் இருந்தவருக்கு ஒன்றும் கொடுக்கவில்லையே. இது ஒரு அரசியல் காரணத்திற்காகக் கொடுக்கப்பட்டது என்று அமைச்சரவர்களுக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இது எந்த அரசியல் காரணத்திற்காகவும் கொடுக்கப்பட்டதல்ல. அவர் எந்த அரசியல் கட்சியையும் சேர்ந்தவரல்ல. இன்னும் சொல்லப்போவோமானால், காங்கிரசுக் கட்சியினுடைய வைதிகக் கொள்கைகள் எல்லாவற்றையும் ஏற்று, கதர் அணிந்துகொண்டிருக்கிறார். நீண்ட காலமாகக் காங்கிரசில்தான் இருந்துவந்திருக்கிறார். திராவிட முன்னேற்றக் கழகத்தில் அவர் உறுப்பினராக ஆனதும் இல்லை. அவர் சிறந்த இசைப் பேரறிஞர் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ளுவார்கள். அந்த அடிப்படையில்தான் அவர்களுக்கு அளிக்கப்பட்டது.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, இந்தக் கர்நாடக இசைக் கல்லூரியில் ஆனரேரியம் பெறுபவர்கள் இன்றையதினம் எத்தனை பேர்? சம்பளம் பெறுபவர்கள் எத்தனை பேர்? யார் யாருக்கு எவ்வளவு சம்பளம், எவ்வளவு ஆனரேரியம் என்று தெரிவிக்க முடியுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதுபற்றிய முழு விவரக்குறிப்பு இல்லை. அங்குள்ள தலைவர் திரு. சி. எஸ். ஜெயராமன் அவர்களுக்கு மட்டுந்தான் ஆனரேரியம் அளிக்கப்படுகிறது. மற்றவர்களெல்லாரும் சம்பளம் பெற்று வருகிறார்கள்.



1970 ஜனவரி 28]

*Entrance Examination for Vidwan Course*

*90 Q.—DR. H. V. HANDE : Will the Hon. Minister for Education and Health be pleased to state—

(a) whether as per the existing rules, only those who have completed 30 years of age are permitted to appear for the Entrance examination of the Tamil Vidwan Course;

(b) if so, the reasons therefor;

(c) whether this Government has any proposal to reduce the upper age limit; and

(d) if so, the particulars thereof?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ), (உ) (எ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

## முதியோர் கல்வித் திட்டம்

*91 வினா—திரு. பெ. மலைச்சாமி : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் முதியோர் கல்வித் திட்டம் இன்னும் நடைமுறையில் இருக்கின்றதா ?

(இ) இத்திட்டத்தை மேலும் விரிவாக்கும் திட்டம் உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) முன்னோடித் திட்டங்களாக, கீழ்க்கண்ட புதிய வகை முதியோர் கல்விப் பள்ளிகளுக்கு அண்மையில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது :—

(1) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டத்தில், கல்வியறிவற்ற முதிய குடியானவர்களுக்கு குறிப்பிட்ட ஒரு துறையில் கல்வி புகட்டுவதற்கான அறுபது நிலையங்கள் (இந்த நிலையங்கள் 19—3—1969 முதல் செயல்பட்டு வருகின்றன).

(2) நான்கு திங்கள் கால அளவுள்ள பாடமுறைகளை நடத்துபவையும், மொத்தத்தில் சுமார் 10,000 முதியோர்களைச் சேர்த்துக்கொள்பவையுமான முதியோர் பள்ளிகள் 500. (உடுமலைப்பேட்டை வட்டத்தில் உள்ளவை நீங்கலாக ஏனைய இடங்களில், 1969-70-ம் ஆண்டில் இந்த நிலையங்கள் தொடங்கப்படவிருக்கின்றன).

**திரு. பெ. மலைச்சாமி :** தலைவர் அவர்களே, கல்லூரியில் படிக்கின்ற மாணவர்கள் விடுமுறைக் காலத்தில் கட்டாயமாக முதியோர்க்குக் கல்வி கற்பிக்கவேண்டும் என்ற முறையை அரசு வகுக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, கட்டாயப்படுத்துவது எதிலும் இருக்கக்கூடாது. இதிலும் கட்டாயப்படுத்த இயலாது. அவர்கள் தாமாகவே இப்படிப்பட்ட பணிகள் புரிய முன்வருவார்களேயானால் அவர்களுடைய பணிகள் பயன்படுத்திக்கொள்ளப்படும்.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், முதியோர்க் கல்வி கற்பிப்பவர்களுக்கு சம்பளம் உண்டா, அவர்களுக்கு அளிக்கப்படும் வசதிகள் எப்படி என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, முதியோர்க் கல்வி கற்பிப்பதற்கு ஆங்காங்கு இருக்கும் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் விருப்பப்பட்டு முன்வருவார்களானால், அவர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள். இந்தப் பயிற்சியில் ஈடுபடுகிறவர்களுக்கு மட்டும், இதற்குரிய ஊதியமாக 25 ரூபாய் தரப்படுகிறது. அவர்கள் ஒரு நாளைக்கு இரண்டு மணி நேரம் வீதம் வாரத்தில் ஐந்து நாட்கள்—அதாவது மாதத்தில் 20 நாட்கள் வகுப்புக்கள் நடத்த வேண்டும்.

THIRU K. VINAYAKAM : Sir, whereas there is a feeling that the amount spent upon this dying generation is a criminal waste, may I know whether the Government will revise their policy and spend the amount more profitably on schools and colleges and improve the standard of education?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, முன்பு இந்த முதியோர்க் கல்வித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. 1,800 பள்ளிகள் வைக்கப்பட்டன. அப்பொழுது 8 முதல் 18 வயது வரை வயதுள்ளவர்களைச் சேர்த்து இரண்டாண்டுக் காலம் பயிற்சி அளிக்கலாம் என்ற முறை இருந்துவந்தது. மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தது போன்ற அதனால் அதிகப் பலன் இல்லை என்று அது நாளடைவில் கைவிடப்பட்டது. முதியோர்க்குக் கல்வி அளிப்பதுபற்றி இந்திய அரசு வற்புறுத்தியதன் காரணமாக மீண்டும் இப்பொழுது எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. பாட புத்தகங்களை வைத்துக்கொண்டு 5 முதல் 8 வகுப்புக்கள் வரை பாடம் சொல்லிக்கொடுப்பதைவிட, 'ஃபங்ஷனல் லிட்டரசி' என்ற முறையில், யார் யார் எந்தெந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்களோ அவர்களுக்கு, அந்தந்தத் தொழிலில் என்ன என்ன சொற்கள் தேவைப்படுகின்றனவோ அவற்றை மட்டும் அதிகமாகச் சொல்லிக்கொடுக்கும் முறை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்தந்தத் துறையில் உள்ளவர்கள் அந்தந்தத் துறை பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்ளும் முறையில் 69 பள்ளிகள் பரீட்சார்த்தமாக உடுமலைப்பேட்டை தாலுக்காவில் வைத்து, ஓரளவுக்கு அதனால் பலன் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். முன்ப இருந்த நிலைமைகள் இல்லாமல்—8 வகுப்புக்களுக்குரிய [illegible] புத்தகங்களை வைத்துக்கொண்டு சொல்லிக்கொடுப்பது [illegible]மைகள் இல்லாமல்—எந்த அளவுக்கு அவர்கள் ஈடுபட்டிருக்கும் துறைக்குரிய அறிவைப் பெறவேண்டுமோ அந்த அளவுக்கு அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்தால் போதும் என்ற முறையில், நான்கு மாதப் பயிற்சி அளிக்கும் முறை இப்பொழுது எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிறது. அந்த வகையில் இப்பொழுது 500 பள்ளிகள்—300 சில்லரை கிராமப் புறங்களிலும் 100 சில்லரை நகரப் புறங்களிலும்—நிறுவப்படலாம் என்று இருக்கிறது. இதற்கு 1969–70 ஆம் ஆண்டுக்கு ரூ. 60,000 செலவாகும் என்று கணக்கிடப்படுகிறது. இதன் மூலமாக நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள்ளாக 1 லட்சத்து 50 ஆயிரம் பேர்களை இந்த வகையில் கல்வி அறிவு உடையவர்களாக ஆக்கலாமா என்று அரசு எண்ணிக் கொண்டிருக்கிறது.



**திரு. சு. துரைசாமி :** பேரவைத்தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டில் 50 சதவிகிதம் மக்கள் கூட கல்வியறிவு படைத்தவர்களாக இருக்கவில்லை. ஆகவே, முதியோர் கல்வி குறித்து, திரு. ஆதிசேஷய்யா கொடுத்திருக்கும் திட்டத்தின் அடிப்படையில், ஐந்தாண்டு காலத்தில் கல்வியறிவு புகட்டலாம் என்பதைக் குறித்து அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவது போல் அவ்வளவு விரைவாக செய்து விட முடியாது. 1961-ம் ஆண்டில் தமிழகத்தைப் பொறுத்தவரையில் படிப்புத்தரம் 31.4 சதவிகிதம் என்பதுதான் இருந்தது, எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் எண்ணிக்கை. இப்பொழுது அது 40 சதவிகிதம் என்ற அளவிற்கு வந்திருக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நான்காவது திட்டத்தில் அதிகமான அளவிற்குப் பணம் ஒதுக்க முடியாத காரணத்தால், ரூ. 10 லட்சம் முதியோர் கல்விக்கு ஒதுக்கலாம் என்கின்ற அடிப்படையில், 1,50,000 பேர்களை பயிற்றுவிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முதியோர்கள் எல்லோருமே படித்துவிடவேண்டும் என்று செய்வது சாத்தியமான செயல் அல்ல.

## தஞ்சாவூர் ராஜா மருத்துவ மனை

92 வினா—திருமதி கே. பி. ஜானகியம்மாள் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை ராஜா சர்க்கார் மருத்துவமனை தஞ்சை மாவட்ட மருத்துவ அதிகாரியின் அதிகார எல்லைக்குள் இயங்கி வருகிறதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

**திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** தலைவர் அவர்களே, தஞ்சை மருத்துவ மனைக்கு ஒரு தனி அதிகாரி, சூப்பிரெண்டெண்டெண்ட், அமைத்து இயங்க ஏற்பாடு செய்ய முடியுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இந்த மருத்துவ மனை மாவட்ட மருத்துவ அதிகாரியின் கீழே வரவில்லை. அங்கே மருத்துவக் கல்லூரி வந்திருப்பதால், அது கல்லூரி அதிகாரியின் கீழே இருக்கும். படிப்பு சொல்லிக்கொடுக்கும் மருத்துவ மனையாக இருந்தால், அது மாவட்ட மருத்துவ அதிகாரியின் கீழ்வராது. ஆகவே, இந்த ராஜா மிராசுதார் ஆஸ்பத்திரி கல்லூரியின் டீன் அவர்கள் தலைமை அதிகாரியாக இருக்கிறார்.

### மருத்துவக் கல்லூரிகளில் முறைவகுப்பு ஏற்பாடு.

93 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் வைத்தியக் கல்லூரிகளில் இட நெருக்கடியைப் போக்கும் முறையில் ஷிப்ட் முறையைப் புகுத்தும் நோக்கம் அரசுக்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, வைத்தியக் கல்லூரிகளுக்கு மாணவர்கள் அதிகமாக வருகிறார்கள். நிறைய கிராமப் புறங்களிலிருப்பவர்களுக்கு வசதி கொடுக்க, ஷிப்டு முறையை வைத்தால் இன்னும் அதிகமான பேர்களை சேர்த்துக் கொள்ள வாய்ப்பு ஏற்படும் என்பதால் அப்படிச் செய்ய அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மற்றையக் கல்லூரிகளில் போல் மருத்துவக் கல்லூரியில் படிப்பு இல்லை. காலை ஆறு மணிமுதல் மாலை 7 மணிவரை எல்லா வகுப்புக் களிலும், ஆய்வுக் கூடங்களிலும் அவர்கள் வேலைசெய்ய வேண்டியிருப்பதால், இப்பொழுது 1,125 மாணவர்களுக்கு வசதி இருக்கிறது. இப்பொழுது அந்த அளவிற்கு போதுமானதாக இருக்கிறது வசதிகள். இன்னும் அதிகமான மாணவர்களை சேர்ப்பது வேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஏற்படுத்தும். அவர்களே நம்பிக்கையில்லாத அளவில் வேலை செய்ய வேண்டியதாகிவிடும். ஆகவே, இப்பொழுது ஷிப்டு முறைக்கு மாற்ற வேண்டிய அவசியம் இல்லை. இருக்கும் வசதிகள் இடம் தராது.

**திரு. சோ. அழகர்சாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, ஷிப்டு முறைக்கு மாற்ற உத்தேசம் இல்லை என்றாலும், இட நெருக்கடியைப் போக்க, இடங்களை அதிகரிக்கும் நோக்கம் உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நான் முதலிலே குறிப்பிட்டது போல், இடங்களை அதிகரிக்கும் நோக்கம் இப்பொழுது அரசாங்கத்தின் கவனத்தில் இல்லை. இப்பொழுதே முதல் இண்டர் மீடியட் எம்.பி.பி.எஸ். கோர்ஸில்





ஸ்டான்லி மருத்துவ மனையில் இடம் இல்லாததால் பெரிய ஆஸ்பத்திரி மருத்துவ மனையில் வேலைசெய்ய வேண்டியிருக்கிறது. இடநெருக்கடி இருக்கிறது. வசதிகளைப் பெருக்கி, ஸ்டான்லி, கீழ்பாக்க மருத்துவ மனைகளில் உள்ள நெருக்கடியைத்தான் போக்க முடியும். மேற்கொண்டும் அதிகப்படுத்துவது கடினமாக இருக்கும்.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** பேரவைத் தலைவர் அவர்களே, பாளையங்கோட்டையில் உள்ள மருத்துவ மனையில் ஒரு மாணவருக்கு ஆறு படுக்கை வேண்டியிருக்க, இரண்டு படுக்கைகள் தான் கொடுக்கப் பட்டிருக்கின்றன. மெடிகல் கல்லூரி மாணவர் களுக்கு உரிய வியாதியஸ்தர்கள் இல்லாத காரணத்தால், பயிலும் படிப்புக்கு யுனிவர்சிடி கமிஷன் ஏற்றுக் கொள்ள முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, படுக்கைகளைக் கூட்டி, மாணவர்கள் சிறந்த முறையில் பயில வாய்ப்புத் தேடித்தர முடியுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாததால், முழு விவரம் கொடுப்பதற்கில்லை. யுனிவர் சிடி கமிஷன் ஏற்றுக் கொள்ளத் தக்க வகையில் ஆக்குவதில் அரசு எந்த அளவிற்கு செய்யும் என்பதற்கான முழுவிவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் திரட்டிக் கொடுக்கப்படும்.

**திரு. ஆர். கருப்பையா :** தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரிக்கு இடம் ஒதுக்கும் நிலையில், நகரங்களில் உள்ளவர் களுக்கு அதிக வாய்ப்பு இருக்கிறது. கிராமப்புறங்களில் உள்ள மாணவர்களுக்கு அதிக வசதி ஏற்படுத்த ஏதாவது தனிச் சலுகை கொடுத்து இடம் அதிகமாகக் கொடுக்க முடியுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட சலுகை அளிப்பது தவறு என்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், நியாயமான அளவில், ஓரளவில் எல்லா மாவட்டங்களைச் சேர்ந்த வர்களும் மருத்துவ வல்லுநர்களாக வருவதற்கு வசதியாக, மாவட்ட வாரியாகக் கொடுக்கப் பட்டது சரியில்லை என்று சொல்லி விட்டார்கள். இப்பொழுது பிற்பட்ட வகுப்பினருக்கும் தாழ்த்தப் பட்ட வகுப்பினனருக்கும் முறையே 25 சதவிகிதம், 16 சதவிகிதம் என்ற விதிப்படி இடங்கள் அளிக்கப்படுகின்றன.

### தமிழ்நாடு அரசு பரிசுத் திட்டம்

* 94வினா—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசுப் பரிசுச் சீட்டுகளிலிருந்து கிடைக்கும் வருவாய் எந்தெந்தப் பணிகளுக்குச் செலவிடப்படும் ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பரிசுச் சீட்டுத் திட்டத்தில் கிடைக்கும் வருவாய், எல்லா வளர்ச்சித் திட்டங்களுக்காகவும் செலவிடப்படும்.

* 95 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government had decided to double the number of second and third prizes for raffles conducted by the Government; and

(*b*) if so, for what reasons and from when?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு பரிசுச் சீட்டு விற்பனையை அதிகரிப்பதற்கும் சீட்டுகளை வாங்குபவர்களின் ஆர்வத்தைத் தூண்டுவதற்கும் 21—6—1969 முதல் இரண்டாம் மூன்றும் பரிசுகளை இரட்டிப் பாக்குவதென அரசு முடிவு செய்தது.

* 96வினு—திரு. இரா. மாணிக்கவாசகம் : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப் பாரா—

பரிசுச் சீட்டு விற்பனையை ஊராட்சிகள் மூலம் விற்பனை செய்ய உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இல்லை.

97. வினு—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தமிழ்நாடு அரசு "லாட்டரி டிக்கட்" விற்பதற்கு ஊராட்சி ஒன்றிய அதிகாரிகள் பயன்படுத்தப்பட்டார்களா?

(இ) ஆம் எனில் எந்தெந்த ஒன்றியங்களில் பயன்படுத்தப் பட்டனர்?

(உ) அந்த அதிகாரிகள் விற்கும் டிக்கட்டுகளின் கமிஷன் யாருக்குச் சேரும்?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) இல்லை.

(இ) & (உ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

* 98 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether it is a fact that a number of persons have been arrested by the police at Madras for making false claims for raffle money in 1969; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) ஆம்.

(இ) இது நீதிமன்ற விசாரணையில் உள்ளது.



**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் கிராமங்களில் இன்னும் அடிப்படை தேவைகள் கூட இல்லாமல் மக்கள் வாடுகிருர்கள். ஆகவே, பரிசு மூலம் வரும் பணத்தில் பெரும் பகுதியை கிராம புனருத்தாரணத்திற்கு செலவு செய்ய அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பெரும்பாலும் அப்படிப் பட்ட செலவுகளுக்கே உபயோகிக்கப்படுகிறது. இன்ன அபிவிருத்தித் திட்டத்திற்கு என்று இப்பொழுது இல்லையே தவிர, பொதுவாக நிதி ஆதாரங்களைப் பெருக்கும் ஒரு அம்சமாக, மக்கள் சேமிப்பை அதிகரித்து, இந்தக் காரியங்கள் நடைபெறுகின்றன

THIRU K. VINAYAKAM: Sir, may I know how much amount has been realised till yesterday through the sale of raffle tickets? Also, is it not better that the Government should stipulate that the proceeds made out of the sale of the raffle tickets would be spent only for a specific purpose like solving the unemployment problem or starting of new industries? Will the Government think on those lines?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி நேரத்தில் யோசனைகள் சொல்லக்கூடாது.

**திரு. கே. விஞயகம் :** நான் யோசனை ஒன்றும் சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இப்பொழுது இருக்கும் முறைப்படி பொதுவாக கணக்கு வைக்கிருேம். அதிலும் அனுகூலங்கள் இருக்கின்றன. கணக்கு வைப்பதில் மாண்புமிகு திரு. சித்தன் சொன்னது போல், ஒன்றுமே அபிவிருத்தித் திட்டங் களுக்கு இல்லை என்றில்லை. சேமிப்பைக் கொண்டு ஒரு பகுதியை அபிவிருத்தி வேலைகளுக்கு பயன்படுத்தவேண்டும் என்கிற உயர்ந்த நோக்கத்தோடுதான் செயல்பட்டுக் கொண்டிருக்கிருேம்.

THIRU K. VINAYAKAM: Sir, I am sorry the Hon. Minister has not answered my question, namely, how much amount has been realised through the sale of raffle tickets?

THE HON. THIRU K. A. MATHIALAGAN: Then I want notice, Sir.

**திரு. எம். எஸ். மணி :** பேரவைத் தலைவர் அவர்களே, பரிசுச் சீட்டுகள் விற்காமல் தேங்கிக் கிடக்கின்றன என்று ஒரு சாரார் கூறிஞர்கள். பரிசுச் சீட்டுகள் கிடைக்கவில்லை, இன்னும் தேவைப் படுகிறது என்று பொதுமக்களிடையேயிருந்து முறையீடு வந்ததா? பரிசுச் சீட்டுகள் பரவலாகக் கிடைக்கவில்லையென்பது உண்மையா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, இரண்டும் உண்மை என்றுதான் சொல்லவேண்டும். ஒரு சமயத்தில் பரிசுச் சீட்டுகள் கிடைக்கவில்லை.

**திரு. எம். பூபதி:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இன்னும் 18 மில்கள் மூடிக் கிடக்கின்றனவே, அவைகளைத் திறப்பதற்கு, பரிசுச் சீட்டுகள் மூலம் வருகின்ற லாபத்தை உபயோகப் படுத்த முடியுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் கூறுகிற 18 மில்களைத் திறப்பதற்காக வேண்டி பல முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. பல மில்களும் இப்போது திறக்கப்பட்டு வருகின்றன. பரிசுச் சீட்டு லாபத்தைக் கொண்டு இவைகளைத் திறக்கலாம் என்றால், இதனால் சில சங்கடங்களும் விளைவுகளும் ஏற்படும். மத்திய அரசிலிருந்து வருகின்ற உதவிகளிலே சில குறிப்பிட்ட காரியங்களைச் செய்கின்றோம். நாட்டிலே ஏற்படும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு என்று இதை ஆரம்பித்தோம். சில குறிப்பிட்ட காரியங்களுக்கு லாட்டரிச் சீட்டினால் வருகின்ற லாபத்தை உபயோகிக்கலாமா என்பதைப்பற்றி அரசு ஆலோசித்து வருகிறது.

**திரு. கே. போஜன் :** பேரவைத் தலைவர் அவர்களே, பரிசுச் சீட்டு மூலம் கிடைக்கும் வருவாயைக் கொண்டு, நம் மாநிலத்திலுள்ள கிராமப் பகுதிகளுக்கு அங்குள்ள மக்களுக்கு வைத்திய வசதி செய்து தரலாம் என்பதை அரசு யோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, அரசாங்கம் பல வசதிகளைச் செய்து தர வேண்டியிருக்கிறது. பொதுவாக அபிவிருத்தி வேலைகளுக்கென்று நாம் மத்திய அரசை 575 கோடி ரூபாய் கேட்டிருக்கிறோம். அந்தத் தொகை போதாத நிலைமை இருக்கிறது. அபிவிருத்தி வேலைகளிலே ஒரு பகுதியைச் சமாளிப்பதற்காகத்தான், நாட்டு மக்களிடத்திலே ஒரு சேமிப்பு உணர்வை ஏற்படுத்த இந்த மாதிரியானத் திட்டம் செயல் படுகிறது.

**திரு. க. இராமமூர்த்தி :** பேரவைத் தலைவர் அவர்களே, பரிசுச் சீட்டுகளை அதற்கான ஏஜெண்டுகள் டிரஷரி அல்லது சப்-டிரஷரி போன்ற இடங்களில்தான் பெற வேண்டியிருக்கிறது. ஏஜெண்டுகள் அங்கே பரிசுச் சீட்டுகளைப் பெறுகிற நேரத்திலே அங்கேயுள்ள அதிகாரிகளைக் கெஞ்ச வேண்டியிருக்கிறது. அந்த அதிகாரிகள் வைப்பதுதான் அங்கே சட்டம். அதன் காரணமாக அங்கே லஞ்ச ஊழல்கள் தலைவிரித்தாடுகின்றன என்பது இந்த அரசுக்குத் தெரியுமா ? அதைத் தடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, இதெல்லாம் ஆதாரமற்ற புகார்கள். இப்படிப்பட்ட ஆதாரமற்ற புகார்களை இந்த மன்றத்திலே சொல்வது நல்லதல்ல. ஏதாவது புகார் சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்லப்படுவதேயன்றி, வேறு அல்ல.

**THIRU K. RAMAMOORTHI :** I can challenge. I got the information from an agent belonging to D.M.K. Party.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** புகார்களைக் கொடுப்பதற்கு அனுமதி கேட்க வேண்டியது இல்லையா ? தலைவரிடம் அனுமதி பெற்ற பிறகுதான் புகார் கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, இந்த ஊரிலே, இந்த நபர் லஞ்சம் கேட்டார் என்று ஆதாரபூர்வமாகச் சொல்வதற்கு கனம் உறுப்பினருக்கு உரிமை இருக்கிறது. அதைவிட்டுவிட்டு, லஞ்சம், ஊழல் இருக்கிறது என்று பொதுவாகச் சொன்னால், ஏதோ நாமும் கேள்வி கேட்டோம் என்ற திருப்தி தான் ஏற்படும்.

**திரு. ந. தருமலிங்கம் :** பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த பேறிஞர் அண்ணா அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட இந்தப் பரிசு சீட்டு திட்டத்தினால் நாட்டில் லட்சாதிபதிகளின் எண்ணிக்கை பெருகி வருகிறது. இதைச் சகியாத சில அரசியல் கட்சித் தலைவர்கள், 'பரிசுச் சீட்டு வாங்க வேண்டாம், இது கொள்ளையடிக்கும்செயல்' என்று சொல்லி வருகிறார்கள் . அரசாங்கம் இதைத் தடுக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, பரிசுச் சீட்டு திட்டத்தைப்பற்றி பல அபிப்பிராயங்கள் இருக்கின்றன. அவரவர்களுக்கு தங்களுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு சுதந்திரம் உண்டு. பொதுவாக, பரிசுச் சீட்டு திட்டத்தினால் வரும் பணத்தை அபிவிருத்திக் காரியங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற நல்ல எண்ணத்தைத்தான் பல மாநிலங்கள் கொண்டிருக்கின்றன. குறிப்பாக அதைப் பின்பற்றியே தமிழ்நாடு அரசும் இந்தத் திட்டத்தை நடத்தி வருகிறது.

**THIRU R. PONNAPPA NADAR :** May I know from the Hon. Minister whether the proceeds would be equitably distributed to all the districts ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இதைத் தனியாக எடுத்துக்கொண்டு, 'ஈக்விடபிள்' ஆகக் கொடுக்கவேண்டுமென்று கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்கிறார்கள். பொதுவாக எல்லா ஜில்லாக்களுக்கும் 'ஈக்விடபிள்' ஆகத்தான் கொடுக்கிறோம். அதுதான் உண்மை நிலை.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** பேரவைத் தலைவர் அவர்களே, பொங்கல் திருநாள் சமயத்தில் கொடுக்கப்பட்ட சிறப்புப் பரிசுகளைப் போல, வேறு சில நாட்களிலும் சிறப்புப் பரிசு கொடுப்பதற்கு அரசு யோசனை செய்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, பொங்கல் சமயத்தில் கொடுக்கப்பட்ட சிறப்புப் பரிசுகளைப் போல வேறு நாட்களிலும் சிறப்புப் பரிசுகளைக் கொடுப்பது பற்றி அரசு யோசித்துக்கொண்டு வருகிறது. அதுபற்றி முடிவு எடுக்கப்பட்டதும் அறிவிக்கப்படும்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, எந்தத் தொழில் வேண்டுமானாலும் செய்வது என்பது சரியல்ல. நியாயமான, நீதியான, தருமமான தொழில்களைத்தான் இந்த அரசாங்கம் செய்யும்.

**திரு. என். வரதராஜன் :** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டு பரிசுச் சீட்டு விற்கும்நேரத்தில், பிற மாநிலப் பரிசுச் சீட்டுகள் ஐந்து லட்சம், பத்து லட்சம் என்ற அளவில் தொகைகளை உயர்த்திக்கொண்டே போகின்றன. பிற மாநிலச் சீட்டுகளும் இங்கே விற்பனையாகின்றன. இதன்காரணமாக யார் அதிகமான தொகையை உயர்த்தியிருக்கிறார்கள் என்று பார்த்து, அந்த மாநிலச் சீட்டுகளையே மக்கள் வாங்குகிறார்கள், இதனால் நம் மாநிலச் சீட்டுகளின் விற்பனை குறைய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, எல்லா மாநிலப் பரிசுத் தொகைகளும் ஒரேமாதிரியாக இருக்கும்படியான நிலையை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்களுடைய கருத்து முற்றிலும் தவறானது. நம்முடைய மாநிலப் பரிசுச் சீட்டு அதிகமான அளவில் தொகை வழங்கிவருகிறது. உதாரணமாக ஒரு சீரிஸுக்கு பத்து லட்சம் ரூபாய் என்றால், அதில் மூன்றரை லட்சம் ரூபாயை பரிசாக நாம் வழங்குகிறோம். மற்ற மாநிலங்களில் எல்லாவற்றுக்குமாக 30 லட்சம் ரூபாய், 40 லட்சம் ரூபாய் என்ற அளவில் கிடைத்தால், அதில் ஏழு அல்லது எட்டு லட்சம் ரூபாயைத்தான் பரிசாக வழங்குகிறார்கள். ஒவ்வொரு பத்து லட்சத்திற்கும் மூன்றரை லட்சம் ரூபாயை பரிசாக நாம் கொடுக்கிறோம். மொத்தம் 611 பரிசுகளைக் கொடுக்கிறோம். மற்ற மாநிலங்களில் இந்த அளவில் இல்லை. எல்லா சீரிஸுக்கும் சேர்த்துக் கொடுத்துவிடுகிறார்கள். பரிசுகள் பலருக்கும் கிடைக்கும்படியான வகையில் நாம் பரிசுகளைக் கொடுத்து வருகிறோம்.

**திரு. கே. விநாயகம் :** பரிசுச் சீட்டு விற்பனையை அதிகப்படுத்த வேண்டும் என்பதற்காக பரிசை டபிள் செய்திருக்கிறார்களே, இந்தப் போக்கில் போவது சரி என்பதற்கு வழிகாட்டியாக வள்ளுவர் ஏதாவது குறள் செய்திருக்கிறாரா? ஞாபகத்திற்கு வந்தால் அந்தக் குறளையும் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** எனக்கு வள்ளுவர் குறளில் அவ்வளவு பாண்டித்யம் கிடையாது. திரு. விநாயகம் அவர்களே சொன்னால் ஏற்றுக்கொள்கிறேன்.

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** நம்முடைய மாநிலச் சீட்டிற்கு முதல் பரிசு ஒரு லட்சம் தான் வைத்திருக்கிறோம். மற்ற மாநிலங்களில் அதிகமாக வைத்திருப்பதனால்தான் அவை இங்கு ஏராளமாக விற்பனையாகின்றன. பொங்கலுக்குச் சிறப்புப் பரிசை வைத்து நடத்தியதுபோல் ஒவ்வொரு மாதமும் சிறப்புப் பரிசு வைத்து [illegible] அரசாங்கத்திற்கு அதிகமான வருமானம் வாராதா?



**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஒவ்வொரு மாதமும் நடத்தினால் அது சிறப்பு என்ற பெயரைப் பெறாது. சிறப்பு என்பது எப்போதாவது நடப்பதற்குப் பெயர். மக்களுக்கு உற்சாகத்தையும், ஊக்கத்தையும் அளிக்கக் கூடிய சிறப்பான காரியம் எதையாவது இரண்டு மாதங்களில் செய்யலாமா என்று அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தமிழ்நாடு அரசு லாட்டரிச் சீட்டை ஊராட்சி ஒன்றிய அதிகாரிகள் விற்கவேண்டும் என்று வற்புறுத்தப்படுகிறார்கள் என்று நான் சொன்னேன். அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொன்னார்கள். கற்பனை உலகத்தில் வாழ்கிறேன் என்றார்கள். எனக்குத் தெரியும். திருமங்கலம் ஊராட்சி அதிகாரிகளுக்கு பரிசுச் சீட்டை விற்கவேண்டும் என்று உத்தரவே கொடுத்திருக்கிறார்கள். அதை நானே பார்த்தேன். இப்படி அதிகாரிகள் பரிசுச்சீட்டை விற்கவேண்டும் என்று உத்தரவிட்டிருப்பதனால் பல ஊழல்கள் ஏற்படுகின்றன என்பதை மறுக்க முடியுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பரிசுச் சீட்டை விற்பதற்கு அரசாங்கம் அதிகாரிகளை உபயோகப்படுத்த வேண்டிய அவசியமே இல்லை. ஏஜெண்டுகள் வைத்திருக்கிறார்கள் 90 ரூபாய் கஜானாவில் கட்டினால் 100 ரூபாய்க்கு பரிசுச்சீட்டு கொடுக்கப்படுகிறது. மீதி கமிஷனாக வருகிறது. அப்படி இருக்க அதிகாரிகளை விற்கவேண்டும் என்று வற்புறுத்த அரசாங்கத்திற்கு என்ன அவசியம்? நம்முடைய முறையைப் பார்த்தாலே அதிகாரிகளை விற்கச் சொல்லி வற்புறுத்த வேண்டிய அவசியம் இல்லாததை உணரலாம். திருமங்கலம் ஊராட்சி ஒன்றிய அதிகாரிகளை விற்கச் சொல்லி உத்தரவு போட்டிருப்பதாகச் சொன்னார்கள். அந்த உத்தரவைக் காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## *Palayamkottai Jail.*

*99 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether there are proposals under the consideration of the Government to convert the Borstal School in Palayamkottai into a Jail; and

(*b*) if so, the stage at which the matter stands at present?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) & (இ) பாளையங்கோட்டையிலிருந்த இளங்குற்றவாளிகள் பள்ளி 1—4—1968 முதல் புதுக்கோட்டைக்கு மாற்றப்பட்டு, அங்குள்ள மாவட்ட சிறைச் சாலை வளவுகளில் அமைக்கப்பட்டுள்ளது. புதுக்கோட்டை, மாவட்ட சிறைச்சாலை பாளையங்கோட்டைக்கு மாற்றப்பட்டு, இளங்குற்றவாளிகள் பள்ளி வளவுகளில் மத்திய சிறைச்சாலையாக அமைக்கப்பட்டுள்ளது.

[1970 ஜனவரி 28

**திரு. டி. மார்டின் :** தலைவர் அவர்களே, தற்சமயம் அந்தச் சிறைச்சாலையில் இருக்கக் கூடிய கைதிகளின் எண்ணிக்கை, அந்தச் சிறையில் எத்தனை பேர் அனுமதிக்கப்படவேண்டும் என்கிற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பாளையங்கோட்டை சிறைச் சாலையின் ஆதாரைஸ்டு அக்காமடேஷன் 647. 23—8—1969 அன்று 790 பேர் இருந்தார்கள்.

*100 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Minister for Co-operation has unveiled a memorial tablet on 3rd June 1969 to mark the incarceration of the Chief Minister at the Palayamkottai Jail?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஆம்.

**திரு. கே. விநாயகம் :** நமது முதல் அமைச்சர் அவர்கள் பாளையங்கோட்டையில் இருந்ததை நினைவுபடுத்தும் வண்ணம் டாப்லட் விளம்பரப் பலகை ஒன்றை வைத்திருக்கிறார்களே, அதுபோல எந்த எந்தச் சிறையில் நம்முடைய தேசத் தலைவர்கள் இருந்திருக்கிறார்களோ அங்கெல்லாம் நினைவுச் சின்னம் ஏற்படுத்த முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்போதைக்கு அதுபற்றி யோசனை இல்லை.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம் :** பாளையங்கோட்டைச் சிறையில் இருக்கும் 49 அறைகள் இருந்தும் எதிலும் யாரையும் அடைக்காமல் நமது முதல் அமைச்சரை டி.ஐ.ஆர். படி தனிமைச் சிறையில் அடைத்தார்கள் என்பதன் காரணமாக நினைவுச் சின்னம் வைக்கப் பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** முதல் அமைச்சர் அவர்கள் நாட்டுக்கும், சமுதாயத்திற்கும் தொண்டாற்றினார்கள். அந்தத் தொண்டைப் பாராட்டும்முகத்தான் அப்படிப்பட்ட நினைவுச் சின்னம் வைக்கப்பட்டது.

**திரு. எம். எஸ். மணி :** இந்திய விடுதலையைப் பெறவேண்டும் என்பதற்காக பல தியாகிகள் சிறையில் அடைபட்டு, துன்புற்று தங்கள் வாழ்க்கையை இழந்திருக்கிறார்கள். இதற்கு முன்னால் இருந்த காங்கிரஸ் ஆட்சி அவர்களுக்கு நினைவுச் சின்னம் வைக்க மறந்துவிட்டது. இனியாவது இந்த அரசு அப்படிப்பட்ட நினைவுச் சின்னங்களை வைக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

(பதில் இல்லை)



1970 ஜனவரி 28]

**திரு. கே. விநாயகம் :** முன்பிருந்த அரசாங்கம் இதுபோன்ற மலிவான விளம்பரங்களைத் தேடக் கூடாது என்ற காரணத்திற்காகத்தான் அதுபோன்ற நினைவுச் சின்னங்களை வைக்கவில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இதற்கு முன் கேட்ட கேள்விக்கு நாகரிகமாக பதில் சொல்லாமல் இருந்தேன். பதில் சொல்லும்படியான நிலைமையை திரு. விநாயகம் அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். அவர்களுடைய ஆட்சியில் தான் 1956 ஆம் ஆண்டு ராஜகோபாலாச்சாரியார் அவர்களுக்கு நினைவுச் சின்னம் அமைத்திருக்கிறார்கள்.

தொழிற் பேட்டைகள்.

**வினா 101. திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

1968–69 துவங்கிய தொழிற்பேட்டைகள் எங்கெங்கு ஏற்படுத்தப்பட்டன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** 1968-69-ல் கீழ்க்காணும் புதிய தொழிற்பேட்டைகளை நிறுவ அரசு ஒப்புதல் அளித்துள்ளது :—

(1) உதகமண்டலத்தில் இந்துஸ்தான் புகைப்படச் சுருள் தயாரிக்கும் கம்பெனியின் அருகில் ஒரு துணைத் தொழிற் பேட்டை.

(2) கடலூரில் ஒரு தொழிற்பேட்டை.

(3) வத்தலகுண்டில் உணவு, பழப்பொருள் தொழில்கள் இவற்றிற்காக ஒரு தனித் தொழிற்பேட்டை.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் புதிய தொழிற்பேட்டை அமைக்க அரசு ஏதேனும் செய்ய முன் வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்போது அந்த யோசனை இல்லை.

*102 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon the Minister for Industries be pleased to state;

(a) whether the Government propose to locate food and fruit processing industrial estate at Batlagundu in Madurai district;

(b) if so, how soon; and

(c) what are the functions of this unit (Industrial Estate).

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம்.

(இ) இத்தொழிற் பிரிவுகள் அவரவர்களுக்கு ஒதுக்கப்படுவதற்கு இன்னும் சுமார் ஓராண்டுக் காலத்திற்குள் கட்டி முடிக்கப் படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

[1970 ஜனவரி 28

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பரிசு சீட்டு பிற மாநிலங்களில் எந்த அளவிற்கு விற்கின்றன? பிற மாநிலங்களுடைய பரிசு சீட்டுகள் இந்த மாநிலத்தில் எந்த அளவிற்கு விற்கின்றன, எவ்வளவு ரூபாய் மதிப்புடையவை என்ற விவரங்களைத் தரமுடியுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலப் பரிசு சீட்டுகள் பிற மாநிலங்களில் விற்கப்படுகின்றன. இந்தப் பொங்கல் சமயத்தில் சிறப்புப் பரிசுகள் அளிக்கப்பட்ட நேரத்தில் கேரளத்தைச் சேர்ந்த ஒருவருக்கு இரண்டாவது பரிசு கிடைத்திருக்கிறது என்ற தகவல் கிடைத்துள்ளது. தற்போது எவ்வளவு மதிப்புடைய டிக்கெட்டுகள் விற்கப்படுகின்றன என்ற விவரம் இப்பொழுது இல்லை. பொதுவாக நம்முடைய மாநில பரிசு சீட்டைப்பற்றி பிற மாநிலங்கள் புகார்கள் சொல்கின்றன. கேரள நாட்டைச் சேர்ந்த நிதியமைச்சர் அவர்கள் தென்மண்டலக் கவுன்சிலில் இந்தப்புகாரை எழுப்பினார். பொதுவாக எவ்வளவு டிக்கெட்டுகள், எவ்வளவு மதிப்புடையவை என்று வரையறுத்துச் சொல்ல முடியாது.

**திரு. எம். சுரேந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, பரிசு சீட்டு முறை, குதிரைப் பந்தயம் போன்றவை சூதாட்ட எண்ணத்தை உண்டாக்கக் கூடியவை என்று சிலர் சொல்கிறார்களே, அதைப்பற்றி இந்த அரசாங்கத்தின் கருத்து என்ன?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, சில உறுப்பினர்கள் கவலைப்படுவதுபற்றி இருக்கட்டும், மாண்புமிகு உறுப்பினருக்கும் அப்படிப்பட்ட சித்தாந்தம் இருக்கிறதா?

**திரு. மு. ச. சிவசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள முறையில் பரிசு சீட்டு ஏஜெண்டுகள் ஏதாவது ஒரு தொழிலைச் சேர்ந்தவராக இருந்து விற்பனை செய்யும் உரிமையைப் பெறுகிறார்கள். வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க, இப்போது இருக்கிற ஏஜென்சி முறையை மாற்றி, தற்காலிகமாக எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் நிலைமையை உத்தேசித்து அவர்களுக்குக் கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** தலைவர் அவர்களே, ஏதோ இந்த ஏஜென்சி முறை ஒருவழியாக நடந்து வருகிறது. வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்கு இதுவல்ல பரிகாரம். ஏஜென்சி கொடுக்கும் முறை வேறு. வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதுபற்றிய பிரச்சினை வேறு, இதையும் அதையும்போட்டு குழப்ப வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** பேரவைத் தலைவர் அவர்களே, பரிசு சீட்டு திட்டத்தினால் பல லட்சாதிபதிகள் வந்துவிட்ட[illegible]லர் பாராட்டுகிறார்கள். அதேநேரத்தில் பல ஏழைஎளிய



1970 ஜனவரி 28]

குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அதுவும் 100 ரூபாய், 50 ரூபாய் வருமானமுள்ளவர்கள் தங்கள் சம்பளம் பூராவுக்கும் பரிசு சீட்டுகள் வாங்கி, அதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, பணத்தை இழக்கிறவர்கள் எப்போதும்தான் இழப்பார்கள். பரிசு சீட்டில் இல்லாவிட்டாலும், வேறுவழிகளில் இழக்கத்தான் செய்வார்கள். பிரச்சினை அதுவல்ல. கலெக்டர் ஆபீசில் பியூன் வேலை செய்பவருக்கு ஐந்து லட்சம் ரூபாய் கிடைத்து இருக்கிறது. பெரிய பணக்காரர்கள், ஜமீந்தார்கள் போன்றவர்களுக்குக் கிடைக்காமல், ஏழை எளிய மக்களுக்குக் கிடைப்பதுபற்றி சந்தோஷப்பட வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பரிசு திட்டத்தினால் பல பேர் மொட்டையடித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதைத்தான் கேட்டு விட்டார்களே.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, மொட்டை அடிப்பதற்கு நாங்கள் 'திருப்பதி' அல்ல. மக்கள் ஒரு ரூபாய் கொடுத்து சீட்டு வாங்குகிறார்கள். பரிசு கிடைத்தால் லட்சாதிபதியாகிறார்கள். இல்லாவிட்டால், நம்முடைய நாட்டு அபிவிருத்திக் காரியங்களுக்குத் தாமும் ஒரு காணிக்கையாக ஒரு பங்கு கொடுத்தோம் என்ற திருப்தியுடன் இருக்கிறார்கள்.

**திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் :** பேரவைத் தலைவர் அவர்களே, பிற மாநிலச் சீட்டுகள் ஏராளமாக இந்த மாநிலத்தில் வந்து விற்பனையாவதால், நம்முடைய மாநிலப் பரிசுச் சீட்டுகள் தேக்கமடைகின்றன. பிற மாநிலப் பரிசுச் சீட்டுகள் இந்த மாநிலத்திற்குள் வாராதபடி தடுத்து நிறுத்த சர்க்கார் எடுத்துக்கொண்ட முயற்சிகள் எந்த அளவில் இருக்கின்றன?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, இப்பொழுதுள்ள நிலவரப்படி, பிற மாநிலங்களிலிருந்து இந்த மாநிலத்திற்கு பரிசுச் சீட்டுகள் வருகின்றன. நாம் பிற மாநிலங்களுக்கு அனுப்புகிறோம். ஒரு மாநிலச் சீட்டு, பிற மாநிலங்களுக்குள் வரக்கூடாது என்று தடுத்து நிறுத்த அதிகாரம் நமக்கு இல்லை. மத்திய அரசுக்குத்தான் அதிகாரம் இருக்கிறது. எல்லோருக்கும் ஒரு நியாயமான நீதி கிடைக்கும் நிலையில் வழிமுறைகளைச் செய்யலாம் என்று அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது.

**திரு. என். துரைபாண்டியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, வருவாயைப் பெருக்குவதற்காக அரசாங்கம் சூதாட்டத்தில் இறங்கியதுபோல் பரிசுச் சீட்டுத் திட்டம் இருக்கிறது. வருவாயைப் பெருக்குவதற்காக வேண்டி எந்தத் தொழிலையும்செய்ய சர்க்கார் முன்வருமா?

(உ) உணவு, பழவகைகள் இவற்றை அடிப்படையாகக் கொண்ட தொழில்களைத் தொடங்குவதற்கென தொழில் அதிபர்களுக்குத் தேவையான தொழிற்சாலை இடவசதிக்கு வகை செய்வதே இத்தொழிற்பேட்டை நிறுவப்படுவதன் நோக்கமாகும்.

THIRU K. VINAYAKAM: If the industrial estates come into being, will there be enough raw products of food and fruit for processing?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இந்தப் பகுதியில் கிடைக்கக் கூடிய பழங்களைக் கொண்டு இப்படிப்பட்ட தொழிலுக்கு வாய்ப்பு இருக்கிறது என்று முடிவு செய்தோம். அதற்காக நமது தொழில் துறை இலாக்கா பங்களூருக்குச் சென்று ஆராய்ச்சி நிலையத்தில் இருந்து சில குறிப்புக்களைப் பெற்று வந்திருக்கிறார்கள். அவற்றை மற்றவர்களுக்கும் கொடுத்து சில வசதிகளை ஏற்படுத்தித் தர உத்தேசம்.

**திரு. தி. பொன்னுமலை:** சேலம் மாவட்டத்தில் சுமார் நூறு ஏக்கரா திராட்சை பயிரிட்டிருக்கிறார்கள். பருவ காலத்தில் தேங்கிக் கிடக்கிறது. மதுரை மாவட்டம் வத்தலகுண்டுவில் ஏற்படுத்துவதுபோல சேலத்தில் ஒரு தொழில் சாலையை ஏற்படுத்தி பழசாறுபடி செய்கிறவர்களுக்கு உதவி செய்ய முடியுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இவ்விடத்தில் ஏற்படக்கூடிய அனுபவத்தை யொட்டி பின்னால் செய்யலாம்.

**திரு. எம். சுரேந்திரன்:** சார், இந்தத் தொழிற்பேட்டைகள் ஆரம்பிப்பதிலே எந்த இடங்களிலே என்ன மாதிரியான தொழில்கள் ஆரம்பிக்கலாம் என்பதுபற்றி ஆராய்ச்சி செய்யப்பட்டு இருக்கிறதா? ஒவ்வொரு தொழிற்பேட்டையும் எவ்வளவு இடங்களில் வைத்துக்கொள்ளலாம் என்பதுபற்றி ஏதாவது சர்க்கார் முடிவு செய்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இந்த மாநிலம் முழுவதும் பரவலாகத் தொழில்கள் தொடங்கவேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டு ஒவ்வொரு ரெவின்யூ பிரிவிலும் ஆரம்பிக்க திட்டங்கள் தொடங்கப்பட்டு வருகின்றன. குறிப்பாகச் சில பகுதிகளிலே தொழிற் பேட்டைகள் அதிகமாக ஏற்படுத்தக்கூடிய வாய்ப்பு இருந்தால் அப்படி அதிகமாக ஏற்படுத்தக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. குறிப்பாக கிண்டி, அம்பத்தூர் போன்ற இடங்களிலே அதிகமாக ஏற்படுத்துகிறோம். திருச்சியிலே ஹெவி பாய்லர்ஸ் தொழிற்சாலை இருப்பதினால் துணை தொழில்கள் (ஆன்சிலரிஸ்) ஏற்படுத்தக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி மதுரை மாவட்டத்தில் வத்தலக் குண்டு என்ற இடத்தில் உணவுப் பொருள்களையும், பழங்களையும் பதப்படுத்தும் தொழிற்பேட்டைபற்றியது. அதைப் பற்றி மட்டிலும் துணைவினாக்கள் கேட்க வேண்டும்.





**திரு. எஸ். ஜே. ராமசாமி:** தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலே அந்த தொழிற்பேட்டை இருப்பது கனம சபா நாயகர் அவர்களுக்குத் தெரியும். அதனால்தான் முதலிலேயே பிரேக்போட்டு இந்த வாய்ப்பைக் கொடுத்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். சேலத்திலிருந்து மாம்பழம் அங்கே வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த தொழிற்பேட்டை ஏன் செயல்படவில்லை, காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அந்தத் தொழில் கூட்டுறவுத் துறையிலே ஏற்படுத்தப்பட்டதாக எனக்கு நினைவு. எனவே இந்தக் கேள்வியைக் கூட்டுறவுத் துறையமைச்சர் அவர்களிடம் கேட்டால் அவர்கள் பதில்சொல்வார்கள்.

*103 Q.—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Industries be pleased to state the details of the industries under study to be opened at the Industrial Estate near Neyveli?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** வடலூரிலுள்ள திருவாளர்கள் நெய்வேலி மட்பாண்டம் அதிக சூடு தாங்கும் கற்கள் தயாரிப்பு நிறுவனம் (Thiru Neyveli Ceramics and Refractories Limited) சேஷசாயி தொழில்கள் நிறுவனம் (Thiru Sesnasayee Industries Limited) ஆகியவற்றின் தேவைக்காக, தண்ணீர்க் குழாய்கள், துப்புரவுப்பொருள்களுக்காக ஏனைய அமைப்புப் பகுதிகள், தண்ணீர்த் தொட்டிகளுக்கான உள் அமைப்புகள், திருகாணிகள், கௌவிகள் (Clamps) பிணைப்புகள் (Brackets) மரை ஆணிகள் திருகு மரைகள், உள்ளாழிகள் (bushings) எஃகு உருளைகள், பாரிஸ் உறைமாவு முதலான துணைச் சாமான்களைத் தயாரித்து வழங்கும் தொழிற்சாலைகளை அமைப்பதற்காக வடலூரில் துணைத் தொழிற்பேட்டை அமைப்பதற்கு அரசாங்கத்தினால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. மேலும் நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கார்ப்பரேஷனுக்கு வேண்டிய உலோகக் கொள்கலன்களும் உருளைத் தொட்டிகளும் அத்துணைத் தொழிற்பேட்டையில் உள்ள தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்பேட்டை எப்பொழுது பதிவுசெய்யப்பட்டது? எப்பொழுது உற்பத்தி தொடங்கப்பட்டது? இடையில் கால தாமதம் ஏற்பட்டதற்குக் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** காலதாமதம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. 1967-லே அமைக்கவேண்டுமென்று அரசாங்கம் முடிவுக்கு வந்தது. மூன்று லட்சத்து 79 ஆயிரம் ரூபா செலவிலே 29 ஏக்கரிலே தொழிற்பேட்டை அமைப்பதற்கு முடிவெடுக்கப்பட்டது. நான்கு யூனிட்டுகள் ஆரம்பிப்பதற்குத் தயாராக இருக்கின்றன. அதிலே தொழில்கள் தொடங்குவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

*104 வினா—திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவெறும்பூரில் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா? அல்லது கைவிடப்பட்டதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** திருவெறும்பூரில் பத்து பிரிவுகள்கொண்ட ஒரு துணை தொழிற்பேட்டை நிறுவப்பட்டு எல்லா பிரிவுகளும் தொழில் அதிபர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

**திரு. கே. விநாயகம் :** சார், தொழிற்பேட்டையைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு தொழிற்பேட்டை அமைப்பது என்பது கொள்கையாக அரசு ஏற்றுக்கொண்டு இருக்கிறது. எத்தனை மாவட்டங்கள் விடப்பட்டு இருக்கின்றன. விடப்பட்ட மாவட்டங்களில் தொடங்குவதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா? அப்படியானால் என்ன தொகை அதற்காகத் தேவைப்படும்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அதைத்தான் நான் முன்னரே சொன்னேன். ஒவ்வொரு ரெவின்யூ டிவிஷனிலும் ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்று கொள்கையளவிலே முடிவு செய்யப்பட்டு இருக்கிறது. பெரும்பாலும் அப்படித்தான் நடந்துவருகிறது. செங்கல்பட்டில் தொடங்கப்படவில்லை. வட ஆற்காடைப் பொறுத்தவரையிலே செய்யாறு, திருவண்ணாமலை, தென் ஆற்காடைப் பொறுத்தவரையில் திருக்கோயிலூர், திருச்சியில் அரியலூர், இவற்றில் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. மதுரையில் எல்லாம் முடிந்து விட்டன. இராமநாதபுரத்தில் இராமநாதபுரத்திலும், திருநெல்வேலியில் சேரனமாதேவியிலும், சேலத்தில் சங்ககிரியிலும், தர்மபுரியில் தர்மபுரியிலும், கோயம்புத்தூரில் கோபியிலும் இன்னும் தொடங்கப்படவில்லை.

**திரு. ஆர். கருப்பையா :** திருச்சியில் அரியலூரில் தொடங்க ஏற்பாடுசெய்வதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது எப்பொழுது தொடங்கப்படும், என்ன என்ன தொழில்கள் செய்யப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கட்டடங்கள் கட்டுவதற்காக தொழிற்பேட்டை அமைப்பதில் சிறிது சுணக்கம் காட்டப்படுகிறது. அண்மையிலே அஸ்ஸாமிலே நடைபெற்ற சிறு தொழில்கள் மாநாட்டிலேகூட இதைப்பற்றி விவாதிக்கப்பட்டது. நம்முடைய அரசாங்கத்திலே கட்டடங்கள் கட்டுவதற்கு மத்திய அரசாங்கம் உதவிசெய்யவேண்டும் என்றும் நிலங்களை வழங்க வேண்டும் என்றும் டெவலப்டு ப்ளாட்ஸ் கொடுப்பதிலும் மத்திய அரசு உதவி செய்ய வேண்டுமென்றும் நேஷனலைஸ்டு பேங்குகள் மூலம் கடன் கொடுக்க வேண்டுமென்றும் நாம் மத்திய அரசை வற்புறுத்திவருகிறோம். அவர்கள் அதைப் பரிசீலித்து வருவதாகச் சொல்லப் [illegible].



**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் தொழில்கள் பெருகவில்லை. செய்யாறு, திருவண்ணாமலை போன்ற இடங்களிலே இன்னும் அமைக்கப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இவற்றை உடனடியாக அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பணம் கிடைக்கும்பொழுது முயற்சிக்கலாம்.

*Municipal Bus Stand for Coimbatore.*

*105 Q.—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Local Administration be pleased to state:

(a) whether it is a fact that the Government have sanctioned the scheme for the construction of a Central Bus Stand for Coimbatore Municipality;

(b) if so, the date of sanction and the progress made so far;

(c) whether in the meantime a scheme for a temporary bus stand was forwarded to the Government by the Coimbatore Municipality through the Collector of Coimbatore District with his approval thereon; and

(d) the action taken thereon?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) ஆம்.

(இ) மூலமதிப்பீட்டுக்கு ரூ. 6.49 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் 1963 டிசம்பரில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. சில வேலையினங்கள் முடிக்கப்பட்டுள்ளன. மூலதிட்டத்தில் சில மாற்றங்கள் செய்யவேண்டியது அவசியமெனக் கருதப்பட்டது. எனவே, பொதுப்பணித் துறை (கட்டிடங்கள் தலைமைப் பொறியாளரிடமிருந்து திருத்தத் திட்டங்கள் பெறப்பட்டன. 1969 ஜூலையில் அவற்றிற்கு அரசு ஒப்புதலளித்தது.

(உ) ஆம்.

(எ) சத்தியமங்கலம் சாலையில் மத்தியப் பேருந்து நிலையம் கட்டுவதற்கான திருத்த மதிப்பீடுகளுக்கு 1969 ஜூலையில் ஒப்புதலளிக்கப்பட்டு அப்பணி விரைவில் முடிவுறும் என்று எதிர்பார்க்கப்படுவதால், தற்காலிகப் பேருந்து நிலையம் ஒன்றைக் கட்டுவதற்கான அவசியம் இல்லை என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

Dr. H. V. HANDE: Sir, the scheme was started in 1963 and the sanction was made but later on due to some reason or other it was postponed. May I know from the Hon. Minister the exact reason why this has been postponed for nearly six years? At least will this Government intervene immediately and see that the long-standing need of the people of the Coimbatore City is properly met? Also, will the Hon. Minister be able to tell us how many moths it would take for the completion of the scheme?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** 1963-ம் ஆண்டிலே 6.49 லட்சத்திற்கு அனுமதி வழங்கியிருக்கிறார்கள். ஒப்பந்தக்காரர் சில வேலைகளை நிறைவேற்றியிருக்கிறார்கள். அந்த நிலையில் இந்தத் திட்டத்திலே சில மாறுதல்களைச் செய்யவேண்டியது அவசியம் என்று அப்பொழுது இருந்தவர்கள் எடுத்த முடிவின் காரணமாக அப்பொழுது இருந்த அரசு 'பழைய அரசு' காலதாமதத்தை ஏற்படுத்தியிருக்கிறது. என்ன குறிப்பிட்ட காரணத்திற்காக அந்த வேலை நிறுத்தப்பட்டது என்ற விவரம் இல்லை. இருந்தாலும் திருத்த மதிப்பீடுகள் 5.8 லட்சத்திற்குப் போடப்பட்டு மீண்டும் பரிந்துரைசெய்து அனுப்பினார்கள். ஒப்பந்தக்காரர் 15.12 சதவிகிதம் அதிகத்துடன் பணிமனைகளை ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். ஏற்கனவே இப்படிக் கேட்கப்பட்டிருந்தது. தலைமைப் பொறியாளரிடம் இதுபற்றிய விளக்கங்களைக் கேட்டபொழுது ஒப்பந்தக்காரர் கேட்பது நியாயமானது என்று எடுத்துச் சொன்னார்கள். எனவே வேலையைத் தொடர்ந்து செய்யலாம் என்று 28—8—1969 தேதியன்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே மிக விரைவாக அந்த வேலைகள் முடிவுறும் என்று எதிர் பார்க்கலாம்.

**திரு. கே. என். குமாரசாமி :** இப்பொழுது கோவையிலே மத்திய பஸ் நிலையம் இடம் குறுகலாக உள்ளதாக இருக்கிறது. எவ்வளவோ பஸ்கள் போய் வர வேண்டியிருக்கிறது. மேலும் அதை விஸ்தரிப்பதற்கான பிளான் ஏதாவது சர்க்காரிடம் இருக்கிறதா, இல்லை இதோடு நிறுத்திக் கொள்ளலாம் என்று முடிவெடுக்கப்பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** நாளுக்கு நாள் தேவைகள் அதிகரிக்க அதிகரிக்க விரிவாக்கமும் இருந்துகொண்டேதான் இருக்கிறது. இந்த இடத்தைப் பொறுத்தவரையிலே இந்தப் பணிகளை விரைவிலே முடிக்கவேண்டுமென்று கட்டளையிடப்பட்டிருக்கிறது.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** தலைவர் அவர்களே, இந்த வேலையை ஆரம்பிப்பதும் பிறகு நிறுத்துவதும் ஆக இருந்து கொண்டு இப்பொழுது * * நின்று கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** * * என்று சொல்ல வேண்டாம்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** தலைவர் அவர்களே, வேறு பாஷையிலே அதைச் சொல்லமுடியாது. அப்படித்தான் அது இருக்கிறது. வேறுவிதமாகச் சொல்லவேண்டுமென்றால் அரைகுறையாக அப்படியே இருக்கிறது என்று சொல்லலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அப்படிச் சொல்லுங்கள்.

** பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.





**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** இப்பொழுது இருக்கின்ற நிலையிலே மத்திய அரசு, மாநில அரசு ஆட்சித் துறைகளிலேலே விலைவாசி ஏறிக்கொண்டே போகிறது. இன்றைக்கு முடிக்கமுடியவில்லை என்றால் இன்றைக்குச் செலவு 10 லட்சம் என்றால் அடுத்த ஆண்டு 15 லட்சம் 20 லட்சம் என்று ஏறிக்கொண்டே போகக்கூடிய நிலைமைதான் இருக்கிறது. எனவே இதை வேகமாக நடத்தி முடிக்க தயவுசெய்து நடவடிக்கை எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் * * பக்கம் என் போனார்கள் என்பது தெரியவில்லை. அங்கே இருக்கின்ற பேருந்து நிலையத்தைப் பொறுத்தவரையில் வேலையை விரைவாக முடிக்க ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்களை * * என்ற வார்த்தையை திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று சொன்னேன். அமைச்சர் அவர்களும் அந்த வார்த்தையைச் சொல்ல வேண்டாம்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** உறுப்பினர் திரும்பப் பெற்றுக் கொண்டதாக அறிவிக்கவில்லை. அவர் திரும்பப் பெற்றுக் கொண்டால் நானும் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 'அரைகுறையாக நிற்கிறது' என்று உறுப்பினர் மாற்றிக் கொண்டார். * * என்ற வார்த்தை எல்லா இடங்களிலும் 'எக்ஸ்பஞ்ச்' செய்யப்படுகிறது.

DR. H. V. HANDE : Sir, this is a long standing grievance. The Hon. Minister may reply without getting excited. I hope he will appreciate the feelings of persons, especially those belonging to Coimbatore district. Whenever I go to Coimbatore, people ask me about this. In view of the fact that this has been going on for a long time, will the Hon. Minister tell us the amount that is going to be sanctioned hereafter, what is the latest figure, what is the revised figure, the number of buses that are likely to be stationed and the details about the proposed bus stand, so that the people of Coimbatore may feel satisfied and relieved?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திலிருந்து வந்திருக்கின்ற உறுப்பினர்களுக்கு அந்தக் கோவை நகரத்தில் இருக்கக்கூடிய பேருந்து நிலையத்தில் எவ்வளவு தூரம் அக்கறை இருக்கிறதோ அந்த அளவுக்கு அக்கறையை அரசாங்கம் கொண்டிருக்கிறது. அவர்களுடைய அக்கறையை நான் பாராட்டுகிறேன். இதிலே கடந்த கால சுணக்கங்கள் நீர்ந்து உடனடியாக வேலைகளை முடிக்க வேண்டுமென்று தனி அதிகாரி நியமிக்கப்பட்டு உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது. 5.8 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருத்தப்பட்ட வேலைகளை நடத்துமாறு

** பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

கட்டளை இடப்பட்டிருக்கிறது. இன்ன காலத்திற்குள் முடிக்க வேண்டும், எவ்வளவு பேருந்து நிற்க வேண்டும் என்பது பற்றிய தகவல் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால் விவரங்கள் தரப் படும். விரைவாக முடிக்க வேண்டுமென்று திட்டமிட்டிருப்பதால் தற்காலிக பேருந்து நிலையத்தையும் அமைக்க வேண்டாமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த ஆண்டு அந்த வேலைகள் முடிவுறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும்.

*Cases booked under Suppression of Immoral Traffic Act,*

*106 Q.—THIRU T. MARTIN: Will the Hon. Minister for Religious Endowments be pleased to state—

(a) when the present Assistant Commissioner of Police Vigilance, City of Madras took charge of his present post; and

(b) the number of cases booked under the Suppression of Immoral Traffic Act from the date of his assuming the charge to 31st October 1969 in the City of Madras?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா:** (அ) 17—6—1968.

(ஆ) 642.

*107 Q.—THIRU T. MARTIN: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state the number of house brothel cases booked by the present Assistant Commissioner of Police (Vigilance) in the City of Madras under the Suppression of Immoral Traffic Act from the date of his assuming charge of his present post till 15th November 1969?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா:** 31.

THIRU T. MARTIN: Some women who were convicted under the Suppression of Immoral Traffic Act are paying periodical visits to the present Assistant Commissioner of Police (Vigilance), along with brokers. May I request the Hon. Minister to state whether under the Suppression of Immoral Traffic Act or under any other Act or Notification or Administrative Order of Government, the Assistant Commissioner of Police (Vigilance) is authorised to give licence for running of brothel houses and if so whether any such licence has been issued so far in Raja Annamalaipuram or Abiramapuram? I want the particulars from the Hon. Minister.

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற கேள்வி எனக்குப் புதிதாக இருக்கிறது. அப்படிப்பட்ட லைசன்சுகள் கொடுத்திருப்பார்கள் என்ற தகவல் இல்லை. அப்படி ஏதாவது இருக்குமானால் உறுப்பினர் அவர்கள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.



**திரு. கே. விநாயகம்:** இப்போது இருக்கிற சட்டப்படி லைசென்ஸ்டு ப்ராத்தல் நடத்தக்கூடாது என்பது அரசாங்கத்திற்கு தெரியுமா? அப்படியானால் இந்த அதிகாரி அப்படி லைசென்ஸ் கொடுத்திருப்பது சரியா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் அப்படி ஒரு தகவல் கிடையாது என்று சொன்ன பிறகும் மறுபடியும் அதே கேள்வியைக் கேட்பது சரியல்ல.

*Death of worker in Manali Oil Refineries*

*108 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Labour be pleased to state:

(a) whether any worker died in Manali Oil Refineries in the month of February 1969 due to the collapse of a wall at the construction site;

(b) the details thereof; and

(c) whether any compensation was paid to the worker's family?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்:** (அ) & (இ) சென்னை எண்ணெய்த் தூய்மை தொழிற்சாலையின் கட்டிடப் பணிகளில் ஒப்பந்தக்காரர் ஒருவரால் கூலியாளராகப் பணிக்கமர்த்தப்பட்டிருந்த திரு. கே. ராமையா என்னும் தொழிலாளி, மரக்கட்டை ஒன்று விழுந்ததன் விளைவாக 13—2—1969 அன்று இறந்தார்.

(உ) தொழிலாளர் ஈட்டுறுதிச் சட்டத்தின் கீழ் இழப்பீட்டுத் தொகை வழங்கும் காரியங்களுக்காக, ஆயுள் ஈட்டுறுதிக்கழகத்திடம் இந்தத் தொழிலாளி ஒப்பந்தக்காரரால் ஈட்டுறுதி செய்யப் பட்டிருந்தார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இறந்துபோன தொழிலாளியைச் சார்ந்தவர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும் பொருட்டு, ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திற்கு விண்ணப்பம் ஒன்றை அனுப்புவதற்கென அவர்களிடமிருந்து அதைப் பெறுவதற்கு ஒப்பந்தக்காரர் முயற்சி செய்துவருகிறார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இறந்துபோன தொழிலாளியைச் சார்ந்தவர்களிடமிருந்து இழப்பீட்டுத்தொகை கேட்டு மனு ஏதும் இன்னும் வரவில்லை.

DR. H. V. HANDE: Most of these workers are illiterate persons. They do not know what is the procedure and how to get the money. In view of the fact that this happened nearly a year ago (11th February 1969) (eleven months to be exact), will this Government intervene and see to it that the red-tape is cut and some sort of ad hoc grant even from the Chief Minister's fund. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி நேரத்தில் யோசனைகள் எல்லாம் சொல்லக்கூடாது.

DR. H. V. HANDE : We have to bring in some facts.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவரங்களைப் பெறுவதற்காக கேள்விகளை கேட்க வேண்டுமே தவிர யோசனைகள், கருத்துக்களை எல்லாம் கூறக்கூடாது.

DR. H. V. HANDE : If necessary we will have a Committee which can consider all the supplementaries that had been so far put. I want the Hon. Speaker to take a little more liberal attitude. What I want is that some compensation may be paid from the fund of Chief Minister . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வியைக் கேளுங்கள்.

DR. H. V. HANDE : Will the Hon. Minister state whether it will be possible to get some grant from the Chief Minister's fund for this purpose so that the worker's family is looked after at least to some extent.

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, இதிலே இழப்பீடு தொகை கொடுப்பதிலே எந்த விதமான சிக்கலும் இல்லை. செத்துப் போன தொழிலாளருடைய வாரிசுதாரர் யார் என்று தெரியவில்லை. விண்ணப்பம் ஏதும் வரவில்லை. ஒப்பந்தக்காரரே வாரிசுதாரரைத் தேடிக்கொண்டிருக்கிறார். உரிய முறையில் மனுச் செய்து கொண்டால் இழப்பீடு தொகை பெற்றுத் தரப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

### அசோகா டிரேடர்ஸ் கம்பெனிக்கு, ஆந்திராவிலிருந்து சென்னைக்கு அரிசி கொண்டுவர அனுமதி

தனி உறுப்பினர் வினா எண் 1.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** மாண்புமிகு உணவு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) 1–1–1968 முதல் 31–12–1969 வரை சென்னை அண்ணாப் பிள்ளை தெருவிலிருக்கும் அசோகா டிரேடர்ஸ் என்னும் கம்பெனிக்கு ஆந்திராவிலிருந்து அரிசி சென்னைக்குக் கொண்டு வர தமிழக அரசு உணவுத் துறையினரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதா ?

(இ) அந்தக் கம்பெனியின் உரிமையாளர் வேறு கம்பெனிகளின் பேரில் அதே போன்ற அனுமதிகள் (லைசென்ஸ்கள்) உணவுத் துறையினரிடமிருந்து பெற்றுள்ளாரா ?

(உ) அந்த சமயத்தில் மனுச் செய்துள்ள மற்றவர்கள் யார் யார் ?

(எ) அவர்களுக்கும், அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளனவா ? அசோகா டிரேடர்ஸ் கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டுள்ள அளவில், [illegible]தில் லைசென்ஸ்கள் வழங்கப்பட்டுள்ளனவா ?

(ஐ) ஆம் எனில் எப்போது ?



**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) ஆந்திர மாநிலத்திலிருந்து, தமிழ் நாட்டுக்கு அரிசி இறக்குமதி செய்ய அண்ணாபிள்ளை தெருவிலிருக்கும் அசோகா டிரேடர்ஸ் என்னும் கம்பெனிக்கு இறக்குமதிக்குத் தடையில்லை என்ற சான்றிதழ் ஒன்றும் வழங்கப்படவில்லை. ஆந்திர மாநிலத்திலிருந்து தமிழ் நாட்டிற்கு 1,000 டன் குருணை அரிசி மட்டும் இறக்குமதி செய்ய அவர்களுக்கு 18—8—1969-ம் தேதியன்று இறக்குமதிக்கு தடையில்லை என்று சான்றிதழ் ஒன்று வழங்கப்பட்டது.

(இ) மனுதாரர்கள் மனுக்களில் குறிப்பிட்டிருந்த பெயர்களிலும், கம்பெனிகளின் பெயர்களிலும், இறக்குமதிக்குத் தடையில்லை என்ற சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. உறுப்பினர் குறிப்பிடும் கம்பெனியின் உரிமையாளர்கள் வேறு பெயர்களில் இச் சான்றிதழ்களுக்கு மனுச் செய்து வாங்கினரா என்ற தகவல் அரசிடம் இல்லை.

(உ) ஆந்திர மாநிலத்திலிருந்து நெல், அரிசி இறக்குமதி செய்ய சுமார் 74 நபர்களும் குருணை அரிசி இறக்குமதி செய்ய சுமார் 74 நபர்களும் மனுச் செய்தார்கள். மனுச் செய்தவர்களின் பெயர்களை அவை முன் வைப்பது தேவையில்லை என்று கருதுகிறேன்.

(எ) ஆந்திர மாநிலத்திலிருந்து நெல், அரிசி இறக்குமதி செய்ய மனுச் செய்த 74 நபர்களுக்கும் மொத்தம் 63,150 டன்கள் இறக்குமதி செய்யத் தடையில்லை என்று சான்றிதழ்கள் கொடுக்கப்பட்டன. ஆந்திர மாநிலத்திலிருந்து குருணை அரிசி இறக்குமதி செய்ய மனுச் செய்த 74 நபர்களில் 71 நபர்களின் மனுக்களுக்கு மொத்தம் 32,245 டன்கள் இறக்குமதி செய்யத் தடையில்லை என்ற சான்றிதழ்கள் கொடுக்கப்பட்டன. மனுச் செய்தவர்களில் 3 நபர்களின் மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. இவர்களுக்கு வியாபாரம் செய்ய உரிமம் உண்டு என்ற சான்றை காட்டாததால் இவர்கள் மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

(ஐ) மேலே குறிக்கப்பட்ட மனுதாரர்கள் தங்கள் மனுக்களை அரசுக்கு 18-7-1969 முதல் 20-12-1969 வரை அனுப்பினர். இறக்குமதி செய்யத் தடையில்லை என்ற சான்றிதழ்கள் அரசால் 18-8-1969 முதல் 3-1-1970 வரை வழங்கப்பட்டன.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது சில தகவல்களைக் கொடுக்கவேண்டிய தேவை இல்லை என்று பதில் அளித்தார்கள். அப்படி தகவல் கொடுப்பதால் அமைதி கெட்டுப்போகக் கூடிய நிலைமை எதுவும் இல்லை என்பதால் இது சம்பந்தப்பட்ட பைல்கள் பூராவையும் இந்த சபையில் வைக்க அரசாங்கம் முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** நான் தகவல்களைக் கொடுக்க மாட்டேன் என்று சொல்லவில்லை. 74 பேர்கள் அரிசிக்கும் 74 பேர்கள் குருணை அரிசிக்கும் மனுச் செய்தார்கள். அந்த 74,

[1970 ஜனவரி 28

74 பேர்களின் பட்டியலை இங்கு வைக்கவேண்டிய அவசியமில்லை என்று கருதித்தான் அப்படி வைக்க வேண்டிய அவசியமில்லை என்று சொன்னேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அந்த அசோகா டிரேடர்ஸ் வெவ்வேறு பெயர்களில் இருக்கிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? ஒரு விசாரணை நடத்தி இந்த 74 பேர்களில் அசோகா டிரேடர்ஸ்க்கு யார் யாருடன் சம்பந்தம் இருக்கிறது என்று அறிவிப்பார்களா? அந்தப் பெயர் குறிப்பை அரசாங்கம் இந்த அவையில் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அசோகா டிரேடர்ஸ் வேறு பெயர்களில் வாங்கினார்கள் என்ற தகவல் அரசுக்கு இல்லை என்பதை விடையில் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அதுபற்றி ரகசியப் போலீசை வைத்து வேண்டிய தகவல்களைச் சேகரிக்க சர்க்கார் முற்படுவார்களா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** உறுப்பினர் அவர்கள் என்ன விரும்புகிறார் என்று புரியவில்லை. நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். 74 பேர்கள் அரிசிக்கு மனு போட்டார்கள். 74 பேர்கள் குருணைக்கு மனு போட்டார்கள். அதில் அசோகா டிரேடர்ஸ் ஒருவர். வேறு கம்பெனிகளின் பெயரில் அவர்கள் வாங்கினார்களா என்பதைத் தெரிந்து கொள்ள அவர்கள் விரும்புகிறார்கள். அதுபற்றி அரசாகத்திற்குத் தகவல் இல்லையென்று தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன். உறுப்பினர் அவர்களுக்கு ஏதாவது தகவல் இருந்தால் அதுபற்றி விசாரிக்கச் சொல்கிறேன்.

**திரு. எம். எஸ். மணி:** இந்த வழக்கு சம்பந்தமான குற்றவாளிக்காக வழக்கறிஞர்களாக இருக்கக் கூடிய இந்த மன்ற உறுப்பினர்கள் யாராவது அவர்களுக்காக ஆஜராகி வழக்கு நடத்தினார்களா? ஆம் எனில் அவர்களின் பெயர்களைக் குறிப்பிட முடியுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** போலீஸாரிடமிருந்து வந்திருக்கிற தகவல்களின்படி ஒரு உறுப்பினர் ஆஜராகியிருக்கிறார் என்று மட்டும் தகவல் வந்திருக்கிறது. தலைவர் அவர்கள் அனுமதித்தால் அன்றி அவர்களின் பெயரை நான் வெளியே சொல்ல விரும்பவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** இந்த மன்றத்தில் உறுப்பினர்களாக உள்ள வழக்கறிஞர்கள் வேறு கேஸ்களுக்குப் போகக் கூடாது என்ற தடை ஏதாவது இருக்கிறதா? வக்கீல்கள் எம்.எல்.ஏ.க்களாக இருப்பதால் அவர்கள் கேஸ்கள் எடுத்து நடத்தக் கூடாது என்ற தடை இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தடை உண்டு என்று நான் சொல்லவில்லை. ஒருவர் ஆஜரானார்கள் என்றுதான் சொன்னேன் [illegible] பெயரைக் கேட்டார்கள். அவர் பெயரை தலைவர் அவர்கள்



1970 சனவரி 28]

அனுமதித்தாலன்றி சொல்வதற்கில்லை என்று சொன்னேன். நாகரீகத்தை யொட்டிய முறையில் சொன்னேன், தலைவர் அவர்கள் அனுமதித்தால் சொல்கிறேன், இல்லாவிட்டால் நிறுத்திக்கொள்கிறேன் என்று.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** நாகரீகத்தைப் பற்றி சொல்கிறார்கள். ஒரு வக்கீல் எம்.எல்.ஏ. ஆக இருப்பதும் அநாகரீகமானதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்கள் அப்படிச் சொல்லவில்லை. தலைவர் அவர்கள் அனுமதித்தால் அன்றி சொல்வதற்கில்லை, நாகரீகத்தையொட்டிய முறையில் என்றுதான் சொன்னார்கள்.

**திரு. ஆலடி அருணா:** சட்டமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில் சட்டமன்றத்தில் ஒரு குற்றச்சாட்டு சொல்வதும் அதே குற்றச்சாட்டின் அடிப்படையில் உள்ள வழக்கில் அவர்கள் குற்றவாளி அல்ல என்று நீதிமன்றத்தில் வாதாடுவதும் அங்கு அவர்கள் குற்றவாளி அல்ல என்று வாதாடிவிட்டு அதே வழக்கின் அடிப்படையில் உள்ள பிரச்னையை இங்கு வந்து குற்றம் என்று சொல்வது முறைதானா?

(பதில் இல்லை)

**திரு. வி. கே. கோதண்டராமன்:** அசோகா டிரேடர்ஸ் கம்பெனியில் உள்ளவர்களுக்கு இந்த 74 பேர்களில் யாராவது அவர்களுக்கு உறவினர்களா? வழங்கப்பட்ட அனுமதி யார் யாருக்கு அதிகமாகக் கொடுக்கப்பட்டுள்ளது? அசோகா டிரேடர்ஸ்க்கு மட்டும் எல்லோரையும்விட அதிகமாகக் கொடுத்திருப்பது உண்மையா? அப்படியானால் அவர்களுக்கு அரிசி எவ்வளவு கொடுக்கப்பட்டது? ப்ரோக்கன் ரைஸ் எவ்வளவு கொடுக்கப்பட்டது?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** உறுப்பினர் அவர்கள் சொல்வது முற்றிலும் தவறான தகவல் என்று கருதுகிறேன். அசோகா டிரேடர்ஸ்க்கு 1000 டன் குருணை அரிசிக்கு மட்டும் கொடுத்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறேன். 2000 கேட்டவர்களுக்கு 2000 கொடுத்திருக்கிறோம். ஆயிரம் கேட்டவர்களுக்கு ஆயிரம் கொடுத்திருக்கிறோம், 500 கேட்டவர்களுக்கு 500 கொடுத்திருக்கிறோம். கேட்ட அளவு எவ்வளவோ அவ்வளவும் கொடுத்திருக்கிறோம் என்பதை தெளிவு மறைவின்றிச் சொல்லியிருக்கிறேன்.

**ஹாஜி. ம. மு. பீர் முஹம்மது:** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தில் பல வழக்கறிஞர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தக் கேள்வியையொட்டிக் கேளுங்கள்.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** குற்றவாளிக்காக இந்த மன்றத்தில் உள்ள ஒரு வழங்கறிஞர். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தக் கேள்வி அசோகா டிரேடர்ஸ் என்னும் கம்பெனிக்கு ஆந்திராவிலிருந்து அரிசி சென்னைக்குக் கொண்டு வர அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பது. அந்தக் கேள்வியையொட்டிக் கேளுங்கள். உறுப்பினர்களாக உள்ள வக்கீல்கள் அங்கு அதற்காக ஆஜராகலாமா என்ற கேள்விக்கு இடமில்லை.

**திரு. கே. விநாயகம் :** அசோகா டிரேடர்ஸ் அவர்களுக்கு கொடுத்துள்ள பர்மிட்டை வைத்துக் கொண்டு குறிப்பிட்ட அளவு ப்ரோக்கன் ரைஸ் கொண்டு வராமல் நெல்லூர் பச்சரிசி ஆயிரம் டன் கொண்டு வந்ததாகவும் பிறகு அதே பெர்மிட்டை வைத்துக் கொண்டு பலமுறை அதைப் பயன்படுத்தி மெனி டைம்ஸ் அரிசியைக் கொண்டு வந்து விநியோகம் செய்துள்ளதாக அரசுக்கு தகவல் இருக்கிறதா? அது உண்மையா இல்லையா? இதுபற்றி அரசாங்கத்திற்கு தெரியுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அசோகா டிரேடர்ஸ்க்கு கொடுத்துள்ள பர்மிட்டை வைத்துக் கொண்டு அவர்கள் பலமுறை அரிசி கொண்டு வந்ததாக குறிப்பிடுகிறார்கள். அப்படி அவர்களுக்குத் தகவல் இருந்தால் அதைப்பற்றி விசாரிப்பதற்கு தயாராயிருக்கிறோம். அதற்கு அவசியமே இல்லை. யார் கேட்டாலும், எவ்வளவிற்கு வேண்டுமானாலும் பெர்மிட் கொடுக்க அரசாங்கம் தயாராயிருக்கிறது. மைசூரிலிருந்து கொண்டு வருவதாகயிருந்தாலும் ஆந்திராவிலிருந்து கொண்டுவருவதாகயிருந்தாலும், கேரளாவிலிருந்து கொண்டுவருவதாக இருந்தாலும், யு.பி. யிலிருந்து கொண்டு வருவதாக இருந்தாலும், யார் கேட்டாலும் கொடுக்கிறோம். அரிசி வியாபாரம் செய்ய உரிமம் வைத்திருக்கிறார்கள் என்று ஒரு சான்று காட்டினால், 'நோ அப்ஜக்ஷன் சர்டிபிக்கேட்' இருந்தால் யாருக்கும் மறுக்கப்படுவதில்லை, யாரையும் தடுக்கவில்லை.

**திரு. இராம. அரங்கண்ணல் :** இந்த ஒரு கம்பெனி பற்றி இவ்வளவு பெரிதாக இங்கு கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது. இது பற்றி சட்டமன்ற உறுப்பினர்கள் யாராவது அரசுக்கு ஏற்கனவே புகார்கள் ஏதாவது அனுப்பினார்களா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** எனக்குத் தகவல் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் நட்சத்திரக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]



## 2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

**(அ) தாராபுரத்தில் கோவைக் கூட்டுறவு நூற்பாலைத் தொழிலாளர் பிரச்னையும் போலீஸ் தடியடிப் பிரயோகமும்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. பூபதி அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதாவது,

"தாராபுரத்திலுள்ள கோவைக் கூட்டுறவு நூற்பாலைத் தொழிலாளர்களின் தொழில் தகராறு பிரச்சினையில் இன்று போலீசார் தலையிட்டு தடியடிப் பிரயோகம் செய்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையை சபையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதம் செய்யவேண்டும்" என்று கேட்டிருக்கிறார்கள்.

இந்நிகழ்ச்சி அரசின் அன்றாட நிர்வாகத்திற்கு உட்பட்டதாகையால், இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

**(ஆ) பட்டுக்கோட்டைத் தாலுகா ஆவணம் கிராமத்தில் நெல் கடத்தல் செய்தவர்களை கைது செய்யவிடாமல் வன்முறையாளர் தடுத்ததும் போலீஸார் துப்பாக்கிச் சூடும்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, திரு. மார்டின் அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதாவது

"ஜனவரி 25-ம் தேதி தஞ்சை மாவட்டத்தில் நெல் கடத்தல் செய்தவர்களை கைது செய்யும் முயற்சியில் ஈடுபட்ட போலீஸ் துறையினரை பட்டுக்கோட்டைத் தாலுகா ஆவணம் கிராமத்தில் வன்முறையாளர்கள் அந்த போலீசாரை பயங்கர ஆயுதங்களோடு சுற்றி வந்துக்கொண்டும், கடமையை ஆற்ற விடாமல் தடுத்தும் குற்றவாளிகளை விடுவித்தும் அதனால் துப்பாக்கிச் சூடு நடத்தி போலீசார் தங்களை கூட்டத்தினரிடமிருந்து விடுவித்துச் சென்றதும் அதன் காரணமாக அப்பகுதியில் ஏற்பட்டுள்ள பரபரப்பான நிலைமைபற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை விவாதிக்க" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இதுவும் அரசின் அன்றாட நிர்வாகத்திற்கு உட்பட்டது. மேலும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு அளிக்க இருக்கிற விடையில் இதுபற்றி விளக்கம் அளிக்க இருக்கிறார்கள் என்ற காரணத்தினால் இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

## 3. அரசினர் தீர்மானம்.

### 41 (3)-வது விதியைத் தளர்த்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, கல்வி அமைச்சர் அவர்கள் ஒரு தீர்மானம் கொண்டுவருவார்கள்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, "சட்டப் பேரவையின் 244-வது விதியின்கீழ், 41-வது விதியின் (3)-வது உட்பிரிவின்படி, அதாவது, ஓரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டு வரக் கூடாது என்பதை இன்று தளர்த்த வேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

### 4. கவன ஈர்ப்பு.

### (அ) மானியம் பெறும் இடைநிலைப் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியரல்லாத பணியாளரின் ஓய்வு வயதை 55 ஆக வரையறுத்ததால் ஏற்பட்டுள்ள இடர்ப்பாடுகள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, டாக்டர் ஹாண்டே அவர்களும், திரு. கருப்பையா அவர்களும் கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டுவருவார்கள்.

DR. H. V. HANDE: Sir, I call the attention of the Hon. Minister for Education and Health to a matter of urgent public importance, namely, the hardship caused to the non-teaching staff employed in aided secondary schools on account of the sudden issue of orders in G.O. Ms. No. 1880, Education, dated 9th December 1969, fixing the age of retirement as 55 without offering any retirement benefits for them.

**திரு. ஆர். கருப்பையா:** தலைவரவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"அரசு மான்யம் பெறும் இடைநிலைப் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியரல்லாத பிற பணியாளர்களுக்கு பதவி ஓய்வு குறித்த பயன் ஏதும் அளிக்காமல் அவர்கள் ஓய்வு பெறும் வயதை 55 ஆக முடிவு செய்து கல்வித் துறையின் 9–12–1969 நாளிட்ட 1880-ஆம் எண்ணுள்ள அரசு ஆணையில் ஆணைகள் உடனடியாகப் பிறப்பித்ததன் விளைவாக அவர்களுக்கு இடர்ப்பாடான நிலை ஏற்பட்டுள்ளது பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியம்", பற்றி.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, கல்வித் துறையைச் சேர்ந்த ஆசிரியர் அல்லாத பிற அதிகாரிகள் அனைவரது ஓய்வு வயதும் 55 ஆகக் குறைக்கப்பட்டுள்ளதைக் கருதி, மானியம் பெறுகிற இடைநிலைப் (செகண்டரி) பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர் அல்லாத பிற பணியாளர்களுடைய ஓய்வு [illegible]ம் 55 ஆக அரசு வரையறுத்து, கல்வித் துறையில் 9-12-1969 [illegible] 1880-ஆம் எண் அரசு ஆணையில் உத்தரவுகளைப் பிறப்பித்தது. இது குறித்து அரசு முறையீடுகளைப் பெற்றுள்ளது. இது பற்றி மறு ஆய்வு செய்வதென இப்போது கருதப்படுகிறது. அவ்வாறு மறு ஆய்வு செய்யும் வரையில், இக்கல்வியாண்டின் இறுதி வரையில் ஆணைகளை நிறுத்தி வைக்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநருக்குக் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.



DR. H. V. HANDE: While we are very grateful to the Minister for keeping the order in abeyance, will he be pleased to give some further elucidation on this subject? What is the exact detail of the Government Order and is there any possibility of the Government considering the non-teaching staff on a par with the non-gazetted officers and giving them all he benefits to which the non-gazetted officers are eligible?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, அரசுத் துறையில் இருக்கும் ஆசிரியர் அல்லாத பிற அதிகாரிகளின் ஓய்வு வயது 55 ஆகக் குறைக்கப்பட்டுள்ளதைக் கருதி, இதற்கும் 55 என்று வரையறுக்கப்பட்டது. ஆனால் அவர்கள், உறுப்பினர் கூறியது போன்ற ஐயப்பாடுகளை எழுப்பியிருக்கிறார்கள். அதைப் பரிசீலிக்குந்தான், உத்தரவை அமலாக்க வேண்டாமென்றும், இந்தக் கல்வி இறுதியாண்டு வரையிலும் அந்த நிலையே நீடிக்கப்படும் என்றும், பரிசீலித்து முடிவு செய்யலாம் என்றும் இருக்கிறது.

**திரு. ஆர். கருப்பையா:** தலைவரவர்களே, இந்த ஆசிரியர் அல்லாத ஊழியர்களான காவலர்கள், பெருக்குநர்கள் போன்றவர்களுக்கு ஓய்வு ஊதியம் கொடுக்கப்படவில்லை. நகராட்சி, மாவட்ட உயர்நிலைப் பள்ளிகளில் இதுபோன்ற ஓய்வு ஊதியம் தரப்படுகிறது. எனவே, ஓய்வு பெறும் ஊழியர்களுக்கு தனியார்துறை பள்ளியாயினும் மற்ற பள்ளிகளாயினும் ஓய்வு கால ஊதியம் கொடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, நான் முதலிலே கூறியபடி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியிருக்கிற பிரச்சினைகளை அவர்களும் எழுப்பியிருக்கிறார்கள். அதைப் பரிசீலித்து முடிவு செய்யத்தான் மறு ஆய்வு செய்யும் வரையில், இக்கல்வியாண்டின் இறுதி வரையில் ஆணைகளை நிறுத்தி வைக்குமாறு உத்தரவிடப்பட்டிருக்கிறது.

### (ஆ) மேலூர் வடக்கு, நத்தம் ஒன்றியங்களில் பருவமழை இன்மையும், வரித் தள்ளுபடியும், கடன் வசூல் ஒத்திவைப்பும்.

**திரு. பெ. மலைச்சாமி:** தலைவரவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"மேலூர் தொகுதி, நத்தம், மேலூர் வடக்கு ஒன்றியங்களில் பருவ மழையின்மையால் வறண்டு, விளைச்சல் ஏதுமின்றி பாதிக்கப் பட்டுள்ளதால், இப்பகுதி மக்களுக்கு உணவு வழங்குவதற்கும், அனைத்து வரிகளைத் தள்ளுபடி செய்யவும், எல்லாக் கடன்களை வசூலிப்பதை ஒத்திப் போடவும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசரப்பொது முக்கியமான காரியம்".

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவரவர்களே, மதுரை மாவட்டத்தில் வறட்சியால் பீடிக்கப்பட்ட வட்டங்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ள வட்டங்களில் மேலூர் வட்டம் ஒன்றல்ல. இருந்த போதிலும், மேலூர் வடக்கு, மேலூர் தெற்கு ஊராட்சி ஒன்றியங் களில் குடிநீர் வழங்குதல், பெரும் பாசனப் பணிகள் போன்ற துயர் தணிப்புப் பணிகளுக்கு வறட்சி உதவியின்கீழ் ரூ. 34,000 வகை செய்யப்பட்டுள்ளது. 1970-ஆம் ஆண்டின் தொடக்கப் பகுதி வரையில் அரசு நிலுவைகள் வசூலிக்கும் பணியை "டையப"ச் செயல்படுத்தும் கொள்கை பின்பற்றப்பட்டு வந்ததோடு, இடர்ப் பாடான தனிப்பட்ட நேர்வுகளில் மாவட்ட ஆட்சித் தலைவர் இது குறித்துத் தமது விருப்பம் போல் செயல்படலாமென்றும் அவருக்கு அதிகாரமளிக்கப்பட்டது.

பெரும்பாலும் மாநிலத்தின் எல்லாப் பகுதிகளிலும் பருவநிலை மேம்பாடடைந்து, அக்டோபர், டிசம்பர் திங்களில் நல்ல மழை பெய்ததன் காரணமாக, தள்ளிப்போடப்பட்ட நிலுவைகள் வசூலிப்புச் சலுகையை நிறுத்த வேண்டுமென்று வருவாய்த் துறை வாரியம் அரசிற்குப் பரிந்துரைத்தது. இது குறித்துத் திருத்த ஆணைகள் பிறப்பிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டது. தற்போதைய சுருங்கிய நிதி நிலையையொட்டி, இந்த நிலைமையை அரசு உன்னிப்பாக ஆராய்ந்த பின்னர், வறட்சியின் விளைவாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அரசு நிலுவைகள் அனைத்தையும் வசூலிக்குமாறு 1970 ஜனவரி, இரண்டாவது வாரத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

எனினும், உண்மையும் இடர்பாடும் உள்ள நேர்வுகளில் அரசு நிலுவைகள் வசூலிக்கப்படுவதை ஒத்திப்போட வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர் விரும்பினால், அவ்வாறு அவர் செய்வதை இவ்வாணைகள் தடுக்கா, வாரியத்தின் நிலை ஆணைகளையொட்டி, பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிலவரித் தள்ளுபடி அளிப்பதை வருவாய்த்துறை அலுவலர்கள் உறுதியாக ஆய்வு செய்வர்.

### (இ) திண்டுக்கல் அரிசி ஆலை அதிபர்கள் அரசு அளித்த நெல்லை அரைத்து வெளியாருக்கு அனுமதியின்றி விற்றதும் அதனால் அரசுக்கு ஏற்பட்ட நட்டமும்.

THIRU N. S. V. CHITHAN : Sir, I call the attention of the Hon. Minister for Food and Commercial Taxes to a matter of urgent public importance, namely, the recent unauthorised sales





by the rice millers of rice hulled from the paddy delivered by the Government to them who acted as procuring agents in Dindigul in Madurai District without delivering the same to the Government and the consequent loss to the Government.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, மாவட்ட ஆட்சிமன்றத் தலைவரிடத்திலிருந்து முழுத் தகவலும் வரவில்லை. வழக்கு விசாரணையில் இருக்கிறது. எனவே, இதுகுறித்து மேற் கொண்டு எந்த விவரத்தையும் பொதுமக்களின் நலனைக் கருதி வெளியிடுவதற்கில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானமானது, தஞ்சை மாவட்டத்திலே உள்ள அரசாங்கத்திற்குச் சொந்தமான நெல்லை அரிசி ஆலை அதிபர் களுக்குக் கொடுத்து அரிசி வாங்குவதுபற்றியது. இது திண்டுக் கல்லில் மட்டும் அல்ல மதுரை மாவட்டத்திலும் மற்றும் தமிழகம் எங்கும் அரிசி ஆலை சொந்தக்காரர்கள் அரசாங்கத்திற்குத் தர வேண்டிய அரிசியை வெளியிலே விற்பனை செய்து விட்டார்கள். இதன் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா? என்ன நட வடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, மற்ற மாவட்டங்களிலிருக்கும் மில் சொந்தக்காரர்களிடம் பணம் வசூலா காவிட்டால் அது குறித்து மாவட்ட ஆட்சி மன்ற தலைவருக்கு ஆணை பிறப்பித்திருக்கிறது. இந்த வழக்கு சம்பந்தமாக புலன் விசாரணைப் பூரணமாக முடியவில்லை என்பதால் சொல்ல முடிய வில்லை.

### (ஈ) எஸ்.ஐ.இ.டி. கல்லூரியில் புகுமுக வகுப்பு மாணவியரிட மிருந்து தவணைக் கட்டணம் வசூலித்தல்.

DR. H. V. HANDE : I call the attention of the Hon. Minister for Education and Health to a matter of urgent public importance, namely, the rigid attitude taken by the authorities of the S.I.E.T. College in collecting the quarterly fee from P.U.C. students against the Government Order. This has created a feeling of frustration among the students of P.U.C. The students cannot concentrate on their studies without any distraction as there is every possibility of the students losing term days consequent to their names being struck off from the rolls. The students therefore will be prevented from appearing for the examination.

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIAN : Sir, in May 1969, Government issued orders extending free education to all P.U.C. students in the State who were natives of Tamil Nadu

or domiciled therein. Government ordered that fee compensation would be paid to colleges at the actual rate of fee in the year 1967–68 or Rs. 80 per term whichever is less.

The S.I.E.T. College authorities increased the fee for P.U.C. students in their college during this year (1969-70) to Rs. 80 though the fee levied by them in 1967–68 was Rs. 70 and in the year 1968–69, Rs. 76. Fees at the rate of Rs. 80 per term per student were collected from the students by the college authorities during the first and second terms. The college authorities claimed that they should be reimbursed at the rate of Rs. 80 per student per term by the Government. They also claimed protection under Article 30 of the Constitution. They desired that the managements which did not choose to be compensated at arbitrary rates fixed by the Government should be exempted from the operation of the new scheme of free education. They also questioned the validity of the Government orders regarding the reservation of seats for students belonging to Scheduled Castes and Scheduled Tribes and Backward Classes.

The college authorities were informed that the scheme of free education in P.U.C. was introduced in the interests of the public at large and should not be rescinded by individual managements at their discretion.

The college authorities were also informed that the system of payment of compensation at the rate in force in 1967–68 or Rs. 80 whichever is less, cannot be considered to be arbitrary and that this order was issued after taking fully into consideration the fees that were charged in 1967–68 in all colleges in the State. The action of the management in increasing the fee to Rs. 80 per term is clearly untenable.

The contention of the College authorities that they would be losing, is clearly incorrect, since when Government pays grant to the college under the Grant-in-aid Code on the basis of 2/3rds of the net deficit, the "income" of the college is calculated only at the rate of Rs. 30 per student per term, while fee compensation is given to them at Rs. 70 per student per term.

The correspondent of the S.I.E.T. College was requested to refund the fees for the two terms already collected from the students and then claim fee compensation from the Director after giving full details of the students who are eligible to get this concession. Only on 19th January 1970, the College authorities sent a letter to the Director of College Education with an application for sanction of compensation grant at the rate of Rs. 80 per term. They also refused to refund the amount to students until the full compensation at the rate of Rs. 80 was paid to them.

A deputation of students from the College came and met the Chief Minister, Education Minister and the Secretary, Education Department. They were informed that the College authorities



were not entitled to claim fee from the students for the third term and that there is no obligation on their part to pay the same. They were also requested not to go on strike but to attend classes peacefully. They were also informed that their interests with regard to appearing for the P.U.C. Examination would be safeguarded. The University authorities have also been kept informed of the position and the Government have requested them to see that the students do not suffer on account of the intransigent attitude of the college authorities in this matter and that they are allowed to sit for the examination.

This is the only College which is not willing to conform to the rules and regulations of the Government and to implement the free education policy of the Government.

There were also complaints that they had increased the special fees during the year. This has been referred to the University authorities for whatever action they consider necessary.

**DR. H. V. HANDE:** Sir, on the one hand the Government plead their helplessness in not being able to exercise control over that college because the rules do not permit it while on the other hand during the discussion on the adjournment motion—raised on the matter—held recently, the Government had given an indication to the students that they need not pay tuition fees. 1n view of the incapacity of the Government to control the college and the helplessness of the students, what is the exact *modus operandi* that the Government are going to adopt to see that their orders are obeyed? Otherwise, there is every possibility of the students not getting the term days if they do not pay the fees. If they did not get the term days they would not be allowed to sit for the examination. So, will the Government instruct the University which is also an independent body to take up this matter? I do not know how the Government are going tc cut this Gordion Knot. I want to know whether the University will frame rules to waive the term days. Will the Hon. Minister clearly indicate the Government's stand in regard to this matter so that the students will not be victimised?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இப்பொழுது மாணவியர்கள் கல்லூரிகளுக்குச் சென்று வந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு டெர்ம் டேஸ் பாதிக்கப்படும் என்ற நிலை இப்பொழுது ஏற்படவில்லை. அதற்குப் பிறகு அரசாங்கம் எந்த அளவுக்கு அதிகாரத்தை உபயோகப்படுத்தவேண்டுமோ அதுபற்றி யோசிக்கும். அதில் முழுவதிலும் அரசாங்கம் தலையிடுவதற்கான நிலை இல்லை. பல்கலைக்கழகம் தலையிட வேண்டிய பிரச்னைகள் இருக்கின்றன. அரசாங்கமும், பல்கலைக்கழகமும் சேர்ந்து இருக்கிற அதிகாரங்களை பயன்படுத்தி, எந்த அளவுக்கு மாணவியர்களின் நலன்களைப் பாதுகாக்கவேண்டுமோ அந்த அளவுக்கு பாதுகாக்க முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறோம். பல்கலைக்கழகத்துடன்

இருக்கும், நடைமுறையில் இது உதவியாக இருப்பதற்கில்லை. இதனால் வேலையிலே மிகுந்த சிரமம் ஏற்பட்டு வருகிறது. நிரந்தரமாக இல்லாமல் ஏதோ ஒரு நிலையில் இருந்தபோது வேலையிலிருந்து அப்புறப்படுத்துகிறார்கள் என்று இப்படிப்பட்ட நிலைமை தோன்றியிருப்பது மிகவும் வருந்தத்தக்க வேண்டிய விஷயம்.

சிக்கனம் என்ற பெயரால் கீழே வேலை செய்யக்கூடிய ஊழியர்களை வேலையிலிருந்து நிறுத்திவிட்டு, மேலே ஏராளமாக ரூ. 1,000 சம்பளம் உள்ள அதிகாரிகளை வைத்துக்கொள்ளக்கூடிய ஏற்பாடு இன்றைக்கு வேகமாக நடந்துவருகிறது. ஏற்கனவே சென்ற வருஷம் இது போல் ஏற்பட்டு, மறைந்த மாண்புமிகு திரு. கோவிந்தசாமி அவர்கள் அமைச்சராக இருந்த காலத்தில் அவர்களிடம் முறையிட்டு, அவர்களும் அதைக் கவனித்து உடனடியாக ஸ்டே ஆர்டர் போட்டு நிறுத்தி வைத்திருந்தார்கள். அதற்குப் பிற்பாடு மறுபடியும் 'பழைய குருடி கதவைத் திறடி' என்ற முறையில் 300 பேர்கள் வேலையிலிருந்து நீக்கம் செய்யப்பட்டிருக்கக்கூடிய அநியாயம் நடந்திருக்கிறது. ஏதோ ஒரு சிலரை மட்டும் மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொண்டிருப்பதாக எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. சமீபத்தில் பல இலாக்காக்களில் 'தாஷ்வெல்', 'வொர்க் சார்ஜ்டு', இப்படிப்பட்ட பல ஊழியர்களை வேலையிலிருந்து நீக்கம் செய்து வருவது தொடர்ச்சியாக இருந்துகொண்டு வருகிறது. ரெவின்யூ இலாகாவில் கூட, கண்டிரோல் நீக்கத்திற்குப் பிற்பாடு யாரும் பாதிக்கப்படமாட்டார்கள் என்று உணவு அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருந்தும், பல இடங்களில் வேலை நீக்கம் ஏற்பட்டிருக்கிறது என்ற புகார்கள் வந்த வண்ணம் இருக்கின்றன. ஆகவே, அரசாங்கம் கொள்கை ரீதியிலே ஒரு முடிவு செய்ய வேண்டும். அடித்தளத்தில் இருக்கக்கூடிய, கீழ் இருக்கும் ஊழியர்களை வேலையிலிருந்து அப்புறப்படுத்துவது இல்லை என்ற கொள்கை ரீதியான, முற்போக்கான, மனிதாபிமான ரீதியான ஒரு முடிவுக்கு அரசு வரவேண்டும் என்று நான் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டு, அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் அனிமல் ஹஸ்பெண்டரியைப் பற்றிச் சொல்லியிருப்பதால் நான் அதற்கு ஒரு சிறு விளக்கம் சொல்லிவிட விரும்புகிறேன். கால்நடை இலாகாவைப் பொறுத்த மட்டில், சீர்திருத்தம் செய்யவேண்டும், மாற்றி அமைக்க வேண்டும் என்று அரசு முடிவெடுத்தது. அதன் பிரகாரம் தமிழகத்தை 5 ரீஜன்களாகப் பிரித்து, டெப்யூடி டைரக்டர்கள் 5 பேர்கள் இருக்கவேண்டும் என்று மாற்றி அமைத்துப் போட்டிருக்கிறோம். டெப்யூடி டைரக்டருக்குக் கீழே ஒவ்வொரு ரெவின்யு டிவிஷன் எல்லையிலே ஒரு டி.வி.ஓ. கிரேடு போஸ்டு. அசிஸ்டெண்டு டைரக்டர் என்று பெயர் வைத்து, அவர்களை அங்கே வைத்திருக்கிறோம். அப்படி 45 ரெவின்யூ டிவிஷன்களில் 45 டிவிஷனல் அசிஸ்டெண்டு டைரக்டர்கள் கொடுத்திருக்கிறோம்.



அதன் கீழே ஒவ்வொரு பஞ்சாயத்து ஊராட்சி மன்றத்திற்கும் ஒரு மருத்துவமனை இருக்கவேண்டும். 374 ஊராட்சி மன்றங்களிலும் மருத்துவ மனைகள் இருக்கவேண்டும் என்பதற்காகப் புதுத் திட்டத்தைப் போட்டு, விடப்பட்ட 44 இடங்களில் புதிதாக கட்டடம் கட்டவேண்டும் என்று இந்த ஆண்டிலே அதற்கான உத்தரவையும் பிறப்பித்துவிட்டோம். கீ வில்லேஜ் செண்டர்களிலே, மருத்துவமனை சேர்க்கப்படும், மூடப்படமாட்டாது. டாக்டர்கள் இதுவரையில், மாடுகளை மருத்துவமனைக்கு ஓட்டி வந்தால்தான் வைத்தியம் செய்வார்கள். இல்லாவிட்டால், தொத்து வியாதியாக இருந்தால், அங்கே போவார்கள். அல்லது டாக்டர்கள் பணம் கொடுத்தால்தான் போவார்கள். அப்படிப்பட்ட நிலைமைகளை இப்பொழுது மாற்றி அமைத்து, ஒவ்வொரு கிராமத்தின் எண்ணிக்கைக்கும் தக்கவாறு, அவற்றை சப்-செண்டர்களாகப் பிரித்து, ஒவ்வொரு சப்-செண்டருக்கும், ஒரு லைவ் ஸ்டாக் அசிஸ்டெண்ட் என்று போட்டு, ஒவ்வொரு லைவ் ஸ்டாக் அசிஸ்டெண்டுக்கும் ஒரு குறிப்பிட்ட அளவில், 6 அல்லது 7 கிராமங்கள் பார்க்க வேண்டும் என்று பிரித்து வைத்திருக்கிறோம். அவர்களால் அந்தக் கிராமங்களில் இருக்கும் கால்நடைகளைச் சொஸ்தப்படுத்த முடியவில்லை என்றால், டாக்டர்களுக்கு ரெக்விசிஷன் லெட்டர் அனுப்பவேண்டும். அவர்கள் மோட்டார் சைகிள் அல்லது ஸ்கூட்டர் வைத்துக் கொண்டு, மாடுகள் இருக்கும் இடங்களுக்குச் சென்று வைத்தியம் செய்ய வேண்டும். இப்படி மாற்றி அமைத்ததால் சிலருக்கு வேலை இழப்பு ஏற்பட்டிருக்கிறது. அதை நான் மூடி மறைக்கவில்லை. ஆனாலும், அப்படி இழப்பு ஏற்பட்டிருக்கிறவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க, சில பேர்களை வேறு வகையில் வேலைக்கு எடுத்திருக்கிறோம். மீதம் இருக்கிறவர்களை விரைவில் எடுக்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

THIRU K. VINAYAKAM: Yesterday while talking on the Supplementary Demands, the Hon. Finance Minister made some remarks about the Fifth Finance Commission in so far as its report related to the finances of this State. We are all interested in the finances of our State. There is no question of Government or Opposition in that. We are all interested in augmenting the coffers of our State. What I want is this. Will the Hon. Finance Minister explain to this House what was the formula adopted by the Fifth Finance Commission in regard to our State, what was the formula adopted by it in regard to other States, how much were we expecting as our share of Central finances, what is the new formula which has been adopted by the Fifth Finance Commission and how is it that Tamil Nadu got so low when compared to other States (the Hon. Minister was comparing how other States like Gujarat, Maharashtra and Orissa got more). If the Hon. Minister were to explain all these points, if we are armed with all facts and arguments, I can explain to the people that the Finance Commission has done only this much to this State, etc. How did othes States mtnage to get more fsom the

தக்க தொடர்புகள் வைத்துக்கொண்டு வருகிறோம். மாணவியர்கள் பாதிக்கப்படாத அளவுக்கும், அவர்கள் பரீட்சைக்கு உட்காருவதற்கு எந்த அளவுக்கும் கேடு ஏற்படாமலும் பார்த்துக்கொள்ளும் முழுப் பொறுப்பையும், அரசாங்கமும், பல்கலைக்கழகமும் எடுத்துக் கொண்டிருக்கின்றன.

DR. H. V. HANDE : Sir, if they do not pay the fees listening to the advice of the Government, they will immediately mark them 'as absent' and what is the solution to the problem?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இப்படிப்பட்ட பிரச்னைகளை பல்கலைக்கழகத்திற்கு தெரிவித்து, பல்கலைக்கழகம் எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டுவருகிறது. மாணவியர்கள் பாதிக்கப்படாத அளவுக்கு என்ன ஏற்பாடுகள் செய்யவேண்டுமோ அவற்றை முழுவதும் செய்வதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள் இப்பொழுது மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையை அவைக்கு அளிப்பார்.

THIRU K. VINAYAKAM : Sir on a point of information. In view of the seriousness of the problem, I request the Chair to allow one-hour discussion on the subject. The students are in trouble. To-day is the last day of our present sitting

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதிலே விளக்கம் பெறுவதற்கு இப்பொழுது நேரம் இல்லை. ஒன் ஹவர் டிஸ்கஷன் வேண்டுமென்றால் நீங்கள் எழுதிக்கொடுக்க வேண்டும். கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீது அமைச்சர்கள் அளிக்கின்ற அறிக்கைகளை ஒட்டி எந்தவிதமான விவாதமும் கூடாது என்று தெளிவாக நமது விதிமுறைகள் கூறுகின்றன. நீங்கள் ஒன் ஹவர் டிஸ்கஷன் வேண்டுமென்றால் தனியாக எழுதிக் கொடுக்கவேண்டும். தனி நபர் தீர்மானம் தரவேண்டும்.

### 5. அறிக்கை அளித்தல்

#### 5. துணை அற்றோர், சுற்றி அலைபவர் குறித்து மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, மதிப்பீட்டுக் குழுவின் சார்பிலே துணை அற்றோர், சுற்றி அலைபவர் ஆகியோரைப்பற்றிய சிக்கல்கள் குறித்த அறிக்கையை இந்த அவையிலே நான் வைக்கிறேன்.



### 6. அரசினர் மசோதாக்கள்.

(அ) தமிழ் நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதா சட்டப் பேரவை மசோதா எண் 3/1970).

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே,
"தமிழ் நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதா* (சட்டப் பேரவை மசோதா எண் 3/1970) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படவேண்டும்"
என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

இதோடு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். நேற்று இதுபற்றி விரிவான விவாதம் நடத்தியிருக்கிறோம். ஆகவே, ஏதாவது ஒன்றிரண்டு விஷயம் விட்டுப்போயிருந்தால் மட்டும், அதை எடுத்துச் சொல்லிவிட்டு, நாம் கவர்னர் அவர்களுடைய உரையின் மீது விவாதத்தைத் தொடரலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நேற்றுத் தான் நாம் இதுபற்றி விரிவாகப் பேசியிருக்கிறோம். ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தைத் தொடர்ந்து நடத்த இருக்கிறோம். ஆகவே, இதில் யாரும் பேசத் தேவையில்லை என்று கருதுகிறேன். ஒரு உறுப்பினரைப் பேச விட்டால், எல்லோரும் பேசவேண்டும் என்று சொல்வார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நாளைக்கு சபைக் கூட்டத்தை எக்ஸ்டெண்டு செய்யலாமே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பிஸினஸ் அட்வைசரி கமிட்டி அதைப்பற்றி முடிவு செய்யவேண்டும். பேரவைத் தலைவருக்கு அதுபற்றி ஒன்றும் தடையில்லை.

**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, நான் எப்பொழுதும் அதிக நேரம் எடுத்துக்கொள்ளும் வழக்கம் இல்லை. சொல்லவேண்டிய சிலவற்றை மட்டும் சொல்லிவிடுகிறேன். மிகவும் முக்கியமாக தமிழ் நாட்டிலே மூன்று கால்நடை வளர்ப்புப் ப்ராஜெக்ட்டுகள், ஸ்பெஷல் ப்ராஜெக்ட்டுகள், செங்கற்பட்டில் ஒன்றும், மதுரையில் ஒன்றும், கோவையில் ஒன்றுமாக இருந்து வருகின்றன. அவற்றிலே காலைப் பணியாளர்களாக வேலை செய்யக் கூடிய 300 ஊழியர்களைத் திடீரென்று 24 மணி நேர நோட்டீஸ் கொடுத்து, அவர்கள் வேலையிலிருந்து நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இது ரொம்பவும் விபரீதமான ஏற்பாடு. இந்தக் காலைப் பணியாளர்கள் மக்கள் கொண்டுவரக்கூடிய காளைகளைப் பிடித்து நிறுத்தி வைத்துக்கொண்டால்தான், ஸ்டாக் அசிஸ்டெண்டுகளாக இருப்பவர்கள் வேலை செய்ய முடியும். இந்தக் காளைப் பணியாளர்கள் இல்லாமல் ஸ்டாக் அசிஸ்டெண்டுகள் தங்களுடைய வேலைகளைக் கவனிக்க வாய்ப்பே இருக்காது, இது மிகவும் சிரமமாக

*27—1—1970-ம் தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

same Finance Commission? I think the House may be aware that there is no estrangement between this State and the Centre. It is all friendly. When such is the Case, what was the reason for our not getting what we deserved? Was not our case properly put up to the Finance Commission? Are we suffering on that account? How do they justify in allowing extra amount to other States and not to us? I want the Hon. Minister to answer all these questions so that we may go to the country. We may put up the case of our State; even though we may differ from Government on certain political matters, we are interested in the coffers of our State. Let the Finance Minister arms us with sufficient facts and arguments. I cannot simply go to the people and say 'I join the D.M.K. party'. That is not proper. That is a woman's argument. Let us know the facts and then we can strengthen the hands of the Government by going and telling the people that the Centre has not been fair to us. I am serious about this. Let us be armed with facts. The Centre had been over-kind and zealous in helping this Government before. Why should they drift back now? How is it we have been treated like this? Why has not the Finance Commission been fair to us? I want all the facts so that I can go and tell the people how the D.M.K. Government had suffered at the hands of the Finance Commission. They were getting better treatment before. Why are they not getting that help now? I expect the Hon. Finance Minister to touch upon all these points while winding up the debate.

* **திரு. எம். சுரேந்திரன்:** தலைவர் அவர்களே, இந்த உப மானியக் கோரிக்கை மீது ஒரே ஒரு கருத்தை மட்டும் வற்புறுத்தலாம் என்று முன் வந்திருக்கிறேன். சமீபத்திலே எடுத்துவிட்ட, உணவுக் கட்டுப்பாட்டைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். உணவுக் கட்டுப்பாட்டை நீக்கியது பலராலும் பாராட்டப் பட்டிருக்கிறது. ஆனால், அதனுடைய விளைவுகளைப் பற்றிச் சிலபேர் சந்தேகம் தெரிவித்துக் கொண்டே இருக்கிறார்கள். எப்படி இருந்தபோதிலும், உணவுப் பொருள்கள் வியாபாரத்தை அரசாங்கமே எடுத்து நடத்த வேண்டும் என்ற நிலை பரவலாக எழுந்திருக்கிறது. அப்படி நிலைமை ஏற்பட்டிருக்கும் போது, இம்மாதிரியான காரியம் செய்திருப்பது ஒரு நல்லதா என்கிற சந்தேகம் இருந்துக் கொண்டே இருக்கிறது. அது மட்டுமல்லாமல், உணவுக் கட்டுப்பாட்டை நீக்கியதற்குக் காரணம், உணவு உற்பத்தியிலே, விளைச்சல் அதிகம் ஏற்பட்டிருக்கிறது, உணவுப் பொருள்கள் உற்பத்தி பெருகியிருக்கிறது என்பது காரணமாகச் சொல்லப்படுகிறது. உணவு உற்பத்தி பெருகியிருக்கிறது என்பது உண்மைதான், உணவு உற்பத்தியில் அரசாங்கம் அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறது அதுவும் உண்மைதான். ஆனால், இந்த உணவுப் பெருகத்தின் பயன் சாதாரண ஏழை ஜனங்களுக்கு, எளிய விலையில் பொருள்கள் கிடைக்க வழி வகைகளைக் காண வேண்டும் என்று மறைந்து போன மாண்புமிகு முதல் அமைச்சர்



ஒரு படி அரிசித் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். எளிய வருமானம் உள்ளவர்களுக்கு ராச்சியம் பூராவிலும் அப்படிக் கொடுக்க வேண்டும் என்பதுதான் அவர்களுடைய நோக்கமாக இருந்தது. நீதி வழங்குவது வசதியுள்ளவர்களுக்கு மட்டுமின்றி, வசதியற்றவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். வசதியற்றவர்களுக்கு நீதி வழங்குவதில், ஏழை மக்களுக்குப் பக்க பலமாக இருக்க வேண்டும் என்றுதான் அந்தக் காரியம் செய்யப்பட்டது. அப்பொழுது ராச்சியம் பூராவிற்கும் பரவலாக உணவு மலிவு விலையில் கொடுக்க உணவு உற்பத்தி பெருக்கம் போதாமல் இருந்ததால் செய்ய முடியவில்லை. உணவு உற்பத்தி அதிகரித்த பிறகு மற்ற இடங்களுக்கும் கொண்டு வரப்படும் என்று சொல்லப்பட்டது. அப்பொழுது கோவைக்கும், சென்னைக்கும் மட்டும் கொண்டு வரப்பட்டது. இப்பொழுது 200 ரூபாய் வருமானம் உள்ளவர்களுககு மட்டும் இம்மாதிரியான திட்டம் இருந்து வருகிறது என்று அறிவிக்கப் பட்டிருக்கிறது. ஆனால், இன்றைக்கு உணவு உற்பத்தி பெருகியிருப்பதால், அந்த முறையை எல்லோருக்கும் ஒரு படி அரிசி என்ற வகையில் கொடுக்காமல், வருமானம் குறைவாக உள்ளவர்களுக்கு மட்டும் என்றும், அந்த இரண்டு இடங்களில் மட்டும் என்று செய்திருப்பது எந்த நியாயத்தைச் சேர்ந்தது என்பதைப் புரிந்துக் கொள்ளவே முடியவில்லை. வருமானம் குறைவாக உள்ளவர்கள் ராச்சியம் பூராவிலும் இருக்கிறார்கள். அப்படிக் குறைவான வருமானம் உள்ளவர்களுக்கெல்லாம் இந்தப் பலன் கிடைக்கச் செய்வதுதான் நீதி. நியாயமான காரியம். குறிப்பிட்ட இரண்டு இடங்களில் மட்டும் என்பதை மாற்றி, அனைவருக்கும் என்று இருக்க வேண்டும். அந்தக் குறிப்பிட்ட இடங்களிலும் எல்லோருக்கும் என்று முன்பு இருந்தது. இப்பொழுது 200-க்குக் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு என்று செய்திருப்பது சரியானதோ, நியாயமானதோ இல்லை. ஆகவே, உணவுப் பெருக்கத்தின் பலனை அனைவருக்கும் கிடைக்கச் செய்வதுதான் சரியானதாக இருக்க முடியும். கட்டுப்பாடுகளை ஒழுங்குபடுத்தவேண்டும். ஏற்பட்டிருக்கும் பலன்களைச் சாதாரண ஜனங்களுக்கும் எட்டச் செய்வது தான் சரியானது. நிலப் பிரபுக்களும், வியாபாரிகளும் இதனால் மகிழ்ச்சி அடைவார்கள். ஆனால். சாதாரண மக்கள் மகிழ்ச்சி அடைய மாட்டார்கள். எல்லையில் இருக்கும் கடத்தல் தடுக்கப் படாத வரையில் திட்டம் வெற்றி பெறுவது கஷ்டம், எல்லையிலே கடத்தல் ஏஜன்சி மூலம் செய்யப் படுகிறது. இது அரசுக்கு நன்கு தெரிந்திருக்கும். போலீஸ் படையையும், பாதுகாப்பையும் செய்தாலும் சிலபேர்கள் செல்வாக்குப் பெற்றவர்கள் காரியங்களைச் செய்துக் கொண்டுதான் இருக்கிறார்கள் என்பது தகவல். எல்லை ஊர்களில் சௌகிகள் வைத்திருப்பது அரசுக்குத் தெரியும் என்னுடைய தொகுதிக்கு அருகாமையில். மைசூர் எல்லையில். ஐந்து மைலுக்கு என்று முன்பு இருந்தது, இப்பொழுது 10 மைலுக்குத் தள்ளி வைக்கலாம் என்று இருக்கிறது. பத்து மைலுக்குத்

தள்ளிப் போடுவதால், உள்ளூரிலுள்ளவர்கள் சந்தைக்குப் போகவும் தடை இருக்கிறது அப்படிப் போவதானால், பணம் வசூலிக்கப்படுகிறது என்று கேள்விப்படுகிறேன்.

ஆகவே, இந்த அரசு இந்த முறைகளையெல்லாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும். இப்படி ஒரு காரியம் செய்துவிட்டோம் என்பது மட்டுமல்ல. மீண்டும் அதைப் பரிசீலிக்கவேண்டியிருந்தால், அதை மாற்ற வேண்டியிருந்தால் நிச்சயமாக அதை மாற்ற வேண்டும். எது நியாயமாகவும், நீதியாகவும் செய்யப்பட வேண்டுமோ, அது நீதியாகவும், நியாயமாகவும் செய்யப்படவேண்டும். இப்பொழுது குறைந்த வருமானம் 200 ரூபாய் என்றிருக்கிறது. வேண்டுமானால் குறைந்த வருமானம் 200 ரூபாய் உள்ளவர்களுக்குத்தான் படி அரிசித் திட்டம் என்றிருப்பதை 100 ரூபாய் உள்ளவர்களுக்குத்தான் படி அரிசி என்று குறைத்துக்கொண்டாலும் பாவாயில்லை. வருமானம் குறைவாகக் கிடைக்கக்கூடியவர்களுக்கு நாடு முழுவதிலும் உள்ளவர்களுக்கு ஒரே சீராகக் கொடுக்க வேண்டுமென்று கூறி. என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கல் மசோதா சட்டமாவதற்கு முன்னால் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். சில முடிவுகளைச் சர்க்கார் எடுக்கிறார்கள், சில மாற்றங்களையெல்லாம் இலாகாக்களிலே எடுக்கிறார்கள். நண்பர் பாலசுப்பிரமணியன் அவர்கள் சொன்னதைப் போல கிளர் கிடைரென்று ஆட்களைக் குறைப்பதும், திடீரென்று வேலையிலிருந்து நீக்குவதும் நடந்து வருகின்றன. ஒவ்வொரு இலாகாவிலும் வேலை நீக்கம் நடந்து வருகின்றது. இந்தச் சமயத்தில் வேலைவாய்ப்பு அதிகமாகச் செய்துதர வேண்டுமே தவிர, வேலை நீக்கம் செய்யக்கூடாது. வேண்டுமானால் வேலை நீக்கம் செய்வதுதான் எங்களுடைய கொள்கை என்று சர்க்கார் அறிவித்து விடட்டும். எல்லாவற்றையும் ரகசியமாகச் செய்து விடுகிறார்கள். முன்பு கலெக்டர்களுடைய பர்சனல் அசிஸ்டெண்டுகளைக் குறைத்துவிட்டோம், அதனால் இவ்வளவு லாபம் கிடைத்திருக்கிறது, இவ்வளவு மிச்சம் செய்திருக்கிறோம் என்று கூறி பத்திரிகைகளில் போட்டுக்கொண்டார்கள். இப்போது அதைப்பற்றியெல்லாம் பேச்சே இல்லை. அப்படி முன்புபோலப் பத்திரிகைகளில் போடுவது இல்லை. நான் கேட்க விரும்புவதெல்லாம், எங்கே வேலை நீக்கம் செய்யப்பட்டாலும், வேலை குறைப்புச் செய்தாலும், அதை உடனடியாகத் தெரிவிக்க வேண்டும் ரகசியமாக எதையும் செய்யக் கூடாது. மாதத்திற்கு ஒரு தடவையாவது அல்லது வாரத்திற்கு ஒரு தடவையாவது இன்னின்ன இலாகாக்களில் இவ்வளவு பேர் ஆட்குறைப்புச் செய்திருக்கிறோம். இவ்வளவு பேரை வீட்டுக்கு அனுப்பியிருக்கிறோம் என்று அறிவிக்க வேண்டும். இப்படி அறிவித்தால்தான் நன்றாக இருக்கும். இன்று ஒன்று சொல்வது, நாளை [illegible]செய்வது. இன்று ஒன்று செய்வது, நாளை வேறு ஒன்றைச்





செய்வது என்பதெல்லாம் இருக்கக் கூடாது. புள்ளிவிவரக் கணக்கைச் சரியாகக் கொடுக்க வேண்டும். நாங்கள் சட்டசபையில் பேசும்போது, இவ்வளவு பேர் வேலைநீக்கம் செய்யப்பட்டனர், ஆட்கள் குறைக்கப்பட்டனர் என்று சொல்லும்போது, அமைச்சர்கள் உடனே எழுந்து, எங்கே, எத்தனை பேர், ஆதாரம் உண்டா என்றெல்லாம் கேட்க ஆரம்பித்து விடுகிறார்கள். ஆகவேதான் எதையும் ரகசியமாக வைக்காமல் இந்த இடத்தில், இவ்வளவு பேர் வேலைநீக்கம் செய்யப்பட்டனர் என்பதை அரசாங்கமே அறிவித்து விட வேண்டும். நாங்கள் குற்றம் சாட்டும்போது, எங்கே, எப்படி என்று எங்களையே கேட்கக் கூடாது. நாங்கள் சொல்வது சரியா, தவறா என்பதை அரசாங்கமே கண்டுபிடிக்க வேண்டும். கடைநிலை ஊழியரிலிருந்து மேல் உத்தியோகஸ்தர்வரை யார் வேலைநீக்கம் செய்யப்பட்டாலும் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, நிதி ஒதுக்கீடு செய்யும் மசோதாவில் மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்கெனவே விரிவான முறையில் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். உணவுப் பிரச்சினையைப் பற்றிப் பேசியபோது, மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் தகுந்த விளக்கங்களை அளித்தார்கள். அரசாங்கம் எதையும் ரகசியமாகச் செய்வது இல்லை. களம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், வேலைநீக்கம், ஆட்குறைப்பு போன்ற தகவல்களை மாதா மாதம் அரசாங்கம் வெளியிட வேண்டும் என்று குறிப்பிட்டுப் பேசினார்கள். சந்தர்ப்பம் இருக்கும்போது இவைகளை வெளியிடுகிறோம். மாதா மாதம் இந்தப் புள்ளிவிவரங்களை வெளியிடுவதால் மட்டும் பிரச்சினை தீர்ந்துவிடாது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். களம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னது போலவே, வேலைநீக்கப் பிரச்சினை, ஆட்குறைப்புப் பிரச்சினை போன்றவற்றில் அரசாங்கம் சிரத்தை கொண்டிருக்கிறது, பரிவு கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் நம்ப வேண்டுமென்று மட்டும் கேட்டுக் கொள்கிறேன். முக்கியமாக ஒன்றைமட்டும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நண்பர் திரு. கே. விநாயகம் அவர்கள் ஐந்தாவது பைனான்ஸ் கமிஷன் பற்றிச் சொன்னார்கள். உண்மையிலேயே நாம் எல்லோரும் இதில் அக்கறை கொள்ள வேண்டியவர்கள் என்பதில் சந்தேகம் இல்லை. அதனுடைய பணியை இந்த மன்றத்திற்கு விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். பிளானிங் கமிஷன், பைனான்ஸ் கமிஷன் என்றெல்லாம் பல கமிஷன்கள் இருக்கின்றன. விவரம் புரிந்தவர்கள் கூட இதில் குழப்பம் அடைகிறார்கள். பிளானிங் கமிஷன் என்பது சட்டத்திலே சேராத, மறைந்த பிரதமர் நேரு பண்டிதர் அவர்களுடைய செல்லப் பிள்ளை. சட்டமன்றத்திலிருந்து, பாராளுமன்றத்திலுள்ளவர்கள் வரை அதற்கு மரியாதை கொடுக்கக்கூடியவர்கள். அதனுடைய ஆதரவைப் பெற்றவர்கள்தான்

இந்த நாட்டை நிர்ணயிக்க வேண்டியிருக்கிறது. பெரிய இடத்திலேயிருந்து கொண்டு அவர்கள் கனவிலே தோன்றக்கூடிய பிரதயட்சமான கடவுளாகக் காட்சியளிக்கிறார்கள். அவர்கள் பிளானிங் கமிஷன் மெம்பர்களாகவும், தலைவராகவும் இருந்து கொண்டு 50 கோடி மக்களைக் காப்பாற்ற சிருஷ்டிக்கப்பட்ட சூப்பர் பாடியாக இருக்கிறது.

திரு. கே. விநாயகம் : தலைவர் அவர்களே, கான்ஸ்டிடியூஷன் ஆஃப் இண்டியாவில் அதற்கென்று தனி விதி இருக்கிறது. அதன்படி பிளானிங் கமிஷன் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தியா எதிர்காலத்தில் வளர்ச்சியடைய வேண்டும் என்று சொல்லித்தான் இதைப் போட்டார்கள். இதற்கு பிரதம மந்திரிதான் தலைவர் ஆவார்கள், ஏதோ நேருவினுடைய செல்லப்பிள்ளை என்று சொல்வதனாலேயே நாங்கள் எல்லாம் ஏமாந்துவிட மாட்டோம். இதற்குச் சட்டத்தில் அனுமதி இருக்கிறது.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அனுமதி இல்லை. இதைப் பற்றி நான் சிந்தனை செய்யவில்லை. திரு. ராஜாஜி அவர்கள் இதைப் பற்றிச் சொல்லி வந்தார்கள். பிளானிங் கமிஷன் செய்வது வேறு, பைனான்ஸ் கமிஷன் செய்வது வேறு. பைனான்ஸ் கமிஷன் அரசியல் சட்டத்தில் இருக்கிறது. நாம் நல்ல ஜனநாயகத்தை உருவாக்கி வருகிறோம். பிளானிங் கமிஷன் பொருளாதார மன்றங்கள் இவையெல்லாம் ஒரு நிலை. இது சுப்ரீம் பாடி. உலகத்திலே யாருக்கும் சமமில்லாத நிலையில், குளிர்ப்பதன அறையிலே உட்கார்ந்து கொண்டு பொருளாதார அபிவிருத்தி செய்கிறது. பிளானிங் கமிஷனுக்குப் பரபசர் காட்கில் உதவித் தலைவராக இருக்கிறார். அவர் பொருளாதார மேதை, முன்னாள் அமைச்சராக இருந்தவர். நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்த திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்களும் ஒரு பெரிய இடத்தைப் பெற்றிருக்கிறார்கள். ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் மத்திய அரசுக்கு வரியாக வருகின்ற சில வரிகளை வசூல் செய்கிறார்கள். ஒவ்வொரு மாநிலத்திற்கும் இவ்வளவு பங்கு என்று பைனான்ஸ் கமிஷன் பிரித்துக் கொடுக்கிறார்கள். மாநிலத்தின் அதிகாரத்தைப்பற்றி நாம் பேசுகிறோம். அதிகாரங்களைப் பரவலான முறையில் பிரித்துக் கொடுக்க வேண்டும். எல்லோருக்கும் சமவாய்ப்பு ஏற்பட வேண்டும். பற்றாக்குறையைச் சரி செய்வதற்குத்தான் பைனான்ஸ் கமிஷன் என்று சொல்கிறார்கள்.

முன்பிருந்த பைனான்ஸ் கமிஷன் சில முறைகளைச் சொன்னார்கள். அப்போதிருந்த திரு. ராஜமன்னார் நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்தவர். இப்போது சில புது முறைகளைச் சொல்கிறார்கள். திரு. தியாகி என்பாருடைய தலைமையில் இயங்கி வருகிறது. இருக்கும் புள்ளிவிவரங்களைச் சொன்னால்கூட அதனால் ஏற்படுகிற விளைவு போன தடவை இருந்ததைக் காட்டிலும் இப்போது ரொம்ப பிற்போக்காக இருக்கிறது என்று சொன்னால் அது மிகைப்படுத்திச் சொல்வதாகாது.





உதாரணமாக இன்கம் டாக்சை வருமான வரியை எடுத்துக் கொண்டால் முன்பு நமக்குக் கிடைத்துக் கொண்டிருந்தது 8.34 சதவிகிதம். ஆனால் இப்போது புதிய கமிஷன் பாரிந்துரையின்படி நமக்கு ஒதுக்க இருப்பது 8.18 சதவிகிதம். இப்படி வருமான வரியிலும் முன்னைவிடக் குறைந்துவிட்டது.

அடுத்து எக்சைஸ் ட்யூடியை எடுத்துக் கொண்டால் முன்பு நமக்குக் கிடைத்து வந்தது 7.18 சதவிகிதம். இந்த நிதிக் கமிஷன் நமக்கு ஒதுக்கியிருப்பது 6.5 சதவிகிதம் தான். இதிலும் குறைந்து விட்டது.

கிராம மக்கள் மிகச் சுலபமாகச் சொல்லிவிடுவார்கள் கழுதை தேய்ந்து கட்டெறும்பாயிற்றாம் என்று. அதுபோல நம் கதி ஆக்கப்பட்டிருக்கிறது. இன்னும் அடிஷனல் எக்சைஸ் ட்யூடி என்று இருக்கிறது. நம் மாநிலத்தில் முன்பெல்லாம் சர்க்கரை, புகையிலை, டெக்ஸ்டைல் முதலிய பொருள்கள் மீது சேல்ஸ் டாக்ஸ் விதித்து வந்தோம். அதை சரண்டர் பண்ணிவிட்டோம். மத்திய அரசு சுங்க வரியாக அவற்றின் மீது வரிபோட்டு நமக்கு அதில் பங்கு தந்து வந்தது. அந்த அடிஷனல் எக்சைஸ் ட்யூடியை எடுத்துக் கொண்டால் முன்பு நமக்கு 11 சதவிகிதம் இருந்தது. அதை இப்போது 9.63 சதவிகிதமாகக் குறைந்திருக்கிறது.

பொதுவாக முன்பு நமக்கு 34 கோடி நிறைவு செய்யப்பட்டிருக்கிறது என்றால் இப்பொது புதுக் கமிஷன் பரிந்துரையின்படி 22 கோடிதான் வர இருக்கிறது.

மொத்தமாக முழுக்கணக்கைப் பார்ப்போமானால் நிதிக் கமிஷனிடத்தில் 4266 கோடி ரூபாய் பணப் பையைக் கொடுத்துப் பங்கு போடுங்கள் என்று சொன்னால் முன்னால் நம் மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்டது 718 கோடியாகும். ஆனால் இப்போது அவர்கள் கொடுக்க இருப்பது 295 கோடிதான். இதைத்தான் நான் நேற்றையதினம் கூடச் சொன்னேன். நமக்கு இப்படி ஒரேயடியாகக் குறைத்திருக்கிறார்களே தவிர சில மாநிலங்களுக்கு அதிகமாகவே ஒதுக்கி இருக்கிறார்கள். குறிப்பாக பிகார், மகாராஷ்டிரா, உத்திரப் பிரதேசம் ஆகியவை சர்ப்ளஸ் ஆகவே மாறியிருக்கின்றன. பீகார் 199 கோடி, குஜராத் 188 கோடி, உத்திரப் பிரதேசம் 250 கோடி பெறக்கூடிய நிலைமைகள் வருகின்றன. நம்முடைய நிலைமைதான் இரண்டுங்கெட்டான் நிலைமை.

காரணம் மற்ற மாநிலங்களில் முன்பே பே கமிஷன் நியமித்திருக்கிறார்கள். அதை பைனான்ஸ் கமிஷனில் கணக்கு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நாம் இப்போதுதான் பே கமிஷன் நியமித்தோம். இவர்களும் வேலையைத் தொடங்கியிருக்கிறார்கள். இதனால் நமக்கு இவ்வளவு அதிகமாகச் செலவாகக் கூடும் என்று சொன்னால் மத்திய சர்க்கார் நிதி கமிஷன் இதைச் சேர்க்கவில்லை.

[திரு. கே. ஏ. மதியழகன்] [1970 ஜனவரி 28

ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டத்திலும் மாநில சர்க்கார் புதிய வரிகளைப் போடுவதன் மூலம் வருமானத்தை அதிகப்படுத்த வேண்டும் என்றார்கள். நம் மாநிலத்திலும் வரிகள் போடப்பட்டன. அதன் மூலமாக 100 கோடிக்கு வரி போடப்பட்டது. இந்தப் பணத்தை அபிவிருத்தித் திட்டங்களுக்குச் செலவிடுவது என்பது கொள்கை. ஆனால் இந்த 100 கோடியை நிதி கமிஷன் ரெவின்யூ அக்கவுண்டில் எடுத்துக் கொண்டிருக்கிறது. வரி போடாத மாநிலங்கள் பாடு சௌகரியமாகப் போய்விட்டது.

நாம் நிர்வாக செம்மையைக் கருத்தில் கொண்டு சிக்கன முறையைக் கையாண்டோம். நிதிக் கமிஷன் உங்களுக்கு இவ்வளவுதானே செலவு என்று நமக்குச் சேர வேண்டிய தொகையைக் கூடக் குறைத்திருக்கிறார்கள். சிக்கனம், நிர்வாகத்திறமை, வரி விதிப்பு இவற்றுக் கெல்லாம் கிடைத்துள்ள பரிசு இது. இதன் விளைவு நம்முடைய நிதி ஆதாரங்களைப் பாதிப்பதாக இருக்கிறது.

அப்படி ஒன்றும் பெரிய பார்முலா கிடையாது. பாக்வர்ட்னஸ் என்று சொல்கிறார்கள். அநாதி காலமாகவே பல இலக்கணங்கள் இந்த பாக்வர்ட்னஸ் என்பதற்குச் சொல்லப்பட்டு வருகின்றன. இவ்வளவு மைல்கள் ரோடு போடப்படாமலேயே இருக்கின்றன, பர்காபிடா இன்கம் இவ்வளவுதான் என்பதை எல்லாம் வைத்து இந்தப் பிற்போக்கு நிலைமையைக் கணிக்கிறார்கள். துரதிருஷ்ட வசமாக நாம் பிற்போக்கு நிலைமை, வளர்ச்சி அடைந்த நிலைமை என்கிற இரண்டுக்கும் நடுவில் பிற்போக்குக்கு அவர்கள் வைத்த புள்ளி விளிம்பில் இருக்கிறோம். அதன்காரணமாக நம்மை முற்போக்கு நிலையில் தள்ளிவிட்டார்கள். முற்போக்கு நிலைமைக்கான வசதியும் கிடைக்கவில்லை. பிற்போக்கு நிலைமை என்பதற்கு இவர்கள் கொடுக்கிற அனுகூலமும் கிடைக்கவில்லை. இது ஒன்று. திட்டகாலத்திலே அபிவிருத்திப் பணிக்கென வரி போட்டார்கள் அல்லவா? அதை ரெவின்யூ கணக்கில் அவர்கள் சேர்த்துக் கொண்டது இரண்டாவது பிரதிகூலம். மூன்றாவது ஜனத்தொகை என்ற பெயரிலே இழைக்கப்பட்டிருப்பது. கல்கத்தா நகரத்திற்கு சில ஸ்பெஷல் ப்ராப்ளம்கள் இருக்கின்றன என்றால்—வளர்ந்து வருகிற சென்னை நகரத்தில் மட்டும் பல ஸ்பெஷல் ப்ராப்ளங்கள் தோன்றவில்லையா? நமக்கு அகதிகள் பிரச்சினை கூட இருக்கின்றது. இதுபற்றி எல்லாம் நானும், முதல் அமைச்சர் அவர்களும் பல நேரங்களில் இந்தியப் பிரதமரிடம் விவாதித்தோம். அவர்களுடைய நிலை ஒன்றும் நமக்கு ஆறுதல் அளிப்பதாக இல்லை. இந்த மாநில அரசின் கோரிக்கை நிதிக் கமிஷனுடைய பரிந்துரைகள் பரிசீலனை செய்யப்பட்டு மறு பங்கீடு செய்யப்பட வேண்டும் என்பதுதான். நமக்கே அதிகம் வரவேண்டும் என்பது இல்லை. யார் யாருக்குக் குறைவாக வந்திருக்கிறதோ அவர்கள் பயன் அடைவதுபற்றிக் கூட ஆட்சேபனை இல்லை.



1970 ஜனவரி 28] [திரு. கே. ஏ. மதியழகன்]

இன்னும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி ஒன்றுமே தெரியவில்லை. திரு. ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டதைப்போல அன் டிக்லேர்டு ஹாலிடே ஆக இருக்கிறது. விடுமுறை நாட்களில் ஆபீஸ் வந்து வேலை செய்கிறவர்களைப்போல நாம் திட்ட வேலைகளைச் செய்துகொண்டே இருக்கிறோம். எந்த இடத்தில் நிறுத்துவது என்பதை வரையறுக்க வேண்டிய நிலைமைக்குப் போய்க் கொண்டிருக்கிறது. நிதி நிலை சரிசமன் செய்யப்படாது போனால் மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் சுமுகமான நிலை நீடிக்கும் என்று சொல்ல முடியாது. இதுபோன்ற பாரபட்சம் மன அதிருப்தியையும், மனக் கசப்பையும் தான் வளர்க்கச் செய்யும். ஆகவே இதுபற்றிய அரசின் கருத்தை இந்த மன்றம் ஆதரித்து, அரசின் கரங்களை வலுப்படுத்த வேண்டும். அரசின் கருத்துக்களை ஆதரித்தவர்களுக்கு நன்றி கூறி நிதி ஒதுக்கீடு மசோதாவை ஆதரித்துத் தருமாறு வேண்டி என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன் உள்ள கேள்வி: "தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 3/1970) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, மசோதா பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

பிரிவு 2, அட்டவணை, குறுந்தலைப்பு, முகப்புரை, நெடுந்தலைப்பு, ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 3/1970) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(ஆ) தமிழ் நாடு 1970-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 1/1970.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து தமிழ்நாடு 1970-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 1/1970).

**THE HON. THIRU P. U. SHANMUGAM:** Sir, I beg to move—"That the Tamil Nadu General Salles Tax (Amendment) Bill, 1970* (L.A. Bill No. I of 1970) be taken into consideration."

*Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 23rd January 1970.

As a measure of checking evasion of sales tax, it has been decided to levy a tax on the purchase of goods within the State in respect of which no tax has already been levied either on the sale point or on the purchase point under the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959) by any dealer who consumes such goods in the process of manufacture of other goods or disposes of such goods in any manner other than by way of sale in the State or despatches them to a place outside the State except as a direct result of sale or purchase in the course of inter-State trade or commerce. The rate of tax payable on such purchase is the rate mentioned in sections 3, 4 or 5 as the case may be of the said Act. The tax on purchase as aforesaid will be payable irrespective of the quantum of the aggregate of such price in a year. The Tamil Nadu General Sales Tax (Fourth Amendment) Ordinance, 1969 (Tamil Nadu Ordinance No. 5 of 1969) was accordingly promulgated by the Governor on the 27th November 1969 to give effect to the above decision. The Ordinance has now to be replaced by an Act of the Legislature.

Jaggery and gur (other than palm jaggery) were liable to multi-point sales tax from the 1st January 1968 under the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959). The Government decided that jaggery and gur should be brought under single-point levy of tax at the rate of 5 per cent at the point of first purchase in the State. The above decision has been given effect to from the 18th October 1969 by means of a notification issued under sub-section (1) of section 59 of the said Act.

Cocoanut was treated as an oil seed and subjected to a single point tax under item 6 (*a*) of the Second Schedule to the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959) from the inception of the Act. In *Kannappa Mudaliar* vs *State of Madras* (1968 21 STC 41), the Madras High Court held that cocoanut was not an oil-seed within the meaning of the said item. Cocoanut accordingly became liable to multi-point tax under the Act. The Government decided that cocoanut should be subjected to a single-point levy of tax at the rate of 5 per cent at the point of first purchase in the State, and have given effect to the decision by issuing a notification under sub-section (1) of section 59 of the said Act, with effect from the 4th November 1969.

Under item 3 of the Third Schedule to the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959), any goods on which duty is levied or leviable under the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937), or the Opium Act, 1878 (Central Act I of 1879), on the entire quantity of such goods and not merely on any ingredient which forms part of such goods, were exempt from the levy of tax under the Act. The Government decided to withdraw this exemption and to subject all kinds of alcoholic liquors for human consumption (other than toddy and arrack) to a single-point levy of tax at the point of



first sale in the State, and the other goods covered by the aforesaid exemption to multi-point sales tax of 3 per cent with effect from the 1st December 1969. This has also been given effect to by means of notifications issued under sub-section (1) of section 59 of the said Tamil Nadu Act I of 1959.

Under sub-section (2) of section 59 of Tamil Nadu Act I of 1959, a Bill to replace the aforesaid notifications has to be introduced during the present session of the Legislature.

The Bill now before the House seeks to replace the aforesaid Ordinance and Notifications by an Act of the Legislature. Sir, I commend the motion for the acceptance of the House.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் உரையின்மீது விவாதம் 12 மணிக்குத் தொடங்கிவிடலாம் என்று இருக்கிறோம். எனவே, இருக்கிற இரண்டு மூன்று மசோதாக்களையும் 1 மணி நேரத்திற்குள் முடிக்கக்கூடிய வகையில் அதற்கேற்றாற்போல் உறுப்பினர்கள் மிகச் சுருக்கமாகப் பேச வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Sir, this is a Bill that has been brought forward to plug the loopholes that were there in the parent Act. While a principal in Tamil Nadu wants to sell some goods to his agent in another State, he can buy them here and sell them. Previously there were cases where he used to sell them to somebody in some other State and inform the department that the person to whom he sold was his agent. The Minister has carefully analysed the position and to plug the loophole an Ordinance was issued and later on this Bill has been brought forward.

I wish to draw the attention of the Government to one particular problem. There are certain agents in Tamil Nadu who would be buying certain goods and then passing them on to their principal in certain other States. In the process of buying goods from another person in Tamil Nadu, he pays sales tax in Tamil Nadu and then passes them on to his principal in some other State. In other words the goods suffer sales tax at the point where he buys: it has gone through one sales tax. After the Ordinance was promulgated, several officers were given instructions that, even though the principal pays sales tax at the time of buying, he cannot sell the goods to his agent in some other State unless he pays sales tax there. It is stated in the Statement of Objects and Reasons ' except as a direct result of sale or purchase in the course of inter-State trade or commerce '. When the Bill was framed, his particular problem was analysed by the Government and this exemption was given. But I understand that there is some trouble in the implementation of the Ordinance. I will be happy if the Minister finds out from the departmental people whether the exemption given has been withheld and the goods had to pay a sales tax. I will be happy if the Minister gives

[1970 ஜனவரி 28

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விற்பனை வரி திருத்த மசோதாவின் மீது என்னுடைய கட்சியின் சார்பிலே எதிர்த்துச் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். மதுபான வகைகள் நீங்கலாக மற்றவற்றிற்கு இது தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த மசோதாவைப் பொறுத்த வரையிலும் ஒரு முனை வரியை வாங்குகிறவர்கள்தான் செலுத்த வேண்டுமென்ற அளவிலே இருந்தாலும்கூட தமிழகத்தினுடைய விவசாயிகளைப் பெரிதும் இது பாதிக்கும் என்பதை வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இனிமேல் கரும்பு பயிரிடுகிற விவசாயிகள் கண்டிப்பாகக் கணக்கு வைத்துக் கொள்ள வேண்டுமென்ற நிலைமையும் விற்பனை வரி இலாகாவினருடைய அழைப்புகளுக்கு அதிகாரங்களுக்கு ஆளாக்கப்படுகின்ற ஒரு நிலைமையும் இந்த மசோதாவின் மூலமாக ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் உணர்கிறோம். கரும்பு பயிரிடுகிறவர்கள் மற்றத் தானியங்களைக் காட்டிலும் இப்பொழுது அதிகமாக வரி செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கணக்கு வைத்துக்கொள்ளவேண்டுமென்ற முறையைக் கொண்டு வந்தால் வாங்குகின்ற வியாபாரிகள்தான் விற்பனைவரி செலுத்துகின்ற நிலைமை ஏற்பட்டாலும்கூட அதற்கான தொகையைக் கழித்துக் கொள்கின்ற நிலைமைதான் நடக்கும். விவசாயியிடம் சென்று இத்தனை ஆயிரம் ரூபாய்க்கு வெல்லத்தை எடுத்துக் கொள்கிறேன் என்று விலையைப் பேசித் தீர்த்ததற்குப் பிறகு அரசாங்கத்திற்கு நான் விற்பனை வரி இவ்வளவு செலுத்த வேண்டியிருக்கிறது என்று சொல்லி அந்தத் தொகையை கழித்துவிட்டுப் பணத்தைக் கொடுக்கின்ற முறைதான் நடைமுறையிலே ஏற்படும். சட்டம் எந்த நிலைமையைக் காட்டினாலும் கூட நடைமுறையில் இந்தச் சட்டம் விவசாயிகளுடைய தலையிலே சுமத்தப்படுகிற பளுவாகத்தான் அமையும் என்பதை அவைக்குத் தெளிவுபடுத்த வேண்டுகிறேன்.

தேங்காய் எண்ணெய் விதை என்றாலும் தேங்காய் விளைவிப்பவன் விவசாயி என்பதை மறந்துவிடுவதற்கில்லை. அது விளைவிக்கப் படுகிற இடம் விவசாயம் செய்கிற இடம். கடலோரப் பகுதியில் அதுவே தான் விவசாயமாக இருந்து கொண்டிருக்கிறது. அந்த விவசாயிகள் கணக்கு வைத்துக் கொள்ளும் நிலைமையிலும் அல்லது சரியான முறையில் பேரம் செய்து வரியையும் சேர்த்து விலை பேசுகின்ற நிலைமையிலோ இல்லை. அந்த அளவுக்கு விவசாயிகளின் கை ஓங்கியிருக்கவில்லை என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். எந்தப் பொருள் கிடைக்கவில்லையோ அந்த நேரத்தில் தான் விற்பவனின் கை ஓங்கி இருக்கும். துர்பாக்கியவசமாக விவசாயிகளுடைய விளைபொருள் எதுவாக இருந்தாலும் அவர்களுடைய கை எப்போதும் ஓங்கி இருக்கவில்லை என்பதை எல்லோரும் [illegible]ணருகிறோம். ஆகவே விவசாயிகள் தங்களுடைய விளைபொருள் [illegible] வேண்டுமென்ற ஆர்வத்திலே வியாபாரிகளிடம்



1970 ஜனவரி 28] [திரு. க. இராமமூர்த்தி]

விலை பேசி முடித்த பிறகு அந்த வியாபாரிகள் பணத்தைக் கொடுக்கும்போது விற்பனை வரிக்கான தொகையைக் கழித்துக்கொண்டு கொடுத்தால் விவசாயிகள் அதை ஏற்றுக்கொள்ளும் நிலைமையிலே தான் இருக்கிறார்கள். இப்படி வாங்குகின்ற வியாபாரிகள் தவறு செய்கிறார்கள் என்றால், சரியான கணக்கைக் காட்டவில்லை என்று சொன்னால் விற்பனை வரித் துறையிலே இருக்கிற அதிகாரிகளுக்கோ அல்லது அரசுக்கோ சந்தேகம் ஏற்படுமானால் அதைச் சரிபார்த்துக் கொள்ளும் இடமாக இருப்பவர்கள் விவசாயிகள்தான். அப்படிச் சரி பார்க்கும் நிலைமை ஏற்படுவதால் விவசாயிகளும் கணக்கு வைத்துக்கொள்ளும் நிலைமை இருக்கிறது. இன்றைய நிலைமையில் விவசாயிகளை அந்த நல்ல நிலைமையில் நாம் வைத்துக் கொண்டிருக்கிறோமா என்பதைக் கவனித்துப் பார்க்க வேண்டும். இன்றைய பொருளாதார சூழ்நிலை, விவசாயிகளுடைய நிலைமை இவற்றை எல்லாம் எண்ணிப் பார்க்கும்போது இந்த மசோதா விவசாயிகளுக்கு இழைக்கப்படுகின்ற பெரிய அநீதியாக அமைந்துவிடும் என்று சொல்ல விரும்புகிறேன். ஆகவே, அரசு கரும்புக்கும், வெல்லத்திற்கும் விதித்திருக்கும் ஒரு முனை வரி விதிப்பை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும் என்று வலியுறுத்திச் சொல்கிறேன். பசுமைப் புரட்சியை நாடி வெகு வேகமாக ஓடிக்கொண்டிருப்பதாகச் சொல்லிக்கொண்டிருக்கும் இந்தச் சர்க்கார் விவசாயிகளுக்கு இப்படிப்பட்ட அநீதிகளை அடுத்து அடுத்துச் செய்து கொண்டிருப்பது வருந்தத்தக்கது என்று கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. சா. மெய்யப்பன் :** தலைவர் அவர்களே, பொது மக்களுக்கு சேவை செய்யும் வகையில் உற்பத்திக்கும் விநியோகத்திற்கும் ஓரளவு பொறுப்பாளியாக இருக்கும் வியாபாரிகள் இந்த விற்பனை வரியினால் படுகின்ற அல்லல்கள் ஏற்கெனவே அதிகமாக இருக்கும் நிலையிலே இப்போது செய்ய இருக்கிற சட்டம் இன்னும் அதிக அல்லலையும் வரிச் சுமையையும் அவர்களுக்கு ஏற்படுத்தும் என்பதை முதலிலே அரசுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எப்போதும் வரியைக் கூட்டுவது என்பதோ அல்லது வரியை ஏற்படுத்துவது என்பதோ முக்கியமாக நிதித் திட்ட தலைப்பிலே சேர்க்கக்கூடிய ஒன்றாகும். ஆண்டு நிதி நிலை அறிக்கையின்போது வரி ஏற்படுத்துவதோ அல்லது கூட்டுவதோ செய்யப்படவேண்டுமே தவிர நடுவிலே அடுத்த ஆண்டு நிதிநிலை அறிக்கை வருவதற்கு முன்னதாக வரியை ஏற்படுத்துவது என்பது அவ்வளவு பொருத்தமான 'ஃபிஸ்கல் பாலிஸி' ஆகாது என்பதை அரசுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இருந்தாலும் மசோதா அறிமுகப்படுத்தப்பட்டு விட்டதால் இந்த மசோதாவைப் பொறுத்த மட்டில் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த மசோதாவிலே ஸ்டேட்மெண்ட்ஸ் ஆஃப் ஆப்ஜெக்ட்ஸ் அண்டு ரீசன்ஸ் 'Statement of objeits and Reasons' என்று போட்டிருக்கும் தலைப்பிலே—ஒன்றுக்கொன்று முரணான கருத்

துக்கள் அடங்கியிருப்பதாகத் தோன்றுகிறது. அதாவது,

'As a measure of checking evasion of sales tax, it has been decided to levy a tax on the purchase of goods within the State, in respect of which no tax has already been levied either on the sale point or on the purchase point under the Tamil Nadu General Sales Tax Act.....'

'அதாவது வரி ஏய்ப்பவர்களைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன்' என்று இருக்கிறது. வரி ஒன்று இருக்கவேண்டும், அது ஏய்க்கப்பட வேண்டும், பிறகு கட்டுப்படுத்தப்பட வேண்டும். வரி இல்லாததற்கு மூன்று, நான்கு, ஐந்து பிரிவின் கீழ் வரியைப் போடுகிறோம். விற்பனை முனையிலும் வாங்கும் வரி போடப்படுகிறது. அவைகளை ஏய்க்கும்போது பர்ச்சேஸ் டாக்ஸ் என்று சொல்வதா அல்லது சேல்ஸ் டாக்ஸ் என்று சொல்வதா? பர்ச்சேஸர் என்பதற்கு டெஃபனிஷன் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பதைப் பார்த்தால் இல்லை. ஆகவே, அரசு பர்ச்சேஸர் என்பதற்கு டெஃபனிஷன் கொடுத்து விட்டால் மிகவும் நல்லதாக இருக்கும்.

purchase of goods within the State in respect of which no tax has already been levied either on the sale point or on the purchase point.........'

என்று இருக்கிறது. முதலில் நாம் செய்த சட்டங்களிலே முன்னையே சட்டமன்றங்களிலே அந்த மாதிரி ஒரு சில விதி விலக்குகள் ஏன் அளிக்கப்பட்டன என்பதைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். முன்பு எவற்றுக் கெல்லாம் விதி விலக்கு அளிக்கப் பட்டதோ அவையெல்லாம் வேண்டாம் என்று இந்தச் சட்ட மாகிறது. இதுபற்றிய ஆர்டினன்ஸ் வந்தவுடன் ஒரு சில வியாபாரி களிடமிருந்து இதைப்பற்றி குறிப்பெடுத்து வைத்துக்கொண்டதை அரசுக்கு எடுத்துச் சொல்ல நினைக்கிறேன்.

It is stated that if a dealer purchases goods which are liable to purchase tax, or sales tax under the Tamil Nadu General Sales Tax Act 'in circumstances in which no tax is payable under sections 3, 4 or 5', he is liable to the purchase tax. What are the 'circumstances'? The 'circumstances' have not been indicated in this Bill or in the Statement of bject and Reasons appended to it. The circumstances should be made known to the public as well as to the merchants. The Department should be asked to indicate the circumstances. Otherwise, the officers may think that any circumstances will come under this Bill and they will levy tax under any ciriumstanies. I request the Hon. Minister to elucidate this point.

I also wish to emphasise that there is no minimum prescribed for the levy of purchase tax in this Bill though a minimum is prescribed in clause 3 of the Bill for the levy of turnover tax. This will cause great hardship to the dealers especially to the



Then certain classes of goods purchased are liable to purchase tax and the same classes of goods may be subjected to sales tax also if they are used in manufacture. This will amount to double taxation which is not considered a sound fiscal policy.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எல்லா மசோதாக்களையும் 12 மணிக்குள் முடிக்க வேண்டும்.

**திரு. சா. மெய்யப்பன் :** பொது மக்களுக்கும் இடைஞ்சல் வரக் கூடாது, சட்டத்திற்கும் தகராறு வந்துவிடக்கூடாது, கோர்ட்டுக் குப் போய் சட்டம் சரியாகச் செய்யவில்லை என்று தகராறு வந்து விடக் கூடாது என்பதற்காகத்தான் இதைச் சொல்ல விரும்பு கிறேன். எனக்கு அரை மணி நேரமாகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சொல்லவேண்டிய கருத்துக் களைச் சொல்லுங்கள். எழுதி வைத்துப் படிக்கக் கூடாது.

**திரு. சா. மெய்யப்பன் :** சட்டத்தில் தவறு ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் இதைப் படிக்கிறேன். அப்படிப் படிப்பதில் தவறு எதுவும் இல்லை. அப்படி படிப்பதில் தவறு இல்லை என்று ஏற்கனவே தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முடியாதவர்கள் எழுதி வைத்துப் படிக்கலாம். நீங்கள் முடியாதவர்கள் அல்ல.

**திரு. சா. மெய்யப்பன் :** நான் பூராவும் வாசிக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தெளிவிற்கு ஒன்றிரண்டைப் பார்த்துக் கொள்ளலாம். நீங்கள் எழுதி வைத்துப் படிக் கிறீர்களே.

**திரு. சா. மெய்யப்பன் :** படிக்கவேண்டியதே ஜாஸ்தி இருக் கிறது. அதைச் சுருக்கிக் கொள்கிறேன்.

There is no concession in the case of purchase tax.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** உறுப்பினர் அவர்களுக்கு நான் ஒன்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்தச் சட்டம் நீதிமன்றத்திற்குப் போய் அடிபட்டு விழாதிருக்க வாதாட வேண்டியிருக்கிறது என்று சொன்னார்கள். அந்தச் சிரமம் அவர் களுக்கு வேண்டாம். இந்தச் சட்டம் மத்தியப் பிரதேசச் சட்டத் திலிருந்து அப்படியே எடுத்துப் போட்டிருக்கிறோம். மத்தியப் பிரதேசச் சட்டம் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போய் அது செல்லுபடி யாகும் என்று தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, அதைப்பற்றி கவலை வேண் டாம். வேறு ஏதாவது இருந்தால் சொல்லலாம்.

**திரு. சா. மெய்யப்பன் :** சட்டங்கள் எப்போதுமே வளர்ந்து வருபவை. சுப்ரீம் கோர்ட் அப்படிச் சொல்லியிருந்தாலும் அதே சுப்ரீம் கோர்ட்டினால் சூழ்நிலை மாறினால் சட்டம் மாற்றப்படும்.

என்பதைத் தெரியப்படுத்திக் கொள்ளுகிறேன். ஏற்கனவே உள்ள சட்டம் சரியல்ல என்று சுப்ரீம்கோர்ட் நினைத்தால் அந்தச் சட்டம் மாற்றப்படலாம்.

The word "disposes" under section 7 (*a*) (*b*) is a very wide term. That should be defined in the section itself. I doubt whether goods condemned or presented also may become liable to tax. Hence the word "disposes" must be defined. Purchase tax is payable when a dealer disposes of goods in any manner other than by way of sale in this State. To give an illustration if an electrical goods dealer uses some articles after purchasing them from third parties and they are being used for purposes of decorating his shop, would it come for purchase tax? It is not clear whether disposal of goods would include gifts and complements.

The general policy of the Act is to grant exemption from sales tax of agricultural produce. If a dealer purchases goods from such a person, he has to pay purchase tax. This is not very good and it is clear negation of privilege granted to certain class of goods which have been exempted.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாக முடியுங்கள். நான்கு மசோதாக்களை 12 மணிக்குள் முடிக்கவேண்டியிருக்கிறது. குறிப்பிட்ட ஒரு அளவிற்குத்தான் நேரம் கொடுக்க முடியும். ஒரு மசோதாவில் ஒருவரே அரை மணி நேரம் பேச நேரம் கொடுக்கமுடியுமா?

**திரு. சா. மெய்யப்பன்:** தலைவருக்கு அந்த உரிமை இருக்கிறது. இவை முக்கியமானவை என்பதால் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒன்றிரண்டு பகுதிகளை எடுத்துச் சொல்லலாம். நீண்ட நேரம் பேச உறுப்பினருக்கு இடம் கொடுக்க முடியாது.

DR. H. V. HANDE: There is a feeling that usually (I do not mean any disrespect to the legislature) Bills are being rushed through...........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது பிஸினஸ் அட்வைசரி கமிட்டி முடிவு செய்யவேண்டியது. இங்கு அதைக் கொண்டுவந்த பிறகு, குறித்த நேரத்தில் முடிக்கவேண்டியது தலைவரின் கடமை.

DR. H. V. HANDE: I would be happy if the Hon. Speaker were to listen to my point of order. Then you will appreciate that it is a legitimate point of order. There is a feeling that Bills are being rushed through. In the Business Advisory Committee, the exact amount of time that we should take on this Bill was not fixed. There is a feeling outside (and it is said in Courts also) that Bills are being rushed through in legislatures. We are happy that there are Members to speak on this Bill and they should be given chance to speak.........



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் ஹாண்டே அவர்களின் கருத்தை நானும் உணர்கிறேன். ஆனால் பிஸினஸ் அட்வைசரிக் கமிட்டியில் என்னென்ன தேதிகளில் எதை எதை எடுத்துக் கொள்வது என்று முடிவு செய்த கூட்டத்தில் டாக்டர் ஹாண்டே அவர்களும் இருந்தார்கள். இந்த மசோதாவுக்கு ஒரு நாள் தனியாக எடுத்துக்கொள்ளவேண்டும், இவ்வளவு மசோதாக்களைப் போடக்கூடாது என்று முடிவு செய்யவேண்டியது அங்கே. இவ்வளவு நிகழ்ச்சிகளையும் இன்று முடிக்கவேண்டுமென்று சொல்லிவிட்டு ஒரு நிகழ்ச்சிக்கு மட்டும் முழு நேரத்தையும் எடுத்துக் கொள்வது என்றால் மற்ற நிகழ்ச்சிகளை எப்படி நடத்துவது? அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவின்படி நான் நடத்த வேண்டும். இவ்வளவு மசோதாக்களை இவ்வளவு மணிக்குள் முடிக்கவேண்டுமென்றால் அதற்கேற்றவாறுதான் நேரத்தை ஒதுக்க முடியும். சொல்ல வேண்டிய கருத்துக்கள் நிறைய இருக்கலாம், அதை மறுக்கவில்லை. எது எதற்கு எவ்வளவு நேரம் கொடுக்க வேண்டும் என்பதை வகுப்பது அந்தக் கூட்டத்தில். நானும் வருத்தப்படுகிறேன், கருத்துக்களைச் சொல்ல முழு வாய்ப்பும் கொடுக்கமுடியவில்லையே என்று. கொடுக்கப்பட்டுள்ள நேரத்திற்குள் நான் முடிக்கவேண்டும்.

Dr. H. V. HANDE: There is a slight difference between the actual position and what the Hon. Speaker has said. In the Business Advisory Committee it was decided that today will be allotted for these Bills and yesterday would be devoted for the last day of discussion on Governor's Address. But unfortunately due to unforeseen circumstances, Governor's Address could not be discussed yesterday. If the Hon. Speaker were to think that a particular time-limit for this Bill had been fixed in the Business Advisory Committee. I am afraid it is not the correct position.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவு மாற்றப்பட்டு பேரவைத் தலைவர் தனியாகச் செய்துவிடவில்லை. பேரவையில் அவை முன்னவர் அவர்களே முன்மொழிந்து ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அப்போது அவர்கள் பேசியிருக்கலாம். ஹாண்டே அவர்கள், அப்படி கூடவே கூடாது, இதைத் தனியாக எடுத்துக் கொண்டிருக்க வேண்டும் என்று அப்போதே பேசியிருக்கலாம். அவை முன்னவர் அவர்கள், முன்மொழிந்து, உறுப்பினர்கள் எல்லாம் வாக்களித்து எடுத்த முடிவு. இதில் எந்தவிதமான முறைகேடும் இல்லை. இவ்வளவு நிகழ்ச்சிகளை இன்று முடிக்கவேண்டுமென்று எடுத்த முடிவு அவை எடுத்த முடிவு. ஆகவே திரு. மெய்யப்பன் அவர்கள் இரண்டு நிமிடங்களில் அவர்களின் கருத்துக்களைக் கூறி முடித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

THIRU S. MEYYAPPAN: Clause (*a*) refers to manufacture for sale or otherwise. The word "otherwise" is such a wide term that assessing officers can bring any transaction under this. So

[திரு. சா. மெய்யப்பன்] [1970 ஜனவரி 28

the word "otherwise" requires elucidation and guidelines. Otherwise it will lead to a lot of bitterness between the assessing officer and assessee.

For instance "dhall preparation and grinding into flour" is not a manufacture. Pulses do not change into different kinds of goods. What is being done is only the preparation of goods for consumption. Such kind of information should be clearly spelt out in the rules, to make the intention of the Legislature very clear beyond doubt.

இன்னும் நிறையச் சொல்ல வேண்டியிருக்கிறது. இருந்தாலும் இத்துடன் நிறுத்திக்கொள்கிறேன்.

**திரு. சி. கே. சின்னராஜி கவுண்டர்:** தலைவர் அவர்களே, இந்த விற்பனை வரி மசோதா மீது சில கருத்துக்களை விளக்கமாக தெரிவிக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். வெல்லத்திற்கு கொள்முதல் வரி 5 சதவிகிதம் விதித்திருக்கிறார்கள். கொள்முதல் வரி என்று சொன்னதும் பிறகு அதற்கு விற்பனை வரி உண்டா இல்லையா என்பது தெளிவாகத் தெரியவில்லை. வெல்லத்திற்கு கொள்முதல் வரி கட்டியபிறகு அந்தச் சரக்கை வெளி மாநிலத்திற்கு ஏற்றுமதி செய்தால் ஸி.எஸ்.டி. என்ற விற்பனை வரியைக் கட்டவேண்டுமா அல்லது அது தேவை இல்லையா என்பது தெளிவாகத் தெரியவில்லை. கொள்முதல் வரி கட்டினாலும் தமிழகத்திற்கு விற்பனையாவதற்குத்தான் அந்த விற்பனைவரி இல்லை. அனால், வெளி மாநிலத்திற்கு வெல்லத்தை ஏற்றுமதி செய்தால் அதற்கு ஸி.எஸ்.டி. கட்டவேண்டுமென்று அதிகாரிகள் சொல்கிறார்கள். அப்படி வெளி மாநிலத்திற்கு ஏற்றுமதி செய்யவேண்டுமானால் கொள்முதல் வரி செலுத்தியும் இந்த ஸி.எஸ்.டி. என்ற முறையில் 3 சதவிகிதம் விற்பனைவரியை வெளியிடங்களில் வியாபாரிகள் கட்டியிருக்கிறார்கள். இந்த விற்பனை வரியானது, கொள்முதலுக்கும் வரி கட்ட வேண்டும், விற்பனைக்கும் வரி கட்ட வேண்டுமா என்ற விவரத்தைத் தெளிவு செய்து அமைச்சரவர்கள் தெளிவாகத் தெரியப் படுத்த வேண்டும். நேற்றுகூட எங்கள் ஊரில் கமர்ஷியல் டாக்ஸ் ஆபீசர் அவர்கள், கொள்முதலுக்கு வரி கட்டிய போது, வெளி மாநிலத்திற்கு ஏற்றுமதி செய்தால் 3 சதவிகிதம் வீதம் வரி கட்ட வேண்டுமென்ற விபரத்தைச் சொல்கிறார்கள். இதைத் தெளிவாக கமர்ஷியல் டாக்ஸ் ஆபீசர் அவர்களுக்கு அமைச்சரவர்கள் தெளிவுபடுத்த வேண்டும். மீண்டும் சொல்கிறேன். ஏற்கெனவே வெளி மாநிலத்திற்குச் சரக்கு ஏற்றுமதி செய்தவர்கள் கமர்ஷியல் டாக்ஸ் கட்டியிருந்தால் அதை வாபஸ் செய்ய வேண்டும். அதற்கும் கமர்ஷியல் டாக்ஸ் ஆபீசர் அவர்களுக்கு உத்தரவு அனுப்ப வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன். வணக்கம்.



1970 ஜனவரி 28]

**திரு. என். சங்கரய்யா:** பேரவைத் தலைவரவர்களே, இந்த மசோதாவிலே மது பானங்கள் சம்பந்தமாக வந்திருக்கும் அந்தப் பிரச்னைகளைப்பற்றி எங்களுக்கு எந்த ஆட்சேபணையும் கிடையாது. குறிப்பாக, தேங்காய் மீது கொண்டு வரப் பட்டிருக்கும் காரணத்தால், வரி உயர்வை அவசரச் சட்டம் மூலம் போடப் பட்ட காரணத்தால் தேங்காயின் விலை மிகவும் உயர்ந்திருக்கிறது, விலைவாசி உயர்வு ஏற்பட்டிருக்கிறது. வியாபாரிகள், அரசாங்கத்தைக் காண்பித்து, இந்த வரியைப் போட்டதனால்தான் இப்படி விலை உயர்வு ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். தேங்காயின் விலை 75 காசு, 1 ரூபாய் என்று விற்கும் நிலைமை இருக்கிறது. ஆகவே, விற்பனை வரி சம்பந்தமாக முடிவு எடுக்கும் பொழுது பொதுவாக மக்களின் வாழ்க்கைத் தரம் பாதிக்கப் படாத அளவுக்கு நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். அது மிகவும் அவசியம். இப்பொழுது இந்தத் தேங்காயின் உற்பத்தி அதிகமாக இல்லை என்று சம்பந்தப்பட்டவர்கள் கூறுகிறார்கள். வெளி மாநிலத்திலேயிருந்து கொண்டு வர வேண்டியிருக்கிறது. அதனால் சேதாரம் ஏற்படுகிறது. எனவே, காய்கறிகள் என்ற வகையில், அழுகும் பொருள்களுக்குக் கொடுக்கும் விதி விலக்கைக் கொடுப்பதுபற்றி அரசாங்கம் யோசிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன். எனவே, அரசாங்கம் இதைப்பற்றி யோசித்து இந்த முடிவை மாற்ற வேண்டுமென்று விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, இந்தச் சட்டம் அவசரச் சட்டமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு, சட்டமாக ஆக்குவதற்காக இந்த அவையின்முன் விவாதத்திற்கு வந்திருக்கிறது. மத்தியப் பிரதேச விற்பனை வரி சட்டத்திலிருந்த ஒரு சட்டத்தை அப்படியே எடுத்து நாம் போட்டிருக்கிறோம். சுப்ரீம் கோர்ட் வரையில் சென்று செல்லுபடியாகும் என்று தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கும் அந்தச் சட்டத்தை வைத்திருக்கிறோம். இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டதன் முக்கியமான காரணம் வெளி மாநிலங்களுக்கு அனுப்புகிறவர்கள், வெல்லம், எண்ணெய் பொருள்களை வெளிமாநிலங்களுக்கு அனுப்பும்பொழுது "கன்ஸைன்மெண்ட் குட்ஸ் சேல்" என்ற பெயரால், உள்நாட்டு மாநிலத்திற்கும் வரி கட்டாமல், மத்திய சி.எஸ்.டி.-யும் கட்டாமல் அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். இதைத் தடுக்க அரசு பரிசீலித்துக்கொண்டிருந்தது. பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்தப் பரிசீலனையைத் தீவிரப் படுத்தி இதை எப்படித் தடுப்பது என்ற முயற்சியை எடுத்தார்கள். அதற்குப் பிறகு மத்தியப் பிரதேசத்தில் இப்படி ஒரு சட்டம் இருக்கிறது என்றும், அது சுப்ரீம் கோர்ட்டில் செல்லுபடியாகி இருக்கிறது என்றும் பார்த்து, அதன் பிறகு சட்டம் போட்டிருக்கிறோம். வெளி மாநிலத்திற்கு அனுப்புகிறவர்கள், "கன்ஸைன்மெண்ட் சேல்" செய்யும்பொழுது வரி ஏய்ப்பு செய்பவர்களைத் தடுப்பதற்காக இந்தச் சட்டமே தவிர விவசாயிகளைப் பாதிப்பதற்காக அல்ல.

திரு. ஹாண்டே அவர்கள் சொன்னார்கள், "ஃபர்ஸ்ட் பர்சேஸ் பாயிண்ட்" -இல் வரியிருந்தால் "சேல் பாயிண்ட்" டிலும் வருமா என்று கேட்டார்கள். அப்படி அல்ல, வாங்குபவர்கள் பர்சேஸ் வரி கட்டினால் அதற்குப் பிறகு உள் மாநிலத்தில் விற்பனை வரி கிடையாது.

வெளி மாநிலத்திற்கு அனுப்பும்பொழுது சி.எஸ்.டி. கட்ட வேண்டுமா என்பது பற்றி திரு. சி.கே.சி. அவர்கள் கேட்டார்கள். சி.எஸ்.டி. விலக்கு அளிக்கலாம் என்று அரசு முடிவு செய்திருக்கிறது. உள் மாநிலத்தில் வாங்குகிற "பர்ஸ்ட் பர்சேஸ் பாயிண்ட்" -டில் பர்சேஸ் டாக்ஸ் கட்டிவிட்டால் அந்தச் சரக்கை வெளி மாநிலத்திற்கு அனுப்பினால், சி.எஸ்.டி. யின் கீழ் வரி வராது, அதற்கு விலக்கு அளிக்கலாம் என்று முடிவு எடுத்திருக்கிறது. எனவே, அந்தச் சந்தேகம் தேவையில்லை.

விவசாயிகள்பற்றி திரு. ராமமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டார்கள். விவசாயிகள் கணக்கு வைத்துக் கொள்ள வேண்டுமா என்று கேட்டார்கள், விவசாயிகளுக்குக் கொடுமை இழைக்கப்படுவதாகச் சொன்னார்கள். அது தவருகச் சொல்லப்பட்டிருக்கும் என்று கருதுகிறேன். கணக்கு வைக்க வேண்டியது அவசியம். இதனால் விவசாயிகளுக்குப் பாதகம் இல்லை. இதனால் வியாபாரிகளுக்கு வேண்டுமென்றால் பாதகம், சங்கடங்கள் ஏற்படலாம், ஒத்துக் கொள்கிறேன். வியாபாரிகள் கட்டாத வரியைக் கட்ட வேண்டுமென்று முயற்சி எடுத்திருக்கிறதே தவிர, விவசாயிகளைக் கசக்க வேண்டுமென்று அல்ல. 'பர்ஸ்ட் பர்சேஸர்' என்றுதான் இருக்கிறதே தவிர 'பர்ஸ்ட் செல்லர்' என்று அல்ல. அப்படி விவசாயிகளிடத்தில் வியாபாரிகள் வாங்கும்பொழுது, தவருக வாங்கியிருக்கிருர் என்று புகார் இருந்து சொன்னால் அந்தப் புகார் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொணடுவரப்பட்டால் நிச்சயமாக விசாரணை செய்து அந்த வியாபாரி மீது நடவடிக்கை எடுக்கும் என்ற உத்தரவாதத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, அந்த அச்சமும் விவசாயிகளுக்கு இல்லை என்று கருதுகிறேன்.

தேங்காயின் விலை ஏறியதற்கு வரி விதிப்புத்தான் காரணம் என்று கம்யூனிஸ்ட் அங்கத்தினர் நண்பர் சங்கரய்யா அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. ஏற்கெனவே ஏறிக்கொண்டிருக்கிறது. தேங்காய்க்கு மல்ட்டி பாயிண்ட் சேல்ஸ் டாக்ஸ் இருந்து வந்தது. தேங்காய்க்கு வரி உண்டா இல்லையா என்று நீதிமன்றம் வரை வழக்காடி, வரி போடலாம் என்று தீர்ப்பளித்த பிறகு, தேங்காய் வியாபாரிகள் அரசாங்கத்திடம் முறையிட்டுக்கொண்டு, இதை ஒருமுனை வரியாக ஆக்குங்கள், பலமுனை வரியாக ஆக்கினால் சிறுசிறு வியாபாரிகளுக்குத் தொல்லையாகும் என்று சொன்னார்கள். அதை அரசாங்கம் பரிசீலித்து ஒரு முனை வரியாக இருப்பது நல்லது [illegible] சிறு சிறு வியாபாரிகளின் நலனை உத்தேசித்து, "பர்ஸ்ட்





பர்சேஸ் பாயிண்டில்" 'சிங்கிள் பாயிண்ட் டாக்ஸ்' ஆக மாற்றப்பட்டதே தவிர, வரி விதிப்பினால் விலை ஏறியது என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

மசோதாவை ஏற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. சி. கே. சின்னராஜி கவுண்டர் :** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கொள்முதலுக்கு விற்பனை வரி கட்டிவிட்டால் வெளிமாநிலத்திற்கு ஏற்றுமதி செய்யும்பொழுது சி.எஸ்.டி. வசூல் செய்வது இல்லை என்று விளக்கமாக இந்த அவையிலே சொல்லிவிட்டார்கள். ஏற்கெனவே, வெளிமாநிலத்திற்கு விற்பனை செய்தவர்கள், விற்பனை வரி கட்டியிருந்தால் அதை வாபஸ் செய்ய வேண்டுமென்ற உத்தரவை கமர்ஷியல் டாக்ஸ் ஆபீசர் அவர்களுக்கு அளிக்க வேண்டும். அடுத்தபடியாக, ஒரு கொள்முதல் வரிதான் என்ற விவரத்தை விவரமாக அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். ஏனென்றால் நேற்றைக்குக்கூட சி.டி.ஓ. அவர்கள் கொள்முதலுக்கு வரி கட்ட வேண்டும், கொள்முதலுக்கு வரி கட்டியவுடனே வெளி மாநிலத்திற்கு ஏற்றுமதி செய்யும்பொழுது அந்தச் சரக்கிற்கு 3 சதவிகிதம் வீதம் கட்ட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதனால் உடனடியாக சி.டி.டி. அவர்களுக்கு இதைத தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, இந்தச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்ட பிறகு, வெளிமாநிலத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட சரக்குகளுக்கு சி.எஸ்.டி. வாங்கியிருந்தால், அந்தச் சரக்கிற்கு ஏற்கெனவே பர்சேஸ் டாக்ஸ் கட்டியிருந்தால், அந்தப் பணம் கொடுக்கப்பட வேண்டும் என்று அரசாங்கம் உத்தரவிடும். மேற்கொண்டு விளக்கங்களை அதிகாரிகள் பெற வேண்டுமென்று விளக்கம் செய்யப்பட்டிருக்கிறது. முதல்முறையாக வெல்லத்தை விவசாயிகளிடத்தில் இருந்து வாங்குபவர்கள் வரி கட்ட வேண்டும், அதுதான் 'பர்ஸ்ட் பர்சேஸ்' என்பதற்கான விளக்கம்.

**திரு. க. இராமமூர்த்தி :** விவசாயிகள் எந்தவிதமான கணக்கையும், வெல்லம் பற்றி, தேங்காய் பற்றி கணக்கு வைக்கவேண்டுமென்று சொன்னார்கள் அமைச்சரவர்கள். அதைப் போலவே, இந்த விற்பனை வரி அதிகாரிகள் எந்த நிலைமையிலும் எந்த நேரத்திலும் எந்தச் சூழ்நிலையிலும் விவசாயிகளிடத்திலே எவ்வளவுக்கு வெல்லம் விற்றீர்கள் அல்லது தேங்காய் விற்றீர்கள் என்று கேட்க மாட்டார்கள் என்ற உத்தரவாதத்தையும் அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன். மற்றபடி இந்த மசோதாவைப் பொறுத்தவரையிலே இது நடைமுறையிலே விவசாயிகள் மீது அமைந்துவிடும் என்று சொல்லப்படுகிறது, நானே ஒரு விவசாயியாக இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, நானும் ஒரு விவசாயிதான். நானும் கரும்பு பயிரிடுகிற விவசாயி. இது விவசாயிகளிடத்திலே வரும் என்ற அச்சம் தேவையில்லை. விவசாயிகளிடத்தில் எவ்வளவு விற்றீர்கள் என்று கேட்கக் கூடாது என்ற அந்த உத்தரவாதத்தை இந்த நேரத்தில் கொடுக்கத் தயாராக இல்லை. விவசாயிகளிடத்தில், எவ்வளவு விற்றீர்கள் என்று கேட்டு, வியாபாரிகளைப் பிடிப்பதற்காகக் கேட்க வேண்டியிருக்கிறது. அதனால் விவசாயிகளுக்கு எந்தவிதமான பாதகமும் ஏற்படாது. அவர்கள் எவ்வளவு விற்றார்கள் என்ற தகவலை வைத்துக்கொண்டு வியாபாரிகளிடத்திலே வர வேண்டியிருக்கிறது. அதனால் வியாபாரிகளிடத்தில் வரி வாங்கத்தான் சட்டமே தவிர, விவசாயிகளைக் கசக்கிப் பிழிவதற்காக அல்ல. வியாபாரிகள் கொடுக்க வேண்டிய வரியை ஏய்த்திருந்தால் அதை வசூலிப்பதற்காகத்தான் சட்டம். இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு 1970-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 1/1970) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

பிரிவு 2 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

## பிரிவு 3

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னுள்ள கேள்வி:

"பிரிவு 3 மசோதாவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பிரிவு மூன்றுக்கு கீழ்க் கண்ட திருத்தத்தை நான் பிரேரேபிக்கிறேன்.

In clause 3, in the proposed section 7-A—

(a) in sub-section (1),—

(i) for the words "any goods, the sale or purchase of which is liable to tax under this Act", substitute the words and brackets "any goods (the sale or purchase of which is liable to tax under this Act)";



(ii) for the portion commencing with the words "shall pay tax on the purchase price" and ending with the words "such purchase price in a year", substitute the following, namely :—

"shall pay tax on the turnover relating to the purchase aforesaid at the rate mentioned in section 3, 4 or 5, as the case may be, whatever be the quantum of such turnover in a year:

Provided that a dealer (other than a casual trader or agent of a non-resident dealer) purchasing goods (the sale of which is liable to tax under sub-seition (1) of section (3) shall not be liable to pay tax under this sub-section, if his total turnover for a year is less than fifteen thousand rupees".

(b) renumber sub-section (2) as sub-section (3) and before the sub-section as so renumbered, insert the following sub-section, namely :—

"(2) Notwithstanding anything contained in sub-section (1), the provisions of section 7 shall apply to a dealer referred to in sub-section (1) who purchases goods (the sale of which is liable to tax under sub-section (1) of section 3) and whose total turnover for a year is not less than fifteen thousand rupees but not more than seventy-five thousand rupees; and such a dealer may, at his option, instead of paying the tax in accordance with the provisions of sub-section (1), pay tax at the rates mentioned in sub-section (1) of section 7".

இந்தத் திருத்தத்தின் முக்கியமான நோக்கம் பொதுவாக இது வரையிலே விற்பனை வரிச்சட்டத்தின் கீழ் ரூ. 15,000-க்கு கீழ் வியாபாரம் செய்பவர்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ரூ. 15,000-த்திலிருந்து ரூ.75,000 வரையில் வியாபாரம் செய்பவர்களுக்கு ஒரு கம்பவுண்டெட் ரேட்டில் டாக்ஸ் போடுவது என்று சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. முதலில் இதைப் பிரகடனப்படுத்தும்பொழுது இதை அதில் சேர்க்கத் தவறிவிட்டது. இப்பொழுது இந்த மசோதாவில் அதையும் சேர்த்திருக்கிறோம். அது தான் இந்தத் திருத்தம், இதை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசினர் திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 3, திருத்தப்படி, பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 4, 5, 6 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

குறுந்தலைப்பு, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தைப் பிரேரேபிக்கின்றேன்.

" தமிழ்நாடு 1970-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) மசோதா சட்டப் பேரவை மசோதா என் 1/1970, திருத்தப்பட்டபடி, நிறைவேற்றப்படவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, மசோதா திருத்தப்பட்டபடி சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**(இ) தமிழ் நாடு 1970-ம் ஆண்டு மோட்டார் எரிபொருள் (ஸ்பிரிட்) விற்பனை வரி விதிப்பு (திருத்த) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண். 2/1970).**

THE HON. THIRU P. U. SHANMUGAM: Sir, I move—

"That the Tamil Nadu Sales of Motor Spirit Taxation (Amendment) Bill* 1970 (L. A. Bill No. 2 of 1970) be taken into consideration."

Notices were issued for the assesment of certain transactions in motor spirit by the oil companies in Tamil Nadu, which had escaped assessment under the Tamil Nadu Sales of Motor Spirit Taxation Act, 1939, Tamil Nadu Act VI of 1939. The action in this regard was taken under the provisions of rule 26 of the Madras Sales of Motor Spirit Taxation Rules, 1939, which provides for the assessment of transactions, which have escaped assessment and for the revision of assessment in cases where the tax has been assessed at too low a rate. Such action was challenged in Caltex (India) Limited vs. Commercial Tax Officer. It was held in the said case that sub-rule (1) of rule 26 of the said rules is invalid, as the said Tamil Nadu Sales of Motor Spirit Taxation Act, 1939, does not empower the Government to make such a rule. On examination of the implications of the judgment, the Government consider it necessary to amend the said Tamil Nadu Sales of Motor Spirit Taxation Act, 1939, suitably with retrospective effect and to validate past levy and collection of tax since 1st April 1958. Clause 3 of the Bill before the House contains the necessary provisions in this regard. Clause 4 of the Bill provides for amendment of section 10 of the said Act consequent on the provision proposed as mentioned above.

Under section 17 of the said Act, the officers authorised by the Government are empowered to investigate all offences against the said Act. Under section 20 of the said Act, the prescribed authority is empowered to compound offences against the said Act. It is considered necessary to provide also for investigation and composition of offences against the rules made under the Act. Clauses 5 and 6 of the Bill contain the necessary provision in this regard.

Under section 28 of the said Act, the Government are empowered to issue orders to remove any difficulty that may arise in giving effect to any of the provisions of the Act. In Messrs.

* Published in the *Fort St. George Gazette* (Extraordinary), dated 24th January 1970.





Court has observed that the power to remove any doubt or difficulty by altering the provisions of the Act would, in substance, amount to exercise of legislative authority and that it cannot be delegated to an executive authority. The Government have therefore decided to avail of this opportunity to omit section 28 of the Act. Clause 7 of the Bill provides for the same. Clause 8 of the Bill is a consequential one.

Clause 9 of the Bill validates all assessment or reassessment or collection of any tax due on any sale of motor spirit which has escaped assessment to tax or which has been assessed at a rate lower than the rate at which it is assessable under section 3 of the said Act made at any time after the date of the commencement of the said Act and before the date of publication of the proposed Amendment Act in the *Fort St. George Gazette*.

Sir, I commend the motion for the acceptance of the House.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 9 வரையில் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

குறுந்தலைப்பு, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

THE HON. THIRU P. U. SHANMUGAM: Sir, I move—

"That the Tamil Nadu Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1970 (L. A. Bill No. 2 of 1970) be passed.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**(ஈ) 1969-ம் ஆண்டு, சிவில் நடைமுறைச் சட்டக்கோவை (தமிழ் நாடு திருத்த) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண். 25/1969).**

THE HON. THIRU S. MADHAVAN: Mr. Deputy Speaker, Sir, I move—

"That the Code of Civil Procedure (Tamil Nadu Amendment) Bill,* 1969 (L.A. Bill No. 25 of 1969) be taken into consideration.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு மசோதா பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

* Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 13th September 1969.

[1970 ஜனவரி 28

பிரிவு 2 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 1.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி. 'பிரிவு 1, மசோதாவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்'.

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I move—

"In clause 1, for the figures "1969", substitute the figures "1970".

திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 1, திருத்தப்பட்டபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பட்டு, நிறைவேற்றப்பட்டது.

முகப்புரை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

'முகப்புரை மசோதாவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்'.

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I move the following amendment :—

'In the enacting formula, for the words "Twentieth year, substitute the words "Twenty-first year".

திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

முகப்புரை, திருத்தப்பட்டபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பட்டு, நிறைவேற்றப்பட்டது.

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I move—

That the Code of Civil Procedure (Tamil Nadu Amendment) Bill, 1969 (L.A. Bill No. 25 of 1969) as amended, be passed'.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, மசோதா திருத்தப் பட்டபடி, சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

7. அரசினர் தனித் தீர்மானங்கள்.

(அ) பருத்தி போக்குவரத்துச் சட்டத்தின்கீழ் பிறப்பிக்கப்பட்ட விதிகளுக்குத் திருத்தம்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, "1923-ம் ஆண்டு பருத்திப் போக்குவரத்துச் சட்டத்தின் (மத்திய சட்டம் 3/1923) 7-வது பிரிவின் கீழ் தமிழ்நாடு 1950-ம் ஆண்டு



1970 ஜனவரி 28] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

பருத்திப் போக்குவரத்து விதிகளைச் சேர்ந்த 10-வது விதியில் செய்யப்பட்ட சில திருத்தங்கள் மேற்படி சட்டத்தின் 8-வது பிரிவின் கீழ் ஏற்று, தமிழ் நாட்டுச் சட்டமன்றப் பேரவையில் 1968 ஆகஸ்டு 26-ம் நாளன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானம், மேற் சொன்ன விதியின் III, IV பகுதிகளுக்கான திருத்தங்களைப் பற்றியவரை ரத்து செய்யப்படுவதாக" என்று நான் முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(ஆ) தமிழ்நாடு 1931-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் சில விவர அட்டவணைகளைத் திருத்தும் வரைவு விதிக்கு ஒப்புதளித்தல்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவர் அவர்களே, என் பெயரிலுள்ள, கீழ்க் கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1931-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 3/1931) II, III -வது விவர அட்டவணைகளைத் திருத்தும் வகையில் மேற்படிச் சட்டத் தின் 17-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ் மாநில அரசினால் பிறப்பிக்கப்படும் கீழ்க்கண்ட வரைவு விதிக்கு மேற்படி பிரிவின் (3) உட்பிரிவில் சொல்லியுள்ளவாறு ஒப்புதலிக்கப்படுமாக.

வரைவு விதி

தமிழ்நாடு 1931-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 3/1931) 17-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ் நாட்டு ஆளுநர் அவர்கள், மேற்படிச் சட்டத்தின் II, III -வது விவர அட்டவணைகளில் கீழ்க்கண்ட திருத்தங்களை இதனால் செய்கிறார்.

திருத்தங்கள்

(1) மேற்சொன்ன II -வது விவர அட்டவணையில் (1) பத்தி யில் 4 வது இனத்துக்கு எதிராக (2) (3) பத்திகளிலுள்ள பதிவுகளுக்குப் பதிலாக முறையே கீழ்க்கண்ட பதிவுகளை அமைத் துக் கொள்ள வேண்டும் :—

அவையாவன :—

"100.00 150.00"

(2) மேற்சொன்ன III-வது விவர அட்டவணையில் (1) பத்தி யில் 4 -வது இனத்துக்கு எதிராக (2) முதல் (5) வரையிலான பத்திகளிலுள்ள பதிவுகளுக்குப் பதிலாக முறையாக கீழ்க்கண்ட பதிவுகளை அமைத்துக்கொள்ள வேண்டும். அவையாவன :—

"12.00 36.00 18.00 54.00".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

## 8. ஆளுநர் அவர்களின் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, மேன்மை தங்கிய கவர்னர் பெருமான் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் பேரில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல வேண்டும் என்ற நிலையில் இன்று இறுதி நாளில் என்னுடைய கருத்துக்களை என்னுடைய கட்சியின் கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன்.

சென்ற வருஷம் கவர்னர் பெருமான் உரைக்குப் பிறகு இப்பொழுது இந்த உரை நிகழ்த்தியிருக்கும் ஒரு வருஷத்திலே பல விதமான அரசியல் மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அரசியல் மாறுதல்கள் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், அமைதியான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவிலேயே, தலைநகரத்திலேயே, பலவிதமான மாநிலங்களிலே பல்வேறான சூழ்நிலைகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை மிகைப் படுத்துவதாகச் சொல்ல முடியாது. இப்பொழுது நாட்டில் அரசியல் சூழ்நிலைகள் எப்படி யிருக்கின்றன என்றால், மிகவும் வருந்தத்தக்க முறையில், மக்கள் மிகவும் அனுதாபப்படும் முறையில் நடந்து கொண்டிருக்கின்றன. ஜனநாயக முறைப்படி ஆளுவோம் என்று பிரகடனம் செய்துவிட்டு, இன்றைக்கு பணம், பதவி இரண்டையும் வைத்து எதையும் அவர்களும், அவர்களைச் சேர்ந்தவர்களும் சாதித்துக் கொள்ளலாம் என்கிற போக்கு நல்ல போக்கல்ல. பணம் இருந்தால், பதவி பெற்று விடமுடியும்; அதிகாரம் இருந்தால் எதையும் செய்துவிட முடியும், தவறையும் செய்துவிட்டு, நல்லதாகக் காட்டமுடியும் என்ற நிலை, இந்த நிலை நாட்டுக்கு நல்லதான நிலை இல்லை. அத்தகைய சூழ்நிலை இருப்பதை அரசியல் சூழ்நிலை நன்றாக இருக்கிறது, நல்ல முறையில் போய்க் கொண்டு இருக்கிறது என்று சொல்வதானால், அது நம்மை நாமே ஏமாற்றிக்கொள்ளும் நிலைதான் என்பதை வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். எந்த நிலையில் இருக்க வேண்டும் ?

" Government of the people, for the people and by the people " என்று அப்ரகாம் லிங்கன் சொன்னார்கள். ஜனநாயக அரசில், அரசு என்று இருந்தால், ஒரு கட்சி தன் பதவியைக் காப்பதற்காக, அரசில் இருப்பதற்காக, காரியங்களைச் செய்கிறார்கள். யாராக இருந்தாலும், எந்தத் தவறைச் செய்துவிட்டாலும், ஒரு போக்கு வருந்தத்தக்க போக்கு என்றால், அது தமிழ்நாட்டில் மட்டிலன்றி, இந்தியாவிலேயே பூராவுமாகக் கருதவேண்டும். படித்தவர்கள், விவேகம் உள்ளவர்கள், அரசியல் கருத்து உள்ளவர்கள், எல்லோரும் சேர்ந்து ஒரு நல்ல முடிவுக்கு வரவேண்டும். ஒரு சில கட்சிகள்மட்டும் இப்படி ஒரு முடிவு காண முடியாது.





கவர்னர் பெருமான் சொன்னார்கள், இங்கே மாண்புமிகு அண்ணாதுரையார் மறைந்தபிறகு சுமுகமான முறையில், சிறிது காலத்தில், அரசியலில் நிலைமைகள் அமைதியாக ஏற்பட்டிருக்கின்றன என்று. எத்தனையோ குழப்பங்கள். அபிப்பிராய பேதங்கள், அறிக்கைகள். இவையெல்லாம் எல்லோருக்கும் தெரிந்திருக்கும். அமைதியான முறையில் அரசாங்கம் மாறுதல் ஏற்பட்டது என்பதை ஏற்றுக்கொள்வோம். எந்த நிலையில் ஏற்பட்டது? ஏன் ஏற்பட்டது? எல்லோருக்கும் தெரியும், ஆளும் கட்சியில் இருக்கும் பல அங்கத்தினர்களுக்கும் தெரியும்.

அடுத்தபடியாக, இப்பொழுது நம் நாட்டில், கவர்னர் பெருமான் உரையில் பார்த்தோமானால், எந்த விதமான முன்னேற்றமும் தமிழ் நாட்டில் இல்லை என்பதைப் பார்க்கிறோம். புள்ளிவிவரங்கள் இருக்கின்றன. புள்ளி விவரங்கள் என்னவோ இருக்கின்றன. அந்தப் புள்ளி விவரங்களும் எற்கனவே இருப்பதன் விஸ்தரிப்புத் தானே யல்லாமல், எந்தவிதமான பொருளாதாரத் திட்டமும் அமைந்திருக்கிறதா என்று பார்த்தால், இல்லை. முதல் அமைச்சர் பதில் சொல்லும்போது பட்ஜட்டில் வருகிறது என்று சொல்லலாம். சர்க்காருடைய கொள்கை என்ன ? சர்க்காருடைய திட்டம் என்ன ? 1967-லிருந்து இன்று வரையிலும், அப்படியே இருக்கிறது. பட்ஜட்டிலே வரும், பட்ஜட்டிலே வரும் என்று மூன்று பட்ஜட்டுக்கள் போய்விட்டன. அப்படி மூன்று ஆண்டுகள் கழிந்து இருக்கின்றன. இன்னமும் பழைய கருப்பன் கருப்பனே என்ற நிலையில் தான் இருக்கிறது. முன்னேற்றம் ஒன்றுமில்லாவிட்டாலும், பின்னேற்றம் வெகு வேகத்தில் போவதைத்தான் பார்க்கிறோம். 67-ல் எந்த அளவிற்கு வேலையில்லாத் திண்டாட்டம்? அதிகமாக இப்பொழுது எவ்வளவு வேலையில்லாத் திண்டாட்டம் ? 67-ல் எவ்வளவு இண்டஸ்டரியல் டெவலப்மெண்ட், தொழில் முன்னேற்றம் இருந்ததோ அதைவிட ஏதாவது அதிகமாகி யிருக்கிறதா என்றால், எந்தவிதமான முன்னேற்றமும் இல்லை.

விவசாயத்தை எடுத்துக் கொண்டால், ஐ.ஆர். 8 என்ற நெல்லை அற்புதமான தானியம், அதை நாங்கள் தான் கொண்டு வந்தோம் என்கிறார்கள். பெருமை தேடிக் கொள்ளட்டும். பிலிப்பைன்ஸில் லா போன்ஸ் என்பவரால் இண்டர்நாஷனல் ரைஸ் ரிஸர்ச் இன்ஸ்டிட்யூட்டில் கொண்டு வரப்பட்டது. நாட்டில் என்ன பழக்கம் என்றால், ஏதாவது கோஷத்தைக் கிளப்பவேண்டியது. ஒரு விஷயம் என்றால். கோஷம் போடவேண்டியது. முன்பு ஒரு டைரக்டர் ஆப் அக்ரிகல்சர் இருந்தார். அவர் என்ன சொன்னார், இந்த நாட்டின் விவசாயப் பிரச்சினையே தீர்ந்துவிட வேண்டுமானால், 'ஸெஸ்பேனியா' என்ற ஒரு பயிரை வயலில் வாப்பில் நட வேண்டும் என்றார். அதுபற்றி கவர்னர் உரையில் கூட வந்துவிட்டது. ஸெஸ்பேனியா நல்ல பசுந்தாள் உரந்தான். ஆனால் அதை நெல்லோடு சேர்ந்த அளவில் வயலில் போடுவது நல்லதல்ல என்று நான் அப்பொழுதே அதை எதிர்த்தேன். அதன் பிறகு சர்க்கார்

உத்தரவை வாபஸ் வாங்கினார்கள். அது பயிராக வில்லை, நாற்றங் கால்களில் தனியாக வயல்களிலே பயிர் செய்வதுதான் முறை. நெல் பயிருடன் அது இருக்கக்கூடாது என்பது எங்கள் வாதம். கடைசியில் அனுபவமுள்ள விவசாயி சொல்வதுதான் சரி என்பதை ஏற்றுக்கொண்டார்கள்.

அடுத்தபடியாக, ஐ.ஆர். 8 பயிரிட்டால் அமோக விளைச்சல் கிடைக்கிறது என்று சொல்கிறார்கள். 900 ரூபாய் முதலீடு போட்டு ஐ.ஆர். 8 பயரிட்டால் அந்த நிலத்தில் 45 அல்லது 50 மூட்டை நெல் கிடைக்கிறது. 300 ரூபாய், 400 ரூபாய் என்ற அளவில் முதலீடு போட்டால் 40 மூட்டை நெல் கிடைக்கக்கூடிய நெல்ரக வித்துக்களும் இருக்கின்றன. 900 ரூபாய் முதல் போட்டு 40, 50 மூட்டை நெல் கிடைப்பது நல்லதா, 300, 400 ரூபாய் போட்டு நாற்பது மூட்டை நெல் கிடைப்பது நல்லதா என்பதை யோசனை செய்து பார்க்க வேண்டும். மேலும், விவசாய இலாகாவிலே இன்றைக்கு அதிகமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன, விஸ்தரிப்பு செய்யப்பட்டிருக்கின்றன என்று சொல்கிறார்கள். ஆனால் அந்த இலாகாவிலே தொடர்ந்து மூன்று வருஷங்களாக ஒரே டைரக்டர் இருந்திருக்கிறார்களா என்றால், இல்லை. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொண்ட இந்த மூன்று ஆண்டுகளிலே மூன்றுபேர் மாறியிருக்கிறார்கள். காரணம் என்ன? விவசாயம் சாதாரணமாக பெருக வேண்டுமென்றால், விவசாயிக்கு ஒரு பத்து வருஷ அனுபவமாவது இருக்க வேண்டும். அப்படியிருக்க விவசாய இலாகாவுக்கு ஆண்டுக்கொரு டைரக்டர் மாறிக் கொண்டே இருப்பது ஏன்? இப்படியிருந்தால் அந்தத் துறையை எப்படி அபிவிருத்தி செய்ய முடியும்? ஐ.ஆர். 8 நெல் ரகம் நல்லதாக இருக்கலாம். உற்பத்திப் பெருக்கிற்கு நல்ல விளைச்சலைத் தருவதாக இருக்கலாம். ஆனால் 999 ரூபாய் முதலீடு போட்டு, 50 மூட்டை நெல் கிடைக்கிறது என்று வைத்துக்கொண்டாலும், அந்த நெல் நல்ல விலைக்கு விற்றால்தான் அவனுக்கு ஓரளவுலாபம் கிடைக்கும். சாதாரண விவசாயி, சிறுநில விவசாயி ஐ.ஆர். 8 ஐப் போட்டு எதிர்பாராவிதமாகக் கெட்டுவிட்டால், அவனுடைய குடும்பமே நாசமாகிவிடும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். ஒருவருக்கு ஐந்து ஏக்கர் இருக்கிறதென்றால், அதில் ஒரு அரை ஏக்கர் இந்த ஐ.ஆர். 8 போடலாம். ஒருவருக்கு பத்து ஏக்கர் நிலம் இருக்கிறதென்றால், ஒரு ஏக்கர் நிலத்தில் இந்த நெல்லைப் பயிரிடலாம். ஆனால் சிறுநில விவசாயி இதைப் பயிரிட முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது உணவுப் பிரச்சினையைத் தீர்த்துவிடும் என்று சொல்வது சரியல்ல, இன்றைக்கு விவசாயிக்கு என்ன உதவிகள் செய்து கொடுக்கப்படுகின்றன? 'சர்க்கார் ஒரு விவசாயிக்கு 500 ரூபாய் உதவி கொடுத்தாக வேண்டும். உரம் கொடுக்க வேண்டும், உரம் கிடைக்கவில்லை' என்று எங்கள் தரப்பிலிருந்து கேட்டபோது அமைச்சர் அவர்கள் 'எப்போது கிடைக்கவில்லை' எங்கே கிடைக்கவில்லை?' என்று கேட்டார்கள். ஒருவனுக்குப் பசி ஏற்படும்போதுதான் உணவு அளிக்கவேண்டும்.





அவனுடைய பசிபோன பிறகு உணவைக் கொடுத்தால் என்ன பயன? காலா காலத்தில் உரிய காலத்தில் விவசாயிகளுக்கு உதவிகள் செய்து தரப்படவில்லையென்கிற குற்றச்சாட்டை யாரும மறைக்க முடியாது மறுக்க முடியாது. நெல் உற்பத்தியில் நெல் ரகங்களில் குறைந்த கால அளவிலே நிறைந்த பயன் கொடுக்கும் விதைகளைத் தயாரிப்பதில், அதிகமாகப் பயன்கொடுக்கும் நெல் ரகங்கள் எவை எவை என்பதுபற்றி ஆராய்ந்து, அவற்றை நடைமுறையில் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

'பொருளாதாரத் திட்டம் என்ன' என்று கேட்டால், 'நாங்கள் செய்வதெல்லாம் பொருளாதார திட்டம்தான்' என்று சொல்கிறார்கள். சென்ற மார்ச் மாதத்தில் பட்ஜெட்டின்போது, படஜெட்டில் எல்லாம் நன்றாக இருக்கிறது, சிறப்பாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அப்போது எங்கள் கட்சியில் இருப்பவர்கள், 'ஒன்றுமே நன்றாக இல்லை, மழை இல்லை, நிலம் வறண்டு போய் இருக்கிறது' என்று உண்மை நிலையை எடுத்துக்கூறினார்கள். ஆளுங்கட்சித்தரப்பில் ஏப்ரல் மாதத்தில் 'ஏதோ கொஞ்சம் கொஞ்சம் வ;ட்சி' இருக்கிறது என்று ஒத்துக்கொண்டார்கள். பின்னர் வறட்சி, வறட்சி என்ற அளவில் மத்திய சர்க்காரிலிருந்து 3 கோடி ரூபாய் கிடைத்தது. பிறகு மூன்று கோடி, ஆறு கோடியாகி, ஆறு கோடி, பன்னிரண்டு கோடியாகி, பின்னர் பன்னிரண்டு கோடி பதினெட்டு கோடியாக உயர்ந்தது. இப்போது என்ன சொல்கிறார்கள் என்றால், 'பார்த்தீர்களா, நாங்கள் பதினெட்டு கோடி பெற்று வறட்சியை சமாளித்துவிட்டோம்' என்கிறார்கள். மத்திய சர்க்காரிடத்திலேயிருந்து பெற்ற பதினெட்டு கோடியை நன்றாகச் செலவழித்துவிட்டார்களா என்றால் இல்லை. அதன் பயன் பூரணமாக மக்களுக்குக் கிடைத்ததா என்றால் இல்லை. இவற்றையெல்லாம் நாம் கேட்டால், 'இதையெல்லாம் கேட்க நீங்கள் யார்?' என்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாகச் செலவழித்தோம் என்கிறார்கள். பஞ்சாயத்து தலைவர்கள் எல்லாம் காங்கிரஸ்காரர்கள்தான் இருக்கிறார்கள் என்கிறார்கள். தமிழகத்தில் இருக்கும் 375 பஞ்சாயத்து யூனியன்களிலும் காங்கிரஸ்காரர்கள்தான் தலைவர்களாக இருக்கிறார்களா? ஏதாவது நன்றாக நடந்தால் அது அவர்கள் கட்சி. ஏதாவது தவறாக நடந்துவிட்டால் காங்கிரஸ்காரன்மேல் பழியைப் போடுவது. எல்லாவற்றையும் பஞ்சாயத்து யூனியன் தலைவர்களாக இருக்கக் கூடிய காங்கிரஸ்காரர்கள் தான் இப்படிச் செய்துவிட்டார்கள் என்று பழியைப் போடுகிறார்கள். பழி ஒரு பக்கம் இருக்க பாவம் ஒரு பக்கம் போய்ச் சேருகிறது. மாவட்டக் கலெக்டரும் கமிஷனரும் சேர்ந்து தங்களுக்கு இஷ்டமான இடத்தில் செலவு செய்துவிட்டு, பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள்மீது பழியைப் போடுவதா? இது அரசியல் நேர்மையா? இது அரசியல் நாணயமா? நாம் கேட்டால் சரியான பதில் இதற்கு இல்லை. பஞ்சாயத்து யூனியனிலே, டிஸ்ட்ரிக்ட் டெவலெப்மென்ட் கவுன்சிலிலே எந்தெந்த திட்டத்திற்கு எவ்வளவு தொகை செலவழிப்பது என்று

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1970 ஜனவரி 28

ஒரு தீர்மானத்தைப் போட்டோம். கோயம்புத்தூருக்கு 5½ லட்சம், வட ஆர்க்காடு ஜில்லாவுக்கு 5½ லட்சம் என்று கேட்டோம். புள்ளிவிவரம் எல்லாம் சொன்னோம். வறட்சி நிதியிலிருந்து மக்களுக்குத் தேவையான நிவாரண வேலைகள் செய்யப்படவில்லையென்று குற்றம் சாட்டாமல் இருக்கமுடியாது. கணக்கு எல்லாவற்றுக்கும் சொல்லவேண்டும். எனக்கு ஒன்று நினைவிற்கு வருகிறது. ஒரு தர்மகர்த்தா கோயிலுக்கு ஒரு யானை வாங்க வேண்டுமென்று சொல்லி, பத்தாயிரம் ரூபாய்க்கு ஒரு யானை வாங்கினாராம். அதைப் பராமரிப்பதற்காக மாதம் இரண்டாயிரம் ரூபாய்வரை ஆனது என்று கணக்கு எழுதிவைத்தாராம். யானை நோய்வாய்ப்பட்டபோது, அதனுடைய சிகிச்சை செலவு இரண்டாயிரம் ரூபாய் என்று எழுதி வைத்தாராம். கடைசியில் யானை பிழைக்காமல் செத்துவிட்டது. கடைசியில் யானைக்கு உண்டான தகனக் கிரியை செலவுகள் என்ற முறையில் இரண்டாயிரம் ரூபாய் என்று எழுதினாராம். கடைசியில் கணக்குப் பார்த்த போது, யானை வாங்கினது, அதற்குத் தீவனம் வாங்கியது, சிகிச்சை செலவு, தகனக்கிரியை செலவு எல்லாவற்றுக்குமாக சேர்ந்து 37 ஆயிரம் ரூபாய் செலவானது என்று கணக்கு எழுதி வைத்திருந்தாராம். கடைசியில் பார்த்தால் யானையே வாங்காமல், யானை வாங்கியதாகவும், தீவனம் வாங்கியதாகவும், டாக்டர் செலவு செய்ததாகவும், தகனக் கிரியை செலவு செய்ததாகவும் கணக்குதான் எழுதி வைத்திருந்தாராம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** எந்த ஊரில்?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** உங்கள் ஊரில்தான்! திருவாரூர் பக்கத்தில்தான்! கதையில்தான் சொல்கிறேன். இம்மாதிரியான காரியங்கள் நடைபெறலாமா? வறட்சி நிதியை நீங்கள் செலவு செய்வது கோயிலுக்கு யானை வாங்கிய கதையாகத்தான் இருக்கிறது. கடந்த ஆகஸ்ட் மாதத்தில் ஜனாதிபதி தேர்தல் நடந்தது. அந்த மாதத்தில் மத்திய அரசிலிருந்து அதிகமான அளவில் பணம் கிடைத்தது. ஆகஸ்ட் 16-ம் தேதி ஜனாதிபதி தேர்தல் என்றால், ஆகஸ்ட் 14-ம் தேதியன்று 3 கோடி ரூபாய் பட்டுவாடா செய்யப்பட்டது. பின்னர் மூன்று மாதத்தில் 18 கோடி ரூபாய் வந்துவிட்டது. இந்தப் பணத்தைச் செலவு செய்வதற்காக போட்ட அதிகாரிகள் எங்கே? பசித்தவன் ஒருவனுக்கு திடீரென ஒரு வண்டி சாதத்தைக் கொண்டுவந்து வைத்துவிட்டால் எவ்வளவுதான் அவன் சாப்பிட முடியும்? சாப்பிட்டது ஜீரணமாக வேண்டாமா? 18 கோடி ரூபாய்க்குக் கணக்கு கேட்டால் சால்ஜாப்பு சொல்கிற காட்சியைப் பார்க்கிறோம். நியாயமாக, நேர்மையாக இருப்பதற்காக ஒரு விசாரணை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பப்ளிக் அக்கவுன்ட்ஸ் கமிட்டி இருக்கிறதே என்று சொல்லிவிடுவார்கள். அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா? ஒரு தடவை இரண்டொரு விஷயங்கள் வந்தன. மறைந்த முதலமைச்சர் அண்ணாதுரை அவர்கள் வீட்டிலிருந்த சமயத்தில்



1970 ஜனவரி 28] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

நேரில் நானே போய் பேசிவிட்டு வந்திருக்கிறேன். யாராக இருந்தாலும் அவர்களின்பேரில் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். அதை நான் பாராட்டுகிறேன். அவர் இருக்கும் போதே பப்ளிக் அக்கவுன்ட்ஸ் கமிட்டித் தலைவன் என்ற முறையில் நான் குற்றங்களைச் சொன்னபோது, அவர் யாராக இருந்தாலும் தண்டிக்க வேண்டுமென்று கூறினார்கள். சமீபத்தில் 70 லட்சம், 80 லட்சம் என்பதை வாயில் போட்டுக்கொள்வது என்பது சகஜமாக இருக்கிறது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** எந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது? ஆதாரத்தோடு சொல்லவேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** ஆதாரத்தோடுதான் சொல்கிறேன். அரசாங்கம் உருளைக்கிழங்கு வாங்கியதில் 6 லட்சம் ரூபாய் நஷ்டம். இதற்கு நீதிவிசாரணை நடத்த வேண்டும். யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** யாராக இருந்தாலுமா? இதற்குமுன்பு இருந்தவர்களாக இருந்தாலும் பரவாயில்லையா?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்தான் இப்போது உங்கள் நண்பராகி விட்டாரே. விஷக்கிருமி புகழ் பெற்றவராயிற்றே. உருளைக் கிழங்கு வியாபாரத்திற்கு 87 லட்சம் ரூபாய் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டது. இதனை சரிவரக் கணக்கில் பதியவில்லையென்று அக்கவுன்டன்ட் ஜெனரல் சொல்லியிருக்கிறார்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** நீங்கள் சொல்வதில் எந்தக் கருத்து மாறுபாடும் எங்களுக்கு இல்லை. யார், எவர் என்று பெயரைச் சொல்லியே குறிப்பிடுங்கள். அவர், இவர் என்று சொல்லும்போது பத்திரிகை நிருபர்களும், மற்றவர்களும் எங்களை தவறாக நினைத்துவிடுவதற்கு இடமளிக்கும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அவர் என்று சொன்னது நீங்கள் உட்கார்ந்திருக்கிற இடத்தில் அன்றைக்கு எங்கள் கட்சியின் சார்பில் உட்கார்ந்திருந்த திரு. பக்தவச்சலம் அவர்களைத்தான். இன்றைக்கு இசை உலகில் புகுந்திருக்கிறார். கர்நாடக சங்கீதம் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி:** சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். சபையில் இல்லாதவர்களைப் பற்றி இப்படி பேசலாமா?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** முதல் அமைச்சர் அவர்கள் பெயரைச் சொல்ல வேண்டும் என்பதனால் சொன்னேன். அவர் ஏன் கேட்டார்? 1965-66 இல் நடந்ததாகவே இருக்கட்டுமே. நீங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு ஏன் நடவடிக்கை எடுத்திருக்கக்

கூடாது? இதற்காக ஒரு கமிட்டியைப் போட்டு விசாரணை செய்ய வேண்டும். யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதுதான் என் கோரிக்கை.

இன்றைக்கு முதல் அமைச்சராக இருக்கக்கூடியவர்கள் அன்றைக்கு எதிர்க் கட்சியில் உட்கார்ந்து எருக்கஞ்சேரி விஷயத்தைப்பற்றி விளாசிக் கட்டினார்களே. இவர் ஆட்சிக்கு வந்த பிறகு ஏன் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை? லட்சக் கணக்கான ரூபாய் மோசடி. கலெக்டரைக் கைக்குள் போட்டுக்கொண்டு விலை வைத்து வாங்கினார்கள். எல்லாவற்றுக்கும் மந்திரி இருக்கிறது. யானை வாங்கின கதை போல. இப்போதுதான் அமைச்சராக உட்கார்ந்திருக்கிறார்களே, ஏன் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எருக்கஞ்சேரி விவகாரத்தை எடுத்து வெளிக்குக் கொணர்ந்தவனே நான் தான். அமைச்சர் வெங்கட்டராமன் அவர்கள் விசாரணை நடத்தினார்கள். விசாரணை நடந்துகொண்டிருந்தபோது 3 பேர் இறந்து விட்டார்கள். நாம் போய்த்தான் அவர்களைத் தண்டிக்க வேண்டும். (சிரிப்பு) மிச்சம் உள்ள இரண்டு, மூன்று பேர்களின் மீது டிபார்ட்மெண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நான் கேட்டேன். விசாரணை நடந்தது. மூன்று பேர் இறந்தார்கள், இரண்டுபேர் மீது இலாக்கா நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று சமாதானம் சொல்லிக்கொண்டிருக்கிறீர்களே. பல லட்சம் ரூபாய் மோசடி. அரசியல், நாணயம், நேர்மை எப்படி இருக்க முடியும் என்பதற்காகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தவறு செய்தவர்கள் யாராக இருந்தால் என்ன? இந்தப்பக்கம் இருந்தபோது எங்களைக் குற்றம் சாட்டிக் கொண்டிருந்த நீங்கள் அந்தப்பக்கம் போய் உட்கார்ந்த உடனே ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?

அடுத்தபடியாக ரேஷனை எடுத்துவிட்டோம். உங்கள் கொள்கை என்ன என்று கேட்டார்கள், பூரணமாக எங்கே கட்டுப்பாட்டை எடுத்திருக்கிறீர்கள்? உற்பத்தி பெருகிவிட்டது, விலைவாசிகள் சீராக இருக்கும் என்கிற நிலைமையிலா ரேஷனை எடுத்திருக்கிறீர்கள்? பஞ்சாயத்துத் தேர்தல் வரப்போகிறது, படி அரிசித் திட்டத்தை விஸ்தரிக்க உங்களுக்குக் கையாலாகாது. பாருங்கள் ரேஷனையே எடுத்துவிட்டோம், என்று மக்களை ஏமாற்ற ரேஷனை எடுத்திருக்கிறீர்கள். முன்பு முதல் அமைச்சர் அவர்கள் மான்செஸ்டர் கார்டியன் பத்திரிகைக்குக் கொடுத்த பேட்டியில் படி அரிசி திட்டத்தை மதுரைக்குக் கூட விஸ்தரிக்கப் போகிறோம் என்று சொன்னார்கள். படி அரிசித் திட்டத்தை விஸ்தரிக்க கையாலாகவில்லை. ரேஷனையே எடுத்துவிட்டோம் என்கிறார்கள். எடுத்தீர்களா? நிலைமை மோசமானால் கொண்டு வருவோம் என்கிறீர்கள். யாரை பயமுறுத்துகிறீர்கள்? வேண்டுமானால்





கருத்திருமன் நல்ல அரிசியாக அரைத்துக் கொடுக்கட்டுமே என்று பொதுக்கூட்டங்களில் பேசுகிறார்கள். ஏன் கொடுக்க முடியாது? விவசாயிகளுக்குக் கட்டுபடியாகக் கூடிய விலையைக் கொடுத்தால் நல்ல நெல்லாக, நல்ல அரிசியாக விவசாயிகள் கொடுக்கமாட்டார்களா? விவசாயிகளுக்கு நல்ல விலை, நியாயமான விலை, கட்டுபடியாகக் கூடிய விலை கொடுங்கள். அண்ணா அவர்கள் எங்கள் தலைவர் காமராசரைச் சந்தித்தபோது 'கொள்முதலை எடுத்து நடத்துகிறோம்' என்றதற்கு தைரியமாக எடுத்து நடத்துங்கள் என்று தானே சொன்னார்கள். உணவுதானிய வியாபாரத்தை சர்க்கார் தான் எடுத்து நடத்த வேண்டும். பக்கத்து மாநிலங்களில் உள்ளவர்கள் என்ன விலை கொடுக்கிறார்களோ அதை ஏன் நீங்கள் கொடுக்கக் கூடாது?

அங்கே க்வின்டாலுக்கு 60 ரூபாய் கொடுத்தால் இங்கே நீங்கள் க்வின்டாலுக்கு 45 ரூபாய் கொடுக்கிறீர்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** எங்கே 60 ரூபாய், எங்கே 45 ரூபாய்?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அதைக் கூட நான் சொல்ல வேண்டும். நீங்கள் இங்கே மட்டரகமான நெல்லுக்கு 45 கொடுக்கிறீர்கள். அதே மட்டரகமான நெல்லுக்கு வெளி மாநிலத்தில் 60 ரூபாய் கொடுத்து வாங்குகிறார்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மற்ற மாநிலத்தில் உயர்ந்த ரக நெல்லுக்கு என்ன விலை கொடுக்கிறார்கள்? நாம் கொடுக்கிற விலை என்ன என்பதையும் சொன்னால் நன்றாக இருக்கும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** எல்லாவற்றையும் நான் சொல்லுகிறேன். உங்களுக்கு ஒன்றுமே தெரியாது. குஜராத்தில் 60 ரூபாயில் இருந்து 90 வரை கொடுக்கிறார்கள். கூட்டணி ஆட்சி இருக்கிற பெங்காலில் 75 ரூபாய் கொடுக்கிறார்கள். நாம் உயர்ந்த ரகத்திற்கு 50-க்கு மேல் கொடுக்கவில்லை. இது நியாயமா? உணவு தானிய வியாபாரத்தை சர்க்காரே மேற்கொள்ள வேண்டும் என்கிற போது சர்க்கார் விவசாயிகளுக்கு நியாயமான விலை கொடுக்க வேண்டும் என்பதையும் வற்புறுத்துகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஸ்டேட் ட்ரேடிங் பற்றிச் சொன்னார்கள். கடந்த 20 வருஷ காலம் அவர்கள் தான் ஆட்சியில் இருந்தார்கள். அவர்கள் காலத்தில் அதைச் செய்யாததற்கு குறிப்பாக ஏதாவது காரணம் இருந்தால் அதைக் கூறும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நீங்கள் தான் எங்களைப் பிடித்துத் தள்ளிவிட்டு வந்து உட்கார்ந்துவிட்டீர்களே. நாங்கள் முறையாகத்தான் செய்துவந்தோம். நீங்கள் தான் ரூபாய்க்கு 3 படி அரிசி போடுவதாகச் சொல்லி படி அரிசி விஸ்தரிக்கக்கூட முடியாமல் ரேஷனையே எடுத்துவிட்டோம் என்கிறீர்கள்.

அடுத்து, இன்று லாட்டரிச்சீட்டைக் கொண்டு வந்து லாட்டரி அடிக்கிறீர்கள். எவ்வளவு புதிய லட்சாதிபதிகளை உண்டாக்கியிருக்கிறோம் பார்த்தீர்களா என்று கேட்கிறீர்களே தவிர, எத்தனை பிச்சாதிபதிகளை உண்டாக்கியும் வருகிறீர்கள், அதைச் சொல்கிறீர்களா? இன்று ஒருசிலர் லட்சாதிபதிகளாக ஆகிறார்கள் என்றால் பல்லாயிரக்கணக்கானபேர்கள் பிச்சை எடுக்கும் நிலைக்கு வந்துவிட்டார்கள். எந்த வேலையும் செய்யாமல் திடீர் என்று லட்சாதிபதியாவதற்கு ஆசையை வளர்க்கின்றதே தவிர இது நல்லது அல்ல. எங்கள் பகுதியில் ஒருவர் ஒரு எருமை மாட்டை வைத்திருந்தார் அதைவிற்று பொங்கல் பரிசுச்சீட்டுகளை வாங்கினார். பரிசும் இல்லை. எருமையும் போயிற்று. நடுத்தெருவில் நிற்கிறார். இன்னொருவர் ஒரு சிறு வீட்டை வைத்திருந்தார். அதை விற்று அப்படியே பரிசுச் சீட்டுகள் வாங்கினார். இன்று நடுத்தெருவில் நிற்கிறார்.

மாண்புமிகு திரு மு. கருணாநிதி: அந்த இரண்டு பேர்களுடைய பெயர்களையும் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: பெயர் என்றால் எத்தனை சொல்வது? இது ஒரு பழக்கமாக இருக்கிறது. இப்படிக் கேட்டுப் பத்திரிகையில் போடுவதற்காக ஒரு விளம்பரமா? லாட்டரி அடிக்கவில்லை என்று சொல்கிறார்களா? மற்ற மாநிலங்களிலே செய்கிறார்கள் என்று சொல்கிறார்கள். மற்ற மாநிலங்களிலே தவறு செய்தால் நாமும் செய்யவேண்டுமா? இந்த லாட்டரியினாலே மக்கள் ஒன்றுமே செய்யாமல் சோம்பேறித்தனத்தை வளர்த்துக்கொண்டு தனவானாகிவிடலாம் என்று நினைக்கும் பழக்கத்தை வளர்ப்பது நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுவிலக்குபற்றிப் பேசப்படுகிறது. மதுவிலக்கை ஏன் அமல் நடத்தவேண்டுமென்றால் ஏழைகளுடைய பொருளாதாரத்தை அது சீர்குலைக்கிறது. அதனால் அதை அமல் நடத்தவேண்டுமென்று சொல்கிறோம். அவர்கள் அதை அமல் நடத்துவதாக இருந்தால் மத்திய சர்க்கார் பணம் கொடுக்கவேண்டுமென்று கேட்டார்கள். தைரியம் இருந்தால் வாங்கிக்கொள்ளுங்கள், நான் வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் அதன் காரணமாகப் போடப்பட்டு வருகிற சேல்ஸ் டாக்ஸ் மூலம் 70 கோடி ரூபாய் வருமானம் வருகிறதே அதை ரத்துச் செய்யவேண்டும். எதற்காக அது போடப்பட்டது, மதுவிலக்கையொட்டித்தானே செய்யப்பட்டது. அரசியல் நாணயம் உள்ள சர்க்காராக இருந்தால் ஒழுக்கமான முறையில் நடக்கிற சர்க்காராக இருந்தால் அதையும் ரத்துச் செய்யவேண்டும். பல உறுப்பினர்கள் பேசினார்கள். கள்ளுக்கடை இப்பொழுது தாராளமாக இருக்கிறது என்று. தி.மு.க. அரசிலே ஏன் தாராளமாக இருக்கிறது என்றால் சம்பந்தப்பட்டவர்கள் சம்பாதித்துக்கொண்டு போகட்டும் என்று திட்டம் போட்டிருக்கிறார்களோ என்னவோ எனக்குத் தெரியாது.





அடுத்தபடியாக, இன்றைக்கு இருக்கும்படியான நிலையிலே வேலையில்லாத் திண்டாட்டம் மிகவும் கோரமான நிலைமையில் இருக்கிறது. பள்ளி ஆசிரியருக்குப் படித்தவர் மூன்று வருடமாக கூலி வேலைசெய்துகொண்டிருக்கிறார் என்று சொன்னார்கள். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவேண்டுமென்றால் நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் வந்தால்தான் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வழிகாணலாம். அவர்கள் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை முறையாக நடத்தி இருப்பார்களானால் வேலையில்லாத் திண்டாட்டத்தை தவிர்த்திருக்கமுடியும். அது இப்பொழுது வருவதாகத் தெரியவில்லை. அவர்கள் பதவியில்தானே முக்கியமாக இருக்கிறார்கள். திட்டம் முக்கியமாக அவர்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்காக நல்ல பொருளாதாரத் திட்டத்தை, வேலை வாய்ப்புக்களைப் பெருக்கக்கூடிய திட்டங்களைப் போடவேண்டும். ஏற்கனவே மூடியிருக்கும்படியான தொழிற்சாலைகளைத் திறப்பது ஆமை வேகத்திலே போய்க்கொண்டு இருக்கிறது. குஜராத், மஹாராஷ்டிரா போன்ற மாநிலங்களிலே தொழிற்சாலைகள் வளர்ந்துகொண்டிருக்கின்றன. இங்கே மூன்று மில்லில் இரண்டு மில்களைக் கூட்டித் துடைத்துக் கொண்டிருக்கிறோம். ஒன்றை ஆரம்பித்துக்கொண்டிருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம், ஒன்றை ஆரம்பிக்க முயற்சி செய்கிறோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். யானைப் பசிக்குச் சோளப்பொரி போல் இருக்கிறது. எல்லாவற்றையும் எடுத்து நடத்துவதாகத் தெரியவில்லை.

அடுத்தபடியாக தேசியமயமாகியிருக்கும்படியான பஸ்கள். என்னிடம் ஒருவர் வந்து சொன்னார். ரயில்கள் எல்லாம் தண்டவாளத்தின்மேல் போவதைத்தான் பார்த்திருக்கிறேன். சென்னையிலே ரோடிலே ஓடுகின்றன. மவுண்ட் ரோடிலே லொக்கோமோடிவ் எஞ்சின் போகிறது மாதிரி, இந்த மாண்புமிகு அமைச்சரின் ஆட்சியிலே புகை விட்டுக்கொண்டு ஓடிக்கொண்டு இருக்கிறது என்று சொன்னார்கள். பஸ்கள் இப்படி லொக்கோமோடிவ் எஞ்சின் மாதிரி புகைவிட்டுக்கொண்டு ஓடும்படியான பெருமை அவருக்குத்தான். பராமரிப்பு லட்சணத்தைப் பார்த்தால் பஸ் மரத்திலே ஓடுகிறது, கிணற்றிலே ஓடுகிறது, அல்லது குடிசைகளிலேதான் ஓடுகிறது. தேசியமயமாக்கப்பட்டது மக்களுடைய போக்குவரத்து வசதிகளைப் பெருக்குவதற்குத்தான். அவர்கள் சொன்னார்கள், வெங்கட்டராமன் காலத்திலே எத்தனையோ நஷ்டம், என்னுடைய காலத்திலே கட்டணத்தை குறைத்துவிட்டேன் என்று சொன்னார்கள். 16 பைசாவாக இருந்ததை 15 பைசாவாக ஆக்கி 18 பைசாவை இருபதாக ஆக்கி குறைத்திருக்கிறார்கள். அவர்கள் அவர்களுடைய தொழிலை எப்படி எப்படியெல்லாம் விருத்திசெய்து கடைசியில் தனக்கு ஒன்றும் இல்லை என்று ஸ்டேட்மெண்ட் கொடுத்திருக்கிறார்களோ அதைப்போன்று ஸ்டேட் டிரான்ஸ்போர்டிலும் ஆரம்பித்திருக்கிறார்கள். அது பஸ் போக்குவரத்தா அல்லது பக

கொள்ளையா என்பதே தெரியாத நிலைமையில் இருக்கிறோம். முன்பு பஸ்ஸிலே ஏறினால் கடைசி வரையில் போய்ச்சேர முடியும். சாஸ்திரி நகர் அல்லது இந்திரா நகரில் ஏறினால் கடைசிவரை செகரட்டேரியக் வரைப் போய் சேரக்கூடிய வசதி இருந்தது அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கும் மற்றவர்களுக்கும் வசதியாக இருந்தது. 'மாண்புமிகு' வந்தார்கள். ரேஷனலிசேஷன் என்று சொல்லி வெட்டி வெட்டிப் போட்டுவிட்டார்கள். சாஸ்திரி நகரில் ஏறினால் நேராக இங்கே வரமுடியாது. அடையாறுக்குப் போக வேண்டும். அதற்கு 15 பைசா, அதற்குப் பிறகு அடையாறிலிருந்து 20 பைசா கொடுத்து மொத்தம் 35 பைசா 45 பைசா என்று கொடுத்து வர வேண்டியிருக்கிறது. முன்பு 30 பைசா கொடுத்திருந்தால் இப்பொழுது 45 பைசா கொடுக்கவேண்டிய நிலை இருக்கிறது. இதுதான் குறைத்திருக்கிற லட்சணம். தொல்லையும் கொடுத்து ஏறுவதற்கு இடமும் இல்லாதபடி ஏன் செய்யவேண்டும். மவுண்ட் ரோடிலே இறங்கி வேறு பஸ்மூலமாகப் போகக்கூடிய நிலைமை தான் இருக்கிறது. முன்பு லாபம் காட்டவில்லை. நான் லாபத்தைக் காட்டுகிறேன் என்று சொல்வார்களானால் மக்களுடைய நன்மைக்காக போக்குவரத்தா அல்லது அவருடைய டம்பத்திற்கு, ஜம்பத்திற்குப் போக்குவரத்தா? முன்பு வெங்கட்டராமன் அவர்கள் என்ன சொன்னார்கள்? சென்னை நகரத்திலே பஸ்போக்குவரத்து மக்களுடைய நன்மைக்காகத்தான்; அதிலே லாபத்தை எதிர்பார்க்கமுடியாது: லாபம் முக்கியமல்ல, மக்களுடைய நலம்தான் முக்கியம் என்று சொன்னார்கள். இப்பொழுது இவர்கள் தேசியமயம் நாங்கள்தான் ஆக்கினோம் என்று சொல்கிறார்களே, அபிவிருத்தி என்ன? லோக்கோமோடிவ் எஞ்சின் புகைமாதிரி போவதும், ஏறிச் செல்வதற்கு இடம் இல்லாமல் தவிப்பதும்தான். சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் மட்டுமல்ல; மாணவர்களும் இதனால் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். டிரான்ஸ்போர்ட் அக்கிரமங்கள், ஊழல்கள் எத்தனையோ. தொழிலாளர்களுக்கு வேண்டியதைக் கொடுக்கவில்லை என்று அவர்கள் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். தொழிலாளர் சர்க்கார் என்று நினைத்துக் கொண்டு இருக்கிற அவர்களுடைய நிலைக்கு எங்கே பாதுகாப்பு இருக்கிறது?

வங்கிகளை ஆரம்பித்துவிட்டோம் என்று சொல்கிறார்கள். 'தமிழ்' என்றெல்லாம் சொல்கிறார்கள். இந்த வங்கிகளிலே போடப்படுகின்ற டைரக்டர்கள் யார் யார்? அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்களுக்குக் கொடுக்கிறார்கள். 60 நில வள வங்கிகளை ஆரம்பித்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்களுக்குத்தான் இந்தத் திட்டத்தை தீட்டியிருக்கிறார்கள். 325 வங்கிகளை ஆரம்பித்துத் தேர்தல் காலத்தில் பார்க்கிறீர்களா. பணம் கொடுக்கிறோம் என்று அப்பொழுது சொல்லிக்கொள்வதற்காகத்தான் ஆரம்பித்திருக்கிறார்கள். அந்த வங்கிகளைப் பொறுக்கவரையில் இடத்திற்கு இடம் வித்தியாசம் காங்கிரஸ்காரர்களாக இருந்தால் 10 ஆயிரம் ரூபாய் கட்டவேண்டுமென்று சொல்வது, அவர்களுடைய கட்சிக்காரர்களாக இருந்தால் 6 மாதத்





தில் கட்டலாம் என்று சொல்வது. ஒரு இடத்திலே கேட்டால் கிடையாது, ஒரு இடத்திலே உண்டு; இப்படிச் செய்கிறார்கள். பொதுக் கூட்டத்திலே சொல்கிறார்கள். அந்த அமைச்சர் நல்லவர். உங்களுக்கு ஏதாவது வேண்டுமென்றால் வட்டச் செயலாளர் மூலமாக வாருங்கள், எம். எல். ஏ-யை அப்புறம் பார்த்துக்கொள்ளலாம் என்று. அவர் எப்பொழுதுமே நிலையாக ஒரு கட்சியிலே இருந்துவந்தவர் இல்லை. பல கட்சிகளுக்கு வந்திருக்கிறார். இப்பொழுது இருக்கும்படியான கட்சியிலே நிலையாக இருப்போம், நீங்கள் முதலமைச்சரிடம் போய்ச் சொல்லுங்கள் கட்சியை வளர்ப்பதற்கு அவரைவிட்டால் வழியில்லை என்று சொல்வதற்காகத்தான் செய்கிறார்கள். மக்கள் நன்மைக்காக இல்லை, கட்சியை வளர்ப்பதற்காகத்தான் செய்கிறார்கள்.

சட்டமன்றத்திலே பேசினார்கள். திரு. காமராஜ் அவர்களைப் பற்றிப் பேசி அவர்கள் தூண்டும்படியான பிரச்சாரத்தில் ஈடுபட்டு இருக்கிறார்கள், கைது செய்யவேண்டுமென்று சொன்னார்கள். சொன்னவர் யார்? தாராளமாகக் கைதுசெய்யுங்கள். அதற்கு காமராஜ் அவர்கள் பயந்துவிடுவார்களா? பிரிட்டிஷார் காலத்திலே ஏகாதிபத்தியத்தை வைத்துக்கொண்டு முப்படைகளையும் வைத்துக்கொண்டு மிரட்டிய சிங்கத்தின் கர்ஜனைக்கே பயப்படாதவர்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி**: அதைச் சொன்னவர் யார் என்று சொல்லவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன்**: இந்தப் பக்கத்திலேயிருந்து யாரோ சொன்னார்கள். திரு. பெருமாள் என்று நினைக்கிறேன். பிறகு எப்பொழுது பேசினார் எத்தனை மணிக்குப் பேசினார் என்றெல்லாம் கேட்பார்கள். . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி**: அவர் சுதந்திராக் கட்சியைச் சேர்ந்தவர்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்**: உங்கள் கூட்டணியைச் சேர்ந்தவர் தான்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி**: அங்கே உங்களுக்குள் கூட்டணி இருக்கிறது.

(பேரவைத் தலைவர் தலைமை)

**திரு. பி. ஜி. கருத்திருமன்**: இங்கே எங்களை எதிர்க்கிறீர்கள். அங்கே இந்திரா காந்தியை தூக்கி வைக்கிறீர்கள். இது எல்லாம் சமயத்திற்கு தகுந்தவாறு அட்ஜஸ்ட்மெண்ட். இது எல்லாம் எங்களுக்கு சுண்டெலி மாதிரி. அவர்களெல்லாம் பேசும் பேச்சு பொறுப்புள்ள பேச்சாக இருக்க வேண்டும். உங்களுடைய திருச்சி அங்கத்தினர் என்ன சொன்னார்? 'நீங்கள் ஆட்சிக்கு வர வேண்டும் என்று சொன்னால் மூன்று மாதமாவது சிறைக்குப் போக வேண்டும்' என்று கூறினார்.

**திரு. எம். எஸ். மணி :** தியாகத்தை 'ரென்யூ' பண்ணிக் கொள்ள வேண்டுமென்பதற்காக சொன்னேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அப்படியானால் அந்தமானுக்கு 14 வருஷம் 15 வருஷம் என்று போனவர்களை எல்லாம் கொண்டு வந்து இங்கே அமைச்சர்களாக ஆக்கி விடலாமே? நீங்கள் எங்களுக்கு புத்தி சொல்கிறீர்கள். உங்களுடைய அமைச்சர்கள் எத்தனை நாள் சிறையில் இருந்தார்கள்? காமராஜர் ஒருவருடைய பக்கத்தில் கூட நீங்கள் யாரும் வர முடியாது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நீங்கள் எவ்வளவு நாள் சிறைக்குப் போயிருக்கிறீர்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உங்களுடைய ஆட்சியிலே போக சந்தர்ப்பம் கிடைக்கும். கோவையிலே அன்றைக்கு டி.ஸி. வந்து என்னையும் பிடித்திருப்பார்கள். ஆனால் அன்றைக்கு நானில்லை. உங்களுடைய ஆட்சியிலே சந்தர்ப்பம் கிடைக்காமல் போகாது. ஆனால் உங்களுடைய ஆட்சி வந்ததிலிருந்து எல்லோரும் ஜெயிலிலே தான் இருக்கிறோம். 1967-லிருந்து ஜெயிலை விட கொடுமையான நிலைமையிலிருக்கிறோம். பேச்சு சுதந்திரம் இல்லை. எங்களுடைய கட்சிக் கொடியைக் கட்ட சுதந்திரம் இல்லை. எழுத்து சுதந்திரம் இல்லை. ஒரு பத்திரிகை ஒருவரைப் பற்றிக் குறிப்பிட்டது. சுதேசமித்திரன் பத்திரிகையில் அண்ணாதுரையைப் பற்றி ஒரு தலையங்கம் எழுதப்பட்டது. அவருக்கு அளவுக்கு மேல் விளம்பரம் கொடுக்கப்படுவதாக அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்கு 'நாங்கள் யாரென்று தெரியுமா? என்ன செய்வோம் தெரியுமா? ஜாக்கிரதை!' என்று எச்சரிக்கை செய்கிறார்கள். அயூப்கான் ஆட்சியில் கூட இது நடக்காது. ஹிட்லர் ஆட்சியில் கூட இப்படி பேசி இருக்கமாட்டான். அவ்வளவு வெகுளித் தனமாக நடந்து இருக்கிறது. பத்திரிகை சுதந்திரம் இல்லை. இந்த நிலைமைகளெல்லாம் ஜெயில் வாழ்க்கை இல்லாமல் சுதந்திரமான வாழ்க்கையா? இதற்காகவா சுதந்திரத்தைப் பெற்று வாங்கினோம்? நாங்கள் கஷ்டப்பட்டு சுதந்திரத்தை வாங்கினோம், நீங்கள் இன்று அனுபவித்துக் கொண்டிருக்கிறீர்கள், சுதந்திர போராட்ட காலத்தில் நீங்கள் எப்படி இருந்தீர்கள்? புற்று வைக்க கருநாகம் வந்தது போல்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** நீங்கள் ஆஸ்பத்திரியை கட்டிய கொத்தனார்கள். நாங்கள் உள்ளே இருக்கும் டாக்டர்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** டாக்டர்கள் என்றால் சிறந்த டாக்டர்களாக இருக்க வேண்டும். நீங்கள் கத்தி எடுத்து ஆப்பரேஷன் செய்தால் ஒருவனும் பிழைக்க மாட்டான். உயிர் பிழைக்க வைக்க கூடியவர்கள் டாக்டர்களாக இருக்க வேண்டுமே தவிர உயிரை பறிக்கிற நீங்கள் டாக்டர்களாக இருக்கக்கூடாது. சில டாக்டர்களிடம் ஆளே போகமாட்டான். அதற்குக்கூட ப்ரோக்கர் பிடிக்க வேண்டும். அந்தமாதிரி டாக்டர்களாக நீங்கள் இருக்க வேண்டாம்.





சிலை வைக்கிறோம் என்று சொல்கிறீர்கள். கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையிலே முதலிலே மாண்புமிகு அண்ணாதுரை அவர்கள் மறைந்தது பற்றி குறிப்பிட்டார்கள். அண்ணாதுரையை விட சிறந்த நண்பர் என்னுடைய வாழ்கையில் நிச்சயமாக இல்லை என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அரசியலில் நாங்கள் வட துருவம் தென் துருவம் ஆக இருக்கலாம். நண்பர் என்ற முறையில் பண்போடு பழகுவதற்கு அவரைவிட சிறந்த ஒருவர் இருக்க முடியாது. உங்களுடைய கட்சிக்கு அவர் மிகவும் உயர்ந்தவர் தான். ஒரு திட்டமும் இல்லாமலே உங்களுடைய கட்சியை ஆட்சியில் வைக்கும்படியான திறன் படைத்திருந்தார். அவரைப் போற்றுவதில் தவறில்லை. அவரை எல்லோரும் பாராட்டுகிறோம். ஆனால் இப்போது போகும்படியான போக்கு எப்படி இருக்கிறது? இப்போது அண்ணாதுரை அவர்களுக்கு அஸ்வமேத யாகமே நடத்துவது போல் எல்லா இடங்களிலும் சிலை வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். பல இடங்களில் அபிப்ராய பேதங்கள் வருகின்றன. அவரே இருந்தால் கூட இந்த நிலைமை ஏற்றுக் கொண்டிருப்பாரா? குமாரப்பாளையத்தில் சிலை வைத்தீர்கள். உங்கள் கட்சியிலேயே யார் பெரியவர் என்ற நிலையிலே அவமானப்படுத்தப்பட்டார்கள். ஹோசூரில் அவமானப் படுத்தப்பட்டார்கள். இது அவர்களுக்குச் செய்யும்படியான நன்மை அல்ல. தேச பிதா மகாத்மா காந்திஜிக்கு நூற்றாண்டு விழாவின் போது சிலை வைக்க வேண்டும் என்று கேட்டதற்கு அது போக்குவரத்துக்குத் தடையாக இருக்கும், வைக்க வேண்டாம் என்று உத்தரவு போட்டு விட்டார்கள். எந்த இடத்தில் போக்குவரத்துத் தடை என்று சொன்னீர்களோ அந்த இடத்தில் அண்ணாதுரை சிலையை வைக்க பாடுபட்டுக் கொண்டிருக்கிறீர்கள். தஞ்சையில் திருவையாறு போகும்படியான வழியில் அங்கு இருக்கும் மன்றத்தினர் காந்தி சிலை வைக்கவேண்டும் என்று தீர்மானம் போட்டு அனுப்பினார்கள். அதற்கு பஸ் போக்கு வரத்துக்கு இடஞ்சலாக இருக்கும் என்று சொல்லி விட்டார்கள். அப்படியானால் அண்ணாதுரை சிலை வைத்தால் பஸ் போக்கு வரத்துக்கு இடஞ்சலாக இருக்காதா? காந்திஜியை விட அண்ணாதுரை சிறந்தவர்கள் என்று உங்களால் நிச்சயமாக நிரூபிக்க முடியாது. காந்திஜிக்கு சரியாக கொண்டு வருவது என்பது தவறானது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** திருவையாறு, தஞ்சை ரோடில் பஸ் போக்கு வரத்துக்கு இடஞ்சலாக இருக்குமாதலால் காந்தியடிகள் சிலையை வைக்கக்கூடாது என்று கூறிவிட்டு அண்ணா சிலையை வைத்ததாக சொன்னீர்கள். அது உண்மையா?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அப்படியொரு முயற்சி நடக்கிறது. அண்ணாசிலையை வைப்பதற்கு அனுமதி பெற்று முயற்சி நடைபெற்று வருகிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்படி எல்லா இடத்திலும் அவருடைய சிலையை வைத்து ஏன் அவமானப் படுத்துகிறீர்கள்.

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1970 ஜனவரி 28

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஒரு சிலையை—சிலையிருக்கக் கூடாது என்பதற்காக அவமானப் படுத்தி களங்கம் ஏற்படுத்துவதால் அது கூடாதென்றால் கடற்கரையிலே எவ்வளவோ முறை காந்தி சிலை அலங்கோலமாக இருக்கிறதென்று கூறி காங்கிரஸ் தியாகிகளே உண்ணாவிரதம் இருந்ததால் அந்தச் சிலையைக் கூட எடுத்து விட வேண்டுமா ?

திரு. பி. ஜி. கருத்திருமன் : எங்கள் கட்சியிலும் சில பைத்தியக்காரர்கள் இருக்கலாம். உங்கள் கட்சியிலும் பைத்தியகாரர்கள் இருக்கலாம். பைத்தியக்கார ஆஸ்பத்திரி எல்லோருக்கும் பொது.

இன்று நாட்டில் சட்டம், ஒழுங்கு இருக்கிறதா ? முன்பு தீ பிடித்தது. தீ பிடித்த காலத்தில் காங்கிரஸ் கட்சியின் மேல் புகார் சொன்னார்கள். காங்கிரஸ்காரர்கள்தான் தீ வைத்தார்கள் என்று பெரிய எழுத்தில் பத்திரிகையில் போட்டார்கள். யார் அதற்கு ஜவாப்தாரி, எந்த பத்திரிகையில் வந்தது என்று எல்லோருக்கும் தெரியும். அது நிருபிக்கப்பட்டதா? ஹைகோர்ட்டில் போய் நிருபிக்கப்படவில்லை. யோக்கியமுள்ள பத்திரிகையாயிருந்தால் நாணயமுள்ள பத்திரிகையாயிருந்தால் மன்னிப்பு தெரிவிக்க வேண்டும் அல்லவா ? இதுபற்றி போலீஸ் அதிகாரி கிருஷ்ணசாமி அவர்களுடைய அறிக்கையில் என்ன சொன்னார்கள் ? ஆசையின் காரணமாக தீ வைத்தார்கள் என்று சொன்னார்கள். முதலமைச்சர் அவர்கள் மன்னிக்க வேண்டும். இந்த மந்திரி சபையையே கைது செய்ய வேண்டுமென்று சொல்வேன். தீப்பிடிக்காத வீடுகளை கட்டி தருகிறேன் என்று சொன்னதால் தானே அவர்கள் தீ வைத்தார்கள். ஆகவே தூண்டிவிட்டவர்களை உள்ளே பிடித்து போட வேண்டியது தானே முறை. வேட்டைக்காரன் புதூரில் தங்கவேலு கவுண்டர் அடிபட்டார். அதைப்பற்றி ஐ.ஸி.எஸ். அதிகாரி ஒரு அறிக்கை சமர்ப்பித்தார்.

தங்கவேலு கவுண்டர் இல்லையென்று எழுதவில்லை, பாக்கியெல்லாம் எழுதியிருக்கிறார்கள். அடிபட்டு டாக்டர் சர்டிபிக்கட்டு வாங்கி போட்டோ எல்லாம் எடுக்கப்பட்டிருக்கிறது. மகாலிங்கம் சாட்சி பொய், பொது மக்கள் சாட்சி பொய் என்றால் யார் சொல்வது சரி ? சர்க்கார் செய்யும்படியான அத்துமீறிய செயல்கள் காங்கிரஸ்காரர்களை திட்டமிட்டு அவமானப்படுத்தும் செயல்களாக இருக்கின்றன.

நாகர்கோவில் தேர்தலில் என்ன நடந்தது ? மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும் அங்கு இருந்தார்கள். எவ்வளவோ கேஸ்கள் எல்லாம் போடப்பட்டன. அவற்றில் ஒன்றாவது நிரூபிக்கப்பட்டதா ? கிட்டு என்பவன் கொலை செய்யப்பட்டான். அது பட்டபாட்டைச் சொல்ல முடியாது. ஊர்வலம் எல்லாம் நடத்தி அரசியல் கொலை, என்று எல்லாம் சொல்லப்பட்டது. இது அரசியல் கொலை என்று சொல்லாதீர்கள் என்று சொல்லப்பட்டது. இது நடைபெற்றுக் கொண்டிருந்தபோது ஏற்பட்டதொரு நிகழ்ச்சி.



1970 ஜனவரி 28] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

கோர்ட்டில் கேஸ் போடப்பட்டது. அதை நிரூபித்தார்களா? யார் அன்று அவர்களுக்காக சாட்சி சொன்னார்களோ, அவர் பொய் சாட்சி சொன்னதற்காக அவருக்கு தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை பொறுப்புள்ளவர்கள் அரசியல் கொலை என்று காட்டலாமா ?

குறிஞ்சி நெடுமாறன் கைது செய்யப்பட்டு, செக்ஷன் 105-ன்படி நன்னடத்தை ஜாமீன் வேண்டுமென்று சொன்னார்கள். ஹைக் கோர்ட் அது தப்பு என்று சொன்னார்கள். ஒரு ஜட்ஜ் சொன்னால் தான் அவர்களுக்குத் தெரிகிறதே தவிர தப்பை உணர்ந்து கொள்வதில்லை. (குறுக்கீடு) நீதியும் நிர்வாகமும் தனியாக இருப்பது எனக்குத் தெரியும். நீதிமன்றத்தில் கொண்டுபோய் நிறுத்தி வைப்பதும் தெரியும். நீங்கள் அதற்கு ஆதரவாக இருக்கக்கூடாது.

அடுத்தபடியாக, மாணவர்கள்—பஸ்மென் கலகம் நடந்தது. அதன்பேரில் ஒரு அறிக்கை கொடுக்கப்பட்டது. அப்போது கல்வி அமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்கள் ? ஏதோ ஒரு மாணவர் அடிபட்டார், அதற்கு கருத்திருமன் எவ்வளவு பிரமாதப்படுத்துகிறார் என்று சொன்னார்கள். நீங்கள் எதிர்கட்சியில் இருந்த போது என்னவென்ன செய்தீர்கள். மாணவர்கள் வன்முறையில் ஈடுபட்டதற்கு முழு முழுப் பொறுப்பு திராவிட முன்னேற்றக் கழகம் தான் என்று நான் குற்றஞ்சாட்ட விரும்புகிறேன். இந்தி என்ற நெருப்பு மூட்டப்பட்டது. அப்படி மாணவர்களை வன்முறையில் ஈடுபடுத்திவிட்டு பிறகு நாங்கள் இல்லை என்று சொல்லி, அவர்களைத் தூண்டி விட்டவர்கள் நீங்கள்தானே. இன்று அதே வன்முறை உங்களைத் தாக்கிக் கொண்டிருக்கிறது. இப்போது நீங்கள் இதோபதேசம் செய்கிறீர்கள். மாணவர்களே, நீங்கள் நன்றாகப் படியுங்கள், நீங்கள் அரசியலில் ஈடுபடாதீர்கள் என்று இப்போது சொல்கிறீர்கள். இப்போது சொல்லும் புத்தி அப்போது எங்கே போயிற்று ? அப்போது அவர்களைத் தூண்டிவிட்டீர்கள். திருப்பூரில் என்ன நடந்தது ? கடமை, கட்டுப்பாடு, கண்ணியம் என்று சொல்கிறீர்கள். உங்களுக்கு அது பொருத்தமில்லை. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, என்றால் திருப்பூரில் இந்திப் போராட்டக் காலத்தில் உயிர் விட்டார்களே இரண்டு சப்-இன்ஸ்பெக்டர்கள் அவர்கள்தான் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பதற்கு உகந்தவர்கள். உயிரைக் கொடுத்து தியாகம் செய்தார்களே அவர்களுக்குத்தான் அது உரித்தாகும். பிளேடால் அறுத்து தூரத்தப்பட்ட அந்த டி.எஸ்.பி. தான் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவற்றிற்கு உகந்தவர்கள். கொலை செய்த கைக்கு காப்பு போடுவது போல் அவர்களை விட்டு விட்டார்கள். நீங்கள் தூண்டிக் கொடுத்தது என்று விட்டு விட்டீர்கள். போலீசார் எவ்வளவு நாட்களுக்குத் தான் உங்களுக்கு பாதுகாப்பு கொடுப்பார்கள் என்று தெரியவில்லை. வேறு ராஜ்யங்களில் என்ன நடக்கின்றது? அஜாய் முகர்ஜி முதல் அமைச்சர், அவர்களது அரசாங்கம் கூட்டணி அரசாங்கம். அங்கு சீஃப் மினிஸ்ட்டர் அலறுகிறார், போலீஸ் போலீஸ் என்று, போலீசார் நின்று பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1970 ஜனவரி 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்ற மாநிலங்களில் உள்ள சட்டமன்றங்களில் நடக்கும் நிகழ்ச்சிகள் பற்றி இங்கு பேசக் கூடாது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** சட்டமன்றத்தில் நடந்த நிகழ்ச்சியைச் சொல்லவில்லை. வங்காளத்தைப் பார் வங்காளத்தை பார் என்று ஏன் சொன்னார்கள்? இப்போது பாருங்கள் என்று சொல்கிறேன். அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் இங்கு ஏற்படக்கூடாது என்று சொல்வது தவறா? நான் சட்டமன்ற நிகழ்ச்சிகளைப் பற்றிக் கூறவில்லை. முதல் அமைச்சர் அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்காத நிலைப்பற்றிச் சொல்கிறேன். அது வாரந்தாவில் நடந்தது. கோயா அவர்களின்மீது அமில் குண்டை வீசுகிறார்கள் இடதுசாரி கம்யூனிஸ்ட்கள். அங்கு இடதுசாரி கம்யூனிஸ்ட்கள் முதல் அமைச்சர் அவர்களை கெரோ செய்கிறார்கள். அதுமாதிரிப்பட்ட நிலைமை நம் நாட்டில் நடக்கக் கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன். இங்கும் அப்படி நடக்கலாம் அல்லவா? ஆகவே கவனமாக இருக்க வேண்டும். தயவு தாட்சண்யம் காட்டக்கூடாது. யார் தவறு செய்தாலும் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

அடுத்தபடியாக, எல்லோரும் சொத்து விவரங்கள் சமர்ப்பிக்க வேண்டுமென்று சொல்லி சமர்ப்பித்தாகிவிட்டது. ஒரு சாம்பிளை மட்டும் எடுத்துக் கொள்கிறேன், அவை சரியாக இருக்கிறதா இல்லையா என்பதற்காக

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொடுத்திருக்கிற தகவல்கள் சரியா இல்லையா என்று சொல்கிற அளவிற்கு உங்களிடம் தகவல்கள் இருந்தால் சொல்லுங்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** நிறைய இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொடுத்திருப்பவை இன்னின்ன வகையில் தவறு என்று விளக்கக்கூடிய அளவிற்கு உங்களிடம் சான்றுகள் இருக்கவேண்டும். நம்பிக்கை இல்லை என்று சொல்வது வேறு.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** பூர்ண சான்றுகளோடு சொல்கிறேன் திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள் ஸ்டேட்மெண்ட் (மணி அடிக்கப்பட்டது.) நீங்கள் மணி அடிக்கிறீர்களே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆதாரங்களோடு சொல்ல வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அவருக்கு இருப்பது ஐந்து ஏக்கர் நன்செய். பாங்கில் ஒன்றும் கிடையாது. கார் இருக்கிறது என்றால் கார் இருக்கிறது என்று சொல்லவேண்டும். இவருக்கு கார் இல்லை. ஏழை. தயவுசெய்து நான் சொல்வதைக் கேளுங்கள். என்னைக் கட்டுப்படுத்த முடியாது. சபாநாயகர் அவர்களே, எனக்கு பாதுகாப்பு வேண்டும்.



1970 ஜனவரி 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாதுகாப்பு தருகிறேன். மேஜை மீது அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. அதில் சில தகவல்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்தத் தகவல்கள் தவறு என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஆதாரங்களோடு சொல்லட்டும். கார் இல்லை என்று போட்டிருக்கிறார் என்று சொன்னால், அவர்கள் பேரில் கார் இருக்கிறது, இன்ன நம்பரில் அது ரெஜிஸ்ட்ரேஷனாகியிருக்கிறது என்று எடுத்துக் காட்டுங்கள். அப்படியில்லாமல் அவருக்கு கார் இல்லையா, அவர் ஏழையா என்றெல்லாம் சொல்வது முறையல்ல. ஆதாரங்களோடு பேசவேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** 85 லட்சம் ரூபாய்க்கு வருமான வரி கட்டவில்லை என்று ஹைகோர்ட்டில் கேஸ் இருக்கிறது. தஸ்தாவேஜ் இருக்கிறது.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** ஹைகோர்ட்டில் என் மீது எந்தவிதமான கேஸும் கிடையாது. ஹைகோர்ட்டில் கேஸ் நடந்ததும் இல்லை, இப்போது நடந்து கொண்டிருக்கவும் இல்லை. ஆகவே தயவு செய்து பெருந்தன்மையோடு உறுப்பினர் அவர்கள் சொன்னதை பின்வாங்கிக் கொள்வது நல்லது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பாதுகாப்பு வேண்டுமென்று கேட்டார்கள். பாதுகாப்பு கொடுக்கத்தான் இருக்கிறேன். அவர்களுக்குக் குற்றச்சாட்டு சொல்வதற்கு உரிமை இருக்கிறது. ஆனால் சாட்டப்படுகிற குற்றச்சாட்டு ஆதாரத்தோடு கூடிய குற்றச்சாட்டாக இருக்க வேண்டும். 'வைல்ட் அலிகேஷன்ஸ்' கூடாது. கொடுத்திருக்கக் கூடிய அறிக்கை தவறானது. இன்னின்ன சொத்துக்கள் அவர்கள் பேரில் இருக்கின்றன என்றெல்லாம் ஆதாரங்களோடு சொல்ல வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** ஒரு ஜட்ஜை போடுங்கள், நான் நிரூபிக்கத் தயாராயிருக்கிறேன். ஒரு நீதி விசாரணை நடத்தினால் அவருக்கு எவ்வளவு சொத்து இருக்கிறது என்று சொல்லத் தயார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமன்றப் பேரவைத் தலைவர்கள் மாநாட்டில்கூட ஒரு முடிவிற்கு வரப்பட்டது. குற்றஞ்சாட்டுகிற நேரத்தில் ஆதாரங்களோடு கூடிய குற்றச்சாட்டுக்களைச் சொல்லவேண்டும், ஆதாரம் இல்லாத 'வைல்ட் அலிகேஷன்ஸ்'-க்கு சட்டமன்றத்தில் இடம் கொடுக்கக் கூடாது, என்று. எதற்கு வேண்டுமானாலும் "என்கொயரி வையுங்கள், நிரூபிக்கிறேன்" என்று சொல்வது முறையல்ல. இது இன்றோடு முடிவதல்ல, ஒரு மாதம் கழிந்து கூடப் போகிறோம். அப்போது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அது தவறான ஸ்டேட்மெண்ட் என்று சொல்லி ஆதாரங்களைக் கொண்டு வந்து சட்டமன்றத்தில் பேசலாம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** ஆதாரத்தோடு கொண்டு வரத் தயாராக இருக்கிறேன் என்று சொல்லிக்கொள்ளுகின்றேன்.

[1970 ஜனவரி 28

**திரு. து. ப. அழகமுத்து:** பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். எதிர்க்கட்சித் தலைவரவர்கள், 85 லட்சம் ரூபாய் வரி கட்டாமல் அமைச்சரவர்கள் மீது வழக்கு இருப்பதாகக் கூறினார்கள். அமைச்சரவர்கள் எந்தவிதமான வழக்கும் இல்லை என்று கூறினார்கள். எனவே, அதை நிரூபிக்க அவர்கள் தயாராக இருக்க வேண்டும், அல்லது அதை வாபஸ் வாங்க வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நிரூபிக்கத் தாயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** எந்தவிதமான வழக்கும் இல்லை. அப்படி வழக்கு இருப்பதாக கூறினால், என்ன நம்பர், எங்கே இருக்கிறது என்று கூற வேண்டும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் 85 லட்சம் ரூபாய்க்கு வருமான வரி கட்டவில்லை என்பதாக வழக்கு இருக்கிறது, அதை நிரூபிக்கிறேன் என்று கூறியுள்ளார்கள். அப்படி நிரூபிக்காவிட்டால் எந்தவகையில் பொறுப்பேற்றுக் கொள்கிறார்கள்?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகரவர்களே, அவர்கள் மந்திரியாக வந்த பிறகு இருக்கிறதா இல்லையா என்பதைப்பற்றிய பிரச்சினை கிடையாது. எனக்கும் கொஞ்சம் சட்டம் தெரியும். ஆதித்தனார் என்ற பெயரில் பல பத்திரிகைகளில், **கோடீஸ்வரர்** என்று வந்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மீண்டும் மீண்டும் எதிர்க்கட்சி தலைவருக்குச் சொல்வது, மன்றத்திலே எப்படிப் பேசலாம் என்பதற்கு விதிமுறைகள் இருக்கின்றன, அதையொட்டி எதிர்க்கட்சித் தலைவரவர்கள் பேச வேண்டும். நீங்கள் குற்றம் சாட்டுவதற்கு உரிமை இருக்கிறது. இன்னும் ஒரு மாத காலத்தில் கூடப்போகிறோம். அப்படிக் கூடுகின்ற நேரத்தில், என்னென்ன சொத்துக்கள் இருக்கின்றன, கொடுக்கப்பட்டிருக்கும் அறிக்கை தவறு என்பதற்கான ஆதாரங்களுடன் பேசுங்கள். அப்படி ஆதாரம் இல்லாமல் பொதுவாகப் பேசுவது முறையாக இருக்காது. அது முறையல்ல என்பதால் அதைத் திரும்பப் பெற்றுவிடவேண்டும். இல்லையென்றால் அதை நிகழ்ச்சிக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டி வரும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நிரூபிக்கிறேன் என்று சொல்லுகிறேன். அப்படி நிரூபிக்கவில்லையென்றால் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுங்கள். நான் நிரூபிக்கிறேன்.

இந்த ஆட்சி வந்த பிறகு மக்களுக்கு நன்மை ஏற்பட்டிருக்கிறதா கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு நன்மை ஏற்பட்டிருக்கிறதா என்று பார்த்தால், கட்சியை வளர்ப்பதற்காகத்தான் பயன்பட்டிருக்கிறது என்று இந்தச் சர்க்காரின் மீது குற்றச்சாட்டு சாட்டாமல் இருக்க முடியாது. இதற்கு சபாநாயகரவர்கள் எங்கே ஆதாரம் என்று கேட்கலாம். சாதாரணமாக சட்டமன்ற உறுப்பினரான பிறகு,





கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினருக்கு 'அன்பளிப்பு' என்று பல கார்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. கட்சியின் பெயரால் கொடுத்ததற்காக ஆட்சேபணை சொல்லவில்லை. ஆனால் அதற்காக பதவியை, ஆட்சியை உபயோகித்திருக்கிறார்கள். பதவியின் காரணமாகத்தான் கொடுக்கப்பட்டது என்று சொல்ல ஆசைப்படுகிறேன். அண்மையிலேகூட முதலமைச்சரவர்கள் கோவைக்கு வந்த சமயத்தில் அந்த வட்ட செயலாளருக்கு 51,000 ரூபாய் வீடு கட்டிக்கொள்ளக் கொடுத்தார்கள். (குறுக்கீடு — மாவட்டச் செயலாளருக்கு) இது அந்தக் செயலாளருக்கு மட்டுமா? எல்லாச் செயலாளர்களுக்குமா என்று தெரியாது. கொடுப்பதைப் பகிரங்கமாகச் சொல்வதைப்பற்றி பாராட்டுகிறேன். ஆனால் கட்சியிலே இருப்பவர்களை வளர்ப்பதற்காகத்தான், கட்சியை வளர்ப்பதற்காகத்தான் செய்யும்படியான நிலைமை இருக்கிறது, மக்களின் நலனில் அக்கறை இல்லை, கட்சிக்காக கட்சி அங்கத்தினர்களுக்காக என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோல் முதலமைச்சரவர்கள் இன்றைன்று சொன்னார்கள். முன்பெல்லாம் எங்களைக் குற்றம் சாட்டினார்கள். இந்த மந்திரி போய் தேர்தல் வசூல் செய்யலாமா, அந்த மந்திரி போய் வசூல் செய்யலாமா என்று கேட்டார்கள். இப்பொழுது அவர்கள் என்ன செய்கிறார்கள்? தவறு என்று குற்றம் சாட்டிக் கூறிய அதே தவறைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அடுத்த தேர்தலுக்கு 30 லட்சம் ரூபாய் எனக்குத் தேவை என்று சொல்கிறார்கள். முன்பு அமைச்சர்கள் செய்தார்கள் என்று கூறிய அவர்கள், இப்பொழுது அவர்கள் செய்ததற்கும் அதிகமாகவே தவறு செய்கிறார்கள் என்று குற்றம் சாட்ட விரும்புகிறேன். வெற்றி பெறுவது மக்களின் அன்பைப் பொறுத்துத்தான், பணத்தினால் அல்ல, மக்களின் மனத்திலேதான் இருக்கிறதே தவிர, மக்களுக்கு நன்மை செய்வதிலேதான் இருக்கிறதே தவிர வேறொன்றுமில்லை.

இப்பொழுதிருக்கும் சூழ்நிலையில், இந்த சர்க்கார் வந்து மக்களின் நலனைவிட கட்சிக்காக எதையும் செய்வது என்று இருக்கிறார்கள். அதைப்பற்றி நிறையச் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆனால் அடுத்த பட்ஜெட் கூட்டத்தில் பேச வேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஆகையால், கவர்னர் பெருமானின் உரையிலே எதுவும் புதிதாக கிடையாது. ஏற்கெனவே இருந்த திட்டங்களின் விஸ்தரிப்புதானே தவிர இவர்கள் ஒரு திட்டத்தைப் போட்டார்களா? ஏதோ நாங்கள் போட்ட திட்டத்தை நிறைவேற்றி வைத்தனர்களே தவிர, 'நாங்கள் வந்த பிறகு ஆரம்பித்த திட்டம்' என்று குறிப்பிட முடியவில்லை என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன், லாட்டரி அடிப்பதைத் தவிர. அது அவர்கள் குழந்தை. கவர்னர் பெருமான் உரை ஏமாற்றம் தரத்தக்கதாக இருக்கிறது. பொருளாதாரத் திட்டம் எதுவுமில்லை, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு எந்த வசதியும் இல்லை, மாணவர்கள் பிரச்சனையைத் தீர்க்க வழியில்லை, வேலை

யில்லாமல் நீக்கப்பட்ட ஊழியர்களைத் திரும்ப எடுத்துக்கொள்வதற்கு எந்தவிதமான வழிவகைகளும் கிடையாது. இது ஏமாற்றம் தரக்கூடியதாக இருக்கிறது என்று கூறி என் பேச்சை முடித்துக்கொள்ளுகின்றேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : தலைவரவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றிதெரிவிக்கும் தீர்மானத்தின்மீது நடைபெற்றுள்ள விவாதத்தில் இறுதியாக என்னுடைய கருத்துக்களைக் கூறுவதற்கு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் இந்த அளவு அவகாசத்தையாவது தந்தமைக்காக மிகுந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

சென்ற ஆண்டு இதே நாளில் பேரறிஞர் அண்ணா அவர்கள் அடையாறு மருத்துவமனையில் அறுவை சிகிச்சை முடிக்கப் பெற்று, மருத்துவ நிபுணர்களெல்லாம் அவர் உயிர் பிழைத்துக் கொள்வார் என்று நம்பிக்கை தெரிவித்து, அந்த நம்பிக்கையின் அடிப்படையிலே இந்த மாமன்றத்தில், இந்த நேரத்திலே நாம் கூடியிருந்தோம். ஆனால் அந்த நம்பிக்கை வீணாகின்ற அளவுக்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்தார்கள் என்பதும், அவர்களுக்குப் பிறகு இந்த ஆட்சிப் பொறுப்பை மிகச் சாமானியர்களாகிய நாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறோம் என்பதையும் இந்தப் பேரவை அறியும். ஏறத்தாழ இந்த ஓராண்டுக் காலமாக, இன்னும் நான்கைந்து நாட்கள் நிறைவேறினால் ஓராண்டு முடிந்து விடக் கூடிய இந்தக் காலத்தில், இந்த அரசு பல வெற்றிகரமான சாதனைகளைச் செய்திருக்கிறது. மக்களுடைய அன்பைப் பெற்றிருக்கிறது என்றால் ஏதோ முதலமைச்சராக இருக்கிற நானோ அல்லது அமைச்சரவையில் உள்ள நண்பர்களோ அல்லது ஆளுங் கட்சியில் இருக்கும் நாங்கள் மாத்திரம்தான் காரணம் என்று பெருமையடித்துக்கொள்ள விரும்பவில்லை. எல்லாக் கட்சிகளின் ஒத்துழைப்புடனும், எல்லாக் கட்சித் தலைவர்களின் நல்லெண்ணத்தோடு, இந்த ஓராண்டுக் காலமாக, அறிஞர் அண்ணா அவர்களுடைய மறைவுக்குப் பிறகு, தமிழகத்திலே ஒரு நல்ல அமைதியையும், மற்ற மாநிலத்துக்காரர்கள் பார்த்து வியந்து பாராட்டத் தக்க ஒரு நிலைமையையும் உருவாக்கியிருக்கிறோம் என்றால் அந்த வெற்றியில் எங்களுக்கு மாத்திரம் பங்கு இல்லை, இந்த மாமன்றத்திலிருக்கின்ற அனைவருக்கும் பங்கு உண்டு என்பதை நான் இங்கே மிகுந்த பெருமையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆளுநர் உரையின்மீது விவாதத்தின் முடிவுரையிலே மட்டும் நான் பேசுகின்ற பேச்சு இது என்று கருத வேண்டாம். கடந்த 2, 3 தினங்களுக்கு முன்பு வேறு சில மாநிலங்களிலே சுற்றுப் பிரயாணம் செய்த நேரத்திலே, அங்கு மற்ற மாநிலங்களினுடைய அரசியல் மேதைகளெல்லாம் தமிழகத்திலுள்ள அமைதியையும், தமிழகத்தில் நடைபெறுகின்ற நல்லாட்சியையும் குறித்து பாராட்டு தெரிவித்து யாராவது பேசுவார்களேயானால், அதற்குப் பதில் அளிக்கும் நேரத்தில் இந்தப் பெருமைக்கு திராவிட முன்னேற்றக்



கழகம் மாத்திரம் உரியது அல்ல, இந்தப் பெருமைக்குத் தமிழ்நாட்டிலே இருக்கிற எல்லா எதிர்க் கட்சிகளும் தருகின்ற ஒத்துழைப்புதான் அந்த அமைதிக்குக் காரணம், இந்த பெருமைக்கு அவர்களும் காரணம் என்று மிகுந்த பெருந்தன்மையுடனும் தன்னடக்கத்துடனும், அறிஞர் அண்ணா அவர்கள் கற்றுத் தந்த அந்தப் பாடத்தின்படி என்றென்றைக்கும் சொல்லி வந்திருக்கிறேன். அதைத்தான் இன்றைக்கும் சொல்கிறேன்.

இன்று இந்த அவையிலே நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வழக்கத்திற்கு மாறாக கொஞ்சம் கடுமையான பதங்களையெல்லாம் பயன்படுத்தி, தங்களுடைய உரையை நிகழ்த்தியிருக்கிறார்கள். ஒருவேளை நான் உடல் நலமில்லாமல், உடல் நலிவுற்றுக் கொஞ்சம் பலகீனமாக வந்திருக்கிறேன் என்ற காரணத்தால், பலகீனமானவர்களுக்கு எப்பொழுதும் ஆத்திரம் அதிகம், அதைப் பயன்படுத்தி இந்தக் கடுமையான வார்த்தைகளை உபயோகித்திருப்பார்களோ என்று நினைக்கிறேன். அதனால் ஆத்திரத்திற்கு ஆளாவேன் என்று கருதி யிருக்கலாம். நான் உட்கார்ந்திருக்கும் இடம் அண்ணா அவர்கள் உட்கார்ந்து விட்டுவிட்டுப் போன இடம். ஆகவே, நான் ஆத்திரத்திற்கு இடம் அளிக்கமாட்டேன். "ஜம்பம், டம்பம் என்றும், கேலியாகவும் கிண்டலாகவும், மாண்புமிகு அமைச்சர்கள் அனைவரையும் கைது செய்யவேண்டும், யோக்கியதை இருக்கிறதா, நாணயம் இருக்கிறதா", இவையெல்லாம் கனிவான மொழி பேசக் கூடிய திரு. கருத்திருமன் அவர்களிடமிருந்து எப்படித்தான் இன்று வந்தனவோ எனக்கே புரியவில்லை. இப்படிப் பேசாவிட்டால் வெளியிலேயிருக்கும் காங்கிரஸ்காரர்கள் தொந்தரவு செய்கிறார்கள். அதுவும் எனக்குத் தெரிகிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : அப்படி ஒருவர் தொந்தரவு செய்து தான் பேசினேன் என்றால், அவர்கள் கட்சியிலேயும் ஏதாவது சொல்கிறார்களா, சொல்லியபடி பேசுகிறார்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : எங்கள் கட்சியிலே அப்படிப் பட்ட சங்கடம் இல்லை. எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய பேச்சில் பொதுவாக முதல் கட்டத்தில் வறட்சிப் பணியைப்பற்றி நீண்ட நேரம் எடுத்துச் சொன்னார்கள். அவைகளைத் தவிர அவர்கள் பேசியது அனைத்தும் இந்த அவையிலே இந்த மூன்று ஆண்டுகாலமாகத் தொடர்ந்து அடிக்கடி பேசி வருகின்ற பழைய செய்திகள் தான் என்பதை அவர்களும் நன்றாக அறிவார்கள். ஏனென்றால், சபையினுடைய நடவடிக்கைப் புத்தகங்கள் சாட்சிக்கு இருக்கின்ற காரணத்தினால் அதை அவர் மறுக்க முடியாது. வறட்சிப் பணிகள் குறித்து இந்த மாமன்றத்தில் எல்லாக் கட்சித் தலைவர்களும், மிக விளக்கமாக எடுத்துரைத்திருக்கிறார்கள். 1968-ல் எப்பொழுதுமே சாதாரணமாகப் பெய்ய வேண்டிய 920 மில்லி மீட்டர் மழை பொழிவதற்குப் பதிலாக, 742 மில்லி மீட்டர் அளவு தான் மழை பொழிந்தது என்பதாலும், அதன் காரணமாகத் தமிழ்நாட்டில் ஒரு சில மாவட்டங்களைத் தவிர, மற்ற எல்லா மாவட்டங்

களிலும் உணவு உற்பத்தி குறைந்தது, கண்மாய்கள், குளங்கள் ஏரிகள், கால்வாய்கள் அனைத்தும் வறண்டன, வயல்கள் வெடித்துக் கிடந்தன என்கின்ற செய்திகள் நமக்குப் புதிதல்ல. உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தண்ணீர் தேவை, மழை தேவை. அதே நேரத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்குகின்ற வாய்ப்புக் கூறுகள் அடைபட்ட காரணத்தினால், வேளாண்மைத் துறையிலே ஈடுபட்டிருந்த ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலை வாய்ப்பை இழந்தார்கள். அந்த நேரத்தில் வறட்சிப் பணிகளுக்காக நாம் மாற்று வேலை என்கின்ற பெயரால் அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்காக எடுத்துக் கொண்ட வேலைகளைப் பற்றி உங்களுக்குச் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன்.

13,400 பெரிய, சிறிய நீர்ப்பாசன ஏரிகள் தூர் எடுக்கப்பட்டன. 5,500 சாலை வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. 683 மண்வள பாதுகாப்பு வேலைகள், 821 குடிமராமத்து வேலைகள் செய்து முடிக்கப்பட்டன. ஒரே சமயத்தில் 40,600 வேலைகள் உச்ச கட்டத்தில் தமிழ்நாடு முழுவதும் நடைபெற்றன. அதிலே 8 லட்சம் வேளாண்மைத் தொழிலாளர்கள் வேலை வாய்ப்புப் பெற்று மகிழ்ந்தார்கள். நான் சென்ற பல்வேறு மாவட்டங்களில் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட முடியாமல் தத்தளித்து கொண்டு, அன்றாட சாப்பாட்டிற்கே கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தவர்கள், இப்படிப்பட்ட மாற்று வேலை திட்டங்கள் மூலம் 8 லட்சம் தொழிலாளர்கள் 40,600 வேலைகளில் ஈடுபட்டார்கள். மாநிலம் முழுவதும் இதையன்னியில் 34,265 கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டு, அதிலும் வேலை வாய்ப்புக்கள் உண்டாக்கப்பட்டு, தண்ணீர் புதிதாகப் பெறுவதற்கான சூழ்நிலையும் உருவாக்கப்பட்டது.

இவைகளைப் பற்றிய கணக்கு எங்கே. கணக்கு எங்கே என்று இந்த அவையிலே பொதுவாக எதிர்கட்சி உறுப்பினர்களால் கேட்கப்பட்டு, நம்முடைய மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களினால் கொஞ்சம் வேகமாகவும் இப்பொழுது கேட்கப்பட்டது. குடிநீர் வசதிக்காக மாத்திரம் ரூ. 5.88 கோடி செலவழித்திருக்கிறோம். சிறிய பாசன வேலைகளுக்காக ரூ. 2.79 கோடி, பெரிய பாசன வேலைகளுக்கு ரூ. 2.23 கோடி, சாலைகளுக்கு ரூ. 3.23 கோடி, மண்வளப் பாதுகாப்பு வேலைகளுக்கு ரூ. 21 லட்சம், குடிமராமத்து வேலைகளுக்கு ரூ. 9,06,000, பாறை உடைப்புக் கருவிகளை வாங்குவதற்கு ரூ. 63,65,000, விவசாயிகளுக்குக் கடன் உதவிக்காக ரூ. 2 கோடி 65 லட்சம், இப்படி ரூ. 17.68 கோடி மொத்தத்தில் செலவிடப்பட்டிருக்கிறது. இதிலே மாவட்ட வாரியாகக் கணக்கு:—

செங்கற்பட்டுக்கு ரூ. 2 கோடி 17 லட்சம்.

வட ஆற்காட்டுக்கு ரூ. 3 கோடி 7 லட்சம்.

தென் ஆற்காட்டுக்கு ரூ. 1 கோடி 56 லட்சம்.

தஞ்சைக்கு ரூ. 55 லட்சம்.



திருச்சிக்கு ரூ. 87 லட்சம்.

மதுரைக்கு ரூ. 1 கோடி 20 லட்சம்.

இராமநாதபுரத்திற்கு ரூ. 2 கோடி 32 லட்சம்.

நெல்லைக்கு ரூ. 77 லட்சம்.

சேலத்திற்கு ரூ. 1 கோடி 3 லட்சம்.

தர்மபுரிக்கு ரூ. 83 லட்சம்.

கோவைக்கு ரூ. 2 கோடி 37 லட்சம்.

நீலகிரிக்கு ரூ. 11.5 லட்சம்.

கன்யாகுமரிக்கு ரூ. 23 லட்சம்.

என்பதாகும். இவைகளிலே குறிப்பிடத்தக்க பணிகள் என்று பார்த்தால், ஆங்காங்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் நூற்றுக் கணக்கான பணிகளை நாம் காண முடியும். மிக முக்கியமானவற்றை மட்டும் உங்களிடம் குறிப்பிட விரும்புகிறேன். தென் ஆற்காடு மாவட்டத்தில் பண்ருட்டி தொகுதியிலும், அருகாமையில் காடாம்புலியூர் பகுதியிலும்—அங்குள்ள கிணறுகள் ஏறத்தாழ 150, 200 அடி அளவுக்கு ஆழமான கிணறுகள்—அவ்வளவு ஆழமாக இருந்தாலும், அந்தக் கிணறுகளில் இருக்கக் கூடிய தண்ணீர் 2 அடி, 3 அடி உயரத்திற்கு மேல் இருக்காது—அந்தத் தண்ணீரையும் பயன்படுத்த முடியாதபடி, அந்தப் பகுதியிலிருக்கிற அரிசன மக்கள் எப்படியாவது மழை பெய்து குட்டைகளில் தண்ணீர் தேங்கினால், ஆடு மாடுகள் குளிக்கின்ற, குடிக்கின்ற அந்தத் தண்ணீரை அரிசனங்கள் குடிப்பதற்குப் பயன்படுத்தி வந்திருக்கின்ற பயங்கரமான காலம் நூற்றாண்டு காலமாக இருந்து வருகிறது. வறட்சிப் பணியை பயன்படுத்திக் கொண்டு, நிவாரணத்தில் ஈடுபட்டு, பூமிக்கு அடியில் 700 அடிக்குக் கீழே கடல் போன்ற அளவில் தண்ணீர் விரிந்து பரந்து காணப்பட்டதை அறிந்து, உடனடியாக முயற்சி செய்து, ஆழ் துளைக் கிணறுகள் மூலம் அதனை வெளிக் கொணர்ந்து, மேல்நிலைத் தொட்டிகளில் நீரைத் தேக்கி, அந்தப் பகுதி முழுவதும் குழாய் மூலம் தண்ணீர் வரும்படியாகச் செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியிலிருக்கிற மக்கள் அத்தனை பேராலும் பாராட்டப்படுகின்ற ஒரு காரியமாக இருக்கிறது அது. நூற்றாண்டு காலமாகத் தீர்க்கப்படாத பிரச்சினை அங்கே தீர்க்கப்பட்டிருக்கிறது.

மதுராந்தகம் ஏரி பல நூற்றாண்டு காலமாகத் தூர் எடுக்கப்படாத ஏரி; அந்த ஏரி தூர் எடுக்கப்பட்டிருக்கிற காரணத்தினால், மழையின் காரணமாகத் தேங்கியிருக்கின்ற தண்ணீர் ஏற்கனவே 6 மாத காலத்திற்கு வரும் என்றால்—உதாரணத்திற்காகச் சொல்கிறேன்—மேலும் 6 மாத காலத்திற்குப் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்கின்ற அளவுக்கு நாம் தூர் எடுத்திருக்கிற காரணத்தினால் நிரம்பி வழிந்து கொண்டிருக்கிற காட்சியைக் காண்கிறோம்.

கன்யாகுமரி மாவட்டத்தில் கடலோரத்தில் இருக்கிற கிராமங்களில் ஏறத்தாழ 35 கிராமங்களில் இதுவரையில் சுதந்திரம் பெற்று 20 ஆண்டு காலத்திற்குப் பின் கூட அங்கிருக்கிற கிணறுகளில் ஊறுகின்ற உப்புத் தண்ணீரைத்தான் அந்தப் பகுதியில் இருக்கிற மீனவப் பெருங்குடி மக்கள் குடித்து, தங்களுடைய தாக விடாயைத் தீர்த்துக்கொள்ளக்கூடிய பயங்கர சூழ்நிலை இருந்தது. நல்ல தண்ணீர் வேண்டும் என்பதற்காக 4 மைல், 5 மைல் நடந்து, குடத்தை எடுத்துச் சென்று, அங்கிருந்து நல்ல தண்ணீரைக் கொண்டு வரக்கூடிய கொடுமையில் அங்கிருந்த மக்கள் வாடிக் கொண்டிருந்தார்கள். வேடிக்கையாகக் கூட சொல்வார்கள், அந்தப் பகுதியிலிருப்பவர்களுக்குப் பெண்கள் கொடுப்பது என்றால் கூட பயப்படுவார்கள் என்ற அளவுக்கு அங்கே தண்ணீர் பஞ்சம் இருந்துக் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட இடத்தில் கடலோரப் பகுதிகளிலே 36 கிராமங்களில் நல்ல தண்ணீருள்ள கிணறுகள் எங்கே இருக்கின்றன என்று தேடி, வெகு தொலைவிலே இருந்தாலும் பரவாயில்லை என்று கருதி, அங்கெல்லாம் மேல்நிலைத் தொட்டிகள் அமைக்கப்பட்டு, அங்கிருந்து குழாய்கள் மூலம் 36 கிராமங்களுக்கு, இப்பொழுது 6 கிராமங்களைத் தவிர, பாக்கி 30 கிராமங்களுக்கு குழாய் மூலம் தண்ணீர் அளிக்கப்பட்டிருக்கிறது. பல ஆண்டுகளாகத் தீர்க்கப்படாத பிரச்சினை கன்யாகுமரி மாவட்டத்தில் கடலோரப் பகுதியில் இருக்கிற கிராமங்களில் தீர்க்கப்பட்டு, அந்த மக்கள் பெரு மகிழ்ச்சி அடைந்திருக்கிறார்கள்.

வறட்சி நிவாரணத்திற்காகச் செலவழிக்கப்பட்ட இந்தத் தொகை ரூ. 17.68 கோடி. இதிலே எவ்வளவு மத்திய அரசின் மூலம் நமக்குக் கிடைத்திருக்கிறது, நாம் எவ்வளவு செய்தோம் என்கின்ற விளக்கங்களெல்லாம் ஏற்கனவே இந்த அரசின் மூலம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஏதோ மத்திய சர்க்கார் ஒரு காரணத்திற்காக இங்கிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தை விலைக்கு வாங்குவதற்காக, அல்லது குடியரசுத் தலைவர் தேர்தலுக்காக அந்தப் பணத்தைக் கொடுத்துவிட்டார்கள் என்றெல்லாம் பேசுவது, ஏதோ மேடையிலே மாலை நேரத்தில் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்பதல்ல, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவராக இருப்பவர், அவர்கள், இந்த மாமன்றத்தில் இப்பொழுது எடுத்துச் சொன்னது எனக்கு மிகுந்த வியப்பை அளிக்கிறது.

பொதுவாக ஒரு மாநிலம் வறட்சிப் பணிக்கு செலவிடுவது என்றால் முதல் ரூ. 50 லட்சம் அந்த மாநிலமே செலவிடவேண்டும் என்ற நியதி இருக்கிறது. அதற்கு மேல் அதற்கு எவ்வளவு செலவானாலும், அந்தச் செலவில் மத்திய அரசு எவ்வளவு கொடுப்பது, மாநில அரசு எவ்வளவு கொடுப்பது, மத்திய அரசு கொடுக்கின்ற தொகையில் கடன் எவ்வளவு, மானியம் எவ்வளவு, என்கின்ற நியதிகளெல்லாம் ஏற்கனவே வகுக்கப்பட்டிருக்கின்றன. குடியாட்சித் தலைவர் தேர்தலுக்கு பின் அல்ல, குடியாட்சித் தலைவர் தேர்தலுக்கு முன்பே, இன்னும் சொல்லப் போனால் திருமதி இந்திரா காந்தி அவர்களுக்கும், திரு. நிஜலிங்கப்பா



அவர்களுக்கும் இடையே தகராறு வந்ததற்குப் பின்னால்ல, வருவதற்கு முன்பே, பல ஆண்டு காலமாகவே இந்த நியதிகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. வறட்சி நிவாரணத்திற்கு செலவழிக்கப்படும் தொகையில் முதல் ரூ. 50 லட்சம் மாநில அரசே ஏற்க வேண்டும், அதற்கு மேல் செலவாகும் தொகையில் 50 சதவிகிதம் மத்திய அரசு மானியமாகவும், 25 சதவிகிதம் மத்திய அரசு கடனாகவும் வழங்க வேண்டும். செலவழிக்கப்படுகிற தொகையிலே மீதியுள்ள 25 சதவிகிதம் மாநில அரசே பொறுப்பெற்று செலவழிக்க வேண்டும். இது தான் உள்ள நியதி. இந்த உதவித் தொகையிலே மற்ற மாநிலங்களுக்கும் நம்முடைய மாநிலத்திற்கும் கொடுக்கப்பட்டுள்ள தொகையிலே வித்தியாசம் இருந்தால், ஒரு வேளை அந்த மாநிலத்திலுள்ள வறட்சிக் கொடுமை குறைவாக இருக்கலாம். அல்லது, வறட்சிக் கொடுமை அதிகமாக இருந்தும், அந்த மாநில அரசு அதை அகற்றுவதற்கு அதிக அக்கறை எடுத்துக்கொள்ளாமலும் இருக்கலாம். அதைத்தவிர வேறு எந்தக் காரணமும் இருக்க முடியாது.

ஜனாதிபதி தேர்தல் ஆகஸ்ட் மாதம், 16-ந்தேதி நடந்தது. சிண்டிகேட்--இண்டிகேட் பிளவு செப்டம்பர்--அக்டோபரில் ஆரம்பமானது. அதற்குப் பிறகுதான் நம்பிக்கையில்லாத் தீர்மானம் பாராளுமன்றத்தில் வந்தது. 1969, ஜூன் மாதம், மத்திய சர்க்காரிலிருந்து ராமச்சந்திரன் தலைமையில் ஒரு குழு தமிழகத்திற்கு வந்தது. வரட்சி நிவாரண வேலைகள் என்னென்ன, தேவை என்ன எவ்வளவு தொகை ஒதுக்கீடு செய்யலாம், என்பதையெல்லாம் வரையறுக்க ஜூன் மாதத்தில் அந்தக் குழு வந்தது. அந்தக் குழு பல மாவட்டங்களைச் சுற்றிப் பார்த்து, வரட்சி நிவாரணத்திற்கு ரூ. 15 கோடி வரையில் செலவழிக்கலாம், இன்னும். அதற்கு மேலும் செலவழிக்கத் தேவைப்பட்டால், பருவ மழை மேலும் பொய்க்குமேயானால் அதிகம் செலவழிக்கலாம் என்று, ரூ. 15 கோடிக்குத் திட்டம் தீட்டிவிட்டு, ராமச்சந்திரன் குழு அந்தத் திட்ட அறிக்கையை மத்திய சர்க்காரிடம் கொடுத்தது, ஜூன் மாதத்தில். ஜூன் மாதத்தில் பிளவுக்கு விதை கூட ஊன்றப்படவில்லை. ஜூன் மாதத்தில் ஜனாதிபதி தேர்தலில் யார் யார் போட்டியிடுகிறார்கள் என்ற சர்ச்சை எழவில்லை; ஜனாதிபதி பற்றி காங்கிரஸில் இப்படிப்பட்ட சச்சரவுக்கு ஆயத்தம் உருவாக்கப் படவில்லை; ஜூன் மாதத்தில் இங்கே வந்த குழு ரூ. 15 கோடி வேண்டும் என்று அறுதியிட்டு இருக்கிறது. மேலும் பருவ மழை பொய்க்குமானால், அதிகப்படியான பணம் ஒதுக்கலாம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் ஜனாதிபதி தேர்தலுக்குப் பிறகு 3 கோடி, 4 கோடி, 5 கோடி என்று கொடுத்துக் கொண்டே இருந்தார்கள் என்று சொல்லுகிறார்கள். அந்த விவரத்தையும் தருகிறேன்.

அதாவது, நான் அறிஞர் அண்ணாவிற்குப் பிறகு இந்தப் பொறுப்பேற்ற பிறகு, மார்ச் 31-ல் 1¼ கோடி வந்திருக்கிறது. மாதா மாதம் தந்திருக்கிறார்கள். மே மாதம் அனுப்பவில்லை. செய்திருக்கும்

வேலைகளைக் காட்டி பணம் கேட்கவேண்டும். மார்ச் மாதத்தில் 1¼ கோடி; ஏப்ரல் மாதத்தில் 2 கோடி; ஜூன் மாதத்தில் 13-ந் தேதி 2 கோடி; ஜூலை மாதம் 22-ம் தேதி 3 கோடி. ஆக, இதுவரையில் 8¼ கோடி ரூபாய் வாங்கிவிட்டோம். ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பு 8¼ கோடி. அதற்கும் பிறகு 6 கோடிதான்; மாதா மாதம் விகிதாச்சாரப்படி பணம் தரப்பட்டதே தவிர, ஏதோ பேரம் பேசி தந்து விட்டார்கள், என்று கூறுகின்ற கூற்று, உண்மைக்குப் புறம்பானது என்று எடுத்துக் காட்டவே இதை எடுத்துச் சொன்னேன். ரூ. 8¼ கோடி மத்திய சர்க்காரிலிருந்து பெறுமுன் பணி செய்தபோது, நாம் மாநில சர்க்கார் செலவழித்திருந்தது ரூ. 14 கோடி, நாம் 14 கோடியைச் செலவழித்துவிட்டு, தாக்கீது அனுப்பினோம். அவர்கள் 8¼ கோடி அனுப்பினார்கள்.

இந்த மாநிலத்திற்கு மட்டுந்தானா? மற்ற மாநிலங்களுக்குத் தரப்படவில்லையா? 1967-68-ல், அப்பொழுதெல்லாம் காங்கிரசில் புகைச்சலும், காய்ச்சலும் இல்லை. அந்த நேரத்தில், அதாவது, 1967–68-ல் ஆந்திர மாநிலத்திற்கு தரப்பட்ட பணம், வறட்சி நிவாரணத்திற்காக ரூ. 15 கோடி; 1967-68-ல் பீகாருக்குத் தரப்பட்ட பணம் ரூ. 41 கோடி; அதற்கு முன்பே 1966-67-ல் நீங்கள் மிக ஒற்றுமையாக இருந்த நேரத்தில், பீகாருக்கு கொடுத்தது ரூ. 18 கோடி; 1967-68-ல், இன்னொரு அணிவகுப்பை நடத்தும், மொரார்ஜி தேசாய் மாநிலமாகிய குஜராத்துக்குத் தரப்பட்ட பணம் ரூ. 11 கோடி; இப்படி எல்லா மாநிலங்களுக்கும் தரப்பட்டிருந்த போதிலும் நம்முடைய மாநில அரசு எடுத்துக் கொண்ட அக்கறையின் காரணமாக, இன்னின்ன பணிகளை நிறைவேற்றியிருக்கிறோம், இன்னின்ன செலவினங்களைச் செய்திருக்கிறோம் என்று கூறிக் கேட்டதன் மேல், ரூ. 14¼ கோடி தரப்பட்டது.

அந்தப் பணம் எந்த எந்த முறைகளில் வாட்சிப் பணிகளுக்குச் செலவழிக்கப்பட்டது என்ற விவரமும் தருகிறேன். ஊராட்சித் தலைவர்கள் மூலம், வேலைகள் எங்கெங்கு நிறைவேற்றப்பட முடியுமோ, அங்கெல்லாம் செய்யப் பட்டன; ஏரி, கால்வாய் தூர் எடுக்கும் வேலைகள் இவற்றால் பயன் அடைவோர்கள் (பெனிபிஷரிஸ்) பொறுப்பில், அப்படிப்பட்ட வேலைகள் அவர்களிடம் விட்டு விட்டோம். மூன்றாவதாக, பெருவழித் துறை, பொதுப் பணித் துறை, வேளாண்மைத் துறை இவைகளால் சில வேலைகள் நிறைவேற்றப்பட்டன. நான்காவதாக, ரெஜிஸ்டர்ட் கண்ட்ராக்டர்கள் மூலம், அவர்களால் செய்யக்கூடிய வேலைகள் அவர்களிடம் தரப்பட்டன. இந்த நான்கு முறைகளில்தான் வேலைகள் செய்யப்பட்டன.

இதிலே கட்சி வேறுபாடு உண்டா? திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்கள் இருக்கும் தொகுதிகளுக்குதான் அதிகமாகச் செலவழிக்கப்பட்டது என்று உண்டா? அதற்கான விவரத்தையும் இந்தச் சபைக்குத் தருகிறேன். ஏதோ காரசாரமாகப் பதில்



அளித்து விட்டேன் என்பதற்காக அல்ல, உறுப்பினர்கள் மனத்தில் ஐயம் எழுந்திருக்குமேயானால், இதை எடுத்துக் கூறுவது அவசியம் என்ற வகையில் சொல்லுகிறேன். செங்கல்பட்டுக்கு ஒதுக்கப்பட்ட பணம், ரூ. 1 கோடி, 75 லட்சம், சராசரி ஒவ்வொரு தொகுதிக்கும் பங்கிட்டால் ஒரு தொகுதிக்கு ரூ. 12 லட்சம் வரவேண்டும். அதிலே நம்முடைய திருத்தணித் தொகுதிக்கு மட்டும் ரூ. 15 லட்சத்து, 26 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. திருத்தணித் தொகுதிக்காக திரு. விநயகத்தைப் பாராட்ட வேண்டும். (குறுக்கீடு) நீங்கள் பாராட்டாததால், நான் பாராட்டுகிறேன். வடாற்காடு மாவட்டத்தில், திருவண்ணாமலைக்கு, காங்கிரஸ் உறுப்பினர் தொகுதிக்கு ரூ. 15 லட்சத்து 2 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. அந்த மாவட்டத்திலேயே, கணியம்பாடி என்ற காங்கிரஸ் உறுப்பினர் தொகுதிக்கு ஒதுக்கப்பட்டது ரூ. 14 லட்சத்து 8 ஆயிரம் ரூபாய். அந்த மாவட்டத்திலேயே எல்லாத் திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்கள் இருக்கும் தொகுதிகளுக்கும், இதைவிடக் குறைவான தொகைதான் செலவழிக்கப்பட்டிருக்கிறது. மதுரை மாவட்டத்தில், சுதந்திராக் கட்சி உறுப்பினர் இருக்கும் உசிலம்பட்டித் தொகுதிக்கு ரூ. 12.46 லட்சம் செலவழிக்கப்பட்டது. திருமங்கலத்திற்கு ரூ. 9.92 லட்சம், வடமதுரைக்கு ரூ. 7.77 லட்சம். இவைகளெல்லாம், காங்கிரஸ் உறுப்பினர்கள், மற்றும் கழக உறுப்பினர்கள் அல்லாதவர்கள் இருக்கும் தொகுதிகளுக்குச் செலவழிக்கப்பட்டிருக்கிறது. திரு. ஓ. பி. ராமன் தொகுதிக்கு, அங்கே அதிகத் தேவையில்லை என்பதால், ரூ. 23,000 தான் செலவழிக்கப்பட்டது. தேவையிருக்கும் இடங்களுக்கு அதிகமாகச் செலவழிக்கப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் உறுப்பினர் திரு. சௌந்திரபாண்டியன் தொகுதியாகிய ராதாபுரத்திற்கு ரூ. 13 லட்சத்திற்கு மேல் செலவழிக்கப்பட்டிருக்கிறது. கோவையில் காங்கேயம் பகுதிக்கு ரூ. 13.46 லட்சம் செலவழிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய அமைச்சர் சாதிக் பாட்சாவின் தொகுதி, உடுமலைப்பேட்டை, நிதி அமைச்சர் பிறந்த ஊர், அதற்கு ரூ. 1.07 லட்சம்.

இவ்வளவுக்கும் பிறகு கணக்குகள் சரியில்லை, கணக்குகள் சரியில்லை, விவரங்கள் இல்லை, விவரங்கள் இல்லை என்று சொல்லுகிறார்கள். எங்களுக்கு இருக்கும் வருத்தமெல்லாம், சபையில் வைக்கும் பல புத்தகங்களை, விவரங்களை எதிர்க் கட்சித் தலைவர் முழுவதும் படிக்கவில்லை என்கிற குறைதான் (பலத்த சிரிப்பு) கேலியாகச் சொல்லவில்லை. இவன் என்ன வைப்பது, நான் என்ன படிப்பது என்றும் இருக்கலாம். 12—9—1969-லேயே செலவழித்திருக்கும் ரூ. 15 கோடிக்கு விவரம் கொடுத்து அறிக்கை வைத்திருக்கிறது. குடிநீருக்கு இவ்வளவு, சாலைக்கு இவ்வளவு, பாசனங்களுக்கு இவ்வளவு, கிணறுகளுக்கு இவ்வளவு என்றெல்லாம், மாவட்ட ரீதியாக, பஞ்சாயத்து யூனியன் ரீதியாக கணக்கு வைக்கப்பட்டிருக்கிறது. அது மாத்திரமல்லாமல், இந்தக் கணக்குகளைத் தணிக்கை செய்ய என்று 'நிதித்' துறையில் தனிப் பிரிவு ஒன்று ஏற்பாடு செய்யப்

பட்டிருக்கிறது. அந்தத் தனிப் பிரிவு ஆய்வு செய்வது மட்டுமல்லாமல் இந்தக் கணக்குகள் அகவுண்டெண்டண்ட்-ஜெனரல் தணிக்கைக்கும் அனுப்பப்படுகிறது. அதன் பிறகு அது பொதுக் கணக்கு ஆய்வுக் குழுவிற்கு, பப்ளிக் அகவுண்ட்ஸ் கமிட்டிக்கு வர இருக்கிறது. பப்ளிக் அகவுண்ட்ஸ் கமிட்டி தலைவரே நம் எதிர்க்கட்சித் தலைவர் தான். கணக்குகளைப் பார்க்கும் அதிகாரம் அவருக்கு இருக்கிறது. அப்படிக் கணக்குகளைப் பார்த்து, தவறு என்று சொன்னால் அவற்றிற்கு வருத்தம் தெரிவிக்க, அல்லது தவறுகளை இனிமேல் நடக்காமல் பார்த்துக் கொள்ள, எதிர்க் கட்சிகளுடைய கருத்துக்களைக் கேட்டு நடக்க, ஆளும் கட்சி என்றைக்கும் கடமைப் பட்டிருக்கிறது என்பதை எடுத்துக் கூற உள்ளபடியே பெருமைப் படுகிறேன். அவர்கள் எடுத்துக் காட்டியதுபோல, அங்கொன்று, இங்கொன்று தவறு நடந்திருக்கலாம்; பதினேழு கோடி ரூபாய் செலவழித்திருக்கும் போது, ஆயிரம், இரண்டாயிரம் அளவில் ஊழல்கள் நடந்திருக்கலாம். அவற்றைப் பொதுக் கணக்குக் குழுவில் தாங்கள் கண்டுபிடித்து, இந்தப் பேரவைக்கோ அல்லது சர்க்காருக்கோ எடுத்துச் சொல்வார்களானால், அரசு அவற்றை ஆராயவும், அப்படிப்பட்ட குற்றம் இனிமேல் வராமல் பார்த்துக் கொள்ளவும் முயற்சிகளை மேற்கொள்ளும். அதை விட்டுவிட்டு, கடைசி லகான் உங்கள் கையில் இருக்கும் போது, இதற்கு யார் பொறுப்பு, அதற்கு யார் பொறுப்பு என்று சொந்தை, சோடைகளையெல்லாம் கேட்பது சரியல்ல. பொதுவாகப் பதினெட்டு கோடி ரூபாயைச் செலவழிக்கவில்லை, பதினெட்டு கோடி ரூபாய் கட்சிக்கே செலவாயிற்று என்று சொல்வது பொருத்தமுடையதாகாது. அது தமிழ்நாட்டுப் பண்புக்கும் ஏற்றது அல்ல. நாங்கள் முன்பு எதிர்க் கட்சியில் இருந்தபோது ஆளும் கட்சியான காங்கிரஸைப் பார்த்து, 'நீங்கள் மத்திய சர்க்காரிடத்திலேயிருந்து இன்னும் பணம் கேளுங்கள்' என்றுதான் வற்புறுத்தினோம். இனிமேல் நீங்களும் எங்களைப்போல் சொல்வீர்கள் என்று எதிர்பார்க்கிறேன். காரணம், மத்திய சர்க்காரிலே இருக்கிறவர்கள் வேறாக இருக்கிற காரணத்தாலே, நீங்களும் இன்னும் அதிகமான பணம் கேளுங்கள் என்று வலியுறுத்திக் கேட்பீர்கள். (சிரிப்பு) இவ்வளவு பணம் உங்களுக்கு கிடைத்துவிட்டதே, உத்திரப் பிரதேசத்திற்கு இவ்வளவுதானே கொடுத்தார்கள் என்றெல்லாம் பேசுவது நல்லதல்ல என்பதற்காகத்தான் இதைக் குறிப்பிடுகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் யாரும் மத்திய சர்க்கார் இவ்வளவு அதிகமான பணம் கொடுத்து விட்டதே என்று சொன்னதாகத் தெரியவில்லை. மத்திய சர்க்காரிடத்திலேயிருந்து எவ்வளவு பணம் வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளுங்கள். நீங்கள் செய்த உபகாரத்திற்காக நன்றியறிதலுக்காக எவ்வளவு பணம் வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளுங்கள். வேண்டுமானால் நாங்களும் சிபாரிசு செய்கிறோம் என்று ஏகமனதாகத்தானே தீர்மானம் போட்டோம் வாங்கிய பணம் எவ்வளவு? அவ்வளவு பணத்திற்கும் கணக்குச் சரியாக இருக்கிறதா, இல்லையா





என்பதுதான். கணக்கு எல்லாம் சரியாக இருக்க வேண்டும் என்பது தான். உத்தரப் பிரதேசத்துக்குக் கொடுத்ததைவிட இங்கு அதிகமாகக் கொடுத்துவிட்டார்கள் என்று யாரும் சொன்னதாகத் தெரியவில்லை. இந்த மன்றத்தைப் பொறுத்தவரையில் மத்தியில் ஆட்சி செய்வது இப்போது இருக்கும் இந்திரா காந்தியா அல்லது அப்போது இருந்த இந்திரா காந்தியா என்பதல்ல பிரச்சினை. தேவையான பணத்தை நிச்சயமாக வாங்க வேண்டும் என்பதை அழுத்தம் திருத்தமாகச் சொல்லிக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** சொன்னது குறிப்புப் புத்தகத்தில் இருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** குறிப்புப் புத்தகத்தில் இருக்கிறதா? அப்படி யாரும் சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, 'மத்திய சர்க்காரிடத்திலேயிருந்து பணம் கேளுங்கள்' என்று எங்களைத் தூண்டிவிடுவதைக் குறைத்துக் கொண்டுவிட்டதாகவும், அதற்குக் காரணம் வறட்சிக்காக அந்தப் பணம் பயன்படுத்தப்படவில்லையென்றும் கூறினார். வறட்சிக்காக அந்தப் பணம் பயன்படுத்தவில்லையென்று கூறுவது நம்முடைய பண்புக்கு ஏற்றதல்ல. எதிர்க் கட்சித்தலைவராக இருக்கிறவர்கள் ஆளும் கட்சியுடன் ஒத்துழைக்க வேண்டும். நல்ல காரியங்கள் செய்யும் போது, ஒத்துழைத்து, மக்களுக்கு நன்மைகள் பெருக உதவ வேண்டும் என்றுதான் நான் எதிர்பார்க்கிறேன். உத்திரப்பிரதேசத்திற்கு இவ்வளவு பணம், தமிழகத்துக்கு இவ்வளவு பணம் என்று சொல்லவில்லையென்று அவர் சொல்கிறார். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பெருந்தன்மை படைத்தவர். அவர் நிச்சயமாகக் கூறியிருக்க மாட்டார். அப்படிச் சொல்லியிருந்தால், யார் சொன்னார்களோ அவர்களைப் போய்த் தாக்கட்டும்.

அடுத்தபடியாக, விலைவாசியைப்பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். பருப்பு வகைகளைப் பொறுத்தவரையில் நமது மாநிலத்தில் அவற்றின் உற்பத்தி மிகக் குறைவு. நம்முடைய தேவையில் பெருமளவு ஆந்திரா, மைசூர், மத்திய பிரதேசம், ராஜஸ்தான், பஞ்சாப், உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களிலிருந்துதான் வருகிற காரணத்தால் தான் அவற்றின் விலைகள் சற்று இப்போது கூடுதலாகியிருக்கும் காட்சியைப் பார்க்கிறோம். விலைவாசிகள் ஒரேயடியாக இறங்கி விட்டன என்று எங்கள் தரப்பில் சாதிக்கவில்லை. முன்பு இருந்ததற்கு, சென்ற மாதத்தில், சென்ற வாரத்தில் விலை சற்றுக் குறைந்திருக்கிறது என்று திருப்திப்பட்டுக்கொள்ளலாம். பருப்பு வகைகளின் விலை அனைத்திந்திய உற்பத்தியைப் பொறுத்தவரையில் அதன் அடிப்படையிலும், ரிசர்வ் பாங்க் கடைபிடிக்கும் கடன் கொள்கையின் அடிப்படையிலும், ரயில்வே வாகன்கள் ஒரு மாதத்திற்குக் கிடைக்கும் எண்ணிக்கையைப் பொறுத்தும்கூட இந்த விலைவாசிகளின் ஏற்றத் தாழ்வுகள் இருக்கின்றன. கடலை

எண்ணெயைப் பொறுத்தவரையில், வறட்சியின் காரணத்தால் தமிழ் நாட்டில் மணிலா உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்ட காரணத்தால் விலை உயர்ந்த அளவிற்குச் சென்று தற்பொழுது ஓரளவு இறங்கத் தொடங்கியிருக்கிறது. மிளகாயைப் பொறுத்தவரையில், ஆந்திராவில் ஏற்பட்ட வெள்ளச் சேதத்தினால் மிளகாயின் உற்பத்தி பாதிக்கப்பட்டதாலேயே விலை ஏறியிருக்கிறது. சென்ற வாரத்தை விட இந்த வாரம் சற்று விலை இறங்கியிருக்கிறது. வெறும் புள்ளி விவரத்தைச் சொன்னால்கூட நமது எதிர்க் கட்சியினர் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். நானும் அவரும் சேர்ந்து ஒத்துக்கொள்ளக்கூடிய பத்திரிகையான சுதேசமித்திரன் 25—1—1970-ம் தேதியிட்ட இதழில், வெளிவந்துள்ள செய்தியின்படி, கடலைப்பருப்பு, பச்சைப் பருப்பு, பட்டாணிப் பருப்பு, துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு போன்ற எல்லாப் பருப்புகளின் விலைகளும் குவிண்டாலுக்கு 5 ரூபாய் முதல் 15 ரூபாய் வரை குறைந்திருக்கிறது. மிளகாய் விலை குவிண்டாலுக்கு 10 ரூபாய் முதல் 30 ரூபாய் வரையில் குறைந்துள்ளது என்று செய்தி வந்திருக்கிறது. விலைகள் குறைந்து வருவது மகிழ்ச்சி தரக்கூடியது அல்லவா? விலைகள் குறைவதற்கான எல்லாவித நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்கிறோம்.

அடுத்தபடியாக வேலை வாய்ப்பைப்பற்றிப் பேசும்போது, எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், மற்ற எதிர்க்கட்சித் தலைவர்களும் குறிப்பிட்டுப் பேசினார்கள். வேலைவாய்ப்புப் பிரச்சினை தமிழ் நாட்டில் தான் நிலவுகிறது என்று கூறுவது பொருத்தமற்றதாகும். இது அகில இந்திய ரீதியில் நாடு பூராவிலும் உள்ள பிரச்சினையாகும். நாடு முழுவதிலும் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து வருகிற காட்சியை நாம் பார்க்கிறோம். டெல்லியில் நடந்த தேசீய அபிவிருத்திக் கவுன்சில் கூட்டத்தில் 1980-ம் ஆண்டில் இந்த நாட்டில் 16 கோடி மக்கள் மாதம் ஒன்றுக்கு 15 ரூபாய் கூட சம்பாதிக்க முடியாத நிலை, ஒரு பயங்கரமான நிலைமை எதிர் காலத்தில் ஏற்படும் என்று எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இந்த நான்காவது ஐந்தாண்டு வரைவு ஏட்டிலே வரைந்து காட்டியிருக்கிறார்கள். வேலைவாய்ப்புகளைப் பொறுத்தவரையில் தொடர்ந்து எந்த வழியில் அரசு செயல்பட்டு வருகிறது என்பதைக் கூறுகிறேன்.

நீர்ப்பாசனத் துறை, பெருவழித் துறை, பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை, மின்சார வாரியம் முதலியவற்றில் வரும் ஆண்டுகளில் நாம் அத் துறைகளில் ஏற்று நிறைவேற்றத்தக்க திட்டங்களைப்பற்றி ஆராய்ச்சிப் பிரிவுகளை உருவாக்கி, அதன்மூலம் நீர்ப்பாசனத் துறையில் 200 பேருக்கும், பொதுச் சுகாதாரத் துறையிலே 100 பேருக்கும், மின்சார வாரியத்திலே 200 பேருக்குமாக மொத்தம் 500 பொறியியல் பட்டதாரிகளுக்கும் பாலிடெக்னிக்கில் படித்தோர் உட்பட வேலைவாய்ப்பு ஏற்படுத்தப்படும். அதற்காக கல்வித் துறைக்காக அரசு செலவிடும் தொகை 1966-67ம் ஆண்டில் ரூ. 45. 85 கோடியிலிருந்து 1969-70ல் ரூ. 66.38 கோடியாக உயர்த்தப்பட்டிருக்கிறது. 1967க்குப் பின் 197 உயர்நிலைப் பள்ளிகள்





திறக்கப்பட்டன. நாங்கள் வந்தால் பள்ளிகூடங்கள் மூடப்படும் என்று சொல்லப்பட்டதற்கு மாறாக 197 பள்ளிகள் திறக்கப்பட்டிருக்கின்றன. அந்த அளவிற்கு ஆசிரியர்களுக்கு உத்தியோக வாய்ப்புகள் ஏற்படுத்தப்படுள்ளன. நகராட்சி மன்றங்களுக்கும் சென்னை மாநகராட்சிக்கும் மாநில அரசால் கொடுக்கப்பட்ட கிராண்ட் 50 சதவீதத்திலிருந்து 66-2/3 சதவீதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. பள்ளிகளில் கல்வியின் தரம் உயர்வதற்காக லைப்ரரிகள், விஞ்ஞானக் கூடங்கள் ஆகியவற்றின் முன்னேற்றத்திற்காகவும், 108 உயர்நிலைப் பள்ளிகள் ஒவ்வொன்றிற்கும் ரூபாய் 40 ஆயிரம் வழங்கப்பட்டிருக்கிறது.

பர்மா, இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய அகதிகளுக்கு எந்தவிதமான உதவிகள் என்பதுப்பற்றிச் சூசகமாகக் கூட ஆளுநர் உரையிலே சொல்லப்படவில்லையென்ற கருத்துகள் கூறப்பட்டன. தாயகம் திரும்பியோருக்குப் புனர்வாழ்வு அளிக்க அரசு தீவிர நடவடிக்கை எடுத்துக் கொண்டவை பலவாகும். வியாபாரம், தொழில் முதலிய ஆரம்பிப்பதற்கான கடன் தொகை ரூ. 2 ஆயிரத்திலிருந்து 5 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. 2.80 கோடி ரூபாய் இதற்காக வழங்கப்பட்டிருக்கிறது.

வீடுகள் கட்டுவதற்காகக் கடனாகவும், கிராண்ட் ஆகவும் 20 லட்சம் ரூபாய் இதுவரையில் வழங்கப்பட்டிருக்கிறது. 860 குடும்பங்களுக்கு விவசாயம் செய்ய நிலங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. 10 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் சுமார் 3 ஆயிரம் குடும்பங்களைக் குடியமர்த்தும் திட்டம் அடுத்த ஆண்டில் நிறைவேற்றப்படும்.

அடுத்தபடியாக அரசு ஊழியர்களுக்கு அரசு செய்திருப்பது போதாது, அரசு ஊழியர்களின் குறைகள் தீர்க்கப்பட வேண்டும் என்று பலர் பேசினார்கள். அரசு ஊழியர்களின் குறைகள் அகற்றப்பட வேண்டும் என்பதற்கான வழிவகைகளை யெல்லாம் ஆராய்வதற்காக தக்க ஏற்பாடுகளைச் செய்து வருகிறோம். 1-4-1967 முதல் அரசு செய்திருக்கிற நன்மைகளை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். பல ஆண்டுகளாக மாநில அரசு ஊழியர்கள் கேட்டுக்கொண்டிருந்த நகர ஈட்டுப் படி 1-10-1967 முதல் வழங்கப்பட்டிருக்கிறது. இதனால் ஆண்டு ஒன்றுக்கு 65 லட்சம் ரூபாயை அரசு செலவழிக்கிறது. இந்த அரசு பதவி ஏற்றதிலிருந்து மூன்று முறை மாநில அரசு ஊழியர்களுக்கு மத்திய அரசு எப்போதெல்லாம் உயர்த்தியதோ அப்போதெல்லாம் பஞ்சப்படியை நாமும் உயர்த்தியிருக்கிறோம். இதற்காக 14.42 கோடி ரூபாய் அதிகமாகச் செலவாகிறது. உதகை, கூனூர், கொடைக்கானல் போன்ற மலைவாசஸ்தலங்களில் இருக்கும் அரசு ஊழியர்களுக்கு குளிர்கால அலவன்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது. இதற்காக நாம் ஆண்டு ஒன்றுக்கு 1.57 லட்சம் ரூபாய் செலவிடுகிறோம். அரசு ஊழியர்களுக்கு விடுமுறை கால ஊதியம்

12 மாத சராசரியிலிருந்து 10 மாத சராசரியாக மாற்றப்பட்டது. விடுமுறை எடுத்துக்கொள்வதற்குப் பதிலாக அந்த விடுமுறை காலத்திற்கான ஊதியத்தைப் பெறுவதற்கு அரசு ஊழியர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அரசு ஊழியர்களுக்கும், அவர்களுடைய பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் திருமணத்திற்காக ஆகும் செலவிற்காக 2 ஆயிரம் ரூபாய் வரை கடன் உதவி வழங்கப்படுகிறது. மேலும் அரசு ஊழியர் யாராவது பதவிக் காலத்திலே இறந்து போனால் அவர்களுடைய குடும்பத்திற்கு உதவித் தொகையாக வழங்கப்பட வேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

அடுத்து, ஆசிரியர்களுடைய குறைபாடுகளைப் பற்றிக் கூறினார்கள். அதை அரசாங்கம் உணராமல் இல்லை. அதற்காகவும் டாக்டர் பால் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு ஆசிரியர்களுடைய குறைகள் எப்படித் தீர்க்கப்படலாம் என்பதைப் பற்றி ஆய்வு செய்ய ஏற்பாடு செய்திருக்கிறோம். இதற்கிடையில் 89 ரூபாய் வரையில் சம்பளம் வாங்கும் ஆசிரியர்களது அகவிலைப்படி 1—1—1967-ல் 47 ரூபாயாக இருந்ததை 1—1—1969-ல் 71 ரூபாயாக உயர்த்தி இருக்கிறோம். 90 ரூபாயில் இருந்து 149, வரை சம்பளம் வாங்கும் ஆசிரியர்களுக்கு 1-1-67 இல் 70 ரூபாய் அகவிலைப்படி இருந்தது. அதை 1-1-69 இல் இருந்து 98 ரூபாயாக உயர்த்திருக்கிறோம். ரூ. 150 முதல் 209 வரை சம்பளம் வாங்கும் ஆசிரியர்கள் 1-1-67 இல் 90 ரூபாய் பெற்று வந்தார்கள். 1-1-1969 முதல் அகவிலைப்படி ரூ. 122 ஆகப் பெறுகிறார்கள். ரூ. 210 முதல் 399 வரை சம்பளம் வாங்கும் ஆசிரியர்கள் 1-1-69க்கு முன்பு 110 ரூபாய் வாங்கி வந்தார்கள் என்றால் அதற்குப் பிறகு அகவிலைப்படி 146 ஆக வாங்கி வருகிறார்கள். 400 இல் இருந்து 500 ரூபாய் வரை சம்பளம் வாங்கும் ஆசிரியர்களுக்கு அகவிலைப்படி 1-1-67 இல் ரூ. 120 ஆகத்தான் இருந்தது. 1-1-69 முதல் 164 ஆகக் கொடுக்கப்படுகிறது. நகர ஈட்டுப்படியும் அவர்களுடைய சம்பளத்தில் 7½% அளிக்கப்படுகிறது. அடுத்து 11,000 ஹையர்கிரேடு ஆசிரியர் பதவியை செக்ன்டரிகிரேடு ஆசிரியர் பதவியாக மாற்றியிருக்கிறோம். இதன்மூலம் 1967-68 இல் 5,000 பேர்களும், 1968-69 இல் 3,000 பேர்களும் செகண்டரிகிரேட் பதவிக்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள். மிச்சம் 3,000 பேர்களும் மாற்றப்பட்டு வருகிறார்கள். இப்படி ஹையர் கிரேடு ஆசிரியர் செக்ண்டரி கிரேடு ஆசிரியராக மாற்றப்படுவதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு ஒரு ஆசிரியர் 624 ரூபாய் அதிகமாகப் பெற்று வருகிறார்கள். இப்படி இந்த அரசு செய்து வந்திருக்கின்ற நன்மைகள் சிலவற்றைச் சொன்னேன். 1-4-55-க்குப் பின்னால் ஓய்வு பெற்றவர்களுக்குத் தான் ஓய்வு ஊதியம் உண்டு என்று வைத்திருந்தார்கள். 1-4-55-க்கு முன்பு ஓய்வு பெற்றவர்களுக்கும் ஓய்வு ஊதியம் உண்டு என்று இந்த அரசு மாற்றியிருக்கிறது.





அரசு உயர்நிலைப் பள்ளியில் உள்ளதுபோல் தனியார் உயர்நிலைப்பள்ளிகளுக்கும் விடுமுறை விதிகள்—லீவ் ரூல்ஸ்—1—4—1968 முதல் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது.

தனியார் பள்ளிகளுக்கும் குடும்ப பென்ஷன் திட்டம் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

உள்ளாட்சித்துறை ஆசிரியர்களுக்கும் கைத்தறி ஆடை வாங்க கடன் வசதி 1969 அக்டோபர் முதல் வழங்கப்பட்டு வருகிறது.

மற்ற கோரிக்கைகளை எல்லாம் ஆராய்வதற்காகத்தான் டாக்டர் பால் அவர்களது தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சொன்னேன்.

அடுத்து, இந்த மாமன்றத்தில் சில குற்றச்சாட்டுகள் கூறப்பட்டிருக்கின்றன. அதிலே சக்தி பைப் நிறுவனத்தைப் பற்றியது ஒன்றாகும். அந்த நிறுவனத்தாரிடம் இருந்து பைப்புகள் வாங்கிக்கொள்வதற்கு முன்பணமாக 25 லட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு தனிநபருக்கு இப்படிச் சலுகை அளிக்கலாமா என்று கேட்கப்பட்டது. அந்த தனிப்பட்டவர் இப்போது அந்தக் கட்சியில் இருந்து மாறுபட்டு வேறிடத்திற்கு வந்திருக்கலாம். அவர் காங்கிரஸ் கட்சியில் இருந்த நேரத்தில், காங்கிரஸ் அவரால் பாதுகாக்கப்பட்டு வந்த நேரத்தில் இந்த அரசு அப்போதும் ஒரு தொழில் வளரவேண்டுமென்ற காரணத்திற்காக 4 ஆயிரம் டன்னுக்கு பைப் வாங்க அவர்களிடத்தில் ஆர்டர் கொடுத்திருக்கிறது என்பதையும் சொல்ல விரும்புகிறேன்.

இந்த சக்தி பைப் நிறுவனத்தை எடுத்துகொண்டால் 2,63 கோடி ரூபாய் முதலீட்டில் உருவாக்கப்பட்ட நிறுவனமாகும். அதிலே 19 லட்சம் மட்டுமே அந்தத் தனியாரின் முதலீடாக இருக்கிறது. மற்ற முதலீடுகள் மாநில அரசையும் மத்திய அரசையும் சார்ந்த பல்வேறு தொழில் வளர்ச்சிக்கான நிதி உதவும் நிறுவனங்களால் போடப்பட்டிருப்பதாகும். குறிப்பாக தமிழ்நாடு இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மென்ட் கார்ப்பரேஷன் ரூ. 18.55 லட்சம் முதலீடாகவும், ரூ. 19 லட்சம் கடனாகவும் வழங்கியிருக்கிறது.

இண்டஸ்ட்ரியல் கிரெடிட் அண்ட் இன்வெஸ்ட்மென்ட் ஸ்தாபனம் ரூ. 8.36 லட்சம் முதலீடாகவும், ரூ. 15 லட்சம் கடனாகவும் அளித்திருக்கிறது.

எல்.ஐ.ஸி. இந்த நிறுவனத்தில் 10 லட்சம் ரூபாய் முதலீடு செய்திருக்கிறது.

இண்டஸ்ட்ரியல் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா கார்ப்பரேஷன் ஆப் இந்தியா ரூ. 1.04 கோடி கடனை அளித்திருக்கிறது.

இந்தியன் பாங்க் ரூ. 15 லட்சம் கடனுதவி அளித்திருக்கிறது. இவ்வாறு அதைச் சேர்ந்த பல்வேறு தொழில் வளர்ச்சி நிறுவனங்கள் பெருமளவில் முதலீடாகவும், கடனுதவும் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ள இந்த நிறுவனம் ஒன்றே ஒன்றுதான் நம் மாநிலத்தில் குழாய் உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலை அங்கே 700-க்கும் மேற்பட்டவர்கள் வேலை செய்து வருகின்றார்கள் இது மூடப்படுமானால் இந்த எழுநூறு, எண்ணூறு தொழிலாளர்கள் வேலை இழக்க நேரிடும். நம்முடைய மாநிலத்தில் ஏற்படுத்தப்பட்ட ஒரே ஒரு குழாய் உற்பத்தித் தொழிற்சாலையும் மூடப்பட்டு விடும். அந்த நிலை ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காகத்தான் அந்த நிறுவனத்திடம் இருந்து பைப்புகள் வாங்கிக் கொள்வதற்கு முன்பணமாக ரூ. 25 லட்சம் அட்வான்ஸ் கொடுக்க உத்தரவிடப்பட்டிருக்கிறது.

விதிமுறைகளின்படி மாநிலத்திலேயே அமைந்துள்ள தொழிற்சாலையில் இருந்து பொருள்களை வாங்குவதற்கு ரேட் காண்டிராக்டுக்கு மேலும் 10 சதவீதம் விலை கொடுப்பதற்கு மாநில அரசுக்கு அதிகாரம் இருக்கிறது என்றாலும் நாம் சக்தி பைப் நிறுவனத்தாரிடம் இந்த 25 லட்சம் ரூபாய் அட்வான்ஸ் கொடுக்கிற போது டி.ஜி.எஸ்.டி. ரேட் காண்டிராக்ட் விலைகளிலேயே குழாய்கள் சப்ளை செய்யப்பட வேண்டும் என்று ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறோம்.

15 ஆயிரம் டன் குழாய்களுக்கான விலையில் 5-ல் ஒரு பாகமான ரூ. 25 லட்சம் தான் அட்வான்ஸ் செய்திருக்கிறோம்.

15 ஆயிரம் டன் குழாய்கள் நமக்கு எதற்கு என்று கேட்கலாம். நாம் வரும் ஆண்டில் அவசரமாக சாக்கடைத் திட்டங்கள் பலவற்றையும், குடிநீர்த் திட்டங்கள் பலவற்றையும் உருவாக்கி நிறைவேற்றவேண்டுமென்று தீவிர திட்டங்களை உருவாக்கிக்கொண்டிருக்கிறோம். அந்த 15 ஆயிரம் டன் பைப்புகளுக்குத்தான் முன் பணமாக 25 லட்சம் அளித்திருக்கிறோம். அதோடு இந்த அட்வான்ஸ் தொகைக்கும் சக்தி பைப் நிறுவனத்தால் ஏழே முக்கால் சதவிகிதம் அரசுக்கு வட்டியும் செலுத்த வேண்டும்.

இது போன்று முன் பணம் அளிப்பது இந்த ஒரு நிறுவனத்துக்கு மாத்திரமல்ல. டபிளியு.எஸ். இன்சுலேட்டர்ஸ் நிறுவனத்திற்கு ரூ. 10 லட்சம் முன்னமேயே வழங்கப்பட்டிருக்கிறது. இந்தியா மீட்டர்ஸ் என்ற நிறுவனத்திற்கு ரூபாய் 5 லட்சம் இத்தகைய உதவி அளிக்கப்பட்டிருக்கிறது. ஆக இதில் எந்த விதமான அரசியல் நோக்கமும் கிடையாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மாநிலத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒரே ஒரு குழாய் உற்பத்தி தொழிற்சாலை மூடப்பட்டு விடக்கூடாது என்பது தான் எங்கள் லட்சியம்.





சுற்றுலா கண்காட்சியைப்பற்றி நேற்றைய தினம் எதிர்கட்சித் தலைவர் இங்கே பேசியிருக்கிறார்கள். நம்முடைய திரு சித்தன் அவர்களும் பேசத் தொடங்கினார்கள். நேரம் இல்லாத காரணத்தினால் ஒன்றிரண்டு கருத்தைச் சொல்லி முடித்து விட்டார்கள். திரு. கருப்பையா அவர்கள் அதைப்பற்றிப் பேசினார்கள்.

சுற்றுலாக் கண்காட்சிக்கு இந்த அரசு ரூ. 2 லட்சம் கிராண்டாகவும், ரூ. 1.25 லட்சம் இடவாடகையாகவும் ரூ 1.5 லட்சம் பல்வேறு அரசுத் துறைகளுக்கு கண்காட்சியில் பங்கு கொள்ளும் செலவிற்காகவும் ஆக நாலேமுக்கால் லட்சம் கொடுத்திருக்கிறது. இவ்வரசின் சாதனைகளை மக்களுக்கு நல்ல முறையில் விளக்கிக் கூற வேண்டுமென்ற நோக்கத்துடனேதான் இந்த சுற்றுலாக்காட்சியில் அரசு பங்கெடுத்துக்கொண்டுள்ளதே தவிர தனி நபர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்பதற்காக அல்ல. கண்காட்சியை தமிழகத்தில் மட்டும் அல்ல இந்தியா முழுவதிலும் வளர்க்கவேண்டுமென்பதற்காகத்தான் பெருமுயற்சி செய்யப்பட்டிருக்கிறது. இந்த அரசு வந்த பிறகுதான் இப்படிச் செய்யப்பட்டிருக்கிறதா, இதற்கு முன்னால் எல்லாம் எப்படி நடந்து வந்திருக்கிறது என்பதை சற்று நீண்ட விளக்கமாக இருந்தாலும்கூட எடுத்துக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

1952-53-ல் தேனாம்பேட்டையில் நடைபெற்ற அகில இந்திய கதர் சுதேசி கண்காட்சியை அமைத்தவர்கள் ஒவ்வொரு டிக்கட்டின் பேரிலும் ஒவ்வொரு அணா அதிகமாக வசூலித்து அவ்வாறு வசூலிக்கப்பட்ட தொகையை மாநில அரசுக்கு கொடுப்பதாக ஒத்துக்கொண்டார்கள். அதற்காக அதிகப் பணமும் முன் கூட்டியே பெற்றுக்கொண்டார்கள். ஒத்துக்கொண்டபடி ஒரு டிக்கட்டின் மேல் 1 அணா அதிகம் வைத்து ரூ. 32,935 வசூல் செய்தார்கள். ஆனால் அதை அரசுக்கு செலுத்தவில்லை. எப்படி இந்திரா காந்தியார் தேர்தல் சமயத்தில் தேர்தல் பிரசாரத்திற்காக தமிழகத்திற்கு வந்திருந்தபோது அரசுக்கு ஆன செலவை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தருவதாக ஒத்துக்கொண்டு இதுவரை அந்தத் தொகையை செலுத்தவில்லையோ அதுபோலத்தான்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : அந்தப் பணத்திற்குப் பொறுப்பு நான் என்று சொல்லியிருக்கிறேன். அந்த விவரம் எனக்கு இன்னும் வரவில்லை. இதுபற்றி திரு. சுப்பிரமணியம் அவர்களிடம் கேட்டேன். அவர்கள் குறைந்த தொகையைச் சொன்னார்கள். ஆனால் அரசிடம் இருந்து அதிகமான தொகை கேட்டு வந்திருந்தது. நான் அதுபற்றி சீப் செக்ரடரியிடமே சரியான கணக்கை அனுப்பிவையுங்கள், அதற்குப் பொறுப்பு நான் என்று தெரிவித்திருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : நான் திரு. கருத்திருமன் அவர்களைக் குற்றம் சாட்டவில்லை. அதற்கு அவர் பொறுப்பாளியும் அல்ல. அது எப்படி வரவில்லையோ அப்படி இது வரவில்லை என்பதற்கு உதாரணம் காட்டினேன்.

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவருக்குப் பல முறை கடிதம் எழுதப்பட்டுவிட்டது. நோட்டீஸ் விட்டவேண்டியதுதான் பாக்கி. அப்படி ஒரு அணா வீதம் வசூலிக்கப்பட்ட ரூபாய் 32,935. பல முறைகள் அரசு கடிதம் எழுதியும் அந்தப் பணம் வரவில்லை. இவற்றையெல்லாம் தவறுகள் என்று எதற்காக எடுத்துச் சொல்கிறேன் என்றால் தவறு செய்யலாம் என்று குறிப்பிட அல்ல. காலாகாலமாக தமிழகத்தில் கண்காட்சிகளை வளர்ப்பதற்காகப் பணம் கொடுக்கப்பட்டு வந்து இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுவதற்காகத்தான் இவற்றை எல்லாம் குறிப்பிட்டேன். 1960-லே பெங்களூரிலே மைசூர் மாநில காங்கிரஸ் நடத்திய மாநாட்டிலே பல்வேறு மாநில அரசுகளும் கலந்துகொண்டிருக்கின்றன, அதிலே கலந்துகொள்வதற்காக தமிழக அரசின் பணத்திலிருந்து 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1961-ஆம் ஆண்டிலே அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தையொட்டி கண்காட்சி மதுரையிலே நடைபெற்ற பொழுது மாநில அரசு 53 ஆயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறது. 1959-60-இல் புதுடெல்லியில் நடைபெற்ற உலக தேசியக் கண்காட்சியில் கலந்துகொள்வதற்காக அளிக்கப்பட்ட தொகை 6.85 லட்சம் ஆகும். இப்படி ஒரு கட்சியினுடைய வசதிக்காக சேர்க்கப்படுகிற பணத்திற்கு மாநில அரசு பல நேரங்களில் கொடுத்திருக்கிறது. 1962-லே சென்னை தீவுத் திடலிலே விவசாயக் கண்காட்சி நடத்துவதற்காக தனிப்பட்டவர்கள் அடங்கிய குழுவொன்று அமைக்கப்பட்டு அதற்கு 11 லட்சத்து 7 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1968-ம் ஆண்டிலே நடந்த வர்த்தகத் தொழில் கண்காட்சிக்காக அளிக்கப்பட்ட தொகை 13.95 லட்சம் ஆகும். இதற்காக 1968-ஆம் ஆண்டிலே மறைந்த முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் கையெழுத்திட்டார்கள். 1966-ஆம் ஆண்டிலே திரு. உறாஜா ஷெரிப் அவர்களைக் காரியதரிசியாகக் கொண்டு அந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவிற்காக ஒதுக்கப்பட்ட தொகையைச் சொல்கிறேன், பயந்துவிடக்கூடாது. சாலைகளுக்காக, நெடுஞ்சாலைத்துறை சாலைகளுக்கான ஆணை எண் 1357-ன் படி 13 லட்சத்து 95 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாநகராட்சிச் சாலைகளைச் செப்பனிட 13 லட்சத்து இரண்டாயிரம் ரூபாய்; குடிநீர் வசதிக்காக 3 லட்சத்து 98 ஆயிரம் ரூபாய்; கழிவுநீர்க் குழாய்களைப் பொருத்துவதற்காக 3 லட்சத்து 95 ஆயிரம் ரூபாய்; வீட்டு வசதி வாரியத்திற்கு முன் பணமாக அளிக்கப்பட்டது 50 ஆயிரம் ரூபாய்; இண்டியன் மேனுபாக்சரர்ஸ் அசோஷியேஷன் என்ற பெயரால் திரு. ஹாஜா ஷெரிப் அவர்கள் செயலாளராக இருந்தபொழுது அந்த உதவிகள் அளிக்கப்பட்டு இருக்கின்றன. புதிய அரசு வந்ததற்குப் பிறகும் 13.95 லட்சம் ரூபாய் அளிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப் பழைய அரசு கலந்து கொண்டு கணிசமான தொகைகளைத் தந்திருக்கிறது என்பதற்கு



எடுத்துக்காட்டுகள் இவை. சுற்றுலாக் கண்காட்சிக்கு பல மாநிலங்களிலிருந்து வந்து ஸ்டால்கள் வைத்திருக்கிறார்கள். அந்த முறையிலேதான் தமிழக அரசின் சார்பிலேயும் ஸ்டால்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. இதிலே ஒன்றும் பெரிய புகாருக்கு இடம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மாத்திரமல்ல. நேற்றுக்கூட அவர்கள் சொன்னார்கள். இந்தக் கண்காட்சிக்காக மனோகரன், சிட்டிபாபு, பரிமளம் இவர்கள் நடத்துகிற கண்காட்சிக்காக 4 லட்சத்து 75 ஆயிரம் கொடுத்தது மிகைப்படுத்தப்படுகிறது. ஆனால் ஒவ்வொரு ஆண்டும் ஒரு லட்சம், நான்கு லட்சம், 10 லட்சம் என்று தரப்பட்டிருக்கிறது. அதைப்பற்றிச் சட்டமன்றத்தில் எதிர்க் கட்சியாக இருந்தபொழுது ஒரு வார்த்தை கேட்டிருக்கிறோமா? அந்தப் பண்பாட்டை நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும். இந்தச் சாதாரண விஷயத்தில் குற்றச்சாட்டுகள் சொல்ல நாங்கள் விரும்பினோமா? நீங்கள் எதற்கெடுத்தாலும் அது சரியில்லை, இது சரியில்லை என்று சொல்கிறீர்கள். இந்த ஆண்டு தேனாம்பேட்டையில் நடக்கின்ற கண்காட்சிக்காக 1 லட்சம் ரூபாய் தரப்பட்டு இருக்கிறது. சென்ற ஆண்டும் தரப்பட்டிருக்கிறது. பார்க் பேர் கண்காட்சிக்கும் தரப்பட்டிருக்கிறது. அப்படித் தரப்பட்டிருப்பதை அந்தச் செயலாளர் பாராட்டிப் பேசியிருப்பதாகப் பத்திரிகையிலே பார்த்தேன். நல்ல வேளையாக வெளியிலேயாவது பாராட்டிருக்கிறார்கள். கட்சியின் சார்பிலே நடத்தப்படுகின்ற கண்காட்சிகளுக்கு இனிமேல் எந்தவிதமான பணமும் தருவதில்லை என்ற முடிவு அரசு எடுத்து இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பெரிய உறுப்பினர்களில் பலர் கவர்னர் உரையிலே எந்த விதமான கொள்கையும் இல்லை என்று குறைபட்டுக் கொண்டார்கள். மத்திய அரசிடமிருந்து அதிக அதிகாரங்களை மாநில அரசு பெறவேண்டும் என்று சொல்லியிருப்பதைவிட கவர்னர் உரையிலே புதிய கொள்கையை வலுவான கொள்கை என்ன எதிர்பார்க்கிறார்கள் என்று தெரியவில்லை. அன்று பேசிய தமிழரசுக் கழகத்தலைவர் திரு. ம. பொ. சி. அவர்கள் விளக்கமாகச் சொன்னார்கள். மத்திய அரசின் பிடியிலிருந்து அதிகமான அதிகாரங்களைப் பெறவேண்டும். அந்தச் சிக்கலிலிருந்து விடுபட்டாகவேண்டும், இன்னும் நம்முடைய மாநிலத்திற்காகச் செய்யவேண்டிய பணிகள் ஏராளமாக இருக்கின்றன. இந்த மூன்றாண்டுக்காலத்திலும் அறிஞர் அண்ணா அவர்களுக்குப் பிற்பட்டு நாங்கள் பொறுப்பேற்றுக் கொண்டு இருக்கிற இந்த ஓராண்டுக் காலத்திலும் நாங்கள் எல்லாவற்றையும் செய்து விட்டோம் என்று மார்தட்டிக்கொள்ளவில்லை. செய்துவிட்டோம் பாராட்டுங்கள் என்று உங்களை நாங்கள் வற்புறுத்தவில்லை. போனால் போகிறது. அண்ணா மறைந்ததற்குப் பிறகு செய்து

வருகிறார்கள் என்று நான்கு வார்த்தைகள் திருப்தியாகச் சொல்வீர்களா என்று பார்த்தோம். அதுவும் இல்லையென்றால் பரவாயில்லை. மக்களுக்கு எல்லாவற்றையும் செய்துவிட்டோம் என்ற கர்வத்தோடு நாங்கள் இல்லை. இன்னும் செய்யவேண்டிய காரியங்கள் ஏராளமாக இருக்கின்றன. அதற்குத் தடையாக அதிகாரங்கள் பல மத்திய அரசினிடத்திலே குவித்துவைத்துகொண்டு இருக்கிறார்கள். வேறு மாநிலங்களிலே உள்ள தொழில் முன்னேற்றத்தைக் காட்டிலும் தமிழகத்திலே முன்னேற்றம் அடைந்திருந்தாலும் இன்னும் தொழிலிலே முன்னேறுவதற்கு வாய்ப்புக் கூறுகள் இருந்தும் அவற்றைப் பயன்படுத்துவதற்கு முடியாமல் லைசென்ஸ் வழங்குகின்ற உரிமையை மத்திய அரசு வைத்துகொண்டு உரிமம் கேட்க 10 தடவைகள் கடிதம் எழுதி, நான்கு தடவைகள் அமைச்சர்கள் சென்று சொல்லி பிறகு உரிமங்களைப் பெறுகிறோம் என்ற பரிதாபகரமான சூழ்நிலை இருக்கிறது. இன்னும் எத்தனையோ அதிகாரங்கள் பெறவேண்டியிருக்கின்றன. அந்த அதிகாரங்களைப் பெறுவதற்கு நாம் முயலவேண்டும். அதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அதிலே யார் யார் இருக்கலாம் எப்படிப்பட்டவர் இருக்கலாம் என்பதைப்பற்றி இடதுசாரிக் கம்யூனிஸ்ட் கட்சியினர் தெரிவித்தார்கள். அந்தக் குழு அமைக்கப்பட்டாகிவிட்டது. என்ன என்ன அதிகாரங்கள் பெறவேண்டும் என்பதைச் சட்ட ரீதியாகத் தெரிந்துகொண்டு அரசியல் ரீதியாக அவற்றைப் பெற பிறகு முயற்சிக்கலாம். வாதிடுவோம், வாதிட்டுப் பயனில்லையென்றால் போராடுவோம். அந்த நேரத்திலே எதிர்க்கட்சித் தலைவர் நம்மோடு இருப்பார் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஏனென்றால் மத்திய அரசு இப்பொழுது அவருடைய அரசு அல்ல. நிச்சயமாக அப்பொழுது அவர் நம்மோடு இருப்பார் என்ற நம்பிக்கை இருக்கிறது. எனவே மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன், மாநில அரசுக்கு மத்திய அரசிடமிருந்து அதிகமான அதிகாரங்களைப் பெற வேண்டுமென்ற கொள்கையில் வெற்றி பெற நாம் பாடுபடுவோம், பாடுபடுவோம் என்று தெரிவித்துக்கொண்டு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கொடுத்திருக்கும் திருத்தங்களைத் திரும்பப் பெறவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்பொழுது திருத்தங்கள் பேரவையின் முடிவிற்கு விடப்படுகின்றன.

THIRU R. PONNAPPA NADAR: Sir, I do not press my amendment.

**திரு. என். சங்கரய்யா:** என்னுடைய திருத்தத்தை வற்புறுத்துகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு சங்கரய்யா அவர்களுடைய திருத்தத்தை இப்பொழுது பேரவையின் முடிவிற்கு விடுகிறேன். பேரவையின் முன்னுள்ள கேள்வி:

"ஆயினும் நிலவுடைமைக்கு உச்ச வரம்பாக இன்று நபர் ஒருவர்க்கு 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்றிருப்பதை, ஒரு குடும்பத்திற்கு 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று குறைத்தும், அமலில் உள்ள நிலவுடைமைக்கு வரம்பு கட்டும் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள விதி விலக்குகளை ரத்து செய்யும், உழைக்கும் விவசாயிகளுக்குப் பயனளிக்கக்கூடிய விரிவானதொரு நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டுவரப்படுமென்று குறிப்பிடப் படாததைக் கண்டு இப்பேரவை வருந்துகிறது".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

**திரு. என். சங்கரய்யா:** எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்பு நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU K. VINAYAKAM: Sir, on a point of order. It is a well-established convention in this House as well as in any other House that no division takes place on an amendment to the Motion of Thanks to the Governor. Let the Hon. Speaker please refer to the rules or the established convention in this House if necessary. Let us uphold the dignity of the House and let us not make ourselves a laughing stock.

**திரு. என். சங்கரய்யா:** பேரவைத் தலைவர் அவர்களே நம்முடைய சட்டமன்ற விதிகளின்படி, கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது கொடுக்கப்படுகிற திருத்தங்கள் இதர மசோதாக்களின் பேரில் எப்படி முடிவு செய்யப்பட வேண்டுமோ அந்த முறையிலே முடிவு செய்யபட வேண்டுமென்றுதான் தெளிவாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு சங்கரய்யாவின் திருத்தத்தை எதிர்ப்பவர்கள் எழுந்து நிற்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(அவையிலுள்ள உறுப்பினர்கள் பலர் எழுந்து நின்றனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இத் திருத்தத்தை எதிர்ப்பவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் காரணத்தால் திருத்தம் தோல்வியுற்றது என அறிவிக்கின்றேன்.

டாக்டர் ஹாண்டே அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** முந்திய திருத்தத்தைப் பொறுத்த வரை நியூட்ரல் பற்றிக் கேட்கவில்லை.

காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரை நியூட்ரல் என்று தெரி வித்துக் கொள்கிறேன்.

**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** நியூட்ரல் பற்றிக் கேட்டால் ஆதாரவைப்பற்றியும் கேட்கவேண்டும். இதிலே தலைவர் உசிதப்படி செய்யலாம் என்று விதி இருக்கிறது.

திருவாளர்கள் டி. மார்டின், என். எஸ். வி. சித்தன், வி. ஜார்ஜ், க. இராமமூர்த்தி, ஜே. ஜேம்ஸ், ஆகியவர்களுடைய திருத்தங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

திருவாளர்கள் வை. சுவாமிநாதன் அவர்களும், ஏ. அ. சுப்ப ராஜா அவர்களும் இருக்கையில் இல்லாததால் அவர்களுடைய திருத்தங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்பொழுது திரு. அரங்கநாதன் அவர்கள் முன்மொழிந்த ஆளுநர் அவர்களுடைய பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

பேரவை முன் உள்ள கேள்வி—

'1970-ம் ஆண்டு சனவரி திங்கள் 19-ம் நாளன்று இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்றக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ் நாடு சட்டப்பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவோடு முடிவுற்றன. கால வரையரை குறிக்காமல் பேரவையை ஒத்தி வைக்கிறேன். வணக்கம்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

3

## 9. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

* 133. Notification issued with G.O. Ms. No. 1640, Local Administration, dated the 1st September, 1969 in regard to appointment of members of the Bhavanisagar Township Committee for a period of three years. [Laid on the Table of the House under section 6 (2) of the Bhavanisagar Township Act, 1954 (Tamil Nadu Act XXV of 1954).]

* 134. Notification issued with G.O. Ms. No. 1786, Rural Development and Local Administration, dated the 22nd September, 1969 in regard to constitution of a municipality with the name of Namakkal, the local area now within the jurisdiction of the Namakkal Town Panchayat in the Salem District. [Laid on the Table of the House under Section 304 (d) of the Tamil Nadu Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]



* 135. Notification issued with G.O. Ms. No. 2525, Revenue, dated the 29th October, 1969 in regard to amendment relating to coming into force of certain provisions of the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 published at page 3279 of Part I of the *Fort St. George Gazette*, dated the 12th December 1950. [Laid on the Table of the House under section 67 (4) of the Tamil Nadu Estates (Aboiltion and Conversion into Ryowari) Act, 1948 (Tamil Nadu Act XXVI of 1948).]

* 136. Notification issued with G.O. Ms. No. 1801, Rural Development and Local Administration, dated the 23rd September, 1969 in regard to nomination of members of the Kodaikanal Township Committee for a period of three years with effect on and from the 1st October 1969. [Laid on the Table of the House under Section 304 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

137. Notification issued with G.O. Ms. No. 20, Co-operation, dated the 9th January, 1970 in regard to making the Tamil Nadu Co-operative Land Development Banks (Special Provisions) Rules 1970. [Laid on the Table of the House under section 38-A (2) of the Tamil Nadu Co-operative Land Development Banks Act, 1934 (Tamil Nadu Act X of 1934).]

### B. *Reports, Notifications and other papers.*

£ 34. The Tamil Nadu General Sales Tax (Amendment) Bill, 1970 (L.A. Bill 1 of 1970) with Annexure.

£ 35. The Tamil Nadu Sales of Motor Spirit Ttxation (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 2 of 1970) with Annexure.

£ 36. The Tamil Nadu Appropriation Bill, 1970 (L.A. Bill No. 3 of 1970).

37. Return of Assets submitted to the House by the Hon. Speaker; Hon. Chief Minister; Ministers and Members of the Legislative Assembly (*vide* names below) :

1. Hon. Pulavar K. Govindan, Speaker.
2. Hon. Thiru M. Karunanidhi, Chief Minister.
3. Hon. Thiru V. R. Nedunchezhiyan, Minister (Education and Health).
4. Hon. Thiru K. A. Mathialagan, Minister for Finance.
5. Hon. Thirumathi Sathiavani Muthu, Minister (Agriculture and Harijan Welfare).
6. Hon. Thiru S. Madhavan, Minister for Industries.
7. Hon. Thiru S. J. Sadiq Pasha, Minister for Works.
8. Hon. Thriu M. Muthuswamy, Minister (L.A.).
9. Hon. Thiru Si. Pa. Aditanar, Minister for Co-operation.
10. Hon. Thiru O. P. Raman, Minister for Electricity.
11. Hon. Thiru K. Vezhavendan, Minister for Labour.

*Members*

1. Thiru Andi alias Gurusamy, K.
2. Thiru V. D. Annamalai
3. Thiru Rama Arangannal
4. Thiru A. Arumugam
5. Thiru V. Aladi Aruna
6. Thiru S. Alagarswamy
7. Thiru A. V. P. Asaithambi
8. Thiru A. G. Balakrishnan
9. Thiru A. Balasubramanian
10. Thiru J. Bellie Gowder
11. Thiru G. Bharathi Mohan
12. Thiru G. Bhuvarahan
13. Thiru K. Bojan
14. Thiru M. Bhupathy
15. Thiru K. Cheemaichamy
16. Thiru C. K. Chinnarajee
17. Thiru M. Chinnasamy
18. Thiru N. S. V. Chithan
19. Thiru P. S. Dhanushkodi
20. Thiru N. Dharmalingam
21. Thiru S. M. Durairaj
22. Thiru N. Duraipandian
23. Thiru P. Durairaj
24. Thiru S. Duraisamy
25. Thiru Era. Elamvazhuthi
26. Thiru P. S. Ellappan
27. Thiru V. George
28. Thiru K. R. Gnanasambandan
29. Thiru C. Govindarajan (Nellikuppam)
30. Thiru G. Gomathisankara Dikshidar
31. Thiru M. Gopal
32. Dr. H. V. Hande
33. Thiru V. S. Ilanchezhiyan
34. Thiru J. James
35. Thirumathi K. P. Janakiammal
36. Thiru P. Jayaraj
37. Thiru K. Jayaraman
38. Thiru P. Jayaraman
39. Thiru Kaliamoorthy alias A. K. Murt



40. Thiru R. Kanagasabai
41. Thiru S. Kandasamy Gounder
42. Thiru M. Kandaswamy
43. Thiru M. Kandasamy Padayachi
44. Thiru M. R. Kannan
45. Thiru KR. RM. Kariamanickam Ambalam
46. Thiru A. Karuppiah
47. Thiru R. Karuppiah
48. Thiru P. G. Karuthiruman
49. Thiru N. Kasiraman
50. Thiru K. M. Kathiravan
51. Thiru N. Kittappa
52. Thiru V. K. Kothandaraman
53. Thiru K. S Kothandaramiah
54. Thiru K. Krishnamurthi
55. Thiru A. Krishnan
56. Thiru N. Krishnan
57. Thiru R. Krishnaswamy Gounder
58. Thiru K. N. Kumarasamy
59. Thiru B. Mahadevan
60. Thiru V. Malaikannan
61. Thiru M. S. Mani
62. Thiru V. S. S. Mani
63. Thiru P. S. Manian
64. Thiru A. Marimuthu
65. Thiru A. R. Marimuthu
66. Thiru M. Marimuthu
67. Thiru T. Martin
68. Thiru N. Marudhachalam
69. Thiru P. K. Mookiah Thevar
70. Thiru R. R. Munusamy
71. Thiru A. Muniandi
72. Thiru V. Munisamy
73. Thiru K. Murugesan
74. Thiru K. K. Muthiah
75. Thiru M. Muthiah
76. Thiru P. K. C. Muthusamy
77. Thiru P. S. Muthuselvan
78. Thiru P. Nagalingam
79. Thiru T. M. Nallasamy

## *How to use the index.*

The index is arranged alphabetically. The main headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every main heading including various names, entries pertaining to proceedings other than questions are indicated by printing immediately after the subject-matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading ' Bill(s) '.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said main headings, i.e., ' Committee(s) ', Council(s) ', ' Corporation(s) ', etc.

Various Schools, Colleges, Conferences, Ports, temples and similar other broad subjects are shown in alphabetical order under these very main headings.

**All the Papers laid on the Table of the House are indexed only under the Main Heading "Papers laid on the Table".**

Rulings and observations from the Chair are indexed under the main heading "Chair".

A list of abbreviations used in the index is given below :--

| | |
|---|---|
| A.M./Ad. Motion ... | Adjournment Motion. |
| Ann. ... ... ... | Announcement. |
| B.O.H. ... ... ... | Business of the House. |
| C.A. ... ... ... | Calling Attention to a Matter of Urgent Public Importance. |
| C.A.St. ... ... ... | Calling Attention Statement. |
| Consid. ... ... ... | Consideration stage of a Bill. This stage includes :<br>(i) Motion to refer to Select/Joint Select committee.<br>(ii) Amendment to refer to Select/Joint Select Committee. |

Members—*cont.*



80. Thiru C. Nanjan
81. Thiru R. Narayanan
82. Thiru E. M. Natarajan
83. Thiru C. Palani
84. Thiru M. Panneerselvam
85. Thiru A. Y. S. Parisutha Nadar
86. Thiru A. R. Perumal
87. Thiru P. Ponnambalam
88. Thiru R. Ponnappa Nadar
89. Thiru T. Ponnumalai
90. Thiru T. A. Rajavelu
91. Thiru R. Ramachandradurai
92. Thiru K. N. Ramachandran
93. Thiru S. Ramachandran
94. Thiru S. Ramalingam
95. Thiru K. Ramamoorthi
96. Thiru M. Raman
97. Thiru V. K. Ramarasan
98. Thiru E. Ramaswamy
99. Thiru K. M. Ramasamy Gounder
100. Thiru J. S. Rasu
101. Thiru M. Rathnasabapathy
102. Thiru R. Rethina Thevar
103. Thiru K. Sabadeva Kander
104. Thiru N. Sankariah
105. Thiru P. S. Santhanam
106. Thiru S. Sethuraman
107. Thiru R. Seenivasaga Naicker
108. Thiru M. Shanmugam
109. Thiru P. K. Siraimeetan
110. Thiru M. P. Sivagnanam
111. Thiru K. N. Sivaperumal
112. Thiru S. Sivasubramanian
113. Thiru N. Soundarapandian
114. Thiru P. Soundarapandian
115. Thiru R. Soundararaja Moopanar
116. Thiru Sowdi S. Sundara Bharathi
117. Thiru S. Srinivasan
118. Thirumathi A. Suares
119. Thiru A. A. Subbaraja





Members—*cont.*

120. Thiru A. K. Subbiah
121. Thiru M. Subramania Gounder
122. Thiru E. M. Subramaniam
123. Thiru M. Surendran
124. Thiru T. S. Swaminatha Odayar
125. Thiru V. Swaminathan
126. Thiru T. Theerthagiri Gounder
127. Thiru T. T. S. Thippiah
128. Thiru S. K. Vadivel
129. Thiru N. Varadarajan
130. Thiru N. Veerasamy
131. Thiru P. Venkatachala Thevar
132. Thiru R. Vijaya Raghunatha Thondaiman
133. Thiru M. William
134. Thiru E. R. Krishnan

---

@ Placed on the Table of the House on 27th January 1970.
£ Despatched to Members on 25th January 1970.
& Despatched to Members on 27th January 1970.

PAGES

A—*cont.*

AGRICULTURE—*cont.*

Rat menace in Thanjavur district ... ... 375-376

Thirumayam, Ponnamaravathi Panchayat Union areas, remission of tax and postponement of recovery of loan due to failure of monsoon (C.A.) ... ... ... ... ... ... 486

Thirumayam, failure of monsoon and opening of fair price shops in certain areas (C.A.) ... 289-290

See College(s) :

ALAGARSAMY, THIRU S. :

D.S.G. (Second), 1969-70 :
G.D., ... ... ... ... ... ... 509-511

ALLOWANCES :

Travelling Allowance, revision of rules ... ... 268-270

AMPLIFIERS :

Complaints *re* : nuisances ... ... ... ... 361-363

ANIMAL HUSBANDRY :

Milch cows, skin disease ... ... ... ... 177-178

ARANGANATHAN, THIRU R. N. :

Governor's Address (M) ... ... ... ... 77, 78-91

ARCHAEOLOGY :

Katta Bomman's Palace at Panchalamkurichi, exploration work ... ... ... ... 38-40

ASAITHAMBI, THIRU A.V.P. :

Estimates Committee, Report (Eleventh) on problems of destitutes and vagrants, presentation 597

B

BALAKRISHNAN, THIRU A. G. :

Governor's Address (M) ... ... ... ... 208-210

BALAN, THIRU M. C. :

Governor's Address (M) ... ... ... ... 328-333

BALSUBRAMANIAN, THIRU A. :

Appropriation Bill, 1970 ... ... ... ... 591-592



PAGES

B—*cont.*

BALASUBRAMANIAN, THIRU A.—*cont.*

Constitution (23rd Amendment) Bill, 1969, ratification of amendments (R) ... ... ... 71-72

Obituary reference, Dr. P. V. Cherian and Thiru A. Chidambaranatha Nadar (R) ... ... ... 4

BHUPATHY, THIRU M. :

Coimbatore Co-operative Spinning Mills, Dharapuram, lathi charge by Police (A.M.) ... ... 583

BILL(S) :

Appropriation Bill, 1970 :
Message from Governor ... ... ... ... 546
Int., ... ... ... ... ... ... 546
Consid. ... ... ... ... ... 591-602
Consid. Cl. ... ... ... ... ... 601
Passed ... ... ... ... ... 601

Code of Civl Procedure (Tamil Nadu Amendment) : Bill, 1970 :
Consid. ... ... ... ... ... ... 617
Consid. Cl. ... ... ... ... ... 618
Passed ... ... ... ... ... ... 618

General Sales Tax (Amendment) Bill, 1970 :
Message from Governor ... ... ... ... 292
Int., ... ... ... ... ... ... 292
Consid. ... ... ... ... ... ... 601-614
Consid. Cl. ... ... ... ... ... 614-615
Passed ... ... ... ... ... ... 615-616

Sales of Motor Spirit Taxation (Amendment) Bill 1970 :
Message from Governor, Int., ... ... ... 393
Consid. ... ... ... ... ... ... 616-612
Consid. Cl. ... ... ... ... ... ... 617
Passed ... ... ... ... ... ... 617

BOARD(S) :

Electricity, re-constitution ... ... ... 59-60

(iii) Amendment to circulate.

(iv) Motion to consider as reported by Select/Joint Select Committee.

(v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc.

Consid. Cl. ... ... Consideration of clauses of a Bill.

D.E.E. ... ... ... Demands for excess expenditure.

Dis. S.D. ... ... ... Discussion for short duration on an urgent matter of Administration.

D.S.G. ... ... ... Demands for Supplementary Grants.

G.A. ... ... ... Governor's Address.

G.D. ... ... ... General Discussion.

H.A.H. Dis./H.H.D. ... Half-hour Discussion.

Int. ... ... ... Introduction stage of a Bill.

L.A. ... ... ... Legislative Assembly.

L.C. ... ... ... Legislative Council.

M. ... ... ... ... Motion.

P.M. ... ... ... Privilege Motion.

R/Res. ... ... ... Resolution.

St. ... ... ... Statement.

# Index to Tamil Nadu Legislative Assembly Debates

SEVENTH SESSION OF THE FOURTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

*20th to 28th January 1970.*

Volume XXIV (Nos. 1 to 7).

PAGES

A

ACCIDENT(S) :

Fire accidents in Thanjavur district ... ... 363

ACT(S) :

Suppression of Immoral Traffic Act, number of cases booked by Assistant Commissioner of Police, Vigilance, Madras City ... ... ... ... 576–577

Suppression of Immoral Traffic Act, number of house brothel cases booked by Assistant Commissioner of Police, Vigilance, Madras City ... 576–577

ADITANAR, THIRU Si. Pa. :

Motor Vehicles Taxation Act, 1931, amendments to Schedules (R) ... ... ... ... ... 619

AGRICULTURE :

Agricultural Labourers (East Thanjavur district), representation ... ... ... ... ... ... 253

Crops in East Thanjavur, damage due to excessive rain, relief measures (C.A.) ... ... ... 392–393

Crop protection equipments, workshops for servicing ... ... ... ... ... ... 378

Farms, working ... ... ... ... ... 373–375

Natham and North Melur Unions, failure of monsoon and remission of tax, etc. (C.A.) ... ... 585–586

PAGES

B—cont.

BOOKS AND PUBLICATIONS :

Book Bank for poor students ... ... ... 165–167

Books, records and oil paintings in Thanjavur Palace, ill-maintenance ... ... ... 167–169

BUS STAND :

Municipal bus stand, Coimbatore, construction ... 573–576

C

CALLING ATTENTION :

Crop in East Thanjavur, damage due to excessive rain, relief measures ... ... ... ... 392–393

Government Aided Secondary Schools plight or non-teaching due to fixation of retirement age at 55 without retirement benefit ... ... 584–585

Natham and North Melur Unions, failure of monsoon and remission of taxes, etc. ... ... 585–586

Rice, unauthorised sale of rice hulled from paddy delivered by Government by rice millers in Dindigul and consequent loss to Government ... 586–587

S.I.E.T. College, rigid attitude in collecting P.U.C. term fees from students ... ... 587–590

Sri Ramalinga Soodambigai Mill, Tirupur, hardship of workers due to closure ... ... ... 487–489

Students, clash between Telugu students and police in Hosur, tense situation ... ... ... 282–289

Sugar, accumulation of stocks in the godowns of sugar factories due to delay in lifting of levy ... 291

Thirumayam Ponnamaravathi Panchayat Union areas, remission of tax and postponement of recovery of loss due to failure of monsoon ... 486

Thirumayam, failure of monsoon and opening of fair price shops ... ... ... ... 289–290

CHAIR :

Announcements :

Governor's Address, Amendments to motion of Thanks ... ... ... ... ... 78

Panel of Chairmen ... ... ... ... 64

Obituary reference, Thiru G. Vijayarangam ... 12–13



PAGES

C—cont.

CHAIR—*cont.*

RULINGS AND OBSERVATIONS :

*Adjournment Motions* :

*Arrest of Thiru S. V. Lakshmanan, M.L.C., and some Congressmen at Coimbatore* :

Consent was withheld on the grounds that the matter came within the day-to-day administration of the Government and the matter was *sub-judice* ... 185–186

*Collection of fees by S.I.E.T. College from P.U.C. Students* :

Consent was withheld in the light of the statement made by the Minister for Education and on the ground that the matter came under the day-to-day administration of the Government ... ... ... ... ... 186–191

*Communal clashes in Kallakurichi, South Arcot District* :

Consent was withheld in the light of the statement made by the Chief Minister and on the ground that the matter came within the day-to-day administration of the Government 389

*Fast by Harijans of Nangavalli Village consequent on arrest of Harijans* :

Consent was withheld as fasts could not form the subject matter of an adjournment motion and it came within the day-to-day administration of the Government ... ... 185

*Interference by an armed mob with the Police engaged in the arrest of paddy-smugglers in Pudukukkottai Taluk* :

Consent was withheld on the grounds that the matter came within the day-to-day administration of the Government and the Chief Minister was expected to refer to the matter in the course of his reply to the discussion on the Motion of Thanks to the Governor for his Address to the Legislature ... ... 583

*Lathi-charge by Police in the dispute in the Coimbatore Co-operative Spinning Mills at Dharapuram* :

Consent was withheld on the ground that the matter came within the day-to-day administration of the Government ... ... 583

C—cont.

CHAIR—*cont.*

RULINGS AND OBSERVATIONS—*cont.*

*Adjournment Motions*—cont.

*Proposed agitation by a Member of the Mysore Legislative Assembly for the merger of Talavadi Firka with Mysore State* :

Consent was withheld in the light of the statement made by the Chief Minister ... ... ... 191-195

*Remarks made by Thiru Vattal Nagaraj, Member, Mysore State Legislative Assembly against the Chief Minister of Tamil Nadu* :

Consent was withheld in the light of a ruling given by the Speaker of the Lok Sabha, viz., " No House will cast any aspersion and no member will cast any aspersion on any member of the other House or any other House. . " ... ... ... ... 391

*Shooting by R.P.F. Police in Integral Coach Factory and the death of a worker and consequent unrest among the workers* :

Consent was withheld in the light of the statement by the Chief Minister that the matter was *sub-judice* ... ... ... ... 279-282

*Use of certain areas in Tiruchirappalli Taluk as a shooting range by the Army and the consequent unrest among the public* :

Consent was withheld in the light of the statement made bythe Chief Minister explaining the steps taken by the Government in the matter ... ... ... ... ... 277-279

*Bills* :

With reference to a remark made by a Member that Bills were rushed through, the Chair observed that while the decision on the allotment of business for consideration by the House was taken by by the Business Advisory Committee, it was the duty of the Chair to finish the consideration of the items in the Agenda within the allotted time 608, 609



C—cont.

CHAIR—*cont.*

RULINGS AND OBSERVATIONS—*cont.*

*Call Attention Statements* :

Only those who had called the attention of a Minister to a matter of urgent public importance would be permitted to put one or two questions to seek clarification on the statement made by a Minister and other Members would not be permitted to put any question ... ... ... 283

There will be no debate on a statement made in response to a Calling Attention Notice ... 590

While a Member could put one or two questions to seek some clarification on the statement made by a Minister in response to a Call Attention Notice, he could not make a statement and furnish further information or accuse that the Minister had given wrong information ... ... ... ... 285, 286, 287, 288 289

*Correction to an answer* :

On 22nd January 1970, before a Minister rose to make a statement to correct an answer given earlier, a Member rose on a point of order and stated that if the Ministers were allowed to correct their answers after a long time, it would create complications and requested the Chair to see that such a practice did not recur ... ... ... ...

The Chair held that the Member has only suggested that the statement should have been made earlier and it was not a point of order ... ... ... 195-196

***Debate*** :

***Allegations*** :

Allegations should be made with basis; members should not make wild allegations ... ... 636-637 638

Should have basis and should be specific ... 131, 132

***Governor's Address*** :

It was not in order to allege that the Governor read the Address prepared by the ruling party which contained views contrary to the views held by him ... ... ... ... 92-93

C—*cont.*

CHAIR—*cont.*

RULINGS AND OBSERVATIONS—*cont.*

*Debate*—cont.

***Interruption*** :

A Member had no right to interrupt another Member except on a point of order ... 307

While a Member might rise on a point of order, he was not entitled to interrupt another Member to offer any clarification, and the Ministers alone enjoyed the right to interrupt any Member any time ... ... ... ... 213

*Language of the House* :

Interrupting a Member who read his speech in English a Member rose on a point of order and stated that it was wrong to have refused permission to the Member whose mother tongue was Telugu to speak in that language though according to the relevant rule, he could speak in his mother-tongue ... ... ... ...

The Deputy Speaker denied the statement made by the Member that he had refused permission to the Member to speak in Telugu. He added that the Member had not sought his permission to speak in Telugu. The member had only sought his permission, which he had granted, to read his speech prepared in English with a view to make some facts clear and authentic ... ... 458

***Matters sub-judice*** :

Reference to matters pending before a Court should not be made as it would affect the case. Because, if the statements made by Members were contrary to the version of the police authorities, it would definitely affect the merits of the case ... 407, 408, 409

***Point of Clarification*** :

After a Minister had replied to a discussion, a Member could only seek clarification and should not again make an allegation ... ... ... 544

***Repetition*** :

Members should avoid repetition in their speeches 238

***Decorum*** :

***Reference to other Houses*** :

Reference to the proceedings of the Legislatures of other States should not be made ... ... 636





C—*cont.*

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

*Demands for Grants* :

*Voting on Supplementary Grants* :

*Procedure.*

On 27th January 1970 the Chair put all the Demands together to the vote of the House and they were carried and the Grants were made. 544

*Discussion for Short Duration* :

Requests for discussion for a short duration should be made in writing ... ... ... ... 590

*Expression used in the House* :

*Unparliamentary expressions* :

' அயோக்கியதனமான ' (' Dishonest ') in the sentence

"எவ்வளவு அயோக்கியதனமான முறையில் விசாரணை செய்கிறார்கள் என்பதை நான் நிரூபித்துக் காட்டத் தயாராயிருக்கிறேன்."

(I am prepared to prove how dishonestly they are enquiring into the matter)—Held to be unparliamentary and was withdrawn ... ... 107

' பெண் வசவாளர் ' (' Lady Scolder ')—in the sentence—' In a Conference a lady scolder . . .' —Held unparliamentary and the member corrected himself as ' lady speaker ' ... ... 261–262

***Governor's Address*** :

See Debate.

***Leader of the Opposition*** :

With reference to a point of order raised by a Member about the continuance of the Leader of the Congress Legislature Party as Leader of the Opposition in the light of reports about a split in that party, the Chair observed that what happened outside would not affect the House, and the Speaker had not yet been apprised of that position and hence no point of order would lie ... ... ... 6[illegible]

***Procedure*** :

***Complaints*** :

A Member could make a complaint about irregularities in administration only with the consent of the Chair ... ... ... ... ... ... 563

PAGES

C—*cont.*

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

*Questions and Answers*—cont.

*Supplementary questions*—cont.

Members seeking detailed information might give notice of a separate question so that the information could be arranged to be furnished ... 48

Members should resume their seats after putting their supplementary questions. They should refrain from preaching homilies during question hour ... ... ... ... ... ... 170–171

Ministers could not be expected to answer a supplementary recalling the incidents that took place decades ago ... ... ... ... ... 163

Supplementaries should be brief ... ... ... 44–46

*Relevancy* :

Supplementaries should relate to the main questions. ... 100, 102, 570, 581, 582

*Imputations* :

Imputations should not be made during question hour ... ... ... ... ... ... 46

*Suggestions* :

Suggestions should not be made during question hour. Supplementaries were meant only to elicit information ... ... ... ... ... 561, 577, 578

*Ruling* :

Members had no right either to overrule a ruling given by the Chair, or to comment that it was wrong. It had to be accepted and could not be questioned ... ... ... ... ... 408

*Speeches* :

While Members who were unable to make *ex-tempore* speeches might read their prepared speeches, it was generally not in order for those who could make *ex-tempore* speeches, to read prepared speeches, though they could refer to their notes ... 607

CHEEMAICHAMY, THIRU K. :

Labour Welfare Boards, in public sector factories, constitution ... ... ... ... ... 383–385

S.I.E.T. College, rigid attitude in collecting P.U.C. term fees from students (C.A.) ... ... ... 587–590

Sub-Magistrate of Madurantakam, assault on ... 360–361



PAGES

C—*cont.*

CHILD WELFARE :

Creche for infants of working women in Government offices, opening ... ... ... 382

Pre-school feeding programme, introduction ... 376–377

CHINARAJEE, THIRU C. K. :

General Sales Tax (Amendment) Bill, 1970 ... 610, 613

CHITHAN, THIRU N. S. V. :

Agricultural Commission, report on fixation of procurement prices ... ... ... ... ... 273

Arrests of Congressmen including Thiru S. V. Lakshmanan, M.L.C. at Coimbatore (A.M.) ... 185–186

Attack on Police by leftist kisans, East Thanjavur district ... ... ... ... ... ... 253–254

Criminal courts at Devakottai, shifting to Sivaganga ... ... ... ... ... ... 475–476

Currency chests in Sub-Treasuries, opening ... 373

Governor's Address (M) ... ... ... ... ... 395

Harijans, clashes between groups at Kachirapalayam and Agarapalayam villages and the consequences (A.M.) ... ... ... ... ... ... 386

Industrial Estate near Neyveli, details of industries 571

Kolli Hills Dam, construction ... ... ... 180–181

Machine Tool Production unit, Erode, strike by workers ... ... ...... ... ... 63–64

Machine Cows, skin disease ... ... ... ... 177–178

Peace Corps, organisation by C.P.I. in Thanjavur district ... ... ... ... ... ... 255–258

Raffle scheme, utilisation of revenue ... ... 559–567

Raffle tickets sale, utilisation of services of panchayat union officers ... ... ... ... ... 560–567

Railway Accidents Inquiry Committee, Government's views ... ... ... ... ... ... 359–360

Rice, unauthorised sale of rice hulled from paddy delivered by Government by rice millers in Dindigul, and consequent loss to Government (C.A.). 586–587

Secondary School (Government aided) Headmasters' Conference, resolutions ... ... ... 261–262

S.I.E.T. College, collection of fees from P.U.C. students (A.M.) ... ... ... ... ... 186–187

Sri Singaperumal Koil, appointment of trustees ... 58

PAGES

C—*cont.*

CHINTHAN, THIRU N. S. V.—*cont.*
Stamp Vendors, High Court judgment on discount rate reductoin ... 371–372
Problem in Madras City, study by Transport Highways research Station ... 52–53
Wild Life as State property, legislation ... 181, 182

COLLEGE(S) :
Agricultural Colleges, shift system ... 379–380
College of Carnatic Music, date of appointment of Principal ... 553–554
Evening College students, science laboratories ... 368–370
Medical colleges, shift system ... 558–559
S.I.E.T. College rigid attitude in collecting P.U.C. term fees from students (C.A.) ... 587–590
Tamil College at Thiruvaiyaru, extension ... 464–466

COMMISSION(S) :
Agricultural Commission, report on fixation of procurement prices ... 273
National Commission on Labour, report of study group for Southern region ... 275–277

COMMITTEE(S) :
*Estimates* :
Report (eleventh) on problems of destitutes and vagrants, presentation ... 590
*Public* :
Report on the accounts Electricity Board for 1965–66, presentation ... 64
Railway Accidents Enquiry Committee, Government's views ... 359–360

CONFERENCE(S) :
Food Ministers Conference, Government's stand on food control ... 382–383
Secondary School (Government aided) Headmasters' Conference, resolutions ... 261–262

COURTS :
Criminal Courts at Devakottai, shifting to Sivaganga ... 475–476

CURRENCY :
Currency chests in Sub-Treasuries, opening ... 373



PAGES

D.

DEMANDS FOR GRANTS :
Medical and public Health, Correction to reply (St.) ... 489

DHARMALINGAM, THIRU N. :
D.S.G (Second), 1969-70 :
G.D. ... 497–499

DRAINAGE :
Underground drainage system in Vellore ... 367–368

DURAIPANDIAN, THIRU N. :
Governor's Address (M) ... 428–433, 434

DURAISAMY, THIRU S. :
Agricultural Colleges, shift system ... 379–380
Drinking Water-supply Scheme, Tiruppur Town ... 38
Governor's Address (M) ... 347–349, 397–400
Medical Colleges, shift system ... 558–559
Sri Ramalinga Soodambigai Mill, Tirupur, hardship of workers due to closure (C.A.) ... 487, 488

DURAIYARASAN, THIRU A. :
Governor's Address (M) ... 337–340

E

EDMUND, THIRU G. R. :
Privilege Committee, report on the case against the 'Kaditham' (M) ... 297

EDUCATION :
Adult Education Scheme ... 555–557
Entrance examination, Vidwan course ... 555
National Policy Resolution of Central Government, consideration and decision by Government ... 262–264
Pre-technical course, tuition fee ... 267

ELECTRICITY :
Power tariff for industries, uniform rates ... 60–63

ELECTRICITY BOARD :
Re-constitution ... 59–60

ELLAPPAN, THIRU P. S. :
Governor's Address (M) ... 241–243

PAGES

E—*cont.*

EMPLOYEES :
Gramasevaks, supply of transistors ... ... ... 53-54
Social Welfare Workers, confirmation ... ... 54-55
Sub-Magistrate of Madurantakam, assault on ... 360-361

EMPLOYMENT :
Employment Exchange, starting in every taluk ... 476-478

EXPUNCTION :
B.O.H., change in order (M) ... ... ... ... 197
Governor's Address (M) ... ... ... ... 201, 333
Questions and Answers ... ... ... ... 574, 575

F.

FAMINE :
Drought stricken people, distribution of contributed rice ... ... ... ... ... ... ... 270-271
Ponnamaravathi Panchayat Union area, remission tax and postponement of recovery of loans due to drought conditions (C.A.) ... ... ... 466
Thirumayam, Tiruchirappalli district, prevalance of drought conditions and opening of fair price shops (C.A.) ... ... ... ... ... ... 289-290

FINANCIAL BUSINESS :
D.S.G. (Second), 1969-70 :
Presentation ... ... ... ... ... 292-297
G.D. ... ... ... ... ... ... 490-544
D.S.G. (Second), 1969-70—Voting :
Agriculture ... ... ... ... ... 545-546
Capital Outlay on Industrial Development ... 545-546
Capital Outlay on Schemes of Government Trading. 545-546
Capital Outlay on Irrigation ... ... ... 545-546
Capital Outlay on Public Works ... ... ... 545-546
Capital Outlay on Schemes of Government Trading 545-546
Cinchona ... ... ... ... ... 545-546
Community Development Projects, etc. ... 545-546
Co-operation ... ... ... ... ... ... 545-546
District Administration and Miscellaneous ... 544-546
Education ... ... ... ... ... ... 545-546



PAGES

F—*cont.*

FINANCIAL BUSINESS—*cont.*
D.S.G. (Second), 1969-70—Voting—*cont.*
Famine Relief ... ... ... ... 545-546
Forest Department ... ... ... ... ... 545-546
General Sales Tax and Other Taxes and Duties—Administration ... ... ... ... ... 544-546
Head of State, Ministers and Headquarters Staff ... ... ... ... ... ... 544-546
Industries ... ... ... ... ... 545-546
Irrigaion ... ... ... ... ... ... 545-546
Land Revenue Department ... ... ... 544-546
Loans and advances by the State Government ... 545-546
Medical ... ... ... ... ... ... 545-546
Milk Supply Schemes ... ... ... ... 544-546
Miscellaneous ... ... ... ... ... 545-546
Motor Vehicles Acts Administration ... ... 544-546
Other Miscellaneous Compensations and assignments ... ... ... ... ... ... 545-546
Police ... ... ... ... ... ... 545-546
Public Health ... ... ... ... ... 545-545
Works ... ... ... ... ... ... 54-546
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ... 545-546
Public Works—Grants-in-aid ... ... ... 545-546
Registration Department ... ... ... 544-546
Road Transport Schemes ... ... ... 545-546
State Legislature ... ... ... ... ... 544-546
Stationery and Printing ... ... ... ... 545-546
Welfare of the Scheduled Tribes, Castes and other Backward Classes ... ... ... 545-546

FIRE :
See Accidents :

FOOD :
See Conferences :

PAGES.

## G.

FOODGRAINS :
- Paddy, etc., fixation of minimum support price by Central Government ... ... ... ... 271–273
- Paddy, increase in procurement and sale prices ... 274–275
- Rice, permission for Asoka Traders to bring rice from Andhra to Madras ... ... ... ... 578–582
- Rice, unauthorised sale of rice hulled from paddy delivered by Government by rice millers in Dindigul and consequent loss to Government (C.A.) ... 586–587

GEORGE, THIRU V. :
- Governor's Address (M) ... ... ... ... 236–238

GOMATHISANKARA DIKSHIDAR, THIRU G. :
- Amplifier nuisance, complaints ... ... ... 361–363
- Arrests in Pudukottai ... ... ... ... 252
- Borstal School, Palayamkottai, conversion into jai. 567–568
- Fire Service Personnel, attack on ... ... ... 254–255
- Governor's Address (M) ... ... ... ... 124–128
- Hospitals (Government) in Madras City, non-availability of senior doctors on Sundays ... 260–261
- Katta Bomman's Palace at Panchalankurichi, exploration work ... ... ... ... ... 38–40
- Loans (State), coercion by Revenue officials ... 467–469
- Market at Mylapore, representations ... ... 359
- Mobile Postal Savings Bank, introduction in Madras City ... ... ... ... ... ... 370–371
- Profession tax, abolition ... ... ... ... 55–56
- Raffle prize money, arrests for false claims ... 560–567
- Retired Officers Association, memorandum to Government ... ... ... ... ... ... 172–173
- Road Works in Madurai and Ramanathapuram districts, stoppage ... ... ... ... ... 268
- Students, clash between Telugu students and Police in Hosur, tense situation (C.A.) ... ... ... 282
- Transport Problem in Madras City, study by Highways research station ... ... ... ... 52–53
- Yarn exports, details regarding sales tax exemption ... ... ... ... ... ... 175



PAGES

## H

HANDE, DR. H. V.—
- Adjournment Motion, disposal of notice of point of order ... ... ... ... ... ... 485
- Beedi and Cigar Workers' Regulation (Conditions of Employment) Act, 1966, implementation ... 182–185
- Bus stand (Municipal), Coimbatore ... ... 573–576
- Crops in East Thanjavur, damage due to excessive rain, relief measuers (C.A.) ... ... ... 392
- Dr. Ambedkar's portrait in educational institutions 264–266
- D.S.G. (Second), 1969-70 :
  - G.D. ... ... ... ... ... ... ... 522–524
  - Entrance examination, Vidwan course ... 555
  - General Sales Tax (Amendment) Bill, 1970 ... 603 608, 609
- Government Aided Secondary Schools plight of non-Teaching Staff due to fixation of retirement age at 55 without retirement benefit (C.A.) ... 584–585
- Governor's Address (M) ... ... ... ... 394, 417–425 445
- Handlooms, resolutions of Ramanathapuram district Handloom Weavers' Association ... ... 469–472
- Irrigation facilities, Kadalangudi village ... ... 51–52
- Madhavaram Milk Project, particulars *re*. ... ... 45–48
- Manali Oil Refinery, death of worker in February 1969, details ... ... ... ... ... 577–578
- National Commission on Labour, report of Study Group for Southern region ... ... ... ... 275–277
- Obituary reference, Dr. P. V. Cherian and Thiru A. Chidambarnatha Nadar (R) ... ... ... 9–10
- Science Laboratories for Evening College students ... 368–370
- S.I.E.T. College, rigid attitude in collecting P.U.C. term fees from students (C.A.) ... ... ... 587–590
- Students, Clash between Telugu students and Polices in Hosur, tense situation (C.A.) ... ... ... 283, 285, 286, 287, 288

PAGES

K—*cont.*

KARUNANITHI, THIRU U.—cont.

Students, clash between the Telugu students and Police, in Hosur, tense situation (C.A. St.) ... 283–285, 287, 288, 289

Tiruchirappalli district, use of areas by Army as shooting range and consequent fear of danger among people (A.M.) ... ... ... ... ... 278–279

KARUPPIAH, THIRU A.—

Governor's Address (M) ... ... ... ... ... 425–428

KARUPPIAH, THIRU R.—

D.S.G. (Second) 1969–70—

G.D. ... ... ... ... ... ... ... ... 511–514

Government Aided Secondary Schools Plight of Non-teaching Staff due to fixation of retirement age at 55 without retirement benefit (C.A.) ... 584–585

Governor's Address (M) ... ... ... ... ... 128–133

KARUTHIRUMAN, THIRU P. G.—

Agitation for merger of Talavadi Firka with Mysore State (A.M.) ... ... ... ... ... ... 191–192, 193

Appropriation Bill, 1970 ... ... ... ... ... 596–597

Arrests of Congressmen including Thiru S. V. Lakshmanan, M.L.C. at Coimbatore (A.M.) ... 185–186

Chief Minister, insinuating remarks against, by Thiru Vattal Nagaraj in Mysore Legislative Assembly (A.M.) ... ... ... ... ... 390

Constitution (23rd Amendment) Bill, 1969, ratification of amendment (R) ... ... ... ... ... 73–75

D.S.G. (Second) 1969–70—

G.D. ... ... ... ... ... ... ... 524–528, 529–532, 533–534, 535, 537, 539, 541

Governor's Address (M) ... ... ... ... ... 79–80, 81, 82, 129, 620–640



PAGES.

K—*cont.*

KARUTHIRUMAN, THIRU P. G.—*cont.*

Obituary reference, Dr. P. V. Cherian and Thiru A. Chidambaranatha Nadar (R) ... ... ... ... 10–12

Public Accounts Committee, report on the accounts of Electricity Board for 1965–66, presentation ... 64

Rice, permission for Asoka Traders to bring rice from Andhra to Madras ... ... ... ... 578–582

KASIRAMAN, THIRU N.—

Fire accidents in Thanjavur district ... ... 363

Teachers, disbursement of Salary ... ... ... 461–464

Travelling Allowance Rules, revision ... ... 268–270

KITTAPPA, THIRU N.—

Governor's Address (M) ... ... ... ... 100–104

Harbour at Poompugar, construction ... ... 57–58

Harijan Welfare Hostel, starting at Manalmedu ... 382

Harijan Welfare Hostels (Private), taking over by Government ... ... ... ... ... ... 380–382

Industrial Estates, Location ... ... ... ... 569

Jails, Library in Central Jail at Thiruchirappalli ... 472–474

Railway line connecting Tranquebar, Karaikal and Nagore, construction ... ... ... ... 178–180

Rat menace in Thanjavur district ... ... ... 375–376

Rice Mills, change in mode of issue of licences ... 175–177

Textile Mills, labour collaboration in management 277

Village Officers, recognition as full-time Government officials ... ... ... ... ... ... 40–43

KOTHANDAM, THIRU KOLATHUR—

Agricultural Farms, working ... ... ... ... 373–375

Food Ministers Conference, Government's stand on food control ... ... ... ... ... ... 382–383

Governor's Address (M) ... ... ... ... ... 108–112

Villages, grouping based on income and appointment of village officers ... ... ... 49

KOTHANDARAMAN, THIRU V. K.—

Book Bank for poor students ... ... ... 165–167

Governor's Address (M) ... ... ... ...... 317–318, 320–321

Integral Coach Factory, firing by R.P.F. (A.M.) 279–280

Mukkudal Beedi workers, writ petition *re.* minimum wages ... ... ... ... ... ... 183–185

PAGES

## K—cont.


KOTHANDARAMAN, THIRU V. K.—

Power tariff for industries, uniform rates ... 60–63

S.I.E.T. College, collection of fees from P.U.C. students (A.M.) ... ... ... ... ... 187

KOTHANDARAMIAH, THIRU K. S.—

Governor's Address (M) ... ... ... ... 230–233

Students, clash between the Telugu students and Police in Hosur, tense situation (C.A.) ... ... 283, 288

KRISHNAMURTHI, KODAVASAL, THIRU C.—

D.S.G. (Second) 1969–70—

G.D. ... ... ... ... ... ... ... 517–520

KRISHNASAMY GOUNDER, THIRU R.—

Governor's Address (M) ... ... ... ... 104–108

KUMARASAMY, THIRU K. N.—

Governor's Address (M) ... ... ... ... 344–347


## L.


LABOUR—

Beedi and Cigar Workers Regulation (Conditions of Employment) Act, 1966, implementation ... 182–185

Labour Welfare Boards in public sector factories, constitution ... ... ... ... ... ... 383–385

Mukkudal beedi workers, writ petition re. minimum wages ... ... ... ... ... ... 183–185

LAND (S)—

Forest poramboke lands, utilisation for cultivation. 479–484

Re-survey ... ... ... ... ... ... 170–172

LANGUAGE (S)—

Tamil, abolition from Part II and introduction of Hindi Department in Madurai University Research Centre ... ... ... ... ... 165

Tamil development, modification of syllabus ... 164–165

Tamil, reduction of periods allotted for study and upgrading scales pay of Tamil teachers ... ... 159–164

LIME STONE—

Madurai district ... ... ... ... ... 478–479

LOANS(S)—

Collection, postponement in North Arcot district 173–175

State loans, coercion by Revenue officials ... ... 467–469




PAGES

## M.


MADHAVAN, THIRU S. :

Code of Civil Procedure (Tamil Nadu Amendment) Bill, 1970 ... ... ... ... ... ... 617,618

MALAICHAMY, THIRU P.—

Adult Education Scheme ... ... ... ... 555–557

Governor's Address (M), ... ... ... ... 315–317

Natham and North Melur Unions, failure of monsoon and remission of taxes, etc. (C.A.) ... 585–586

MANI, THIRU K. B. S.—

Constitution (23rd Amendment) Bill, 1969, ratification of amendments (R) ... ... ... ... 72–73

Governor's Address (M) ... ... ... ... 312–315

Obituary reference, Dr. P. V. Cherian and Thiru A. Chidambaranatha Nadar (R) ... ... 8–9

MANI, THIRU M. S.—

Governor's Address (M) ... ... ... ... 403–306 307, 308–310

MANIAN, THIRU P. S.—

Employment Exchange, starting in every taluk ... 476–478

MANICKAVASAGAM, THIRU R.—

Coimbatore City, extension scheme, land acquisition and implementation ... ... ... ... 59

Raffle tickets, sale through panchayats ... ... 560–567

MARKET(S)—

Mylapore, representations ... ... ... ... 385

MARIMUTHU, THIRU A.—

D.S.G. (Second), 1967–70—

G.D. ... ... ... ... ... ... 490–494

MARIMUTHU, THIRU A. R. :

Governor's Address (M). ... ... ... ... 118–122

Obituary reference, Dr. P. V. Cherian and Thiru A. Chidambaranatha Nadar (R) ... ... ... 5–6

H—*cont.*

HANDE, DR. H. V.—*cont.*

Sugar, accumulation of stocks in godowns of sugar factories due to delay in lifting of levy (C.A.) ... 291

Tamil language, reduction of periods allotted for Study and upgrading scales of pay of Tamil teachers ... ... ... ... ... ... 159–164

University for Technical Education, starting ... 258–260

HANDLOOMS—

Ramanathapuram District Handloom Weavers' Association, resolutions ... ... ... ... 469–472

HARBOUR—

Poompugar, construction ... ... ... ... 57–58

HARIJAN—

See Hostels.

HOSPITALS AND DISPENSARIES—

Government Hospitals in Madras City, non-availability of senior doctors on Sundays ... ... 260–261

Thanjavur Raja Hospital, jurisdiction ... ... 557–558

HOSTEL(S)—

Harijan Welfare Hostel, starting at Manalmedu ... 382

Harijan Welfare Hostels (Private), taking over by Government ... ... ... ... ... 380–382

HOTELS—

Vellore, North Arcot district, increase in prices of foodstuffs ... ... ... ... ... 43–45

I.

INDUSTRIAL ESTATE (S)—

Food and Fruit Processing Industrial Estate, location at Batlagundu ... ... ... ... 569–571

Location ... ... ... ... ... ... 569

Near Neyveli, details ... ... ... ... ... 571

Tiruverumbur establishment ... ... ... 572–573

IRRIGATION—

Kadalangudi village, facilities ... ... ... 51–52

Kolli Hills Dam, construction ... ... ... 180–181





J.

JAIL (S)—

Jail at Palayamkottai, unveiling of memorial tablet to mark the incarceration of Chief Minister there ... 568–569

Library in Central Jail, Tiruchirappalli ... ... 472–474

JAMES, THIRU J.—

Governor's Address (M) ... ... ... ... 390

JANAKIAMMAL, THIRUMATHI K. P.:

D.S.G. (Second) 1969–70—
G.D. ... ... ... ... ... ... ... 494–497

Lime stone, availability in Madurai district ... ... 478–479

Thanjavur Raja Hospital, jurisdiction ... ... 557–558

K.

KARIAMANICKAM AMBALAM, THIRU KR. RM.—

D.S.G. (Second) 1969–70—
G.D. ... ... ... ... ... ... 499–502

KARUNANITHI, THIRU M.—

Agitation for merger of Talavadi Firka with Mysore State (A.M.) ... ... ... ... ... 193–195

Chief Minister, insinuating remarks against—

by Thiru Vattal Nagaraj in Mysore Legislative Assembly (A.M.) ... ... ... ... ... 391

Governor's Address (M) ... ... ... ... 202, 203, 206, 207, 212, 213, 231, 232, 238, 245, 246, 411–412, 420–421, 422, 425, 640–658

Harijans, clashes between groups at Kachirapalayam and Agarapalayam villages and the consquences (A.M.) ... ... ... ... 387–389

Integral Coach Factory, firing by R.P.F. (A.M.) ... 281–282

Obituary reference, Dr. P. V. Cherian and Thiru A. Chidambaranadha Nadar (R) ... ... ... 1–3

PAGES

M—*cont.*


MARTIN, THIRU T.—

College of Carnatic Music, appointment of Principal. 553–554

Electricity Board, reconstitution ... ... ... 59–60

Governor's Address (M) ... ... ... ... 91–100

Harijan Colony, Pagalmedu, lathi-charge ... 251–252

Harijans, clashes between groups at Kachirapalayam and Agarapalayam villages and consequences (A.M.) ... ... ... ... ... 385

Horticultural Instructors of Government High Schools, Tirunelveli district ... ... ... 37–38

Hotels, Vellore, North Arcot district, increase in prices of foodstuffs ... ... ... ... 43–45

House brothel cases, number booked by Assistant Commissioner of Police, Vigilance, Madras City 576–577

Pattukottai taluk, situation created by armed violent mob interfering with Police in arrest of paddy smugglers (A.M.) ... ... ... ... 583

School at Therikudiyirupu, recognition ... ... 466–467

Social Welfare workers, confirmation ... ... 54–55

Suppression of Immoral Traffic Act, cases booked by Assistant Commissioner of Police, Vigilance, Madras City ... ... ... ... ... 576–577

MARUDACHALAM, THIRU N. :

Governor's Address (M) ... ... ... ... 233–234

MATHIALAGAN, THIRU K. A.

Appropriation Bill, 1970 ... ... ... ... 546, 591, 597–601.

D.S.G. (Second), 1969–70 :

G.D. ... ... ... ... ... ... ... 533, 534, 535–537, 537–538, 539–541, 541–543, 544

Presentation ... ... ... ... ... 292–297

Governor's Address (M) ... ... ... ... 81–82, 115, 128–129, 130–131, 205, 223, 438–440, 444

Nathan and North Melur Unions, failure of monsoon and remission of taxes, etc. (C.A. St.) ... 586

Thirumayam, Ponnamaravathi Panchayat Union areas, remission of tax and postponement of recovery of loan due to failure of monsoon C.A.St. ... ... ... ... ... ... 486




PAGES

M—*cont.*


MEIYAPPAN, THIRU S. :

D.S.G. (Second), 1969–70 :

G.D. ... ... ... ... ... ... ... 514–517

General Sales Tax (Amendment) Bill, 1970 ... 605–607, 608, 609–610.

MILK PROJECT.

Madhavaram Milk Project, particulare *re.* ... 45–48

MILL(S) :

Rice mill licences, change in mode of issue ... ... 175–177

Sri Ramalinga Soodambigai Mill, Tirupur, hardship of workers due to closure (C.A.) ... ... 487–489

MOTION(S) :

Adjournment Motion(s) :

Agitation for merger of Talavadi Firka with Mysore State ... ... ... ... ... 191–195

Arrests of Congressmen including Thiru S. V. Lakshman, M.L.C. at Coimbatore ... ... 185–186

Chief Minister, insinuating remarks against—by Thiru Vattal Nagaraj in Mysore Legislative Assembly ... ... ... ... ... 389–391

Coimbatore Co-operative Spinning Mills, Dharapuram, lathi charge by police ... ... ... 583

Harijans, clashes between groups at Kachirapalayam and Agarapalayam villages and the consequences ... ... ... ... ... 385, 389

Harijans of Nagavalli village, fasting over prevention of usage of footpath ... ... ... 185

Integral Coach Factory, firing by R.P.F. ... 279–282

Pattukottai taluk, situation created by violent mob interfering with police in arrest of paddy smugglers ... ... ... ... ... 583

S.I.E.T. College, collection of fees from P.U.C. students ... ... ... ... ... ... 186–191

Tiruchirappalli district, use of areas by Army as shooting range and consequent fear of danger among people ... ... ... ... ... 277–279

B.O.H., Change in order ... ... ... ... 197, 489, 583–584

PAGES

MOTION(S)—*cont.*
Governor's Address, Motion of Thanks, discussion ... ... ... ... ... ... 197–246, 297–349, 394–459, 620–660
Privileges—
Report of Privileges Committee on the case, against 'Kaditham', considered and adopted. 297
Suspension of Rule 41 (3) ... ... ... ... 282, 485
MUTHUSELVAN, THIRU P. S.—
Governor's Address (M) ... ... ... ... 450–453

N.

NAGASUNDARAM, THIRU R.:
D.S.G. (Second), 1969-70:
G.D. ... ... ... ... ... ... 504–509
NALLASIVAN, THIRU K. R.:
Constitution (23rd Amendment) Bill, 1969, ratification of amendments (R) ... ... ... ... 70–71
D.S.G. (Second), 1969-70:
General Discussion ... ... ... ... ... ... 502–504
Obituary reference, Dr. P. V. Cherian and Thiru A. Chidambaranatha Nadar (R) ... ... ... 4–5
NEDUNCHEZHIYAN, THIRU V. R.:
B.O.H., change in order ... ... ... ... 197, 489, 583–584
Chief Minister's health (point of order) ... ... 484
Constitution (23rd Amendment) Bill, 1969, ratification of amendments (R) ... ... ... ... 65–67, 75–77
Cotton Transport Rules, 1950, rescinding of certain amendments to rule 10 (R) ... ... ... ... 618–619
D.S.G. (Second), 1969–70 ... ... ... ... 532–533, 534
Government Aided Secondary Schools, plight of non-teaching staff due to fixation of retirement age at 55 without retirement benefit (C.A. St.) ... 584–585
S.I.E.T. College, collection of fees from P.U.C. students (A.M.) ... ... ... ... ... 187–190
S.I.E.T. College, rigid attitude in collecting P.U.C. term fees from students (C.A. St.) ... ... 587–590
Suspension of Rule 41(3) (M) ... ... ... 282, 485



PAGES

O.

OBITUARY REFERENCE:
Dr. P. V. Cherian and Thiru A. Chidambaranatha Nadar (R) ... ... ... ... ... ... 1–1?
Vijayarangam, Thiru G. ... ... ... ... 12–13
OFFICERS (RETIRED):
Retired Officers Association, memorandum to Government ... ... ... ... ... 172–173
OIL REFINERY:
Manali Oil Refinery, death of worker, details ... 577–578

P.

PADMAVATHI, THIRUMATHI G.
Governor's Address (M) ... ... ... ... 299–301
PALANIAMMAL, THIRUMATHI V. P.
Creche for infants of working women in Government Offices, opening ... ... ... ... ... 382
PAPERS LAID ON THE TABLE:
Agriculture Produce Markets Act, 1959, notifications ... ... ... ... ... ... 15, 16, 17, 18, 20, 23, 25, 31–32
Appropriation Bill, 1970 ... ... ... ... 661
Asset return submitted to House by Speaker, Chief Minister, Ministers and some members of Legislative Assembly ... ... ... ... ... ... 661–665
Bhavanisagar Township Act, 1954, notification ... 66.
Buildings (Lease and Rent Control) Act 1960, notifications ... ... ... ... ... 21, 23
Central Sales tax, reduction in rate, notification ... 35
Central Sales Tax Rules, 1957, notification ... 34
Cinemas (Regulation) Act, 1955, notifications ... 16, 18, 340
City Municipal Corporation Act, 1919, notifications. 26, 29
Companies Act, 1956, notification ... ... ... 31
Constitution (Twenty-third) Amendment Bill, 1969. 30
Co-operative Land Development Banks Act, 1934, notification ... ... ... ... ... ... 661
Cottage Industries Construction and Establishment Restrictions, Limitations and Conditions) Rules, 1960, notification ... ... ... ... ... 30

**P—cont.**


PAPERS LAID ON THE TABLE—*cont.*

Cultivating Tenants (Special Provisions) Act, 1968, notification ... ... ... ... ... 26

Demands for Grants for further expenditure for 1969–70 (English and Tamil), notice ... ... 460

Demands for Grants for further expenditure and detailed Supplementary Estimates thereof for 1969–70 (English and Tamil) ... ... ... 460

District Municipalities Act, 1920, notifications ... 13, 22, 29, 31, 660, 661,

Entertainments Tax Act, 1939, notifications ... 17, 24, 25, 29

Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948, notifications ... ... ... ... 26, 661

Finance Minister's Speech, presenting second Supplementary Estimates for 1969–70 (English and Tamil) ... ... ... ... ... ... ... 460

Forest Act, 1882, notifications ... ... ... 19, 25

General Sales Tax Act, 1959, list of convicts, noti-cation ... ... ... ... ... ... 35

General Sales Tax Act, 1959, notifications ... 13, 14, 18, 19, 21, 23, 25, 27, 28, 31, 32

General Sales Tax (Amendment) Bill, 1970 ... 661

General Sales Tax (Fourth Amendment) Ordinance, 1969 ... ... ... ... ... ... 35

Governor's Address to Members of Legislature ... 36

Hindu Religious and Charitable Endowments Act, 1959, notifications ... ... ... ... 22, 24

Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963, notifications ... ... ... 15, 16, 30

Inams (Assessment) Act, 1956, notification ... 28

Indian Stamp Act, 1899, notifications ... ... 33, 34, 35

Industrial Disputes Act, 1947, notification ... ... 17

Khadi and Village Industries Board Act, 1959, notifications ... ... ... ... ... ... 13, 22

Land Improvement Schemes Act, 1959, notifications. 20,22

Legislative Assembly, resume of work from 14th to 28th August 1969 and 11th to 13th September 1960 ... ... ... ... ... ... 35






**P—cont.**


PAPERS LAID ON THE TABLE—*cont.*

Legislative Council, resume of work from 18th to 28th August and 12th and 13th September 1969. 35

Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963, notification ... ... ... 27

Motor Vehicles Act, 1939, notifications ... ... 20, 22, 30, 31

Motor Vehicles Taxation Act, 1931, notifications ... 14, 15, 17, 18, 19, 20, 21, 22, 24, 25, 27, 29, 32, 33

Panchayats Act, 1958, notifications ... ... 17, 18, 23, 25, 26, 29, 30, 33

Panchayats Act, 1958, notification ... ... 247

Parks, Pray-fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959, notification ... 16, 29

Payment of Salaries Act, 1951, notification ... 16

Public Accounts Committee, 1964–65, Statement of action taken on recommendation No. 47 ... ... 33

Public Accounts Committee's report on Electricity Board Accounts for 1965–66 ... ... ... 134

Public Buildings (Licensing) Act, 1965, notification. 26

Public Service Committee Regularities, 1954, notification ... ... ... ... ... ... 27, 28

Rules issued with Home Department notification S.R.O. No. A-2116, notification ... ... ... 36

Sales of Motor Spirit Taxation Act, 1939, notification ... ... ... ... ... ... 13

Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1970, with annexure ... ... ... ... 661

Stamps duty, extension of remission on behalf of Companies licensed under Industries (Development Regulation) Act, 1951, notification ... ... 35

Urban Land Tax Act, 1966, Notification ... ... 26

Vigilance Commission, Second Annual Report ... 36

Warehouses Act, 1951, notification ... ... ... 13, 27

Warehousing Corporation Act, 1962, notification ... 16, 27

PEACE CORPS :

Organisation by C.P.I. in Thanjavur district ... 255–258

PAGES

P.—*cont.*

PEER MOHAMMED, HAJI M. M. :

Chief Minister, insinuating remarks against—by Thiru Vattal Nagaraj in Mysore Legislative Assembly (A.M.) ... ... ... ... ... 390

Governor's Address (M) ... ... ... ... 445-450

Obituary reference, Dr. P. V. Cherian and Thiru A. Chidambaranatha Nadar, (R) ... ... ... 6-7

PERUMAL, THIRU A. R.

Governor's Address (M) ... ... ... ... 310-312

POINTS OF ORDER :

*Adjournment Motion(s)*—

Disposal of notice of ... ... ... ... ... 485

Opportunity to make out case for all Members who have given notice of ... ... ... ... 386-387

Chief Minister's health ... ... ... ... 484

Correction to an answer, delayed statement by Minister ... ... ... ... ... ... 195-196

Status of opposition party and leader of the opposition ... ... ... ... ... 65

POLICE :

Arrests in Pudukottai ... ... ... ... ... 252

Attack by leftist Kisans, East Thanjavur district ... 253-254

Fire Service Personnel, attack on ... ... ... 254-255

Harijan Colony, Pagalmedu, lathi-charge ... ... 251-252

PONNAMBALAM, PULAVAR P.

Forest poramboke lands, utilisation for cultivation ...479-484

Governor's Address (M) ... ... ... ... 122-124

Tamil Pandits of former District Board High Schools, promotion to First Grade ... ... 365-367

Thirumayam, Ponnamaravathi Panchayat Union areas, remission of tax, and postponement of recovery of loan due to failure of monsoon ... 486

Thirumayam, failure of monsoon and opening of fair price shops (C.A.) ... ... ... ... ... 289-290

PONNAPPA NADAR, THIRU R.

Governor's Address (M) ... ... ... ... 112-118, 394

Obituary reference, Dr. P. V. Cherian and Thiru A. Chidambara Nadar (R) ... ... ... 3-4



PAGES

P—*cont.*

PORTRAITS :

Dr. Ambedkar's portrait in educational institutions. 264-266

PRIVILEGES :

Report of privileges committee on the case against 'Kaditham' (M) ... ... ... ... ... 297

Q.

QUESTIONS AND ANSWERS :

Correction to answer (St.) ... ... ... ... 196

R.

RAFFLE SCHEME :

Prize money, arrests for false claims ... ... 564-567

Prizes (Second and third), doubling the number 560-567

Revenue, utilisation ... ... ... ... 559-567

Tickets, sale through panchayats ... ... 560-567

Tickets sale, utilisation of services of panchayat union officers ... ... ... ... ... 560-567

RAILWAYS :

Tranquebar-Karaikal-Nagore line, construction ... 178-180

*See* Committees.

RAJAGOPAL, THIRU K. M.

Governor's Address (M) ... ... ... ... 239-241

RAMACHANDRAN, THIRU S. :

Governor's Address (M) ... ... ... ... 218-221, 413-417

Status of opposition party and Leader of the opposition, point of order *re.* ... ... ... ... 65

RAMAMOORTHY, THIRU K. :

Correction to an answer, delayed statement by Minister, point of order, *re.* ... ... ... 195-196

Governor's Address (M) ... ... ... ... 301-304, 395-396

Harijans, clashes between groups at Kachirapalayam and Agarapalayam villages and the consequences (A.M.) ... ... ... ... 385

General Sales Tax (Amendment) Bill, 1970 ... 604-605, 613

S.I.E.T. College, collection of fees from P.U.C. students (A.M.) ... ... ... ... ... 186

PAGES

R—cont.

RAMASWAMI GOUNDER, THIRU K. M.:
Governor's Address (M) ... ... ... ... 333-337

RAT(S):
Menace in Thanjavur District ... ... ... 375-376

RESOLUTION (S)—
Constitution (23rd Amendment) Bill, 1969, ratification of amendments ... ... ... ... 65-77
Cotton Transport Rules, 1950, rescinding of certain amendments to rule 10 ... ... ... ... 618-619
Motor Vehicles Taxation Act, 1931—Amendments to Schedules ... ... ... ... ... ... 619

ROADS—
Works in Madurai and Ramanathapuram districts, stoppage ... ... ... ... ... ... 268

RULES—
Travelling Allowance Rules, revision ... ... 268-270

S.

SAHADEVA KANDER, THIRU K.—
Governor's Address (M) ... ... ... ... 243-246, 297-299

SANKARIAH, THIRU N.—
General Sales Tax (Amendment) Bill, 1970 ... 611
Governor's Address (M) ... ... ... ... 394, 434-438, 439-445

SARATHI, THIRU M. P.—
Loans, postponement of collection in North Arcot district ... ... ... ... ... ... 173-175
Underground drainage system in Vellore ... ... 367-368

SATYAVANIMUTHU, DR. (THIRUMATHI)—
Crops in East Thanjavur, damage due to excessive rain, relief measures (C.A.St.) ... ... ... 392, 393
Demands for Grants for Medical and Public Health, correction to reply (St.) ... ... ... ... 489

SCHOOL (S)—
Borstal School in Palayamkottai, conversion into jail ... ... ... ... ... ... 567-568
Government Aided Secondary School, plight of non-teaching staff due to fixation of retirement age at 55 without retirement benefits (C.A.) ... ... 584-585
School in Therikudiyiruppu, recognition ... ... 466-467



PAGES.

S—cont.

SEENIVASAN, THIRU P.—
Governor's Address (M) ... ... ... ... 321-324

SHANMUGHAM, THIRU P. U.—
Appropriation Bill, 1970 ... ... ... ... 592-593
D.S.G. (Second), 1969-70 :
G.D. ... ... ... ... ... ... 526, 528-529-539
General Sales Tax (Amendment) Bill, 1970, ... 292, 601, 611-613, 614, 615-616
Governor's Address (M) ... ... ... ... 82, 94, 95, 96, 107, 113, 114, 115, 116, 117, 119-120, 207, 232, 245, 246, 298, 299, 317, 318, 321, 325, 327, 410, 411, 418, 419, 423, 424, 459
Rice, unauthorised sale of rice hulled from paddy delivered by Government by rice-millers at Dindigul and consequent loss to Government (C.A.St.) ... ... ... ... ... ... 587
Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1970 ... ... ... ... ... ... 393, 616-617
Sugar, accumulation of stocks in godowns of sugar factories due to delay in lifting of levy (C.A. St.). 291
Thirumayam, failure of monsoon and opening of fair price shops (C.A.St.) ... ... ... ... 290

SIVAGNANAM, THIRU M. P.—
Agitation for merger of Talavadi Firka with Mysore State (A.M.), point of order re. ... ... ... 193
Governor's Address (M) ... ... ... ... 400-406
Obituary reference, Dr. P. V. Cherian and Thiru A. Chidambaranatha Nadar (R) ... ... ... 7-8

PAGES

S—cont.


SIVASAMI, THIRU M. S.—
Governor's Address (M) ... ... ... ... 197–200
SIVASUBRAMANIAN, THIRU S.—
Governor's Address (M) ... ... ... ... 406–413
SMALL SAVINGS—
Mobile Postal Savings Bank, introduction in Madras City ... ... ... ... ... ... 370–371
SOUNDARAPANDIAN, THIRU N.—
Governor's Address (M) ... ... ... ... 324–325 326, 327–328
SOUNDARAPANDIYAN, THIRU P.—
Governor's Address (M) ... ... ... ... 225–228
STAMPS—
Vendors, High Court judgment on discount rate reduction to ... ... ... ... ... 371–372
STRIKES AND LOCK-OUTS—
Machine Tool Production unit, Erode, strike by workers ... ... ... ... ... ... 63–64
STUDENTS—
Clash between Telugu students and Police in Hosur, tense situation (C.A.) ... ... ... ... 282–289
SUARES, THIRUMATHI A.—
Constitution (23rd Amendment) Bill, 1969, ratification of amendments (R) ... ... ... ... 67–68
SUBBARAJA, THIRU A. A.—
Governor's Address (M) ... ... ... ... 228–230, 397
SUBBIAH, THIRU A. K.—
Constitution (23rd Amendment) Bill, 1969, ratification of amendments (R) ... ... ... ... 68–70
Education, National Policy resolution of Central Government, consideration and decision by Government ... ... ... ... ... 262–264
Governor's Address (M) ... ... ... ... 340–344
Obituary reference, Dr. P. V. Cherian and Thiru A. Chidambaranatha Nadar (R) ... ... ... 6
SUBBIAH MUDALIAR, THIRU A. R.—
D.S.G (second), 1969–70 G.D., ... ... ... 520–522




S—cont.

PAGES.


SUGAR—
Accumulation of stocks in godowns of sugar factories due to delay in lifting of levy (C.A.) ... 291
SUNDARA BHARATHI, THIRU SOWDI S.—
Governor's Address (M) ... ... ... ... 210–215
SURENDRAN, THIRU M.—
Appropriation Bill, 1970 ... ... ... ... 594–596
Governor's Address (M) ... ... ... ... 221–224
Harijans of Nangavalli village, fasting over prevention of usage of foot-path (A.M. ... ... 185
Lands, resurvey, ... ... ... ... ... 170–172
SWAMINATHAN, THIRU V.—
Governor's Address (M) ... ... ... ... 396–397 453–456
Higher Grade Teacher's Posts, conversion into secondary grade ... ... ... ... ... 363–364
Industrial estate, Tiruverumbur, establishment ... 572–573
Tamil college at Thiruvaiyaru, expansion ... ... 464–466
Tamil language development, modification of syllabus ... ... ... ... ... ... 164–165
Tiruchirappalli district—
Use of areas by army as shooting range and consequent fear of damage among people (A.M.) 277
Workshops for servicing crop protection equipments, establishment ... ... ... ... 375

T.

TAXES—
Betting taxes on horses, enhancement ... ... 48–51
Profession tax, abolition ... ... ... ... 55–56
Sales tax, details *re.* exemption to yarn exports ... 175
TAXIS—
State permits ... ... ... ... ... 56–57
TEACHER(S)—
Higher Grade posts, conversion into secondary grade ... ... ... ... ... ... 363–364
Horticultural Instructors of Government High Schools, Tirunelveli district ... ... ... 37–38
Salary, disbursement on 1st of every month ... 461–464
Tamil Pandits of former District Board High Schools, promotion to first grade ... ... ... ... 365–367

T—*cont.*

PAGES

TEMPLES :
Sri Singaperumal Koil, appointment of trustees ... 58

TEXTILE MILLS—
Labour collaboration in the management ... ... 277

TOWN PLANNING—
Coimbatore city extension scheme, land acquisition and implementation ... ... ... ... 59

TRANSPORT AND COMMUNICATIONS—
Madras city, study by Highways Research Station *re.* mass transport problem ... ... ... 52–53

TRAVELLING ALLOWANCE—
Rules, revision ... ... ... ... ... 268–270

U.

UNIVERSITIES—
University for Technical Education, starting ... 258–260

V

VARADARAJAN, THIRU N.—
Governor's Address (M) ... ... ... ... 215–218

VEERAMANI, THIRU C.—
Governor's Address (M) ... ... ... ... 234–236

VENKATASWAMY, THIRU B.—
Governor's Address (M) ... ... ... ... 425, 456–459
Students, clash between Telugu students and police in Hosur, tense situation ((C.A.) ... ... 283, 289

VEZHAVENDAN, THIRU K.—
Correction to an answer ... ... ... ... 196
Sri Ramalinga Soodambigai Mill, Tirupur, hardship of workers due to closure (C.A. St.) ... ... 487–488, 489

VILLAGE(S)—
Grouping based on income and appointment of village officers ... ... ... ... ... 40



PAGES.

V—*cont*

VILLAGE OFFICER(S)—
Recognition as full-time Government officials ... 40–43
*See* villages

VINAYAKAM, THIRU K.—
Adjournment Motions, opportunity to make out a case for all Members who have given notice of (point of order) ... ... ... ... ... 386–387
Agricultural labourers (East Thanjavur district), representation ... ... ... ... ... 253
Appropriation Bill, 1970 ... ... ... ... 593–594
Betting taxes on horses, enhancement ... ... 48–51
Books, records and oil paintings in Thanjavur palace, ill-maintenance ... ... ... ... 167–169
Chief Minister's health (Point of Order) ... ... 484
Drought-stricken people, distribution of contributed rice ... ... ... ... ... ... 270–271
D.S.G. (Second), 1969–70, G.D. ... ... 537, 539
[illegible] 543–544
Education, National Policy resolution of Central Government, consideration and decision by Government ... ... ... ... ... ... 262–264
Food and fruit processing Industrial Estate, location at Batlagundu ... ... ... ... ... 569–571
Gramasevaks, supply of transistors ... ... 53–54
Jail at Palayamkottai, unveiling of memorial tablet to mark the incarceration of Chief Minister in- ... 568–569
Paddy, etc., fixation of minimum support price by Central Government ... ... ... ... ... 271–273
Paddy, increase in procurement prices and sale price ... ... ... ... ... ... 274–275
Pre-school feeding programme, introduction ... 376–377
Pre-technical course, tuition fee ... ... ... 267
Raffle Scheme, doubling the number of second and third prizes ... ... ... ... ... 560–567
S.I.E.T. College, collection of fees from P.U.C. students (A.M.) ... ... ... ... ... 190
Tamil, abolition from Part II and introduction of Hindi Department in Madurai University research centre ... ... ... ... ... ... 165
Taxis, State permits ... ... ... ... 56–57

PAGES

W

WATER SUPPLY—

Drinking water-supply scheme, Tiruppur Town ... 38

WILD LIFE—

Legislation to treat as State property ... ... 181-182

D
VR11, 31 'N70

31N71.24

61468